

# மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜ்யார்ஜியார்

# மகுடாபிஷேகம்

KING GEORGE V



## The Coronation of His Majesty George V. Our King Emperor

QUEEN MARY



" வானோக்கி வாழுங் குடிஎல்லாம்
மன்னவன்
கோனோக்கி வாழு மூலகு "
—திருக்குறள்.

**வா**னம் பெய்தாலும் அரசனுடைய செங்கோலில்லாது உயிர்கள் தழைக்
காது என்பதிதன்பொருள். செங்கோலைக் கைக்கொள்ளும் தினத்திற்கே மகுடம்
புனையும் தினம் எனப்படும். மகுடம் புனைவதும் தன் தலைக்கணியும் மகுடம்போல்
தானும் ஜனத்தின் தலைக்கணியாய் நிற்றலைக் காட்டும். அது கடவுள் ஆக்கியப்பொரு
ளைக் காக்கக் கங்கணம் கொண்டதாகும். விஷ்ணுவின் அம்சம் வழிபட்ட ஸ்திதி என்
னும் தொழிலைக் கைக்கொண்டொழுகுவேன், என்னும் முறைமையை வெளி இடு
வதுதான் மகுடம் புனைதலின் உள்ளெண்ணம். இம்முறையை ஒப்பிக் கொள்வவற்
குத் தக்க வழியிலே கொள்ளவேண்டும். தினமும் நெடும்பகல். ஜூன் மாதம்
இருபத்திரண்டாம் தினமே வருஷத்திடை நீண்ட பகல்கொண்டது. அன்றுதான்
ஸூர்யனும் நெடுவழி வடபால் செல்லும். அந்தத் தினத்தைத் தான் நமது மஹி
பன் ஐந்தாவது ஜ்யார்ஜியாருக்குப் பட்டாபிஷேகதினமாக ஏற்படுத்தபட்டது. அது
ஞானவொளி மிகுந்து அதனோடு மேல்வழியில் உச்சமடைய வேண்டும் என்பதே
இதனுடைய பொருள்போலும்.

ஈதொருபால் நிற்க. ஜனங்களின் உத்ஸாகமும், உள்ளன்பு நிறைந்து தமது
அரசன் பட்டமுடையவரும் தினத்தைப் பெருங்கொண்டாட்டத் தினமாகக்கொண்டு
விழாக்கள் செய்வதும் இயல்பே. அன்று, அதாவது நமது அரசன் இங்கிலண்டில்,
லண்டன் நகரத்தில், பட்டமடைந்த தினத்தில் உலகெங்கும் ஆனந்தமே. அந்நக
ரத்து அரசசாலையில் அநேக மன்னர்கள் மகுடம் புனைந்திருக்கின்றனர்கள். ஆயி
னும் இம்மாதத்தில் அங்கு நடந்ததை எதுவும் நிகராது. இன்று ஆங்கில ராஜ்யம்
உலக முழுதும் நிறைந்து நிற்கின்றது. அவ்விராஜ்யத்திற்கு இணையாகிய திதுவரை
உலகங் காணவில்லை. எத்தனையோ ராஜ்யங்கள் இருந்திருப்பினும் ஒன்றுவது அள

வில் இந்த ராஜ்யத்தை யொப்பாது. ஜனக்கூட்டத்திலும் ஒன்றுமொவ்வாது. வ்யாபாரத்திலும், யுக்தி விசேஷத்திலும் இணையாகாது. இத்தகைய ராஜ்யம் பல விரிந்து தனித்து இருப்பினும் முடிவில் ஊன்றாது இருக்கமுடியா. இந்த ராஜாங்கத்தில் கலந்து வாழுமதத்தார் உலகத்திலிருக்கும் எல்லா மதங்களையும் தழுவினவர்கள். இத்தகைய ராஜாங்கத்தின் பளுவையே அரசன் தன் தலைமேல் மகுடமாக அணிவது. அது கனக்கும் என்பதை உணர்த்தும்பொருட்டே அதுவும் கன(பொன்)த்தினால் செய்யப்படுவது. முன் விக்டோரியா ராணியார் மகுடமணிந்த காலத்தில் கண்ணீர் விட்டது எல்லாரும் உணர்ந்ததே. அவ்வம்மையாருடைய பேராகை விளங்கும் நமது அரசனுக்கும் அது படாது இருக்கமுடியாது. அரசமகுடம் புனைந்து நாட்டின் பளுவை ஏற்ற மன்னனுடைய பளுவை நாமும் நமது நடையினாலும், செயல்களாலும் குறைத்தல் வேண்டும். அவரும் அவருடைய சக்தியினாலும், கருணை, தயை, உண்மையறிதல், செய்யவேண்டிய செயல், குற்றங்கடிதல் முதலிய செய்து தாமும் தமது பளுவைக் குறைத்தல் வேண்டும். உலகத்தாரின் இஷ்டத்தை உணர்ந்து அவர்களுடைய எண்ணம்போல் நடப்பது ராஜாங்க இயற்கை. ஜனாபிப்ராயமும் ராஜாங்க நிலையின் ப்ரதிபலனம். இவ்விரண்டும் ஒன்ற நடப்பதே அரசனுடைய சொல். இதை இதுகாறும் கைப்பிடித்து ஒழுகிவந்த அரசர்களின் முறையில் வந்த நமதரசர் இவ்வழியன்றி வேறெவ்வழியில் நடப்பார். அவரது ஒழுக்கங்களில் சிறந்து அவரினும் மேன்மை யடையாதிரார்.

சில வருஷங்களுக்கு முன் நமது தேசத்தை யெல்லாம் வந்து நோக்கி ஜனங்களின் மனங்கனிய ஆளவேண்டும் என்று கூறிய இளவரசு இன்று அரசுரிமை பூண்டவரின் இந்தியர்களின் ஹ்ருதயம் மலர்ந்து ஆனந்தத்தேனை யாவருமுண்ண விடாதா? தன் நாதன்மேலேறக்கண்ட தாமரைபோல் முகமலர்ந்து நகாதா? இந்திய நாட்டார்க்கு இன்பம் அளிக்க வேண்டும் என்று அஸ்திநாபுர நிலையிலிருக்கும் டெல்ஹி நகரத்து வந்து இந்திய மகுடம் புனைய வ்ருதங்கொண்ட தலைவன்பால் வணங்காத் தலையுமுண்டோ? "யான் இந்தியர்களின் வணக்கம், பொறை, நற்குணம் யாவும் கண்டேன். அவரது உன்னத குணத்தையும் அனுபவித்தேன். நமது அரசுரிமையில் அவர் அடையும் மகிழ்ச்சியையு மறிந்தேன். நாம் இந்தியப் பெருநாட்டை ஜனங்களின் மனோபாவத்திற்கொப்ப அநுதாபத்தோடு ஆண்டால் அவர்களுடைய ஹ்ருதயம் பேரன்பால் மலராதிருக்க முடியாது" என்று கூறி உண்மையுணர்ந்த மன்னன் அரசுரிமை யடைந்தது நமது பெரும் பாக்யமன்றோ? அது என்றைக்கும் நிலைத்த புகழிற்கும், செழித்த வளமைக்கும், வரம்பு நிலைபெறாத நன்மைக்கும் வேரூன்றிக், கற்பகம்போல் தழைத்து, வான்பெற உயர்ந்து, உலக நன்மையாய் மலர்ந்து, பக்தி மணம் வீசி, பேரின்பநிலையைப் பயக்க இத்தேசத்தார் யாவரும், சிறுவன் சிறுமி, ஆண் பெண், ஆக அனைவரும் கடவுளை ப்ரார்த்தனை செய்தலை யாம் இப்பத்ரிகை வாயிலாய் வெளியிடுகிறோம். சுபமஸ்து.

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ ஆனிமீ : 1911–௵ ஜூலைமீ { பகுதி I

## ஸுக துக்கங்கள் (2)

### PLEASURE AND PAIN

வெளிவஸ்துக்களி லிருந்துவரும் ஸுகதுக்கங்களின் ஸ்வரூபத்தை முன்னர் ஒருவாறு எடுத்துக் கூறினோம். இந்த ஸுகங்களின் பேதங்களை விஸ்தாரமாகத் தைத்ரீய உபநிஷத்தில் அளவிடப் பட்டிருக்கிறது. வேதாத்யயனம் செய்து மேன்மை அடைந்து வருபவன் இவைகளை க்ரமமாக அடைந்து வருவான் என்றும் அங்கு குறிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் சில விஷயங்களை ஸுகம் என்றும் துக்கம் என்றும் நம்மால் பகுத்தறிய முடியாது. ஈச்வரஸ்ருஷ்டி பொதுப்படையாக நிற்பதாதலால், வெளிவஸ்துக்கள், ஜீவஸ்ருஷ்டி (ஒவ்வொருவர் மனோநிலை தேஹநிலை) யால் ஒரு ஸமயத்தில் ஸுகம் தருவன வாகவும், வேறோர் ஸமயத்தில் அவைகளே ஒருவனுக்குத்துக்கம் தருவனவாகவும்; ஒரே வஸ்து ஒரேஸமயத்தில் பலருக்குப் பலவிதமாகவும் காணப்படும். உதாரணமாக ஜலத்தை எடுத்துக் கொள்வோம். க்ருஷி ஸ்நான பானாதிகளுக்கு உபயோகப்படுங்கால் அது ஸுககரமாகவும், ஆற்றுவெள்ளமாக வந்து பெரிய அபாயங்களுக்குக் காரணமாகுங்கால் அது துக்ககரமாகவும், நாவறண்டவர்களுக்கு அது ஸுகமாகவும், தாகமில்லாதவர்களுக்கும் சில வ்யாதிஸ்தருக்கும் அது துக்ககரமாகவும் இருக்கும். இம்மாதிரியேதான் பஞ்சபூதங்களும் அவைகளாலாகிய ப்ரபஞ்சம் முழுவதும். 'வேண்டாப் பெண்சாதி கால்பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம்;' 'மனங்கொண்டது மாளிகை;' 'உனக்குச்சிரிப்பு எனக்குவயிற்றெரிச்சல்' என்னும் பழமொழிகள் ஸுகதுக்கங்கள் என்பவை வெளிவஸ்துவைச் சேர்ந்தவையல்ல; மனம்போன போக்கே என்பதை நன்கு விளக்கும். இந்த ரஹஸ்யத்தை உணர்ந்து 'மனம்போன போக்கே போகவேண்டாம்' அதாவது ஸுகநிலைகளும் வஸ்துக்களும்வேண்டும், துக்கநிலைகளும் வஸ்துக்களும் வேண்டாம் என்ற விருப்பு வெறுப்புக்கு வீணாக ஆளாகக்கூடாது என்றார் பெரியோர்கள்.

இவ்வாறு ஸுகவிருப்பும் துக்க வெறுப்பும் இல்லாமல் பழகிவந்தால் வாழ்க்கையின் நோக்கம் யாது என்ற கேள்வி பிறக்கும். எதைக்கோரி ஸாதிக்க இந்த வாழ்நாளைச் செலவிடுவது? ஒன்றையும் கோராது நிஷ்காம்யமாக இருப்பது என்பர் சிலர். இது ஸாதாரணமாக அஸாத்யமான நிலை. மேலான விஷயங்களைக் கோராது மனம் கீழான நிலையைவிட்டுவிடுவது என்பது வீண் பேச்சே! ஆதலால் நமது கோரிக்கையை மாற்றிவிடவேண்டும். இதுவரையில் 'எனக்கு ஸுகமே வரவேண்டும்! என்னைத் துக்கம்அணுகவேகூடாது!, ஈச்வரா உமக்கு என்னவேண்டுமானாலும் ப்ரார்த்தனையாகச் செலுத்திவிடுகிறேன்!' என்று கடவுளிடம் கேட்பதை விட்டுவிடவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் உலகில் மாறிமாறி வந்துகொண்டிருக்கும் தன்மையை உடைய ஸுகதுக்கங்களால் பகவானைச் சிலஸமயம் துதிக்கவும், சில ஸமயம் வெறுக்கவும் நேரிடும். இந்தப் பக்தி செட்டியார் (வ்யாபாரி) பக்தி. ஸுகதுக்க ரஹஸ்யம் உணர்ந்தவர்கள் மஹாபக்த சிரோமணியான ப்ரஹ்லாதர் நரஸிம்ஹ மூர்த்தியிடம் கேட்ட மாறா பக்தி என்னும் வரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஆராதனை செய்யுங்கால் கடவுளை நோக்கி. 'பரம்பொருளே! உலகில் ஸுகதுக்கங்கள் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. அவைகளுள் வருவது வருமே ஒழிய, வாராது வருந்தி யழைத்தாலும் வாராது. மேலும் என்னை எந்தஸமயத்தில் எந்த ஸுகதுக்கங்களைக்கொடுத்து சீர்திருத்தி வ்ருத்திபண்ணி ஆட்கொள்ளவேண்டும் என்பது உமக்குத் தெரியாதா? ஆதலால் ஸுகம் வருங்கால் அதில் மூழ்கி மயங்கிக்கிடக்காமலும், துக்கம் வருங்கால் உணர்விழந்து தட்டழிந்து பதறாது பொறுமையுடன் நிற்கவும் வேண்டிய மனோதிடத்தைக் கொடுக்க உமது பக்தி என்னிடம் மாறாதிருக்கவேண்டும். எக்காலத்திலும் என்மனம் ஒரேவிதமான அமைதியுடன் உண்மைப்பொருளை உள்ளபடி உணர்ந்து தெளிந்திருக்கும் மாறா நிலையைத் தந்தருள வேண்டும்' என்று தான் ப்ரார்த்தனை செய்துகொள்ளவேண்டும்.

ஸுகதுக்கஸ்வரூபத்தை நன்றாக மனனம் செய்து முன்கூறியபடி ப்ரார்த்தனை செய்து பழகிவந்தால் நாளடைவில் மனம் சாந்தி பெற குரு உபதேசத்தால் பரமபதம் கைகூடிவிடும்.

161440



# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ ஆனிமீ [பகுதி 1

## சுக்லாம்பரதர வ்யாக்யானம்

## FIRST HINDU PRAYER EXPLAINED

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजं
प्रसन्नवदनंध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

செய்யும் கார்யங்களெல்லாம் இடையூறின்றி ஸரிவர நிறைவேறும் பொருட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டதேவதையை முதலில் த்யானம் செய்வது வழக்கம். இவ்வாறு விக்நங்களை விலக்குவது மஹாகணபதியின் ப்ரஸாதம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அவரது ஸ்வரூபத்தை த்யானம் செய்ய இந்த ச்லோகம் உதவியாயிருப்பதால் எல்லோரும் இதை முதலில் சொல்வது வழக்கம். இந்த ச்லோகத்திற்குக் கணபதிபரமான அர்த்தம் தவிர ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய இவர்கள் பரமாகவும் உள்ளபொருள்கள் இருக்கின்றன. இவைகளை இங்கு நன்றாக எடுத்து விளக்கி, நம்முன்னோர்கள் இவ்வாறு ஒரே வாக்யத்தால் அநேக மூர்த்திகளைத் துதித்து அவைகள் உள்ளிருந்து ப்ரகாசிக்கும் பரம்பொருள் ஒன்றே என்ற ரஹஸ்யத்தை இவ்வாறு வெளியிட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுவோம்.

பொதுக்குறிப்பு.—**सर्वविघ्नोपशान्तये** எல்லா விக்நங்களையும் அடக்குதற் பொருட்டு. **ध्यायेत्** த்யானம் செய்யவேண்டும். **विष्णुम्** ஸர்வவ்யாபகர். இப்பதங்களது பொருள் எல்லாவிதப்பொருள்களுக்கும் பொது.

### 1. ப்ரஹ்மாபரமான பொருள்

குறிப்பு:— **शुक्लाम्बरधरम्** —சுக்லம் = இந்த்ரியம்; (த்ரவம்) அம்பரம் = ஆகாயம்; தர = பூமி. ஆதியில் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கும் போது முதலில் ஜலத்தை உண்டாக்கி அதில் ஒருவிதையை உண்டு பண்ணி, அதை ப்ரகாசமுள்ள ஓர் அண்டமாகும்படி செய்து, அதிலிருந்து ஆகாயம் பூமிமுதலியவைகளை ஸ்ருஷ்டித்தார் என்பது, புராணம் வேதம் முதலியவைகளில் காணப்படுகிறது. ஆகவே இந்தப் பதத்திற்கு இந்த்ரியம் (ரேதஸ்) மயமான ஆகாயம் பூமி ஆகிய இவைகளை உடையவர் என்பது பொருள்.

**शशिवर्णम्**—சம் = ஸுகம்; சிவ = மங்களம்; ந = கொடுப்பது. ஆகவே ஸுகம் மங்களம் முதலியவைகளைக் கொடுப்பவர் என்பதாயிற்று.

**चतुर्भुजम्**—நான்கு களை அனுபவிக்கிறவர்—(புஜ் = உண்ணு. இதிலிருந்து தான் போஜனம் என்பது வந்திருக்கிறது.) அதாவது நான்கு யுகங்களையும் அனுபவிப்பவர்; அல்லது நான்கு புருஷார்த்தங்களையும் அனுபவிப்பவர் என்பதாகும்.

**प्रसन्नवदनम्**—வெளுப்பான தேஜஸ்ஸோடு வெண்பட்டைஉடுத்திக்கொண்டு வெண்டாமரையில் வீற்றிருக்கும் ஸரஸ்வதீதேவி என்று பொருள்படும். அல்லது அநுக்ரஹத்தோடு கூடிய (ப்ரஸந்ந) முகத்தை (வதனம்) உடையவர் என்று ப்ரஹ்மாவுக்கு விசேஷணமாகவும் கூறலாம்.

பொழிப்புரை:—த்ரவமயமான ஆகாயம், பூமி இவைகளில் எங்கும் வ்யாபித்தவரும், நான்கு கைகளை (புருஷார்த்தங்களை) அனுபவிக்கிறவரும், எல்லோருக்கும் ஸுகம் மங்களம் முதலியவைகளைக் கொடுப்பவரும், அநுக்ரஹ முகத்தை (வெண்காந்தியுடன் கூடி ஸரஸ்வதியை) உடையவருமான, ப்ரஹ்மதேவரை, இடையூறுகளெல்லாம் விலகிப் போவதன்பொருட்டு த்யானிக்க வேண்டும்.

### 2. விஷ்ணு (க்ருஷ்ண) பரமான பொருள்.

குறிப்பு.—**शुक्लाम्बरधरम्**—சுக்லை என்பவள், யது மஹாராஜாவின் பெண்சாதி. அவளை அம்பாவாக (தாயாக) உடையவர்கள் யாதவர்கள் முதலியோர். ரம் என்பதால் அவர்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும் கோவர்த்தனகிரி என்பதாயிற்று. தரம் என்பதால் அந்தக் கிரியைத் தரித்த (தாங்கின) க்ருஷ்ண என்ற பொருளுண்டாகும். அதாவது யது மஹாராஜன் மனைவியான சுக்லையிடம் தோன்றிய யாதவர்கள் நிலயமாகிய கோவர்த்தனகிரியை தரித்த கிருஷ்ண பரமாத்மா என்பது இப்பதத்தின் பொருள்.

**शशिवर्णम्**—சசி சந்த்ரன்; வர்ணம் = எழுத்துக்கள். அது விது என்பது. ஆகவே விது என்பதைப் பெயராக உடையவர் என்று இந்தப் பதத்திற்குப் பொருள். விது என்னும் பதத்திற்குக் கோசப்படி விஷ்ணு என்றும் சந்திரன் என்றும் அர்த்தம். ஆதலால் இந்தப் பதத்திற்கு முடிவாகச் சந்திரனுக்கு ஏற்பட்டுள்ள எழுத்துக்களைத் தன் பெயரிலுடைய விஷ்ணு என்பது பொருள்.

**चतुर्भुजम्**—கீதை அத்யாயம் 15-ச்லோகம் 'நான் வைச்வானரனாகி (அக்னியாகி) ப்ராணிகளின் தேஹத்தை நிலயமாகக் கொண்டு நான்கு விதமான ஆஹாரங்களை ஜீர்ணமாக்குகிறேன்' என்று பகவான் தமது விஷயமாகச் சொல்லிக்கொள்கிறார். ஆகவே இப்பதத்திற்கு நான்குவித ஆஹாரங்களை அனுபவிப்பவர் என்ற சிறப்புப் பொருளையும் இங்கு எடுத்துக்கொள்ளலாம்.

**विष्णुम्** = விஷ்ணுவாயும்.

பொழிப்புரை.—கோவர்த்தனகிரியைத் தரித்தவராயும், சந்தானுக்கேற்பட்ட விது என்னும் பெயரையுடையவராயும், நான்கு கைகள் (நான்கு வித ஆஹாரங்களை ஜீர்ணிக்கும்சந்தி) உடையவர் ஆயும், விஷ்ணுவாயும், எப்பொழுதும் மேலான அனுக்ரஹத்தோடுவிளங்கும் முகத்தை உடையவராயும், இருக்கும் க்ருஷ்ண பரமாத்மாவை, விக்நங்கள் எல்லாம் தொலையும் பொருட்டு த்யானிக்கவேண்டும்.

### 3. சிவ பரமான பொருள்

குறிப்பு.—**शुक्लाम्बरधरम्**—வெளுப்பு வஸ்த்ரம் உடையவர். வெளுத்ததிக்குகளையே வஸ்த்ரமாகஉடையவர். இதனால்தான் பரமசிவனுக்குத் திகம்பரர் என்ற பெயர் ஏற்பட்டது.

**शशिवर्णम्** சந்த்ரகாந்தியை உடையவர். சந்த்ரனைச் சிரத்தில் இவர் அணிந்தவராதலால் இவருக்கு இக்காந்தி பொருந்தும் என்னலாம்.

**चतुर्भुजम्**—நான்குகளை சாப்பிடுகிறவர் அதாவது ஸம்ஹரிக்கிறவர் என்றுபொருள். அண்டஜ (முட்டையிலிருந்து உண்டாவன) ஸ்வேதஜம் (வேர்வையிலிருந்து உண்டாவன) உத்பிஜம் (பூமியைப் பிளந்துவரும் முளையில் உண்டாவன) ஜராயுஜம் (கர்ப்பப் பையிலிருந்து உண்டாவன) ஆகிய நான்குவகை ப்ராணிகளையும் ஸம்ஹரிக்கிறவராதலால் இது சிவனுக்குப் பொருத்தம் உடையதே.

**प्रसन्नवदनम्**—தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தில் ஸநகாதி யோகிகளுக்கு மிகுந்த கருணையுடன் கூடிய முகத்துடன் வேதாந்த ரஹஸ்யத்தை உபதேசித்தவராகையால் பரமசிவத்தை இவ்வாறு கூறியது.

பொழிப்புரை:—வெளுப்பான திக்குகளை வஸ்த்ரமாக உடையவராயும், ஸர்வ வ்யாபியாயும், சந்த்ரகாந்தியை உடையவராயும், நான்கு விதமான ஜீவராசிகளை முடிவில் ஸம்ஹரிக்கிறவராயும், (ஸநகாதி யோகிகளிடம்) அனுக்ரஹ முகத்தோடுகூடினவராயும், உள்ள பரமசிவனை, விக்நங்கள் எல்லாம் நீங்கும்பொருட்டு, த்யானிக்க வேண்டியது.

### 4. விநாயகர் பரமானபொருள்

குறிப்பு.—**प्रसन्नवदनम्**—மதம் பிடித்த யானை முகத்தை உடையவர். 'ப்ரஸந்நே மத்தவாரண:' என்பது நிகண்டு.

பொழிப்புரை.—வெள்ளை வஸ்த்ரம் உடுத்திக்கொண்டு, ஸர்வவ்யாபியாகி, வெளுப்பான சரீரம் நான்கு கைகள் ஆகிய இவைகளை உடைய மதயானை முகத்தோனை மஹாகணபதியை, எல்லாவிக்நங்களும் சாந்தியாகும்பொருட்டு த்யானிக்கவேண்டியது. (இதுதான் ஸாதாரணமான பொருள்.)

நண்பர்களே! இந்த ஒரு ச்லோக பூர்வமாக ஒவ்வொருவரும் தமது இஷ்டதேவதைகளைத் தடையின்றி முதலில் த்யானம்செய்து பின்னர் இந்த ச்லோக மூலமாக மனனதித்தியாஸனங்களிலும் பழகிவரலாம். நமது பெரியோர்களுக்கு மூர்த்தித் துவேஷமேஇல்லை என்பதற்கு இதுவும் ஒரு ஸாக்ஷி. **நா. ராமனாத சாஸ்திரி.**



## முக்ய உபநிஷத்துக்கள்

## THE PRINCIPAL UPANISHADS

### X. ப்ருஹதாரண்யக உபநிஷத்து (3)

### THE BRIHADARANYAKA UPANISHAD

அத்யாயம் 3. (9)---சாகல்யர் யாக்ஞயவல்க்யரை நோக்கித் தேவதைகள் எத்தனை என்ன, அவர் முறையே 3,306, 33, 6, 3, 2, $1\frac{1}{2}$, 1 என்று ஒழுங்காகக் குறைத்துக் கூறிவந்தார். இவைகளுள் ஒவ்வொரு எண்ணிக்கையும் பின்னர் வரும் தேவதா எண்ணிக்கையின் ரூப பேதங்களே ஒழிய வேறல்ல. 8 வஸுக்கள், 12 ருத்ராள், 11 ஆதித்யாள், இந்த்ரன், ப்ராஜாபதி ஆகிய இவர்களே 33 தேவதைகள். ப்ரபஞ்சம் முழுவதும், அக்னி, ப்ருதிவி, வாயு, அந்தரிக்ஷம், ஆதித்யன், ஸ்வர்க்கம், சந்த்ரன், நக்ஷத்ரங்கள் ஆகிய இவ்வெட்டிலேயே தாங்கி நின்று வஸிப்பதால் இவ்வெட்டும் **வஸுக்கள்** என்னப்படும். 5 ஞானேந்த்ரியங்கள் 5 கர்மேந்த்ரியங்கள் மனம் ஆகிய 11-ம் ருத்ரர்கள். இவைகள் தேஹத்தை விட்டுப் பிரியுங்கால் நம்மைவருத்திஅழப்படுத்துவதால் இவைகளுக்கு **ருத்ரர்கள்** என்று பெயர். 12 மாஸங்களே ஆதித்யர்கள். இவைகள் கழியுங்கால் ஆயுஸ் முதலியவற்றை எல்லாம் கூடவே இழுத்துச் செல்வதால் இவைகளுக்கு இப்பெயர் வந்தது. இடியே இந்த்ரன், ப்ராஜாபதி யக்ஞமே, அது உபயோகமான ஜந்துக்கள். முற்கூறிய 8 வஸுக்களில் முதல் ஆறனுள் இவை எல்லாம் அடங்குமாதலால் தேவதைகள் 6-ஆகின்றன. இவைகள் திரிலோகங்களுள் அடங்குவதால் தேவதைகள் மூன்று. இவைகள் அன்னம் ப்ராணன் ஆகிய இவைகளுள் அடங்குவதால் தேவதைகள் இரண்டு. இவைகள் எல்லாம் வீசும் திறமையால் வளர்க்கும் தன்மை உடைய வாயுவுள் அடங்க இது $1\frac{1}{2}$-ஆகும். எல்லாம் ப்ராணனுள் அடங்குவதால் தெய்வம் இது ஒன்றுதான். இது தான் ப்ரஹ்மம். இதைத் தத் என்று அழைப்பார்கள்.

இதன்பின்னர் சாகல்யர் உண்மையை உணர்ந்த

வன் லக்ஷணங்களைக் கூறி வருகிறார். “ பூமி, காமம், வர்ணம், ஆகாயம், தமஸ், தேஜஸ், அப்பு, ரேதஸ், ஆகிய இவைகளைத் தேஹமாகக் கொண்டு; அக்னி, புத்தி, கண், காது, ஹ்ருதயம், கண், ஹ்ருதயம், ஆகிய இவைகளை லோகங்களாக (ஸ்தானங்களாகக் கொண்டு,) மனத்தையே ஜ்யோதியாகக்கொண்டு, எங்கும் உள்ள புருஷனை உள்ளபடி உணர்ந்தவனே ஞானியாவான் என்று சாகல்யர் கூற அதற்கு யாக்ஞயவல்க்யர் “ இது எனக்கு நன்றாகத் தெரியும், இந்தப் புருஷன் தான் முறையே தேஹி, காமி, ஸூர்யனுள் உள்ள புருஷன், ச்ரோதா, அக்ஞானி, ப்ரதிபிம்பம், தண்ணீர் ஸூர்யன் ஆகிய இவையுள் இருப்பவனே. இவனுக்கு இந்த அவஸரங்களுக்கு யார் தூண்டும் தேவதையாக விருப்பது சொல்லும் உமக்குத் தெரிகிறதா பார்ப்போம்” என்று கேட்டார். அதற்குச் சாகல்யர் “தேவதைகள் முறையே அழிவற்ற வஸ்து, ஸ்த்ரீ, ஸத்யம், தேசம், மரணம், மூச்சு, வருணன், ப்ரஜாபதி ஆகிய இவர்களே ” என்று கூறினார்.

மேலும் விடாது சாகல்யர் கேட்கத்தொடங்குகிறார். ‘ திசைகளையும் அவைகளின் தேவதைகளையும் அவைகள் ஸ்தானத்தையும் கூறும்’ என்றார். யாக்ஞயவல்க்யர் பதில் கூறுகிறார்.—

| திக்குகள் | தேவதை | ஸ்தானம் | | |
|---|---|---|---|---|
| | | வெளி | உள் | முடிவு |
| கிழக்கு | ஆதித்யன் | கண் | வர்ணம் | மனம் |
| தெற்கு | யமன் | யக்ஞம் | தக்ஷிணை } சிரத்தை } | மனம் |
| மேற்கு | வருணன் | அப்பு | ரேதஸ் | மனம் |
| வடக்கு | ஸோமன் | தீக்ஷை | ஸத்யம் | மனம் |
| உச்சி | அக்நி | வாக்கு | ... | மனம் |

‘ ‘எல்லாம் மனத்துள் அடங்கும்’ என்று யாக்ஞவல்க்யர் கூற ‘மனம் எங்கே இருப்பது ?’ என்று சாகல்யர் கேட்டார். ‘இது நம்முள்தான் இருக்க வேண்டும்’ என்றார். ‘நாமும் நமது மனமும் எங்கே தாங்கி நிற்பது ?’ என ‘ ப்ராணாதி வாயுக்களில் நிற்பது’, என ‘அவைகளின் இருப்பிடம் யாது’ என்று விடாது கேட்டார் சாகல்யர். அப்பொழுது ஓங்கித் தைர்யமாக அடித்தார் யாக்ஞவல்க்யர். “ இவை எல்லாம் ஸமானன் என்னும் வாயுவைப்போல எங்கும் பரவிநிற்கும் அந்தர்யாமியில் அடங்கும். மற்றைய வஸ்துக்களை **இதல்ல இதல்ல** என்று நீக்கிச் சேஷிக்கும் வஸ்துவை உணர வேண்டும். அது அழியாதது, மனத்திற்கு எட்டாதது, தாக்கற்றது, பந்தரஹிதமானது முற்கூறிய தேவதைகள் முதலியனவெல்லாம் இதுவே. எங்கே இந்த வஸ்துவைப்பற்றி விஸ்தரியும் பார்ப்போம்,”என சாகல்யர் மேற்கூற முடியாது விழித்தார். உடனே யாக்ஞவல்க்யர் எல்லோரையும் நோக்கி ‘ ஸகல விஷயங்களிலும் செடிகளைப்போலவே ஜந்துக்களும் இருக்கின்றன. மரங்கள் மாண்டபின் அவைகளின் விரை வேர் முதலியவைகளிலிருந்து உண்டாகின்றனவே. அதுபோல ஜந்துக்கள் எதிலிருந்து மரணத்தின் பின் உண்டாகின்றன ?’ என்று பொதுவாகக் கேட்டு, எல்லோரும் மௌனமாக விருப்பதைக் கண்டு ‘ இவைகள் உண்டாவதற்கு ஆதாரம் முன்னர் கூறிவந்து சிதானந்த ப்ரஹ்மமே இதுதான் ஸகல கர்மங்களுக்குப் பலன்தருவது. இவ்வாறு அதில் நிலைபெறுபவனே அதை உள்ளபடி உணர்ந்தவனாவான்’ என்று கூறி முடித்தார்.

**அத்யாயம்.** 4:—(1)&(2) ஜனகர் ஒருகாலத்தில் தமது ஸபையில் ந்யாயம் விசாரிக்க வந்து உட்கார்ந்தார். அப்பொழுது அங்கு வந்த யாக்ஞவல்க்யரை நோக்கி ‘ நீர் பசு முதலியவைகளைப் பெற வந்தீரா ? அல்லது ரஹஸ்ய விசாரங்கள் செய்ய வந்தீரா ?’ என்று ஜனகர் கேட்டார். ‘ இரண்டிற்கும் தான் ’ என்றார் யாக்ஞவல்க்யர். உடனே இருவருக்கும் வேத விஷய



மான ஸம்பாஷணைகள் தொடங்கின. அதில் யாக்ஞவல்க்யர் ஜனகரை நோக்கி ‘ நீர் முன்னரே அறிந்திருக்கும் ரஹஸ்யங்களைக் கூறிவிடும். மேல் விஷயங்களை நான் வெளியிடுகிறேன்’ என்றார். அதற்கு ஜனகர் “ நான் சிலரிடம் இருந்து கேட்ட விஷயங்களை ஒழுங்காகக் கூறுகிறேன். வாக்கு, ப்ராணன், பார்வை, கேட்டல், மனம், ஹ்ருதயம், ஆகிய இவைகளே ப்ரஹ்மம் என்று அறிந்தேன்’என்றார். இவைகளைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது ” என்று சொல்லிவிட்டார். அதற்கு யாக்ஞவல்க்யர் கூறுகிறார்.—

| ப்ரஹ்மம் எனப்பட்டவை. | தேஹம் | நிலை. | சிறப்பு. |
|---|---|---|---|
| வாக்கு | நாக்கு | ஆகாயம் | ஞானம் |
| ப்ராணன் | மூச்சு | ஆகாயம் | ப்ரியம் |
| பார்வை | கண் | ஆகாயம் | ஸத்யம் |
| கேட்டல் | காது | ஆகாயம் | அனந்தம் |
| மனம் | மனம் | ஆகாயம் | ஆனந்தம் |
| ஹ்ருதயம் | ஹ்ருதயம் | ஆகாயம் | ஸ்திதி |

இவைகளை இவ்வாறு கருதுவதால் ஒவ்வொன்றும் திடப்பட்டு மேலான நிலை கைகூடும்’ என்றார். மேலும் ஜனகர் அவரை இவ்விஷயங்களைத் தமக்குப் போதிக்கும்படி வேண்ட அவர் யோக சாஸ்த்ர விஷயங்களை எடுத்துக்கூறிப்பின் முன்னர் சாகல்யருக்கு முடிவில் அந்தர்யாமி விஷயத்தை எடுத்துரைத்தவாறு இங்கும் போதித்தார்.

(3) & (4) வேறோர் ஸமயம் யாக்ஞவல்க்யர் ஜனகரிடம் வர முன் ஏற்பாட்டின்படி ஜனகர் அவரிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார். அப்பொழுது யாக்ஞவல்க்யர் ‘மனிதன், ஸூர்யன், சந்த்ரன், அக்னி, சப்தம், ஆத்மா ஆகிய இவைகளுள் முறையே பின்னது முன்னதுகள் இருக்கும் தேஜஸ் என்றும், முன்னது அடங்கி விடுங் காலத்திலும் பின்னது ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்’ என்றும் எடுத்துரைத்து ஆத்மாவின் அவஸ்தாத்ரய விலக்ஷணமாக இருக்கும் தன்மையைப் பின்வருமாறு எடுத்து விஸ்தரிக்கிறார். இந்த்ரியங்களால் சூழப்பட்டு ஹ்ருதயத்துள் நிலைபெற்றிருப்பவன் ஆத்மா. இவனே ஸ்வப்ன ஸுஷுப்தியாகிய நிலைகளில் உள்ள மாறுபாடுகளோடு தாக்கற்று அப்பாற்பட்டு நிற்பினும், இவன் அவைகளோடு ஸம்பந்தப்பட்டது போலக் காணப்படுவான். தேஹ ஸம்பந்தத்தால் இவனுக்கு இவ்வாறு அனுபவங்கள் ஏற்படுகின்றன. இது நீங்குங்கால் இவன் இவைகளிலிருந்து விடுபடுகிறான், ஸ்வப்நாவஸ்தைக்குப் போகுங்கால் முன்னுள்ள அனுபவாதிகளைக் கொண்டு சென்று தனது ஸ்வந்ததேஜஸ்ஸாலே அவைகளை மறுபடி உண்டாக்கி அப்பொழுது காண்கிறான். இவன் வயதுக்கேற்ப முன் அனுபவங்கள் இவனுக்கு இருக்கும். பால்ய வயஸுகளில் பெரும்பாலும் பூர்வ ஜன்மானுபவங்களும், யௌவனவயதில் இஹஜன்ம அனுபவங்களும், வ்ருத்தாப்யத்தில் வரும் மறுஜன்ம விஷயக் குறிகளுமே இவன் மனதில் குடிகொண்டிருக்கும். இந்த ஸ்வப்நாவஸ்தையில் காணப்படுபவைகள் எல்லாம் உண்மையானவைகளல்ல. இந்த அவஸ்தையில் ஆத்மா ஓடியாடும் விஷயங்கள் மாத்ரம் நன்கு விளங்குமே ஒழிய ஓடியாடுபவன் வெளிப்படையாக விளங்கமாட்டான். கேவலம் விழிப்பில் உள்ள அனுபவங்கள் மாத்ரமே ஸ்வப்நத்தில் வரும் என்று கூறிவிட இடமே இல்லை.

ஸுஷுப்தி அவஸ்தையில் வஸ்து ஸம்பந்தம் பெரும்பாலும் நீங்கிவிடும். அங்கு இவன் தாக்கற்றே ஸாக்ஷியாக விருக்கிறான். மீன் முதலிய ஜந்துக்கள் ஓடியாடித்திரிந்துவருவதுபோல ஆத்மா விழிப்பு கனவு ஆகிய இவைகளில் திரிந்து, அவைகள் ஓய்ந்து தமது இருப்பிடம்

சேர்ந்து சும்மாவிருப்பதுபோலதூக்கத்தில்வந்து அமருகிறான். இந்த ஸமயத்தில் ஸுகதுக்காதிகள் எல்லாம் நீங்க ஒருவித விடுதலை ரூபமான அமைதி உண்டாகிறது. இந்தஸமயத்தில் இவன் ஒருவித விஷயத்தையும் உணராதிருந்தபோதிலும், உணரும் விஷயமும் கருவியும் ஒடுங்கியிருப்பதால் உணராமலிருக்கிறானே ஒழிய உணரும் சக்தி இவனைவிட்டுப்போய்விடவில்லை. இந்த ஸமயத்தில் தான் மாத்ரமாகச் சற்றுச் சேஷிக்கிறான். விழிப்பிலும் கனவிலும்தான் வெளிவஸ்து இருப்பதால் இவன் அதை உணருகிறான். தூக்கத்தில் உணர்பவன் பெருங்கடல்போல ஒன்றுபட்டு இரண்டற்று நிற்கிறான். உண்மை வஸ்துவாகிறான்' என்று மூன்றும் அவஸ்தையின் சிறப்பை எடுத்துக்கூறினார்.

பின்னர் தைத்ரீயம் ஆனந்தவல்லியில் கூறியபடியே ஆனந்த பேதங்களை எடுத்துக்கூறி ஹிரண்யகர்ப்பானந்தத்திற்கும் ஸுஷுப்தி ஆனந்தத்திற்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறார். 'இம்மாதிரி விழிப்பிலிருந்து தூக்கத்திற்கும், தூக்கத்திலிருந்து விழிப்பிற்கும் மாறி மாறி வந்துகொண்டு தேஹம், வயது வ்யாதி, முதலியவைகளால் தளரும் வரையில் ஆத்மா காலங்கழிக்கிறான். முடிவில் மரத்திலிருந்து பழம் விழுவதுபோல மறுபடி புதுவாழ்க்கைக்கு வந்து சேருகிறான். இவன் இம்மாதிரி பிரியுங்கால் இந்த்ரியாதிகள் இவனுடன் சேர்ந்து ஸுஷுப்தியைப்போன்ற ஓர் உணர்ச்சி நீக்கத்தை உண்டாக்க இவன் ஹ்ருதயத்துள் முழுகுகிறான். இவ்வாறு செய்ய ஒவ்வொரு கருவியிலிருந்து இவன் ஒதுங்குங்கால் அந்தந்த இந்திரிய சக்தி ஓய்ந்துகொண்டே வர ஹ்ருதயம் புரண்டு ப்ரகாசமாகி இவன் ஆத்ம ஜ்யோதிஸ் அதைவிட்டு ஏதாவது ஒரு அங்கத்தின்வழியாக வெளி ஏற ப்ராணனாகிய மூச்சும் உடனே நீங்கும். உடனே அது அவன் ஞானம், கர்மம், முன் ஏற்பட்டிருக்கும் அப்யாஸானுபவ விஷயங்கள் இவைகளைக் கவர்ந்துகொள்ளும். புல்லில் ஊர்ந்து செல்லும் புழுவானது தேஹத்தை வளைத்து முன்னுள்ள புல்லொன்றைப் பிடித்துக்கொண்டபின்பே எவ்வாறு பின்னுள்ள புல்லைவிடுகிறதோ அவ்வாறே ஆத்மாவும் மற்றொரு தேஹத்தைப் பிடித்துக்கொண்டே முன் தேஹத்தை விட்டுவிடுகிறது. தங்கத்தைக்கொண்டு தட்டான் புதிதுபுதிதான அழகிய உருவங்களை ஸ்ருஷ்டிப்பதுபோல ஒரு தேஹத்தை விட்டு மற்றொரு தேஹத்தைக்கொண்டு தன் விருப்பத்திற்கேற்ற உருவங்களை அமைத்துக்கொள்ளுகிறது. இந்த ஆத்மாதான் எல்லாவித த்வந்த்வங்களும் அடங்கிக்கிடக்கும் ப்ரஹ்மம். தேஹஸம்பந்தம் இருக்கிறவரையில் இந்த ஆத்மா ஸத்கர்மத்தால் சுத்தனாகவும் அசுத்த கர்மத்தால் அசுத்தனாகவும் ஏற்படுவான். ஆசைகளுக்குத் தகுந்தபடி புத்தியும், அதற்குத்தகுந்தபடி கர்மம் நடக்க அதற்குஏற்றபலன் அவனுக்குக்கிடைக்கும்.இதற்கு ஏற்ப அநுபவலோகத்தில் தங்கிவிட்டு ஆத்மா மறுபடி லோகத்திற்கு வருகிறது. ஆசை நீங்கியவன் ஆத்மா தன் நிலையிலேயே ஒருவித த்ருப்தியை அடைந்து போக்கு வரவு என்பதே இல்லாது ப்ரஹ்மமே யாகிறது.

ஆதலால்மனத்தில் குடிகொண்டிருக்கும் ஆசாபாசங்கள் சின்னபின்னமாகச் சிதறிவிட்டால் அப்பொழுதே அழியும்குணமுள்ள ஜந்து அழிவற்றவனாகிறான், ப்ரஹ்மத்தை அடைகிறான். பாம்புச்சட்டைப் புற்றின்மேல் விழுந்து கிடப்பதுபோல, தேஹம் வேறாகி நிற்க அடங்கியிருந்த ஆத்மா ப்ரஹ்மமாகிய ஏக ஜ்யோதியாகிறது." இதன் பின்பு இந்நிலையை அடைந்தவனிடம் "ஸ்வதந்த்ரம், ஸோஹம்பாவனை, ஸர்வமும் தன்னுள் அடங்கும் தன்மை, அழிவற்ற ஆனந்தநிலை, நிர்பயத்வம், பூஜ்யதை, ஸர்வஸாரத்வம்,நிராசைமுதலியன குடிகொண்டிருக்கும்" என்று கூறினார். 'இந்த நிலையை அடையும் வழி ஸௌகர்யமானது. இந்த நிலை அக்ஞானத்திற்கு அப்பாற்பட்டது. இதை அனுபவித்து உணர வேண்டும். இதில் பேதமே இல்லை. பேதம்காண்



பவனுக்குப் பிறப்பிறப்பு மாறாது. இந்தநிலையை எவ்விதத்திலும் நிரூபிக்கமுடியாது. இதை உணர ஞானநிஷ்டையில் பழக வேண்டும். சாஸ்த்ரப்படிப்பு தர்க்கம் முதலியவைகள் எல்லாம் வீண் தொண்டைத்தண்ணீக்குக்கேடே ஒழிய வேறல்ல. இது ஸர்வேச்வரன், கர்மங்களால் தாக்கப்படாதது. இதை ப்ராஹ்மணர்கள் ஸத் அனுஷ்டானங்களால் அடைய முயலுகின்றனர். இதை அடைய எண்ணியே எல்லாவற்றையும் அவர்கள் தயங்காது விட்டுவிடுவார்கள்.' ஆசைகளை எல்லாம் நீக்கி நேதி (இதல்ல) என்ற மார்க்கத்தால் மேன்மை பெற்று ப்ரஹ்மத்தை அனுபவித்து த்வந்த்வாதீதர்களாகிறார்கள். ஆத்மாவையும் மற்று எல்லாவற்றையும் அந்தப்ரஹ்மம் என்றே காண்கிறார்கள். இது எல்லாவற்றையும் விழுங்கித் தனித்து நிர்பயமாகவிருக்கும்'என்று முடிவான நிலையைத் தகுந்த மேற்கோள்கள் மூலமாக யாக்ஞவல்க்யர் பரவசமாகி விளக்கினார். இவ்வாறு கூறிவருகையில் இடை இடையே ஜனகர் அவருக்கு எண்ணிறந்த வெகுமதி கொடுக்க யத்தனிக்க அவைகளை எல்லாம் கவனியாது ஆனந்த பரவசராக எல்லாவற்றையும் இவர் சொல்லிமுடித்தார்.

(5)&(6) இதன்பின்னர் 2-ம் அத்யாயம்(4, 5) ப்ராஹ்மணத்திலிருக்கும் யாக்ஞவல்க்ய மைத்ரேயி ஸம்வாதமாகிய 'ஆத்மா ப்ரியவஸ்து'என்ற விஷயமும், குருபரம்பரையும்காணப்படுகின்றன.

**அத்யாயம் 5.**—(1) இந்த அத்யாய ஆரம்பத்தில் இந்த உபநிஷத் சாந்திமந்த்ரம் காணப்படுகிறது. 'அது (ப்ரஹ்மம்) பூர்ணம் இது (அந்தர்யாமி) பூர்ணம். இந்தப் பூர்ணம் அந்தப் பூர்ணத்திலிருந்து வருகிறது. இந்தப் பூர்ணத்தின் பூர்ணத்தை உணர்ந்து விட்டால் அந்த பூர்ணமே மிஞ்சி நிற்கும்.' ஓங்காரமே **(ஓம்)** இந்த ப்ரஹ்மம். இதன் மூலமாக எல்லாவற்றையும் உணரலாம்.

(2) ப்ரஜாபதிக்கு மூன்றுவிதக் குமாரர்கள். அவர்கள் தேவர்கள், மனிதர்கள், அஸுரர்கள் என்பவர்களே. இவர்கள் ப்ரஹ்ம லோகத்தில் சிஷ்யர்களாகக் குருகுலவாஸம் செய்தனர். தேவர்களை நோக்கி ப்ரஹ்மா '**தா**!' என்றுஉபதேசித்தார். அவர்கள் அதை '**தமயந்தா** (அடங்கியிரு)' என்று பொருள் படுத்திக் கொண்டனர். மனிதரை நோக்கி அவர் '**தா**' என்றார். அவர்கள் அதைத் **தத்தா** (கொடு)' என்று கொண்டனர். அஸுரர்களை நோக்கி அவர் '**தா**' என, அவர்கள் '**தயதாம்** (தயையாயிரு) என்று அறிந்தனர். இந்த **தா தா தா** என்னும் சப்தம்தான் இன்னும் இடியில் முழங்கிக்கொண்டு நம்மை முற்கூறிய மூன்றுஸத்கர்மங்களையும் செய்யத் தூண்டுகிறது.

(3—10):—ப்ரஜாபதியை ஹ்ருதயமாகவும், ஹ்ருதயத்தை ஸத்யமாகவும், த்யானம்பண்ணும் விதம், அதன்பலன், ஸத்யம் என்ற பதத்யானம், அதை ஸூர்யனாகவும், கண்களுள் உள்ள புருஷனாகவும் த்யானிக்கும் விதம், மனம் ஹ்ருதயத்துள் இருந்து எல்லாவற்றையும் அடக்கியாளும் விதம்,மின்னலை ப்ரஹ்மமாகப் பாவித்து த்யானம் செய்தல், வாக்கைப் பசுவாகவும், அதன் முலைக்காம்பை வைதீக பதங்களாகவும் அவைகள் தேவதைகள் மனிதர்கள் பிதுர்க்கள் ஆகிய இவர்களுக்கு உபயோகப்படும் பால் ப்ராணன், கன்று மனம் என்று எண்ணி த்யானிக்கும் விதம், ஜாடராக்னியின் ஸ்வரூபம், உயிர் நீங்குங்கால் ஒடுங்கும் வழி ஆகிய இவைகள் வர்ணிக்கப்படுகின்றன.

(11) இவைகளை உணர்ந்து வ்யாதியால் படும் அவஸ்தைகள் தபஸ் செய்யுங்கால் ஏற்படும் துக்கங்களே என மதிக்கவேண்டும். இறந்தவர்களைச் சுடுகாடு கொண்டுபோவதை நாடுவிட்டு வனவாஸம் போவது என்றும், பிணம் எரிப்பதை அக்னியில் பிரவேசம் செய்து புநிதனாவதாக மதிக்கவேண்டும். இதனால் பரமபதம் ஸித்திக்கும்.

(12-15) அன்னம் ப்ரஹ்மம் ப்ராணன் ப்ரஹ்மம் என்ற விஷய ஆராய்ச்சி, ஊக்க விஷய த்ய்ர

னம், காயத்ரீயை ப்ரஹ்மமாக த்யானம் செய்வது,ஒருவன் கர்மம் ஞானம் ஆகிய இவைகளில் பழகிய பின்னர் மரண காலத்தில் தங்கக்கிண்ணத்தை கையில்வைத்துக்கொண்டு ஸூர்ய த்யானம்செய்யும் விதம் ஆகிய இவைகள் விஸ்தரிக்கப்படுகின்றன. பாத்திரத்துள்ளிருக்கும் வஸ்து மறைந்து நிற்பதுபோல ஏகாக்ரப்படாத மனத்திற்கு ப்ரஹ்மம் மறைந்தே நிற்கும் என்பதைக் குறிக்க மரணம் அடைவோன் தங்கப்பாத்திரத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியதுபோலும்.

**அத்யாயம்.** 6:—முதலில் சாந்தோக்ய உபநிஷத் 5-ம் அத்யாய விஷயமாகிய ஜ்யேஷ்டச்ரேஷ்ட விஷயமும் இந்திரியங்களுள் தம் சிறப்பு விஷயமாக ஏற்பட்ட சண்டை விஷயமும் கூறப்படுகிறது. இதன் பின்னர் சாந்தோக்ய உபநிஷத்தில் அதே அத்யாயத்திலிருக்கும் சுவேத கேது ப்ரவாஹன ஜைவலி, கௌதமஸம்வாதம் காணப்படுகிறது. இதுவரையில் ஞானம் கர்மம் ஆகிய இவைகளின் முடிவு கூறப்பட்டது. ஞானம் ஒரு விஷயத்தோடு ஸம்பந்தப்பட்டதல்ல. கர்மமோ தேவதைகள் மனிதர்கள் ஆகிய இவர்களது ஐச்வர்யத்தைப் பொருத்தது. ஆதலால் பாபம் ஸம்பந்தமில்லாத தனம் கர்மவிஷயமாகச் சேர்க்கவேண்டும். இதற்காக **மந்தம்** என்னும் ஒரு க்ருது இங்கு விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகிறது. அதில் ஆகுதிகள் கொடுக்கும் விதத்தையும் காயத்ரீமந்த்ரம் உபயோகப்படும் விதத்தையும் இந்த க்ருது சேஷத்தின் சிறப்பைப்பற்றி அநேக ரிஷிகள் வெளியிட்ட அபிப்ராயங்களையும் இங்கு வெளியிட்டிருக்கிறது. இதன் பின்பு ஸ்திரீகளைப்பற்றிய விஷயங்களும் அவர்களோடு புருஷர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும், பெண்சாதிகளிடம் உண்டாகும் புத்ரர்கள் விஷயமாக நடத்தவேண்டிய ஸ்மஸ்காராதி கர்மங்களையும், நன்றாக எடுத்துக் கூறி ஸ்திரீபுருஷ ஸம்பந்தத்தை ஒரு யாகமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஸாதாரணமான வைதிகவிவாஹத்தை மோக்ஷமார்க்கத்தில் இவ்வளவு சிறப்பான பாகம் என்றும் ஸ்திரீ புருஷர் சேர்ந்து வாழ்வது ஆத்ம விஷயத்தில் இவ்வாறு உபயோகப்படுத்த முடியும் என்றும் நம்மவர் மதித்திருந்தனர் என்பது நன்குவிளங்கும். முற்கூறிய கர்மங்களை ஸரிவரச் செய்து முடிக்க நியாயமாக ஸம்பாதிக்கப்பட்ட தனம் எவ்வளவு அவச்யமோ அப்படியே வைதிக தர்மப்படி அங்கீகரிக்கப்பட்ட ஸ்திரீயும் அவசியம் என்பது வெளிப்படும். மேலும் பிரஹதாரண்யக உபநிஷத் (1) (தொகுதி 3-பக்கம் 390-பத்தி-2) இல் காட்டியபடி இந்த விவாஹ விஷயத்தை த்யானித்து ஒருவன் மேன்மை அடைய முயலவேண்டும். ஆகவே ஸாதாரணமான விவா**ஹ** விஷயத்தை ஒழுங்குபடுத்த எண்ணியே இவ்விஷயம் ப்ருஹதாரண்யக உபநிஷத்து முடிவில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னர், முன்னர் இரண்டுதரம் கூறப்பட்ட குருபரம்பரை காணப்படுகிறது.

இந்த ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் பெரும்பாலும் மஹதார்க்கீக ஞானியான யாக்ஞவல்க்யர் ஸம்வாத மூலமாக அரிய விஷயங்களும் மற்றையவிடங்களில் சாந்தோக்ய முதலிய உபநிஷத்துக்கள் ஸாரமும் அமைந்து கிடக்கின்றன. ஆதலால் இதை மற்றைய உபநிஷத்துக்களின் ஸாரம் என்றேகூறலாம்.

ஓம் தத்ஸத்

நல்பவ்ருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்திருந்த ஒருவன் தான் அரசனாக வேண்டுமென்று விரும்பினான். அதேநிமிஷத்தில் அவன் அரசனாய்விட்டான். அடுத்த நிமிஷம் ஓர் அழகிய இளம்பெண் தன்னிடம் இருக்க வேண்டுமென்று இச்சித்தான். அந்தப்படியே உடனே ஒரு பெண் அவன்பக்கத்தில் வந்து நின்றாள். பிறகு நம்மை ஏதாவது புலிவந்து விழுங்கி விடுமோ என்று நினைத்தான். ஐயோ! நினைத்த மாத்திரத்தில் அந்தப்படியே ஒரு புலியின்வாயில் அகப்பட்டுக்கொண்டான். கடவுளும் இத்தகைய கல்பதருவைப் போன்றவரே? அவரது ஸந்நிதாநத்திலே எவன்தான் ஆதாவற்றவனென்றும் ஏழையென்றும் எண்ணிக்கொள்ளுகிறானோ அவன் தன் எண்ணப்படியே இருக்கிறான்; ஆயின் எவன் தன் குறைகளை யெல்லாம் கடவுள் தீர்க்கிறார் என்று நம்புகிறானோ, அவன் தன் எண்ணப்படியே யாவையும் அவரிடத்திலிருந்தே பெற்றுக்கொள்கின்றான்.



## சாதுர்யம்
### TACT

மனிதருடைய கார்யஸித்திக்குக் காரணம் ஸாமர்த்யம். ஸாதாரண ஸாமர்த்யத்தால் மாத்ரமே கார்யங்கள் ஸித்தியாவது துர்லபம். இடம் காலம் முதலியவற்றிற் கேற்ற ஸாமர்த்யத்தால் கார்யஸித்தி ஸுலபமாகும். இங்ஙனம் ஸமயோசிதமான ஸாமர்த்யமே சாதுர்யம் என்பது. கெண்டையைப்போட்டு வராலை இழுப்பதும் காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வதும் சாதுர்யமே. கல்லைக் குத்துவானேன் கைநோகிறதென்றழுவானேனென்று சும்மா இருப்பதும் மௌனம் கலகநாஸ்தி யென்று சில ஸமயங்களில் பேசாமலிருப்பதும், சாதுர்யமே. "கொக்கொக்கக் கூம்பும்பருவத்து மற்றதன், குத்தொக்குகசீர்த்தவிடத்து" என்றது இதுவே. "வினையால் வினையாகிக் கோடல்—யானையால் யானையாத்தற்று" என்றபடி, கம்புக்குக் களைவெட்ட அழைத்துக் கொண்டுபோய்த் தம்பிக்குப் பெண்கொள்ள முடிவுசெய்வது சாதுர்யமே யன்றோ. இவ்வித சாதுர்யம்லௌகிகஸ்திதிக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும். ஸமயோசிதமான ஸாமர்த்திய மாகையால் இதற்குப் பொதுவிதி இல்லை. ஆயினும் சில உபாயங்களை அறிந்திருப்பது உபயோகமாகும்.

எல்லாரியல்புகளு மறிந்து ஒவ்வொருவரிடத்தும் மேதை மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்து நடப்பது கஷ்டமல்ல. அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை, எல்லாருக்கும் ஸந்தோஷமே உண்டாகும். பணத்தால் விளையாத பல நன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் ஸந்தோஷம் உண்டாகும்படி நடப்பதை இளமையிற்றானே பழகிக் கொள்ளவேண்டும். வயதேறினபிறகு இந்தவழக்கம் உண்டாவது மிகவும் கஷ்டம். வேறு விசேஷ திறமை இல்லாதவர் அநேகர் இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக ஸித்தி அடைகின்றனர், இவைகளை அனுஸரிக்காதவர்கள் மிக்க திறமை வாய்ந்திருந்தும வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவாராகின்றனர். மற்றவர்களுக்கு ஸந்தோஷம் உண்டாகும்படி நடப்பது நமக்கு ஸந்தோஷத்தையே உண்டாக்குவது அநுபவத்தில் ப்ரத்யக்ஷமாகும். இங்ஙனம் நடப்பதையே திருவள்ளுவர் பண்புடைமை என்பர்.

இங்ஙனம் நடப்பதில் முக்யமாய் கவனிக்கத்தக்க உபாயங்களுள் ஸம்பாஷணை ஒன்று. எவரெவரோடு எவ்வெதை எவ்வெவ்வளவு பேசலாம் என்பதறிந்து, நமக்குரிய வரம்பிலே நின்று பேசவேண்டும். பேச்சின் நிமித்தமாக வீண்வார்த்தை பேசுவது குற்றம். அதைக்காட்டிலும் பேசாதிருத்தலால் பிழையொன்றுமில்லை. பரிஷ்காரமாய்ப் பேசாமலிருப்பதும் யுக்தமல்ல. ஆவதற்கும் பேச்சே காரணம். அழிவதற்கும் பேச்சே காரணம். ஆகையால் முன்பின் பார்த்து மிதமாய்ப் பேசவேண்டும். மிதமாய்ப் பேசுவதையும் பட்டு கத்தரித்ததுபோல் ஒழுங்காகப் பேசவேண்டும்.

நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லவேண்டும். வித்யாமமதை த்ரவ்யமமதை முதலிய காரணங்களால் பராமுகமாக இருப்பார் சிலர் உண்டு. நாம் அதைப் பாராட்டாமல் விடுவதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் கவனமாய்க் கேட்கவேண்டும். கவனமாய்க் கேட்பதனால் அனேக உபயோகமானவிஷயங்களை அறியலாம். நாம் கவனமாய்க் கேட்பவர்கள் என்றறிந்தால் நம்மை உருக்கமுடையவர்கள் என்று கொண்டு, நம்மிடம் அன்பு அதிகரித்து, சிலர் தங்களுடைய கஷ்டநஷ்டங்களை நம்மிடத்தில் முறையிட்டுக்கொண்டு தக்க யோசனை சொல்லும்படி வேண்டுவர். அதனால் அவர்களுக்கு ஹிதமான ஆலோசனைகளை எடுத்துரைத்து நன்மை செய்வதற்கான ஸந்தர்ப்பங்கள் நமக்கு நேரிடும்.

சாராயத்தை வார்த்துப் பூராயம் கேட்பார் சிலர், எச்சரிக்கை அற்றிருக்கிறஸமயம் பார்த்து

ஏதோ ஒன்றைக் கேட்டு, நாம் வெளியிடலாகாத ரஹஸ்யத்தை க்ரஹிக்க முயல்வர் சிலர். ஆதலால் வினாவிடைகளைக்கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே, வெளியிடக்கூடிய விஷயங்களை வெளியிட வேண்டும். மற்றவைகளை அடக்கிவைக்க வேண்டும். மனதில் இருக்கும் ரகசியம், மதிகேடனுக்கு வாயிலே.

கவிகளுடைய கருத்தின் ஆழத்தையும் கண்டறியலாம். மனிதருடைய மனதின் ஆழத்தை உள்ளபடி கண்டறிவது எளிதன்று. நீராழங் கண்டாலும்நெஞ்சாழங் காணமுடியாது. உள்ளும், புறமும் ஒத்திருப்பவர் மிகச்சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று, வாயினால் சொல்லுவது வேறொன்று. ஆகவே வார்த்தையால் மனத்தை அறிவது அஸாத்யம். வார்த்தையின் அளவாகமாத்ரமே ஒருவனை நாம் சத்ருவென்றும் மித்ருவென்றும் கொள்ளலாகாது. முகத்துக்கு, முகம் கண்ணாடி. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டு முகம்" வஞ்சனையில் பழகி முதிர்ந்தவர்களை முகத்தால் மாத்ரமே அறிவதும் எளிதன்று. முகத்தைக் காட்டிலும் கண்ணானது ஒருவன் கருத்தை நன்குணர்த்தும். "பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும் கண்ணின் வகைமையுணர்வார்ப்பெறின்" மிக்க யூகை உள்ளவர்கள் கண்ணின் குறிப்பால் கருத்தை அறியலாம், அங்ஙனம் அறிந்து அவரவர்களுக்கேற்ற விதமாக வார்த்தை சொல்லுவது கார்யஸித்திக்கு அநுகூலமாகும்.

வ்யவஹாரங்களைப்பற்றி ஸ்நேஹிதர்களோடு தர்க்கிப்பதால் மனஸ்தாபம் முதலிய கெடுதிகள் விளைவது பெரும்பான்மை. நம்முடைய கக்ஷி ஸ்திரப்பட்டாலும் சில ஸமயங்களில் ஸ்நேஹத்துக்கு பங்கம் உண்டாகின்றது. ஸ்நேஹ பங்கம் உண்டாக்கும் விதம் கட்சியை பலம் படுத்துவது மொத்தத்தில் துர்பலமே. தங்கள் கக்ஷி துர்பலமாக இருப்பது விளங்கினாலும் அவர்கள் நம்முடைய அபிப்பிராயத்தை அங்கீகரிக்கிறார்கள் என்பதில்லை. ஆயினும் வாதபலத்தால் வ்யவஹாரங்களை வற்புறுத்துவது நிஷ்ப்ரயோசனமே என்பதும் இல்லை. நம்முடைய கக்ஷியைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டினால் அவ்வளவிலே சிலர் தங்கள் அபிப்ராயம் பிசகானதே என்பதைக் கண்டறிவார்கள். அதுவே போதும். வ்யவஹாரத்தை அந்தமட்டில் விட்டுவிடுவது யுக்தம்.

சில ஸமயங்களில் நம்முடைய நினைவே நம்மை ஸதி செய்கின்றது. ஒருவர் உரைத்த ஒரு செய்தி வேறாக நம்முடைய காதில் விழுவதும் உண்டு. கண்டது பாம்பு கடித்ததுமாங்கொட்டையாக எதிரில்நடந்ததைக் கண் தவறாகக் கண்டிருக்கவுங் கூடும். கொண்ட அபிப்ராயம் தக்க ஆதாரமின்றித் தவறுதலும் ஸஹஜம். ஏற்கெனவே உண்மையென்று நாம் உறுதியாகக்கொண்டது தப்பாக இருக்கலாம். ஆகவே பிறரிடம் உரைக்கலுற்றதை த்ருடமாகக்கொண்டு உரைக்க வேண்டா. உறுதியாகவே இருப்பினும் அதை த்ருடமாகக்காட்டாமல் உரைப்பதே உத்தமம்: அதனால் யாதொரு நஷ்டமும் இல்லை.

கோபத்தால் ஒருவர் வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமாக வார்த்தை சொன்னால், அவர் கோபம் தானே தணிந்துபோகும். கோபத்துக் கிடங்கொடுத்தால் கார்யம் கெடும். பயமுறுத்தியும் பலாத்காரம் பண்ணியும் ஆகாத கார்யங்கள் நயத்தால் ஆகும். நயமொழியால் ஜயமுண்டு.

பேசும்போது கர்வடமில்லாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசவேண்டும். நிஷ்கபடமாய் நேர்மையாகப்பேசுவதுநல்லதே. ஆயினும்ஓட்டைவாயாகப் பேசுவதும் ஸரியல்ல. நம்மைப்பற்றியாவது நமது சார்பிலாவது நமக்கு விரோதமாயாவது அதிகம் பேசுவது யுக்தமல்ல. வீண் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும் விஷயங்களை இடையிடையிலே சுட்டிப் பேசலாகாது. நிர்நிமித்தமாகப் பரிஹாஸ வார்த்தைகள் பேசி ஸ்நேஹபங்கம் உண்டாக்குவது பேதமை.



இனி வேறு உபாயங்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்கலாம். படாடோபம் உள்ளவர்கள் தம்மிடத்தில் இல்லாத திறமையும் இருப்பதாக நடிப்பர். அவர்களைக் கண்டு அஞ்சுவது யுக்தமல்ல. திறமை மிக்கவர் சிலர் தோற்றப் பொலிவின்றி யிருப்பர். இவர்களை இகழ்வதும் யுக்தமல்ல. நம்முடைய திறமையின் நிலைமை நமக்கே விளங்காமல் இருப்பதும் உண்டு. லௌகிகத்தில் வ்யவஹாரங்களில் பழகும்போது தான் அவரவர்களுடைய திறமையின் நிதானம் ஏற்படும். பிறப்பு கல்வி கேள்வி சுற்றுச்சார்பு முதலிய வேறுபாடுகளே திறமை வேறுபாட்டிற்குக் காரணமாகையால், திறமை குறைந்தவர்களைப் பிறர் இகழ்வதற்கு ந்யாயம் இல்லை. திறமை மிக்கவர்களிடம் அடக்கமாகவும் திறமை குறைந்தவர்களிடம் விநயமாகவும் நடப்பது வசீகரத்துக்குரிய செய்கை.

நம்மை விவேகிகளாகப் பாவித்துக்கொண்டு வெளிப்படையாக ஒருவனை மூடனென்று அவனிடம் எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளுதலாகாது. நம்முடைய அபிப்ராயம் பிசகாக இருப்பினும் இருக்கலாம். எப்படி இருப்பினும் நம்முடைய அபிப்ராயம் பிசகென்றே கொண்டு அவன் நம்மை மூடனென்றே கொள்வான். மனிதர் பிறர் செய்த கெடுதியை மறந்தாலும் மறப்பர். நிந்தித்து அவமதித்த குற்றத்தை எக்காலமும் மறவார். பிறரை இங்ஙனம் அவமதித்து நிஷ்டூரம் உண்டாக்கிக் கொள்வது கார்யஸித்திக்கு ப்ரதிகூலமேதவிர இதனால் ஒரு நன்மையும் உண்டாகாது.

எடுத்துக்கொண்ட கார்யம் இடையூறின்றி இனிது முடியும் என்று உறுதியாக இருத்தலாகாது. நல்லது செய்வதில் நாலிடையூறும் வரும். கைக்கெட்டினது வாய்க்கு எட்டாமற் போகிறதும் உண்டு. தருணம் வாய்த்தபோதே தக்கபடி கார்யத்தை முடித்துக்கொள்ள வேண்டும். தூண்டிற்காரனுக்கு மிதப்பின் மேலே கண். தருணம் வாய்க்கிறவரையில் தூங்காமற் காத்திருக்கவேண்டும். தூங்கினவன் கன்று சேங்கன்று. சில கார்யங்களில் தருணம் வாய்க்குமென்று காத்திருப்பது வீணாகும். அலை ஓய்ந்து கடலாடுவதில்லை. அலை மோதும்போதே தலைமுழுகவேண்டும்.

மனுஷ ஸ்வபாவத்தை ஸூக்ஷ்மித்தறிவது மிகவும் உபயோகமான வித்தை. மற்றெந்த வித்தைக்கும் இது குறைந்ததன்று. நம்பத் தகுந்தவர் இன்னார், தகாதவர் இன்னார், என்பதோடு நம்பத்தக்கவரை எவ்வெவ்விதத்தில் எவ்வெவ்வளவாக நம்பலாம், என்பதையும் உய்த்துணர்வது மிகவும் முக்யம். இங்ஙனம் உணர்வது எளிதன்று. இதற்கு அநுபவம் அதிகம் வேண்டும். நமக்கு உடந்தையாய் வேலைசெய்யவும் நமக்குக் கீழே வேலை செய்யவும் அவச்யமானவர்களைத் தக்கபடி தேர்ந்து கொள்வது ப்ரதானம். ஒருவனிடத்தில் ஸந்தேஹம்உண்டாயிருந்தால் அவனை வேலையில் அமர்த்திக்கொள்ளவேண்டாம். அமர்த்திக்கொண்ட பிறகு ஒருவன்மீது ஸந்தேஹம் கொள்ளவேண்டாம். ஒருவன்மீது வைத்தால் முழுநம்பிக்கை வைக்கவேண்டும். முன்பின் பாராமல் நம்பி விடுகின்றவர்களே நம்பி மோசம் போகின்றவர்கள். நாமும் மற்றவர்கள் நம்மை நம்புமாறுநடத்தல்வேண்டும். பரஸ்பர நம்பிக்கை இல்லாவிட்டால் எவ்வித கார்யமும் ஸித்தியாவதில்லை.

மற்றவர்களுடைய விருப்பங்களை இயன்றமட்டில் நிறைவேற்றவேண்டும். இயலாத விருப்பமாயின் 'இது என்னால் முடியாது, என்று சொல்ல பின்வாங்கலாகாது. 'இது என்னால் ஆகும்; என்று உரைப்பது எவருக்கும் ஸுலபமே. ஆயினும் ஒவ்வொருவரும்எல்லா ஸந்தர்ப்பங்களிலும் ஸந்தோஷமாய் அங்ஙனம் உரைப்பது முடியாது. ஆகவே 'இது என்னால் முடியாது' என்றுரைப்

பது பின்னும் கஷ்டமே. ‘இது என்னால் முடியாது’ என்று சொல்லப் பின்வாங்கினவர்கள் அநேகர் அழிவுற்றிருப்பது ப்ரஸித்தம். சில வ்யவஹாரங்களில் ‘இது என்னால் ஆகாது’ ‘இது செய்ய நான் ஸம்மதிக்கமாட்டேன்,’ ‘இதில் நான் ப்ரவேசிப்பது யுக்தமல்ல’ என்றுரைப்பது அவச்யமே. ஆயினும் இவ்வித ஸந்தர்ப்பங்களில் கேவலம் வெளிப்படையாக உரைப்பது மனஸ்தாபமும் நிஷ்டூரமும் விளைவிப்பது யுக்தமல்ல. உரைக்கலானைத லளிதமாக உரைக்கவேண்டும். லளிதமில்லாதவனிடம் போகவும் அவனோடு கார்யங்களை நடத்தவும் எவரும் விரும்பார். லாபங்காட்டுகின்றவர்களைக் காட்டிலும் லளிதங்காட்டுகின்றவர்களுக்கே கார்யங்கள் கைகூடும். அதனால் உண்டாகிற நன்மை வேறெதனாலும் உண்டாகாது.

அற்பகார்யமானாலும் ஆராய்ந்து பார்த்தே அதில் அடியிடவேண்டும். ஆராய்ந்து பாராதவன் கார்யம்தான் சாந்துயரந்தரும். நுண்ணிய கருமமும் எண்ணித்துணி. அடியிட்ட கார்யங்களை அநுகூலமாக முடிப்பதானால் ஸாவதானமும் நிதானமும்வேண்டும். கார்ய ஸம்பந்தமான வ்யவஹாரங்களைப் பொறுமையாய்க் கேட்டறியவேண்டும். கேட்டபின் சிக்கறுக்கத் தக்கவைகளை ஒழுங்காகச் சிக்கறுக்க வேண்டும். பொறுமைக் கடலினும் பெரிது. ஆத்திரப்படுதல் ஆகாது. ஆத்திரம் அடைந்தாலும் அவசரப்பட்டு அதை வார்த்தையாலும் செய்கையாலும் வெளியிடலாகாது. அவசரக்காரனுக்கும் ஆத்திரக்காரனுக்கும் புத்திமட்டு. பதறிச்செய்கிற கார்யம் சிதறிக் கெட்டுப்போகும். பதறாத கார்யம் சிதறாது.

நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூலேன் என்றிருக்கலாகாது. ப்ரபஞ்ச நாடகத்தில் அவரவர்க்குரிய வேஷம் அவச்யமே. இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும். ஆடை யில்லாதவன் அரைமனிதன். வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி. திட்டமாக உடுப்பவன் திட்டமாக வேலை செய்வான் என்பது பொதுஜன அபிப்பிராயம். டால்டமாரம் போட்டுக்கொண்டு போக வேண்டும், டம்பாசாரியாய்த் திரிய வேண்டும் என்பதில்லை: ஒழுங்காக உடுப்பது போதும். தூரத்தில் இருவர் பேசி நகைத்திருந்தால், நம்மைக் குறித்தே அவர்கள் ஏதோ பேசிக்கொள்கிறார்கள் என்று நினைப்பதும் நம்மையே அவமதிக்கிறார்கள் என்று ஸந்தேஹிப்பதும் ஆகாது. எவராகிலும் நம்மை நேரில் பரிஹாஸம் பண்ணி நகைக்கிறபோது நாமும் அவர்களோடு கூடக் கலந்து நகைத்துச் சமாளிப்பது அவர்களைத் தோற்பிக்கும் உபாயமாம். சமாளிக்க முடியாவிட்டாலும் நாமும்கூட நகைத்து விட்டால், பரிஹாஸம் முனை மழுங்கிப்போகும். பரிஹாஸம் பண்ணின விடத்துக்கூடக் கலந்து நகைப்பவனை எவரும் விரும்புவர். அவன் ஸாரஸமுள்ள விவேகி என்பது விளங்கும். நம்முடைய குறையைக் கண்டவிடத்து நாமே நகைத்துவிட்டால் மற்றவர்கள் நம்மைக்கண்டு நகையார்கள்.

ஒவ்வோர் ஸமயத்தில் பிறர் நம்மைக்கண்டு பரிஹஸித்து நகைப்பது ஸஹஜமே. அதனால் நமக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது. பிறர் நகைப்பதற்கு இடமாகுமே யென்று நம்முடைய அபிப்ராயங்களைக் கைவிடலாகாது. நம்முடைய ஸ்வபாவத்தின்படி நடந்தால் பிறர் நகைப்பதற்கு இடமில்லை. நம்முடைய ஸ்வபாவத்துக்கு வேறாக நடப்பது தான் பிறர் நகைப்பதற்குக் காரணமாவது. பிறர் தம்மை அவமதித்தால் நிஷ்காரணமாக நினைத்துச் சிலர் வீணிலே மனஸ்தாபம் கொள்வதுண்டு. நம்முடைய தாழ்வுக்கு நாமே காரணம். ஒருவருடைய அவமதிப்பால் யாதொரு தாழ்வும் உண்டாகாது.

நாம் கவனித்துச் செய்யத்தக்க கார்யங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஸரியாக அவைகளை நடத்துவதே கஷ்டம். அப்படியிருக்கப் பிறர் முயலுதலான கார்யங்களில் ப்ரவேசிக்கும்படி நாமே வழி தேடுவது உசிதமல்ல. நம்முடைய உதவியை விரும்பினால் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அழையா வீட்டுக்கு நுழையாச் சம்பந்திபோல் நம்முடைய கார்யங்களை நன்கு கவனிப்பதே நமக்கு அழகு.

தீ. செல்வக்கேசவராயன்.



# ராஜாங்க முறை
# ப்ரதமக் கொள்கைகள்

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

## 5. பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகள்

### FILIAL DUTIES

(*All Rights Reserved.*)

சென்ற ஜூன்மாத பத்ரிகையில் நேசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அது மாத்திரமேயன்றி இன்னும் சில முக்கிய கடமைகள் உள. அவையாவன. மரியாதை, கீழ்ப்படிவு, நன்றியறிதல் முதலியன.

மரியாதையானது நம்பெற்றோர்கள் நம்மினும் மேன்மையானவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்வதே. இதுவே நம்மைக்காட்டிலும் அவர்கள் சுவபாவமாகவே மிகஉயர்ந்தவர்கள் என்பதை வெளிப்படையாய்க் குறிக்கின்றது. உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் மரியாதை செய்யக் கடமைப்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் உங்களைக் காட்டிலும் வயதில் முதிர்ந்தவர்கள் என்பது மாத்திரமேயல்ல. உங்கள் குழந்தைப்பருவமுதல் உங்களைப்பற்றிக் கவலை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கைக்குழந்தைகளாய் இருந்தபோது அன்புடன் பால் கொடுத்து உங்களை வளர்த்தவர்கள் தாய்மார்களல்லவா? உங்களைப் பிரியத்துடன் எடுத்து அணைத்து முத்தங்கொடுத்துச் சீராட்டினார்களன்றோ? உங்களுக்குத் தூக்கம் வாராதபோது, தூங்கும்படி இனிமையான பாட்டுக்களைப்பாடி தொட்டிலில் இட்டுத்தாலாட்டவில்லையா? நீங்கள் தூங்கும்போதும் உங்களைப்பற்றி ஜாக்கிரதை யெடுத்துக் கொண்டவர்களும் அவர்களே. வருத்தத்தினாலும் வியாதியினாலும் அவஸ்தைப்படும்போது மிக ஆவலோடு கண் கொட்டாமல் உங்கள் துன்பங்களை நீக்குமாறு பாடு பட்டவர்களும் அவர்களே. நீங்கள் தட்டித்தடுமாறி கீழே விழுந்தபோது ஓடி வந்து எடுத்து உதவினவர்களும் அவர்களே. பரலோக பிதாவாகிய கடவுளின் பெயரைக் கற்றுக்கொடுத்தவர்களும் அவர்களே தான். உங்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியும் உங்களுக்கு உடுப்பும் வீடும் தந்தும் ஆதரித்திருக்கிறார்கள். உங்கள் வாழ்நாளில் அவர்கள் உங்களுக்கு நன்மை செய்யாத தினமே காண்பதரிது. நீங்கள் அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டியதற்கு மற்றுமொரு காரணம் யாதெனில் நம்மை ஆளாநிற்கும் கருணைக்கடலாகிய கடவுளுக்குப் பிரதிநிதிகளாய் இருப்பவர்களும் அவர்களே. ஆனதுபற்றி குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையானது, நன்றியறிதல் என்னும் கடமையேயாகும் என்று உங்களுக்கு நன்றாய் விளங்கும். இவ்வித உணர்ச்சி சுயநயமாத்திரத்தாலே ஏற்பட்டிருக்க முடியாது. ஒரு சிறுவன் பெரியவனானபோது இனி பெற்றோர்களின் உதவி தனக்கு அவசியமில்லை யென்னும் காரணத்தால் தாய் தந்தையர்களுக்கு மரியாதை செய்யாவிட்டால் அவன் மிகக் கொடும் பாதகனே யென்பது திண்ணம்.

நீங்கள் குடும்பத் தலைவர்களாகும்போது உங்கள் பெற்றோர்கள் உங்களை விசேஷமாகக் கட்டளை யிடமாட்டார்கள். உங்கள் குடும்பத்தை நீங்களே வகிக்கும் காலம் வந்தபோது உங்கள் நடத்தை முழுமைக்கும் நீங்களே ஜவாப்தாரியாவீர்கள். ஆனாலும் அப்போதும் நீங்கள் அவர்களிடம் மரியாதையாய்ப் பேசவும் நடந்துகொள்ளவும், முன்னிலும் எள்ளளவும் குறைவின்றிக் கடமைப்பட்டவர்களே. எவ்விடத்திலும் முக்யமாய்க் குடும்பத்தார்கள் கூடும் போதெல்லாம் முதல் ஸ்தானமும் மரியாதையும் அவர்களுக்கே. நம்முடைய பெற்றோர்கள் முன்னிலையில் அவர்கள் அநுமதிகொடுத்தாலும் நாம் ஸமத்வமாக உட்கார நாணுகிறோம். கல்யாண முதலிய விசேஷ நாட்களில் முதல் மரி

யாதை அவர்களுக்குத் தான் செய்கிறோம். அவர்கள் பாதங்களில் அர்ச்சிக்கின்றோம்.

சில அறிவீனர்கள் சிறிது ஆங்கிலபாஷை படித்ததனாலேயே தங்கள் வயது சென்ற பெற்றோர்களை அவமதிக்கின்றார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களை அவமதிப்பதுபோலவே அவர்கள் குழந்தைகளும் பிற்காலத்தில் அவர்களைச் சிறிதும் மதியார்கள் என்னும் எண்ணமே தோன்றுவதில்லை. ஆங்கில பாஷையில் மிகத்தேர்ந்த ஒரு வாலிபர் டெப்டி கலெக்டர் (Duputy Collector) உத்தியோகம் பண்ணிக்கொண்டிருந்தாராம். அவருக்கு அதிகப்படிப்பினால் கண்பார்வை குறைவடைய மூக்குக்கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. பெரிய ஐரோப்பிய துரைமார்கள் செய்வதைப்பார்த்து எப்போதும் சட்டையில் மேல் பொத்தான் போடுமிடத்தில் ஓர் புஷ்பம் அணிந்துகொள்வது வழக்கம். பிறப்பினாலும் சுவபாவத்தினாலும் இல்லாவிடினும் போலி நடையினாலும் வெளித்தோற்றத்தினாலும் ஜாதி ஐரோப்பியராகக் கருதி அவ்வண்ணம் செய்தனர்போலும். கலாசாலையில் படிக்கும்போது ஸகவாஸ தோஷத்தினால் சுருட்டுப் புகை குடிக்கும் பழக்கமும் அடைந்தார். இவர் தகப்பனாரோ வெகு சீலர். பக்திக்கும் பெருந்தன்மைக்கும் இருப்பிடம். காலந்தவறாமல் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தே தீர்வர். வேத புஸ்தகங்களை நன்கு உணர்ந்தவர். இத்தகைய பெருமான் ஒருநாள் தெய்வபூஜை செய்துகொண்டிருக்கும்போது அவர்வயிற்றிற் பிறந்த மகனாகிய டெப்டி கலெக்டரைப் பார்க்க ஓர் நண்பர் வந்தார். வந்த கனவான் அவரது தகப்பனாரைச் சுட்டிக் காட்டி அவர் யாவரென டெப்டி கலெக்டரைக் கேட்க, தன் தகப்பன் என்று சொல்லிக் கொண்டால் தன் கௌரவத்திற்கு என்ன பங்கம் வந்து விடுமோவென்று எண்ணி, அவர் தன்வீட்டில் பூஜை சாஸ்திரி என்று விடை யளித்தனராம். இதைப் பார்க்கினும் அவமரியாதையும் பாபமும் உலகில் உண்டோ? கொஞ்சகாலத்தில் அவ்வாலிப டெப்டி கலெக்டர் தன் வேலையையும் இழந்து, சீர் குலைந்து யாவராலும் அவமதிக்கப்பட்டான்.

நம்முடைய பெற்றோர்கள் மேற்கூறியவாறு சிறப்பு வாய்ந்த சீல விருத்தர்களாயிராமல் கோபிஷ்டர்களாயும் நியாயவரம்பு தாண்டியவர்களாயுமிருந்தபோதிலும், அவர்களுடைய வெறுக்கத்தக்க காரியங்களைச் சகித்துக்கொண்டு அவர்களையும் மரியாதையாய் நடத்துவது நமது கடமையாகும். இதுவே நமக்கும் விசேஷ பெருமையைப் பயக்கும். ஏனெனில் நற்குணங்கள் வாய்ந்த பெரியோர்களிடத்தில் யாவரும் எப்போதுமே மரியாதையாய் நடப்பார்கள். சாத்வீகிகளுக்கும் கோபம் மூட்டும்படியான அந்யாயச் செயல்களையும் வைவுகளையும் ஆநந்தமாகவே கொண்டு அவர்களுக்கு இன்பமுண்டாகும்படியான காரியங்களையேசெய்து அவர்களைமரியாதையோடு நடத்தும் மக்களே மக்கள். அவர்களின் நிறையும் பொறையுமே மெச்சத் தகுந்தன. மற்றையோர் தாயின் யௌவனத்தைக் கெடுக்க வந்த மானிடப்பதர்களாவர். இதன் உண்மை அடியில் வரும் சரித்திரத்தினால் நன்குவிளங்கும்.

முன்னொரு காலத்தில் **மஹா அலெக்சாந்தர்** என்னும் நாமம் பூண்ட சுத்தவீரன் ஒருவர் இருந்தார். இவர் ஐரோப்பா கண்டத்தில் மாஸிடோனியா என்னும் தேசத்தரசர். இவர் போகாத நாடும் அடையாத வெற்றியுமில்லை. இந்த இணையில்லா வீரசிகாமணியின் தாயோ பேராசையென்னும் பேய்பிடித்தவள். மகா அகங்காரி. தன் மகனுக்கு இராஜ்யம் ஆளுகையில் மிக்க தொந்திரவு கொடுத்துவந்தாள். இவர் நமது ஆசியாவில் அநேக நாடுகளை ஜயித்துவருங் காலையில் தன் தாயினிடத்துள்ள விச்வாஸத்திற்கும் மரியாதைக்கும் அறிகுறியாக தனக்குக் கிடைத்த மகா சிலாக்யமான வஸ்துக்களை வெகுமதிகளாக அனுப்பினார். அவற்றுடன் ஒரு நிருபமும் தன் தாய்க்கு மிக வணக்கத்துடன் எழுதியனுப்பினார். அதில் தன் அரசாட்சியில் மாத்திரம் தலையிடாதிருக்கும்படியாகவும் தன்னால் நியமிக்



கப்பட்ட தேசாதிபதி தேசத்தை நியாயமாயும் சமாதானமாயும் ஆளும்படி அவருக்கு எவ்வித இடையூறுகள் செய்யாமலிருக்கும்படியாகவும் தன்தாயைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். இதைப் பார்த்தபோது அவன் தாய் கடுமையாகத் திட்டிக் கொடுமையாகப் பதில் அனுப்பினாள். அதை மகா அலெக்சாந்தர் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டாரேயல்லாமல் கோபங்கொண்டு அஸப்பியச்சொல் ஒன்றும் சொல்லவேயில்லை. ஒரு சமயம் அவரால் நியமிக்கப்பட்ட தேசாதிபதியானவன் அவருடைய தாய் தனக்கு விசேஷ தொந்தரவையும் கஷ்டங்களையும் கொடுப்பதாயும், அவ்விஷயமாகத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடில் தான் அமைதியாக தேசத்தை ஆள்வது அசாத்தியமென்றும் மகா விசனத்துடன் ஓர் கடிதம் மஹா அலெக்சாந்தருக்கு எழுதினார். அவர் அதைப் படித்துப்பார்த்ததும் என்ன மறுமொழி உரைத்திருப்பாரென்று உங்களுக்குத் தோன்றுகிறது? சற்றேனும் தன் தாயைக் கண்டித்தாரோ அல்லது கடுமொழி யேதேனும் புகன்றனரோ, அல்லது தன் தாயின் செயலுக்கு நொந்து தேசாதிபதி இன்புறும் இனியவார்த்தைகள் பகன்றனரோ? இல்லவேயில்லை. தன் தாய் அல்லற்பட்டு அழுது விடும் கண்ணீரின் ஒரு சிறு துளியைத் தான் பார்த்துச் சகிக்கமுடியாதென்றும் அதன்முன்னிலையில் தேசாதிபதியின் பதினாயிரங் கடிதங்களும் தனக்கு ஓர் பொருட்டு அல்லவென்றும், தன் தாய் அவர் எழுதியதுபோல பன்மடங்கு துன்பம் விளைவித்தாலும், ஆநந்தத்துடன் அங்கீகரிக்கத் தயாராயிருப்பதாகவும் பதில் சொல்லியனுப்பினார். ஓர் மஹாராஜன் சுத்த சன்மார்க்கன், இணையில்லாப் போர்வீரன் அப்பேர்ப்பட்ட தன் தாயினிடத்தில் வைத்திருந்த மரியாதையே மெச்சத்தகுந்தது. தெய்வ சம்மதமானது. நியாயமானதுதான்.

ஆகையினாலே உங்கள் பெற்றோர்கள் விஷயமாக எப்பொழுதேனும் உங்கள் மனதில் கோபம் பிறந்தால் அந்த க்ஷணமே இச்சரித்திரத்தை நினைத்துக்கொள்ளுங்கள். கோபத்திற்கு இடங்கொடாமலும் அவமரியாதையான நடை எக்காலும் அணுகாவண்ணம் உங்களைக்காத்து வருவீர்களாக.

C. S. ஸுந்தரம் ஐயர், பீ.ஏ., எல்.டி.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திப் பூமாலையை அணிந்தவராகிய பரமசிவனால் விரும்பப்பட்ட கணபதியை அடிக்கடி ஸ்துதிசெய்து நாம் வணங்குவோம் என்பது இதன் பொருள். இங்கு கணபதியை, ஆத்திமலர் மாலை சூடிய பரமசிவன் அமர்ந்த தேவன் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் கணபதியிடம் பரமசிவனுக்கு அதிக அன்பு என்பது வெளியாகிறது. கணபதி மூத்தபிள்ளை யாதலாலும், தகப்பனுக்கு மூத்த பிள்ளையிடமே அதிக அன்பு உண்டாவது வழக்கம் ஆதலாலும் இவ்வாறுகூறியது பொருந்தும். மேலும் கணபதி பரமஞான மூர்த்தியாயிருத்தலால் பரமசிவனுக்கு அவரிடம் அன்பு அதிகமாயிருக்கிறதென்பது பின் வரும் கதையால் வெளியாகும்.

முன்னொரு காலத்தில் பார்வதியும் பரமசிவனும் ஏகாந்த ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் பரமசிவன் தமது குழந்தைகளாகிய கணபதி, ஸுப்ரஹ்மண்யர் ஆகிய இருவரையும் அழைத்து "என்னிடம் அருமையான பழம் ஒன்றிருக்கிறது. யாரொருவர் ப்ரபஞ்சம் முழுமையும் சுத்திவிட்டு என்னிடம் சீக்ரம் வந்து சேருகிறார்களோ அவர்களுக்கு இதைக் கொடுத்துவிடுகிறேன்" என்றார். ஸுப்ரஹ்மண்யர் மிகுந்த ஆவலுடன் தமது மயில் வாஹனத்தின்மீதேறி ப்ரபஞ்சத்தை வலம்வர அதிவேகமாய்ப்புறப்பட்டார். ஸுப்ரமண்யர் தலை மறைந்ததோ இல்லையோ, கணபதி மெதுவாக எழுந்து தம் தாய்தந்தையாகிய லோகமாதா, லோகநாதன் ஆகிய இருவரையும் வலம் வந்து "பழத்தை என்னிடம் தந்துவிடுங்கள். முன்னிருந்த ப்ரபஞ்சங்கள், இப்பொழுது உள்ளன, இனி உண்டாகப்போகின்றன, ஆகிய எல்லாம்

உங்களுள் அடக்கம், நான் உங்களை வலம்வந்ததால் ப்ரபஞ்சம் எல்லாவற்றையும் சுற்றினவன் ஆனேன். ஆதலால் பழம் என்னுடையதே" என்று கூறினார். இம்மாதிரி அற்புத ஞான ரஹஸ்யமடங்கியமொழியால் கணபதியிடம் பரமசிவனுக்கு அதிக ப்ரீதி ஜனித்துவிட்டது.

ஆத்திசூடி எழுதிய ஔவையாருக்குக் கணபதியே வழிபடு கடவுள், அதாவது இஷ்டதெய்வம், இவள் கணபதியை விடாது ஆராதித்து வந்தாள். இவள்-செய்த நூல்களின் ஆரம்பத்திலெல்லாம் கணபதியையே வணங்குகிறாள். இவள் கணபதி பக்தியைப்பற்றி பின்வரும் கதை வழங்கி வருகின்றது.

ஒருநாள் இவள் கணபதி பூஜை செய்ய ஸங்கல்பம் செய்துகொண்டு உட்கார்ந்தாள். அப்பொழுது அவள் இருந்த வழியாக ஸுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான்பெருமாள் நாயனாரும், கைலாஸத்திற்குப் போய்க்கொண்டிருந்தனர். இவளைக்கண்டதும், "நீயும் வாயேன். சிவதர்சனம் பண்ணிவரலாம்" என்று அழைத்தனர். இவளுக்குக் கணபதியிடமிருந்த பக்தி அதிகத்தால் தன்னால் வரமுடியாதென்று கூறிப் பூஜையை வழக்கப்படி ஸாவதானமாகச் செய்தாள். பூஜை முடிந்ததும், கணேசர் தமது துதிக்கையால் அவளை வெகு லகுவாகத் தூக்கி உடனே கைலாஸத்திற்குக் கொண்டுபோய் வைத்துவிட்டனர். பின்னர் வெகு நாழிகை கழித்துவந்த நாயனார் இருவரும், தமக்குமுன் ஔவையார் வந்திருப்பதைக்கண்டு அவள் பக்தி விசேஷத்தைப் புகழ்ந்து பாராட்டிக்கொண்டாடினர்.

## 1. அறஞ்செய விரும்பு

தர்மத்தைச் செய்ய விரும்பு என்பது இதன் பொருள். அறம் பொருள் இன்பம் வீடு என்பவை புருஷார்த்தங்கள் எனப்படும். இவைகள் புருஷர்கள் அதாவது மனிதர்களால் விரும்பப்படுபவைகளாகையால் இவைகளுக்கு இப்பெயர் வந்தது. இவைகளில் அறம் என்பது மனுதர்ம சாஸ்த்ரத்தில் செய் என்று சொன்னவைகளைச் செய்வதும், விலக்கியவைகளைச் செய்யாது விடுதலுமே. அதாவது ஜாதிதர்மமும், ஒருவனுடைய ஸ்வதர்மமுமே அறம் என்பதாயிற்று. இன்னும் பொதுவாக நோக்கில் அறம் என்பது இல்லறம் துறவறம் என்பதாகி, முடிவில் கொடுத்தல் என்பதே அறம் என்பதன் சுருக்கப்பொருளாகும். ஆதலால்தான் **ஔவையார்** புருஷார்த்த ஸ்வரூபத்தைச் சுருக்கமாக விளக்கப் புகுந்தவிடத்து,

ஈதல் அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்;
காதல் இருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்று வெளிப்படையாகக் கூறியும்;

சாதி இரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதிவழுவா நெறி முறையின்,—மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர் ;
பட்டாங்கி லுள்ள படி.

என்று இதே பொருளை வற்புறுத்தியும் கூறியுமிருக்கிறாள். இதையே ஆத்திச்சூடியில் **தானம் விரும்பு** என்றும் **அறனை மறவேல்** என்றும் கூறியிருக்கிறாள்.

இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்ட அறத்தை எப்பொழுதும் செய்ய விரும்பவேண்டும். தர்ம சிந்தனை இன்றி மனிதனாகிய ஒருவன் ஒருபொழுதும் இருக்கலாகாது. இந்தச் சிந்தனையில்லாது மனதை விட்டுவிட்டால், கெட்டவைகளாகிய அதர்ம சிந்தனைகள் வந்து குடிகொள்ள அது இடமாகும். ஆகவே தர்மத்தை செய்ய முடியாமலிருந்தபோதிலும், 'அதைச் செய்ய முடியாமற்போய்விட்டதே! ஸமயம் வாய்த்தால் தர்ம வழியிலேயே நடக்கவேண்டும். நல்ல தருணத்தைக் கைவிடலாகாது' என்று தர்மவிஷயமாகவே நமது மனம் ஸதாபாய்ந்து கொண்டிருக்க வேண்டும். இம்மாதிரி இடைவிடாது ஒருவன் மனம் பழக்கப்பட்டிருந்தால் தர்மம் செய்யத்தருணம் வாய்க்கின் அதைச்



செய்யாதுவிடான் ; தருணம் வாய்க்காதிருந்தால், தருணத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு அதர்ம சிந்தைக்கு இடங்கொடாதிருப்பான். ஆகவே பகுத்தறிவோடு அறஞ்செயவிரும்புவதே, ஸதா ஸந்மார்க்கத்தில் நடப்பதற்கு முக்யமான ஸாதனம்.

மேலும் புருஷார்த்தங்களில், இன்பம் என்பது இஹலோக ஸுகத்தைமாத்ரம் கொடுக்கும் ; பொருள் இஹபரஸுகங்கள் இரண்டிற்கும் ஸாதனமாகும் ; அறமோ இஹம் பரம் வீடு ஆகிய மூன்றையும் கொடுக்கும் திறனை உடையது. அறத்தோடு கூடி இருந்தால்தான் பொருளும் இன்பமும் ஒழுங்கு தவறாது சீரையும் சிறப்பையும் கொடுக்கும். ஆதலால் அறமே மிகச் சிறந்த புருஷார்த்தம், அதை எல்லோரும் செய்ய விரும்பவேண்டும். இதுபற்றியே திருவள்ளுவரும்.—

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

அறத்தின் சிறப்பைப்பற்றி மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் **குண்டதார உபாக்யானம்** என்ற ஒரு கதை இருக்கிறது. முன்னொரு காலத்தில் ஒரு ப்ராஹ்மணன் பொருள் அகப்படாமையால் தர்மத்தால் வரும் சிறப்பை உத்தேசித்து அது வருவதற்காகப் பணம் வேண்டும் என்று இடைவிடாது த்யானித்து வந்தான். எத்தனையோ தேவதைகளை ஆராதித்துப் பார்த்தான் : ஒன்றும் பயன்படாமல் போய்விட்டது. ஒருவரும் ஆராதிக்காது விட்டிருந்த ஒரு மேகாதிபதியான **குண்டதாரன்** என்பவனை மிகுந்த பக்தியுடன் தன் கோரிக்கை நிறைவேறுவதற்காக ஆராதித்தான். இவன் பூஜைக்கு மெச்சி குண்டதாரன் இவன் முன்தோன்றி, 'ஆவலுடன் எதிர்ப்பார்ப்பதாலேயே பாபங்களும், பொறாமையால் கோபமும், மோசத்தால் காமமும் உண்டாகும். ஆனால் செய்ந்நன்றி கொல்வதால் வேறு பாபங்கள் உண்டாகாது ; அதுவே மேலான பாபமாக ஓங்கிநிற்கும்' என்று எச்சரிக்கை செய்துவிட்டு மறைந்தான். இந்தத் தர்மோபதேசத்தைக் கேட்டு முன்னிலும் பதின்மடங்கு ப்ராஹ்மணனுக்குக் குண்டதாரனிட மிகுந்த பக்தி அதிகரிக்க, தர்ப்பையைப் பரப்பிக்கொண்டு அவனையே த்யானம் செய்துகொண்டு ப்ராஹ்மணன் படுத்துக்கொண்டான்.

பக்தியின் அதிகத்தால் அன்றிரவு அவன் ஒரு ஸ்வப்நம் கண்டான். அதில் **மணிபத்ரன்** என்ற தெய்வலோகாதிபதி அவரவர்கள் கர்மத்திற்கேற்றபடி சீரையும் சிறப்பையும் அளித்துக்கொண்டும், அவைகளைப் பிடுங்கிக்கொண்டும் இருப்பதைக் கண்டான். இப்படி இருப்பவன் காலில் குண்டதாரன் மஹாவிநயத்துடன் பணிவதைக் கண்டான். மணிபத்ரன் என்ன வேண்டும் என்று குண்டதாரனைக்கேட்க, அதற்கு அவன் 'என்னை ஒரு ப்ராஹ்மணன் மனப்பூர்வமாகப் பக்தி பண்ணுகிறான். அவனுக்கு ஸுகம் ஏற்படும்படியான வழியைத் தேடவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். இதைக் கேட்டதும் 'ஸரி அப்படியே ஆகட்டும். அவனுக்கு ஏராளமான ஐச்வர்யத்தைக் கொடுத்துவிடுகிறேன்! எழுந்திரு' என்று மணிபத்ரன் ஸந்தோஷமாகக் கூற, குண்டதாரன், 'மானிட சரீரமும் மனமும் நிலையில்லாது, ஐச்வர்யமும் அப்படியே. ஆதலால் அவன் எப்பொழுதும் **அறஞ்செய விரும்பவேண்டும்**. இதைத்தான் அவனுக்கு ஸம்பாதித்துக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு விருப்பம்' என்றான். மணிபத்ரன் 'அப்படியே ஆகுக' என்று அநுக்ரஹித்தான். இவ்வாறு ஸ்வப்நம் கண்டதும் ப்ராஹ்மணன் விழித்துக்கொண்டான்.

அவன் மனம் அதுமுதல் தர்மத்திலேயே பாய்ந்தோடியது. விஷயப்பற்றுக்கள் நீங்கின. அவன் தவத்திலேயே முனைந்துவிட்டான். முன் குண்டதாரன் செய்ந்நன்றி கொல்வதைப்

பற்றிக் கூறியது அவனுக்கு ஞாபகம் இருந்ததால், லௌகீக மேன்மை தனக்கு வரும்படி செய்யாது தர்மசிந்தை வரும்படி செய்ததை அவஸரப்பட்டு அபகாரம் என்று எண்ணிவிடாது, நிதானித்தான். பழக்கத்தின் பேரில் ராஜாக்கள் முதலிய மற்றையவர்களைவிடத் தான் ஸுகமான நிலையில் ஞானம் நிறைந்திருப்பதைக் கண்டு குண்டதாரனிடம் நன்றி அறிதலுடன் ஸுகமாக வாழ்ந்து வந்தான். அப்பொழுது குண்டதாரன் மறுபடி அவன் முன்தோன்றி உலகத்தவர் காமக்ரோதம் முதலியவைகளுக்கு ஈடுபடடுத் திருப்தி வாராது கிடந்து உழலுவதை அவன் ஞானக்கண்ணுக்குப்புலப்படுத்தி, 'நீஅறஞ் **செய விரும்பியதால்** நினைத்த கார்யங்கள் எல்லாம் கைகூடும் நிலை உனக்கு வந்துவிட்டது. நீயாகப் பார்த்து ஒருவனை அரசனும் ஆக்கிவிடலாம், குபேரனும்ஆக்கிவிடலாம். நிக்ரஹாநுக்ரஹசக்தி உனக்கு வந்துவிட்டது' என்று ப்ராஹ்மணனைப் புகழ்ந்து பேசினான். இதைக்கேட்டு ப்ராஹ்மணன் குண்டதாரனைப் பணிந்து பல விதங்களில் தன் நன்றியறிதலை அவனுக்குக் காட்டி, பெரிய மஹானாகி உலகில் நிச்சிந்தையாக உலாவி முடிவில் பரமபதம் பெற்றான்.

அறம் செய்யவேண்டுமென்ற கருத்துடன் பணத்திற்காகத் தவம் செய்தவனுக்கும் ஸகல புருஷார்த்தங்களும் கைகூடி விட்டனவாம். அப்படி இருக்க நேரிட அறஞ்செய விரும்புவோர்களுக்கு வரும் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ!

**மனிதன் பிறக்கும்பொழுதே இருவித ஸ்வபாவமுடைமை.**—மனிதன் இருவித ஸ்வபாவத்துடன் இவ்வுலகத்திற் பிறக்கின்றான். ஒன்று முக்திக்கு ஸாதநமாயிருக்கும் வித்யாஸ்வபாவம்; மற்றொன்று ஸம்ஸாரத்திலும் பந்தத்திலும் அழுத்தும் அவித்யாஸ்வபாவம். ஜநநகாலத்தில் இவ்விரு ஸ்வபாவங்களும் தராசின் தட்டுபோல் ஸமநிலையிலிருக்கின்றன. பிறந்தவுடனே ஸம்ஸாரமானது தன் ஸுகங்களையும் போகங்களையும் ஒரு தட்டிலும், ஆத்மாவானது தனது ஆனந்தத்தை மற்றொரு தட்டிலும் வைக்கின்றன. மனிதனது புத்தி ஸம்ஸாரஸுகங்களை விரும்பும்பக்ஷத்தில் ஸம்ஸாரத் தட்டு பளுவாகிக் கீழே பூமியின் பக்கமாய்ச் சாய்கின்றது; ஆத்மாவை விரும்பும்பக்ஷத்தில் ஆத்மதட்டு ப்ராஹ்மத்தின் பக்கமாய்ச் சாய்கின்றது.

# கடற்பஞ்சும் பவழமும்

## SPONGES & CORALS

வியாபாரச் சரக்குகளாக மனிதனால் சேகரிக்கப்படும் பல பொருள்களில் அநேகம் பூமியினின்றும் அநேகம் கடலினின்றும் கிடைப்பனவாய் இருக்கின்றன. சுரங்கங்களினின்று வெட்டி எடுக்கும் பொன் வெள்ளி போன்ற உலோகங்களும், கெம்பு வைரம்போன்ற நவரத்னங்களும் பூமி தரக்கூடிய நிதிகளாகும். பவழம் முத்து இவைகள்போன்ற நவரத்னங்கள், கடலினின்று பிறக்கக்கூடியனவாகும். வியாபாரச் சரக்காக உபயோகித்துவரும் கடற்பஞ்சு (sponge)ம், ஸமுத்ரராஜனது நாட்டில் விளையும் ஒருவகைச் சரக்கே.

பிராணிசாஸ்திர விசாரணையில் இன்று எடுத்துக்கொண்ட விஷயம் கடற்பஞ்சையும் பவழத்தையும்பற்றியே. இவைகள் ஸாமான்யமாகக் கடலில் விளையும்படியான பூண்டு செடிபோன்றவைகளாகப் பாவிக்கப்படுகின்றன. கடற்பஞ்சைப் பாசி என்றும், பவழத்தைக் கொடியென்றும் வழங்குவது நாம் கேட்டிருக்கிறோம். இவைகள் செடிவர்க்கத்தினின்று அல்லது பிராணிவர்க்கத்தினின்று பிறக்கும் சாதனங்கள் என்பதைச் சற்று விசாரிப்போம். கடைகளில் காணக்கூடிய கடற்பஞ்சும் பவழமும் பிராணிகளினின்று பிறக்கும் வஸ்துக்கள்தாம். நமது தேகத்துக்கு உறுதிகொடுக்க எலும்புகள் அமைந்ததுபோல மிருதுவான தேக அமைப்போடுகூடிய கடற்பஞ்சு, பவழம், இவைபோன்ற பிராணிகளுக்குக் கடின பதார்த்தமாக ஏற்பட்ட வஸ்துக்கள் தாம் வியாபாரச் சரக்குகளாகப் பிந்தி வெளியே காண்கிறோம். ஆனால்இப்பிராணிகளின் விசேஷம்என்னவெனில் வேரூன்றிச் செடிகொடிகள் போல நிலை பெயர்ந்து செல்லாது தம் வாழ்நாளைக் கழிக்கக்கூடிய பிராணிகள் ஆகும். இதன் விஷயம் பிந்தி விவரிப்பாம்.

**கடற்பஞ்சின் சரிதை:**—பஞ்சுப் பிராணி



யானது கடலில் மிகுதியாகத் தோன்றினும் நல்ல ஜலம் நிறைந்த ஏரி குளங்களிலும் பெரிய துறவுகளிலும் வளரக் காணலாம். ஆனால் வியாபாரச் சரக்காக விற்கப்படும் பஞ்சு, மத்தியதரைக்கடலி(Mediterranean Sea)னின்று எடுக்கப்படும் கடற்பஞ்சே. மற்ற ஜாதிக் கடற்பஞ்சுகள் பலவிதமாகக் கடலோரங்களில் காணலாம். ஆனால் அவைகளினின்று உபயோகமுள்ள மிருதுவான பஞ்சுச்சரக்குக் கிடைக்கக்கூடியதல்ல. சொரசொரப்பாயிருப்பதனாலும் எளிதில் பஞ்சு போகக்கூடிய நிலைமையிலிருப்பதாலும் மற்றப் பஞ்சுகள் உபயோகத்துக்கு வருகிறதில்லை. நமது குளங்களில் காணக்கூடிய பஞ்சு தொட்டால் உதிர்ந்துபோகக்கூடியதும் தேகத்தில் பட்டால் அரிப்பைக் கொடுக்கக்கூடியதுமாயிருக்கிறது.

இப்பஞ்சுப் பிராணியின் தேகம் எவ்வாறு அமைந்திருக்கிறது. எதன்மேல் வேரூன்றியிருக்கும் என்பதைச் சற்றுக் கவனிப்போம். ஜலத்தின் கீழிருக்கும் பாறைகளோ அல்லது எவ்வித கடின பதார்த்தமோ கிடைக்குமாயின் அதன் மேல் வளர ஆரம்பிக்கும். வளர்ந்த கடற்பஞ்சு ஒன்றைப்பரிசோதித்துப் பார்க்கும்போது தேகம் முழுவதும் சிறு துவாரங்களால் நிறைந்து அவைகளுடன் சில பெரிய துவாரங்களும் இடையிடையே யிருக்க நாம் காணலாம். சிறிய துவாரங்கள் வழியாக ஜலம் உட்புகுவதையும் பெரிய துவாரங்கள் வழியாக வெளியே வருவதையும் காணலாம். இப்படித் தனது தேகத்திற்குள் ஏற்பட்ட ஜல ஓட்டத்தினாலேயே பிராணிக்கு வேண்டிய பிராணவாயுவும், ஆகாராதிகளும் கிடைப்பனவாகும். தேகத்திற்குள் காணப்படும் அறைகள் வயிற்றுக்கு ஸமமாகச் சொல்லலாம். அதன் உள்தோல் அமீபாவைப் போன்ற செதில்களால் நிறைக்கப்பட்டிருப்பதால் ஜலத்தோடு உள்ளே கொண்டுவரப்பட்ட நுட்பமான ஜீவராசிகளைப் பிடித்திழுத்து ஜீரணித்துக்கொள்ள சக்திவாய்ந்தவைகளாயிருக்கிறது. தேகத்திற்கு வேண்டாத கழிவு பதார்த்தங்களை வெளியே விலக்குவதற்குப் பெரிதாகக் காணப்படும் சில துவாரங்களே ஸாதனங்களாயிருக்கின்றன. உள்தோல் என்ற காரணத்தினாலேயே வெளித்தோல் ஒன்று இருக்கிறதென்று நம்ப இடமுண்டாகிறது. வெளித்தோல் ஸாதாரண செதில்களால் நிறைந்து தேகத்திற்கே தற்காக்கும் நமது தோல் போன்ற ஓர் போர்வையாகவும் ஸ்பர்ச உணர்ச்சியோடு கூட மற்றப் பிராணிகளின் தேகத்தில் பட்டால் அரிப்பு எடுக்கக்கூடிய சில சுணை முட்டைகளோடு நிறைந்திருக்கின்றன. பின் கூறப்படும் ஸாதனத்தினாலேயே அநேகம் பிராணிகள் பஞ்சைப் பிடித்துத் தின்ன பிரியமில்லாமலிருக்கின்றன. ஊட்டத்தினால் உடல் வளரும் என்பதற்கிணங்க வளர்ந்துகொண்டு வரும் கடற்பஞ்சு மக்கட்பேறு என்ற ஸாதனத்தை எவ்வாறு நடத்துகிறது என்பதும் கவனிக்கத்தக்கது. நான் எழுதியபடி அமீபாவைப்போலத் தேகம் இரண்டாகி அதனாலேயே மக்கட்பேறு அடைவதில்லை. ஆனால் பஞ்சின் உட்பாகத்தினின்று கரு உண்டாகி நீந்திப்போய் ஸவுகரியப்பட்ட இடத்தில் தங்கி, வேர் ஊன்றிப் பஞ்சாக வளரும்.

**கடற்பஞ்சைச் சரக்காக்கும் விதம்.**—முத்து குளிப்பவர்கள் சிப்பிக்காக மூழ்குவதைப்போலக் கடற்பஞ்சுக்காகவும் மத்தியதரைக் கடலில் மூழ்கி எடுக்கிறார்கள். கொண்டுவரப்பட்ட பஞ்சு ஜலத்தில் ஊறவைத்து அழுகவேண்டும். பிறகு தேய்த்துக் கழுவி எஞ்சிநிற்கும் மிருதுவான பஞ்சைச் சரக்காக ஏற்றுமதி செய்கிறார்கள்.

**பவழத்தின் சரிதை.**—பவழத்திலும் பல வகையுண்டு. ஆனால் சிவந்து வியாபாரச் சரக்காகக் கொண்டுவரும் பவழத்தைத்தான் பவழமென்றும் சொல்வது வழக்கமாக இருக்கிறது. துவாரங்களும் குழல்களும் நிறைந்த சிவந்த பவழப்புத்தும் வெண்ணிறத்தோடுகூடி பலவிதமாய்க்காணப்படும் கற்பவழங்களும் கொம்பு பதார்த்தத்தால் ஆக்கப்பட்டுப் பல கிளைகளோடுகூடி

செடிமாதிரியாகவும் விசிறிமாதிரியாகவும் காணக்கூடிய கொம்புப்பவழமும் பவழவர்க்கத்தைச் சேர்ந்தவைகளே. மேற்கூறியவைகளில், கொம்புப்பவழத்தின் உபயோகம் இன்னதென்று அறியப்படவில்லை. மற்ற வெள்ளை ஜாதி கற்பவழங்களோ சுண்ணாம்பு செய்ய காளவாய்க்குக் கொண்டு போகும் சரக்காக இருக்கின்றன. முதலில் கூறப்பட்ட கெட்டியான செம்பவழந்தான் நற்**பவளம்**. அதே செந்நிறத்தோடுகூடி பவழப்புத்துகாணினும் எளிதில் நொருங்கிப்போகக்கூடிய நிலைமையில் இருப்பதால் வியாபாரச்சரக்காவதில்லை. ஆனால் நற்பவழத்தையும், பவழத்தையும் எடுத்து இந்நாட்டுத் தமிழ்வைத்தியர்கள் பஸ்பம் முதலியவை செய்வதற்கு உபயோகிக்கிறார்கள்.

**பவழப்பிராணியின் தேக அமைப்பு.**—பவழப்பிராணியின் தேகஅமைப்பு சற்றேறக்குறைய பஞ்சுப்பிராணியினதுபோல ஆகும். இரண்டு தோலால் அமைக்கப்பட்டு வெளித்தோல் ஸ்பர்சத்தோடு கூடிய கவசமாகவும், உள்தோல் ஆகாரத்தை உள்எடுத்து ஜீரணிப்பதற்கு ஸாதனமாகவும் மக்கட்பேறு மலக்கழிவு முதலிய தொழில்களையும் நடத்தவேண்டிய பாகங்கள் அமைந்துள்ள இடமாகவும் இருக்கிறது. தேகத்தில் உட்புறத்தில் ஒரு அறை ஒரு வாயோடு கூடி காணப்படும். மலபதார்த்தங்கள் வெளி ஏறக்கூடிய ஆஸனத்துவாரம் இதற்குப் பிரத்தியேகமாகக் கிடையாது.

பஞ்சைப்போலத் தேகமாத்யந்தம் துவாரங்கள் இல்லாமையால் இவ்வாயின் வழியாகத்தான் ஜல ஓட்டம் உட்செல்லவும் வெளிவரவும் வேண்டியிருக்கிறது. இந்த ஜல ஓட்டத்தினாலேயே பிராணிக்குவேண்டிய பிராணவாயுவும்ஆகாரமும் கிடைக்கிறது. இப்பவளப்பூச்சிகளுக்கு வாயைச் சுற்றி ஜெவந்திப்பூ (சாமந்திப்பூ) இதழ்கள் போன்ற கைகளும் வரிசையாக இருக்கின்றன. அக்கைகள் எப்போதும் ஆடிக்கொண்டிருக்கும். அப்பிராணியை நாம் தொடும்பக்ஷத்தில் மலர்ந்துகாணப்படும் பவழமலர்ந்த கைகளைச்சுருக்கி மொட்டைப்போல ஆகிவிடும். பிறகு, கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மலர்ந்து முன்போல இருப்பதைக்காணலாம். இந்தக் கைகளிலும் தேகத்தின் வெளிப்புறத்திலும் நச்சுச்சுருள்கள் அமைந்த செதிழ்கள் நிறைந்துள்ளன. மற்றப்பிராணிகள் நெருங்கித் தொடவரும் காலத்தில் இச்சுருள்களின் முனைகளால் குத்தப்பட்டு அரிப்பும் எரிச்சலும் பொறுக்கக்கூடாதபடி விலகிச் செல்லும். பவழப்பிராணிகளில் ஆண் பெண் என்ற விவரம் கிடையாது. உள் அறையினின்று உற்பத்தியாகும் கரு ஒரே பிராணியிடத்தில் பிறக்கும் இருவகைச் செதில்களின் ஐக்கியத்தினால் உத்பவிக்கும். ஆண் உருப்பு பெண் உருப்பு இவை இரண்டையும் ஒரு பிராணியிடமே காணப்படுமாயின் அவ்வகைஅமைப்பை (Hermaphrodite) அர்த்தநாரீ என்று சொல்லலாம். வெகுதூரம் நீந்திச் சென்று தக்க இடங் கிடைத்தபோது தங்கி வேர் ஊன்றிப் பவழப் பிராணியாக வளர்கிறது. இவ்வகை உற்பத்தியைத் தவிர்த்து வேறுவிதமாகவும் பவழப்பிராணி வளர்வது உண்டு. ஒரு பூச்சியே இரண்டாகப் பிளந்தும் அடியிலிருந்து கிளைத்தும் பல பூச்சிகளாவதுண்டு. ஆனால் இவ்வகைப் பூச்சிக்குடும்பங்கள் (colonies) ஒன்றையொன்று ஒட்டியே நிற்கும். அதனால்தான் நற்பவழம்போன்ற பவழக்கிளையைப் பரிசோதிக்குங்கால், தண்டு கிளைகள் நிறைந்து பல புஷ்பங்களோடு காணப்படுகிறது. குடும்ப ஐக்கியமாக வாழும் இனத்தைச் சேர்ந்தது என்பது அதன் பார்வையினாலேயே விளங்கும். பூக்கள் வெண்மை நிறத்தோடிருக்கும். ஆறு இதழ்கள் காணப்படும். ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு பூச்சி. ஒன்று மற்றவைகளோடு சிவந்த தோலினாலேயே ஸம்பந்தப்பட்டு நிற்பதால் ஒன்றின் ஆகாரம் மற்றொன்றுக்கும் பசியில்லாமல் செய்து விடுகிறது. ஒவ்



வொன்றும் தன்தன் தொழிலைச் செய்துவருவதால் அவைகளுக்குப் பசி என்பதும் பிணி என்பதும், மூப்பு என்பதும் இல்லை. மனித இனத்திலும் இவ்வாறு தொழிலை ஊக்கத்துடன் ஒவ்வொரு குடும்பத்திலும் நடத்தும்பக்ஷத்தில் ஒருவன் ஏழையென்றும், இன்னொருவன் பணக்காரன் என்பதும் இன்றி ஸகல ஆன்மகோடிகளும் பசி, மூப்புத் துன்பமின்றி அநேக காலம் வாழக்கூடும் என்பது எமது துணிபு.

முன் கூறிய கருத்தரித்து உண்டாகும் மக்கட்பேறினால் ஓரிடத்தில் வளர்ந்து பெருகி நிற்கும் பவழக்குடும்பம் அதேயிடத்தில் சங்கை அதிகரித்தால் ஆகாரம் குன்றி மடிந்துபோகாதபடி ஏற்பட்ட ஓர் ஸாதனமாகும். எருக்குப் போன்ற செடியில் உற்பத்தியாகும் விதை தன் அடியிலேயே விழுந்து முளைத்து ஆகாரமின்றி இறந்து போகாதபடி மயிர்க்குச்சுகளால் அமைந்த குடையைக் கொடுத்து விசாலித்த பூமியில் புர இடம் தேட அனுப்பும் தன்மைப்போல் ஸ்தாவர வஸ்துபோல் நிலைபெற்று வளரும் பவழப்பிராணியும் வெளியே நீந்திச் செல்லக்கூடிய திறமையுடன் குழந்தைகளைப்பெற்றுப் பலவிடங்களிலும் சென்று குடியேற்ற நாடுகளை ஸம்பாதிக்க ஏற்படுத்துகின்றது. இதனாலேயே கிணற்றுத் தவளைபோலிருக்கும் நம் நாட்டாருக்கு ஓரிடத்திலேயே இருந்து பெருகி செல்வம் குன்றி சீர்கெடுவதைப் பார்க்கிலும் குடியேற நாடுகளைத் தேடிச் சென்று பரவி நாமும் முன்னுக்குவரவேண்டியது அவசியம் என்று தோன்றும், என்று நம்புகிறேன். மேலே படித்த சிறு பிராணிகளின் சரித்திரம் வேறு எவ்விதமான புத்திமதிகளைக் கற்பிக்காமல் போனபோதிலும் குடும்ப ஐக்யத்தின் ஸமாதான தர்மத்தின் உயர்வையும், குடியேற்ற நாடுகள் தேடுவது அளவுக்குமிஞ்சிப் பெருகும் எந்த ஜாதியாருக்கும் அவசியம் என்பதையும் கட்டாயம் நாம் அறியலாம்.—

**N. S. ஐம்புநாத ஐயர், B.A., L.T., F. Z. S.**

## சீனருக்குள் வழங்கிவரும் ஒரு பழங்கதை

## A CHINESE FOLKLORE

ஒரு அரசனிடத்தில் ஒரு சித்ர வேலைக்காரனும் ஒரு தச்சனுமிருந்தார்கள். அவர்களிருவருக்கும் என்ன காரணத்தினாலோ விரோதமுண்டாயிருந்தது. ஒவ்வொருவனும் மற்றையவன் எப்போது ஒழிவானென்று காத்திருந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் சித்திரவேலைக்காரன் அரசனிடஞ்சென்று “பிரபுவே, தங்களுடைய தகப்பனாராகிய பெரிய ராஜாவானவர் தாமிருக்கும் தெய்வ லோகத்திற்கு என்னைவரும்படி கட்டளையிட்டார். அவரது கட்டளைப்படியே நான் தெய்வலோகஞ் சென்று அவரைத் தரிசித்தேன். அவரனுபவிக்கும் இன்பஸுகங்களை என்னால் எடுத்துரைக்கமுடியாது. நான் அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு திரும்பி வருகையில், அவர் தங்களிடம் கொடுக்கும்படி இந்தக்கடிதத்தைக் கொடுத்தார்.” என்று வெகு விநயத்துடன் ஒரு கடிதத்தை நீட்டினான்.

அக்கடிதம் வருமாறு.—

எனது பிரிய குமாரனுக்குச் சகல நன்மையுமுண்டாகுக. நான் ஸ்வர்க்கத்தில் பலவித இன்பங்களை யனுபவித்து வருகிறேன். இப்போது இவ்விடத்தில் ஒரு கோயில் கட்ட உத்தேசித்திருக்கிறேன். ஆகையால் உன்னுடைய சமஸ்தானத் தச்சனை விரைவாக அனுப்பிவை ; உன்னுடைய க்ஷேமத்தைக் கோறி இங்கே பல கைங்கரியங்கள் செய்து வருகிறேன். அனேக ஆசீர்வாதம்.

இங்ஙனம்,
**உனது ப்ரிய பிதா.**

அரசன் கடிதத்தைப் படித்துப் பார்த்துப் பொய்யென்றுணராமல், மெய்யாகவே தன் தகப்பனிடமிருந்து வந்ததாக மதித்து வெகுவாய் ஆனந்தித்துஅக்ஷணமே தச்சனை அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

தச்சன் சமஸ்தானத்திற்கு வந்ததும் அரசன் அவனைப் பார்த்து “நமது தகப்பனார் தெய்வலோகத்திலிருப்பது உமக்குத் தெரியுமல்லவா? அவர் இப்போது அங்கே ஒரு புதிய கோயில் கட்ட யத்தனம் செய்திருக்கிறாராம். அதற்கு நீர் அவசியம் போகவேண்டும். இதோ அவரிடமிருந்து நமக்கு வந்த திருமுகம்.” என்று சொல்லி, சித்திர வேலைக்காரன் கொடுத்த கடிதத்தைக் காட்டினான்.

தச்சனும் கடிதத்தை நன்றாய்ப் படித்துப் பார்த்து "இது அஸாத்தியமான காரியம். இதுவரை, நமதரசனுக்கு மூளையுண்டென்றிருந்தோம். இன்றுதான் இவனுடைய மூடத்தனம் வெளியாகியது. இவ்வளவும் சித்திர வேலைக்காரனுடைய சதியாயிருத்தல் வேண்டும். ஆயினும் எல்லாம் வல்ல கடவுள் நமக்கு நல்ல யுக்திகளைக் கற்பித்து இந்த ஆபத்தினின்றும் விடுவிப்பார்." என்று தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு அரசனைப் பார்த்து "ஒரு விண்ணப்பம். மஹாராஜாவின் ஆக்ஞையை நிறைவேற்ற சிறிதும் நான் பின் வாங்குபவனல்ல. தெய்வலோகம் போவதற்கு மாத்திரம் வழி காட்டிக்கொடுத்தால் மற்றைக்காரியங்களைத் திருப்திகரமாய்ச் செய்து முடித்து விடுகிறேன்" என்றான்.

அரசன் இன்னது செய்வதென்று தெரியாமல் சித்திரக்காரனை ஸ்வர்க்கலோகத்திற்கு வழி காட்டும்படி ஆக்ஞாபித்தான். அவனும் "மஹாராஜ்! பெரியராஜாவானவர், தச்சனை, அவனுடைய ஆயுதங்களுடன் ஓரிடத்தில் உட்காரவைத்து அவனைச் சுற்றிலும் காய்ந்த கட்டைகளையடுக்கி அவைகளின் மேல் நெய்யை யூற்றி மேளவாத்திய முழக்கத்துடன் அக்கட்டைகளுக்குத் தீயேற்றினால் அப்போதுண்டாகும் வெளிச்சத்தில் தெய்வலோகமார்க்கம் தென்பட மரக்கட்டைகளினின்று கிளம்பும் புகையாம் குதிரையின் மேல் தச்சன் ஏறிக்கொண்டு தமது மாளிகைக்கு நேரே வந்து விடுவான், என்று சொன்னார். இதை நான் கேட்டபடியே இங்குரைத்தேன்" என்றான்.

அரசனும் பெரிய ராஜாவின் கற்பனைப்படியே நடத்தல் தகுதியென்று தச்சனுக்குக் கட்டளையிட்டான். பின்பு தச்சன் அரசனைப்பார்த்து "மகாராஜாவே! இன்னும் ஒரு விண்ணப்பம். எனக்குச் சிறிது சாவகாசம் கொடுத்தல் வேண்டும். எனக்கு அவசரமான சொந்த அலுவல்கள் சில இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற மாத்திரம் அனுமதி கொடுக்கவேண்டும். அவைகள் முடிவுபெற ஒருவாரஞ்செல்லும். வார முடிவில் தெய்வலோகம் போகச் சித்தமாகி வருகிறேன்." என்றான். அரசனுமிசைந்து அநுமதி கொடுத்துவிட, தச்சன் தன் வீடு சென்று தன் மனைவியிடம் அரண்மனையில் நடந்தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொன்னான்.

பின்பு பலவித யோசனைகள் செய்து கடைசியாக இந்த ஆபத்தினின்றும் தப்புநிமித்தம், தன் வீட்டிலிருந்து, தன்னை அக்கினிப் பிரவேசம் செய்விக்க நியமித்திருக்கும் இடத்திற்கு ஓர் சுரங்கம் வெட்டித் தனக்குட்கார நியமித்திருக்கும் இடத்தின்கீழ் ஒரு சலவைக் கல்லை வைத்து அதை ஒருவரு மறியாமலிருக்க மண்ணால் மூடிவிட்டான். அரசனும், ஏழாநாள் தெய்வலோகத்திற்குத் தச்சனை யனுப்புவதற்காகத் தன் நகரத்தார் ஒவ்வொருவரும் ஒருகட்டு விறகும் ஒரு படி நெய்யும் கொண்டுவந்து கொடுக்கவேண்டு மென்று பறையறைவித்தான். குறித்த தினத்தில் விறகும் நெய்யும் தவறாமல் வந்துசேர்ந்தன. பின்பு அரசன் தச்சனை அவனுடைய ஆயுதங்களுடன் உட்காருவித்து அவனைச்சுற்றி விறகுக் கட்டைகளை யடுக்கி அவைகளின்மேல் நெய்யை யூற்றி அவைகளுக்கு நெருப்பிடுவித்தான். சமஸ்தான வித்வான்களிற் சிலர் மத்தளம் அடித்தனர். சிலர் வீணை வாசித்தனர். குழல் ஊதினர் சிலர். வேறு சிலர் இனியகுரலுடன் கீதம்பாடினர். புகையும் ஜ்வாலையும் உயர்ந்து வீசின. தச்சனும் மெதுவாய்க் கல்லை யகற்றித் தன்னுடைய ஆயுதங்களுடன் சுரங்கத்தின் வழியே வீடு சேர்ந்தான். புகையும் ஜ்வாலையும் ஆகாயமளாவி வீசுகையில் சித்திரவேலைக்காரன் அவைகளைச் சுட்டிக்காட்டி "அதோ பாருங்கள், தச்சன் தேவலோகம் செல்லுகிறதை!" என்று கூவினான். அங்குக்கூடியிருந்தோ ரெல்லோரும் தச்சன் தேவலோகம் சேர்ந்தானென்றே சொல்லிக்கொண்டு தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

இது நடந்த ஒருமாதம்வரை தச்சன் தன் வீட்டினின்றும் வெளிப்படாமல், தன்மேனி வெளுக்குமாறு தினந்தோறும் பாலில் ஸ்நானஞ்செய்து வந்தான். ஒரு மாதம் முடிந்தவுடன் உயர்ந்த ஆடை யாபரணங்களணிந்துகொண்டு தெய்வலோகத்தினின்று பெரிய ராஜா தன் மகனுக்கு எழுதியதாக ஒரு கடிதத்தையும் எழுதுவித்துக்கொண்டு அரசனிடஞ் சென்றான்.

அரசனும் தச்சனை முறைப்படி யேற்று ஓரிடத்தில் இருக்கச்செய்ய, தச்சனும் தான் கொண்டுவந்த கடிதத்தை நீட்டினான். அது வருமாறு:—

"எனது அருமை மைந்தனுக்குச் சகல நன்மையுமுண்டாகுக. நான் உனது தர்ம பரிபாலனத்திற்கும் பிதிர்வாக்கியத்தைப் பிரீதியுடன் நிறைவேற்றியதற்கும் மிக மகிழ்ந்தேன். உன் நாட்டிலிருந்து வந்த தச்சன் நிருமித்த கோயில் வெகு நேர்த்தியா யமைந்திருக்கிறது. அதற்கொப்பான கோயில் இந்நாட்டிலில்லையென்றே சொல்வது தகுதி. அவனது வேலைத்திறமையை இங்குள்ளவரனைவரும் மெச்சினோம். அவனுக்குத் தக்க பரிசுகொடுத்து அவனைக் கனப்படுத்துவது உனது கடமையாகும்.

இனி, கோயிற் சுவர்களின் மேல் சித்திரங்களெழுத வேண்டும். ஆகையால் தச்சனை யனுப்பியவாறே சித்திர வேலைக்காரனை யனுப்பிவைக்கவும்.

அனேக ஆசீர்வாதம்.

இப்படிக்கு

உனது ப்ரிய பிதா."

அரசன் கடிதத்தைப் படித்து மகிழ்ந்து தச்சனை வெகுவாய்க் கௌரவித்துக் கொண்டாடிப் பல பரிசுகளுடனும் அவனிருப்பிட மனுப்பிவைத்தான். பின்பு சித்திர வேலைக்காரனை யழைத்து வரும்படி கட்டளையிட, அவனும், தச்சனுடைய வெண்ணிறம் ஆடையாபரணங்கள், அரசனிடம் அவன் பெற்ற வரிசைகள் முதலியவற்றைக் கண்ணுற்று மயங்கி உண்மையறியாதவனாய், வாஸ்தவத்தில் தச்சன் தேவலோகஞ் சென்று வந்தவன்தானென்று உறுதிகொண்டு, அரண்மனைக்கு வர, அரசனும் தச்சனுக்கு விதித்தபடி இவனுக்கும் தேவலோகஞ்செல்ல ஏழுநாள் தவணை விதித்தான். குறித்த தினத்தில் சித்திர வேலைக்காரனும் தன் தொழிற்கருவிகளுடன் வந்து சேர்ந்தான். முன்பு, தச்சனுக்குச் செய்ததுபோலவே இவனையும் மணையில் வைத்துச் சுற்றிலும் மரக்கட்டைகளை யடுக்கி நெய்வார்த்துத் தீயிட்டனர். தீயும் கொழுந்து விட்டெரியவே சித்திர வேலைக்காரன் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், 'குய்யோ முறையோ' வென்று அலறி யடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தான். வந்தும் பயனில்லை. அங்கிருந்தோ ரெல்லாம் ஸங்கீத வித்வான்களிடம் கவனமாயிருந்தபடியால் இவனுடைய கூக்குரலைக் கவனிப்பாரின்றி, வெளியேறிய மறு நிமிஷமே மாண்டான்.

"கெடுவான் கேடு நினைப்பான்" "புத்திமான் பலவான்".

S. R. அனந்தநாராயணய்யர்.



# *சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

## XXII உஷ்ணம்: பரவும் விதம்

## HEAT: ITS TRANSMISSION

உஷ்ணம் இவ்வாறு உண்டாகும் இடத்திலிருந்து சுற்றுமுற்றும் பரவுகிறது என்ற விஷயத்தைப்பற்றி முதலில் ஆராயப்புகுவோம். இது மூன்றுவிதமாகப் பரவிவரும் என்பது வெளியாகும். அவையாவன (1) ஊடுருவிப்பரவல் (இரும்புக்கம்பியை நெருப்பில் சொருகினால் அதன் மறுநுனி சூடாவது இவ்விதத்தால்தான்.) (2) உடன் சென்றுபரவல் (அடுப்பில் வைத்த தண்ணீர் சூடாவது இதனால்தான்.) (3) நேரகப்பரவல் (ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் பரவிவருவது இதனால்தான்) ஆகிய இவைகளே. இவைகளின் லக்ஷணங்களை விஸ்தாரமாக ஆராயப்புகுவோம்.

1. ஊடுருவிப் பரவல்.—இம்மாதிரி பரவுவதில் உஷ்ணம் எப்பொழுதும் ஒரு வஸ்துவின் உள்ளூரவே பரவிச் செல்வது. உஷ்ண உத்பத்தியில் இருக்கும் பாகம் அதிகச்சூடாகவும் சொருகப்பட்ட வஸ்துவின் மற்றைய பாகங்கள் தூரமாகப் போகப்போகச் சூட்டில் குறைந்தும் காணப்படும். சொருகும் வஸ்துவை எந்தப் பக்கம் நோக்கிப்பிடித்தாலும் அதன்ஊடுருவி உஷ்ணமானது ஒரேமாதிரியாகப் பரவிப்போகும். ஒவ்வொரு வஸ்துவுக்கும் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவிவிடும் சக்தியில் வித்யாஸம் உண்டு. பொதுவாக உலோகங்கள் உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிடும் சக்தி வாய்ந்தன. பாதரஸம் தவிர மற்றைய த்ரவபதார்த்தங்களும் வாயுபதார்த்தங்களும் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடும் சக்தியில் மிகத் தாழ்ந்தவை. திடபதார்த்தங்களிலும் உலோகங்களைத் தவிர மற்றையவைகளில் சில உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிட, சில இந்தச் சக்தியில் மிகத் தாழ்ந்தவைகளாகவும் காணப்படும்.

உலோகங்களுள்ளேயே ஒன்று மற்றொன்றைவிட உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடும் சக்தியில் மாறு

* இதுவரையில் இயற்கை அற்புதங்கள் என்ற தலைப்பின் கீழ்வந்த விஷயங்களே இவை. இது முதலில் வெவ்வேறான இயற்கை அற்புதங்களை எடுத்துக் காட்டி அவைகளின் காரணங்களை உணருவதற்கு வேண்டி ப்ரகிருதி தத்வசாஸ்திரத்துள் புகுந்துவிட்டது.

பட்டிருக்கும் என்பதைப் பின்வரும் சோதனையால் காட்டலாம். ஒரு இரும்புக்கம்பியையும் அதே நீளமுள்ள செப்புக்கம்பியையும் ஒரு நுனியில் இணைத்து ஒரேகம்பி போலாக்குவோம். இதை இரண்டு கட்டைகளை வைத்துக் கொஞ்ச உயரத்தில் நிறுத்தி இணைத்திருக்கும் மத்தியபாகத்திற்கு ஸரியாகச் சாராய விளக்கைப் பொருத்தி வைப்போம். இணைத்த



விடத்திலிருந்து ஸமதூரத்தில் இருபுறத்திலும் கம்பிகளின்மேல் ஒவ்வொரு சிறு நீபாக்னித் துண்டை வைத்துவிட்டு, சாராயவிளக்கை ஏற்றிவிடுவோம். கொஞ்ச நாழிகை கழித்ததும் செம்புக் கம்பியிலிருக்கும் நிபாக்கினி ஊடுருவிப் பரவிவரும் உஷ்ணம் தாக்க எரியும். பின்னர் கொஞ்ச நாழிகை கழித்துத் தான் இரும்புக்கம்பியின் மேலிருக்கும் நிபாக்கினி அதனுள் ஊடுருவிப் பரவும் உஷ்ணத்தால் எரியும். இதனால் செம்புள் உஷ்ணம் ஊடுருவிப்பரவுவதுபோல இரும்புள் நன்றாகப்பரவாது என்பது தெரியவரும். வெள்ளியின் வழியாகத்தான் உஷ்ணம் வெகு சீக்கிரமாக ஊடுருவிப்பரவும்.

பொதுவாகத் த்ரவங்களின் வழியாக உஷ்ணம் ஊடுருவிப் பரவாது என்பதைத் தண்ணீர் விஷயத்தில் பரீக்ஷை செய்து காட்டுவோம். ஒரு சோதனைக் குழாயை எடுத்துக்கொண்டு அது நிறையத் தண்ணீரை விட்டுச் சாய்த்துப் பிடிப்போம். தண்ணீர் வெளியே ஒழுகுவது நின்றதும் அதன் மேல்பாகத்தைச் சாராய விளக்கால் சுடவைப்போம். மேல்பாகம் நன்றாகக் கொதிக்கும். அப்பொழுது அடிப்பாகத்தில் பிடித்திருக்கும் நமது கையில் உஷ்ணமே தட்டாது. இதனால் உஷ்ணம் தண்ணீர் வழியாக ஊடுருவிப்பரவுவதில்லை என்பதாயிற்று. இம்மாதிரியேதான் மரத்தின் விஷயத்திலும். ஒரு தணலை அதன் மறுபக்கம் எரியாதிருக்குங்கால் அங்குப் பிடித்துக்கொண்டெடுப்பதே இதற்கு உதாரணம். இம்மாதிரி இருக்கும் இரும்புத் துண்டைக் கையால் தொட முடியுமா!

இங்கு உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிடும் ஸாதாரண வஸ்துக்களுக்கும் அவ்வாறு பரவ விடாத வஸ்துக்களுக்கும் ஓர் அட்டவணை கொடுத்து அவ்வைகளின் விஷயமாகச் சில குறிப்புக்களைப் பின்னர் எழுதுவோம்.

| நன்றாக ஊடுருவிப் பரவ விடும் வஸ்துக்கள். | ஊடுருவிப் பரவ விடாத வஸ்துக்கள். |
|---|---|
| 1. உலோகங்கள் (வெள்ளி முதலியன) | 1. த்ரவங்கள் (ஜலம்) |
| 2. பாதரஸம் | 2. வாயு பதார்த்தங்கள் (ஸாதாரண வாயு) |
| 3. நிலம் | 3. மரம் ; மரப்பொடி |
| 4. கருங்கல் | 4. கம்பளி அல்லது மயிர் |
| | 5. கண்ணாடி |
| | 6. வெள்ளைத்துணி |

**குறிப்பு (1) பாதரஸம்.**—இதற்கு இந்தச் சக்தி இருப்பதால்தான் இது உஷ்ண அளவையில் நன்றாக உஷ்ண ஏற்றத்தாழ்வைக் காட்டும் திறனுடையதாக இருக்கிறது.

**குறிப்பு (2) வாயு.**—இதனுள் உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதில்லை. இந்தக்காரணம் பற்றித்தான் அதிக உன்னதமாக இருக்கும் ஊர் தாழ்ந்திருக்கும் ஊரைவிடக் குளிர்ச்சியாக இருக்கிறது. மேலே இருக்கும் வாயுவைவிட கீழே இருக்கும் வாயு அடர்த்தியில் அதிகப்பட்டிருக்கிறது. ஆதலால் இரண்டு ஊர்களிலும் ஸூர்யனிடமிருந்து பூமி பெறும் உஷ்ணம் ஒரேமாதிரியாக விருந்தும் மேலே உள்ள ஊரிலிருக்கும் உஷ்ணம் கீழே உள்ள உஷ்ணத்தைவிட சீக்கிரம் வெளியே வாயுவின் வழியாகச் சிதறிப்போய் விடுகிறது. இதனால் மேலே உள்ள ஊர் தாழ்ந்த ஊரைவிட அதிக குளிர்ந்ததாகவிருக்கிறது.

**குறிப்பு (3) மரம் : மரப்பொடி.**—எரிகிற கொள்ளிக்கட்டையை எரியாது நெருங்கியிருக்கும் பாகத்தைப் பிடித்துத் தூக்கமுடியுமாதலால் மரம் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடாது என்பது வெளியாகும். இருட்டிலிருக்கும் பெட்டியில் சாவி ஓட்டையைக் கண்டுபிடிக்கக்கையால் தடவினால்போதும். சாவி ஓட்டையைச் சுற்றியிருக்கும் உலோகபாகம் சுற்றும் உள்ள மரபாகத்தைவிடக் குளிர்ச்சி உடையதாகவிருக்கும். உலோகம் உஷ்ணத்தைச் சீக்ரம் ஊடுருவிப் பரவ விடுவதால் நமது தேஹ உஷ்ணத்தைச் சீக்கிரம் எடுத்துப்போய்விட மரபாகத்தால் அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஆதலால் உலோகத்தைத் தொட்ட பாகத்தில் உஷ்ணக்குறைவு அதாவது குளிர்ச்சியும், மரத்தைத் தொட்டபாகத்தில் உஷ்ணம் குறையாமையும் காணப்படும். இதனால் முற்கூறிய உணர்ச்சி ஏற்படும். மரப்பொடியைப் பனிக்கட்டி உருகி நஷ்டமாகாதிருப்பதற்காக அதைச்சுற்றிப்போட்டு மூடிவைக்கிறார்கள். வெளி உஷ்ணத்தை இப்பொடிகள் தம்முள் ஊடுருவிப்பரவி பனிக்கட்டியைச் சென்று தாக்கவிடாது.

**குறிப்பு (4) கம்பளி : மயிர்.**—கம்பளியும் மரப்பொடி போன்றதுதான். அதைப் பனிக்கட்டியின் மேல் சுற்றிவைத்து வெளி உஷ்ணத்தை உள்ளே பரவவிடாதபடி காப்பதற்கு உபயோகப்படுத்தலாம். இதே கம்பளியை நமது தேஹத்தின்மேல் போர்த்துக்கொண்டு நமது உஷ்ணம் வெளியே சிதறிப்போய் குளிர் நமக்கு உண்டாகாமல் காக்கலாம். பொதுவாக உஷ்ணத்தைஊடுருவிப்பரவவிடாதவஸ்துக்கள் வெளியிலிருந்த உஷ்ணத்தை உட்புறமும், மாறாகவும் பாயவிடா. கம்பளிகள் ப்ராணிகள் மயிரால் ஆக்கப்படும் வஸ்துவாகையால் மயிருக்கும் இந்தக்குணம் உண்டு. இதனால்தான் ஜந்துக்களுக்கு மயிரையும் அடர்ந்த ரோமத்தையும் கடவுள் போர்வையாக அமைத்திருக்கிறார். இவ்வாறு அமையாவிடில் ப்ராணிகள் குளிர் தாங்க முடியாது இறக்கவேண்டியதுதான். ஒரு கம்பளிச் சொக்காய் ஓரங்குலம் கனமாகப் போட்டுக்கொள்ளுவதைவிட இரண்டு கம்பளிச் சொக்காய் அரை அரை அங்குலத்தில் போட்டுக்கொள்வது மேல். இரண்டாவது சொக்காய்கள் விஷயத்தில் ஒரு அங்குலம் கம்பளியும், அவைகள் இடையே உள்ள ஸாதாரண வாயுவும் உள் உஷ்ணம் வெளியே சிதறாதபடி தடுக்கின்றமையால் அது மேன்மையானது என்று கூறினோம்.

**குறிப்பு 5: கண்ணாடி:**—கண்ணாடியில் உஷ்ணம் ஊடுருவிப் பரவாததால் அதனாலாகிய புகைப்போக்கி முதலியவற்றில் சூடாயிருக்குங்கால் தண்ணீர் விழுந்தாலாவது அல்லது பனிக்கட்டி ஸம்பந்தப்பட்டாலாவது அவை வெடித்துப்போகின்றன. தண்ணீர் சூடான கண்ணாடியில் பட்டால் பட்டவிடம் அளவில் திடீரென்று சுருங்குகிறது. குளிர்ச்சி ஊடுருவிப் பரவாததால் மற்றைப் பாகங்கள் உஷ்ணத்தின் சக்தியால் அளவில் அதிகமாகிக்கொண்டேயிருக்கின்றன. ஆதலால் தண்ணீர் விழுந்தவிடத்தில் கண்ணாடியில் விரிசல் காணப்படுகிறது. பனிக்கட்டி பட்டால் பட்டவிடம் திடீரென்று சுருங்க மற்றைப்பாகம் உள்ளபடி இருப்பதால் அங்கும் விரிசல் காணப்படுகிறது.

**குறிப்பு (6) நிலமும், நீரும்:**—நிலம் சீக்கிரம் உஷ்ணத்தை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வெளி விட்டுவிடும். நீரோ அப்படிச் சீக்கிரம் உஷ்ணத்தை ஏற்றுவிடுவதில்லை. இதனால்தான் கடற்காற்றும் நிலக்காற்றும் உண்டாகின்றது என்பது காற்றின் கதிகள் என்னும் வியாஸத்தில் (தொகுதி 2 பக்கம் 250 இல்) எடுத்து விஸ்தரித்தாய்விட்டது.

**குறிப்பு (7) வெள்ளைத்துணி.**— தலைக்கட்டு, கொடை உறை ஆகிய இவைகளுக்கு வெள்ளைத்துணியையே உபயோகப்படுத்தவேண்டும். இது உஷ்ணத்தை எளிதில் ஏற்று ஊடுருவிப்பரவ விடாது. கருப்புத்துணியும் வஸ்துவும் அவ்வாறல்ல. வெயிலில் அலைந்து நிழலில் வந்ததும் தலைமயிரைத் தொட்டுப் பார்த்தால் அது நன்றாகக் கொதிப்பதே இதற்கு உதாரணம். தேஹத்தின் மற்றையப்பாகங்கள் அவ்வளவு சூடாகவிரா.





# ஸ்ரீலாசுகர் சரித்ரம்

## THE LIFE OF LILASUKA

முன்னொரு காலத்தில் வில்வமங்களன் என்ற ஒரு பணக்காரச் சிறுவன் இருந்தான். அவன் சைவ மார்க்கத்தைச் சேர்ந்து அதற்குரிய சிவதீக்ஷை முதலியவைகளைப் பெற்றிருந்தனன். நல்லகுலத்தில் பிறந்தவன். இப்படி இருந்தும் இளமைமுதல் ஏராளமான செல்வத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்து வந்ததினாலும், எப்பொழுதும் முகஸ்துதி பண்ணுபவரால் சூழப்பட்டிருந்ததினாலும், இவன்குணம் வரவரமழுங்கிக்கொண்டேவர, இவனுக்கு யௌவனவயதில் வேசையர் நேசமும் வந்து சேர்ந்துவிட்டது. கேட்கவேண்டுமா! நல்ல பணக்காரனுக்கு துஸ்ஸங்கமும், பெண்ணாசையும் வந்துவிட்டால், காற்றும் தீயும் கலந்துவிட்டாற்போல்தானாகும். ஆதலால் வில்வமங்களன் யௌவன காலமெல்லாம் பரஸ்திரீகமனம், மதுபானம் முதலிய தீயவழிகளில் கழியத் தொடங்கியது.

இப்படி இருக்கையில் இவன் சிந்தாமணி என்ற ஒரு தாஸியைக் காணும்படி நேர்ந்தது. அவள் மிகுந்த அழகு பொருந்தியவளாகவும், யௌவன வயஸுடையவளாகவும், பாட்டு முதலிய ரஸவிஷயங்களில் மிகத் தேர்ச்சி அடைந்தவளாகவும், கூறிய புத்தி முதலிய சிறப்புவாய்ந்தவளாகவும் இருந்தாள். இவளைக் கண்டதும் வில்வமங்களனுக்கு அடங்காக் காதல் உண்டாகிவிட்டது. வெறும் வாயை மென்றவன் அவல் கிடைத்தால் விடுவானா? வில்வமங்களன் சிந்தாமணி பாதங்களில் சரணமாக விழுந்து, அவள் வீட்டிலேயே பழியாகக் கிடந்துவிட்டான். இவன் த்ரவ்யம் எல்லாம் தடையின்றிச் சிந்தாமணிக்கு அர்ப்பிதம் செய்யப்பட்டன. வரவர தன் வீட்டிற்குப் போவதைக்கூட முற்றிலும் இவன் நிறுத்திவிட்டான். இவனுக்கு வயது முதிர்ந்த தாய் தந்தையர் இருவர் இருந்தனர். தாய் ஓயாது அழுது கண் வீங்கி பிள்ளையின் நிலையால் ஏற்பட்ட துக்கம் ஆறாமல் கண்களை இழந்தாள். தகப்பனாரோ தம்பிள்ளையை மீட்க எவ்வளவோ உபாயங்கள் செய்தார். ஒன்றும் பயன்படாமற்போக மனம் சிதைந்து, முடிவில் மரணம் அடைந்தார்.

தகப்பனார் ஈமக்கடன்களைச் செய்துமுடிக்க வில்வமங்களனை அழைக்க அநேகர் முயன்றனர். அவனுக்கோ சிந்தாமணியைத்தவிர வேறு உலகமே இருப்பதாகத் தோற்றாததால், இவர்கள் முயற்சிகள் வீணாயின. அப்பொழுது வேறு ஒருவழியும் இல்லாதது

கண்டு நேரே சிந்தாமணியிடமே சென்று விண்ணப்பம் செய்துகொண்டு முறையிட்டனர். என்ன! தாஸியானால்தான் என்ன! இவ்வளவுபெயர்கள் சேர்ந்து சொல்லும்பொழுது மனம்இளகாமலிருக்குமா! மேலும்அவள் நட்புபுத்தியுடையவள் அல்லவா? உடனே தன் காதலனைத் தகப்பன் வீடு அனுப்புவதாக வாக்களித்தாள். வில்வமங்களனிடம் வந்து ஸங்கதிகளைச் சொல்லித் தகப்பன் வீடு போகும்படி ஏவினாள். அவன் கேட்கவில்லை. ‘ இந்தப் பத்தாம் நாள் கடனை முடித்துவிட்டு நாளை இங்கே வந்து விடலாம். இந்தக் கர்மத்தை விட்டுவிடக்கூடாது. போய்வா ! ’ என்று அவள் எவ்வளவோ மன்றாடினாள். காதற்கடலில் மூழ்கிக்கிடந்த அவன் செவியில், தன் காதலியின் அப்ரிய மொழி ஏறவேயில்லை. உடனே அவளுக்குக் கோபம் வர, அவள் அவனை அடித்துத் தன் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள்.

பார்த்தான் வில்வமங்களன் ! என்ன செய்வான் ! வேறுகதியில்லை ! தகப்பன் வீடுசென்று அன்று ஈமக்கடன்களை முடித்துவிட்டு வந்தால்தான், தன் காதலி தன்னைச் சேர்த்துக்கொள்ளுவாள் என்று நன்கு அறிந்தான். உடனே ஓடோடியும் தன் வீடுவந்து ஈமக்கடன்களைச் செய்யத் தொடங்கினான். வாய் மந்திரம் சொன்னபோதிலும், மனம் சிந்தாமணியினிடமே, ஸதா பாய்ந்துகொண்டிருந்தது. எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் மூத்தர்மன மிருக்கும் மோனத்தே, என்பதுபோல வில்வமங்களன் மனோநிலையும் இரண்டுபட் டிருந்தது. இந்தக் கர்மம் எப்பொழுது தொலையும் என்று கர்மத்தில் மனம் செல்ல, அதை வேகமாகவும் நடத்தினான்; ஒழிந்தால் சிந்தாமணியிடம் போய் ஆநந்திக்கலாமே என்ற எண்ணம் விடாது அவன் மனத்தில் உள்ளூற ஊறிக்கொண்டும் இருந்தது. என்ன வேகமாகக் கார்யங்களை நடத்தியும் மாலைப் பொழுதுவரையில் கார்யங்கள் முடியவில்லை. முடிந்ததும், சட்டிசுட்டது கைவிட்டது என்ற கதையாக, சனி தொலைந்தது என்று வில்வமங்களன் அடங்காக் காதலால் தூண்டப்பட்டு சிந்தாமணி வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அன்று மாலைப்பொழுதிலேயே இருள்வந்து மூடிக்கொண்டது. ஆகாயத்தில் கரிய நீருண்டமேகங்கள்பங்திபங்தியாய் ஸஞ்சரித்துக் கரிய மலைப்பாம்புகள் ஒன்றை ஒன்று விழுங்குவதுபோல ஒன்றனுள் ஒன்றாகப்பாய்ந்தோடிப்பரந்தன. மின்னல்கள் ஆகாயம் எங்கும்கொஞ்ச நாழிகைக்கு ஒருதரம் பளீர் பளீர் என்று வெட்டிமறைந்தன. அன்று இடித்த இடிக்கோ கணக்கே இல்லை. கூடக் காற்றும் மழையும் சேர்ந்து விட்டது. அப்பு தேஜஸ் வாயு ஆகிய மூன்று பூதங்களும் ஒன்றாகச்சேர்ந்து பேசிக்கொண்டு, பூமியை அழிக்க யத்தனித்துவிட்டனவோ என்று தோற்றியது. இந்த அல்லோலகல்லோலத்தின் இடையில் வில்வமங்களன் பயித்தியம் பிடித்தவன் போலச் சிந்தாமணியை நினைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். அவன் உள்ளே இருந்த காதலும், பிரிவாற்றாமையால் ஏற்பட்ட கொடிய துக்கமும் அவன் உணர்ச்சியை மழுங்கும்படி செய்துவிட்டன. ஒரு விஷயத்தில் ஒருவன் மனம் ஊன்றிப் பாய்ந்துவிட்டால், வேறு எதுவும் அவனுக்குத் தோற்றவே மாட்டாது. ஆதலால், வில்வமங்களனுக்குக் காற்றும் மழையும் கலந்து அடிப்பது தெரியவே இல்லை. வெறிபிடித்தவன்போல ஓடிவந்து ஓர் ஆற்றின் கரை சேர்ந்தான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. அக்கரையில் தான் சிந்தாமணி வீடு. ஆற்றில் பெருவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இதை எப்படிக் கடந்துபோவது என்ற ஏக்கம் வில்வமங்களனுக்கு வந்துவிட்டது. எப்படியாவது போய்த்தான் தீரவேண்டும் என்ற த்ருடசித்தம் அவனைவிட்டு அகலவில்லை. அவன் அதிர்ஷ்டம், எதிரில் ஏதோ தண்ணீரில் மிதந்துபோவதைக் கண்டான். நல்லகாலம் என்று குதித்தான் தண்ணீரில். அதை மிகுந்த ஆவலுடன் பிடித்துக்கொண்டு நீந்தி வெகு சீக்ரத்தில் ஆற்றைக் கடந்தான். அக்கரை சேர்ந்தான். உடனே, சிந்தாமணி வீட்டண்டையும் வந்து விட்டான். இந்தக் கால் வீசிப் பொழியும் கனமழையில் யார்தான் வீட்டைத் திறந்து வைத்துக்கொண்டிருப்பார்கள்? சிந்தாமணிவீடு சாத்தியிருந்தது. சுற்றுமுள்ள சுவர்களோ வெகு உயரமாக இருந்தன! மறுபடியும் வில்வமங்களனுக்கு ஏக்கம் உண்டாகி விட்டது. ஆயினும் அவன் மன உறுதியோ மாறவில்லை ‘ எப்படியாவது உள்ளேபோய் விடவேண்டும் ’ என்று ஜபம் பண்ணிக்கொண்டு, சிந்தாமணி வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பிரதக்ஷணம் செய்தான். இவ்வாறு வரும்பொழுது சுவரிலிருந்து கயிறுஒன்று தொங்கிக்கொண்டிருக்கக்கண்டான். கண்டதும் ஆனந்தக்கூத்தாடி அதைப் பிடித்துக்கொண்டு சுவரில் ஏறி முற்றத்தில் குதித்துச் சிந்தாமணி படுக்கை அறையுள் புகுந்தான். அங்கு அவள் உண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ‘வந்துவிட்டேன் ! நீ சொன்னபடி எல்



லாம் செய்துவிட்டு’ என்று கூவிக்கொண்டே அவளை அணுகினான்.

இவன் கிட்டே வருங்காலத்தில் இவன் மேலே இருந்து, ஓர் துர்நாற்றம் வீசியதைக் கண்டு “இந்தக் காற்றுமழையில் எப்படி வந்தாய்? ஏன் உன்னிடம் இந்தத் துர்நாற்றம் உண்டாயிற்று?” என்று கேட்டாள். அப்பொழுதுதான் தன்மேலிருந்த துர்நாற்றம் அவனுக்குத்தெரியவந்தது. அந்த நாற்றத்தை அவனால் கூட ஸஹிக்கமுடியவில்லை. ‘என்ன காரணமோ அறியேன். உன்மீது இருந்த காதலினால் ச்ராத்தம் முடிந்ததும் வீட்டைவிட்டுப் புறப்பட்டதுதான் தெரியும். ஆற்றங்கரைவந்து அதைக்கடந்து உன்வீட்டுச் சுவர் ஏறிக் குதித்து இங்குக் கடிதினில் வந்தேன், உன்மேலிருந்த காதலால்’ என்றான் வில்வமங்களன். “எப்படி, இந்த உயர்ந்த சுவர் ஏறிக் குதித்தாய்? ஆற்றைக் தடந்தாய்?” என்று மிகுந்த ஆச்சர்யத்துடன் கேட்டாள் சிந்தாமணி. வந்தவழியை ஸாங்கோபாங்கமாய் எடுத்துரைத்தான் வில்வமங்களன். என் வீட்டுச் சுவரில் உனக்கு யார் கயிறுகட்டி யிருந்தார்கள்? அப்படி ஒரு கயிறு இருந்ததாக ஞாபகம் எனக்கு இல்லையே ! பார்ப்போம்’ என்று புறப்பட்டாள். இதற்குள் மழை சற்று ஓய, வேலைக்காரன் விளக்கெடுத்து முன்னே செல்ல, சிந்தாமணியும் வில்வமங்களனும் வெளியேபோய் வீட்டைச் சுற்றிப்பார்த்தார்கள். அவன் தான் ஏறியவிடத்தைக் காட்டினான். அங்கு ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. அதை உற்றுப்பார்க்கையில் அஃது ஒரு கொடிய க்ருஷ்ண ஸர்ப்பமாக விருந்தது. பதறிவிட்டாள் சிந்தாமணி! என்னகார்யம் செய்தாய். கணம் தப்பினால் மரணம் வந்திருக்குமே! ஏன் இப்படி உயிரை வெறுத்தாய்? ’ என்று நடுநடுங்கிக் கேட்டாள். ஆறு கடந்து வந்தவழியைப்பார்க்க இவர்கள் ஆற்றங்கரை போனார்கள். அங்கு ஓர் பிணம் ஒதுக்கப்பட்டிருந்தது. அது உருச்சிதைந்து அழுகிக்கிடந்தது. அதன் நாற்றம் வில்வமங்களன் மேல் இருந்தநாற்றம் போலிருந்தது. ‘ இந்தப்பிணத்தைப் பிடித்துக்கொண்டா வந்தாய் ! இப்பொழுது தான் உன் காதலின்பெருமை வெளியாகின்றது. என்னிடத்தில் இவ்வளவு காதலா உனக்கு! பிணம், பாம்பு, காற்றுமழை இவைகள் எல்லாம் உன்காதலின் முன் ஒரு பொருட்டாகத் தோற்றவில்லை. நானோ ஓர் அற்பவேசை! உன் முழுமனக்காதலை என்னால் எப்படித் தாங்கமுடியும்! அதைப் பெற எனக்கு யோக்யதை இல்லையே! இம்மாதிரியான மனப்பற்றுக்குத்தக்க கைம்மாறு என்னால் என்ன செய்யமுடியும்? இந்தக் காதலின் லவலேசத்தை பகவானிடம் வைத்திருந்தால் உனக்கு எவ்வளவு மேன்மை உண்டாயிருக்கும்! உன் முழுமனப்பற்றை வஹித்துத் தக்கபடி உன்னை சிறப்பைடையும்படி செய்ய அந்த பரம்பொருளுக்கே திறமையுண்டு!’ என்று மிகுந்த பரபரப்புடன் மொழிந்தாள்.

இந்த வாக்கு வில்வமங்களன் மனதில் நன்றாகப் பதிந்தது. கொஞ்சநாழிகை அசையாது ஸ்தப்தமாக நின்றான். மனம் மாறியது. ‘சிந்தாமணி! நீ சொன்னது முற்றிலும் உண்மை ? ’ என்று மிக உருக்கமாகக் கூறினான். உடனே அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். சிந்தாமணி அவனைத் தடுக்க யத்தனித்தாள். முடியவில்லை. வில்வமங்களன் போயே போய் விட்டான். போனவன் சும்மா போகாமல் ஸோமகிரி என்ற ஞான ஸத்குருவைக்கண்டான். அவர் கிருஷ்ணபக்தியை வில்வமங்களனுக்கு உபதேசித்தார். கிருஷ்ணன் லீலைகளில் அவன் ஈடுபட்டான்; மனம் உருகியது; சிற்றின்ப உணர்ச்சிகள் கழன்றன. இதனால் இவனுக்கு லீலாசுகர் என்ற பெயர் வந்தது.

தமக்கு ஞானம்உண்டாகக் குருவாகஇருந்தவர்களைப் பற்றி லீலாசுகர் பின்வருமாறு எடுத்துப்பாராட்டுகிறார்.

**चिन्तामणिर्जयति, सोमगिरिर्गुरुर्मे**
**शिक्षागुरुश्च भगवान्शिखिपिंछमौलिः ।**
**यत्पादकल्पतरुपल्लवशेखरेषु**
**लीलास्वयंवररसंलभतेजयश्रीः ॥**

சிந்தாமணி ஜயத்தோடு விளங்குகிறார் ; எனது குரு ஸோமகிரியும் ஜயத்தோடு விளங்குகிறார் ; ஜயலக்ஷ்மி எவரது பதமாம் கல்பகத்தளிர்களின் நுனியில் விளையாட்டாகத்தானேபோய் அமர ஆசைகொள்வாளோ அப்பேர்ப்பட்டவரும், மயில் தோகையைத் தலையில்அணிந்தவருமான சிக்ஷாகுருவாம் ஸ்ரீக்ருஷ்ண பகவானும் ஜயத்தோடுவிளங்குகிறார்(இவர்களுக்குஜே! என்றவாறு,

தாம் முன் சிவதீக்ஷை பெற்றவராய் இருந்தும், தம் மனம் கிருஷ்ணனிடமே ஈடுபட்டு நிற்கின்றது என்பதைப் பின்வருமாறு லீலாசுகர் வெளியிடுகிறார்.—

**शैवावयंनखलुतत्रावचारणीयम्**
**पंचाक्षरीजपपरानितरांतथापि ।**
**चेतोमदीयमतसीकुसुमावभासम्**
**स्मेराननंस्मरतिगोपवधूकिशोरम् ॥**

நாங்கள் சைவர்கள்; அதைக் கேட்கவேண்டியதே இல்லை; அதிலும் பஞ்சாக்ஷரீயை அதிகமாக ஜபம் செய்கிறவர்கள். ஆகிலும் என் மனம், காசாம்பூவர்ணத்தை உடையவராயும், கோபஸ்திரீகள் குழந்தையாயும் உள்ள மந்தஹாஸமுகம்பொருந்திய க்ருஷ்ணமூர்த்தியை ஸ்மரிக்கிறது.

க்ருஷ்ண லீலைகளில் ஈடுபட்டு இவர் க்ருஷ்ண கர்ணாம்ருதம் என்ற ஒரே நூல்தான் செய்திருக்கிறார். இந்த ஒரு நூலும் ஒப்புயர்வற்றது. இதில் சிலவிடங்களில் ஸாதாரணமான பழமொழிகளை பகவத்லீலைகளில் ஸம்பந்தப்படுத்தி அநேக ச்லோகங்கள் எழுதியிருக்கிறார். அவைகளுள் 'பூனை கண்மூடினால் உலகம் அஸ்தமித்துவிடுமோ? என்னும் பழமொழியைத் தழுவி பகவான் கண்மூடினால் உலகம் அஸ்தமிக்கும் என்னும் கருத்தைக் குறிப்பாகப் பின்வரும் ச்லோகத்தில் வெகு அழகாக லீலாசுகர் காட்டுகிறார்.

मातः! किं. यदुनाथ? देहिचषकं. किंतेन पातुंपयः
तन्नास्त्यद्यकदास्तिवानिशिनिशाकावान्धकारोदये।
आमील्याक्षियुगंनिशाप्युपगतादेहीतिमातुर्मुहुः
वक्षोजांशुककर्षणोद्यतकरः कृष्णः सपुष्पातुनः॥

அம்மா! என்ன யதுநாதா? அந்த பாத்திரத்தைக் கொடு. எதற்காக? பால் குடிக்க. இப்பொழுது பால் கிடையாது. பின்னே எப்பொழுது கிடைக்கும்! இரவில். அது எப்பொழுது வரும்? இருள் வந்துமூடிக் கொண்டால். கிருஷ்ணன் உடனே தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு, இருள் மூடிவிட்டது பால் கொடு பால் கொடு! என்று மன்றாடினார். இத்தகைய க்ருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

'ஏனடா தென்னைமரத்தில் ஏறுகிறாய்? புல்லுப்பறிக்க ஏறுகிறேன். அங்கே ஏதடா புல்? அதுதான் இறங்குகிறேன்' என்று தோட்டக்காரனைக்கண்டு தென்னைமரத்திலிருந்து இறங்கும் திருடன் கூறியதாக ஸாதாரண கதை ஒன்று உண்டு. அதைப் பகவான்மேல் ஏற்றிச் சிறுபிள்ளையாக இருக்கையில் அதிக புத்தி சாதுர்யம் காட்டிய பகவானைப் பின்வருமாறு புகழ்ந்துபேசுகிறார்.

कस्त्वं बालबलानुजः किमिहतेमन्मन्दिराशंकया
युक्तंतन्नवनीतपात्रीविवरेहस्तं किमर्थंन्यसेः।
मातः कंचनवत्सकंमृगयितु, मागाविषादंक्षणात्
इत्येवंवरबल्लवीप्रतिवचः कृष्णः सपुष्पातुनः

நீ யார் குழந்தாய்? பலராமர் தம்பி. உனக்கு இங்கே என்ன வேலை? இது என் வீடென்று எண்ணினேன். எதற்காக வெண்ணைப்பாத்ரத்தில் கையிட்டாய்? கோபித்துக்கொள்ளாதே அம்மா! காணாமல்போன கன்றைத் தேடுகிறேன், என்று இம்மாதிரி தயங்காது கோபிகளுக்கு விடை அளித்த க்ருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

விடர்கள் தமது ஸ்திரீகளைப்பற்றி ஏங்கி 'அவர்கள் ஆபரணமாகவிருக்கமாட்டோமா அவர்கள் கழுத்தைத் தொட்டுக்கொண்டிருக்க' என்றுகூறித் தமதுவிரகதாபத்தைக் காட்டுவது வழக்கம். அம்மாதிரி விசேஷ பக்தியைப் பகவானிடம் செலுத்தி, லீலாசுகர் பகவான் வேணுகான அவஸரத்தைப் பின்வருமாறு எண்ணி ஈடுபடுகிறார்.



अपिजनुषिपरस्मिन् आत्तपुण्योभवेयम्
तटभुवियमुनायाः तादृशोवंशनालः
अनुभवतियएषः श्रीमदाभीरसूनोः
अधरमणिसमीपन्यासधन्यामवस्थाम्॥

ஆ! யமுனைக்கரையில் ஜன்மாந்தரத்திலாவது அந்த மங்களாகரமான புல்லாங்குழலாகக் கிடைக்குமா? என்றைக்கு வருமோ அந்நிலை அந்தப் புல்லாங்குழலின் நிலை! எவ்வளவு சிறந்ததாயும் எல்லோராலும் விரும்பத்தக்கதாயும் இருக்கிறது. பகவானது உதடுகளாகிய மணிகளுக்கு எவ்வளவு அருகாமையில் நிலைபெற்றிருக்கிறது!

பகவான் மண்தின்று விச்வரூபம் காட்டிய லீலையை இவர் பின்வருமாறு எடுத்து விவரிக்கிறார்.





कृष्णेनांबगतेनरंतुमधुनामृद्भक्षितास्वेच्छया
तथ्यंकृष्णकएवमाहमुसलीमिथ्यांबपश्याननम्।
व्यादेहीतिविदारितेशिशुमुखेदृष्ट्वासमस्तंजगत्
मातायस्यजगामविस्मयपदंपायात् सनः केशवः॥

'க்ருஷ்ணன் விளையாடிக்கொண்டிருக்கையில் ஏராளமாக மண் தின்றான். அம்மா!' (என்றார் பலராமர்). 'இது உண்மையா?' (என்று கேட்டாள் தாய்) 'இதை யார் சொன்னது?' 'முஸலாயுதத்தை உடையவர்.' 'அது முழுப்பொய். என் வாயைப் பார் அம்மா!' என்று க்ருஷ்ணன் திறந்தவாயுள் (மண்ணைக்காண யத்தனித்த) தாய் அண்டங்களை எல்லாம் கண்டு ஆச்சர்யபரவசளாயினாள். இப்படிச்செய்த பகவான் நம்மைக் காக்கட்டும்.

பகவான் வேணுகானச்சிறப்பை இவர் பின்வருமாறு எடுத்து விஸ்தரித்து ஆனந்தபரவசராகிறார்.

लोकानुन्मदयन् श्रुतीर्मुखरयन् क्षोणीरुहान्हर्षयन्,
शैलान्विद्रवयन् मृगान्विवशयन् गोबृन्दमानन्दयन्।
गोपान्सम्भ्रमयन् मुनीन्मुकुलयन् सप्तस्वरान् जृंभयन्
आकाराथमुदीरयन्, विजयतेवंशीनिनादः शिशोः॥

ஆ! அந்தப் பாலகன் ஊதும் வேணுநாதச்சிறப்பை என்னென்று எடுத்துரைப்பேன்! அது உலகங்களை உணர்விழக்கும்படி செய்கின்றது. வேதப்பொருள்

களை விள்ளுகின்றது; அதைக் கேட்டு மரங்கள் ஸந்தோஷிக்கின்றன. மலைகள் உருகுகின்றன, (மான் பசுக்கள் முதலிய) ம்ருகங்கள் ஆனந்தபரவசமாகின்றன; அது முனிகள் மனதைக் குவிக்கின்றது, ஸப்த ஸ்வரங்களையும் பேசுகின்றது, ஓங்காரப்பொருளையும் விளக்குகின்றது.

பகவான்லீலைகள் இவ்வாறிருப்பதால் க்ருஷ்ணனே வேதரஹஸ்யம் என்பதைப பின்வருமாறு வற்புறுத்துகிறார்:

वरमिदमुपदेशमाद्रियध्वम्
निगमवनेषुनितान्तचारखिन्नाः ।
विचिनुतभवनेषुवल्लवीनाम्
उपनिषदर्थमुलूखलेनिबद्धम् ॥

சாஸ்திரங்களாகிற காட்டில் அலைந்து திரிந்து முயற்சி வீணாகித்தவிக்கும் ஜனங்களே! கோபிகைகள் குடிசையில் உரலில் கட்டுப்பட்டிருக்கும் இடத்தில் உபநிஷத் அர்த்தத்தை (கிருஷ்ணனைத்) தேடுங்கள்.

இவ்வாறு சுலோகங்களாலாகிய கிருஷ்ணகர்ணாம்ருதத்தைச்செய்து பகவத்லீலைகளில் ஈடுபட்டு மஹாஞானிகள் அடையும்படியான ஞான நிஷ்டை நிலையையும் முடிவில் லீலாசுகர் அடைந்தார். அந்த ஸமயத்தில் அவர் மனம் இருந்த நிலையைப்பின் வருமாறு தாமே ஆனந்த பரவசமாக எடுத்து உரைக்கிறார்.

सन्ध्यावन्दनभद्रमस्तुभवतेभोः स्नानतुभ्यंनमः
भोदेवाः पितरश्चतर्पणविधौनाहंक्षमः क्षम्यताम्
यत्रक्वापिनिषीद्ययादवकुलोत्तंसस्यकंसद्विषः
स्मारंस्मारमघंहरामितदलंमन्येकिमन्येनमे ॥

ஏ! ஸந்த்யாவந்தனமே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். ஏ! ஸ்நானமே உனக்கு வந்தனம். தேவதைகாள்! பிதிர்க்களே! தர்ப்பணம் பண்ணும் முறையில் பழகச்சக்தியில்லை. பொறுத்துக் கொள்ளவேண்டும். எங்கேயாவது உட்கார்ந்து கொண்டு யாதவகுலதிலகராயும், கம்ஸனைக்கொன்றவராயும் உள்ள ஸ்ரீக்ருஷ்ண பகவானை எண்ணி எண்ணி பாபத்தினின்றும் நீங்குவேன். இதுவே போதும், மற்றவையாலாக வேண்டியதென்ன?

இத்தகைய மஹான் முடிவில் ப்ரம்மஸாக்ஷாத்காரம் பெற்றார் என்று கூறவும் வேண்டுமோ? ஓம் தத்ஸத்.

# தென்னமர வண்டுகள்

## COCOANUT BEETLES

இரண்டுதினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினிசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகிறது. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில் செள்ளுவென்றும் சொல்லப்படுகின்றன. அது தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு பெரிய வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னைமரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றின மரங்களை கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து புழுக்களைப்போல் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகிறது. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல்சொன்ன வண்டாய் உருமாறுகிறது.

மற்றோர்ஜாதி வண்டு தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன்சொன்ன கருப்பு வண்டைவிட சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய் தென்னம் வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள்வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சி மரத்தைத் துளைத்து செடிகளைக் கொன்றுவிடும் மற்றோர் ஜாதிப் புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகிறது.

### இவைகளின் கேடுதிகளை மாற்றக்கூடிய பிரயத்தனங்கள்.

தென்னம் வண்டு, தான் ஜாஸ்தி கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னம்வண்டை அனேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல் வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசிகொண்டு எடுத்துவிடலாம்.



2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால் தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல் சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும்: இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்கமுடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம்வண்டை துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும்பிழைக்கமாட்டாது. ஆகையால் அவைகளைத்தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூல மாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறி புதுமரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீரியுடைத்து காயப் போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம்வண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எவ்விதமான வஸ்துவும் அழுகிக்குவிய இடங் கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சில அடிகளுக்குமேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேல்சொன்ன பிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிநஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவேகூடாது.

மேல்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம்வண்டு நன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளையுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்து சேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னம் வண்டுகள் பல்கிப் பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேல்சொன்ன முன் ஜாக்கிரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னம் தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

ஸி. ஏ. பார்பர்,
சர்க்கார் தாவர சாஸ்திரி.

# பங்காளிக் காய்ச்சல்

## BROTHERLY JEALOUSY

ஒரு காலத்தில் விஜயநகரம் ராயர் சைநியத்தில் சேர்ந்த ஒரு கவரை வடுகருக்கு நல்ல அதிர்ஷ்டகாலம் பிறந்தது. அதிசூரனாகவும், மலையான ஆபத்துக்கள் வந்தாலும் மனங்கலங்காத தீரனாகவும், ராஜகாரியத்தில் கண்ணும் கருத்துமுள்ள தெள்ளறிவாளியாகவும் இருந்தபடியால், நாளுக்கு நாள் பதவி உயர்ந்து கொண்டே வந்தது; இப்படி இருக்கையில் தெற்கே ஒரு சிற்றரசுநாட்டின் குறுநிலமன்னன் போரில் உயிர்துறக்கவே, அந்தப்பாளையப்பட்டுப் பிரதேசத்தை ஒழுங்கு படுத்தி அடக்கி ஆள ஒரு தகுந்த தலைவன் வேண்டியிருந்தது. ராயரோ தன் கவரை சேனாதிபனே அதற்கு ஏற்றவன் என்று நிச்சயித்து, தகுந்த சேனா சமூகங்களுடனே அந்தத் தலைவனை சிற்றரசு நாட்டைக் காக்க அனுப்பினார். அச்சிற்றரசுநாட்டின் தலைநகரில் கவரையார்கள் நூற்றுக்கணக்காக இதற்கு வெகு காலத்திற்கு முந்தியே குடியேறிப் பிழைத்து வந்தார்கள்; அவர்கள் கவரை சேனாபதிக்கு ஒருவாறு தாயபந்துக்கள் அல்லது சுவஜாதிகள் என்று சொல்லும்படியாக இருந்தது; தங்கள் இனத்தான் ஒருவன் தங்கள் நகருக்குத் தலைவன் ஆய்விட்டானென்றும், ஆனைமேலே அம்பாரிவைத்து ஊர்கோலமாக நகரின் வழியே செல்லப்போகிறான் என்றும் தெரிந்து கொண்டார்கள்; இப்படித் தங்கள் ஜாதியானொருவன் அதிகாரத்திற்கு வந்ததை தங்கள் பாக்கியந்தான் என்று ஆநந்தங்கொண்டார்களோ? இல்லை.

"நம்மைப்போல ஒரு கவரையான் ஆனைமேலேறி ஊர்கோலம் வரும்போது நாம் தரையிலேநின்று வேடிக்கைப்பார்க்கிறது? நாம் அவனைவிட எவ்விதத்தில் தாழ்த்தி?" என்ற அசட்டுக்கருத்து அந்தக் கவரையார் மனதில் குடிகொண்டது. அவர்களுக்குள் ஒரு பிரகஸ்பதி ஒரு யுக்தி சொன்னான். அது என்ன "காலயுக்தியோ" மேலே பார்ப்பீர்கள்: ராஜவீதியில் வீடுள்ள கவரையார்களெல்லாம் கூரைவீடுள்ளவர்கள் தான்; கூரைகள் மீதில் விளக்காரர் கம்பளிகளை விரித்துவிட்டார்கள்; ஏணிவைத்து உயரஏறி கூரை மேடுகளில் இருகால்களையும் விரித்து நீட்டி உட்கார்ந்து கவரைத் தலைவன் ஊர்கோலத்தை மெத்த வீறாப்பாய் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கோபுரங்களில் குரங்குகள் உட்காருவது போன்ற இந்தக் காட்சியைப் பார்த்து ஊரார் நகைத்தார்கள். தலைவன் ஊர்கோலம் வருகையில் ஜனங்கள் பார்த்ததிசையைத் தானும் பார்த்து, ஒன்றும் மனதுக்கு விளங்காமல் தன் மந்திரியாகிய சான்றோர் முதலியார் முகத்தைப் பார்த்தான்: முதலியார், தலைவன் காதோடே "பங்காளிக் காய்ச்சல்; வறட்டுக்கருவம்; இதற்கு அப்புறம் மருந்து செய்வோம்" என்று சொன்னார். உடனே நுட்பமறிந்த

தலைவன் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு கூரையிலுள்ள கவரை மகாஜநங்களை கவனிக்காதவர் போல நெடுகச்சென்றார். ஊர்கோல வைபவங்களெல்லாம் நன்றாய் நடந்தேறி அரண்மனையில் பிரவேசித்து அதிகாரத்தைக் கைக்கொண்டபிறகு முதலியாரை நோக்கித் தலைவன் சொன்னான்.

"ஐயா? என் சுய ஜாதியாரின் பேதமைக்கு என்ன செய்வேன்? என்புத்தியும் என் ஜாதியாரின்புத்தி போலிருக்கும் என்று நகரத்தார் என்னைப்பற்றித் தாழ்வான எண்ணங்கொண்டு விடுவார்களே, என் இனத்தவருக்கு எப்படி நல்ல அறிவு பிறப்பிக்கிறது?" என்றான். முதலியார் கவரையாரிடத்திற்கு தகுந்த உத்தியோகஸ்தர்களை அனுப்பி பின்வருமாறு செய்திசொல்லச்சொன்னார். "தலைவன் உங்கள் புத்தித் திறத்தை மெச்சி, ஒவ்வொரு கவரையார் வீட்டாருக்கும் ஒரு யானை தரச்சொன்னார்" என்பதே. இதுவும் நமது கௌரவத்திற்கு ஏற்கும்" என்று எண்ணிக்கொண்டு கவரையார் அப்படியே ஆகட்டும்" என்றார்கள். உடனே யானைப்படையைச்சேர்ந்த ஒவ்வொரு யானையாகக்கொண்டு போய், ஒவ்வொருகவரை இல்லத்திலும் மாவுத்தர் கட்டி விட்டார்கள். சிலதினங்களுக்கு அந்தப் பிராணிகளுக்குத் தீனிபோட்டுப்பார்த்தார்கள். "யானையைக் கட்டித்தீனிபோட யாரால் இருக்கிறது" என்கிற பழமொழியின் உண்மையை சீக்கிரத்தில் தெரிந்துகொண்டார்கள். கவரையார் காலாகாலத்தில் தீனிபோடத் தவறியதால், யானைகள் கூரைகளைப் பிரித்துவிட்டன. சில யானைகள் குடிசைகளுக்குள் தும்பிக்கைகளை நீட்டி அரிசிப் பானைகளை வெளியே எடுத்து உருட்டித் தின்றுத் தீர்த்துலூட்டிசெய்து விட்டன. கவரை மகாஜனங்கள் வீட்டில் சந்திராள் சூரியாள் வாசம் செய்தார்கள். இன்னது செய்கிறது என்று அறியாமல் ஏழைக் கவரைமார் முதலியாரிடம் ஓடிக் காலில் விழுந்து" நாயினே? நாங்கள் மதிமோசம் போனோம்; எங்களுக்கு வீறாப்புத் தணிந்தது, எங்கள் கூரைகள் போயின; யானைகட்டி வாழ்ந்த பெருமை போதும். யானைகளை ஓட்டிப்போய் விடும்படி உத்திரவாக வேண்டும்" என்று கெஞ்சினார்கள். அங்ஙனமே மாவுத்தர் கஜங்களை கவரையார் வீடுகளினின்று ஓட்டிப்போகும்படி செய்துவிட்டு, கவரையார்களுக்கு இதமான புத்திமதிகளைச் சொல்லி சரிப்படுத்தி ஓட்டுவில்லை போட்ட செங்கற் கட்டடங்களை அவர்களுக்கு கட்டிக்கொடுத்து அவரவர்கள் சாமார்த்யங்களுக்குத் தகுந்தபடி ராஜரீகத்திலோ அல்லது வேறு வழியிலோ வேலை கொடுத்து உதவி செய்தார். அதற்குப்பிறகு கவரையார் வறட்டுக் கருவத்தையும் சங்கடக் கைவீச்சையும் விட்டொழித்தார்கள்; ராஜவிசுவாசத்துடன் உபயோகயான முயற்சிகளைச் செய்துவாழ்ந்துவந்தார்கள். பொறாமையை ஒழித்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

சேத்தாளி.

# நாகாநந்தம்

## NAGANANDAM: A CLASSICAL DRAMA

### ப்ரஸ்தாவனை.

அருளுரு வென்ப வெங்கட்
கனங்கன்செய் யவதிக் கெல்லா
மருளொடு ஞானம் போர்த்த
மாயையை கொடியை நின்கண்
ணுருமலர் மலர்த்திக் காணு
துறங்குவை யெனவக் காம
புரையினர் புகட்ட நீங்கா
நிலையினப் புத்தன் காக்க!

வின்னிலைத் திருந்தம் மாரன்
வீறுசா லவற்சூழ் வீரர்
மன்னிடு கண்சு ழற்று
மங்கையர் விலித்தர் வான
மன்னவ னெவருங் காண
மாபெரு மியோகத் தூன்றி
தன்னிலை தயங்க லாத
தனிமுதற் றூள்கள் காக்க!!

(நாந்தி முடிவில்)

ஸூத்ரதாரன்.—போதும்! நிறுத்து! இந்த இந்த்ரோத்ஸவகாலத்தில், ராஜாதிராஜன், வீரன், ஸ்ரீஹர்ஷராஜனது பத்மம் போன்ற பாதங்களை வணங்கும் அரசகூட்டத்தாரால் இன்று அழைக்கப்பட்டதாக எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது! பல நாட்டரசரும், முடிமன்னர்களும், இங்கு இந்த ஸபையில் கூடி இருக்கிறார்கள். வித்யாதர நாட்டுத் தலைவனைப்பற்றி வ்யவஹரிக்கும் நாடகம் ஒன்று நமது அரசன் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். அது நவரஸாலங்கார மயமாகி விளங்குகிறது. உயர்ந்த பாவங்கள் நிறைந்தது. தனக்கொத்த வழியையும் சிறந்த நடையும் உடையது. மனதைக் கவரும் விதம் எழுதப்பெற்றது. நமது அரசன் ஸ்ரீ ஹர்ஷதேவரால் இயற்றப்பட்டது. ஆனால் இதுவரையும் ஆடப்படவில்லை. யாராவது அதை ஆடிப் பார்த்ததாகவும் தெரியவில்லை. ஜனங்களின் ஹ்ருதயத்தை ஸந்தோஷிக்கச் செய்யும், நமது மன்னனிடம் இருக்கும் விச்வாஸத்திற்காவது, அல்லது எங்களிடமிருக்கும் மரியாதைக்காவது, அந்நாடகத்தை நீங்கள் ஆடிக் காட்டவேண்டியது. ஆகையால் யான் அதற்குத்



தகுந்த ஏற்பாடுகள் செய்வேன். இவ்வரச ஸபை விரும்பியபடி நடப்பேன். (முன்வந்து உற்றுநோக்கி) யானே நிஸ்சயமாக எல்லோர் மனதையும் கவர்ந்து விட்டேன். ஸ்ரீஹர்ஷரும் கவிச்ரேஷ்டர்; ஸபையோரும் அறிந்து அநுபவிக்கும் தன்மை உடையவர்; மேன்மையை உணர்ந்து பாராட்டத்தகுந்தவர்; விலித்த ராஜனது சரித்திரம் உலகப்ரஸித்தம்; நாமும் ஆடுவதில் பெயர் பெற்றவர். இதில் ஒவ்வொன்றும், நாம் விரும்பியதை அடையச் செய்யும். இவ்விராஜ ஸபையும் கூடினால் என்பாக்யப் பெருக்கிற்கு என்ன குறைவு! நான் சென்று என் காதலியைக் கூவி இனிய கானம் ஆரம்பிப்பேன் (நேபத்யத்தருகு சென்று பார்த்துக்கொண்டு) இதுவே எமது வீடு. உள்ளேபோவேன் — (போய்க்கொண்டு) ஆர்யே! இங்குவா?

(நடி வருதல்)

நடி.—(அழுதுக்கொண்டு) தலைவ! இங்கு நான் ஸங்கடத்திற் பட்டிருக்கிறேன். ஆனாலும் என் நாதன் ஏவிய வேலையைச்செய்யத் தயாராய் இருக்கிறேன்.

ஸூ.—(நடியை நோக்கி) நடீ! நாம் நாகாநந்தத்தை ஆடிக்காட்டவேண்டி இருக்க, நீ அழக் காரணமென்ன?

நடி.—ஐய! நான் அழாது எப்படி இருக்கமுடியும்? என் அருமை மாமனார், மாமியாருடன் தவஞ்செய்ய வனத்திற்கு இப்பொழுதுதான் சென்றார். நீங்கள் தகுந்த வயதை அடைந்தீர் என்றும், ஸம்ஸாரபந்தத்தைத் தாங்கத்தகுந்தவர் என்றும், தாங்களும் எத்தனை நாள் வீண் உலகவாழ்க்கையில் உழைப்பது என்றும், வயது முதிர்ந்தது என்றும் நினைந்து தீரயோசித்து தவஞ்செய்ய வனஞ்சென்றார். யான் அழாது—கண்ணில் நீர்விடாமல்—இருக்கமுடியுமா?

ஸூ.—(மதிமயங்கி) என்ன! என்னைத்தனியே விட்டுவிட்டு என் தந்தை தாயர் தவவனம் சென்றார்கள்? யான் இப்பொழுதென்ன செய்வது? (யோசித்து) என் தாய் தந்தையரது சரணாரவிந்தங்களில் பூவிட்டு அர்ச்சித்து அவர்க்குரியதைச் செய்து ஆநந்தமடைவதைவிட்டு, வீட்டில் எவ்வாறு இருப்பேன்? பித்ரார்ஜித ஸம்பத்துக்கள் யாவற்றையும் துறந்து, இந்த ஜீமூதவாஹனன் செய்ததுபோல் யானும் காடுசென்று என் பெற்றோர்க்கு சிச்ருஷை செய்வேன். (யாவரும் போதல்.)

ப்ரஸ்தாவனை முற்றிற்று.

காட்சி—1

களம்—1—மலயபர்வதம். விலித்தராஜ தபோவனத்தில் கௌரி ஆலயம்.

(நாயகனும், விதூஷகனும் வருதல்)

நாயகன்—(வெறுப்போடு) நேசா! ஆத்ரேய! இளமையே காமத்தின் இருப்பிடம் என்று யான் அறிவேன். அது நற்பாவங்களை கெடுக்குந்தன்மையது என்று அறியாதவனல்ல. எது செய்யத்தகுந்தது, எது செய்யத்தகாதது என்று அறியவொட்டாது செய்வது அதுதான் என்று அறியாதவன் உலகத்தில் யார் இருக்கிறார்கள்? இந்த்ரியங்களின் வழிப்பட்ட இளமை இகழ்ச்சிக்குரிய தானாலும், தாய் தந்தையர்க்கு சிச்ருஷைசெய்ய அவ்விளமை இருப்பது எவ்வளவு பாராட்டத் தக்கது.

விதூஷகன்.—(கோபத்தோடு) அன்ப! சற்று கவனி! இவ்வுயிர்ப் பிணங்களாகிய இவ்விருவர்களுக்காக இக்கொடியகாட்டில் எப்பொழுதும் அலைந்து வனவாஸகஷ்டத்திற்கு உட்பட்டிருப்பதை நீ இன்னமும் வெறுக்கவில்லையா? இப்பாழும் காட்டைவிட்டு ராஜ்ய ஸுகத்தை அநுபவிக்க, இக்காட்டையும், உன் பெற்றோர்களையும், அவர்களுடன் கஷ்டத்தையும் துலைத்துவிட்டுவர ஸந்தோஷப்படும்.

நாயகன்.—நீ பேசுவது அழகன்று! தன் தந்தையிடம்நிற்பதைக் காட்டிலும் அரசு வீற்றுஇருத்தல் அழகாகுமா? பெற்றோரது பாதாரவிந்தங்களை ஸேவிப்பதைப்போன்ற ஸுகம் ராஜஸபை நடுவில் கிடைக்குமா? தந்தை உண்ட சேஷத்தை உண்பதைப்போன்ற ஸுகானுபவம் மூன்று உலகங்களை ஆண்டாலும் கிடைக்குமா? தந்தையைவிட்டுத் தனி அரசுகொள்வது மிக்க துன்பமன்றோ? அதிலென்ன குணமுண்டு?

விதூஷகன்.— (தனக்குள்) ஆஹா! பெற்றோர் ஸேவையில் என்ன பக்தி! என்ன ஆநந்தம்! (யோசித்து) ஸரி. இதையும் சொல்லுவேன். (உரக்க) நான் ராஜ்யஸுகங்களைப் பற்றி மாத்ரம் சொல்லவில்லை. யோசிக்கவேண்டிய விஷயங்கள்வேறு சிலவும் உண்டு.

நாயகன்.—(சிரித்துக்கொண்டு)நான் செய்யவேண்டியவைகளை செய்யவில்லையா? சற்றுகேள். ப்ரஜைகளை நல்லவழியில் நடக்கச்செய்து இருக்கிறேன். உறவினர் ஸமமாகப் பாராட்டப் படுகின்றனர். பூமி முழுதும் ரக்ஷிக்கப்படுகிறது. திக்கற்றோர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்கும் கல்பகவ்ருக்ஷமும் இருக்கின்றது. நான் செய்யவேண்டியது இன்னமும் என்ன உன் மனத்தில் இருப்பதாகப்படுகிறது, சொல்வாய்.

விதூஷகன்.—என் அன்புக்குரியாய்! உன் எதிரி அக்கொடிய மாதங்கன் மிகவும் தைர்யசாலி; அவன் நல்ல ஸ்திதியில் இருக்கும் வரை ராஜ்யம் ப்ரதானி இடம் இருந்தாலும், நீ இல்லாது தேசம் க்ஷேமமாக இருக்கும் என்று எனக்குப் படவில்லை.

நாயகன்.—சீ! முட்டாள்! என் நாட்டை மாதங்கன் கொள்ளை கொள்வான் என்று எண்ணுகிறாயா?

விதூஷகன்.—ஆம்.

நாயகன்.—ஆனால் அதனால் என்ன? என் உடம்போடு யாவும் பிறர்க்கே உரியதல்லவா? அதுவும் என்னிஷ்டத்தால் செய்ததன்று. தகப்பனார் மொழிப்படி செய்தது. இவ்வல்ப வ்யவஹாரங்களால் மனதிற்கு நாம் என் கவலை உண்டாக்கவேண்டும்? 'தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.' மூத்தோர் மொழியை ஒட்டி நடப்பது தான் நமதுகடைமை. அவர் மொழிக்கெதிர் இல்லை. என் தகப்பனார் "குழந்தை ஜீமூதவாஹனா! இவ்விடம் பலநாள் வாஸத்தால் கந்தமூலாதிகள், காட்டரிசி, சமித்து, தர்பம், புஷ்பம், கிட்ட இருந்தவை எல்லாம் எடுத்துவிட்ட படியால் வெகுதூரத்திலிருந்து எடுத்து வரவேண்டி யிருக்கிறது. மலயபர்வதம் போய் நாம் வஸிக்க யோக்கியமாகிய ஓர் ஆச்ரமத்தை ஏற்படுத்து" என்று உத்தரவு செய்திருக்கிறார். வா, நாம் இருவரும் மலயபர்வதத்திற்கே போவோம்.

விதூஷகன்.—நீ உத்திரவு செய்தபடியே.

(இருவரும் முன்வர)

விதூஷகன்.—(முன்நோக்கி) நண்ப இந்த இளங்காற்றானது மலய மலையிலிருந்து வருகின்றது. வாஸனை மிகுந்த அடர்ந்த சந்தனமரக்கூட்டத்திடை உலாவி, அவற்றின் வாஸனையை உண்டு, ஸஞ்சரித்து, தன் ப்ரயாணத்தின் ச்ரமத்தை, கரடுமுரடான பாறைகளின்மீது அடித்து திவலைதிவலையாக கொழித்தெரிக்கும் குளிர்ந்தநீரை அடங்காதவேகத்தோடு படபடத்து நுரைகக்கி, கரையோரங்களை தின்று, எதிர்த்தவைகள் உடையும்படி மோதும் மலையாறுகள் கம்பீரமாகத் தாரை தாரையாக ஜர்ஜரசப்தத்துடன் குளிர்ந்து வெள்ளியுருகி விழுந்தால்போல்விழும் அக்காட்டு ஆறுகள் சேர்க்கையால், பலநாளாகக் காணாது தனது கணவனை முதல்கண்டதும் தன்மனத்துயராம் நீங்கிய காதலியைப்போலநீக்கி, தான் வழிமுழுதும் அரித்துவந்த நீர்த்துளிகளைக் கொழித்து, எங்கும் துளித்து உன்னுடலும் ஸந்தோஷத்தால் மயிர்க்கூச்சிடச் செய்கிறது!

தலைவன்.—(ஆஸ்சர்யத்துடன் பார்த்து) அஹா! நாம் மலயமலையை அடைந்து விட்டோம். (சுற்றிப் பார்த்து)

மதஞ்சொரி வேழம் பாய
  மணஞ்சொரிந் தோங்குஞ் சாந்த
சதஞ்சொரிப் பௌவக் கார்த்து
  விடைசொரி தழீஇக் குகைய
இதஞ்சொரிச் சித்தர் காற்றாள்
  இசைஞ்சுரூஅய்ப் பவள வாரப்
பதிஞ்சொரீஇ வரைம னத்துக்
  காண்டொறுங் களிப்ப வம்மா!

நண்ப! வா. நாம் மேல் ஏறி வாஸயோக்யமான ஓர் ஆச்ரமம் பார்ப்போம்.

விதூஷகன்.—அப்படியே ஆகட்டும் (முன்நின்று) தாங்கள் வரணும். (இருவரும் மலை ஏறுகிறார்கள்)

நாயகன்.—(வலதுகண் துடித்தாற்போல் பாவித்து, யோசனையுடன்) நண்ப! எனது வலக்கண் துடிக்கின்றது. நான் ஒரு பலனையும் அபேக்ஷித்தவன் அல்லன். ஆனால் முனிவர்கள் கூறுவதும் பொய்க்காது; ஆகையால் இது என்ன குறிப்பிக்கும்?

விதூஷகன்.—ஓஹோ! அன்பா! உனக்கு அது சீக்ரத்தில் ஏதோ நன்மை உண்டாகப் போகிறதாக முன்னதாகக் காட்டுகிறது.

நாயகன்.—ஆமாம். நீசொன்ன விதம்தான்.

விதூஷகன்:—(பார்த்துக்கொண்டு) ஹா! மித்ரா! இது ஓர் தவவனமாகக் காணுகிறது. இலையடர்ந்த மரங்கள் நெருங்கி, ஹோமத்தீயின் வாஸனை மிகுந்த புகைத்திரள் கமழ்ந்து, வாஸனைமிகுந்து இருக்கின்றது. பயமில்லாமல் மான்கூட்டங்கள் ஸ்வாதந்த்ரியமாகத் திரிகின்றது. இது நிச்சயமாகத் தவவனம்தான்.

நாயகன்.—நண்ப! நீ மிகவும் அழகாகத்தான் சொன்னாய். இது வாஸ்தவமாகத் தவவனம்தான். இம்மரங்களின் பட்டைகள் மிருதுவாக வெட்டப்பட்டிருக்கிறது; அது வெட்டினவரது அநுதாபத்தைக் காட்டுகிறது. ஆகாயம்போலத் துல்யமான நீரை உடைய இச்சிறு ஓடைகள் எல்லாம் உடைந்த பழைய கமண்டலங்கள் நிறைந்திருக்கின்றன. இங்குமங்கும் சிறுவர் கட்டிய முஞ்சிகள் விழுந்து கிடக்கின்றன. அவை அவர் கட்டி மழுங்கி எறிந்தவைகளே. நாள்தோறுங் கேட்டிருந்த இக்கிளிகள் ஸாமகானம் செய்கின்றன.

(இருவரும் உள்நுழைதல்)

நாயகன்.—வயது முதிர்ந்த முனி ஜனங்களால் விசாரம் செய்யப்பட்டு ஸந்தேஹத்திற் கிடந்தரும் வேதவாக்கியங்களின் விரிவு நிறைந்தும், படிக்கும் சிறுவர் வேதமந்த்ரங்கள் கூறிக்கொண்டு இளம்பச்சை பசும் ஸமித்துகள் ஒடித்தல் பொறுந்தியும், முனிவர் பெண்கள் தமது தளிர்போன்ற கைகளில் வரும் நீரையுண்டுவளர்ந்த இளம்பயிர் நிறைந்த பாத்திகள் நிறைந்தும், சாந்தம் நிறைந்து அழகு மிகுந்து ரமணீயமாக விளங்கும்? அஹா! என்ன தபோவனமிது! இனி இங்கோ.—

முகம ணியம்பி முழுவுளத் தினிய
வகையின் வண்டினம் வாவென் றழைப்பவும்,
கனியுடைக் கிளைகள் மனக்கனி வதனொடு
நனிவணங்கிடவும் நவமது பொழியும்
பூமழை பொழிந்து போற்றி செய்யவும்
மாமன மூட்டின மரங்களு மீண்டே.

வாஸ்தவமாக இவ்வனம், தெய்வத்தன்மை யுடையது நாம் வஸிக்க யோச்யமானது. நாமிங்கிருந்து ஸந்தோஷ மடையலாம் என்று எண்ணுகிறேன்.

(இருவரும் ஆச்ரமத்துள் போகிறார்கள்.)



## எச்சரிக்கைத்திரயம்

## THREE WARNINGS

காப்பு

ஞான நனிவளர்க்கு நல்லபொருட் காதையினை
யூனம் பொருந்தா துரைத்தற்கு—வானமுதிற்
றெள்ளு தமிழூட்டித் தேர்ந்துரைக்கச் செய்யுமா
லுள்ளும் புறம்பா மொளி.

வரலாறு

மேனாட்டுக் கல்வியின் மேம்பட்ட தேல்ஸம்மை *
பானாட் டுரையிற் பகர்ந்தனளாற்—றேனாட்டு
மன்ன முறையை யறிந்தென்றன் சிற்றறிவாற்
பன்னினேன் பாரிற் பரிந்து.

அவையடக்கம்

எழுதாத கேள்வியுங் கேள்வியா மேனைப்
பழுதமர்ந்த கேள்வியும் பார—முழுதுணரேன்
மூட மதியின் மொழிந்திட்ட விந்நூலுந்
தேடி யுணர்த்துமென் றீது.

நூல்

பாதல முருவக் கீண்ட பராரைவேர்ப் பாதபங்கள்
பூதல நீங்கு மாசை பொருந்துதல் சிறிது மின்றே
லாதலி னண்டி னோடு மாசையு மோங்கு மென்றே
யோதினர் பெரியோ ரஃதை யுணர்ந்திடார் பலருங்
[கொள்வர்.

வேறு

நரைதிரை மூப்பு நலிதொழிற் பிணியு
  நண்ணிகை யற்றபண் பினரா
யிரையெனச் சேனங் கழுகொடு குக்க
  வீர்த்திடு நிலையினை யடைய
வரைநொடிப் போதே யுள்ளதா மெனினு
  மாசையி னீங்கல துலகென்
றுரைதரு மாற்ற முணர்கலா ருக்கிங்
  குரைப்பனோர் புதியநற் கதையே

மலைபடு வளனுங் கடற்படு வளனு
  மாபயின் முல்லையின் வளனுந்
தலைசிறந் தெனினுஞ் சாலியுங் கன்னற்
  கலசமு மோங்கிய புனையான்

மலிவளங் கெழுமு மாவுறை நாட்டின்
  மன்னிய வளநக ரதனி
லொலிகட லோக்க முடைவுற வார்த்தே
  யுவகைகொ ணாட்களி னோர்நாள்.

உலக மெங்கணு மோங்கிய களிக்கட லமிழ்ந்த
விலகு மென்னய லகத்துவாழ் தாதுசே னென்போ

* Mrs. Thrales

னலகிலாக்கடி யணிமணம் பொருந்திய நாளி
னலகுபோன் றகூ லாயுதங் கொண்டதென் றிசை
[யோன்.

வெய்ய தன்கடு முகத்தினில் வெயர்வுமீத் தோன்றப்.
பைய வென்னொடும் வருகெனப் பணித்திடப் பதறி
யைய யாதுகொ லழைத்ததென் றன்புட னறைந்தே
செய்ய னோடுமாண் டிருந்தவோ ருறையுளுட்
[சேர்ந்தான்.

அன்ன மென்னடை யணங்கினை யவ்வயி னகற்றித்
துன்னு வாயெனத் தூயவன் சொற்றன னதுகேட்
டுன்னி னொருவகையினுந் தேர்ச்சியை யோரான்
பின்னி யீர்த்துக்கொண் டேகுமந் நடுவனைப்
[பணிந்தே.

ஐய கேளினு மாருயி ரிளைமைநீங் காதாற்
றுய்யநின்மொழி மனங்கொளத் துணிவிலை யன்றிச்
செய்ய நின்னுடன் சேர்வதற் காமுறை முயற்சி (ய்.
பொய்யெ னச்செய லுறுத்துதற் கியலுமோ வுரையா
அன்ன தன்றியா னணிமண மாற்றுதற் கான
பன்னி காந்தளம் பாணியைக் கரங்கொடு பற்றிச்
சொன்ன நான்மறைத் துறைவழி யொழுகிய காலத்
தென்னை நோக்கிநீ யிவ்வகை யியம்புத னெறித்தோ.

என்ற வாதியா வெழில்பெறு மொழிபல வியம்பக்
குன்ற வில்லித னூர்தியா வயங்கிய கூற்று
மன்ற வனெதிர் பேசிலன் வலியிலா வழக்கோ
நின்ற வன்றனை நேர்முக நோக்கியீ தறைவான்.

அன்ப வேகுவ லணிமண மாற்றிய நின்னை
யின்பமில்லவ னேகினன் கொண்டுவிண் ணென்ற
துன்ப மாவலர் தூற்றநா ணுற்றலே னாய
வின்ப மிவ்வயி னியைந்திட விருத்தியா லன்றே

தெற் கிடங்கொளுந் திணியிரு ளென்னுல கத்தே
கொற்ப கட்டினிற் குறுகியான் கொண்டுபோ முன்ன
மற்ப நின்னையு மடையுமுன் றறிகுறி தாமு
நிற்பவற்றை நீரேடி யிங்கியற்றுதனெறியே.

இத்த கைச்செய லியற்றுதற் கியலுமே னீங்கி
யத்த கைக்குறை யாற்றுவா னமயமு மீவ
னெத்த கைத்தொழி லுண்டெனு மெதிர்மறு தேகச்
சித்த மாதிநீ யென்றினைத் துரைத்தனன் செல்ல.

வேறு

அறநெறி யொழுகு மரச னணைக்கீ ழமர்ந்தவெம் மன
  முள கொடியோர்
செறிவிலங் கேகச் செம்மையொன் றிலராய்த் தீக்
  கொலை களவொடு பிறவு
அறைதரு செயல்கள் புரிவதற் கெண்ணி யாவன
  கருதிடா ரதுபோ
லறநெறிக் கடவுளை றந்தன வறிந்து மடைந்திலன்
  வேண்டிய செய்றகே

# கல்யாணி

## * KALYANI

### 1-ம் அதிகாரம்

**திருப்புனம்** என்ற செழிப்புள்ள ஒரு ஜமீன் மேற்கு மலைச்சாரலிலிருந்தது. அது நீர்வளம் நிலவளம் மலைவளம் பொருந்தியதாய், ஸமபூமியிலிருந்து மலையைக் கடக்கும் வழிகளில் ஒன்றிலிருந்ததால், அயல் தேசத்தவர் படையெடுத்துச் செல்லுங்காலங்களிலும், உள்நாட்டில் குழப்பங்கள் நேரிடும் சமயங்களிலும், அது மிகுந்த முக்கியமான இடமாயிருந்தது. அந்த ஜமீன்தாருக்கு "புனபதி" என்று பெயர். அதில் பரம்பரையாகத் தைர்யமும், வீரமும், கீர்த்தியும் பெற்ற புனபதிகள் வெகுகாலமாக இருந்தார்கள். பலமுறை அனேக அரசர்கள் அதிலுள்ளகோட்டையை வளைந்து ச்ரத்தையோடு முற்றுகை போட்டும், அதிலுள்ளோர் ஊக்கத்தோடு எதிர்த்ததால் தோல்வி அடைந்திருக்கின்றனர். அக்காலங்களில் எல்லாம் அதன் அதிபதிகள் மிகச்சிறந்த வீரச்செயல்கள் செய்திருக்கின்றனர். ஆனால் இகலோகத்திலுள்ள ஸகல பொருள்களுக்கும் போலவே இந்த ஆதிபத்யத்திற்கும் கலக்கங்கள் நேரிட்டு குறைவு உண்டாயிற்று. நாளடைவில் அதன் மஹிமைகுன்றி, கிராமங்கள், பூமிகள் எல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் தொலைந்து, கடைசியில் அந்தப்புனபதி புல்காடுசூழ்ந்த ஒரு சிறு ஊரில் அலங்காரமற்ற ஒரு வீட்டிலிருக்க நேர்ந்தது. அதுவே அவனுடைய உடைமையில் மிகுந்ததாயிருந்தது.

அந்த நிலைகுலைந்த வம்சத்தில் இந்தக்கதை நடக்கும்பொழுது இருந்த புனபதி, தன்னுடைய தற்கால நிலைமைக்கு வளைந்துகொடுக்கும் மனமுடையவன் அல்லன். அக்காலத்திலுண்டாகிய குழப்பத்தில் அவன் சேர்ந்து சஹாயஞ்செய்த கட்சி தோற்றுப்போகவே, அரசன் அவன் உடலையும் பொருளையும் கவராவிட்டாலும், அவனை ராஜத்ரோஹியாக்கி அவனுடைய பிரபு பட்டத்தைப் பிடுங்கிக்கொண்டான். அவனைப் "புனபதி"என்று பிறர்சொல்வது வெறும்உபசாரவார்த்தையாக மாத்திரம் இருந்தது.

இந்தத் தண்டனைக்குள்ளாகிய கனவான், தனது பரம்பரையான ஸம்பத்தைப் பெறுவிட்டாலும், தனது குலத்தினரின் பெருமையையும், கீழடங்காமையையும் தனது உரிமையாக அடைந்திருந்தான். தன்னுடைய குடும்பம் கடைசியில் நசிக்க முக்கிய காரணமாயிருந்தவன் ஒருத்தன் என்று வைத்து அவனிடத்தில் பூர்ணமான விரோதத்தை நாட்டினான். அந்த மனிதனே அப்பொழுது அந்த ஜமீனை விலைக்கு வாங்கி, அதற்கு யஜமானனாகி இருந்தவன். அவன் புனபதிகளைப் போலப் பழங்குடிப்பிறப்பில்லாதவன்; சில வருஷங்களுக்குமுன் உண்டான இராஜ்ஜியகுழப்பத்தில், செல்வமும் இராஜதந்திரப் பிராதான்யமும் பெற்றவன்; ஒரு வைக்கீல் வேலையில் அப்பியசித்தவன்; அரசாங்கத்தில் பல உயர்தர உத்தியோகங்களில் இருந்தவன்; பற்பல கக்ஷிகளாகப் பிரிந்து, பிரதிநிதிகளால் இராஜாங்கம் நடத்தப்பட்ட கலக்கம் நிறைந்த தனது ஜீவகாலத்தில், சாமர்த்தியமாய் நடந்து தன்னுடைய காரியசித்திகளைப் பெற்றவன்; ஒன்றும் கிடையாத தேசத்தில் தந்திரமாய் அதிகப்பொருள் தேடி, அதன்யோக்கியதையையும், அதனைச் சேர்க்கும் பல வழிகளையும், தன்னுடைய அதிகாரத்தையும் சொல்சத்தியையும் விருத்திசெய்ய அதை உபயோகிக்கவேண்டிய முறையையும் நன்றாய் அறிந்தவன்.

இவ்வித இயற்கையான நன்மைகளும் செயற்கை அநுகூலங்களுமுடைய இவன், கொடுங்கோபமும் அவிவேகமு முடைய "புனபதி"க்கு ஒரு அபாயமான எதிரியாயிருந்தான். இவர்களுடைய விரோதத்திற்குக் காரணம் பலர் பலவிதம் கூறினர். நியாயமும் சரியுமான வழியில் அந்தப் புதுப்பிரபு, புனபதியின் முன்னோர்களின் உடைமையை அடைந்திருந்த போதிலும், அதைக்கண்டு சகியாத புனபதியின் பழிவாங்கும் குணத்தாலும் பொறாமையாலும் சண்டை உண்டாயிற்று என்று சிலர் சொன்னார். செல்வவான்களின் எதிரில் அவர்களை எவ்வளவு புகழுகிறார்களோ அவ்வளவு பின்னால் இகழும் இயல்புடைய அனேகர், "இந்த ஜமீனை விலைக்கு வாங்குவதற்கு முன்னே இருவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் அதிகமிருந்தது; ஒருவன் பதபாகமுடைய வைக்கீல், சமர்த்தனான இராஜதந்திரி. மற்றொருவன் படபடப்பும் கோபமுமுடைய அவிவேகி. இவர்களுக்குள் வியாச்சியச் சண்டைகளும், பொருள் சம்பந்தமான சிக்குகளும், உண்டானால் தன்வழக்கைப் பேசி பாத்தியதையை ஸ்தாபிப்பதில் யாருக்கு அநுகூலமிருக்கும் என்பது தெரியாதா" என்று வாய்விட்டுச் சொல்லாமல் ஸூசனையாகக் காட்டினார்கள். அந்தப் புதுப்பிரபு

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.



வின் பெயர் வீரசேனன். அவன் அரசனுடைய மந்திரிகளில் ஒருவன்.

ஜனங்களுக்கு இவ்வித ஸந்தேகம் உண்டாவதற்கு அந்தக் காலமும் ஒத்திருந்தது. ஏனென்றால் அரசன் அந்தத் தேசத்திலில்லை; தூரதேசத்தி லிருந்தான். கீழுத்தியோகஸ்தர் கொடுங்கோல் செலுத்தினால், துன்பமடைந்தவர் தங்களுடைய குறைகளைச் சொல்லி முறையிட்டு, தங்களுக்கு நியாயமோ அல்லது கிருபையோ செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறதற்கு, பொது ஜனங்களின் ஸாதாரண நன்மையைக் கருதிச் செய்யக்கூடிய ப்ரதான அதிகாரி அங்கே இல்லை. எவ்வளவு அசமந்தனையும், ஸ்வயகாரிய துரந்தனையும், மனம்போல் ஸ்வவாதீனமாய் அரசுசெலுத்துகிறவனையும் ஒரு சக்ரவர்த்தியிருந்தாலும், ஸ்வாதந்த்ரியமுள்ள ஒரு தேசத்தில் அவனுடைய யோகக்ஷேமம் பொது ஜனங்களின் நன்மை தீமைகளோடு இன்றியமையாமல் சேர்ந்திருப்பதனாலும், அவன் வேறுவிதமாக நடந்தால் அவனுடைய அதிகாரத்திற்குக் கெடுதிதிட்டமாயும் திடீரென்றும் உண்டாகக்கூடியதனாலும், எல்லாப்பிரஜைகளுக்கும் பக்ஷபாதமில்லாமல் வழக்குத் தீர்க்கவும், ஸத்யமார்க்கத்தால் ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தவும், ராஜதந்திரங்களும் பொது அபிப்பிராயங்களும் ஏற்படும். இவ்விதமாக இராஜ்யாபகாரிகளாயும் கொடுங்கோல் மன்னராயும் இருந்தவரும்கூட, தங்களுடைய அதிகாரத்திற்கும் ஸ்வபாங்களுக்கும் ஒத்திராவிட்டாலும், தங்களுடைய குடிகளுக்கு நீதி செலுத்துவதில் கண்டிதமாயிருந்திருக்கிறார்கள்.

அப்படிக்கில்லாமல் ராஜப்பிரதிநிதியாகிய பிரபுக்களின் அரசாங்கம் ஆனாலோ, ஒவ்வொருவரும் தான் வேலையிலிருக்கும் காலத்தின் முடிவு எப்பொழுது நேரிடும் என்று அறியானதலால், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்ற பழமொழிப்படி, தான் உத்தியோகத்தில் இருக்கும்வரை தனக்கு வேண்டிய பொருள்தேடுவதிலும், சொல் சத்தியை விருத்தி செய்வதிலும், தன் பந்துமித்ரர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்து உதவுவதிலும், தனது எதிரிகளுக்குத்தன்னால் எவ்வளவுதுன்பமும், தொந்தரையும் செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்வதிலும், தவறுகிறதில்லை.

விசேஷமாக வழக்குத் தீர்ப்பதில் பக்ஷபாதமே குடிகொண்டிருந்தது. ஆளுக்குத் தகுந்த ந்யாயம் என்பதை ந்யாயாதிபதிகள் கைக்கொண்டார்கள். பிறர் தூஷிக்கத்தக்கதானாலும் அதுவே வழக்கமாயிருந்தது. ஒருதலை முன் துணிபோ, பக்ஷபாதமோ இல்லாமல் முக்யமான ஒருவழக்கும் தீர்க்கப் படுகிறதில்லை. ஒரு சீர்கேடான நடக்கை மற்றனேக நாணயக்குறைவான செய்கைகளுக்கு வழிகாட்டியாயிருந்தது. ஒரு மித்ருவைக் காப்பாற்றவோ, ஒரு சத்ருவை நசுக்கவோ ந்யாயாதிபதியின் பரிசுத்தமான அதிகாரத்தைக் கறைப்படுத்துகிறவர்களும், தங்களுடைய குடும்பத்தினருக்கும், சம்பந்திகளுக்கும், ராஜ்ய கக்ஷிக்காரருக்கும் அனுகூலமாக வழக்குத் தீர்க்கிறவர்களுமாகியவர்கள், தங்கள் ஸ்வயநலத்திற்காக எதுதான் செய்யமாட்டார். ஐச்வரியவான்களின் பணப்பை அவர்களின் எதிரிகளாகிய ஏழைகளின் வழக்குத்தீர்க்கும் தராசுத்தட்டைத் தன் கனத்தால் தரைதட்டச் செய்வதாக ஜனங்கள் நம்பினார்கள். நியாயஸ்தலங்களில் கீழுத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்க அஞ்சுவதில்லை. அரசனுக்காகஏற்படுத்தப்பட்டவைக்கீலுகளும் 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்து' எதிர்க்கக்ஷியில் அதிகப் பணம் இனாமாகப்பெற்று அழிவழக்குக்கு அநுகூலமாக நாணமற்று வெளிப்படையாகவே நடந்துவந்தார்கள். ஐயோ! இவர்கள் பள்ளிக்கூடத்தில் ஆதியில்படித்த "ஓரஞ்சொல்லேல்" என்பதனையும்,

"இருவர்தஞ் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே"

என்பதனையும் முழுவதும் மறந்த பாவிகள்; அவற்றிற்கு மாறாகச் செய்யும் மஹாபாவிகள்.

இந்நாட்களில் வியாஜ்யங்களில் பழகி, கைவிஞ்சிக் கொண்டிருக்கிற ஆலோசன ஸபையின் அங்கத்தினனாகிய ஒரு ராஜ தந்த்ரி, தன்னை எதிர்க்கும் திராணியும் செயலும் அற்ற சத்ருவை வெல்ல வழிகள் கண்டுபிடித்து உபயோகியாமலிருக்க மாட்டான் என்று நினைப்பது அதர்மம் அல்ல. வீரசேனனுடைய மனச்சாக்ஷிக்கு இவ்வனுகூலம் பெற ஸம்மதம் இல்லாவிட்டாலும், செல்வமும் கீர்த்தியும் அடைய அவனுக்குள்ள ஆசையை அவன் மனைவியின் வேண்டுகோள்கள் விருத்திசெய்யாமல் இருக்கமாட்டா என்று ஜனங்கள் நம்பினார்கள்.

அவன் குடும்பத்திலும் அதிகக் கீர்த்தியுள்ள வம்சத்தில் பிறந்தவள் அவன் பத்னி. தன் புருஷன் செல்வாக்கு நிலைத்துப்பரவுவதில் அவள் அந்தரங்கமாக

மல் உபயோகித்தாள். அது தன்கணவன்மேல் தன் அதிகாரத்தைச் செலுத்தவும் காரணமாயிருந்தது அவள் அழகும் கம்பீரமான காக்ஷியுமுடையவள். அவளுக்கு வன்மையான மனச்சக்தியும் கொடுங்கோபமும் இயற்கையிலுண்டு. ஆனால் அனுபோகத்தால் முன்னதை உபயோகித்து, பின்னதை அடக்கி மறைக்கக் கற்றிருந்தாள். தன் கணவனுக்குரிய கடமைகளை அதிகச் சிரத்தையோடு செய்வாள். விருந்தினரை முகமலர்ச்சியோடுஉபசரிப்பாள். நடவடிக்கைகளிலும் ஆசாரங்களிலும் அக்காலமுறைகளை இம்மியும் பிசகாமல் அனுசரிப்பாள். ஆனால் இவைகளெல்லாம் வெளிவேஷமே. அதனால் அவளிடத்தில் ஜனங்களுக்கு கவுரவபுத்தி யில்லை. தன்குடும்ப இலாபமே அவளுடைய முழுநோக்கம். அதிருந்தால் உலகம் வெளித்தோற்றத்தால் ஏமாந்து போகிறதில்லை. உயரப் பறக்கும்பொழுதும் தன் இரைமேலேயே கண்ணாயிருக்கும் கழுகுபோல், அவளும் தான் கவுரவத்தோடு செய்யும் ஆசார உபசாரங்களிலும் தன் காரியமே குறியாயிருப்பாள். ஆகையால் அவளுடைய அந்தஸ்திற்குச் ஸமமானவர்கள் அவள் செய்கிற உபசாரங்களை ஸந்தேஹித்து வந்தார்கள். தாழ்ந்தவர் அவளிடத்தில் ஸந்தேஹமும் பயமுமுடையவரா யிருந்தனர். தன் சொல்படி அவர் கேட்க அவளுக்கு அது அனுகூலமாயிருந்தாலும், கவுரவமும் ஸ்நேஹமுமில்லாததால், ப்ரதிகூலமாயிருந்தது.

அவள் புருஷனும், தன் பிரபுத்வத்திற்கு அவளுடைய ஸாமர்த்யமும் சாதுர்யமும் முக்கிய காரணங்களாக இருந்தமையால் அவளைப் பயந்து கவுரவித்து வந்தானே ஒழிய, அவனுக்கு அவளிடத்தில் நம்பிக்கையும் பற்றும் இல்லை. தனக்கு வெளியிலுள்ள பெருமை தன் வீட்டில் அடிமைத்தனத்தாலுண்டாகியதென்று அவன் சில காலங்களில் நினைத்து வருந்தியதாக உலகவதந்தி யுண்டு. அவள் அவனுடைய கீர்த்தியைத் தன்னுடையதாகப் பாவித்ததனால், “அவன் தன் பெண்சாதிக்கு அடங்கினவன்” என்று பெயருண்டானால் அதுகீர்த்தி பங்கம் என்று நன்றாய் அறிந்திருந்தாள். தான் பேசும்பொழுதெல்லாம் தன் பர்த்தாவின் அபிப்ராயம் பிசகாதென்று வற்புறுத்துவாள். மனோபாவத்தை அனுசரித்துப் ப்ரியத்திற்கு இணங்கி நடப்பாள். ஆனால் இவையெல்லாம் மனப்பூர்வமாயும் உண்மையாயும் அல்ல. தன் உயர் குடிப்பிறப்பையும், ஸ்வயபலத்தேட்டத்தில் தனக்குள்ள தீர்ந்த கொள்கைகளையும், ஒன்றிற்கும் சலிக்காத தன் குணங்களையும் நினைத்து அஹங்கரித்துத் தன் புருஷனிடத்தில் மதிப்பற்றிருந்தாள். அவனுக்கும் அவளிடத்தில்பொறாமையும் பயமும் இருந்தனவே அல்லாமல் உண்மையான அன்பும் வியப்புமில்லை. ஆனாலும் இருவருடைய முக்கியமான நோக்கங்கள் ஒத்திருந்தனவாதலால், அவர்களுக்குள் ஒற்றுமையில்லா விட்டாலும், இருவரும் சேர்ந்து காரியங்கள் நடத்தி,ஒருவரை ஒருவர் வெளிக்குக் கண்ணியப்படுத்தி வந்தார்கள். அவர்களுக்கு அனேக குழந்தைகள் பிறந்தாலும் மூன்றுதான்பிழைத்திருந்தன. மூத்த குமாரன் தேசயாத்ரை போயிருந்தான். இரண்டாவது குமாரத்திக்கு பதினேழு வயது. மூன்றாம் பையன் அவளுக்கு மூன்று வயதுக்கு இளையவன். அவர்கள் தங்கள் பெற்றோருடன் இருந்தார்கள்.

கடைசிலிருந்த ஜமீன்தார், தங்களுக்குள் முன்னிருந்த இலாவாதேவியில் உண்டான அனேக அமிசங்களைக்குறித்து எதிரியுடன் வழக்குகளிட்டு ஒவ்வொரு தடவையும், எதிரிபொருளுள்ளவன் ஆகையால், அபஜயப்பட்டான். அவன் உயிரோடுதான் வியாச்சியமும் முடிந்தது. வெகுநாளாக நூலிழைந்து கொண்டிருந்த அவன் தேகம் கடைசிவழக்குத் தோற்றதோடு அவனுக்குண்டாகிய கடுங்கோபத்தால் இற்று ஒழிந்தது. அக்காலத்தில் அவனுக்கு உண்டான மரணவேதனைகளைக்கண்டும், அவனிட்ட வன்சாபங்களைக் கேட்டும் கொண்டிருந்த, இருபது வயதுள்ள அவன் புத்திரன் மாதவன், பழிவாங்குகையையே தன்பிதிரார்ச்சிதமாக அடைந்தான். மரித்தவனுக்குச் சரமகிரியை நடக்கும்பொழுதுநேரிட்ட காரியங்களும் இந்த எண்ணத்தைத் திடப்படுத்தின.

அவனுடைய வாழ்நாட்களின் முடிவில் அவனுக்கில்லாதிருந்த ஆடம்பரங்களெல்லாம், இறந்த பிறகு அவனுக்கு உண்டாயின. பிரேதத்தைப் புதைக்க எடுத்துச்செல்லும்பொழுது அவன் குலவிருதுகளும்,கொடிகளும், தோரணங்களும் அனேகம் கூடக்கொண்டு போகப்பட்டன. காளங்களும், எக்காளங்களும், பறைகளும், வாத்தியங்களும் முழங்கின. பிரபுக்களும் நாட்டாரும் பாடைக்குப்பின் சென்றனர். அரண்மனைமுதல் கல்லறைவரை எள்ளுவிழ இடமில்லாமல் ஒரே கூட்டமாயிருந்தது. இறந்து போனவன் தனது அந்தியகாலத்தில் விரும்பியபடி அவனுக்குப் பிரேதக்கிரியை துடங்கினவுடன், அது வழக்கத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமாயிருந்ததால் பக்கத்திலிருந்த அதிகாரியாகிய வீரசேனன் இடத்தில் உத்திரவு பெற்றுச் சில சேவகருடன் ஒரு குருக்கள் வந்து அதை நிறுத்தச்சொன்னான். அது மாதவனுக்கு அடங்காக் கோபத்தை உண்டாக்கத் தன் கத்தியில் அவன் கைவைத்துத் தடைசெய்யாமலிருக்கச்சொன்னான். அவனைச் சேர்ந்த அனேகரும் தங்கள் கத்திகளை உருவினர். அந்தக்குருக்கள் பயந்து “நீங்கள்



இவ்விதம் ராஜாதிகாரத்தை உல்லிங்கனம் செய்த பலனை அனுபவிப்பீர்கள்” என்று முணுமுணுத்துக் கொண்டு சென்றான். பிறகு “மண் மண்ணோடும், சாம்பல் சாம்பலோடும்” என்று குரு சொல்லிக் கடைசிக் கிரியையை முடித்தான். பந்துக்களும் சிநேகிதர்களும் மற்றுமுள்ளவரும் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்க, மாதவன் ஒன்றும் உரையாடாமல் முகம் வெளுத்துக் கண்ணீர் சிந்தாமல் பிரேதத்தைப் புதைத்தான்.

எல்லாம் முடிந்து புறப்படும் சமயத்தில் மாதவன் அங்கிருந்தவர்களை நோக்கி “கனவான்களே! ச்நேகிதர்களே! இறந்த என் பிதாவுக்கு நீங்கள் செய்த மரியாதை அற்பமல்ல. கேவலமான மனிதனுக்குக்கூட நடக்கிற சடங்குகள் இன்று உங்கள் உதவி இல்லாவிட்டால் உயர்ந்த குலத்தில் ஜனித்த என் பிதாவுக்கு இல்லாமல் போயிருக்கும். துக்கத்தோடும், அழுகையோடும், மௌனமாயும், மரியாதையாயும் மற்றவர்கள் மரித்தவர்களை அடக்கம் செய்கிறார்கள். போக்கிரிகளும் துன்மார்க்கரும் செய்த செய்கைகளால், நமக்குத் துக்கம் ஓடிப்போய், கோபம் பிறந்தது. இதன் உற்பத்தியும் எனக்குத் தெரியும். எனக்கும் என்குடும்பத்திற்கும் உண்டான அழிவுக்கும் அவமானத்திற்கும் தக்க அளவு அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் நான் பதில் செய்யாமல் போனால் தெய்வம் என்னைக் கேட்பதாக” என்று சொன்னான்.

அங்கிருந்த அனேகர் அந்த வார்த்தைகளை நியாயமான கோபத்தாலுண்டானவை என்று சிலாகித்தார். ஆழ்ந்து யோசிக்கும் சிலர், அவைகளால் விளையும் மிகுந்த விரோதத்தை எதிர்க்கப் போதுமான செல்வாக்கு அவனுக்கில்லாததால் மனம் நொந்தார்கள்.

துக்கம் கொண்டாடுகிறவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்து, அக்கால வழக்கப்படி, கோலாகலமாய் விருந்து சாப்பிட்டு, மிதமில்லாமல்குடித்து வீரசேனனை வைது, சபித்து, மாதவனுக்கு அனுகூலம் செய்வதாக ஆயிரம் தடவை கத்தினார்கள். அவனுக்கு அவை ருசிக்கவில்லை. குடிவெறி தீர்ந்தால் சொன்ன சொல் மறந்துபோம் என்று அவனுக்கு நன்றாய்த்தெரியும். வீட்டிலுள்ளவைகளையெல்லாம் தின்றழித்துக் குடிவெறியுடன் எல்லாரும் சென்றார்கள். தன் குடும்ப தனநாசமும், கீர்த்திபங்கமும், தன் நம்பிக்கைகளுக்குக் கெடுதியும், தங்களை நசிப்பித்த குடும்பத்தின் அபிவிருத்தியும் ஆகிய இவைகளைப்பற்றிய எண்ணங்களே தனக்குத்துணையாக மாதவன் தனித்து அங்கே இருந்தான்.

துணை ஒருவருமில்லாமல் துக்கத்தில் முழுகிக் கிடந்த அந்த இராத்திரி ஒருதேவதை அவன் நிலைமையைக்கண்டு இரங்கியதாயும், அதனால் மேல் நடந்த காரியங்கள் சம்பவித்தன என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். ஆனால் ஐயோ! மனிதனுக்குண்டாகும் அடங்காத குரூரகுணங்களால் தோன்றுகிற ஆலோசனைகளைவிட, அதிகப் பயமற்ற துணிந்த செய்கைகளை எந்தப் பேய்தான் செய்விக்க வல்லது.

# மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### 2. கதா வியாஸங்கள்

### NARRATIVE ESSAYS

### (4) நம்நாட்டு ஸம்பவங்கள்:—சிவாஜியும் அப்ஸூல்கானும்

### Indian Incidents—Sivaji & Afzul Khan

குறிப்பு.—முகவுரை—காரணங்கள்—கதை— முடிவுரை, அபிப்ராயங்கள் கருத்து முதலியன.

சிவாஜி மஹாராஜாவின் பெயரைக் கேட்டிராதவர் ஒருவருமில்லை. மஹம்மதியர்களால் நம்நாடு மிக வருந்திய காலத்தில் ஹிந்துக்களை ஒன்றுசேர்த்து அஷ்டாதசபுராணங்களில் கூறியபடி தர்மபரிபாலனம் செய்யத்தக்க ஒரு ராஜ்யம் ஸ்தாபிக்கவேண்டும் என்பதே அவர் நோக்கம். அவரை நமது தேசத்துச் சரித்திரங்களில் கள்வர்தலைவன் என்றும், நம்பிக்கைத்ரோகி என்றும், மலை எலி என்றும் பலவாறாக அவதூறாக வெளிநாட்டார் நாக்கில் நரம்பின்றி வைதிருக்கின்றனர். அவர் சரித்திரத்தில் அவரது கொடிய குணங்கள் வெளிப்படையாகக் காணப்படும் பாகம் என்று எல்லோராலும் மதிக்கப்படும் அப்ஸூல்கான் விஷயமான நடவடிக்கைகள் என்ற இந்தக் கதை இங்கு எடுத்துக் கூறுவோம். இதில் அவர் நடந்து கொண்ட மாதிரியைப் பார்த்தாவது நமது நண்பர்கள் அவர் விஷயமாகக் கொண்டிருக்கும் கெட்ட அபிப்ராயம் தவறானது, தீரவிசாரிக்காமல் ஆத்திரப்பட்டுக் கொண்ட கெடுமதி என்று எண்ணாமல் போகமாட்டார்கள்.

சிவாஜியின் தாய்தந்தையர்களுக்கு ஜீஜீபாய்,ஷாஜி என்று பெயர். ஷாஜி பீஜபூர் தேசத்து ஸூல்தான் கைவசமிருந்த காவிரிக்கரையிலிருந்த ஒரு மாகாணத்திற்கு அதிபதியாக விருந்தான். அவன் தாயார் ஜீஜீயோ முற்காலத்தில் மஹாராஷ்ட்ர தேசத்தில் அரசாண்டுவந்த ஓர் மராட்டிய குலத்தைச் சேர்ந்தவள். சிவாஜி பிறந்ததுமுதல் அவளிடம் அவருக்கு மிகுந்த பக்தி. அவளுக்குக் குலதெய்வமாகிய பவானி ஆவேசம் அடிக்கடி வந்து கொண்டிருந்ததால், அவளை சிவாஜி ஒருதேவதை என்றே மதித்திருந்தார். ராஜவம்சத்தில் பிறந்தும் தன்கணவன் ஓர் அரசன்

கீழ்க் கார்யஸ்தானாகும்படியாயிற்றே என்ற துக்கம் அவள் மனத்தைவிட்டு மாறவில்லை. கணவனை எவ்வளவு தூண்டியும் அவனால் ஸரிவர காரியங்களைக் கொண்டு செலுத்த முடியவில்லை. ஆகவே பிள்ளையாகிய சிவாஜிதான் தகுந்தவன் என்று அவனை அடிமுதல் தன் இஷ்ட பூர்த்திக்காக நன்றாகப் பழக்கி வந்தார். அவர் ராஜ்யதந்தரத்தில் மிகத்தேர்ந்தார். கதை என்ற வ்யாஜத்தைக்கொண்டு ஜனங்களை ஓரிடத்தில் சேர்த்து, அங்கு ராமாயண மஹாபாரத வீரச்செயல்களை நாடகமாகவாவது கதையாகவாவது நிரூபணம்செய்யும் ஏற்பாடுசெய்து ஜனங்களுக்கு தைர்யத்தை ஊட்டிப் பின்னர் அவர்களை நடத்திச்சென்று மேற்குத்தொடர்ச்சிமலைகளில் மகம்மதியர்கள் கைவசமிருந்த கோட்டைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்துவந்தார். இதைத்தடுக்க சிவாஜிதகப்பனைதெற்கே இருந்து ஏதோகார்யமாக அழைப்பதுபோல அழைத்து பீஜபூர் ஸுல்தான்கள் அவனைத் திடீரென்று சிறைப்படுத்திப் பார்த்தனர். ராஜதந்திரத்தில் தேர்ந்த சிவாஜி உடனே அவர்களுக்கு விரோதமாக டில்லி சக்ரவர்த்தியோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள, பீஜபூர் ஸுல்தான் பயந்து ஷாஜியை விட்டுவிடவேண்டிவந்தது. மலைக்கோட்டைகளைப் பிடிப்பதைமாத்ரம் சிவாஜி நிறுத்தாது முடிவில் மஹம்மதியருக்கு முக்யமாகிய **கலியாண்** என்னும் கோட்டையையும் பிடித்துவிட்டுப் **ப்ரதப்கர்** என்னும் கோட்டைக்கு வந்துதண்டிறங்கினான். இனிச்சும்மாவிருந்தால் முடியாதென்று பீஜபூர்ஸுல்தான் தன்னிடம் மிகச்சிறப்புற்று விளங்கிய பீமன் போன்ற **அப்ஸுல்கான்** என்பவனைப் பெரும்படையுடன் சிவாஜியை அடக்க அனுப்புவித்தான்.

அப்ஸுல்கான் பீஜபூரைவிட்டுப்புறப்படும்பொழுது கூடிய தர்பாரில் ‘அந்த மலைஎலியை எவ்விதத்திலாவது பிடித்து விடுகிறேன். உயிரோடு கிடைத்தால் போச்சு! இல்லாவிட்டால் அதை நசுக்கியாவது கொண்டுவந்துவிடுகிறேன்’ என்று மஹாகம்பீரமாகப் பெருமை பாராட்டினான். சிவாஜி மஹாராஜாவை அடக்கவந்த கான் நேரிடத்தன் கார்யத்தின்மேல் கண்ணாக வந்திருந்தால் நலமாக இருக்கும். வரும்வழியில் **துல்ஜபுரி, பண்டரபு** என்ற இரண்டு திவ்யஸ்தலங்களிருந்தன. அங்கு வந்ததும் சிவாஜி மஹாராஜாவிடம் கானுக்குஇருந்தகோபம் அடக்கமுடியாமல்போக, அந்த ஊர்கள் கோயில்களில் பலாத்காரமாகப் புகுந்து விக்ரஹங்களை உடைத்துக்கோயில் முழுவதும் பசுரக்தத்தை வாரி இறைக்கும்படி செய்தான். இந்த ஸங்கதியைத் தன்னாஜிமாலுச்ரே என்ற மஹாராஷ்டிர அதிபதி ஒருவன் சிவாஜிமஹாராஜாவுக்குத் தெரிவித்தான். உடனேஎல்லோரும் அப்ஸுல்கானை எதிர்த்துப் போர் செய்வதற்குத் தயாராயினர். தன் தகப்பன் ஷாஜியைச் சிறையிலிட்ட காலத்தில் தெற்கேசென்று தன் தமயனைக்கொன்றவர்களுடன் அப்ஸுல் ஸம்பந்தப்பட்டிருக்கவேண்டும் என்று தமக்கு இருந்த ஸந்தேஹம் அப்பொழுது ஞாபகம் வந்துவிட்டது. மாலுச்ரே மஹாராஷ்டிரஸேனையின் கோலாஹலத்தை அடக்கி மஹாராஜாவை நோக்கி ‘அப்ஸுல்கானைப்போரில் எதிர்க்கமுடியாது. அவனோடு வரும்ஸேனை ஏராளம். அவனை எப்படியாவது மலைப்ரதேசத்துள் வரவழைத்துப்பிடித்துவிட்டால், அவன் ஸேனைமுழுவதையும் இங்குநாம் சின்னாபின்னப்படுத்திவிடலாம். ஸமவெளியிலிருக்கிறவரையில், அவனை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது’என்றான். மந்த்ரிகளுக்கு இப்பொழுது அணுகும் ஆபத்துநன்றாகதெரிந்துவிட்டது. எல்லோரும்அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டனர். சிவாஜி மஹாராஜா தாயிடம்சென்று அனுமதி கேட்டார். அவளுக்கு ஆவேசம்வர ‘நீ தைர்யமாகப்போ, ஸமய உசிதமாக உன்மனதில் தோன்றியவைகளைச் செய். என் கிருபையால் நீ மஹம்மதியர்களை வெல்லுவாய்’என்று திருவாய்மலர்ந்தருளினாள். பின்னர் தாயின் ஆசீர்வாதம், தம்ஸேனையின் ஒற்றுமை, பவானியின் அனுக்ரஹம் ஆகிய இவைகளுடன் அப்ஸுல்கான் வரவை அவர் எதிர்பார்த்திருந்தார். அப்ஸுல்கானோ தன் ஸேனைப் பெருக்கைக்கண்டு மகிழ்ந்து, ‘சிவாஜி என்னோடு சண்டைசெய்து தரிக்கான். அவனை அவனிருக்கு காவல் நிறைந்த இடத்திலிருந்து எப்படியாவது அப்புறப்படுத்திப் பிடித்துப் பீஜபூர் கொண்டுபோய் விட்டால் நலமாகவிருக்கும். சண்டைசெய்து வீணாக ஆள்களை மடிய வைப்பானேன்’ என்று எண்ணமிட்டுக்கொண்டு இறுமாந்து வந்தான். அலக்ஷ்யமாய் அவன் தன் ஸேனையை நடத்திவந்ததால், மலைப்ரதேசத்துள் வந்ததும் பக்கத்திலிருந்து வரக்கூடிய அபாயங்களைத் தடுக்க வேண்டிய முயற்சியை அவன் செய்யவே இல்லை. இருவருக்கும் ஒருவரைஒருவர் பிடித்துக் கட்டிவிட வேண்டும் என்ற ஆவலே மேலிட்டிருந்தது. அக்காலத்திய யுத்தத்தில் தலைவன் பிடிபட்டுவிட்டால் அவன் ஸேனை சிதறி ஓடிவிடும் என்பது அவர்களுக்குத் தெரிந்த விஷயம். இந்த ஸமயத்தில் சிவாஜி மஹாராஜா தூதர்கள் கானை



அணுகித் தமது பிரபு பணிந்து ஸமாதானம் செய்துகொள்ள தயாராயிருக்கின்றனர் என்று மொழிந்தனர். தன் எண்ணப்படி எல்லாம் முடியுமென்று பேராசைகொண்டு அப்ஸுல்கான் **பண்டோஜி கோபிநாத்** என்ற ப்ராஹ்மணரை உண்மையை உணர்ந்து வரும்படி அனுப்பினான். அவரது மதஸம்ப்ரதாயம், தேசாபிமானம் முதலியவைகளைக் கிளப்பி மித்ரபேதம்செய்துவிட அவர் சிவாஜி மஹாராஜாவுக்கு அனுகூலரானார்.

சிவாஜி மஹாராஜா பர்தப்கருக்கு அருகாமையில் மலை இடுக்கிலுள்ள ஒரு ஸமபாகத்தை இருவரும் தனிமையாக ஸந்திக்கத்தகுந்த இடமாகக் குறிப்பிட, ஏற்பாட்டின்படி மஹாராஜாவும் கானும் அங்கு ஒவ்வொரு தேஹரக்ஷகனோடு வந்து சேர்ந்தனர். வரும்பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் எப்படியாவது பிடித்துக்கட்டிவிட வேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தபோதிலும், சிவாஜி கானைக் கட்டிய பின்னர் நடக்க வேண்டிய யுத்தத்திற்கு வேண்டியஏற்பாடுகள் முன்னரே செய்துவிட்டுவந்திருந்தான். அப்ஸுல்கானோ தான் நினைத்தபடி எல்லாம் அனுகூலமாகவே நடந்துவந்தபடியால் சிவாஜியைக்கட்டி ஊருக்குப்போனிலடைத்த புலிபோலக் கொண்டுபோய் விடலாமென்று வந்தானே ஒழிய தனக்குக்கஷ்டம்வந்துவிட்டால்மேல்என்னசெய்வது என்று சற்றேனும் யோசிக்காது வந்துவிட்டான். ஆகவே அன்றுகாலை மஹம்மதியப்படைகள் ஆயுதங்களை எறிந்துவிட்டு சாப்பாட்டிற்கு ஏற்பாடு பண்ணிக்கொண்டு ஆடிப்பாடிக் கொண்டிருக்க, அவர்கள் அருகாமையிலேயே புதர்களுள் மஹாராஷ்டிரப்படைகள் யுத்தஸந்நாஹராகச் சிவாஜிமஹாராஜா ஏற்படுத்தியிருந்த அடையாளமான தாரை ஓசையையும் வெடிசப்தத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. வந்ததும் கான்மஹாராஜாவின்கழுத்தைஇடதுகையால் பிடித்து அவரைதன்னிடம் இழுத்து இடதுகக்ஷத்தில் இடுக்கிப்பிடிக்க முயன்றான். ஓஹோ மோசம்வந்துவிட்டதே! என்று எண்ணிக்கொண்டு சிவாஜி மஹாராஜா தமது கையிலிருந்த **வாகநகப்**(புலிநகம்போன்ற ஆயுதம்) என்பதால்தாக்கி பவானிஎன்றகத்தியால்கான் இடதுபுறத்தைக்குத்தி அவனைக் கொன்றார். உடனே இரண்டு தேஹரக்ஷர்களுக்கும் சண்டை உண்டாயிற்று. மஹாராஜா தாரை ஊதச்செய்ய வெடிகள் போடப்பட்டன.கொஞ்ச நாழிகைக்கெல்லாம் மஹம்மதியர்கள் எல்லோரும் அலங்கோலமடைய நடந்த ஸங்கதியைப் பீஜபூர்கொண்டு சேர்க்கத் தப்பி ஓடினவர் சிலர் தான் மிஞ்சினர்.



இதுதான் சிவாஜி மஹாராஜாவின் நடவடிக்கை. சிவாஜி மஹாராஜாவுக்கு அப்ஸுல்கானிடம் விரோதம் அதிக ஏற்படக் காரணமிருந்ததனாலும், அவனோடு நேரிட சண்டை செய்யும் நிலையில் அவர் இல்லாமலிருந்தாலும், கானைக்கொல்வது அவர் ஏற்பாட்டிற்கு ஸஹாயமாயிருந்ததாலும், மஹம்மதியர், வெளிநாட்டுச் சரித்திரகர்த்தர்கள் ஆகிய இவர்கள் சிவாஜி மஹாராஜா ஒன்றும் அறியாது நம்பிவந்தகானை த்ரோஹமாகக் கொன்றார் என்று பழி சுமத்துகின்றனர். இதற்கு இணங்க கதாபாகங்களில் சிலவற்றை மறைத்தும் சிலவற்றை இடம்மாற்றியும் கூறி நகாசுவேலை செய்கின்றனர். உண்மையை ஆராயப்புகின், அக்காலத்தில் இம்மாதிரி ஒருவரை மோசம் செய்து பிடிப்பது ஸஹஜமே. இது கானுக்கும் சிவாஜிக்கும் தெரிந்திருக்கும். இருவருக்கும் இம்மாதிரி மோசம் செய்துவிடவேண்டும் என்பது உட்கருத்தாகவிருக்கும். ஆனால் கான் தனது ஸேனைப்பெருக்கையும் எதிரியின் பலக்குறைவையும் கண்டு இறுமாந்து கஷ்ட காலத்தை எதிர்பாராது அஜாக்ரதையாக இருந்துவிட்டான். சிவாஜி, நல்ல காலம்! அவர் எல்லாவிதத்திலும் ஜாக்ரதையாகவிருந்ததால் முடிவில் அவர் ஜயம் பெற்றார். இந்தக்கார்யத்தில் யாதொரு நம்பிக்கை த்ரோஹமும் இல்லை. சரித்திரம் எழுதுவோர் தம் பக்ஷபாத நோக்கத்திற்கேற்பப் பெரியோர்களை அவர்கள் நூல்களில் குற்றங்கூறுவது எக்காலத்திலும் இயற்கையே. இந்தக் கெட்ட குணத்தால்தான் சிவாஜி மஹாராஜாவும் இவ்வாறு மதிக்கப்பட்டார்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1 அபிமன்யூ வதம் | 6 ஆர்க்காடு முற்றுகை |
| 2 கர்ண வதம் | 7 ஷிக்ஜாதியார் உற்பவம் |
| 3 ராம ராவண யுத்தம் | 8 கல்கத்தா இருட்டுஅறை |
| 4 மாடுபிடிசண்டை | 9 நந்தகுமாரர் சிரச்சேதம் |
| 5 வாலி ஸுக்ரீவ யுத்தம் | 10 சிபாய்கலகம் |

### போதக்குறிப்புகள்

1. முகவுரை.
2. காரணம்.
3. கதை.
4. முடிவுரை அபிப்ராயம் கருத்து முதலியன.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

5. KINGLY DUTIES AND RENUNCIATION.

William felt his temporal affairs and the state and splendour of his rank so great a

temptation that had one day come to the Abbot, and entreated to be allowed to lay them aside, and become a brother of the order. But the abbot had refused to receive his vows. He had told him that he had no right to neglect or forsake the duties of the station, to which God had appointed him ; that it would be a sin to leave the post which had been given him to defend ; and that the way marked out for him to serve God, was by doing justice among his people, and using his power to defend the right. Not till he had done his allotted work, and his son was old enough to take his place as ruler of the Normans, might he cease from his active duties, quit the turmoil of world and seek the repose of the cloister. It was in the hope of peaceful retirement that William had delighted to treasure up the humble garments that he hoped one day to wear in peace and holiness.

### ராஜதர்மமும் துறவும்

லௌகிக விஷயங்களும் அவன் நிலைமைக்குரிய சீரும் சிறப்பும் வில்லியம் (நார்மன் ராஜன்) என்பவனுக்கு ஒரு பெரிய மருட்சியாகத் தோன்ற, அவன் ஒருநாள் தன் புரோஹிதரான மடாதிபதியிடம் வந்து, அவர்கள் ஸங்கத்தின் அங்கத்தினனாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று மிக நயந்து கேட்டுக்கொண்டான். ஆனால் அந்த மடாதிபதி மாத்ரம் அவன் ப்ரதிக்ஞைகளை ஒப்புக்கொள்ளாது மறுத்துவிட்டார். 'கடவுள் உன் நிலைமைக்கு அமைத்திருக்கும் கடமைகளைக்கவனியாது இருப்பதற்காவது முற்றிலும் விட்டுவிடுவதற்காவது உனக்குயாதொருஅதிகாரமும் இல்லை. விடாது காத்து நிலைபெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட உன் நிலையை விட்டுவிடுவது பெரிய பாபமே ஆகும். கடவுளை வழிபடுவதற்கு உனக்கென்று குறிக்கப்பட்டுள்ள வழிகளாவன: ஜனங்களை ந்யாயமாய் நடத்துவதும், தர்மத்தைக் காக்க முயலுதலுமாகிய இவைகளே. உனதென்றுவிடப்பட்ட கடமைகளை ஸரிவரமுடித்து, உனக்குப்பின் உன்பிள்ளைக்கு நார்மன் ஜாதியார் ராஜாவாகத் தகுந்த வயது வருமளவும், உன் ப்ரவ்ருத்தி ரூபமான கடமைகளை விட்டு, உலகக்கவலைகள் நீங்கி மடத்தில் ஏற்படக்கூடிய சாந்தத்தை நீ விரும்பி வந்து விடக்கூடாது.' என்று புத்திமதி கூறினார் அந்த மடாதிபதி. இம்மாதிரி சாந்தமாக ஒதுங்கிப் பரிசுத்தமாகத் தரித்துக்கொள்ளலாம் என்னும் ஆவலால் தூண்டப்பட்டே தனது ஆடம்பரமற்றஉடைகளைச் சேமித்துவைப்பதில் வில்லியம் மிகுந்த மனக்கிளர்ச்சி உடையவனாக விருந்தான்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

**CHILDREN'S PAGES**

TRUE GREATNESS

OR

VASUDEVA SASTRI

**உண்மை உயர்வு**

**அல்லது**

**வாஸுதேவ சாஸ்திரி**

**அத்யாயம்-1**

**பட்டப்பெயரால் தட்டழிந்தது**

*உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்*
*எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த*
*மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்*
*சாந்தனையும் சஞ்சலமே தான்.*

'அடே மொட்டே! ராமஸ்வாமி அய்யர், முத்துஸ்வாமி அய்யர், ஸுப்பையா, வேங்கடேச்வர அய்யர், இவர்கள் எல்லோரும் இன்னும் வந்து சேரவில்லையா! அடே மடப்பயலே! ஏனடா இன்னும் அவர்களைப் போய் அழைத்துவரவில்லை? உன்னைவிட வச்சிர சும்பன் நான் கண்டதே இல்லை! ஓடிப்போய் சீக்கிரம் அவர்களை அழைத்துவாடா, போ!' என்று ஓர் உத்தரவு பிறந்தது. இவர் கூறிய மாதிரியைப் பார்த்தால் அதிகாரதோரணையிலிருந்து அநேகரால் மரியாதைசெய்யப்பட்டவர் என்று தோன்றியது. 'ந–ந–ந–நான், போ–போ–போ–போய், அ, அ, அ, அவர், அவர்–அவர்களை, கூ–கூ–கூப்பிட்டேன். அ, அ, அ, அவர் – – –' 'திக்கிக்காலங்கழி! திக்கி ஒழிந்துபோய்விடு! படவாப் பயலே! ஓடிப்போய் அவர்களை அழைத்துவா, பின்னர் நாள் முழுவதும் திக்கிக்கொண்டு கிடக்கலாம்,' என்று கடுகடுப்பாய் முன்னவர் கூறினர். உடனே மொட்டை என்று அழைக்கப்பட்ட மூத்து என்பவன் திக்கிக்கொண்டே ஓட்டம் பிடித்தான்.

இவ்வாறு உத்தரவு செய்தது மதுரை டிப்டி கலெக்டராயும் அன்றுதான் ஸி ஐ. இ. என்ற பட்டம் பெற்றவராயும் உள்ள திவான் பஹதூர் நாராயண ஐயர் அவர்கள். கொஞ்சநாளைக்கு முன்னர் ஏற்பட்ட பஞ்சத்தில் இவர்செய்த அருமையான உதவிகளுக்காக இவருக்கு இப்பெயர்கள் கொடுக்கப்பட்டன என்று சிலர் கூறியபோதிலும், பொதுவாக ராஜாங்கத்தார் தயவாலே இவருக்கு இப்பதவி கிடைத்தது என்பதே லோகவதந்தியாக விருந்தது. நீங்கள் அவசியம் திவான்



பஹதூர் நாராயண அய்யர் அவர்கள் ஸி. ஐ. இ. யைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேண்டும். (இல்லாவிடில் யாதொரு ப்ராயச்சித்தமும் உங்களுக்கில்லை; அவரைத் தெரியாதென்றால் உங்களையே உங்களுக்குத் தெரியாதென்று கூறவேண்டிவரும்). இவரை மாற்றின காலத்திலாவது அல்லது இவர்க்கு விடுமுறை நாள்கள் கொடுத்த காலத்திலாவது இவர் பெயர் போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் பத்திரிகையில் அச்சிடப்படாமல் போகாது. ஒவ்வொரு வருஷமும் இவர் பெயர் ரெவினியூ பட்டியில் புதிதாகப் பிரசுரம் செய்யப்பட்டு வெளிவரும். இவர் இவரிடம் கொடுக்கப்பட்ட ஜமின்களை வெகு திறமாக நடத்திவந்தார் என்று இளவரசு ஜமீன்களை மேல்பார்வை பார்க்கும் கச்சேரிக்காரர்கள் அநேகம் தரம் தமது நன்றி அறிதலை மிகச் சிறப்பான வந்தனங்கள் மூலமாக வெளியிட்டிருக்கின்றனர். தனக்குத் தெரிந்தவரையில் தன் கீழிருக்கு நாராயண அய்யர் மிகப்புத்திமான் என்று கலக்டராகிய ஆஸ்புட் என்பவர் இவரது ஸமய உசித புத்தியை மிக வியந்து பேசியிருக்கிறார். முன் ஏற்பாட்டின்படி இவர் வைபவங்கள் குறைந்தபக்ஷம்மாதம் ஒருமுறை உள்ளூர் பத்ரிகைகளில் நன்கு வரையப்பட்டு வெளியாகும். அநேகம் தரம் இவர் பட்டண பரிபாலன ஸபை அக்கிராசனாதிபதிப் பதவியை அடைந்திருக்கிறார். இவரது குணாதிசயங்களைப்பற்றி இப்பொழுது இவைபோன்ற இன்னும் பல உள என்று தான் கூறி முடிக்கவேண்டி வருகிறது. இப்படி இருந்தும் ஒன்றுமாத்திரம் கூறாமல் விட்டால் அவருக்கே மனஸ்தாபம் வரலாம். ஆங்கில தேசத்திற்கு முழு ந்யாயம் பிறக்கச் சென்ற ஒரு வழக்கில் இவரது தீர்ப்பைப்பற்றிக் கூறுங்கால் பெரிய கச்சேரி ந்யாயாதிபதிகள் இவர் பெயரை வெகு சிறப்பாகக் கூறியிருக்கின்றனர்; ஆதலால் இவர் பெயர் சீமை அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. முற்கூறியபடி தமது பெயர் மிகச் சிறப்பாக மதிக்கப்பட்டு சீமை சென்றது என்று கேள்விப்பட்டதும் அவ்வாறு செய்யக் கருணை கூர்ந்த ந்யாயாதிபதிகளுக்குத் தமது மனப்பூர்வமான வந்தன வழிபாடுகளை இவர் முறைப்படி நடத்தினர் என்பது எங்கும் ஓர் வதந்தியாகப் பரவியிருந்தது. இவைகள் எல்லாம் உத்தியோக விஷயங்கள், நல்லகாலம் இவைகளைப்பற்றி இனி மேல் கதையில் எடுத்துரைக்க வேண்டி வாராது. உத்யோக ஸம்பந்தமில்லாது இரண்டொரு விஷயங்கள் அவர் கீர்த்திக்குக் காரணமாக விருந்தன. இவைகளை நாம் முக்யமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது இவர் பணக்காரர். இரண்டாவது இவர் பிராஹ்மணர் விஷயத்தில் ஏராளமாகத் தானம் செய்யும் கொடையாளி. பொதுவாகப் பணம் சேர்த்துச் சத்திரம் சாவடிகள்கட்டிவைத்தவர். இவைகளால் இவருக்கு ஒருவிதச் சிறப்பு ஏற்பட்டது. இதுவும் அல்லாமல் பொதுவாக நல்ல எண்ணங்கள் தகுந்த விஷயங்களை நன்கு மதிக்கும் குணம் ஆகிய இவைகள் இவரிடம் குடிகொண்டிருந்தன. ஆதலால் அநேகர் கண்டு வியந்து விரும்பத்தக்க பதவிகள் இவருக்குப் பின்னர் ஸித்திக்க இவைகளே தகுந்த முகாந்திரங்களாயின.

முற்கூறியபடி மொட்டையை இவர் வெளியே அனுப்பிவிட்டு, வீட்டுள்ளே புகுந்தார். அங்கு வாஸுதேவசாஸ்திரி வழக்கப்படி மிகுந்த ஆடம்பரமாகவும் கம்பீரமாகவும் வீட்டு தெய்வபூஜை செய்துகொண்டிருந்தார். இதைக் கண்டதும் 'வாஸு! உன் கடையைக் கட்டு, சீக்கிரம்! சீக்கிரம்!! ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். என்றைக்கும் போலவா இன்றைக்கும், நடத்து, சீக்கிரம் முடி, எங்கே பார்ப்போம், துறையில் நடத்து' என்று அவஸரப்படுத்தினார். என்ன இவ்வளவு அவஸரம்? இன்றைக்கு என்ன விசேஷம்? ஸ்வாமிகளைக்கூட அவஸரமாக ஒதுக்கும்படியான அவஸரம் என்ன வந்து விட்டது? வேறொன்றுமில்லை, அன்று தமக்கு வந்த மூன்றெழுத்துப் பட்டப்பெயர் விஷயமாக நாராயண அய்யர் தமது தோழர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். அன்று கல்யாணம் பட்டபாடுபட்டது. விசித்திர உணவுகள், பாட்டுகள் இன்னும் மற்றைய வைபவங்களுக்கும் குறைவே இல்லை. யஜமானர் இந்தப் பெரிய விஷயத்தால், ஏற்பட்ட ஸந்தோஷக்கடலில் கால் தலை தெரியாது மூழ்கி இருந்தார். தமக்கு இப்பதவி கிடைப்பதற்குக் காரணமாக விருந்த விஷயங்களைப்பற்றி வெகு உத்ஸாஹத்தோடு தமது தோழர்களிடம் வார்த்தையாடினார். தனது கீர்த்தியும் திறமும் மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்களுக்கு எட்டி அவர் எண்ணத்தைக் கவர்ந்து, ஆவலுடன் தன்னை அவர் அழைத்தது, மதிப்பாயும், அன்பாயும் அவர் தம்முடன் ஸம்பாஷித்தது, ஸாமர்த்தியமாய்த் தாம் நடந்துகொண்டது, தமது குண விசேஷத்தில் அவர் ஈடுபட்டவிதம், தமது புத்திநுட்பம், வாக்சாதுர்யம், ராஜ்யதந்திரம், ஆகிய இவைபோன்ற அறிய விஷயங்களைப்பற்றி ஓயாது நாராயண அய்யர் அவர்கள் உபந்யஸித்தார். மிகச்சிறந்தவர் என்று மதிக்கப்படுபவருள் தாம் ஒருவர் என்றே அவர் எண்ணியிருந்தார், அவர் தோழர்களும் இதற்கு இசையப் பல்லவி பாடினர்.

திவான் பஹதூர் ஸி. ஐ. இ. என்ற பதவியைவிட்டு அணுவேனும் குறைவாகத் தம்மை மதிக்க அவருக்கு மனம் வரவில்லை. ஸ்நாநம் செய்யப் போனவிடத்துத் தாம் ஸி. ஐ. இ. என்று பாவித்து மகிழ்ந்தார். உண்ணும் பொழுதும் ஸி. ஐ. இ. தான். இடைவிடாது எப்பொழுதும் அவர் ஸி. ஐ. இ. ஆகாரமாகவே யிருந்தார். ஸ்வதேச டிப்டிகலெக்டருள் எவனுக்கும் இவ்வழிகிய விருதி பொருத்தப்படவில்லை. வெகுவாகக் கூறப்பட்டுள்ள பிரணவத்துள் அடங்கியிருக்கும் மூன்றெழுத்தைவிட இம் மூன்றும் மிகச் சிறந்ததாக அவருக்குப்பட்டது. இதுவும் அல்லாமல் கவர்னர் நேரிட இவரை அழைத்தாரே! —இத்தகைய சிறப்பை யாரால் அமைதியாய் வஹிக்க முடியும்!

விஷயங்கள் இவ்வாறு நடந்தேறிய போதிலும் வீட்டில் ஒரு ஆளுக்குமாத்திரம் அன்று ஏற்பட்ட கோலாஹலங்கள்பிடிக்கவில்லைபோலக் காணப்பட்டது. அத்யாச்சர்யம்! அந்த ஆள் நாராயண அய்யர் ஸம்ஸாரமாக ஏற்பட்டாள். அவள் முகத்தில் காணப்பட்ட வெறுப்பைக் கண்ணுற்றார் திவான் பஹதூர். அவள் தம்மைக்கண்டு மெச்சிக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டார். முயற்சிகள் வீணாயின. தமக்கு வந்திருக்கும் சீர் சிறப்பு முதலியவைகளை அவளோடும் சேர்ந்து பகிர்ந்து அனுபவிக்க அவர் தயாராயிருப்பதாக அநேகக் குறிகளாலும் வெளியிட்டார். இரவில் படுக்கைஅறையில் அவளைத் திவான் பஹதூர் ஸீதாலக்ஷ்மீ அம்மாள் ஸி. ஐ. இ. என்றும் அழைத்துப்பார்த்தார். என்ன செய்தென்ன! "தூக்கம் வருகிறது படுத்துக்கொள்வோம்' என்று மறுமொழி பிறந்ததே ஒழிய வேறு ஒருவித ஸந்தோஷக்குறியும் அவளிடம் காணப்படவில்லை. பார்த்தார் நாராயண அய்யர்! என்ன செய்வார் பாபம்! மிகவும் நொந்துகொண்டார். மனதை ஒருவாறு ஸரிப்படுத்திக்கொண்டு, "ஹூம்! எழுதப்படிக்கத் தெரியாத முழு மூடங்களான பெண்களைக்கட்டி அழுவதன் பயன் இதுதான்! என்ன அநியாயம்! எனக்குத் திவான் பஹதூர் ஸி. ஐ. இ. என்ற இரண்டு அரிய பட்டங்கள் கிடைத்திருக்கின்றன! ஏ மூடமே! இவைகளின் சிறப்பு உனக்கு விளங்கவே இல்லைபோலும். ஸரிதான், 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாஸனை' வேறு எந்த டிப்டி கலெக்டர் பயலுக்குஇம்மாதிரி பட்டப்பெயர்கள் கிடைத்திருக்கிறது சொல்லேன் பார்ப்போம்? டிப்டி கலெக்டர்களுள் மருந்துக்கு ஒரு திவான் பஹதூர்கூடக் கிடையாது. மேலும் யாருக்குக் கவர்னரோடு நேரிடப் பேசும் பாக்கியம் கிடைத்தது. மூடமே! உனக்குப் படிப்பும் இல்லை. புத்தியும் இல்லை. உன்னுடன் இவை இடித்து இடித்துக் கூறுவதால் என்ன உபயோகம். மூடப் பெண்சாதிகளைக் கட்டிக்கொண்டவர் கதி இதுவே. நமது பெண்களை நாம் படிப்பிக்கவேண்டும். தாமதிக்கலாகாது!" என்று மிகுந்த படபடப்புடன்பிரஸங்கித்தார். 'இன்றிரவே அவசியம் செய்துவிடவேண்டும்!" என்று கூறினாள் ஸீதை. இவ்வாறு நிஸ்ஸாரமான அற்பவிஷயங்களை எண்ணி எண்ணிப் புண்ணுவதே படிப்பானால், கடவுள் கருணையால் எங்களுக்கு அது வாராமல்தடைபட்டு நிற்கட்டும். ஆ தெய்வமே! என்ன வீண்கர்வம்! என்ன ஆத்மஸ்துதி! அற்ப விஷயங்கள், வெறும் பட்டம் இவைகளைக்கண்டு என்ன ஆனந்தப்பெருக்கு! .ஐ. இஸி. யாம்; இம்மூன்றெழுத்தில் என்னரஸம் நாதா! நாம் கா, கீ, கூ என்று பட்டம் வைத்துக்கொண்டு அதை எண்ணி எண்ணி மகிழ்ந்து பித்தராகலாமே! இம்மாதிரியான அற்பவிளையாட்டு அற்ப ஸந்தோஷம் இவைகளுக்காகவா மனித ஜன்மம் வந்தது; இல்லவே இல்லை! இன்று தேன் குடித்த நரிபோலத் திருதிரு என்று அலைவோமாகில் நாளை அனாதைச்சிசுபோலப் பரிதவிக்கவேண்டியதுதான். இதுதானா வாழ்க்கையின் முடிவு? என்று தீட்டினாள் ஸீதாலக்ஷ்மி.

'எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியுமே! அந்தப் பாபி வாஸு அன்றோ உன்னை இவ்வாறு கெடுத்துவிட்டான். சாஸ்திரியாம் அவன்! துஷ்டப்பயல்! அவன்தான் உன்னைப் பைத்யமாக்கிவிட்டான். வரட்டும் நாளைக்கு அவன் இங்கே! அவன் மண்டையை உடைத்து மாவிளக்கு இடுகிறேன். எக்கேடேன் கெட்டு ஒழிந்து போ! சனியனே!; என்று மிகுந்த கோபத்துடன் அவளை உதறி எறிந்துவிட்டு வெளியே புறப்பட்டார். ஸீதாலக்ஷ்மி அவரைப் பின் தொடர்ந்தாள்; அவர் கையைப் பிடித்துத் தடுத்தாள்; காலில் விழுந்தாள்; கண்ணீர் ததும்ப, 'நாதா! நான் கொஞ்ச அவஸரப்பட்டுவிட்டேன். மன்னிக்கவேண்டும். 'சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே.' உம்மேல் குவிந்து கிடக்கும் சிறப்புகள் எல்லாம் எனக்குத் தெரியாமல் இல்லை. அவைகள் என்னைச் சேர்ந்தவைகள் அல்லவா? ஆராயுங்கள் அவைகள் என்னதே ஒழியத் தங்களதல்ல. உங்களுக்கு எவ்வளவோ வேலைகள் உண்டு. இவைகளைப்பற்றி நினைக்கக்கூட காலமிராது. கணவன்சிறப்பைவிட மிகச் சிறந்தது மனைவிக்கு வேறுஎன்ன இருக்கிறது. 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே.' அவனே மனைவியின் ஆனந்தம், செல்வம் இன்னும் மற்ற சிறந்த வஸ்துக்களும். நாதா என்னிடம் உங்களுக்குக் கோபமே வாராதே. என்மேல் உமக்கு உள்ள காதலுக்குக் கங்கு கரையில்லையே. இம்மாதிரியான காதல் இருக்க என்னைவிட்டுப் பிரிய——' என்று பலவாறாகக் கெஞ்சிக் கேட்டாள். பெண்களுக்கே சிறப்பாய் அமைந்துள்ள சொன்னயம் வாய்ந்த அவள் வாக்சத்தியைத் திவான் பஹதூர் ஸி.ஐ.இ. என்று இரண்டு பட்டப்பெயரையும் பெற்ற மஹானுபாவனாலும் தடுக்க முடியவில்லை. பின்னர் அன்பார்ந்த மொழிகள், வெற்றிலைபோடல் சந்தனக்காப்பு முதலியவைகளால் அன்றிரவு வெகு ஸுகமாகக் கழிந்தது.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

*எப்பணியா லின்புறுவர் காதலராக் காதலரை*
*யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப*
*மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே*
*கனங்குழையார் தங்கள் கடன்.*

—பெருந்தேவனார் பாரதம்.

தமது கணவரது ஸுகதுக்கங்களை எண்ணாது தமது ஸுகங்கள் ஒன்றையே நாடுதல் நாயகத்ரோஹம். காலை முதல் மாலைவரை உழைத்து கொண்டுவந்து கொடுக்கும் பொருளைத் தனது பெரியோரோடு உண்டு களிக்காது தனக்கு முதல் பின் எல்லார்க்கும் என்று எண்ணுதல் தன்னயம்மாத்ரமன்று; செய்த நன்றியை மறத்தலாகும். வந்த கணவனை எதிர்கொள்ளாது அவனிடம் அன்போடுபேசாது நெருப்புப்போல்எறித்துக்கொண்டு இருப்பவள் அவனது உயிரைக்கவரவரும் யமன். காலையில் அவன் வேலைகளைப் பார்க்கவிடாது தனது காரியங்களையே பார்த்திருப்பவள், அவனது ஸுகத்தைக் கெடுக்க வரும் நோயாகிறாள். சமைத்தவற்றைக் கணவனுக்குக் கொடுக்காமல் வாழ்பவள், வீட்டிலேயே வசிக்கும் பேய். இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தாலும் கணவன் உயிருக்கு ஹானி என்பது நிஸ்சயம். மூன்றும் கலந்தால் சொல்ல வேண்டியதில்லை. இதையே நாலடியாரில்,

*எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை*
*அட்டில் புகாதாள் அரும்பிணி;—அட்டதனை*
*உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்*
*கொண்டானைக் கொல்லும் படை.*

என்று சொல்லப்படுகிறது. இத்தகைய மனைவிகளை உலகில் அநேகம் வீடுகளில் காணாமலிருப்பது அஸாத்யம்.

அவ்வாறு இல்லாமல் தமது கணவர்க்கு வேண்டியது வேண்டியவாறு செய்தல்; அவர்க்கு மனத்தில் ஸந்தோஷம் உதிக்குமாறு நடத்தல்; அவர்க்கு எது வேண்டுமோ, அவற்றைக் கேட்பதற்குமுன் அறிந்து செய்தல்; அவர் காலால் இட்ட வேலையைத் தலையாலே செய்து தாம் உழைத்தல்; அவன் மனது கோணாது, இரண்டு கண்களும் ஒரே பொருளை நாடுதல்போல் தன் கணவன் மனத்திற்கு ஹிதமானதைத் தனக்கும் ஹிதமாக ஒப்பி நடந்து அவன் அன்பை ஸம்பாதித்தல், ஸம்பாதித்தபின் அது நீங்காது இருக்கும்படி நடந்துகொள்ளுதல், இவ்வகையாக அன்பின் கிளர்ச்சியால் இருவரும் மகிழ்ந்து வாழல், வாழ்ந்து பேரின்ப வீட்டில் வழிகாட்டிக் கொள்வதாகிய குணங்கள் நற்குலத்தில் பிறந்து, நல்லொழுக்கத்தில் பழகி, நல்ல சேர்க்கை இருப்பவர்க்கும் கிடைத்தலரிது.

இத்தகைய குணங்களெல்லாம் அமைந்து, தன்னுடல், உயிர் ஆவியாவும் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணஞ் செய்த ஸ்ரீருக்மணிப் பிராட்டியாரின் வைபவம் இங்கு கூறப்படும் :—

### க—தூதுவிடுத்த காதை

*உருப்பிணி நங்கையை தேரேற்றிக்கொண்டு*
*விருப்புற்றங்கேக விரைந் தெதிர்வந்து*
*செருக்குற்றான் வீரஞ்சிதைய தலையைச்*
*சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற*
*தேவகி சிங்கத்தைப் பாடிப்பற.*

—பெரியாழ்வார் திருமொழி

விதர்ப்பநாட்டிற்கரசன்; அவன் பெருமன்னன்: அவன் பெயர் பீஷ்மகன். அவனுக்கு ஐந்து ஆண்மக்களும் ஓர் பெண்மகவும் உண்டு. மூத்த குமாரன் பெயர் ருக்மன். மற்ற ஆண்மக்கள் பெயர்—ருக்மார்த்தன், ருக்மவாஹு, ருக்மிகேசன், ருக்மமாலி. இவர்கள் தங்கையின் பெயர் ருக்மணி. இவள் அழகிற் சிறந்தது போல் குணத்திலும் உயர்ந்தவள். சிறுவயது முதல் வடமதுரையில் வாழும் ஸ்ரீமுகுந்தனுடைய குணம், அழகு, வீரம், சமத்காரம் முதலியவைகளைக் கேட்டு அவன்பால் மனம் பதிந்தது. வருவார்கள் பரந்தாமனது புகழைப் பாடக்கேட்டுக்கேட்டு அவள் மனம் முகுந்தன் மேல் திடமாக ஆசைகொள்ளச் செய்தது. அவ்வாஸுதேவனே தனக்கு உவந்த தலைவன் என்றும் நிச்சயித்தாள். கண்ணனும் ருக்மணியின் புத்தி, ஸாமுத்ரிகா லக்ஷணம், பெருந்தன்மை, அழகு, நாகரிகம், நடத்தை முதலியவைகளைக் கேட்டு, அவள்தான் தனக்கு உவந்த பத்னியென்று தீர்மானித்து, அவளை மணக்க மனோதிட மடைந்தார்.

இது நிற்க, தன்னுடன் பிறந்தாளின் உள்ளக் கருத்தைத் தெரியாது, நற்குணங்களைக் கெடுக்க வரும்

கீழ்மை ஸ்வபாவம்போல ருக்மி நடக்கலானான். கண்ணனிடம் பகைகொண்டவனாகையால், அவளை ஸ்ரீ பரந்தாமனுக்களிக்க வேண்டுமென்று சொல்லிய அன்பரது மொழிகளைத் தடுத்துச் சேதி நாட்டரசனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்தான். இதைக் கேள்வியுற்ற வைதர்பி * மிகவும் துக்காக்ராந்தையாகி வேகமாக ஒருவரு மறியாத வண்ணம் பரந்தாமனிடம் நம்பிக்கையுள்ள ப்ராஹ்மணனொருவனைத் தூதாக அனுப்பினாள். த்வாரகையை அடைந்து, ஐயனது அரண்மனையுள் புகுந்து பரம புருஷன் ஓர் பொன்னாஸநத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டான். ப்ராஹ்மணன் உள்சென்றதும் தனது பீடத்தைவிட்டிறங்கி ப்ராஹ்மண்ணிய தேவனாகிய வாஸுதேவன் வந்தவற்கு ஆஸநம் அளித்துத் தேவர்கள் பூஜை செய்வதுபோல் அவரை பூஜித்தார். அவர்க்கு உண்டி முதலிய யாவும் கொடுத்து விடாய் ஆற்றினார். பின் பக்தரக்ஷகராகியபரமன் அவரைமிகு வணக்கமாக கீழ்வருமாறு கேட்டார் ‘ப்ராஹ்மணர் தலைவா! தமது பூஜை தவம் முதலிய யாவும் இடையூறு இல்லாமல் நடக்கின்றனவா? தாங்கள் எப்பொழுதும் ஸௌக்கியமா? தனது தர்மத்தை நடத்திக்கொண்டு ப்ராஹ்மணன்எவனும் அமைதியோடுஇருக்கவேண்டும். தனது தர்மத்தை நடத்திய ஸந்தோஷமே எல்லாவற்றையும் கொடுக்கும். அடங்காத அமைதியுடையவன் பொருள் அனைத்தும் பெற்றாலும் ஸுகமடையான். அமைதியுடையவன், எளியவனானாலும், தனது சிறு குடிசையுள் ஸுகமாக வாழ்வான். ஹே விப்ரா! அகந்தை அடக்கி, மமதை யொழிந்து, காருண்ய மூர்த்திகளாய்த் தம்மைத்தாமறிந்து, தர்மத்தை நடத்துகின்ற விப்ரர் அனைவர்க்கும் நமஸ்காரம். உமது க்ஷேமம் நன்றே அல்லவா? ப்ராஹ்மணா! எந்த அரசன் தனது குடிகளின் ஸுகத்தை நாடி ஸுகத்தைச் செய்கிறானோஅவன்தான் எனது நண்பன். ரஹஸ்யம் ஒன்றும் இல்லாவிட்டால் தாங்களுக்கு நான் என்ன செய்யக்கூடும், சொல்லும். எதற்காக, எவ்விடத்திருந்து தாங்கள் கடலைத் தாண்டி இங்கு வந்தீர்கள்.’

இவ்வாறு மாந்தரைக்காக்க மானிடவுருவங் கொண்டு வந்த பரமேஷ்டி வினவியதற்கு ப்ராஹ்மணன் தான் வந்ததின் விவரமனைத்தும் விரிவாகக் கூறினார்.

பின் அவர் கண்ணன் இடம் ஒரு கடிதம் கொடுத்தார். அதில் ருக்மணி எழுதிய விவரம்:

“ஹே அச்யுதா! ஜகந்மோஹநா! தமது குணாதிஸயங்கள் என் காதுள் புகுந்து என் உடம்பிலிருந்த வ்யாதி அனைத்தையும் போக்கிற்று. பார்வையில் உருவம் பிண்டமாக ப்ரதிபலிக்கும் உனது பேரழகைக் கேட்டு, என் மனம் கூச்சங்கடந்து உன்பால் ஆசை கொண்டது. ஹே முகுந்தா! நரச்ரேஷ்டா! வம்சபரம்பரை, நற்குலம், நன்னடக்கை, அழகு, அமைதி, கல்வி, இளம் வயது, செல்வம், நாடு, வீரம் இவை அனைத்திலும் உனக்கிணையின்றி வாழும் உம்மிடம், புத்தி விசாலித்து நாகரிகத்திற் சிறந்த பெண் எவள்தான் ஆசை கொள்ளாள்? என் மனத்தை உனக்கே அர்ப்பணம்செய்தேன். உன்னையே கணவனாக வரித்தேன். இங்கு வந்தென்னை ஒப்பிக்கொள்ளும். செந்தாமரைக்கண்ணா! சிம்ஹத்திற்கு உவந்த உணவை ஒருநாய் தீண்டப் பார்த்தலழகோ? வீரச்ரேஷ்டராகிய உமக்கே உரிய என்னைச் சேதிநாட்டரசன் கவரவும் நீர் பார்த்திருப்பீரா? நான் என்றும் பரம புருஷனாகிய தெய்விகப் பொருளைத் தடாகங்கட்டியும், அக்நிஹோத்ரம்செய்வித்தும், வேறு யாகங்களைமுடிப்பித்தும், வ்ரதங்களைச்செய்தும், தேவர்களை பூஜித்தும், ப்ராஹ்மணர்களையும் பெரியோர்களையும் வந்தனை வழிபாடு செய்தும், இவற்றின் மூலமாக வழிபட்டிருந்தால், கண்ணன், என் இருகண் போன்றவர் இங்கு வந்து, தானே என்னை மணக்கட்டும். தாமகோஷன் மகனாவது வேறு யாராவது என்னை அடையா திருக்கும்படிக் காக்கட்டும். தனக்குவமை யில்லாத தனியாகிய பொருளே! நாளைதான் என் மணநாள். யாவருமறியாது விதர்ப்பம் புகுந்து சேதியரசனுடையசேனையையும்மகதநாட்டரசன்துபரிவாரங்களையும் வேரறுத்து வீழ்த்தி உனது வீரத்தைக் கன்யசுல்கமாகத் தந்து என்னை ராக்ஷஸ வழியில் மணந்துகொள்ளும். ஆனால் தாங்கள் ‘நீ அந்தப்புரத்திலிருக்க நான் எவ்விதம் வந்து உன் உறவினரைக் கொல்லாது உன்னை மணப்பது’ என்பீராகில் நான் வழிசொல்லுகிறேன் கேளும். கல்யாண நாளுக்கு முன்னாள் ஒரு பெரும் பவனிவரும். அதில் கல்யாணப்பெண் தேவியின்கோயில் போவது வழக்கம். இதுதான். இனி உமது பாதாரவிந்தங்களின் தூளியை அநுதினமும் தமது ஞானங்கிளம்ப உமைத்தலைவன் முதல் யாவரும் துதிக்கு நிலைமையிலிருக்கும் தாங்கள் என்னிடம் அருள் புரியாவிட்டால், காயசோஷணஞ் செய்து, அநேக ஜன்மங்கள் கடந்தேனும் அடைவேன்.”

* வைதர்பி = விதர்ப்பநாட்டரசன் மகள், ருக்மணி.



# விசேஷ வர்த்தமானங்கள்
## INTERESTING NEWS

“விவேக போதினி”:—இம்மாதத்தியசஞ்சிகைக்கு அனுபந்தமாக நமது சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினியின் உருவப்படங்கள், அனுபந்தமாக அச்சிட்டு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* *
*

**மதுரைச் செந்தமிழ்ச்சங்கத்திற்கோர் நன்கொடை.**—ஆனரபில் மிஸ்டர் எஸ். ஆர். எம். ராமசாமி சேட்டியார் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்திற்கு 1000-ரூ நன்கொடையாக வளித்து, மாதந்தோறும் 50 ரூபாயளிப்பதாக வாக்களித்திருக்கின்றார்காம். கல்வியபிவிர்த்தியின் பொருட்டுதவுவது எவ்வாற்றானும் சிறந்த கொடையாகும்.

* *
*

**மகமதிய மதத்தினர்.**—உலகத்திலுள்ள மகமதிய மதத்தினரின் தொகை 222,966,170. இவர்களில் கிறிஸ்தவர் ஆளுகைக்குட்பட்டவர்கள் 161,070,870. கிறிஸ்தவரும் மகமதியருமல்லாத புறமதத்தினருக் குட்பட்டோர் 23,976,500. மகமதிய ஆளுகைக் குட்பட்டோர் 22,400,000. துருக்கிக் குட்பட்டோர் 15,528,800.

* *
*

**படிப்புக்காக 1909-10-ம் வருஷத்தில் இந்திய கவர்ன்மெண்டார் செலவழித்தது:**— சென்னை, ரூபாய் 37,90,000; பம்பாய் ரூ. 43,53,000; வங்காளம் ரூ. 55,69,000; ஐக்கிய மாகாணங்கள் ரூ. 28,59,000; பஞ்சாப் ரூ. 22,61,000; கீழ்வங்காளம் ரூ. 23,38,000; பர்மா ரூ. 19,00,000; மத்திய மாகாணங்கள் ரூ 16,55,000; **அதே வருஷத்தில் போலிஸுக்காக செலவழித்தது:**— சென்னை ரூபாய் 74,13,000; பம்பாய் ரூ. 93,10,000; வங்காளம் ரூ. 81,68,000; ஐக்கிய மாகாணங்கள் ரூ. 102,13,000; பஞ்சாப் ரூ. 53,51,000; கீழ்வங்காளம் ரூ. 50,82,000; பர்மா . 117,84,000; மத்திய மாகாணங்கள் ரூ. 31,05,000. அதாவது மொத்தம் வருஷம் ஒன்றுக்கு $\frac{1}{2}$ கோடிரூபாய் போலிஸுக்காகச் செலவாகிறது. படிப்புக்காகச் செலவாவது $2\frac{1}{2}$ கோடி மாத்திரந்தான்.

**10-ரூபாய் தங்க நாணயம்.**—சக்ரவர்த்தியாகிய ஜார்ஜ் அவர்கள் இந்தியாவிற்கு வருவதற்கறி குறியாகப் 10-ரூபாய் தங்கநாணயம் வெளியிடப்படுமென்று தெரியவருகிறது.

* *
*

**சிவாஜியின் சமாதி.**—சிவாஜி மகாராஜாவின் சமாதியைப் பண்டைக்காலத்து ஞாபகச் சின்னங்களுள் ஒன்றாகக்கருத வேண்டுமென்று பம்பாய்க் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கின்றார்கள்.

* *
*

**ஆஸ்டிரேலியா தேசத்தின் ஜனத்தொகை.**—ஆஸ்டிரேலியா தேசமுழுமையும் எடுத்த குடிகணக்கின் தொகை 4,449,495 பேராம். இக்குடிக்கணக்கானது பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. புதுதெந் வேல்ஸில் 1648,212; விக்டோரியாவில் 1,315000; குவின்ஸ்லாண்டில் 603,908; தென் ஆஸ்டிரேலியாவில் 411161; மேற்கு ஆஸ்டிரேலியாவில் 280416 டாஸ்மானியா 190,898.

* *
*

**ரயில்வே வருமானம்.**—ஸ்டேட் அன்ட் காரண்டீட் ரயில்வேயிற்கு 1911ஆு ஏப்ரல்மீ முதல் தேதியிலிருந்து ஜூன் மாதம் 10 உவரைக்கும் வந்திருக்கும் லாபம் 53,61,434 ரூபாயாம்.

* *
*

**சக்கரவர்த்தியின் குடும்பச் செலவு.**—காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் குடும்பச் செலவிற்காக வருஷமொன்றுக்கு 9828,500 ரூபாய் பார்லிமெண்டார் கொடுத்து வந்தார்கள். இப்போது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கு 95,10,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இதில் 10,50, 090 ரூபாய் ஜார்ஜ் சக்கரவர்த்தி யவர்களின் தாயாராகிய அலெக்ஸாண்டிராவுக்குக் கொடுத்துவிட வேண்டுமாம்.

* *
*

**தொண்டைமண்டலம் வேளாள அபிவிர்த்தி சங்கம்:**—இச் சங்கத்தின் ஐந்தாவது வருட கான்பரன்ஸ் திருநேல்வேலி ஹிந்து காலேஜில் சென்ற

மே மாதம் 6,7,8-ந்தேதிகளில் நடைபெற்றது. இதற்கு அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த வடபாதி மங்கலம் மிஸ்டர் சோமசுந்தர முதலியார் சில அசந்தர்ப்பத்தால் வரக்கூடாமலிருந்ததனால் சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, டி. வி. கோபாலசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டனர். இக்கான்பரன்சிற்கு 600-டெலிகேட்டுகள் சென்றிருந்தார்கள். முதல் நாள் சபாநாயகர் ஒருமணி நேரம் நீண்ட பிரசங்கஞ் செய்தனர். இரண்டாம் நாள் மூன்றுநாள்களில், வருடமுற்றிலும் தொடர்ந்து வேலை செய்யவேண்டுமென்றும், தாலுக்கா டிஸ்டிரிக்டுகள் தோறும்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும், கல்வி சீர்திருத்தம் ஐக்கிய முதலியவற்றைப்பற்றி முயற்சி செய்யவேண்டு மென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அடுத்த வருடம் இந்தக் கான்பரன்ஸ் **கோயம்புத்தூரில்** நடைபெறும்.

* *
*

**இந்தியாவில் பிளேக்:**--இந்தியாவில் முதல் முதல் பிளேக் 1896-ஸு ஆரம்பிக்கப்பட்டது. அந்த வருஷம் முதல் 1910-ஸு வரையில் இந்தியா முழுமையும் பிளேக்கினால் மாண்டவர்களின் தொகை 68,60,211 இதன்விபரம் பின்வருமாறு:—

1896-ஸு 2,219-பேர், 1897-ஸு 55,324-பேர், 1898-ஸு 116285-பேர், 1899-ஸு 139009-பேர், 1900-ஸு 92807-பேர், 1901-ஸு 282027-பேர், 1902-ஸு 576365-பேர், 1903-ஸு 883076-பேர், 1904-ஸு 1,143,993-பேர், 1905-ஸு 1,068,140-பேர், 1906-ஸு 356,721-பேர், 1907-ஸு 1,315,892-பேர், 1908-ஸு 156480-பேர், 1909-ஸு 174874-பேர், 1910-ஸு 495999-பேர், ஆக 15 வருஷத்தில் மாண்டவர்களின் தொகை 68,60,211.

* *
*

**பம்பாய் கல்விக்காகச் சாங்ஷன் செய்யப்பட்டது:**—இந்தியா கவர்ன்மெண்டார் பம்பாய் ராஜதானியின் கல்வி விர்த்திக்காக 11,02,000 ரூபாய் ஸ்பெஷலாக சாங்ஷன் செய்திருக்கின்றனர்.

* *
*

**பால்ய விதவைகள்:**—கல்கத்தாவில் ஏற்பட்டிருக்கும் "பால்ய விவாக நிவர்த்தி" சங்கத்தாரால் எடுக்கப்பட்டிருக்கும் கணக்கின்படி இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் தொகையை அடியிற் குறிப்பிட்டிருக்கிறது:—

| | |
|---|---|
| ஒரு வயதுக் குழந்தைகள் | 859 |
| 2-வயது முதல் 3-வயது வரையில் | 1,886 |
| 3-வயது முதல் 4-வயது வரையில் | 3,732 |
| 4-வயது முதல் 5-வயது வரையில் | 8,180 |
| 5-வயது முதல் 10-வயது வரையில் | 78 407 |
| 10-வயது முதல் 15-வயது வரையில் | 2,27,367 |

ஆக மொத்தம் ஒருவயதுமுதல் பதினைந்து வயதுவரையிலுள்ள விதவைக் குழந்தைகளின்தொகை 3,20,431.

* *
*

**வர்த்தமான பத்திரிகைகள்:**—ஜப்பான் ராஜ்யத்தில் ஐரோப்பிய தேசத்து நாகரீகம் பரவியது முதல் அவர்கள் அனேகம் வர்த்தமானப் பத்திரிகைகளைப் பிரகடனம் செய்கிறார்கள். பத்திரிகைகளின் சங்கியை பிரதிவருஷமும் அதிகரிக்கின்றன. 1852-ம் வருஷத்தில் முதல் பத்திரிகை பிரகடனமாயிற்று. அதுமுதல் இதுவரையில் 4,000 வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. ஜப்பான் தேசத்தார்கள் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதில் விசேஷமான ப்ரீதியைக் காட்டுகிறார்கள். டோக்கியோ நகரில் மட்டும் 12-பேபர்கள் வெளியாகின்றன. இவைகளில் பிரக்யாதி பெற்ற "டிலீஸ் கிம்போ" என்னும் பத்திரிகைக்கு நான்கு லக்ஷம் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டில் பத்திரிகாபிமானமோ மிகக் குறைவுதான்.

* *
*

**லண்டனிலிருந்து இந்தியாவிற்கு இருப்புப் பாதை:**—இப்போது லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வர ஒரு இருப்புப்பாதை போட உத்தேசமாயிருக்கிறதாம். இது காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கவிலிருந்து ஆரம்பித்துப் பலூசிஸ்தானத்திலுள்ள துஸ்கிப்பட்டணத்தில்வந்து முடிவுபெறுமாம்; அங்கிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்படுமாம். இவ்விருப்புப்பாதையில் ஏறிவருபவர் 8½-நாளில் லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வரலாமாம். மொத்தத்தில் பிரதி மனிதருக்கும் பிரயாணச் செலவு 40 பவுனாகுமாம்.


# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்


25 SEP 1911 MADRAS.

தொகுதி IV } விரோதிகிருதுஸு ஆடிமீ : 1911-ஸு ஆகஸ்டுமீ { பகுதி 2

## துக்கமும் ஸுகமும் ஆனந்தமும்

## PAIN, PLEASURE & HAPPINESS

உலகில் மாறிமாறி வரும் ஸுகதுக்கங்களைக்கண்டு மனங்கலையாது உண்டாகும் சாந்தத்திற்கே ஆனந்தம் என்று பெயர்.

ஒரு மஹான் இந்த விஷயத்தைச் 'சிற்றின்பம் மனதைச் சலிக்கும்படி செய்துவிட்டு மாறிவிடும், பேரின்பமோ மாறாததாயும் விஷயங்களுக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது. முன்னது மித்யாரூபம்; பின்னது ஸத்யமானது. முன்னது அக்ஞானத்தால் விளைவது; பின்னது ஞானத்தின் முடிவு. முன்னது மமகாரத்தால் (எனது என்ற உணர்ச்சியால்) உண்டாகி விருத்தியடைவது. பின்னதோ ஸர்வபூத தயாரூபம், அகங்காரத்தைச் சுட்டறுத்தலால் விருத்தியடைவது. முன்னது வெளி வஸ்துக்களிலிருந்து உண்டாகி அவைகளால் மாறுதல் அடையக்கூடியது. பின்னது தேஹம் உட்பட்ட வெளிவஸ்துக்களுக்கு அப்பாற்பட்டது. இவைகளோடு ஸம்பந்தம் உடையதும் அல்ல' என்று விமர்சிக்கிறார். ஆதலால் முற்கூறியபடி இருக்கும் ஸுகதுக்க ரஹஸ்யத்தை நன்கு உணர்ந்து, பகவத் ஆராதனை செய்து, இடைவிடாது மனனம் செய்து பழகிவருதல்தான் இந்த ஆனந்தம் வந்து குடிகொள்ளத் தகுந்தவழி.

இந்த ஆனந்தம் குடிகொண்டிருக்கும்மஹான்களுக்கு உள்ளே அமைதியிருப்பதோடுகூட தம்மை அறியாது தம்மைஅணுகுவோர் மனதை நல்வழித் திருப்பும் சக்தியும் ஏற்படும். இந்தக் காரியம் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்படுவதல்ல. அவர் மனோநிலை அவ்வாறு செய்து வைக்கிறது. இவ்வாறு மாற்றும் சக்தி தமக்கு உண்டு என்ற ப்ரக்ஞை அவர்களுக்கு வரவேண்டியதுதான்; இந்த நிலை மாறிவிட சக்தியும் போய்விடும். பின்னர் அவர்கள் அஜாக்ரதையாக இந்த அகங்காரத்தை வளரவிட்டால், வீண் பாசாங்குக்காரர்களாகி லோகாபவாதத்திற்கு ஆளாவதும் அல்லாமல், அவரை அணுகுவோர் மனத்தைக் கெடுக்கும் சக்தியையும் அடைவார்கள். ஆகவே நாம் மனதை அமைதியாக்க முயலவேண்டுமே ஒழிய அதனால் வரும் பதருக்கு ஸமமாகவிருக்கும் பரோபகாரத்தைச் சற்றேனும் முன்னர் சிந்திக்கவே கூடாது. பரோபகாரம் ஏற்படுவதைக் கண்டு கர்விக்காது அப்பொழுதும் மனங்கலையாது ஆனந்தமாக இருக்கவேண்டும்.

இப்பொழுது கூறப்பட்ட மனதின் வலிமையைக் கொண்டு, பெரியோர் ஸுகம் துக்கம் என்ற பதங்களுக்கு வேறுவிதப் பொருளும் கொள்வர். கம் என்ற பதத்திற்கு ஆகாயம் என்று பொருள், அதாவது அணுகுபவர்மேல் தாக்கக்கூடிய ஒருவித சக்தி என்பதாகும். ஆகவே அணுகுபவரை ஸந்நிதான மாத்ரத்தால், நல்வழிப்படுத்தும் மனவலி ஸுகம் என்றும், கெட்டவழிப் படுத்தும் மனவலி துக்கம் என்றும் ஆகிறது. ஆதலால் முற்கூறிய ஆனந்தமே உண்மையான ஸுகம் என்பதும், ஸாதாரண ஸுகதுக்கங்களால் ஏற்படும் மனக்கலக்கமே துக்கம் என்பதும் தெரிய வரும். ராவணன் திக்விஜயகாலத்தில் ஸனத்குமாரரைக் கண்டதாகவும், உடனே அவன் குணம் மாறி 'எனக்கு நற்கதி எப்படி வரும்?, என்று கேட்டதாகவும், அதற்கு அவர் 'இப்பொழுது என்னமோ, உனக்கு நற்புத்தி வந்திருக்கிறது! கொஞ்சம் நாழிகைக்கெல்லாம் இது மாறிவிடும். ஆதலால் ஸத்துக்களிடம் மாறுப்பகையை வைத்துக்கொள்! இதுவே நீ கடைத்தேறும் மார்க்கம்' என்று கூறினதாகவும் உத்தரகாண்டத்தில் ஒரு கதை கூட உண்டு. வால்மீகி முன்னர் திருடராயிருக்கையில் ஸப்தருஷிகள் ஸந்நிதானவிசேஷத்தால் மாறி மேன்மை பெற்றாராம். கல்யாண வீட்டுக்காரனைப்பார்க்குங்கால் ஒருவிதமனக்கிளர்ச்சியும், மரணம் ஸம்பவித்த வீட்டுக்காரரைப் பார்க்குங்கால் ஒருவித மனத்தளர்ச்சியும் உண்டாவது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

ஒருமனம் ஸுகப்படுகிறது அல்லது துக்கப்படுகிறது எனபதை அது இவ்வாறு அனுபவர் மனதை மாற்றுகிறது என்பதால் அறியலாம். இதையே ஒருவன் தன் நிலையைத்தானே உணர கைக்கொள்ளவே கூடாது; கொண்டால் நிலைதடுமாறிப்பாசாங்குக்காரனாவான். பகவத்ஸங்கல்பத்தால் ஆவலை நமதெனக் கருதல் வீண் கஷ்டத்திற்கே இடமாகும்.

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது ஆடிமீ [பகுதி 2


## ஸாதாரண உபநிஷத்துக்கள்

### MINOR UPANISHADS

இதுவரையில் 10-முக்ய உபநிஷத்துக்களின் ஸாரங்களைத் தொகுத்துக் கூறிவந்தோம். இனிப் பொதுவாக மற்றைய உபநிஷத்துக்களைப்பற்றி இங்கு எடுத்து விவரிப்போம். வேதசாகை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உபநிஷத்து உண்டென்று பெரியோர்கள் கூறி வருவதற்கேற்ப தற்காலம் 1180 உபநிஷத்துள் காணப்பட வேண்டும். ஆனால் கலியில் வேதம் சீர் குலைந்து நஷ்டமாகும் என்ற புராண வசனங்களுக்கேற்ப அநேக வேதசாகைகள் நஷ்டமாக, அவைகளோடு அவைகளைச் சேர்ந்த உபநிஷத்துக்களும் நஷ்டமாய் விட்டன. பின்னர் அவைகளுள் முக்யமாக 108 உபநிஷத்துக்கள் பொறுக்கப்பட்டு, அவைகள் இப்பொழுதும் வந்து எட்டி இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் உபநிஷத்துகள் ஸுமார் 130 இருக்கலாம், ஆயினும் 108 உபநிஷத்துக்களே போதும் என்று பெரியோர்களால் மதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுள் 10 முக்ய உபநிஷத்துக்களுக்குத்தான் ஸ்ரீமத் சங்கராசார்ய பாஷ்யம் இருக்கின்றன. இம்மஹான் அவர் காலத்திலிருந்த மதங்களில் காணப்பட்டிருந்த துர் ஏப்யாஸங்களை வைதிகமல்லவென்று நீக்கி, நல்ல பாகங்களை அங்கீகரித்து ஒவ்வொரு மதத்தைச் சுத்தப்படுத்தி ஸ்தாபித்து வந்ததில், அவர் வாழ்க்கைத் தொழிலுக்கு மற்றை உபநிஷத்துக்கள் வேண்டுவது அனாவசியமாகப் போனமையால் அவைகளை அவர் வ்யாக்யானம் செய்து பிரஸித்தப் படுத்தாமல் விட்டார். ஆதிசங்கரருக்குப் பின்னர், ச்ருங்கேரி மடாதிபதிகளாக வந்த ஸ்ரீமத் சங்கரானந்தாள், ஸ்ரீ வித்யாரண்யாள் ஆகிய இவர்கள் இந்த 108 உபநிஷத்துதுகளுள் சிலவற்றிற்கு வ்யாக்யானம் செய்தும் சிலவற்றைத் தமது நூல்களில் எடுத்தாண்டும் இருக்கின்றனர்.

இந்த 108 உபநிஷத்துக்களுள் ஒன்றாகிய **முக்தி கோபநிஷத்தில்** இவ்வுபநிஷத்துகள் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஸ்ரீராமருக்கு வஸிஷ்டர் செய்த உபதேசரூபமான **தத்வஸாராயணம்** என்னும் அரிய நூலில் உபாஸனா காண்டத்தில் வரும் **ராமகீதை** என்னும் நூலில் இரண்டாம் அத்யாயத்திலும் இவ்வுபநிஷத்துக்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவைகள் பின்வருவன.

#### 10 உபநிஷத்துக்கள்

ஈச, கேன, கடவல்லி, ப்ரச்ன, முண்டக, **மாண்டூக்ய**, தைத்திரீய, அயித்ரேய, சாந்தோக்ய, ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்கள்.

#### 32-உபநிஷத்துக்கள்

ப்ரஹ்ம, கைவல்ய, ஜாபால, ச்வேதாச்வதர, ஹம்ஸ, ஆருணிக, கர்ப்ப, நாராயண, பரமஹம்ஸ, அம்ருதபிந்து, அம்ருதநாத, அதர்வசிர, அதர்வசிக, மைத்ராயண்ய, கௌஷீதகி, ப்ருகஜ்ஜாபல, நரஸிஹ்மதாபினி, காலாக்னிருத்ர, மைத்ரேய, ஸுபால, க்ஷுரிக, மந்த்ரிக, உபநிஷத்துக்கள்.

#### 108-உபநிஷத்துக்கள்

ஸர்வஸார, நிராலம்ப, சுகரஹஸ்ய, வஜ்ரஸூசிக, தேஜோபிந்து, நாதபிந்து, த்யானபிந்து, ப்ரஹ்மவித்யா, யோகதத்வ, ஆத்மபோதக, நாரதபரிவ்ராஜ, த்ரிசிகி, ஸீத, யோகசூடாமணி, நிர்வாண, மண்டலப்ராஹ்மண, தக்ஷிணாமூர்த்தி, சரப, ஸ்கந்த, மஹாநாராயண, அத்வயதாரக, ராமரஹஸ்ய, ராமதாபினீ, வாஸுதேவ



முத்கல, சாண்டிலி, பைங்கள, பிக்ஷுக, மஹ, சாரீரக, யோகசிக, துரியாதீத, ஸந்யாஸ, பரமஹம்ஸபரிவ்ராஜக, அக்ஷமாலிக, அவ்யக்த, ஏகாக்ஷர, அந்நபூர்ண, ஸூர்ய, அக்ஷிக, அத்யாத்ம, குண்டிக, ஸாவித்ரி, ஆத்ம, பாசுபத, பரப்ரஹ்ம, அவதூத, த்ரிபுரதாபினீ, தேவி, திரிபுர, கட, பாவன, ருத்ரஹ்ருதய, யோககுண்டலி, பஸ்மஜாபால, ருத்ராக்ஷ ஜாபால, கணபதி, ‸ தர்சன, **தாரஸார**, மஹாவாக்ய பஞ்சப்ரஹ்ம, ப்ராணாக்னிஹோத்ர, கோபாலதாபினி, க்ருஷ்ண, யாக்ஞவல்க்ய, வராஹ, சாட்யாயன, ஹயக்ரீவ, தத்தாத்ரேய, காருட, கலிஸந்தாரண, ஜாபால, ஸௌபாக்யலக்ஷ்மீ, ஸரஸ்வதீரஹஸ்ய, பஹ்வ்ரிச, முக்திக, உபநிஷத்துக்கள்.

இங்குக் குறிக்கப்பட்டுள்ள உபநிஷத்துக்கள் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பிரித்திருப்பதன் காரணத்தைப் பின்வரும் ராமகீதா வாக்யத்திலிருந்து எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீராமர் ஹநுமாரைப் பார்த்து 'இங்குக் கூறப்பட்டுள்ள உபநிஷத்துக்களுள் மாறுநிலையாகிய கைவல்யமுக்தியைப்பெற **மாண்டூக்யம்** ஒன்றேபோதும். இதைப்படித்தும் தேறாதவன், 10 உபநிஷத்துக்களை வாசித்து என்விஷயமான ப்ரோக்ஷஞானம் பெற்று ப்ரஹ்மலோகம் அடைந்து முடிவில் அங்கிருந்து விடுபடுவான். உனக்கு உயிரோடு இருக்கும்பொழுதே தேஹவியோகம் முதலிய கஷ்டங்களுக்கு ஆளாகி வருந்தாது ஜீவன் முக்தியைப் பெற வேண்டும் என்ற போரவலிருந்தால் 32 உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்து அபரோக்ஷஞானத்தைப்பெறு. இப்படி இருக்கையில் உடனே தேகஸம்பந்தம் முற்றிலும் அற்று ஸகலவித கர்மங்களும் வந்து தாக்காத நிலையை அடைய வேண்டும் என்று தோன்றினால் 108-உபநிஷத்துக்களைப் பாராயணம் செய்' என்று உபதேசித்தார். இதிலிருந்து மாண்டூக்ய உபநிஷத்தே மிகச்சிறந்ததென்பதாயிற்று. இது மிகச்சிறியது. ஆயினும் மோக்ஷமார்க்கத்தை நன்கு சுருக்கமாக விளக்கிக் காட்டுகிறது. இதன் பாகங்களைக் கொண்டு விடாதுவெகுகாலம் பெரியோர்கள் மெய்ம்மறந்து மனனம் செய்வது உண்டு. இதில் உள்ள விஷயத்தைத்தான் ஆதிசங்கரரது பரம குருவாகிய **ஸ்ரீமத் கௌடபாதாள்** வெகு அழகான காரிகையாகச்செய்து 403 ச்லோகங்களில் பூர்த்தி செய்திருக்கிறார். இக்கருத்தையே 'பிறரைக்கொல்ல கத்திமுதலிய ஆயுதங்கள் வேண்டும், தன்னைக் கொல்லவோ சிறு ஊசிகூடப் போதும். அதுபோல மனச்சஞ்சலத்தை ஒழுங்குபடுத்தி பிறருக்கு உபதேசாதிகள் செய்ய உலகிலுள்ள சாஸ்திரங்கள் எல்லாம் வேண்டும். தான் அடங்கி மோக்ஷம் பெற சிறுவார்த்தையே போதும்' என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் வெளியிட்டிருக்கிறார். இதையே பெரியோர்கள் 'மோக்ஷமிருக்கிறது ஸூக்ஷ்மத்தில்' என்பர்.

முன்எழுதியுள்ள உபநிஷத்துக்களை வாசித்து வந்தவர்களுக்கு அவைகள் பொதுப்படையாக ஒருவித ஆராதனக்ரமத்தையும் பற்றாது ச்ருதி யுக்தி அநுபவம் கதைகள் மூலமாகப் பிரஹ்ம விஷயத்தை ப்ரஸ்தாபிக்கின்றன என்பது விளங்கும். மற்றைய 98 உபநிஷத்துகளிலும் அவ்வாறு பொதுவாகப் பெரும்பாலும் காணப்படாது. சிற்சில உபநிஷத்துக்கள் மதவாதிகளின் ஆராதனக்ரமங்களைக் காட்டி அவைகளை மேலான ப்ரஹ்மபரமாகப் பொருள்படுத்தி அவைகளையும் மோக்ஷமடைய ஒரு மார்க்கமாக ஆக்கும் (உ-ம்) பஸ்மஜாபாலம், ருத்ராக்ஷஜாபாலம். ஆராதிக்கப்படும் தேவதாஸம்பந்தமாகஉள்ளவைகளையே ஜகத் காரணாதிகளாகக் காட்டி அந்த தேவதையே பரப்ரஹ்மமாகக் காட்டும். இவைகளுக்கு உதாரணம்கோபாலதாபினி, க்ருஷ்ணோபநிஷத், ராமதாபினி தேவி, கணபதி, ஸீத முதலியவைகளே. வேறு சிலவற்றிற்மேலான இரண்டற்ற பரமநிலையை மாத்திரம் எடுத்து விஸ்தரித்து அவைகளின் மார்க்கங்களைக் காட்டியிருக்கும் (உ-ம்) கைவல்யம், அம்ருதபிந்து, மைத்

ரேயம் முதலியன. சிலவற்றில் யோகாப்யாஸ விஷயம் வராஹ உபநிஷத்தில் காணப்படுவதுபோல் விஸ்தாரமாகக் காணப்படும். மற்றும் சில நிராலம்ப ஸர்வஸார உபநிஷத்துக்களைப்போல வினாவிடை ரூபமாக பரம அத்வைத ரஹஸ்யங்களை நன்கு வெளியிடும். சில ஸ்கந்தோபநிஷத்தைப் போலச் சிவவிஷ்ணுபேதம், தெய்வமிகழ்தல் மதத்வேஷம் முதலியவைகளைக் கண்டித்து ஆராத்ய வஸ்து ஒரே பரம்பொருள் என்பதை எடுத்துக்காட்டும். சில உபநிஷத்துக்களில் உபாக்யானங்களின் உட்கருத்துக்கள் விளக்கப்படும். தக்ஷிணாமூர்த்தி உபநிஷத்தில் மார்க்கண்டேய சரித்திரம் பின் வருமாறு விளக்கப்படுகிறது. 'பரமசிவன் பக்தன் உள்ளே அவன் ஆத்மானந்த ரூபமாக இருந்து; இதுவரையில் விசாரணை இல்லாததால் மோஹம், த்வைதபாவனை ஆகிய இவைகளால் முழுத்தப்பட்ட விவேகத்தைப் பிழைப்பு மூட்டுகிறார். தன் தேகத்தைச் சுற்றிக் கட்டியிருந்த காலபாசத்தால் இழுக்கப்பட்ட காலத்தில் இம்மாதிரிதான் ஆனந்தரூபமாக வெளிப்பட்டு ம்ரிகண்டு பிள்ளையை (மார்க்கண்டேயனை) யமபயத்திலிருந்து விடுவித்துப் பிழைப்பு மூட்டினார்' என்று இவ்வுபநிஷத்துக் கூறுகிறது. வேறுசில ஸந்யாஸ லக்ஷணங்களை நாரதபரிவ்ராஜாக் உபநிஷத்தைப்போல ஸவிஸ்தாரமாக எடுத்து வெளியிடுகின்றன. சில சாரீரக உபநிஷத்தைப்போலத் தேகப்ரபஞ்சத்துவங்களை வெளியிடுகின்றன. ஆகவே முக்ய உபநிஷத்துக்களில் பொதுவாகக் கூறிய அரியவிஷயங்கள் ஒவ்வொன்றையும் விஸ்தாரமாயும், அப்யாஸக்ரமம், ஆராதனாக்ரமம், ஸாதன முறைகள் முதலியவைகளைஒட்டி மற்றைய உபநிஷத்துக்கள் விரிவாகக் கூறுகின்றன.

ஸாதாரணமாக ஞானவிஷயம் தெரியத்தெரிய கர்மம் ஆசாரம் முதலியவைகள் குறைந்து வருகின்றன என்பது எல்லோரும் நேரிட அனுபவித்து வரும் விஷயமே. ஞான சாஸ்திரம் அப்யஸிக்கும் முறைதவறி அப்யஸிப்பதால் இந்த அனர்த்தம் வந்திருக்கிறது. முதலில் பகவத்கீதையையும், தச உபநிஷத்துக்களையும் சாஸ்திர விஷயத்தில் அதிகச்ரத்தையின்றி படிப்பவர்களுக்குத்தான் இம்மாதிரியான விபரீதம் ஸம்பவிக்கும். அவ்வாறின்றி முதலில் 108 உபநிஷத்துக்களை முன்பு ஒருவாறு படித்துத்தெளிந்து பின்னர் தச உபநிஷத்துக்களை வாசித்தால் ஆசாரம் கர்மம் முதலியவைகளில் அசிரத்தை வாராது அவைகளின் உட்கருத்தை நோக்கி, தேஹப்ரக்ஞை உள்ள வரையில் அவைகளை விடாமல் செய்து விடவேண்டும் என்ற ச்ரத்தையும், ஞானமுதிர்ச்சியும் உண்டாகும். நாரதபரிவ்ராஜகம், பரமஹம்ஸபரிவ்ராஜகம் முதலியவைகளை வாசித்தவனுக்குஸந்யாஸ விஷயமான வெறுப்பு அச்ரத்தை முதலியவைகள் எப்படி உண்டாகும்? கோபாலதாபினி, ராமதாபினி, ராமரஹஸ்யம், தேவி, திரிபுரதாபினி, முதலியஉபநிஷத்துக்களைவாசிப்பவர்களுக்கு ஸகுணோபாஸனை முடிவான ஞான நிஷ்டையில் இவ்வாறு கொண்டு சேர்க்கும் என்பது விளங்காமல் போய்விடுமா? நிராலம்பம், ஸர்வஸாரம், ஸ்கந்தம் முதலிய உபநிஷத்துக்களைப் படிப்பவர்களுக்குத் தெய்வமிகழுந்தன்மை, மதத்வேஷம், சிவவிஷ்ணு தாரதம்யம் எவ்வாறு மனதினில் தங்கிநிற்கும்? பஸ்மஜாபாலம், ருத்ராக்ஷஜாபாலம், க்ருஷ்ணோபநிஷத்முதலியவைகளைவாசிப்பவர்களுக்கு விபூதி ருத்ராக்ஷம் விஷ்ணு ஆராதனம் முதலியவைகளின் ரஹஸ்யம் வெளியாக அவர்கள் தமது ஆசாரங்களை கைவிடத் துணிவார்களா? ஆகவே இந்த ஸாதாரண உபநிஷத்துக்கள் ஒவ்வொருவனையும் தன்னிலையை விட்டு வீணே பெயர்ந்து ஞானத்திற்கும், காமத்திற்கும் தகுந்தவனாகாவண்ணம் த்ரிசங்கு வாக்கிவிடாது. அவனவன் ஸத்கர்மங்கள், சிறப்பெனக் கருதும் புராணகதைகள் ஆகிய இவைகளின் உட்பொருளைக் காட்டி அவைகள் மூலமாக மேலான நிலையைஉணர்த்தி, அதை அவன் அடையும்படி செய்யும் திறமையை உடையன.



இவ்வுபநிஷத்துகள் இவ்வாறு ஆசார பாகங்களையும் சிற்சில மதபாக விஷயங்களையும் தழுவி நிற்றலால் இவைகள் பின்னர் செய்து வேதங்களோடு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்; ஆகவே இவைகளை உபநிஷத்துக்கள் தொகுதியுள் சேர்க்கக்கூடாது; என்று மேனாட்டார் அபிப்ராயப்படுகின்றனர். மேனாட்டார்களுக்கே ஒரு புஸ்தகம் இன்னாரால் இக்காலத்தில் எழுதப்பட்டது என்பதை விசாரிப்பதாகிய இலையெண்ணும் விருத்தியில் அதிகப்ரீதி. நமக்கோதொன்றுதொட்டு புஸ்தகம் எழுதியவன் எவனாயினும், அது எப்பொழுது எழுதப்பட்டதாயினும், அதனுள் அடங்கியிருக்கும் விஷயத்தின் சிறப்பைக்கண்டு களிப்பதாகிய பழம்தின்னும் விருத்தியிலேயே அதிகப்ரீதி. உபநிஷத்து என்ற பதத்திற்குப் பரம்பொருள் அருகாமையில் கொண்டுசேர்த்து அக்ஞானத்தையும் அதன் மூலமாக ஏற்படும் ஸம்ஸாராதி துக்கத்தையும் நாசம் செய்வது என்று பொருள். இந்த லக்ஷணம் இந்த 108 உபநிஷத்துக்களில் பொருந்தியிருப்பதால் அவைகளுக்கு இப்பெயர் தகும். மேலும் முற்காலத்தவர்களால் இவைகள் எடுத்துப் பாராட்டப் பட்டிருந்தமையால் இவைகள் தேச சரித்ரங்கள் சென்றெட்டும் காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகவே இவைகள் மேனாட்டு சரித்ரமெழுதுவோர் கூறுவதுபோல அதிநூதனமானவைகளல்ல.

இந்த நூற்றெட்டு உபநிஷத்துக்களின் ஸாரத்தை தொடர்ச்சியாக **உபநிஷத்ரத்னமாலை** என்ற தலைப்பின்கீழ் எழுதிவருவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நமது நண்பர்கள் அவைகளை ச்ரத்தையுடன்வாசித்துவருவார்கள் என்று நம்புகிறோம்.

---

**கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள ஸம்பந்தம்.** காந்த ஊசி எப்பொழுதும் உத்தரதிக்கையே சுட்டிக்காட்டுகின்றது. அதனால் தான் கப்பல்கள் தம்வழி தவறாது செல்கின்றன. மனிதனது ஹிருதயமும் பகவானை நோக்கி எதுவரையில் ப்ரார்த்தித்து நிற்கின்றதோ அதுவரையில் அவன் ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்து மூழ்கிப் போகாமலிருப்பான்.

# லார்டு பைரன்

## LORD BYRON



### முன்னுரை

உலகத்தின் எப்பாகத்திலும், எக்காலத்திலும் நூல்கள் இரண்டுவிதமாக எழுதப்பட்டு வருகின்றன. ஒன்று உரை அல்லது வசனநடை; மற்றொன்று பாட்டு அல்லது செய்யுள் நடை. இவற்றுள்ள முன்னையது சொற்பெருக்கமும், சாதாரண பொருளும் கொண்டுவிளங்கும். பின்னையதோ சொற்சுருக்கமும், பொருளாழமும் பெற்று விளங்கும். மேலும், வசனநடை தன்னைப்பயில்வாரின் அறிவை (Knowledge) மாத்திரம் விளக்கும். மற்று பாட்டோவெனின்; தன்னைப் பயில்வாரின் அறிவை விளங்கச்செய்வதோடு நில்லாமல், வசனத்தைவிட இன்னும் சிறிது மேற்படியிற் சென்று, அவர்களுடையஉணர்வையும் (Feelings) எழுப்பிவிடும் ஆற்றலுடையதாகும். தவிர, சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினர்களாகிய நமக்கு, வசனத்தைவிட பாட்டே பெரிதும் பயனுடையதாகும். ஏனெனில் வசனம் விரிந்து செல்லும் இயல்புடையதாதலின், அதனைப்படித்து பொருள் தேறுதற்கு நாள்செல்லும். அங்ஙனம்

தேர்ந்தபிறகும் வேண்டாதனவற்றை நீக்கியும், வேண்டுவனவற்றைக் கொண்டும், கிரகிக்க வேண்டிய சிரமம் ஏற்படுகிறது. செய்யுளில் இந்தச் சிரமம் இல்லை. தவிர, பாட்டு ஆன்மா உணர்வை எவ்விதம் சென்று பற்றுகிறதோ, அவ்விதம் வசனம் செய்யாது. இதனாலேயே அறிவிற் சிறந்த சான்றோர் பலர், பற்பல காலங்களில், பலபல இடங்களிற்றோன்றி இயற்கையை ஒட்டிக் கவிகள் இயற்றுவாராயினர். அத்தகைய சான்றோரில் ஒருவராம், இப்போது யாம் எழுதப்புகுந்த சரித்திரச்சுருக்கத்துக்கு உரியவரான **லார்ட் பைரன்**

### பைரனுடைய முன்னோர்கள்.

லார்டு பைரனுடைய குடும்பம் பண்டைக் காலந்தொடங்கியே உள்ள ஒரு குடும்பம் என்றும், அக்குடும்பத்தார் தலைமுறை தத்துவமாக ப்ரபுத்வமும், கௌரவமும் கொண்டு விளங்கினவர்கள் என்றும் தெரிகிறது. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளிலேயே இக்குடும்பத்தார் ப்ரபுத்வம் பெற்றுவிட்டார்கள். அரசர்களுக்கு உதவியாக எவர்கள் யுத்தகளத்தில் போரியற்றி, வெற்றிபெற்று, அரசர்களால் சம்மானிக்கப்பெற்றுப் பிரபுக்களானார்கள். இங்கிலாந்தைப் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் பரிபாலனஞ்செய்த **எட்டாவது ஹென்றி**, பைரன் குடும்பத்தாருக்கு, நியூஸ்டெட், நாட்டிங்ஹாம் ஷயர், என்னும் இடங்களில் பெரும் பகுதியான நிலங்களை இனாமாக அளித்தார் என்றும், பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தை ஆண்ட **சார்லஸ் முதலாவான்**, அக்குடும்பத்தாருக்குப் **பாரன்** (Baron) என்னும் பட்டமளித்தார் என்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. சால்ஸ் அரசர் செய்த எந்தமரியாதைக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாய், அவருக்குச் சார்பாக இக்குடும்பத்தார் இருந்து, பல இடங்களில் அவருக்காக யுத்தம் செய்து வெற்றி பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பைரன் குடும்பத்தின் ஐந்தாம் தலைமுறையில் உதித்தவர் இப்போது இங்கு பிரஸ்தாபிக்கப்படும், பாலகவியாகிய லார்டு பைரனுக்குப் பாட்டனாராவர்.

### பைரனுடைய பாட்டனார்

1765-ஆம் வருஷத்தில் இவர்மீது ஒரு கொலைக்குற்றம் கொண்டுவரப் பட்டது. இவர், தம்முடைய நெருங்கிய பந்துவான **சாவோர்த்** (Chaworth) என்பவரை வேண்டுமென்றே கொலைசெய்து விட்டாராம்! அதிகாரிகள் இவர்மீது கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தை விசாரணைபுரிந்து இவர் கொலைக்குற்றத்துக்குப் பாத்தியப்படார் என்று கருதினவரை விடுதலை செய்து விட்டார்கள். ஆனாலும், பொது ஜனங்களின் அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்தது. சாவொர்த்துக்கும், இவருக்கும் நெடுநாளாகவே விரோதமென்றும், அந்தப் பகைமையை இவர் மனதில் வைத்துக்கொண்டே சமயம் பார்த்திருந்து, இருவருக்கும் மல்யுத்தம் ஒரு சமயம் நேர்ந்தபோது, இவர் அநியாயமாய்ச் சாவொர்த்தைக் கொன்று விட்டார் என்றும் ஜனங்கள் அபிப்பிராயப்பட்டு இவரை இழித்துப் பேசினார்கள். இந்த இழிவையும், அவமானத்தையும் சகிக்கமுடியாமல் பைரன் நியூஸ்டெட் ஆபிக்குச் (Newstead Abbey) சென்று அங்கே ஒருவருடனும் கலவாமல் தனித்து வாழ்ந்து வந்தார். வருத்தமும் துக்கமுமே இவரை இவ்விதம் ஏகாந்தமாக இருக்கும்படிச் செய்தன. ஆனாலும், இவருக்குப் பூஸ்திதிகள் ஏராளமாகவிருந்தன. இவருக்குப் புத்திரரும் இல்லை. இவர், தம் சகோதரியின் புத்திரனாகிய **காப்பிட்டன் பைரன்** என்பவரை அதிகஅன்போடும் விசுவாசத்தோடும், காப்பிட்டனின் குழந்தைப் பருவத்தில், வளர்த்து வந்தார். ஆனாலும் பிற்காலத்தில் இவருடைய வாழ்க்கை துன்பத்துக்கே இடமாயிருந்ததால், இவர் அந்தக் காப்பிட்டனையும், மற்ற உறவினர்களையும் வெறுத்து வந்தார்.



### காப்பிட்டன் பைரன்

காப்பிட்டன் பைரன் அழகிற் சிறந்த ஆண்மகன். எப்படிப்பட்ட ஸ்திரிகளையும் தன்வசப்படுத்தக்கூடிய சரீரப்பொலிவும், வாக்கு சாமர்த்தியமும் நிரம்பவாய்ந்தவர். ஆனால், அவருடைய ஒழுக்கம், யாவராலும் அருவருக்கக்கூடிய அவ்வளவு இழிவாயும் கெட்டதாயுமிருந்தது. எவர் **கார்மார்த்தன் மார்ஷியானஸ்** என்னும் ஒரு உயர்குலச்சீமாட்டியை, எவ்விதமாகவோ அவள் மனத்தைக்கலைத்து, ஒருவருக்குந் தெரியாமல் அழைத்துக் கொண்டு ஐரோப்பாவுக்கு ஓடிப் போய் விட்டார். அப்பெருமாட்டியின் கணவன் இதனை அறிந்து, அவளுக்குந் தனக்குமுள்ள விவாக பந்தத்தை நியாயஸ்தலத்தின் மூலமாய் நீக்கிக்கொண்டார். அதன்பிறகு அவளைக் காப்பிட்டன் பைரன் ஊராறியப்பகிரங்கத்திலேயே மணம் புரிந்துகொண்டார். விவாகமான சிறிது காலத்திற்கெல்லாம் அப்பெருமாட்டி **அகஸ்தா பைரன்** என்னும் ஒருபெண்குழந்தையைப் பெற்று இவ்வுலகில் விட்டுவிட்டுத் தான் பரகதியானாள். இந்தப் பெண்குழந்தை வளர்ந்து பெரிதானபின்பு **கர்னல்லி** (Leigh) என்பவர் விவாகஞ்செய்து கொண்டார். கார்மார்த்தன இறந்தபிறகு, காப்பிட்டன் பைரனுக்குக் கடன் அதிகரித்தது. போதுமான பொருள் அவருடைய அனாவசியமான ஆடம்பரச்செலவுக்குக் கிடைக்கவில்லை. ஆதலால், வேறொரு பெரியசீமாட்டியைத் தான் மனைவியாக அடைவதற்கு அவர் முயன்றார். ஏற்கெனவே, இவர் அழகிற் சிறந்தவரென்றும், தேனொழுகப்பேசும் சாமர்த்திய முடையவரென்றும் கூறியிருக்கின்றோமாதலால், இவர் வீசிய வலையில் வேறொரு பெண்மான் வந்து சிக்குவதுதானா ஒரு பெரியகாரியம்!

### காதரைன் கார்டன்

இச்சமயத்தில் **கார்டன்** குடும்பம் என்று ஒரு கௌரவமான குடும்பம் இங்கிலாந்திலிருந்தது. இக்குடும்பத்தார் அரச குடும்பத்தில் விவாகம் முதலிய சம்பந்தங்கள் வைத்துக்கொண்டிருந்தவர்கள். **முதலாவது ஜேம்ஸ்** அரசரின் புத்திரியை **எர்ல் அப் ஹண்ட்லி** விவாஹஞ்செய்துகொண்டார். அவருக்கும், ஜேம்ஸ் அரசரின் புத்ரிக்கும் பிறந்த மூன்றாவது குமாரர் **ஸர்வில்லியம் கார்டன்** என்பவர். அவர் பரம்பரையில் உதித்த **கார்டன் அப் கைட்** என்பவரின் புத்திரிதான் **கார்டன் காதரைன்** என்பவள். இருவருக்கு ஏராளமான நிலங்களும், ஆஸ்திகளும் இருந்தன. எவளை எவ்விதமாக வாவது விவாகஞ் செய்துகொண்டால், தம்முடைய தரித்திரம் நீங்கு மென்றும், கடன் ஒழியுமென்றும், காப்பிட்டன் பைரன் நினைத்து, இவளை மணம் புரிதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்தார். காப்பிட்டன் பைரனுடைய குணாதிசயங்களை அறிந்தவர்கள், அவருடைய தகாத ஒழுக்கத்தைப்பற்றியும், கெட்ட நடத்தையைப் பற்றியும், காதரைன் கார்டனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறி எச்சரித்தும், அவள் அவரையே காதலிக்க ஆரம்பித்தாள். "காதலுக்குக் கண்ணில்லை" என்னும் முதுமொழி மற்றவர்கள் விஷயத்தில் இப்படியாயினும், காதரைன் கார்டனைப்பற்றிய மட்டில் அது உண்மையாகவே முடிந்தது. காப்பிட்டன் பைரனுடைய மாயக் கண்ணியில், கபடுசூதரியாத இந்தக்கன்னி அகப்பட்டுக் கொண்டாள். மிஸ்டர் கார்டனுடைய சம்மதத்தைப் பெற்று காப்பிட்டன் பைரன், காதரைன் கார்டனை விவாகஞ்செய்துகொண்டார்.

### பாலகவியின் பிறப்பு

காப்பிட்டன் பைரன், காதரைன் கார்டனை விவாகஞ்செய்துகொண்ட சிறிதுகாலத்துக்கெல்லாம், அவளுக்குச் சொந்தமான வீடு, வாசல், நிலம் முதலிய எல்லாச் சொத்துக்களையும் அவர் விரயஞ்செய்து அழித்துவிட்டார். காதரைனுக்கு வருஷா வருஷம் 150 பவுன் ஜீவனத்துக்கு வந்துகொண்டிருந்தது. அவளுடைய பாட்டியின் மரணத்தினால் 1,112 பவுன் கிடைத்தது இவைகளைத் தவிர அவளுக்கு வேறு சொத்து ஒன்றுமில்லாமலே போய்விட்டது, 1786-ம் வருஷத்

தில், அதாவது விவாகமான ஒரு வருஷத்துக்குப் பிறகு, ஒற்றுமையில்லாத இந்தச் சதிபதிகளிருவரும் பிரான்ஸ்தேசத்துக்குப் போனார்கள். இந்த மாதரசியை அங்கே தனியே விட்டுவிட்டுக் காப்பிட்டன் பைரன் எங்கோ ஓடிவிட்டார். இனி காதரைனிடம் பொருளில்லை என்பதை அறிந்துகொண்ட காப்பிட்டன் இவ்விதம் அவளை நட்டாற்றில் விட்டுவிட்டு ஓடிப்போனது ஒரு ஆச்சரியமோ! 1787-ம் வருஷத்து இறுதியில் காதரைன் கார்டன் பூரண கருப்பத்துடன் தனியாக இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தாள். 1788-ம் வருஷம் ஜனவரிமாதம் 22-ம் தேதி இவள், பின்னொரு காலத்தில் சிறந்த கவிவாணராக வரப்போகும், ஜீயார்ஜ் கார்டன் பைரனைப் பெற்றெடுத்தாள். 1790-ம் வருஷத்தில் இவள் தன் கைக்குழந்தையை அழைத்துக்கொண்டு ஸ்காத்லாந்துக்குச் சென்றாள். பைரனுடைய தகப்பனும், இவளுடைய கணவனுமாகிய காப்பிட்டன் பைரன் மறுபடியும், இவளிடம் இன்னும் சிறிதிருக்கும் பொருளையும் அழிப்பதற்காக, ஸ்காத்லாந்து வந்து, இவளுடன் சிறிதுகாலம் கூடியிருந்து, மறுபடியும் இவளை விடுத்து, வாலென்ஷினஸ் என்னுமிடத்துக்குப் போய், அங்கே 1791-ம் வருஷம் இறந்துபோனார்.

### பைரனுடைய இளமைப்பருவம்

பைரனுக்கு ஐந்து ஆண்டு நிறைந்ததும், ஆபர்டின் நகரத்திலுள்ள ஒரு சிறு பள்ளிக்கூடத்துக்குக் கல்வி பயில்வதற்காக மிஸஸ் காப்பிட்டன் பைரன் அவரை அனுப்பினார். அங்கே ஒரு வருஷம் வரையில், போவர் என்னும் பெயருடைய போதகாசிரியர் அவருக்குக் கல்வி கற்பித்துவந்தார். இந்த ஒரு வருஷத்தில் எழுத்துக் கூட்டிப்படிக்க இவர் கற்றுக்கொண்டார். அதன் பிறகு ஸ்காடிஷ்பாதிரியாராகிய மிஸ்டர் ராஸ் என்பவர், பைரனுக்கு எடுத்த புத்தகத்தை வாசிக்கும்படிக் கற்றுக்கொடுத்தார். அதன் பிறகு மிஸஸ் பைரனுக்கு ஜோடுதைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு சக்கிலியின் புத்திரராகிய மிஸ்டர் பாட்டர்ஸன் என்பவரிடம், லத்தின் கிரீக் முதலிய பாஷைகளின் ஆரம்பப் பயிற்சியை லார்ட் பைரன் அடைந்தார். இதற்குள் பைரன் குடும்பத்துக்கு நேர்வாரிசான ஒருவர் இறந்துபோகவே, நம்முடைய பைரன் பாரன் பட்டத்தை அடைந்தார். உடனே இவரை ஆபர்டின் இலவச இலக்கணக்கலாசாலையில் சேர்த்துகொண்டார்கள். 1798-ம் வருஷத்தில், காப்பிட்டன் பைரனுடைய தாய் மாமன், அதாவது நியூஸ்டெட் ஆபிஸில் ஏகாந்தமாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்த பைரன் இறந்துபோகவே, வேறு வாரிசு இல்லாமல் அவருடையசொத்தெல்லாம் லார்டு பைரனுக்குவந்தது. இவைகளைத்தவிர மூன்றாவது ஜீயார்ஜ் சக்கரவர்த்தி தம்முடைய பொக்கிஷத்திலிருந்து வருஷமொன்றுக்கு 300 பவுன் காதரைன் கார்டனுக்குக் கொடுத்துவரும்படி உத்தரவிட்டார். ஆகவே, அவளுடைய தரித்திரத்தை நீங்கி மறுபடியும் அவள் செல்வமுடையவளானாள். இப்போது லார்டு பைரனுக்கு வயது பதினொன்று.

### தாயும் பிள்ளையும்

பைரனுடைய தாயார் கல்வியறிவு சிறிதுமில்லாதவளாயும் முரட்டுத்தனமும் கோபமும் குடிகொண்டவளாயு மிருந்தாள். தன் குழந்தையை மிகவும் கொடுமையாக நடத்திவந்தாள். தாய்க்கும் பிள்ளைக்கும் எப்போது பார்த்தாலும் சண்டையும் சச்சரவும் நடந்துகொண்டே யிருக்கும். ஆனாலும், சில சமயங்களில் தாய் இந்தக் கவிவாணரை அன்புடன் நடத்துவாளாம்! பிள்ளையும் தாயாரை நேசித்தேவந்தார். ஒரு சமயத்தில் தாய், குழந்தையான பைரனைப்பார்த்து "நொண்டிக் கழுதையே!" என்று தூஷிப்பாளாம்! மற்றொரு சமயத்தில் "கண்ணே! நீ ஒரு பெரிய பிரபு என்பதை மறந்துவிடாதே! உன்னுடைய கண்கள் உன் தகப்பனாரின கண்களைப் போலவே அழகாய் இருக்கின்றன!" என்று சொல்லிச் சிலாகித்து முத்தமிடுவாளாம்! அவள் தன்னுடைய கோபத்தை எவ்வளவு கடூ



ரமாய்க் குழந்தையிடம் காட்டுவாளோ, அவ்வளவு கடூரமாகவே தன் அன்பையும் காட்டுவாளாம். சந்தோஷத்தினால் குழந்தையை அவள் தட்டிக் கொடுத்தால், கோபத்தினால் அடிப்பதைப்போல் பிறருக்குத் தோன்றுமாம்! வீட்டிலிருக்கும் கரண்டி, தட்டு, கத்தி எவையா யிருந்தபோதிலும், கோபம் வந்துவிட்டால் அவைகளாலேயே தன் குழந்தையை அடிப்பாளாம்! பைரன் பிறந்தபோதே அவருடைய காலில் ஒன்று சிறிது திரிந்து முடம்போல் காணப்பட்டதாம். இப்படி யிருப்பதை அவரே அடிக்கடி பார்த்து வெட்கமும், வருத்தமும் அடைவராம். இவ்விதமாக இவர் இருந்துவரும் நாளில் இவருடைய இயற்கை ஞானம் சிறிது சிறிதாகப் பிரகாசிக்க ஆரம்பித்தது.

### காதலின் மகிமையும், கவியின் பெருமையும்

லார்டுபைரன் தம்தாயாரோடு அபர்டின் நகரத்துக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றார். அங்கே மேரிடப் (Duff) என்னும் ஒரு சிறுமி இருந்தாள். அவள் அழகிற்சிறந்தவள். லார்டுபைரன் அவளைக் காதலிக்க ஆரம்பித்தார். இச்சமயத்தில் பைரனுக்கு வயது எட்டுதான். அந்தச் சிறுமிக்கும் ஏழு அல்லது எட்டுவயதுதா னிருக்கும். இவருக்கு எழுதத் தெரியாததலால், இவர் தன்னுடைய செவிலித்தாயாகிய மேரிகிரே என்பவளைக் கொண்டு, தான் எழுதியதுபோல் காதற்கடிதம் எழுதச் சொல்லி, அதை மேரிடப் என்பவளிடம் கொடுப்பாராம். இப்படியாகப் பால்யத்திலேயே இவருக்கும், மேரிடப் என்பவளுக்கும் காதல் முற்றிவிட்டது. ஆனால், மேரிடப் வேறொருவனைக் கல்யாணம் செய்துகொண்டாள். இந்தச் சங்கதி லார்டுபைரனுக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. அவர் மனவருத்தத்தினால் பல இரங்கற்பாக்கள் பாட ஆரம்பித்தார். பிறகு 1806-ம் வருஷத்தில் மிஸ்மேரீ அனிசாவோர்த் என்பவளைக் கண்டு அவளைக் காதலித்தார். அவள் ஏற்கெனவே இவருக்கு நெருங்கிய பாத்தியமுடையவள். அப்படியிருந்தும் அவளும் வேறொருவனை விவாகஞ் செய்து கொண்டாள். இதனால் ஏற்கெனவே புண்பட்டிருந்த லார்டு பைரனுடைய மனம், இன்னும் உடைய ஆரம்பித்தது. காதலின் பெருக்கும், அக்காதலை அடையப் பிரயத்தனப்பட்டும் முடியாமற்போனதால் உண்டான வருத்தமும், லார்டு பைரனுடைய மனோபாவத்தைக் கடல்மடை திறந்தாற்போல் திறந்து விட்டனவாதலால், அவர் பெருங்கவிவாணராய் பிற்காலத்திலானார்.



### பைரனுடைய குணாதிசயங்கள்

லார்டு பைரனும், ஸர் ராபர்ட் பீலும் (Peel) ஒரு சாலை மாணாக்கர்கள். லார்டுபைரன் கலாசாலைப் பாடங்களைச் சரியாகப்படிப்பதில்லை. ஆனால் தேச சரித்திரங்களை மட்டும் கவனத்துடனும் ஆவலுடனும் படித்துவந்தார். கவி பாடுவதில் இவருக்கு இயற்கை ஞானம் அதிக மிருந்தது. மலைகளையும், வனங்களையும், மிகுந்த சந்தோஷத்துடன் கூர்ந்து கவனிக்கும் இயல்புடையவர். பைரனுடைய மனது மிகவும் இளகிய மனது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறோம். இவர் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது ஸர் ராபர்ட் பீலை ஒரு மாணாக்கன் அடித்தானாம். இவர் அவனைப் பார்த்து "நீ இன்னும் எத்தனை அடி அவரை அடிக்கப்போகிறாய்?" என்று கேட்டாராம். "நீ ஏன் கேட்கிறாய்?" என அவன் வினவியதற்கு "நீ சொன்னால், அதில் பாதியை நான் வாங்கிக்கொள்ளுவேன்" என்று பைரன் பதில் கூறினாராம். பைரனுடைய இறுதிக்காலம் கவிகள் பாடுவதிலேயே பெரும்பாலும் சென்றது. காதல் என்னும் அரிய தனத்தை இவர் இழந்துவிட்டபடியால், உலகவாழ்க்கை மிகக் கடினமாயும், வருத்தமாயும் இவருக்குத் தோன்றிற்று. "ஐயோ! இனி நான் சிறுவனல்ல என்கிற உணர்ச்சி எனக்கு மிகுந்தவருத்தத்தைக் கொடுக்கிறது!" என்று இவரே ஓரிடத்தில்கூறுகிறார். லார்டு பைரன் தம்முடைய முப்பத்தாறும் ஆண்டில் 1824-ம் வருஷத்தில், தம் புகழுடம்பைமட்டும் நிலைநிறுத்திவிட்டு, மண்ணுடம்பை ஒழித்தார்.

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 2. ஆறுவது சினம்.

இதற்குத் தணிக்கத்தகுந்தது கோபமாகிய தீ என்பது பொருள். ஆத்திசூடியில் கூறப்பட்டுள்ள மற்றைய நீதிவாக்கியங்களில் எல்லாம் வினைமுற்று முடிவிலும் பெயர் முதலிலும் காணப்படுகிறது. இது ஒன்றில் மாத்திரம் இந்த ஒழுங்கு மாறி அமைந்து கிடக்கிறது. இதன் நோக்கம் ' தணிக்கத்தகுந்தது கோபம் ஒன்று தான், மற்றைய துர்க்குணங்கள் இது தணியத் தாமே அடங்கும் ' என்பதை வற்புறுத்த வேண்டும் என்பதே. வேர் அறுபட்டுவிட்டால் எவ்வாறு எளிதில் பெரியமரமும் பட்டுப்போய் விடுமோ அதுபோலக் கோபம் அறுந்துவிட்டால் அதை வேராகக்கொண்டு வளரும் மற்றைய கெட்ட குணங்கள் பழக்கங்கள் யாவும் தாமே வளர முடியாது அடங்கிவிடும்.

நாம் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கும் வஸ்துவாவது நிலையாவது கைகூடாக்காலத்தில் ஒருவித மனச்சஞ்சலம். பொங்கி எழும், இந்த மனச்சஞ்சலம். கிளர்ந்துவிட்டால் எருமைக்கடா விழுந்து கலக்கிய குட்டைபோல மனம் கலங்கிவிடும். ஒருவித படபடப்பும் பதட்டமும் உண்டாகிவிடும். அப்பொழுது நமக்கு நன்மை உண்டாகும் வழி இது, தீமையை வருவிக்கும் வழி இது என்று பகுக்குமறிவு இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிவிடும். தமது பலாபலம் எதிரிகளது பலாபலம் முதலியவைகளை விசாரிக்க இடம் கொடுக்காது நமது இஷ்டம் பூர்த்தியாகாதிருப்பதற்குக் காரணமாக விருப்பவைகளின் மேல் மனம் பாய்ந்தோடி அதைக் கெடுக்கவேண்டும் என்றஆவலேமேலாகக் கிளம்பிநிற்கும். நமது இஷ்டம் பூர்த்தியாகாததினால் நமக்கு நன்மையா தீமையா என்பதை விசாரிக்க அது இடமே கொடாது. வியாதி தீரவேண்டும் என்று கொடிய மருந்தைக்கொடுக்கும் வைத்யனிடம் அறியாமையில் அழுந்திக்கிடக்கும் ரோகிக்கு இந்த நிலைதான் ஏற்பட்டு அவனை யமனுகைக் கருதும்படி செய்துவிடும். தர்மமார்க்கம் தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயத்தலால், இந்தக்கோபம் குறுக்கிட்டு ஜநங்களைத் தர்மமார்க்கத்தில் நடக்கவொட்டாது தடுத்துவிடும். அறிவுடையோர்களையும் இந்தக்கோபம் கிளம்பி, உணர்விழக்கும்படி செய்து, கோபம் அடங்கிய பின்னர் 'கோபத்திற்காளாகி என்ன கெட்ட காரியம் செய்து விட்டோம்' என்று பரிதவிக்கக் காரணமாகவிருக்கும் காரியத்தை, முன்பின் யோசிக்காது செய்து முடிக்கும்படி செய்துவிடும். இவ்வளவு கேடுகளுக்குக், கோபம் ஹேதுவாதலால் அதைத் தான் முக்கியமாக அடக்கவேண்டும் என்று ஔவையார் வற்புறுத்துகிறாள்.

கோபத்தைத் தணித்தால் அதனால் உண்டாகும் கேடுகள் நீங்குவதோடுங் கூட அதற்குக் காரணமாக இருப்பது இன்னது என்பதும் தெரியவரும். கோபம் வெளியே வந்து தொழில் படாமல் அடங்கப் பழகிவிட்டால், அது உள்ளேயே இருந்து நம்மை வருத்தும் அப்பொழுது கோபம் என்னும் தீ காமம் (அடங்கா ஆவல்)என்னும் விரகால் எரியும்படி செய்யப்பட்டு நினைத்தபடி முடியாதிருத்தல் என்னும் நெய்யால் விருத்தியடைகிறது என்பது வெளியாகும். ஆகவே இவைகளை நீக்கவேண்டிய சாஸ்திரஞானம் முதலியவைகளை ஸம்பாதிக்கவேண்டும் என்ற ஆவல் பிறக்கும். கோபத்தை அடக்குவதால் வெளி ஸுகமும் உள்விஷய அபிவிருத்தியும் ஏற்படுகிறது. ஆகவே கோபத்தை அடக்கவேண்டியது அவசியமே.

கோபத்தால் கெட்டவர் அநேகர். கோபம் தணிந்து மேன்மை பெற்றவர் சில புண்யவான்களே.

> கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினான் ;
> கோபத்தால் நகுஷனும் கோல மாற்றினன் ;
> கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன் ;
> கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே !



முன்காலத்தில் வஸிஷ்டரிடமிருந்த காமதேனு (கேட்டதை எல்லாம் கொடுக்கும் பசு) விஷயமாக கௌசிகருக்கும் வஸிஷ்டருக்கும் போர் உண்டாக அதில் வஸிஷ்டரின் ப்ரஹ்மதேஜஸ் பலத்தின்முன்கௌசிகரது க்ஷத்ரியபலம் சூறைக் காற்றிலகப்பட்ட பஞ்சுபோலப் பறந்தோடிப் போய்விட்டது. அப்பொழுது ப்ராஹ்மண்யம் ஸம்பாதிக்கவேண்டும் என்ற பேராவல் கௌசிகருக்கு வர, அவர் தபஸுக்கு ஆரம்பித்தார். தபஸு பூர்த்தியாகி வருங் காலத்தில் திரிசங்கு என்ற அரசன் தேஹத்தோடு ஸ்வர்க்கம் புகவேண்டும் என்று வஸிஷ்டரிடம் ப்ரார்த்திக்க, அவரால் நிராகரிக்கப்பட்டு சண்டாள ஜன்மமடைந்து கௌசிகரிடம் வந்து சேர்ந்தான். வஸிஷ்டரிடமிருந்த கோபத்தால் கௌசிகர் ஒரு யாகம் செய்துவைத்துத்திரிசங்குவைஸ்வர்க்கம்ஏற்றுவதாக ஒப்புக்கொண்டார். யாகத்திற்குப்ராஹ்மணர்களை அழைக்க அப்பொழுது வஸிஷ்டர் பிள்ளைகள் ' யஜமானன் சண்டாளன் ; பண்ணிவைப்பவன்க்ஷத்ரியன்: இதென்ன யாகம் !" என்றுஇகழ்ந்துபேசியதுஇவருக்குத்தெரியஅவர்களைச் சபித்தார். பின்னர் யாககமுடிவில் திரிசங்குவை ஸ்வர்க்கம் ஏற்ற, அங்கிருந்து அவன் கீழே தள்ளப்பட்டான். நடுவில் அவனை நிறுத்தித் தனது தவத்தின் மஹிமையால் ஒரு புதிய ஸ்வர்க்கம் உண்டாக்கினார். வஸிஷ்டரிடமிருந்த கோபத்தினாலேயே ஹரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி வீம்புக்காக எவ்வளவோ வருத்தி முடிவில் அவன் ஸத்தியத்திற்காகத் தன் தவத்தில் கௌசிகர் பாதி கொடுத்தார். இம்மாதிரி கோபத்தால் தன் தவத்திற்கு வந்த கேட்டை எண்ணி உறுதியான மனதுடன் வெகுகாலம் தவம்செய்ய இடையில் அதற்கு மேனகையால் விக்னம் வந்தும் பின்னர் அவ தவம் முன்னிலும் அதிகமாக வளர்ந்தது. அப்பொழுது ரம்பைவர, மேனகையிடம் ஏமாந்தது இவருக்கு ஞாபகம் வந்துவிட்டது. உடனே, கோபம் பொங்கிஎழ ரம்பையைச் சபித்தார். அப்பொழுது ப்ரஹ்மா தோன்றி, 'இந்தக் கோபம் கூட அடங்கி ஸாத்விகம் மேலிட்டால்தான் உனக்கு ப்ராஹ்மண்யம் வரும்' என்றார். அதன்படியே கோபத்தால் தவத்தைக்கொட்டிய அனுபவத்தால் திடப்பட்ட கௌசிகர் வெகுகாலம் சித்தசலனமே இன்றித் தவம்செய்து கோபத்தைக்கடிந்து முடிவில் ப்ராஹ்மணராகி விச்வாமித்ரர் என்ற பெயரையும் பெற்றார்.

சந்திர வம்சத்தில் நகுஷன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் நூறு அச்வமேத யாகங்கள் செய்து இந்திர பதவிக்குரியவனாக இருந்தான். அப்பொழுது இந்திரனுக்கு ஒரு ஆபத்துவர அவன் தாமரைத் தண்டுள் வெகுகாலம் ஒளித்திருக்கவேண்டி வந்தது. நகுஷனை இந்த்ரனாக்கினார்கள். அவன் தன் பதவிக்கேற்பட்ட தர்மத்தைக் கவனியாது அதற்கு உரிய ஸுகங்களை மிகவும் மதித்திருந்தான். இவன் இந்திராணியைப் பெண்டாளவேண்டும் என்று கருதி அவளுக்கு இந்த ஸங்கதியைத் தெரிவித்தான். அதற்கு அவள் 'இந்திரன் வருவதுபோல ஆடம்பரத்துடன் ஸப்தருஷிகள் பல்லக்குத்தூக்க என் வீடுவந்து சேர்ந்து, தங்கள் இஷ்டப்படி செய்யலாம்,' என்றாள். அப்படி ஸவாரிக்கு வேண்டியவைகளைத் தயார்செய்து கொண்டு ஸப்தருஷிகளால் தூக்கப்பட்ட பல்லக்கில் ஏறி இந்திராணி வீட்டை நோக்கி நகுஷன் புறப்பட்டான். வழக்கப்படி அவர்கள் பல்லக்கை மெதுவாகத் தூக்கிச்சென்றனர். அப்பொழுது இந்திராணி மேலிருந்த காமத்தால் அவனுக்குக் கோபம் உண்டாக ருஷிகளை நோக்கிக் கடுகடுத்த மொழிகளால் கொஞ்சமேனும் மரியாதை இன்றி 'ஸர்ப்ப! ஸர்ப்ப!!' (சீக்ரம், சீக்ரம்) என்று அதட்டினான். அப்பொழுது அகஸ்தியர் 'அல்பனுக்கு ஐச்வர்யம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்' என்று சிரித்துக்கொண்டு 'நீ ஸர்ப்பமாகக் கடவாய்' என்று சபிக்க-உடனே ஒரு பெரிய மலைப்பாம்பாக நகுஷன் விழுந்து

விட்டான். பின்னர் அகஸ்தியர் காட்டிய வழிப்படி பீமஸேனனைக் காட்டில் விழுங்க மடக்க, அங்குத் தேடிவந்த தர்மபுத்ரரிடமிருந்து கேட்ட தர்ம ரஹஸ்யங்களால் பரிசுத்தனாகி சாபம் நீங்கினான்.

இந்திரனும் இவ்வாறு கோபத்தால் தனது வச்சிராயுதம் போடும் சக்தியை இழந்து தத்தளித்தான். முன்காலத்தில் ச்யவனர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவர் அசுவனீ தேவதைகள் அனுக்ரஹத்தால் யௌவனம் பெற்றார். அவர்களுக்கு அதுவரையில் யாகத்தில் ஹவிர்பாகம் இல்லை என்பதை உணர்ந்து, ஒரு யாகம் செய்து அவ்வளவு உபயோககரமாகவிருந்த அச்வனீ தேவதைகளுக்கு ஒருபாகம் கொடுக்க யத்தனித்தார். அப்பொழுது இந்திரன் வந்து தடுத்தான். அவனை எவ்வளவோ நயமாகக் காரணங்கள் காட்டி ச்யவனர் திருப்திப்படுத்தப் பார்த்தார். முடியாதது கண்டு அவனைக் கவனியாது ஆகுதிகள் கொடுக்கத் தொடங்கினார். அப்பொழுது இந்திரன் கோபங்கொண்டு அவர்மேல் வச்சிராயுதத்தைப்போட யத்தனித்தான். அவர் தபோமஹிமையால் அவன் கையை அசைக்க வொட்டாது தடுத்து யாகத்தை முடித்தார். பின்னர் இந்திரன் கோபம் அடங்கி ருஷியை வேண்ட அவர் அநுக்ரஹத்தால் முன்னிலையை அவன் அடைந்தான்.

கோபம் சண்டாளம்; ஆதலால் அது அடங்காது எவ்வளவு தவம்தான் ஒருவனிடமிருந்தும் பயனில்லை என்பதைப் பின்வரும் வேடிக்கை கதை நன்கு விளக்கும். ஒரு ப்ராஹ்மண ஸந்நியாஸி ஓர் ஊரில் வாஸம் செய்துகொண்டிருந்தார். அவர் தினம் நதியில்சென்று ஸ்நானம் செய்தும், தமது ஆச்ரமத்திற்கு ஏற்பட்ட தர்மப்படி தவறாது நடந்தும் வந்தார். இவருக்குக் கோபம் மாத்திரம் அடங்கவில்லை. ஒருநாள் காலையில் இவர் ஸ்நானம்செய்து செடிமறைவில் ஜபம் செய்துகொண்டிருக்கையில் இவரைப் பாராது ஒரு புதிய வெண்ணான் அந்தத் துறையில் துனி தோய்க்கத் தொடங்க, அதிலிருந்துவெளிவந்த திவலைகள் ஸந்யாஸிமேல் விழுந்தது. அவருக்குக் கோபம்வர வெண்ணானை நன்றாக அடித்துவிட்டு மறுபடி ஸ்நானம்செய்ய முயன்றான். அப்பொழுது வெண்ணானும் அவ்வாறே செய்தான். 'நீ ஏன்! குளிக்கிறாய்', என்று கேட்க 'நீங்கள் பெரியவர்கள் தான். நீங்கள் ஸாதாரணமாகத் தொட்டால் அடியேனுக்கு ஒரு கேடும் இல்லை. நீங்கள் கோபாவேசத்தோடு என்னைத் தொட்டு விட்டபடியால் எனக்கும் தீட்டு வந்துவிட்டது' என்றான். அப்பொழுது, 'நாம் என்னசெய்தும் இந்த வெண்ணானுக்கு 'உள்ள கோபம் சண்டாளம்' என்ற அறிவு இல்லாமல் போய்விட்டதே', என்று பரிதவித்து வெண்ணான் வாக்கை உபதேசமாகக் கொண்டு கோபம் அடக்கிச் சிறப்புற்றார். (விவேகபோதினி முதல் தொகுதி பக்கம் 253ஐப் பார்க்க)

ஆகவே கோபம் சண்டாளம். அது அடங்கினால் அதன் காரியமாகிய கெட்ட தொழில்கள் நீங்கும். பின்னர் அதன்காரணமாகிய அதிகஆவல் அடங்குவதற்குவேண்டிய ப்ரயத்தனங்கள்செய்ய வேண்டும் என்ற நற்புத்தியுண்டாகும். ஆதலால் முக்யமாக அடக்க வேண்டியது கோபம் ஒன்றே.

பரப்ரஹ்மத்தை அறிந்தவன்.—ஜீவாத்மாவின் இயல்பை அறிந்துகொண்டு, 'நான் நீ' என்ற சொற்களின் உண்மைப்பொருளை யுணர்ந்தவனே பரப்ரஹ்மத்தை யறிந்தவன் ஆவான். 'என் வீடு, என் சரீரம், என் குடும்பம்' என்ற அஹம்பாவம், தீர்க்க விசாரணையுள்ளவனுக்கு உண்டாகாது. ஞானோதயம் உண்டான பிறகு அஹம்பாவம் அழிந்துபோய்விடும். உள்ளிப்பூண்டின் மேலுள்ள புரைகளை ஒவ்வொன்றாய் உரித்துக்கொண்டே வந்தால், கடைசியில் ஒன்றும் மிகுந்து நிற்காததுபோல், ராகத்வேஷாதிகளைப் படிப்படியாய் வென்றுவிட்டால், பின்னர் 'நான்' என்ற பாவனையே அழிந்துபோய்விடும். தத்வவிசாரம் பூர்ணமாய்ச் செய்தவனுக்குப் பரப்ரஹ்மம் ஒன்றே நித்யமாய்த் தோற்றும். அஹம்பாவம் அழியாமல் பரப்ரஹ்மஸ்வரூப ஸாக்ஷாத்காரம் உண்டாகாது.



# இந்திய நாணயங்களின் அபிவிர்த்தி

## THE EVOLUTION OF INDIAN COINAGE

நான் இன்றுசாயந்திரம் பிரசங்கஞ் செய்வதாக எடுத்துக்கொண்ட விஷயம் இந்திய நாணயவாரியின் அபிவிர்த்தி. அதாவது இந்திய நாணயங்கள் தற்கால நிலைமைக்கு எவ்விதம் வந்தன என்பதே. இந்திய நாணயவாரியின் சரித்திரத்தை நாம் நன்றாய் அறிந்துகொள்ள வேண்டுமானால், அதை மூன்றுபாகங்களாகப் பிரித்துக் கொள்வது நலம். அவைகளாவன:—

(1) வட இந்தியாவின் பூர்வீக நாணயங்கள், (2) மகம்மதிய நாணயவாரியும், இந்து, ஐரோப்பிய நாணயவாரியும், (3) தென்னிந்தியாவின் நாணயவாரியும்.

I. வட இந்தியாவின் பூர்வீக நாணயங்கள்.— வட இந்தியாவில் முதல் முதல் நிஷ்கரிஷையான நிறையுள்ள உலோகத்துண்டுகள் தான் நாணயங்களாக வழங்கப்பட்டன. அப்பேர்ப்பட்ட நாணயங்கள் முதலில் உண்டானகாலம் கி. மு. 7-வது நூற்றாண்டு என்று சொல்லலாம். அதாவது இந்தியாவில் நாணயங்கள் உண்டாகி சுமார் 2500 வருஷங்களாகின்றன. அதற்கு முந்தி ஆடு, மாடுகள், தானியங்கள், சோழிகள், நாணயங்களுக்குப் பதிலாக உபயோகப்பட்டு வந்தன. கி. மு. 7-வது நூற்றாண்டில் நாணயங்கள் உண்டானதற்குக் காரணமென்னவென்றால் இந்தியாவிற்கும் பிரதேசங்களுக்கு முண்டான வியாபாரமே. வியாபாரத்திற்கு நாணயமும் எழுத்தும் அத்தியாவசியம். ஆகையால்தான் அக்காலத்தில் நாணயங்களும், எழுத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆதிகாலத்தில் தற்காலமாதிரி நாணயங்கள் சர்க்காரால் அடிக்கப்படவில்லை. வியாபாரிகள், காசுக்கடைக்காரர்கள் முதலானவர்களால் அடிக்கப்பட்டன. பண்டைக்காலத்துநாணயங்கள் நாற்சதுரமாயும் மூலைகளில் வெட்டப்பட்டதுமான உலோகத் துண்டுகள், (Babylon) பேபிலோன் நகரத்து நாணயங்களைப்போல் செய்யப்பட்டனவென்று சொல்லலாம். ஏனென்றால் (Babylon) பேபிலோனுக்கும் இந்தியாவிற்கும் ஆதிகாலத்தில் வியாபாரம் விமர்சையாய் நடந்தது. இந்த நாணயங்களின் மேலுள்ள குறிகள் அநேகவிதம். மனிதர்களென்ன, பிராணிகளென்ன, மரங்களென்ன, சூரியனென்ன, இன்னும் நானாவிதமான குறிகள் போடப்பட்டுள்ளன.

இந்த நாணயங்களுக்குப் பிறகு சற்றேறக்குறைய வட்டமான தொளை போட்ட நாணயங்கள் அடிக்கப்பட்டன. பிறகு செம்பினால் வார்க்கப்பட்ட நாணயங்கள் மேற்கூறிய நாணயங்களோடு அதிகமாக வழங்கப்பட்டு வந்தன. இவைகளுடைய காலம் கி. மு. இரண்டாவது நூற்றாண்டு என்று சொல்லலாம். கொஞ்சம் இளகலாக இருக்கும்போது ஒரு பக்கத்திலடிக்கப்பட்டபடியால் இந்த நாணயங்கள் மற்றொருபக்கத்தில் வளைந்துபோயின. இருபக்கத்திலும் முத்திரை யடிக்கிறவிதம் கிரேக்கரிடமிருந்தும் ரோமரிடமிருந்தும் கற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் கிரேக்தேசத்தரசனாகிய மகா அலெக்சாந்தர் 325 கி. மு. வில் இந்தியாவின்மீது படை யெடுத்துவந்தார். அவர் படையெழுச்சியால் இந்திய நாணயங்கள் யாதொருவிதமான மாறுதல்களை யடையவில்லை. அவர் இறந்த பிறகு அவர் ஜெயித்த பெரிய ராச்சியத்தில் பிரிவினை யுண்டாயிற்று. அப்படிப் பிரிவினை யுண்டானதில் பாக்டரியா தேசம் மினாண்டர் என்னும் அரசனால் ஆளப்பட்டது. மினாண்டர் என்பவன் பஞ்சாப்மீது படையெடுத்து வந்தான். அவனுடைய நாணயங்கள் கிரீக் நாணயங்களைப்போலவே அடிக்கப்பட்டன. அவைகள் வெகு அழகாயிருக்கின்றன. மீனாண்டர் படை யெழுச்சியால் பஞ்சாப் தவிர இந்தியாவின் மற்ற பாகங்களின் நாணயவாரி யாதொருவித

மான மாறுதல்களை யடையவில்லை. அப்பாகங்களில் ஜனங்கள் தங்கள் பழய நாணயங்களையே வழங்கினார்கள்.

### குஷான் அல்லது இந்து சிந்திய நாணயங்கள்

கிறிஸ்து பிறந்து முதலாவது நூற்றாண்டினிறுதியில் யுகிகி என்னும் ஜாதியார் ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் முதலிய தேசங்களை ஜெயித்தார்கள். இந்தக் காலத்தில் ரோமர் ராச்சியம் ஆசியாகண்டத்தின் மேல்பாகத்தில் அகஸ்டஸ் என்னும் ரோமச் சக்கிரவர்த்தியால் விஸ்தரிக்கப்பட்டது. ஆகையால் இந்தக் காலத்து நாணயங்கள் ரோம நாணயங்களைப் போலவே யிருந்தன. இவ்விதமான நாணயங்கள் வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் சிற்சில பாகங்களில் அகப்பட்டிருக்கின்றன. குஷான் நாணயங்கள் முற்றிலும் ரோம நாணயங்களைப்போ லிருந்தனவென்று சொல்லமுடியாது. நிறையில் ஒத்திருந்தபோதிலும், மற்ற விஷயங்களில் கீழ் தேசத்து நாணயங்களைப்போலிருந்தன. குஷான் அரசர்களில் ஒருவராகிய இரண்டாவது காட்பீஷிஸ் என்பவருடைய நாணயங்களில் ஒரு பக்கம் நந்தியும் சிவனும் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் குஷான் நாணயங்கள் இந்தியநாணயவாரிசரித்திரத்தில் ஒரு முக்கியமான கட்டம். இதுவரைக்கும் நாணயங்கள் ஒருபக்கத்தில் அடிக்கப்பட்டனவென்றும் சர்க்கார் உத்திரவன்னியில் பிரஜைகளாலேயே அடிக்கப்பட்டனவென்றும் சொன்னோம்.

இது முதற்கொண்டு, அதாவது, கி. பி. முதலாவது நூற்றாண்டுமுதல் நாணயங்கள் சர்க்காரால் இருபக்கத்திலும் அடிக்கப்பட்டன. இரண்டாவது காட்பீஷிஸுக்குப் பிந்தி பட்டத்துக்கு வந்தவர் கானிஷ்கா. இவர் பெருங்கீர்த்தி பெற்ற சக்கிரவர்த்தி. இவருடைய முக்கிய இராஜதானி புருஷபுரம் (Peshawar), மற்றொரு இராஜதானி காபூல். இந்த இரண்டு நகரத்துத் தங்கசாலைகளிலும் ஏராளமான நாணயங்கள் தங்கத்திலும் செம்பிலும் அடிக்கப்பட்டன. கானிஷ்கா பௌத்த மதத்தில் வெகு பிரியமுள்ளவர். சென்ற 1909ஆம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் பெஷாவாருக்குச் சமீபத்தில் வெட்டிப் பார்த்ததில் கானிஷ்கா கட்டிய பெரிய பௌத்தக்கோவிலும் பௌத்தரின் எலும்புகளுடைய பெட்டியும், இவருடைய நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நாணயங்களில் ஒரு பக்கத்தில் கானிஷ்கா நெருப்புப் பீடத்தின் கிட்ட நின்றுகொண்டிருக்கிறார். மற்றொரு பக்கத்தில் பௌத்தன் முதலான தேவதைகள் போடப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டு கானிஷ்கா முதலில் அக்னி ஆராதனை செய்தவரென்றும், பிறகு பௌத்தமதத்தைத் தழுவினாரென்றும் தெரிகிறது. இவர் காலத்துக்குப் பிந்திய நாணயங்களும் அநேகமாய் இவர் நாணயங்களைப் போலிருக்கின்றன. இவருடைய பேரனாகிய வாசுதேவர் கொஞ்சம் புதுவிதமாக நாணயங்கள் அடிப்பித்தார். அவைகள் ஒரு பக்கத்தில் கானிஷ்கா நாணயங்கள் போலிருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் காட்பீஷிஸ் நாணயம்போல் சிவனும் நந்தியும் போடப்பட்டுள்ளன.

கிறிஸ்து பிறந்து நான்காவது நூற்றாண்டில் வட இந்தியாவில் புது இராஜ்யம் ஒன்று உண்டாயிற்று. இதுதான் குப்த இராஜ்யம். இதற்கு இராஜதானி இப்போது பாட்னா என்று சொல்லப்பட்ட பாடலிபுரம். இந்த வமிசத்து முக்கிய அரசர்களில் ஒருவராகி சமுத்திர குப்தா என்பவர் தென் இந்தியாவில் கன்னியா குமாரி வரையில் படைஎடுத்துச் சென்றார். இவருக்குப் பின்வந்த அரசர் குப்த இராஜ்யத்தை மேற்கே அரபிக்கடல் வரையில் விஸ்தரித்தார். ஐந்தாவது அரசன் காலத்தில் குப்த இராஜ்யம் வெள்ளை ஹன்ஸ் என்னும் ஜாதியார் படை எழுச்சியால் க்ஷீணதிசை அடைந்தது. குப்த நாணயங்கள் வெகு அழகு வாய்ந்தவை. இதற்குக் காரணம் இந்தக்காலத்திலுண்டான சம்



ஸ்கிருதபாஷையின் அபிவிர்த்தியே. சம்ஸ்கிருத பாஷையை மிகவும் விருத்தி செய்த குப்த அரசன் விக்ரமாதித்தன். இவன் காலத்தில்தான் சமஸ்கிருத கவிசக்ரவர்த்தியாகிய காளிதாஸன் வாழ்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குப்த நாணயங்களில் இலக்கண சுத்தமான சமஸ்கிருதம் எழுதப்பட்டிருக்கிறது. கிரீக் எழுத்துக்களாவது அல்லது அக்காலத்தில் பேசப்பட்ட பிரகிருத எழுத்துக்களாவது கிடையவே கிடையாது. இம்மாதிரியான நாணயங்கள் வெகுகாலம் நீடிக்கவில்லை. ஹன்ஸ்படை யெழுச்சியால் இவைகள் மறைந்து போய்விட்டன.

குப்த நாணயங்களெல்லாம் அனேகமாய் ஒரே மாதிரியாகத்தான் அடிக்கப்பட்டன. நாணயத்தின் ஒருபக்கத்தில் ராஜா நின்றுகொண்டிருக்கிறார். மற்றொரு பக்கத்தில் லட்சுமி தாமரை மலரில் வீற்றிருக்கிறாள். வட இந்தியாவில் நூற்றாண்டுகளாக நாணயங்கள் இம்மாதிரியாகவே அடிக்கப்பட்டன. 1339ஆம் வரையில் காஷ்மீர் தேசத்து நாணயங்கள் இம்மாதிரியாகவே இருந்தன. மகம்மதுகோரி கூட லெட்சுமி போட்ட நாணயங்கள் அடித்ததாகத் தெரியவருகிறது.

### II. மகம்மதிய நாணயமும், இந்து ஐரோப்பிய நாணய வாரியும்

இதுவரையில் வட இந்தியாவின் பூர்வீக நாணயத்தைப் பற்றிச் சொன்னோம். இனிமேல் மகம்மதிய நாணயத்தைப் பற்றியும், இந்து ஐரோப்பிய நாணயத்தைப் பற்றிச் சொல்வோம். மகம்மது இறந்து சுமார் 64 வருஷங்கள் கழித்து, மகம்மதியர்கள் முதலில் நாணயங்கள் அடித்தார்கள். இந்த நாணயங்கள் மகம்மதிய வேதவாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. மனித உருவங்களாவது வேறு உருவங்களாவது கொஞ்சங்கூட கிடையாது. கி. பி. 712 வருஷத்தில் மகம்மதியர் முதல் முதல் இந்தியாவின்மீது படையெடுத்துச் சிந்து தேசத்தை ஜெயித்தார்கள். மகம்மதிய நாணயங்களையே அடித்தார்கள். அக்காலத்திலிருந்த ஹிந்து அரசர்கள் தங்கள் சொந்த நாணயங்களையே வழங்கினார்களே தவிர, புதுமாதிரியான மகம்மதிய நாணயங்களைப் பற்றி கொஞ்சங் கூட கவனிக்கவில்லை. பிறகு கஜினிமாமூது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். இவன் அடித்த நாணயங்களில் ஒரு பக்கத்தில் மகம்மதிய வேதவாக்கியங்கள் ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. மற்ற பக்கத்தில் எருது, குதிரை முதலிய ரூபங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவனடித்த நாணயங்கள் மகம்மதிய நாணயங்களுக்கு முற்றிலும் விரோதம். ஆயினும் இவைகள் இந்தியாவில் முதலிலடிக்கப்பட்ட ரூபங்களுள்ள மகம்மதிய நாணயங்கள். மகம்மதிய மதத்திற்கு முற்றிலும் விரோதமாக விருந்துங்கூட, இந்த நாணயங்கள் அனேக வருஷங்கள் நிலைபெற்றுப் பால்பன் காலம் வரையில் வழங்கப்பட்டன. பால்பனுக்குப் பின்வந்த மகம்மதிய அரசன் அல்லாவுடீன். இவன் தக்ஷணத்தின்மேல் படையெடுத்து ஏராளமான தங்கம் வெள்ளியை கொள்ளையடித்தான். ஆகையால் இவன் காலத்தில் தங்கவெள்ளி நாணயங்கள் ஏராளமாக அடிக்கப்பட்டன. இவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த மூபாரக் தன் நாணயங்களை ஹிந்து நாணயங்கள் போல் நாற்சதுரமாக அடிப்பித்தான். இந்த நாணயங்கள் ஷாஜகான் காலம் வரையில் வழங்கப்பட்டு வந்தன.

### டோக்ளாக் நாணயங்கள்

மகம்மது பின் டோக்லாக் காலத்தில் நாணயங்கள் வெகு அழகாக அடிக்கப்பட்டன. ஆனால் இந்தப் பயித்தியக்கார அரசன் ஏராளமாய்ப் பித்தளை நாணயங்களை அடித்து அவைகளுக்கு வெள்ளி நாணயங்களுக்குரிய சிலாவணி கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். ஜனங்கள் அவைகளை அங்கீகரிக்கும்பொருட்டு, அவைகளில், "அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்" என்று எழுதிவைத்தான், என்ன செய்தும் ஜனங்

கள் பித்தளை நாணயங்களை வெள்ளி நாணயங்களாக ஒத்துக்கொள்ளவில்லை.

இந்தக் கொடுங்கோன் மன்னன் இறந்துபோய் நூறுவருஷங்கள் கழித்தும் டோக்ளாக்பாடில், அவன் கோட்டையில் இந்த பித்தளை நாணயங்களெல்லாம் மலைமலையாய் குவிக்கப் பட்டிருந்தன. இவனுக்குப் பிந்திவந்த டோக்ளாக் லோடி அரசர்கள் நாணயங்களி லொன்றும் விசேஷமில்லை. லோடிவம்சத்து கடைசி அரசன் பேபரால் தோல்வியுற்றுக் கொல்லபட்டான். பேபர் மொகலாயராச்சியத்தை ஸ்தாபித்தான் பேபருடைய நாணயங்கள் முற்றிலும் புது மாதிரியானவை. இவன் மகன் ஹுமாயூன், சூர் வம்சத்து அரசனாகிய ஷர்ஷாவால் தோல்வியுற்று, இந்தியாவினின்றும் துரத்தப்பட்டான். ஷர்ஷா பட்டத்துக்கு வந்தான். இவன் நாணயங்கள் மிகவும் உயர்வானவை. முற்றிலும் புது மாதிரியானவை. இவன் நாணயங்கள் மொகலாயர்காலம் முடிய வழங்கிவந்த தன்னியில், 1835 வருஷம் வரையில் ஈஸ்ட்டு இந்திய கம்பெனியாரால் நிர்வகிக்கப்பட்டன. தற்காலம் வழங்கும் பிரிடிஷ் நாணயங்களுக்கு அஸ்திவாரம் அவைகளே. ஷர்ஷாகாலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் வழங்கப்பட்டன. அவன் வெள்ளி ரூபாய் தற்கால இங்கிலீஷ் ரூபாய்க்கு அனேகமாய் சமமாக விருக்கிறது. பிறகுவந்த அக்பர் சக்ரவர்த்தியால் முதலிலடிக்கப்பட்ட நாணயங்களும் ஷர்ஷா நாணயங்களைப் போலவே யிருந்தன. மறுபடி அடிக்கப்பட்ட நாணயங்கள் சிறியவை. அக்பருக்குப் பின் பட்டத்திற்குவந்த அரசன் ஜீகாங்கிர். இவன் நாணயங்க ளெல்லாம் வெகு அழகுவாய்ந்துள்ளன.

இவனுடைய மனைவியாகிய நூர்ஜிகானிடத்தில் இவனுக்குப் பற்றுதல் ஜாஸ்தி. ஆகையால் இவன் அடிப்பிவித்த நாணயங்களில் இவன் பெயரும் இவன் மனைவி பெயரும் போடப்பட்டிருக்கின்றன. இவனுடைய தங்க நாணயங்களில் இவன் கையில் பாத்திரமேந்தி குடிக்கிற பாவனையாகப் போடப்பட்டிருப்பதால் இவனுக்குக் குடியில் வெகு பிரியமென்று தோன்றுகிறது. மேற்கூறிய வினோதங்களெல்லாம் இவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த ஷாஜிகானால் முற்றிலும் தள்ளப்பட்டன. ஷாஜிகான் தங்கநாணயங்கள் மிகவும் பெரியவை. இவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த அவுரங்கஜீப் சக்ரவர்த்தி வைராக்கிய மகம்மதியனானபடியால் எல்லோரும் உபயோகிக்கக்கூடிய நாணயங்களின் மீது மகம்மதிய மதக்கொள்கைளை அடிப்பிக்கவில்லை. இவனுடைய நாணயங்களெல்லாம் ஒரே மாதிரியானவை. அவைகளடிப்பட்ட இடங்கள் மாத்திரம் போடப்பட்டவை. இவனுக்குப்பின் வந்த சக்ரவர்த்திகள் காலத்தில் மொகலாயராஜ்ஜியம் க்ஷீணதிசையடைந்தபோதிலும், இவனுடைய நாணயங்கள் நிர்வகிக்கப்பட்டுவந்தன. வரவர மொகலாய நாணயமானது ஆங்கிலேய இந்திய நாணயமாகப் போய்விட்டது. ஈஸ்ட்டு இந்திய கம்பெனியாருக்கு 1717, 1744, 1757, வருஷங்களில் தாங்களே நாணயங்களடிக்க உத்திரவு கொடுக்கப்பட்டது. ஈஸ்ட்டு இந்திய கம்பெனியார்நாணயங்களிளெல்லாம்ஸிம்ஹம்,யாளி, தவிர, மற்றவைகளெல்லாம் மொகலாய நாணயங்களைப்போலவே அடிக்கப்பட்டன. 1835 வருஷம் வரையில் ஈஸ்ட்டு இந்திய கம்பெனி நாணயங்கள் மொகலாய சக்ரவர்த்தியாகிய ஷஹாலம் போரா லடிக்கப்பட்டன. பிறகு மொகலாய சக்ரவர்த்திக்குப் பதிலாக இங்கிலீஷ் ராஜாவாகிய நான் காவது உவில்யத்தின் தலை போடப்பட்டது. பழய நாணயங்களெல்லாம் அழிக்கப்பட்டன.

தற்காலத்துச் சுதேச ராஜ்யங்களின் நாணய



வாரி அவ்வளவு அழகுள்ளவை யல்ல. எல்லாம் சுதேசராஜ்யங்களும் பிரிடிஷ் நாணயவாரியை உபயோகிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மற்ற இந்து ஐரோப்பிய நாணயங்கள் போர்ச்சுகீஸ், டேன்ஸ், டச்சு, பிரென்சுமுதலிய நாணயங்களே. டேன்ஸ் நாணயங்கள் அனேகவிதமாய் தாங்கம்பாடியி லடிக்கப்பட்டன. 17, 18 நூற்றாண்டுகளில் டச்சுக்காரர் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் அடிப்பிவித்தார்கள்.

## தென்னிந்தியா நாணயவார்ரி

இனிமேல் சொல்லப்போகிறது தென்னிந்தியா நாணயவாரி. வெகுகாலம் வரையில் தென்னிந்தியா திராவிடநாடு ஆகையால் இதில் நாணயங்களுக்கும், வடஇந்தியா நாணயங்களுக்கும் கொஞ்சங்கூட சம்பந்தமில்லை. தென்னிந்தியா நாணயங்கள் மிகவும் சிறியவை. புராதன காலத்து நாணயங்கள் அகப்படுகிறதில்லை. அப்படி ஏதேனும் அகப்பட்டாலும் அவைகளினின்றும் ஒன்றும் தெரிகிறதுமில்லை. ஏனென்றால் பண்டைக்காலம் தொடங்கி தென்னிந்திய வட இந்திய அரசர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. அப்படி அடித்தவர்கள் சமுத்திர குப்தர், மாலீக்காபூர் பாமினிராஜ்ய மகம்மதிய அரசர்கள்.

வட இந்தியாவைப்போலவே தென்னிந்தியாவிலும் ஆதிகாலத்தில் தொளையிடப்பட்ட நாணயங்கள் வழ்ங்கப்பட்டு வந்தன. இவைகள் வழங்காமல் நின்று விட்டகாலம் கி. பி. 200 என்று சொல்லலாம்.

ஏனென்றால் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஊதியூரிலும்,மற்ற விடங்களிலும் கி. பி. 14ல் இருந்த அகஸ்டஸ் என்னும் ரோம சக்ரவர்த்தியின் நாணயங்கள் அகப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவில் ஆதிகாலத்தில் வழங்கினவை தங்கநாணயங்களே. ஏனென்றால் அந்தக்காலத்தில் கூட வயநாடு கோலார் முதலிய சுரங்கங்களில் தங்கம் வெட்டி எடுத்திருப்பதாகத்தெரிய வருகிறது. தங்கத்தின் நிறை இவ்வளவு கழஞ்சு என்று வழங்கப்பட்டு வந்தது. கழஞ்சில் பத்திலொரு பங்குக்கு மஞ்சாடி என்று பெயர். பொன் அல்லது வராகனென்று சொல்லப்பட்ட நாணயத்தின் நிறை கிட்டதட்ட ஒரு கழஞ்சு என்று சொல்லலாம். பணம் என்று சொல்லப்பட்ட நாணயத்தின் நிறை சற்றேறக்குறைய ஒரு மஞ்சாடி என்று சொல்லலாம். இம்மாதிரியான நாணயங்கள் 1833-வருஷம் வரையில் வழங்கப்பட்டு வந்தன.

தென்னிந்தியாவின் நாணய வாரியை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள்-(1) சளுக்கிய (2) பாண்டிய (3) சோழ (4) விஜயநகரா நாணயங்களே.

சளுக்கிய தங்கநாணயங்களில் பன்றி போடப்பட்டதால் தங்கநாணயத்திற்கு வராகனென்ற பெயருண்டாயிற்று.[வராகம் = பன்றி]. பாண்டிய நாணயங்கள் மீன்போடப்பட்டுள்ளன. மேலே சொன்ன சளுக்கிய பன்றியும், பாண்டியமீனும் சோழநாணயங்களில் சிலவற்றில் போடப்பட்டிருக்கின்றன.

ராஜ ராஜ சோழருடைய நாணயங்களில் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிற அவலக்ஷண உருவமும், மற்றொரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அவலட்சண உருவமும் போடப்பட்டிருக்கின்றன.

இதைப் பாண்டிய ராஜாக்களிடமிருந்து சோழ ராஜாக்கள் கற்றுக்கொண்டார்கள். பாண்டியர் வடஇந்திய குப்த அரசர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.

விஜயநகர நாணயங்கள் வராகனைப் போலடிக்கப்பட்டன. எல்லாம் தங்க நாணயங்களே.

*ஐதர்,திப்பு,கிருஷ்ணராஜா நாணயங்கள்விஜய நகர நாணயங்களைப் போலவே அடிக்கப்பட்டன.

G. இரத்தினம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

* இஃது கும்பகோணம் எலிமெண்டரி உபாத்திமைச் சங்கத்தில், ஷையூர் கவர்ன்மெண்டு காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் ஏட்ஸ் அக்ராஸனத்தின்கீழ் உபந்யஸிக்கப்பட்டது.

# சுத்தமும் அசுத்தமும்
## CLEANLINESS & UNCLEANLINESS

சுத்தம் அசுத்தம் இவைகளைப்பற்றி ஒருவன் என்ன சொல்லக்கூடும்? இவை எல்லாருக்கும் தெரிந்த வார்த்தைகள். இவைகளால் உணர்த்தப்படும் பொருள் யாருக்குத் தெரியாது? சுத்தமான வஸ்திரம் அசுத்தமான வஸ்திரம், சுத்தமான ஜலம் அசுத்தமான ஜலம் இவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசம் நமக்குத் தெரியாததோ என்று, இதின் தலைப்புப் பெயரை வாசிக்கும் நேசர்கள் கேட்கக்கூடும். இக்கேள்வியின் நியாயம் ஒப்புக்கொள்ளவேண்டியதே. சுத்தா சுத்தம் தெரியாமலா, நாம் முதற்சொன்னதை யங்கீகரித்து, இரண்டாவதைக் கழித்து வருகிறோம்? நாகரீகம் என்பதே இவ்விரண்டின் வித்தியாசத்தின் உணர்வின் அளவேயன்றோ? நாம் வேண்டிய அளவு நாகரீகத்தை யடைந்திருக்கிறோமென்று நாமெல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஆயினும், கொஞ்சம் ஊகித்துப்பார்த்தால் இச்சுத்தா சுத்தங்களைப்பற்றி எல்லாருக்கும் ஒன்றுபோல் அபிப்பிராயம் இருக்கிறதில்லையென்பது வெளிப்படும். உதாரணமாக: (சுத்தா சுத்த விஷயத்தில் மனதிற்கு கொஞ்சம் அரோசகமான உபமானங்கள் வரலாம்; விஷயத்தின் சுபாவத்தைக் கவனித்து நண்பர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறேன்). சில புது நாகரிகமுள்ளவர்கள் தமது கைக்குட்டைகளில் மூக்கைச் சிந்துகிறார்கள். இது தரையிலும் சுவர்களிலும் சிந்தி, தூண்களிலும் மேஜை நாற்காலிகளிலும் இடுப்பிலும் துடைப்பவர்களுக்குச் சுத்தமாகப் படவில்லை. வேறொரு உதாரணம்: சிலர் நாகரிகமாக வாழவிருப்பமும், சக்தியும் உள்ளவர்கள், பலவித பாய்களாலும் கம்பளங்களாலும் வீட்டுத்தளங்களை மூடுகிறார்கள். இதை, மற்றவர்பார்த்து, இப்பாய்களுக்கு அடியில் நாள்தோறும் சேர்ந்துவரும் புழுதியையே கவனித்தவர்களாய், சுத்தமானதாக ஒப்புவதில்லை. தினமும் பெருக்கி, அடிக்கடியலம்பிவரும் தரைக்குச் சமானம் இவையாகுமா என்று கேட்கிறார்கள்.

இது மாத்திரமல்ல, ஒருவிஷயத்திற்குச் சுத்தமானவஸ்து இன்னொரு விஷயத்திற்கு அசுத்தமாய் விடுகிறது. நாம் சாப்பிடுவதற்கு யோக்கியமான பதார்த்தங்கள் அநேகம், நமது துணிகளில் விழுந்தால் அவற்றை யசுத்தம்பண்ணி விடுகின்றன. அப்படியே உடம்பைச் சுத்தம் செய்யும் வஸ்து ஆகாரத்தில் விழுந்தால் ஆகாரம் அசுத்தமாய் விடுகிறது. தலைக்கு அலங்காரமாக எண்ணும் அளகத்தின் ஒரு ரோமம் ஆகாரத்தில் விழுந்திருந்தால், அவ்வாகாரம் சுத்தத்தில் குறைந்து விடுகிறது. இவ்விதம் சுத்தாசுத்தத்தைப் பற்றின அபிப்பிராயங்கள், விஷயங்களின் உற்பத்தி உபயோகங்களையும், கவனிப்பவரின் மனோபாவத்தையும் சம்பந்தித்துப் பேதப்படுகின்றன. இப்பேதங்களுக்குள், ஒரு வஸ்துவின் சுத்தா சுத்தத்தை நிர்ணயிக்க ஏதாவது மாறுபடாத அளவைகள் உண்டா என்பதை ஆராய்வது நமது கருத்து.

நாம் மாறுபடாத அளவை என்று சொல்லும்பொழுது, நமது அறிவிற்குத் தகுந்த என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், நம் அறிவு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகின்றதென்பது நிச்சயம். இவ்வறிவுக்குத் தகுந்தபடி நம் அளவு நிர்ணயங்களும் மாறுபடும். இதற்குச் சந்தேகமில்லை.

சுத்தம் என்றால் என்ன? அசுத்தம் இல்லாதது சுத்தம். எது அசுத்தம்? அசுத்தத்தின் அடையாளமென்ன? எந்தக்காரணத்தினால் ஒரு வஸ்து அசுத்தமானதாகச் சொல்லப்படுகிறது? இக்கேள்விக்குப் பதில் எல்லாருடைய மனதிலும் உதிக்கும். மனதிற்குச் சகிக்கக் கஷ்டமானது, அசுத்தம். இதின் முதல் நிர்ணய அளவைகள் நம்முடைய இந்திரியங்களே. முதலில் கண் பார்த்து ஒருவஸ்து தன் சுபாவநிறத்தைவிட்டு



வேறுநிறத்தைக்காண்பித்தால் அழுக்குப்படிந்ததென்று மனதிற்குச் சொல்லிக் கொடுக்கிறது. பிறகு மூக்கு வாசனையினால் ஒருவஸ்துவின் மலினத்தைத் தெரிவிக்கின்றது. இவ்விதம் இந்திரியங்களால் விரோதமாக அறிவிக்கப்பட்டு மனதினால் அசுத்தமானதாக மதிக்கப்படும் வஸ்துக்களுடைய பொதுவான குணம் எதென்று விசாரித்தோமானால், சரீரசௌக்கியத்திற்கு ஹிதமில்லாமையே யென்று தெரியவரும். அசுத்தத்தின் குணம் வியாதியை யுண்டாக்கக்கூடிய சக்தியே. அசுத்தமான காற்றும், அசுத்தமான ஜலமும், அசுத்தமான ஆகாரமும், அசுத்தமான உடைகளும் வியாதியை யுண்டுபண்ணுகின்றன.

அசுத்தமானவற்றின் வியாதி விளைக்குந்தன்மை அவற்றிற்கு எங்கிருந்து வந்தது என்பது அடுத்த ஆராய்ச்சி. இதைக் கவனிக்கும்பொழுது, சரீர சம்பந்தமுள்ள வஸ்துக்கள் அதிக அசுத்தமுள்ளனவாகவும், ஸ்தாவர சம்பந்தமுள்ளவைகள் அதற்கடுத்த படியிலும், மண் சம்பந்த முள்ளவை எல்லாவற்றிலும் குறைந்த அசுத்த முள்ளவையாயும் கருதப்படுகின்றன. இப்படி மேற்சொன்ன மூன்றுவித பதார்த்தங்களுள் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசத்தைப் பார்த்தோமானால், அழுகுதல் என்ற மாறுபாட்டையடையும் சக்தி பிராணி சரீரசம்பந்தமுள்ள வஸ்துக்களில் அதிகமாகவும், ஸ்தாவர சம்பந்த முள்ளவைகளில் குறைவாகவும், மண்சம்பந்த முள்ளவைகளில் இல்லாமலும் இருப்பது தெரியவரும். அழுகுதல்என்ற மாறுபாட்டின் தன்மையைக் கவனிக்கும்பொழுது அசுத்தத்தின் தன்மையும், அது வியாதியை உண்டுபண்ணும் விதமும் வெளிப்படும்.

அழுகுதல் (Decomposition, Putrefaction) என்பது பலவகைப்பதார்த்தங்கள் விசித்ரமாகச் சேர்ந்துள்ள ஒரு வஸ்து, அநேகம் சில்லரைப் பதார்த்தங்களாகப் பிரிக்கப்படும் செய்கையைக் குறிக்கின்றது. இச்செய்கையைப் பலவிதமான அநேகங் கோடி சிற்றுயிர்களால் நடத்தப்படுகிறது. இச்சிற்றுயிர்கள் தகுந்த பதார்த்தங்களில் வளருவதினால், அப்பதார்த்தம் கெட்ட நாற்றமுள்ள வாயுக்களாகவும், நீராகவும், கரியமலவாயுவாகவும், சிலவித உப்புக்களாகவும் பிரிக்கப்படுகிறது. அதி விசித்ரமான சேர்க்கையையுடைய பிராணிஸம்பந்த பதார்த்தங்களும், ஸ்தாவரசம்பந்த பதார்த்தங்களும், பிரிந்து அத்தனை கலப்பற்ற பதார்த்தங்களாக மாறுவதற்கெல்லாம் இவையே காரணம். இவைகளால் உண்டாகும் பதார்த்தங்கள் அநேகம் கொடிய விஷங்கள். அநேகம் கொடிய வியாதிகளுக்கு இச்சிற்றுயிர்களே காரணம்.

இச்சிற்றுயிர்கள் ஸ்தாவரவுலகத்தைச் சேர்ந்தவை. நாய்க்குடைகளின் வகுப்பிலடங்கினவை. இந்நாய்க்குடைகளுக்கும் மற்ற ஸ்தாவரங்களுக்கு முள்ள வித்யாசமென்னவெனில், மற்ற ஸ்தாவரங்களுக்குப் பச்சைநிறத்தைக் கொடுக்கும் வஸ்து இவைகளிடத்தில் கிடையாது. பூமியிலிருந்தும், காற்றிலிருந்தும் தமக்கு வளருவதற்கு வேண்டிய ஆகாரத்தைச் செய்துகொள்ளும் சக்தி ஸ்தாவரங்களுக்கு இப்பச்சைநிற வஸ்துவினாலேயே உண்டாவதால், இந்நாய்க்குடைகளுக்கு இந்தச் சக்தி கிடையாது. இவைகளுக்கு ஆகாரம் முன்னமேயே தயாராயிருக்கவேண்டும். ஆனதால் இவை இறந்துபோன தாவரம் அல்லது பிராணிகள் சம்பந்தமான வஸ்துக்களிலேயே வளர சக்தியுள்ளனவாயிருக்கின்றன.

இச்சிற்றுயிர்களில் அநேகாயிரம் ஜாதிகள் இருக்கின்றன. ஒரு ஜாதி சர்க்கரையுள்ள ரசங்களைச் சாராயமாக மாற்றுகிறது. மற்றொரு ஜாதி அதே நீரைக் காடியாக மாற்றுகிறது. வேறொன்று பாலைத் தயிராகமாற்றிப் புளிக்கவைக்கிறது. நமது தோசைமா புளிப்பதும் அவைகளின் ஒரு ஜாதியினாலேயே. இன்னும் சில ஜாதியுயிர்கள், தரையில் போடப்படும் பிராணிகளின் கழிவு பதார்த்தங்களான மல மூத்திரங்களிலுள்ள உப்பு வாயு

கலந்த பதார்த்தங்களைப் பிரித்து வெடியுப்பாக மாற்றுகின்றன. இவைகளில் சில, புண்களில் ஒட்டிக்கொண்டு புண்சீப் பிடிக்கும்படியாகச் செய்கின்றன.வேறு சில பலவிதமான ரணஜன்னிகளை விளைவிக்கின்றன. இன்னும் சில உயிருள்ள தேகங்களிலும் விளைய சக்தி பெற்றனவாய், காலரா, ஸன்னிபாத ஜ்வரம், க்ஷயம், குஷ்டம், முதலிய பல ரோகங்களையும் விளைவிக்கின்றன.

இச்சிற்றுயிர்கள் அதிநுட்பமானவை 1/10,000 முதல் 1/50,000 அங்குலப் பிரமாணமுள்ளவை. ஆயிரமடங்கு பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடிகளாலேயே பார்க்கத்தக்கவை. இவ்வளவு நுட்பமாயிருப்பதால் ஒரு சொட்டில் லக்ஷக்கணக்காகத் தங்கக்கூடும். உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. எங்கெங்கு தமக்கு ஆகாரம் கிடைக்குமோ அங்கு விழுந்ததும் அதிவிரைவாய் விருத்தியாகின்றன. நாம் அசுத்தமென்று மனதினால் கருதும் மலமூத்திராதிகளில் அபரிமிதமா யிருக்கின்றன. அப்படியே, நமது எச்சிலிலும், வியர்வையிலும், வியாதியஸ்தர்களுடைய மலம், மூத்திரம், வியர்வை, எச்சில் முதலிய கழிவுகளில் அந்தந்த வியாதிக்குக் காரணமான சிற்றுயிர்கள் அவைகளின் தன்மைப்படி நிறைந்து கிடக்கின்றன.

மேற்சொன்னதிலிருந்து ஒரு அனுமானம் உண்டாகிறது: அசுத்தமானவை வியாதிக்குக் காரணமாயிருப்பது இச்சிற்றுயிர்களாலேயே என்று. ஆதலால், வியாதிக்குக் காரணமான இச்சிற்றுயிர்கள் அதிகமாக நிறைந்துள்ளதும், அல்லது அவை சடுதியிற் சேர்ந்து வளருவதற்கு ஆஸ்பதமானதுமான பதார்த்தங்கள்தான் அசுத்தமானவையென்று தெளிவாகிறது. இவ்விதமான பதார்த்தங்கள் நம் உடலில் சேராதவண்ணம் பாதுகாத்துக்கொள்வது நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்வதாகும். நம் சரீரத்தில் சம்பந்தப்படும் வஸ்துக்கள் மேற்சொன்ன வண்ணம் அசுத்தப்பட்டுப்போனால், அதாவது இச்சிற்றுயிர்கள் நிறைந்த பதார்த்தங்களாலோ அவைகள் வளரும் பதார்த்தங்களாலோ மலினப்பட்டுப்போனால் அவற்றை அவ்வஸ்துவினின்றும் நீக்குவது, அதைச் சுத்திசெய்வதாம்.

இப்படி, சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும், சுத்திசெய்வதற்கும், உள்ள சக்தி, இச்சிற்றுயிர்களைப்பற்றி நமக்குள்ள அறிவைப் பொறுத்தது. அதாவது, இச்சிற்றுயிர்களின் தன்மையும், அவை விர்த்தியாவதற்கு வேண்டிய சௌகரியங்களும், அவை வசிக்கக்கூடிய இடங்களும், பரவும் வழிகளும், அவை மரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றி நமக்கு அறிவு எவ்வளவுக்கெவ்வளவு உண்டாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், அசுத்தத்தை நீக்கவும் நமக்குச் சக்தியுண்டாகும்.

கே. நாராயண ஐயர், M. B. & C. M.

ஒரு பெரியர் கூறுகிறார். —“உலகத்தை யீன்ற மாதாவாகிய உமையவள் மலையரசனாகிய ஹிமவானுக்குப் புத்திரியாய் அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பார்வதிதேவி அவதரித்தபிறகு அந்த ஸர்வசக்திமதியாகிய ஜகந்மாதாவின் விசுரூபதரிசனம் அக்நிராஜனுக் குண்டாயிற்று. அப்பொழுது அவன் அக்கண்கொள்ளாக் காக்ஷியைக்கண்டு தேவியை நோக்கி, “தாயே, வேதத்தில் பலவாறு புகழ்ந்து கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் தரிசனம் அடியேனுக் குண்டாகும்படி அருளாயோ” என்று பிரார்த்திக்க, குழந்தையாய் அவதரித்திருந்த பார்வதிதேவி, “அப்பா ப்ரஹ்மதர்சனம் கிடைக்கவேண்டுமென்ற கோரிக்கை யுனக்கிருந்தால், நீ ஸாதுஸங்கத்திற் பழகவேண்டும். அப்பொழுது தான் உன் கோரிக்கை நிறைவேறும்”என்றாள். ப்ரஹ்மம் இன்னதென்று வாக்கினால் விளக்கமுடியாது. ‘இவ்வுலகத்தில் ப்ரஹ்மம் ஒன்று தவிர மற்றவையெல்லாம் உச்சிஷ்டமே (எச்சிலே)’ என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிறார்.



# மனத்திருப்தி

## CONTENTMENT

ஒருவன் தனக்கு இருப்பதுங் கிடைப்பதுங் கொண்டு மனக்களிப்பு அடைவது திருப்தி. அது நாளுக்கு நாள் உள்ளூறி, அறிவும், ஆற்றலும், ஆக்கமும், ஊக்கமும் இனிது ஓங்கி யுயர்ந்து பரந்து விரிந்து, நன்மையைத்தரும் இயல்பினையுடையது. மனத்திற்கும், தேகத்திற்கும் ஆரோக்கியந்தந்து பெரிதும் ஒற்றுமைப் பூத்து, உண்மைபெருகி, என்றும் மாறா நிலையினை அடைவிக்கும் இடையறா அன்பு, அருள், தூய்மை, புகழ், இரக்கம் முதலிய நிலையிற் பொருள்களின் பாகுபாடுகளை யுணர்த்தித் தன்னந்தனியாய்த் தனதியல்பு விளங்கத் தளிர்த்து, அரும்பிப், பூத்துக், காய்த்துப், பழுத்து, வினைவழிப்பலனை அளிக்கவல்ல சீரிய கற்பகத்தருவை யொத்த முழுமுதற் சக்தியின் பருப்பொருள்களை விரித்து அறியும் ஆற்றல் வாய்ந்தது. அளப்பரும் சம்ஸார சலதியைக் கடந்து கரையேறுவதற்கு உரிய அரும்பெருந்தோணி. இராகத்வேஷாதிகளை வேரறக்களைவதற்கு ஆதாரமாகிய கூரிய வாள். மனோவாக்குக் காயங்களினால் உலகத்தவர்க்கு நன்மையைப் புரிந்து புண்யத்தைத் தேடுவதற்கான சீரிய ஸாதனம்.

தயை, சாந்தம், பெருந்தன்மை, பரோபகாரச் சிந்தை முதலிய விலையற்ற சர்வோத்தமமான கல்யாண குணங்கள் வந்து பொருந்துவதற்குரிய பொருப்பு.

அத் திருப்தியே, அறம் விளர்ந்து, பாவந்தேய்ந்து, அறியாமை நீங்கிச், சித்தம் சுத்தியாய், நித்யாநித்யம் என்னும் பகுத்துணர்வு மேம்பட்டு, அநித்யமாகிய இம்மை மறுமை இன்பங்களிலே வெறுப்புற்று, பிறவித்துன்பம் இத்தகையதென உய்த்துணர்ந்து, ஆய்ந்து, நித்யமாகிய முக்திப்பேற்றை அடைவதற்கேற்ற அடிப்படையுமாகும்.

அதனைக் கொண்டார் எப்பொழுதும் இடையறா இன்பத்தை யடைவர். அன்னணம் அறிந்து நிற்பதுவே எடுத்த பிறவிக்கு ஏற்றம். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தத்தம் சக்திகளைத் திரிபின்றி அவ்வழியின் கண்ணேயே நிலைபெற்று நின்று ஆழ்ந்தறிந்து அளவிட்டுப் பார்ப்பதுவே இன்றியமையாக் கடப்பாடாகும்.

நிற்க, அதிருப்தி கொண்டார் மனம் ஒருவழிப்படாது, பறவைபோல் அலக்கண் உற்று எக்காலும் எவ்விடத்தும் துன்பத்தையே அடையும். அன்னவர்க்கு மன ஆறுதல் என்பது கனவிலும் எட்டுணையும் உண்டாகாது.

மின்னலைப்போன்று இடைவிட்டு ஒளிர்கின்ற நிலையற்ற வாணாளைப்பெற்ற மானுடர், தமக்கு எவ்வளவு இருப்பினும், இன்னும் வேண்டும் என்னும் நீள் நினைவு உண்டாகி, ‘எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாக’ ஏங்கித் தவித்து அலைந்து நிற்கின்றனர்.

எரியுந் தழற்கு எவ்வளவு கட்டையை அளிப்பினும் திருப்தியே கிடையாது; பரந்த கடல் தன்னிடம் எவ்வெளவு ஆறுகள் பெருகித் தினைப் பொருள்கள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்துத் திரட்டி யுருட்டிக்கொணர்ந்து கொடுத்துக் கலப்பினும், திருப்திகொள்ளாது, என்னும் விஷயங்களை ப்ரத்யக்ஷமாகக் கண்டுணர்ந்தனர் அறிவுடையார்.

ஆகவே, நெருப்புத் தன்னிடம் விறகு உள்ளவரை எரித்து அவ்விறகு மாண்டவழித் தானும் மாய்வதுபோல, செல்வம் கிடைக்குந்தோறும் மனவமைதி பெறாது இருந்து, அது கழியுங்கால் வாடி வதங்கித், தேகம் இளைத்து, மனமயர்ந்து, பெருமூச்செறிந்து, நாளுக்கு நாள் வலிகுன்றி, முன்னிருந்த ஆற்றலுஞ்சிறுகி அழிவது, என்பது உலக இயற்கை. இக்கருத்தை யடக்கியே நீதிநெறி விளக்கத்தாரும்,

"பெற்ற சிறுகப் பெறுத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க்கு ஆக்கம் பெரிதம்மா—முற்றும்
வாவா வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழல் மாயா திரா"

என்றனர். பேராசையே வடிவமாகக்கொண்ட மீதாசையன்(Midas)கதையைப் படிக்காதவர்கள் மிகவும் சொற்பம். அவனுக்கு உண்ணும் உணவும், பருகும் நீரும் தங்கமாக மாறினவன்றோ? 'நாயுந்தன் நிழலும்' என்ற சிறு கதையும், ப்ரதி தினமும் ஒரு தங்க முட்டை யிட்டுவந்த ஒரு வாத்தை ஒரே சமயத்தில் ஏராளமாய் அடைய விரும்பிக்கொன்ற பேராசைக்காரன் கதையும், **'அதிருப்தி கொண்டார் உள்ளனவற்றையும் இழப்பார்'** என்னும் நீதியை; நமக்குப் புகட்டுகின்றன வல்லவா?

நாம் எப்பொழுதும் நம்மினுங் குறைவாக உடையவர்களைப் பார்த்து, முழுமுதற் பொருளினருளால் நமக்குக் கிடைத்து இருப்பது போதுமென்றெண்ணி வாணாளை வீணாளாக்காது நற்குண, நற்செய்கை, நற்புகழ் பெறப் பிரயாசைப் படவேண்டுவதே புத்தியுள்ள விற்பன்னர்களின் கொள்கை.

'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா, பெரிதென் றகமகிழ்க"

என்று பிறரும் அறிவுறுத்தி யுள்ளார்.

'பேராசையே பெரிய நஷ்டம்' என்னும் முதுமொழி நம்மை அதிருப்தியாகிய படுகுழியினின்று வெளியேற்றித் திருப்தியென்னும் கரையில் சேர்ப்பிக்கின்றது அல்லவா?

ஒருவன் தனக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் குறைவாகவிருந்து அவைகளை யினி தடையுந் திறமையும் இருக்குங்கால், தனக்கு இருப்பது போதுமென்றெண்ணி யிருப்பது ஆகாது. ஆயின், முயற்சித்துக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைதல் நலம்.

பண்டிதர் S. வேலாயுத முதலியார்.

## V. சூரியனும் பூமியும்—தினகதி
### SUN & EARTH—DIURNAL MOTION

நாமிதுவரையில் சூரியனைப்பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டோம். நம்மிடமிருந்து சுமார் 9-கோடி மைல் தூரத்தில் அவாந்திரமாக தாங்கலற்று நிற்கும் இப்பெருங்கோளம் நமக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் ஸதா வீசிக்கொண்டே யிருக்கிறது. சூரிய உஷ்ணமில்லாவிட்டால் இவ்வுலகில் ஒரு பிராணியும் ஜீவித்திருக்கமுடியாதென்று முன்னால் சொன்னோம். அதன் ஒளிப் பிரவாகம் நம்மிடம் ஓடிப்பாயாவிட்டால், எல்லாம் ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக்கிடக்கும். சூரியவொளி யில்லாவிட்டால், சந்திரகாந்தியும் விளக்குகளும் நமக்கில்லையாவென்று ஆக்ஷேபிக்கலாம். அது முழுப்பிசகு. எப்படி இரவில் விளக்கில்லாவிட்டால் நம் வீட்டறைகளிலுள்ள சாமான்கள் கண்ணுக்குப் புலப்படாவோ, அப்படியே சூரியனென்னும் மகா விளக்கில்லாவிட்டால், சந்திரன், குரு, சுக்கிரன் முதலான கிரகங்கள் நமக்குத் தென்படா. ஏனெனில் அவைகளுக்கு ஸ்வயமாகவே பிரகாசிக்கும் தன்மை கிடையாது. அவைகளின் ஒளி முழுதும் ஸூரியனுடையதே. ஸூரியனிடத்திலிருந்து நாலா பக்கங்களிலும் பாய்ந்தோடும் ஜோதி அக்கிரகங்களின்மேற் பாய்ந்து, பிரதிபலித்து, நம் கண்களில் பிரவேசித்து அவைகளைப் புலப்படுத்துகின்றது. இவ்வுலகிலுள்ள விளக்குகளெல்லாம் தங்கள் வெளிச்சத்தை சூரியனிடத்தினின்றே பெறுகின்றவென்பது நவீன சாஸ்திரங்களில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது, ஆகவே, சூரியனில்லாவிட்டால் நக்ஷத்திரங்களினின்று வரும் சுவல்ப வெளிச்சத்தைத் தவிர நமக்கு வேறொன்றுமிராது.

மேலும், சூரிய வெளிச்சத்தை நாம் தினம் 60 நாழியும் அனுபவிக்கிறதில்லையல்லவா? காலையில் சுமார் 6-மணிக்குக் கீழ்த்திசையிலுதித்து, வரவர ஆகாசத்தில் மேலேறி, நடுப்பகலில் வான



மத்தியத்தை யடைந்து, அதன்பிறகு கொஞ்சங் கொஞ்சமாக மேற்றிசையில் சாய்ந்து மாலை சுமார் 6-மணிக்கு அஸ்தமாகிறது. அடுத்த நாள் காலையில் 6-மணிசுமாருக்கு மறுபடியும்கீழ்த்திசையில் தோன்றிப் பிரகாசிக்கிறது. இதனால் நம்மைப் பகலில் 12-மணி நேரம் ஒளியும், இரவில் 12-மணி நேரமிருட்டும் சூழ்ந்துகொண்டு நிற்கிறது. சூரியோதயமாகையில் திடீரென்று வெளிச்சம் தோன்றி நம் கண் திகைக்காதபடி அருணோதய மங்கலொளியும் சூரியாஸ்தமன காலத்தில் திடீரேன்று இருள் மூடிக்கொள்ளாதபடி அஸ்தமனஸமய மங்கலொளியும், நம்மைச் சுற்றி யிருக்கும் வாயுமண்டலத்தின் உதவியாலுண்டாகின்றன.

இதனால், பூமியில் இரவும் பகலும் 12-மணிக்கொருதரம் மாறிமாறி வந்துகொண்டே யிருக்கின்றன. மேற்கில் அஸ்தமாகிற சூரியன் எப்படி எவ்வழியாகக் கிழக்கில் வந்துதிக்கிறது? இதைத் தெளிவாய் எடுத்துச்சொல்ல வெகு பேருக்குத் தெரியாது. அஸ்தமாகிற சூரியன் அப்படியே நஷ்டமாய்ப் போகிறதென்றும், தினந் தினம் ஒரு புது ஸூரியன் தோன்றுகிறதென்றும் ஆதிகாலத்தில் சிலர் நம்பியிருந்தார்கள். இவ்வளவு பிர்மாண்டமான சூரியனைத் தினம் தினம் புதிதாகச் சிருஷ்டிக்க வேண்டியிருந்தால் அதற்கு எவ்வளவுசாமான்கள்வேண்டியிருக்கும்! அப்படித் தினமொரு சூரியனை இழப்பதாலுண்டாகும் நஷ்டமெவ்வளவு! இது வாஸ்தவமான ஸ்திதியாகத்தோன்றவில்லை. மற்றும்சிலர்சூரியன் சிறகுகளுள்ள குதிரைகள் பூட்டிய ரதத்திலேறி, ஆகாயமார்க்கமாய்ப் பறந்து சென்று அஸ்தமானதும், வடக்கு திக்கிலிருக்கும் **மகாமேரு** வென்னும் ஒரு பெருமலையின் உத்திர பாரிசமாகத் திரும்பிச்சென்று மறுபடி கிழக்கிலுதிப்பதாக எண்ணியிருந்தார்கள். ஆதிகால ஐரோப்பியர், **வல்கன்** (Vulcan) என்னும் ஒரு பெருந் தேவதை அஸ்தமிக்கும் சூரியன் சமுத்திரத்தில் வீழ்ந்தணைந்து போகாமல் தாங்கித் தன் பெருந்தோணியில் ஏற்றிக்கொண்டு வடக்கு சமுத்திரத்தின் வழியாகக் கீழ் சமுத்திரத்தை யடைந்து மறுபடியு முதயமாகும்படி செய்வதாக நம்பியிருந்தார்கள். நாகரீகத்திலும் சாஸ்திர ஞானத்திலும் விருத்தியடைந்திருக்கிற நாம் இவ்வித அபிப்பிராயங்கள் சரியல்லவென்று தெரிந்துகொண்டிருக்கிறோம்.

படகுகளிலும் பெருங் கப்பல்களிலுமேறி மேற்றிசை அல்லது கீழ்த்திசையை நோக்கித் தீர்க்க யாத்திரை செய்திருக்கிற மாலுமிகள் சூரியன் நமக்குத் தோன்றுகிற பிரகாரம் சாயங்காலத்தில் மேற்கு சமுத்திரத்தை யடைவதாகக் கண்டதேயில்லை. மேலும், போகபோகப் பூமி தட்டையாயிராமல், பெரும் பந்தின் தலத்தைப் போல வளைந்திருப்பதாகவும், ஒரே திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தால் முதலில் கிளம்பின ஸ்தானத்திற்கே திரும்பிவந்துவிடலாமென்றும், அநுபவசித்தமாகத் தெரிகிறது. இதனால் பூமி தட்டையானதல்ல, பந்துபோல உருண்டையானதென்று ஊகிக்கலாம்.

வடக்கு சமுத்திரப் பக்கமாக யாத்திரை செய்திருக்கிற பிரயாணிகள் மேற்சொன்னபடி **வல்கனை** (Vulcan) யாவது அவன் படகில் ஏற்றிச் செல்லும் சூரியனையாவது கண்டதேயில்லை. ஆகையால், சூரியன் இப்பூகோளத்தை 24-மணி நேரத்திற் கொருதரம் சுற்றிவந்து, ஒவ்வொரு தேசத்திற்கும் முறையே இரவையும் பகலையும் அளித்து வருகிறதென்று நமக்குத் தெளிவாகிறது.

நமக்கும் சூரியனுக்கும் சுமார் 9-கோடி மைல் தூரமென்று சொன்னோமல்லவா? பூமத்தியமாகச் சூரியன் சுற்றிவரும்பக்ஷத்தில், பிரதிதினமும் சுமார் 28-கோடி மைல் தூரமுள்ள ஓர் மகா யாத்திரை 24-மணி நேரத்தில் செய்து முடிக்க வேண்டி யிருக்கிறது. ஒரு சிறு சுண்டெலி போன்ற பூமியை நடுவிலிட்டு, அதற்காக ஒரு

மத்தகஜத்துக்குச் சமமான சூரியன் ஓய்வொழிவில்லாமல் ஒரு மணிக்கு 1-1/16-கோடி




மைல்வீதம் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறதென்ருல், இது நம்பக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை.

ஆனல் கொஞ்சம் யோஜித்துப் பார்த்தால் இவ்வளவு அசாத்தியமாகத் தோன்றும் விஷயத்தை வெகு சுலபமாக விளக்க ஒரு உபாயம் தோன்றும். சூரியன் 24-மணிக் கொருதரம் 18-கோடி மைல் குறுக்களவுள்ள வட்டமார்க்கமாயோடுவதை விட, இச்சிறு பூமி 24-மணிக் கொருமுறை தன்னைத்தானே சுற்றுவதாக விருந்தால், முன் சொல்லிய தோற்றமெல்லாம் எளிதில் உடனே தெளிவாகும். இதற்கு ஒரு சிறு திருஷ்டாந்தம்.



இப்படத்தில் காட்டியபடி A-என்னும் உருண்டையைப் பூமியாகவும் B-என்னும் விளக்கைச் சூரியனாகவும் பாவித்துக்கொள்ளுங்கள். B-விளக்கு A-உருண்டையைச்சுற்றி, போவதால் A-யின் தலத்தில் உண்டாகும் ஒளி, இருள் வித்தியாஸங்கள் எவ்விதமாக ஏற்படுகின்றனவோ, அதே மாறுதல்கள், A, B, இரண்டையும் ஸ்தானத்தை விட்டுக்கிளப்பாமல், A-யை மாத்திரம் இருந்த இடத்திலேயே சுற்றித்திருப்புவதால் உண்டாகின்றன. இதனுல் சூரியனை நம்பமுடியாத வேகத்தோடு ஒரு மகா பிரயாணம் ஓய்வொழிவில்லாமல் செய்விப்பதைவிட, இச்சிறு பூமி தன்னைத்தானே சுற்றுவதாக நினைத்துக் கொள்ளுதல் எளிது. வாஸ்தவமும் இதுதான்.

இம்மாதிரியாகப் பூமி நம்மையும், நம்மைச் சுற்றியுள்ள அநந்தகோடி வஸ்துக்களையும் தாங்கிக்கொண்டு சுழன்றுகொண்டிருப்பதற்கு பலவிதமானப் பிரமாணங்களுண்டு. அவைகளைப்பற்றிப் பின்னுல் விஸ்தாரமாக விசாரிப்போம். ஆதிகால சூர்யக் கிரந்தங்களில்கூட நம்முன்னேர்கள் இப்பூமியை ஒரு பலாக்காயாகவும், அதன்மேலுள்ள சராசரவஸ்துக்களை அப்பலாக்காயின்மேலுள்ள முட்களாகவும் வர்ணித்திருக்கிருர்கள். இவ்விதமாகப்பூமி நம்மைச் சுமந்து கொஞ்சங்கூட அசங்காமல் சுழன்றுகொண்டிருப்பது வெகு ஆச்சரியமான விஷயமல்லவா? காற்றுட்டமில்லாமல் நிச்சலமாயிருக்கும் தருணத்தில் ஒரு படகிலுட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு அலைகூட அசங்காத ஓர் குளம் அல்லது ஏரியில் மிதந்து சென்ருல், அப்படகு கொஞ்சங்கூட ஆடிச்சலிக்காமலிருப்பதால் நாம் நகர்வதாகக் கூட உணர்கிறதில்லை. வாஸ்தவத்தில் நகர்கிருேமோ அல்லவோவென்று கண்களைத்திறந்துசுற்றியுள்ளமாஞ்செடிமுதலியவைகளைப் பார்த்துத்தான் அறியவேண்டும். அதுபோலவே இப்பூமியாகிற படகு ஆகாய ஏரியில் சலனமற்று நம்மைத் தாங்கிச் சுற்றுவதால் அதன்சுழல் கதியைநாம்உணரக்கூடவில்லை. ஆனல் சுற்றியிருக்கும் சூரியன், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப் பார்த்து நம்முடைய கதியை நாம் அநுமானிக்கவேண்டியிருக்கிறது. இந்நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் சமார் 24-மணிக்கொருதரம் முன்னிருந்த ஸ்தானத்திற்கே திரும்பி வருவதாகத் தோன்றுவதால், இப்பூகோளம் 24-மணிக்கொருதடவை தன்னைத்தானே சுற்றிச் சுழல்வதாக ஊகிக்கலாம்.

S. பாலகிருஷ்ணய்யர், பி. ஏ., எல். டி.



# சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

## XXIII உஷ்ணம்: பரவும் விதம்—ஸ்வரூபம்

## HEAT: ITS TRANSMISSION AND NATURE

II உடன்சென்று பரவல்.—இந்தமாதிரியாகத்தான் உஷ்ணம் த்ரவபதார்த்தங்களுள்ளும் வாயு பதார்த்தங்களுள்ளும் பாவுவது. இங்கு உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதே இல்லை. பதார்த்தங்கள் அணுக்களை உஷ்ணம்பற்றி அதனுடன் பதார்த்தங்களின் உட்பாகத்தில் மேலே கிளம்பி முழுவதும் ஓடிச்சென்று பரவுகிறது. பின்னர் உஷ்ணம் இழந்த அணுக்கள் விசிஷ்ட கன அளவில் அதிகப்பட கீழே மூழ்கிமறுபடி உஷ்ண உத்பத்திஸ்தானத்தின் அருகாமையில்மறுபடி உஷ்ணமாகி முன்போல மேலேகிளம்பி மறுபடி உஷ்ணத்தைப் பரவச்செய்து வஸ்துவின் உஷ்ண நிலையை அதிகப்படுத்தும். இம்மாதிரி த்ரவம் கொதிக்கும் வரையில் உஷ்ணம் உடன்சென்று பரவும். இம்மாதிரி உஷ்ணம் ஓடிப் பரவக்காரணமாகவிருக்கும் உஷ்ண ப்ரவாஹத்திற்கு உடன்செல்லும் தாரை என்று பெயர். இந்தத் தாரை சுடவைக்கப்படும் த்ரவவாயு பதார்த்தங்களில் இரண்டுவிதமாகக் காணப்படும்.

(1) உஷ்ணமான மத்யதாரை. உஷ்ண உத்பத்தியிலிருந்து நடுவில் நேரே மேல்நோக்கிப் போவது.

(2) உஷ்ணம் குறைந்த பக்கதாரைகள். மேலே இருந்து பக்கங்களின் வழியாக உஷ்ண உத்பத்தியை நோக்கிப் பாய்வன.

ஆதலால் த்ரவங்களையும் வாயுக்களையும் அடியிலிருந்துதான் சுடவைக்கவேண்டும். குளிர வைக்க வேண்டுமானல் மேலே இருந்துதான் குளிரவைக்க வேண்டும். இவ்வாறு செய்யுங்கால் உடன்செல்லும் தாரைகள் மாறிக் காணப்படும். முதலாவது குளிரான மத்தியதாரை குளிர் உத்பத்தியிலிருந்து நேரே கீழே போகும், உஷ்ணமான பக்கதாரைகள் இரண்டாவதானவை. இவை பக்கங்கள் வழியாகக் கீழே இருந்து குளிர் உத்பத்தியை நோக்கிச்செல்வன.

முற்கூறிய தாரைகளால் தண்ணீர் ஸாதாரணமாகக் காய்ச்சப்படுங்கால் சூடாகின்றது என்பதைச் சோதனை மூலமாகக் காட்டுவோம். ஒரு பெரிய குவளை பாத்திரத்தை எடுத்து அதனுள் தண்ணீரைவிட்டு ஒரு சிறு



மூக்காலியின்மேல் வைப்போம். பின்பு தண்ணீருள் கண்ணுடிக்குழாய் மூலமாகத் தண்ணீரை வர்ணப்படுத்தும்வஸ்துத்துண்டுகளை ஸாவதானமாக அடிவரையில் போகும்படிபோடுவோம்.மெதுவாகத்தண்ணீரைக்கலக்காது கண்ணுடிக்குழாயை வெளியிலெடுத்துவிட்டுத் தண்ணீரைச்சாராயவிளக்கால் சுடவைப்போம்.கொஞ்சநாழிகைக்கெல்லாம் வர்ணம் புகைபோல அடியிலிருந்து நேரேகிளம்பி மேல்மட்டம் வந்ததும் நான்கு புறங்களிலும் பரவி பக்கங்கள் வழியாக மழை மேகம் கவிந்து கொண்டிறங்குவதுபோல அடிபாகத்தை நோக்கி இறங்கிவரும். உற்றுநோக்கினல் இரண்டுவிததாரையும் போவதைக்காணலாம். கொஞ்சநாழிகைக்கு எல்லாம் தண்ணீர்முழுவதும் வர்ணமாகிவிடும். இதனுல் தண்ணீரின் அடிப்பாகம் உஷ்ணப்பட அது விசிஷ்டகன அளவில் குறைந்து மேல்நோக்கி கிளம்புகிறதென்றும் அது விட்டவிடத்தை நிறைக்க பக்கங்களிலிருக்கும் குளிர்ந்த தண்ணீர் ஓடிவர அதுவும் சூடாகி மேல் கிளம்புகிறதென்றும், இம்மாதிரி ஓயாது அடியிலிருந்து மேல்நோக்கிய மத்திய உஷ்ணதாரை ஏற்பட அது மேல்போய் உஷ்ணத்தைப் பரப்பிக் குளிர்ந்திருக்கும் முன்பாகத்தைப் பக்கங்களில் தள்ளி பக்கதாரையோடு சேர்ந்து அடியில் வந்து அதிக உஷ்ணம்



பாதிக்கச் செய்து இம்மாதிரி தண்ணீரின் உஷ்ண நிலையை ஏற்றுகிறதென்றும் தெரியவருகிறது. இம்

மாதிரியே வாயுவிலும் ஏற்படக் காற்று உண்டாகிறதென்று காற்று என்னும் வ்யாஸத்தில் (தொகுதி 2. பக்கம் 220) புகைப்போக்கி சோதனையில் எடுத்து விஸ்தரித்திருக்கிறோம். குளிரால் ஏற்படும் உஷ்ணம் செல்லும் தாரைகளை எளிதில் காட்டிவிடலாம். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து அதில் ஒரு சிறு பனிக்கட்டியை மிதக்கவிடுவோம். ஊதா வர்ண எழுதுகோலைப்பனிக்கட்டி அடியில் தண்ணீரில் தோய்ப்போம். அதன் வர்ணம் உடனே கீழ்நோக்கி இறங்கிப் பரவும்.

இம்மாதிரி த்ரவங்களில் உஷ்ணம் உடன்சென்று பரவுங்கால் அவைகளைத் தாங்கி நிற்கும் பாத்திரங்களில் உஷ்ணம் உறைக்காது. இதை நன்றாக விளக்கிக்காட்டக் காகிதத்தால் ஒரு தொன்னை தைத்து அதில் நிறையத் தண்ணீரைவிட்டு அதை ஒரு ஆதாரத்தில் தொங்கவிடுவோம். அதை அடியிலிருந்து சுடவைப்போம். உள்ளே இருக்கும் தண்ணீர் கொதிக்குங்காலத்து காகிதம் எரியாது. உஷ்ணம் காகிதத்தின் வழியாக உள்ளிருக்குந் தண்ணீருள் சென்று பரவுவதால் காகிதத்தில் தாக்குவதில்லை. ஈயச்சொம்பு பாத்ரங்களை அடுப்பில் வைக்குங்கால் உள்ளே தண்ணீர் விட்டு வைப்பது இந்தக் காரணம்பற்றித்தான். இப்படிச் செய்யாவிடில் ஈயம் உருகிவிடும்.

த்ரவங்களிலும் வாயுக்களிலும் உஷ்ணம் உடன்சென்று பரவி அவைகளை உஷ்ணநிலையில் ஏற்றுகிறது என்ற விஷயத்தால் நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம்.

(1) எப்பொழுதும் குளிர்ந்த ஜலத்தில் வெந்நீரை விடலாகாது. அப்படிச் செய்தால் அவைகள் சீக்கிரம் கலந்து ஒரே உஷ்ண நிலையை அடையா. ஆதலால் எப்பொழுதும் வெந்நீரை முதலில் விட்டு மேல் குளிர்ந்த ஜலத்தை விட்டுக்கலக்க முயலவேண்டும்.

(2) ஸமுத்திரத்தில் த்ருவஸ்தானத்தை நோக்கி நிரக்ஷரரேகையிலிருந்து மேலாக உஷ்ணநீர் ஓடுவதும் அங்கிருந்து கீழாகக் குளிர்ந்த ஜலம் வருவதும், இதனால்தான். நிரக்ஷரரேகையில் உஷ்ண அதிகத்தால் நீராவி வெளியே போவதால் நீர் மட்டம் குறையவும், உஷ்ணமாகவும் ஆகிறது. த்ருவஸ்தானத்திலோ பனிக்கட்டிமுதலியவைகளால்குளிர்ந்தஜலம் உள்ளே தள்ளப்பட்டு அது நிரக்ஷரரேகையைநோக்கிவா அங்குஉஷ்ணமாக மேல் இருக்கும் நீர் மெதுவாக த்ருவஸ்தானம் நோக்கிப்போகும். இம்மாதிரியுள்ள நீரோட்டம் காற்றினங்களாலும், நிலத்தின் உருவத்தாலும் மாற்றப்பட்டு அநேகவித ஸமுத்ர நீரோட்டங்களாக மாறுகின்றது. இதை நன்கு விளக்கிக்காட்ட ஒரு சோதனையைச் செய்துகாட்டுவது உண்டு. ஒரு பெரிய கண்ணாடிப் பாத்திரத்தை எடுத்து அது நிறையத் தண்ணீர் விட்டு குறுக்கே ஒரு ஓரமாக ஒரு இரும்புக் கம்பியைத் தாங்கி நிற்கும்படி வைத்து அதில் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும்படி ஒரு பனிக்கட்டியைக் கூட்டுவோம். எதிரே ஒரு செப்புக்கம்பியை ஓரத்தில் தாங்கி ஒரு நுனி ஜலத்துள் மூழ்கியும் மறுநுனி வெளியில் நீட்டிக்கொண்டும் இருக்கும்படி வைத்து வெளிநுனியைச் சாராயவிளக்கால் சுடவைப்போம்: நன்றாகச் சூடேறியதும் பனிக்கட்டியருகாமையில் வர்ணஜலத்தைக் கொஞ்சநாழிகை விடுவோம். அந்த வர்ணம் பனிக்கட்டியிலிருந்து கீழே இறங்கி செப்புக்கம்பி அடிவரையில் போய் மேலே கிளம்பி அதன் அருகேசென்று மேல் மட்டம் வழியாகவே பனிக்கட்டியை நோக்கி வந்து மறுபடியும் முன்போன வழியே சுற்றிக்கொண்டு போகும். இதில் பனிக்கட்டி பூமியின் வடக்குத் துருவத்தையும், காய்ந்த செப்புக்கம்பி நிரக்ஷர பாகத்தையும் தண்ணீர் ஸமுத்ரத்தையும் குறிக்கிறது.

(3) காற்றுப் போக்கிகள் வைக்கும் மார்க்கமும் இதனால் தான். ஸாதாரண வீடுகளில் படுக்கும் அறைகளிலாகட்டும் அல்லது அநேகர் கூடும் உபந்யாஸ சாலைகளிலாகட்டும் காற்றுப்போவதற்கும் எதிர் எதிராக வாயிலையும் சன்னலையும் ஏற்படுத்தி மேல்பாகத்தில் சிறு பலகணிகளும் விடுவதுண்டு. உள்ளே இருப்பவர்கள் மூச்சுக் காற்றாகிய உஷ்ணவாயு மேலே கிளம்ப அதுமேலே இருக்கும் பலகணிகள் வழியாக வெளியே போகும். அப்பொழுது குளிர்ந்த சுத்தமான காற்று அடியிலுள்ள ஜன்னல்கள்வாயில்கள் வழியாக உள்ளே புகும்.

(4) காற்றுகளும் காற்றினங்களும் இந்த மாதிரி உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதால்தான் உண்டாவது. இதைக் காற்றும் காற்றினங்களும், என்ற வ்யாஸத்தில் விவரித்தாய் விட்டது. (தொகுதி. 2—பக்கம் 250.)

III. நேராகப் பரவல்.—முற்கூறிய இரண்டு வழிகளிலும் உஷ்ணம் ஒரு வஸ்துவைப் பற்றியே



பரவுகிறது. இந்த வழியில் உஷ்ண உத்பத்தியிலிருந்து உஷ்ணம் நேர்கோட்டின் வழியாக எல்லாப் பக்கங்களிலும் பரவுவது. இதற்கு ஒருவித வஸ்து ஆதாரமும் வேண்டாம். ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் வருவது இம்மாதிரிதான். மூன்று விதமாக உஷ்ணம் பரவுவதை நன்கு விளக்க ஒரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். ஒரு அடுப்பின்மேல் பித்தளைபாத்திரத்தில் தண்ணீரை வைத்து அருகாமையில் நாம்உட்கார்ந்து பார்த்துவருவோம். தண்ணீர்சூடாவது உஷ்ணம் உடன்சென்று பரவுவதால். பித்தளைப் பாத்திரத்தில் சூடேறுவது உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதால். நமது முகம் தேஹம் இவைகளில் உஷ்ணம் தாக்குவது உஷ்ணம் நெருப்பிலிருந்து எல்லாப் பக்கத்திலும் நேரிடப்பரவுவதால். ஆகவே ஒரு வஸ்துவிலிருந்து எப்பொழுதும் உஷ்ணம் சுற்றும் முற்றும் நேரி



டப் பரவிக்கொண்டே இருக்கும். சூடான பதார்த்தங்கள் ஆறுவது இதனால்தான். ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் வாங்கும் நிலம் அதை மறுபடி ஸூர்யவெப்பம் குறையக்குறைய வெளியே நேரிடப் பரவவிடுகின்றது. தண்ணீர் இவ்வளவு சீக்கிரம் வெளிவிடாது. சீக்கிரமாக உஷ்ணத்தை வாங்கும் தன்மையை உடைய வஸ்துக்கள் சீக்கிரமாக அதை நேரிடப்பரவவிடும்; மெதுவாக வாங்கும் திறனுடையவை மெதுவாக அந்த நேரிடப்பரவவிடும். காலை 8-மணிமுதல் நடுப்பகல் 2-மணிவரையில் நிலம் உஷ்ணமாயும், தண்ணீர் குளிர்ச்சியாயும் இருக்கும். நிலம் உஷ்ணத்தை சீக்கிரம் வாங்கும்திறனுடையதாதலாலும் தண்ணீர் சீக்கிரம் வாங்கும் சக்தியற்றதாகவிருத்தலாலும்முன்னது அதிக உஷ்ணம்போலவும், தண்ணீர் குளிர்ச்சிபோலவுங் காணப்படும். மாலைநேரத்தில் குளக்கரை குளிர்ச்சியாகவும் குளத்துநீர் உஷ்ணமாகவும் காணப்படும். மாலைக்குள் சீக்கிரம் உஷ்ணம்வாங்கிய நிலம் தன் உஷ்ணத்தை இழந்துவிட, மெதுவாக உஷ்ணம் வாங்கிய தண்ணீர் அவ்வாறு செய்யமுடியாது உஷ்ணத்துடனிருக்கிறது. இதனால்தான் முற்கூறியபடி மாலையில் காணப்படுகிறது. பொதுவாகக் கரிய வஸ்துக்கள் உஷ்ணத்தைச் சீக்ரம் வாங்கி சீக்ரம் வெளிவிடும் சக்தி உடையவை, வெண்மையான வஸ்துக்கள் சீக்ரம் உஷ்ணம் ஏற்கும் திறனுடையவை யல்ல.

உஷ்ணத்தின் ஸ்வரூபம்.—இதுகாறும் எடுத்துவிஸ்தரிக்கப்பட்ட உஷ்ணத்தின் ஸ்வரூபம் என்ன என்று சங்கை பிறக்கும். உஷ்ணமும் சப்தத்தைப்போல வஸ்து அணுக்களின் ஸூக்ஷ்ம நடுக்கம். ஆனால் சப்திக்கும் வஸ்துவைவிட உஷ்ணமுடைய வஸ்து வேகமாக நடுங்கும். ஆகவே உஷ்ணமும் ஒருவித சக்தி. இது புகை வண்டியில் அசைவாக மாற்ற முடிவதாலும், இதன் கார்யங்கள், இனம் மாற்றம், பெரிதாக்கல் முதலிய ஆதலாலும் இது கார்யம் செய்யும் திறனுடைய ஒரு சக்தி என்பது பொருந்தும். ஒரு வஸ்துவைச் சுடவைத்தால் உஷ்ணநிலை ஏற ஏற அதன் அணு நடுக்க வேகம் ஏறுகிறது. வஸ்து எளிதில் உருகாத இரும்பு முதலியவையாக இருப்பின் வெகு நாழிகையானதும் நடுக்க அதிகத்தால் சிவப்பு ஒளிவருகிறது. இந்த ஸமயத்தில் அது பழுக்கக் காய்ந்தது என்பார்கள். மேலும் சுடவைத்தால் இருட்டறையில் அது வெள்ளை ஒளி கொஞ்சம் விடும். ஸூர்ய வெளிச்சத்தில் அது வெளுப்பாகக் காணப்படும். இதை இப்பொழுது வெளுக்கக் காய்ந்தது என்றே கூறவேண்டும். ஆகவே நடுக்க அதிகத்தால் உஷ்ணம் ஒளியாக மாறும். இந்த ஒளியின்விஷயத்தைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பீ. ஏ., எல். டி.

# ஷேக்ஸ்பியர்

## பிறப்பு, வளர்ப்பு, கவிமாண்பு

**(SHAKESPEARE (A LIFE-SKETCH.)**

(378-ம் பக்கத்தொடர்ச்சி.)

**என்**றாலும் ஷேக்ஸ்பியர் செடி மரம் கொடி முதலியவற்றைப் பார்த்து அவைகளின் இயற்கையைப் பற்றி புத்தகமெழுத எண்ணவில்லை. கூடியவரை குறிப்பாகப் பார்த்து, தன்கவியுள்ளலங்காரமாக எங்கெங்கமைத்தல் கூடுமோ அவ்விதமா யன்றி மற்று வெகுவாய் இவைகளைக் கற்கவில்லை.

**லாட்டினில்** ஆவிட், ஹாரஸ், ஜூவெனல், சிசரோ, செனீகா, பிளௌடஸ் முதலியவர்கள் எழுதிய புத்தகங்களை, பள்ளிக்கூடத்திற் கற்கும்பொழுதிருந்த அறிவை விர்த்திபண்ணி எளிதில் தெரிந்து கொள்ளுந் தேர்ச்சியடைந்தார். என்றாலும் ஆவிட் தவிர மற்றவர்க ளெழுதியவற்றைப் பிரயோகிக்குங் காலத்து ஆங்கிலேய மொழிபெயர்ப்பையே பிரயோகித்தார்.

தர்க்கம் முதலியவற்றை லாட்டினில் படித்தது தன் நாடகங்களில் அவைகளைக் கேலிபண்ணவே அதிகமாகத் தனது வேடிக்கை நாடகங்களி லுபயோகித்தார். இதே சமயத்திலாவது, அல்லது பின்னால் னது நண்பர்கள் பேசுவது முதலியவற்றிலாவது, ான் படிக்கக்கூடியவற்றில் படித்தாவது, தந்தேசத்துச் த்ரவஞ்சரித்தைத் தெரிந்துகொண்டார்.

லண்டன் நகருக்கு வந்தபிறகு, அவ்விடத்தில் நடக்கும் விஷயங்களை வெகு குறிப்பாகப் பார்த்தாரென்று தெரியவருகிறது. ஹென்றி நாலாவதவர் என்னு நாடகத்தில் பால்ஸ்டாவ் என்பவன் தன் கூட்டாளிகளைக் கொண்டு திருடின விஷயம் அந்தக் காலத்தில் வெகு ஸாதாரணமாய் நடந்து வந்தது என்று **ஹாரிசன்** என்பவர் ஹாலின்ஷெட் எழுதிய வருஷக்குறிப்புக்குச் சேர்த்தெழுதியவற்றில் சொல்லி யிருக்கிறார். இது விஷயமும், அக்காலத்தில் ஏமாந்தவர்களைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகும் சூட்சவழி என்று கிரீன் எழுதிய புத்தகத்திலுள்ள விஷயமும் ஷேக்ஸ்பியர் வெகு விஸ்தாரமாக வெடுத்துக் கையாண்டிருப்பதால் இவற்றை யெல்லாமவர் குறிப்பாகப் பார்த்திருத்தல் வேண்டும்

இதே சமயத்தில் ஸௌதாம்டன் பிரபுவினுடைய பழக்கத்தினாலும், எலிசபெத் மகாராணிக்கு முன் ஆட்டம் ஆடுவதாலும், அரசாது நடவடிக்கைகளை, மற்றவர்கள் நடவடிக்கைகளைக் கற்றுக்கொண்ட நுண்மையோடு, அறிந்துகொண்டார். இவர் நாடகங்களில் எலிசபெத் மகாராணியைப் பற்றியும், அவளுக்குப்பின் பட்டத்திற்கு வந்த **ஜேம்ஸ்** என்னு மரசனையும் வெகுவாய்ப் புகழ்ந்து அவர்கள் தாங்கள் எதில் சிறந்தவர்களென்று நினைத்தார்களோ, அவ்விஷயத்தையே மிகுதியும் பாராட்டிப் பல நாடகங்களில் புகழ்ந்து பேசியிருக்கிறார். இவையும், இனி, உயர் குலத்திற் பிறந்தவர்க்குமட்டுந்தோன்றும் பெருந்தன்மையான வார்த்தையும்பெருந்தன்மையான நடத்தையும் வெகு முக்யமாய் தெரிந்து, **அன்பின் முயற்சி வீண்பாடு** என்னு நாடகத்தில், மாக்காபியஸ் முதலிய சாதாரண மனிதரைப்பற்றி இரக்கங்கொள்வதாக இராஜகுமாரத்தியையும், **பன்னிரண்டாவதிரவு** என்னு நாடகத்தில், ஸர் டாபி பெல்ச் என்னுங் குடிகார பந்துவைக் காப்பாற்றி, மல்வோலியா என்பவன் கஷ்டப்படுங்கால் அவன் கஷ்டத்தைத் தீர்த்துவிட்டு, பின் தன் விஷயம் பார்ப்பதாக ஒலீவியா என்பவளையும் நடிப்பித்துக் காண்பித்திருப்பது — இவ்வித அறிவின் அத்தாட்சிகளிலிரண்டாகும்.

ஷேக்ஸ்பியர், பிரயாணஞ் செய்தது எவ்வளவு இருக்கலாமென்று முன்னேயே குறிப்பிட்டிருக்கிறோம். அவ்விஷயத்தின் முடிவாக அவர், ஊர்வழி போனவர்கள் சொன்னதைக் கேட்டதன்றி, தானே யதிகமாய்ப், பிரயாணம் பண்ணினதாகத்தெரியவில்லை. தனது கடைசி நாடகங்களில் கிராம வழக்கங்களையும் கிராம தோற்றங்களையு மதிகமாகக் குறிப்பிடுவது அவர் ஸ்ட்ராட்போர்டில் வீடுவாங்கிவருஷமொருமுறைவந்துபோவதினாலிருக்கலாமென்று சொல்லலாம். இது பற்றியே போர்களும், அரசாங்க மாட்சிமையையும், மனிதர்க்குண்டான துன்பமும், விசாரமும், இடையூறும் எல்லா முரைத்தவர், பர்டிடாவினது தோட்டத்தையும், ஆடுகளுக்கு மயிர் கத்திரிக்குங்காலத்தையொட்டிய வேடிக்கைகளையும் நமக்குச் சொல்லுகிறார். இந்நாடகங்களில் மேலும், அன்பும், அழகும்வாய்ந்த பெண்மணி ஒருவள், தன் தகப்பனால் பிரியமாக வளர்க்கப்பட்டு அல்லது, வெகுகாலம் பிரிந்து பின் தன் தகப்பனரைக் கண்டுபிடிப்பதாயும், மிகுதியும் அன்பினோடு, அதிக விமர்சையாகக் காட்டியிருக்கிறார். இதை அனேகர் தன்மகள் ஜூடித் என்பவள் மேலுள்ள பிரியத்தை யிவ்வாறு காட்டியிருக்கலாமென்பதுண்டு. ஷேக்ஸ்பியர் ஜூடித் அன்றி மற்றப்பெண்களைப் பார்த்திருப்பதுண்மையே. என்றாலும் 'பெற்ற மனம் பித்து' என்பதுபோல் ஷேக்ஸ்பியருங்கூட இம்மனித



இயற்கையுடையராய் மற்றவரிலுந் தன் மகளையே யதிகமாய்ப் பார்த்து அவள் நடவடிக்கை முதலியனவற்றை இங்ஙனஞ் சேர்த்திருத்தல் கூடும் என்று எண்ண இடமுண்டு.

இவ்வாறு நாமிவர் என்னென்ன பார்த்து எவ்விதமாய் யோசித்திருக்கலாமென்று எண்ணுகிறபோது, சிலர் இதுபோன்ற அனுபவங்களே அதிகம் ஷேக்ஸ்பியாது அறிவின் மாண்மை இவற்றால் சிறிது பட்டது என்றெண்ணுவது அறியாமை. கடலின் தண்ணீரில்பட்டு மின்னுகிற நிலாவும், மரக்கிளைகளிடையே பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களும், புதரில் மின்னு மின்மினிப் பூச்சிகளும் ஆறுகளும் அருவிகளும், பள்ளத்தாக்கிலுள்ள புல்லும் புஷ்பங்களும், பறக்கின்ற பாடுகின்ற பக்ஷிகளும், மனித இயற்கையும், தேச தோற்றங்களுமெல்லோருக்குக் கிட்டுவனவே. ஆனால் அவற்றின் உட்பொருளின் மெய்ப்பொருளை யுணர்ந்து, அவற்றின் அழகும், அருமை யமைப்புந் தெரிந்து கண்டதோர் காக்ஷியினையும், பட்டதோர் மனவெழுச்சி, மனக்கவலை, அன்பு, முதலியனவற்றை மற்றையோர்க்கு மவ்வணமே படும்படி ஒரு புதிய அறிவினை உண்டாக்குந் திறமுடையவரே கவியாவர். அத்தகைய கவிக்கு இவ்வளவு அனுபவ ஆட்சிமை யிருத்தல் மிகுதியு முதவியாயினும் அவரறிவே சிறந்ததென்று தெற்றெனத் தெரிவதோர் விஷயமாகும்.

இனி இவர் கற்ற புஸ்தகங்கள் எவ்விதமா யிவர் அனுபவ சக்தியை அதிகரித்தன வென்று பார்க்க வேண்டும். இவர் புத்தகங்களை இருவிதமாக வுபயோகித்தார். முதலாவது அவைகளிலுள்ள கதைகளையெடுத்து வேண்டாதவற்றை நீக்கி, வேண்டுவனவற்றைச் சேர்த்து மற்று முள்ளவைகளைச் சீர்திருத்தி, ஆரம்பித்ததினின்று வெகுவாய் மாறுபடுத்திச், சிறந்த அழகையு முண்மையும் வாய்ந்திருக்குமாறு செய்வித்தார். மற்றுமவற்றினின்றுதான் எழுதவேண்டிய விதமுங்கற்றுக்கொண்டார். வெகுகவலையாய், மெள்ள, வார்த்தை வார்த்தையாய்ப், படிப்பவர்களைப்பற்றி யிழிவாகவே பேசுகிறார். தன்னுடைய வழி, ஒரு புஸ்தகத்தைச் சுறுசுறுப்பாய், வெகு சீக்கிரத்தில் படித்து அதில் வெகு முக்யமானவற்றை க்ரகித்துக்கொண்டு, மேன்மேலும் வேறு புஸ்தகங்களைப் படிக்க வாரம்பிப்பதேயாம். இவர் படித்த புஸ்தகங்களைப்பற்றி அதிகமான முயற்சியோடு அனேகர் எழுதியிருக்கிறார்கள். என்றாலுமவை யீங்கே யெடுத்துரைப்பதிற் பயனில்லை. மார்லோ, லில்லி, ஸிட்னி முதலியவர்கள் எழுதியவற்றையும் பார்த்திருந்ததாகத் தெரியவரும். நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியது இவை எவற்றினின்று தனது கதைகளை யெடுத்தாரென்பதே. இது விஷயம் நாடகங்களைத் தனித்தனியே பார்க்குமிடத்து விஸ்தாரமாய்ப் பார்ப்போம். ஹாலின்ஷெட், ஸின்தியோ முதலியவர்களது புஸ்தகங்களையும், நார்த் என்பவர் மொழிபெயர்த்த புளூட்டார்க்கினுடைய சரிதங்களையும் அதிகமாக வுபயோகித்தார். மான்டெயின் எழுதிய வ்யாசங்களையும் பலவிடங்களிற் கையாண்டிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம். இதுபோக அக்காலத்தில் வெளிப்பட்ட சிறுபாட்டு, துண்டு காகித முதல் ஒரு பார்வை பார்த்திருக்கக்கூடும். ஏனென்றால் நாடகவாயிலான் மனிதரை ஸந்தோஷிக்க முயலுபவர், அன்றன்றைய விஷயங்களைக் கூடச்சேர்த்து ப்ரயோகித்து வந்தால்தான் எல்லோரையும் ஸந்தோஷிப்பித்தல் கூடும். இவ்விதமாய்த் தனது திறமையை மேம்படுத்திக்கொண்டவர் எவ்விதமாய் இவற்றைத் தனது நாடகங்களிலுங் கவிகளிலுந் தெரிவித்தாரென்று பார்ப்போம்.

இச்சமயத்தில் 1593-ம் வருஷத்தில் எழுதிய **வீனஸூம், அடோனிஸூம்** என்னுங் கவியும், 1594-ம் வருஷத்திலெழுதிய **லூக்ரீஸ்** என்னுங் கவியும் இவரது கவித்திறமை மலர்ந்து பூத்துச் சொரிதலைக் காட்டுகின்றன. ஆனாலிவற்றினின்று மனிதருடைய நடவடிக்கை யனுபவ முதலியவற்றைத் தக்கவாறு ஆண்டிலர். அழகாக அமைக்கப்பட்டிருப்பதே யிவற்றின் முக்கிய சிறப்பாம். இவ்விடத்தே இவரெழுதிய சிருங்கார கவிகளைப்பற்றி யோசித்தல் தகுதி. அவை மொத்தம் நூற்றுநாற்பத்தாறு கவிகள். அவற்றில் நூற்றிருபத்தாறு அழகாயவோர் மனிதனுக்கும், மற்றவை அழகில்லாவிட்டாலு மன்பை யுண்டாக்கிய ஓர் பெண்ணுக்கு மெழுதப்பட்டுள்ளன. இவை முதலில் அச்சிடுவதற்காகவே யெழுதவில்லை. ஆகவே தன் மனதின் அன்பைச் சிறிதுமொளிக்காமல், அன்பு தூண்டியவாறே வார்த்தைச்சிறப்புந் தன்னாலெட்டிய மட்டுஞ் சேர்ந்ததாய், இதற்கே யோரிணையில்லாமல் எழுதப்பட்டுள்ளன. இவை ஷேக்ஸ்பியர் தன்னிலையே யுணர்ந்து தனதன்பின் பெருக்கத்தால், தனக்காறுதலுண்டாகும்படி, அடக்கமுடியாமல் எழுதிய அன்பின் கவிகளென்று எல்லாராலும் நிச்சயிக்கப்படுகின்றன. இதன் முக்யம் என்ன

வெனில் நாடகக்கவியாகிய ஷேக்ஸ்பியர் தனது நாடக புருஷர் வாயிலானுரைப்பது அவ்வவ்வகையினர் உரையே யன்றி இவரதென்று தெளிவாக நிச்சயித்தல் முடியாது. ஒருவிதமாய்ப் பார்க்குங்கால், கொடியவ னொருவன் வார்த்தைகளையும் சத்திய வந்தன் ஒருவன் வார்த்தைகளையும் அவர்களை நாடகங்களிற் சேர்ப்பித்திருப்பதால் ஷேக்ஸ்பியர் எழுத வேண்டியதாகிறது. அவ்வண்ண மெழுதுமிடத்துச் சண்டாளனொருவனை அருவருப்பா யெண்ணினரேல் அவன் மனதினெண்ணம் இவர் கையைவிட்டோடிப் போம். அவனதியற்கையி னுண்மையை ஸரிவரக் காண்பித்தல் முடியாது. ஆகவே அவனாகவே நின்று, அவன்போல நினைத்து, அவன்போலப் பேசினால் மட்டுமே அவன் வார்த்தை ஸாதாரணமாக உலகில் அவன்போன்றவர் வழங்கும் வார்த்தையென உண்மைப்படும். இப்படிப் பல்வேறு வகையான இயற்கையுடைய ஷேக்ஸ்பியரை யெவ்வாறு இவ்வியற்கைதானுடையரென்று சொல்லுதல்கூடும். ஆகவே இச்சிருங்கார கவிகள் போன்ற கவிகளில் தன் மனதினன்பைத் தான் காமுற்ற மனிதனுக்கும், பெண்ணுக்கு மெழுதியது நமக்கு இவரெவ்வளவு அன்பு மிகுதியை யுடைத்தாயிருத்தல் கூடும் என்பதைப்பற்றி ஓர் நிச்சயங் கொள்ளத்தக்க ஸாதனமாகிறது. இதைக் கற்போர் காண்பதென்னவெனில் இவ்வித ரஸம் வாய்ந்தமைக்கப்பெற்ற பாடல்களிலெல்லாஞ் சிறிதுஞ் சந்தேகமின்றி இவை மிக்கச் சிறந்ததென்றும் இதுபோல் யாரும் அன்புடையராதலாவது, அவ்வன்பை யிவ்வளவு அழகாயும, படித்தோர் மனத்தைக் கவர்ந்துருக்குவதாயுங் கவிகளிலமைப்பதுங் காணக் கிடையாதென்பதாம். இவை யவர் வேடிக்கைக்காக வெழுதியவையல்ல. அவருடலின் உதிரத்தினால் எழுதப்பட்டதுபோல், தன் உதடும், இருதயமுமதிரத் தன்னில் உணர்ந்து, எழுதியவை யாகின்றன. நம்மையு மவ்விதமாகவேயவை அவ்வன்பையுணரச்செய்கின்றன வென்றால், இனி யவற்றின் பெருமையைக் குறித்து வேறு சொல்லுதல் வேண்டாம்.

இனி யவர் நாடகங்களைப் பற்றியே குறிப்பாக வுரைத்தல் வேண்டும். ஷேக்ஸ்பியர் நாடகங்களுககு முன்னிருந்த நாடகங்கள் மிகுதியும் ஸாதாரணமானவையாயும், அறிவின் நுட்பத்திற்காவது கவியினினிமைக்காவது சிறந்தவை யில்லாமலும், தந்தனப்பாட்டுகளே மிகுந்தனவாயு மிருந்தன. அவை கிறிஸ்திய மதவிஷயமாய்ப் பாதிரிகளால் தம்மதக்கோட்பாடுகளை ஜனங்களுக்கு விபரமாய்க் கண்காக்ஷியாய்க் காட்டுதல் குறித்து ஏற்படுத்தப்பட்டு, பின் அவைகளில் தேசசரிதமும், தொழிலாளியர் வாழ்வும், வேடிக்கைக் கதைகளுஞ் சேர்ப்பிக்கப்பட்டு அக்காலத்திற் கல்வியுடையரான பாதிரிகள் கையினின்று நீங்கித் தொழிலாளிகள் கையிற்பட்டு, வெகு காலத்திற்கப்பால், லில்லி, மார்லோ முதலியவர்கள், தாம் கலாசாலையிற் கற்ற கல்விகொண்டு, அரசருக்கு முன்னும் பிரபுக்களுக்கு முன்னு மாடுமாட்டங்களை வெகுவாய்ச் சீர்திருத்தினார்கள். இவர்களில் மார்லோஎன்பவர் ஷேக்ஸ்பியரது ஸ்நேகரும், ஷேக்ஸ்பியர் நாடகமெழுது முன்னரே மிகச்சிறந்த நாடகமெழுதியவருமானவர். இவர் எவ்விதத்தாலும் மிக்கவறிவினர், நுண்ணறிவும், வாக்குவல்லமையு முடையவர். ஆனால் ஒரு குடிவெறிச்சண்டையில் தனது முப்பதாம் வயதில் குத்துண்டு செத்தார். இவருடைய திறமையும், கிரீன், லில்லி என்பவரது முக்கிய திறமையும் ஷேக்ஸ்பியர் மிகுகவலையாகக்கற்றுத்தன் தொழிலில் விர்த்தியடையமுயன்றார். இவ்வித நாடகங்கள் முதலில் அரசர் முன்னும் பிரபுக்கள் முன்னுமட்டுமே யாடப்பட்டு வந்தன. ஆகவே இப்பிரபுக்கள் சென்றவிடமெல்லாமவர்கூட இந்நாடகக்காரருஞ் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் ஷேக்ஸ்பியர் லண்டனுக்கு வரும்போது நாடகசசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவையொரே யிடத்திலிருக்கவும், பிரபுக்களன்றிமற்ற ஸாதாரண ஜனங்களும் வந்து பார்ப்பதற்குரியதாகவு மிருந்தன. முதலில் ஜனங்களுக்குரிய முண்டா, குஸ்தி, கத்திச்சண்டை கண்கட்டுவித்தை கர்ணம்போடுதல்முதலியன சேர்ப்பித்துவந்தார்கள். இதுவிஷயம் ஷேக்ஸ்பியர்எழுதிய உம் மனம்போலே யென்ற நாடகத்தில் குஸ்திபோடுவதாகக் காண்பித்தலிலும், ஹாம்லெட் ரோமியோவும் ஜூலியட்டும் என்ற நாடகங்களில் கத்திச் சண்டையிற் காண்பிப்பதிலும்அறியலாம். ஆகவே இவர்க்கு முன்னர் ஆட்டக்காரர் செய்தவற்றையுந் தழுவியே அவற்றின்மீது தன் அரிய பெரிய தத்துவங்களையும், கவித்திறன், அனுபவமாட்சி முதலியனவற்றைக் காட்டியிருக்கிறார்.

ஷேக்ஸ்பியர்நாடகமெழுதவாரம்பித்துச் சிலகாலத்திலேயே, அரண்மனையில் வேலையாயிருந்த பிரபுவின் நாடகக்கார ரொருவராய்ச்சேர்ந்து பிறகு ஜேம்ஸ் என்னு மரசன் பட்டத்துக்கு வந்தபிறகு அவரது நாடகக்காரராக மாற்றப்பட்டு நதிக்கரையிலுள்ள தூளோப் நாடகசாலையில் நாடகமாடியும், நாடகமெழுதியும் வந்தார். அக்காலத்து நாடகசாலை இன்றையதுபோல் படங்களுள்ள திரைகளாவது, காடு, செடி, கடல் முதலியன காட்டக்கூடியவையாவது, உடையனவல்ல. இது இன்னவூர், இது இன்னவிடமென்று பலகையிலெழுதித் தொங்கவிட்டிருக்கும். அதைக்கொண்டே அவ்விடங்களென்று பார்ப்போர் தம்மனதில் எண்ணிக்கொள்ளவேண்டியது. எனினும் ஆட்டத்தின் சிறப்பும், நாடகத்திலுள்ள அருமையான செய்யுள் வன்மையும், அரும்பெரும் விஷயங்களுமிவையில்லாதபோதிலும் மிகுந்த சிறப்பினை யுண்டாக்குவனவாயிருந்தன.

—*A Master of Arts.*



# ஸுசீலா ஸ்வயம்வ்ரம்

## *SUSILA SWAYAMVARAM*

(410-ம் பக்கத்தொடர்ச்சி)

அரசன் ஸபையிலிருந்த வேலையாட்களையும் இதரர்களையும் விலகிப்போகும்படி கட்டளையிட்டவுடன் அரசனைத் தன் ஸமீபத்தில் இருத்தித் தாபஸியர் பேசுவாராயினர்.

"உன் பெயரே அஸூயாவர்மனென்று ஏற்பட்டுவிட்டது. அஸூயா உன் பிறவிக்குணம்; அதை மாற்றுதல் எம்மாலாகிற காரியமன்று; ஆயினும் நீ ஒருவருமறியாமற் செய்தவற்றை நான் வெளியிட்டுவிட்டமையால் உலகத்தில் இரகசியமே ஒன்றுமில்லையெனலாம். மூடர்கள் மனத்தில் இந்த யதார்த்தம் பதியாது. உலகம் உஜ்ஜீவிக்கும்பொருட்டுக் கடவுளால் ஏவப்பட்ட எம்போலியர்கள் வருங்கால விஷயங்களைச் சொல்லி மனிதரை நல்வழிப்படுத்தல் அவசியம்; அதுபற்றியே உன்னிடத்தில் ஒரு விஷயம் சொல்வேன். உன் வயிற்றிற் பிறந்த பிள்ளை யொருவனும் உன் ஸிம்மாஸனத்தைப் பெறான். இந்த நிமிஷம் முதல் ஒரு வருஷம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது உன் பட்டமஹிஷி வயிற்றில் பெண்தான் பிறக்கும். அதே காலத்தில், விறகு வெட்டி ஒருவன் வயிற்றில் மஹா புருஷன் ஒருவன் ஜனிக்கப்போகின்றான். அவனே உன் பட்டத்திற்கு அதிபதியாவான். இது தெய்வ ஸம்மதமானது. இதற்கு விரோதமாய் நீ செய்யும் முயற்சிகளெல்லாம் பயன் பெறாவாகும்" என்று கூறிச் சடிதியில் மறைந்தார்.

மக்கட்பேற்றை நினைந்து மனமுருகின மஹாராஜன் பெரியவர் சொன்ன மொழிகளால் பெண்ணொருத்தியாவது தனக்குப் பிறக்கப் போகிறாளென்று கேட்டுக் கொஞ்சங் கிலேசம் நீங்கி மனங்களித்து இராஜ்ய பாரத்தை நடத்தி வந்தான். ரிஷி தனக்குச் சொன்னதை ஒருவரிடத்திலும் கலக்கவில்லை.

ரிஷி சொன்னபடி பட்டமஹிஷி சுந்தரி கர்ப்பவதியானாள். பத்தாவது மாதம் கிட்டிற்று. இப்படியிருக்கையில் அரசன் வேட்டையாடஎண்ணி வேட்டையாட்களையும் சேனைத்தலைவரையும் ஸமய ஸஞ்சீவியையும் அழைத்துக்கொண்டு அக்ஷாமி என்னும் நதியைக்கடந்து அங்கிருந்து காத தூரத்திலுள்ள காட்டிற் பிரவேசித்து மிருகவேட்டை செய்தான். அக்காலம் வேனிற்காலம், "மண்கொதிப்ப வறல்கொதிப்ப வளி கொதிப்ப வெண்ணுவா,ரெண்கொதிப்ப நறுநீழ லினை மனைவிட் டகலார்க்குங், கண்கொதிப்பக் கரங்கொதிப்பக் கால்கொதிப்பக் கற்பகஞ்சார், விண்கொதிப்ப வவ்வேனில் வெம்பருவ மேவியதால்" எனப் புலவர் கூறியபடி தாபம் மிகுந்தது. அரசன் துரத்திப்போன மான், ஓட்டம் பிடிக்க, அரசனும் அதன்பின் ஓடிக் களைத்தான். வேட்டையாட்களும் போர்வீரர்களும் ஸமயசஞ்சீவியும் தனித்தனி பிரிந்து போய் அரசன் ஒண்டியாய்க் குதிரைமேல் இருந்தான். வெப்பத்தாலும் தாகத்தாலும் குதிரை களைத்துக் கீழே விழுந்து மாண்டது. அரசன் காலால் நடந்துபோகும்படி ஸம்பவித்தமையால் புஷ்பம்போன்ற கால்களில் பருக்காங் கற்களும் முட்களுந் தைத்துப் பாதங்கள் புண்ணாயின. அஸ்தமன காலமும் நெருங்கிற்று. காட்டுவழி ஒன்றுந் தெரியவில்லை; வரவர இருட்டும் அதிகரித்தது. அரசன் மனத்தில் எண்ணாத எண்ணங்களெல்லாம் உண்டாயின. விதியின் வலியை வெல்லுதல் அரசர்க்கும் ஆகாத காரியமன்றோ? திகைத்துத் திகைத்து நின்று எங்காவது காட்டில் வெளிச்சம் புலப்படுமோவென்று உற்றுப்பார்க்கையில் சிறிது தூரத்தில் மினுக்கு மினுக்கென்று ஒருவெளிச்சந் தோற்றிற்று. அதை நாடிக் கல்லையும் முள்ளையும் பார்க்காமலே அரசன் நடந்துபோனான். கிட்டபோனவுடன் கரியடைந்த குடிசை ஒன்றிருந்தது. அதன் வாயிலில் கறுத்துப் பெருத்த ஆள் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அரசன் கண்ணில் அங்கு நின்றவன்கிராதகனாகத்தோற்றினான். அரசனுக்குப் பசியுந்தாகமும் மிகுதியாயிருந்தது. எதிரில் நின்றவன் கம்பொன்று கையிற் பிடித்திருந்தமையால்தன்னைக்கொல்லத்தான் தண்டபாணியாயிருக்கின்றானென்றெண்ணி அரசன் நடுங்கினான். பசிதாகங்களினாற் பீடிக்கப்பட்டவன் பயவெட்கங்களைப்பாராட்டல் இல்லை. ஆகவே அரசன் அரணியவாஸியிடத்திற் போய், "அன்பனே, இன்றிரவு எனக்கு உண்ணச் சோறும் உறங்க இடமும் தருவாயாயின் உனக்குப் போதுமான பொன்னைக்கொடுப்பேன்: தயவு செய்வாயாக," என்றான். கிராதகன் அரசன் தன்முன் வந்திருக்கிறானென்பதை யறியாமல், "என் வீட்டிற்குள் ஒரு அறைதானிருக்கிறது; அதில் என் மனைவி பிரஸவவேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறாள்; என் கழுதை வெளியில் மேயப்போயிருக்கிறது; அது கட்டப்படும் கொட்டகை அதோ இருக்கிறது; அங்கு தரையில் வைக்கோலைத் தெளித்துக்கொண்டு இராவிற்

கிட: என் வீட்டிலுள்ள உணவுப்பொருள் ஏதோ அதை உனக்குப் போடுகிறேன். என் மனைவி சாவ இருக்கிறாள் ; என் மனம் பதைக்கிறது ; எனக்கு உணவும் வேண்டுவதில்லை: உறக்கமும் வராது" என்று தெறிப்பாய்ச் சொன்னான். பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்துக்கு அஞ்சலாமோ? அரசன் அந்த ஸமயத்தில் தன் குலப்பெருமையை நினைப்பதனாலாவதென்ன? வனவாஸி சொன்னபடி கழுதைத் தொழுவத்தில் வைக்கோலைப் பரத்திக்கொண்டு அரசன் சகோரபக்ஷிபோல உண்டிவருவதை நினைந்து உறக்கமின்றி உட்கார்ந்திருந்தான். கிராதகன் தான்சொல்லியவாறே உள்ளேபோய்ப் பழையசோறிருந்ததில் கொஞ்சம் உப்பைப்போட்டு மிளகாயைவெஞ்சனமாக வைத்து அரசனுக்குக் கொணர்ந்து தந்தான். ஷட்ரஸோபேதமான ஆகாரத்தைத் தெவிட்டத் தெவிட்ட உண்டு வாடிக்கைப்பட்ட அரசன் அன்றிரவு தனக்குக் கிடைத்ததை யுண்டு வைக்கோற் படுக்கையி லுறங்குகையில் சொற்பனத்தில் "ஏற்றுக்கொள், ஏற்றுக்கொள்," என்று ஒருபெரிய சத்தம் காதிற்படவே எழுந்து சுற்றுமுற்றும்பார்த்து ஒருவருமில்லாமையால் கனவென்றெண்ணி திரும்பவும் உறங்கப் போனான். தூங்குங்கால் அரண்மனையில் ஒருவருஷத்துக்கு முன் தனியேபேசின தபஸியின் உருவம் அரசன் கண்ணிற்பட்டு "விடு, விடு," என்னும் சொல்லுங் காதிற்பட்டது. தபஸி அரசனுக்குக் கனவில் சொன்னதாவது, "வனசரனுக்குப் பிறக்கப்போகும் ஆண்பிள்ளையேதான் உனக்குப்பின் பட்டத்திற்கு வருபவன். அவனை உன் ஔரஸபுத்திரனாக ஏற்றுக்கொள்வாயாயின் உனக்கு இம்மையிற் புகழும் மறுமையில் மோக்ஷ ஸாம்ராஜ்யமும் கிடைக்கும். அன்றேல் அபவாதமும் நரகமுந்தான் உன் கதி;" இதைக்கேட்டவுடன் அரசன் விழித்துக்கொண்டு உறக்க மில்லாமல் விடிகிறவரையில் தரையி லுட்கார்ந்திருந்தான். கிழக்கு வெளுத்தவுடன் கிராதகன் வீட்டிற்குப்போய் இரவில் நடந்ததென்னவென்று விசாரித்தபொழுது கிராதகனுக்கு ஒரு ஆண் மகவு பிறந்திருக்கிறதென்றும் பிரஸவித்த மறு நிமிஷமே அக்குழந்தையின் தாய் மரித்தாளென்றும் தெரிந்துகொண்டான். பிறந்தஆண்பிள்ளை சந்திரவிம்பம்போன்ற முகமும் தாமரைபோன்ற கண்களையுமுடையதா யிருந்தது. தாயில்லாப் பிள்ளையைக் கண்ட அஸூயாவர்மனுக்குத் தயாவென்பது கிஞ்சித்தேனும் உண்டாகாமல் அது தன் பரம்பரையைக் கெடுக்க வந்த பரமசத்ருவாகப் புத்தியிற்பட்டது. வனசரனுக்கு இரகசியம் தெரியாதாகையால், அரசன் அவனிடத்திற்போய், "நண்பா, உனக்குப் போதுமான அளவு பொன் தருகின்றேன் : பிள்ளையை என்னிடம் கொடுத்துவிடு: நான் அதைக் காப்பாற்றி முன்னுக்குக் கொணர்வேன் : நீ வேறு பெண்சாதியை மணந்து சுகமே வாழலாம்" என்றான். கிராதகன் "பிள்ளை பெரியவனாகி எனக்குக் கிழப்பருவம் வந்த காலத்தில் உதவுவானென்றிருந்தேன். கடவுள் வேறாக எண்ணினார் போலும்; அப்படியேஆகுக" என்று சொன்னகாலத்தில் அரசன் ஆட்கள் இரவு முழுதிலும் அரசனைத் தேடித்திரிந்து வனசரன் வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் வந்தபோது தமது கொம்புகளை ஊதினார்கள். தன்னாட்கள் வந்தார்களென்று களித்த அரசன் தன் கொம்பையும் ஊதவே, அடுத்த நிமிஷத்தில் இராஜபரிவாரங்களெல்லாம் அங்குவந்து கூடி "மஹாராஜாவே, தங்களை இரவுமுழுதும் தேடி அலைந்தோமே, இரவில் எங்குபடுத்துறங்கினீர்? எவருணவு அளித்தார்? மஹாராஜாவின் பாதங்கள் எவ்வாறு நொந்தனவோ," என்று பிரலாபித்தலைக்கேட்ட வனசரன் மனைவி, மகன் இழந்ததை எண்ணாது இராஜாபராதம் வந்ததை எண்ணித் திகைத்து நடுநடுங்கி யிருக்கையில் அரசன் ஸமய ஸஞ்சீவியைநோக்கி, "இந்தக்கிராதகன் நேற்றிரவு எனக்கு உண்ணச் சோறும் உறங்க இடமும் கொடுத்தான். அவன் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றுத் தேகவியோகமாய்விட்டாள். அந்தக்குழந்தையை நமது அரண்மனைக்குக் கொண்டுபோய் உயர்ந்த பதவி யடையும்படி செய்வோமாக" எனவே, ஸமய ஸஞ்சீவியும் "மஹாராஜாவின் சித்தம்" என்றான். கிராதகன் அரசனிடத்திற் பொன்னைப்பெற்று அந்த இடத்தை விட்டுப் போனபிறகு மனைவி மகனைப்பற்றி நினைத்தவனேயில்லை. அரசனாட்கள் குழந்தையின் தாயைக் கனனஞ்செய்து அங்குள்ள ஒரு சிறு பேழையில் வைக்கோலைப் போட்டு அந்தச் சிசுவை வைத்து ஸமயஸஞ்சீவிகையில் ஒப்புவித்தார்கள். அந்தப் பேழைக்குள் ஒரு சிங்கத்தின் உருவம் வரைந்திருந்தது. அந்த உருவத்தைப் பார்த்த அரசனுக்குச் சிசுவினிடத்தில் ஆத்திரம் மேலும் மேலும் பொங்கிவந்தது. நகரத்துக்குச் சமீபத்தில் வரும்போழ்து அரசன் ஸமயஸஞ்சீவியைத் தன்னருகிலழைத்துக்கொண்டு மற்றவர்களை யெல்லாம் தனக்கு முன்னமேயே ஊர்போய்ச் சேர உத்திரவு செய்தான். மந்திரியின் குதிரையின்மேல் தான் பெட்டியில் வைத்த



பிள்ளை இருந்தது. ஸஞ்சீவியை நோக்கி அரசன், "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தலல்லவா? இந்தக் குழந்தையின் கதி என்னாகுமென்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். பிரதானி "பிரபுவே, தங்கள் சித்தமே என்பாக்கியமென்று ஆயுளில் பெரும்பாகத்தைக் கழித்துவிட்டேன். இக்குழந்தைக்குத் தக்க செவிலித்தாய் ஏற்பாடுசெய்து வளரும்படி செய்வோமாயின் ராஜஸேவைக்குத் தக்கவனாவன். இம்மட்டில்தான் என் புத்திக்கு எட்டுகிறது," என்றான். அரசன் புன்முறுவல்கொண்டு, "குட்டிச்சுவருக்கு வயதானதுபோல் உனக்கு வயதாகியும் என் சத்துருவை உன்கையில்வைத்துக்கொண்டே அவனைக் காப்பாற்றி ராஜஸேவைக்குப் பாத்திரனாக்க வேண்டுமென்கிறாய். நமது ஸபையில் கடைசியாக என்னிடத்தில் தனியே நின்று பேசின ரிஷியை அறிவாயன்றோ? அவர் சொன்னது, இக்குழந்தை ராஜஸேவைக்குப் படைக்கப்பட்டவன் அல்லன். என் ஸிம்மாஸனத்துக்கேஉரியவனாகப்போகின்றானாம். வளர்த்தகிடா மாரில்பாய்வது நிச்சயம். அந்த ரிஷி திரிகாலஞ்ஞர். பெட்டியில் சிங்கத்தின் ரூபத்தைப் பார்த்தாயல்லவா? என் சோற்றையுண்டு என் சத்துருவை வளர்க்க உடம்படுகிறாயே. இது எனக்கு முழுதிலும் அனிஷ்டம். நம்முடன் கூட வந்தவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். நாமிருவரும் தனியே இருத்தலால் ரிஷிவாக்கியத்தைப் பொய்த்துப்போகச் செய்வோம். பெட்டியின்மேல் ஒரு துணியைப் போர்த்துக் குழந்தையை இவ்வாற்றில் விட்டுவிடுவோம். உடன் வந்தவர்கள் குழந்தையைப்பற்றிக் கேட்பாராயின் கிராமங்களில் பாலூட்டி வளர்ப்பவர்கள் மிகுதியாயிருத்தலால் வழியிலுள்ள ஒரு கிராமத்தில் ஒருத்திவசத்தில் சிசு இருக்கிறதென்று சொல்லி விடுவோம். நமக்கென்ன பயம்? பெட்டியை ஆற்றில் போட்டுவிடு" என்று ஆஞ்ஞாபிக்க, ஸமயஸஞ்சீவி அரைமனத்தோடு பேழையை ஆற்றில்விட்டு அரசனோடு நகரம்போய்ச் சேர்ந்தான்.

அஸூயாவர்மன் அரண்மனைஆஜாரவாயிலில் போனவுடனே வாயிற்காப்போன் ஓடிவந்து அரசன் காலில் வீழ்ந்துபட்டமஹிஷிக்கு ரதிபோன்ற ஒருபெண்பிறந்ததென்று தெரிவித்தான். அரசன் ஹ்ருதயம் சிறிது குளிர்ந்தது. ஸூதிகாகிருஹத்திற்குஸமீபமாய்ப்போய் விசாரித்தபோழ்து இராஜமஹிஷிக்கு உடம்பு அசௌக்கியமென்றறிந்து அரசன் மனந் துடித்தது. பிள்ளையாய்ப் பிறந்திருந்தால் அவன் மனம் வேறாயிருக்கலாம். ரிஷி சொல் தவறாதபடி குறித்தகாலத்தில் பெண் பிறந்துவிட்டது. பட்டமஹிஷி சுந்தரியின் சரீரம் நாளுக்குநாள் மெலிந்துவந்தது. உயிர்ச்சேதம் வருமென்று தோன்றிய காலத்தில் தன் கணவனைச் சுந்தரி அருகில் அழைத்து "பிராணநாதா, இன்னும் நான் ஜீவித்திருக்கக்கூடிய காலம் சொற்பமென்று தோன்றுகிறது. பிராணவியோகமாவதற்கு முன் நான் தம்மைப் பிரார்த்தித்துக் கொள்கின்றவை இரண்டு: என் பெண்ணுக்குச் சுசீலா என்னும் பெயரிடல்வேண்டும்: அவள் தன் கணவனை ஸ்வயம்வரத்தி லடையும்படி அனுமதி தரல்வேண்டும். தாம் புத்திரவந்தராவதற்கு வேறு கன்னிகைகளை மணம்புரிவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. என் வேண்டுகோளுக்கு இணங்குவீராயின் என் மனம் சாந்தமடைந்து பரலோகப்பிராப்தி யடைவேன்" என்றாள். அஸூயாவர்மன் "அப்படியேஆகுக" என்று அரைமனத்தோடு சொல்லிவிட்டுவெளியில்வர, இரண்டு நாழிகைகளில் ஸுந்தரி தேகவியோகமடைந்தாள் பட்டமஹிஷியின் ஈமக்கடன்கள் முடிந்தவுடனே வேறொரு பெண்ணை மணந்தான். புத்திரன் உற்பத்தியாகவேண்டியதற்கு இராஜ்யத்திலுள்ள ஜோதிஷ சாஸ்திரிகளை யெல்லாம் வரவழைத்து ஹோமங்களும், யாகங்களும், ஸமாராதனைகளும் கணக்கில்லாமற் செய்தான். ரிஷிவாக்யம் பொய்யாகாமலே இருந்தது. அரசன் கொஞ்சக்காலத்துக்குள் ஆற்றில்விட்ட குழந்தையை முற்றிலும் மறந்துவிட்டான். அது இறந்தே போயிற்றென்று அவன்நிச்சயம்செய்து வழக்கம்போல ராஜ்யகாரியங்களை நடத்திக்கொண்டு இரண்டாவது மனைவியுடன் கூடிக்குலாவிக் காலத்தைக் கழித்துவந்தான்.

இவ்வாறு பதினாலு வருஷங்கள் சென்றன. ரிஷிவாக்யம் பொய்த்துப் போயிற்றென்று சிற்சில வேளைகளில் அரசன் எண்ணியிருந்தான். ஆயினும் ஒருநாள் இரவில் அது ஞாபகத்துக்கு வரவே அரசனுக்குத் தூக்கமே இல்லாமல் படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தான். இரண்டாவது மனைவி, அரசன் இவ்வாறு உறக்கமில்லாமல் பெருமூச்சுவிட்டு மனத்துன்பமடைந்ததைக் கண்டு காரணத்தை வினவ, அவன் "ஒன்றுமில்லை, முன்னொருத்தியை மணம்புரிந்து ஒரு பெண்ணைப் பெற்றேன்: உன்னைக்கலியாணஞ் செய்து பெண்குழந்தை கூட இல்லாமல் இருத்தலை விட என் போலியர்களுக்குத் துக்கத்தைத் தருவது வேறென்ன?

"என்னைக் கேள்வி ஒன்றுங் கேட்காதிருப்பாயாக" என்றான். இராஜாத்தி ஒன்றும் பேசாமல் சும்மா இருந்துவிட்டாள்.

மறுநாட்காலையில் அரசன் ராஜாளிப்பட்சிகளை வைத்துக்கொண்டு வேட்டையாடப் புறப்பட்டான். அக்ஷாமி என்னும் ஜீவநதியின் உபநதிகளில் ஒன்றிற்கு அகஹரி என்று பெயர். அந்த நதி தீரமானது மிகவும் ரமணீயமானது. மேட்டுப் பாங்கில் சிறு மலைகளும் அவைகளில் ஸுகந்தம் வீசும் சந்தன சம்பக விருக்ஷங்களும் அமைந்திருந்தன. மா பலா முதலிய பழமரங்கள் காய்த்துப் பழுத்து நறுநாற்றம் வீசிக்கொண்டிருந்தன. ஒரு குன்றிலிருந்து அமலா என்று ஒரு பெரிய அருவி அகஹரியுடன் வந்து கலக்கும் இடத்தில் ஓர் யந்திரம் ஏற்பட்டுப் பக்கத்தில் அதற்குடையவனும் அவன் வேலையாட்களும் வஸித்துக்கொண்டிருந்தார்கள். அரசனும் அந்தச் சுந்தரமான இடத்திற்குத் தான் பக்ஷி வேட்டைக்குப்போனான். அரசன் பரிவாரங்களோடு வந்தவுடனே, யந்திரத்துக் குடையவன் அவர்களுக்குத் தக்க உபசாரங்கள் செய்தான். அரசன் மனமகிழ்ந்து யந்திரக்காரனுடைய யோகக்ஷேமங்களை விசாரிக்கையில் யந்திரியின் பக்கத்தில் சுமார் பதினைந்து வயதுள்ள வாலிபன் ஒருவன் அதிஸுந்தரனாக நிற்பதைக் கண்டு அரசன் மனம் கவரப்பட்டு யந்திரியை நோக்கி, "அதோ நிற்கும் சிறுவன் உன் குமாரனா? அழகில் மன்மதன்போலிருக்கிறானே. அவன் தாய்போலமைந்தான்போலும். இந்தச் சுந்தரனைப்பெற்ற தாயை நான் நேரிற் பார்த்துச் சில பேச்சுக்கள் பேசினாலொழிய என்மனங்குளிராது. உன் மனைவியைப் போய் இட்டுவா," என்று கட்டளையிடவே, யந்திரியும் வீட்டிற்குச்சென்று தன் மனைவியை அழைத்துவந்து ராஜ ஸன்னிதியில் நிறுத்தினான். அரசன் ஏறி இறங்கப்பார்த்து யந்திரி மனைவியை நோக்கி, "பெண்ணே, அதோ இருக்கும் பிள்ளை உனக்குப்பிறந்ததோ, அல்லது உங்களிருவருக்கும் அவன் ஸ்வீகாரப்புத்திரனோ, உண்மையை நம்மிடத்திற் சொல்வாயாக" என்றான்.

யந்திரியின் மனைவி என்றும் இராஜ ஸன்னிதானம் எப்படியிருக்கு மென்றறியாதவள். ஆயுத பாணிகளாய்ச் சேவகர்களும் மற்றவரும் நிற்பதைக்கண்டு நாவெழாமற் கால்நடுங்கித் திகைக்கையில் அரசன் அவள் அருகிற்சென்று, "சகோதரி, என்னை உன் தமையனாகப் பாவித்துப் பேசு. அரசனென்பதை முற்றிலும் மறந்துவிடு. உனக்கு இஷ்டமானவற்றையெல்லாம் நீ நிர்ப்பயமாய் என்னைக் கேட்கலாகும். நான் கொடுப்பதற்குத் தடையொன்றுமில்லை," என்று தைர்ய வார்த்தைகள் சொன்னவுடனே யந்திரியின் மனைக்கிழத்தி அஸூயாவர்மனை வணங்கி, "இந்தச் சிறுவன் எங்கள் புத்திரனல்ல. பதினாலு வருஷங்களுக்குமுன் ஒருநாள் சந்தையிற்போய் குடித்தனத்துக்குவேண்டிய தட்டுமுட்டு ஸாமான்கள் வாங்கி வருங்காலத்தில் அக்ஷாமிநதிக்கரை யோரமாய் ஒரு பெட்டி மிதந்துவந்தது. அதில் இந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. என்காதிற் பட்டவுடனே நானே ஆற்றிலிறங்கிப் பாலனை எடுத்து என் வீட்டிற்குக் கொண்டுவந்து பர்த்தாவினிடத்திற் காட்டினேன். அவரும்புத்திரனில்லாமல் வருந்தினமையால் பாலனைச் சரிவர வளர்க்கும்படி கட்டளையிட்டார். அவராணை மீறாது இந்நாள்வரையில் நடந்திருக்கிறேன். அவனைப் பார்த்த சில ஜோஸியர்கள் ராஜபதவிக்குப் பிறந்தவன் என்கிறார்கள். அவனோ யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தைமுதலான அரசகுமாரர்களுக்குரிய கல்விகளிலெல்லாம் குருவில்லாமலே நிபுணனாயிருக்கிறான். அவன் என் வீட்டில் வந்தநாள் முதற்கொண்டு எங்களுக்கும் பக்கத்திலுள்ளவருக்கும் சண்டை சச்சரவுகளெல்லாந் தீர்ந்து ஊரிலுள்ளார் அனைவரும் ஏகோபித்து ஒரே மனதாய் வாழ்ந்துவருகிறோம். அவன் முகத்தை ஒரு நிமிஷம் பாராமற்போனால் எனக்காவது என் பர்த்தாவுக்காவது ஸந்தோஷலேசமுங் கிடையாது. அவனுக்கு நாமகரணஞ் செய்யுங்காலத்தில் சாஸ்திரிகளெல்லாம் பற்பல பெயர்களை வைக்க விரும்பிச் சொன்னார்கள். ஒரு விருத்தர் மாத்திரம் என்னைத் தனியே அழைத்து "இந்தப்பிள்ளைக்கு ஸுமித்ரன் என்னும் பெயரை இடு," என்றார். எனக்கும் அதில்தான் இஷ்டமாயிருந்தது. ஊரார் ஒருமித்து வாழ ஆரம்பித்துப் பகைமை மறந்தது இவன் வந்த பிறகானமையால் அந்தப் பெயரே இவனுக்குத்தக்கதென்றெண்ணிஎன்கணவனிடத்தில்நான் சொன்னேன். அவரும் ஸம்மதித்து இப்பாலனுக்கு ஸுமித்ரன் எனும் பெயர் வழங்கிவருகிறது. எங்கள் வீட்டிலேயே நீடித்த காலம் இருப்பவன்போல் எங்களுக்குத் தோன்றவில்லை. மஹாராஜாவின் கிருபையிருக்குமாயின் எங்களுக்கு எந்தப் பாக்கியந்தான் கிடைக்காது," என்று சொல்லிவிட்டு அரசனிடத்தில் விடைபெற்றுப் போனாள்.

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.



# கல்யாணி

## KALYANI *

### 2-ம் அதிகாரம்

இறந்துபோன புனபதியின் பிரேதக்கிரியையைத் தடைசெய்ய முடியாமல்போன அதிகாரி, அதற்கு மறுநாள் காலையில், நடந்தவைகளைச் சொல்ல வீரசேனன் அரண்மனைக்கு விரைந்து சென்றான். அப்பொழுது வீரசேனன் தன்னுடைய விஸ்தாரமான புத்தகசாலையிலிருந்தான். அதன் சுவர்களில் வரைந்திருந்த விருதுச் சின்னங்களாலும் மற்றைய அலங்காரங்களாலும் அது புனபதிகளின் நாட்களில் விருந்தினரை உபசரிக்கும் மகா மண்டபமாயிருந்ததாகத் தெளிவாகும். அவ்விடத்தில் இப்பொழுது புஸ்தக பாரத்தால் வளைந்துகொண்டிருந்த அனேக பலகைகளும் மேஜைகளுமிருந்தன. அவைகளில் சட்டப் புத்தகங்களும் சரித்ரங்களும் எண்ணிறந்தன இருந்தன. தேக்கமரத்தால் செய்த ஒரு கனத்த மேஜைமேல் காகிதங்களும், பிரியாதுகளும், மனுக்களும், தஸ்தாவேசுகளும் திக்கித்திரக்கிக் கிடந்தன. அவைகளை வைத்து வேலைசெய்வது வீரசேனனுக்குச் சந்தோஷமாயும் தொந்தரையாயு மிருந்தது. அவன் இராஜ்யத்தில் உன்னதப்பதவியி லிருக்கும் ஒருவனுக்குத் தகுந்த கம்பீரமும் கவுரவமான காக்ஷியுடையவனாயிருந்தான். ஆவசியமும் இரகசியமுமான சங்கதிகளைப்பற்றி அவனுடன் அதிகநேரம் சம்பாஷித்தாலொழிய, அவனுடைய தீர்மானங்களில் சலனமாவது, உறுதிக்குறைவாவது உண்டென்று அன்னியன் ஒருவனும் அறியமுடியாது. அவனுக்குள்ள ஜாக்ரதையாலும், காரியங்களில் வீணாகத் தலையிடத் தைரியமில்லாமையாலும் தனக்குண்டாகும் மனத்தளர்ச்சியை, கருவத்தாலும், தந்திரத்தாலும் பிறர் அறியாமல் மறைக்கஅதிக ஆவலுடையவனாயிருந்தான்.

பிரேதக்கிரியை நடந்த காலத்திலுண்டான குழப்பத்தையும், அதிகாரம், குருக்கள், இராஜாங்கம் இவைகளை உல்லங்கனம் செய்ததையும் அதிகமாகப்பெருக்கி, அந்த அதிகாரி சொன்னவைகளை யெல்லாம் வீரசேனன் அதிகச் சாவதானமாகக் கேட்டான். மாதவன் பேசிய அவமதிப்பும் பயமுறுத்துவதுமான வார்த்தைகளையும், அவைகள் தன்னைக் குறித்தவை என்பதையும் கேட்டும் அவன் சற்றும் அசையவில்லை. விருந்து நடந்த காலத்தில் அங்குச்சேர்ந்திருந்தவர் பேசின பேச்சுக்களையும் செய்த செய்கைகளையும் தன்னால் இயன்ற அளவு பொய்யாயும் அதிகமாயும் அந்த அதிகாரி சொன்னவைகளைச் செவி கொடுத்திருந்து, அதன்மேல் நடத்த வேண்டிய நடவடிகளுக்கு அவசியமாகிய விஷயங்களையும், சாக்ஷி சொல்லிக் காரியத்தை நிலைநிறுத்தக்கூடியவர்களின் பெயர்களையும் அதிகக் கவலையாய் எழுதிவைத்துக்கொண்டு அந்த அதிகாரியை அனுப்பிவிட்டு, புனபதியின் உடைமைகளெல்லாம் தன் வசமானதுபோல் மாதவனுடைய சரீரசுவாதீனமும் தன் வசமாகி விட்டதை யெண்ணி வீரசேனன் மனக்களிப்படைந்தனன்.

அந்த அதிகாரி போனவுடன், வீரசேனன் ஒரு நிமிஷநேரம் ஆழ்ந்த யோசனையி லிருந்தபிறகு எழுந்து பலமான ஒரு செய்கையைச் செய்யத் திடரென்று தீர்மானித்தவனைப் போல அந்த அறையில் அங்குமிங்கும் நடந்தான். "மாதவன் என்கையில் சிக்கிக் கொண்டான். அவன் எனக்குக் கீழடங்கவேண்டும் அல்லது ஒழிந்துபோகவேண்டும். அவன் தகப்பன் ஒவ்வொரு விஷயத்திலும் என்னோடு வழக்குத் துடர்ந்து, சமாதானத்திற்கு வராமல் கடைசிவரை சாதித்து, என் பாத்தியதையைக் கெடுக்க முடியாத பொழுதெல்லாம் என்னைப் பழித்து அவதூறு பேசியதை நான் மறந்துபோகவில்லை. அவனுடைய குமாரனாகிய இந்தப்புத்தியில்லாதகோபி தானுலகத்தில் ஜீவிக்க ஆரம்பிக்குமுன்னேயே தனக்குக் கேடு விளைத்துக் கொண்டான். மறுபடியும் அவனுக்கு நன்மை கிடையாமலிருக்க நான் வழி பார்க்கவேண்டும். நானிப்பொழுது எழுதிவைத்திருக்கிறதை "ப்ரிவி கவுண்சிலில்" தாக்கல் செய்தால், இராஜாங்கத்தினுடையவும் குருக்கள்மாருடையவும் கவுரவத்தை நிராகரித்த குற்றம் அவன்மேல் சாட்டப்பட்டு, அவன் அதிக அபராதம் விதிக்கப்பெற்றுச் சிறைச்சாலைக்குப்போக நேர்ந்தாலும் நேரும். அவன் பேசின சில வார்த்தைகளால் இராஜத்துரோகம் என்னும் குற்றமும் அவன்மேல் சாரக்கூடுமானாலும் அதற்கு நான் அனுகூலிக்காமலிருக்கத் தெய்வம் எனக்குத் துணைசெய்வதாக—கூடாது—மாட்டேன்—அவன் என் கையில் அகப்பட்டாலும் செய்யேன்—சரி—இராஜ்ய பாரம் மாறுகிற காலம்வரை அவன் உயிரோடிருந்தால் அப்பொழுது என்ன சம்பவிக்கும். ஒருவேளை பழிக்குப் பழிவாங்கல்—எதிர்மாறு செய்தல்—எனக்கு எதிர்க்கக்ஷிக்காரன் வீரமார்த்தாண்டன் இவனுடைய தகப்பன் விஷயத்தில் அனுகூலம் செய்வதாய்ச் சொல்லி

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.

யிருந்தான். இப்பொழுது மகனிருக்கிறான். நம்முடைய ஆதிக்யம் குறைந்துபோக ஆவலோடு காத்திருப்பவர்கள் கையில் இவன் எவ்வளவு பிரயோசனப்படுவான், என்ற எண்ணங்கள் வீரசேனன் மனத்தைக் கலக்கின. தன்னுடையவும், தன் சிநேகிதர்கள், கக்ஷிக்காரர்களுடையவும் நன்மையும்க்ஷேமமும், தற்காலத்தில்தனக்குக் கிடைத்திருக்கிற அனுகூலத்தை மாதவனுக்குவிரோதமாயுபயோகிப்பதால் கிடைக்குமென்று முழுவதும் நம்பிக்கொண்டு, புனபதியின் பிரேதக்கிரியை நடந்த தினத்தில் தன்னுடைய உத்தரவை அவமதித்து நடத்திய கலகாஸ்பதமான காரியங்களை "ப்ரிவி கவுன்சிலுக்கு"த் தெரிவிக்கும்படி எழுத ஆரம்பித்தான். அப்பொழுது நடந்த சங்கதிகளும் அவைகளை நடத்திய ஆள்களின் பெயர்களும் தன்னுடன் சேர்ந்த அதிகாரிகளுக்கு ருசிக்காமல் மாதவனுக்கு அனர்த்தத்தை விளைவிக்கும் என்று அவனுக்கு நன்றாய்த்தெரியும். மாதவன் மேல் நேராகச் சொல்லாமல், சந்தர்ப்பங்களால் அவன் தான் குற்றஞ்செய்தவனென்று ரூசிப்பிக்க முயன்றுகொண்டிருக்கையில் சுவரிலிருந்த ஒரு கறுப்புக்காளையின் தலையையும் அதன்கீழ் "காலம் வரக் காத்திருக்கிறேன்"என்று எழுதியிருப்பதையும்வீரசேனனுடைய கண்கள் தற்செயலாய்ப் பார்க்க, அவைகளைப்பற்றிய பூர்வகதை அவன் ஞாபகத்திற்கு உடனே வந்தது.

அதாவது, அனேக வருஷங்களுக்கு முன் ஒருவன் புனபதியின் நாடு நகரங்களைப் பறித்துக்கொண்டு அந்த அரண்மனையில் சிலகாலம் வசித்து வந்தான். அக்காலத்தில் ஒருநாள் தன் சிநேகிதருக்கும் பிரதானிகளுக்கும் பெரிய விருந்து செய்யக்கருதி அவர்களை அழைத்து, சகலரும் ஆவலுடன் விருந்துண்ண இருக்க, அவன் தன்னுடைய வேலைக்காரரைக் கோபித்துப் பதார்த்தங்களைப் பரிமாறச் சொல்லிக்கொண்டிருக்கையில், புனபதியும் அவனுக்கு நம்பிக்கையுள்ள சிலரும் அவ்விடத்தில் பிரவேசித்தார்கள். "காலம்வரக் காத்திருக்கிறேன்" என்று புனபதி சொல்லி மரணத்தின் அறிகுறியாக அக்காலத்தில் கருதப்பட்ட ஒரு எருதின் தலையை அவ்விடத்தில் வைக்க, முன் சங்கேதப்படி அங்கே பிரவேசித்தவர்கள் அங்கிருந்தவர்களையெல்லாம் கொன்றுவிட்டார்கள்.

யாவருக்கும் நன்றாய்த் தெரிந்ததும் அடிக்கடி எல்லாரும் சொல்லிக்கொண்டிருக்கிறதுமாகிய இந்தக் கதை வீரசேனன் ஞாபகத்திற்கு வர, தான் எழுத ஆரம்பித்த காகிதத்தைத் தன் மேசையில் பத்திரமாய் வைத்துப் பூட்டிவிட்டு, தான் நடத்த உத்தேசிக்கும் காரியத்தின் முடிவு என்ன ஆகுமென்று யோசிக்கப் பல வழிகளில் பாய்ந்தோடுகிற தன் சிந்தையை ஒரே வழியில் திருப்பும்படி வெளியில் போகப் புறப்பட்டான்.

S. V. கள்ளபிரான் பிள்ளை, பி. ஏ.

# மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

### Essay writing

### III. விளக்க வியாஸங்கள்

### EXPOSITORY ESSAYS

### (1) இயற்கை விஷயங்கள்—ஆறுகள்

Natural Phenomena—Rivers

குறிப்பு.—முகவுரை—காரணம்—காரியம்—விசேஷக்குறிப்பு—உபயோகம்.

**நா**ம் ஆறுகள் அநேகத்தைக் கண்டிருக்கலாம். அவைகளிலுள்ள நீரைக் குடித்து ஸுகமடைவதும், அதில் குளித்துச் சுத்தமாவதுமே நமக்கு வழக்கம். இதைத்தவிர அவைகளின் விஷயங்கள் நமக்குத் தெரியாது. வயல் வெளிகளுக்குச் சென்று உழவு முதலியவைகள் செய்து பயிரிட்டு ஜீவனம் செய்பவர்களுக்கு ஆற்று நீரின் உபயோகம் கூடக் கொஞ்சம் தெரிந்திருக்கலாம். என்ன தெரிந்தும் எல்லாம் வயிற்றைப்பற்றிய விஷயமாக விருப்பதால், ஆறுகள் இவ்வாறு ஏற்பட்டு, இன்ன தொழில்களைச் செய்துவருகின்றன என்னும் அரிய ப்ருகிருதி சாஸ்திர உண்மைகள் விளங்க இடமே இல்லை. இவைகளைப்பற்றி யோசிக்கக் காலமிருந்தாலல்லவோ ஆறுகளில் அமைந்து கிடக்கும் ஈசுவரஸ்ருஷ்டி அற்புதத்தைக்கண்டு களிக்க இடம் உண்டாகும். வலை வீசி மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டு கடலுள் வெகுதூரம் சென்று அங்கு அலைகளுள் மூழ்கி எழுந்து ஓயாது கிடக்கும் செம்படவர்களுக்குக் கடலின் காம்பீர்யம், அதன் சிறப்பு, அதன் விஸ்தீரணம் முதலியவைகளைக்கண்டு அவைகளில் மனம் எப்படி ஈடுபட்டு நிற்காதோ, அதுபோல அடிக்கடி நாம் பார்த்துக்கொண்டிருப்பனவாகிய ஆறுகளின் விஷயமான தத்துவஞானம் நமக்கு ஏற்பட இடமில்லை. நாம் எளிதில் பார்க்கக்கூடிய வஸ்துக்கள் மூலமாக இந்த விஷயத்தை விளக்கப்புகுவோம்.

ஆறுகள் எவ்வாறு உண்டாகின்றன என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். ஒரு மழை பெய்வதற்கு முன் நம் அருகிலுள்ள ஒரு பாதையை உற்றுநோக்குவோம். அது மட்டமாக விருப்பதாக நமக்குத் தோன்றும். மழை பெய்யத்தொடங்கும்பொழுது அதில்மழைத்துளிகள் விழுந்து தனித்தனியாகச் சிறு குழிகளை உண்டாக்கும். மழை சற்று பலத்துவிட்டால் இக்குழிகள் எல்லாம் சேர்ந்து கலந்துபோக மழைத்துளி நீர்கள் ஒன்றாகச்சேர்ந்து சிறு தாரைகளாகி ஒருபுறம் நோக்கி ஓடத் தொடங்கும். பாதை முழுவதும் கண்டவிடம் எல்லாம் தண்ணீர் ஓடாது இருபுறமும் ஒதுங்கிப்பாயத் தொடங்கும். அப்பொழுதுதான் பாதையின் சரிவு நமக்கு வெளியாகும். அதில் வண்டித்தடங்களிருப்பின் அவைகளின் வழியாகவும் தண்ணீர் ஓடத்தொடங்கும். வழியில் பாதை கரடுமுரடாகவிருப்பதும் இப்பொழுதுதான்தெரியவரும். இப்பாகங்களின் அருகாமையில்வரும்பொழுது ஓடும்தண்ணீர்மார்க்கம் மாறி இப்பாகங்களைச் சுற்றி தாழ்ந்தவிடங்கள் வழியாகச் சரிவுநோக்கிச் செல்லும். இந்த நீரோட்டத்திற்கு நேரே எதிராகப் பாதையிலே சென்றால் வர இந்நீரோட்டம் அளவில் குறைந்துக்கொண்டு வர முடிவில் பாதையின் மேடான பாகம் வருவோம். அங்கு இந்த நீர்த்தாரைகள் ஒன்றும் காணப்படா. அதன் மறுபுறத்தில் முன்னோடும் தாரைகளுக்கு எதிர்ப்புறமாகத் தாரைகள் ஓடிக்கொண்டிருக்கும். இந்த விஷயங்களை நன்றாக மனதில் பதித்துக்கொண்டால் ஆறுகள் உண்டாகும் விதம் நன்கு விளங்கும். வானின்று இழிந்து விழுகின்ற தாரைமழையானது மேடான மலைப்பாகங்களிலும் பூமியின் மேடான பாகங்களிலும் விழ ஆங்காங்குள்ள தாழ்ந்த பாகங்களில் முதலில் சிற்றாறுகள் உண்டாகி நிலசரிவிற்கேற்ப இவைகள் ஓடிச் சேர்ந்து பெரிய நதியாகும். இது வரும் வழியில் மேடான பாகங்களிருப்பின் அவைகளால் தடைபட்டு மார்க்கம் மாறி தாழ்ந்த பாகங்களைத் தேடிச் சென்று ஆறு வளைந்து செல்லும். மலையில்விழும் நீர் ஒருபுறம் ஓடி ஆறாகப்போவது போலவே மறுபுறமும் நேரெதிராகிய ஆறுகளும் ஆகும். இம்மாதிரியானப் பாகங்களுக்கு **நீர்ப்பிரிவு** என்றுபெயர். மேற்குத் தொடர்ச்சி மலைகள் நீர்ப்பிரிவுகளே. கிழக்குநோக்கி தாம்ரபாணி, காவிரி, கிருஷ்ணை, கோதாவரி முதலியநதிகள் அதிலிருந்து ஓடுவதுபோல குழித்தலையாறு, பெரியாறு, பொன்னணியாறு முதலிய சிறு நதிகள் மேற்கு நோக்கியும் அதிலிருந்து போகின்றன. பாதையிலுள்ள மழைத்தாரைக் கால்வாய்கள் பள்ளமான விடத்தில் தங்கிச் சுழன்று மறுபடியும் அங்கிருந்து வெளியேறிப் போவது போல ஆறுகளும் பள்ளமான ப்ரதேசங்களில் ஏரிகளாகத் தங்கி அங்கும் நிலைபெறாது ஓடிச்சென்று எல்லாத் தண்ணீருக்கும் நிலையமாகிய கடல் சேருமளவும் ஓய்வதில்லை. மழை இருக்கிறவரையில் தான் பாதைக்கால்வாய்களில் நீரோட்ட மிருக்கும். பின்னர் அவை வறண்டுபோகும். ஆறுகளோ அப்படி அல்ல. என்ன வேனில் காலமாகிலும், வெகு குறைந்தாவது ஓடிக்கொண்டிருக்கும், அல்லது அங்கு வெட்டினால் சிறு ஆழத்தில் தண்ணீர் காணலாம். ஆதலால் மழைகாலத்தில் பூமியுள் மூழ்கி மறையும் தண்ணீர் உள்ளூற்றுக்களாக விருக்க அவைகளும் ஆறுகளை உண்டாக்கும் காரணங்களுள் ஒன்று ஆகவே, ஆறுகள்ஸாதாரணமாகப் பூமி உறிஞ்சிய நீர்போக மற்றைய நீர்களை மறுபடியும் மழையாக வந்திறங்கும்படி செய்ய ஸமுத்ரம் சேர்க்கும் கருவிகளே ஒழிய வேறல்ல. கங்கை ஸிந்து ப்ரஹ்ம புத்ராக்களைப்போன்ற சில ஆறுகளில் வேனில் காலத்தில் அதிக ஜலமும், மழைகாலத்தில் தண்ணீர் சற்றுக் குறைந்தும் காணப்படும். இவைகள் புறப்படும் மலைகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டிகளாக விருப்பதால்முற்கூறிய ஏற்றத்தாழ்வுகள் காலம் மாறி ஏற்படும்.

இனி ஆறுகளின் கார்யங்களை ஆராயப்புகுவோம். மறுபடியும் பாதைக் கால்வாய்களையே உற்று நோக்க வேண்டும். அவைகள் போகும்பொழுது பாதையில் உள்ள புழுதிகளை கூடவேஅடித்துப்போகும். போகப் போக அவைகள் சற்றுத் தெளிந்து விடுவதால் அவைகளைப்போகும் வழியிலேயே படியவிட்டுப்போகின்றன. மேல்மேலும் வரும் தண்ணீர் படிந்தவைகளை இடம் மாற்றிவர, அந்தப் படிவுகளும் மெதுவாக இடம்மாறிக்கொண்டேதான் இருக்கும். இப்படிவுகள் பாதை முடிவிலுள்ள பெருங்குழி அண்டைபோக, அங்கு இவைகள் ஏராளமாகப் படிந்து, அக்குழி தூர்ந்துகொண்டே வரும். கால்போய்ச் சேருமிடத்து மண்படிவு அதிகமாகவிருக்க அங்கு மேடு தட்டும். அது அதிகமாகி விட்டால் தரை வெளியில் தெரிய கால்வாய் இரண்டாகப் பிரிந்து போய்விடும். இது திரிகோண ரூபமாக விருக்கும். இதுபோலவே ஆறுகளும் பூமியிலுள் சிதைவுப் பொருள்களை ஸாவதானமாக எடுத்துச்சென்று கடலுள் சேர்க்

கும். முகத்துவாரத்தில் திரிகோண ரூபமான நில மட்டம் உண்டாக்கும். ஆகவே இவைகள் ஓரிடமுள்ள நிலங்களைச் சிதைத்து வேறோரிடத்தில் புதியதிட்டு உண்டாக்கிக்கொண்டே யிருக்கின்றன. கடலில் தான் நதிகள் இம்மாதிரி உண்டாக்குகின்றன என்ப தில்லை. போகும் வழியிலேயே திட்டுக்களை உண் டாக்கியும் நாளடைவில் தம் கால்வாயைக் குறைத்துக் கொண்டும் வருகின்றன. இதனால் நதிகள் இருபுறத்தி லும் வெகுதூரம்வரை மணல் இருப்பதையும் பெரு வெள்ளங்களில்கூட இவைகள் மூழ்காம லிருப்பதையும் காணலாம். இவைகளில் ஆற்றுமணல் இருப்பதால் இங்கு முன்னர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது என்றும் அது இப்பொழுது உயர்ந்துவிட்டது என்றும் அறிய லாம். ஆறுகள் கற்களைப் புரட்டிக்கொண்டு பாறை கள் மேல் பாய்ந்து ஓடுகையில் கூறுள்ள கற்களைத் தேய்த்து மழமழவென்றாக்கி உருட்டி கூழாங்கற்க ளாக்குகின்றன. பாறைகளையும் தேய்த்து வழவழப் பாக்குகின்றன. இம்மாதிரி ஓடும் நீரால் பாறைகள் மழமழவென்றாக்கப் பட்டிருப்பதைத் திருக்குற்றாலம் தேனரிவித்தடாகம் இருபுறத்திலும் நன்றாகக் காண லாம். பாபநாசம் அருவி ஓரங்களில் பெரிய கூழாங் கற்களையும் காணலாம். கற்கள் ஆற்றுச்சுழலுள் அகப் பட்டுக்கொண்டால் அடிப் பாறையில் அவைகள் தேயுமிடத்தில் ஆட்டுரல் குழிபோன்ற நல்ல குழி பறித்து விடும். ஆகவே, ஆறுகள் நிலத்தின் சிதைவுகளை ஸமுத்ரம் கொண்டுசேர்த்து அங்கு புதிய நிலமட்டங்கள் உண்டாக்கவும், அங்குள்ள சிப்பிப்புழு முதலியவை களுக்குக் கூட்டுக்குரிய வஸ்துக்கள் கொடுப்பதும், பூமி யில் மூழ்கியது போக உபயோகமற்ற நீரைக் கடல் கொண்டு சேர்த்து மறுபடி மழைக்கு ஆதாரமாக்குவது ஆகிய ஓயாத்தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறுகடலிலேபிறந்துமுடிவில் கடலையேஅடை யும் ஆறுகள் உலகவாழ்க்கையின் நிலையையும் தத்து வத்தையும் நன்குஉணர்த்துவதற்கு உரிய திருஷ்டாந்த மாக, உபநிஷத்ருஷிகள், புராணிகர்கள், கவிகள் முத லிய எல்லோராலும் எடுத்தாளப்பட் டிருக்கின்றன. ஆறுகள் ஓயாது இடம் மாறிக்கொண்டிருந்தும் எப் பொழுதும் நிலைத்திருப்பதுபோலத் தோற்றுவதால் வெளிப் பிரபஞ்சம் முழுவதும் இப்படியே என்பதைக் குறிப்பித்தும், கடலிலிருந்து பிறந்து பலதிசை ஓடி முடிவில் கடலிலே மறுபடி சென்று சேருவதால் எல் லாம் பரம் பொருளிலிருந்து உண்டாகி வெவ்வேறு வழிசென்று ஆடிப்பாடி முடிவில் பரம்பொருளிடமே வந்து அமரும் என்பதையும் குறிப்பாகக் காட்டுவதால் இவைகள் பெரியோர்களால் விரும்பப்பட்டவைகள் ஆகின்றன.

"கான்யாற் றடைகரை யூரினது" என்றார் கவி. ஆற்றங் கரையிலுள்ளோர்கள் அதை ஸ்நாந, பாநம், க்ருஷி முதலியவைகளுக்கு உபயோகப் படுத்துவதால் இவ்வாறு கவி கூறினார். நம்மவர்கள் ஆறுகளைத் தேவ தைகளாகமதித்துவந்தமையால் அவைகளில்அசுத்தகார் யங்கள் செய்யாது நன்றாக வைத்துக்கொண்டுவந்தார் கள். இப்பொழுதோ அப்படியல்ல. இதனால்ஊர் அருகா மையிலுள்ள ஆறுகள் கெட்டே காணப்படுகின்றன. ஊர் சாக்கடை முதற்கொண்டு அதிலேயேதான் வந்து விழுவது. ஆதலால் ஆற்றிற்கு அழிவு ஊராருகிருத் தல் என்று கூறவேண்டி வருகிறது. இவ்வளவு சிறப் பும் உபயோகங்களும் உடைய ஆற்றை நன்றாக வைத் துக்கொண்டிருந்தால் தான் அவைகள் நமக்கு விடாது நன்மை பயந்துகொண்டிருக்கும்.

## இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. *மழை
2. *க்ரஹணங்கள்
3. *எரி நக்ஷத்ரங்களும் பொரிநக்ஷத்ரங்களும்
4. *எரிமலைகள்
5. *பூகம்பங்கள்
6. ஜந்துக்களின் மேற் போர்வை
7. *பனிக்கட்டியும் அதன் ரூபாந்தரங்களும்
8 *கானல் நீர் முதலியன
9. மலைகள்
10. இடிமின்னல்.

* இக்குறிப்புள்ளவைகள் விவேக போதினியில் முந் தியே விஸ்தாரமாக எடுத்து ப்ரஸ்தாபித்தவை.

## பொதுக்குறிப்புக்கள்

1. முகவுரை.
2. காரணம்.
3. கார்யம்.
4. விசேஷக்குறிப்புகள்.
5. உபயோகம்.



## மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

### 6. LESSONS FROM THE LIVES OF THE WORLDLY GREAT

No doubt, from the change of circumstances in the present day, many persons to whom we have referred could not now have been successful in the career they happened to adopt. The discoveries of Arkwright and Stephenson, for example, are not in a special sense to be repeated. A seller of old books could not expect to emulate Lackington. Perhaps it would be difficult to emulate Brassey in the grandeur of his undertakings. We do not, however, present instances of individual effort for precise imitation. Indeed, almost any kind of professional imitation is to be discommended. Nor do we wish that the young should overcome the difficulties that may be incidental to their situation merely for the sake of worldly wealth and distinction, but because it is the duty of every one to cultivate and make the most of his faculties, irrespective of all consequences, leaving the result to Providence. Naturally, there can be no such culture without bringing emulation in its train, independently of the pleasures derived from well-directed exertion. Happiness is not denied to the humble and trustful, but to this there may be added the happiness of being able to communicate happiness to others. To that let every one aspire in the way congenial with the abilities with which he has been beneficiently gifted.

Chamber's Examplary Biography, last para

### உலகிலுயர்ந்தோர் சரிதைகள் கருத்து

இக்காலத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை மாறுபாடுகளை நோக்கில், இங்குக் குறிக்கப்பட்டுள்ள அநேகர் (உயர்ந் தோர்) தாம் பின்பற்றிய மார்க்கங்களில் இப்பொழுது சிறப்புற்று விளங்கார்கள் என்பதற்கு ஸந்தேஹமே இல்லை. உதாரணமாக ஆர்க்ரயிட், ஸ்டீபென்ஸன் ஆகிய இவர்கள் கண்டுபிடித்த புதிய விஷயங்கள் (நெசவுயந்திரம், ரயில்) இக்காலத்தில் சிறப்பாக நோக் கில் மறுபடி ஏற்படக் காரணமே இல்லை. பழம் புத்தகங் களில் வ்யாபாரம் செய்பவன் லாகிங்டனைப் போல வாகக் கனவிலும் கருதமுடியாது. பெரிய ஏற்பாடு களை ப்ராஸ்ஸியைப்போல எடுத்தாண்டு விளங்க வேண்டுமென்பது ஒருவேளை மிகக் கஷ்டமாயிருக்கும். எப்படி இருப்பினும், இங்கு நாம் நுட்பமாகப் பின் பற்றத்தகுந்த தனி முயற்சிக்கு உதாரணமாக உள்ள வர்களை எடுத்துக்காட்ட வரவில்லை. யதார்த்தமாகப் பார்க்குங்கால், தொழில்கள் விஷயமாக எவ்விதப் பின் பற்றுதலையும் நிராகரிக்கவேண்டும். தமது நிலைகளில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை நம் சிறுவர்கள் சீரும் சிறப் பும் வரவேண்டும் என்ற ஆவலுடன் மாத்திரம் நீக்க முயலவேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல. தனக்கு என்ன பலன் கிடைத்தாலும் ஸரி, அது கட வுள் பாரம் என்றுவிட்டு, ஒவ்வொருவனும் தனது சக்தி களைத் தன்னால் கூடியவரையில் பயிற்சிசெய்து அவைகளைச் சிறப்பாக வைத்துக்கொள்ள வேண்டுவது தனதுகடன் ஆதலால் கஷ்டங்கள் நீக்கமுயலவேண்டும் என்று எண்ணவேண்டும். நேர்வழியில் செலுத்தப் படும் முயற்சியால் உண்டாகும் ஆனந்தம் ஒருபுற மிருக்க, மேன்மை அடையவேண்டும் என்ற ஆவல் ஒன் றும் இல்லாமலே, இம்மாதிரியான பயிற்சி ஸாதாரண மாக ஏற்படாது. அடக்கம், நம்பிக்கை இவைகளை உடையவர்களுக்கு ஆனந்தம் ஏற்படாதிருப்பதில்லை. இதனோடும்கூட மற்றையவர்களுக்கும் ஆனந்தம் உண் டாகும்படி செய்யும் ஆனந்தமும் சேர்ந்து ஏற்படலாம். தனக்கு கருணையுடன் அளிக்கப்பட்ட சக்திக்கு தகுந்த படி ஒவ்வொருவனும் இவ்வாறு ஏற்படவேண்டும் என்ற பேராவல் கொண்டிருக்கட்டும்.

சில கெட்ட வழக்கங்கள்.—ஒரு சங்கத்தில் போய் உட்காரும்பொழுது நமக்குள்ளேயே பாடிக்கொள்ளு தல், கைவிரல்களாலும், கால்களாலும், தாளம் போடு தல், துடை ஆட்டுதல் இவைகளெல்லாம் கெட்ட வழக்கங்களில் சேர்ந்தவைகள். விருந்து முதலியவை நடக்கும் இடங்களில் நாம் சாப்பிடப் போய் உட்கார்ந் தால் எல்லாரையும்விட வேகமாயாவது மெதுவாயா வது சாப்பிடவே கூடாது. இலையில் போட்டிருக்கும் பதார்த்தத்தை முகந்து பார்த்தல் மிகவும் அவலக்ஷண மான குணம். காறுதல், இலை யோரங்களில் கோழை உமிழ்தல், வாயுபறிதல் இவை போன்றவைகளெல் லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்களாம்.

இந்து நேசன்.

# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

**விதூஷகன்.**—(இங்குமங்கும் பார்த்து) நண்பா ! இங்கு பாரும்! தமது இளங்கழுத்தைச் சற்றே திருப்பி, அசையாத வாய்களிலிருந்து நன்றாக மென்றிடாத தருப்பைப் புல்லின் கபளம் நிறைந்து நெகிழ்ந்து வீழவும், ஒரு காதை சிறிது உயர்த்தி மிக்க ஆநந்தத்தால் கண்களை மூடிக்கொண்டு இம்மான்கூட்டங்கள் என்னதை காது கொடுத்துக்கேட்கின்றன !

**நாயகன்.**—நீ கூறியது நன்று ! நண்ப ! தமது கழுத்தை ஓசைவரும் பக்கமாகத் திருப்பிக்கொண்டு தமது பற்களினடுவில் பட்ட புல்லை அசைத்தால் எங்கு ஓசை உண்டாகுமோ என்று அதையும்விட்டுவிட்டு என்னவிதமாக ஆழ்ந்து அவ்வினிய இசையை இம்மான்கூட்டங்கள் கேட்கின்றன ! மேல்கீழ் ஒலிகள் ஸரிவர பதிந்து, இடைநாதம் கிளம்பி, ஐந்யஇடங்களில் உண்டாகி, ஒலியோடு ஒலி இனிக்க மயங்கி வீணாகானத்தில் மதுவுண்ட தேனீக்களின் இனிய ஓசை கலந்தால்போல ஒலிக்கின்றது இந்தக் கானம் !

**விதூஷகன்.**—இத் தபோவனத்தில் யார், நண்பா, இங்கு பாடிக்கொண்டிருக்கலாம்?

**நாயகன்.**—அந்த யாழைமீட்டிய சிறுவிரலின் ஓசை நன்றாகக்கேட்க முடியவில்லை. ஆனால் காகலீஸ்வரம் ப்ராதனமாக இருப்பதாக எனக்குப் படுகிறது. (விரலால் சுட்டி) இக்கோயிலில் யாராவது தேவகன்னியர் யாழோடு கலந்துபாடி தேவியை ஆராதனம் செய்யலாம்.

**விதூஷகன்.**—அப்படியானால் வா. நாமும் கோயில் பார்ப்போம்.

**நாயகன்.**—நீ சொல்லியது நல்லது. தேவதைகளைப் பூஜிக்க வேண்டியதுதான் (கிட்ட நெருங்கி, ஒல்லென நின்று) நண்பா! ஒருவேளை இம்மங்கையைக் காண்பது தகுதியாயிராது. ஆகையால் இந்தத் தாமலத்தோப்பில் பதுங்கி, பின், கோயில்போகும் ஸமயத்தை எதிர்பார்க்கலாம். (தோப்பில் பதுங்கல்)

(மலையவதி கையில் வீணையோடும், தாதி ஒருவளுடனும், வீணை வாசித்துக் கொண்டுவரல்.) ·

**நாயகி.**—(பாடுகிறள்)

இதழ்விரி கயலங்கள் மதுசொரிந் தலர்தரு தாதின்றாள்
விதந்தரு வணமுடை உமையென மனன்வரம் அருள் [வாயே.

**நாயகன்.**—(பாட்டைக்கேட்டு) மித்ரா! ஆஹா! என்ன கானம்! என்ன ஸங்கீதம்! ஸங்கீதமுறைமைக்கமைந்து, விரல்கள் திருந்த பத்திடங்களிலும் பதிந்து, நரம்புகளிலிருந்து இனிய ஸ்வரம் கிளம்பி, நன்றாக ஒலிக்கின்றன. ஜநகராகங்கள் பத்தும் சுத்தமாக விருக்கின்றன. துரிதம், மத்யம் லம்விதம் என்னும் முக்காலங்களும் நன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. கோபுச்சக முதலிய கால நிலைகளும் வரிசைக்ரமத்தில் அநுபவத்தில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. கீழ் மத்யம் உச்சம் ஆகிய மூவகையிலும் தாளம் விடாது, ஸ்வரம் கலையாது, வீணையின் ஒலியும் கண்டஸ்வரமும் மயங்கி ஒருமிக்கப்பாடுதல் நன்றாகக் காட்டப்பட்டது !

**தாதி.**—(ஆசையுடன்) அம்மா! தாங்கள் நெடுநேரம் வீணை வாசித்தீர்கள். உங்கள் விரல்கள்தான் நோகாதா?

**நாயகி.**—(வெறுப்போடு) ஹா ! சாதுரிகை ! கௌரியின் முன் வீணை வாசித்தால் விரல்களுக்கெப்படி வருத்த முண்டாகும் ?

**தாதி.**—அம்ம ! நான் சொல்வதைச் சற்றுக் கவனியுங்கள் ! இளந்தளிர்போன்ற ஸ்த்ரீ சரீரத்தால் கடுந்தவம்பூண்டு நெடுநாள் பூஜைசெய்தும் கருணை யென்பது சற்றுமில்லாத இப்பாழும் தெய்வமுன் பாடித்தான் என்ன ப்ரயோஜனம் ?

**விதூஷகன்.**—மித்ரா ! அவள் ஒரு கன்னி—மணமாகாத மகள்—அவளை நாம் ஏன் காணலாகாது ?

**நாயகன்.**—தோஷம் என்ன இருக்கிறது ! கன்யைகளை நிந்தைக்கிடமின்றிக் கண்டால் தோஷம் இராது. ஆனாலும் இளம் பெண்] ஆகையால் தனக்கு இயற்கையான நாணத்தால் நம்மைக்கண்டால் இங்குந் தங்கி இருக்க விரும்பாள்; நாம் அவளை இந்தத் தாமல வ்ருக்ஷத்தின் பின் நின்று பார்ப்போம்.(இருவரும் அவ்வாறே பார்க்கிறர்கள்)

**விதூஷகன்.**—(ஆச்சர்யத்துடன் பார்த்து) பார் நண்பா ! அதோ பார்! வீணாகானத்தால் காதை இன்பத்தில் மூழ்கிவித்ததுபோல் தனது அழகால் கண்ணையும் ஆநந்தத்தில் மூழ்கச்செய்கிறள். அவள் யாராய் இருக்கலாம் ? தேவியேயோ ? நாககன்னியோ ? வித்யாதர மடந்தையோ ? அல்லது ஸித்தர் குலத்து உதித்தவளோ ?

**நாயகன்.**—(மகிழ்வோடு பார்த்துக்கொண்டு) நண்பா! எனக்கவள் யார் என்று தெரியவில்லை,



தேவ மடந்தையேல் தேவேந் திரன்தன்
கண்களா யிரமும் கவினுண் டிருக்கும் ;
மண்ணிடு நாக எந்திழை யாயின்
தண்ணிய வொளியின் வெண்பிறை யிலையெனு
கவலை தீர்த்ததிக் கவின்முக மிதுதான் ;
வித்யா தரியேல் விஞ்சையர் குலந்தான்
மற்றெ வற்றினும் உற்றது பெருமைகாண்;
மற்றிவள் சித்தரின் மகளா யிடிலவர்
மூவுல கினுஞ்சீர் மேவின ரன்றே!

**விதூஷகன்.**—(நாயகனைக் கண்டு ஸந்தோஷத்துடன் தனக்குள்) அத்ருஷ்டம்தான். நெடுநாள் கடந்து இப்பொழுதானடா இவன் மன்மதனுடைய புஷ்பபாணங்களிற்கு இரை ஆனன்! இல்லை. இல்லை—நானே ஒரு கட்டை ப்ராஹ்மணன்தான்.

**தாதி.**—(அன்போடு) சற்று கவனியும்! அரசி! நான் சொல்லவில்லையா! இந்தக் கண்ணில்லாதபாழும் தெய்வமுன் பாடுவதால் என்ன பயன். அதன் மனமுருகவில்லை, கடின நெஞ்சமுடையது. அதன்முன் வீணை வைத்துக்கொண்டும் பஜனையா ? (வீணையைப் பிடித்திழுக்கிறள்.)

**நாயகி.**—கோபத்தோடு) என்னடி !அம்பாள் கௌரிக்கு அபராதம் செய்கிறய். இன்று எனக்கு அம்பாள் அருள்புரியவில்லையா?

**தாதி.**—(ஸந்தோஷத்துடன்) அது என்ன எனக்கு சொல்லுங்கள் அம்மணீ!

**நாயகி.**—இது எனக்குத் தெரியும். எனக்கு இன்றைக்குக் கனவில் இந்த வீணையை வாசித்துக் கொண்டிருந்தாற்போல் இருக்கிறது. அப்பொழுது அம்பாள் கௌரி ‘குழந்தாய் உன்னுடைய அபாரவீணா ஞானத்திற்கு மகிழ்ந்தேன். மெல்லிய ஸ்த்ரீகள் எவர்களாலும் உன்னைப்போல வாசிக்க முடியாது. உனது உள்மனத்தோடொழுகும் பத்திக்கும் மெச்சினேன். உன்னைச் சீக்ரத்தில் வித்யாதரர் அரசன் கல்யாணம் செய்து கொள்வான்”என்றதாகத் தெரிந்தது. அதுபொய்க்குமா?

**தாதி.**— (ஸந்தோஷத்தோடு) அப்படியா ! ஏன் அதைக் கனவு என்று கூறுகிறய்? உன்னுடைய மனோபீஷ்டமே அல்லவா தேவி ஈடேறும்படிச் செய்ததல்லவா ?

**விதூஷகன்.**—இதுதான் நல்ல ஸமயம். தேவியைப் பார்க்க இதுதான் நல்ல ஸமயம். வா நாம் போவோம்

**நாயகன்.**—நான் வரமாட்டேன்,

**விதூஷகன்.**—(இஷ்டப்படாத நாயகனை இழுத்துக்கொண்டு கோயில் உள் நுழைகிறன் நுழைந்து)வாழிய அரசே ! உனக்கு ஸுகமுண்டாகட்டும் ! சாதுரிகை சொல்லியது நிச்சயம்தான் ! இதோ பார் ! இங்குக் கௌரி அளித்த வரன். இதுதான் பார்.

**நாயகி.**—(கூச்சத்தோடு எழுந்து, நாயகனைச் சுட்டி பக்கத்தில் பார்த்து) தோழீஇ ! யார் அது ?

**தாதி.**—ஸமானமில்லாத அவர் ரூபத்தைப் பார்த்தால் அவர்தான் அம்பாள் உனக்களித்த வரனாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

(நாயகி நாணத்தோடு பார்ச்வமாக கடைக்கண்ணால் நாயகனை அன்போடு பார்க்கிறள்)

**நாயகன்.**—

காணுங் கண்டுணை கம்பிக்க வார்குயம்
நாணும் நடுங்கு முயிர்ப்பின்மெய்ந் நைந்திட
கோணில் மெய்த்தவங் கொண்டின்னம் நைவதென்
யாண ரென்முகங் கண்ணுற்ற தாலரோ !

**நாயகி.**—(பிறரறியாது) தோழீ ! எனக்கு இங்கு எதிரில் இருக்க லஜ்ஜையாகின்றது. என்னால் முடியவில்லை—(நாயகனை வெட்கத்தோடு கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டு சற்று முகத்தைத்திருப்பினாற்போல நிற்கிறள்)

**தாதி.**—நாயகி ! இது என்ன இது ?

**நாயகி.**—இவர் அருகு இருக்க என்னால் முடியவில்லை. நாம் இதைவிட்டு போகலாம் வா. (எழுந்திருக்க விரும்புகிறள்.)

**விதூஷகன்.**—நண்பா ! இவள் உன்முன் நிற்க லஜ்ஜைப்படுகிறள். நான் பூர்வம் படித்த வித்தையின் பலத்தால் இவளை இவ்விடமே சிலகாலம் இருக்கும்படிச் செய்வேன்—(யோசித்து) அம்மணீ ! இது உமக்கு அடுக்குமா? ஆச்ரம ஒழுக்கத்திற்குப் பொருந்துமா ? நல்லது ! உம்மிடம்வந்த அதிதியோடு வார்த்தையால்கூட வரவு கேழ்க்காமலிருப்பது நன்று !! இது தானா உமது வழக்கம் ?

**தாதி.**—(தனது நாயகியைப்பார்த்து—தனக்குள) அவள் பார்வைமுழுதும் இங்கே லயித்து ஆனந்தமடைகிறது. இவ்வாறு பேசுவேன்—(வெளிப்படையாக) அரசி! ஐயர் சொன்னது ஸரிதான். அதிதிக்கு நல்வரவு கூறவேண்டியது உன் கடமைதான். இப்பெரியவரிடத்தில் நீ செய்யவேண்டிய தர்மத்தை அறியாது ஏன் நிற்கிறய்?

(தொடரும்.)

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

**CHILDREN'S PAGES**

உண்மை உயர்வு

அல்லது

வாஸுதேவ சாஸ்திரி

TRUE GREATNESS

RO

VASUDEVA SASTRI

அத்தியாயம் 2

ஸத்காலக்ஷேபம்

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க*
*நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே ; —நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ*
*டிணங்கி யிருப்பதுவும் நன்று.*

இப்பொழுது வேறோர் இடம் போகிறோம். ஸாதாரணமாயும்தாழ்ந்த கூரை உடையதாயும் சிற்சில இடங்களில் இடிந்து விழுந்துகொண்டிருப்பதாயும் உள்ள ஒரு வீட்டுள் புகுந்து பார்ப்போம். அஜாக்ரதையாகக் குனியாமற் சென்றால் வாயில் நிலை படீர் என்று மண்டையில் இடித்துவிடும். அதுஅவ்வளவு தாழ்ந்து இருக்கிறது. கதவு திறந்தவண்ணமாகவே இருக்கிறது. உள்ளே பார்த்துவிட்டால் நுழையவே நமக்குப் பிடிக்காது. ஆயினும் உள்ளே புகுந்துவிட்டதால் முதலில் வாயிற்றிண்ணை ரேழிமுதலியவைகளைத்தாண்டுவோம். பின்னர் ஒரு கூடத்துள் புகும்படி நேரிடும். அது தான் சாப்பிடுவதற்கும், சிலர் கூடிப் பேசிக்கொண்டிருப்பதற்கும் தகுந்த விடமாக இருந்தது. அந்தக் கூடத்தில் ஸூர்ய சந்திரர்கள் மழை ஆகிய இவைகள் தாராளமாக வாஸம்செய்ய இடமிருந்தது. பார்வைக்கு அது ஓர் குடிசைபோல பஞ்சையாக விருந்தது. அங்கு உட்காருவதற்கு இரண்டொரு பலகைகள் தவிர வேறுஒருவித ஸாமான்களும் காணப்படாது. ஒரு மூலையில் சில பாத்திரங்கள் ஒழுங்காக வைக்கப்டிருந்தன. மற்றொரு புறத்தில் ஓர் சந்தணக்கல்லும், அருகாமையில் தெய்வபூஜை வைத்திருத்த ஓர் அலமாரியும் இருந்தன. இந்தக் கூடத்தில் எதிரும்புதிருமாக இரண்டு அறைகள் அமைந்திருந்தன. ஒன்று சமையல் அறை ; மற்றொன்று பாவுள், அதில் ஒன்றின்மேல் ஒன்றாக அநேகம் பானைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவைகளுள் வீட்டு ஸாமான்கள் இருந்தன. முற்கூறிய கூடத்தின் மத்தியில் சிலர் உட்கார்ந்துகொண்டு ஸத்காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்தனர்.

இவர்களில் ஒரு ஸ்திரீ 'ஒருவன் வெறும்பட்டப் பெயர்களை எண்ணி எண்ணி மகிழ்ந்து பித்துப் பிடித்தவன் போலாய் விடக்கூடாது. வீண் கர்வப்படவே கூடாது' என்று நான் எவ்வளவு சொல்லியும் அவர் என்மேல் அடங்காக் கோபம் கொண்டார். அகங்காரத்திற்கு அப்பாற்பட்டு நிற்றல் அருமை! அருமை!' என்று மிகுந்த ஆவலுடன் கூறினாள்.

'மிகக்கஷ்டம் வீதே!'என்றார் மற்றொருவர். 'இந்தக் கஷ்டம் பிரபஞ்சத்தில் எல்லோருக்கும் உண்டு.

"முன்னொரு காலத்தில் வியாஸபகவான் குருக்ஷேத்ரம் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் காலடிச்சத்தத்தைக்கேட்டு வழியிலிருந்த புழுவொன்று பயந்து வெகு வேகமாக நகர்ந்து ஒதுங்கிப்போயிற்று. இதைக் கண்டவுடன், 'நாம் இந்த ஜந்துவை ஒரு பொருட்டாக மதிக்கிறதில்லை. இது எவ்வளவு அல்பமாக நமக்குப்பட்டபோதிலும், இதற்கும் இதன் உயிர் வெல்லமாகவே தான் இருக்கிறது ! என்ன ஆச்சர்யம்! பகவத் ஸ்ருஷ்டியின் மஹிமையே மஹிமை !' என்று வியாஸர் வியந்து, தமது ஞானதிருஷ்டியால் அந்த ஜந்து யார் என்று உற்றுநோக்கினார். அத்யாச்சர்யம் ! மஹானாகிய நாரதரே அந்த ஜன்மம் அடைந்திருந்ததைக் கண்டார் ! அப்பொழுது அந்தப் புழுவை நோக்கி, 'ஓ நாரத பகவானே ! உமக்கு என் இந்தத் தாழ்ந்த ஜன்மம் வந்தது? இந்த நிலையை அடைந்த பின்பும் உமக்கு என் இந்த ஜன்மத்தைக் காப்பாற்ற வேண்டும், என்ற துர்ஆசை உண்டாயிருக்கிறது?' என்று கேட்டார். அதற்கு அந்தப் புழு, 'ஓ வ்யாஸ பகவானே, ஒரு பாபம் செய்து நான் இந்த நிலைக்கு வந்து விட்டேன். பகவத் மாயையின் சக்தியை என்னென்று சொல்லுவேன் ! இந்த ஜன்மத்திலிருந்த போதிலும், என்னைப்பற்றி எனக்குச் சிறந்த அபிப்பிராயம்தான். என் ஸுக துக்கங்களே எனக்குப் பெரிதாகிவிட்டன. உம்முடைய திருஷ்டிக்கு நான் மிகத் தாழ்ந்ததாகத் தோற்றிய போதிலும், எனக்கு என்னைப்பற்றி அம்மாதிரியானஎண்ணமே கிடையாது. இதனால்தான் என் உயிர் எனக்கு வெல்லமாயிருக்கிறது' என்றது. 'இம்மாதிரி ஒருபுழு தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் மனிதராகிய நம்மிடம் அகங்காரம் குடிகொண்டிருப்பது ஓர் ஆச்சரியமா? அணுமுதல் அண்டங்கள் பரியந்தம், பிரபஞ்சத்தில் உள்ள வஸ்துக்களிலும் இந்த அகங்காரம் இருந்துகொண்டுதான் தொழிற்படுத்துகின்றது. இந்த அகங்காரம் தான் பிரபஞ்ச வ்யாபாரம் எல்லாவற்றிற்கும் காரணம். இந்த அகங்காரம் எவ்வித தந்திரத்தாலாகிலும் இந்தப் பிரபஞ்சத்தைவிட்டு நீக்கப்பட்டால், இதன் உண்மை உருவாம் பரம்பொருள் மாத்திரம் தான் தனித்து நிற்கும். இம்மூடமான அகங்காரத்தை அடக்கி அப்பாற்பட்டு நிற்றல் நம்மவருள் அநேகருக்கு முடியாது. ஆதலால் தான் **பந்தீரகி;யாநும்**:—

*'ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்*
*தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்'*

என்று கதறியிருக்கிறார்."

என்று அவர் அமிருதவருஷமாக வருஷித்தார். இதைக் கேட்டதும் அவர்களுள் பேராவல் கொண்ட ஒரு சிறு பெண் "ஆஹா! என்ன அழகு! என்ன அற்புதம் ! மாமா ! நாம் எங்கள் கணவரை நேசிப்பதும்,குழந்தைகளை வளர்ப்பதும்,இரந்தோர்க்கு ஈவதும் இன்னும் நாம் செய்யும் மற்றைய ஸத்கர்மங்கள் எல்லாம் இந்த அகங்காரத்தைச் சுட்டறுக்கத்தானே ஏற்பட்டவை ? என்ன ஆச்சர்யம் ! கண்டுகொண்டேன் தெரிந்து விட்டது' என்று கூறி ஆனந்த பரவசையானாள்.

இப்பொழுது இவர்கள் இன்னார் என்பதை நான் கூறிவிட வேண்டும் ; இல்லாவிடில் கதை ஒழுங்குகள்படி வாசிப்போருக்கு இவர்கள் ஸத்காலக்ஷேபம் ருசிக்காமல் போய்விடலாம். இதுவரையில் இவ்வாறு செய்யாததற்கு மன்னிக்கவேண்டும். முதல் பேசியவள் இன்னாள் என்பது உங்களுக்கு முன்னரே தெரியும். அவள்தான் ஸீதாலக்ஷ்மி அம்மாள். ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் நாராயணய்யர் அவர்கள் ஸீ. ஐ. இ. உடைய ஸம்ஸாரம். திவ்ய தேஜஸ்ஸோடும் பரபரப்போடும் கடைசியில் பேசியவள் ஸீதாலக்ஷ்மி பெண் ; அவளுக்கு **ருக்மிணி** என்று பெயர். நடுவிற் பேசியவர் **வாஸுதேவ சாஸ்திரியைத்** தவிர வேறொருவருமன்று;அவர்தான் நமது கதாநாயகர். அவருக்குத்தான் முன்னாளிரவில் மஹாகனம் திவான்பஹதூர் அவர்கள் மிக மரியாதையாகப் பட்டங்கட்டி மகுடாபிஷேகம் செய்தது.

கதை சொல்லுவோர் வழக்கப்படி அவரை வர்ணிக்கப் புகுவோம். அவர் நல்ல யுவா, நல்ல சிவப்பு. அவர் அங்கங்கள் மிக ஒழுங்காகவும் பார்வைக்கு மிக லக்ஷணமாகவும் அமைந்திருந்தன. அவர் முக உல்லாஸமே அவரிடம் இருந்த சிறந்த விஷயம். அவர் முகத்தில் ஒருவித சாந்தமும் மேன்மையும் சேர்ந்து காணப்பட்டன. இதுவுமல்லாமல் அதில் ஒருவித மிருதுத்துவம், ஸுகம், பூர்ணமாக மலர்ந்த தாமரையைப் போன்ற வரம்புகிடந்த ஆனந்தம் ஆகிய இவைகள் ஜ்வலித்தன. ஓர் ரிஷிக்குக்கூட இம்மாதிரி திவ்யதேஜஸ் அமைந்த முகம் வாய்த்திராது. அவர் கண்களில் ஒருவித திவ்யமான ஸத்வகுணம் காணப்பட்டது, அவைகளில் அடங்கி இருந்த அற்புத சத்தியால் தூர்வாஸர் கோபம்கூட சாந்தமாகிவிடும் என்று சொல்லலாம். இக்கண்களின் சிறப்பு விட்டுவிட்டு மின்னல்போலப் பிரகாசித்து ஒடுங்குவதல்ல. அவைகள் அவர் மனத்தில் குடிகொண்டிருக்கும் ஸத்வம், அன்பு, அமைதி ஆகிய இவைகளை இடைவிடாது ஸதா வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. அவைகள் தேஜஸ் மழுங்குவதே இல்லை; காலதேசபேதங்கள் அதைத் தாக்கச் சக்தியற்றவையாயிருந்தன. அவைகள் தேவலோக மலராகிய வாடா கற்பகங்கள் போலப் பிரகாசித்தன. அவைகள் பார்க்கும்பொழுது வெளியே விசித்ரமாகக் காணப்படும் பிரபஞ்ச பேதத்தைக் காண்பதாகத் தோற்றவில்லை. இவைகளுள் மறைந்துகிடந்து இவைகளைப் பொருத்தும் ஏகவஸ்துவை ஓர் திவ்ய அப்யாஸத்தால் காணும் தி; ர வாய்ந்தவைபோல அவைகள் காணப்பட்டன. பாலைப் பார்க்குங்கால் மனத்திற்கு எவ்வளவுதிருப்தி உண்டாகுமோ அவ்வளவு திருப்தி அவர் கண்களைக் காணுங்கால் நமக்கு ஏற்படும். அவர் நம்மைப் பார்த்துவிட்டால் கேட்கவேண்டியதே இல்லை. அற்புதமாயும் பரிசுத்தமாயும் உள்ள அவர் திருஷ்டி தம்மேல் தாக்கப்பெற கொடுத்துவைக்க வேண்டுமே என்ற ஆராமை ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும் இருந்தது. அவர் ஆனந்தம் எந்த வெளி வஸ்துவிலும் ஸம்பந்தப்பட்டதாகக் காணப்படவில்லை. ஸுகதுக்கங்களால் அவருக்குப் பரபரப்பு ஏற்பட்டதாக ஒருவருக்குத் தெரியாது. கோபம் அவரை அணுகாது என்று சொல்லவும் வேண்டுமா ! அவரை கோபம் மூட்டுவதே சில பள்ளிப்பிள்ளைகளுக்கு விளையாட்டாக விருந்தது. தான் தனது என்ற இருவித மனோநிலைகள் அவரிடம் லவலேசமேனும் இருப்பதாகக் காணப்படவில்லை. அவர் நடவடிக்கைகள் எல்லாம் அவர், அன்பு, அடக்கம் இவைகளையே வெளிப்படுத்தின. அவர் பரம ஏழை. தம் வீட்டில் பூஜை செய்து வருவதற்கு நாராயணய்யர்

கொடுத்து வந்த அற்பச் சம்பளமே அவர் வரும்படி. ஆனால் பணக்காரர்களைவிட இவரிடம் எல்லோருக்கும் மதிப்பு அதிகம். குழந்தைகளுக்கு எல்லாம் இவரிடம் அதிக ப்ரீதி; சில இவர்மேல் தொத்திஏறும், சில இவர் தோள்மேல் ஏறித் தாண்டவமாடும், சில தலைமயிரை பிடித்திழுக்கும், சில இவருக்கு லகான்கட்டி மேலே ஏறிக்கொண்டு மாடு ஓட்டுவதுபோல ஓட்டும்; சில இவர் முதுகின்மேல் சேணம்போலத் துணிகளைப் போட்டு ஏறி ஸவாரிசெய்யும். அவஸர வேலையாகப் போகுங்கால் தாய்மார்கள் இவரிடம் தமது சிறு குழந்தைகளைவிட்டுப் போவது உண்டு. இவர் அவைகளை ஸாவதானமாகத் தூங்கவைப்பார். சிற்சில ஸமயங்களில் பாட்டுப்பாடி அவைகளை ஸந்தோஷப்படுத்துவார்.

ராமா க்ருஷ்ணா கோவிந்தா
  எனினும் எனைத்தான் அழைக்கின்றாய்
ஈசா சம்போ மாதேவா
  எனினும் எனைத்தான் அழைக்கின்றாய்
ஆமா ருலகமனைத் தனையும்
  அரசாள்பவனும் நானே காண்
ஆண்டானும் நான் அடிமை நான்
  அல்லால் வேறொன்றில்லாதே.

அவைகளுள் இது ஒன்று. கடைசி வரி பாடுங்கால் எளிதாகத் தாளத்திற்கு ஒத்து வருவதால் குழந்தைகளது சுத்தமான ஆனந்தத்தை அதிகப்படுத்தும்.

கிழவி குப்பிப்பாட்டி சாஸ்திரி வீட்டின் வழியாகப் போகும்பொழுதெல்லாம் ‘அப்பா தர்மராஜா’ என்று மனதார வாழ்த்தாது போவதில்லை. கிருஷ்ணன் என்ற பையன் தன் அற்புத ஸமாசாரங்களை இவரிடம் முற்றிலும் கூறாது தன் வீடு போவதில்லை—கோவிலுக்கு வெள்ளை யானை கொண்டுவரப் போகிறார்கள்! தன் கற்பலகையில் ஓர் வெள்ளைக்காக்கை தூங்கிக்கொண்டிருந்தது! தான் தூங்குங்கால் நாய் குலைப்பதே இல்லை! சனிக்கிழமையன்று மழையே பெய்யாது! தன் வீட்டுக்கொல்லையில் ஒரு பெரும் புலி இருக்கிறது! என்று இவைபோன்ற மனம்போன போக்கே அற்புத ஸங்கதிகளை கிருஷ்ணன் சாஸ்திரிகளிடம் சொல்வது உண்டு. வேலையை விட்டு ஒழிவு பெற்றதாசில்தார்ஸுப்ரஹ்மணியய்யர் அவர்கள் இவரிடம்வந்தால் நலமாக இருக்கும் என்றுஎண்ணுவதுண்டு. ஆனால் இவர் ஓயாது வேதாந்தத்தைப்பற்றியே வசனித்ததாலும், வம்புப்பேச்சுபேசத் திறனில்லாதிருந்ததாலும், தன் எண்ணப்படி தாசில்தாருக்குநடக்கமுடியாமல் போய்விட்டது. வேதாந்தம் தமக்குத் தெரியு என்ற எண்ணங்கொண்ட மதுரை முனிசீப் விசுவநாதய்யர் அவர்கள் தினம் ஒரு முறை சாஸ்திரியாரிடம் வருவார். மதுரை ஸப்ஜட்ஜி வீட்டுத்தூப்புக்காரி அங்கி என்பவள் சாஸ்திரியாரைக் காணும்பொழுதெல்லாம் ‘பணத்தால் என்ன குணம்? பணம் சண்டை சச்சரவு மனஸ்தாபங்களுக்கே காரணமாகும். சாஸ்திரியாரைப் பார்! அவர்பஞ்சையாய்த்தவிக்குங்காலத்தும் எவ்வளவு திருப்தியுடன் இருக்கிறார்!’ என்று வைராக்கியம் கூறி ஆனந்திக்காது போகவேமாட்டாள். பள்ளிக்கூடம் உபாத்யாயர் ராமஸ்வாமி அய்யருக்கு உலகம் முழுவதும் கெட்டது என்ற திட நம்பிக்கை இருந்தபோதிலும், ‘வாஸு மாத்திரம் தப்பிப் பிறந்தவன். ஒருவேளை ஸ்வர்க்கத்திலிருந்து தவறி வந்தான்போலும், ஆதலால் தான் அவன் ஏழையாயிருக்கிறான்’ என்று அபிப்ராயப் படுவார். வாய் ஓயாது நாள் முழுவதும் பொய்யுரைக்கும் தன்மை வாய்ந்த வக்கீல் ஸுந்தரய்யர் சாஸ்த்ரியைக் கண்டால் பொய் சொல்ல நா எழவில்லை என்று ஒப்புக்கொள்வார். தியஸாபிகல் ஸங்கத்தின் அங்கத்தினரும் நீண்ட தாடி உடையவருமான ஸப்ரிஜிட்ரார் முத்து அய்யர் சாஸ்திரயாரைக் கண்டதும், ‘இவர் ஓர் பெரிய ஸ்வாமிகள், மஹாபரிசுத்தர்’ என்று கூறி அகம் மகிழ்வார். எப்படியாயினும் சாஸ்த்ரிகள் வாசிப்போருக்கு இன்னார் என்று இதற்குள் தெரிந்திருக்கும். இனி அவர் விஷயங்களைக் கவனித்து அவருடன் பழகுவதா வேண்டாமா என்பதை வாசிப்போரேதீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

கதையை விட்ட விடத்தில் தொடங்குவோம். ருக்மிணி கேள்வியைக்கேட்டதும் சாஸ்திரியார் அவளை நோக்கி ‘ஆம் குழந்தாய்! நீ சொல்வது முற்றிலும் உண்மையே! நாம் அன்பு பாராட்டுங்கால் நமது அகங்கார மமகாரங்களை அதனுள் முழுத்தித் தொலைக்க வேண்டும். ஏழைகளைக் காத்தல் முதலிய ஸத்கர்மங்கள் செய்யுங்கால் அவைகளில் ஸம்பந்தமாக ஏற்படக்கூடிய கர்வம் என்னும் படுகுழியில் விழுந்து விடக்கூடாது. இந்தக் காலங்களில் நாம் வெறும் கருவிகளே ஒழிய கர்த்தாவே அல்ல என்ற எண்ணம் திடமாக இருக்கவேண்டும்.

“ஓர் ஊரில் ஒருத்தி தோசைவார்த்து விற்று ஜீவனம் செய்துவந்தாள். அவள் தினம் தவறாது ஸூர்ய உதயத்திற்கு இரண்டு நாழிகைக்குமுன் எழுந்து தனது தொழிலைத் தொடங்குவது வழக்கம். அவளிடம் ஒரு கோழி இருந்தது. அதுதவறாது உதயத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன் கூவி அவளை எழுப்பும். கோழி தினம் கூவப் பின் பொழுது விடிந்து வந்ததைக் கண்ணுற்ற அவளுக்கு நாளடைவில் கோழி கூவாவிட்டால் பொழுது விடியாது என்ற நம்பிக்கை வந்துவிட்டது. இப்படி இருக்கையில் அந்த ஊரில் சில சிறுவர்கள் இந்தக் கிழவியைப் பரிஹாஸம் பண்ண, இவளுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. ‘பார்! இந்தப் பயல்களுக்குச் சொல்லுகிறேன் வழி! என் சக்தி இவ்வளவென்று இவர்களுக்குக் காட்டி விடுகிறேன்! நான் கோழியைக்கொண்டு அடுத்த கிராமம் போய்விடுகிறேன்! இங்கு எப்படிப் பொழுது விடியும் பார்ப்போம்? இந்தப் பயல்கள் விடியா இரவில் அழுந்தி வருந்தட்டும்’ என்று முறுமுறுத்துக்கொண்டு, அன்றிரவே அடுத்த கிராமம் போய்விட்டாள். மறுநாள் சிலர் முதல் கிராமத்திலிருந்து இரண்டாம் கிராமத்திற்குவர, தோசை விற்கும் கிழவி அவர்களை நோக்கி, ‘என்னைக் கோபம் மூட்டாது வைத்துக்கொண்டிருந்தீர்களாகில், இந்தக் கஷ்டம் உங்களுக்கு வந்திராதே! ஐயோ, பாவம்! உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது, நீங்கள் விடியா இரவில் அகப்பட்டுக்கொண்டீர்களே!’ என்றாள். அவர்களுக்கு விஷயம் ஒன்றும் விளங்காமற்போக, விழித்தார்கள். அப்பொழுது இவள் தன் கதையை ஆதியோடந்தம் ஸவிஸ்தாரமாகச்சொல்லி, ‘நான் என்னுடைய கோழியைக்கொண்டு இங்குவந்து விட்டேன்! ஆகையால் அங்கு எப்படி பொழுது விடிந்திருக்கும்?’ என்று மிகுந்த கம்பீரமாக முடித்தாள். இந்தக் கிழவியினது மூடத்தனத்தையும், கர்வத்தையும், அகங்காரத்தையும் கண்டு வந்தவர்கள் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள்.



“இம்மாதிரிதான் நாமும் அகங்காரம், கர்வம் முதலியவற்றிற்கு ஆளாவது. நாம் உபகாரம் செய்யும் குணம் உள்ளவர்களாயின், நாம் இல்லாவிடில் ஏழைகள் பிழைக்கமாட்டார்கள் என்ற கர்வம் நம்மை அறியாது நம்மை வந்து மூடிக்கொள்ளும். நாம் அஜாக்ரதையாகஇருந்து அதற்கு இடங்கொடுத்துவிட்டால் நம்மை நன்றாக அது கீழ்ப்படுத்திவிட, தோசைக்காரியின் மூடநிலைக்கு வந்துவிடுவோம். இந்தஸமயங்களில்‘கிருஷ்ண பரமாத்மா முதலிய பகவத் அவதாரங்கள்கூட உலகை விட்டுப்போனபின்பும், உலகம் முன்போல நடந்துவரவில்லையா? இப்படியிருக்க நாம் எந்த மூலை?’ என்றிப்படி மனனம் செய்துவந்தால் தோசைக்கிழவியாகிவிடாமல் நாம் கடைத்தேறலாம்.’ என்று சாஸ்திரி பொழிந்துவிட்டார்.

அருகிலிருந்த பாட்டி ஒருத்தி அவரை நோக்கி, இந்த நாமரூபங்களில் என்ன இருக்கிறது? இதை என்ன இவ்வளவு பிரமாதமாகக் கூறுகிறீர்களே?’ என்றாள்.

‘அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? பிரபஞ்சம் முழுவதும் இவைதானே. இவைகளில் அகப்பட்டுத் தானே நாம் எல்லோரும் மோசம் போய்——’என்று சாஸ்திரி கூறி மூடிக்குமுன் உள்ளே ஓர் அம்மாள் தடபடலாக ஓடிவந்தாள்.

வந்தவள் உள்ளே பேசிக்கொண்டிருந்தவர்களைக் கண்டாள்! ‘நாசமாய்ப்போக! வேதாந்தக்கடை என் வீட்டிலும் பரப்பிவிட்டீர்களா! நான் பஞ்சையாகி பரப்பதும், என் குடும்பம் சீர்குலைந்து போனதும் ஆச்சர்யமேயன்று! ராக்ஷஸிகளா! நீங்கள் நாசமாய்ப்போக, உங்கள் வீட்டில் வேதாந்தம் விழாதா! நீங்களும் என்னைப்போலாகமாட்டீர்களா! என்று இந்தக் கொடிய வேதாந்தம் உங்கள் வீட்டுள் புகுந்து கலக்கி உங்களை நடுச்சந்தி சிரிக்க அலையவிடுமோ? அறியேன்! நீங்களா! என் வீட்டில் வந்து வேதாந்தக்கடையைப் பரப்புகிறது!’ என்று ஆவேசம் பிடித்தவள்போலக் கதறினாள்.

---

ஆகாயத்திலே அதிக உயரத்தில் சஞ்சரிக்கின்ற “ஹோமா” என்ற ஜாதியைச்சேர்ந்த பக்ஷிகள் அவ்வுயரமான பிரதேசங்களையே அதிக ஆசையோடு நேசித்து வருவதால் கீழே இறங்கி பூமிக்கு வர வேண்டுமென்னும் கருத்தே அவைகளுக்குக் கிடையாது. அவைகள் ஆகாயத்திலேயே முட்டையிடுவதால் அம்முட்டைகள் பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பெற்றுக் கீழே விழுந்துகொண்டிருக்கையிலேயே நடுவில் குஞ்சு பொறித்துக் குஞ்சுகளை வெளிப்படுத்துகின்றன. வெளியே வந்த குஞ்சுகள் தாங்கள் கீழே விழுந்து கொண்டிருப்பதை உடனே தெரிந்துகொண்டு, தங்களுக்கு இருப்பிடம் ஆகாயமென்பதை இயற்கையறிவாலுணர்ந்து தாங்கள் செல்லும் கதியை உடனே மாற்றி மேல்நோக்கிப் பறக்க ஆரம்பிக்கின்றன. அவ்வாறே சுகதேவர், நாரதர், சங்கராசாரியர், இயேசு முதலிய மகான்கள் இன்மையிலேயே இவ்வுலகப்பற்றை யறுத்து உன்னத பிரதேசங்களாகிய மெய்யறிவையும் திருவருட்பிரகாசத்தையும் நாடிச்செல்லுகின்றனர்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### 2. துயரொழிந்தகாதை

*நாளை வதுவை மணமென்று நாளிட்டு*
*பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்*
*கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்*
*காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.*

* * * *

* * * *

*மதுரை யார்மன்ன னடிநிலை தொட்டெங்கும்*
*அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.*

—நாச்சியார் திருமொழி

ப்ராஹ்மணன் கூறியது முற்றும் கண்ணன் காதில் நன்றாக விழுந்தது. மிகுந்த ஆவலோடு கேட்டார். ப்ராஹ்மணன் "ஸமாசாரம் இது. நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யும்" என்றார்.

ப்ராஹ்மணரது இருகரங்களைத்தன்கைக்குள் லாகவமாக வைத்துக்கொண்டு பரந்தாமன் ஸ்ரீவாஸுதேவன் கூறுகிறார்:—

"அதே மாதிரியாக என்மனமும் அவள்பால் அன்பு கொள்கிறது. எனக்கு இரவிலும் நித்ரையுங் கிடையாது. ருக்மி, என்னிடம் பகையினால் அவள் என்னைக் கல்யாணம் செய்துகொள்வதைத் தடுக்கிறான். வன்னி மரத்தைக்கடைந்து அதனிடம் நெருப்பை எடுத்தல்போல ருக்மியைக்கொன்று அவனிடமிருக்கும் ருக்மணியைக்கவர்வேன்". 'நாளை தான் கல்யாண தினம்' என்று ப்ராஹ்மணன் கூறக்கேட்டு மதுஸூதனன் தனது தேராளைக் கூப்பிடும்படிச் சொன்னார். சைவ்யம் ஸுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹகம், என்னும் நான்கு குதிரைகள்பூட்டிய தேரைக் கடத்திக்கொண்டு தாருகன் கைபொத்தி வாய்பொத்தி எதிரில் வந்து நின்றான். தேர்மேல் ப்ராஹ்மணரை ஏற்றி, தானும் இவர்ந்து ஸ்ரீ வாஸுதேவன் ருக்மணி பிராட்டியாரைக் காணச் சென்றார்.

விதர்ப்ப நாட்டின் முக்கிய பட்டணம் குண்டினபுரம். புரமெங்கும் தலைவாசல்களிலும், ராஜவீதிகள், நாற்சந்திகளில் மகர தோரணங்கள், கொடிகள், பூரணகும்பங்கள் நிறைந்திருக்கின்றன. தெருவெங்கும் நூதன வஸ்த்ரம் தரித்த பெண், ஆண், பெரியோர், சிறியோர் அடங்கலும் அகில் கட்டைகளை நெருப்பிலிட்டு நல்ல வாஸனைவீசும்படிச்செய்துகொண்டிருக்கிறார்கள். ஸூரியன்போல் ஜ்வலிக்கும் மாளிகைகளின்மேல் நல்வரவை காட்டிய ஸூசனைகளும் பொற்கலசங்களும் நிறைந்திருக்கின்றன. ஜனங்கள் வீசியெறிந்து நிறைந்த புஷ்பப்பொடிக் காற்றில் பரந்து வாஸனை வீசிக்கொண்டிருக்கின்றது. வீதிமுழுதும் நீர் தெளித்து சுத்தமாக இருக்கின்றது.

இவ்வாறு குண்டினபுரம் கோலாஹலமாகத் திருவிழாக் கொண்டாடினாற்போல விளங்காநின்றது.

அரசன் பீஷ்மகனும் தனது பெண் கல்யாணத்திற்காகப் பித்ர்ப்ரீதி, தெய்வாராதனம், ப்ராஹ்மண பூஜை முதலானவைகள் எல்லாம் செய்து, தன் குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்யும்படிச் செய்தான். தன் பெண்ணிற்கு இரண்டு புதிய சேலை வாங்கிக்கொடுத்து அதை உடுக்கச்செய்தான். அநேக திவ்ய ஆபரணங்களை அணியச்செய்தான். அவளும் தானும் ஸ்நாநம் செய்து காப்புக்கொண்டார்கள். ப்ராஹ்மண ச்ரேஷ்டர் ருக், யஜுர், ஸாம வேதங்களின் மந்த்ரங்களால் ஆசி கூறினார்கள். அதர்வணவேத பாரங்கதர்கள் க்ருஹங்களின் ப்ரீதிக்காக ஹோமஞ்செய்தனர். ஒழுக்கமுழுது ஒழுக அறிந்த அரசனும் ப்ராஹ்மணர்களுக்கு பொன், வெள்ளி, வஸ்த்ரம் முதலிய யாவும் பசுக்களோடும், எள்ளினோடும் தானஞ்செய்தான்.

சேதிநகர்க்கரசன், தாமகோஷனும், மந்த்ரங்களறிந்த பெரியோர்களைக்கொண்டு தன் மகன் சுபத்திற்காக செய்யவேண்டிய கர்மங்களை எல்லாம் செய்தான். மதஞ்சொரியும் யானைகளோடும், பொன்னால் பூ நிறைந்த தேர்களோடும், குதிரைப்படை, கால்படையோடும் அவன் குண்டினபுரத்திற்கு வந்தான். வந்ததும் விதர்ப்பநாட்டரசன் அவர்க்குத் தக்க விடுதிவிடுவித்தான். சால்வன், ஜராஸந்தன், தந்தாவக்ரன், விதூரதன், பௌண்ட்ரகன் இவரன்றி பல்லாயிரம்பேர் சேதி நகரரசனோடு சேர்ந்தவர்களும் வந்தார்கள். ஸ்ரீக்ருஷ்ண பகவான் பலராமன் யது ச்ரேஷ்டர்களோடு வந்து எங்கு ருக்மணியைக் கவர்ந்து சென்றுவிடுவானோ என்று க்ருஷ்ணனுக்கு எதிரியான அரசர்கள் எல்லாரோடும் அவர் அவ்வாறு செய்தால் எதிர்க்கத் தயாராக இருக்கவேண்டுமென்று சிசுபாலன் க்ருஷ்ணனுடைய எதிரிகளை எல்லாம் அவருடைய சேனையோடு வரவழைத்திருந்தான். பலராமர் இதை எல்லாமுணர்ந்து, தன்தம்பியும் ஸ்ரீ ருக்மணியை எடுத்துவர செல்கிறான்



என்பதையும் அறிந்து, தனது இளையவன்பால் ஆசையால் பெருஞ்சேனையோடு குண்டினபுரம் அடைந்து எதிரிகளைத் தடுக்கத் தயாராக இருந்தார்.

இது நிற்க பீஷ்மன் மகள் ஸ்ரீஹரியின் வரவை எதிர்பார்த்தவளாகி, தன் தூதன் ப்ராஹ்மணன் வராததைக்கண்டு கீழ்வருமாறு எண்ணலானாள்:—

"அந்தோ! இந்தப்பாழும் இரவு கழிந்ததும் இப்பாழானவளது கல்யாணம் ஆய்விடும். செந்தாமரைக்கண்ணன் இன்னம் வரக் காண்கிலேன்; காரணமும் அறியேன். தூதனாகிய அந்த த்விஜோத்தமனும் வரவில்லை. வருவதாய் இருந்தாலும் அழகன், அக்கண்ணன், என்முன்னிடும் ஸ்வபாத்தைக் கண்டு வரமாட்டார். பரமசிவம் என்மேல் அருள்புரியவில்லை—யான் துர்அத்ருஷ்டமுடையவள்—என்பால் மலையரசன் மகள், கற்பிற்சிறந்த கௌரியும் அருள்கொள்ளவில்லை"

இவ்வாறு சிந்தாகிராந்தையாய் தன்னுள்ளம் க்ருஷ்ணனால் கொள்ளை கொள்ளப்பட்ட மடந்தை கோவிந்தனையே நினைத்து நினைத்து, தன்கதியையும் நினைத்து நினைத்து, கண்ணீர் ஒழுக ஒழுக, காலம், நல்ல காலம், தனக்கு வரவில்லை என்று எண்ணி, நீர்த் தளும்ப தன் கண்களைத் திறந்தாள். அவள் இடக்கண், இடது தோள் எல்லாம் துடித்தன. ஸ்ரீக்ருஷ்ணனது ஆணையால் ப்ராஹ்மணனும் ருக்மணிப்பிராட்டியாரிடம்வந்தான். அவன் முகம் கிளைத்து, அமைதியோடிருப்பதைக் கண்டு பிராட்டியாரும் சிரித்த முகத்தோடு ஸங்கதியை விசாரித்தாள். ஸ்ரீ பரந்தாமன் வரவை அறிந்து, ஆனந்த மிகுந்து எதை அளிப்பது என்று அறியாது, அப்பிராஹ்மணருக்கு நமஸ்காரம் செய்தாள்.

பீஷ்மனும் தனது மகள் கல்யாணத்தைக் காண ஸ்ரீ க்ருஷ்ணபலராமாள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்க்கு வேண்டிய மர்யாதைகள் யாவும் செய்தான். சங்கமூதி, மதுபர்க்கம் அளித்து, மாலைபூட்டி மற்றும் பலவிதங்களால் அவர்களை ஸந்தோஷப்படுத்தினான். அவர்களுடைய சேனை பரிவாரங்களுக்கும் அப்படியே செய்தான். எவ்வெவர்களுக்கு எந்தெந்த விதமாகச் செய்ய வேண்டுமோ அந்தந்த முறைமைப்படி எல்லாம் செய்தான். ஸ்ரீக்ருஷ்ணனுடைய வரவை அறிந்த ஊர்ஜனங்கள் அவரைக் கண்டு தம் கண் ஆனந்திக்கப் பெற்றார்கள். அவருடைய முகத்தாமரையை முழுதுங் கண்டு, 'ருக்மணிதான் இவர்க்குத் தகுந்த பத்நி. குற்றமற்ற இவரே அவளுக்குத் தகுந்தவர். மூவுலகையும் ஆக்கி அளிக்கும் அச்சுதனே நாங்கள் செய்த ஏதோ அல்ப பக்திக்கு ஆநந்தித்து இந்த விதர்பநாட்டு அரசன் மகளை மணக்கட்டும்' என்று கூறினார்கள். இது அவர் உள்ளன்பினாலே கூறியது.

ருக்மணியும், ஊர் பரிவாரங்களுடன் அம்பிகையின் கோயிலை அடைய புறப்பட்டாள். தன் மெய்ம்மறந்து உள்ளம் முழுதும் ஸ்ரீ வாஸுதேவனுடைய பாதாரவிந்தங்களிற்கு அர்ப்பணஞ்செய்துவிட்டு, தன்தாய்களோடும் தோழிகளோடும், தம்மைச் சூழ கடும் காவலோடும், அம்பிகையின் செந்தாமரைப் பாதங்களைத் தொழச் சென்றாள். ம்ருதங்கம், முழவு, சின்னம், சல்லரி, மல்லாரி, கொம்பு, சின்னம், தாரை முதலிய பதினெட்டு வாத்தியங்களும் முழங்கின. சந்தன புஷ்பாலங்க்ருதர்களாகிய ப்ராஹ்மணஸ்த்ரீகள் சோபனம்பாடவும், ஆசிகூறுவோர் ஆசிர்வசனங்களை பொழியவும், ஸங்கீதமுணர்ந்தோர் கீதமாரி பெய்யவும், ருக்மணி இவர்களோடும் ஸ்வஸ்திவாசகங் கூறுவோர்களோடும் கோயிலை அடைந்தாள். அடைந்ததும், கால் கை கழுவி, வாய் துடைத்து, நிர்மலமான மனத்துடன் அம்பிகையிடம் சென்று கைகூப்பி 'ஹே! அம்பிகே! அம்மா! உனக்கும் உன் குழந்தைகளுக்கும் நமஸ்காரம். அம்மணீ! எனக்கு பரந்தாமன் ஸ்ரீக்ருஷ்ணன் கணவனாகும்படி அருள்செய்வாய். உமது திருவ[illegible] அதுவிலித்திக்குமாறு செய்யட்டும்' என்று துதித்து, தேவிக்கு நல்ல நீர் சந்தனம், அக்ஷதை புஷ்பமுதலியவைகளால் ஆட்டி, வஸ்த்ரமளித்து, பூஜைசெய்[illegible]லவகை தானங்களும் செய்தாள். கூடவந்த ப்ராஹ்மண ஸ்த்ரீகளும் அவ்வாறே பூஜை செய்தார்கள். பின் பூஜாக்ஷதைகளால் பிராட்டியார்க்கு நன்மை யுண்டாக ஆசீர்வாதம் செய்தார்கள். அவளும் தேவிக்கும் அவர்க்கும் தொழுது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். பின் மௌனங்கலைந்து தன் தோழிகளோடு கோயில் வெளி வந்தாள்.

அழகுமிக்க இடையும், குண்டலங்களுக்கு அழகுசெய்யும்முகமும், சின்னஞ்சிறுவயதில், உடல் முதிரப்பருவம் அடையாதிருக்கவும், இளந்தளிர்ப்போல் விளங்கு மேனியும்பெற்று, பெதும்பைப்பருவமடைய கிளைத்துக்கொண்டு நின்ற, மான்போல் சலிக்கு கண்களையுடைய, முத்தென தெரிக்கும் பற்களைச் சிறிது காட்டி நகைஎரிக்கு கோவைப்பழம் போன்ற உதட்டை அடைந்து, அன்ன நடையில் நூபுரமொலிக்கவரும் பிராட்டியாரை கண்டதும் கண்டவர்மனமெல்லாம் ப்ரமை குடிகொண்டது. தமது மனம் முழுதும் அவளிடம் செல்ல கையில் இருந்த ஆயுதங்களைக் கீழ் விழவிட்டு இவள் அழகை க்ருஷ்ணனுக்கு அன்றா அளிக்க, மெல்லப்போவது போல் பாவனைசெய்கிறாள் என்று எண்ணி எண்ணி ப்ரமித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். பிராட்டியும் சாய்ந்தபார்வையால் க்ருஷ்ணன் இருக்கும் இடம்காண அரசர் ஒவ்வொருவரையும் இருபக்கங்களிலும் பார்த்துக்கொண்டே சென்றாள்.

இமைக்கு முன் எல்லாரையும் மாயையிற் கவர்ந்து மாதவன் மங்கை ருக்மணியைத தேரில் எடுத்துவைத்துக்கொண்டு தன்னூர்சேர சடுதியில்தேரைகடத்தினார்.

## விசேஷ வர்த்தமானங்கள்

### INTERESTING NEWS

**சிதம்பரம் உபாத்திமைச் சங்கத்தின் முதலாவது வருஷமஹோத்ஸவக் கொண்டாட்டம்:**— இஃது 1911-ம் ௵ ஆகஸ்டுமீ 5௳ சனிக்கிழமை ஷை ஊர் டவுன் ஸகண்டரி ஸ்கூலில் வெகு விமர்சையாக நடந்தேறியது. இதற்கு டிஸ்டிரிக்ட் முன்சீப் ம-௱-௱-ஸ்ரீ, திருநாராயணசாரியாரவர்கள், எம். ஏ., பி. எல். அக்கிராஸனம் வஹித்தார். இதைப்பார்த்து ஆனந்திக்க ஷை ஊர் கனவான்களில் அநேகரும், சிதம்பரம் ரேஞ்சு எல்லா உபாத்யாயர்களும் வந்திருந்தார்கள். அன்று நடந்தவைகளுள், வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகத்தில் நியாஸ்தலகாக்ஷி (Court Scene) 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களால் நடத்திக்காண்பிக்கப்பட்டதும், தபாலாபீஸார்களினுடையவும், கிராமாதிகாரிகளினுடையவும் கடமைகளை ஸம்பாஷணை மூலமாகச் சிறுவர்கள் தெளிவாய் எடுத்துக்காட்டியதும், சிறுவர்களால் கல்வியின் பெருமையைப் பற்றிய சிறந்த உபன்யாஸங்களும் மிகவும் மெச்சத்தக்கவை. இதை ஸரிவர நடத்த ஷை ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ, வி. ஏ. வெங்கிட்டசுப்பய்யர் அவர்களும், அவர்களுக்கு உதவியாயிருக்கும் இரு ஸூபர்வைஸர்களும் ஷை சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் ஸாமிவேல் பிள்ளையும் மிகவும் சிரமமும் ஊக்கமும் எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

* *
*

**பிளேக்கினால் நேரிடும் உயிர்ச்சேதங்கள்:**—இந்தியாவில் பற்பல மாகாணங்களில் ஜனவரி முதல் ஜூலை வரையில் பிளேக்கினால் நேரிட்ட மரணங்கள் பின் வருமாறு:—

பம்பாய் மாகாணம் 32,541; சென்னை 3,856; வெங்காளம் 68,878; ஐக்கிய மாகாணங்கள் 3,09,950; பஞ்ஜாப் 1,79,053; வடமேற்கு எல்லைப்புற மாகாணம் 242; பர்மா 4,806; மத்திய மாகாணங்கள் 18,405; கீழ்வெங்காளம்; ஆஸாம்; 10; கூர்ஜரம் 3; மைசூர் 3,377; ஐதராபாத்து 2,773; மத்திய இந்தியா 7,954; ராஜபுதனம், அஜ்மீர்-மிர்வாரா 17,794; காஷ்மீரம் 1,086; பலுச்சிஸ்தானம் 2; மொத்தம் 6,50,690;

**
*

**இங்கிலாந்தில் பென்ஷன் பெறுபவர்கள் விகிதம்:**—1911-௵ மார்ச்மீ கடைசி வெள்ளிக்கிழமை வரையில் ஐக்கிய நாட்டில் (United Kingdom) 3,33, 050-புருஷர்களும், 574,411 ஸ்திரீகளும் பென்ஷன் பெற்றிருக்கின்றனராம்.

**ஒரு பெட்டைக்கோழியின் மதிப்பு:**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பிலடெல்பியா வென்னு மூரில் நடைபெற்ற கோழிகாட்சியில் ஒரு பெட்டைக் கோழியை ஒருகனவான் 2400-பவுண்டு கொடுத்து வாங்கினாராம். அதனது முட்டை யொன்றனது விலை 5 -பவுண்டாம். அக்கோழி பஞ்ச வர்ணமும், மனோகரமான குரலோசையும், அழகான நடையுமுடையதாம்.

* *
*

**பர்மாவில் பருத்திப்பயிர்:**—பர்மாவில் இந்த வருஷம் பருத்தி பயிராயிருக்கும் நில விஸ்தீரணம் 1,79,069 ஏகர்களாகும். போன வருஷத்தைவிட இந்த வருஷத்தில் 10,956 ஏகர் அதிகமாகவே பருத்தி பயிராயிருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தயாட்மியோ ஜில்லாவில்தான் அது மிக அதிகமாய்ப் பயிராயிருக்கிறதாம். அதற்குத் தக்க பருவத்தில் வேண்டிய மழை பெய்ததே காரணமெனப்படுகிறது. சரியான பருவத்தில் விதை விதைக்கப்பட்டதென்றும் பயிர் நன்றா யிருக்கிறதென்றும் தெரிகிறது. ஆதலால் சில ஜில்லாக்களில் அதிகம ழை வேண்டுமெனப்படுகிறது.

* *
*

**ஒரே முறையில் மூன்று பிரசவம்:**—அழகாபுரியில் ஒரு செட்டியார் வீட்டில் ஒரு ஸ்திரீ சில தினங்கட்கு முன்னர் ஒரே முறையில் மூன்றாண் குழந்தைகளை யீன்றாள். அக்குழந்தைகட்குப் பிறந்த முறைப்படி இராமன், இலட்சுமணன் பாரதனெனப் பெயரிடப்பட் டிருக்கின்றதாம்.

* *
*

**டெல்லிதர்பாரின் ராணுவப் பயிற்சி, படைக்காட்சி:**—டெல்லியில் தர்பார் நடைபெறும்போது ராணுவப்பயிற்சி படைக்காட்சிகளின் பொருட்டு 43 இலட்சம் ரூபாய் செலவிடப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

* *
*

**இந்தியாவின் கடன்:**—இப்போது நமதிந்தியா தேசம் இங்கிலாந்து தேசத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனின் தொகை 27-கோடியே 40-இலட்சம் ரூபாய். அதற்காக வருஷந்தோறுங் கொடுக்கவேண்டிய வட்டியின் தொகை ஒரு கோடியே 12-இலட்சத்து 50-ஆயிரம் ரூபாய்.

### ஒரு பிழை திருத்தம்

"விவேக போதினி" மூன்றும் தொகுதி, 11-ம் பகுதி, பக்கம் 397-ல் "பாக்கி நாழிகை 68" என்பதை "பாக்கி நாழிகை $6\frac{3}{4}$" என்றும், "அஸ்தமித்து 68 நாழிகை" என்பதை "அஸ்தமித்து $6\frac{3}{4}$ (ஆறே முக்கால்) நாழிகை" என்றும் திருத்திக்கொள்ளவும்.

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ ஆவணிமீ : 1911-௵ செப்டம்பர்மீ { பகுதி 3

ௐ

## ஸ்ரீராமகிருஷ்ணானந்தஸ்வாமிகள் ஸித்தியடைந்தது

### THE LATE SWAMI RAMAKRISHNANANDA

ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2-மணி ஸுமாருக்குக் காளிகட்டத்தின் அருகாமையில் உள்ள தக்ஷணீச்வரத்தில் ராமகிருஷ்ண ஸங்கத்தார் முக்யமடத்தில் ஸுமார் 20-வருஷகாலமிருந்து நம்மிடையில் மதவிஷயத்திற்குப் பாடுபட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தஸ்வாமிகள் ப்ரஹ்மை பூதரானார். இந்த ஸமாசாரம் அவருடன் பழகியவர்கள் எல்லோருக்கும் மிகுந்த மனச்சஞ்சலத்தை விளைவிக்கும் என்பதற்கு ஐயமில்லை. நாம் எல்லோரும் அவரிடமிருந்து வந்த உபதேசமொழிகளைக் கேட்டுத் தேறியவர்களாதலால் நம் எல்லோருக்கும் 'அவர் இன்னும் கொஞ்சநாளிருந்து நம்மை மேன்மைப் படுத்தாது போய்விட்டனரே!' என்ற ஏக்கம் வருவது ஸஹஜமே. ஆயினும் நாளாக நாளாக இம்மாதிரி எண்ணம் மாறிவிடுவதும் ஸஹஜமே. ஆனால் அவ்வாறு மாறுதல் உண்டானபோதிலும் நாம் எப்பொழுதும் மறக்க முடியாதபடி அவர் நம்மிடையில் மிகப் பரிசுத்தமாகத் தமது வாழ்நாட்களைப் பரோபகாரத்திற்காக மாத்திரமே கழித்துவிட்டனர். இதை நாம் நினைக்குந்தோறும் முதலில் சற்றுத் துக்கம் வந்தபோதிலும் நாளடைவில் இது கூடவாராது ஸதா அவர்போல நாமும் நடந்து உலகில் மூழ்காது தப்புவித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் மிகுந்து நிற்கும். இதுமாத்திரம் நமது மனத்தில் எப்பொழுதும் மாறாது நிற்கவேண்டிய முயற்சிகள் செய்வோமாகில் ஸித்திபெற்ற ஸ்ரீராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகளுக்கு நாம் செய்யவேண்டிய கடனை ஸரிவரச் செய்தவர்களாவோம்.

ஸ்ரீமத் ராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள் ஸுமார் 20-வருஷங்களுக்கு முன் ராமகிருஷ்ண மடஸேவைக்காகப் பட்டணம் வந்தனர். அதுமுதல் ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் செய்த தொழிலை அவர் இங்கே இடைவிடாது இதுவரையில் செய்துவந்தார். அதிகமாக விவேகானந்த ஸ்வாமிகளைப்போல வாய்விட்டுத் தமது உள் எண்ணங்களை வெளியிடா விடினும் தமது நடத்தையாலேயே தம்மோடு ஸம்பந்தப்பட்டவர்களை இவர் சீர்திருத்தி விட்டார். இவ்வாறு சீர்திருந்தி பொது நன்மைக்கு உழைப்பதை ஒரு சிறந்த கடமையாக மதிப்பவர் இப்பொழுது அநேகர் இருக்கின்றனர். மேலும் இவருக்குக் குருபக்தி நிரம்பவும் உண்டு. இதுபற்றியே இவர் குருவாகிய ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இவருக்குத் தம்மிடமிருக்கும் உள்ளன்பையும், தமக்குத் தொண்டுகள் செய்வதில் இவருக்கிருந்த ஆராமையையும் ஆனந்தத்தையும் கண்டு இவருக்கு ராமகிருஷ்ணானந்தர் எனப் பெயரிட்டனராம். இக்குருபக்தி சிகாமணியிடம் பழகியவர்களுக்கு இச்சிறப்பு நன்றாக விளங்கியிருக்கும்.

'முன்பின் செத்தாலல்லவோ சுடுகாட்டிற்கு வழி தெரியும்' என்பது பழமொழி; அதாவது முன்பின் நிஷ்டைசெய்து உலகை மறந்தாலல்லவோ நாமரூப ரஹிதமான பரமநிலையை அடையும்வழி தெரியும் என்பதாயிற்று. இதற்கேற்பவே இவரும் தமது ஆச்ரம தர்மத்தைப் பின்பற்றி அடிக்கடி மெய்ம்மறந்து நிஷ்டையிலிருந்து தேஹாத்ம பேதத்தை நன்கு உணர்ந்து வந்தார். இந்த அப்யாஸம்தான், இவருக்கு க்ஷயரோகம்வந்து ஸுமார் ஒருவருஷம் வருத்தியகாலத்தில் இவர் மனதைச் சாந்த நிலையில் வைத்திருந்தது. அந்திய காலத்தில் இவரை தக்ஷணீச்வரம் மடத்தில் சென்று பார்த்து வந்தவர்கள் முன்போலவே சாந்தமாகவே இவர் இருந்தார் என்றும் கூறுகின்றனர். தமது நிஷ்டையில் புத்தி மாத்திரத்தில் அறிந்ததை உள்ளபடிக் காணும் காலம் வர அதை மிகச் சாந்தமாக அனுபவித்து இவர் ஸித்திபெற்றார் என்று கூறவும் வேண்டுமா? இவர் வாழ்ந்தபடி உலகில் தாக்கற்று நின்று, மரணகாலத்தில் யாதொரு சஞ்சலமும் இன்றி ஸித்தி பெறவேண்டும் என்ற கோரிக்கை நம் மனத்தைவிட்டெவ்வாறு அகலும்?

விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது ஆவணிமீ [பகுதி 3

# விக்ரஹாராதனம் :

## ஆதாரம் ; ஆவச்யகம்

## IMAGE-WORSHIP : ITS BASIS AND NECESSITY

இதுவரையில் வேதரஹஸ்யங்கள் அடங்கிய பாகமாகிய முக்கிய உபநிஷத்துகளை எடுத்துக் கூறியாகிவிட்டது. இதனால் 'பரம்பொருள் ஒன்றுதான் ஸத்யவஸ்து; அதுதான் எங்கும் பரவியிருப்பது; வெளிப்பிரபஞ்சத்தில் தோற்றும் படியான வேற்றுமைகள் எல்லாம் வெறும் தோற்றமே ஒழிய உண்மையில் உள்ளவைகள் அல்ல; இதுபோலவே தான் அறிபவர்களாகிய ஜீவர்கள் அநேகர், பரம்பொருளிடமிருந்து வேறாகி இருப்பவர்கள் என்பதையும் இந்த வேற்றுமைகள் ஸ்வரூபம் இத்தன்மையது, இவைகளிடம் இருக்கும் உண்மை வஸ்து ஒன்றே என்பதையும் அறிந்து அனுபவித்து அசைவற்று நிற்பதே மோக்ஷம்; அதை அடைவதே மனிதர்கள் விரும்பி அடைய வேண்டியவைகளில் மிகச்சிறந்தது; இதற்கு மேற்பட்ட நிலை ஒன்றும்இல்லை' என்பது வெளியாகும். இதைத்தான் எல்லோரும் ஸரிவர உணர்ந்து அப்பியஸித்து அனுபவித்துத் தெளிய வேதமே கர்மகாண்ட மூலமாகவும் உபாஸனாகாண்ட மூலமாகவும் அநேக வழிகளைக் காட்டி எல்லோருக்கும் சிறந்த உபகாரத்தைச் செய்திருக்கிறது. இம்மாதிரியான முக்கிய மார்க்கங்களின் நோக்கம் யாதெனில், சஞ்சலமே ஸ்வபாவமாக உடையதாய், இடைவிடாது உலக விஷயங்களுள் 'நானெனக் குழறியே ஒன்றை விட்டு ஒன்று பற்றி பாசாடவிக்குள்ளே' கிடந்துழன்று வரும் மனத்தை உடைய நம்போன்ற பாமரர்களுக்குச் சிறந்த பரம்பொருள் விஷயமாக எவ்வளவு கூறினால் மனதில் பிடிபடுமோ அவ்வளவை வெளிப்படுத்தி அதன் விஷயமாகத் தகுந்த கர்மங்களை ஏற்படுத்தி அந்த விஷயமாக கூடியஅளவு நம்மை ஸம்பந்தப்பட்டு நிற்கும்படிச் செய்து, மனம் சுத்தமாக ஆக அதற்குப் பரம்பொருளைப் பற்றிய மற்றைய விஷயங்களை முறையே வெளிப்படுத்தி, முடிவில் பரமபதமாகிய மோக்ஷத்தில் நிலை பெறும்படிச் செய்யவேண்டு மென்பதே. இவ்வாறு தொடங்கப்படும் சீர்திருத்தத்தில் நம்மைப்போன்ற பாமரர்கள் மனம்பற்றி நின்று தொழிற்படுவதற்காக இக்கர்மம் உபாஸனைகள் முதலியவைகளுக்குத் தகுந்த பலன்களையும் வேதங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. ஸாதாரண ஜனங்கள் இப்பலன்களைக் கொடுப்பது தான் வேதத்தின் நோக்கம் என்று மதித்து முற்கூறிய அந்தரங்க நோக்கம் ஒன்று உண்டு என்பதை உணராமலே இருக்கலாம். ஆனால் இவைகளில் பழகி வரவர மேல்படிகள் அவர்களுக்குப் புலப்பட நாளடைவில் வேதங்களின் உள் நோக்கம் வெளியாகும். இதுபற்றியேதான் **கைவல்ய நூலாசிரியரும்,**

> தினமும் மண்ணுகர்பிள்ளை நோய்க்கிரங்கியே
> தீம்பண்ட மெதிர்காட்டிக்
> கனமருந்துகளொளித்து வைத்தழைக்கின்ற
> கருணை நற்றாய்போல
> மனையறங்கள்செய், மகங்கள் செய் நன்றென்று
> மலர்ந்தவாசகம் சொல்லும்
> நினைவு வேறுகாண் ஸ்வர்க்ககாமிகளிந்த
> நிர்ணயந்தெரியாரே.

**என்றார்.**

இந்த நோக்கமுடைய கர்மகாண்ட உபாஸனாகாண்டங்களை முன்னிட்டுக்கொண்டு, எல்லோரும் எளிதில் ஆராதித்துப் பிழைக்கும் பொருட்டு நம்முன்னோர்கள் இவைகளின் கருத்



துக்களை உள்ளடக்கிய விக்ரஹங்களை ஏற்படுத்தி விக்ரஹ ஆராதன முறைமைகளையும் செய்திருக்கிறார்கள்.

இந்த விக்கிரஹ ஆராதனை என்பதென்ன என்று ஆராய்வோம். எங்கும் பரவிநிறைந்து நிற்கும் உண்மைப்பொருளாகிய பரம்பொருளை உணர்ந்து மோக்ஷம் அடைவதற்காக, அதன் ஸம்பந்தப்பட்ட விஷயங்களை நினைப்பூட்ட ஸஹாயமாக விருப்பதும், எப்பொழுதும் ஒரு நிலையில் நிற்காது விஷயமே நித்யமென்று கிடந்து உழலும் மனதை ஒரு வழிப்படுத்த உதவியாக விருப்பதுமான ஒரு உருவத்தை ஆராதிப்பதே விக்ரஹ ஆராதனை எனப்படும். இந்த ஆராதனைகளுக்கு உபயோகப்படும் விக்கிரஹங்கள் உபநிஷத் அர்த்தங்களை உள்ளடக்கிய உருவமாகவாவது அல்லது பரம்பொருள் அவதார ரூபங்களாகவாவது அமைக்கப்பட்டிருக்கும். மேலும் இவைகள் நமது மூதாதைகள் ஆராதித்து மேலான பதவியை அடைந்து ஆனந்த பரவசர்களான உருவங்களே. ஸாதாரணமாக நம்மைவிடச் சிறந்தவராயும் நம்மை மேன்மைப் படுத்தும் திறன் உடையவராயும் உள்ள ஒருவர் நமது வீடு வந்து விட்டால் அவரை எவ்வித பரபரப்புடன் ஆசார உபசாரங்கள் செய்து வந்தனை வழிபாடுகள் செய்து ஆராதிப்போமோ, அவ்விதமாக முற்கூறிய உருவங்களை ஆராதிப்பதே விக்கிரஹ ஆராதனையின் முறையாம். இதற்கு முக்கியமாக வேண்டியது உள்ளன்பு ஒன்றுதான். மற்றவைகள் தாமே வந்து சேரும். மிகுந்த அன்புடன் விக்கிரஹத்திற்கு பூஜை முதலியன செய்துவிட்டுமுடிவில் தியானம் பிரார்த்தனை முதலியவைகள் செய்யவேண்டும். இதில் தன்மனம் சுத்தமாகி மேலான பதவி வரவேண்டும் என்று மனப்பூர்வமாக விக்கிரஹத்துள்ளும், **எங்கும்** பரவி இருப்பதுபோல், பரந்து நிற்கும் பரம்பொருளைக் கூடியவரையில் தியானத்திற்குக் கொண்டுவந்து வேண்டிக்கொள்ளவேண்டும். இம்மாதிரி ஒவ்வொருவரும் தனிமையாக ஆராதிக்க ஏற்படும் உருவங்கள் தவிர பலர் சென்று ஆராதிக்க விக்கிரஹங்கள் கோயில்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அங்கும் சென்று முற்கூறியபடி தியான பிரார்த்தனைகள் செய்து கொள்ளலாம். இம்மாதிரி இடங்களில் பெரியோர்களும் வந்து ஆராதித்திருப்பார்களாதலால் இவ்விடம் மிகப் பரிசுத்தமாகவே இருக்கும். இவ்விடங்களுக்குச் சென்றதும் நமது முயற்சி அதிகம் இல்லாமலே நமது மனது தானாகவே குவிந்து வெளி விஷயத்தைச் சற்று விட்டு நிற்கும். ஆகவே இவ்விருவிதமாக விக்கிரஹ ஆராதனைகள் செய்ய வேண்டியது.

இம்மாதிரியான விக்கிரஹ ஆராதனையின் உண்மை ஸ்வரூபம் விளங்காமையினாலேயும், நமது மதம், வேதங்கள் ஆகிய இவைகளின் ரஹஸ்யங்களை உணராமையினாலேயும் பலர் விக்கிரஹ ஆராதனையைப் பலவிதமாகப் பழிக்கின்றனர். அவர்கள் பழிப்புரைகளைத் தனித்தனியே எடுத்துக் கூறி அவைகளுக்குத் தகுந்த ஸமாதானங்கள் கூறப் புகுவாம்.

'விக்கிரஹ ஆராதனம் வேதத்தில் இல்லவே இல்லை. அது பின்னர் நூதனமாக உண்டானது. ஆதலால் அவைதீகம்; அதைப்பின்பற்றலாகாது' என்பர் ஒரு கூட்டத்தார். இவர்கள் நமது வேத விஷயங்களை ஆராயப் புகுந்த மேனாட்டவர்களும் நம்தேசத்துச்சரித்திரம் எழுதப்புகுந்தநம்நாட்டவர்களுமே. இவர்கள் அபிப்ராயத்திற்குஆதாரமே இல்லை என்பது விவேக போதினி 3-ம் தொகுதி 386, 387-பக்கங்களைப்பார்ப்போருக்கு எளிதில் விளங்கும். வேதங்களில் ரூபத்யானம் இல்லாமல் போகவில்லை. சப்தரூபமான வேதம் முதலில்சப்த விஷயங்களைப் பரம்பொருளாகக்கருதி உபாஸித்துப்பின்னர் நிஷ்சப்தமாகிய பரம்பொருளாக வேண்டும் என்று அநேக விடங்களில் கூறுகிறது. இந்தநியானவிஷயங்களைச் **சாந்தோக்யம் தைத்திரீயம்** முதலிய உபநிஷத்துக்களில் காணலாம். இதுவும் அன்றி, அக்கினி, சூரியன் முதலிய பிரபஞ்சத்திலுள்ளவைகளைப் பரம்பொருளது உருவங்களாகக் கருதி அவைகளுள் இருக்கும் பரம்

பொருளை உணரலாம் என்று வேதங்களில் வெகுவாகக் கூறப்பட்டிருக்கிறது. 'பார்த்தவிடம் எல்லாம் பரவெளியாகக்' காணமுடியாதவனுக்கு அநேகவித சப்தரூபத்யான மூலமாக மனதில் தெய்வத்தை அறிய வழியையும், இதுவும் செய்ய முடியாதவனுக்கு முற்கூறிய அக்கினி சூரியர்களைக் கடவுளாகக் கருதி ஆராதிக்கும் வழியையும் வேதம் கூறியுள்ளது. காலம் வரவர கெட்டுப்போக ஜனங்களுக்கு இவைகள் கூட முடியாமற்போகும் எனக்கருதி வேதரஹஸ்யங்கள் அடங்கியவையும், பகவத் அவதாராதிகள் ஸம்பந்தம் உடையவையாயுமாய் உள்ள விக்ரஹங்களை உலோகம் முதலியவைகளால் செய்து வேதநோக்கங்களுக் கேற்பவே நமது முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுதிருப்பது போன்ற கோயில், பூஜை முதலியவைகள் வேதங்களில் வெளிப்படையாகக் காணாவிடினும், பரம்பொருளை நேராக வழிபட முடியாதவர்களுக்குதவியாக விருக்கும் பொருட்டு ஏற்பட்டு விக்ரஹாராதனைக்கு மூலாதாரமாக உள்ள விஷயங்கள் வேதங்களில் இல்லாமல் போகவில்லை. ஆதலால் விக்ரஹ ஆராதனம் பொதுப்படையாய் விஷயங்களைக் கூற வந்த வேதங்களுக்கு விரோதமன்று. ஆதலால் அவைதிகமும் அல்ல. வேதங்களில் காணப்படும் ப்ரீதிகோபாஸனை (பரம்பொருளோடு ஸம்பந்தப்பட்ட சப்தம் முதலிய தோற்ற ஆராதனை)யையே எல்லோரும் எளிதில் வழிபட்டுப் பிழைக்கும்பொருட்டு நம் முன்னோர்கள் விக்கிரஹாராதனையாக விஸ்தாரப்படுத்தினர்.

'விக்ரஹாராதனை அக்ஞானிகளுக்கு ஏற்பட்டதே ஒழிய எல்லோரும் அதைப்பின்பற்றவேண்டியதில்லை' என்று தடுப்பர் வேறு சிலர். இவர் கூறுவதற்கு நமது சாஸ்திரங்களில் ஆதாரமும் காணலாம்.

தெய்வந்தான் அந்தணர்க்குச் செந்தீயில், யோகமது
கைவந்த பேர்க்குக் கருதுளத்தில்—மைவந்த
மெய்ஞ்ஞானம் இல்லார்க்கு விக்கிரஹத்தொப்பக்காண்
ஐஞ்ஞானிக் கெங்குமே யாம்.

துவிஜர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்குத் தெய்வம் மனத்தில், அஞ்ஞானிகளுக்குத் தெய்வம் பிம்மத்தில், ஸமத்ருஷ்டி உடையவர்க்கு எங்கும் தெய்வமே.

என்ற உத்தரகீதாவாக்கியம் இவர்கள் ஆக்ஷேபனைக்கு அனுகூலமாகக் காணப்படுகிறது. ஆயினும் இது வெளிப்படையாகத்தான் இவ்வாறிருப்பது. இதை ஆராயப்புகின் இது இத்திறத்தாருக்கு விரோதமாகவே முடியும். துவிஜர்கள் கர்மகாண்ட விஷயங்களிலேயே பூர்ண நம்பிக்கை உடையவர்களாய் அதில் கண்டிருக்கிறபடி யாகாதிக்ரதுக்கள் செய்து அக்கினியை ஆராதிப்பவர்கள். அவர்கள் அக்கினியையே கடவுள் அறிகுறியாகக் கொள்ளவேண்டும். வேதத்தில் உபாஸனாகாண்ட விஷயங்களைப் பூர்ணமாக நம்பி மந்திரஜபங்கள், அவைகள் விஷயமான தியானங்கள், மனதுள் ஆடும் பரஞ்ஜோதியாகி ஆத்மத்யானம் முதலியவைகளைச் செய்பவர்கள் முனிவர்கள். இவர்களுக்குத் தெய்வம் தியானம் செய்யும் மனத்திலேயே. ஞானகாண்ட விஷயங்களை ஐயம் திரிபற விசாரணை செய்து தெளிந்து அதன்படி நின்று, பிரஹ்மம் என்ற ஸத்யஞானானந்த வஸ்து எங்கும் நிறைகின்ற பொருள் என மதிப்பவர்கள் யாரோ அவர்களுக்கு ஸமத்ருஷ்டி உடையவர்கள் என்று பெயர். இவர்களுக்குத் தெய்வம் எங்கும். இம்மூன்றுவிதத் திடநம்பிக்கை ஆராதனை முதலியவைகள் இல்லாதவர்களே அக்ஞானிகள் எனப்படுவார்கள். இவர்களுக்குத் தெய்வம் விக்ரஹங்களில் என்கிறது உத்தரகீதா வாக்கியம். இக்காலத்தவர்கள் எவ்வளவு படித்தவர்களானாலும் ஸரி, எவ்வளவு மூடர்களானாலும் ஸரி, முற்கூறிய பாகுபாட்டின்படி மூன்று பாகங்களிலும் அடங்காதவர்கள் என்பதற்கு ஸந்தேகமே இல்லை. ஆதலால் நம்மில் பெரும்பாலாரும் ஆராதனா விஷயத்தில் உத்தரகீதை கூறும் அக்ஞானிகளே. ஆதலால் நாம் விக்ரஹ ஆராதனைகளையே செய்யவேண்டும். இதுபற்றியே தான்



161440

ஒரு பெரியவரும் 'விக்ரஹாராதனமே பொதுவாக மனிதர்களால் மதமெனக் கொண்டாடப்படுவது; நமது பார்வை எப்பொழுதும் வெளியே நோக்கும் தன்மை உடையபதாதலால் அதை உள்முகமாகத் திருப்புவது மிகுந்த கஷ்டமான தொழில். உருவம் மறைந்த நிலையில் சிறந்ததாகிய ஒப்புயர்வற்ற பரம்பொருளைப் பற்றி நிற்கும்வரையில் உலகிலுள்ள மதங்களையும் பரம்பொருளைப்பற்றிய கொள்கைகளையும் அலக்ஷ்யம் செய்து உன்னால் நிலைப்படுத்த முடியாது' என்றார்.

'மனம் வெளியே நோக்கிச் சென்று வெளித்தோற்றங்களைக் கண்டு உள் நிலைமை உணரும் திறனைக்கொண்டு தொழிற்படாத வரையில், விக்ரஹாராதனையால் மனதை அதன்வழியே சற்று விட்டுப்பிடித்து நிலைநிறுத்த வேண்டியது அவசியம் தான். ஆனால் மனது வசப்பட்டால் இது வேண்டியதேயில்லை' என்று கூறுவர் வேறுசிலர். மனது நிலை நின்றாலும் விக்ரஹாராதனம் வேண்டுவதில்லை என்று கூறிவிடமுடியாது. மனம் மரணம் வரும்வரையில் ஒரே நிலையிலிருக்கும் என்பது என்ன நம்பிக்கை? அவ்வாறு நிற்க இந்த விக்ரஹங்கள் பின்னரும் ஸஹாயம் செய்யும். மனம் நிலை நிற்கப்பெற்றவன் இந்த விக்ரஹ ஸஹாயத்தினாலேயே அந்நிலைமை அடைந்திருப்பதால் அவைகளை ஒருகாலும் பழிப்பாகவாவது அவமரியாதையாகவாவது பேசவே மாட்டான். மேலும் உபநிஷத்தின் உட்கருத்துக்கள் விக்ரஹங்களாக அமைக்கப்பட்டிருப்பதால் அவை எப்பேர்ப்பட்ட ஞானிக்கும் ஸதாகாலமும் ஆனந்தத்தை உண்டாக்குவதால் அவைகள் பயனற்றவைகளாக அவர்களால் மதிக்கப்படா. இந்த ஸமயத்தில் குதர்க்கம் செய்யும் இத்திறத்தார் முன்வந்து

'சொல்லிலும் சொல்லின் முடிவிலும்
வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற ஆகாயம்
தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும்
ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்
எங்கள் கண்ணுதலே.

என்று பட்டினத்துப் பிள்ளையாரும்,

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பம் சாத்தியே
சுத்திவந்து முணுமுணென்று சொல்லுமந்திர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

என்று சிவவாக்கியரும் நேரிட விக்ரஹ ஆராதனத்தைப் பழித்திருக்க அது பெரியோர்களுக்கும் ஆனந்தம் விளைவிக்கத்தக்கது என்று கூறுவது பொருந்தாதே' என்று ஆக்ஷேபிப்பர். அவர்கள் இப்பாடல்களின் ரஹஸ்யத்தை உணரவில்லை என்றே கூறவேண்டும். முதல் இப்பாட்டுக்கள் விக்ரஹ ஆராதனத்தில் பழகி வரவர விருத்தியடைந்தும் விக்ரஹ ஸஹாயமின்றி நிஷ்டையில் இருக்க முயலாது மறுபடியும் விக்ரஹங்களையே முக்யமானவை எனக் கருதி, அவைகளைக் கண்டாலல்லது நிலைபெறாது, கடவுள் எங்கும் உள்ளவர் தன்மனத்திலும் இருக்கிறார் என்ற உண்மையை விக்ரஹ ஆராதனத்தால் தேறித் தெளியாதவனை நோக்கிக்கூறிய உபதேசமொழிகளாம். ஆகவே விக்ரஹ ஆராதனையே செய்யாமல் அதைப்பழிக்கும்அறிவிலிக்கு இது எவ்விதத்திலும் ஆதாரமாக மாட்டாது. அவன் இதை எடுத்து ஆள யோக்கியனும் அல்லன். மேலும் இப்பாடல்கள் விக்ரஹ ஆராதனத்தைப் பழிக்க வரவே இல்லை. அதை அஜாக்கிரதையாகச் செய்வதனால் ஏற்படக்கூடிய குறைகளை விலக்கி அவைகளுள் இருக்கும் ரஹஸ்யச் சிறப்பை வெளியிட வந்தவைகள். இவைகள் மூலமாகப் பட்டினத்தடிகளும், சிவவாக்கியரும் நம்மை நோக்கி 'மூடத்தனமாக விக்ரஹங்களை வழிபடுவதாற் பயனென்ன. பகவான் உண்மையில் வேதவேதாந்தங்களில் விளக்கப்பட்டு நம்முள்ளும் பிரபஞ்சத்துள்ளும் இருக்கிறார்; அவரைக் கொஞ்சமேனும் உணராது விக்ரஹங்களை மாத்

**திரம்** ஆராதிக்காதேயுங்கள்; இவ்வரிய விஷயங்களை விக்ரஹங்கள் மூலமாக நீங்கள் காணாது அவைகளை வழிபடுவதால் பயனே இல்லை; சுட்ட சட்டிச்சட்டுவம் எவ்வாறு கறிச்சுவையை அறியாவோ அவ்வாறே வேதரஹஸ்யமுணராதுவிக்ரஹாராதனை மாத்திரம் செய்பவனும் உண்மையை உணரமாட்டான்' என்று புத்திமதிகூறி விக்ரஹாராதனத்தைத் தகுந்தபடி செய்யத் தூண்டுகின்றனர் என்றும் கூறலாம். இம்மாதிரி இவைகளைப் பொருள்படுத்தாவிடில்.—

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மைச் சிவகாம ஸுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக் [கண்க
ளெத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றன [வே

* * * * * *

முதல்வனைத் தில்லையுள் முளைத்தெழும் ஜோதியை

* * * * * *

அம்பலத் தரசனை ஆனந்தக் கூத்தனை
திருச்சிற் றம்பலத்தில் ஒளிரும் சிவனை

* * * * * *

நினைமின் மனனே நினைமின் மனனே.

என்று **பட்டினத்தடிகள்** கூறியதையும் ;

நீதிசெம்பொன் அம்பலத்துள் ஆடிகொண்ட பரமனே

* * * * * *

நீலகண்ட காளகண்ட நித்யகல்வி யாணனே.

* * * * * *

ஆலமுண்ட கண்டர் பாதம் அம்மைபாதம் உண்மையே.

* * * * * *

காரகார காரகார காவலூழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களேழு மெய்தஸ்ரீ
ராமராம ராமராம நாமமென்னும் நாமமே—

**என்று சிவவாக்கியர்** கூறியதையும் முற்கூறிய பாட்டுக்களோடு பொருத்தவே முடியாது. முன் எடுத்துக்காட்டிய பாட்டுக்களுள் புதைந்துகிடக்கும் கருத்தை இப்பாட்டுக்கள் வெளிப்படையாகக் காட்டி மஹாஞானிகளும் விக்ரஹங்களை பழிக்காது இவ்வாறு மதிக்கின்றனர் என்பதை இவர்கள்தாமே விளக்குகின்றார்கள். தம்முள் அடங்கியிருக்கும் அருமையான கருத்துக்களைத் தம்மைக் கண்டவுடன் மஹான்கள் மனத்திலும் எழும்படிச்செய்து அவர்களையும் ஆனந்த பாவசமாக்கும்தன்மை விக்ரஹங்களுக்கு உண்டு. ஆதலால் விக்ரஹாராதனம் உயர்ந்தோராலும் பழிக்கத்தக்கதன்று.

இதுவரையில் எடுத்துக்காட்டியதிலிருந்து விக்ரஹ ஆராதனை வேதஸம்மதமானதென்றும், அவசியம் என்றும், அது ஸாதாரண ஜனங்களுக்கு முக்யமானதென்றும், பெரியோராலும் கொண்டாடத் தகுந்தது என்றும் வெளியாகும். விக்ரஹ ஆராதனை விஷயமான மற்றைய ஆக்ஷேபஸமாதானங்களைப் பின்னர் எடுத்து விவரிப்பாம்.

~~~~~~~~~~~~~~~~~~~~

### விக்ரஹாராதனம்

குழந்தைகள் விளையாடுவதன் பொருட்டு மரத்தாற் செய்யப்பட்ட பழமும் யானையும் உண்மையான பழத்தையும் உயிருள்ள யானையையும் ஞாபகப்படுத்துவது போல், ஜனங்கள் ஆராதிக்கும் விக்ரஹங்களும் நிராகாரமாயுள்ள பிரஹ்மத்தை ஞாபகப்படுத்துகின்றன.

விக்ரஹாராதனம் கூடாதென்று கண்டித்து வந்த கேசவசந்திரஸேனரை நோக்கிப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் கூறியது:—"இவ்விக்ரஹங்கள் என் உமது மனதில் மண், கல், கட்டை முதலிய எண்ணங்களை உண்டாக்குகின்றன? இவ்வுருவங்களிலே கூட நித்யாநந்த சித்ஸ்வரூபியான ஜகதாம்பிகையின் ஸ்வரூபஸாந்நித்யத்தை நீர் என் அனுபவித்தல் கூடாது? நித்யமாயும் நிராகாரமாயும் உள்ள ப்ரஞ்ஞாநகநமாகிய பாப்ரஹ்மத்தின் திவ்ய மங்கள விக்ரஹங்களே இப்பிரதிமைகள் என்றறிந்துய்வீராக."

தான் பூஜிக்கும் தேவதா விக்ரஹங்களை ஸர்வேசுவரனது லிங்கங்கள் (குறிகள்) எனக் கருதுகின்றவன் ஈசுவரனையே யடைகின்றான். ஆனால் அவைகளை மண்ணாலும் கல்லாலும் கட்டையாலும் செய்த வெறும் பொம்மைகளென்று நினைப்பவனுக்கு அவ்விக்ரஹாராதனம் யாதொரு பயனையும் அளிக்காது.

உபதேசரத்நமாலை.



# இராஜாங்க முறை

## • பிரதமக் கொள்கைகள்

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

### 6. பெற்றோர்க்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகள்

### FILIAL DUTIES

சென்ற ஜூலைமாதப் பத்திரிகையில் மரியாதையைப்பற்றிச் சொன்னோம். பெற்றோர்க்குச் செய்யவேண்டிய முக்கிய கடமைகளில் "கீழ்ப்படிதல்" ஒன்று.—

**கீழ்ப்படிதல்.**—உங்களுக்கு அனுபோகம் போதாது. உங்களுக்கு முதிர்ந்த பகுத்தறிவு இன்னமும்உண்டாகவில்லை. உங்கள்மனச்சாட்சியானது உங்கள் காரியங்களைப் பிறருதவியின்றி நீங்களே செய்யப்போதுமான விளக்கத்தை இதுவரையில் அடையவில்லை. ஆனது பற்றியே உங்களுக்குத் தேவையான நல்வழியில் நடத்தும் ஆதரவை உங்கள் பெற்றோர்களின் பகுத்தறிவிலும் அனுபோக ஞானத்திலுமே தான் நீங்கள் பெறவேண்டும். அதாவது அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதே.

ஆனால் கீழ்ப்படிதலில் அநேக விதங்களுள. "நிர்ப்பந்தக் கீழ்ப்படிவு" என்பது ஒன்று. உதாரணமாக, நான் அதைச் செய்யாவிட்டால் என்னைத் தண்டிப்பார்கள். ஆப்புந்தாகவேனும் என் கடமையை எப்படியாவது செய்து முடிப்பேன். ஏனெனில் நான் அதைச் செய்யாவிட்டால், உலாவப்போமிடத்திற்கும் அல்லது வேறு எவ்விடத்திற்கும் என்னை அழைத்துப்போக மாட்டேனென்று என் தகப்பனார் சொல்வார்." வெறுப்பையும் விசனத்தையும் தரும் "அடிமையின் கீழ்ப்படிவு" என்று சொல்வதும் இதுவே. ஆனால் நமது நித்திய நடவடிக்கைகளில் மற்றொருவிதக் கீழ்ப்படிவு உண்டு. அது "அன்புடன் கூடிய கீழ்ப்படிவு." இதன் கௌரவம் தன்னிஷ்டர்களுக் சுகதுக்கங்களைக் கவனியாது தன்னிஷ்டர்களுக்காகப் பாடுபடுவதில்தான். தன் தகப்பனுக்கு மரியாதை செய்வதிலும் தன் தாய் ஏவுதற்கு முன் குறிப்பறிந்து அவள் பணிகளைச் செய்தலிலும் தன் சகோதரியின் விஷயத்தில் வீரனைப்போல நடந்து கொள்ளுதலிலும் மனங்குளிர ஒருவன் அளவில்லாப் பெருமையை யடைவான். இத்தகைய கீழ்ப்படிவு வாதித்துக்கொண்டும், முணுமுணுத்துக்கொண்டும் அன்றி ஒரு காரியத்தையும் செய்யாத முதற்கூறிய இழிவான கீழ்ப்படிவு அல்ல. இக்கீழ்ப்படிவில்தான் குழந்தைகள் பெற்றோர்களிடத்தில் வைக்கும் வாத்ஸல்யத்தின் பெருமை பூரணமாய் விளங்குகின்றது.

கீழ்ப்படிவு என்பது இன்றியமையாதது. ஜனசங்கத்தின் ஒற்றுமைக்கு ஆவசியக மானது. ஒரு வேலைக்காரன் தனது மேஸ்திரித் தலைவன் இடும் கட்டளைகளின்படி நடக்காவிட்டால் தன் வேலையைச் சரிவரச் செய்து முடியான். இராஜாங்க வேலைக்காரன் தன் மேலதிகாரியின் ஆக்கினையை அவமதிக்கும் பட்சத்தில் கடமை தவறினவனாவான். தளகர்த்தனுக்கு மீறி நடக்கும் போர்வீரனால் தேசத்திற்கு அபாயம் உண்டாகும். சுருங்கச் சொல்லின், சட்டம் மதிப்பற்றுப்போகும் நிமிஷமே ஜனக்கூட்டத்தின் ஒற்றுமைக்கு முடிவுகாலமாகும்.

ஆகையினாலே நீங்கள் சிறுவர்களாயிருக்கும் போதே கீழ்ப்படிந்துநடக்கும் வழக்கங்களிற் பயிலல்வேண்டும். அப்படிச் செய்யச் சிலாக்கியமான வழி உங்கள் பெற்றோர்களின் சொற்படி நடப்பதே. உங்கள் மனதை வசப்படுத்தி நிலைநிறுத்தச் சரியான மார்க்கம் இதுவே. ஏனெனில் கீழ்ப்படிந்து நடப்பதற்குத் தைரியம் அவசியம். ஆனால் நாம் ஏதேனும் ஒரு நிர்ப்பந்தத்தினின்றும் நீங்க வேண்டின் நாம் மனம்போன போக்கெல்லாம் போகவேண்டியதுதான்.

நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியும் வழக்கத்தைப் பெற்றிருந்தால் பிற்காலத்தில் நற்பிரஜைகளாகவும் நல்ல யுத்த வீரர்களாக
~~~~~~~~~~~~~~~~~~~~

வும் ஆவது சுலபம். கடைசியாக உங்களையே வசப்படுத்தியாளும் சக்தி உங்களுக்கு உண்டாகும். கீழ்ப்படிந்து நடக்கக் கற்காதவன் ஏவும் வகையறியான்.

சில வருடங்களுக்கு முன் கிருமியாவென்னுமிடத்தில் இங்கிலாந்துக்கும் உருஷியாவுக்கும் நடந்த யுத்தத்தில் அறுநூறு படைச்சேவகர்கள் எதிர்த்துத் தாக்கிச் சென்ற கதையை நீங்கள் கேட்டிருக்கலாம். சேனைத்தலைவன் கொடுத்த உத்தரவு மிகவும் தப்பானது. அதன்படி நடந்தால் தங்களுக்கு நிச்சயமாய் மரணம் சம்பவிக்கும் என்று யுத்த வீரர்களுக்குத் தெரியும். ஆயினும் தாங்கள் அதற்குக் காரணம் விசாரிக்கக் கூடாதென்றும், உத்தரவின் பிரகாரம் நடந்து இறப்பதே தங்கள் கடமை யென்றும் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். தெரிந்திருந்தும் உத்தரவின்படி நடந்து அநேகர் மாண்டனர். ஆக்ஷேப ஸமாதான மின்றிக் கீழ்ப்படியவேண்டும் என்னும் நீதியை இப்படை யெழுச்சியினின்றும் கற்றுக் கொள்ளுகிறோம்.

இக்கீழ்ப்படிவு சிறுவர்களுக்கு மிகத் தேவையானது. அதிகச் சிறப்பை விளைவிக்கும். இவர்கள் அறிவில்லாதவர்களாயும் பலயீனர்களாயும் இருக்கிறார்கள். மேல் இன்னதுசெய்வது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆகையினாலே தங்களிலும் மேலானவர்கள் சொல்வதைநம்பி அதன்படி மனப்பூர்வமாய் நடந்து கொள்ளல்வேண்டும்.

இதைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள்:—

கொஞ்ச காலத்திற்கு முன் கீழ்ப்படிந்து நடந்ததால் ஒருசிறு குழந்தை பயங்கரமான மரணத்தினின்றுந் தப்பித்துக்கொண்டது. அக்குழந்தையின் தகப்பனுக்கு இருப்புப்பாதையில் வண்டித்தொடர் வரும்போது அடையாளங் காட்டும் வேலை. ஒருநாள் வண்டிவரும் சமயத்தில் ஜாக்கிரதையாய்த் தான் வழக்கமாய் நிற்குமிடத்தில் நின்றுகொண்டிருந்தான். அப்போது கொஞ்ச தூரத்தில் ஒரு சிறு பையன் தன்னை நோக்கி இருப்புப்பாதையின் குறுக்கே எதிர்ப்புறத்திலிருந்து வந்துகொண்டிருப்பதைப் பார்த்தான். வேகமாய் ஓடிக் குழந்தையைப் பின்னுக்குத் தூக்கிக்கொண்டு போய்விடலா மென்று நினைத்தான். ஆனால் தன்னுடைய வழக்கமான இடத்தைவிட்டுப் போய்த் திரும்பி வருவதற்குள் வண்டித்தொடர் வந்துவிட்டால் தான் அடையாளம் கொடுப்பது தவறிப் போய்விடுமே யென்றும் அதுபற்றி அநேகர் ஆபத்துக்குள்ளாவார்களேயென்றும்எண்ணிச்சஞ்சலித்துக்கொண்டிருந்தான். அவன் நிற்குமிடத்திற்கு அதிசமீபத்தில் இருப்புப்பாதை வளைவாயிருந்ததால் வண்டித்தொடர் வருவது அவன் கண்ணுக்குத் தெரியவில்லை. இன்னது செய்வது என்று தோன்றாமல் பார்த்துக்கொண்டிருந்தபோது அச்சிறுவன், தன்னுடைய அருமை மகன்தான் என்று அவனுக்குத் தெரியவந்தது. அச்சமயம் அவனுக்கு மட்டில்லா மனக்கலக்கமும் திகிலும் உண்டாயிற்று. உடனே வண்டியின் சத்தம் காதில் விழுந்தது. கண்ணுக் கெதிரில் படபடவென்று வேகமாய் வண்டித்தொடர் ஓடிவருவதைப் பார்த்தான். அப்போதுதான், குழந்தையானது வண்டித்தொடர் வந்துகொண்டிருக்கும் இருப்புப்பாதையின் தண்டவாளத்தின் மேல் வந்துகொண்டிருந்தது. குழந்தை இருப்புப்பாதை முழுமையும் தாண்டுவதற்குள் புகைவண்டிகள் நெருங்கி வந்து குழந்தையை அரைத்துக் கொன்றுவிடும் என்று எண்ணினான். அத்தருணத்தில், அடியில் விளங்குமாறு அவன் உத்தரவின் பிரகாரம் குழந்தை கீழ்ப்படிந்து நடந்தால் தான் பிழைப்பதாயிற்று. வேறு எவ்வித மார்க்கமும் ஸாத்யப்படாமலிருந்தது. "நீ இப்போது இருக்கும் இடத்திலேயே அப்படியே படுத்துக்கொள்" என்று குழந்தைக்குக் கேட்கும்படி தகப்பன் உரத்துக் கத்தினான். குழந்தையோ தகப்பன் உத்தரவின்படி இரண்டு தண்டவாளங்களின் மத்தியில் உடனே படுத்துக்கொண்டது. அக்குழந்தை படுத்திருந்த விடத்திற்கு மேலாக



வண்டித்தொடர் இடி முழக்கம்போல் சப்தித்துக் கொண்டு அதிவேகமாய் ஓடி வந்தது. குழந்தையின் உடம்பைக் கொஞ்சமும் தொடவேயில்லை. புகைவண்டி போய்விட்டதும் தன் இடத்தைவிட்டு குழந்தையினிடத்திற்கு விரைந்து ஓடினான். அது பிழைத்திருக்கும் என்று அவன் எண்ணவேயில்லை. சமீபத்தில் வந்து தன் குழந்தை சௌக்கியமாயிருப்பதைத் தெரிந்து கொண்டபோது அவனுக்குண்டான ஆச்சரியத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. குழந்தை தகப்பன் சொற்படி நடவாதிருந்தால் இறந்துபோயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. அது உயிர்தப்பிப் பிழைத்ததற்குக் காரணம் தக்ஷணமே தகப்பன் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுதான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் இக்கதையினால் விளங்குகின்றது.

முற்காலத்தில்அயோத்தியா நகரத்தில் தசரத சக்கிரவர்த்தி என்று புகழ்பெற்ற அரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள். கைகேயி,கௌஸல்யை என்பன அவர்கள் பெயர். கைகேயி தன் குமாரர் பரதர் அரசாளவேண்டுமென்று சக்கிரவர்த்தியை வரங் கொடுக்கும்படிச் செய்தாள். கௌஸல்யையின் மூத்த குமாரர் ஸ்ரீ ராமர். இராமருக்குப் பட்டாபிஷேகம் ஆகும் தருணம் வந்தது. தசரத சக்கிரவர்த்தி, தன் மனைவியாகிய கைகேயி யம்மாளுக்கு முன்பு வாக்களித்திருந்ததினால், தன் ஜேஷ்ட புத்திரரும், நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவரும், வில் வித்தையில் தேர்ந்தவரும், மகா பலிஷ்டரும், கண்ணுக்கொப்பான புத்திரருமாகிய ஸ்ரீ ராமபிரானை வனத்துக்கனுப்பவேண்டுமே யென்னும் ஏக்கத்தினால் மனவருத்த முற்றிருந்தனர். ஸ்ரீ



ராமபிரானோ, தந்தை சொல்வதற்கு முன் வனத்துக்கேகச் சித்தமாயினர்.

அவர் ஏன் சித்தமாகவேண்டும், தானோ சக்கிரவர்த்தியின் ஜேஷ்ட குமாரர். சக்கிரவர்த்தியாயிருந்து நாடு முழுவதையும் ஆண்டு, இராஜபோகத்தை அனுபவிப்பதைவிட்டு, மரவுரி யுடுத்து, பதினான்குவருஷம் வனவாசம் செய்ய, யார்தான் உடன்படுவார்கள்.

ஆனால் எம்பிரான் யாதொரு ஆக்ஷேபணையுஞ் செய்யாது 'மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்' என்பதையும், 'தந்தைசொன் மிக்க மந்திரமில்லை' யென்பதையும் அறிந்து களிப்போடு வனத்துக்கேக உடன்பட்டனர்.

இவரைத்தான் காட்டுக்கனுப்ப வேண்டுமென்பது கைகேயி அம்மையின் வேண்டுகோள். இவர் உடன்பட்டவுடன், லக்ஷ்மணரோ, ஒரே தாய்வயிற்றிற் பிறவாதிருந்தும், தன் தந்தை தன்னைப் போம்படி ஏவாதிருந்தும், ஸ்ரீ ராமபிரான் இவரை வரவேண்டாமென்று தடுத்திருந்தும், தன் தமையனாரைத் தனியே வனத்திற்கு அனுப்பக்கூடாதென்று துணையாகச் சென்றனர்.

இவர்களை யார் நிர்ப்பந்தப் படுத்தினார்கள்? இவர்கள் செய்கையினால் நாம் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதை யாதொரு ஆக்ஷேபணையுமின்றி, நாம் அறிகிறோம்.

ஆகையினாலே நீங்கள் எக்காலத்திலும் ஸர்வாவஸ்தைகளிலும் பெரியோர்களின் ஆக்ஞை தவறாது நடப்பது உங்கள் முதற்கடமையாம் என்னும் எண்ணத்தை உங்கள் மனத்தில் ஆழப் பதித்து ஒழுகுவீர்களாக.

C. S. சுந்தரம் ஐயர், பி. ஏ., எல். டி.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 3. இயல்வது கரவேல்

இயலுவதை அதாவது கூடியதை மறைக்காதே என்பது இதன்பொருள். தானம் கொடுக்கும் விஷயத்தில் இது ஸாதாரணமாக உபயோகப்படும் நீதி மொழி. வந்து பிச்சை கேட்பவர்களுக்கு இல்லை என்னாது உன்னால் கூடியவரையில் கொடு. யாசிப்பவர்களை நோக்கி‘என்னிடம் ஒன்றுமில்லை; போய்வா. என்னால் ஒன்றும் கொடுக்கமுடியாது’ என்று கூறுவதே இயலுவதைக் கரத்தலாகும். அவ்வாறின்றி‘எனக்கு அதிகமாகக் கொடுக்கவிதியில்லை. ஏதோ என்னிடம் உள்ளவைகளைக் கொண்டு இவ்வளவு தான் உனக்குக் கொடுக்க முடியும்’ என்று கூறி ஏதாவது இயன்றமட்டும் கொடுத்தலே இயலுவதை மறைக்காதிருத்தல். இயலுவதை ஒளிப்பதால் பொய்யுரைத்த பாபம் உண்டாகும். மேலும் உலகப் பழிக்கும் இடம் உண்டாகும். உண்மையைத் தன் ஸுகம் கருதி மறைப்பது பெருந்தன்மை யுடையோர் செய்யும் காரியமல்ல. வரும் யாசகனுக்குக் கொடுப்பதற்கு இஷ்டமில்லை என்றால்,அதற்குத் தகுந்த முகாந்தரங்கள் இருப்பின் அது இழிவான செயலாகாது.‘என்னிடம் இல்லை ஆதலால், கொடுக்கமாட்டேன்’ என்பதே இழிவான தொழில். அதை விலக்க முயலல்வேண்டும். ஸந்மார்க்கத்தில் நமது திறனுக்கு ஏற்ப முனைந்து பாடுபடவேண்டும் என்பது இதன் பொதுவான பொருள்.

இயல்வது கரவேல் என்றதனால் முடியாதவைகளைக் காலங்கருதி மறைக்கலாம் என்பது விளங்கும். ஒருவன் குறைகள் தகுந்தகாலம் காரணங்களின்றி வீணாக வேறு ஒருவனுக்குத் தெரிய வேண்டியதில்லை. அவ்வாறு பொது ரகஸ்யத்துள் ஒருவன் புகுந்து வம்புபேசி வீண் காலம் கழிப்பவனாயின் அவனுக்கு இதனை மறைத்துவிடலாம். ஆனால் இவ்வாறு மறைப்பதால் நம்மால் செய்யத்தகாத காரியங்கள் நம்மேல் சுமத்தப்படும், அல்லது நாம் பெற்றுக்கொள்ளத்தகாத மரியாதைகள் நமக்கு ஏற்படும், அதனால் நாம் தகாத நிலைகளில் கொண்டு சேர்க்கப்படுவோம் என்று தோன்றினால் இவைகளைத் தடுப்பதற்கு எவ்வளவு நமது சக்திக்குறைவைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு முன்னரேவெளிப்படுத்தி விடவேண்டும்.இப்படிச் செய்யாது நமது சக்திக் குறைவை நாம் தகுந்த காலத்தில்மறைத்துவிட்டால், அதுதானே தகாத காலங்களில் வெளிப்பட்டு நம்மை மீளாப் பாபத்திற்கும் பழிக்கும் ஆளாக்கும். ஆதலால் ‘காலமறிந்தாங்கிடமறிந்து கடமையறிந்து, இயல்வது கரவேல்’ என்பதனை ஒளவையார் இவ்வாக்யத்தால் வெளிப்படுத்துகின்றாள் என்றும் கூறலாம்.

தன்னால் இயன்றதைக் கரவாது கொடுத்துச் சிறப்புற்றவன் கர்ணன். ‘கொடையில் கர்ணன் போல’ என்பது பழமொழியாக வழங்கி வருகிறது. இவன் சிறுவயது முதல் துரியோதனாதியரிடம் நேசம் பாராட்டி வந்ததால் அவர்கள் துர்க்குணங்கள் எல்லாம் இவனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும் கரவாதளித்தல் என்ற நற்குணத்தைமாத்திரம் இவைகளால் மாய்க்கமுடியவில்லை. ஒருகாலத்தில் இந்திரன் கிழவன் உருக்கொண்டு அவனது கவசகுண்டலங்களைத் தந்துவிடும்படி கேட்டான். அப்பொழுது கர்ணன் தகப்பனாகிய சூரியபகவான் ‘இந்திரன் தன் பிள்ளையாகிய அர்ச்சுனனுக்குச் சகாயம் செய்ய இந்த உருவொடு கவசகுண்டலங்களை யாசிக்கிறான்’ என்று கிழவன் மோசக்கருத்தை வெளியிட்டும், அதைக் கவனியாது கர்ணன் தன்னிடம் இருந்த வஸ்துக்களைக் கேட்டதற்காகக் கிழவனைத் துதித்துவிட்டுத் தனக்குக் காவலாகவிருந்த கவசகுண்டலங்களை முன்பின் யோசிக்காதுகொடுத்துவிட்டான். குந்தி அர்ச்சுனனுக்குச் சகாயமாயும் கர்ணனுக்கு விரோதமாயும் உள்ள அநேக வரங்களைக் கர்ணனிடம் கேட்க அவன் அவைகளை எல்லாம் தயங்காது அளித்தான். கர்ணன் கொடைத்தன்மையைப் பற்றித் தமிழ்ப் பாரதத்தில் ஒரு கதை காணப்படுகிறது:— பாரத யுத்தம் 17-ம் நாள் மாலை அர்ச்சுனன் கர்ணனைக் கொல்ல எண்ணி எவ்வளவோ அரிய அஸ்திரங்களைப் பிரயோகித்துப் பார்த்தான். ஒன்றும் பயன்படாதது கண்ட பகவான் கர்ணனை அவன் தர்மங்கள் தலைகாக்கின்றன என்று உணர்ந்து உருமாறி ஒரு பிராமணனாகிப் போர்செய்து கொண்டிருக்கும் கர்ணனிடம் சென்று தமக்கு ஒரு தானம் வேண்டும் என்று கேட்டார். கேட்டதைத் தருவதாகக் கர்ணன் சொல்ல, “உனது தர்மபலன்களை எல்லாம் கொடுத்துவிடு” என்றார். அதனால் தன் உயிருக்கே சேதம் வரும் என்பதை உணர்ந்திருந்தும் கொடுப்பதில் இயல்வது கரவாக் குணம் வாய்ந்த கர்ணன் தங்கு தடையின்றிக் கொடுத்தான். பின்னர் அர்ச்சுனன் பாணங்கள் தடையின்றி வந்து தாக்க அவன் அன்று மாலை இறந்தான். கர்ணன் எவ்வளவு கொடியவனாக விருந்தபோதிலும் அவன் கரவாதளிக்கும் குணமே இப்பொழுதும் எல்லோராலும் பாராட்டப்பட்டு ஓங்கி நிற்கின்றது.



இயல்வதைக் கரந்ததால் புண்ணியங்குறைந்ததற்கும் மஹாபாரதத்தில் ஒருகதை உண்டு. நாரதர் ஒரு நாள் காசிதேசத்தரசனாகிய திவோதாஸன் பிள்ளை ப்ரதர்த்தனனிடம் போய்ச் சேர்ந்தார் அவன் அவரை நான்கு குதிரைகள் பூட்டிய தனது இரதத்தில் ஏற்றிக்கொண்டு அவருக்கு ஊரைக் காட்டப் புறப்பட்டான். வழியில் ஒரு பிராமணன் அவஸரமாக’ வந்து தனக்கு ஒருகுதிரை அவசியம் வேண்டும் என்று கேட்டான். அதற்கு ப்ரதர்த்தனன் ‘நாங்கள் ஊர் வலம் வருவதாகப் புறப்பட்டோம். அரண்மனை போனதும் வந்து ‘கேளும் ஒரு குதிரை தருகிறேன்’ என்றான். ‘என் அவஸரம் எனக்கல்லவோ தெரியும்! நீர் அரண்மனை போகும்வரையில் என்னால் பொறுக்க முடியாது! இப்பொழுதே கொடுத்துவிட்டால் நலமாக விருக்கும்’ என்று பிராமணன் மன்றாடினான். கொடையே பெருங்குணமாகவுடைய அந்த அரசன் ஒருகுதிரையை அவிழ்த்துக் கொடுத்துவிட்டான். பின்னர் ஒழுங்காக மூன்று பிராமணர்கள் வந்து மன்றாடி மற்றைய மூன்றுகுதிரைகளையும் வாங்கிச்சென்றனர். முடிவில் ப்ரதர்த்தனனே இரதத்தில் நாரதரை வைத்து இழுத்துச்சென்றான். போகும்பொழுது ‘இனி பிராமணர்கள் வந்து கேட்கக் கூடியது ஒன்றும் இல்லையே’ என்று கூறிக்கொண்டு தனது மனம் நொந்ததை வெளியிட்டான். ப்ரதர்த்தனன் இவ்வளவு தூரம் தானம் செய்வதில் முனையக்கூடிய சக்தியுடையவனாய் இருந்தும் அதை மறைத்து மன்றாட்டத்தின் மேல் இரந்தோர்க்கு ஈந்ததாலும் மேலும் இவன் முடிவில் மறைக்க முயன்றும் முடியாததால் ஏற்பட்ட மனத்தளர்ச்சியை வெளிக்காட்டியதாலும் ஸ்வர்க்கவாஸம் ப்ரதர்த்தனனுக்கு அவன் தானச் சிறப்பிற்கேற்ப ஏற்படாதென்று நாரதர் கூறி மறைந்தார். உதாரகுணமுடைய கொடையாளிகளுக்கே, தாம் செய்யும் தானங்களிலே இயல்வது கரத்தல் சற்று நேரிட அதனால் அவர்கள் தானச் சிறப்புக்குக் குறைவுவந்ததாயின் இத்துர்க்குணம் நம்போலியர்களுக்குப் பாபத்தையும் பழியையும் உண்டாக்கும் என்பதற்கு என்ன சந்தேகம்?

### 4. ஈவது விலக்கேல்

கொடுப்பதைத் தடுக்காதே என்பது இதன் பொருள். இதை விவரித்துக் கூறினால் ஒருவன் செய்யும் தானத்தைப்பொறாமை காரணமாக நீ நடுவே நின்று தடுக்காதே என்றாகும். இந்த விளக்கத்திலிருந்து இந்த நீதி மொழியின் எல்லை நன்கு வெளியாகும். கொடுப்பதை விலக்காதே என்றதனால் கொடுக்கவேண்டும் என்று வரும் எண்ணத்தைத் தகுந்த முகாந்தரங்களிருப்பின் விலக்கலாம் என்பதாகும். ‘பாத்திரமறிந்து பிச்சையிடு’ என்பது பழமொழி.ஒருவன் தானம் செய்ய எண்ணுங்கால் அதை வாங்க ஏற்படுபவன் தகுந்த பாத்திரமல்லவென்று நமக்குத்

தெரியவந்தால் நாம் தானத்தைத் தடுத்துவிட வேண்டும். இப்படிச் செய்தால்'ஈவது விலக்கேல்' என்பதற்கு விரோதமாக நடந்தவர்களாக மாட்டோம். இவ்வாறின்றி ஒருவன் தானம் செய்யுங்கால் வாங்குபவன் அயோக்கியன் என்று தெரிந்து விட்டால் அப்பொழுது தடுப்பதால் நமக்கு ஈவது விலக்கியபாவம் வரும். இந்த ஸமயங்களில் தானம் முடியும்வரையில் பார்த்திருந்து இம்மாதிரி அயோக்கியர்களுக்கு இனிமேல் தானம்சென்று சேராதபடி தடுக்கவேண்டியது நமது கடன். ஆகவே கொடுக்குங்கால் எக்காரணம் பற்றியும் ஈவதை விலக்கலாகாது. மேலும் வேறு காரணமின்றிப் பொறாமையால் மாத்திரம் எவ்விதக் கொடையையும் தடுக்கலாகாது என்பதும் விளங்கும்.

தானம் செய்யப் புகுங்கால் நல்ல எண்ணத்தோடு தடுத்தாலும் கேடுவிளையும் என்பதை விளக்கப் புராணகதைகூட ஒன்றுஉண்டு. மஹாபலி என்னும் ஒரு அஸுரராஜன் அநேக அச்வமேத யாகங்கள் செய்து மூன்று உலகங்களையும் ஒரு குடைக்கீழ்ஆண்டுவந்தான்.அவன் சிறந்த பகவத் பக்தனாகவும் இருந்தான். அவன் காலத்தில் தேவ ராஜனான இந்திரன் செயலற்று ஒளிமழுங்கிப் போய்விட அவன் மஹாவிஷ்ணுவை அடைந்து "என்பூர்வநிலை எனக்கு வரும்படி செய்தருள வேண்டும்"என்று வேண்டிக்கொண்டான். மஹாவிஷ்ணுவும் அதற்கு இசைந்து வாமன உருக்கொண்டு ப்ரஹ்மசாரியாகி மஹாபலிசெய்யும் ஒரு யாகத்திற்குச் சென்றார். அந்த யாக ஒழுங்குப்படி கேட்டவைகளைக் கொடுக்கத் தயாராகவிருந்த மஹாபலியிடம் வாமனர் சென்று இருந்து ஜபதபாதிகள் செய்ய என் காலடியால்மூன்றடி பூமி "எனக்குவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்." அதற்கு அரசன் "இது என்ன பிரமாதம்! இதுதானா கேட்கவேண்டுமென்று உமக்குத் தோற்றியது! வேறு விலை உயர்ந்தவைகள் எதையாவது கேளும்!" என்று மன்றாடினான்.என்ன சொல்லியும் ஓரே பிடிவாதமாக வாமனமூர்த்தி "எனக்கு மூன்றடி மண்தான் வேண்டும். நீ கேட்டதைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாயே ஒழிய தகுந்தபடி கேட்கச் செய்வதாக ஒன்றும் ஸங்கல்பம் செய்துகொள்ளவில்லையே! நான் கேட்டதைக் கொடு பார்ப்போம்" என்றார். இவைகளை எல்லாம் அருகிலிருந்து கேட்டிருந்த அஸுர குருவாகிய சுக்ராசாரியர் வாமனரது தேஜஸை உற்று நோக்கி ஞான திருஷ்டியால் கண்டறிந்து மஹாபலியை நோக்கி 'நீ என்ன சொல்லியும் மாறாது பிடிவாதமாக இருக்கும் இக்குள்ளனைக் கள்ளன் என்றே மதி. நீ கொடுக்கும் மூன்றடி மண்ணால் உனது திரிலோகங்களைக் கொள்ளைகொண்டு தேவர்களைத் திருப்திப்படுத்த வந்திருக்கும் மாயாவியாகும் இவன். ஸாதாரண மனிதன் இவ் விசித்ர வரன் கேட்பானா?' என்று எச்சரிக்கை செய்தார். 'தேவஸஹாயனான மஹாவிஷ்ணுவே ஆயினும் தேஹி என்று கேட்டுவிட்ட பிறகு மறுக்க மாட்டேன். மேலும் அவருக்குத் தானங்கொடுக்க எனக்கு வாய்க்குமா? இந்த நல்ல தருணத்தை நழுவவிட மாட்டேன்' என்று பலிகூறி மூக்கு ஸ்தாலியைக் கையிலெடுத்து வாமனர் கையில் 'மூன்றடி மண் தந்து விட்டேன்' என்று தாரை வார்க்கத் தயாரானான். இதற்குள் தன் சொல் ஏறாதது கண்ட சுக்ராசாரியர் மஹாபலியின்மேலிருந்த அதிகப்ரீதியால் 'ஐயோ பின்வருவதைக்கூறியும் ஜாக்கிரதைப்படாது மதிமோசம் போய் நனாது ராஜ்யம் முழுவதையும் பறிகொடுத்துத்தத்தளிப்பானே மஹானானபலி! நாம் குருவாகவாய்த்ததற்குநம்மால் இயன்றவரையில் அவனைக் காக்க முயலவேண்டும்' என்று இவ்வாறுஎண்ணமிட்டுக்கொண்டுஸ்தாலியின்மூக்கை வந்து அடைத்துவிட்டார். ஸ்தாலியைத் தாரை வார்க்கச் சாய்த்தான் மஹாபலி. மூக்கின் வழியாய்த் தண்ணீர் விழவில்லை. இந்தச் சூதை அறிந்த வாமனர் கீழே இருந்த தர்ப்பை ஒன்றை எடுத்து மூக்குள் இடம் பார்த்துச் சருக்கென்று குத்திவிட தண்ணீர் தாராளமாகப் பாய்ந்தது. சுக்ராசாரியர்கண்ணில் இந்தக் குத்துப்பட அவர் கண்களுள் ஒன்று குருடாகிவிட்டது. கஷ்டநிஷ்டூரங்களை நன்கு உணர்ந்து தானம் கொடுப்பதும்எவ்விதத்திலும் நலம் என்று தீர்மானித்துக் கொடுக்கத் துணிந்த மஹாபலியை வீண் அபிமானத்தால் தடுக்க முயன்ற சுக்ராசாரியர் கதியே 'ஈவது விலக்கலால்' உண்டாகும் கெடுதியை நன்கு விளக்கும்.



# ந்யாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

உலகத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு மிகவும் பிரஸித்தமாயிருக்கிற விஷயங்களை உதாரண மூலமாகக் காட்டிப் பெரும்பாலும் வேதாந்த சாஸ்திரத்தில் விரிவாகக் கூறப்பட்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நாம் தெரிந்து கொள்ளுவதற்கு உதவியாகவிருக்கும் வாக்கியங்களுக்கு **ந்யாயங்கள்** என்றுபெயர். இவை தோற்றத்தில் சிறியவையாயினும் வெகு ஆழ்ந்த பொருள்களை அடக்கியுள்ளவைகள். இந்த லக்ஷணத்தைப்பற்றி இவைகளுக்கு **ஸூத்ரங்கள்** என்ற வேறு ஒரு பெயரும் உண்டு.

இவை ஸ்ரீ வேதவ்யாஸ மஹருஷியாலும் ஜைமினி மஹருஷியாலும் இயற்றப்பட்டதால் இவைகளுக்கு **ஜைமினீயந்யாயமாலா** என்றும், **வையாஸிகந்யாயமாலா** என்றும் பெயரிடப்பட்டிருக்கின்றன. இவை ஸாதாரணமாகப் பூர்வ மீமாம்ஸையிலும் உத்தரமீமாம்ஸையிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளின் வெளிப்படையான அர்த்தம் உலக விஷயங்களோடு ஸம்பந்தப்பட்டிருப்பதால் இவைகளுக்கு **லௌகீகந்யாய** மென்றும் பெயர். இவை ஆங்காங்கு அரிய ஸம்ஸ்கிருத நூல்களில் சிதறிக்கிடப்பதால் இவைகளை ஒருங்குசேர்த்து நன்றாக ஒழுங்குபடுத்தி விளக்கி இங்கு எழுதப் புகுவாம்.

### 1. अर्कपर्वत न्यायः

### அர்க்கபர்வத ந்யாயம்

ஒருவன் தேனை விரும்பி அங்கும் இங்கும் அலைந்து திரிந்து, அதை ஓர் எருக்கஞ்செடியில் கண்டுவிட்டானானால், அவன் அதற்காக இதற்கு மேல் மலையில் ஏறித் தேடக் கருதவேமாட்டான். இதுபோல ஒரு காரியம் ஸாதாரண முயற்சியால் ஆவதாக இருந்தால், அதன் பொருட்டு ஜனங்கள் பெருமுயற்சி செய்ய எண்ணவேமாட்டார்கள். ஆகவே இந்த ந்யாயம் சிறு முயற்சிகளாலாகும் காரியங்களுக்குப் பெரு முயற்சி ஒருவரும் செய்யார் என்னும் பொருளில் உபயோகப் படுவது.

### 2. अजाकृपाणीय न्यायः

### அஜாக்ருபாணீய ந்யாயம்

ஒருவன் ஒருமரத்தின் மீதேறிக் கிளைமுதலியவைகளை வெட்டிக்கொண்டிருந்தான். அப்பொழுது அம்மரத்தடியில் ஒரு ஆடு வந்தது. தற்செயலாய் அதே ஸமயத்தில் அவன் கைக்கத்தி நழுவி விழ ஆடு வெட்டுண்டு மாண்டது. இம்மாதிரி திடீரென்று ஒரு ஆபத்து நேரிடும்பொழுது இந்த ந்யாயம் உபயோகமாகும். திருவிளையாடற் புராணத்தில் **பழியஞ்சிய படலத்தில்** ஆலிலைகளில் வெகுநாளாகச் சிக்கியிருந்த அம்பு ஒன்று காற்றில் அசைந்து விழுந்து, அத்தருணம் அங்கு வெய்யிலுக்கு ஒதுங்கிய பார்ப்பினியின் மேல் பாய்ந்து அவளைக் கொன்றது அஜாக்ருபாணீய ந்யாயமாக விருக்கின்றது என்று கூறலாம்.

### 3. अजात पुत्रनामोत्कीर्तन न्यायः

### அஜாத புத்ர நாமோத் கீர்த்தன ந்யாயம்

ஒரு ப்ரஹ்மசாரி ஓரிரவில் படுத்துக்கொண்டிருக்கையில் மனோராஜ்யம் செய்யத் தொடங்கினான். 'நான் விவாஹம் செய்து கொள்ளுவேன். கொஞ்சகாலம் ஸுகங்களை அனுபவித்த பின்னர் எனக்குப் பிள்ளை பிறக்கும். அதற்கு என் பெரியோர்கள் பெயரை இடுவேனே ஒழிய என் பெண்சாதி பக்கத்தவர் பெயரை இட இடங் கொடுக்கமாட்டேன்' என்று தீவிரமாக யோசனை செய்யலானான். வீண் மனோராஜ்யங்களைப் பற்றிக் கூறுமிடத்து இந்த ந்யாயத்தைப் பிரயோகம் செய்யலாம். வீண் மனோராஜ்யம் செய்து தன் பெண்சாதியாக ஏற்படும் இராஜகுமாரியைக் காலால் உதைத்து அசட்டை செய்வேன் என்று எண்ணி அவ்வாறே தன் முழுமுதலாகத் தன் காலடியிலிருந்த கண்ணாடி ஸாமான்களை நடுப்பகலில் உதைத்துச் சிதறிய **அல்நாஸ்கர்** என்பவனும், குளக்கரையில் இருக்கையில் தன் தலையிலிருந்த எள்ளை எடுத்து அதன் ஸம்பந்த

மாக அதிக எள்ளு ஸம்பாதித்துப் பணக்காரனாகிய பெரிய தனிகன் பெண்ணை விவாஹம் செய்து அவன் வீட்டில் படுக்கையில் சாய்வதாக எண்ணிக் குளத்துள் விழுந்த ப்ராஹ்மணார்த்தக்காரனும், இந்நியாயத்திற்குத் திருஷ்டாந்தங்கள். ஒரு தகப்பன் தன் பிள்ளையை அழைத்துக்கொண்டு தன் ஸ்வாதீனத்திலிருந்த ஒரு காட்டிற்குப்போய் அதைத் திருத்திப் பருத்தி இடுவதாக வேலையாட்களுடன் வார்த்தை ஆடினான். இதைக்கேட்டிருந்த சிறுவன் வீடுவந்ததும் 'அக்காடுவெட்டிப் பருத்தி விளைத்தால், அப்பா எனக்கொரு முழத்துண்டு' என்று கேட்டான். மனோராஜ்யத்தில் தேறிய தகப்பன் 'சீ! போக்கிரி! நீ கால்மாட்டிக் கிழித்துவிட்டால் என்ன செய்வது' என்று அதட்டிப் பிள்ளையை அடித்தான் என்றொரு கதை கூட உண்டு. இதுவும் இந்நியாயமாகவேமுடிந்ததென்னலாம்.

### 4. अधिकंतुप्रविष्टंनचतद्दानिः न्ययः

### அதிகம் துப்ரவிஷ்டம் நசதத்ஹானி ந்யாயம்

அதிகத்தைக் கைப்பற்றச் சென்றவிடத்தும் உள்ளதைக் கைவிடாதிருக்கும் நிலைகளில் இந்நியாயம் உபயோகப்படும். ஞானம் ஸம்பாதித்தும் அதற்கு மூலமான கர்ம ஆசாரங்களில் ஒருவித அச்ரத்தையில்லாமலிருக்கையிலும், ஒருவன் தனவானான விடத்தும், பெரும் பதவியை அடைந்த விடத்தும் தன் பூர்வ நிலைகளை ஞாபகம் வைத்துக்கொண்டு வீண்கர்வத்திற்காளாகாதிருக்கையிலும் இந்நியாயத்திற்கு ஏற்ற நிலையிலிருக்கிறான் என்று கூறலாம்.

### 5. अध्यारोप न्यायः

### அத்யாரோபந்யாயம்

ஒரு வஸ்து ஸம்பந்தமாக அது அல்லாத மற்றோர் வஸ்து அங்கு இருப்பது போலக் காணப்படுவதற்கே அத்யாரோபம் என்று பெயர். இந்தத் தோற்றம் பொய் உண்மையில் உள்ளது அல்ல. முதல்வஸ்து தான் நிச்சயம் என்று உணரும்யுக்திக்கு **அபவாதம்** என்று பெயர். இவ்வாறு உணரும் வரையில் இந்தத் தோற்றம்மயக்கத்தை உண்டாக்கிக்கொண்டே இருக்கும்; அதனால் ஏற்படும் ஸுகதுக்காதிகள் மாறா. இது வேதாந்த ஸம்பந்தமான ந்யாயம். லௌகிகமாகக் கயிற்றில் பாம்பு தோன்றுவது முதலியவைகளை எடுத்துக் காட்டி, அது பாம்பல்ல கயிறென்று உணர்ந்ததும் பயம் முதலிய காரியங்கள் நீங்குவதை உதாரணமாகக் காட்டுவது. இதைப் பின்வரும் கைவல்ய நவநீதக் கவிகளிலிருந்து நன்கு உணரலாம்.

ஆரோப மத்தி யாஸங்
    கற்பனை யாவ வெல்லாம்
ஓரோர்வஸ் துவினில் வேறே
    யோரோர்வஸ் துவினை யோர்தல்.

நாரூடு பணியாத் தோன்றல்,
    நரனுகித் தறியில் தோன்றல்,
நீரூடு கானல் தோன்றல்,
    நிறம்தலம் வெளியில் தோன்றல்.

இப்படிப் போல நாம
    ரூபங்க ளிரண்டு மின்றி
ஒப்புமா யிரண்டற் றொன்றாய்
    உணர்வொளி நிறைவாய் நிற்கும்

அப்பிர மத்திற் றோன்று
    மைம்பூத விகார மெல்லாம்
செப்புகற் பனையி னாலே
    செனித்தவென் றறிந்து கொள்ளே.

அரவன்று கயிறென் றாற்போல்
    ஆளன்று தறியென் றாற்போல்
குரவன்சொல் லுபதே சத்தால்
    கூறுநூ லொளியைக் கொண்டு

புரமன்று புவன மன்று
    பூதங்க ளன்று ஞானத்
திரமென்றும் பிரம மென்று
    தெளிவதே அபவா தங்காண்.



## வஸ்துதத்துவ போதினி

### CHEMISTRY PRIMER

### I சரித்திர ஆராய்ச்சி

### Historical Outline

இக்காலத்தில் யாவரும்மிகஆவலுடன்படிக்கும் **வஸ்துதத்வமா**னது முற்காலத்தில் வழங்கிவந்த இரஸாயன சாஸ்திரத்தினின்றும் உண்டானது. நமது முன்னோர்களுக்கு **உலோகமண்**ணிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கவும், தோல்களைப் பதம் செய்யவும், சாயம் ஏற்றவும் தெரியுமென்று சரித்திரத்தால் விளங்குகின்றது. எரியக்கூடிய வஸ்துக்கள் இன்னவை யென்பதையும் எரியாத வஸ்துக்கள் இன்னவை யென்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் வாழ்நாளுக்கு உதவும் இம்மாதிரியான சிற்சில விஷயங்கள் மாத்திரம் அவர்களுக்குத் தெரியுமேயொழிய, வஸ்துக்களின் தத்துவம் அதாவது அவைகளின் **முழுகுணங்கள்** அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் அறிந்துகொள்ள முயலவில்லையென்பது தெரிகிறது. இதனால் எல்லா வஸ்துக்களின் தத்துவம் முழுவதும் இக்காலத்தவர்கள் அறிந்து விட்டார்களென்பது எனது கருத்தல்ல. ஆனால் முன்னோரைவிட நமக்கு இப்பொழுது வஸ்துக்களைப்பற்றிய புதிய விஷயங்களும், புதிய ஆராய்ச்சிகளும் அதிகமாகத் தெரியும் என்பதே. இன்னமும் இம்மார்க்கத்தில் அநேக வித்துவான்கள் ஊக்கத்துடன் ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள்.

முற்காலத்தில் தெரிந்த வஸ்துக்களைப்பற்றிய சில விஷயங்களெல்லாம் வஸ்துக்களைப் பரிசோதனை செய்து தெரிந்து கொள்ளப்பட்டவையல்ல; மனிதர்களுக்குத் தற்செயலாய்த் தென்பட்டவை. மனிதர்கள் வஸ்துக்களின் வெளிக்குணங்களைத் தெரிந்துகொண்டார்களே யல்லாமல், அவைகளின் தத்துவத்தை அதாவது உண்மைக்குணங்களை ஆராய்ந்து அறியவில்லை. நமது **மூலவஸ்துக்களுக்கும்** நமது முன்னோர்களின் மூல வஸ்துக்களுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. 'இனி இரண்டாகப் பிரிக்கமுடியாத வஸ்துவுக்கே' அதாவது நமக்கு இப்பொழுது தெரிந்திருக்கிற உபாயங்களால் வேறு இரண்டு வஸ்துக்களாகப் பிரிக்கமுடியாத வஸ்து'வுக்கே மூலவஸ்து என்று பெயர். இதைக்கொண்டு, 'சுத்தஜலம்' ஒரு **சேர்க்கைப் பொருளென்று** நாம் சொல்லுகிறோம்.

ஆனால் நமது முன்னோர்கள், 'அக்கினி' 'வாயு' 'பூமி' 'அப்பு' அல்லது நீர்' ஆகிய இந்நான்கும் மாத்திரம் மூலவஸ்துக்களென்றும், மற்றவை சேர்க்கை வஸ்துக்களென்றும் நம்பினதாகத் தெரியவருகிறது. அவர்கள் எக்காரணத்தைக் கொண்டு அவ்விதம் நினைத்தார்களென்பது தெரியவில்லை. அக்கினியோ ஒருவித சக்தி; வாயுவில் அநேகம் வஸ்துக்கள் கலந்திருக்கின்றன; பூமியிலிருக்கும் வஸ்துக்களைக் கணக்கிட முடியாது; நீரோ ஜலவாயுவும் பிராணவாயுவும் கலந்த ஒரு சேர்க்கைப்பொருள். இப்படியிருக்க, இவைகளை அவர்கள் மூலவஸ்துக்களென்று சொல்லக்காரணம், **மூலவஸ்து** என்னும் பதத்தை வேறு பொருளில் உபயோகப்படுத்தியிருக்கவேண்டுமென்பதே.

இங்கு இதுவரையில் கூறப்பட்டவை யெல்லாம் சுமார் 1500-வருஷங்களுக்கு முன்னிருந்த விஷயங்கள். அதாவது இரஸாயன சாஸ்திரத்திற்கு முற்பட்ட விஷயம்; இரஸாயன சாஸ்திரத்தின் காலம் 5-ம் நூற்றாண்டு முதல் 15-ம் நூற்றாண்டு வரையில் என்று சொல்லலாம்.

அக்காலத்திலுள்ள ஜனங்கள் இரும்பு, செம்பு முதலிய மட்டமாகிய உலோகங்களை வெள்ளி, பொன் முதலிய சிறந்த உலோகங்களாக முடியுமென்றும், அப்படி மாற்றுவதற்கு ஏதோ ஒரு வஸ்து விருந்ததென்றும் நம்பினார்கள். இவ்வஸ்துவைக் கண்டுபிடிக்க மிகவும் முயன்றார்கள். இம்முயற்சியில் அநேக புது விஷயங்கள் அறியவந்தன. இதைக் கண்டு பிடிக்கும் சாஸ்திரத்திற்கே **இரஸாயன சாஸ்திரம்** என்று சொல்

லப்படும். இதில் அவ்வளவு நம்பிக்கை நமக்கு இல்லை. ஆனால் வஸ்துக்களின் சிற்சில குணங்கள் அவர்களுக்கு இரஸாயன சாஸ்திர மார்க்கத்தை நம்பச் செய்திருக்கலாம். உலோக மண்ணிலிருந்து உலோகங்கள் கிடைப்பதும், மேகங்கள் மழையாவதும், ஒரு இரும்புக்கத்தியை **மயில்துத்தம்** கரையப்பட்ட தண்ணீரில் தோய்க்க கத்தி தங்கம்போல் சிவந்த நிறமடைவதும் அவர்களை மயங்கச் செய்திருக்க வேண்டும். இதற்காக அவர்கள் வஸ்துக்களைப் பரீட்சைசெய்ய ஆரம்பித்தார்கள். இப்படி வரவர வஸ்துக்களின் தத்துவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்கள் அறிந்தார்கள். இரஸாயனத்தில் மிகக் கீர்த்திபெற்றவர்கள் முதலில் **ஈஜிப்த்** தேசத்தவர்கள். ஆனால் அவர்கள் அதை இரகஸியமாக வைத்திருந்தார்கள். ஏழாம் நூற்றாண்டில்தான் அராபியர்களுக்குக் கொஞ்சம் தெரியவந்தது. பிறகு பத்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் ஐரோப்பாவில் எல்லாத் தேசத்தவர்களும் இரஸாயனத்தில் பழகி வந்தார்கள். பதினாறாம் நூற்றாண்டில் சிலர் இதில் பிரயோஜன மில்லையென்று நினைத்து அதுவரையில் தெரிந்த விஷயங்களைத் தேசத்தின் வியாதிகளுக்கு மருந்து செய்ய உபயோகப்படுத்தினார்கள். பிறகு இவ்வைத்திய சாஸ்திர மூலமாக வஸ்துக்களை ஆராய்ந்தார்கள்.

பதினேழாம் நூற்றாண்டு வரையில் அதிகமான விஷயங்கள் தெரியப்படவில்லை. வஸ்துக்களின் மாறுதலுக்கு உஷ்ணம் பிரதான காரணமாயிருக்கிறதென்பது அப்பொழுதுதான் கண்டுபிடிக்கப்பட்டது. அக்காலத்தில் மற்றொரு கொள்கை மிகப் பிரபலமாயிருந்தது. சாதாரணமாய் வஸ்துக்கள் எரியும்போது ஒருவித புகை போன்ற வஸ்து போகின்றதையும் ஒருவித சாம்பர்போன்ற வஸ்து தங்குகிறதையும் நாம் பார்த்திருக்கிறோம். வஸ்துக்கள் எரியும்போது பிராணவாயுவோடு சேர்கின்றனவென்று நாம் நம்புகிறோம். ஆனால் அவர்கள் வேறுவிதமாக நினைத்தார்கள். எரியக்கூடிய வஸ்துக்களெல்லாம் சேர்க்கைப் பொருள்களென்றும் அவைகள் எரியும்போது இரண்டு வஸ்துக்கள் வெளிவந்தனவென்றும், ஒவ்வொரு வஸ்துவினின்றும் அதே புகை வெளிவந்ததென்றும் அவர்கள் நினைத்தார்கள்.

இப்படி நினைப்பதற்குக் காரணம் அவர்களது பரீட்சையின் குற்றமே. வஸ்துக்களைப் பரிசோதிக்கும்போது தராசினை அவர்கள் உபயோகப்படுத்தவேயில்லை. இப்பொழுது நாம் கண்ட எரியும் வஸ்துக்களில், அவர்கள் முதலில் எடுத்துக்கொண்ட ஒரு வஸ்துவையும், அது எரிந்த பிறகு வந்த சாம்பரையும் நிறுத்திருப்பார்களாகில், சாம்பர் அதிக நிறையிருப்பதைப் பார்த்திருப்பார்கள். உடனே, “வஸ்துக்கள் எரியும்போது வேறு ஏதோ வஸ்துவோடு சேர்ந்திருக்கவேண்டும்.” என்று அறிந்திருப்பார்கள். அப்படி இல்லாமல், வஸ்துக்கள் எரிவதற்குக் காற்று வேண்டுமாவென்று அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் 17-ம் நூற்றாண்டின் கடைசியில் ஒருவர் கரியையும், மற்றொருவர் கந்தகத்தையும் பாத்திரங்களில் வைத்து மூடிச் சுடவைத்தார்கள். வெகுநேரம் சென்ற பிறகு அப்பாத்திரங்களைத் திறக்க, அதுவரையிலும் எரியாதிருந்த அவ்வஸ்துக்கள் வெளியிலிருந்த காற்றுப்படவே எரிய ஆரம்பித்தன. உடனே அவ்விரு வித்துவான்களும் ‘வஸ்துக்கள் எரியக் காற்று அல்லது **ஸஹஜவாயு**வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு வேறொருவர் பாதரஸத்தைத் திறந்த பாத்திரத்தில் நிரம்பநேரம் சுடவைத்தார். அது கொஞ்சம் கொஞ்சமாக நிறம் மாறி சிவந்த பஸ்பமாக மாறிவிட்டது. பிறகு அப்பஸ்பத்தை மூடின பாத்திரத்தில் சுடவைக்க, அதிலிருந்து ஒருவாயு வந்தது. அதில் வஸ்துக்கள், ஸஹஜவாயுவில் எரிவதைவிட மிகப் பிரகாசமாக எரிந்தது; அதை வெளிப்படுத்தினார். அதுதான் பிராணவாயு. பிறகு ஸஹஜவாயுவில் பிராணவாயுவும், **உப்புவாயுவு**மிருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.

பிறகு 18-ம் நூற்றாண்டில் அநேக வித்துவான்கள் பற்பல புதுவிஷயங்கள் கண்டுபிடித்தார்கள். நீராவியைச் சூடான இரும்பின்மேல் படச் செய்தால் ஜலவாயு வந்தது. இதனால் நீர் சேர்க்கைப்பொருளென்று தெரியவந்தது. 19-ம் நூற்றாண்டில் வஸ்துக்களைப்பற்றிய அரிய நடவடிக்கைகளும், அவைகள் கீழ்ப்படிந்து நடக்கும் சட்டங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட வஸ்துக்களின் தத்துவங்கள் 18-ம் நூற்றாண்டின் கடைசிமுதல் கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கப்பட்டு வருகிறது.



# முத்து

## PEARL

“**பார்த்திபர் மதிக்கும் முத்தம்**” என நமது பாதகண்டத்துப் பண்டைக்காலப் பனுவலோர்களால் பாராட்டிக் கூறப்படும் முத்தானது *நவரத்திநங்களுள் ஒன்றாயினும் பவளம் ஒழிந்த பிற மணிகளைப்போல் சுரங்கங்களினின்றும் வெட்டியெடுக்கப்படும் கல்லாகமாட்டாது. அது கடினமும் பளபளப்பும் வெண்ணிறமும் சாதாரணமாய் உருள் வடிவும் வாய்ந்ததோர் ரத்திநம். இது பெரும்பாலும் “கடற்படு திரவிய”மாகும்.

## 2. முத்துப் பிறக்கும் இடங்கள்

**பரஞ்சோதி முனிவர்**, “முத்து † ‘**தலசம்**’ என்றும், ¶ ‘**சலசம்**’ என்றும் இருவகையாகி, சங்கு, மேகம், மூங்கில், பாம்பின் தலை, பன்றிக்கொம்பு, வெண்ணெல் (வெள்ளை நெல்), இப்பி, மீன் தலை, கரும்பு, யானைக் கொம்பு, சிங்கத்தின் புஜம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து ஆகிய **பதின்மூன்று** இடங்களினின்றும் பிறக்கின்றதென்றும் இவற்றுள் கடைசியில் கூறியமூன்று இடங்களினின்றும் பிறக்கும் முத்துக்கள் கிடைப்பது அருமையென்றும் கூறுகிறார்.

“தக்கமுத் திரண்டு வேறு:
தலசமே சலச மென்ன,
இக்கதிர் முத்தம் தோன்றும்
இடம்பதின் மூன்று: சங்கம்,
மைக்கரு முகில், வேய் பாம்பின்
மத்தகம், பன்றிக் கோடு,
மிக்கவெண் சாலி, இப்பி,
மீன்தலை, வேழக் கன்னல்,

* **நவரத்திநங்கள்**:—வச்சிரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், முத்து. † **தலசம்** = ஸ்தலஜம் = நிலத்திற் பிறப்பது. ¶ **சலசம்** = நீரிற் பிறப்பது.



கரிமருப், ‡ பைவாய் மான்கை,
கற்புடை மடவார் கண்டம்,
இருசிறைக் கொக்கின் கண்டம்
என, கடை கிடந்த மூன்றும்
அரியன........” (திருவிளையாடற்புராணம்).

இப்பரஞ்சோதி முனிவருக்கு முன்னிருந்த “திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணநூலுடையாராகிய **செல்லிநகர்ப்பெரும்பற்றப் புலியூர் நம்பியாரும்** முத்தின் பிறப்பிடம் 13 என * “தண்தரளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பில்......” என்னும் செய்யுள் மூலமாக அறிவிக்கின்றார். ஆனால் இப்பாட்டில் “**ஐவாய் மான்கை**” என்பதற்குப் பதிலாகக் “**காகவாகனர் (சனீசுவரன்) திண்தோள்**” எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை சொல்லியவற்றால் முத்தின் பிறப்பிடம் **பதினான்கு** என அறியலாகும்.

இவற்றுள் மேகத்தின் முத்து இளஞ்சூரியன் நிறமும், மூங்கில் முத்து மழைத்துளி நிறமும், பாம்பின்முத்து நீல நிறமும், பன்றிக்கொம்பின் முத்து இரத்த நிறமும், நெல்லின் முத்து பச்சை நிறமும், மீனின் முத்து பாதிரிப்பூ நிறமும், சிப்பி முத்து பளபளப்புடன் கூடிய வெண்மைநிறமும் கொண்டதாம். நிற்க.

முற்கூறிய பதினான்கு இடங்களைத் தவிர மற்றும் கமுகு, வாழை, நத்தை, தாமரை, பசுவின் பல், சந்திரன், உடும்பு, முதலை என்னும் எட்டு இடங்களினின்றும் முத்து உண்டாகும் என்பதை

“தந்தி, வராக மருப், பிப்பி,
1 **பூகம்**, தழை 2 **கதலி**,
3 **நந்து**, சலஞ்சலம், மீன்றலை,
கொக்கு, 4 **நளினம்**, மின்னார்

‡ ஐவாய் மான் = சிங்கம் அல்லது யாளி.

* மாணிக்கம் விற்ற திருவிளையாடல்—16வது செய்யுள்.

1 பூகம் = கமுகு = பாக்குமரம். 2 கதலி = வாழை, 3 நந்து = நத்தை. 4 நளினம் = தாமரை,

கந்தரம், சாலி, கழை, கன்னல்,
5 ஆவின்பல், கட்செவி, கார்,
6 இந்து, 7 உடும்பு, 8 கரா, முத்தம்,
ஈனும் இருபதுமே." (1)

பனிமதி, கதன, மேகம்,
பைந்தொடி கழுத், தா வின்பல்
தனியானை, எனக்கொம்பு,
தடம்கரா, உடும்பு, கொக்கு
வினை அரா,ச் சலம் சலம்,நந்,
திப்பி, மீன் மூங்கில் பூகம்
நினைசெந்நெல், கரும்பு, கஞ்சம்,
நிகழ் இரு பதின்மூத் தாகும் (2)

என்னும் தனிப்பாடலால் இதனுண்மை அறிக.

ஆகவே, இருபத்திரண்டு இடங்களிலும் முத்து உற்பத்தியாகும் எனத் தமிழ் நூலாசிரியர்கள் கூறிய விஷயம் இப்பொழுது அறிந்தோம். ஆயினும் தற்காலம் வியவசாய இலாகா பரிசோதகராகிய ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் **தேன்னையிலும்** முத்து இருக்கும் விஷயம் தெரிவிக்கிறார். ஆகவே முத்தின் பிறப்பிடம் இதுகாறும் கூறியவற்றால் இருபத்து மூன்றாகும்.

### 3. இப்பியில் முத்து உண்டாகும் விதம்:

இப்பியினின்று முத்து எடுக்கப்படுவதே பண்டிதர் பாமரர் பலரும் கேள்வி மூலமாகவும் நேரிலும் அறிந்த விஷயமாதலின் இப்பி முத்தைப் பற்றியே இப்பொழுது சிறிது கூறுவாம்.

**"இப்பி"** என்பது **முத்துச்சிப்பி** என்று சொல்லப்படும் ஒருவகை * ஜலசரம். இவ்விப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான தோல் இருக்கும். இத்தோலைச் சுற்றி இரு † மருங்கிலும் கடினமான ஓடுகள் கவிந்திருக்கும். சிப்பிகளின் மிருதுவான மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டிற்கும் இடையே ஒருவகைப் பொடி மணல் புகுந்து அவற்றை உபத்திரவப்படுத்தும். படுத்தவே அவை எரிச்சல் பொறுது அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணாம்புத் தன்மையுள்ள ஓர்வகைநீர் வெளிப்பட்டு முற்கூறிய நுண்மணலைக் கவிந்துகொள்ள, அதுவே முத்தாகும் என்பர். இம்மர்மத்தைச் சீனர்களே முதல் முதல் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாக் காலங்களிற்கூட அவர்கள் இப்பிகளைப் பிடித்து மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டிக்கும் இடையே புகுத்தி அவற்றிற்கு எரிச்சல் உண்டாக்கி முத்தினைச் செய்து பெருத்த லாபம் அடைந்து வருகிறார்களென்றும் தெரியவருகிறது.

சிப்பிகளின் சரீரத்தினின்றும், அவற்றின் முட்டைகள் வெளிப்படாக் காலத்து அம்முட்டைகளும் மேலே சொன்ன பொசிநீரால் மூடப்பட்டு முத்தாக மாறுவதுண்டு.

ஆனால், **பர்த்ருஹரி** போன்ற வடநூற் புலவர்கள், மழைத்துளிபெற எதிர்பார்த்த வண்ணமாகச் * சிப்பியானது நீர்மட்டத்திற்கு மேலே வந்து தன் அகட்டைத் திறந்துகொண்டிருக்குமென்றும், மழைத்துளி ஒன்று அதனுள் விழுந்தவுடன் அது ஓட்டை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிடுமென்றும், அவ்வானத்துளியே பிறகு வெண்முத்தாகிறதென்றும் கூறுகிறார்கள். சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்குங்காலைச் சிப்பி அகட்டில் விழும் விசும்பிற்றுளியே மிக விலை யேறப்பெற்ற முத்தாம்.

### 4. இப்பிகள் இருக்கும் இடங்கள்:

வெண்முத்து ஈனும் இப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார்குடாவிலும் மறிச்சுக்கட்டியை அடுத்த கடலிலும் இந்தியாவில் தூற்றுக்குடிக்கு அருகிலும் பாம்பன் கடலோரத்திலும் பாரஸீக்குடாக்கடலிலும், போர்னியூவுக்கடுத்த ஸூலுதீவுகளிலும்,—கருமுத்து ஈன்பன காலி போர்னியாவிலும்,—மஞ்சள் முத்து ஈன்பன பனமாக் கால்வாயிலும்,—கபிலநிற முத்து ஈன்பன மெக்ஸிகோவிலும் உள்ளன.

6 இந்து = சந்திரன். 8 கரா = முதலை.

* ஜலசரம் = நீர்வாழும் பிராணி.

† மருங்கு = பக்கம்.

* சிப்பிகள் பாறைகளில் எப்பொழுதும் கெட்டியாய்த் தொத்திக்கொண்டு இருக்குமேயன்றி நீர் மட்டத்திற்குமேல் வாராதென்று தற்கால சாஸ்திர நிபுணர் கூறுகின்றனர். ஆயினும் பாரஸீகளும் பூர்வீக மேற்றிசையாரும் பர்த்ருஹரியார் சொல்வது போலவே எண்ணியிருந்தவர்களே.



### 5. முத்துக் குளித்தல்

முத்துப் பெறவேண்டி கடலின் கீழ் இருக்கும் முத்துச் சிப்பிகளை மூழ்கி எடுத்து மேலே கொண்டு வருதற்கு **"முத்துக்குளிப்பு"** என்று பெயர். கடலில் அதிக ஆழத்தில் உள்ள பாறைகளில் கூட்டம் கூட்டமாகத் தொத்திக்கொண்டிருக்கும் சிப்பிகளைப் பெற்று முத்தெடுக்கும் விதம் இலங்கை முத்துச் சலாப விஷயங்களைக் கொண்டு ஒருவாறு அறியலாகும். அவ்விஷயம் வருமாறு:—

இலங்கையில் முத்துச் சலாபம் பிப்ரவரிமீ தொடங்கி ஏப்பிரல்மாதாரம்பத்திற்குள் முடிவுறும். முத்துக் குளிப்போர் பெரும்பாலும் இந்தியர்களும் சிங்களவர்களுமே. இவர்கள் இளம்பிராய முதற்கொண்டே நெடுநேரம் நீர்க்குள் நிற்கவும் நீந்தவும் நன்றாய்ப் பழகியவர்கள். ஆயினும் இவர்கள் பிழைப்பு என்றும் அபாயகரமானதே. ஏனெனில், கொம்பன் சுறுவினாலும் ஏனை நீர்வாழும் பிராணிகளாலும், கடற்பூண்டுகள் சிக்கிக்கொள்வதனாலும் இவர்களுக்கு மரணம் நேர்வதுண்டு. ஆதலின் இன்னோர், தாம் மூழ்குவதற்குமுன், சுறுவாயைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களெனத்தாம் கருதிய மலையாளத்து மந்திரவாதிகளைவரவழைத்துஅவர்களிடம் ஆரூடம் கேட்ட பின்பே முழுகத் தொடங்குவார்கள். மந்திரவாதிகளின் வார்த்தையில் குளிகாரர்களுக்குத் தேவதாவிசுவாசம். இம்மாந்திரீகர்கள் அந்தந்த ஜாதியார்க்குத் தக்கபடி சடங்காசாரங்கள் ஏற்படுத்தித் தாமும் சுறுக்களை அப்புறப்படுத்த ஓர் வகை விரதம் அனுஷ்டிப்பார்கள். விரதத்தை மாந்திரீகனும் அனுஷ்டித்த விவரம் அறிந்தாலொழிய அவர்கள் முழுகுவதற்கு முன்வரார்களாம். முத்தெடுக்கச் சென்ற படகுகள் திரும்பும்வரை மாந்திரீகன் மந்திரம் ஜபித்துக்கொண்டு உபவாசத்துடன் இருப்பான். சில வேளைகளில் மந்திரவாதியும் படகேறிச் செல்வதுண்டு. இவன் மட்டும் தம்முடன் வருவானாயின் தம் காரியம் இலாபகரமாயும் இடையூறின்றியும் இனிது நிறைவேறுமென்பது குளிகாரரின் கொள்கை. மாந்திரீகர் குளிகாரர்களிடத்துமட்டுமேயன்றி வியாபாரிகளிடத்திருந்தும் மிக லாபம் பெறுகின்றனர். நிற்க.

"சாஸ்திராயச ஸுகாயச" என்றபடி குளிகாரர்களுக்கு மந்திரவாதிகள் அனுஷ்டிக்குமாறு கூறுவனயாவும் ஒருவிதமாய்ப் பார்க்கில் நன்மைக்கேதுவான காரியங்களாகவே இருக்கின்றன. எங்ஙனமெனில், குளிகாரன், முழுகுமுன்னே உபவாசத்துடனிருந்து, முழுகும்போது மந்தரித்துத் தந்த விளக்கெண்ணெய்யைப் பூசிக்கொண்டு கடலில் இறங்கவேண்டுமென விதிக்கப்படுகிறான். வயிறு ஆகாரத்தால் நிரம்பியிருப்பின், வாந்தி முதலிய உபத்திரவம் உண்டாவதுடன் சுலபமாகக் குளித்தெழும்பவும் கூடாமற்போகுமன்றோ? அன்றியும் பசபசவென்று உவர்நீர்ப் பட்டமாத்திரத்தில் தேகம் அரிப்பெடாதிருத்தற்கு விளக்கெண்ணெய்ப்பூச்சும் வேண்டியதுதானே? நிற்க.

குளிகாரர்கள் கரைக்கு எட்டுமைல் தூரம்வரை படகுகளில் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர இருபதுபேர்கள் இருப்பார்கள். இவ்விருபது பேர்களில் பத்துமனிதர்கள் படகு ஓட்டவும், முழுகுவோரைக்குறித்த காலத்தில் தூக்கியெடுக்கவும் நியமிக்கப்பட்டவர்கள். எஞ்சியபத்துப்பேர்களும் குளிகாரர்களே. இவர்கள் ஐவர் ஐவராக மாறி மாறி வேலைசெய்வர். முழுகுவோர் முன்கூறியபடி எண்ணெய்ப் பூச்சு உடையவராயும் கோவணம் மட்டும் தரித்தவராயும் இறங்குவார்கள். இவர்கள்

தாம் எளிதில் இறங்கிச் செல்வதற்கு உதவி சுமார் 50 ராத்தலுள்ள பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு படகிலும் இவ்வாறு ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இவை அடிபரந்தும் நுனி குவிந்தும் கயிறுகள் கோர்க்கத் துவாரம் கொண்டும் இருக்கும். பிறைச்சந்திரன் போற் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகிக்கப்படுவதுண்டு. முழுகும்பொழுது குளிகாரன் கல்லிற் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலினுற் பிடித்துக்கொண்டு, இடதுகால் விரலால்தான் எடுக்கப்புகும் இப்பிகளைப் போட்டுக் கொள்ள ஒருவகை வலையை இறுகப் பிடித்துக் கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும் கற்கயிற்றையும் தனது வலதுகையாற் பற்றிக்கொண்டும் காதில் மெழுகு திணித்துக் கொண்டும் நாசித்துவாரங்களை இடது கைவிரல்களால் இறுக அடைத்துக் கொண்டும் தண்ணீர்க்குள் சில சமயம் 100-அடி ஆழம் வரைகூட மூழ்குவான். மூழ்கி அடியிற் சென்றதும் காலில் மாட்டிய வலையை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு விரைவாகவும் சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக்கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப் போடுவான். அவன் தடவைக்கு நூறு சிப்பிகளுக்குக் குறையாமல் அள்ளுவானும். நீரில் அவன் அமிழ்ந்துநிற்பதெல்லாம் 120 விநாடி (Seconds) இருக்கும். (மூன்று அல்லது நான்கு நிமிஷத்திற்கு அதிகம் எவனும் நீரில் அழுந்தி இருக்க முடியாது.) மூச்சுத்திணரும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின்மேல் மீண்டும்ஏறிக்கொள்ளாமல் கீழே நின்றபடியே வலது கைக்கயிறுகளை மட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்பைப் படகோட்டிகள் அறிந்து படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய்க் கல்லில் கட்டப்படாதிருக்கும் கயிற்றை இழுத்து அவனை மேலே தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். பிறகு அவன் விட்டுவந்த கல்லை அதன் கயிற்றால் மேலே இழுத்துக் கொள்வார்கள்.

முத்துக் குளிக்கச் செல்வோர் சூரியன் உதிக்குமுன் முத்திருக்கும் பாறை போய்ச் சேர்ந்து கடல்நீர் வெதுவெதுப்புடன் இருக்கும் நேரமாகிய சுமார் 7-மணிக்கு மூழ்கத் தொடங்கிச் சுமார் 12-மணிக்குக் கரைசேரப் படகேறுவார்கள். 12-மணிக்குப் பிறகு அவர்கள் குளிப்பதில்லை. நாள் ஒன்றுக்கு அவர்கள் 40 அல்லது 50-தடவை மூழ்குவார்கள். திரும்புகையில், படகு கரையிலுள்ளோர் கண்ணுக்குத் தென்படும் தூரத்திலிருந்து குண்டு போடப்படும். இது படகு சாவதானமாகத் திரும்பி வந்த சுப சமாசாரத்தை அதன் சொந்தக்காரர் அறிவதற்கான அடையாளமாம். படகுகள் கரைசேர்ந்ததும் அதில் உள்ளன யாவும் சூரியன் அஸ்தமிக்குமுன் கீழே இறக்கப்படும். நிற்க.

மூழ்கும்பொழுது விலை உயர்ந்த முத்துக்கள் அகப்பட்டால் குளிகாரர்கள் அவற்றை விழுங்கிப் பிறகு வெளிப்படுத்தி விற்று மிக்க லாபம் பெறக்கூடுமாதலின், இவர்களைக் கூலிக்கு அமர்த்துவோர், இவர்களுக்குப் பேதிமருந்து கொடுத்து நன்றாய்ப் பரிசோதித்து முத்துக்கள் இருப்பின் பிடுங்கிக்கொண்டு விடுவார்கள். பிறகு குளிகாரர்கள் தம் கூலியாகச் சிப்பிகளில் நான்கில்ஒருபங்கேனும் தக்க பொருளேனும்பெறுவர். பின்னர், எஞ்சிய சிப்பிகள் ஆயிரம் ஆயிரமாக ஏலத்தில், மிகுந்த தொகைக்குக் கேட்போர்க்கு விற்கப்படும்.

சிப்பிகள் சொந்தக்காரர்களால் இரண்டு அடி ஆழமுள்ள குழிகளிலாயினும், வேலி சூழ்ந்த சதுப்பு நிலங்களிலாயினும் மணல் சிறிதும் படாதபடி பாய்களின்மேல் கொட்டி வைக்கப்படும். அங்கிருந்தபடியே அவை நன்றாய் அழுகி உலர்ந்து சாகும். உலர்ந்த பின்னரே அவற்றினின்றும் முத்துக்களைச் சேதமின்றி எடுக்கக் கூடும். அவை உயிருடன் இருக்கும்பொழுதேனும், அழுகி உலருமுன்பேனும் திறக்கப்பட்டால் முத்துக்குச் சேதம் மிகுதியும் உண்டாகும். ஏனெனில் உயிருடன் இருக்குங்கால் சிப்பிகளை எளிதில் உடைக்க முடியாது. சுத்தி கொண்டு உடைத்தாலோ முத்துத் தெறித்துப்போம். நிற்க.

சிப்பிகள் நன்றாக அழுகுங்கால் எழும் துர்நாற்றம் சகிக்கத் தரமன்று. ஆயினும் அவற்றினின்றும் எதிர்பார்க்கும் இலாபமே இந்நாற்றத்தை ஒரு சிறிதும் பாராட்டாமல் சந்தோஷமாகவே சகிக்கச்செய்து கருமத்தில் கண்ணுயிருக்கச்செய்து விடுகிறது. நீரில் சிப்பிகளைவேகவைத்தும் முத்துப் பெறுவதுண்டு. இதற்குக் காரணம் யாதெனில், முத்துக்கள் சில சமயங்களில் சிப்பிகளின் ஓடுகளில் இராமல் அவற்றின் சரீரத்திலேயே தங்கி நின்றுவிடுவதே. நிற்க.

சிலோன் வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும் மாலையாகக் கோர்த்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் முத்துத் தூளால் ஆகிய பொடியைக்கொண்டு முத்துக்களைத் துலக்கி மெருகிடுவார்கள்.

இதுகாறும் கீழ்த்திசையோராகிய இந்தியரும் சிங்களவரும் முத்தெடுக்கும் விதத்தைக் கூறினோம். இனி மேலைத்திசையோராகிய வெள்ளையர்கள் அது பெறும் விதத்தை அறிவிப்போம்:--

இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லப் புகுமுன் இதனை வாசிப்போர் அறியவேண்டிய முதலாவது சங்கதி ஒன்று உளது. அஃதியாதெனில்,— உள்ளே சொட்டு நீர் கூட இல்லாமல் நன்றாய் உலர்ந்திருக்கும் அரிக்கும் சட்டி ஒன்றை எடுத்து ஓர் தொட்டி ஜலத்தில் தலை கீழாக வைத்து அமிழ்த்தினால், ஜலம் அச்சட்டிக்குள் சிறிதே தூரம் சென்று மேற்கிளப்புமன்றிமுழுவதும்உட்புகுந்து அதனை நிரப்புவதில்லை. அச்சட்டியை அசைக்காமல் அஃதிருந்தபடியே மேலே தூக்கி ஜலத்தினின்றும் எடுத்துப்பார்த்தால் இவ்வுண்மை இனிது விளங்கும். அச்சட்டியினுட்புறத்தில் வாயு நிறைந்திருத்தலே அதனுள் ஜலம் ஏறுததற்குக் காரணமாகும் என்பதே.

இம்மர்மத்தை அனுஸரித்து ஹால்லி என்ற ஓர் ஆங்கிலேயன் குளிமணி ஒன்று முதல் முதல் இயற்றினான். அஃதொரு பிரமாண்ட கோவில்மணி போன்றது, மரத்தினாலாகியது. அம்மணியின் உட்புறத்தில் முழுகுவோர்கள் உட்காரப் பீடம் கொண்டது. அப்பீடங்களில் குளிகாரர்கள் பாதாதிகேச பரியந்தம் ஜலத்தை உள்ளே புகவிடாத ஓர்வகைக் கவசம் பூண்டு உட்கார்ந்து கொள்வார்கள். பின்னர், அம்மணியின் வாய் கீழ் நோக்கும்படி வைத்து அதனை ஜலத்துக்குள் மெதுவாகப் படகில் உள்ளோர் இறக்குவர். மணிக்குள் வாயு நிரம்பி இருக்கும் காரணத்தால் நீர் உள்ளே சென்று நிரம்பாது. மணிக்குள் இருப்பவர் விடும் மூச்சு சீக்கிரத்தில் விஷக்காற்றாக மாறுதிருக்கவும் சுவாசம் தாராளமாய் விடவும் போதுமான சுத்த வாயு பீப்பாய்களின் மூலமாய் முன்னுக்கு முன்னாலேயே இறக்கிவிடப்பட்டிருக்கும். அப்பீப்பாய்களிலிருந்து அவற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும் தோற்குழாய்களின் மூலமாய் மணிக்குள் இருப்போர்க்குச் சுத்தவாயு கிடைத்துக் கொண்டிருக்கும். இம்மணியிலும் சிற்சில குறைகள் இருந்தன. ஆனால் காலம் செல்லச் செல்ல ஸ்மீட்டின் முதலிய சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சி வண்மைக்கும் மதிநுட்பத்திற்கும் தக்கவாறு, குளிமணிகள், சதுரவடிவாயும், முழுகுதற்கான வசதிகள் யாவும் குறைவற வாய்ந்தவைகளாயும் இரும்பினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் மேலைத்திசையோர்கள், கோவணத்துடன் மூழ்கிக் கஷ்ட நிஷ்டூரங்களுக்குள்ளாகக் கூடிய நிலைமையிலுள்ள இந்திய குளிகாரர்கள் போலச் சிரமப்படாமல் மிகுந்த ஸௌகரியத்துடன் உடைதரித்தேமுழுகக்கூடும். ஆயினும் இந்திய சிங்களவர்கள், சாமர்த்தியத்திலும் சாதுரியத்திலும் மேற்றிசை யோரிலும் மிகப் பேர்போனவர்களென்றே சொல்லவேண்டும். ஏனெனில், இன்னோர் தம் கால் விரல்களைக் கொண்டே, வெள்ளையர்கள் தம் கை விரல்களால் பிடுங்கி எடுக்கும் பொருள்களை அவர்களினும் அதிதீவிரமாயும் எளிதாயும் எடுப்பார்கள்! நிற்க. பாலினீஷியாவில் உள்ள குளிகாரர்கள் கற்களின் உதவியின்றியே கடலில் முழுகுவார்கள். இவர்களுள் ஆடவர்களினும் பெண்டிரே முழுகுவதில் சாமார்த்திய சாலிகளாம்.

ம. கோபாலகிருஷ்ண ஐயர்.

# ஸ்தல சரித்திரக் கதைகள்

## STORIES FROM LOCAL HISTORY

### தென்னிந்தியாவும் அதன் பூர்வீக ராச்சியங்களும்

**நா**ம் வசிக்கும் தேசம் இந்தியா. இது ஒரு பெரிய தேசம். இதற்குப் பரதகண்டம் என்று மற்றொரு பெயருமுண்டு. நாம் இந்தியாவின் தென்பாகத்தில் வசிக்கிறோம். ஆகையால் நாம் வசிக்கும் பாகத்திற்குத் தென்னிந்தியா என்று பெயர்.

தென்னிந்தியாவில் மேற்கிலும், கிழக்கிலும் மலைகள் இருக்கின்றன. மேற்கேயுள்ள மலைக்கு மேற்குத்தொடர்ச்சி மலை என்று பெயர். இந்த மலை மிகவும் உயரமானது. சங்கிலிகோத்தாற் போல் ஒரே தொடர்ச்சியாகவுமிருக்கிறது. கிழக்கேயுள்ள மலை கிழக்குத்தொடர்ச்சிமலை. இது மேற்குத் தொடர்ச்சிமலையைப்போல் உயரமாகவாவது அல்லது தொடர்ச்சியாகவாவது இல்லை. ஆகையால்தான் தென்னிந்தியாவின் மேல் பக்கம் மேடு, கிழ்ப்பக்கம் பள்ளம். ஆறுகள்மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகின்றன. அவைகளில் முக்கியமானவை கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலியவைகளே.

முதலில் தென்னிந்தியாவில் நீலகிரிமலைகளில் வசிக்கிற தோடர்களைப்போன்ற காட்டு ஜாதியார் வசித்தார்கள். பிறகு திராவிடர் என்றஜாதியார்வந்து குடியேறினார்கள். ஆதிகாலத்திலேயே இவர்கள் நாகரீகமடைந்தவர்கள். அந்தக்காலத்தில் தென்னிந்தியாவில் மூன்று திராவிட இராச்சியங்களிருந்தன. அவைகள் சேர, சோழ, பாண்டியராச்சியங்களே. இம்மூன்று அரசர்களுக்கும் மூவேந்தர் என்று பெயர். பாண்டிய ராச்சியத்தின் ராஜதானி மதுரை. பாண்டிய அரசர்கள் தமிழ்ப் பாஷையைப் பரிபாலித்து வந்தார்கள். அவர்கள் கொடி மீன்கொடி. எல்லாவற்றிலும் சிறந்தது சோழநாடு. உறையூர், காவிரிப்பட்டினம், தஞ்சாவூர், கும்பகோணம், பற்பல காலங்

முன்பக்கம் பின்பக்கம்



ஒரு பாண்டிய நாணயம்

களில் சோழராச்சியத்திற்கு ராஜதானிகளாக இருந்தன.

பின்பக்கம் முன்பக்கம்



ஒரு சோழ நாணயம்

### 2. சோழநாட்டின் சிறப்பு

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே— கம்பர்.
......சோழவளநாடு சோறுடைத்து......... ஔவை.

தென்னிந்தியாவிலுள்ள பூர்வீக ராச்சியங்களில் சோழநாடு சிறந்ததென்று முன்னமே சொன்னோம். அச்சிறப்பிற்குக்காரணம் அதன் செழிப்பே. சோழதேசத்தில் பஞ்சம் இன்னதென்பதே தெரியாது. கொஞ்சங்கூட ஜனங்களுக்கு ஜல கஷ்டமில்லை. இவ்வளவிற்கும் காரணம் சோழ தேசத்தில் பாயப்பெற்ற காவிரிநதியே. ஆதி காலத்தில் காவிரி அடிக்கடி உடைப் பெடுத்துத் தேசமுழுவதும் ஏக வெள்ளமாக விருக்கும். ஆகையால்தான் சோழநாட்டுக்குப் 'புனல்நாடு' என்று பெயர். 'புனல்' என்றால் வெள்ளம் என்று அருத்தம். தஞ்சாவூர், திரிசிராப்பள்ளி ஜில்லாக்களின் பெரும்பாகம் சோழராச்சியமாக விருந்தது. வடக்கில் சோழராச்சியம் காஞ்சிபுரம் வரையில் எட்டியிருந்தது.

சோழராஜாக்கள் வீரத்தனம் பொருந்தியவர்கள். இவர்களோடு சண்டைபோட்ட சேரராஜா



ஒருவன் தன் முதுகில் காயப்பட்டபடியால், கிடந்து இறந்தான். சோழராஜாக்கள் காலத்தில்
அவமானம் பொறுக்கமாட்டாமல் பட்டினியாகக் அநேக அழகான ஆலயங்களும் கோவில்



கரிக்கால சோழர் கட்டின தஞ்சைச் சிவாலயம்

களும் கட்டப்பட்டன. பெரிய அணைக்கட்டுகளும் அநேக ஆறுகளும் கால்வாய்களும் வெட்டப்
இவர்கள் காலத்தில் தான் கட்டப்பட்டது. பட்டன காவிரி நதியானது கப்பல்கள் செல்



கரிக்கால சோழர் கட்டின பெரிய அணைக்கட்டு.

லும்படி அதிக ஆழமும் அகலமுமுடையதாயிருந்தது. வியாபாரம் அதிகமாக நடந்தது.

### 3. காவிரிக்குக் கரைகட்டின கரிக்கால சோழர்

முன்காலத்தில்காவிரிநதியானது உடைப்பெடு

த்துத் தேசத்தைப் பாழாக்குவதுவழக்கமென்று முன் கதையில் சொன்னோம். ஏனென்றால் இந்தக் காலத்திலிருக்கிறது போல அந்தக் காலத்தில் காவிரியின் இருபக்கங்களிலும் கரைகளே கிடையாது. வெள்ளத்தைத் தடுப்பதற்காக முதல் முதல் காவிரிக்குக் கரைகட்டினவர் கரிக்கால சோழர்.

இவர் வெகுகாலத்திற்கு முன் அரசராக விளங்கினார். இவரை ஆதிசோழர் என்று சொல்லலாம். இவருடைய கால் கரியைப் போல் கறுப்பாக விருந்தபடியால் இவருக்கு 'கரிக்கால சோழர்' என்ற பெயருண்டாயிற்று. இவர் பிறப்பதற்கு முன்னமே இவருடைய தகப்பன் இறந்துபோய் விட்டார். இவர் குழந்தையாக இருக்கையில் பட்டத்திற்குவாராதபடி இவரைக் கொல்வதற்காக இவருடைய சத்துருக்கள் இவர் குடியிருந்த வீட்டில் கொள்ளிவைத்தார்கள். இவர் உயிர் தப்பி ஓடுகையில் ஒருகால் நெருப்பில் பட்டுக்கருகிப் போயிற்று. ஆகையால்தான் இவருக்கு மேலே சொன்ன பெயருண்டாயிற்று.

பாலிய முதல் இவர் ஒரு சிறந்த வீரராகவே விளங்கினார். இவர்முதலில் போட்ட சண்டையில் ஒன்று சேர்ந்து வந்த பாண்டிய சேர சேனைகளை முறியடித்தார். இந்தச்சமயத்தில்தான் சேரராஜனுக்கு முதுகில் காயம்பட்டது. இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் சேரன் பட்டினியாகக் கிடந்து இறந்தான்.

இவர் அனேக கால்வாய்கள் வெட்டுவித்தார். காவிரிப்பூம்பட்டினத்தைச் சோழராச்சியத்திற்கு ராஜதானியாக்கினவரும் இவரே.

> " நளியிரு முந்நீர் நாவா யோட்டி
> வளிதொழி லாண்ட வுரவோன் மருக
> களியியல் யானைக் கரிகால் வளவ
> சென்றமர்க் கடந்தநின் ஞற்ற றோன்ற
> வென்றோய் நின்னினு நல்ல னன்றே
> கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
> மிகப்புக ழுலக மெய்திப்
> புறப் புண்ணாணி வடக்கிருந் தோனே."

சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடியது : புறம் 66.

G. இரத்தினம் பிள்ளை பி. ஏ., எல். டி.

# VI. பூமி—அதன் உருவம்

## THE EARTH—ITS SHAPE

நாம் இவ்வுலகில் காரியகாரணங்களின் சம்பந்தத்தையும், வஸ்துக்களின் ஸ்வபாவத்தையும் மூவ்விதப் பிரமாணங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளுகிறோம். அவைகளில், முதலாவது தானே நேரில் கண்ணால் கண்டறிவது. இரண்டாவது, அனுபவத்திலும் ஞானத்திலும் பெரியோர்கள் சொல்லக் கேட்பதாலும், புஸ்தகங்களைப் படிப்பதாலும் ஏற்படுவது. மூன்றாவது முன்னனுபவ பலத்தினால் புத்தி யுக்தியைக்கொண்டு யூகிப்பது. இம்மூன்று விதமாயும் உண்டாகும் வஸ்து ஞானங்களில், பிரத்தியக்ஷமாய்க் கண்ணால் காண்பதாலுண்டாகும் நம்பிக்கை மற்றிரு பிரமாண மூலமாயுண்டாவதில்லை. நாம் பூமி அசைவற்று நிற்பதாயும், சூரியன் தினமொருதடவை அதைச் சுற்றி யோடுவதாயும் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். இப்பிரத்தியக்ஷ தோற்றம் சரியானதல்ல, வாஸ்தவம் வேறு, என்று யுக்தி பூர்வகமாய்ச் சென்ற மாதத்து "போதினி" யில் ஏற்படுத்தினோம். இவ்வித நிச்சயத்துக்கு அநுகுணமாக இன்னமநேக ஸாதனங்களுண்டு. அவைகளில் சிலவற்றை இங்கு விசாரிப்போம். நாம்நதிகளின்மேல் பெரும் கற்பாலங்களைப் பார்த்திருக்கிறோமல்லவா.




அவைகள் ரோட்டி மட்டத்தோடு சமமாயிராமல், இப்படத்தில் காட்டியபடி, நடுவிலுயர்ந்து,



ஆமையின் முதுகைப்போலிருக்கின்றன. இவ்விதப்பாலங்களிலொன்றில், ஒரு கோடியில் நாம் நின்று, அதன்வழியாய்க் கடந்து செல்லும் மனிதன், வண்டி, முதலானவைகளைக் கவனித்தால், அவைகள் நம்மிடமிருந்து தூரவிலகிச் செல்லச் செல்ல, முதலில் அடிபக்கமும், இன்னம் சற்று தூரத்துக்கப்பால் மத்திய பாகமும், கடையில் மேல்பாகமும் முறையே கொஞ்சங் கொஞ்சமாய் மறைந்து போய்விடுவதாய்க் காண்கிறோம்.

இம்மாதிரியாகவே, நாம் சமுத்திரக்கரையில் நின்றுகொண்டு, கரையைவிட்டு நடு சமுத்திரத்தை நோக்கிச் செல்லும் கப்பலொன்றைக் கவனித்துப் பார்த்தால், புறப்படும்போது அக்கப்பலின் அடிமுதல் நுனிவரையில் எல்லாப் பாகங்களையும் பார்க்கிறோம்.




ஆனால் அக்கப்பல் நம்மை விட்டுத் தூரத்தில் செல்லச்செல்ல, அடிபாகத்தில் ஆரம்பித்துக் கொடிமரத்தின் நுனிவரையில், கொஞ்சங்கொஞ்சமாய்மறைந்து, கடைசியில் முழுக்கப்பலும் நமது பார்வையிலிருந்து நீங்கி, சமுத்திரத்திலேயே அமிழ்ந்து மூழ்கிப்போய் விட்டதுபோலத் தோன்றும்.

இதனால் (மேலே பாலத்தின் வழியாய்க் கடந்து செல்லும் வஸ்துக்களின் தோற்றத்தால் நாமடைந்த அநுபவத்தை ஒட்டி) சமுத்திரத்தின் மேல்தலம் தட்டையாயிராமல், பாலத்தின் தலத்தைப்போல் வளைந்திருப்பதாக அனுமானிக்



கலாம். ஏனெனில், ஜல தலம் தட்டையா யிருக்கும்பக்ஷத்தில் மேல்சொன்ன கப்பல் எவ்வளவு தூரம் போனபோதிலும், சமமான சாலை மார்க்கத்தில் செல்லும் மனிதர்களும் வண்டிகளும் காணப்படுவதுபோல, அடிமுதல் நுனிவரையிலும்கண்ணில்பட்டுக்கொண்டேயிருக்கவேண்டும்.

குளம், ஏரி முதலான அதிக விஸ்தீரணமில்லாத ஜலாசயங்களின் மேல்தலம் தட்டையாய்ப் பார்வைக்குப் புலப்பட்டாலும், அது வாஸ்தவத்தில் நடுவிலோங்கி, ஓரங்களில் தாழ்ந்திருப்பதாக அதிநுட்பமான அளவைக்கருவிகளைக் கொண்டு ஸர்வே உத்தியோகஸ்தர்கள் கண்டிருக்கிறார்கள்.

ஜலமட்டமெப்படியோ அப்படித்தான் தரைமட்டமும். அநேக காரணங்களால் தரை சிறிது தூரம் வரையில் சமமாய் ஏற்பட்டிருந்தாலும், வெகுதூரம் வரையில் நாம் பார்க்க முடியுமானால் நிலதலமும் நீர்தலம் போலவே குவிந்து, நடுவில் உப்பியிருப்பதாகத் தோன்று மென்பதற்குச் சந்தேகமில்லை.

இது பின் வருவதால் நன்குவிளங்கும். காலணா, ரூபாய் போன்ற சிறு வட்டங்களின் ஓரங்கள் எவ்வளவு வளைவுள்ளவைகளாக விருக்கின்றனவோ, அவ்வளவு வளைந்தவைகளாக பெருந் தாம்பாளம், வண்டிச்சக்கரம் முதலிய




வட்டங்களின் ஓரங்களிரா. அதேமாதிரி, சிறு கோலிகுண்டுகள், திராக்ஷைப் பழங்கள்,

இவைகளின் மேல்புறம் எவ்வளவு வளைந்திருக்கிறதோ, அவ்வளவாகப் பெரும் பந்துகள், [உதாரணம்-கால்பந்து Foot ball] பெருங் குண்டுகள் முதலான உருண்டைகளின் தலம் வளைந்திராது. இது முன்பக்க மிருக்கும் சித்திரத்திஞல் தெளிவாகும். அதில் A, B, C, D, என்ற நான்கு வட்டங்களின் (1,2) என்ற ஒரே நீளமான பாகங்களைப் பாருங்கள். வட்டங்களின் குறுக்களவு அதிகரிக்க, அப்பாகங்களின் வளைவு குறைந்து கொண்டே வருகிறது. அதே நீளமுள்ள பகுதி அநேக காதவழி குறுக்களவுள்ள வட்டத்தின் ஓரத்தில் குறித்துப்பார்த்தால், நேர்க்கோடு (Straight line) போலவே தோன்றும். இதேமாதிரி அநேகமாயிரம் மைல் குறுக்களவுள்ள கோலத்தின் தலத்தில் ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் சமமாய்த்தோன்றும். ஆகிலும் அவைகள் வாஸ்தவத்தில் வளைவுள்ளனவே.

ஆனதுபற்றி மேல்சொன்ன கப்பலின் தோற்றத்தாலும், உதாரணங்களின் உதவியாலும், இப்பூமி ஒருபெரும் பந்தென்பதாக எண்ணுவதற்குத் தடையொன்றுமில்லை.

மேலும், நாம் ஒரு பெரும் மைதானத்தின் மத்தியிலாவது, அகண்ட ஏரி, சமுத்திரம் இவைகளின் மத்தியிலாவது நின்று சுற்றிப்பார்த்தால், வானமானது ஒரு பெருங்கிண்ணம் கவிழ்த்தது போல், நாலாபக்கத்திலும் தரையைத் தொட்டுத் தாங்கப்படுவதுபோல் காண்கிறது. இப்படி வானம், பூமிதலம் இரண்டும்சந்திப்பதாகத்தோன்றும் வட்ட எல்லையை அடிவான(Horizon)மெனலாம். இந்த அடிவான வட்டம், நாம் தரைமட்டத்தில் நிற்கும்பொழுது, நம்மிடமிருந்து சுமார் 5-6 மைல் தூரத்துக்கு மேலிராது. ஆஞல் நாம் கோபுரம், மலைபோன்ற உயர்ந்த இடங்களின்மீது ஏறிப்பார்த்தால், இவ்வடிவானம்முன்னிருந்ததை விட அகன்று, வெகுதூரம் வரையில் தள்ளிப் போய்விட்டதாகத் தோன்றும். அதாவது, முன் நம் பார்வைக்கெட்டிய வஸ்துக்களைக் காட்டிலும், அதிக தூரத்திலிருக்கும் வஸ்துக்களை நாம் பார்க்கக்கூடும்.




இம்மாதிரி நாம் தரைமட்டத்திற்கு மேல் செல்லச் செல்ல, அடிவானவட்டம் அகன்று கொண்டே செல்வது, பூமி உருண்டை வடிவமானதென்று நாம் எண்ணுவதற்கு ஒரு ஸாதனமாகிறது.

இப்பிரபஞ்சத்தில் சம்பவிக்கும் விசித்திரத் தோற்றங்களில், கிரகண மென்பதொன்று. அது இருவிதம்—1. சூரியகிரகணம். 2. சந்திரகிரகணம். இவைகளைப்பற்றி விஸ்தாரமாய்ப் பின்ஞல் விசாரிப்போம். சந்திரகிரகண மென்பது, சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே பூமி வருங்காலத்தில், சூரியவெளிச்சம் சந்திரதலத்தின்மேல் படாதபடி பூமியால் தடுக்கப்படுவதால் உண்டாகிறது. இப்படி சந்திரன், பூமியின் நிழலால் மறைக்கப்படும்போது, அதன் தலத்தில் மறைபட்ட பாகம் ஒளியில்லாததால் கண்ணுக்குப் புலப்படுகிறதில்லை. இப்பாகத்தின் எல்லை ஓர் வட்டத்தின் எல்லையின் ஒரு பகுதி (arc of a circle) போல் வளைந்திருக்கக் காண்கிறோம். இப்பூமி உருண்டைவடிவமா யிருந்தாலொழிய அதன் நிழல் இம்மாதிரியாகவளைந்த எல்லையுள்ளதாக விராதென்பது தெளிவாகிறது.



ஜட்கா, புகைவண்டி, கப்பல் முதலியவைகளில் ஏறிச் செல்லும்போது, இருபக்கத்திலுமுள்ள மரஞ்செடிகள் நாம் போகும் திசைக்கெதிராய் ஓடுவதாகத் தோன்றுகின்றன. ஆஞல் வாஸ்தவத்தில் அவைகள் ஸ்திரமானவைகள். ஓடுவது நாமே. இதுபோலவே, பூமிதன்னைத்தானே சுற்றுவதால், சூரியன் கீழ்த்திசையிலுதித்து, மேற்கே நோக்கிச் சென்று அஸ்தமாவதாகத் தோன்றுவதால், அச்சூரியகதியின் திசைக்கெதிராய், மேற்கிலிருந்து கீழ்த்திசையை நோக்கிப் பூமி உருண்டு செல்வதாக நாம் அறிகிறோம்.

எஸ். பாலகிருஷ்ண ஐயர், பி.ஏ., எல்.டி.

உடலளவும் குடலளவும்.—கடல் சூழ்ந்த வையகத்தின்கண் காணப்பட்ட மானிடர்கள் ஒவ்வொருவரும் அவ்வவர் கரத்தால் எண்சாணுயரம் உடையர் என்பதைப் பற்பலர் அறிந்திருக்கக்கூடும். ஆஞல் சிற்சிலர் அறியாரென்பது தேற்றம். உடலுயரங் கண்டறிந்தவருள்ளும் பருமனறியார் பலராவர். அங்ஙனம் உயரமும் பருமனும் ஒருங்கே அறிந்தார் சிலராவர். ஈண்டு உடற்பருமன் எவ்வளவோவெனின், தத்தங் கரத்தால் நாற்சாணேயாம். இனி, குடலளவு கூறப்புகின், உடலளவான் வந்த உயரச்சாண் எட்டிக்கும் பருமச்சாண் நாலுக்குமாகப் பெருக்கின், வந்த முப்பானிரண்டு சாணேயாம். இம்முப்பானிரண்டும் அவ்வவர் கரச்சாணளவே. இக்குடலளவை "முப்பானிரண்டு முழக்குடல்" என்னும் 'மஞே போதை' 32-வது செய்யுளாலறிக. இனி, குடலளவு எவ்வளவோ அவ்வளவே உண்டியளவும் கொள்ளத்தகுமெனத் தெள்ளிதில் விளக்கப்படும். என்னை யெனில் முப்பத்திரண்டு முழக்குடல் வயிற்றினுள் அமையப்பட்டிருத்தலிஞல், ஆகாரமும் 32 பிடி கொளற்பாற்றாம். அங்ஙனங் கொண்ட ஆகாரமும் சாதம், கறி, நீர் ஆய மூன்றும் உட்படவேயாம். பிடியளவுந் தத்தங் கரத்தினளவாம். இங்ஙனம் எவஞெருவன் தன் கரத்தால் 32-பிடி ஆகாரம் உட்கொள்ளுவாஞே அவன் ஒரு நாளும் பிணிக்கிலக்காகானென்பதுண்மை. இனி அமுதங் கிடைத்தாலும் 32-பிடிக்குமேல் அணுவளவும் புசிக்கலாகா தென்பது பெறற்பாற்று.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வன்றிப் படும்" என்னுங்குறளில் தெரியான் என்பதற்குப் பரிமேலழகருரையைச் சிந்திக்க.

# சுருதிகள்

## MUSICAL INTERVALS IN AN OCTAVE

ஸம்பூரண ஸங்கீத ஞானம் என்பது ராகத்தைப்பற்றிய சரியானஞானமும், அந்தராகத்தில் பார்த்திருக்கும் ஸாஹித்ய ஞானமுமாம்.(ஸாஹித்யம்என்றால் வார்த்தைகளும் அவைகளை உச்சரிக்க வேண்டிய ஸங்கீதமுமாம்.) ஒரு மாணாக்கன் இந்த ஞானத்தைச் சம்பாதித்திருந்தால் ஒழிய நல்ல சாரீரஸம்பத்துள்ளவஞ யிருந்தாலும் சாஸ்திரரீதியாய்ப் பிழையின்றிப் பாடவும் முடியாது; ஒரு வாத்தியத்திலும் வாசிக்கவும் முடியாது.

இக்காலத்தில் அந்த மாதிரி ஸங்கீதஞானம் அடையும் முறை என்னவென்றால், நல்ல பாடகர்களைப் பாடும் காலத்தில் கேட்பதும், நல்ல வாத்தியக்காரர்கள் வாசிக்கும்போது நம் மனதில் பதியும் வரையும் நாம் கேட்பதுமே தான். ஆகவே, நல்ல ஸங்கீத ஞானம் அடைய இரண்டு விஷயம் அவசியமாய்விட்டன: — (1) நல்ல பாடகன் அல்லது வாத்தியக்காரன் முதலில் வேண்டும். (இந்தக் காரியம் எளிதில் அகப்படுகிறதில்லை) (2) நம் மனதில் பதியும்வரையில் திரும்பித் திரும்பி வாசிக்கவோ பாடவோ வேண்டும். (சில மாணாக்கர் சீக்கிரத்திலும் சிலர் தாமதமாயும்போதனையைக்கிரஹிப்பார்கள்.)

இதிலிருந்து நாம் அறியவேண்டியது என்ன? ஸங்கீதஞானம் அடையவேண்டு மென்றால் ஒரு குருவைப் பாடும்போது கேட்டுத்தான் அடைய வேண்டுமே யொழிய, அவர் எழுத்து மூலமாய் எழுதிப் பிரசுரித்த புஸ்தகத்திலிருந்து தனக்குத் தாஞகவே அப்பியஸித்துக்கொள்ள இயலுகிறதில்லை என்பதேயாம். இதற்கு முக்கியகாரணம் இரண்டாகும்:—(1) நமது ஸங்கீதத்தில் உள்ள ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிட்டுக் காட்டத்தகுந்த ஸங்கேதங்கள் (Notation) இல்லாமையும் (2) அந்த ஸ்வரஸ்தானங்களைக் காட்டும் மெட்டுக்களையுடைய வாத்தியங்கள் இல்லாமையுமே.

முதல் முதலில் ஒரு ஸ்தாயியில் எவ்வளவு ஸ்வரஸ்தானங்கள் இருக்கின்றன? நமது வாத்தியங்களில் எல்லா ஸ்தானங்களையும் அமைத்து வைத்திருக்கிறார்களா? என்னும் விஷயத்தை நாம் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது.

ஒரு ஸ்தாயியில் 5 முழு ஸ்வரங்களும், 7 அரை ஸ்வரங்களும் ஆகமொத்தம் பன்னிரண்டு ஸ்வர ஸ்தானங்கள் இருக்கின்றன. வட இந்தியாவில் இந்தப்

பன்னிரண்டும், ஸ, கோமள ரி, தீவிர ரி, கோமள க, தீவிர க, கோமள ம, தீவிர ம, ப, கோமள த, தீவிர த கோமள நி, தீவிர நி, என்பார்கள். கர்நாடக வித்துவான்கள் இவைகளையே ஸ, சுத்த ரி, சதுச்சுருதி ரி, (சுத்த க,) ஸாதாரண க, (ஷட்சுருதி ரி,) அந்தர க, சுத்த ம, முதலியன என்பர். மேலே சொன்ன வற்றைத்தவிர நுட்பமான ஸ்வரபேதங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

(1) சிலர் கால்ஸ்வரங்கள் இந்திய ஸங்கீதத்தில் உண்டென்றும்; அந்தமாதிரியான கால்ஸ்வரங்கள் ஐரோப்பிய ஸங்கீதத்தில் வருகிறதில்லை யென்றும் சொல்லுகிறார்கள்.

(2) நமது ஸங்கீத வித்துவான்களும், ஒரே ஆரோஹண அவரோஹணமுள்ள—உதாரணமாய், ஆரபி, ஸாமம்—இந்த இரண்டு ராகங்களுக்கும் பேதம் எப்படி ஏற்படுகிறது? என்று கேட்கும்போது, இந்த வித்தியாஸம் கமக பேதத்தால் உண்டாகிறது என்கிற அர்த்தமில்லாது ஒரு பதில் சொல்லிவிடுகிறார்கள். (கமகம் என்றால் வெளிப்படையாய் சொல்லாதது என்று பொருள் படும்.) கமகபேதம் என்பது நமக்குத் தெரிந்த பேதத்தைக் காட்டிலும் ஸ்வரங்களுக்குள்ள வேறு பேதம் என்பதாகப்பொருள்படுகிறது.

(3) மேலும் வீணை வாசிப்பவர்களுக்குச் சில ராகங்கள் வாசிக்கும்போது தந்தியை இழுக்கவேண்டியிருக்கிறதையும், சில ராகங்கள் வாசிக்கும்போது கீழ் ஸ்வரத்திலிருந்து மேல் ஸ்வரத்தை உண்டுபண்ண வேண்டியிருக்கிறதையும் எவரும் பார்த்திருக்கலாம். அதாவது, வீணையில் மெட்டுக்கள் அமைத்துண்டான ஸ்வரங்களைக்காட்டிலும் இதர ஸ்வரங்கள்கூட நமது ஸங்கீதத்தில் வருகின்றன வென்பதாம்.

(4) நமது பழைய ஸங்கீத சாஸ்திர புஸ்தகங்களில் எல்லாம் ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் இருக்கின்றன. அதாவது 22 ஸ்வரஸ்தானங்கள் உண்டென்பதாயும் எழுதியிருக்கிறது.

மேலே சொன்னதைக்கொண்டு அறியவேண்டியது என்னவென்றால், கர்நாடக ஸங்கீதத்தில் பேருக்கு பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் தான் இருக்கின்றன வென்றாலும் வாஸ்தவத்தில் ஸ்வரஸ்தானங்கள் பன்னிரண்டு அல்ல; அதற்கு மேற்பட்டதாகிறது என்பதாம்.

[ராவ்பஹதூர் வி. நாகோஜிராயர் அவர்கள் ஸ்வரஸ்தானங்கள், சாஸ்திரத்தில் சொல்லியவாறு 22 தான்; அதற்குமேல் இருக்கமுடியாது என்பதாகக் கண்டறிந்து சில சிறந்த உபந்நியாஸம் செய்ததைத் தமிழில் எழுதிக் கர்நாடக வித்துவான்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் சொல்லப் புகுவேன்.]

இந்த இருபத்திரண்டு சுருதிகளும் பின்வருமாறு.—

ஸ—1

| | | |
|---|---|---|
| ரி (1)—25/24. | க (1)—32/27. | ம (1)—4/3. |
| ரி (2)—16/15. | க (2)—6/5. | ம (2)—27/20. |
| ரி (3)—10/9. | க (3)—5/4. | ம (3)—45/32. |
| ரி (4)—9/8. | க (4)—32/25. | ம (4)—36/25. |
| | ப—3/2. | |

| | |
|---|---|
| த (1) — 25/16· | நி (1) — 16/19· |
| த (2) — 8/5· | நி (2) — 9/5· |
| த (3) — 5/3· | நி (3) — 15/8· |
| த (4) — 27/16. | நி (4) — 48/25· |

ஸ் — 2.

இப்பழைய ஏற்பாட்டின்படி 12 ஸ்வரஸ்தானங்களுக்குப் பதிலாக இந்தப் புதிய ஏற்பாட்டில் ஸ, ப என்னும் இரண்டு ஸ்வரங்களைத் தவிர இதர ஸ்வரங்கள் ஒவ்வொன்றிற்கும் பதிலாக இரண்டு ஸ்வரங்கள் வருகின்றன என்பதாம். அதாவது, ரி (1), ரி (2) ஆகிய இந்த இரண்டு ஸ்வரங்களுக்கும் சுத்தரிஷபம் என்னும் பெயர் வைக்கவேண்டியதாகும். அதேமாதிரி மற்ற ஸ்வரங்களிலும் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் இரண்டிரண்டு பேதம் வருகிறதைக் காண்க.

ஒவ்வொரு ஸ்வரங்களுக்கும் எதிரில் எழுதியுள்ள பின்னம் ஸ என்னும் ஸ்வரம் எவ்வளவு வேபநங்களால் உண்டாகிறதோ அதைவிட அத்தனை வேபநங்களால் ஆகிறதென்பதைக் குறிக்கின்றது. அதே பின்னத்தைத் தலைகீழாய்த் திருப்பி வாசித்தால் தந்தி அவ்வளவு நீளமுள்ளதானால் அந்த ஸ்வரத்தை உண்டாக்கும் என்று தெரிவிக்கிறது.

ஐரோப்பிய ஸங்கீத மாணாக்கர்கள் ஸ, க(3), ப, ஸ் ஆகிய நாலு ஸ்வரங்களும் சேர்ந்து உண்டாக்கப்பட்டால் காதில் விழும்போது சுகத்தைத் தருகின்றன வென்று சொல்லுகிறார்கள். இந்தஸ்வரங்கள் ஒன்றோடொன்று ஒத்துவரும் ஸ்வரங்களாம். இதை ஹார்மநி (Harmony) என்று சொல்வதுண்டு. இதற்குக்காரணம் என்னவென்றால், ஸ என்று தந்தி சப்திக்கும்போது அந்த ஸ்வரத்துடன் கூட அந்தத் தந்தியில் அநுகரணமாக க (3), ப, ஸ் இந்த மூன்று ஸ்வரமும் உண்டாகின்றன. (இதைக் காதால் கேட்டறியலாம், ரெஸொநேடர் (Resonator) என்னும் யந்திரத்தைக் கொண்டும் அறியலாம்.) ஆகவே, அப்பியாஸத்தாலும் சுபாவத்தாலும் நமது காது இந்த மூன்று ஸ்வரங்களையும் அதே காலத்திலோ, அல்லது அடுத்தடுத்தோ கேட்க வேண்டுமென்று தயாராயிருக்கிறது. இந்தமாதிரி ஒத்துப்போகும் ஸ்வரங்கள் ஒரேகாலத்தில் சப்தித்தால் (Harmony) ஹார்மநியுண்டாகிறது. ஆனால் இந்த ஸ்வரங்கள் அடுத்தடுத்து சப்தித்தால் மெலடி (Melody) என்னும் சுகம் உண்டாகிறது. இந்த மெலடி என்பதே கர்நாடக ஸங்கீதத்தின் ஆதாரமாம்.

### A. மேஜர் கார்டு (Major Chord)

ஸ, க (3), ப, ஸ் என்னும் நாலு ஸ்வரம் சேருவதை ஸ்வாபாவிக ஸ்வரஸமூஹம் (Chord of Nature) என்பார்கள். ஸ் என்பது ஸ வைவிட 2 மடங்கு வேபநங்களாலானது. (இந்தச் சங்கதி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.)

ப என்பது ஸ வைவிட 3/2 மடங்கு வேபநங்களாலானது. இவைகள் சேர்ந்துவந்தாலும் சுகத்தைத் தருகின்றன. ஸ்வும் ஸவும் சேர்ந்து வரும்போது உண்டாகும் சுகத்தைவிட பவும் ஸவும் சேர்ந்து வரும்போது குறைந்த சுகமாம். இந்த மூன்று ஸ்வரங்களும் ஒன்றோடொன்று சேரும்போது சுகம் உண்டாவதாலேயே வாத்தியங்களில் இவைகளைச்சுருதிஸ்வரங்களாக வைத்துக்கொண்டிருக்கிறோம்.

2, 3/2 என்னும் மடங்குகள் தவிர, ப வுக்கும் ஸ் வுக்கும் உள்ள இடைவெளியாகிற 4/3 என்பதும் சுகம் தருவதே.

க (3) என்பதற்கும் ஸவுக்கும் 5/4 என்பது இடைவெளி. பவுக்கும் க (3) க்கும் 6/5 என்பது இடைவெளியாம்.

மேலே சொன்னதில், 2 (2/1), 3/2, 4/3, 5/4, 6/5 என்னும் இடைவெளியுள்ள ஸ்வரங்கள் சேர்ந்து வந்தால் சுகம் தருவனவாம்.

ஐரோப்பிய ஹார்மநியில் 9/8 என்னும்இடைவெளியுள்ள (Major tone) மேஜர் டோன், 10/9 என்னும் இடைவெளியுள்ள (Minor tone) மைநர் டோன், 16/15 என்னும் மேஜர் ஸெமிடோன் (Major semitone) 25/24 என்னும் இடைவெளியுள்ள மைநர் ஸெமிடோன் (Minor semitone) ஆகிய இவைகளும் சுகம் தருவனவென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடைவெளிகளையே மெலடியிலும் அல்லது ஒன்றன்பின்னொன்றாய் வரும்போதும் சுகம் தரும் என்று வைத்துக்கொண்டால், கர்நாடக ஸங்கீதத்திலும் சேர்ந்துவரும் ஸ்வரங்கள் என்று ஒப்புக்கொள்ளலாமல்லவா? அல்லது, எவ்விதமான சுகம் தரும் ஸங்கீதத்திலும்சேர்ந்து வரத்தகுந்தவை என்றே வைத்துக்கொள்ளலாம். ஏனெனில் ஸ்வபாவமாகவே சுருதி சுகம் என்பது ஒரு சாஸ்திரவரன்முறையை அநுஸரிக்குமாம். திருஷ்டாந்தமாய், தித்திப்பான வஸ்து எந்தச் சாதியாருக்கும் தித்திப்பாயிருக்குமேயொழிய சிலருக்குத் தித்திப்பாயும் சிலருக்குக் கசப்பாயும் இராதல்லவா?

மேற்குறித்த இடைவெளிகளுள்ள எத்தனை ஸ்வரங்கள் ஸவுக்கும் க (3) க்கும் இடையில் வரலாம் என்று பார்ப்போம்.

(1) ரி (1) என்பது (a) ஸவைவிட 25/24 மடங்கு வேபநத்தாலாவதாலும், (b) மேலும், 25/24 × 6/5 = 5/4 என்பது க (3) என்பதால், ரி (1) ஸவுக்கும் க(3) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

(2) ரி (3) என்பது :(a) ஸ வைவிட 10/9 மடங்கு வேபநத்தாலாவதாலும்; (b) மேலும், 10/9 × 9/8 = 5/4 என்பது க (3) என்பதால்,

ரி (3) ஸ வுக்கும் க (3) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

(3) ரி (4) என்பது :(a) ஸ வைவிட 9/8 மடங்கு வேபநத்தாலாவதாலும் (b) மேலும், 9/8 × 10/9 = 5/4 என்பது க (3) என்பதால்,

ரி (4) ஸவுக்கும் க (3) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

(4) க (2) அல்லது ரி (6) (சில ராகங்களில் ஷட்சுருதி ரிஷபம் என்று சொல்லப்படுவது) என்பது: (*a*) ஸவைவிட $6/5$ மடங்கு வேபகத்தாலாவதாலும், (6) மேலும், $6/5 \times 25/24 = 5/4$ என்பது க (3) என்பதால்.

க (2) (என்னும் ஷட்சுருதிரிஷபமும்) ஸவுக்கும் க (3) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

மேலே காட்டியவாறு, பின்வரும் ஸ்வரகணங்கள் வரலாமென்று காணலாம்: அவை (1) ஸ ரி (1) க (3)
(2) ஸ ரி (3) க (3)
(3) ஸ ரி (4) க (3)
(4) ஸ ரி (6) க (3)
[க (2)]

க (3) க்கும் ப வுக்கும் இடையில் மேலே காட்டிய மாதிரி கணக்கிட்டால், எத்தனை ஸ்வரங்கள் வரும் என்று பார்ப்போம்.

(1) ம (1) என்பது: (*a*) $5/4 \times 16/15 = 4/3$; அதாவது க (3) ஐவிட $16/15$ மடங்கு வேபகத்தாலானது; மேலும், (*b*) $4/3 \times 9/8 = 3/2$ அதாவது, ம (1) ஐவிட ப $9/8$ மடங்கு வேபகத்தாலானது என்பதால்,

ம (1) என்பது க (3) க்கும் ப வுக்கும் இடையில் வரலாம் என்று காண்க.

(2) ம (3) என்பது: (*a*) $5/4 \times 9/8 = 45/32$: அதாவது, க (3) ஐவிட ம (3) $9/8$ மடங்கு வேபகங்களால் ஆனது; மேலும், (*b*) $45/32 \times 16/15 = 3/2$: அதாவது ம (3) ஐவிட ப $16/15$ மடங்கு வேபகங்களாலானது; என்பதால்,

ம (3) என்பது க (3) க்கும் ப வுக்கும் இடையில் வரலாம் என்று காண்க.

மேலே காட்டியவாறு பின்வரும் ஸ்வர கணங்கள் வரலாமென்று காணலாம்: அவை (1) க (3) ம (1) ப
(2) க (3) ம (3 ப).

**பி. எஸ். சுந்தரம் அய்யர் பி. ஏ., எல்-டி.**

# கடற்கரை: ஓர் கனா

## ON THE BEACH: A REVERIE

### முதற்பாகம்

கருணையங்கடலாகிய கடவுள், தமது சச்சிதானந்த ஸ்வரூபத்தைத் தேகேந்திரியங்களாலும் நாம்அனுபவித்தானந்திக்கவே சந்திரசூரியர்நக்ஷத்திரங்கள்உயர்ந்தமலைகள் அகன்ற ஆறுகள் பரந்தகடல்களாகிய இவைகளைப் படைத்திருக்கிறார். ஓங்கி உயர்ந்து விண்ணுலகமளாவி பொன் வெள்ளி முதலிய உலோகங்களைத் தந்தும் ஜீவாதாரமான ஆறுகளைப் பெற்றும் விருக்ஷங்கள் பக்ஷிகள் மிருகங்களுக் கிருப்பிடமாயும் ஈரேழுலகை யளந்த இமய முதலிய பர்வதங்கள் இந்திராதி தேவர்களும் ரிஷிகளும் முனிவர்களும்போற்றித்தொழ,ஆதிமூர்த்தி நித்தியமாய் ஸதாகாரமாய்வீற்றிருக்கும் தேவாலயங்கள் என்பதி லென்னவையம்! அகண்ட தேஜோமயமாய் ஸ்வயஞ்சோதியாயுள்ள சித்ஸ்வரூபத்தை நமது ஊனக் கண்ணும் கண்டு களிக்கும்படி அருள்வள்ளல் சந்திர சூரிய நக்ஷத்திரங்களாய், விண்ணில்வைத்த விளக்காய், அண்டத்திலிட்ட அகண்ட தீபமாய், ஆதியஞ்சோதி உலகையெல்லாம் ஜோதிவெள்ளத்தி லாழ்த்திவிளக்குகிறார். கார்க்கடல் தன்னுள்ளூறும் ஆனந்தம் பொங்கி அலைகளாய்ஆரவாரிப்பதும், இளந்தென்றல்இலைகளைத் தழுவி யணைத்து அவைகளுடன் கொஞ்சிக் குலாவி முத்தமிட, அதனால் பரவசமடைந்து கனிந்து ஆனந்தக் கூத்தாடியும், ஒரே ஜோதியான ஆகாயத்தை மேகங்கள் கண்டு உள்ளுருகி ஆனந்தக்கண்ணீர் பொழிய அவை திரண்டு ஆறாய்ப்பெருகவும், பக்ஷிகள் தம்முள் சுரக்கும் சுகத்தை வாய்விட்டுச்சொல்லமுடியாமல் விசும்பிடைப் பறந்துஓடிப்பாடுவதும்,மிருகங்கள் துள்ளித்துள்ளிஓடிக் களிப்பதும், சிறுவர் குதூகலித்துத்தமக்குள் ஜனித்துப் பொங்கியஆனந்தம் இந்திரியாதிகளால் வழிந்துபுரண்டோட மகிழ்ந்துபாடி ஆடுவதுமாக இவ்வண்ணம் உலகமெல்லாம் ஆனந்தத்திலுதித்துப் பெருகிச் சொல்லாமல் சொல்லிக் களித்திடும். இவ்வாறு சத்தாய்ச்சித்தாய் ஆனந்தமாய்ப் ‘பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பொருளாய்’ பகவான் விளங்குவதனாலன்றோ தமது பரத கண்டத்தில் எங்கெங்கு பெரிய மலை மரம் ஆறு உளவோ அங்கெல்லாம் கீதையில் சொல்லியபடி அவர் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிறார் என்று இவ்வுண்மையை அனுபவித்துப் பரம்பொருளைத் தேடினதாக நான் ஓர் கனவு கண்டேன். அதை யிங்கு ஒருவாறுசுருக்கிக் கூறுவேன்.



கொடிய கோடை நாளில் ஒருநாள் வெய்யில் வெகு உக்கிரமாயிருந்தது. உஷ்ணம் 108 டிக்ரிக்குக் குறைவில்லை. வீட்டிலுள்ள சுவர் மேஜை புத்தகம் முதலிய யாவும் இவ்வனல் சுரத்தினால் அவஸ்தையடைந்து தபித்தன. வாயுபகவானு மித்தீமையைச் சகிக்கமுடியாமலோடிச் செடிகளிலும் மரங்களிலும் மறைந்துப் படுத்துறங்கினர். இப்படி ருத்ராவேசங்கொண்டு தமது அளவிறந்த கிரணங்களாம் அக்னியாஸ்திரத்தைத் தொடுத்து நமது தேகத்தையும் மனத்தையும் வாட்டித் தேகஞ்சோர நாவரளமனமிடிய வதைக்கும்படிச் சூரிய பகவானுக்கு நம் நாடு என்ன தீங்கிழைத்தது. இக்கொடிய வெய்யிலில் தூக்கம் வாராமையால், படித்து வந்த ஸூத்ரபாஷ்யங்களைக் கையிலெடுத்தேன். வெகு நேரம் வாசித்தேன். மூளைக்கொதிப்பு அதிகரித்ததே யொழிய மனங்குளிரவில்லை. சூரியவெப்பத்துடன் மனவெப்பமும் மிகுந்தது.

வேதாந்தம் பேசி வீண்வாதமிடுவதும், சமயவழக்கிட்டுச் சண்டையிடுவதுமல்லாமல் யோசிக்குமிடத்துப் புத்தியால் மட்டுமொன்று மாவதில்லை யென்று புத்தகத்தைக் கீழே வைத்தேன். வைதீகோத்தமர், மிகச் சிரத்தையுடன் அணுவளவும் வழுவாமல் வைதீகக் கர்மங்களைப் புரிந்து, லௌகீக தர்மம்வேறாதலின் அதற்கிணங்கபொய் கபடம் சேவகம் நிந்தைபொறாமை முதலிய லௌகீக தர்மங்களைவழுவறச் செய்வர். சிலர் துறவை நினைந்து பயந்து, ஜனகர் போல் நிஷ்காம்ய கர்மஞ் செய்தலே உத்தமமென்றுணர்ந்து காமக்குரோதாதிகளைப் பலாபேக்ஷையின்றி நாடி நற்கருமம் புரிந்து இல்லற தர்மம் நடத்துவர். வைதீக தர்மத்தில் கட்டுப்பட மனமில்லாமல் உலகமெல்லாம் பொய், பிரமமே ஸத்ய மெனும் வேதாந்தாதீர் மாயாவாதஞ் செய்து மனம்போனபடி நடப்பர். பிரமம் நானென்று விசாரித்துணர்ந்து தெளிந்த ஞானிகள் சகுணம் சிறுவர்க்கென்றும் பக்தி பாமரர்க்கென்றும் நேதி செய்து கர்மஞ்செய்து பலத்திலாழ்ந்து, தியானஞ் செய்து சூன்யத்தில் மூழ்கிக் கலவாய் வேதாந்தத்தில் காலங் கழித்திடுவர். உள்நோக்கங்கொண்டு உள்ளத்தை ஆராய நடுக்கமுற்றுச் சிலர் ‘கலௌ கேசவ சங்கீர்த்தன’ மென்று சுருதி யுக்தி அனுபவத்துக்கிணங்க மூடபக்தியே இக்கலியிலுயர்ந்த மார்க்கமெனச் சித்தாந்தஞ் செய்து கோயிலுக்குச்சென்று குடும்பக்ஷேமத்தைக் கோறியும், பஜனை செய்து பாட்டிலீடுபட்டும் புளகாங்கிதமடைவர். இச்சமயங்களெல்லாம் கண்டு குடும்பமே கடவுளென்று குடும்பவாராதனை செய்யும் சமயாதீதர்கள் கஷ்டம் வருங்கால்கோயிலுக்குச்சென்று பிரார்த்தனை செய்தும் நோன்பு நோற்றும் பொங்கலிட்டும் அபிஷேகம் புரிந்தும் பாராயணஞ்செய்து மிப்படி நானாவிதமாய் மனமொன்று தவிர மற்றதையெல்லாம் கஷ்டகாலத்தில் பகவானுக்கு லஞ்சங்கொடுத்துப் பக்தி புரிகின்றனர். இதையெல்லாம் கண்டு என் மனது ஒரு மார்க்கத்திலும் பற்றமாட்டேனென்கிறது.

வாணாளெல்லாம் வீணாளாய்ப்போகின்றதே. பொய்யுடலை மெய்யென்று வீணைக்காலங்கழித்தேனே. இக்கணமோ மறுகணமோ மரணம் வந்திடுமே! ஐயோ நானென்செய்வேனென்று மனம் பதைபதைக்கப் பதறி உடல் நடுக்கமுற்றது. விவகாரசாகரத்தில் மூழ்கிக்கரை காணாது தவிக்கிறேன். தேஹம் அந்ருதகடதுக்கம் அநாத்மா, நானல்லவென்று விசாரித்துத் தெளிவுற்றுத் தேகாதீதனாய் விளங்கும் நான் சிறு துரும்பையுங் கண்டு திடுக்குற்றுமயிர்க்கூச்செறிவேன். கஷ்டம்வரக் கலங்கிடுவேன். தமோகுண ரூபமான இவ்வுடலைச் சாத்வீகமென்பேன். இளமையில் விளையாட்டிலும், யௌவனத்தில் ஸ்திரீயிலும், வயதில் பொருளிலும் பெருமையிலும் மனம் நாட, வயது முற்றமுற்ற ஆசை முற்றி அபிமான மதிகரிப்பதே யொழிய இவ்வாழ்வில் வேறொரு பயனுங் கண்டிலன்! எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாய் முடிகிறது! தேகம் மலபாண்டம் பாசக்கூடென்று வாய்ப்பிதற்றுமல்லால் தேகாபிமானஞ் சிறிதேனும் நீங்கவில்லை. உடலினில் ஒவ்வொரு அணுவிலும் என்னகந்தை வியாபித்துக் குடிகொள்ள நான் தேகமெனும் ஐக்யபாவம் பெற்றுத் தேகசாக்ஷாத்கார மடைந்தேன். ஆகையால் பிறப்பிறப்பு மிறப்பும்பிறப்புமாய், ‘மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து’ பல துன்பத்தில் நானாழ்ந்து பரிதவிப்பது என்ன அதிசயம்!

மேலும் ஐவரெனும் வேடர் வலையில் சிக்கிய வென் மனது வழி தெரியாமல் அலைகிறதே, இதற்கென்ன செய்வேன்? உலகம் கறக்கும் விஷயப்பாலை ஐம்புலன்களால் அவாவுட னருந்தி விஷந்தலைக்கேற மனங்கறுத்து மதிகுலைந்து கிடப்பதைக்கண்டால் ஐயோவென

மனம் பதறுகின்றதே! மதுவைத்துமதிகலக்கும் இவ்விந்திரியங்களினுறவு, விஷப்பாம்பைப் பாலூட்டி வளர்ப்பதுபோலு மென்றறியாமல் மோசம்போனேன். பொறியை அடக்கினால் புலன் அடங்க வில்லையே! மனமொடுங்க வில்லையே! ஒரு பக்கம் அடைத்தால் இப்பாழ்ம் மனம் வேறோர் பொறிவழியாய், யந்திரத்தில் கட்டுண்டு விடுபட்ட நீராவிபோல, விரைந்தோடி விஷயங்களில் விழுகிறதே? இந்திரிய நிக்ரஹம் செய்வது கிளையில் நின்று அடிமரத்தை வெட்டுவதைப்போலவும், நிழலை வெட்டிப் புதைப்பதுபோலவும் கூடாத விஷயம்.

ஒருவேளை தேகேந்திரியங்களை அடக்கி ஆளலாம். ஆ! இப்பாழ்த்த மனமடங்காமல் என்ன பாடு படுத்துகிறது? மடந்தையர் செய்யும் மையலில்மனமயங்கி அவர் பின்னேயே ஓடும். பெண்ணென்ற இயற்கையிலுண்டாம் அழகை அதிசயித்ததேயொழிய காமத்தைக் கருதவில்லை யெனும். மடவார்தம் மனோதர்மசாஸ்திரத்தை ஆராயப் புகுந்தேன் எனும். மாதர் தேகத்தை இகழ்ச்சி செய்து அதில் மகிழ்ச்சி அடையும். உலகத்தவர் புகழுக்காக வொன்றுஞ்செய்வதில்லையென்று பெருமை பேசி எப்போதுமவர் புகழையே நாடுவேன். விவகாரம் துக்கமென்று விவகாரத்திலாழ்ந்திடுவேன். நன்மை தீமை யாவும் நீ யென்று சமபுத்தியுடன் தீமையையே கருதுவன் 'எவரெவர் எததிறத்தர் அத்திறத்தராய் நின்று அவரவர்க்காவன கூறுவேன்' என்று தாக்ஷிண்யமாய் போலி ஜீவகாருண்யத்தில் விழுந்திடுவேன். எண்ணி எண்ணி மனஞ்செயலிலிறங்காமல் விவகாரத்துக்குபயோகமற்றுப்பாரமார்க்கத்திலு மொன்றுங்கண்டிலேன். சும்மாயிருக்கவென்று சூன்யத்தை நாடி நித்திரையில் ஆழ்வேன். 'கண்மூடி மௌனியாயிருக்க வென்றால் இப்படிபாழ்த்தகன்மம்போராடுகிறதே! விவகாரம்துக்கமென வெறுத்திட வெறுத்திட அவை மேன்மேலும் குவிந்து விருத்தியாகும். மேகங்கள் கூடி மழைபொழியத் தொடங்கப், பேய்க்காற்றடித்து அதைக் கலைத்திடுவதுபோல, நினை நினைந்து நற்கதி அடைய நான் நாடும் போதெல்லாம் பாழ்த்த கன்மங்கள் ஐயோ எங்கிருந்தோ குறுக்கே வந்து வழிமறிக்கிறது, காமாதிகளில் வீழ்ந்து ஆழ்ந்து கரைந்து நொந்துநைந்துவாடி வருந்தி, அனலிவிட்ட மெழுகுபோலும், தீயில் வீழ்ந்த புழுபோலும் மனமுருகி அவஸ்தைப்பட்டு அலறி என் மனம் பதைபதைக்கிறது. ஒன்றிலும் பற்றிலை. துறக்கவு மென்மனந் துணியவில்லை. சந்நியாஸ தர்மத்தை விவகாரத்திலனுசரித்து இரண்டுங்கெட்டுத் திரிசங்கு ஸ்வர்க்கத்தில் நின்று துடிக்குமென் போல்வாரு மிவ்வுலகிலுண்டோ? நானெனு மகந்தையோ தேகமெலாம் பரவி அண்டமெங்கும் வியாபித்து எல்லாப் பொருளிலும் நிறைந்து யாவுந் தானாய் நின்று என்னைத் துக்கக்கடலில் ஆழ்த்துகிறது.

மனோவாக்குக் காயங்கள் புரியும் கொடிய கருமங்களை வரையத் தொடங்கினால் எண்ணி முடியுமோ? காகிதம் போதுமோ? கியானம் வைராக்கியம் சாந்தம் தர்மம் முதலிய நற்குண நற்செய்கைகள் யாவும் மேல் பூச்சேயொழிய உண்மையில் மதுவுண்டு பேய்பிடித்த மர்க்கடம்போலப் பைத்தியம்பிடித்த இப்பேய்மனதை நம்பி நான் மதிமோசம் போனேன். மேலுஞ் சுழல்காற்றில் அடிபட்டு நோயால் வருந்தி மரணவாதனையிலிடிந்து திக்கற்று நிலை குலைந்து தடுமாறுங்கால் வயிறு நிறைந்த வேதாந்த முதவுமோ? ஆகையாலினி என் செயலாலாவதொன்றில்லை. எல்லாம் நின்செயலென்று நின்னையே சரணம் புகுந்தேன். என் விதியை நினைந்து நினைந்து நொந்தேன். பிறந்து பிறந்து இளைத்தேன். விவகாரமெனும் வெய்யிலிலடிபட்டு வெந்தேன். விஷய வலையில்சிக்கினேன். அக்கியானவிருளில் அலைகிறேன். இதற்கு நான் யாரை நோவது? நொந்தென்னபயன். என் உயிர்க்குயிரே! ஆருயிர்வள்ளலே! நின் கருணைக்கு மிணங்காத வென்போல பாவியரு மிவ்வுலகிலுளரோ. கல்லான வென்மனம் நின்னைக் கல்லாகப் பாவித்ததன்றி அருளை ஆனந்தவடிவங் கொண்டதென்று என்புருகி நெஞ்சமிளகிக் கனிந்து கரைந்து ஒருநாளும் நான் பரவசப்பட்டதில்லை. பெண்ணென்றால் வெண்ணையாயுருகி கண்ணனென்றால் கல்லா யிருக்கு மிக்கொடிய மனதைக்கொண்டு நானெவ்வாறு கரையேறுவேன்.? ஆதலின் என் மருளை நீக்கி நின் அருள் தந்தாலன்றி நானுய்யும் வகைவேறொன்றுமில்லை. தாயிழந்த கன்றுபோலக் கதறி அலையும் எனக்கு ஆராவமுதே நின்னருட்பாலை ஊட்டினாலன்றி என்தாகமொரு நாளும் தணியாது. இது சத்தியமென்று இவ்வாறு சொல்ல முடியாத துக்க ஸாகரத்தில் நான் மூழ்கிக் கிடந்தேன்.

கடற்கரைக்குப் போனால் இத்தாபங் கொஞ்சந் தணியுமென்று தோன்ற உடனே வீட்டைவிட்டுப் புறப்பட்டுத் தனியாய்ச் சந்துவழியாய் விரைவாய்ச் சென்று அகண்டாகாரமாய்க் கிடக்கும் கார்க் கடலைக் கண்டேன். அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்து



நிர்மலமாய் நிஷ்களமாய் அகண்டமாய் தேஜோமயமாய் விளங்கும் அக்கார்க்கடலைக் கண்டவுடன் என் மனத்திலோர் குதூகலமும் ஆனந்தமும் ஜனித்தது. நிரதிசயானந்தமே கடலுருவங் கொண்டதெனப் பொங்கித் ததும்பும் சுகத்தை அவரவர் தமது மனமெனும் படி கொண்டு மொண்டு அள்ளிக் குடித்துக் களித்தனர். சிறுவர் குழாங்கள் இவைகளைக் கண்டு தாமும் பாடியாடி யோடி விளையாடினர். ஆணலை பெண்ணலைகள் கலந்து களிப்பதைக் கண்டு, வெள்ளையர் தாமும் கூடிக் கைகோர்த்துக் குலாவிக் காதற்கடலில் மூழ்கி மயங்கி மகிழ்ச்சி யுற்றனர். ஓம் ஓம் என்று ஓயாமல் பாடும் கடலைக்கண்டு பாடத்தெரியாதவரும் தனியாய்ச்சென்று ஓவென்று ஓலமிட்டுச் சங்கீதம்பாடியாடி உள்ளம் பூரித்தனர். ஈதெல்லாம் அற்ப சுகமென மதித்துச் சிலர், ஒருமித்த மனத்தினராய்ப் புத்தகத்திலாழ்ந்து அதிகமகிழ்ச்சி யுற்றனர். ஏகாந்தத்தை நாடிச் சிலர், பனிக்கடலைக் கண்டு தாமும் மோனக்கடலாய், நினைப்பு மறப்பெனு மலை கடந்து, நிர்வாஸனா மவுன நிலையாம் பரவெளியை ஆனந்தாலயத்தை அடைய விரும்பிக் கோசக்கதவைத் திறந்து உட்சென்று உள்ளங்குளிர்ந்தனர்.

இதையெல்லாங்கண்டு உளமகிழ்ந்தேன். ஆனந்தக் கடலில் மொண்டு குடித்தேன். ஆகிலும் என் மனக் கொதிப்படங்காமையால் கடற்கரையே நடந்து வெகுதூரஞ் சென்றேன். ஓயாமல் அடிக்கும் அலைகளைக் கண்டு, என் சித்தந்தான் எப்பொழுதும் சலிக்கிறதென்றால் ஏ கடலே நீயும் ஏன் இப்படிச் சலிக்கிறாய். சந்திரசூரியர் நக்ஷத்திரங்களாகிய இப்புவனமுழுவதும் நிலையற்று அலைந்து திரிகின்றனவே. ஒகிருஷ்ணா என் மனம் அலைவதால் யாவும் அலைவதாய்த் தோற்றுகின்றதோ. உண்மையில் ஓய்வென்பதில்லையோ! சுருதி பொய்யோவென்று பெருமூச்செறிந்தேன். மலையை மணலாக்கும் கடலே, கல்லெனுமென் மனதை உருக்கிடாயோ வென்று அங்குப் பரந்து கிடக்கும் மணலை நோக்கி மனம் பதறினேன். (இன்னும் வரும்)

**கறுந்கல்டோன்.**



# வஸந்த மாளிகை

## *VASANTHA MALIKAI*

## அத்தியாயம் க.

### ஆலமர நிழல்

### *UNDER THE BANIAN TREE*

சந்திர வம்சத்துதித்த பாண்டிய மன்னர்களால் மனுநீதி தவறாது அரசாளப்பட்டு வந்ததாய்ப் புராணங்களில் புகழப்பெற்றோங்கும் இப்பாண்டிய தேசமானது, அப்பாண்டிய ராஜ வமிசம் அழிந்த பிறகு நாய்க்கர் வம்சத்தார்களால் அரசாளப்பட்டதென்றும், அவ்வம்சத்துதித்த 'விஜயரங்கசொக்கநாதன்' என்னும் ஓர் இளவரசனுக்கு இராஜப்ரதிநிதியாய் அன்னவன் பாட்டியார் 'மங்கம்மாள்' என்பவள் இம்மதுரைமாநகரில் அரசாட்சி செய்து வந்தாளென்றும், சரித்திரங்கள் மூலமாயும் கேள்வி மூலமாயும் நமது நண்பர்கள் அறிந்திருப்பார்கள்.

அவ்வரசி அரசாண்ட நமது சரித்திரக் காலமாகிய 17-ம் நூற்றாண்டின் இறுதியில் ஓர் வஸந்தகாலத்தில் கதிரவன் தன் கடுங்கிரணங்களால் விண்ணுலகையும் மண்ணுலகையும் கவர்ந்துகொண்டு ஏகசக்ராதனாய் உச்சியில் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

அத்தருணத்தில் வைகையாற்றின் வடகரையோரமாய் இருபுறமும், தென்னை, மா, பலா, ஆல், வேம்பு முதலான நிழல்தரும் உயர்வகை உன்னத விருக்ஷங்களின் நெருங்கியடர்ந்த தழைகளுடன் கூடிய சாகைகளால், சூரிய தாபத்தினின்றும் காக்கப்பட்டதும், அருகில் செல்லும்நதியின்தெள்ளிய நீர்த்திவலைகளின் ஸ்பர்சத்தால் குளிர்ச்சி பெற்று வீசும் இளங்காற்றால் அத்தாபத்தின் கொடுமை சற்றுக் குறைக்கப்பட்டதுமான, 'இராமநாதபுரம் சாலை'மார்க்கமாய், செம்மேனி வாய்ந்த உயர்வகைப் 'பைகோமட்ட (Pegu Pony)'த்தின் மீது ஆரூடனாய் இராணுவ உடைதரித்த ஓர் வீரன் மேற்கு முகமாய் மதுரைநகர் நோக்கிப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான்.

அவனது வாடி வியர்த்த வதனமும், களைத்த சரீரமும் ஓயாதுவிடப்படும் பெருமூச்சும், குதிரையின் வாயினின்று கக்கும் வெண்ணுரையும், களைப்பால் அயர்ந்த அதன் மந்த நடையும், இவ்வீரன் வெகுதூரத்தினின்று வெகுநேரமாய்ப் பிரயாணஞ்செய்து வருகிறான் எனத் தெரிவித்தன.

இவ்வாறு நமது வீரன் பிரயாணஞ்செய்து வருகையில் மதுரைக்குக் கிழக்கே சுமார் ஏழுமைல் தூரத்திலுள்ள 'ஆலடி' யென்னும் ஸ்தலம் வந்து சேர்ந்தான்.

இவ்விடத்தில் சுமார் இருநூறு பேர்வரை தங்கக் கூடிய நிழல் தரும் ஓர் பெரிய ஆலமரமிருப்பதால் இதற்கு 'ஆலடியென்றும்' இவ்விடத்திலிருந்து, சுமார் இரண்டு மைல் தூரத்துள்ள 'திருவூரு'க்கு ஓர் பாதை பிரிவதால், 'இருசந்தி' யென்றும், அடிக்கடி வழிப்போக்கர்கள் இவ்விடத்தில் சோரர்களால் அடிபட்டு பொருள் பறிகொடுப்பது வழக்கமாதலால், 'உபயநகட்டம்' என்றும், பல திருநாமம் பெற்ற இப்புண்ணிய ஸ்தலத்தில் இப்புண்ணிய விருக்ஷநிழலில், நமது கதா ஆரம்ப தினமான அன்று பகல் சுமார், 12 மணி நேரத்தில், ஓர் புறத்தில் ஓர் கிழவி பணியாரம் சுட்டு விற்றுக்கொண்டும், மற்றோர் புறத்தில் மற்றொரு கிழவி வெள்ளரிக்காய், இளநீர், வெற்றிலை பாக்கு, அவல்கடலை விற்றுக்கொண்டும்,இன்னொருபுறத்தில் இன்னொருத்தி தயிர்,மாம்பழம் முதலானவை விற்றுக்கொண்டும், ஒருவன், பனை நுங்கு பதநீர் கள்ளு முதலான பானவகைகள் விற்றுக்கொண்டும் இருந்தார்கள். ஆங்கோர் புறத்தில் சங்கிலிக்கறுப்பன் பீடமும், அதைச்சுற்றி மரக்கிளைகளில் நாற்புறமும், சிறுபிள்ளைத்தொட்டில்கள், இருப்பு வளையங்கள், ஆணிகள், மணிகள் முதலான பிரார்த்தனைச்சின்னங்கள் அடிக்கப்பட்டும்,படி எதிரில் மண் குதிரை, மண் யானை பலவித துர் தேவதைகள் ஸ்தாபிக்கப்பட்டு மிருந்தன.

நாம் முதலில் கூறிய பணியாரந் கிழவி யண்டை பாதிராணுவ உடைதரித்து தலையில் வங்காளித் தலைப்பாகை தரித்தவனாய்,ஒருவன் உட்கார்ந்துபணியாரங்கள் தின்று கொண்டும், கிழவியுடன் உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டுமிருந்தான். இவன்பெயர் 'வலபத்ரன் இவன் அருகே ஓர் வேரில் கறுப்புவர்ணமான ஓர் துருப்பு (Troop) குதிரை கட்டப்பட்டிருந்தது.

இந்நிலைமையில் நாம் முன் கூறிய குதிரை வீரனும், இவ்விடம் வந்து சேர்ந்து, குதிரையை ஓர் ஆலம் வீழ்தில் கட்டிவிட்டு, கிழவியண்டை சென்று சில தின் பண்டங்கள் வாங்கிக்கொண்டு அருகிலிருந்த ஓர் கல்லின்மீது உட்கார்ந்து மௌனமாய்ப் புசிக்க ஆரம்பித்தான். அவனுள்ளம் எங்கெங்கேயோ ஸஞ்சரித்துக்கொண்டிருந்தது. கண்கள் ஒரு நிலைப்படாது நாற்புறமும் சுழன்று நாடி ஆங்காங்குள்ளவைகளை நுட்பமாய்க் கவனித்துக்கொண்டிருந்தன. கடைசியாக நமது வலபத்ரனும் கிழவியும் செய்து வந்த ஸம்பாஷணையைக் கவனிக்க ஆரம்பித்தான்.

புதிதாய் வந்தவனுக்குப் பலகாரங்கள் கொடுத்த பிறகு,

**கிழவி.**—அடே! வலபத்ர ! உனக்கென்னத்துக் கடா இந்தக்கயிட்டம்? சும்மா வாலைச் சுருட்டிக்கொண்டு போகாமே !

**வலபத்ரன்.**—அருகிலிருந்த போகணியால் ஒரு போகணி பதநீர் குடித்துவிட்டு மீசையைத் துடைத்து முறுக்கிக்கொண்டு, செறுமிவிட்டு உத்ஸாகமாய் "ஏ ! கிழவி ! யாத்தே ! நான் வலபத்ரன் இண்டு நினைச்சிக்கிடு. நான் எங்கேண்ணு வருதேன் தெரியுமா? கும்பினியான் (East India Company) பட்டாளத்திருந்து வருதேன். ஓடியே வந்தூட்டேன். அந்த 'மேசராம்' ஒருத்தன், சும்மா என்னை வெருட்ட ஆரம்பித்தான். ஓடியே வந்தூட்டேன். நான் வலபத்ரனில்லே ! இந்தக் கையினாலே எத்தான்பேரை கொண்டிருக்கேன் தெரியுமா ?" என்று தன் கையை ஓங்கிக்கொண்டு கிழவி தலைக்கு நேரே பிடித்தான்.

**கிழவி.**—நடுநடுங்கி "இதென்னடா சங்கடம், குடிவெறியிலே அடித்துவிட்டால் நம்மபாடு தீர்ந்து விடுமே!" என்று பயந்து "வலபத்ரா! நீ தைரியசாலி செத்தால் பிழைக்கமாட்டாய்—"

**வலபத்ரன்.**—ஆ! அப்படிச் சொல்லு. தெரிஞ்சுதா? அந்தா தோணுதே திருவூரு—அங்கே ஒரு பங்களா—

**கிழவி.**—அடேடே பாவிப்பயலே! குடியைக் கெடுத்தாயே! அதைப்பற்றி யொன்றும் கேளாதே. உனக்குக் கோடி புண்ணியமுண்டு. நான்பிள்ளைக்குட்டிக்காரி—

**வலபத்ரன்.**—(மறுபடி மீசையை முறுக்கிக்கொண்டு) "கிழவி ! மறுபடி வந்துவிட்டாயே. இந்தாப் பிடி பணத்தை."என்று ஒருகால் வராஹன் நாணயத்தைக் கிழவியண்டை எறிந்துவிட்டு மறுபடியும் நீ சொன்னால் இன்னும் எத்தனை பணம் வரும் தெரியுமா?" என்று தன் பணப்பையைக் குலுக்கினான்.

**கிழவி:**—தனக்குக்கிடைத்த பணத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டு ஆநந்த பரவசையாய், இன்னும் பணவாசையால் "ஏனப்பா ! என்ன கேட்குறே?" என்று முகமலர்ச்சியுடன் கேட்டாள்.

R. S. நாராயணஸாமி அய்யர் பீ. ஏ. பீ. எல்;



# ஸுசீலா ஸ்வயம்வரம்

## SUSILA SWAYAMVARAM

(82ம் பக்கத்துத் தொடர்ச்சி)

அரசன் மனம் கலங்க ஆரம்பித்தது. உடனே யந்திரியைக்கூவி "இந்தப்பிள்ளை சிசுவாயிருந்தபோது வைக்கப்பட்டிருந்த பெட்டியை இன்னும் வைத்திருக்கிறாயோ? இருந்தால் எடுத்துவா," என்று ஆஞ்ஞாபித்தான். யந்திரி பெட்டியை எடுத்துவந்து அரசன் சந்நிதியில் வைக்கவே, அதில் சிங்கத்தின் உருவம் வரைந்திருப்பதைப் பார்த்து சந்தேகம் எல்லாம் தெளிவாயிற்று. தெய்வ பலத்தை அழித்தல் அற்பமான மானிடனுக்கு சாத்தியமா?ஆயினும் மமதை மேலிட்டுப் போமாயின் கடவுளையும் மீறிநடக்க முரட்டுத்தயிரியம் சிலருக்குப் பிறப்பதுண்டு. அவ்வாறே அஸூயாவர்மனும் எண்ண மிடலானான். "எனக்கு அமித்ரனாய்ப் பிறந்தவன் இப்பொழுது சுமித்ரனாய் விளங்குகிறான். இதுவும் ஒரு விந்தைதான். ஊக்கமுடையவர் ஊழின் வலிசிந்தும் வன்மையுடையராவர் என்று முதியோர் வாக்கிருப்பதால் ஸுமித்ரனை அழிக்கப்பின்னும் முயல்வேன். தளராமுயற்சி தராத பொருள் எது?" என்று சுமித்ரனை ஒழிக்க உபாயந் தேட ஆரம்பித்தான்.

வேட்டை முடிந்தவுடன் மாலையில் அரசன் அரண்மனைக்குச்சென்று முகமலர்ச்சிலேசமுமில்லாமல் மிகுந்த கோபமுடையவனாயிருந்தான். அவனருகிற்போக எவரும் பயந்தார்கள். ஸமயஸஞ்சீவி ஒருவன் மட்டில் காரியத்தில்கண்வைத்தவனாயும் அவமதிப்பைப் பாராட்டாதவனாயு மிருந்தமையால் அரசனிடத்திற் சென்று கோபத்துக்குக் காரணத்தைக் கேட்க அரசனும் அவனிடத்தில் நடந்தவற்றையெல்லாம் விபரமாகச் சொன்னான். இருவரும் உடனே ஒதுக்கிடம் பார்த்து சுமித்ரனை ஒழிக்கச் சதியோசனை செய்யச் சென்றார்கள்.

அரசன் வந்து போனது முதற்கொண்டு ஸுமித்ரனுடைய மனத்தில் கொஞ்சம் கலக்கம் உண்டாயிற்று. கிராமத்திலிருந்து யந்திரத்தை நடத்தி அப்பிரசித்தனாய் ஆயுள் முழுவதும் கழிப்பதில் வெறுப்புத் தோன்றி இராஜஸேவகத்தில் விருப்புண்டாகி எப்படியாவது படைவீரனாக வேண்டுமென்று எண்ணமிட்டுக்கொண்டு ஸுமித்ரன் இருந்தான்.

அரண்மனை சென்ற அரசன் ஸமயஸஞ்சீவியுடன் கலந்து ஸுமித்ரனைக் கொலைபுரிய ஏற்பாடு செய்துவிட்டான். ஸஞ்சீவியே அக்கொலைத் தொழிலைச் செய்ய உடன்பட்டுக் குதிரை ஏறி ஸுமித்ரன் வீட்டு வாயிலில் குதிரையை நிறுத்திக்கொண்டு யந்திரிக்குச் சொல்லியனுப்பினான். யந்திரியும் அரசனிடத்திலிருந்து திருமுகம் வந்ததைக்கேட்டு வெளியே வந்தவுடன் ஸஞ்சீவி அவனை நோக்கி, 'உன் வீட்டிலுள்ள ஸுமித்ரன் என்னும் பிள்ளையை எமது அரசன் தம்மிடத்தில் ஸேவகனாக வைத்துக்கொள்ள எண்ணி அவனைஅழைத்துவரும்படிக் கட்டளை செய்திருக்கிறார். அரசனுடைய முத்திரையைப் பார்த்தால் உனக்கு நன்றாய்த் தெரியும். அரசன் திருமுகத்தைப் படித்துப் பார்", என்று சொல்லிஒரு கடிதத்தை அவன் கையிற் கொடுத்தான். அவன் தன் மனைவியிடத்திற் கொடுத்துப்படிக்கச்சொன்னான். வயிற்றிற்பிறந்தபிள்ளையினும் அருமையாகப் பதினாலுவருஷம் வளர்த்த சுந்தரமான ஆண்பிள்ளையை விட்டுப்பிரிய அவ்விருவருக்கும் ஸம்மதமேயில்லை. அரசன் ஆணையை மீறி நடத்தவிலும் விருப்பமில்லை. இருவரும் யோசித்துக்கொண்டிருக்குங்காலையில் ஸஞ்சீவி "என்ன யோசனை செய்கிறீர்கள் ? உங்கள் வளர்ப்புப்பிள்ளை உன்னத பதவிக்கு வந்து இராஜ்யபட்டாபிஷேகம் பெறப் போகின்றான். அவனை என்னோடு அனுப்புவதில் எள்ளளவேனும் மனவருத்தம் வேண்டியதில்லை. தாமதப்படுத்தாதீர்கள்." என்று இரைந்து சொன்னான். மாதாபிதாக்களிருவரும் ஸுமித்ரனைக் கட்டித்தழுவிக் கண்ணீர் உகுத்து "உயர்ந்த பதவியை அடைந்து நீடூழி காலம் வாழ்ந்து ஸுகமாயிருக்க" வென்று சிறுவனை ஆசிர்வதித்தார்கள். ஸமித்ரனுக்கு முதலில் அரண்மனை உத்தியோகத்தில் அமர்வதில் ஆசையிருந்தாலும் மாதாபிதாக்களாய்த் தன்னை வளர்த்தவர்களை விட்டுப்பிரிய மனம்வராமல் கண்ணீர் விட்டுக்கொண்டு நின்றான். ஸஞ்சீவி ஸுமித்ரனை நோக்கி, "ஏனடா பிள்ளாய், பெண்கள் மாமிவீட்டுக்குப் போம்போது அழுவதுபோல் கண்ணீர் விடுகின்றாய் ! ஆண்மக்களுக்கு அரசஸேவகத்திலும் மேலானது எது ? அழுவதைநிறுத்தி என்னுடன்குதிரையின்மீது ஏறிக்கொள். நாம் தாமதித்துப் போனால் அரசனுக்கு உன் மேலுண்டாயிருக்கிற ஆசை குறைந்துவிடும். நல்ல பதவிகளை யடைய நாள்செல்லும்," எனவே சுமித்ரன் யந்திரியையும் அவன் மனைவியையும் திரும்பவும் வணங்கி ஸஞ்சீவி ஏறியிருந்த குதிரையின்மேல் தானுமேறி உட்கார்ந்தான். ஸஞ்சீவி யந்திரியை அருகி

லழைத்து, அரசன் இந்தப் பணப்பையை உன்னிடம் கொடுக்கச் சொன்னார். அதிலுள்ள பொன் உனக்கும் உன் மனைவிக்கும் வெகுகாலம் ஒருவேலையும் செய்யாமல் ஜீவித்திருப்பதற்குப் போதுமானது. பெற்றுக்கொண்டு ராஜபக்திபுடையவனாய்ச் சுகித்திரு"என்று சொல்லிக் குதிரையைத்தட்டிவிட்டான். குதிரை வாயுவேகமாய் ஓடினமையால் அதி சீக்கிரத்தில் இருவரும் கண்ணுக்கெட்டாத தூரம் போய்விட்டார்கள்.

ஸஞ்சீவி அரசனிடத்தில் விடைபெற்று வருங்காலத்தில் அரசன் அவனிடத்திற் சொன்னதாவது "செத்தார் பிழையார். நீ எடுத்துப்போகும் வாளை உன் கழுத்தில் மறைத்து வைத்துக்கொள். உன்னிடத்தில் ஈஷத்தேனும் ஸம்சயம் பிறக்கும்படி ஒன்றுஞ்செய்யாதே. மற்ற விஷயங்களைப்பற்றி இருவரும் பேசினதை எல்லாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்' ஸஞ்சீவிக்குக் கொலைத்தொழில் ஸஹஜதர்மமாயிருக்க இவ்வளவு எச்சரிப்பு அரசன் செய்தது ஆச்சரியமாயிருக்கிறது.

ஸௌமித்ரன் மனமோ பிறந்த தேதிமுதல் பாபம், பயம், இத்தன்மையவென்று அறிந்ததன்று. தனக்கு ஏதோ அதிகமான லாபங்கிடைத்துத்தான் கீர்த்தி பெற இது ஒரு தெசை வந்திருக்கிறது என்று அவன் களிப்படைந்திருந்தான். உலகத்தின் திருட்டுப்புரட்டுத் தெரியாத சிறுவர்கள் மனோராஜ்யஞ் செய்வதும் இயல்புதான். ஸஞ்சீவிமட்டில் எதையோ எண்ணிக்கொண்டு கவலை கொண்டவன்போல் மௌனமாகவே சவாரி செய்துவந்தான்.

இராஜதானிக்குப் போகிற பாட்டை மாறிக் காட்டுக்குச் செல்லுகிற குறுக்குவழியில் ஸஞ்சீவிகுதிரையைத் திருப்பினவுடனே ஸௌமித்ரன் "ஐயா, இது காட்டு வழியாயிற்றே; இங்கு என் நாம் போதல்வேண்டும் ?" என வினவ, ஸஞ்சீவி, "சிறுபிள்ளாய், நமது அரசன் அரணிய வாஸியான ஒரு ரிஷியின் ஆச்ரமத்தில் உபதேசம் பெறுவதற்குப் போயிருக்கிறார். அங்கேதான் நாமும் போதல்வேண்டும், சும்மாவா," என்று அதட்டிச்சொல்ல, ஸௌமித்ரனும் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் வயதுதாண்டாதவனானதால்கொலைக்கார மந்திரி சொன்னது வாஸ்தவமென்று நம்பிப்பேசாமலிருந்தான்.

சிறிதுதூரஞ் சென்றபிறகு ஒரு குன்று இருந்தது. அதன்மேலேறி கீழ்ப்புறமாய் வருகையில் ஸௌமித்ரன் பயந்து ஸஞ்சீவியைக் கட்டிக்கொண்டான். கீழ்த்தரை சேறாயிருந்தமையால் குதிரை பிரயாசைப்பட்டே நடக்கும்படி யாயிற்று. இறக்கத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மனுஷ்ய ஸஞ்சாரம் இல்லையென்று முன்னதாகவே பாரத்துத் தன் மனத்தைத் திடஞ்செய்துகொண்டு ஸஞ்சீவி "ஸௌமித்ரா, குதிரையின் வயிற்றுக்கச்சை அவிழ்ந்துபோயிற்று ; கீழிறங்கி அதை இறுக்கிக் கட்டு" என்றான். நிஷ்கபடியான சிறுபிள்ளை அவன் சொன்னபடி கீழிறங்கினவுடன், ஸஞ்சீவி தன் கழுத்திற் சுற்றிவைத்திருந்த வாளால் ஸௌமித்ரன்மேல் ஒருவீசு வீசினான். வாள் பாலன் விலாவிற் படவே, அவன் கீழே வீழ்ந்து மூர்ச்சையடைந்தான். ஸஞ்சீவி குதிரையைவிட்டிறங்கிஸௌமித்ரனுடைய இரத்தாசயம் துடிக்கிறதைப் பார்த்து ஸௌமித்ரன் உயிரை மாய்க்கக் கத்தியை மறுபடியும் ஓங்கினபோது மணி அடிக்கிற சத்தம் அவன் காதிற்பட்டது. யாரோ வழிப்போக்கர்கள் கிட்ட வந்து விட்டார்களென்று பயந்து நினைத்த காரியத்தை முடிக்காமலே கத்தியைக் கீழெறிந்து விட்டு ஸஞ்சீவி குதிரை மேலேறிக்கொண்டு ஓடிப்போனான். ஸௌமித்ரன் பிரஞ்ஞாபங்கனாய்த் தரையில் கிடந்தான்.

ஸஞ்சீவி ஸவாரி போகையில் குதிரை கால்தவறி விழுந்திறந்தது; அவனுக்குங் கால் கைகளில் இரத்த காயம்பட்டது; ஆயினுமவன் வன் மனமுடையனாதலால் இருட்டிப்போயும் கால் நடையாகவே நள்ளிரவில் அரண்மனை சேர்ந்து காவலாளிகளிடத்தில் தான் வந்த சேதியை அரசனுக்குத் தெரிவிக்கும்படி சொல்ல, அந்தப்புரத்திற் படுத்துறங்கின அரசன் ஆவலோடு வெளியிலோடி வந்து "செத்தார் பிழையாரென்பது வாஸ்தவந்தானே, சொல்" என்று கதறினான். நடந்தவற்றை யெல்லாம் ஸஞ்சீவி சொல்லக்கேட்டு அரசன் மனம் பூரித்து "ஸஞ்சீவி, உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் ? திரிகாலஞ்ஞர்கள் என்று சொல்லித் திரியும் தாடிவீசை யுடையதபஸ்விகளுடைய தீர்க்கதிருஷ்டியையும் பொய்யாக்கினாயே. உன்னைத்தான் புருஷ சிரேஷ்டன் எனலாம். உன்னை மந்திரியாகப் பெற்ற என்னிலும் பாக்கியசாலிகளாய் அரசுரிமை படைத்தவர்கள் எந்த நாட்டிலுமில்லை. நீ எனக்குச்செய்த உபகாரத்திற்கு என் கழுத்திலிருக்கும்இரத்தினமாலையை உன் கழுத்தில் போடுகிறேன். என் விரலிற் போட்டிருக்கும் வயிரமோதிரத்தை அருமையான காரியத்தைச் செய்து முடித்த உன் விரலிற் போடுகிறேன். எனது பொக்கிஷத்தில் சேமித்து



வைத்திருக்கும் பொற்குவியல்களிற் பாதி உன்னதே. உன் உடம்பு இன்று மிகவுங்களைத்திருக்க வேண்டும். உடனே நீ வீடுபோய்ச்சிரம பரிகாரங்கள் செய்துகொண்டு நாளையபகலில் நமது சந்நிதானத்துக்கு வரலாம்" என்று அவனுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு அந்தப்புரம் போகையில் விடபுருஷர் பாடும் சிருங்காரப்பாட்டு ஒன்று பாடிக்கொண்டுபோனான். என்றைக்குமில்லாத உல்லாஸம் அஸூயாவர்மன் அன்றிரவு உடையவனாய்க் காட்டினமையினால் அரசியும் மனம்பொங்கிக் களித்தாள்.

கொலைத் தொழில் புரிந்தவன் மனக்கொதிப்புப் பொன்னாலும் மணியாலும் ஆறுமா? ஸஞ்சீவி தன் வீட்டிற்குப்போய் ஸ்நானபானாதிகள்செய்து படுத்துறங்கப்போனால் ஸௌமித்ரன்உருவமே கண்ணுக்கெதிரில் நின்று "அடா பாவி உனக்கு நான் என்னகேடு செய்தேன் ? என்னை யேன்கொல்ல யத்தனித்தாய் ? எங்கும் நிறைந்த பரம்பொருளானதயாபரக்கடவுள் உனக்குத்தக்க கூலிகொடுப்பார். இன்று முதல் நீ ஊண் உறக்கமற்றுச் சாவாய். உனக்கு இன்னும் எழுநாள் ஆயுளிருக்கின்றது. அதற்குள் நீ செய்த பாபங்களுக்குத்தக்க பிராயச்சித்தாதிகள் செய்துகொண்டு கடவுளடிசேரமுயல். மேலும் மேலும் பாபச்செயல்களைச் செய்ய எண்ணாதே," என்று சொன்னதுபோல் தோற்றிற்று. மருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேயன்றோ ? பாவம் ! ஸஞ்சீவியின் வாழ்க்கை நாயினும் கேடுள்ளதாயிற்று. சொப்பனத்திற்கண்டபடியே ஒருவாரத்திற்கெல்லாம் ஸஞ்சீவி இறந்தான். அரசன் கட்டளையினால் ஸஞ்சீவியின் உத்தரக்கிரியைகள் வெகுவிமரிசையாக நடத்தப்பெற்று அவனுடைய ஞாபகார்த்தமாய் ஒரு சிலாரூபமுஞ்செய்து வைக்கப்பட்டது. உலகத்தார் பாபிகளையும் மறக்கலாகாது போலும்.

மேலே சொல்லிய காரியங்கள் நடந்து நாலு வருஷங்களாயின. அஸூயாவர்மனுடைய முதல்தாரமான ஸௌந்தரியின் புத்திரிஸௌசீலாவுக்குப்பதினெட்டுவயது நிரம்பியது. விவாககாலங் கிட்டிற்று. அரசனும் அந்த விஷயத்திற் சற்று கவலைகொண்டவனாய்த் தானிருந்தான். ஆயினும் ஸ்வயம்வரத்திற்கு அவன் ஸம்மதிக்கவில்லை. தனக்கிஷ்டமான ஒரு ராஜபுத்திரனுக்கு ஸௌசீலையை மணம் புரிவிக்கிறதாகத் தன் மனத்தில் உறுதி பண்ணியிருந்தான். முதல்தாரம் இறந்தபிறகு அவள் பேச்சுக்கு மரியாதை வைத்து நடக்குங்காரணவர்கள் உலகத்தில் துர்லபம்.

மடந்தைப் பருவத்தை யடைந்த ஸௌசீலை தன் தாயைப்போலவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய ஸ்திரீகளுக்குரிய இனிய குண நிதியாயிருந்தாள். வனப்பில் மிகுந்திருந்தாளென்று சொல்ல வேண்டாம். தன் தோழிகளோடு உத்தியான வனத்திற்சென்று புஷ்பச்செடிகளைப் பரிபாலித்தும், மானினங்களை ஆதரித்தும் சிருஷ்டிப் பொருள்களைக் கண்டு களித்தும் பெரியோரைத் தக்கபடி உபசரித்தும் மாறுபாடாய் மனங்கோணாமல் நடந்தும் ஸங்கீதம் பயின்றுங் காலத்தைப் போக்கிவந்தாள். அந்தப்புரத்தில் ஆண்மக்கள் வருதலிலதால் அவர்களுடன் ஸௌசீலைக்கு எவ்வகைப் பழக்கமுங் கிடையாது. புருஷர்களில் பிதாவையும் பிதாவின் குருவாகிய ஸௌவாஸகர் என்னும் விருத்தரையுந் தவிர வேறொருவரையும் அவள் கண்டிலள். விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணமே அவள் மனத்திற் பிறக்கவில்லை. இது எவருக்கும் ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று.

காட்டில் வஸித்த தாபஸியர்களில்அத்திரிஎன்றொருவர். அவர் சந்நியாசி ; அவருக்குச் சிஷ்யப்பிள்ளைகள் நூறுபேர். ஒரு முறை அவர் அதிசய நகரத்திற்குத் தன் பரிவாரங்களோடு வந்தார். அஸூயாவர்மன் அந்தத் தபஸியையும் அவர் சிஷ்யர்களையும் அரண்மனைக்குத் தருவித்துப் பலவுபசாரங்கள் செய்தான். சிஷ்யர்களில் ஒருவன் மாத்திரம் படைவீரர்க்குரிய கவசம் பூண்டு அகன்ற மார்பினாலும் திரண்ட தோள்களாலும் நீண்ட கண்களாலும் ராஜகுமாரனைப்போல் விளங்கினான். அவனை மட்டில் அரசன் ஏற இறங்கப்பார்த்துத் தனதருகிலழைத்து, "நான் உன்னைமுன்னொருமுறை கண்டிருக்கிறேன். எங்கு என்பது உனக்கு ஞாபகம் இருக்குமாயின் சொல்வாயாக" என்றான். போர்வீரன் "மஹாபிரபுவே, யந்திரியின் வீட்டில் நாலுவருஷத்திற்குமுன் தங்களுடைய தரிசனம் எனக்காயிற்று. தங்களுடைய ஆஞ்ஞைப்படி ஒருவர் அரண்மனையில் சேவகஞ்செய்யவென்று அழைத்துக் காட்டில் நுழைத்துக் கத்தியினால் என்னை வெட்டிக் கீழேதள்ளிக் குதிரையிற் போய்விட்டார். நான் மெய்ம்மறந்து தரையிற் கிடக்கையில் அத்திரிமஹரிஷியுங்அவர்சிஷ்யர்களில் ஒருவரும் அங்கு அகஸ்மாத்தாய் வந்து என்னை வெகு ஆதரவோடு ஆச்சிரமத்திற்குக் கொண்டுபோய் சிகிச்சைசெய்து காயத்தை யாற்றிப் பிராணதானஞ்செய்து தமது சிஷ்யர்களில் ஒருவனாகவைத்துக்கொண்டிருக்கிறார். இதுவே என் சரித்திரம்" என்றான். இதைக்கேட்டவுடன் ஸஞ்சீவியும் தானும் செய்த சதியோசனை நிறைவேறாமற் போனதை நினைத்து அரசன் முகங்கறுத்தான். ரிஷியினிடத்திலிருந்த மதிப்பினால் ஒன்றும் பேசாமல் போர்வீரனை யனுப்பிவிட்டு ரிஷியைத்தனியே அழைத்துப் புதிய யுத்த

வீரனைப் பற்றிக்கேட்க அவர், "அரசனே, ஒரு முறை நானும் என் சிஷ்யனும் ஓர் ஏழைக்குடியானவனுக்குப் பிராயச்சித்தஞ் செய்விக்க இரவிற்போனோம். சிஷ்யன் சிறுபிள்ளையாயிருந்தமையால் கையில் மணியை எடுத்துக்கொண்டு அதையடிக்கடி அடித்து வந்தான். மலையிறக்கத்தில் வரும்போது இந்தச் சிறுவன் தரையில் பிரேதம்போற் கிடந்ததைக் கண்ட நாங்களிருவரும்அவனைத் தூக்கிப்போய் ஔஷதங்களாலும் மந்திரங்களாலும் சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தி உபதேசங்கள் செய்தமையால் ஸுமித்ரன் இப்போழ்து வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் அஸ்திரவித்தைகளிலும் மஹாபாண்டித்ய மடைந்து எங்கள் ஆச்சிரமத்தைக் காவல்செய்கிற யுத்தவீரனாயிருக்கிறான், கல்வியைத் துரிதமாய்க் கற்பவனாயினும் அவனுக்கு யுத்தத்திலேயே மனஞ்செல்கின்றது. ஆனது பற்றித்தான் ஸதாகாலமும் கவசமும் கத்தியும் தரித்தவனாயிருக்கிறான்" என்றுசொல்லி ஸுமித்ரனைநோக்கி "பிள்ளாய், உன் உடலில் நாலுவருஷத்திற்கு முன் னுதைத்தவாளை அரசனுக்குக் காண்பி" என்று கட்டளையிட்டார். ஸுமித்ரன் தன் உடையிலிருந்து ஒடிந்து போன ஒரு வாளின் பாகத்தை அரசன் கையில் கொடுக்க அவன் அதைக் கண்ணுற்றுப் பரீக்ஷை செய்தான். "செத்தார் பிழைபார்" என்று அதில் எழுத்துக்கள் வெட்டியிருந்தன. ஸஞ்சீவியிடத்தில் ஸுமித்ரனைக் கொல்லத்தான் கொடுத்த கத்திதான் என்று அரசனுக்கு நிச்சயப்படவே, அஸூயாவர்மன் அத்திரிரிஷியை வணங்கி "மஹானுபாவரே, ஸுமித்ரன் என்னும் யுத்தவீரன் என் அரண்மனைக் காவலுக்கு அவசியம் வேண்டியவனாயிருக்கிறான். தாங்கள் தயைகூர்ந்து அவனை எனக்குத் தரல்வேண்டும். நான் அவனைப் பிள்ளைபோல் வளர்த்து முன்னுக்குக்கொண்டு வருகிறேன்" என்று கேட்க ரிஷியும் ஸம்மதித்து ஸுமித்ரனை அரண்மனையில் விட்டுக் காடுசென்றார்.

அரசனோ தான்பிடித்தபிள்ளையாரெல்லாம்குரங்காய் முடிந்ததை நினைத்து மிகவருந்தினான். தெய்வபலம் இருக்குங்கால் மனுஷன் செய்யக்கூடிய தென்ன? சிற்றறிவினனாகிய மனிதன் மமதையால் தெய்வத்தையும் ஏமாற்றலாம் என்று ஒவ்வொரு காலத்தில் எண்ணத்துணிந்து பாபத்தில் வீழ்கிறான். இவ்வறிவீனத்திற்கு நாம் செய்யக்கூடியதொன்றுமில்லைபோலும்.

ஸுமித்ரன் அரண்மனைக்குவந்தஸமாசாரம் அரண்மனையிலுள்ள ஆண் பெண் அனைவரும்அறிந்து அவனைப்பார்க்க ஆவல்கொண்டார். அரசனும் ஆஜாரவாசல் முதற்கொண்டு அந்தப்புரம்வரையில் உள்ள எல்லாக்காவற்காரர்களுக்கும் தலைவனாக ஸுமித்ரனை நியமித்தபடியால் அவனுடைய யௌவனமும், வனப்பும், விநயமும் ஸ்திரீ புருஷர்களுடைய மனங்களைக் கவர்ந்தன என்று சொல்லவும் வேண்டுமோ?

(இன்னும் வரும்.)

கே. வேங்கடராமய்யர் பி. ஏ.,

# நாகாநந்தம்

## NAGANANDA : A CLASSICAL DRAMA

(தொடர்ச்சி)

அல்லது நீ அங்குதான் இரு; நான் எவை செய்ய வேண்டியனவோ அவற்றை எல்லாம் நானே செய்கிறேன். (நாயகனைப்பார்த்து) பெரியோய்! இங்குவாரும்! இவ்விடம் தயவுசெய்து எமக்குப் பெருமையுண்டாக்கும்.

**விதூஷகன்.**—இவள், சாதுரிகை, இனிக்கப் பேசுகிறாள். நாமிங்கு உட்கார்ந்து சற்று இளைப்பாறுவோம்.

**நாயகன்.**—நிரம்ப ஸரி. ஆகட்டும் (இருவரும் உட்காருகிறார்கள்)

**நாயகி.**—(தோழியைநோக்கி) அடி விளையாட்டுத்தனமாக இவ்வாறெல்லாம் செய்யாதே. யாராவது தவமுனிவர் கண்டால் நான் ஏதோ நடத்தை தவறியதாக எண்ணுவர். (முனிவன் ஒருவன் வரல்)

**முனிவன்.**—எங்கள் குலபதியாகிய கௌசிக முனிவரால் இவ்வாறுஆஞ்ஞாபிக்கப்பட்டிருக்கிறேன்: 'குழந்தாய்! சாண்டில்ய! வித்தர்நாட்டு இளவரசன் மித்ராவஸு, தனது தந்தையின் ஆணையைத் தலைமேல் கொண்டு, வித்யாதர நாட்டின் பட்டமடைய நிற்கும் அரசன் ஜீமுதவாஹனனை, தனது தங்கை மலயவதியை மணந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்யச் சென்றிருக்கிறான். மலயவதி அவரை எதிர்கொள்ளவேண்டி வரும். அவள் மத்தியான பூஜையில் காலத்தைப் போக்கிவிட்டாற்போல இருக்கிறது. அவளைப்போய் அழைத்துவா'? ஆகையால் நான்கௌரிஆலயம் சென்று மலயவதியை அழைத்துப்போவேன். (நடந்துகொண்டு, நிலத்தைப்பார்த்து ஆச்சரியத்துடன்) அஹோ! இம்மண்மேல் இது யாருடைய அடிச்சுவடாய் இருக்கலாம்? இதில்சக்கரரேகை நன்றாய் அழுத்தமும் திருத்தமுமாக அமைந்திருக்கிறது. (ஜீமுதவாஹனனை எதிரில் பார்த்து) ஆம் ஆம்! அந்தப் பெரியோனுடைய அடிச்சுவடாகத்தான் இருக்கும். வாஸ்தவமாக அதுதான்!

தலைமேல் கிரீடம் தயங்கி யொளிவீச,
புரூர மிரண்டினிடை வரூஉமயிர் வரி யொடும்
விரிவிதழ்த் தாமரை தருகண் துணையொடும்,
பஞ்சானனத்தெதன பராவிய மார்பொடும்,
மிஞ்சிய சக்கரக் கோடொடு விஞ்ஞையின்
மயங்கிய தாட்டுணை விளங்குறூஉம் மன்னிவன்



விஞ்சையர் நாட்டிற் கிசைஞ்சிடு
அரசரே ருமென உரைசெய்வதென் மனனே.

அல்லது நான் ஏன் சந்தேகிக்கவேண்டும்? நிச்சயமாக இவன் ஜீமுதவாஹனனாகத்தான் இருக்கவேண்டும். (மலயவதியைப் பார்த்து)அஹோ! இங்கு மலயவதியும் இருக்கிறாள்! (இருவரையும் பார்த்து) ஒருவர்க்கொருவர் பின்வாங்காத அழகுங் குணமுமுடைய இவ்விருவரைச் சேர்த்திடில் கடவுள் எல்லாவற்றையும் ஒப்பச்செய்யவல்லவரென்றுதான் எண்ணவேண்டும்!

(நாயகன் அருகு வந்து)அரச! உனக்கு ஜயமுண்டாகட்டும். ஜயவிஜயீபவா!

**நாயகன்.**—பகவன்! ஜீமுதவாஹனன் உம்மை நமஸ்கரிக்கிறான். (எழுந்திருக்க முயல்கிறான்)

**முனிவன்.**—உட்கார்ந்திரு. 'ஸர்வஸ்யாப்யாகதோ குரு' 'அதிதியாரினும் சிறந்தோன்.' உம்மையே நாங்கள் வணங்கவேண்டும். நீர்ஸௌக்கியமாக உட்கார்ந்திரும்.

**நாயகி.**—ஐய! நான் உம்மை வணங்குகிறேன்.

**முனிவன்.**—(நாயகியை நோக்கி) உனக்கு நல்ல கணவன் அநுக்ரஹமாகட்டும்! அம்மா! 'மத்தியான வேளை கடந்து விடுகிறது. உடனேவா' என்று கௌசிக முனிவர் உம்மிடம் சொல்லச்சொன்னார்.

**நாயகி.**—ஆசாரியர் ஆணையிட்டபடியே! (நெட்டுயிர்ப்போடு எழுந்திருந்து—தனக்குள்)

மாசில் மாமுனி வாய்மையிற் செல்லவும்
ஆசைக் கள்வனை யன்பினில் நோக்கவும்
பூச லாட்டி பொறுக்கலா தீர்ப்புறத்
தூச லாடு மென்னுள்ள மிதன்றே!

(நாணத்தோடு ஜீமுதவாஹனனைக் கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டு, தோழியோடும் முனிவனோடும் போதல்)

**நாயகன்.**—

தோன்று மொக்கலின் சோர்வின் கனத்தினால்
ஆன்ற மெல்லடி அன்னத் தசைஞ்சுரு அய்ந்
தூன்று மோர்புற மாயி னுரத்தின்வந்
தூன்று மென்னுர முட்கு மீதந்தோ!

**விதூஷகன்.**—அப்பாடா! நீ பார்க்கவேண்டியதைப் பார்த்தாச்சுது. நீ கேட்கவேண்டியதையும்கேட்டாச்சுது. என் வயிற்றில் பசியின் ஜ்வாலை இந்த சூரியனுடைய ஜ்வாலையால் இரட்டித்தாப்போல எரிகிறது. இந்த (தன்னைக் கட்டிக்கொண்டு) பாழும் பிராமணன் யார் வீட்டிலாவது போய் அதிதியாக இருந்து இலை காய் கந்த மூலங்களைக்கொண்டு கொஞ்சம். இந்த உயிரும் உடம்பும் பிரியாதிருக்கும்படிச் செய்யலாம், வாரும் வாரும் போகலாம்.

**நாயகன்.**—(நிமிர்ந்து பார்த்து) சூரியன் உச்சமடைந்தான்.

சந்தனக் குழம்பின், தாங்கலா வெப்பம்
நைந்திட குளித்து, நகுவெண் கன்னத்து
நெடுங்கா ததனால் விடாது வீசிக்
கடவுள் காற்றுங் கலங்கிடச் செய்து
முகவெயர் வகற்றி மொய்ம்பின் புழைக்கர
மதனா நீரைப் பதமா யிறைத்து தான்
உலையா திருந்த உன்மத்த வேழம்
சல்லக மதுபோது ஒல்லென வீழும்
தன்மை வாய்ந்த தகைமையும் என்னே!

ஸரி நாம் போகலாம்வா—(இருவரும் போகிறார்கள்.)

(தொடரும்.)

## திரு-அங்கமாலை-பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்.

தலையே நீவணங்காய், தலை-
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந்தலைவனைத்,
தலையே நீவணங்காய் (1)
கண்காள் காண்மின்களோ, கட-
னஞ்சுண்ட கண்டன் றன்னை,
யெண்டோள் வீசிநின்றாடும்பிரான் றன்னைக்,
கண்காள் காண்மின்களோ (2)
செவிகாள் கேண்மின்களோ, சிவ-
னெம்மிறை செம்பவள,
மெரிபோன் மேனிப்பிரான்றிறமெப்போதுஞ்,
செவிகாள் கேண்மின்களோ (3)
மூக்கே நீ முரலாய், முது-
காடுறைமுக்கணனை,
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை,
மூக்கே நீ முரலாய் (4)
வாயே வாழ்த்துகண்டாய், மத-
யானை யுரிபோர்த்துப்,
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான் றன்னை,
வாயே வாழ்த்துகண்டாய் (5)
நெஞ்சே நீ நினையாய், நிமிர்-
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை,
நெஞ்சே நீ நினையாய் (6)
தேடிக்கண்டுகொண்டேன், திரு-
மாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணாத் தேவனை யென்னுளே,
தேடிக் கண்டுகொண்டேன் (12)

திருச்சிற்றம்பலம்.

# மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

### Essay writing

### III. விளக்க வியாஸங்கள்

### EXPOSITORY ESSAYS

### (2) செயற்கைவிஷயங்கள்—தபால் ஒழுங்கு

### Artificial things—The Postal System

குறிப்பு.—முகவுரை—முற்கால நிலை—உண்டான விதம் — அங்கங்கள் — உபயோகங்கள் — முடிவுரை ஸூக்ஷ்மவிஷயங்கள்.

முற்காலங்களில் ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு ஏதாவதுவிஷயங்கள் தெரிவிக்க வேண்டுமாகில் வேலை ஆள்கள் மூலமாகத்தான் நடந்தேறவேண்டும். ஒருஆள் அனுப்புவதென்றால் அவனுக்குக் கூலி முதலியவை கொடுத்தனுப்பவேண்டும். ஊர் வெகு தூரத்தில் இருந்தால், அதிகக் கூலியும், ஆளுக்குப் படிச்செலவுக்கு வேண்டியவைகளையும் கொடுத்துத்தீரவேண்டும். இம்மாதிரி ஸங்கதிகளை ஊர்விட்டு ஊர் அனுப்புவதற்கு அதிகச் செலவாவதால் பணக்காரருக்கு மாத்திரம்தான் இவ்வாறு செய்ய அனுகூலமாயிருந்தது. ஏழைகளுக்கு இவ்வாறு செய்ய முடியாததால், ஸங்கதி தெரிவிக்கவேண்டிய ஊருக்குத் தங்கள் காரியமாகப் போகும் ஜனங்களை எதிர்பார்த்திருந்து அவர்கள் தயவை முன்னிட்டுக்கொண்டு தமது காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. வெகுதூரத்திலிருக்கும் ஊருக்கு ஸமாசாரம் அனுப்ப வேண்டிவந்தால் பணக்காரன் கதியும் ஏழைகதியும் ஒன்றுதான். இவ்வளவு கஷ்டப்பட்டு ஸமாசாரங்களாவது சாமான்களாவது ஒரு ஆள்வசம் அனுப்புவித்தபோதிலும், அவன் எவ்வளவு நம்பிக்கையுடையவனாக விருந்தபோதிலும் குறித்தவிடம் போய் இவைகள் சேரும் என்பது நிச்சயமில்லை. வழியில் கொண்டுபோகையில் திருடர்கள்கையில் சிக்கி ஸாமான்களும், ஸங்கதிகளும் நஷ்டமாகிவிட ஏராளமான முகாந்தரங்கள் அக்காலத்து இருந்தன. ஆகவே அக்காலத்தில் ஒரு ஊரிலிருந்து தூரத்திலுள்ள மற்றொரு ஊருக்கு ஸமாசாரம் முதலியன சென்றெட்டுவது மிகக்கடினமாயிருந்தது.

இப்படி யிருக்கையில் ஐரோப்பாகண்டத்தில்சிற்சில பட்டணங்களுக்கு இடையில் ஸமாசாரக் கடிதங்கள் கொண்டு ஸரிவர இடங்களுக்குச் சேர்ப்பதற்கு 13-ம் நூற்றாண்டில் ஒருவித ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் இங்கிலாந்தில் 16-ம் நூற்றாண்டு பிற்பாதியில். வெளியூர் வியாபாரிகளுக்கு ஸங்கதிகள் தெரிவிப்பதற்காக ஒரு தபால் ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் ஒழுங்கானமுதல் தபால் ஏற்பாடு, **முதலாவது சார்லஸ்** காலத்தில் ஏற்பட்டு எட்டுமார்க்கங்களில் வேலைசெய்யப்பட்டு விருத்தியாகி வந்தது. அக்காலத்தில் கடிதம் ஒன்றுக்கு ஸுமார் 2 அணா முதல் 6 அணா வரை பிடித்தது. 1683-ம் ஆண்டில் **ராபர்ட் மர்ரே** என்பவர் அணாத் தபால் ஏற்பாடு செய்ய, ராஜாங்கத்தார் தமது தொழிலை வேறொருவன் பார்க்க முயலுவது நியாயமன்று என்று கூறி அதைத் தடுத்துவிட்டனர். 1708-ம் ஆண்டில் இம்மாதிரியான ஏற்பாடு ஒன்று தடைபட்டு நின்றுவிட்டது. தபால் வண்டிகள் ஏற்படுத்தி அவைகள் மூலமாகக் கடிதங்கள் ஊர் ஊராகச் சென்று பரவும்படி **பாத்** நகரத்திய **ஜான் பால்மர்** என்பவர் இதை ஒழுங்குபடுத்தினார். இருப்புப் பாதைகள் இந்த ஏற்பாட்டை நன்றாகஒழுங்குபடுத்தித் தற்கால நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன. வரவர கடிதங்கள், பத்திரிகைகள், புஸ்தகங்கள் முதலிய எல்லாவஸ்துக்களையும் கொண்டுபோவதற்குவேண்டிய பொது ஏற்பாடுகள் செய்து ஸராஸரி கடிதம் ஒன்றுக்குக்கால்அணாச் செலவுவரையில் செலவுத் தொகையை இறக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய, அவைகளால் ராஜாங்கத்தார் வரும்படி குறையாது அதிகமாவதையும் கண்டுணர்ந்து இக்காலத்திய காலணாத் தபாலை நமது தேசங்களில் ஸ்தாபித்தனர். மேலும் தந்தி அடிப்பதையும் தபால் ஏற்பாட்டோடு சம்பந்தப் படுத்திவிட்டதால், இம்மாதிரியில் எல்லாவித ஸௌகர்யங்களையும் குறைந்த செலவில் அடக்க இடம் உண்டாயிற்று.

கடிதமூலமாக ஸங்கதிகளை ஊர்விட்டு ஊர் அனுப்புவதற்காக இந்தத் தபால் ஏற்பாடு முதலில் ஏற்பட்டபோதிலும், நாளடைவில் அநேகவித உபயோக அங்கங்கள் இதோடு சேர்ந்துவிட்டன. அவையாவன, பணம் அனுப்பல், தபால் உத்தரவுகள், பத்திரக் கடிதங்கள், கடிதம் போட்டவர்களிடம் வந்துசேர்தல், பணம்சேர்க்கும் நாணயபாகம் முதலியன. ஒரு ஊரிலிருந்து வேறு ஒரு ஊருக்குப் பணம் அனுப்பவேண்டி யிருந்தால், இவ்விஷய குறிப்புகள் அடங்கியுள்ள ஒரு அச்சுக்காகிதத்தில் தொகை விலாஸங்கள் முதலியன குறித்து,



அனுப்பவேண்டிய தொகையை முதல் ஊர் தபால் வேலை இடத்தில் கொடுத்துவிட்டால் அந்த அச்சுக்காகிதம் மறு ஊருக்கு அனுப்பப்பட்டு அதில் கண்டிருக்கும் தொகை சேரவேண்டியவர்களிடம் சேர்க்கப்பட்டவுடன் அதில் ஒரு பாகத்திலிருக்கும் ரசீது வாங்கினவர்கள் கையெழுத்துடன் திரும்பி நம்மிடம் வந்து சேரத்தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாஸத்திற்கு ஒருதரமாவது அல்லது குறிப்பிட்டிருக்கும் காலங்களிலாவதுமேலான தலைமை வேலை இடங்களிலிருந்து மொத்தமாகப் பணம் மற்றைய வேலை இடங்களுக்கு அனுப்பப்படும். ஆகவே அடிக்கடிச் சிறு தொகையாகப் பணங்கள் அனுப்புவதும் அதனால் ஏற்படக்கூடிய தொந்தரவுகளும் இவ்வொழுங்கால் நன்றாகத் தடுக்கப்படும். கடிதங்கள் அனுப்புவதுபோலத் தபால் உத்தரவுகள் இவைகள் மூலமாக அனுப்பப்படும். ராஜாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள பாகங்களுள் தபால் ஏற்பாடுதான் லஞ்சம் முதலிய பாப ஸம்பந்தம் ஒன்றும் இல்லாததாகவும், அன்றன்று வேலை அன்றன்று தீரக்கூடியதாகவும், முற்றிலும் ஜனங்கள் நன்மைக்கே ஏற்பட்டதாகவும் உள்ள பாகம். இதில் ஏதாவது ஒழுங்குக் குறைவு ஏற்பட்டால், உடனே முறையிட்டுக் கொள்ளலாம். அதற்கு கடிதச் செலவாகிய தலை ஒட்டவேண்டியதேயில்லை. ஆகவே தபால் விஷயத்தில் உள்ள குறைகளைக் கேட்டு உடனே அதைத் தீர்க்க இந்த பாகாதிகாரிகள் இடைவிடாது தயாராயிருக்கின்றனர் என்பது விளங்கும். இதனாலேயும் இந்த ஏற்பாடு எல்லா ஏற்பாட்டைப் பார்க்கிலும் கலிகாலத்திற்கூட ஒழுங்காக ஜனங்களுக்கு நன்மை புரிந்துகொண்டு வருகிறது. தபால் உத்தரவுகள் பாகம் இந்தச் சிறப்பை யுடையது. அடுத்தபாகம் பத்திரக்கடிதங்கள். இவைகள் ஒரு கணக்குப் புத்தகத்தில் பதியப்பட்டு, போய்ச் சேர்ந்ததற்கு ரசீது வாத்தகுந்த ஏற்பாடுகளோடு ஸம்பந்தப்பட்டவை. இவைகள் மூலமாக பெருந்தொகைகளைப் பத்திரங்கள் ரூபமாகக் குறைந்த செலவுக்கு வெகு தூரம் அனுப்பலாம். இதனோடு அந்தத்தொகை வழியில் நஷ்டமானால் தபால் அதிகாரிகள் அதைத் திருப்பிக்கொடுத்து விடுவதாக ஒப்பந்தம் செய்து ஒருவித காவல்பணம் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடும் செய்திருக்கின்றனர். இவைகளால் பணம், விலையுயர்ந்த ஸாமான்கள் முதலியவை யாதொரு குறைவும் இன்றிக் குறித்தவிடம் போய்ச் சேர்ந்து விடுவது எளிதில் முடியக்கூடியதாகிறது. போட்ட கடிதத்தை வாங்குபவர் அகப்படாமலிருந்தாலும், அல்லது வாங்கமாட்டேன் என்று அவர்கள் மறுத்துவிட்டாலும், அல்லது கடிதங்களை மேல் விலாஸம் எழுதாது போட்டுவிட்டாலும், அவைகள் போட்டவர்களிடம் வந்து சேர்வதற்காக இந்த ஏற்பாட்டில் ஒரு உபயோககரமான பாகம் காணப்படுகிறது. பயனற்ற கடிதங்களைப் போட்டவர்களுக்கே கொண்டு சேர்த்து விடுவது இப்பாகத்தின் தொழில். இவைகள் எல்லாவற்றையும்விட ஏழைகளுக்கு அதிக உபயோகமான ஒரு பாகம் இந்த ஏற்பாட்டில் காணப்படுகிறது. அதுதான் பணம் சேர்க்கும் நாணயபாகம் என்பது. இதில் ஏழைகள் இன்னும் பணம் சேர்க்கவேண்டும் என்ற விருப்பமுடையவர்கள் ஆகிய இவர்கள் பணங்களை வாங்கிக்கொண்டு அவர்கள் வேண்டிய காலத்தில் வாரத்திற்கு ஒருமுறை பணம் எடுத்துக் கொள்ள இடங்கொடுத்து,மிகுதியிருக்கும் பணத்திற்கு வட்டி போட்டு மிகுந்த ஸஹாயம் இங்குச் செய்யப்படுகிறது. வாரம் ஒருமுறைதான் பணம் எடுக்கலாம். வருஷத்திற்கு ஒரு தொகைக்குமேல் போடவுங்கூடாது,மற்றொருதொகைக்கு மேல் எடுக்கவும் கூடாது என்றநிபந்தனைகள் இங்கு காணப்படுவதால்,இதுஏழைகளுக்கே மிக உபயோககரமானது. அடிக்கடி அவர்களைப்பணம் எடுத்துச் செலவழிக்கவும் விடாது,இதில் காணப்படும் வட்டி அவர்களைப் பணம் சேர்த்துக் கட்டும்படியும் தூண்டும்.

முற்கூறியவைகளிலிருந்து நாளடைவில், ஸமாசாரக் கடிதங்கள் கொண்டுபோவதற்காக ஏற்பட்ட ஒருஏற்பாடு வரவர பொதுஜனங்களுக்கு உபயோககரமாகப் பெருகி இப்பொழுது இவ்வாறு அநேகவித சிறப்பு வாய்ந்த பாகங்களைத் தன்னுள் அடக்கி யிருக்கிறது என்பது வெளியாகும். இதுதான் ஜனங்களிடமிருந்து வாங்கும் பணத்தைவிட அநேக மடங்கு நன்மைகளை அவர்களுக்கு உண்டாக்கும் பாகம். பாபங்களுக்கு அஞ்சி ஜனஹிம்ஸையால்பிழைக்க மனமில்லாத இரக்க மனம் உடையோர் இந்தப் பாகத்தில் வேலையில் மனச்சஞ்சலமின்றி அமரலாம். இதில் வேலை எவ்வளவு கஷ்டமாகஒவ்வொரு ஸமயங்களில் இருந்தபோதிலும், இத்தொழில் பாபஸம்பந்தமில்லாதது, இங்கு அன்றன்று விஷயம் அன்றன்றே தீருவது, இது பொதுவாக ஜனங்களுக்கு நன்மையையே பயப்பது என்ற

மூன்று சிறப்பும் இதனுள் இருப்பது ஸதா ஞாபகத்திலிருந்தால், அக்கஷ்டங்கள் நம்மைத் தாக்கா.

தபால் பொதுவாக நன்மையையே பயக்கும் ஒழுங்காகஇருப்பதற்கு ஒருமுக்கியகாரணம் உண்டு. அதாவது யார் அதைக் குற்றங்கூறியபோதிலும் அதை உடனே விசாரித்துச் சீர்திருத்த அதன் அதிகாரிகள் தயாராய் இருப்பதே. சீர்திருத்தும் இந்த புத்தி இல்லாது தமது விஷயங்கள் இரகஸியமாக விருக்கவேண்டும் என்று அதிக ஊக்கத்துடன் தமது பாக விஷயங்களைக் காக்கும் மற்றை அதிகாரிகள் கீழ்இருக்கும், கல்விப்பயிற்சி, தேசரக்ஷணம் முதலிய பாகங்கள் இதைப்போல அவ்வளவு கலப்பில்லா நன்மைகளைப் பயப்பனவல்ல. அவைகளில் பொதுஜனத்தீமை அதிகம் காணப்படும். ஆகலால் சீர்திருந்தி சிறப்படைய வேண்டும் என்ற ஆவல்தான், மனிதனைச் சிறப்படையும்படிச் செய்வதுபோல, மனிதர்களது பொதுநன்மைக்குரிய ஏற்பாடுகளைச் சிறப்புற்றோங்கும்படிச் செய்யும். இத்தகைய ஆவல் தபால் ஏற்பாட்டோடு ஸம்பந்தப்பட்டிருப்பதால் அது எக்காலத்திலும் சிறந்த ஏற்பாடாக விளங்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம் !

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்.

1. ஸமாசாரப் பத்திரிகைகள்
2. யானைபிடித்தல்
3. காட்சியிடம்
4. விளக்கிடும் வழிகள்
5. புடைபெயர்ச்சிவிதங்கள்
6. பொதுசுகவழி
7. தொழிற் பிரிவு
8. வாய்க்கால்கள்
9. உழவு
10. சர்க்கரை உண்டாக்கல்

### பொதுக் குறிப்புகள்

1. முகவுரை: முற்கால நிலை
2. உண்டானவிதம்
3. அங்கங்கள்
4. உபயோகங்கள்
5. முடிவுரை:—ஸூக்ஷ்ம விஷயங்கள்

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## TRANSLATION MODELS.

### 7. Imperfections of great men.

Mankind is helped in its progress almost as much by the study of imperfection as by the contemplation of perfection. Had we nothing before us in our futile and halting lives but saints and the ideal, we might well fail altogether. We grope blindly among the catacombs of the world, we climb the dark ladder of life, we feel our way to futurity, but we can scarcely see an inch around or before us. We stumble falter and fall ; our hands and knees are bruised and sore, and we look up for light and guidance, could we see nothing but distant unapproachable impeccability, we might well sink prostrate in the hopelessnes of emulation, and the weariness of despair. Is it not then, when all seems blank lightless and lifeless, when strength and courage flag, when perfection seems as remote as a star, is it not then that imperfection helps us. When we see that the greatest and choicest images of God, have had their weaknesses like ours, their temptations, their hour of darkness, and their bloody sweat, are we not encouraged by their lapses and catastrophes, to find energy for one more effort, one more struggle? Where they failed, we feel it a less dishonour to fail, their errors and sorrows make, as it were, an easier ascent from infinite imperfection to infinite perfection. How then shall we judge any one? How at any rate judge a giant, great in gifts, and great in temptation, great in strength and great in weakness? And when we thank Heaven for the inestimable gifts of great men, we do not need to remember wherein they were imperfect. We cannot bring ourselves to regret that they were made of the same clay as ourselves.—*Extract from Lord Rosebury's speech at the Centenary of Robert Burns.*

### பெரியோர் குறைகள்

குணநிறைவுகளைத்தியானம்செய்வதால்வரும் உதவி சற்றேறக்குறைய குணக்குறைவுகளை ஆராய்வதாலும் ஜனங்களுக்கு ஏற்படும். பயனற்றதாயும், தடுமாற்றம் நிறைந்ததாயும் உள்ள நமது வாழ்க்கையில் நமக்கு மஹாத்மாக்களும், பரமபதமும் தவிர வேறொன்றும் தோன்றாவிடில், நாம் எல்லோரும் ஒருங்குசேர்ந்து அதோகதியை அடைவதே நலம். இவ்வுலகமாம் கல்லறையுள் கண்மூடிகளாக நாம் தடவிக்கொண்டு தட்டழிகிறோம், வாழ்க்கையாகிய இருளடர்ந்த ஏணியில் ஏறுகிறோம், எதிர்கால நிலை இத்தன்மையது என்று ஒருவாறு உணரமுயல்கிறோம், ஆயினும் நாம் இதை நோக்கிப் போகிறோம் அல்லது நம்மைச் சுற்றி உள்ளவை இவை என்பது ஒன்றும் நன்றாக விளங்கவில்லை. இவ்வாழ்க்கையில்நாம் தடைபட்டுத்தட்டழிந்து அதோகதி அடைந்து மனம்புண்ணாகித் தவிக்கிறோம்; அப்பொழுதுவெளியேறும்வழி இது, இதை இவ்வாறுபின்பற்றுவது என்பவைகளை உணர மிகுந்த ஆவலுடன் மேல் நோக்குகிறோம். இக்காலத்தில் வெகு அஸாத்யமாயும் அணுகமுடியாததாயும் உள்ள குறைவற்ற நிலைமாத்திரம் தென்பட்டால் எண்ணற்கரிது என்ற கையறுநிலையிலும் அதைரியத்தால் வரும் மனத்தளர்ச்சியிலும் அழுந்திச் செயலற்றிருப்பதே நலம் எனத்தோற்றும். எல்லாம் சூன்யமாயும், ஒளியற்றதாயும், உயிரற்றதாயும் காணப்பட்டுத் தைரியம் சீர்குலையுங்காலத்திலும், குணநிறைவு நக்ஷத்திரங்கள்போல வெகு தூரத்திருப்பதாகத் தோன்றும் காலத்திலும் அல்லவா நமக்கு குணக்குறைவுகள் உதவியாக நிற்பவை? சிறந்தவர்களாயும் மனிதர்களுள் மேன்மை பெற்றவர்களாயும் உள்ள மஹான்களுக்கும் நம்மைப்போலக் குறைகள் இருந்தனவென்றும், அவர்களுக்கும், மருட்சி, அஞ்ஞானவிருள்பொறுக்க முடியாக் கஷ்டங்கள், முதலியன இருந்தனவென்றும் நமக்குத்தெரியவந்தால், அவர்கள் குறைகளும், உத்பாதங்களும் நமக்குத் தைரியத்தை ஊட்டி, மேலும் ஒருதரம் வருந்தி முயற்சிக்கச் சக்தி வரும்படி செய்யாமற் போகுமா? அவர்கள் எங்குத் தட்டழிந்தனரோ அங்கு நாம் தட்டழிவது அவ்வளவு மானக்குறைவல்ல என்று நமக்குத்தோன்றும். நாம் பெருங்குறைவுகளிலிருந்து பூரண நிறைவை நோக்கி விருத்தியடைவதை அவர்கள் குற்றங்குறைகள் ஒருவாறு எளிதாக்கிவிடும். இப்படி இருக்க பெரியோரைப்பற்றி அபிப்பிராயம்கொள்ளும்விதம் யாது? எப்படி இருப்பினும், சக்தியிலும், மருட்சியிலும், மனோபலத்திலும், தளர்ச்சியிலும் மிகச் சிறப்புற்று விளங்கும் பெருமைவாய்ந்தோரது நிலையை நிர்ணயம் செய்வதெப்படி? இத்தகைய பெரியோர்களிடம் மதிப்புக்கடங்காமாட்சிமைகளை அமைத்ததற்காகப் பரம்பொருளை வந்தனம் செய்யுங்கால், எவ்வெவ்விஷயங்களில் இவர்களுக்குக்குறைகள் உள என்பதை நாம் நினைக்கவேண்டியதேயில்லை. அவ்வாறு எண்ணுவதால் அப்பெரியோர்களும்நம்மைப்போலவே அமைக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் உண்டாக, இதனால் நமக்குத் துக்கப்படக்காரணம் இல்லாமலே போய்விடும்.



## சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

#### அத்தியாயம் 3.

#### அடங்காப்பிடாரி அன்னம்மாள்

இல்லாள்நல் லாளா யிசைவினிதவ் வாறின்றிப்
பொல்லாளே யாயின் புகலறிவின்—வல்லார்
கவலை யடைவாரோ கஞ்சத் திலைசேர்
திவலை யெனவிருப்பார் தேர்ந்து.

வல்லூறு ஆகாயத்தில் வந்துவிட்டால், பக்ஷிகள் எல்லாம்பயந்து தமது கூடுகளுள் பதுங்கிவிட உடனே ஆகாயம் முழுவதும் அக்கொடிய பறவைக்கே அர்ப்பிதமாக்கப்படும். பாபம்! வாஸுதேவசாஸ்திரி வீட்டில் இம்மாதிரியான விஷயம் ஒன்று நடந்தது. கற்றுத்தேர்ந்த ஸீதாலக்ஷ்மி, அடங்கா ஆவல்கொண்ட அவள் பெண், அப்பொழுதுதான் புதிய கேள்வி ஒன்று கேட்ட பாட்டி எல்லோரும் சொல்லிக்கொள்ளாது இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப்போயினர்.

தீரரான வாஸுதேவசாஸ்திரியோ 'பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாது' என்றபடி, அந்தப்பிடாரி பங்கனாகி யிருந்ததால் உட்கார்ந்த விடத்தில் அசையாது தரித்து இருந்தார். ஆனால் அப்பொழுது திடீரென்று தோன்றிய மஹாகனம் பொருந்திய பெருமாட்டி அன்னம்மாளது உதட்டின் முகட்டிலிருந்து உருண்டு ஓடிய இடிமுழக்கத்தைக் கண்டு அவர் உள்ளுக்குள் நடுங்கித் தான் இருக்கவேண்டும் என்று என் கோழை மனத்தில்பட்டது. எப்படியாயினும் ஆகுக, தம்மிடத்தில் அசையாது இருப்பதற்கு வேண்டிய பூரண அமைதி அவரிடம் இருந்ததால் முடிவில் அவர் பேசவும் துணிந்துவிட்டார்.

"என் கண்மணீ! ஒரு வீட்டில் ஒரு பூனை இருந்தது. அந்த வீட்டுப்பாட்டி அந்தப் பூனையை உதைக்க யத்தனிக்கையில் தவறிவிழ ஒரு கொடியகொம்புஅவள் கண்களில்ஒன்றைக்குத்திவிட்டது. அதுமுதல் அந்தப் பூனை மூலமாகவே எல்லாக்கஷ்டங்களும் உண்டாவதாக அவள் எண்ணிவிட்டாள். பால் கொட்டிப்போவது, சூதுக்காரியான நாட்டுப்பெண் தயிரைத் திருடிக்குடிப்பது, இவைபோன்ற ஸாதாரண கஷ்டங்களும், பேரன் இறப்பது முதலிய பெரியகஷ்டங்களும் அந்தப் பூனை

யாலேயே ஏற்படுவன என்ற நம்பிக்கை அவளுக்கு வந்துவிட்டது. நல்ல ஸந்தோஷம் தாண்டவமாடுங்கால் நாட்டுப்பெண் 'மூளையில் அறுத்து முட்டாக்கிட்டுக் கொள்ள வேண்டும்' என்று வாழ்த்த எண்ணினால் கணேசர் ஈசுவரன் இவர்களை அழைத்துக் கூறாமல் அந்தவெள்ளைப்பூனைக்கே பிரார்த்தனை பூஜை முதலியவைகள் போட்டு வந்தாள். நாளடைவில் வீட்டில் சண்டை சச்சரவு ஏற்பட்டால் பூனைக்குக் கொண்டாட்டம்; அன்றைக்கு அதற்குப் பாலும் சோறும் ஆகாரம். அதிர்ஷ்டவசமாக அந்த வீட்டில் இவ்வித ஸரஸ ஸல்லாபத்திற்குக்குறைவில்லாதிருந்ததால், பாலும்சோறும் வெள்ளைப்பூனைக்கு அன்பார்ந்த கிழவியால் ஏற்படுத்தப்பட்ட மாருபத்தியமாகவிருந்தன. வர வர இந்தப் பூனை குல தேவதைஸ்தானத்துக்கும் வந்துவிட்டது."

இந்தப் பரிஹாஸம்அமைதிவாய்ந்த அன்னம்மாளைப் பொங்கி எழும்படிச் செய்தது. கதையின் பொருத்தம் விளங்காததால் தன்னைத் தன் பிராணநாதன் கிழவி என்று கூறிவிட்டார் என்றஎண்ணம் வந்துவிட்டது. அவள் ஸ்வரம் ஏறியது. வாஸுதேவ சாஸ்திரிக்குவீடு எங்கே விழுந்துவிடுமோ என்ற சங்கை உண்டாயிற்று. 'நான்குருடுமல்ல கிழமும் அல்ல! நீர்வேணுமானால் இன்னம் கொஞ்சநாளில் குருடராவீர். இந்தப் பாழும் வேதாந்தம் உமது கண்ணைக் குத்திவிட்டதுபோலிருக்கிறது; இல்லாவிட்டால் உமது மாப்பிள்ளை என்ன அத்யாவஸ்தையில் இருக்கிறான் என்பது உமக்குத் தெரிந்திராதா? என்று கதறினாள். இம்மொழி பொறுமையாகப் பரிஹாஸம் செய்யும்படிசாஸ்திரியைத்தூண்டியதே ஒழிய வேறொன்றும் இல்லை.

**ஸாக்ரேடீஸ்** என்ற புத்திமானுக்கு **க்ஸாந்திபி** என்று ஓர் அடாங்காப்பிடாரி மனைவியாக விருந்தாள். ஸாக்ரேடீஸின் அமைதி அவளது கோபத்தை மூட்டியது. என்ன அவள் சொல்லியும்அவர்தம் சிஷ்யர் தோழர்களோடு ஞானவிஷயமாக மனங்கலையாது ஸம்பாஷித்து வந்தார். ஒருநாள் தன் வீட்டுவாயில் திண்ணையில் இவ்வாறு செய்யத்தொடங்க அவர் பெண்சாதி எவ்வளவோ வைது அதைத்தடுக்கப் பார்த்தாள். முடியாமற்போக உள்ளே இருந்து சாணி முதலிய கெட்ட வஸ்துக்களைக் கரைத்து வந்து கணவன் உட்பட அங்கிருந்தவர்கள் எல்லோர் மேலும் ஸமர்ப்பித்துவிட்டாள். அப்பொழுதும் அவைகளைச் சாந்தமாகத் துடைத்துக்கொண்டு 'இடி இடித்ததற்கு ஏற்ற மழை பெய்தது' என்று கூறிச்சிரித்துவிட்டுத்தன் சாந்தத்திலேயேகண்ணாயிருந்தார் என்று ஸாக்ரடீஸ் என்ற க்ரீஸ் மஹானைப் பற்றி ஓர் அத்புதக்கதை சொல்வது உண்டு. இம்மஹான் மனம் போன்றதுதான்வாஸுதேவ சாஸ்திரியின் மனமும். நன்றாகச் சிரித்துவிட்டு அவளை நோக்கி மிகுந்த அமைதியுடன் 'எனக்குப் பத்திரகாளியைப்போல ஆயிரம்கண் ஏற்பட்டிருப்பினும் இங்கிருந்து திண்டுக்கல்லில் எனதுமாப்பிள்ளை கதிஎன்னமாகஇருக்கின்றது என என்னால் எப்படி உணரமுடியும்?' என்று துணிவாகப் பதில் சொன்னார். அந்தலங்கிணியின் ஸ்வரம் கூடக் கொஞ்சம் ஏறியது. அக்கம் பக்கத்தவர் நடுநடுங்கிப் போய், வெருண்டு வீட்டைவிட்டு வெளியே வந்து 'என்ன பிரமாதம் வந்துவிட்டதோ?' என்று விசாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஐயோ பாவம்! ஜனங்களே! வீண்பயம் வேண்டாம். இது அன்பு மிகுந்த தம்பதிகளான வாஸுதேவ சாஸ்திரிக்கும் அவர் மனைவிக்கும் நடந்த ஒரு ரஹஸ்ய ஸம்பாஷணையே ஒழிய வேறொன்றுமில்லை. இராவணன் கைலையங்கிரியைப் பெயர்த்து குலுக்கியக்கால் அது அசைந்தது, பார்வதி பயந்து தன் நாதனைச் சென்று இறுகப் பிடித்துக்கொண்டாள் என்பது பொய்யாகவிருக்கலாம். தியஸாபிகல் அங்கத்தினர் கூறுவது போல நான் அப்பொழுது ஓர் தவளையாக விருந்து பார்த்திருந்தால் இது எனக்கு நன்றாகத் தெரியும். மூக்கிழந்த சூர்ப்பனகை சொன்ன ரஹஸ்யத்தை ராவணன் தன் மனைவி மண்டோதரிக்குக் கூறுங்கால் முன் கூறியவை நடந்திருக்கவேண்டும். இம்மாதிரியான விஷயம் ஒன்றுதான் வாஸுதேவசாஸ்திரிவீட்டிலும் நடந்தது. 'மாப்பிள்ளையோ அபாயஸ்திதியிலிருக்கிறான்; இந்தஸமயத்தில் வாஸுதேவ சாஸ்திரி வம்பைப் பேசுவது காலத்துக்குத் தக்கதல்ல, அவர் வேதாந்தத்திற்கே அதுஸரியாகத்தோற்றலாமே ஒழிய வேறல்ல' என்று அன்னம்மாள் அவரிடம் ரஹஸ்யமாகச் சொன்னாள். இவ்வளவுதான். இங்குகூறியதுவீண்மனோராஜ்யமேயல்ல. வேதாந்திகளான கணவருக்கு வீட்டில் நடக்கும் உபசாரம் இதுவே. வேதாந்தம் என்ற பதத்திற்கு உபநிஷத்தில் ஒருபொருள், பாதிரிகளிடம் மற்றொரு பொருள், அடுப்பங்கரையில் வேறொரு பொருள். வாஸுதேவ சாஸ்திரிக்குத் தம் பெண்ஜாதியின் சக்தி நன்றாகத் தெரியும். அவள் வாக்குபலத்தைப் பூர்ணமாக வெளிப்படுத்த எண்ணி 'உன் மாப்பிள்ளை அபாய ஸ்திதியிலிருப்பது உண்மையானால், நீ ஏன் இங்கு இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்துவிட்டாய்?"



என்று துணிந்து கேட்டுவிட்டார். இந்த வாய்க்கொழுப்பு வீணாகப் போகவில்லை; தற்செயலாகவோ அல்லது அவள் அழுத்தந் திருத்தமாகக் கூறிய உபந்யாஸ விசேஷத்தாலோ, எதனாலோ அறியேன்! அவள் நீண்டழகிய கூந்தல் அவிழ்ந்து விழுந்துவிட்டது.

பிரஹ்ம ஸ்ருஷ்டிமுதல் இன்றைவரையில் உலகில் தோன்றிய வாக்மிகளே! உங்களுக்கு வெட்கமில்லையா? நீங்களும் பேசிப் பேசிப் பார்த்திருப்பீர்களே! ஆயினும்என்றைக்காவது உங்கள் வாக்கு விசேஷத்தால் அன்னம்மாளது கூந்தலைப்போல உமது சிகை அவிழ்ந்திருந்திருக்கும் என்று எனக்குத் தோற்றவில்லை. பூகம்பம் வந்துவிடும் என்றுபயந்து நடு நடுங்கிய அயல்வீட்டுக்காரர்கள் ஓடிவந்து நமது கதாநாயகரைக் காக்க முயன்றனர். இந்த அபிமானத்தைக் கண்ணுற்றதும் அந்தக் காளியின் கோபம் அதிகரித்து விட்டது அப்பொழுது அவள் மிகமிருதுவாக மொழியலுற்றாள். "பாபிகளா! பீசாசுகளா! அந்தப்பாழும் வேதாந்தம் உங்கள் வீட்டில் இன்னும் விழுந்து சின்னாபின்னப் படுத்தவில்லை போலிருக்கிறது. இந்த ஆள், அந்த தீவட்டி கலக்டெராம் அவன் பெண்டாட்டி, அந்த மொட்டை முண்டை ஒருத்தி எல்லாருமாகக்கூடி அந்தப்பாழும் வேதாந்தத்தை என் வீட்டிலேயே பேசத்தொடங்கி விட்டார்களோ? அதனால்தான் பாவம்! என் மாப்பிள்ளைக்கு மரணாவஸ்தை வந்துவிட்டது." என்று அழுத்தந் திருத்தமாக அவள் யுக்திவாதம் செய்தாள். இதை இனி விஸ்தரிக்க வேண்டியதில்லை. அன்றைக்கு தூர்வாஸர் அவதாரம்போல விளங்கிய அன்னம்மாளிடமிருந்து சாஸ்திரி பிழைத்தது புனர் ஜன்மமாகத்தானிருந்தது. இங்கு ஏற்பட்ட அல்லோகல்லோலம் ஒன்றையும் ஒரு பொருட்டாகக்கூட மதியாது உள்ளூர நகைத்தவண்ணமே அமைதியாக இருக்க அவர் முழு வேதாந்த பலமும் வேண்டியிருந்தது; இதனால்தான் இவர் வேதாந்தியானார் போலும்.

ஆபத்துக்கள் அடுக்கடுக்காகவே வரும். முற்கூறிய அற்புதக் காட்சி முடிந்து கொஞ்ச நாழிகைக்கெல்லாம் வாஸுதேவ சாஸ்திரிக்கு விலாஸம் இட்டிருந்த ஓர் தந்தியைக்கொண்டு ஓர் தபால்காரன் வந்து சேர்ந்தான். தபால்காரன் செய்யும் செய்கைகளை எப்பொழுதாவது ஆழ்ந்து யோசித்திருக்கிறீர்களா? ஒரு நாள் காலை நேரத்திற்குள் அவன் என்னபாடு படுத்திவிடுகிறான், பாருங்கள்! ஒருவனுக்கு அவன் கலியாணக் கடிதம் கொண்டுவருகிறான், என்ன பக்ஷபாதம்! மற்றொருவனுக்கு மரண ஸங்கதியைத் தெரிவிக்கிறான்! சிலரை மாப்பிள்ளையாகவும், சிலரை விதவைகளாகவும் சிலரை பொய் தாவாக்களை எண்ணி எங்கும்படியாகவும் சிலரைக் கிணற்றில் கல்லிட்டால் போல விளங்காக்கடிதங்களால் வருந்தி காலத்தையும் பணத்தையும் வீணே அழிக்கும்படியாகவும், சிலரை நாடிய பொருள் கைகூடாது நாளைக்கு நாளைக்கு என்று எதிர்பார்த்துப் பரிதவிக்கும் படியாகவும், அந்தத் தபால்காரன் இரண்டு மணிநேரத்துக்குள் செய்துவிடுகிறான். இப்படி இருந்தும் ஒரு விஷயத்தில் மாத்திரம் அவனுக்குபக்ஷபாதமே இல்லை. தீபாவலிதோறும் பேதாபேதமின்றி எல்லோரிடத்தும் மேலதிகாரிகளால் அனுமோதிக்கப்படாத வரியொன்று வாங்கி விடுகிறான். இப்படியே பணம் அனுப்பியசீட்டு வருங்காலத்தும் செய்வான். ஸுமார் பதினைந்து நாழிகை வேளையிருக்கும், சூரியன் அதி தாபத்தோடிருக்கும்பொழுது முற்கூறிய குணம் வாய்ந்தவன் தனக்குரியஉடையுடன் நமது கதாநாயகர் வீட்டு வாயிலில் வந்து நின்றான். அப்பொழுது சாஸ்திரிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார், ஆடிப்பாடி அமர்ந்த அன்னம்மாள் பரிமாறிக்கொண்டிருந்தாள். உலகைக் கலக்கி விடும் திறனுடைய அவள் அப்பொழுது வெளி சென்று, அங்கமெல்லாம் நடு நடுங்க ஏதோ ஒரு சிவப்புக் காகிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டுவந்து அவர் முன் நின்றாள். சாஸ்திரி ஓர்வித உபேக்ஷை உடையவராதலால் அவர் முகம் கொஞ்சம் கூட மாறுதல்அடையவில்லை. இரண்டு கண்ணிருந்தும் அன்னம்மாளுக்கு அது இன்னது என்று உணர முடியவில்லை. சாஸ்திரி தமது வழக்கப்படி காலத்தைக்கவனித்து பரிஹாஸமாகப் 'பெரிய மனதுபண்ணி அதை வாசியேன் பார்ப்போம்' என்று கூறினார். இன்னது செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை

நண்பர்களே இது வேதாந்தகற்பனைக்கதை! பொறுங்கள். போதுமான வரையில் வேதாந்தம் பின்னர் ஆங்காங்கே கூறப்படும். உபநிஷத்துக்களைப் பாருங்கள் எவ்வளவு கதைகளை அடக்கி யுள்ளன. ஆதலால் தயவு செய்து பொறுங்கள் 'பொறுமை உடையோர் சிறுமை அடையார்'

அடங்காப் பிடாரி அன்னம்மாள் சூடான வஸ்துவைத் திருப்புவது போல அந்தச் சிவப்பு வஸ்துவை திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அங்கு கறுப்பாக இருப்பதை வாசிப்பதா அல்லது பித்தளை வளையங்களை வாசிப்பதா என்பது அவளுக்கு விளங்க வில்லை. வாஸுதேவ சாஸ்திரி மாத்திரம் 'படி படி' என்று தூண்டு கோல் போட்டுக் கொண்டே யிருந்தார். என்ன பண்ணுவாள் பாபம்! இன்னது செய்வதென்று அவளுக்குப் புலப்பட வில்லை. உடனே தன் ஆயுதத்தை கைக்கொண்டாள், அது இன்னது என்று உங்களுக்கே தெரியும். வாயிலி லிருந்த தபால்காரன் நடு நடுங்கிப் போய் விட்டான்; வாயை கையைத் திறக்க வில்லை. அண்டை அசல் உள்ளோர் மறுபடியும் வெருண்டு போயினர். நமது ப்ரபுத்த பாரத கச்சேரியில் கூட நிற்காத அந்தத் தபால்காரன் வாயெடுக்க முடியாது காத்துக் கிடந்தான். சாஸ்திரிகள் ஸாவதானமாகச்சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், அடிக்கடி அன்னம்மளை நோக்கி,'என்ன ஹூணபாஷையில் எழுதியிருக்கிறதா அல்லது தமிழில் எழுதியிருக்கிறதா? என்று விசாரித்துக் கொண்டே இருந்தார். அவளுக்கு அதிககோபம் வந்துவிட்டது. அவளால் என்னமாகச் சொல்ல முடியும்? அவள் எங்கேபடித் திருந்தாள்? அப்பொழுது விஜயநகர மஹாராஜா பள்ளிக்கூடங்களும் இல்லையே. சாஸ்திரிக்கு ஒருகவளம் தான் பாக்கி இருந்தது, அந்த ஸமயத்தில் அடுத்தவீட்டி லிருந்த ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் அந்தப்பிடாரி போய்ச்சேரும்படியாகி விட்டது. அவர் கொடிய சிவப்புப் பையைக் கிழித்தெறிந்தார். 'இதென்ன விபரீதம் வாசிக்கச் சொன்னால் கிழித்தெறிந்து விட்டாரே' என்று அச்சமுற்றாள் அன்னம்மாள். உள்ளே இருந்த விஷயம் அவளுக்கு இதை விடமிருந்த அச்சத்தை உண்டாக்கியது.

'மாப்பிள்ளை அபாயநிலை உடனே புறப்படவும்' அந்த ஸ்திரீரத்னத்தினது மனோ நிலையை அதிகமாக விஸ்தரிக்க எனக்கு மனம் வரவில்லை. ரசீது பெறத் தபால்காரன் ஸுமார் ஒருமணி நேரம் காத்துக்கிடக்க வேண்டி வந்தது. மோருக்காக சாஸ்திரி இரண்டு மணி காக்கவேண்டி வந்தது. அன்னம்மாளுக்கு அந்த வெறும் நாள் ஏகாதசி யாகிவிட்டது. பிலாக்கணம், மாரடி, தலையில் அடித்துக்கொள்ளுதல் முதலிய ஆர்ப்பாடத்திற்கு கங்குகரையேயில்லை. எல்லாத் தெருவிலுள்ளோர்களும் ஓடோடியும் வந்து ஸமாதானம் செய்யக் கூடாதவளை ஸமாதானம் செய்யமுயன்றனர். சாயுங்காலம் கூவிக்கொண்டுவந்த ஓர் புகைவண்டித் தொடரில் அநேக கூட்டங்களுக்கு இடையில் ஏறி அவர்கள் இருவரும் திண்டுக்கல் வந்து சேர்ந்தனர். நல்லநிலாக்காயும் அன்றிரவு ஸுமார் 8 மணி 5 நிமிஷத்திற்கு ஓர் பெரிய மாடி வீட்டில் இவர்கள் வந்து சேர்ந்தார்கள். வாஸுதேவசாஸ்திரி ஒரு பெரிய மூட்டையைத் தலையிலே தாங்கிப்போக, துக்கச் சுமையை தாங்கமாட்டாது தள்ளாடிக்கொண்டு அன்னம்மாள் பின்னே சென்றாள். அந்த வீட்டுப்படி ஏறஏற அவள் அழுகுரல் அதிகமாகிக் கொண்டே வந்தது.

**விவாகஞ் செய்துகொண்ட பெண்ணை நடத்தும் விதம்.**—அனாவசியமாகக் கடிந்து பேசாது, அவளுக்குத் தகுந்தபடி மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும். அவள்மனம் கோணவே இடங்கொடுக்கக்கூடாது. இவ்வாறு செய்துவரும் குடும்பத்தில் தேவதாராதனம் செய்த சிறப்பு உண்டாகும். பெண்கள் மனம் நோகச் செய்யுமிடம் ஒருநாளும் விளங்காது. அவர்களை மிகுந்த ஜாக்கிரதையாகக் காத்துக்கொண்டு வந்தால் தருமம் தவறாது பெண்களே குடும்பச் சிறப்பிற்குக் காரணம். பெண்கள் எப்பொழுதும் புருஷர்களிடம் அடங்கி இருக்கவேண்டும். பாலியத்தில் தகப்பனிடத்தும், யௌவனத்தில் பர்த்தா விடத்தும், விருத்தாப்பியத்தில் பிள்ளையிடத்தும் பெண்கள் அடங்கியிருக்க வேண்டியதால் அவர்களைக் கஷ்டத்திற்கு ஆளாக்காது பாதுகாத்து வரவேண்டும்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### 3. ஞானமுணர்ந்த காதை

குயின்றவைம் பொறிவாய் நின்று
குறித்தவைம் பொருளுந் தானே
யயின்றுமுக் குணங்க ளோடு
மறுவகைப் படைக ளோடும்
பயின்றர சாளு மந்த
மனனெனும் பகைவ னுங்குத்
துயின்றபோ தொளித்து நின்ற
தோன்றலும் தோன்றுங் கண்டாய்.
அந்தநல் லறிவன் றன்னை
யறிந்தவ ரறிஞ ராவார்
தந்தையால் வகுக்கப் பட்ட
சராசரப் பொருள்க டோறும்
வந்தவான் றீம்பா னெய்போ
லுயிர்க்குயி ராகி வாழும்
பந்தம துணர்ந்து நேரே
பார்க்குங்காற் பகையார் நண்பார்?

வில்லி புத்தூராழ்வார் பாரதம்.

வந்த அரச கூட்டங்களை மயக்கிப் பிராட்டியாரைக் கவர்ந்து, தேர் இவர்ந்து கண்ணன் போனான் என்று அரசர் யாவரும் கோபங்கொண்டு இலவு காத்த கிளிபோல் தாம் வீணே ருக்மணி பிராட்டியாரை மணக்காதிருந்ததை எண்ணி எண்ணிக் கோபமிகுந்து" "புலிக்கிட்ட ஊனை பூனை கவர்ந்தது போலத் திருட்டாக ஓர் பெண்ணை ஒருவன் கவர்ந்து ஓடவும் நாம் பார்ப்பது அழகியது! ஓர் இடையன் எடுத்தோடவும் பார்ப்பதும் நம் பெருமைக்கும் நமது வில்லிற்கும் வலிமைக்கும் அழகியது! நாம் ஓர் வில்லைக்கொண்டு வாழ்கிறோம்" என்று கூவிக்கொண்டு தமது கவசங்களை அணிந்து, தமது சேனைகளை வகுத்துக் கண்ணனைப் பின்தொடர்ந்தனர். பகைவர் வருவதைக் கண்ட யாதவசேனையும் வில்லைத் தொனித்து எதிர்த்தனர். தனுவேதத்துச் சிறந்தவர் தமது வில்லை வளைத்து நாண் தொனித்து இடைவிடாது, புங்கானு புங்கமாக, மலையைச் சூழ்ந்து பெய்யும் மழைபோல, கணைமாரி பெய்தனர். தன் கணவன் படையிவ்வாறு தாக்கப்பட்டதைக்கண்டு வெருண்ட பிராட்டியாரும் கண்ணனைத் தீனமாக உற்று நோக்கினாள். அதற்குப் புன்னகை செய்து, "அழகிய கண்களையுடையாய்! பயப்படேல்; பகைவர் சேனை சீக்கிரத்தில் நாசமாய்விடும்" என்றார் ஸ்ரீ வாஸுதேவன்.

இதற்குள் சாதன், ஸங்கர்ஷணின் முதலிய வீரர்கள் கூரிய ஆயுதங்களால் பகைவரது யானை, குதிரை, தேர் முதலிய யாவும் சின்னபின்ன மடையும்படி முறிய அடித்தனர். ஆயிரமாயிரக் கணக்காகத்தேர்மேல் இறந்த வீரர் கூட்டமும், யானைமேலிருந்து வீழ்ந்தவர் கூட்டமும், குதிரைமேலிருந்திறந்தவர் கூட்டமும் குவியல் குவியலாகக் குவிந்தன. இதனோடு கிரீடங்களும் கவசங்களும் துகள் துகளாக விழுந்தன. அறுபட்ட கால்கை முதலிய உறுப்புக்களும் குவியல் குவியலாகக் கூடின, இஃதன்றி யானை, குதிரை, தேர் முதலிய யாவும் அச்சுவேறு ஆணிவேறாகக் கீழே வீழ்ந்து மலைபோல் நிறைந்து கிடந்தன. முறிபட்டு வீழ்ந்த படைகளின் தொகுதிகளும் இரத்த ப்ரவாஹத்தின் அலைகளில் அடிபட்டு அடிபட்டு எங்கும் பாவிக் கிடந்தன. இவ்வாறு ஜயத்தையே விரும்பிய வ்ருஷ்ணித் தலைவர்களால் சின்ன பின்னமாக்கப்பட்டுப் போரைத் தாங்க முடியாது ஜராஸந்தன் முதலியோரது ஸேனை பின்னிட்டன. ஜராஸந்தனும் சிந்தாஃக்ராந்தனாக இருந்த சிசுபாலனை நோக்கி "கவலையுறேல். 'அளந்தன போகம் அவரவர்க்கற்றைநாளே;' 'வருவன தாமே வரும்; உன் துயரத்தை ஒழி. நாம் இவ்வுலகத்தில் ஸமய ஸூத்ரங்களால் ஆட்டப்படும் பொம்மைக் கூட்டமே அல்லாது வேறன்று. அவனது ஆணையின் மனம்போல் நடப்பன செயல்கள். ஆகையின் நாம் சிந்தைப்படுவது தகுதியன்று. யானும் பதினேழு முறைக்கண்ணனால்தோல்வியடைந்து ஒரே ஒரு முறை அவனைத் தோற்கடித்துள்ளேன். 23 அக்ஷௌஹிணீ ஸேனைகளோடு நான் பட்டபாடது. நான் அதற்காக ஸந்தோஷமாவது விஸனமாவது படுவதில்லை. வீரம் பெருத்தபெருஞ்சேனைகொண்டு இச்சிறும் யது ஸேனையால் போது தோல்வி அடைந்தோம். அவர்க்கிப்பொழுது ஸபலபல மிருக்கின்றது. நமக்கும் காலம் வரும். அப்பொழுது நாம் ஜயம் அடைவோம்" என்று தேற்றத்தன் புரமடைந்தான். (தொடரும்)

# விசேஷக் குறிப்புகள்

## INTERESTING NEWS.

**அதி உன்னத கட்டிடங்கள்.**—ஐரோப்பாவிலே மேல்மெத்தை வீடுகளதிகமாயிருந்தும், அவைகள் 9 அடுக்குக்கு மேற்பட்டவைகளல்ல. அமெரிக்காவிலோ 9 அடுக்குக்குமேலும் பல அடுக்குகள் சேர்த்து வீடுகள் கட்டப்படுகின்றன. அத்தேசத்திலுள்ள விசேஷ பட்டினங்களெல்லாவற்றிலும் ஆகாயத்தை யளாவி நிற்பனவாய்ப் பற்பல மேன்மாடக் கட்டிடங்களுண்டு. நியுயார்க் நகரிலே ஓர் பிரமாண்டமான உன்னத கட்டிடமிருக்கின்றது. அது நிலமட்டத்திலிருந்து 754 அடி உயரமுடையது. இப்போது அங்கே 62 அடுக்குடையதாய் ஓர் கட்டிடங்கட்டத் தீர்மானம் பிறந்திருக்கின்றது. அது ஏறக்குறைய 900 அடியுயரமுடையதாகுமாம். இந்தக் கட்டிடத்திலே ஓர் சிறுபட்டினத்தின் ஜனங்கள் தாராளமாய்ச் சீவிக்கலாமாம்.

* *
*

**ஆகாயவிமானத்தீற் பிரயாணஞ்செய்த தமிழ் வாலிபன்.**—புதுச்சேரியிலிருந்து பிரான்சுக்குச் சென்று கலை பயிலும் நாராயணப்பிள்ளை யென்னும் ஓர் வாலிபன் சிலதினங்களுக்கு முன்னே ஆகாய விமானமீதேறிச் சுகமாயிறங்கினான். இவனே ஆகாய விமானத்திற் பிரயாணஞ்செய்த முதற்றமிழனும். இவன் ஆகாயவிமானமேறிக் கடல்மீது பிரயாணஞ் செய்து இறங்கிய பாவனையைக் காட்டும் படமொன்று புதுச்சேரிக்கனுப்பப்படுமாம்.

* *
*

**ஜப்பானில் ஒரு பெருந்தருமம்.**—ஜப்பான்தேசத்தார் 25-இலட்சம் பவுன் கொண்ட நிதி ஒன்றுசேர்த்து அதன் வட்டியினால் தமது தேசத்தில் தேக சௌக்கியமின்றி வறுமையால் வருந்தும் ஜனங்களுக்கு உதவி செய்ய முயன்று வருகின்றார்கள். இந்நிதிக்கு ஜப்பான் சக்கரவர்த்தி அவர்கள் தமது சொந்தப் பொருளினின்று லட்சம் பவுன் வரையில் உதவி செய்திருக்கின்றார். இதற்குச் சாதாரண ஜனங்கள் பெரும் பொருள் உதவிசெய்திருக்கின்றார்கள். நம் தேசத்திலுள்ள ஜனங்களோ வறுமையால் வருந்தும் ஜனங்களுக்கு உதவி செய்ய முன் வருகின்றார்களில்லை.

* *
*

**பரோடா தேசத்தின் புதுச்சட்டம்.**—பரோடாக் கவர்ன்மெண்டார் தமது தேசத்தில் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் வியாபாரிகள் சிகரெட்டு, புகையிலை, அபினி, சாராய முதலியவற்றை விற்றல் கூடாதென்றும், சிகரெட்டு முதலியவற்றை யுபயோகிக்கும் சிறுவர்களுக்குத் தண்டனை யுண்டென்றும் சட்டம் செய்திருக்கின்றார்கள். இது மிகவும் உத்தமமான சட்டம்.

**மதுரைக் கல்விப்பொருள் காக்ஷி.**—மதுரை ரேஞ்சு எலிமெண்டரி உபாத்திமைச் சங்கத்தின் கீழ் ஒரு கல்விப்பொருட்காக்ஷி மதுரை காலேஜி ஹாலில் செப்டம்பர்மீ 9உ சனிக்கிழமை டிஸர்க்கில் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் J. O. ஹாட்ஜஸ் அவர்களால் திறக்கப்பட்டது. அதற்காகவென்று அநேக பொருள் பற்பல இடங்களிலிருந்து அனுப்பப்பட்டிருந்தன. அநேக உபாத்தியாயர்களும் இன்னும் அநேகம் கற்றுத்தேர்ந்த கனவான்களும் அப்பொழுது கல்விச் சம்பந்தமான உபந்நியாஸங்கள் நடத்தினர். மதுரை காலேஜ் பிரின்ஸ்பால் ம-ா-ா-ஸ்ரீ எஸ். வெங்கோபாசாரியார் அவர்கள் கீழ்தரப்படிப்பைப் பற்றி மிகச் சிறந்த உபந்நியாஸம் ஒன்று ஆங்கிலத்தில் செய்ததை மதுரை ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ N. S. ஜம்புநாதய்யர் அவர்கள் அங்கு வந்திருந்த எல்லா எலிமெண்டரி உபாத்தியாயர்களும் அறியும்படி எளிய தமிழில் எடுத்துச் சொன்னார்கள். அவ்வுபந்நியாஸத்தின் ஸாராம்சம் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

* *
*

நாளது செப்டம்பர்மீ 4தேதி மாலையில் உதகமண்டலத்தில் வேட்டையாடச் சென்றிருந்த சிலர் குதிரை சவாரி செய்துகொண்டு போகும்போது கனந்தங்கிய சென்னை கவர்னர்துரை அவர்களின் குமாரரான மிஸ்தர் R. E. லாலி துரையின் குதிரை ஒரு கால்வாய்ப் பள்ளத்தைத் தாண்டும்போது கால் இடறிக் கீழே விழுந்ததில் துரையின் கழுத்து முறிந்து உடனே இறந்துபோனதாகக் கேட்டு அதிக விசனப்படுகிறோம். கனம்பொருந்திய கவர்னர் துரை அவர்களுக்கு இறந்து போனவரைத் தவிர வேறு ஆண் பிள்ளைகளில்லையாம்.

## குறிப்பு:—

சென்ற இரண்டொரு மாதங்களாகப் பத்திரிகை தாமதமாகப் பிரசுரமாகுங் காரணம் சஞ்சிகைகளில் காணப்படும் சித்திரப் படங்களைச் சித்திரிப்பதினாலே தான். இனித் தாமதமில்லாமல் படங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பத்திரிகை குறித்த தேதியில் இனி வெளிவரும். சந்தா நேயர்கள் தாமதத்திற்காக மன்னிப்பார்களாக.

"விவேகபோதினி" அனுபந்தம்



# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருதுஸு புரட்டாசிமீ : 1911-ஸு அக்டோபர்மீ. { பகுதி 4

## கொடை

### GIFT

**கொ**டை என்பதைத் தானம் என்று கூறுவர் வடமொழியோர். தர்மம் என்னும் சொல் எப்பொழுதும் தானம் என்பதோடு சேர்த்தே. வழங்கிவருவது. ஆதலால் தானம் தர்மம் என்ற தொடருக்குக் கொடுத்தல் என்ற பொருளே ஏற்பட்டுவிட்டது. ஆயினும் இவைகளுள் அர்த்தபேதம் உண்டு. வர்ண ஆசிரமங்களுக்கு ஏற்ப ஒருவன்செய்யக்கடமைப்பட்டதொழில்களுக்குத் தருமம் என்றுபெயர். வர்ண ஆசிரமபேதங்களோடு ஸம்பந்தப்படாது எல்லோரும் தம்மாலியன்றமட்டும் பிறருக்குச் செய்யவேண்டிய நன்மைக்குப் பொதுவாகத் தானம் என்று பெயர். ஜாதி வருணாசிரம தருமங்கள் அநேகமாக இருப்பினும், பொதுவாக எல்லோரையும் தான விஷயத்தில் இருபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தானம் செய்வோர் பெரியோர் என்றும், செய்யாதவர் இழிகுலத்தோர் என்றும் சொல்லப்படுவார்கள். ஆதலால் தானம் என்று சொல்லப்பட்ட கொடை என்பது மிகச் சிறந்த குணம்.

கொடையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல உள. சினமின்மை, பாத்திரமறிந்துகொடுத்தல், கருவமின்றிக்கொடுத்தல், இயன்றமட்டும் கொடுத்தல், கேட்போர் நோக்கமறிந்து கொடுத்தல் ஆகிய இவைகளே. கொடை பொதுவாக வாங் பவனை இஹலோகத்திலும், கொடுப்பவனை இஉ பரமிரண்டினிலும் மேன்மைப்படுத்தும். ஆதலால்தான் ஏற்பதிகழ்ச்சி என்றும், தானம் விரும்பு என்றும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் கொடுப்பவன் தன்மனம் முழுவதும் சுத்தமாகும் விஷயமாக முக்கியமாகக்கவனிக்கவேண்டியவை, சினமின்மை, கர்வமின்மை, இயன்றளவு கொடுத்தல் ஆகிய இவைகளே. கேட்பவர்கள் நன்மைக்காக அவன் மற்றை விஷயங்களையும் இரண்டாவதாக்க கவனிக்க வேண்டியது. முற்கூறிய மூன்றில் ஏதாவது குறை ஏற்பட்டால் கொடையால் கொடுப்பவனுக்கும், பின்னுள்ளவைகளில் குறைவு ஏற்பட்டால் வாங்குபவனுக்கும் பலன் குறைந்துபோகும்.

கொடையைப் பொதுவாக ஒருவன் நேரிடவே செய்யவேண்டும். அப்பொழுதுதான் அதிலிருந்து ஏற்படக்கூடிய மனச்சிறப்பு முழுவதும் உண்டாகும். ஆனால் இக்காலத்தில் பெரிய கொடைகளை ஸரிவரச் செய்து ஈடேறத் தமக்குக் காலம், ஊக்கம், அறிவு முதலியன போவாதென்று தனிகர்கள் தர்மகர்த்தர்கள் ஏற்படுத்தி அவர் வசம் பணத்தை ஒப்புவித்துவிட்டுத்தாம் கவலையற்றுப் பொதுநன்மைக்குக் கொடுத்துவிட்டோம் என்று இறுமாந்து இருப்பது வழக்கம். இவர்களுக்குக் கொடையால் ஏற்படக்கூடிய சிறப்பு முற்றிலும் ஏற்படாது. பொருள் ஏராளமாக இருப்பினும் அதை நேரிடக்கொடுக்குங் காலத்தில் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களில் அடிபட்டுத் தேர்ந்து மனம் பரிசுத்த மாகவேண்டியதே ஒழிய, கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு சும்மாவிருந்தால் பரிசுத்தமாகிவிட்டது என்று வேண்டுமாகில் எண்ணிக்கொண்டிருக்கலாம். பொருள் ஏராளமாக விருந்து தம்மால் மாத்திரம் அதை நிர்வஹிக்க முடியாது, ஒருவேளை மனம் மாறித் தருமத்திற்கு என்று விட்டபொருளை மறுபடி தன் வசப்படுத்திக்கொள்ளும்படி வந்துவிடும், என்ற பயம் உள்ளவர்கள் அதைத்தருமகர்த்தர்களிடம்ஒப்புவித்துத்தருபொருளுக்குத் தாமும் ஒரு முக்கிய தருமகர்த்தராக இருந்து அதை நடத்தவேண்டியது அவசியம். இவ்வாறுகலந்து வேலை செய்யாவிடில் தனிகர்களுக்கு வரும் பலனும், உபயோகப்படும் பணத்திற்கு வரும் பலனும் ஒன்றே.

ஆதலால் பொருளுடையவன் கூடியவரையில் நேரிடக்கொடுக்கவேண்டுமே ஒழிய பிறர் மூலமாக இதைச் செய்வது மேன்மையன்று.

விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருதுஸு புரட்டாசிமீ [பகுதி 4

# விக்கிரஹாராதனம்

## ஆக்ஷேப ஸமாதானங்கள்

## IMAGE-WORSHIP—OBJECTION AND ANSWERS

முன்னர் எடுத்து ஸ்தாபிக்கப்பட்ட விக்கிரஹாராதனம் அறியாமையாலும், வீண் துவேஷத்தாலும் வெகுவாக எல்லோராலும் பழிக்கப்பட்ட விஷயம். இதன் அருமையைக் கனவிலும் கண்டறியாத புறமதத்தார் பழிப்பது ஆச்சரியமன்று. நமது மதத்திலிருப்பவர்களில் சிலபெரியோர்கள் விக்கிரஹாராதனையைவிலக்கிக் கூறிய மொழிகளின் உட்கருத்தை உணராது, புறமதத்தவர்களோடு சேர்ந்து, குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பைப்போலத் தாம் கண்ட நியாயத்தை அவர்களுக்குக் காட்டி, நம்மவருள் விஷயம் தெரியாத பலரை மாறான வழிகளில் செலுத்தி வருத்துகின்றனர். நமது மதங்களில் விக்கிரஹாராதனத்தைப் பற்றிக் காணப்படும் பழிப்பு மொழிகளின் உட்கருத்து இன்ன என்பதை முன் ஸஞ்சிகையில் நன்கு விவரித்து, அவைகளை எடுத்தாள விக்கிரஹாராதன துவேஷிகள் யோக்கியர்களல்லர் என்பதை வற்புறுத்தினோம். இங்கு விக்கிரஹாராதனை விஷயமாகச் சிறப்பாக ஏற்படும் ஆக்ஷேபனைகளை எடுத்து ஆண்டு அவைகளுக்குத் தகுந்த ஸமாதானங்கள் கூறப் புகுவோம்.

(1) எங்கும் நிறைகின்ற அகண்டப்பொருளின் அனுபவம், கண்ட வஸ்துவாகிய விக்கிரஹத்தை ஆராதிப்பதால் எவ்வாறு ஏற்படும் என்ற கேள்வி புறப்படும். பரம்பொருள் அகண்டம் என்பது வேதங்கள் துணிபே. அதன் ஸ்வரூபம் இன்னது என்பதைக் கூறமுடியாது, வேதங்கள் தத்தளித்து, அந்த அனுபவம் வந்தாலன்றி விளங்காது; அதைப்பற்றி வர்ணிக்கமுடியாது; 'கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை' என்று முறையிடுகின்றன. ஆனால் இந்த அனுபவத்தைப் பெறும் வழிகளை வேதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுத்தமனதில் இவ்வனுபவம் தோன்றும், ஹிருதயக்கிரந்திகள் (பிடிப்புகள்) சிதறிப் போனால் மனிதன் அமானவன் என்னும் வாக்கியங்களால், இவ்வழிகளின் ஸ்வரூபத்தை வேதங்கள் விளக்குகின்றன. ஆதலால் இவ்வனுபவம் ஒருவிதமானப் பயிற்சியின் இறுதியில் தானே வந்து சேருவதென்றாயிற்று. அதுவரையில் அது இத்தன்மையது என்று விளங்காது. அது இத்தன்மையது என்று அனுபவம் வந்தோர் கூறும் மொழிகளை நாம் நம்பவேண்டியதுதான். இவ்வனுபவம் வந்தவர்கள் எல்லோரும் விக்கிரஹாராதன (அல்லது ப்ரதீகாரான)த்தைக் கைப்பற்றியே மேன்மை அடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு இக்கண்ட வஸ்து ஆராதனம் எவ்வாறு அகண்டானுபவம் தந்ததோ, அவ்வாறே மனதாரச் செய்யும் நமக்கும் இது ஏன் பரமபதம் அளிக்காது? மேலும் எங்கும் நிறைகின்ற அகண்ட வஸ்து விக்கிரஹத்திலும் ஆராதிப்பவனுள்ளும் இல்லை என்று கூறிவிடலாமா? ஆகவே விக்கிரஹத்துள்ளும் பக்தனுள்ளும் பரவிக்கிடக்கும் பரம்பொருள், இந்த ரஹஸ்யத்தை மறவாது ஆராதிக்கும் பக்தன் மனதைச் சஞ்சலம் நீங்கிக் குவியச் செய்து, பின்னர் விரிந்து அகண்டாகார அனுபவம் ஸித்திக்கும்படி செய்கிறது என்பதற்கு என்ன ஸந்தேஹம்?

(2) இந்தக்கண்ட வஸ்துவாகிய விக்கிரஹங்கள்



எவ்வாறு அகண்ட வஸ்துவைக்குறிக்கும்? என்ற கேள்வியை எடுத்துக்கொள்ளுவோம். பரம்பொருள் விஷயமாக வேதங்களில் காணப்படும் விஷயங்களை ஆராதிப்பவர்களுக்கு ஞாபகமூட்ட வேண்டும் என்னும் கருத்தைக்கொண்டே நமது முன்னோர்கள் விக்கிரஹங்களை யானைமுகத்துடனும், தாண்டவமாடும் ரூபத்துடனும் சேஷசாயிரூபத்துடனும் இன்னும் அநேக விசித்திர ரூபங்களுடனும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவைகளின் உட்கருத்தைப்பின்னர்விஸ்தாரமாக எடுத்து விவரிப்போம். கணித சாஸ்திரத்தில் எண்கள் ஒவ்வொன்றிற்கு 0, 1, 2...9 முதலிய குறிகளிட்டு, எண்ணிக்கைக்கடங்கா ஸங்கியைக்கும் ✠ என்ற குறியிட்டு நாம் வியவஹரித்து, அரிய பெரிய விஷயங்களை எடுத்தாண்டு புதிய விஷயங்களைக் கண்டுபிடித்து வரவர விருத்தியடையவில்லையா? இவைகளால் கணித சாஸ்திரத்திற்கு ஏதாவது தடை ஏற்பட்டதுண்டா? இக்குறிகளின் அர்த்தத்தைக் கவனித்து நாம் மேலே கடினமான கணக்குகள் போடுவதுபோல விக்ரஹங்களின் உட்கருத்தை மனதில் பதித்துக்கொண்டு மனம் இவ்வாராதனையால் விஷயப்பற்று நீங்கி ஏகாக்கிரப்பட்டுக்கொண்டு வருகையில், அதை மேன்மைப்படுத்த முயலவேண்டும். இம்மாதிரி செய்துகொண்டு வந்தால் விக்கிரஹாராதனத்தால் பரம்பொருள் சிறப்பு ஒருநாளும் நமது மனதை விட்டகலாது. ஸித்தி அடைந்த பின்னரும் விக்கிரஹாராதனத்தைப் பழிக்கும் துர் குணம் நம்மை அணுகாது.

(3) கோயிலில் விக்ரஹங்களை ஏற்படுத்துவதால் அவ்விடம் தவிரக் கடவுள் வேறிடத்திலில்லை, என்ற நம்பிக்கை ஜனங்கள் மனதில் ஏற்படாதா? என்ற ஆக்ஷேபனையை எடுத்துக் கொள்ளுவோம். விக்கிரஹ ஆராதனையை முன்னர் கூறியபடி செய்து வருபவர்களுக்கு இம்மாதிரியான எண்ணம் ஒருகாலும் ஏற்படாது. ஸாதாரண ஜனங்களுக்கு ஒருவேளை இவ்வாறு ஏற்படலாம். அதனால் யாதொரு கெடுதியும் வாராது. கோயிலுள் வரும்பொழுதாவது தினம் சுத்தமாயும், மனதில் வேறு எண்ணத்தைப் புகவொட்டாது தடுக்க முயன்றுகொண்டும் வரட்டுமே! அது போதும். தினம் ஒருமுறை சிறு காலமாவது ஒழுங்காக முயன்று வந்தால், காலக்கிரமத்தில் இந்த நற்பழக்கம் திடப்பட, அதற்குள் கடவுள் எங்குமிருக்கிறார் என்ற விஷயத்தைப் புராணாதிகளில்இருந்து உணர்ந்து, அவர்கள் மேன்மை அடைய இடம் உண்டாகும். கோயில் விக்கிரஹங்களிலாவது கடவுள் இருக்கிறார், அவர் ஸம்பந்தமான கற்பூரம், விபூதி பிரஸாதம் முதலியவைகள் தெய்வீகமானவைகள் என்ற மூட நம்பிக்கை இருப்பது ஸாதாரண ஜனங்களுக்கு ஒரு பேருதவியே ஒழிய வேறில்லை. இவர்களுக்கு நடத்தை மாறுகும் காலத்தாவதும், பொய்யுரைக்க வேண்டும் என்று மனம் சஞ்சலமாயிருக்குங்காலத்தாவதும், இவைகளைக் கண்டுவிட்டால் மனம் தடுமாறி அதன் நல்ல பழக்கம் வெளிவந்து கெட்ட எண்ணத்தைத் தடுக்கும் திறனை அடைந்து வரவர அது திடப்படும். இத்தகையவர்களுக்கு இந்த நம்பிக்கையும் இல்லாவிடில், கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற விஷயம் விளங்காமையால் ஓயாது அவர்கள் தடையின்றிக் கெட்டவழியில் நடக்கும்படி நேரிடும். அவர்கள் ஈடேறக் கதியே இல்லாமல் போய்விடும். இம்மூட நம்பிக்கையும் மேல் நிலைக்குப் போகுங்கால் முற்றிலும் மாறப்போகிறதில்லை. மேன்மை அடைந்த காலத்து விக்கிரஹத்தில் மாத்திரம் கடவுள் இருக்கின்றார், என்ற எண்ணம் ஒருவாறு சீர்திருத்தப்பட்டுக் கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற எண்ணம் ஏற்படுமே ஒழிய, கடவுள் விக்கிரஹத்தில் இல்லவே இல்லை என்ற எண்ணம் உண்டாகவே மாட்டாது. ஆதலால் ஜனங்களுக்கு முதலில் விக்கிரஹத்தில்தான் கடவுளிருக்கிறார் என்ற எண்ணத்தைக் கொடுத்து, அவர்களை வரவரச் சீர்திருத்தும் திறன் விக்கிரஹாராதனத்திற்கு இருப்பதே அதன் சிறப்பையும், அத

பெரியோர்களுக்கு உள்ளபடி உதவுவதுபோலச் சிறியோர்களுக்கும் உதவி புரிவது என்பதையும் வெளியாக்கும். ஆகவே இதனால் விக்கிரஹாராதனத்திற்கு யாதொரு இழிவும் இல்லை.

(4) பக்தி உண்டாக விக்கிரஹம் அவசியமா? இந்த ஆராதனத்தால் மனத்தூய்மை ஏற்படுமா? என்ற கேள்விகளை எடுத்துக்கொள்ளுவோம். நமது இந்திரியங்களுக்கு வெளியே நோக்கும் திறன்தான் எப்பொழுதுமிருக்கிறது. சற்று யோசனை செய்தால் ஒருவேளை வெளித்தோற்ற ஸம்பந்தமான சில உள்விஷயங்களை உணரும் அனுமான சக்தி ஏற்படலாம். இதில் நம்மில் பெரும்பாலரும் அதிகமாகப் பழகியிரார்கள். விஷயத்தாக்குதலின்றி உள் விஷயங்களை உணரும் பழக்கம் நமக்கு ஒருவருக்கும் இல்லை என்றே கூறலாம். ஆதலால் வெளி உருவ ஸம்பந்தம் இருந்தால் அந்த வஸ்துவின் மேல் நமக்கு ஒருவிதமான பற்று ஏற்படும். நமது உறவினர்கள் நம்மை அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருந்தால்தான், அவர்கள் விஷயத்தில் ஒருவித அபிமானம் நமக்கு இருக்கும். நெடுநாளாகி விட்டால், அவர்களைப்பற்றிய விஷயங்கள் மறந்து போவதும் அல்லாமல் அவர்களே இன்னார் என்ற ஞாபகங்கூட மாறிவிடும். நமக்கு வேண்டியவர்களிறந்து விட்டால் பிணம் எடுத்துப்போகும் வரையில் துக்கம் அதிகமாயும், பின்னர் அது வரவரக் குறைந்துகொண்டும் வரவில்லையா? அழகிய வஸ்துக்களைக் கண்டவுடன் மனம் நம்மை அறியாது அவைகளை நோக்கிப் பாயவில்லையா? ஆதலால் ரூபத்தின் சக்தி மிக அதிகம். அது மனத்தைக் கவர்ந்துவிடும். அன்பை நிலைக்கும்படி செய்யும். இதுபற்றித்தானே நாம் ஸதா ஞாபகம் வைத்துக்கொள்ள விரும்புபவர்களின் படத்தை நாம் நம்முன் வைத்துக் கொள்ளுகிறோம். நமது பிரியவஸ்துக்கள் உருவம் நீங்கிவிட்டால் வரவர அவைகள் ஞாபகம் மழுங்கிக்கொண்டே வரும். ஆதலால் ரூபம் இருந்தால் அதன்மேலுள்ள பற்று மாறாதிருக்கும். நாம் பார்த்துப் பழகிவந்த வஸ்துக்கள் விஷயமே இவ்வாறாக, நாம் கண்டறியாது நம்முன்னோர் வாக்கில் நம்பி உணரவேண்டிய கடவுள்விஷயம் உருவமில்லாதிருப்பின் எவ்வாறு நமது மனதைக் கவரும். பக்தி உண்டாக உருவத்தியானம் அவசியம். இது பற்றியே ஔவையாரும் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றாள். நம்மூர் திருடர்கள் கொடியவர்களுள்கூட மேனாட்டுக்கொடியவர்களைவிட ஒருவிதத்தில் சிறந்தவர்கள். இவர்க்ள் தாம் கொடுந்தொழில்செய்யப்புகும் முன் கணபதி முதலிய விக்கிரஹங்களைத் தொழுதுவிட்டுத்தான் தொடங்குவது வழக்கம். நாளடைவில் 'நமது கொடுமைக்கு ஆளாகும் மனிதர்கள்கூட இவ்வாறு கடவுளைத் தொழுவார்களே. கடவுள் யாருக்கு உதவி புரிவார்?' என்ற எண்ணங்கள் தோன்றி இவர்கள் கெட்ட தொழிலினின்று நீங்க முயலுவார்கள். ஆகவே விக்கிரஹாராதனை மனத்தூய்மைக்கு முக்கிய காரணம் என்பது வெளியாகும். இது பற்றியே அமெரிக்கர்களை நோக்கி ஒரு அவஸரத்தில் "பெண்மணிகள் காலில் விழுந்து 'நீதான் என் ஆருயிர், கண்மணீ!' என்று ஆராதனம் செய்வதைவிட, பெரியோர்கள் ஆராதித்து மேன்மை அடைந்த விக்கிரஹங்கள் முன் அங்கம் நிலம் தோய விழுவதே மேல். நான் அவ்வாறு 1000 தரம் செய்தாலும் செய்வேனே ஒழிய ஒரு ஸ்திரீ முன்னர் வணங்கத் துணியேன்" என்று விவேகானந்தஸ்வாமிகள் வற்புறுத்தியிருக்கிறார்.

(5) விக்கிரஹாராதனத்தைப்பழிக்கும் மதாந்தரத்தவர்களுள் மஹான்களில்லையா? என்ற கேள்வி ஒன்றுண்டு. கடவுளைப்பற்றி எல்லாம் மதங்களும் சற்றேறக்குறைய ஒரேமாதிரிதான் கூறுகின்றன. அவர் குணங்களுள் ஒன்றாகிய ஸர்வபரிபூர்ணத்வத்தை எடுத்துக் கொள்ளுவோம். கடவுள் எங்கும் நிறைந்த பொருள் என்றால் நமக்கு என்ன தோன்றும்? கண்ணை மூடிக் கொண்டால் இதை உணர்த்த பெருங்கடல் பாலைவனம் ஆகாயம் முதலிய நாம் கண்ட வஸ்துக்களில் பரந்த வஸ்துக்கள் தோற்றமே ஒழிய வேறொன்றும் இல்லை. இவைகள் கடவுளாகுமா? இவைகளும் ஓர்விதக் குறிகள்தானே! ஆதலால் விக்கிரஹப்பராயங்கள் தானே! மேலும் உருவமே வேண்டியதில்லை என்று தியானம் செய்யும், மறுக்கும் கிறிஸ்தவர்கள் மனதில் ஒருவித சூன்யமே காணப்படும். இது கடவுளா? மேலும் அவர்கள் உருவ ஆராதனம் வேண்டியதில்லை என்று கூறியபோதிலும், ஆராதனம் மாதாக்கோயிலில்தான் பண்ணவேண்டும், என்று ஓரிடம் வைத்திருப்பதால் அது விக்கிரஹ ஸ்தானத்திற்கு வந்துவிடும். விக்ரஹாராதனத்தைப்பழிப்பவர்களிடம்காணப்படும்விக்கிரஹாராதனம் மிகக் கெட்டது. அதன் உண்மை உருவம் விளங்காததால் அவர்கள் தம்மையும் பிறரையும் அபாய நெறியில் நடத்திக் கருவம், பரமத கண்டனம் ஆபாஸ ஞானம் முதலிய படுகுழிகளில் வீழ்த்துவார்கள். இவ்வாறு ஸூக்ஷ்மமாயும், கொடியதாயும் உள்ள விக்கிரஹாராதனம் செய்யும் புறமதத்தவர்களைத் தவிர விக்கிரஹாராதனத்தைப் பழிக்கும் மற்றவர்களது கண்டனத்தைப் பின்வருமாறு ஆராய்ச்சி செய்யலாம். துலுக்கர் நமது மனித உருவான விக்கிரஹங்களைப் பழிக்கின்றனர்; மெக்கா போனால் அங்குள்ள கருங்கல்லைக் கண்டதும் அதை ஆராதிக்கின்றனர். நம்மைப் பழிக்கும் கிறிஸ்தவர்கள் சிலுவையில் அடித்த ஒருமனிதன் உருவத்தைப் பரம்பொருளாக மதிக்கின்றனர். ஆகவே இவர்கள் கூறுவது யாதெனில் 'உங்கள் விக்கிரஹங்கள் தாழ்ந்தவை. எங்கள் விக்கிரஹங்களே சிறந்தவைகள். நீங்கள் செய்வது கேவலம் விக்கிரஹாராதனம். நாங்கள் செய்வது பரமநிஷ்டை' என்பதே. இது யுக்திக்குப் பொருந்தா வீண்உளறல் என்று நாம் கூறாமலே எல்லோருக்கும் விளங்கும்.

(6) மேனாட்டு பிரகிருதி சாஸ்திரிகள் முற்கூறிய ஆக்ஷேபணையை ஒருவாறு மாற்றிக் கொண்டு வருவார்கள். 'ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்யவேண்டுமாகில் உருவத்தின் ஸஹாயம் எதற்கு? நாங்கள் உருவமற்ற மின்சாரம் வெளி முதலியவைகள் ஸ்வரூபத்தை உணரவில்லையா? ஆதலால் உருவம் அனாவசியம்' என்பர். இது வீண் வார்த்தையே. இது அவர்களது அறியாமையை விளக்குகிறதே ஒழிய வேறில்லை. மின்சாரம் முதலியவைகளின் ஸ்வரூபத்தை அவர்கள் நேரிட ஒன்றும் கண்டறியவில்லை. அவைகள் தமது அரூபநிலை நீங்கி ரூபநிலையாகிய தமது காரியமாகுங்கால், காரிய மூலமாக அவைகளின் ஸ்வரூபத்தை இவர்கள் அறிய முயலுகின்றனர். காரியத்தைக்கொண்டுதான் காரணத்தின் ஸ்வரூபத்தை இவர்கள் விளக்குகின்றனர். இதுபோலவேதான் கடவுள் காரியத்தில் ஒன்றாகிய விக்கிரஹத்தின் மூலமாக நாமும் கடவுள் உண்மை நிலைமையை அனுபவிக்க முயலுவதும்.

(7) 'அநேக விக்கிரஹங்கள் எதற்கு? சிறந்த உட்கருத்துக்கள் அமைந்த ஒரு விக்கிரஹம் போதாதா?' என்பது அடுத்த கேள்வி. கடவுளுக்கு அநேக கல்யாணகுணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மனத்திற்கு ஒவ்வொரு குணம் நன்றாகப் பிடிக்கும். அதன்மூலமாகப் பக்தி அவனுக்கு எளிதில் உண்டாகலாம். ஆகவே அவனுக்கு அந்தக் குண ஸம்பந்தமான விக்கிரஹம் ஆராதனைக்கு வேண்டியதாகும். ஆதலால் அநேக விக்கிரஹங்கள் வேண்டியது அவசியம். இம்மாதிரி இருப்பது மனிதர்கள் மனோதர்மத்திற்கேற்ப அவர்களுக்கு உதவி புரிந்து அவர்களை மேன்மைப்படுத்தும் குணத்தையே முக்கியமாகக் கொண்டுள்ள நமது மதத்திற்குப் பொருத்தமாகவே இருக்கிறது.

(8) 'மனிதரூப விக்கிரஹங்களை ஆராதிக்குங்கால் மனித விஷயங்களான குறைகள் முதலியன அதனோடு ஸம்பந்தப்படாமல் போகுமா?' என்ற கடைசிக் கேள்வி பிறக்கும். இதற்குப் பரிஹாரமாக நாமும் ஒரு கேள்வி கேட்கலாம். 'மிகச்சிறந்த புத்தகமாக மதித்து நாம் ராமாயண புத்தகத்தை வணங்குகிறோமல்லவா?

அந்தப் புத்தகத்துள் ராமகதை இருப்பது போல ராவண வைபவமும் இருக்கிறதல்லவா? ஆகவே நமது நமஸ்காரம் ராவணனுக்கும் போய்ச் சேராதா?' என்று ஆக்ஷேபித்த குதர்க்கன் போல இருக்கிறான் முன் கேள்வி கேட்டவன். ஈசுவர ஸ்ருஷ்டியுள் மனிதப்பிறவி மிகச்சிறந்தது, பகுத்தறிவுமுதலியன இருத்தலால்,என்பதுஎல்லோரும் அறிந்த விஷயம். இவ்வாராதனத்தில் மனித உருவத்துடன் ஸம்பந்தப்பட்ட மேன்மைகளையே கருதப்படுமல்லாது, குறைகளைக் கருதக் காரணமே இல்லை. ஞானோபதேசம் செய்யும் குருவை ஈசுவரனாக மதிக்கவேண்டும் என்பது சாஸ்திரம். மனஷ்ரூப விக்கிரஹாராதனம், குருவாராதனம் முதலியவைகளுக்கு மிகுந்த ஸஹாயம் ஆகும். ஆனால் கோயில்களில் ஸ்வாமிகளுக்குக் கல்யாணம், பள்ளியறை முதலியவைகள் ஏற்படுத்தி மனித விஷயங்களைக் கொண்டாடி வரவில்லையா? இது எப்படி ஆராதனையைச் சிறப்புற்றோங்கும்படி செய்யும் என்ற கேள்வி வரும். இவைகள் பொது ஆராதனா ஸ்தலங்களாகிய கோயில்களில் பிரபஞ்சஸ்ருஷ்டி விஷயங்களைக் குறிக்க நடத்தப்படும் உட்கருத்துடைய சடங்குகள். இவைகளைக் கேவலம் நமது கல்யாணம் முதலியவைகளைப்போலக் கருதுவது பாபஹேது. அவ்வாறு கருதும் கோயில் குருக்கள் பாமரர்கள், ஸ்திரீ லோலர்களாக விருந்து வருந்துவதை நாம் இப்பொழுதும் காண்கிறோம். குறிப்பறிய மாட்டாதவர்களைத்திருஷ்டாந்தமாக எடுக்கவே கூடாது. கோயிலில் கல்யாணம் முதலியவைகளை ஏற்படுத்திய நம்மவர்கள் கிருஹ பூஜைகளில் அம்மாதிரி வைக்கவே இல்லை. ஆதலால் இவை பொதுக்குறிப்பு விஷயமே ஒழிய ஒவ்வொருவனும் தனித்தனிக் கவனிக்கவேண்டிய விஷயமல்ல என்பதும் வெளியாகும்.

இதுவரையில் குறித்தவைகளிலிருந்து விக்கிரஹாராதனம் இல்லாது பகவத் ஆராதனம்முடியாதென்றும்; அதுவே வெளியே நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் மனமுடைய நமக்குத் தகுந்த வழியென்றும், அதை உள்ளபடி உணர்ந்து செய்தால் நமது மனம்அவைகள் ஸம்பந்தமான கர்மங்களால் சுத்தமாகி, அவைகள் ஸம்பந்தமானத்யானங்களால் ஏகாக்ரப்பட, கடவுளை உள்ளபடி நிர்க்குணமாக அனுபவித்தறியும் நிலையாகிய மோக்ஷம் ஸித்திக்க இடமுண்டாகும் என்றும், இவைகளைஉணராதுமூடபக்தியுடன் வெகுகாலம் வழிபடுபவர்களுக்கு நமது பெரியோர்களது விக்கிரஹாராதனைவிலக்குக்களாகிய புத்திமதிகள் ஸஹாயமாக வந்து சீர்திருத்தும் என்றும் தெரியவரும். ஆதலால்எவ்விதத்தில் விக்கிரஹாராதனை செய்தபோதிலும் நமக்கு ஒருவிதத் தாழ்வும் ஏற்படாது. நாம் நாளடைவில் சிறப்புற்றோங்குவோம் என்பதற்கு ஸந்தேகமேயில்லை. இது பற்றியேதான்விவேகானந்த ஸ்வாமிகளும்'விக்கிரஹாராதனையின் சிறப்பால் ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்போன்ற மஹான்கள் வெளி வருவாராயின் எத்தனைகோடி விக்கிரஹங்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளக் கூடாதா?' என்றும், 'விக்கிரஹாராதனம் பயனற்றது என்று பழித்த எனக்கு உபதேசம் எல்லாம் விக்கிரஹத்தையே கடவுளென அன்புடன் மதித்துப் பாவசரான குருவிடமிருந்தே வந்தது' என்றும் விக்கிரஹாராதனத்தின் சிறப்பை வியந்து கூறியிருக்கிறார்.

---

மோக்ஷத்துக்கு விரோதிகள்.-ஸந்தோஷம்,காமம், மோஹம், ஆகிய இவைகளே மோக்ஷ விரோதிகள். இவைகள் ஒவ்வொன்றும் வேறு இவ்விரண்டு ரூபமாகவும் காணப்படும். ஸந்தோஷம், திருப்தி, ஆனந்தக்களிப்பாகவும்; காமம், கோபம் த்வேஷமாகவும்; மோஹம், சோம்பல் தாமஸமாகவும் காணப்படும். இவைகளுள் எல்லாவற்றையும் எளிதில் அடக்கி விடலாம். காமத்தை (விஷய இச்சையை) அடக்குவது தான் மிகக்கஷ்டம். இது மனது எவ்வளவு சுத்தமாயும் உருமாறி ஒட்டிக்கொண்டிருக்கும். ஆதலால் எந்தச் சமயத்திலும் ஏமாந்து இதற்குப் புத்திமான் இடம் கொடுத்து விடவேகூடாது.

பாரத வினாவிடை 3-ம் பாகம் அசுவமேத பர்வம்:



# பண்டிதராஜ ஜகந்நாத கவி

## LIFE OF PANDITHA JAGANNATHA KAVI

இவர் நமது தேசத்தில் அவதரித்து விளங்கின ஸம்ஸ்கிருத மகாகவிகளுள் ஒருவர். காளிதாஸர் பவபூதி முதலான மகாகவிகளுடன் ஒருங்கு சேர்த்துச் சொல்லத்தகுந்த அவ்வளவு உயர்தரப் பாவலர். அலங்கார சாஸ்திரத்தில் மகா விற்பன்னர், ஆழ்ந்த ரஸக்ஞர். சமீப காலத்தில், அதாவது இன்றைக்குச் சுமார் 350 வருஷங்களுக்கு முன்தான் வசித்தவராயினும், அவரது கிரந்தங்களெல்லாம், அவர் காலத்தும், பின்னும் வசித்த ஏனையோர்களது காவியங்கள்போல் கடினமாயும், சப்தாலங்காரம் நிறைந்ததாயும், பொருட்பொலிவற்றனவாயுமிராது. பிராசீன கவிகளது வாக்குப்போல் பிரஸாதம் மாதுர்யம், முதலிய குணங்களுற்றதாய் இருக்கின்றன. வாக்கினது மிருதுவிலும் பதப்பிணைப்பின் இனிமையிலும் இவரைப் பில்ஹணருக்கும், ஜயதேவருக்கும் சமானமாய்ச் சொல்லலாம்.

"ரஸ கங்காதரம்" என்ற பெயருள்ள, தானியற்றிய அலங்கார சாஸ்திரத்தில், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கேட்ட மாத்திரத்தில் அர்த்தம் விளங்கும் குணமே "பிரஸாத"மாகும் என, விவரிக்குமிடத்து, அக்குணத்துக்குப் பொதுவாய் தானியற்றிய எல்லாச் சுலோகங்களுமே உதாரணமாகும் என்று எழுதியிருக்கிறார். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே. ஸம்ஸ்கிருத நடை எழுதுவதிலும், வாதம் செய்யும் சாமர்த்தியத்திலும், சங்கர பகவத் பாதாசாரியருக்குமட்டும் இவரைக் கீழாகச் சொல்லலாம். அவரது வசன நடை வலிமையும் தெளிவு முற்று இலகுவான ஓட்டத்தை யுடையதாயிருக்கிறது. வாதப்ரதிவாதம் பண்ணுவோர்கள் உபயோகிக்கும் அஸ்திர சஸ்திரங்களில் இவர் மகா சமர்த்தர்; சமயம்போல் குறி தப்பாது அவைகளை வெகு சுவாதீனத்தோடு பிரயோகிப்பார். "ரஸ கங்காதர"த்தில் அனேக இடங்களிற் காணப்படும் வித்தியாச அபிப்பிராய கண்டனங்கள் வாசிக்க வாசிக்கத் திகட்டா பொலிவுற்றனவாய் இருக்கின்றன.

ஜகந்நாதரது ஒரு விசேஷ குணமாவது அவர் தற்புகழ்ச்சியில் மகா ப்ரீதியுள்ளவர். வேறு அனேக கவிகள் ஆத்ம ஸ்துத்யமாகச் சில வாக்யங்கள் எழுதியிருக்கிறபோதிலும், இவரைப் போல் தன் பெருமையைத் தானே அவ்வளவு தூக்கிச்சொல்லியவர்கள் கிடையாது. "ரஸகங்காதர"த்தின் ஆரம்ப சுலோகங்களையும் "பாமினி விலாஸம்" என்ற கிரந்தத்தின் முடிவிலுள்ள சுலோகங்களையும் வாசிக்கும்போது, தனது நிறையுறை முற்றுமறிந்துணர்ந்துதான் அவர் எழுதியிருக்கிறாரென்று தெரிகிறது. நமக்கு இது சரிதான், பொருந்தும் என்று அங்கீகரிக்கவும் தோன்றுகிறது. ஆயினும் அவ்வளவு நிரங்குசமான தற்புகழ்ச்சி மிகப் பாராட்டத் தக்கதன்று.

இனி இவரது ஜீவிய சரித்திரத்தைப் பற்றித் தெரிந்தமட்டில் எழுதுவோம். இவர் ஆந்திரதேசத்தில், பிராமண வர்ணத்தில், "தைலங்கர்கள்" என்ற பெயர் பூண்ட ஒரு வம்சத்தில் பிறந்தவர்.

இவரது பிதாவின் பெயர் பேரம்பட்டா என்றும், மாதாவின் பெயர் இலட்சுமி என்றும் அவர் வாக்கினின்றே தெரியவருகிறது. அவர் பிதாவும் வேதாந்த முதலாகிய தரிசனங்களிலும் வியாகரணத்திலும் தேர்ச்சி பெற்றவர். ஜகந்நாதர் தனது தகப்பனாரிடத்திலேயே கல்வி பயின்று அதிசீக்கிரத்தில் தேர்ச்சியுற்றார். பின்பு கர்னாடகதேசத்தரசன், தன்னை ஆதரித்துக் கௌரவப்படுத்தாததால், கீர்த்தியும் செல்வமும் சம்பாதிக்க வெண்ணி வடதேசங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார். போகும் வழியில் ஜயபுரியில் அனேகம் பண்டிதர்களை வென்று,புதிதாகச் சாஸ்திரப் பாடசாலை ஒன்று அங்கு ஸ்தாபித்துவிட்டு மேலே சென்றார். அக்காலத்தில் டில்லி சமஸ்தானத்தைச் சேர்ந்த, மகம்மதிய மதத்தில்

நிபுணனான ஒரு காஜி, தேசம் முழுதும் சுற்றிச்சென்று, போகுமிடங்களிலுள்ள அறிஞர்களுடனெல்லாம் வாதம் செய்து, இஸ்லாம் மதந்தான் உலகத்தில் உண்மையான மதமென்று ஸ்தாபித்துக்கொண்டு போனான். இவ்விதம் அநேக ஆரியமத ப்ரவீணர்கள் அவனால் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற ஜகந்நாதர், ஒருவருஷத்திற்குள் பாரசீக பாஷையை முற்றிலும் பயின்று இஸ்லாம் மதத்துக் கொள்கைகளை, உற்பத்தி ஸ்தானத்திலேயே கற்றறிந்தபின், காஜியுடன் வாதம் செய்தார். இவரது தீக்ஷண்ய புத்திக்கெதிர்நிற்கமாட்டாது, காஜிமுற்றிலும் தோல்வியுற்றான். இஸ்லாம் மதத்தார்கள், வேண்டுமானால் தங்கள் மதத்தையே பற்றியிருத்தல்மட்டும் தகுதியாகுமென்றும், அன்றி வேறு மதஸ்தர்களை இழுத்துத்தான் சேர்த்துக்கொள்ளும்படியான உயர்குணம் அம்மதத்தி லொன்றுமில்லையென்றும், டில்லி சக்கிரவர்த்திக்கே மனதிற்குப்படுமாறு ஜகந்நாதர் நிரூபித்தார். சக்கிரவர்த்தி அவரது அற்புதச் சக்தியைக்கண்டு மகிழ்ந்து, அவரைத் தனது சமஸ்தான வித்வான்களிலொருவராக நியமித்தார்.

இவர் காலத்தில் ஆண்டுவந்த அக்பர் மகாசக்கிரவர்த்திக்கு, ஒரு இராஜபுத்திர மனைவியினால் அதிலாவண்யவதியான "லவங்கி" என்று பெயர் கொண்ட ஒரு புத்திரி இருந்தனளாம். இயற்கையழகும், யௌவனமும் பொருந்திய அப்பெண், தன் தகப்பனதரண்மனையில், ஒப்பற்ற கல்வித்திறமையும், மனோஹரமான சரீர சௌந்தர்யமும் வாய்ந்த ஒரு பண்டிதரிருக்கிறாரென்று கேள்வியுற்று, அவரைப் பார்க்கவேண்டுமென்று பேராவாக்கொண்டனள். அவரைக்கண்ணுறும்படியான ஒரு சமயம் நேரிடவும் தன் வசமிழந்தகமழிந்தவளாய், 'ஜகந்நாதரை மணந்தால் மணக்கிறது அன்றேல் கன்னிகையாய் இருந்துவிடுகிறது' என்று தனக்குள் நிச்சயம் செய்துகொண்டாள். ஒருநாள் அக்பரும் ஜகந்நாதரும் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது, சக்கிரவர்த்திக்குத் தாகம் உண்டானமையால் ஜலம் கொணர உத்தரவனுப்பினான். உடனே நீர்த்தச் செம்பைத் தலையில் வைத்துக்கொண்டு அவ்விருவரும் இருக்குமிடத்திற்கு "லவங்கி" வந்தாள். வெகு உற்சாகத்துடனிருந்த அரசனும் அவளை அந்நிலையில் வர்ணிக்கும்படி கவியை வேண்டினான். பண்டிதர் உடனே,

**इयंसुस्तनीमस्तकन्यस्तकुंभा, कुसुंभारुणंचारुचेलंवसान ।**
**समस्तलोकस्यचेतः प्रवृत्तिं ,गृहित्वाघटेन्यत्ययातीवभाति॥**

என்று சொன்னார். அதாவது, "சிவப்பு வஸ்திரம் தரித்து உச்சியில் நீர்த்தகும்பத்தை வைத்துக்கொண்டிருக்கிற அழகிய தனங்களையுடைய இப்பெண், உலகோர்களது மனதுகள் யாவையும் பிடித்துக் குடத்தில் கொண்டுபோகிறவள்போல் விளங்குகிறாள்." இந்தச் சாதுர்ய வர்ணனையைக் கேட்டதும் அரசன் மகிழ்ச்சியுற்று, "நீர் கேட்டதை யளிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று பண்டிதரிடம் சொன்னான். கவி சிரேஷ்டரும்,

**नयाजेगजालिंनवावाजिराजिं, नवित्तेषुचित्तंमदीयंकदाचित् ।**
**इयसुस्तुनीमस्तकन्यस्तकुंभा, लवंगीकुरङ्गीटगङ्गीकरोतु॥**
**यवनीनवनीतकोमलांगी, शायनीयेयदिलन्यतेकदाचित् ।**
**भावनीतलमेवसाधुमन्ये, नवनीमाघवनीविलासहेतुः ॥**

என்று பதிலுரைத்தார். அதாவது "எனக்கு யானைகளும் வேண்டாம், குதிரைகளும் வேண்டாம்; பணத்தில் எனக்கு ஒருநாளும் விருப்பம் கிடையாது. இந்த மான்போன்ற பார்வையையுடைய லவங்கியினது கடாக்ஷ வீக்ஷணம் மட்டும்என்மேல் விழட்டும். இந்த வெண்ணெய்போல் மிருதுவான அங்கங்களையுடையயவ்வனியானவள் என் காதலுக்கிசைவளேல், இப்பூமியே இந்திரனுடைய உத்யானத்தைக்காட்டிலும் அதிக சுகந்தரத் தக்கதென்று கருதுவேன்." இப்படி எதிர்பாராவண்ணமாகக் கவி வரித்ததைக் கேட்டதும் சக்கிரவர்த்தி தான் முதலில் வாக்குக்கொடுத்ததைப்பற்றி வருத்தமுற்றும், சொன்ன சொல் தவறுதவனாகையால், "நீர் என்னுடன் கூடச் சாப்பிடுவீராகில் நான் உமது விருப்பத்தை



நிறைவேற்றுவேன்" என்று சொன்னான். காமத்தில் ஈடுபட்டவராய் ஜாதிப்பிரஷ்டகாமான அந்த நிபந்தனைக்கும் பண்டிதர் உடன்பட்டார்.

இவ்விதம் ஜகந்நாதர் சக்கிரவர்த்தியினது ஆதரவின் கீழ் இன்பமாக வாழ்ந்துவரும் நாளில், வேறோரரசன், தனது சமஸ்தானத்திற்குவந்தால் அவரைச் சிறப்புடன் ஆதரிப்பதாகச் சொல்லி அவருக்குக் கடிதமொன்றனுப்பினான். அதற்குப் பதிலாக,

**दिल्लीश्वरोजगदीश्वरोवामनोरथान्पुरचितुंसमर्तः।**
**अन्यैर्नृपालैः परिदीयमानं शाकायवास्याल्लवणायवास्यात्॥**

என்று சொல்லி யனுப்பினார். அதாவது "டில்லிக்கதிபதியோ அல்லது ஜகத்துக்கதிபதியோ தான், எனது மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்ய முடியும். ஏனைய அரசர்கள், கொடுப்பது கறிகாய்க்கோ உப்புக்கோதான் போதும்."

ஜகந்நாதர் கடுமையான தபம் செய்து, தேவியினிடமிருந்து பின்வரும் வரத்தைப் பெற்றாரென்று சொல்லப்படுகிறது.

**आकूरुदेशंवित्तरेः माकूरुपरवादिनिर्जयेशंकाम् ।**
**स्वीकुरुवरमेकंमे व्याकुरुभो वत्सशास्त्राणि ॥**

அதாவது "குருதேசம் முழுதும்போவாயாக; எதிரிகளால் அபஜயம் உண்டாகுமோவென்று நீ யோஜிக்க வேண்டாம். இவ்வொரு வரத்தைப் பெற்றுக்கொண்டு நீ சாஸ்திரங்களை விவரிப்பாயாக."

நவீன வியாகரண விற்பன்னரான நாகேச பட்டரது குருவான ஹரதீக்ஷிதர் என்பவர் சக்கிரவர்த்தியிடமிருந்து சம்மானம் பெறலாமென்ற ஆசையுடன் டில்லிக்குப் போனார். அரசன் முன்னிலையில் போகுமுன், பண்டிதராஜரிடம் சென்று சபாமண்டபத்தில் அவருடன் வியாகரண சம்மந்தமாக வாதம் செய்யத் தனக்கு விருப்பமிருப்பதாகத் தெரிவித்தார். பண்டிதராஜரும் அதற்குச் சம்மதித்து அடுத்த நாள் அவரைச் சபைக்கு வரும்படி சொன்னார். எதிரியினது மகா திறமையை முற்றிலுமறிந்த



வராதலால் ஜகந்நாதர், சபையில் நுழைவதற்கு முன்னர் ஏதோ அபூர்வ சக்தியுள்ள ஒரு ரக்ஷையைத் தரித்துக்கொண்டு எதிரியை ஆலிங்கனம் செய்தார். ஹரதீக்ஷிதரது மனதில் அவர் அறியாமலே ஒரு மயக்கம் வியாபித்தது. ஆரம்பத்திலேயே அவர், உளற ஆரம்பித்துக் கடைசியில் மிக்க மானபங்கத்துடன் சபையை விட்டு வெளியேறினார். வீடு சென்றதும், அவர் சபையிற் செய்த மூடத்தனமான உத்தரங்களுக்கு அவருக்கே காரணம் தெரியவில்லை, தோல்வியின் அவமானம் பொறுக்கமாட்டாமல். ஹரதீட்சிதர், மானபங்கத்தைக்காட்டிலும் சாவே நலமென்றெண்ணி, அன்றிரவுக்குள் ஜகந்நாதரை ஜயிக்குமுபாயம் கிடைக்காவிட்டால் தன்னைத் தானேமாய்த்துக்கொள்வதென்று தீர்மானித்தார்.

தேவதானுக்கிரகத்தால் அவருக்குச் சக்தி மறுபடியும் உண்டாகி மறுநாள் ஜகந்நாதரை ஜயித்தாராம்.

யவனஸ்திரீயாகிய தனது மனையாளுடன் டில்லியில் வெகு சுகமாக வயது காலம்வரும் வரை வாழ்ந்துவிட்டு ஜகந்நாதர் பின்பு தனது செய்கைகளைக் குறித்துப் பச்சாதாப முற்றவராய் தனது வாழ்நாளின் பாக்கியை, வாராணஸி என்றுசொல்லப்பட்ட புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியில்கழிப்பதாக உத்தேசித்து அங்குப்போய் வசித்தார். தென் தேசத்தவரும் மகா சுரோத்திரியருமான அப்பய்ய தீட்சிதர் என்ற மஹான் யாத்திரார்த்தமாக அப்புண்ணிய நகருக்குப் போயிருந்தபொழுது ஒருநாள் சாயங்காலம் ஜகந்நாத பண்டிதரைப் பார்க்கச் சென்றார். அந்த அனுசிதமான காலத்தில் அவர் தனது யவனியுடன் ஒரு சயனத்திலிருப்பதைப் பார்த்து ஆச்சரியமுற்று, ஆயினும் ஒன்றுமறியாதவர்போல.

**किनिद्राङ्क्षेशेषे शेषेवयसः समागतेसुत्यु ।**

"ஆயுசு க்ஷீணமடைந்து யமன் வந்து கதவைத் தட்டும் காலத்தில் இப்படிப் பயமற்றுத் தூங்குகிறாயே," என்று சொன்னார். இதைக்

கேட்டதும் ஜகந்நாதர் எழுந்து ச்ரோத்திரியரை வரவேற்க அணுகியபோது, பிராமணர் மேலும்,

**अथवासुखं शयीथा निकटेजागर्तिजाह्नवीजननी ॥**

"அல்லது சுகமாய்த் தூங்கு; ஏனெனில் அருகே தாயாரான கங்கை விழித்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொன்னாராம்,

காசியிலுள்ள பிராமணர்கள் இவரது குற்றங்களை மன்னித்துப் பிராயச்சித்தம் செய்வித்து அவரை ஜாதியிற் சேர்க்க விரும்பினார்கள். ஆனால் அவர் தன் காதலியை விட்டுப் பிரிந்து வசிக்க உடன்படவே மாட்டேனென்று சொல்லிவிட்டார். இப்படிப் பிராமணர்களது சம்மதத்துடன் தனதிஷ்டப்படி பிராயச்சித்தம் செய்துகொள்ளமுடியாமல் அவர் ஒருநாள் கங்காநதியின் ஸ்நானகட்டங்களிலொன்றினது உச்சிப்படியில் தனது யவனஸ்திரீயுடன் உட்கார்ந்துகொண்டு, அமிர்தம்போன்ற மதுரமான வாக்கினால் சுலோகங்கள் சொல்லி அந்தத் தேவநதியின் பெருமையைப் புகழத் தொடங்கினார். ஒவ்வொரு சுலோகம் சொல்லிமுடிந்ததும் நதியினது பிரவாஹம் எழும்பி ஒவ்வொரு படியாக உயர்ந்தது. அந்தக் கட்டத்தில் 52 படிகளிருந்தனவாம். ஐம்பத்திரண்டாவது சுலோகம் முடிந்ததும் சர்வபாவனமான கங்காதீர்த்தமானது அவர்களைத் தொட்டு மூழ்குவித்து அவர்களது பாபத்தையும் அடித்துக்கொண்டு சென்றது. அவ்விருவரும் கங்கையிலேயே விழுந்து மறைந்துவிட்டார்களாம். ஐம்பத்திரண்டு சுலோகங்களடங்கிய இந்த ஸ்தோத்திரத்திற்கு 'கங்காலஹரீ' என்று பெயர். இது பாரத வருஷம் முழுதும் கொண்டாடப்பெற்ற மிக்க இனிமையான கிரந்தம்.

இவர் இயற்றியிருக்கும் முக்கிய நூல்களாவன:—பீயூஷலகரி, சுதாலஹரி, அமிருதலஹரி கருணாலஹரீ, லக்ஷ்மீலஹரீ, யமுனாவாரணசம்பு, ரஸகங்காதரம், மனோரமாகுசமர்த்தனம், பிராணாபரணம், ஜகதாபரணம், அஸபவிலாஸம், பாமினீவிலாஸம்.

எஸ். மஹாலிங்கஐயர். பி. ஏ.,

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 5. உடையது விளம்பேல்

நீ உடைத்தாயிருக்கும் குண விசேஷங்களை முன்பின் யோசிக்காது நீயே வெளியிடாதே என்பது இதன் பொருள். நீ உடைத்தாயிருக்கும் குணங்கள் சிறந்தவைகளாக இருப்பின் அதை நீயே சொல்லிக்கொள்ளலாகாது. அவ்வாறு செய்வது தற்புகழ்ச்சியாகும், இதைப் பெரியோர்கள் ஒருகாலும் செய்யத் துணியார். பிறர் தாமாகவே உனது சிறப்புக்களைக் கண்டு வெளியிட்டால் இடட்டும். அவ்வாறு இடுவதற்கு நீ மனதாரக் காரணமாக இருத்தல் கூடாது. அப்படி இருந்தால் உடையது விளம்பிய பாபத்தில் உனக்கு ஸம்பந்தம் ஏற்படும். மேலும் பிறர் உனது குணச்சிறப்பைப் புகழ்ந்து பேசுங்கால் அதைக் கூசாது ஸந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருத்தலும் உடையது விளம்புவதின் ஒரு வகை ரூபம். ஆதலால் இவைகள் காரணமின்றி உனது குணங்களைப் பிறர் புகழும்படி நேரிட்டால் தகாதது ஒன்றுமில்லை.

நீ உடைத்தாயிருக்கும் குணங்கள் சிறந்தவைகளில்லாவிடின் உனக்கே அவைகளை வெளியிட மனம் வாராது. ஆகவே இவைகளை வெளியிடாததனால் 'உடையது விளம்பேல்' என்னும் நீதிமொழிப்படி நடந்து விட்டோம் என்று நீ இறுமாந்திருக்க இடமேயில்லை. இம்மாதிரி விஷயங்களிலும் பாபத்தை அல்லது கெட்ட குணத்தை வாய்விட்டுச் சொல்லி விட்டால் அதன் வலிமை குறையும் என்று நீதியைப் பின்பற்றி, இவைகளையும் முன்பின் யோசிக்காது வெளியிடலாகாது என்பதும் இந்நீதி மொழியில் அடங்கிய பொருள். எவ்வெக்கெட்ட விஷயங்கள் அல்லது குறைவுகளைத் தாமே வெளியிடவேண்டும் என்பதை 'இயல்வது கரவேல்' என்னும் நீதிமொழி விளக்கத்தில் கூறியாகிவிட்டது. அவை ஒழிந்த மற்றவைகளை நாமாக வெளிப்



படுத்தலாகாது என்பது இந்நீதி வாக்கியத்தின் கருத்து.

இந்நீதி வாக்கியம் 'இயல்வது கரவேல்' என்பதற்கு நேர் எதிர் வாக்கியம் என்று தோன்றும். உண்மையில் அவ்வாறு அல்ல. இவை இரண்டும் சேர்ந்தே ஒரு நீதியாக நிற்கின்றன. ஒரு நீதியின் இரண்டு பாகங்களாக இவைகள் காணப்படுகின்றனவே ஒழிய ஒன்றற்கு ஒன்று தம்முள் விரோதம் அல்ல. உலக விஷயநடவடிக்கைகளில் எப்பொழுதும் துவந்தவங்கள் கலந்தேயிருக்கும். ஆதலால் எந்த நீதியைக் கூறப்புகினும் அதற்கு எல்லையுண்டு. அந்த எல்லைக்குள் அந்த நீதிமொழியும் அதற்கு அப்பாற்பட்ட அதேமாதிரி விஷயங்களுள் நேர் எதிரிடையான நீதி மொழியுமே பொருந்தும். ஆகவே ஒரேவிதமான விஷயங்களுக்குக் காலதேச வர்த்தமான பேதத்தால் இரண்டு முரணான நீதி மொழிகள் தகுந்தவைகளாக இருக்கும் விநோதத்தை உடையது இவ்வுலகம். இந்த விஷயத்திற்கு இந்நீதி மொழிகளே உதாரணம். உலக விஷயங்களை சில ஸமயங்களில் மறைக்கவே கூடாது. சில ஸமயங்களில் மறைத்தே தீரவேண்டும் என்பதேநெறி. இது இவைகளால் விளையும் நன்மை தீமைகளைப் பொருத்தனவே ஒழிய ஸுகதுக்கங்களைப் பொருத்தனவேயல்ல. இந்த ஒரே உலக நீதிவாக்கியம் இரண்டாகப் பிரிக்கப்படுங்கால் 'இயல்வது கரவேல்' என்றும், 'உடையது விளம்பேல்' என்றும் இரண்டு முரணான நீதிகளாகி விடும். இவைகள் இரண்டிற்கு எல்லைகட்டிப் பொருள் கூறில் இரண்டும் ஒரே விஷயத்தைப் பற்றிய நீதிகளே ஒழிய தோற்றமாத்திரத்தில் காணப்படுவது போல முரணானவைகளே யல்ல என்பது நன்கு வெளியாகும்.

இனி 'உடையது விளம்பேல்' என்பதைப் பண விஷயமாகப் பொருள் படுத்தலாம். அப்பொழுது 'உனது சொத்து முதலியவைகளை நீயே வெளியிட்டுக் கொள்ளாதே அது கொடியவர்களுக்கு மனஸ்தாபத்தை உண்டாக்க உனது ஸொத்தை நீ இழக்கும்படி நேரிடும்' என்றாகும். ஆகவே தான விஷயங்களில் கர்வத்தை முன்னிட்டு உடையதுவிளம்பாமலும், லோபத்தை முன்னிட்டு இயல்வதைக் கரக்காமலும் செய்வதைத் திருந்தச் செய்துவிடவேண்டும்' என்பதே இவ்விரு நீதிவாக்கியங்களின் பொருத்தத்தை நன்றாகக் காட்டும்.

உடையது விளம்பியதால் கேடு விளைந்து வருந்தியவர் அநேகர். யயாதி மஹாராஜன் தன் புண்ணியவிசேஷத்தால் ஸ்வர்க்கம்அடைந்துஇந்திரனோடு அரை ஆஸனத்தில் வெகுகாலம் வீற்றிருந்து சிறப்புற்றோங்கினான். இப்படி இருக்கையில் இந்திரன் இவரை மிகப் புகழ்ந்து பேசி முடிவில் 'நீர் செய்த புண்ணியத்தின் சிறப்பைப் பிறர்க்கு உபகாரமாக எடுத்து வெளியிடும்' என்றான். யயாதி தன் புண்ணியத்தின் சிறப்பைக்கூறி அதோடு நிறுத்திவிடாமல் 'யான் செய்த புண்யத்திற்கு நிகர் வேறு ஒருவரதும் ஆகாது. ரிஷிகள் தவம் செய்தும் யாது பயன்! வேறுயார் எந்த ஸத்க்கிருத்தியம் செய்தும் என்ன பயன்! எல்லாம் யான் செய்தவைகளுக்கு ஈடோ? என்று கூறி உடையது விளம்புவதாகிய பாபத்தைச் செய்து விட்டான். உடனே இந்திரன் 'தற்புகழ்ச்சியால் உன் புண்ணியங்கள் நீங்கி விட்டன. போகலாம் பூமிக்கு!' என்று கூறி யயாதியைத் தள்ளிவிட்டான். விழும்பொழுது யயாதி இந்திரனை நோக்கி, 'யான் தற்புகழ்ச்சியால் இந்நிலைக்கு வந்தபோதிலும், நல்ல ஸாதுக்களிடையில் விழும்படி அனுக்கிரஹிக்க வேண்டும்' என்று மன்றாட, இந்திரன் அதற்கு இசைந்தான். இதன்படி யயாதி தன் பேரர்கள் செய்த யாகசாலைக்கெதிரே வர அவர்கள் தந்த தமது புண்ணிய பலன்களால் மறுபடியும் அவன் ஸ்வர்க்கம் போனான்.

இம்மாதிரியேதான் தன் புண்ணியத்தைக் குறைத்துக்கொண்டான் யயாதிபோனான அஷ்டகன். இவன் செய்தயாகத்திற்கு ஒருதரம் நாரதர் வந்து சேர்ந்தார். அவரை இவன் தனது தேரில்

ஏற்றிக்கொண்டு ஊருக்கு வெளியில் உல்லாஸமாகப் பவனி புறப்பட்டான். தன் ஊர்ச் சிறப்பை முனிவருக்குக் காட்டிக்கொண்டு வருகையில் ஓரிடத்தில் ஏராளமாகப் பசுக்கள் மேய்ந்துகொண்டிருந்தன. அதைக் கண்டதும் நாரதர் 'இவையாரைச் சேர்ந்தவை' என்று கேட்க 'இவைகள் இவ்வூர் பிராஹ்மணர்களது' என்று கூறி நிறுத்திவிடாது 'நான் தானம் செய்ய, அவர்கள் பெற்றவை' என்று கூறிவிட்டான். இதை வைத்துக்கொண்டே பின் ஒரு தருணத்தில், நாரதர் 'அஷ்டகனுக்குச் செய்த புண்யத்திற்கு ஏற்றபலன் கிடையாது. பலன் வெகு குறைவுதான்' என்று கூறினார்.

ஆகவே உடையது விளம்புவது நன்றன்று என்பது விளங்கும். இது ஒருவன் வலிமை எல்லாவற்றையும் வீண் பேச்சில் செலவிட்டுத் தொழில் புரிதற்கு வேண்டிய ஊக்கமில்லாமல் செய்து விடும். இவ்வாறு வீண்பெருமை பேசி ஊக்கமிழந்தவர்களில் கர்ணன் முக்கியன். பாண்டவர்களைச் சிறை பிடித்தல் தோல்வியடையும்படி செய்தல் முதலியவைகளை செய்துவிடுவதாக அடிக்கடி இவன் பெருமை பேசுவான். காரியத்தில் வந்து விட்டால் இவன்தான் யுத்தக்களம் விட்டு முதல் ஓட்டம் பிடிப்பான். ஆகவே பெரியோர்கள் தம்மால் இயன்றதைச் செய்து காட்டுவார்களே ஒழிய, முன்னர் வீண் பெருமை பேசித் தமது சொற்படி நடக்கமுடியாத நிலையை எப்பொழுதும் அடையார்கள். அவர் பேச்சு மாத்திரத்திலிரார்கள். கருமமே கண்ணாக இருப்பார்கள்.

### 6 ஊக்கமது கைவிடேல்

விடாமுயற்சியைச் செய்யவேண்டும் என்பதாயிற்று. ஒரு விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்து நாம் அதை அடைந்தே தீரவேண்டும் என்று தோன்றினால், அவ்விஷயத்தில் நமக்கு முயற்சி உண்டாகும். இது இடையில் ஏற்படும் தடைகளால் தளர்ச்சி பெறும். அவ்வாறு தளர்ச்சி உண்டாகாது தடுத்து, முயற்சியை விடாது, அடைய வேண்டியதை அடைந்தே தீரவேண்டும் என முனையவேண்டும் என்று இந்நீதிமொழி வற்புறுத்துகிறது.

இயற்கையில் ஏற்படும் தடைகளன்றி மனத் தடைகள் பொதுவாக எல்லோருக்கும் ஏற்படும். விதி என்ற எண்ணம் முயற்சிக்கு இடையில் வந்து தடைவருங்கால், நமது முயற்சியைத் தடுத்துவிடக் காரணமாக இருக்கும். ஆகவே நமது நூல்களில் கூறியபடி மனனம் செய்து விதி என்னும் எண்ணத்தையும் முயற்சிக்குக் குறுக்கே வந்து தடுக்கவொட்டாது தடுக்கவேண்டும். அந்த மனனம் பின் வருமாறு இருக்கவேண்டும். "ஒரு காரியம் முடிவதற்கு விதியும் முயற்சியும் வேண்டும். விதி இத்தன்மையது என்பது முன்னரே தெரியாது. முயற்சியின் முடிவில்தான் தெரியும். ஆகவே அதை முன்னரே எண்ணி முயற்சியைக் குறைப்பது அல்லது விட்டுவிடுவது யுக்திக்குப் பொருந்திய விஷயமல்ல. மேலும் விதி என்பது நம்மைவிட்டு வேறானதல்லவே. முன் காலத்திலோ அல்லது முன் ஜென்மத்திலோ நாம் செய்த கர்மம் இப்பொழுது வந்து தகைவதே விதி என்னப்படும். ஆதலால் நாம் ஒருவிதமாக நடந்ததனால்தான் நமக்கு விதி தடையாக ஏற்பட்டு விட்டது என்னலாம். இப்பொழுதும் நல்லவழியில் ஏற்படும் முயற்சியை விட்டுவிட்டால், இது அந்த விதியை பலப்படுத்துமே ஒழிய அதைத் தடுக்காது. ஆதலால் விதி விரோதமாக இருந்தாலும் நன் முயற்சியை விடவே கூடாது. ஆகவே விதியைப்பற்றிய எண்ணம் முயற்சியைத் தடுக்கக் காரணமே இல்லை. அது முயற்சியைத் தூண்ட வேண்டுமே ஒழிய வேறில்லை' என்றிவ்வாறு மனனம் செய்து ஊக்கத்தைக் கைவிடாதிருக்கவேண்டும்.

ஊக்கமது கைவிடாக்கால் வரும் பயன் யாது? பொதுவாக நாடும் பொருள் கைகூடுவது திண்ணம் என்பர் எல்லோரும். ஒருவேளை நாம் கோரும் பொருள் கைகூடலாம்; ஆனால் இதுதான் ஊக்கமது கைவிடாததற்குப் பலன்



என்று கூறிவிடக்கூடாது. ஒருவேளை நாம் வெகு ஊக்கமாக இருந்தபோதிலும், நாடும் பொருள் கைகூடாதிருக்கலாம். அப்பொழுது ஊக்கமது கைவிடேல் என்னும் வாக்கியத்தில் நம்பிக்கை நமக்குக் குறைந்துவிடும். உலகில் நாம் என்ன செய்தும் இரண்டு விதமான முடிவு உண்டாகலாம். அவையாவன அநுகூலம், பிரதிகூலம் என்பவைகளே. இவைகளில் அனுகூலத்தைமாத்திரம் நோக்கி ஒரு நீதிவாக்கியத்திற்குப் பொருள் கூறுவது அவ்வாக்கியத்திற்குப் பலக்குறைவு. ஆகவே ஊக்கமது கைவிடாக்கால் எப்பொழுதும் நாடும்பொருள் கைகூடும் என்று எதிர்பார்க்க நியாயமே இல்லை. கைகூடிவிட்டால் விதியும் அனுகூலம் என்பதாகுமே ஒழிய உன் முயற்சியின் சிறப்பை எண்ணிக் கர்விக்க நியாயமே இல்லை. அதுபோலவே கைகூடாவிடில் விதிப்பிரதிகூலம் என்பதாகுமே ஒழிய உன் முயற்சி குறைந்துவிட்டதென்று அகம் கறையவும் நியாயம்இல்லை. ஆகவே முடிவுஎவ்வாறாயினும் நாம் செய்யவேண்டிய முயற்சியைச் செய்துவிட்டால்நமக்கு ஒருவிதத் திருப்திவரும். அது கருவத்துள் அழுந்தாதிருப்பதற்கு விதியைப்பற்றிய எண்ணம் ஸஹாயமாயிருக்கின்றது. அந்தத் திருப்தி உருவழிந்து துக்கத்துள் புதையும்காலத்தில் இந்த விதியே வந்து நம்மைக் கைதூக்கியும் விடும். 'நாம் செய்ய வேண்டியதைச் செய்தோம். விதி விரோதமாக இருக்கிறது. காரியம் கைகூடவில்லை. ஆனால் நமது கடனைச் செய்து விட்டதால் விதியின் வலுக்குறைந்திருக்கும்' என்ற திருப்தி வெளியெழும். ஆகவே ஊக்கமது கைவிடாக்கால் மனதில் ஒருவித சாந்தி எப்பொழுதும் இருக்கும். ஆகவே மனத்தளர்ச்சி ஏற்படவேமாட்டாது. இதையே 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்' என்ற பழமொழியும் வற்புறுத்துகிறது. அதாவது இகழ்ச்சியுண்டாக்கக்கூடிய நாடிய பொருள் கைகூடாநிலை ஏற்பட்டபோதிலும் முயற்சி உடையோருக்கு மனம் அழிதல் என்னும் இகழ்ச்சி ஏற்படவேமாட்டாது என்பதாயிற்று.

முதலில் 'ஊக்கமது கைவிடேல்'என்னும் நீதிமொழியை விளக்கப் புகுந்தவிடத்து ஆராய்ந்து பார்த்து ஒருவிஷயம் அடையக்கூடியது என்று தோன்றினால் அவ்விஷயத்தில் உண்டாகும் ஊக்கத்தைஇடையே ஏற்படும்இடையூறுகள் குறைக்காவண்ணம் பாதுகாக்கவேண்டும் என்று கூறினோம். இது இம்மொழியின் எல்லையை நன்கு விளக்கும். முன்னர் ஆராயாது முயற்சிக்கத் தொடங்கியும்,பின்னர் ஆராய்ந்து பார்த்து அந்த விஷயம் அடையத்தகாதது என்று கண்டுவிட்ட பின்பு அதன்மேல் இருக்கும் வீணாசையால், அதை அடையவேண்டும் என்று வீணாக முயற்சித்தல் ஊக்கமது கைவிடேல் என்பதன்படி நடந்ததாகாது. இந்த ஸமயங்களில் உபயோகிக்க வேண்டிய நீதிவாக்கியம் 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்பதே. ஆகவே உலகவிஷயங்களைமுயற்சித்து அடையும் மார்க்கத்தில் உள்ளபடி நடந்து வர நாம் ஊக்கமது கைவிடேல் என்பதைக் கிட்டாதாயின் வெட்டெனமற என்பதோடு ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்து எதைக் கடைப்பிடித்தல் நீதியோ அதைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

உலகவிஷயத்தில் ஊக்கமதுகைவிடேல் என்பதற்கு எல்லை இருக்கின்றதாயினும் மனம் ஸம்பந்தப்பட்டவரையில் அதை அடக்குவது,மேலே பகவந்நிஷ்டை முதலியவைகளுக்குப் போய் ஸாதித்தல் ஆகிய இவைகளுக்கு முற்கூறிய எல்லையேகிடையாது. இவைகள் கூடியவைகளாயினும், எளிதில் முடிகின்றவையல்ல. ஆதலால் என்ன கஷ்டநிலை வந்தபோதிலும் நமது ஊக்கத்தைவிடவே கூடாது. இவ்விஷயத்தில் கிட்டாதாயின்வெட்டெனமற வென்பது வந்துபாதிக்காது. ஆனால் ஊக்கத்தின் அதிகத்தால் தற்காலத்

திற்கு தகாத காரியங்களைச் செய்துமனம் அடங்கப்பெறாத காலத்து மனம் அழியாது எப்பொழுதும் மனோநிரோத விஷயத்தில் நாம் விடா ஊக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆதி சங்கராசாரியர் பரமகுருவாகிய ஸ்ரீமத் கௌடபாதாசாரியர் தாம் எழுதிய மாண்டூக்கிய உபநிஷத்காரிகையில் மனோநிரோதம் மிகக்கஷ்டமாயினும் அதை விடா துஸாவதானமாகச் செய்ய வேண்டும், என்ற விஷயத்தை விளக்கப் பஞ்சதந்திரத்திலிருக்கும் சிட்டுக்குருவிகள் கதையை எடுத்துக்காட்டுகிறார். ஒரு கடல் ஓரத்தில் ஆணும் பெண்ணுமாக இரண்டு சிட்டுக் குருவிகள் கூடு கட்டி வாழ்ந்துவந்தன. ஒருநாள் பெண்பறவை முட்டையிட, ஆண் அந்த முட்டைகளைக் கடலோரமாகவே வைத்துவிட்டு வரும்படி பெண்ணுக்கு உத்தரவளித்தது. 'கடல் ஒருவேளை முட்டைகளை அடித்துக்கொண்டு போய்விட்டாலும் விடலாம். ஆதலால் இவ்வாறு வைத்துவிட்டுப் போவது அபாயகரமானது' என்று பெண் எவ்வளவு மன்றாடியும், ஆண் இதைக் கவனியாது மிகுந்த இறுமாப்புடன் பெண்ணோடு இரை தேடப் போய்விட்டது. இவைகளைக் கேட்டிருந்த ஸமுத்திரராஜன் அம்முட்டைகளை எடுத்துச் சென்றுவிட்டான். போகையில் "இக்குருவிகள் யாரோ? வெகு தைரியமாகப் பேசினவே! இவர்கள் பக்கபலங்கள் எத்தன்மையவோ! எதற்கும் இம்முட்டைகளை அழிக்காது வைத்திருப்போம்' என்று எண்ணங்கொண்டு இவைகளை ஒளித்து வைத்தான்.

குருவிகள் வந்து பார்க்க முட்டைகளைக் காணவில்லை. ஆண் குருவிக்கு அதிக கோபமும், பெண் குருவிக்கு அதிக துக்கமும் வந்துவிட்டது. பெண் குருவி ஆண்குருவியை மிகப் பழித்துக் கடிந்துகொள்ள அதற்கு வந்த கோபம் மூண்டெழுந்தது. உடனே 'பார் இதோ! என் மூக்கு இறகுகளாலேயே இந்தக் கடலை வற்ற அடிக்கிறேன்! நீங்கள் ஸமயத்திற்கு உதவாக் கசடர்கள்!' என்று வெறுத்துக்கொண்டு, தன் வேலையை மன உறுதியுடன் தொடங்கி விட்டது. இதைக் கண்ட பெண்குருவி கணவனிடம்மன்னிப்புக்கேட்டுக்கொண்டு தானும் அதற்கு ஸஹாயமாகத் தொடங்கி விட்டது. இவைகள் ஸமுத்திரத்தில் மூழ்குவதும் வெளியே வந்து சிறகுகளை உதறுவதுமாக முனைந்து ஸமுத்திரத்தை வற்ற அடிக்கத் தொடங்கி விட்டன. மற்றையக் குருவிகளும் பறவைகளும் இக்குருவிகளை அதைரியப்படுத்தின. அதற்கு இவைகள் 'நீங்கள் வீணாக எங்களை பயப்படுத்தாதேயுங்கள். நாங்கள் ஊக்கமது கைவிடோம். நீங்கள் வேண்டுமானால் எங்களுக்கு ஸஹாயம் செய்யுங்கள்' என, மற்றையப் பறவைகளும் அவ்வாறேசெய்தன. இவ்வாறு இவைகள்செய்துகொண்டிருக்கையில் நாரதர் இவைகளைக் கண்டார். அவர் எவ்வளவு முயன்றும் இவைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உடனே ஸந்தோஷித்து இவைகளுக்கு நாரதர் கருடமந்திர உபதேசம்செய்தார். இவைகள் கருடனை ஆராதிக்கக் கருடன் பிரத்யக்ஷமாயிற்று. அப்பொழுதுஸமுத்ரம் நடுங்கிக்கொண்டு முட்டைகளைக் கொண்டு வந்து கொடுத்து விட்டது.

ஊக்கமது கைவிடேல் என்னும் நீதிமொழிக்கு புராணங்களில் அநேக கதைகளிருக்கின்றன. 'விசுவாமித்திரர் பிராஹ்மண்யம்ஸம்பாதித்தகதைமிக முக்கியமானது. இதை ராமாயணவினாவிடை பால காண்டத்தில்காண்க. இதன்எல்லை வாக்கியமாகிய 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்பதற்கு மதங்கர் என்ற ருஷி பிராஹ்மண்யம்ஸம்பாதிக்க முயன்று முடியாமற்போக அதை மறந்துவிட்ட கதையை மஹாபாரத வினாவிடை 3-ம் பாகம் அநுசாஸன பர்வத்தில் காண்க.



# இராஜாங்கமுறை பிரதமக்கொள்கைகள்

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

(7) கிரதக்யதை (நன்றியறிதல்).—

நாம் நம்முடைய பெற்றோர்களிடத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் இவ்விஷயத்தைப் பற்றி வற்புறுத்திச் சொல்லல் அவசியமா? நம்முடைய பள்ளிக்கூடத் தோழர்களில் ஒருவன் நமக்கு ஒரு எழுதுகோலாவது காகிதத்துண்டாவது இரவல் கொடுத்தால் நாம் அவனை வந்தனிக்கிறோம். இது நன்றியறிதலுக்கு ஓர் திருஷ்டாந்தமாம். நமக்கு ஒருவன் ஓர் பாடத்தைக் கற்றுக்கொள்ள உதவி செய்தால் அல்லது நல்ல புத்திமதிகளைப் போதித்தால் அப்போதும் அவனிடத்தில் நாம் வந்தனமுள்ளவர்களா யிருக்கிறோம். நாம் குழந்தையாயிருக்கும்போது நம்மை அதிஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்த தாயினிடத்திலும் விசேஷ துன்பங்கள் நம்மை அணுகாவண்ணம் பிரயாசை யெடுத்துக்கொண்ட தகப்பனிடத்திலும், நமக்குச் சந்தோஷமும் கௌரவமும் பொருந்திய வாழ்வைத்தரும் நோக்கத்துடன் தங்களால் இயன்றமட்டும் அதி விருப்பத்துடன் சதா பாடுபடும் அவ்விருவர்களிடத்திலும் நன்றி பாராட்டாமலிருப்பது வெறுக்கத்தக்க காரியமாம். நமக்குக் கொஞ்சம் உதவி பண்ணினவரிடத்தில் நன்றி யறிவில்லாமலிருப்பது வெறுக்கத்தக்கதே. அப்படி யிருப்பவனை விசுவாசபாதகனைக் காட்டிலும் அதிபாபியாகமதிக்கலாம். தன் பெற்றோர்களிடத்தில் நன்றி பாராட்டாதவன் கொடும் பாதகனாவான். இப்பேர்ப்பட்ட மகாபாபி பிற்காலத்தில் வாழ்நாள் முழுவதும் மனப்புண்பட்டு மாய்வான் என்பது திண்ணம்.

ஒருவன் பெரியவனாகும்போது தாய் தந்தையர்கள் தன்னைப் பெற்று வளர்த்த இல்லத்தை நினைத்துப் பார்க்கிறான். மிக்க ஆனந்தமடைகிறான். பெற்றோர்களுக்குத் தான் உண்டுபண்ணின களைப்பையும் உபத்திரவங்களையும் தன்னை வளர்த்துப் படிப்பித்துக் கௌரவ நிலைமைக்குக் கொண்டுவரும்பொருட்டு அவர்கள் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டங்களையும் நன்கு உணருகின்றான். பெற்றோர்களிடம் உண்மையான பக்தியுள்ள புத்திரன் இம்மகோபகாரங்களைத் தன்னால் திருப்திகரமாக மட்டிடக்கூடவில்லையே யென்றும், மேற்கூறியவாறு தன் நிமித்தமாக அரும்பாடுபட்ட பெரியோர்களிடத்தில் பூரண அன்பையும் அருமையையும் தான் காட்டவில்லையேயென்றும் பரிதபிப்பான். ஆனால் இவர்கள் துக்கத்துக்கும் நன்றியறிவில்லாப் பையனுடைய மனதை அறுக்கும்படி செய்யும் துக்கத்துக்கும் மலைக்கும் மருவுக்குமுள்ள வித்தியாசமுண்டு.

நன்றியறிதலாகிய நீதியைக் கற்பிக்கும்படியான அற்பப் பிராணியாகிய ஓர் சுண்டெலியைப் பற்றிய கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு காலத்தில் ஓர் சிங்கம் காட்டில் அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்து களைப்புற்று, கிளைகளடர்ந்த ஓர் மரத்தின் நிழலில் படுத்து இளைப்பாறிக்கொண்டிருந்தது. அப்படியே தூங்கிப்போயிற்று அப்போது அவ்விடத்தில் அலைந்துகொண்டிருந்த சில சுண்டெலிகள் அச்சிங்கத்தின் முதுகின்மேல் ஏறி ஓடி அதற்கு நித்திரபங்கம் செய்தன. சட்டென விழித்துக்கொண்ட அம்மிருகேந்திரன் ஓர் சுண்டெலியின்மேல் தன் உள்ளங்கையை வைத்து அதைக் கொல்லப் போகும் தருவாயில், அச்சிறு பிராணி மிகவும் பயந்து தன்னை மன்னித்துக்காக்கவேண்டுமென்றும் மிகவும் பரிதாபகரமான கேவலம் அற்பப் பிராணியாகிய் தன்னைக் கொன்று தன் இரத்தத்தைக் குடிக்கும் இழிவான காரியத்தைச் செய்யாதிருக்கவேண்டுமென்றும் மன்றாடி வேண்டிக்கொண்டது.

அப்பெரிய பிராணி அதன் வேண்டுகோளுக்கிணங்கி, அதன் இஷ்டப்பிரகாரம் செய்வது உசிதமெனத் தேர்ந்து சுயேச்சையாகப் போகும்படி அதை விட்டுவிட்டது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு அச்சிங்கம் இரை தேடிக்கொண்டு காட்டில் அலைந்துகொண் டிருக்கும்போது ஓர் வேடனுடைய வலையில் சிக்கிக்கொண்டது. தன்னாலானமட்டும் முயன்று பார்த்தும் தப்பித்துக்கொண்டு வெளிவர முடியாததினால் காடெல்லாம் பிரதிதொனி கேட்கும்படி உரத்திக் கர்ச்சித்தது.

இதைக் கேட்ட அச்சுண்டெலி இச் சத்தம் தன் நண்பனது குரலோசை யென்று தெரிந்துகொண்டு உடனே அவ்விடத்திற்கு ஓடி தன் உயிர்த்தோழனுக்கு அபயப்பிரதானம் செய்தது. காலதாமதமன்னியில் சமயத்திற்குத் தகுந்த காரியத்தை நாடி வலையிலுள்ள முடிச்சுகளையும் கட்டுக்களையும் தன் கூரிய பற்களால் கடித்துக் கிழித்து அதை விடுவித்தது.

"சிறு துரும்பும் பல்குத்த வுதவும்" என்றும் பழமொழிகற்பிக்குமாறு பிரதி உபகாரம் செய்ய முடியாத பிராணியே உலகில் இல்லையென்றும் மிகத்தாழ்ந்த அறிவில்லாப் பிராணிகளே ஒன்றுக்கொன்று உபகரித்துக்கொண்டு சுகிக்க,பகுத்தறிவுள்ள மானிடராய் ஒற்றுமைப்பட்டு வாழப் பிறந்த நாம் ஒருவரோடு ஒருவர் பக்ஷமாயும் ஐக்கியமாயும் நடந்துகொண்டு இயன்றமட்டும் பிறர் நன்மையையே கருதி வாழக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றும் இக்கதையினின்றும் தெரிந்துகொள்ளுகிறோம். மேலும் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்தநன்றி கொன்ற மகற்கு" என்றும் ஆன்றோர் வாக்கியத்தைச்சிரமேற்கொண்டுநன்றியறிதல் என்னும் நோன்பே நோன்பு என்றும் உண்மையை எக்காலமும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்றும் நாம் அறிந்துகொள்கிறோம்.

அருமைக் குழந்தைகள், உங்கள் பெற்றோர்களைப் பரிபூரணமாக நேசியுங்கள். உங்களது முழு நேசமும் அவர்கள் உங்களிடம் வைத்திருக்கும் நேசத்திற்குச் சமமாக மாட்டாது. அவர்கள் உங்கள் நிமித்தமாக எடுத்துக்கொண்ட கவலைகளை நினைத்து நினைத்து அவர்களிடம் அனுதினமும் நன்றி யறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டும். நன்றியறிவில்லாத மக்கட்கள் மனப்புண்பட்டு அனுபவிக்கும் அவஸ்தைகள் உங்களை அணுகாதிருக்கட்டும்.

இப்போதும், பிற்காலத்தில் நீங்கள் பெரியவர்களானபோதும், பெற்றோர்களிடத்தில் நன்றியறிவுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பது மேலே சொல்லியவைகளினின்றும் நன்கு விளங்கும். உங்களைத் தாங்கி வளர்த்த பெற்றோர்கள் பலவீனர்களாயும் நடமாட அசக்தர்களாயும் ஆய்விடுவார்கள். அப்போது உங்களால் இயன்ற உதவி செய்யவேண்டும். உங்களுக்கு அவர்கள் உபகரித்ததுபோலவே நீங்களும் அவர்களுக்குச் சந்தோஷமும் சுகமும் நிறைந்த வாழ்வை உண்டாக்கவேண்டும். விருத்தாப்பியமும் சைவப்பருவம்போல் சீர் பெறுதல் முறைமையாகும் விருத்தாப்பியர்கள் சிறு குழந்தைகளுக்குச் சமானம். அவ்வாறு வயதுசென்ற பெற்றோர்களை நடத்துவதே சட்ட சம்மதமுமாகும். இம்மகத்தான கடமையைப் பிறர் ஏவுதலின்றிப் பின்பற்றி நடக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட அநேக திருஷ்டாந்த நீதிகளையும், உங்களுக்கு உபாத்தியாயர் நினைப்பு மூட்டுபவைகளையும் உங்கள் வாசகபுத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கும் கற்பினைகளையும் தவறாது கையாளுவீர்களாக.

பிற்காலத்தில் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து அவர்களைப்பற்றித் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளல் மிகவும் முக்கியமானது. அத்தியாவசியமானது. அதுவே உங்கள் கடமையுமாகும். ஆயினும் இவ்வித உதவியும் கவலையும் பெற்றோர்களிடம் காண்பிக்க வேண்டிய மரியாதை வணக்கம் அன்பு கவனம் ஆகிய இவற்றிற்குத் தினையளவும் ஈடாகமாட்டா. இந்நற்குணங்களைக்



கைக்கொண்டு நீங்கள் நடந்துகொள்வது பெற்றோர்களின் விருத்தாப்பிய நிலைமைக்கு உரித்தானதே. அதை அவர்கள் நன்கு கண்டுகொள்ளுகிறார்கள். அச்சீராட்டைப் பூரணமாய் அனுபவித்து ஆனந்தமடைகிறார்கள். இவ்விஷயத்தை ஒருநாளும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. மேலே கூறப்பட்டுள்ள உதாரண நீதிகளைப் படித்துத் திடசித்தர்களாகவேண்டும்.

நன்றியறிதலுள்ள ஓர்படைச் சேவகனைப் பற்றிய கதை அடியில் வருமாறு:—

சுமார் 1572-ம் ஆண்டில் பயங்கரமான ஜனசங்காரம் சம்பவித்தது. இதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன் பிராஞ்சு தேசத்தின் தென் பாகத்திலிருந்து(Protestant)பிராடெஸ்டெண்ட் மதப்பிரிவைச் சேர்ந்த சில துரைசாணிகள் பாரிஸ் (Paris) மாநகரத்தைப் பார்க்க வந்தார்கள். அந்நகரின் கோட்டை வாசலண்டை வந்தபோது அவ்விடத்தில் நியமிக்கப்பட்டிருந்த காவற்சேவகனைப் பார்த்தார்கள். அவனுக்கு அப்போது அதிக தாகமாயிருந்ததாலும் தாகசாந்தி பண்ணிக்கொள்ள அவ்விடத்தை விட்டகல அவன் துணியாததினாலும்,தனக்குக்கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கும்படி அம்மாதர்களை வேண்டிக்கொண்டான். தங்களைப் பார்த்து இவ்வாறு கேட்டதற்காக அவர்களில் சிலருக்குக் கோபம் வந்துவிட்டது. பதில் சொல்லாமலே அதிக கர்வத்தோடு நடந்துபோய்விட்டார்கள். ஆனால் ஒரு சிறிய பெண்மாத்திரம் அவன்மீது இரக்கங்கொண்டு அடுத்தாற்போலிருந்த ஓர் வீட்டிற்கு ஓடி அந்தக் காவற்சேவகனுக்குக் குடிக்கத்தண்ணீர் கொணர்ந்து கொடுத்து அவன் தாபத்தை நீக்கினாள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு தலைப்பில் கூறிய பிராடெஸ்டெண்ட்(Protestant)பிராஞ்சியர்கள் (France தேசத்தார்கள்) கணக்கில்லாமல் கொலையுண்டபோது கிருதக்யதையோடு கூடிய அப்போர்வீரன் தனக்கு அப்பெண் முன்பு செய்த நன்றியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சங்காரம் செய்வதற்காகத் தன்னை அனுப்பியபோது பிராஞ்சிய குடும்பங்களுள் இப்பெண்ணைக் கண்டுபிடித்து ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துவைத்து அந்நாட்டில் அவளுடைய சிநேகிதர்கள் இருக்கும் இடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

ஒரு யுத்தவீரன் தனக்குச் செய்த அற்ப உபகாரத்தின் பொருட்டு இவ்வளவு நன்றியறிவு காட்டா நிற்க, நீங்கள் உங்கள் பெற்றோர்களிடத்தில் எவ்வளவோ அதிகமாக நன்மை பாராட்டி நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா?

குழந்தைகாள், நீங்கள் நல்லவழியில் நடந்து உங்கள் பெற்றோர்களுக்குச் சந்தோஷத்தை இப்போது கொடுப்பதும் தவிர விருத்தாப்பிய காலத்தில் அதிக அன்புகாட்டி அவர்களுக்குப் பூரணானந்தத்தை விளைவிக்குமாறு ஆயத்தம் பண்ணிப் பழகுவீர்களாக.

C. S. சுந்தரய்யர் பீ. ஏ., எல்-டி.

முதலைக்குத் தண்ணீரின்மேல் மிதந்துகொண்டு சுகமாய் நீந்துவதற்கு ஆசையாயினும், வேட்டைக்காரர்கள் அதைத் தண்ணீரின்மேல் பார்த்தவுடன் சுடுவதற்குக் குறிவைத்துப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே அது எப்பொழுதும் தண்ணீருக்குள்ளேயே யிருந்து அதனின்று வெளியே கிளம்பாமல் இருக்க வேண்டியிருக்கிறது. அப்படி யிருந்தபோதிலும், எப்பொழுதாவது ஒரு தக்க சமயம் கிடைக்கும்பொழுது, அது ஹூஸ் என்ற ஒருவித சத்தத்துடன் மேலே எழும்பி அகன்ற நீர்ப்பரப்பின்மீது சுகமாய் நீந்திக்கொண்டிருக்கிறது. உலகமாகிய வலையிலே அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் மனிதனே, நீயும் பிரஹ்மானந்த சாகரத்தின்மேல் நீந்தப் பார்க்கிறாய். ஆனால் சம்சார தாபங்களின் போராட்டத்தினால் உன் உத்தேசம் பங்கமுற்றுப் போகின்றது. ஆனபோதிலும் உன் மனத்தைமாத்திரம் உற்சாகமாய் வைத்துக்கொண்டு கொஞ்சம் ஒழிவு கிடைக்கும்பொழுதெல்லாம் உள்ளன்புடன் ஈசனைப் பிரார்த்தித்து அவன் முன் உன் குறைகளையும் துக்கங்களையும் விண்ணப்பம் செய்வாயாகில், அவர் தக்க சமயத்தில் உனக்கு முக்தியளித்து, நீ பேரின்பக் கடலிலே சுகமாய் நீந்தி விளையாடக் கருணை கூருவார்.

உபதேசரத்தினமாலை.

# முத்து

## PEARL

### 6. முத்தின் குண விசேஷங்கள்

முத்தின் பரிமாணம் அது பக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருஷங்களும் பூரணபக்குவமுற ஏழு வருஷங்களுமாகும். உஷ்ணப் பிரதேசங்களில் காணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும் பருமனும் மனோகரமான குளிர்ந்த ஒளியுடனும் விலை மிகுத்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நக்ஷத்திரங்கள்போல ஒளியும் உருட்சியும், காற்றேறு, மண் ஏறு, கல் ஏறு, நீர்நிலை முதலிய குற்றமில்லாமையும், கையினால் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்றாய் இருத்தலும் ஸ்படிகம்போல் இருத்தலும் உயர் நன்முத்தின் குணங்களாம். இவ்வாறு குணங்களும் ஒருங்கு அமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும் தரித்திரமும் அணிபவரைவிட்டு நீங்குமென்றும், லட்சுமியும் செல்வமும் ஆயுளும் பிரபலிக்குமென்றும் பெரியோர் கூறுவர்.

> " உடுத்திரள் அனைய காட்சி,
> உருட்சி,மா சின்மை, கையால்
> எடுத்திடில் திண்மை, பார்வைக்
> கின்புறல், படிகம் என்ன
> அடுத்திடும் குணம் ஆறு. இன்ன
> அணியின் மூதணங்கோ டின்மை
> விடுத்திடும் திருவந் தெய்தும்
> விளைத்திடும் செல்வம் வாழ்க்கை."
>
> —திருவிளையாடற் புராணம்

எவ்வளவுக்கெவ்வளவு வெண்மை, பளபளப்பு, திரட்சிகளங்கமின்மை, நல்லநீர் முதலியவற்றுடன்கூடி ஒரு முத்து இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது விலை உயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குல கனமும் இரண்டு அங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்து ஒன்று அராபியாவில் பதினொருலட்ச ரூபாய்க்குச் சமீபத்தில் வாங்கப்பட்டது. சர்வ லக்ஷணங்களும் பூரா அமைந்தமுத்து இந்திய முத்தே எனத் தெரிகிறது. இம்முத்தில் ஒன்று தற்காலம் மாஸ்கோ (Moscow) பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் எடை 28-காரெட்டுகள்.

### 7. முத்தின் குற்றங்கள்

> " தங்கிய முள்ஏறு, மூகம் கறுத்தல், செந்நீர்
> சார்வன, மண்ஏறு இடப்புத், திருகல்கோணை
> மங்குறுசிப்பிப் பற்று,க் காகவன்னி,
> மருண்டிருத்தல் "

என்னும் பத்துக்குற்றங்கள் முத்துக்கு உண்டெனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமுடையார் கூறுகின்றார்.

### 8. முத்தின் அழிவும் அதனை உயிர்ப்பிக்கும் விதமும்:—

முத்து உயிருள்ள பிராணியிடத்துத் தோன்றிய உயிரற்ற பொருளாக இருந்தும் அதற்கு அழிவும் இறப்பும் உண்டு. முத்து க்ஷீணிக்கும் என்ற விஷயம் நமது முன்னோர்கள் நன்கறிந்திருந்தனர். மேற்றிசையோர்க்கு இவ்விஷயம் வெகுகாலமாகத் தெரியாது. சமீபத்தில்தான் அவர்கள் இவ்வுண்மை அறியலாயினர். முத்தின் அழிவிற்குக் காரணம் பல. அவற்றுள் சில கூறுவாம்:—முத்துக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டுமாம். உயிர்ப்பிராணிகள் உணவில்லாமற் போனால் வாடி வருந்திச் சாதல்போல் முத்தும் உணவில்லாவிடில் வரவர வளமை வனப்பாதிய குன்றி வாடிச் சாகுமாம். மெல்லியலாரின் மிருதுவான தோலின் கண் உள்ள ஓர் வகை உயிருள்ள சத்தையே முத்து உணவாகக் கொண்டு பிழைக்கின்றதாம். முத்தை ஸ்திரீகள் சதைப்பற்றுள்ள இடங்களிலேயே அணிந்துகொள்ள வேண்டுமென்று ரத்நப் பரீக்ஷகர் கூறுவதை நாம் நாளும் கேட்கிறோமன்றோ? ஆயினும் முத்துத் தரித்துக்கொள்ள யோக்கியதையே யில்லாத சில ஸ்திரீகள் உளர்,



ஏனெனில் முத்துக்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி மிகுதியும் உண்டு. ஆதலின் அவற்றைத் தரித்துக்கொள்ளும் சில ஸ்திரீகளின் மார்பாதிய இடங்களில் அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டியனவாகாதனவும் அவைகட்கே தீமை செய்வனவுமான வஸ்துக்கள் இருக்குமாம். இஃதுண்மையென்பதை வேறு சில விஷயங்களைக்கொண்டு விளக்கிக் காட்டலாம். வைடூரியத்தைச் சில ஸ்திரீகள் அணிந்தால் என்ன ஜொலி ஜொலிக்கிறது? அதே கல்லை வேறு சில ஸ்திரீகள் அணிந்தால் அது உயிரற்ற களிமண்மாதிரி ஆகிவிடுவதைக் காண்கிறோமன்றோ?

ஆகவே, முத்து முதலிய இரத்தினங்கள் மங்கிச் சாவதற்கும் "டால்" வீசி ஜ்வலிப்பதற்கும் ஸ்திரீகளின் அங்க இயலே காரணமென நன்கு தெரிந்துகொண்ட மேற்றிசை ரத்தின வியாபாரிகள், சில தக்க ஸ்திரீகளை ரத்தினம் அணிந்துகொள்வதற்கென்றே கூலிகொடுத்து வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்! முத்தை அணிவதற்கு அருகரல்லாத ஸதிரீகளிடமிருந்து, அவர்கள் அணிந்ததால் மங்கி நிறங்கெட்ட முத்து மாலையை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அம்மாலைகளையும், தம்மால் ஏற்கனவே புதிதாய் வாங்கப்பட்டும் ஊட்டமில்லாக் குறையால் வாடி நிறங்குன்றி இருக்கும் மாலைகளையும் இந்தக் கூலிக்கார ஸ்திரீகளுக்கு அணிந்து, முத்தைக் கூடியமட்டும் முன்னிலையுறச் செய்து விற்றுப் பெருலாபம் பெறுவர். இம்மர்மத்தை அறிந்த பிரபுபத்தினிகள் பலர் தாம் முத்துக்களணியத் தகுதியற்றவர்களெனக் கண்டுகொண்டபோதெல்லாம் அவற்றைச் சிலகாலம் தமது தோழிமார் மார்பிற் பூட்டிவைத்திருந்து அவர்கள் அணிதலால் அவற்றிற்குக் காந்தியும் பளபளப்பும் வந்தவுடன் தாம் அணிந்து வருகின்றனர். நிற்க.

தக்க ஸ்திரீகள் அணிந்தும் கூட, துலக்கமுறாது க்ஷீணிக்குந் தன்மையுள்ள முத்துக்களுமுண்டு. இத்தகைய முத்துக்களை உயிர்ப்பிக்க இரத்தினப் பரீக்ஷையிற் றேர்ந்தோர் ஓர் உபாயம் செய்து பார்ப்பர். இவ்வுபாயத்தால் பெரும்பான்மையும் காரிய சித்தி உண்டாம். அவ்வுபாயமாவது:—கடல் நீர் தாராளமாய் உட்புகுந்து ஓடிக்கொண்டிருக்கும்படியாய் இடுக்குகள் பல வாய்ந்திருக்குமாறு இருப்புக் கம்பிகளால் இணைத்துச் செய்த ஓர் கூண்டில் முத்துக்களைச் சாவதானமாய் வைத்து அக்கூண்டைக் கடல் நீரில் சில மாதங்கள் அமிழ்த்திவைப்பதே. இவ்வாறு செய்தால் ஒளிகுறைந்த முத்துக்கள் முன்போற் பிரகாசமுறும் என்பதற்குப் பின்வரும் விஷயங்களே போதிய சான்றாகும்:—

நமது மாஜி மகாராணியாராகிய அலெக்ஸாண்ட்ராவுக்கு முத்துப் பைத்தியம் மிகுதியும் உண்டாம். அவர் சேர்த்து வைத்திருக்கிற மாதிரி பலவகைப்பட்ட முத்துக்கள் எவருமே இதுவரைச் சேர்த்து வைத்ததில்லையாம். அவர்க்கு முத்துக் கிரீடமும், முத்து உடையும், முத்து அரைக்கச்சும் உண்டு. அவர் பாதாதிகேசபரியந்தம் முத்துடை தரிக்குங்கால் அவரிடம் காணப்படும் முத்தை மதிப்பிட்டால் அவை **நான்கு லட்சம் பவுன்** ஆகும் என்று கூறுகின்றனர். இவற்றைத் தவிர இனி "உருப்படாது" என்று ஒதுக்கப்பட்டவை இரண்டு லட்ச ரூபாய் பெறும்படியான முத்துக்களாம். இவை தரித்துக்கொள்ளாமல் உள்ளே வைக்கப்பட்டதால் கேடுற்றவைகளாம். சமீபத்தில் அவருடைய முத்தாரம் ஒன்று நிறம் மங்கிப் பிணியுற்றதாம். ஓர் பிரபல ரத்திநப்பரீக்ஷகனிடம் அது கொண்டுபோகப் பட்டபோது அதை அவன் பரீக்ஷித்தறிவதாய்ச் சொல்லிப் பெற்று எவரும் அறியாமல் முன்பு நாம் சொல்லியபடி ஓர் கூண்டுக்குள் போட்டுச் சமுத்திர ஜலத்தில் 3 மாதம் போட்டு வைத்திருந்து பிறகு எடுத்துப் பார்த்த போது, அது குறை ஏதுமின்றி முத்துக்கு உரிய லட்சணங்கள் யாவும் பூரா அமைந்து முன் போல் ஜ்வலித்துக்கொண்டிருக்

கக் கண்டு அதி சந்தோஷத்துடன் அதனை அரசியிடம் தந்தானும்.

இது சம்பந்தமாய் மற்றுமோர் உதாரணங் கூறி முத்து நோயைப் பற்றியவிஷயத்தை நிறுத்துவோம்: சமீபத்திற்காலஞ்சென்றஆஸ்திரியா தேசத்து ராணியாகிய எலிஸபெத் அஸ்திஜ்வர (Typhoid Fever) த்தினால் வருந்திக் கொண்டிருந்தபோது, பலகோடிப் பவுன் விலையுள்ள அவள் முத்துமாலை நிறங்குன்றிக் கறுக்க ஆரம்பித்தது. உடனே அது ரத்திநப் பரிசோதகர்களால் ஏட்டிரியாட்டிக் கடலில் ஓர் குறிப்பிட்ட இடத்தில் கொண்டுபோய்ப் போடப்பட்டது. அன்றுமுதல் நாளைவரை அம்முத்துமாலையைக் கவர்ன்மெண்டாரின் கடற்படை இரவும் பகலும் காத்துவருகிறது. இவை சரித்திர பூர்வமாக நம் காலத்தவர்களே நன்கறிந்த விஷயம். இரத்தின சோதனை நிபுணர்கள் அம்முத்தாரம் முன் இருந்த நிலைமையுற மூன்று வருஷங்களாவது ஆக வேண்டுமென அபிப்பிராயப் படுகின்றனர். நிற்க.

முத்துக்கு உறும் பிணியையும் அதற்கான நிவர்த்தியையும் பற்றி நாம் எழுதிக்கொண்டு வரும்போது ஓர் பரிதாபகரமான விஷயம் நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதனை நமது நேயர்களுக்கு அறிவிக்காமல் இருக்க மனம் வரவில்லை. அவ்விஷயம் வருமாறு:—

பிரான்ஸ் தேசத்து ராஜதந்திர நிபுணராகிய தியர்ஸ்(Thiers)என்பவரின்மனைவிக்கு7,50,000 ரூபாய் பெறும்படியான முத்துமாலை ஒன்றுண்டு. அம்மாலை அந்நாட்டார்க்கு அவ்வம்மையின் ஞாபகார்த்தமாகக் கொடுபட்டு விட்டது. இப்பொழுது அது லவர் (Lowvre) பொருட்காட்சி சாலையில் இருக்கிறது. அதற்கு எவராலும் உணர்ந்தறிந்து கொள்ள முடியாத ஓர் நோய் பற்றி நாளுக்குநாள் க்ஷீணித்து வருகிறது. ஆதியில் 7,50,000 ரூபாய் பெற்ற அம்மாலை இப்பொழுது5,000ரூபாய் கூடப்பெறாதென ரத்திநப் பரீக்ஷகர்கள் கருதுகின்றனர். இவ்வாரத்தை உத்தம ஸ்திரீகள் அணிந்தால் ஒருவேளை அழிந்திறந்த முத்துக்கள் போக அழியாது எஞ்சிய சிலவேனும் முன்போல் ஒளிபெற்றுப் பிழைக்கும் என்று மேனாட்டு நிபுணர்களெவ்வளவோ சிபார்சு செய்தும் அவ்வாறு செய்யக் கூடாமலிருக்கிறது. ஏனெனில், "விநோதரஸ மஞ்சரி"யில், பரமார்த்த குருவின் வாக்கைப் பரிபாலனம் செய்த அவரது சிஷ்யர்களைப் போன்று, பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் **தியர்ஸ் அம்மையின்** வாக்கைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள். "அம்முத்து மாலை அது வைத்திருக்கப்பட்ட பெட்டியை விட்டு **எக்காலத்தும் எக்காரணத்தை யிட்டும் எடுபடக் கூடாது**" என்ற நிபந்தனையின் பேரில் அவ்வம்மையால் கொடுபட்டிருப்பதால், அவர்கள் அதனை அதன் இருப்பிடத்திலேயே வைத்து அநியாயமாய் அழித்து சாகவிட்டு வருகின்றனர். அந்தோ! தியர்ஸ் அம்மை என்ன நோக்கத்துடன் அவ்வித நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கக்கூடும் என்பதை இவர்கள் யோசிக்க வில்லையே. நாளுக்கு நாள் அம்முத்துக்கள் கறுத்துச் செத்த ஆட்டுப் பல்லின் நிறமடைந்து வருகின்றனவாம்.

## 9. உபயோகங்கள்

(1) முத்து பல தேசத்தாராலும் ஆடவர் பெண்டிர் இளையோர் முதியோர் என்ற ஏற்றத் தாழ்வின்றி அலங்காரத்திற்காக அணியப்படுகிறது. பெண்கள் புலாக்கு, கொப்பு, மூக்குத்தி முதலிய ஆபரணங்களில் அவைகளைப் பதித்தும், மாலையாகக் கோத்தும் அணிவர். சிலர் கடுக்கன் மோதிரம் முதலியவைகளில் அவற்றைக் கட்டி அணிவர். ஸ்வாமிக்கும் ராஜாக்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாகக் காணலாம்.

(2) இஃதொரு அரியவியாபாரச் சரக்காயிருப்பதால் வணிகர்க்கு இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) முத்து ஓர் மருந்துச் சரக்காதலின் பொடி முத்துக்களைச் சீனரும் இந்தியரும் புடம்



போட்டு பிற மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர்.

(4) மேற்றிசையோரிற் பலர் பவளத்தைக் கொள்வது போலவே, சிலர் மலடு நீங்கவும் திருஷ்டிகழியச் செய்யவுங் கூடிய ரக்ஷையாகக் கருதி உபயோகிக்கின்றனர்.

(5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகுபோன்ற 'விரை' முத்துக்களைச் சில தனவான்கள் வாங்கிச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோப்பாவில் உள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்தில் பூசிக்கொள்வார்களாம். அவ்வாறு செய்வதால் அவர்கள் நரைத்தலையராங் காலத்தும் முகத்திரை காணுதாம்.

(7) முத்துச் சிப்பிகள் நானாவித பொத்தான்கள் செய்யவும் அநேகவிதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும். நிற்க.

## 10. நித்திலம் உணர்த்தும் நீதிகள்

இனி முத்து சம்பந்தமாய்த் தாமாக விளங்கக்கூடியவையும்,அன்றி,உய்த்துணரத்தக்கவையுமான அறிய நீதிகள் சில இங்குரைத்தல் மிகையாகாதென்று எண்ணுகிறோம்.

(1) * "அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையினுள்ளே
அதிசுத்த மானபிர காசஒளி உமிழ்கின்ற
அரியமணிபல உறுதல்போல்
ஒளியபுக ழோடுதித் தும்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவராலும்
உணரமுடி யாதபடி மறைநிலையில்உத்தமர்கள்
உறைவர் பலர்" என அறியலாம்.

(2) "பொங்கு திரைக்கடல்மேல் புன்துரும்பேதோன்
றுதல்போல்
இங்கெவர்க்கும் தோன்றும் இழிகுணமே-அங்
குயர்ந்த
முத்தெடுக்க வேண்டுபவர் மூழ்குவது போல்முய
உத்தமகுணம்வெளியா கும்." லின்

இதன் கருத்து என்னவெனில், சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்புகளே. அதுபோல, ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவார் கண்ணுக்குப் புலப்படும். ஆனால் அதில் முத்தை நாடுவோன் அப்புண் துரும்புகளைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல் போல் நோக்கினால்தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும் என்பதே.

(3) விலை யேறப்பெற்ற நன்முத்து உவர் நீரும் புலால் நாற்றமுங்கொண்ட கடலில் சிப்பி வயிற்றிற் றோன்றுவது போலவே நற்குண நற்செய்கையுடைய பெரியோர் இழிகுலத்திலும் தோன்றல் இயல்பு. இதுபற்றி யன்றோ

"கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் மான் வயிற்றின்
ஒள்அரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி?
என்னப்பட்டது?

(4) நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றதென்னலாம்.

(5) "ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினால் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க." என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது. எவ்வாறெனில், முன்பு உரைத்தபடி "சேயார் முகத்துச் சென்றுதைக்கு கழிமுடைப் புன்புலால் நாற்றம்" புறம் பொதிந்தும் அகம் வதிந்தும் உள்ள சிப்பியில் தோன்றிய காரணத்தால், முத்தை இழிவு படுத்துவார் எவருமிலர். அதன் உயர்ந்த தன்மையையே எவரும் பாராட்டுவர். அதுபோல அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரி

* Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear—Gray
* Errors like straws on the surface flow
He who would search for pearls must dive below—
Dryden.

யோர்கள் இழிகுலத்தில் தோன்றினும் அவர்களது குணஞ் செயல்களைப்பற்றிப் பாராட்ட வேண்டுமேயன்றி அவர் தோன்றிய குலத்தின் இழிவு கருதி இகழலாகாது. நீதிவெண்பாவிலும்,

> " தாமரை பொன் முத்து சாமரைகோரோசனைபால்
> பூமருதேன் பட்டுப் புனுகு சவ்வா-தாம் அழல்மற்
> றெங்கே பிறந்தாலுமெள்ளாரேநல்லோர்கள்
> எங்கே பிறந்தாலும் என் ?"

என்று கூறி இருத்தல் காண்க.

(6) மழைத்துளி ஒன்று பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் படுமாயின் தன் உருவமே தெரியாமல் மறைந்து சுவருகின்றது. அதே மழைத்துளி தாமரை இலைமேல் தங்குமாயின், நீர் உரு நீங்கி முத்தின் உருக்கொண்டு விடுகிறது. அம்மழைத் துளியே ஆடிமீ சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்பொழுது சிப்பியின் அகட்டில் விழுமாயின் மிக்க வனப்பும் விலையும் வாய்ந்த முத்தே ஆகிறது. இதனால் அறிவும் பெருமையும் கொடையும் நட்பும் அதமர்சேர்க்கையால் அயர்ச்சியும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் மகிமைத் தோற்றமும் உத்தமர் சேர்க்கையால் உயர்ச்சியும் பெருமையும் உறலாகும் என்பது புலப்படும். இவ்வாறே சிநேக பாத்திரத்தைப் பற்றிச் சொல்லும் காலையில் **பார்த்ரு ஹரியார்,**

> " காய்த்தக்கரும் பொன்வாவிக்
> கமலஇலை கடற்சிப்பி
> தோய்ந்தநீர் பெயர்கெடல், மேல்
> தோன்றல் முத்துந் தோன்றிடல்போல்
> வாய்ந்ததமன் மத்திமன்உத்
> தமர் தம்பால் மருவினர்கள்
> ஆய்ந்துமேற் சொன்னபடி
> அனுபவிக்கப் பெறுவாரே "

எனக் கூறி யிருக்கின்றனர்.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காம் சில குறிப்புடையது. சற்குண முடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.

ம. கோபாலகிருஷ்ணையர்.

## யானைகள்

### ELEPHANTS

மிஸ் கோர்டன்கம்மிங்(Miss Gorden Comming) இரண்டு வருஷகாலம்தான் இலங்கைத் தீவில் இருந்து தான் இலங்கை முழுவதும் நன்றாய்ச்சுற்றிப் பார்த்ததில் தனக்கு அங்கிருக்கும் யானைகளைப் பற்றியும், அவைகள் என்ன தன்மையுடையதாயிருக்கிற தென்பதையும் அவைகள் என்னவிதமாய் உபயோகப்படுகிற தென்பதையும், மற்ற தேசங்களிலுள்ளவைகளுக்கும் அவைகளுக்கும் என்ன வித்தியாச மிருக்கிற தென்பதைப்பற்றியும் கூறி யிருப்பதில் சிலவற்றைச் சுருக்கமாய் உரைப்போம்:—

இலங்கையில் யானைவேட்டை யாடுவதற்கும் ஆப்பிரிக்காவில் யானைவேட்டை யாடுவதற்கும் வெகு வித்தியாசமுண்டு. ஆசியாக் கண்டத்திலுள்ள யானைகள் சிறிதாகவும், தந்தங்களுள்ளவை சொற்பமாயிருக்கிறது. ஆனால் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள யானைகள் மிகப் பெரிதாயும், பருத்து நீண்ட தந்தங்களையுடையதாயு மிருக்கின்றன. மேஜர் ரோஜர் (Major Roger) என்பவர் தான் இந்தியாவில் கொன்ற அநேக யானைகளில் ஒரு சுமார் 60 யானைகளுக்கு மாத்திரம் தான் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சாதாரண யானைக்கு எவ்வளவு நீள தந்தமிருக்குமோ, அவ்வளவு நீளதந்தம் இருந்ததாம். இந்தியாவிலும் இலங்கைத்தீவில் போலவே, பெண் யானைகளுக்குத் தந்தம் கிடையாது. ஆண் யானைகள் அநேகமாய் தந்தமுள்ளதாயிருக்கும். ஆனால் ஆப்பிரிக்காவிலோ தந்தமில்லாத யானையைக் காண்பது மிகவுமரிது. ஆண் யானைகளுக்கும் பெண் யானைகளுக்கும் தந்தங்கள் உண்டு. தென் ஆப்பிரிக்காவில் ஒரு யானைக்கு 10 அடி 8 அங்குல நீளமுள்ள தந்தமிருந்ததாயும் அது 173 பவுண்டு நிறை யிருந்ததாயும் தெரிகிறது. ஆனால் இந்தியாவிலோ ஒரு தந்தமானது 5 அடி நீளமிருந்து 36பவுண்டு நிறையுள்ளதாயிருந்தால்



அது மிகவும் உயர்ந்ததாகக் கொள்ளப்படுகிறது.

இதுவும் தவிர ஆப்பிரிக்காவிலுள்ள யானைகளுக்கும்இந்தியாவிலுள்ள யானைகளுக்கும்வேறு வித்தியாசங்களுமுண்டு. ஆப்பிரிக்கா யானைகளுடையநெற்றி முன்தள்ளிநீண்டும்,கபாலம் உயரமாயுமிருக்கும். அவைகளுடைய அகண்டு நீண்ட காதுகள் தோள்வரையிலும் படக்கூடியதாயிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலுள்ள யானைகளில் நெற்றியானது கொஞ்சம் பள்ளமாயும், தலைஉச்சியில் கபாலம் அமுங்கியும் இருபுறமும் புடைப்புள்ளதாயுமிருக்கின்றன. இதுவும் தவிர யானைகளும் சிறியனவாயும், அவைகளின் கால்கள் உடம்பின் பருமனுக்குத் தகுந்த நீளமில்லாததாயும் இருக்கின்றன.

இலங்கைத்தீவின் யானைகளுக்கும் இந்தியாவிலுள்ள யானைகளுக்குமே ஓர்விதமான முக்கிய வித்தியாசம் காணப்படும். இலங்கைத் தீவிலுள்ள யானைகள் சுமட்ரா (Sumatra) தீவிலுள்ள யானைகள்போலவே, இந்தியாவிலுள்ளவைகளை விட சிறியதா யிருந்தபோதிலும் ஒரு விலாவெலும்பு (rib) அதிகமாயும் அந்த விலாவெலும்பு பொருந்தும் முள்ளெலும்பு (Dorsal vertebra) ஒன்று அதிகமாயுமிருக்கிறது. அதாவது இந்தியாவிலுள்ள யானைகளுக்கு 19 பளுவெலும்புகள் இருக்கின்றன. ஆனால் இலங்கையிலிருப்பனவற்றிற்கு 20 பளுவெலும்புகள் இருக்கின்றன.

இது இப்படியிருக்க, உயர வித்தியாசத்தைக் குறித்துப் பார்ப்போமானால் கர்னல் பார்ப்ஸ் லெஸ்லி (Col. Forbes Leslie) என்பவர்தான் 11 வருஷகாலம் இலங்கையில் யானை பிடிக்கும் உத்தியோகத்திலிருக்கும்போது பிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான யானைகளில் 3 யானைகள்மாத்திரம்தான் 9 அடி உயரமிருந்ததாகச் சொல்லியிருக்கிறார். இந்தியாவிலும் மிஸ்டர் சாண்டர்சன் (Mr. Sanderson) என்பவர் யானைகளைக் குறித்த சமாசாரங்களில் நல்ல தேர்ச்சியுள்ளவர் அவர் கூறியிருக்கிறது தான் அளந்து பார்த்த அநேக யானைகளில் எல்லாவற்றினும் உயரமாயிருந்தது 10 அடி $7\frac{1}{2}$ அங்குல உயரமிருந்ததாம். ஆனால் ஆப்பிரிக்காவில் 20 அடி உயரமுள்ள யானைகளிருந்ததாயும் ரிக்கார்டுகள் இருக்கின்றதாம். ஆனால் அது முழுதும் நம்பத்தக்கதல்ல, அதிகப்படுத்திச் சொல்லப்பட்டதாக இருக்குமென்று தெரிகிறது. அது எப்படியிருந்தாலும் சரி, ருசியா தேசத்தில் செண்ட் பீடர்ஸ்பர்க் (St. Petersburg) நகரத்தில் உள்ள கண்காட்சி சாலையில் ஒரு யானையின் எலும்புக்கூடானது $16\frac{1}{2}$ அடி உயரமிருக்கிறது. அது பெர்சியாதேசத்தரசனால், பீட்டர் (Czar Peter) என்னும் ருசியா சக்கிரவர்த்திக்கு அனுப்பப்பட்ட யானையின் எலும்பாகத் தெரிகிறது. இந்தியாவில் ஜப்பல்பூர் என்கிற இடத்தில் யானைகள் புதைந்து போயிருந்ததை வெட்டிப் பார்க்கும்போது தோள் உயரம் அளந்துபார்த்ததில் அவைகளின் எலும்புகள் 15 அடி உயரமிருந்தன. இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் ஆக்ஸ்போர்ட் (Oxford) விநோதசாலையில் ஒரு யானையின் துடையெலும்பும் முள்ளெலும்பும் இருக்கிறது. அவைகளின் பருமனையும் நீளத்தையும் கவனித்துப் பார்த்தால் அந்த யானையானது சுமார் 16 அடி உயரத்துக்குக் குறையாமல் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

பி. ஆர். வெங்கடேசலு நாயுடு.

**திருவருள்**—ஒரு பக்தன் பகவந் நாமத்தை மௌனமாய் உச்சரித்துக்கொண்டு ஸதா ஜபமாலை மணிகளை எண்ணிக்கொண்டிருப்பது வழக்கம். அவனைப் பார்த்துப் பரமஹம்ஸர், " நீ என் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறாய்? வெளியே சென்று சஞ்சரிக்கலாமே" என்று கேட்டதற்கு, அந்தப் பக்தன், "அவன் அருளின்றி அவ்வாறு முடியாது" என்றான். அதற்குப் பகவான் " கடவுளின் திருவருளாகிய தென்றற் காற்று இரவும் பகலும் உன் தலைமேல் வீசிக்கொண்டிருக்கிறது. சம்சாரத்தினின்று சீக்கிரம் கடைத்தேற வேண்டுமானால் உன் மனமாகிய படகின் கப்பற் பாயை யவிழ்த்து விரித்துவிடு " என்றார்.

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

अन्धकूपपतनन्यायः

### 6. அந்தகூபபதனநியாயம்

'கல்லும் முள்ளும் நிறைந்தகாட்டின் வழியாக ஒரு குருடன் போய்க்கொண்டிருந்தான். அவன் பட்ட கஷ்டத்தைக் கண்ணுற்ற தயை நிறைந்த ஒருவன், அவனைப்பிடித்து அழைத்துக்கொண்டு போய் நல்ல வழியில் விட்டான். அக்குருடனோ அவ்வழியை விட்டு விலகி முன்போலக் கஷ்டமான வழியில் பாய்ந்துசென்று முடிவில் பாழும் கிணற்றில் விழுந்தான்' என்ற கதையிலிருந்து வந்தது இந்நியாயம். பிறர்கூறும் நற்புத்திகளைக் கேளாது கெட்டவன் தான் போகும் வழியே சென்று மாறா துயரத்திற்கு ஆளாகும்பொழுது இந்நியாயத்தை உபயோகப்படுத்தலாம். பீஷ்மர், துரோணர், விதுரர், திருதிராஷ்டிரன் முதலிய உறவினர்களும் பெரியோர்களும் என்ன சொல்லியும் கேளாது, பிடிவாதமாகப் பாண்டவர்களுக்கு ஊசி நிற்குமிடம் கூடக் கொடுக்கமாட்டேன் என்று வீம்பு பிடித்துப் பாரதப்போர் விளைத்த துர்யோதனனும் தகப்பனாகியவிச்ரவஸ்ஸின்வாக்கிற்குமீறித் தமையனையும் உலகையும்வருத்திய ராவணனுமேஇந்தநியாயத்திற்குத்திருஷ்டாந்தம்

अन्धगजन्यायः

### 7. அந்தகஜநியாயம்

அநேக குருடர்கள் ஓரிடத்தில் கூடினர். அவர்களுக்கு யானையைக் காணவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அருகே ஒருயானைப்பாகனிருப்பதைக் கேள்விப்பட்டு அவனிடம் சென்று யானையைத் தமக்குக்காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அப்படியே அவன் யானையை அவர்கள் அருகில் கொண்டுவந்து நிறுத்த ஒவ்வொருவரும் அதன் அங்கம் ஒவ்வொன்றையும் தடவிப்பார்த்து விட்டு திருப்தி அடைந்தனர். யானைப்பாகன் போனபின்பு தாம் கண்ட காட்சியை ஒவ்வொருவரும் எடுத்துரைக்கத்தொடங்கினர். 'யானை உலக்கைபோலிருந்தது' என்றான் அதன் துதிக்கையைத் தொட்டுப்பார்த்தவன். 'அப்படியல்ல அப்பா! யானை தூண்போலல்லவா இருந்தது' என்று திருத்தமாகக் கூறினான் அதன் காலைப் பிடித்துப் பார்த்தவன். 'இதென்ன இப்படிச்சொல்லுகிறாய்! நான் பார்க்கவில்லையா! என்ன. அது முறம் போலத்தான் இருந்தது' என்று மறுத்துரைத்தான் அதன் காதைத் தொட்டுப்பார்த்தவன். அதன் வயிற்றைத் தடவிப்பார்த்தவனோ 'இதென்ன! உங்கள் கண்தான் குருடென்றால் மற்ற இந்திரியங்களும் ஊனமா என்ன! நான் நன்றாகத்தான் பார்த்தேன். யானை தண்ணீர் நிறைந்த கொப்பரைபோலவே இருந்தது' என்று பரிஹாஸமாகக் கூறினான். பார்த்தான் யானை வாலைத்தொட்டவன். அவனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. 'முழுமூடர்களா. என்ன வீணாகக் குதர்க்கம் செய்கிறீர்கள். தெரிந்தால் பேசவேண்டும் இல்லாவிடில் வாயைக்கையைத் திறக்கக்கூடாது. நீங்கள் சொல்லுவதெல்லாம் முழுத்தவறு. நான் பார்த்ததில் அது துடைப்பம்போலத்தான் இருந்தது' என்று இறுமாந்து கூறினான். குருடர்கள் இவ்வாறு தாம் யானையைக் கண்ட காட்சியைப்பற்றி ஓயாத் தர்க்கம் செய்யத் தொடங்கிவிட்டனர். இக்கதையிலிருந்து எடுக்கப்பட்டது இந்நியாயம்.

ஒரு விஷயத்தை முற்றும் கண்டு உணராது, பார்த்தமட்டில் திருப்திபெற்று அதைத் தாம் கண்டபடி வர்ணித்து, மற்றையப் பாகங்களைக் கண்டு வர்ணிப்போருடன் வீண் சண்டைசெய்து ஓயாதர்க்கம் மனஸ்தாபம் இவைகளை உண்டாக்கிக்கொள்ளும் இடத்தில் இந்நியாயத்தை உபயோகப்படுத்தவேண்டும். இந்நியாயத்திற்கு அறைகுறையாக உணர்ந்து தான் கண்டதே உண்மை மற்றவைகள் எல்லாம் வெறும் பொய் என்று அவேசத்துடன் வாதம் செய்வதே பொருள்.

இந்த நியாயம் பொதுவாக மதவாதிகள் விஷயத்தில் நன்றாகப் பொருந்தும். அவர்கள்



தமது மதம் உண்மை பிறர் மதம் பொய் என்று மதத்துவேஷம் பாராட்டுவது வழக்கம். உண்மையாக நோக்குங்கால் அவர் மதமும் மற்றைய மதங்களும் அவ்வவைகள் போமளவும் உண்மைதான். ஆனால் ஒவ்வொன்றும் பரம்பொருளது ஒவ்வொரு அவஸ்தா பேதத்தைப் பெரிதெனக்கொண்டும் மற்றவைகளைக் கவனிக்காதும் விடுகின்றது யானை எவ்வாறு குருடர் கூறியது எல்லாமாய், ஆனால் அவைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் ஜந்துவோ, அதுபோல உண்மையில் பரம்பொருள் 'சமய கோடிகளெல்லாம் தந்தெய்வம் என் தெய்வம் என்றெங்கும் தொடர்ந் தெதிர் வழக்கிடவும்' நின்றதுவாக இருக்கின்றது. கம்பர் பாலகாண்டம் உலாவியற் படலத்தில் ஸ்ரீ ராமபிரான் ஸீதாகல்யாணத்திற்கு முன்னாள் ஊர்வலம் வந்தகாலத்து அத்திருக்காட்சியைக் கண்டு களித்தவர் நிலையை வர்ணிக்குங்கால்:—

'தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே
வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா
னுருவுகண் டாரையொத்தார்'

என்று கூறியதால், இந்நியாயத்தின் கருத்து இவ்வாறு மதவாதிகள் விஷயத்தில் பொருந்தும் என்பது விளங்கும்.

अन्धगोलांगूलन्यायः

### 8. அந்தகோலாங்கூலநியாயம்

ஒரு குருடன் ஒரு மார்க்கமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் தட்டித்தடுமாறிக்கொண்டு போவதைக் கண்ட துஷ்டன் ஒருவன், அவனை வருத்தி வேடிக்கை பார்த்து ஸந்தோஷப்பட எண்ணி வழியில் போய்க் கொண்டிருந்தஎருமை மாட்டின் வாலைப் பிடித்துக் குருடன் கையில் கொடுத்து 'அப்பா. நீயோ குருடன். உனக்குப் போக வழி தெரியாது. இதைப் பிடித்துக்கொள் விடாதே. நீ ஸௌக்கியமாய்ப் போய்ச்சேருவாய்' என்று கூறிவிட்டு, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஒதுங்கினான். உண்மைதான் என்று அவன் சொன்னதை முழுவதும் நம்பிக்குருடன் எருமை வாலைப் பிடித்துக்கொண்டு விட்டான். வாலில் கைபட்டதும் எருமைக்குக் குருகுருப்புண்டாக, அது ஓடத்தலைப்பட்டது. நம்பி மோசம் போன குருடன் அதைப் பலமாகப் பிடித்துக்கொள்ள, எருது வெருண்டோடத் தொடங்கியது. குருடன் பிடிபலமாக விருந்ததால் அவன் கீழ் உருண்டு புரண்டுவிட மேலெல்லாம் காயம்பட்டது. வயிறு வெடிக்கச் சிரித்து நின்றான் துஷ்டன். முடிவில் குருடனை எருது குழியிலும் தள்ளி விட்டது. இக்கதையோடு ஸம்பந்தப்பட்டது இந்நியாயம். ஸந்மார்க்கத்தில் போய்க் கொண்டிருக்கும் ஒருவன் உலக வியவஹாரச் சூதறியாது ஒரு லௌகீகப் புரட்டன் மொழியை நம்பி முடிவில் மீளாக்கஷ்டங்களுக்கு ஆளாகுங்கால் இந்நியாயத்தை உபயோகப்படுத்தவேண்டியது. ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் ஒன்றாகிய **ஒதெல்லோவில்** கதாநாயகனான ஒதெல்லோவென்பவன், தன் உயிர்த்தோழன்என்றும், மஹா சுத்தாத்மா என்றும் நம்பி யிருந்த மஹா பாதகனாகிய **ஐயாகோ** என்பவன் சூதான மொழிகளை நம்பி, ஸீதையைப்போன்ற தன் பெண்சாதியாகிய**டேஸ்டிமோனா**வை வீணாக ஸந்தேஹித்து முடிவில் அவளைக் கொன்று, உண்மை வெளியாகத் தானும் இறந்தான். இந்த ஒத்தெல்லோ கதி இந்நியாயத்திற்கு உதாரணம்.

பிளேக் வியாதிக்கொரு மருந்து.—பிளேக் நோய்க்கு மண்ணெண்ணெய் தக்க மருந்தாகு மென்று பார்மியர் கண்டு பிடித்திருக்கிறார்கள். பிளேக் நோய் கண்டவுடனே நோயாளிக்கு 3-அல்லது 4-தேக்கரண்டி மண்ணெண்ணையை உள்ளுக்குக் கொடுக்கவேண்டுமாம். அதன் பிறகு அதை நக்கிக்கொண்டும் இருத்தல் வேண்டுமாம்.

# சக்திதத்துவ போதினி

## PHYSICS PRIMER

### ஒளி

### Light

கண் என்ற இந்திரியத்தைத் தாக்கி வெளி விஷயங்களை அறிவிப்பதற்கு ஸாதனமாக இருப்பது ஒளி என்னப்படும். இது ஸாதாரணமாக வெளிவஸ்துவிலிருந்து நமது கண்ணில் வந்துபடும் ஒருவித சக்தியே ஒழிய கண்ணுள்ளே இருந்து வெளியே செல்லும் சக்தியே அல்ல. இதுவும்சப்தம் உஷ்ணம்போல ஒருவித நடுக்கம். ஆனால் இது உஷ்ணம்போன்றதே ஒழிய சப்தம் போன்றதல்ல. சப்தம் ஊடுருவிச்செல்ல இடை ஆதாரவஸ்து ஒன்று வேண்டும். ஆனால் உஷ்ணத்தைப்போல ஒளியும் இடைஆதாரத்தின் ஸஹாயமின்றி வெளியினூடே பரவிச்செல்லும் குணமுடையது. மேலும் உஷ்ணம் ஒளி உண்டாகும் நடுக்கத்திற்கும் சப்தம் உண்டாகும் நடுக்கத்திற்கும் ஒருவித பேதம் உண்டு. சப்தநடுக்கம் கிளம்பிவிட்டால் போகும்வழியில் நாற்புறம் பரந்து அகன்றுகொண்டு போகும் மார்க்க மட்டத்திலேயே நடுங்கிக்கொண்டு போகும். நேராகப் பரவும் உஷ்ணமும் ஒளியும் அவ்வாறின்றிப் புறப்பட்டு விட்டால் நேராக ஒரேவரியில் போகுமே ஒழிய அக்கம்பக்கம் அகலாது. மேலும் ஒளி நடுக்கம் போகும் மார்க்கத்திற்கு நேர்கோணமான மட்டத்தில் ஏற்படும். ஒளி நேராகப் போகிறது என்பதை எளிய சோதனையால் காட்டலாம். ஒரு நேரான நீண்ட குழாயின் மூலமாக வெளியே நோக்கினால் அதற்கு நேரே எதிரே இருக்கும் வஸ்துக்கள் தென்படுமே ஒழிய மற்றையவைகள் காணப்படா. இதன் மூலமாக ஒரு வஸ்துவை நோக்கவேண்டுமாகிலும்இந்தக்குழாயை அதற்கு நேராகப் பிடித்து நிறுத்தினால் தான் முடியும். ஆகவே வெளிவஸ்துக்களிலிருந்து ஒளி நேராகவே எல்லாப்பக்கங்களிலும் புறப்பட்டுப் பரவுகின்றது என்பதாயிற்று.

இந்தக் காரணத்தால்தான் ஒளிக்கிடையில் ஒரு கல் முதலிய சில வஸ்துக்களைக் கொண்டு வந்தால் நிழல் விழுவதும், சிறுத்துவாரங்கள் மூலமாகத் தலைகீழ் உருவம் தோன்றுவதும். நேராகப்போகும் ஒளி, கல் முதலிய வஸ்துவால் தடைபட கல்லைப்போன்ற ஒளி விடாப் பாகம் பின்னுள்ள திரையில்விழும். திரையின் மற்றையப் பாகங்களில் ஒளிப்பிரகாசிப்பதாலும், கல்லால் மறைக்கப்பட்ட பாகம் ஒளி இழந்திருப்பதாலும் வேற்றுமையால் நிழல்தென்படுகின்றதே ஒழிய அதனுள்ளிருந்து நமது கண்களில் ஒளிவந்து தாக்குவதில்லை. ஒன்றற்கு ஒன்று குறுக்கே பாயும் நேர் கோடுகள் ஒழுங்கின்படி தடுக்கும் வஸ்துவைவிட சிறிய ஒளி ஆதாரம் அகலும் நிழலையும், ஸம ஆதாரம் ஒரே மாதிரியான நிழலையும், பெரியது குறுகும் நிழலையும் உண்டாகும். இதுவும் அன்றி நிழல் பாகத்தைச் சுற்றி ஒரு குறை நிழல் பாகம் ஏற்படுவது இங்



குக்காட்டப்பட்டிருக்கும் சித்திரத்தின் மூலமாக எளிதில் காணலாம். ஒளி ஆதாரம் சிறு புள்ளியாக விருப்பின் இக்குறை நிழல் ஏற்படாது. இவைகளால் கிரஹண விஷயம் விளங்கும். கண்ணாடி அப்ரேகம் முதலிய வஸ்துக்களை ஒரு ஒளிவிடும் வஸ்துவுக்கு எதிரே கொண்டுவந்தால் நிழல் விழாது ஒருவித மங்கல் மாத்திரம் எதிர் திரையில் ஏற்படலாம். கற்பலகை முதலியவைகளைக் கொண்டு வந்தால் நிழல் விழுவதோடுங்கூட நிழற்புறமிருந்து கற்பலகையை நோக்கினால் விளக்கிருப்பதே தெரியாது. எண்ணெய் தடவிய காகிதத்தைக் குறுக்கே பிடித்தால் மங்கல் நிழல் உண்டாகும். ஆனால் நிழற்புறமிருந்து விளக்கை நோக்கினால் காகிதத்திற்கு அப்புறம் ஏதோ ஒரு வெளிச்சம் இருப்பதாகத் தோற்றுமே ஒழிய உருவமொன்றும் விளங்காது. ஆகவே ஒளி விஷயமாக வஸ்துக்களை மூன்று பாகமாய் பிரிக்கக்கூடும். கற்பலகை, இலை முதலியவைகளைப்போல ஒளியை முற்றிலும் தடுக்கும் வஸ்துக்களுக்குத் தடுக்கும் வஸ்துக்கள் என்றும்,



கண்ணாடி போல பெரும்பாலும் ஒளியைத் தடுக்காத வஸ்துக்களுக்கு ஊடுருவும் வஸ்துக்கள் என்றும், எண்ணைக் காகிதம் போல முற்றிலும் தடுக்காதவஸ்துக்களுக்கும் மத்தியமவிளக்க வஸ்துக்கள் என்றும் பெயர்.

இனி சிறு துவாரங்கள் ஒளி ஸம்பந்தமாகக் காட்டும் அத்புதத்தை விவரிப்போம். நாம் தெரு ஓரமாக இருக்கும் உள்ளில் பகல்காலத்தில் ஜன்னல் கதவுகளைச் சாத்திக்கொண்டிருப்போமாகில் அதிலிருக்கும் சிறு துவாரங்களால் எதிர் சுவரில் சிறிய வெளிச்சங்கள்விழக் காணலாம். இவைகளைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒருவன் தெருவில் நடந்துபோவனாகில், அவன் போவதால் உண்டாகும் வெளிச்சமாறுபாடு சுவரில் நேர் எதிர்புறமாக நகர்ந்துபோகும். அதாவது அவன் வடக்கே இருந்து தெற்கு நோக்கிப் போனால் உள்ளே தெற்கே இருந்து வடக்கே போவதுபோலத் தோற்றும். இது எல்லோரும் கண்டிருக்கும் விஷயம். மேலும் துவாரத்தருகாமையில் ஒரு அட்டை அல்லது கற்பலகையைப் பிடித்து ஸரிப்படுத்தினால் எதிரே உள்ள தென்னைமரங்கள் எல்லாம் அதில் தலைகீழாகக் காணப்படும். ஒளி நேராகப் புறப்படுமிடமிருந்து வருவதால்தான் இம்மாதிரியான அற்புதத்தோற்றம் உண்டாகிறது. வெளியிலுள்ள தென்னைமரத்தின் அடிநுணிகளிலிருந்து வரும் ஒளி துவாரத்தில் ஸந்தித்துப் பாய்ந்து மேல் கீழாக மாறிக் கற்பலகை வந்து தாக்க தலைகீழ் உருவத்தை உண்டாக்குகிறது. மேலும் தெற்கோரத்தி லிருக்கும் வஸ்துவிலிருந்து வரும் ஒளி துவாரத்தில் புகுந்து உள்ளின் வடக்கோரம் சுவரில்பட வடக்கே இருந்து தெற்கே போகும் வஸ்து தெற்கே இருந்து வடக்கே போவதாக உள்ளே காணப்படுகிறது.



ஒரு இருட்டறைக்குள்ளிருந்துதான் இதைப் பார்க்கவேண்டுமென்பதல்ல. ஒரு அட்டைப் பெட்டி ஒன்றை எடுத்து அதன் மூடியைத் திறந்து அதன் உள்ளளவிற்கு சரியாக ஒரு அட்டையைவெட்டி அதன் மத்திபாகத்தை வெட்டி எடுத்து அதைக் கற்பலகைச் சட்டம்போலாக்குவோம். அதன்மேல் எண்ணெய் காகிதம் அல்லது புத்தகங்களுக்குமேல் அட்டையிட்டு வரும் மத்தியமவிளக்கக் காகிதத்தை ஒட்டி இடைவெளியை மூடி, ஒருசிறு தட்டிபோலாக்குவோம். அதை அந்தப் பெட்டியின் நடுவில் நிறுத்திவிட்டு, பெட்டியின் பரப்பு குறுகலாகிய இரண்டு எதிர்பாகங்களில் ஒன்றன்மத்தியில் ஊசியால் குத்தி ஒரு சிறு துளையையும், எதிர்புறத்தில் கத்தியால் வட்டமாக நமது கண்கொள்ளும்படியான ஒரு துளையையும் உண்டாக்குவோம். இந்தப் பெட்டியை மேலே மூடி ஊசித் துளையைப் பகலில் எந்த வஸ்துவிற்கெதிரே பிடித்தபோதிலும் எதிர்புறத் துளையில் பார்த்தால் உள்ளிருக்கும் தட்டியில் அதன் தலைகீழ் உருவம் காணப்படும். அது ஒருவேளை மங்கலாகவிருக்கலாம். அதைச் சீர்திருத்த உள்ளிருக்கும் தட்டி சற்று நகர்த்தி வைத்தால் போதும். இந்தப் பெட்டிக்கு ஊசித்துளைப் படப்பெட்டி என்று பெயர். இதன் உள் விஷயத்தை இங்கிருக்கும் சித்திரத்தில் காணலாம்.



இவ்வாறு நேராகச் செல்லும் குணமுடைய ஒளிக்கும் ஓரிடம் விட்டு வேறிடம் போகக் கொஞ்சம் நாழிகையாகின்றதாம். சப்தவிஷயத்தில் நாழிகையைக் கண்டு பிடித்ததுபோல இங்கு எளிதில் காணமுடியாது. கண்ணுக்கெட்டும் தூரத்தில் ஒரு பெரிய விளக்கிட்டால் அது உடனே நமது கண்ணுக்குத்தெரிந்து விடுகிறது. ஆகவே ஒளி ஓடும் வேகத்தை எளிதில் கண்டு பிடிக்கமுடியாது. இதைக் கொஞ்ச நாளைக்கு முன்பிருந்த ரோமர் என்ற டானியவானசாஸ்திரி பின் வருமாறு கண்டுபிடித்தார். ஸூரியனைச்

சுற்றிப்போகும் கிருகங்களுள் பூமியும் ஒன்று வியாழனும் ஒன்று, வியாழனுக்கு 5 சந்திரன்கள் உண்டென்பது தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக எளிதில் வெளியாகும். இவைகளுள் ஒன்று ஒழுங்காக வியாழனை 42 மணி, 28 மினிட் 36 ஸெகெண்டில்ச் சுற்றி வருகிறது. மேலும் ஒவ்வொரு சுற்றிலும் இது வியாழன் நிழலுள் புக இதற்குக் கிரஹணம் பிடித்து விடுகிறது. ரோமர் என்பவர் பூமியும் வியாழனும், ஒரே ராசியில் அருகாமையிலிருக்கும் தருணம் கண்டு இந்த வியாழனது சந்திரனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக விடாது கொஞ்ச நாள் பார்த்து வந்தார். அதற்கு ஒழுங்காக முற்கூறிய கால அளவில் ஒவ்வொருதரம் கிரஹணம் பிடித்து வந்தது. இப்படி இதை விட்டுவிட்டு 6 மாதம் கழித்து 42-மணி 28 நிமிஷம், 36 ஸெகெண்டு பூர்ணமாகக் கழிவதற்குச் சற்று முன்பு தொடர்ச்சியாகச் சிலநாள் இந்தச் சந்திரனையே உற்று நோக்கினர். என்ன ஆச்சரியம்! இந்த கால அளவு முடிவில் அதற்கு கிரஹணம் பிடிக்கவில்லை. ஸுமார் 16-மினிட் 36-ஸெகெண்டுக்குப் பின்னர் கிரஹணம் பிடித்தது. இதற்கு ஏதாவது காரணம் ஒன்றிருத்தல் வேண்டும் என்று யோசிக்கலானர் ரோமர். 'கிரஹணம் என்னமோ ஸரியான நாழிகையில்தான் பிடித்திருக்கவேண்டும். ஆனால் பிடித்த ஸமயத்தில் அதிலிருந்து புறப்பட்ட ஒளி நம்மைவந்து எட்ட 16 மினிட் 36ஸெகெண்டு ஆயிருக்கவேண்டும். 6 மாதத்திற்கு முன்னர் இது ஸரிவர நடப்பானேன்? இப்பொழுது அது தவறுவானேன்? இப்பொழுது ஒளி முன்னைவிட அதிகதூரம் ஓடிவரவேண்டியிருக்கிறதா? என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் 'ஆறு மாதத்திற்கு முன்பு பூமியும் வியாழனும் அருகாமையிலிருந்தன. இப்பொழுதோ பூமி தனதுவருஷசக்கிரத்தில் பாதிபோய் அதன்எதிர் புறத்திலிருக்கும். வியாழனோ தன் சக்கிரத்தில் 12-ஒருத்திற்கு ஒருதரம் சுற்றுவதால் கொஞ்ச தூரம் தான்போயிருக்கும். ஆகவே இப்பொழுது ஒளி வர வேண்டிய தூரம் சற்றேறக்குறைய பூமிசக்காத்தின் குருக்களவு தூரம் அதிகமாகிவிட்டது.' என்றுதட்டுப்பட்டது. ஸூரியன்பூமியிலிருந்து 92,000,000 மைல் தூரத்திலிருப்பதால், அந்தக் குறுக்களவு ஸுமார் 184000000 மைலாயிற்று. இதைத்தாண்டி ஒளி 16 மினிட் 36 ஸெகெண்டில் வந்திருக்கிறது. ஆகவே "ஒளி ஸெகெண்டு ஒன்றுக்கு ஸுமார் 186000 மைல் மாய்மாகப் பறக்கிறது என்பது வெளியாயிற்று. இது மிகப் பெரிதாயினும் கணக்குள் அடங்கிவிட்டது. பூமிக்கு மிக நெருக்கமாக விருக்கும் நக்ஷத்திரத்திலிருந்து ஒளி நம்மை வந்து எட்ட 3 வருஷம் பிடிக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே அந்த நக்ஷத்திரம் இப்பொழுது ஒளி இழந்துவிட்டால் மூன்று வருஷம் கழித்துத்தான் அது நமக்கு மறையும். மற்றைய நக்ஷத்திரங்கள் விஷயம் இதைவிட மிக பிரமாதமானது.

| | | |
|---|---|---|
| ஒளி ஆதாரம் | = | Source of Light |
| குறை நிழல் | = | Penumbra |
| தடுக்கும் வஸ்து | = | Opaque bodies |
| ஊடுருவும் வஸ்து | = | Transparent bodies |
| மத்தியம விளக்க வஸ்து | = | Traanslucent bodies |
| ஊசித்துளைபடப்பெட்டி | = | PinholeCamera |

---

# ஸூர்யகிரஹணம்

## THE SOLAR ECLIPSE

இந்த அக்டோபர்மாஸம் 22-ம் தேதிக்கு ஸரியான ஐப்பசிமாஸம் 6-ம்தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு ஸூரியகிரஹணம் ஏற்படும். பட்டணத்தில் காலை 7-22-18 மணிக்குத் தொடங்கி, 9-17 மணிக்கு முடிவுபெறும். மத்திய காலம் 8-17-மணி.

சூரியகிரஹண உண்டாவதன் காரணத்தை முன்னரே விவேகபோதினி 2-ம் ஸஞ்சிகையில் 44-ம் பக்கத்தில் எடுத்து விஸ்தரித்தாகிவிட்டது. இங்குச் சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் அடர்ந்த நிழல்பாகத்தில் (1) பூமியின் எந்தப்பாகம் வந்தாலும் அதற்கு குறைக் கிரஹணமும், இதன் மத்தியபாகத்தில் உட்புறம் வந்தால் (2) முழுக்கிரஹணமும், வெளிப்புறம் வந்தால் (3) கங்கணக்கிரஹணமும் மங்கலான பாகத்தில் (4) எங்கிருந்தாலும் குறைநிழற் கிரஹணமும் உண்டாகும் என்பதை முன்னரே கூறி இருக்கிறோம். அடர்ந்த நிழல் அருகில் உள்ள பாகங்களுக்கு கிரஹணம் தொடங்கும்.

இப்பொழுது ஏற்படும் கிரஹணம் கங்கண கிரஹணம். ஆனால் சந்திரன் நிழலின் மத்திய பாகம் மத்திய ஆசியா, சீனதேசம், சீனக்கடல் வழியாகத் தென்கிழக்காகக் கொஞ்சதூரம் பஸிபிக் மஹாஸமுத்திரம் சென்று பூமியை விட்டு விலகுவதால் இப்பாகங்களுக்கு மாத்திரம் தான் கங்கணக்கிரஹணம் தோன்றும். நம் பரத கண்டத்தில் இது குறைக்கிரஹணமாகத்தான் தெரியும். ஸூரியன் குறுக்களவில் கால்பங்கு பட்டணத்திலும், மூன்றில் ஒருபங்கு பம்பாயிலும், மூன்றில் இரண்டு பங்கு கல்கத்தாவிலும், முக்கால்வாசி டார்ஜீலிங்கிலும், முக்காலே அரைக்கால் பங்கு டிப்ருகரிலும் மறைந்து காணப்படும்.







இம்மாதிரி விதம் விதமாக ஸூரியன் கிரஹண காலங்களில் மறைந்து காணப்படுவதை எளிதில் விளக்கலாம். ஒரு மேகம் ஸூரியனை மறைத்து நாமிருக்கும் இடத்தில் நிழலை உண்டாக்குங்கால் 100-கஜத்திற்கப்பால் வெயில் நன்றாகக் காய்ந்துகொண்டிருப்பதை நாம் கண்டிருப்போமே. இதுபோலத்தான் சந்திரனால் மறைக்கப்பட்ட ஸூரியனும் விதம்விதமாகத் தோன்றுவது.

நமது பாத கண்டத்தில் கிரஹணம் பிடித்து விடும் விதத்தைப் முகப்புப் படத்தில் காட்டியிருக்கிறது. இப்படத்தில் காட்டப்பட்டிருக்கும் இடைவிடாக்கோடுகள் கிரஹணம் தொடங்கும் காலத்தைக் குறிக்கும். ஒவ்வொன்றின் அருகாமையில் குறித்திருக்கும் காலத்தில் அதன் வடபுறமிருக்கும் ஊர்கள் சந்திர நிழலுள் மூழ்கிவிட விதம் விதமான பரிமாணமாக ஸூரியக்கிரஹணம் பிடித்து விட்டதாக அங்குத் தோன்றும். காஸ்மீர தேசத்திலும் பஞ்சாபிலும் காலையில் ஸூரியோதயத்தில் கிரஹணம் தெரியும். சந்திர நிழல் முதலில் தென்மேற்காக நகர்ந்து வந்து நம் பாதகண்டத்துள் ஆரம்பத்தில் புகுந்து ஸூரியோதயத்தில்இத்தோற்றத்தைஉண்டாக்குகின்றது. ஆதலால் இந்தக் கோட்டின் மேற்குப் பாகத்தில் ஸூரியன் உதயமாகும்போதே கிரஹணம் பிடித்திருக்கும். இதன் பின்னர் சந்திர நிழல் வரவர கீழ்மேலாகத் திரும்பி தெற்கு நோக்கிப் புறப்பட்டு தக்ஷிணதேசத்தை ஒழுங்காக மறைத்து வரும். 7-மணி ஸுமாருக்கு விந்திய கிரிக்கு வடக்கில் கிரஹணம் எல்லாவிடத்தும் தெரியும். ஸுமார் 7-40-க்குள்ளாகக் கன்னியாக் குமாரியில் கிரஹணம் தொடங்கிவிடும். இந்த ஸமயம் முதல் ஸுமார் 1-மணி நேரம் நம் பாதகண்டம் முழுவதும் சந்திரநிழலில் மூழ்கிக்கிடக்கும். ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு பரிமாணமாக இது தோன்றுவதோடுங்கூட ஒரே ஸமயத்தில் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு விதமாகவும் காணப்படும். சந்திரநிழலின்முடிவு நமது பாதகண்டத்தைவிட்டு பின்னர் நீங்கத் தொடங்கும். இப்பொழுது ஸிந்துதேசம் பஞ்சாப்தேசம் இவைகளில்தான் கிரஹணம் விட்டு விடும்; மற்றையவிடங்களில் கிரஹணம் தெரிந்துகொண்டே இருக்கும். ஆரம்பத்தி லிருந்தது போலவே நிழல் தெற்கு வடக்காகக் கிடந்து கிழக்குநோக்கி நகரத் தொடங்கும். இதன் நிலையைப் புள்ளிக்கோட்டால் காட்டப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு அருகில் குறிக்கப்பட்டிருக்கும் காலங்களில் இவைகளின் மேல்பாகத்தில் கிரஹணம் விட்டுக்கொண்டே வரும். பங்காளத்திலும் ஆஸாமிலும்தான் முடிவில் கிரஹணம் விடுவது. சந்திரன் நிழல் மினிட்டிற்கு 35 மைல் வீதம் பூமியின்மேல் ஓடிச் செல்லும். சந்திரன் ஆகாயத்தில் பூமியைச் சுற்றிப் போகும்மார்க்கம் ஒருவிதமாயும், தினம் ஒருமுறை பூமியைச் சுற்றிப்போவதுபோலக் காணப்படும் மார்க்கம் வேறு ஒருவிதமாயும் இருப்பதால்தான் சந்திர நிழல் இங்குக் காட்டப்பட்டபடி அநேகவிதமாகப் பூமியின்மேல் மாறி ஓடிச்செல்லுவது.

இந்தக் கிரஹணகாலங்களில் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக ஸூரியனைப் பார்த்தால் ஒருவேளை சந்திரகோளத்தில் இருக்குமலைகள் ஓரங்களில் சற்று நீண்டு காணப்படலாம். மேலும் ஸூரியகோளம் வரவரக் குறைந்துவரும் விதம் பார்வைக்கு மிக விநோதமாகவிருக்கும்.

[இது நமது போதினியை வாசிப்போர்கள் நன்மைக்காக கல்கத்தாவில் இந்திய வானசாஸ்திர ஸபையோர் பிரசுரம் செய்துவரும் பத்திரிகையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.]

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 11. ஸ்ரீகணேச உபநிஷத் [89]

எல்லாருஷிகளும் எவரை வழிபட்டு இடையூறின்றி எவரது ஸ்தானத்தை அடைகிறார்களோ, அப்பேர்ப் பட்டவராயும், கணேச உபநிஷத்தால் அறியக்கூடியவராயும் உள்ள எங்கும் வியாபித்திருக்கும் பிரஹ்மமாயிருக்கிறேன்.

கணேசராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர்தான் பிரத்தியக்ஷமான தெய்வம். கேவலமான (ஒப்பற்ற) ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தா, பிரத்தியக்ஷமான ஆத்மா. எப்பொழுதும் உண்மையையே சொல்லுகிறேன், என்னைக் காப்பாற்றும். கேட்பவனையும், பேசுபவனையும், கொடுப்பவனையும், வேதாத்தியயனம்செய்பவனையும், சிஷியனையும் இருக்கும் என்னை எல்லாத் திக்குகளிலும் நீர்தான் காப்பாற்றவேண்டியது. நீர் வாக்மயமாகவும், சின்மயமாகவும், ஆனந்தமயமாகவும், ஸத்தியமாகவும், ஸச்சிதானந்தமயமாகவும், பிரஹ்மமயமாகவும் இருக்கிறீர். உம்மிடமிருந்து ஜகத் முழுவதும் உண்டாகி, உம்மிடம் நிலைபெற்று உம்முள் லயிக்கின்றது. நீர்தான் பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு ஆகாசமாகிய பஞ்சபூதங்களுக்கும் முக்குணங்களுக்கும் (ஸத்வராஜதமஸ்), முக்காலங்களுக்கும் அப்பாற்பட்டவர். நீர் மூலாதாரத்திலிருக்கிறீர். நீர் மூன்று சக்தி (இச்சா, கிரியா, ஞான)ஸ்வரூபம். உம்மை நித்தியயோகிகள் தியானம் செய்கிறார்கள். நீர்தான் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன், அக்னி, வாயு, ஸூரியன், சந்திரன், பிரஹ்மம், பூ, பூவ:, ஸுவ:—

ஓம். (இந்தவிடத்தில் ஒரு மந்திரம் காணப்படுகிறது) இதற்குப் கணேசீயவித்தை என்று பெயர், ருஷி கணகர்; தேவதை— மஹாகணபதி; தியானம்— ஒரு தந்தத்தை உடையவராயும், நான்கு கைகளையும் அவைகளில் பாசம், மாவட்டி, அபயம், வரம் இவைகளைத் தரித்தவராயும், மூஷிக(எலி)க்கொடியையுடையவராயும், ரக்தவர்ணம், தொங்கும் வயிறு, முரம்போன்ற காதுகள், ரக்தவஸ்திரம், சந்தனம், முதலானவைகளை உடையவராயும், பக்தர்களிடம் தயையுள்ளவராயும், சிருஷ்டிக்குமுன்னே தோன்றி சிருஷ்டிகாரணராயும், இருக்கும் கணேச ரூபமான பிரஹ்மத்தை தியானம் செய்கிறேன். என்பதே.

இவ்வாறு நாள்தோறும் தியானம் செய்பவன் யோகிகளுள் சிறந்தவனாகி, எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டு, பிரஹ்மரூபியாகிறான்.' வணக்கமுள்ள சிஷ்யத்தன்மையோடு வாராதவனுக்கு இவ்வித்தைக் கொடுக்கக்கூடாது. அறியாமையால் உபதேசம் செய்துவிடுபவன் பாபியாவான். இதை ஆயிரம் தடவை பாராயணம் செய்வதால் எல்லாக் கோரிக்கைகளும் கைகூடும். இதைக்கூறிக் கணபதிக்கு அபிஷேகம் செய்பவன் வாக்சாட்டி யுடையவனாவன். சதுர்த்தியில் (சாப்பாடின்றி இருப்பதோடும் கூட விடாது கணபதி விஷயத்திலேயே ஈடுபட்டிருப்பதாகிய) உபவாஸத்தோடு கூட இதை ஜபிப்பவன் வித்தியாவானாகிறான். அருகம்புற்களால் ஆராதிப்பவன் குபேரனுக்கு ஸமானமாவான். பொரிகளை உபயோகப்படுத்துபவன்கீர்த்திமானாவான். நல்ல புத்தி யுண்டாகும். ஆயிரம் மோதகங்களை நிவேதனம் செய்கிறவன் கோரிக்கைகள் நிறைவேறும். நெய்யாலும் ஸமித்தாலும் பூஜிப்பவன் எல்லாவற்றையும் பெறுவான். ஸூரிய கிரஹணகாலத்தில் நதிக்கரையிலாவது, கணேச விக்கிரஹத்தின் ஸந்நிதியிலாவது இந்த மந்திரத்தை ஜபித்தால் இது உடனே ஸித்தியாகும். எல்லாப் பாபங்களும் தோஷங்களும் கழன்று போகும். இவ்வாறு உணருபவன் எல்லாவற்றையும் அறிந்தவனாவான். இவ்வாறு உபநிஷத்

### 12. கலிஸந்தாரண உபநிஷத். (103)

நாரதர் துவாபரயுக முடிவில் பிரஹ்மாவை நோக்கி நான் இனி எவ்வாறு கலிபாதையிலிருந்து விடுபட முடியும். கொடிய கலியுகம் வரப்போகிறதே! என்ன செய்வது என்று மிகுந்த சஞ்சலப்பட்டுக் கேட்டார். அதற்கு பிரஹ்மா கூறுகிறார்.—

'நீ கேட்ட கேள்வி பொதுவாகக் கலியுகவாஸிகள் எல்லோருக்கும்உபகாரமானது. ஆதலால் சுருதிரஹஸ்யமாகிய விஷயத்தை வெளியிடுகிறேன் கவனமாய்க் கேள். ஆதிமூலமாகிய ஸ்ரீமந் நாராயணரது நாம உச்சாரணமாத்திரத்திலேயே கலிதோஷம் அணுகாது அகலும். அது ஹரே, ராம; ஹரே, ராம; ராம; ராம, ஹரே, ஹரே; ஹரே, கிருஷ்ண, ஹரே, கிருஷ்ண; கிருஷ்ண, கிருஷ்ண, ஹரே, ஹரே, இந்தப் பதினாறு நாமங்களே. கலியுக வாழ்க்கையில் தேறி வருவதற்கு இதை உச்சரிப்பதைவிட மேலானதாயும், உபயோககரமானதாயும் உள்ள வழியே இல்லை. இந்தப் பதினாறு நாமங்களும் ஜீவனைச் சூழ்ந்து உண்மை ஞானம் வெளிப்படாது தடுக்கும் 16 அவித்தியா விஷயங்களையும் வேரறுக்கும். இவ்வாறு இவை நாசமானதும் மேகங்கள் சிதறி நிர்மலமாகவிருக்கும் ஆகாயத்தில் ஸூரியன் பிரகாசிப்பதுபோல, பரப்பிரஹ்மம் விளங்கும்.'

176-ம் பக்கம் பார்க்க.



# குசன் கதை

## LIFE OF KUCHA

ஸ்ரீராமர், தான்எக்காரணம் பற்றி இப்பூதலத்தில் வந்து அவதரித்தனரோ, அவையாவையும் நிறைவேற்றியபிறகு தன் பதமான ஸ்ரீவைகுண்டத்தை நோக்கிச் செல்லுகையில் தன்னிடத்தில் மிகவும் அன்புள்ள பிரஜைகளையும் கருணைகூர்ந்து, தம்முடன் அழைத்துச் சென்றார். பிறகு, அவருடைய மைந்தனான குசன், பரம்பரையாய் ஸத்குணம் நிறைந்தவர்களாயும், மஹாதைரிய பராக்கிரமசாலிகளாயு முள்ள, இக்ஷ்வாகுவமிசத்தில் உதித்த மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டதும், இராமரால் அழியாப் புகழடைந்ததும், மஹாபுண்ணிய நதியான ஸரயூநதியை எல்லையாகக் கொண்டதும், பிரஜைகளில்லாமையால் ஒளிகுறைந்ததுமான அயோத்தியா நகரத்தில் வாஸம்செய்ய மனமில்லாதவனாய், தானே "குசாவதி" என்னும் ஒரு பட்டணத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதில் நெறிதவறாது அரசாண்டு வந்தான்.

இப்படி இருக்கையில் ஒரு நள்ளிரவில் பரமானந்த வெள்ளத்தில் முழுகியிருக்கும் ஓர் யோகியின் நிர்மலமான சஞ்சலமற்றஹிருதயம்போல் ஊரெங்கும் நிர்சப்தமாகிவிட ஸ்தப்தமாய் தீபங்கள் எரிந்துகொண்டு இருந்தன. குசன் தன் பள்ளியறையில் பாற்கடல்போன்ற துய்ய வெண்மையான ஹம்ஸதூலிகா மஞ்சத்தில் படுத்து உரங்கிக்கொண்டிருந்தான். கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. மதுபானத்தால் மயக்குண்ட காவற்காரர்கள் சிவந்த கண்களையுடையவர்களாய் நீண்ட கத்தியைத் தோளில் சாத்திய வண்ணம் அங்கு வாயிலில் கொஞ்சமும் சப்தம் செய்யாமல் மெதுவாய் உலாவிக்கொண்டிருந்தனர். சந்திரிகையானது மிக வெண்மையாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுது, திடீரென்று கண்விழித்தான் அரசன்! தான் இதுகாறும் பார்த்திராதவளாயும், தூரதேசம் சென்ற நாயகனைப் பிரிந்த வேஷத்தை யுடையவளாயுமுள்ள ஓர் நங்கையைக் கண்டான்! ஸஜ்ஜனங்களுக்குச் சாதாரணமான ராஜ ஸ்ரீயை யுடையவனையும், தேவேந்திரனைப் போன்ற தேஜஸையுடையவனையும், சத்துருக்களை ஜெயிக்கிறவனையும், பந்துக்களால் மிகவும் கொண்டாடப்பட்டவனையுமுள்ள குசன் முன்னிலையில் நின்று, அப்பெண்மணியானவள், "ஜய ஜய" என்று வாழ்த்திக்கொண்டே அஞ்சலி செய்தனள். பிறகு, கதவுகள் தாளிடப்பட்டிருந்தாலும், நிலைக்கண்ணாடியுள் தெரியும் பிரதி பிம்பத்தைப்போல உட்பிரவேசித்திருக்கும் அவ்வங்கனாமணியைப் பார்த்து மிகவும் வியப்படைந்த தாசரதியின் புத்திரன், படுக்கையிலிருந்து தலையைச் சற்றுயர்த்திப் பின்வருமாறு கூறலாயினன்:—

"ஹே! கல்யாணி! இவ்வாண்மனை உயரமான மதில்களால் சூழப்பட்டிருந்தும், உட்பிரவேசித்திருக்கும் உன்னிடத்தில் யாதொரு யோகச்சிறப்பும் தென்படவில்லையே! மேலும், பனியால் மூடப்பட்ட ஒரு தாமரையைப்போல் விசனத்தினால் வாடினவளாகத் தோற்றுகின்றாய். ஹேசுபே! யார் நீ? உன்னையடைந்த பாக்கியவான் யாவன்? யாது காரணம்பற்றி நீ இந்நடு நிசியில் என்னிடத்தில் வரும்படியாயிற்று? ஜிதேந்திரியர்களான ரகுக்களுடைய மனதானது பரஸ்திரீகளிடத்தில் ஒருபோதும் அணுகாதென்பதை மனதிலிருத்தி பதில் உரைப்பாய்." என்றான் குசன்.

குற்றம் ஒன்றும் இல்லா அப்பெண்மணியானவள் பின்வருமாறு உரைக்கலாயினள். "ஹே, ராஜேந்திரா! என் நிலைமையை நான் உனக்கு என்னென்றுரைப்பேன்! தன்னிருப்பிடம் சென்ற உன் தந்தையால் எப்பட்டணம் சூனியமாக்கப்பட்டதோ, அந்நாதனில்லாப்பட்டணத்தின் அதிதேவதையென்று என்னை நீ யறிவாயாக. குணவான்களான பூபாலர்கள் கொண்டாடிய உத்ஸவத்தின் சிறப்பால் அழகாபுரியையும் இகழ்ந்த நான், ஸூரிய வம்சத்தில் தோன்றிய பூர்ணமான சக்தியையுடைய நீ இருக்கும்பொழுது மிகத்தாழ்ந்த இந்நிலைமையை அடையலானேன். என் பிரபு இல்லாமையால் சிதறுண்டிருக்கிற சயனங்களையும் பற்பல திரைகளையும் இடிந்திருக்கிற பிராகாரங்களையும் உடைய என் பட்டணம், மலைவாயில் விழுந்திருக்கும் கதிரவனையும், பெருங் காற்றால் சிதறுண்ட மேகங்களையும், உடைய அஸ்தமன வேளையைபோலிருக்கின்றது. முன்பு எந்த ராஜமார்க்கத்தில் இரவுதோறும் நாயகனை நோக்கிச்செல்லும் எடுபட்ட ஸ்திரீகளது ஒளிரும் இனிமையான சிலம்பின் ஒலி கேட்டுக்கொண்டிருந்ததோ, அங்கு இப்பொழுது வாயில்கொள்ளிக்கட்டைகளை எடுத்துக்கொண்டு மாமிசத்தைத்தேடி உலாவிவரும் நரிகள் பயங்கரமாக ஊளையிடும் சப்தம் கேட்கின்றது. ஹே மஹீ பால! அழகிய சிறுமிகளின் மெல்லிய விரல்களினால் அலைக்கப்பட்டு மிருதங்கத்தின் தீரமானதொனியை ஒத்து ஒலித்த அவ்வுபவன தடாகங்கள் இப்பொழுது காட்டெருமைகளின் நீண்ட கொம்புகளினால் அலைக்கப்பட்டுக் கதறுகின்றன. முன்புபோல் அன்புடன் ஆதரிப்பவர் இல்லாமையால் விளையாட்டு மயில்கள் வீட்டில் வளரும் நிலையை இழந்தும், மிருதங்கத்தின் கம்பீரமான ஒளி காதில் விழாமையால் நிர்த்தனங்களை மறந்தும், விருட்சத்தின் அடியை இருப்பிடமாகக் கொண்டும், காட்டுத்தீயினால் எரிக்கப்பட்ட குறைச் சிறகுகளை யுடையவைகளுமாய் மயில் தன்மையை இழந்து நின்றன. ஹா கஷ்டம்! காலத்தின் கொடுமையை என்னவென்று உரைப்பேன்! செம்பஞ்சுக் குழம்பு அழகிய சிலம்புகள் இவைகளையுடைய விலாஸினிகளின் சிறிய மிருதுவான பாதங்களால் அலங்கரிக்கப்பட்ட எனது மாடிப்படிகள் இப்பொழுது புதிதாய் அடித்த மிருகங்களின் இரத்தத்தினால் பூசப்பட்ட கூரிய நகங்களையுடைய புலிகளின் பாதங்களால் அதிர்ந்து போகின்றன. தாமரை அடர்ந்த குளத்தில் இறங்கி யிருந்த பெண் யானைகள் கெடுத்த தாமரைக் கொடிகளை யுடையவை

களாய் வரையப்பட்டிருக்கும் ஆண் யானைகளின் மஸ்தகங்கள், பாபரப்போடும் கோபத்தோடும் கூடின மிருகேந்திரனுடைய மாவெட்டி போன்ற கூரிய நகங்களால் பிளக்கப்படுகின்றன. காலக்கிரமத்தினால் அழிந்தும் மங்கியும் உள்ள வர்ணத்தையுடைய ஸுந்தரிகளின் பிரதிமைகளுக்குப் பாம்புச் சட்டைகள்மேல் வஸ்திரங்களாக இருக்கின்றன. நாளடைவில் அழுக்கேறி அங்குமிங்கும் புற்கள் முளைத்தும், பாசிபடர்ந்திருக்கின்ற மாளிகைகளுக்கு முத்துமணிகள் போன்ற வெண்மையான சந்திரிகையும் சோபையை அளிப்பதில்லையே. ஹா! நினைக்க நினைக்க என் மனம் மோஹத்தையே அடைகின்றது. முன்பு நாள்தோறும் பூம்பொழில்களில் சென்று ஸௌந்தரியவதிகள் உபவன தடாகங்களில் ஸ்நானஞ்செய்து, தேவதார்ச்சனைக்காக பரிசுத்தைகளாய் தயையுடன் மெல்லக் கொடிகளை வளைத்து தாமரைப் புஷ்பம்போன்ற சிவந்த தங்கள் கரங்களினால் பூக்கொய்து சென்றனர் ஆனால் இப்பொழுது வேடர்களும் வனவானரங்களும் அக்கொடிகளைக் காலினால் தேய்த்து நாசமாக்குகின்றன. சந்தனம், ஊதுவத்தி முதலிய வாஸனைத் திரவியங்களினால் பரிமளித்த கதவுகள் இப்பொழுது இரவில் தீபப்பிரகாசமில்லாமலும் பகலில் காந்தாமணிகளின் முகஸ்ரீயை இழந்தவைகளுமாய், புழுக்களோடு கூடினசிலந்திகூடுகளாலும் வெறுக்கப்படுகின்றனவே." என்று இவ்விதம் பிரலாபித்து ஒருநிமிஷம் மௌனமாயிருந்து கண்களில் நீர் தளும்ப கல்லும் கரைந்துருகுமாறு மீண்டும் அச்சுந்தரி சொல்லத் தொடங்கினாள்:—

"தேவ சுந்தரிகள் ஸ்நானம்செய்யாமலும் கரைகள் பரிமளமான வாஸனைப் பொடிகளால் அலங்கரிக்கப்படாமலும், பூஜாயோக்கியமான புஷ்பங்கள் அர்ச்சிக்கப்படாமலுமிருக்கும் சரையூ நதியையும், யுவதிகளில்லாமல் சூன்னிய மாயிருக்கும் லதா மண்டபங்களையும் பார்த்துஎன் மனம் மிகவும் பரிதபிக்கின்றது. ஆதலால் என்னரசே! எப்படி உன் தந்தை காரணமான இம்மனுஷ சரீரத்தை நீத்துப் பரமாத்ம பூர்த்தியை அடைந்தனரோ, அப்படியே நீயும் இவ்விராஜதானியை விட்டுவிட்டு குலராஜதானியான என்னை யடைந்து புகழுடன் பரிபாலனம் செய்வாயாக." என்றனள்.

இவை யனைத்தும் கேட்டிருந்த ரகுப்ரவீரனும், கருணைநிறைந்த மனதுடையவனாய் "அப்படியே ஆகுக" என்று பிரீதியுடன் உரைக்கவே ஆனந்தத்தால் மலர்ந்த முகத்தாமரையை யுடையவளாய் அம்மாதரசியும் அஞ்சலி வந்தனம் செய்து மின்னற்கொடிபோல் அவ்வறையினின்றும் மறைந்தனள். பிறகு அரசனும் இவ்விஷயத்தைப் பற்றியே சிந்தித்தவனாய் நித்திரைவராமல்சூரியோதயத்தையே எதிர் பார்த்திருந்தான். ஆதித்தனும் தன்பிரிவால் இரவுமுழுதும் விஸனத்தால் வாடியிருந்தகமலினியைக் கரம் கொண்டுதழுவினான். மஹேந்திரனும் வேதியர்களிடம் இராத்திரி நடந்த சொப்பனம்போன்ற அந்த அற்புத விருத்தாந்தத்தை விவரித் துரைத்தனன். அவர்களும் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தவர்களாய் குல ராஜதானியான அவ்வயோத்தியே நேரில்வந்து இவனை பதியாக வரித்தனள் என்றெண்ணிக்களித்தார்கள். பிறகு ஓர் சுபதினத்தில் கடல் போன்ற தன் ஸேனாவெள்ளத்தையும், பிரஜைகளையும் அழைத்துக் கொண்டு தன் மூதாதைகளால் பரிபாலனம் செய்யப்பட்ட இராச்சியத்திற்குவந்து அவ்வயோத்தியையின் இருதய கமலத்தை மலரச்செய்து பூலோகமெங்கும் புகழும்படியான கீர்த்தியுடன், தேவர்களும் இவன் ஸத்யத்தையும் வீரதைரியத்தையும் கண்டு புகழுமாறு அனேக வருஷங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டிருந்தான்.

கிருஷ்ணகுமாரி.

(174-வது பக்கத்தின் தொடர்ச்சி)

இவ்வாறு கூறிய பிரஹ்மாவை நோக்கி இதை உச்சரிக்கும் விஷயமாக விதிகளைக் கூறவேண்டும் என்று நாரதர் கேட்டார். இதை உச்சரிப்பதற்கு யாதொரு விதியும் இல்லை என்றும், சுத்தா சுத்தம் முதலிய எந்த ஸமயங்களிலும் இதை ஜபிக்கலாம் என்றும், அவ்வாறு செய்தால் முறையே தேறத்தேற ஸாலோக்யம் (மும்மூர்த்திகள் லோகத்தை அடைதல்) ஸாமீப்யம் (மும்மூர்த்திகள் அருகாமையிலிருத்தல்) ஸாரூப்யம் (அவர் ரூபத்தைபபோன்றரூபத்தை அடைதல்) ஸாயுஜ்யம் (அவரோடு கலத்தல்) ஆகிய நான்கு வித மேலான பதவிகளை அடையலாம் என்றும் கூறினார்.

இந்தப் பதினாறு நாமங்கள் அடங்கிய மந்திரத்தை எவன் [3,50,00,000] மூன்றரைக் கோடிதரம் ஜபிக்கிறானோ அவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான். ஸகலபந்தங்களிலிருந்தும் விடுபடுவான்.

இதுஉபநிஷத்

நாள் ஒன்றுக்கு 10000 ஜபித்தால் இக்கணக்காவதற்கு ஸாதாரணமாக 10வருஷங்களாகும்.

தூதுவளையானது கபத்தை நீக்குந் தன்மையுள்ளது. இதைக் கஷாயமிட்டு சுவாச காசம், இருமல் முதலிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இலையைத் துவையல் செய்து கொடுப்பது முண்டு, இதனால் தாதுப்பலமுண்டாம். கபம், மந்தம், இருமல், இளைப்பு தீரும். இதன் இலையால் சிலேஷ்மம், கர்ண சூலை, அக்கினிமாந்தம், உட்குத்து, சொறிவு, மேலுளைவு தீரும். பூவினால் தேக புஷ்டி, தாதுவிருத்தி, சரீரபலம் அழகும் உண்டாம். காயினால் கபரோகம், அரோசகம், பைத்தியம், மலபந்தம், ரத்தாசய வாயு, பித்தவாதம் தீரும். பழத்தினால் க்ஷயம், ஜல தோஷம், மார்புச்சளி தீரும். தூதுவளம் பழநெய் க்ஷயரோகங்களுக்குத் தக்க ஔஷதம். வேரும் கொடியும் சுவாச முதலிய ரோகங்கள் பல்நோய் இவைகளைப் போக்கும்.



# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

(தொடர்ச்சி)

**வலபத்திரன்.**—அந்தப் பங்களா புதிதாய் இருக்குதே? யாருடையது? என்ன? விவரமாய்ச்சொல்லு

**கிழவி.**—அது ஒரு மடம். திருவூர்மடம். சாமியார் இருக்குதாங்க. மந்தாரிக்கு வேண்டியவங்க. மந்தாரிகூட நித்தம் நித்தம் போகுதாங்களாம். நான் பார்த்ததில்லை சாமி—உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு ஐயா! பிள்ளைக்குட்டிக்காரி நான்.

**வலபத்திரன்.**—வந்துட்டாயே பொய்சொல்ல—

**கிழவி.**—கண்ணுனே! இந்த எரிஞ்சுபோகுதானே அவனறியச் சொல்லுதேன்—எனக்கு அவ்வளவுதான் தெரியும்.

**வலபத்திரன்.**—ஆகா! அப்படியா! இருக்கட்டும். அதை மடம் எங்குதியே அங்கே ஒருகுட்டி நல்ல பெண்பிள்ளை!—

**கிழவி.**—சொல்லித்தொலைக்கிறேன். எதாவது குறும்பு கிறும்பு பண்ணினையோ—மங்கம்மா ராச்சியம்—ஞாபகம் இருக்கட்டும்—தலைக்கு வந்துவிடும்—

**வலபத்திரன்.**—அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன் நீ சொல்லு.

**கிழவி.**—அதேன் சொல்லுதே.பேருக்கு மடம். பேருக்குச் சன்னியாசி. அடாடா!' அந்த பயமகளைப்பார்த்தால்—

**வலபத்திரன்.**—ஆ! அப்படியா? ரொம்ப அழகோ?

**கிழவி.**—என் சொல்லுதே! ஜ்ஸ்! அவள் முகம் எவ்வளவு அழகு, அந்த ஒரு வைரக்கம்மல் போதாதா?

**வலபத்திரன்.**—ஆஹா! அவள்—

**கிழவி.**— தலைமயிர்தான் – –அடாடா— என்னால் சொல்லமுடியாது அழகை-அந்த ஜடைவில்லை—

**வலபத்திரன்.**—இதெல்லாம் நீஎப்போ பார்த்தாய்?

**கிழவி.**—பக்கத்திலுள்ள பூந்தோட்டத்தில் நாலு நாளைக்குமுன் சுற்றிக்கொண்டிருந்தாள். ஒருவர் பார்த்துவிடக்கூடாதாம். அவ்வளவு பந்தோபஸ்தாம்—என்னைக்கண்டாளோ இல்லையோ—நான் அவளைக் கண்டேனோ இல்லையோ—சந்நியாசி ஓட்டமாய் வந்து அவளைத்திட்டி,உள்ளே அழைத்துக்கொண்டுபோய்விட்டான்

இதற்குள் வலபத்திரனுக்குக் குடிவெறியதிகரிக்கவே கண்கள் சுழல ஆரம்பித்தன. நாகுழற ஆரம்பித்தது. புத்தி தடுமாறிவிட்டது. "ஏ! கிழவி! என்ன சளசளவென்று பேசுதே ஒரேஅடியில் உன்னை நிமித்திடுவேன்! பேசாதே! எனக்குத் தூக்கம் வருகுது" என்று பிதற்றிக்கொண்டே தரையில் சாய்ந்து நித்திரை போனான்.

இவ்வற்புத ஸம்பாஷணையை மௌனமாய்க் கவனித்துக்கொண்டிருந்த நமது குதிரைவீரன், கிழவியண்டை வந்து உட்கார்ந்துகொண்டு, "அம்மா! நீ சொன்ன விஷயம் வேடிக்கையாயிருக்கிறதே! சந்நியாசி மடத்தில் பெண்ணொருத்தி யெப்படி யிருக்கமுடியும்?" என்று வினவினான்.

**கிழவி.**—சாமி! என் சொல்லுதீங்கோ அந்த அநியாயத்தை. ராணி நல்ல வகதான்—ஆனால் அவுக என்ன பண்ணுவாங்க.—இந்த மந்திரி பண்ணுத கோட்டாளி.

**வீரன்.**—அம்மா! — அவ்வளவு பொல்லாதவரா இந்த மந்திரி.

## அத்தியாயம் 2

### நமது பிரயாணிகள்

### Our Travellers

நாம் முன் அத்தியாயத்தில் கூறிய கிழவியின் ஸம்பாஷணையைக் கவனித்த நமது கதாவீரன், ஸம்பாஷணை முடிந்ததும், கார்மேகத்தால் மறைக்கப்படும் இந்து பிம்பம்போல, சோகத்தால் இவன் மதி மயங்க ஆரம்பித்தது. தலை கனத்துச் சுழன்றது, கையில் பிடித்திருந்த கால்வராகன் நாணயத்தைக் கிழவியண்டை எறிந்துவிட்டு, இடது கையால் தன் கபாலங்களைப் பிடித்துக்கொண்டு திடீரென்று எழுந்து, அவ்வாலமரத்தின் மற்றோர் புறஞ்சென்று பெருமூச்சறிந்துகொண்டு பலவாறு சிந்திக்கலானான்.

" தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாமமில்லை நரகமுமில்லையே." *

" ஹா! ஜகதீசா! இன்ன செய்வதென்று ஒன்றுந் தோன்றவில்லையே! நான் இவ்வளவு காலமாய் அநேக இடங்களில் தேடித்திரிந்தும் என் கண்மணியைக் காணவில்லையே! கண்மணி! பானுமதி! நீ எங்கே இருக்கின்றாயோ? எந்தப் பாவி வசப்பட்டு எவ்வாறுதவிக்கின்றாயோ! அல்லது உயிருடன் தானிருக்கின்றாயோ? அந்தப்பாவி 'மகாவீரன்' உன்னை யேமாற்றியோ அல்லது பலாத்காரமாகவோ அபகரித்து வந்துவிட்டானே! உன் தந்தையிடம் என்ன சொல்லுவேன்? பானுமதியைக் காணவில்லையென்றால் உடனே உயிர்துறந்து விடுவாரே! நான் உன் தந்தையிடம் போய்ப் பயனென்ன? இவ்வரண்மனை-இந்தத் திருவூர் மடம் மாத்திரம் பார்த்துவிட்டு-இவ்விடத்திலாவது என்பானுமதியைக்கண்டாலாச்சுது—இல்லாவிடில் என் உயிரை இக்கட்கத்திக்கு (உடைவாளை யுருவி மார்புக்குநேரே பிடித்துக்கொண்டு) இரையாக்கிக் கொள்வேன். (ஆகாயத்தில் பறக்கும் கருடனைக்கண்டு கைகூப்பிக்கொண்டு) அந்தோ கருடதரிசனமாகிறது—மீனாம்பிகே! உன்னைத் தஞ்சமென்று வந்தோரைக் காப்பது உன்கடமையல்லவா?—இக்கிழவியின் ஸம்பாஷணையினின்றும், இம்மடத்தில் இருக்கும் மங்கை நமது பானுமதியாக இருக்கலாமென்று தோன்றுகிறது.

* இராமாயணம்.

இவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் குடிவெறியால் மதிமயங்கிக் கிடந்த வலபத்திரன்சற்று வெறி தெளிந்து திடுக்கிட்டெழுந்து "சீ. சனியன் பிடித்த தூக்கம்எப்படி அயர்த்துகிறது" என்று பிதற்றிக்கொண்டு "தன் கைவிரல்களால் கண்களைத் துடைத்துக்கொண்டும், கவந்து கிடந்த தன் குடுமியைச் சரிப்படுத்தி முடிந்துகொண்டும், மறுபடி தலைப்பாவை மாட்டிக்கொண்டு, தயிர்க்காரியண்டை சென்று ஒரு போகணி புளித்த தயிர் குடிக்கவே, குடிவெறி யனேகமாய் மாறிவிட்டது. கொஞ்சம் வெற்றிலை பாக்கும் அத்துடன் வெள்ளைப் புகையிலையையும் வாயிலடக்கிக்கொண்டு உற்சாகமாய் மந்தஹாஸம் செய்து கொண்டு நமது கதா வீரனருகே வந்து சேர்ந்தான்.

நமது கதாவீரன் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து என்ன! வலபத்திர நாயுடுகாரு!—தாங்கள் நாயக்கரவாள்—தா—னே—

வலபத்திரன்.—தன் பொடி மட்டையைச் சுண்டித் தன் இடது கைத்தலத்தில் ஓங்கி யடித்துக்கொண்டு, "ஆ—அப்படிப் போடடா மொக்கிழியப்பா! அடிச்சானே போனாலும் போகுது என்று—எனையா நான் நாயுடு என்று உமக்கு எப்படித்தெரிந்தது—ஆ ஞாபகமிருக்கட்டும்—இப்போ இந்த மதுரையில் யார் ராஜா தெரியுமா? (மீசையை முறுவலைத்துக்கொண்டு) நாயக்கர் வமிசம்—நம்மடவங்கள்—ஹூம் ரொம்பமரியாதையாய்ப் பேசணும் நம்மைக்கண்டால் — ஹூம் — தெரியுமா?

துதிரைவீரன்.—"இதேதடா! துவக்கும்பொழுதே குஸ்திக்கு நிற்கிறான். நம்மகாரியமென்ன! கஷ்டமென்ன! மனக்கவலையென்ன! இந்தக் குடிவெறியனைக்கட்டியெப்படி மாரடிப்பது ஆனாலும் காரியமாகும் வரை கழுதையின் காலையும் பிடிக்கவேண்டியதுதான். நாம்எடுத்தகாரியமோ பெரிது—இவனாலும் சில முடிய வேண்டியிருக்கின்றன—சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்—இதில் மான அவமானம் கவனித்தால் முடியுமா?"

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
ரெவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரார வமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

இவ்வாறு பலவாறு ஆலோசித்துவிட்டு வலபத்திரனை நோக்கி "நாயுடுகாரு, தாங்கள் ராஜவமிசத்தைச் சேர்ந்தவரென்று தங்கள் முகத்தில் விளங்கும் ராஜலக்ஷணங்களாலறிந்துகொண்டேன்."

வலபத்திரன்.—"ஆ! ஸபாஷ்! பேஷ்! நல்லபுத்திசாலி" (நமது வீரனை உற்சாகமாய் முதுகில் தட்டிக்கொடுத்து) என்ன விசேஷம்? சரி! நான்தான் ராஜபுருஷன். நீங்கள் யார் மந்திரி புருஷனோ?" என்று சொல்லிக்கொண்டு, தான் ஏதோ வேடிக்கையாய்ப் பேசிவிட்டதாய் மகிழ்ந்து இடியிடியென்று சிரித்தான்

துதிரை வீரன்.—இவ்வெறியனுடைய உற்சாகத்தைக் கண்டு தன் சோகத்தை மறந்து சிரித்துக் கொண்டு நாயுடுகாரு! என் பெயர் 'தர்மராஜன்.'

வலபத்திரன்.—ஆஹா! ரொம்பசந்தோஷம் (மீசையை முறுக்கிக்கொண்டு) சந்தோஷம்—என்ன காரணமாய் இவ்விடம் வந்தீரோ? நான் ராஜபுருஷன்—ஞாபகமிருக்கட்டும்—பொய் சொல்லாதேயும்.

தர்மராஜன்.—நாயுடுகாரு! ஏது என்னை மறந்துவிட்டீர்களே ராஜ உத்தியோகங் கிடைத்தாலும பழகின சினேகிதர்களை மறக்கலாமா?

வலபத்திரன்.—(தனக்குள்) ஏது ஆஸாமி வலுத்த ஆஸாமிபோல இருக்கிறானே! நல்லது இருக்கட்டும். 'ஸந்தோஷம், தர்மராஜ்! ஸந்தோஷம். இப்படித்தானிருக்கவேண்டும்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு அம்மரத்தைச் சுற்றி வருகையில் மறுபடி கள்ளுக்கடையண்டை வந்து சேர்ந்தார்கள். வலபத்திரன் ஒரு பணத்தையெடுத்து அலட்சியமாய்க் கள்ளுக்காரனிடம் எரிய அவன் அதைக் கண்களில் ஒத்திக்கொண்டு ஒரு போகணி அரக்குச் சாராயம் கொடுக்க அதை வலபத்திரன் குடித்துவிட்டு மறுபடி தர்மராஜனை நோக்கி "தர்மராஜ்! (ஏப்பம் விட்டுக்கொண்டு) தர்மராஜ் நான் யார் தெரியுமா? இந்த ராஜ்யத்தின் மந்திரியின் காரியதரிசி மஹாவீரனுடைய அசுவபாலன் உத்தியோகம் பெறப்போகிறேன் நம்முடைய தயவெல்லாம் உங்களுக்குத் தேவையாயிருக்கும்—பத்திரம்—மரியாதையாய்ப் பேசவேண்டும்—ஜாக்கிரதை—

தர்மராஜன்.—இவ்வெறியனையும் நல்வார்த்தை சொல்லி யிவனுடனும் சிறிதுகாலமாவது பழகவேண்டிய விதி நேர்ந்ததே யென்று மனம் நொந்து மறுபடி மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "நாயுடுகாரு! தங்கள் உத்தியோக மேன்மையே மேன்மை. யாருக்கு இந்த உத்தியோகம் கிடைக்கப் போகிறது.

வலபத்திரன்.—(மீசையை முறுக்கிக்கொண்டு) பேஷ்! தர்மராஜ்! பேஷ்! நீ தைரியசாலி நன்றாய்ப் பேசுகிறாய். 'தைரியம் புருஷ லக்ஷணம்' சரி! நீ போகலாம், நான் ஒருமுக்கிய ராஜகாரியமாய்ச் செல்லுகிறேன் காலதாமதமாகிறது.

தர்மராஜன்.—தாங்கள் எவ்விடம் செல்லுகிறீர்கள்

வலபத்திரன்.—தர்மராஜ்! அதேன் கேட்கிறாய்? ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பலவித அவசரமிருக்கலாம். கேவலம் நீங்கள் கேட்கலாமோ ராஜ ரகஸ்யத்தை.

தர்மராஜன்.—தாங்கள் சொல்லுவதும் மெய்தான் ஆயினும், ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டர்கள் பந்துக்கள் ராஜபுருஷர்களாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்ப தெதற்காக? இப்படிப்பட்ட சமயங்களில் உதவியிருக்கு மென்றுதானே?

வலபத்திரன்.—தர்ம! நீ பழய ஆஸாமியல்ல. ஏதோ கண்ணி போட்டிருக்காய்—ஆ! தெரிகிறது—தெரிந்தது—சோழியன் குடுமி சும்மா ஆடுமா?



தர்மராஜன்.—(தனக்குள்) "குற்றமுள்ள நெஞ்சம் குறு குறு என்கிறது பயலுக்கு. தன்னைப்போல் பிறரும் கெட்டவர்களாயிருப்பார்களென்று நினைக்கிறான்"—"நாயுடுகாரு! அந்தத் திருவூர் மடம் ரொம்ப நேர்த்தியாயிருப்பதாய்க் கேள்வி. நானும் இந்தத் தேசம் முழுமையும் காசிமுதல் கன்னியாகுமாரி வரை சுற்றி வந்தேன். 'டாஜ்மஹால்' முதலான அநேக அற்புத மாளிகைகளையும் பார்த்திருக்கிறேன். இப் புண்ணிய க்ஷேத்திரத்தையும் பார்த்துவிட்டு அங்குள்ள பண்டார சந்நிதிகளையும் தரிசனம் செய்து போகலாமென்று எண்ணுகிறேன். இந்த நாளில் சிபார்சு அல்லவா வேண்டியிருக்கிறது. தெய்வ கிருபையால் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள் கொஞ்சம் தயவு செய்ய வேண்டும்.

வலபத்திரன்.—(தனக்குள்) "பயல் நமக்கே காது குத்தப் பார்க்கிறான்—இருக்கட்டும்—அவனும் கொஞ்சம் அந்தக் குட்டியைப் பார்த்துச் சந்தோஷமனுபவிக்கட்டுமே. கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போகும்?"—"தர்மராஜ்! நான் போகிற காரியம்—அங்கே ஒரு குட்டி யிருக்கிறாளாம்—அதைக் கொஞ்சம்—ஜோராய் (கடைக்கண்ணைச் சிமிட்டிக்கொண்டு)—அப்படீ—பார்த்து விட்டு.

தர்மராஜன்.— குட்டியா! அவள் யார்? நீர் நல்ல ஆஸாமி ஐயா! அவள் எப்படி யிருப்பாள்.

வலபத்திரன்.—(பாடுகிறான்.)

அம்புலியைப்போல் முகத்தாள்
அன்ன நடைபோல் நடையாள்
மின்கொடியைப்போலிடையாள்—

பஸ்! பஸ்! ஜோர்! ஜோர்! ஸ்வாரஸ்யம் கெட்டுப்போம். எல்லாம் போய்ப்பார்த்துக் கொள்ளுவோம்.

அதிகமாய் வளர்ப்பதேன்! நமது பிரயாணிகள் இருவரும் தங்கள் குதிரைகளைத் தயார்செய்து அவைகளைத் தட்டிக்கொடுத்து, அவைகள் மீதேறி திருவூர் மடம் நோக்கிப் புறப்பட்டார்கள். வலபத்திரன் மறுபடி குடிவெறியால் பிதற்றுவதும் உத்ஸாகமாய் பாடுவதுமாய் ஆரம்பித்துவிட்டான்.

வலபத்திரன்.—(பாடுகிறான்).

"அடே! கும்பினியான்—
அடே கும்பினியான் சண்டையிலே
கோட்டை மெத்தப் பிடித்தோமடா
கும்பினியான் கொடுத்த கள்ளு
கொடங்கொடமாய்க் குடித்தோமடா
நன்னானே நன்னானே."

இப்படி ஒரு பாட்டுப்பாடினேன். மேஜர் தாம்ஸன் வந்து சந்தோஷப்பட்டு சுருட்டுக் குடிச்சுக் கிட்டே 'வல்பத்தர்! (தமிழ் நன்றாய்த் தெரியும் அவனுக்கு) சந்தோஷம். நான் உன்க்கு இனம்—இனம்—இனம் (தொரைக்குமேலே ஓடவில்லை தமிழ் ஹ! ஹ! ஹ!!) என்னவோ 10 மோஹராவாவது கொடுப்பான் என்று நினைத்தேன். ஒரு சிவப்புத்துணியிலே நக்ஷத்திரம் தைத்ததாம். அதைச் சட்டையில் ஒட்டிக்கச் சொன்னான். அதை அப்படியே கசக்கி யெறிந்துவிட்டு 'அடே கும் பினியான் கொடுத்த கள்ளு கண்களெல்லாம் சொக்கு தடா—என்று பாடினேன்—அந்தப் பயல் மகனுக்குக் கோபம்—மீசையைக் கடிக்கிறான். விரலைக்கடிக்கிறான். பூட்ஸ்காலால் தரையை உதைக்கிறான். பார்த்தேன். நமக்குச் சரிப்படாது என்று ஓட்டமாய் வந்துவிட்டேன்.

தர்மராஜன்.—ஆனால் ஏதோ உத்தியோகம்—தங்களுக்கு—என்று—

வலபத்திரன்.—இப்போதானே தெரியும். எனக்கு மஹாவீரனைத் தெரியும். அவன் குதிரைக்காரனாகத்தானிருந்தான். இப்போ காரியதரிசியாய் விட்டான். அவன் வேலை நமக்குத்தானே?

தர்மராஜன்.—ஆமாம்! தாங்கள் இப்போ போகிறீர்களே. முன்பின் அறியாத இடமாச்சே—ஒருவேளை.

வலபத்திரன்.—வீரனும் வெறியனும் இடம் காலம் பார்ப்பானோ. நாம் போகவேண்டியதுதான். யாராவது தடுத்தால் கையில்லையா? கத்தியில்லையா? ஒருகை பார்த்துக் கொள்ளுவோம்.

இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டே நமதுபிரயாணிகள் திருவூர் மடம் முன்வந்து சேர்ந்ததும் அம்மடத்து வேலைக்கார னொருவனிடம் குதிரைகளை ஒப்புவித்து விட்டு கால்நடையாய் மடத்துக்குள் பிரவேசித்தார்கள்

(தொடரும்)

ஆர். எஸ். நாராயணசாமி ஐய்யர். பி. ஏ. பி. எல்.,

ஸுகம் அடைய ஒருவன் நடந்துகொள்ள வேண்டிய விதம்.—இந்த விஷயத்தைப்பற்றி முன்காலத்தில் பிரஹ்லாதருக்கும், அஜகரர் என்ற ரிஷிக்கும் ஸம்வாதம் ஒன்று நடந்திருக்கிறது. அஜகரர் பிரஹ்லாதருக்குப் பின்வருமாறு பதில் கூறி யிருக்கிறார். 'உலகில் காலக்கிரமத்தில் எல்லாம் அழிய வேண்டியதுதான். நிலையுள்ளது ஒன்றும் இல்லை. உலக விஷயங்கள் ஒன்றும் நம்மைக் கேட்டாவது நமக்காகவாவது நடப்பனவாகக் காணப்படவில்லை. ஆதலால் தருமவிருத்தமின்றி வரும் ஸுகங்களை அங்கீகரித்தும், வாராதவைகளைப் பற்றிச் சிந்திக்காமலும், இருக்கிறேன். இதனால் துக்கம் என்னைப் பாதிப்பதே இல்லை. அதுவும் ஸுகம்போல நிலையில்லாததாகவே தோற்றுகிறது. இம்மாதிரி அபிமானம் நீங்கி மலைப்பாம்பின் விருத்தியை அனுஸரித்து யாதொருவிதத்திலும் சித்த சஞ்சலம் ஏற்படாது நான் நடப்பதால் எனக்கு எப்பொழுதும் ஸுகம்தான் இம்மாதிரி மனதின் நிலையை மாற்றிக்கொள்ளுவதே எப்பொழுதும் ஸுகம் பெறுவதற்குத் தகுந்தவழி.

பாரதவினாவிடை: சாந்திபர்வம்.

# நாகாநந்தம்

## NAGANANDA: A CLASSICAL DRAMA

### 2-வது அங்கம்—முதல் காட்சி

*களம்—மலையமலையில் கௌரி ஆசிரமம்*

(தாதி ஒருத்தி வரல்)

**தாதி.**—*'அடிதோழி மனோஹரிகே! இன்றைக்கு நெடுநேரமாயும் என்தமையன் மித்திராவஸு இன்னம் வரக்காணோம். உடனே போய் அவர் வந்தாரா என்று அறிந்துவா' என்று எங்கள் அரசகுமாரி மலையவதியால் ஏவப்பட்டிருக்கிறேன். அவள் ஆணையிட்டபடியே செய்வேன்*—(முன்வந்து நேபத்யத்தைப் பார்த்து) *யார் அது இவ்வழியில் அவ்வளவு பரபரப்போடு தடபுடலாக வருவது? ஓஹோ! சாதுரிகையா?*

(இரண்டாவது தாதி வரல்)

**முதலவள்.**—(நெருங்கி) *அடீ தோழீ! சாதுரிகே! என்னடீ இவ்வளவுஆர்ப்பாட்டமாகஎன்னையும்பாராது ஓடுகிறாய்?*

**இரண்டாவதவள்.**—*தோழீ மனோஹரிகே! என்னை இராஜகுமாரி மலையவதி "அடி! தோழி சாதுரிகே! இம்மலர்களைச் சேகரிப்பதால் என் உடல் ஆயாஸமடைந்திருக்கிறது. இந்தச் சரத்கால ஸூரியனுடைய வெப்பத்தால் மிகவும் பாதிக்கப்படுகிறேன். நீ உடனே போய் சந்தணப்பொதும்ப**ருள்ளே இருக்கும் சந்திரமணி சலவைக்கல் மேடை முழுதும் இளம் வாழை இலைகளால் நிழலடையும்படி அமைப்பாய்" என்று எனக்கு ஆணையிட்டாள். அந்த ஆணையை முழுதும் நடத்தி இருக்கிறேன். ஆகையால் நான் அரசியிடம் போய் இதை அறிவிப்பேன்.*

**முதலவள்.**—*அப்படியானால் உடனே போய் சொல்லும். அங்கு வந்து தன் உடம்பின் தாபத்தை யொழிக்கட்டும்.*

**இரண்டாவதவள்.**—*சிரித்து தனக்குள் அவளுடைய தாபம் இவ்வழியில் ஆறுவதன்று! இம்மனோஹரமாகிய சந்தண * லதாக்கிருஹத்தைக் கண்டதும் அவள் துன்பம் அதிகமாகும் என்று பயப்படுகிறேன்* (உரக்க) *ஆனால் போ. நான் போய் சலவைக்கல் மேடை தயாராய் இருக்கிறதென்று அரசிக்கு அறிவிக்கிறேன்.*

[இருவரும் போதல்]

### காட்சி—2

**அதேஇடம்.**—*சந்தணப்பொதும்பர்.*

**(சிந்தாக்கிராந்தையாய் மலையவதி ஒரு தாதியோடு வரல்.)**

**நாயகி.**—(நெடுமூச்சுவிட்டு–தனக்குள்) *ஹா! என் இருதயமே! லஜ்ஜையால் அப்பொழுதும் அவனை பார்க்கவிடாது இப்பொழுதும் என்னை விட்டு அவனிடமே ஓடிவிட்டாய்! ஹா! என்ன! உன் நலத்தையே கோறினாய்? (உரக்க) அடீ தோழீ இ சாதுரிகே! தேவி ஆலயத்திற்கு எனக்கு வழிகாட்டுவாய்?*

**தோழி.**—*தாங்கள் சந்தணத் தோப்பிற்கன்றா புறப்பட்டது?*

**நாயகி.**—(வெட்கத்தோடு) *ஹா! நீ நல்ல ஸமயத்தில் நினைப்பூட்டினாய். வா. அங்கேயே போவோம்.*

**தோழி.**—*அம்மணீ! வாரும்.*(சந்தணத்தோப்பின் பக்கம் போகிறாள்.)

**நாயகி.**—(வேறு பக்கம் போதல்.)

**தோழி.**—(பின் பக்கம் பார்த்து—விஸனத்துடன்தனக்குள்) *அஹோ! என்ன மெய்ம்மறந்து இருக்கிறாள்! தேவி கோவில்பக்கம் அல்லவா போய்விட்டாள்— (உரக்க) அரசீ! இந்த வழியில் அல்லவா சந்தணத் தோப்பிருக்கிறது. தயவுசெய்து இந்தவழி வாரும்.*

**நாயகி.**—(வெறும் சிரிப்போடு அவ்வாறே செய்கிறாள்)

**தோழி.**—இதோ பாரும், *சந்தணத்தோப்பு இது தான். இதனுள் தாங்கள் தயவுசெய்து சலவைமேடைமேல் சற்று இருந்து விடாய் ஆற்றும்.*

**நாயகி.**—(நெட்டுயிர்த்து—தனக்குள்) *ஹே! புஷ்பபாணா! அழகில் உன்னிலும் சிறந்த அவனிடம் ஒன்று செய்யமாட்டாய். ஒருத்தி—எளியேன்—குற்றம் ஒன்றும் செய்யாத என்னை—கேவலம் ஓர் பெண்ணை வாட்டுவாய்? உனக்கு வெட்கமென்பதில்லையா?* (தன்னைப் பார்த்து—ஆசைநோய் காட்டிக்கொண்டு உரக்க) *ஸூரியனது கிரணங்களை உள்விடாமல் நெருங்கி அடர்ந்த தருக்கள் நிறைந்த இந்த சந்தணத்தோப்பில் வந்தும் என்தாபம் ஏன் குறையவில்லை?*

**தோழி.**—(சிரித்துக்கொண்டு) *இந்தத் தாபத்தின் காரணம் எனக்குத் தெரியும். ஏன் அம்மணீ! தாங்கள் தயவுசெய்து உண்மை ஒளிக்காது என்னிடம் ஏன் சொல்லக்கூடாது?*

**நாயகி.**—(தனக்குள்) *என் ரகசியத்தை இவள் அறிந்து விட்டாற்போல இருக்கிறது. நான் கேட்பேன்*—(உரக்க) *தோழி! நான் என்ன உன்னிடம் சொல்லாது ஒளித்தேனடி? அதன் காரணம் யாது சொல்லு பார்ப்போம்.*

**தோழி.**—*அதோ பாரும்! உமது மனதிற் பதிந்தவரன்!*

**நாயகி.**—(குதூஹலத்தோடு எழுந்து இரண்டு மூன்று அடி முன்வைத்து) *எதோ! எதோ! அவர் எங்கே இருக்கிறார்?*

**தோழி.**—(ஸந்தோஷத்தோடெழுந்து) *அரசீஇ! யார் அவர்?*

**நாயகி.**—(லஜ்ஜையால் உட்கார்ந்து, குனிந்த தலையோடு விளங்குகிறாள்)

**தோழி.**—*அரசீஇ! இதுதான் நான் தங்களுக்குச் சொல்லவேண்டுமென்று இருப்பது! தங்கள் உள்ளத்தைக் கவர்ந்த வரனைத்தான் அன்று கனவிலும் தேவி உங்களுக்குக் கொடுத்ததும். சற்று நேரத்திற்கெல்லாம் புஷ்பபாணத்தை எவிற்கும் மன்மதன் தாமே என்னும்படி அவரையே நேரில் தாங்கள் பார்த்தீர்கள். அவர்தான் உமது தாபத்திற்கு மூலகாரணம். அக்காரணத்தால் தான் இந்தச் சந்தணவனமும் சுபாவத்தில் குளிர்ச்சி யுடையதானாலும் உமது தாபத்தை அடக்கவில்லை: குறைக்கவும் இல்லை:*

**நாயகி.**—(சாதுரிகையின் உச்சிமேல் கைவைத்து) *தோழீ! வாஸ்தவமாக நீ 'சாதுரிகை' தான்—ஸாமர்த்தியசாலி—கெட்டிக்காரி. இன்னமும் உன்னிடம் ஏன் ஒளிக்கவேண்டும். நான் சொல்லுகிறேன்.*

**தோழி.**—*தாங்கள் எல்லாம் சொல்லி ஆய்விட்டது. இன்னம் அதிகம் என்ன சொல்லவேண்டும்? ஆசைப் பெருக்கால் பிராந்திப்படாதியும்—கஷ்டப்படாதியும். நான் வாஸ்தவமாகவே 'சாதுரிகை.' அவரும் அரசியைக் காணாது ஒரு க்ஷணநேரம் கடப்பது யுகமாக எண்ணிக் கவலைப்பட்டிருப்பார். பிறரோடு, அரசியைப் பிரிந்து இருப்பதால், ஸுகமாக இருக்கமுடியாது. இதையும் நான் கண்டிருக்கிறேன்!*

**நாயகி.**—(கண்ணீர்விட்டு) *எனடி தோழி! அந்த அதிருஷ்டம் எனக்கெப்போடிவரும்?*

**தோழி.**—*அரசி! தாங்கள் இப்படிப் பேசாதியும். மார்பில் விளங்கும் திருவைப் பிரிந்த விஷ்ணு ஸுகமாக இருக்கமுடியுமா?*

**நாயகி.**—*அன்பன் இனிமையன்றி வேறென்ன பேசமுடியும்! தோழி! நான் முன்னிலும் தாபிக்கப்படுகிறேன். ஏனென்றால்—அப்பெரியோன் நான் வாயார நல்வரவு கூறாததை மரியாதைக்குறைவென்று எண்ணினாலும் எண்ணலாம்.*—(அழுகிறாள்.)

**தோழி.**—*அழாதீரும் அம்மணீ!—எப்படி அழாதிருக்கத்தான் முடியும்; உமது மனத்தின் தாபம் மிகவும் தீவிரமாகப்பாதிக்கிறது! நான் இப்பொழுதென்ன செய்யட்டும்? நான் அவள் மார்பகத்தில் சந்தணக்குழம்பைப்பூசுவேன்* (எழுந்து சந்தண மூலைகளை கசக்கிச் சந்தணச்சாற்றை மார்பில் பூசுகிறாள்) *நான் சொல்றேனே! அழாதீரும். நான் பூசிய சாறு, தமது கண்களிலிருந்து இடைவிடாது விழும் நீர்த்துளிகளின் வெப்பத்தால், தமது தாபத்தைப் போக்காது மயக்கிவிடும். அழாதீயும்* (தாமரை இலையால் விசுறுகிறாள்.)

**நாயகி.**—(கையைத் தடுத்து) *தோழீஇ! விசிறாதே! இத்தாமரை இலையின் வாடை உஷ்ணம் வீசுகிறது.*

**தோழி.**—*அத்தைப்பழியாதீயும். தமது நெட்டுயிர்ப்பின் வாடையால், தாமரை வாடையும் உஷ்ணம் வீசிற்று. குளிர்ந்த சந்தணச் சாற்றின் சேர்க்கையால் குளிர்ச்சி மிகுந்ததாமரையும் உஷ்ணமே வீசுகிறது.*

**நாயகி.**—(கண்ணீர்சிந்தி) *தோழீ! இந்தத் தாபத்தைத் தணிக்கவும் வழி உண்டா?*

**தோழி.**—*உண்டு, அவரே நேரில் வந்தால்.*

(நாயகன் விதூஷகனோடு வரல்)

(தொடரும்)

* பொதும்பர்—கொடியாலாகியவீடு—லதாக்கிருஹம்



# மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

### *Essay writing*

### III. *விளக்க வியாஸங்கள்*

### EXPOSITORY ESSAYS

### (3) புதிய விஷயங்கள்—கம்பியில்லாத் தந்தி

### New discoveries & Inventions—Wireless Telegraphy

**குறிப்பு.**—*ஆதிகாலத்திய நிலை—விஷய விளக்கம்—உபயோகங்கள்—எதிர்காலச் சிறப்பு.*

*தந்தி ஏற்பட்டுக் கொஞ்சகாலம் வரையில் ஊர்விட்டு ஊர் ஸங்கதிகள் தெரிவிப்பதில் சிறந்த வழி ஏற்பட்டு விட்டது என்றுஜனங்கள் களித்திருந்தனர். ஒருஊரில் இருக்கும் குமிழியை அமுக்குவதாம் அது எவ்வளவு தூரத்திலிருக்கும் ஊரானாலும் ஸரி அங்குச் சற்றேறக் குறைய அதே ஸமயத்தில் தெரிந்துவிடுவதாம்! இதைவிட ஸமாசாரங்கள் அனுப்ப ஸஹாயமான கருவி எது இருக்கும் என்ற வியப்பு எல்லோரையும் கவர்ந்திருந்தது. இவ்வாறு நடந்துவருகையில் மின்சார விஷயமாகப்பாடுபட்டு வந்த சக்தி தத்வ சாஸ்திரிகளில்ஹேர்ட்ஸ் என்ற நிபுணர் மின்சாரம் ஓரிடத்தில்வெளியேறினால் அங்கு அது காந்த மின்சார அலைகளை உண்டாக்கி ஸுமார் கண்ணிமைப்பொழுதில் 186000-மைல் தூரம் வீதம் அவைகளை ஊடுருவிச் செல்லும்படி செய்கின்றது என்ற அத்புத உண்மையைக்கண்டுபிடித்தார். இக் காந்தமின்சார அலைகள் மூலமாகமாத்திரமே அடையாளங்கள் வெகு தூரங்களில் உண்டாகும்படி செய்யலாம் என்று ஸர் வில்லியம் பிரீஸ், ஆலிவர்லாட்ஜ் என்பவர்கள் தெளிவுறக்காட்டினர். பின் வந்தவர்கள் இந்த விஷயங்களைவிடாது எடுத்துக்கொண்டு முயற்சித்தனர். மார்கோணி என்பவர் லண்டன் நகரத்தில் கொஞ்ச தூரம்வரை வெறும் மின்சார வெளிப்பாட்டாலேயே கம்பிகள் ஸஹாயமின்றி ஸமாசாரம் தெரிவித்தனர். பின்னர் வர்வர அதிகதூரங்களுக்குஇம்மாதிரி அனுப்புவித்துப் பழகி இப்பொழுது ஸுமார் 3000 மைல் தூரம்வரை இம்மாதிரி கம்பிகளின்றி ஸமாசாரங்கள் தெரிவிக்க இடம் உண்டாகிவிட்டது. இப்பொழுது நமது சக்கிரவர்த்தியாகவிருந்து இங்கு மகுடாபிஷேகம் செய்து கொள்ள வரும் ஐந்தாவது ஜார்ஜ் என்பவர் இளவரசாக 1906-ம் வருஷம் இங்கு வந்தகாலத்தில் பட்டணம் துறைமுகத்தில் இவர் கப்பல் வந்ததும் கவர்னர் வீட்டிலிருந்து 'கப்பலைவிட்டு மாலை இறங்கலாம், தயவுசெய்யவேண்டும்' என்ற ஸமாசாரம் இவருக்குக் கம்பியில்லாத்தந்தியால் தெரிவிக்கப்பட்டது.*

இனி கம்பியில்லாது ஸமாசாரம் தெரிவிக்கும் விதத்தை ஒருவாறு எடுத்து விளக்குவோம். ஸமாசாரம் அனுப்பும் இடத்திலும், பெற்றுக்கொள்ளுமிடத்திலும் மின்சார யந்திரங்களோடு ஸம்பந்தப்பட்ட ஒவ்வொரு மேல்கீழாக நிற்கும் நீண்ட கம்பி காணப்படும். இவைகளோடு ஸம்பந்தப்பட்ட மின்சார மாறுபாடுகளைக் கண்டு பிடிக்கும் யந்தரம் ஒன்று இருக்கும். ஸமாசாரம் அனுப்பும் இடத்திலிருக்கும் கம்பியில் அதிக சக்தியுடைய மின்சாரத்தை வெளிவிட்டால் அது சுற்றிலும் இருக்கும் வெளியில் காந்த மின்சார அலைகளை உண்டாக்கி விடுகின்றது. இது கணத்திற்கு 186000 மைல் வீதம் பரவி, ஸமாசாரம் சேரவேண்டிய இடத்திலுள்ள கம்பியைத்தாக்கி அதில் அதற்கேற்ற நடுக்கத்தை உண்டாக்க அதன் சக்தியை அடியிலிருக்கும் கண்டு பிடிக்கும் யந்தரம் குறித்து விடும். இம்மாதிரி விதம் விதமான சக்தியை உடைய மின்சாரத்தை விட்டு விட்டு வெளிப்படுத்துவதால் ஒருவித தந்தி நெடுங்கணக்கு உண்டாக்கிக்கொண்டு வேண்டிய விஷயங்களை எளிதில் தெரிவிக்கலாம். இம்மாதிரி செய்வதால் ஒழுங்காகத் தந்தி மரங்கள் நட்டு கம்பி போடவேண்டிய வேலை லாபம்தானே! மேலும் தந்தியை விட இது அதிசீக்கிரத்தில் பாய்ந்தோடும் திறனுடையது.

கம்பியில்லாத் தந்தியால் ஏற்படும் உபயோகங்கள் அநேகம். சண்டை முதலியன செய்ய வேண்டிய காலத்தில் தந்திக்கம்பி நட்டு ஸமாசாரம் தெரிவிக்க முடியுமா? அப்பொழுது முற்கூறிய யந்திர மூலமாக எளிதில் சண்டை நிலைகளைத் தெரிவித்து வரலாம். கடலில் போகும் கப்பல்களுக்கு அபாயம் வந்து விட்டால் கப்பல் தலைவன் தப்புவிக்கக்கூடியவர்களை தப்புவித்துக் கொள்ள ஏற்பாடு செய்து விட்டு ஒரு சீசாவில் தன் கப்பலுக்கு இன்ன ஆபத்து இன்ன விடத்தில் வந்தது என்று எழுதி அடக்கம் செய்து கடலில் போட்டுவிட்டு இறக்க வேண்டும் என்பது ஒழுங்கு. இக்கம்பி இல்லாத் தந்தி வந்த பின்பு அபாயத்துள் அகப்படும் கப்பல்கள் கதி முன்போலத் துக்ககரமானதல்ல. அபாயம் வரும் என்ற காலத்திலேயே இந்த ஸமாசாரத்தை அருகாமையிலுள்ள ஊருக்குத் தெரிவித்து வேண்டிய முன் ஜாக்கிரதையுடனிருக்கலாம். அப்படியின்றி இறக்கவேண்டி வரினும் ஸங்கதியை உடனே ஊருக்கும் தெரிவிக்கலாம். மேலும் வாயுவிலிருக்கும் மின்சார நிலைகள் இந்த யந்திரத்தாலும் வெளியாகும். இடி மழை வருவதற்கு முன்னரே இந்த யந்திரம் ஒருவாறு அதைக் குறிப்பித்து விடும். எல்லாவிதத்திலும் இது அதிக ஸாதகமாயினும், ஒரு குறை மாத்திரம் இதற்கு உண்டு. அனுப்பும் ஸங்கதிகள் ரஹஸ்யமாக இருக்க முடியாது. கம்பி இல்லாது செய்யும் வேலையாதலின் யந்திரம் இருக்கும் எல்லாவிடங்களுக்கும் அனுப்பும் ஸங்கதி வெளியாகி விடும். ஆதலால் ராஜரீக ரஹஸ்யங்கள் விஷயத்தில் இதை உபயோகிக்க இயலாது.

இதன் விஷயங்கள் அதிகமாகத் தெரியவர, சொல்பபணச் செலவில் வெகுதூரம் வரையில் சமாசாரம் அனுப்பக்கூடிய சக்தி நமக்கு வந்துவிடும். இதனால் உலகிலிருக்கும் வியாபாரம், பொது ஜன நன்மை எல்லாம் வரவர விருத்தியானாலும் ஆகவிடமுண்டு. கொஞ்ச காலத்திற்கு முன்புதான் ஒரு புதிய கண்டு பிடிக்கும் யந்திரம் செய்திருக்கிறார்களாம். இதில் மின்சார அலைகள் வந்து தாக்குங்கால் உண்டாகும் நடுக்கத்தால் ஒருவித சப்தம் உண்டாகின்றதாம். இதை சரியானபடி செய்தால்பேசும் குரல்கூட கேட்கும்படி செய்யலாமாம். ஆகவே ஊர்களுக்குள்ளே தூரமான விடங்களுக்கு ஏற்பட்டுள்ள பேசும் தந்திகளும் இனி கம்பிகள் ஸஹாயமின்றித் தொழிற்படலாகும். மனிதன் மனதை அடக்கி எந்தவழியில் விட்டாலும் அங்கு ஆழ்ந்து சென்று நின்று அத்புதத்தொழில்களைச் செய்யும் ஆற்றலிதற்கிருப்பதால், இவ்விஷயங்களில் என்ன அத்புதங்கள் இனி ஏற்படுமோ இப்பொழுது ஒன்றும் உறுதியாகக் கூறமுடியாது.

## இதைப்போல விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. ரேடியம் என்ற அத்புத வஸ்து
2. ஆகாய கமனம்
3. விசித்திர படம் காட்டும் ஒளி
4. நக்ஷத்திர வஸ்துக்கள் அறியும் விதம்
5. கண்
6. ஆகாயத்திலுள்ள மின்சாரம்
7. பூமி சுற்றும் விதம்
8. பொது ஆகருஷண சக்தி
9. கிரஹகதி
10. சப்தாகர்ஷண யந்திரம்

## பொதுக்குறிப்புகள்

1. ஆதிகாலநிலை
2. விஷயவிளக்கம்
3. உபயோகங்கள்
4. எதிர்காலச்சிறப்பு.

# மொழிபெயர்ப்பு விளக்கம்

# TRANSLATION MODELS

### (7) Why does a cloud fall as rain instead of in a lump?

It is quite lately that we have been able to learn the very remarkable answer to this question. We might suppose that, when the air cooled enough, the water-vapour, or some of the water-vapour, in it would be bound to turn liquid in a mass and then fall *plump*. But water cannot behave in this way, because there are certain conditions which must always be present when it turns liquid.

It is necessary that there shall be some solid separate point or particle of something around



which the water-vapour can condense when it turns liquid. It seems to matter very little what the thing is, but there must be something, and the consequence is that rain falls in drops. It is the discovery of the cause of the formation of rain drops that enables us to answer this question. The particles that perform this service for the drops may be small or great. Oftenest perhaps they are visible specks of dust or dirt and so on.

We have also discovered that molecules that make up the gases of the air are liable to be broken up in a peculiar way by the action of electricity, and rain drops can form upon these broken-up molecules. We shall not learn much more about the weather until we know more of the electrical happenings in the air.

### மேகம் மொத்தமாக விழவேண்டியிருக்க, மழையாகப் பொழிவானேன்?

இக்கேள்விக்கு மிகத்தகுதியான மறுமொழி இன்னது என்பது கொஞ்சநாள் முன்பாகத்தான் எங்களுக்குத் தெரியவந்தது. ஸாதாரண வாயு தகுந்த அளவு குளிர்ந்து விட்டால் அதிலிருக்கும் நீராவி அல்லது அதன் சிலபாகம் உடனே ஒருமித்துத் திரவமாகி மொத்தமாகவிழுந்து விடவேண்டும் என்று நாம் மதித்திருக்கலாம். அவ்வாறல்ல; ஆவி திரவமாக மாறுங்கால் சிற்சில ஒழுங்குகள் எப்பொழுதும் காணப்படவேண்டும்; ஆதலால் தண்ணீர் இவ்வாறு மாறாது.

ஆவி திரவமாக மாறுங்கால், அது குளிர்ந்து படிவதற்குத் தனிதிட அணுக்களாவது, எந்த வஸ்துவின் சிறு பாகமாவது இருக்கவேண்டுவது இன்றியமையாதது. அந்த வஸ்து யாதாயினும் ஒரு பொருட்டல்ல என்று தோற்றுகிறது; ஆனால் அம்மாதிரி வஸ்து ஒன்று இருப்பதனால்தான் மழை துளிகளாக இறங்குகின்றது. மழைத்துளிகள் உண்டாவதற்குக் காரணம் இன்னது என்பதைக் கண்டு பிடித்தபின்புதான் இக் கேள்விக்குப் பதிலுரைக்கும் திறன் எமக்கு உண்டாயிற்று. துளிகள் உண்டாவதற்கு இம்மாதிரி உதவி புரியும், சிறு பாகங்கள், மிகச் சிறியவையாகவாவது, பெரியவையாகவாவது இருக்கலாம். ஸாதாரணமாக அவைகள் கண்ணுக்குப் புலப்படும் தூசிகள் அழுக்கு முதலியவைகளாக ஒருவேளை இருக்கலாம்.

ஸாதாரண வாயுவில் உள்ள வாயுக்களின் அணுக்கள் மின்சாரத்தின் தொழிலால் புதுமையாகச் சிதறிப் போகும் என்பதையும் நாம் கண்டுபிடித்து விட்டோம். இம்மாதிரிச் சிதறிய அணுக்கள் மேலும் மழைத்துளிகள் படியலாம். ஸாதாரண வாயுவில் ஏற்படும் மின்சாரத் தொழில்களைப்பற்றி மேன்மேலும் உணர்ந்தால் அல்லது வாயுவின் நிலையைப்பற்றி இதற்குமேல் நமக்குத் தெரிந்துகொள்ள முடியாது.

## சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள்

## CHILDREN & LADIES' PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

#### அத்தியாயம் 4

#### மரணம்

இறப்புறும் என்பது திண்ணம்—நாம்
இதயம் கலங்கியென் இங்கேயே நண்ணம்
சிறப்புறு தேவின் செவ்வண்ணம்—சேர்
திருவடி சிந்தைவைத்திறப்பேநல் லெண்ணம்

இப்பொழுது வேறு ஒரு இடம் வந்துவிட்டோம் மாலை 7-மணி. தன் காந்தியைக் கண்டே ஆனந்த பரவசமாகிச் சந்திரன் தனது வெள்ளிய கிரணங்களை வாரி இறைத்தான். இந்த ஸூரிய சந்திர நக்ஷத்திரங்களை என்னென்று கூறுவோம். இவைகளெல்லாம் கடவுளது இரக்கமும், பற்றுமில்லா மக்கண்கள் என்னலாம். இவைகள் கடவுளுக்கே ஸமமெனவும் கூறலாம். இவைகள் மனிதனது தாழ்மையை நன்றாக அவனுக்கே விளக்கிக்காட்டி, பயம், கைகூடாக் கோறிக்கைகள், ஆத்துமகண்டனம் இவைகள் மூலமாக அவனை ஆராதனை, பிரார்த்தனை ஸ்தோத்திரம் முதலியவைகளைச் செய்யும்படி தூண்டுகின்றன. முன்னது எப்படியாயினும் ஆகட்டும், பின்னவை விஷயமாக எல்லோருக்கும் அனுபவம் உண்டு. கடவுளை நோக்கிச் செய்யும் ஸ்தோத்திரங்கள் வீணாகவில்லை; மனம்உடைந்து வருந்துபவர் துக்கம் ஒருவாறு அந்த அத்புதவித்தால் நீங்குகின்றது. இது நிற்க; சந்திரன் தன் அழகைக்கண்டும்கிழும் ஓர் ஆடம்பரமான பெண்போன்றிருந்தான். அவள் எவ்வாறு ஆடம்பர தடபடலில் தனது ஓர்ப் படி குழந்தையின் கஷ்டத்தைக் கவனியாதிருப்பாளோ அப் படி இவனுமிருந்தான். கீழே மாடியின்மேல் திறந்தவெளியில் நன்றாக நிலாக் காய்ந்துகொண்டிருந்தவிடத்தில் ஒரு பளபளப்பான கட்டில் போட்டிருந்தது. அதன்மேல் இரண்டு மூன்று மெத்தைகளும் அநேக மிருதுவான தலையணைகளும் போடப்பட்டிருந்தன. இவ்வளவு நன்றாக இவைகள் அமைக்கப்பட்டிருந்தும் அதில் புரண்டுகொண்டு வருந்திய ஓர் யௌவன புருஷனுக்கு இவைகளால் ஒருவித ஸுகமும் ஏற்படவில்லை. அருகே ஓர் அழகிய யௌவனப் பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் அத்புத புத்திசாதுர்யம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவள் கண்களில் உண்மையான துக்கத்தால் ஏற்பட்ட கண்ணீர் நிறம்பியிருந்தன. படுத்திருந்தவனது சோர்ந்த அவயவங்களை அவள் மெதுவாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணன்.—(படுத்திருந்த புருஷன் பெயர்) மஹாத்துமாவான உனது தகப்பனார் எப்பொழுது வந்து எனக்கு இத்தருணத்திற்குத் தக்க உதவி புரிவரோ அறியேன்?

லக்ஷ்மி—பிராணநாதா இன்னும் நாழிகையாகி விடவில்லை இன்னும் ஒருமணி நேரத்திற்குள் வந்து விடுவார். துக்ககரமான தந்தியைக்கண்டதும் அரைக்கணமேனும் என் தகப்பனார் தாமதிக்கமாட்டார்.

என்று கூறி கணவன் முகத்தைப் பார்த்தாள். அப்பொழுது அவன் முகத்தில் காணப்பட்ட வெளுப்பைக்கண்டு உள்ளம் நடுங்கினாள். பாபம்! என்ன செய்வாள்!

கிருஷ்ணன்.—என் பிராணன் தத்தளிக்கிறது! மனம் மிகச் சஞ்சலப்படுகிறது. என் கண்மணீ! என் அங்கங்கள் ஓய்கின்றன. நான் இறக்கும் முன் உன் தகப்பனார் தெளிந்த முகத்தை ஒரு தரமாவது காண்பேனோ மாட்டேனோ தெரியவில்லையே! என்ன செய்வேன்!

லக்ஷ்மி தன் கணவன் முகத்தை ஒருதரம் கண்ணெடுத்துப் பார்த்தாள்! ஐயோ பாவம்! தன் கண்ணிற் கருமணியாய் விளங்கிய தன் நாதன் முகத்தில் பிரேதக்களை வந்துகொண்டிருக்கக் கண்டாள்! தேவாதிதேவனை விடாது கட்டிக்கொண்டிருந்தபொழுதே யமனைக் கண்டதும் மார்க்கண்டேயன் ஒளியிழந்து என்ன பாடுபட்டான்! ஒரு பக்தனையே மரணம் இப்பாடுபடுத்தி விட்டதே! அவன் மேலிடப்பட்ட விபூதி இருந்து என்ன, ஸர்வசத்திமானைச் சுற்றிப்போட்ட கையிருந்தென்ன, பூஜையில் குவித்திருந்த புஷ்பங்களிலிருந்தும் என்ன! யமனது காலபாசம் பட்ட மாத்திரத்தில் அவன் கதி இவ்வாறாயிற்று என்று அவன் கண்கள் நன்றாக விளக்கவில்லையா? காலையில் ஒளிமழுங்கும் சந்திரன் காந்தியைப்போன்ற நிலை தன் கணவன் முகத்திலிருந்ததைக் கண்டாள் லக்ஷ்மி! நடுநடுங்கிப் போனாள்! கண்களில் முத்து முத்தாகக் கிளம்பி எழுந்த கண்ணீரை, அடக்கிக் கூறலுற்றாள்.

லக்ஷ்மி:—‘நாம் இருவரும் சேர்ந்து மேன்மை அடையவேண்டுமென்றே கடவுள் நம்மைச் சேர்த்து வைத்தார். நம்மிருவருக்கும் இருந்த காதலுக்கு உவமை வேறு ஏதாவது உண்டோ! இப்படிக் கடவுள் எண்ணம் பூர்த்தியானது கண்டு அவர் நம்மை இப்பொழுது கைவிடமாட்டார் என்று தோற்றுகின்றது. (வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) என்ன நடந்தாலும் நடக்கட்டும்! என்னை நானிருக்கும் பரிசுத்த நிலைக்குக் கொண்டுவந்த உங்கள் வரம்பிலாக்காதலை இடைவிடாது எண்ணிப் பரவசமாவதைவிட எனக்குச் சிறந்ததோர் தவமும் இல்லை. பிராணநாதா, உமது இடையறாக்காதலே, எனக்கு ஸம்பத்து, ஆனந்தம், உயிர், ஞானம், மதம், வேதங்கள் ஆகிய எல்லா அரிய விஷயங்களாகவும் இருந்தது. இந்தக் குளிர்ச்சியான சந்திரிகையில், பரப்ரஹ்மம், ஆத்ம ஸம்பந்தமான அரிய விஷயங்கள், முதலிய அத்புத ஸங்கதிகளை எடுத்துரைத்து நீங்கள் என்னுடன் ஆனந்தித்த காலங்கள் எவ்வாறு என் நினைவை விட்டகலும்? என் தகப்பனார் சிறு வயதில் என்னைப் பழக்கிய வழியில் இவையல்லவோ என்னை நிலைபெறச் செய்தன. அக்காலங்களில் எந்தப் பரப்பிரஹ்மத்தைப்பற்றி தங்கதடையின்றி மடைதிறந்தாற்போல், ஆனந்தப் பரவசமாகி எனக்கு எடுத்துரைத்து என்னையும் நிஜபக்தி செய்யும்படி தூண்டினீர்களோ, அந்தப் பரம்பொருளை இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன், ராமன், நடராஜா, விக்னேசுவரர் ஆகிய எந்த மூர்த்தமாகவாவது எண்ணி ஈடுபடுங்கள். இத்தருணத்திற்கு இதைவிடச் சிறந்ததொன்றுமில்லை!

கிருஷ்ணன்.—என் கண்மணீ! நீ சொல்வது நியாயம்தான். ஆயினும் இது செய்வதற்கு முன்பு, உன்னுடன் கணவனைப்போலக் கலந்து ஸல்லாபாதிகள் செய்து ஆனந்திக்க வேண்டுமென்று எனக்கு அடங்கா ஆவல் உண்டாகிறதே! ரோஜாபுஷ்பம்போல் உனது கன்னங்கள் தாமரைபோன்ற உனது கண்கள் முதலியவைகளை முன்போல் அநுபவிக்க எண்ணுகிறேன்.

லக்ஷ்மி.—நாதா! நாதா! இதைவிட வேறு எனக்கு என்ன ஸந்தோஷம் இருக்கிறது! நீங்கள் கட்டளையிட்டபடி செய்துவிடுவேன். ஆயினும், நாதா! நீங்கள் இந்த ஸமயத்தில் மனதை அற்பமான சிற்றின்பங்களில் அலையவிடலாகாது. என்கன்னங்கள் ரோஜாக்களும், என்கண்கள் தாமரைகளுமாக விருந்தால், எனக்குவன் அவைகள் முன்போல ஆனந்தம் கொடுப்பதில்லை, நாதா! நான் தாமரைகளை எவ்வளவோ அனுபவித்தாய் விட்டது; ரோஜாக்கள் எனக்குத் தேன்போன்ற ஆனந்த மீந்தன. ஆயினும், ஒருவித ஸகாயமுமின்றித் தவிக்கும் உம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற இக்கண்களையும், நீங்கள் பட்டினியாக வருந்துங்கால் அன்னம் அரைத்து வரும், இந்தக் கன்னங்களையும், பிடுங்கி எறிந்துவிடவேண்டாமா, நாதா? இப்பொழுது இந்தக் கண்களிலும் கன்னங்களிலும் என்ன இருக்கிறது? கடலினும் கரியதாயும் அகன்றதாயும் உள்ள இந்த ஆகாயத்தைப் பாருங்கள்! நாம் பக்தி செய்யப் பழகிய மஹாதேவரைப்போல எவ்வளவு சாந்தமாக இருக்கிறது! மிக ரஸமாயும் அமிருதமயமாயும் வரம்பில் அன்புமயமாயும் உள்ள வெள்ளிய கிரணங்களை வாரி வீசும் சந்திரனைப் பாருங்களேன்! இவைகளை எல்லாம் ஸ்ருஷ்டித்த ஸர்வேசுவரனை மறவாமலிருங்கள். ஆஹா! நமது அல்ப துக்கங்களையும் கவலைகளையும் கவனியாமல் என்ன சாந்தமாக நிற்கின்றது சந்திரன்!

லக்ஷ்மி வாக்கின் தாட்டி அர்த்த புஷ்டி, அவள் குரலின் தழதழப்பு, மனங்கொள்ளாது மண்டி எழும் பக்தி, மொழிகளுக்கு ஏற்ற அபிநயங்கள், அவைகளுள் விளங்கிய கற்பனைச் சிறப்பு ஆகிய இவைகள் ஒருங்குகூடி கிருஷ்ணன் மனதில் பொங்கி எழுந்த சிற்றின்ப ஆவலை சின்னாபின்னமாகச் சிதற அடித்தன. உண்டோ, இல்லையோ என்று, தத்தளித்துக்கொண்டிருக்கும் இந்த அந்திய காலத்தில் தனக்குண்டான மூடத்தனத்தை எண்ணிச் சற்று நேரம் அவன் துக்கித்தான். பின்னர் தன் காதலியை நோக்கிக் கூறுவான்.



கிருஷ்ணன்.—‘என் கண்மணியே! உன் தகப்பனாருக்கு ஏற்ற பெண் நீதான். இன்றைக்கு நான் இறந்துவிட்டபோதிலும் ஓர் ஆசை மாத்திரம் என்னை விட்டகலாது. அடுத்த ஜன்மத்தில் உன் கணவனாகவாவது உன் பெண்சாதியாகவாவது நான் பிறந்துவிடவேண்டும் என்பதே என் கோரிக்கை. நாமிருவருமாகச் சேர்ந்து கிருஷ்ணன்போல் விளங்கும் ஆகாயத்தை நோக்கி, பேதாபேதமின்றி ஒன்று பட்டு மெய்மறந்து அதிலடங்கிய அன்பு, அத்புதம், அனுபவச்சிறப்பு ஆகிய இவைகளை வயிறாரப்பருகுவோம், வா. ஆகாயத்தின் துக்கம் கலந்த ஒய்வு, மெத்தனமான நிச்சப்தம் ஆகிய இவைகளைப்பார், நிச்சப்தமாக இருக்கும் சந்திரனையும் பார்த்து இவைகளுக்கு அப்பாற்பட்ட அவனையும் நினைத்துப்பார். உன் தகப்பனார் உனக்குச் சொல்லிக்கொடுத்திருக்கும் ‘வாரும் வாரும்’ என்று தொடங்கும் ஸ்தோத்திரத்தைச் சொல் பார்ப்போம்.

லக்ஷ்மி.—(துதிக்கத் தொடங்கினாள்:—)

வாரும் வாரும் என்றன் நாதா—என்
மருவுயிர்க் கென்று மாதார மாம்பாதா
ஒரும்நான் இருந்தா லும்சரியே—இறப்
புற்றாலும் விரிகதி மற்றார் நீவிரியே.
உன்னலேன் இஹ வாழ்வைச் சற்றும்—எனக்கு
உணவும் பணமும்வேண்டாம் பக்தியே பற்றும்
என்னுள்ளே கண்டிட வேண்டும்—உள்
இசையொளியுஞ் சிறப்பும் என்பதால் யாண்டும்
விண்மீன் பெரிதாகி யிலங்கும்—அதை
விட உள்ளொளி பெரிதாய் கிரஹத்திற் றுலங்கும்
உண்மீ தான் அவன் நாங்கள் ஒன்றே—எவ்வ
உறவாட்கும் மாயைக்கும் பிரிக்க மெய்ம்பின்றே.

இவ்வாறு லக்ஷ்மி ஸ்தோத்திரம் செய்து முடிந்ததும், அன்னம்மாள் அழுகுரல் அரவம் வாயிலில் கேட்க, வீடு குலுங்கியது. ‘நாதா! நம் அப்பா வந்துவிட்டார்.’ என்றாள் லக்ஷ்மி. அந்த ஸமயத்தில் கிருஷ்ணன் தாய் அத்தியாவஸ்தையிலிருக்கும் மகனுக்குப் பால்கொண்டு வந்தாள். அவள் ஒரு பெரிய மூடம்; அடிக்கடிச் சண்டையிடுவாள். அவள் புருஷனிறந்து வெகுகாலமாய் விட்டது. அவளுக்குக் கிருஷ்ணன் ஒரே பிள்ளை; அவன் மூலமாக அவளுக்கு இன்னும் ஒரு பேரப்பிள்ளையும் உண்டாகவில்லை. இவளைக்கண்டால் கிருஷ்ணனுக்குப்பிடிக்கவே பிடிக்காது; தலையை மிகவெறுப்பாக மறுபுறம் அவன் திருப்பிக்கொண்டான். அவன் அவளைக் கோபத்தில் வைதுவிடுவான்போலத் தோன்ற, இதற்குள் எழுந்துவிட்ட லக்ஷ்மி அவன் காதில் ‘நாதா! இனிமேல் உங்களுக்கு என்ன சண்டை வைத்திருக்கிறது. நீங்களே, பரமபதம் போகிறீர்கள். நானும் அங்கே உங்களைத் தொடர்ந்து வந்துவிடுகிறேன்’ என்று ஸமாதானப்படுத்தச்சற்று அமைதியுடன் அமர்ந்தான் கிருஷ்ணன். இப்படி இருக்கையில் வாஸுதேவசாஸ்திரியும் அவர் கண்மணியும் மாடி ஏறத் தொடங்க, அன்னம்மாள் அரவம் வர வர ஊரைக் கலக்கத் தொடங்கியது.

சும்மாவிரு பிணமே! நீ எங்கே போகிறாய் உனக்குத் தெரியுமா? மூடமே! இறக்குந்தருணமாக விருக்கும் மாப்பிள்ளையிடம் போகிறாய். அவன் எண்ணம் இவ்வுலகைவிட்டுப் பரமபதம் நோக்கி அலைபாய்ந்து கொண்டிருப்பதால், அவனுக்குச் சாந்தமும், நிச்சப்தமும் வேண்டுமே ஒழிய, உன் பிலாக்கண வைபவத்தால் என்ன பலன்? நீ யாரோடுகூடப் போகிறாய்? மஹா சாந்தநிதியுடன் போகவில்லையா? அவர் பாததூளி பெறுவாயா நீ? இப்படி இருக்க ஏன் வீண் ஆடம்பரம் பண்ணுகிறாய்? பெரிய விஷயங்களை உவமையாகக் கூறில், பரீக்ஷித்திற்கு மரணம் அணுகி வருங்கால் சுகப்ரஹ்மம் எப்படி அவரைத் தேடிச் சென்றாரோ, அப்படியே வாஸுதேவசாஸ்திரியும் யமன் வாயிலகப்பட்டிருக்கும் மாப்பிள்ளையிடம் போகிறார். அவனும் இவர் எப்பொழுது வரப்போகிறார் என்று உயிரைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்.

வியாதி அறை ஓர் பரிசுத்த பூமி; அவ்விடம் பரிசுத்தர்கள் தவிர மற்றவர்கள் அணுகலாகாது. துக்கம் மிகப் பரிசுத்தமான விஷயம்; அதைப் பரிஹாஸம் செய்யவாவது பழிக்கவாவது கூடாது. மனிதன் படுத்து வருந்தும் படுக்கை ஓர் வேதிக்கு ஸமானம். இதில் பாடுபடுபவன் அகங்காரம் நிச்சப்தமாக ஹோமம் செய்யப்படுகிறது. இவ்விடத்தில் ஏற்படும், ஸ்தோத்திரங்கள், கருணை ஆகிய இவைகளே பரமபதம் சென்றடையும் தூபாதிகள். எவ்வளவு அபலைகளாயினும் பெண்மணிகளே இந்த யாகத்தில் ருத்விக்குகளாவார்கள். அவர்கள் சாந்தமாகத் தம் ஸுகங்களைக் கவனியாதிருத்தல், இரவில் விழித்துக்கொண்டு ஜாக்கிரதையாயிருத்தல், அவர்கள் மிருதுவான ஸமாதான வார்த்தைகள், அனுபவித்துத் தீர்க்கும் வியாதியஸ்தன் விருப்பங்களை ஏவாது உணர்ந்து திருப்தி செய்வது, மடை திறந்தால் வரும் நீர்ப்பெருக்கைப்போல உடைத்துக்கொண்டு வர யத்தனிக்கும் கண்ணீரைத் தடுத்து நிறுத்துதல், வைத்தியர்களால்கூடப் பார்க்க ஸஹிக்காத அவஸரங்களைப் பொறுமையுடனும் தங்குதடையின்றியும் தாங்கிக்கொண்டிருத்தல், இடைவிடாது அவர்கள் செய்யும் கடவுள் ஸ்தோத்திரங்கள், ஒன்று சேர்ந்து வியாதி அறையை ஒரு கோயிலேயாக்கி விடுகின்றன. அங்கு நமஸ்காரம் செய்து பகவத் ஆராதனை செய்தாலும் செய்யலாம். அவ்வறைக்குள்ளே தான் உண்மையான வேதாந்தம் இன்னதென்பதும், அதில் பழகும் விதம் இப்படி என்பதும் வெளியாகும். வெளி வேதாந்தமெல்லாம் வாசா கைங்கரியமன்றி வேறொன்றுமில்லை. இங்கு தற்காலத்துக்காவது மனிதனுக்கு அமைதி உண்டாகும், தன்னயம் கருதும் தன்மை இருந்தவிடம் தெரியாமல் ஓடிப் போய்விடும். ஸாவதானமாக நமது தெய்வத்தன்மை வெளியிலிழுக்கப்படும். உலக ஆரவாரம் ஓய்ந்து நிச்சப்தமாகவிருக்கும் இந்தவிடத்தில்தான், கர்மம் நீங்கிய மதமும், தர்க்கம் நீங்கிய வேதாந்தமும், வீண் பெருமை

நீங்கிய அன்பும் காணப்படும். வியாதிஸ்தர் அறையைப் போன்ற இடங்களிலிருந்து லோகஹிதர்களான பரமப்பாகவதர்கள் உண்டாயிருக்கின்றனர்.

'குருவருளால் எந்த ருஷி ஒருவர் தமது முடிவு காலத்தில் வேறொன்றையும் சிந்திக்காமல் தனிமையாகக் காயத்ரி சென்றடையும் ஜகந்நாதரைத் தியானம் செய்துகொண்டு தம் தேஹத்தை நழுவவிடுகிறாரோ அவரே நன்றாக இறந்தவர். 'எந்தக் குலபதி ஒருவன் தன் குடும்பம் சுற்றிநிற்க இயேசுகிறிஸ்து நாதர் நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிறக்கிறானே அவனே நன்றாக இறந்தவன்' என்பர் மேனாட்டோர்.

கிருஷ்ணா! தைரியமாக இரு, பயப்படாதே, எங்கும் நிறைந்த பரம்பொருள் இருக்கிறார். அவர் சிதானந்த ரூபி. வியாதி மரணம் இவைகள் எல்லா தேஹத்தை மாத்திரம் ஒட்டியவைகளே என்பதை ஞாபகப்படுத்திக்கொள். இந்தத் தண்டனையால் பாபம் தீரும். நீ மேல்மேலும் விருத்தி அடைவது திண்ணம். நீ இறந்தால் இந்தச் சரீரம் போய் வேறு சரீரம் வரும். நீ பிரஹ்மஞானியாகிய பரிசுத்தனாகில் தேஹமே வாராது. ஸந்தேஹம் பயம் ஆகிய இவைகளை விட்டுவிடு. ஸந்தோஷமே மோக்ஷவாயில் காப்பவன் என்று சாஸ்திரம் கூறும். படுக்கையைச்சுற்றி நிற்புவர்களே ! இறப்பவனைக் கவனித்துப்பார்த்து உலறும் உதடுக்குப் பால் வார்த்து வாருங்கள், அன்பு பாராட்டுங்கள், அவன் அங்கங்களைத் தாங்குங்கள், அகண்டத்தில் தாவி ஓடத்தயாராகும் அவனிடம் உங்கள் கருணை தெய்வத்தன்மை ஆகிய இவைகளைத் தங்குதடையின்றிப்பாய்ந்துஓடவிடுங்கள். நாம் அன்புபாராட்டியவர்களது கடைசி மொழி, பார்வைமுதலியன ஒருவித உத்தரவுக்கு ஸமம். அவைகள் சாந்தமாயும் பரிசுத்தமாயும் இருக்கும். மாணநிலையில் இருப்பவைகள் அகண்ட வஸ்துவின் லக்ஷணத்தைச் சற்று அடைந்தேயிருக்கும். இறப்பவன் இவ்வாழ்க்கைக்கு அப்புறமிருந்து தன் அனுபவத்தைக் கூறுவதுபோலத் தோன்றும். அவன் கூறுவது ஓர் குறி, உத்தரவு, தீர்மானம் ஆகிய இவைகளைப்போலக் காணப்படும். அவனுக்கும் அந்த ஸமயத்தில் அற்புத ஞானதிருஷ்டி வந்துவிட்டதாகத் தோன்றும். பிராணன் நீங்கி மயானம் அணுகுவதை உள்ளபடி உணரும் நிலை வருபவர்களுக்கு உண்மைப்பொருள் நிறைந்ததாயும், மறுக்கக் கூடாததாயும் உள்ளமொழிகள் தாமே வரும். இந்த ஸமயத்தில் அவன் உண்மை ஸ்வரூபம் நன்கு விளங்கும். உள்ளிருக்கும் பரம்பொருள் இக்காலத்தில் மறைந்து நிற்கவே மாட்டாது. ஆதலால் உங்கள் அன்பை வெளியிட்டுக்கருணையைக்காட்டத் துரையுடன் இருங்கள்! இத்தருணம் தப்பினால் எத்தருணம் வாய்க்கும்?

வாஸுதேவசாஸ்திரி மாப்பிள்ளை பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் ; அவனைப்பார்த்தார். தம்மை அறியாமல் கண்ணீர் ததும்பத் தொடங்கியது. அதைத் தமது வேதாந்தத்தால் அடக்கி அவனைக் கையால் அணைத்து, அவனுக்கு அமிருதம்போன்றிருந்த அன்பார்ந்த மொழிகளைக் கூறலுற்றார்:—

வாஸுதேவர்.—"பயப்படாதே ! தேகமே இறப்பது, நாம் அல்ல, நாம் அழிவற்றவர். நமது கடவுடன்மையை ஞாபகப்படுத்திக்கொள்வோம். 'உன்னுள்ளிருக்கும் பரமாத்மாவைச் சாகுந்தருணத்திலாவது நினை, உடனே நானேயாவாய்நீ,' என்று கிருஷ்ணன் கூறவில்லையா? உன்னாலானவரையில் உன்மனதைப் பரமாத்மாவிடம்நிறுத்து. அநேகர் தினம் இறக்கவில்லையா? அவர்களுக்காக நாம் துக்கிக்கிறோமா? நம்மை மரணம் அணுகும்போதல்லவா நாம் பயந்து வருந்துகிறோம். இந்தக் கெட்ட குணத்திற்கு நமது தூர் அகங்கார மமகாரமே காரணம்.

"ஸம் ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ச்சுனனும் கிருஷ்ண பரமாத்மாவும் பாரதயுத்தம் பதின்மூன்றாம் நாள் ஸாயங்காலம் திரும்பி வருகையில், அர்ச்சுனன் அபிமன்யூ இறந்ததைக்கேள்விப்பட்டால் தானும் இறப்பான் என்னும் எண்ணம் பகவானுக்கு வந்தது. உடனே வரும் வழியில் பகவான் தமது மாயாசக்தியால், அக்னியை வலம் வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு பிராஹ்மணன், அர்ச்சுனன் முன் தோன்றும்படி செய்தார். கணம் தப்பினால் மரணம்தான் ஏற்பட்டிருக்கும்! அதற்குள் கீதையில் தேர்ச்சி அடைந்த அர்ச்சுனன் அவனைக் காக்க ஓடிவந்து, 'என்ன கஷ்டம்! இவ்வளவு வெறுப்பு உனக்கேன் வந்தது? தற்கொலை செய்துகொள்ளுவானேன்! பிராஹ்மணா! நீர் பெரியவராகவிருந்தும், இதைச் செய்யலாமா? உமக்காக என் ராஜ்யத்தில் பாதி தந்து விடுகிறேன், என் வஸ்துக்களில் எல்லாம் உமக்குப் பங்கு கொடுக்கிறேன் ; இக்கொடிய தொழிலை மாத்திரம் நிறுத்திவிடும்' என்று கொஞ்சிக் கேட்டுக்கொண்டான். பகவான் சிரித்தவண்ணமாகவே இருந்தார். பிராஹ்மணன், 'நீ யார், என்னைத் தடுப்பதற்கு? உன் சொத்து, ராஜ்யம் எல்லாவற்றையும் நீயே வைத்துக்கொள், போகும்பொழுதும் எடுத்துக்கொண்டு வேண்டுமானாலும் போ. என் விஷயமோ வேறு. என் அருமைப்பிள்ளை ஒருவனிருந்தான், அவன் இறந்துவிட்டான். இனி நான் உயிர்வாழ்ந்து என்ன பயன்! நெருப்புத்தயாராகவிருக்கிறது ; என்னை வீணாகத் தடுக்காதே' என்று திடமாகக் கூறினான். அர்ச்சுனன் அவனைத் தன் வில்லால் பிடித்து இழுத்து வந்து, 'பிராஹ்மணா! நீ என்ன கேட்டாலும் அதற்கு உடன்படுகிறேன். நீ இந்தப் பாபத்தை மாத்திரம் செய்யாதே' என்று மன்றாடினான். 'எல்லாம் ஸரி ! வாய்க்கு எளிதுதான்! உன்பிள்ளை இறந்திருப்பானாயின், இந்தத் தீயுள் நீ இப்பொழுதே மூழ்கியிருக்கமாட்டாயா ?' என்று தயங்காது மறுமொழி கூற, பகவானும் 'உண்மைதான், அவன் துக்கம் அவனுக்கன்றோ தெரியும். நாளை உன்பிள்ளை இறந்தால் தெரியும் செய்தி. நீயும் இப்படித்தான் செய்வாய்' என்று ஒன்றும் அறியாதவர்போல பிராஹ்மணனுக்குப் பரிந்துகொண்டு வந்தார். 'இல்லவே இல்லை. அப்படி நடக்கவே நடக்காது. என் பிள்ளை இறந்தால் என்ன. நான் இப்படியா செய்வேன் ?' என்று உறுதியாய்க் கூறினான் அர்ச்சுனன். அதற்குப் பகவான் 'எல்லாம் வார்த்தை, அப்பா! வெறும் வார்த்தை ! நடப்பது



வேறு' என்று பரிஹாஸம் செய்தார். அப்பொழுது பிராஹ்மணன் 'என் துக்கம் எனக்கு. நீங்கள் பேசிக்கொண்டேயிருங்கள். உன் பிள்ளை இறந்தால் இப்படித்தானே செய்வாய்! என்னை இறக்கவிடுங்கள்' என்று துரைப்படுத்தினான். 'இல்லை, இல்லை. நான் இவ்வாறு செய்யவேமாட்டேன். நான் வாக்குக் கொடுக்கிறேன்! வேண்டுமானால் ஸத்தியமும் பண்ணுகிறேன்' என்று மிகுந்த பரபரப்புடன் கூறினான் தீர்க்கதரிசியான அர்ச்சுனன். 'பண்ணு ஸத்தியம் !' என்றான் பிராஹ்மணன். அர்ச்சுனன் தயங்காது காண்டீவத்தைக் கீழே போட்டான், மூன்றுதரம் அதைத் தாண்டி ஸத்தியம் செய்தான். இது நடந்ததோ இல்லையோ மஹாமாயாவியான பகவான் அந்தத் தோற்றத்தை மறைக்க, அத்துடன் நெருப்பு பிராஹ்மணன் எல்லோரும் மறைந்தனர், ஸத்தியம்மாத்ரம் நின்றது. அர்ச்சுனன் கிருஷ்ணனை விழித்துப் பார்த்தான் ; பகவானும் அவனை எற இறங்கப்பார்த்து, அவனது அத்புதமான மமகாரமின்மைக்காக அவனை மெச்சிக்கொண்டார். ஏமாந்த அர்ச்சுனன், பாவம் ! தனது காண்டீவத்தை எடுத்துக்கொண்டு யுத்தகளம் வந்தான். அன்று மாலை சூரியாஸ்தமனம் வழக்கம்போல மிகச் சிறப்பாகத்தானிருந்தது. ஆனால் அபிமன்யுவின் ஆத்மாவும் உலகிலிருந்து அன்று அஸ்தமித்துப் பரமபதம் அடையப் புறப்பட்டது. இந்த ஸங்கதி அர்ச்சுனன் காதில் விழுந்ததும், காண்டீவத்தை எறிந்து தானும் விழுந்திறக்க ஓர் பெரிய எரி மூட்டச் சொன்னான். அப்பொழுது பகவான் முன்வந்து 'பேஷ் ! நிரம்ப நன்றாகவிருக்கிறது. ஸத்தியத்தை மறந்து விட்டனையோ ? பிராஹ்மணனுக்கு ஒருவிதம், க்ஷத்திரியனுக்கு ஒருவிதமோ? தனக்கென்றால் ஒன்று, பிறருக்கு வேறொன்றோ? இது நல்ல நியாயம்' என்று பரிஹாஸமாக ஸத்தியத்தை நினைப்பு மூட்ட, அர்ச்சுனன் அடங்கினான். துக்கத்தை வெளிக்காட்டாது அவன் அடக்கிவிடவேண்டி வந்தது. வாயைக்கையைத் திறக்கவில்லை, தீவளர் என்று கேட்கவுமில்லை, அர்ச்சுனன் பிராஹ்மணனைத் தேற்றி வேதாந்தம் பேசினான் ; தன்முறை வந்ததும், தன் துக்கத்தை அவனால் தாங்கமுடியவில்லை. காரணம் என்ன? அர்ச்சுனன் மமகாரங்கள் மாயவில்லை. அது தலைதூக்கி நின்றது. முடிவென்ன ?—பிராஹ்மணனுக்கென்றால் ஒருவழி தனக்கு வேறொருவழி என்பதுதானே. கீதசாஸ்த்திரம் கேட்டும் அவன் மனம் அடங்கவில்லை. பகவான் மாயையும் வேண்டி இருந்தது. இந்த அல்பமான மமகாரமே நமது துக்கங்கள் எல்லாவற்றிற்குப் ஆதிகாரணம்."

கிருஷ்ணன் இதைக் கேட்டுக்கொண்டு வரும்பொழுதே மாமனார் முகத்திலிருந்த சாந்தத்தைக் கண்ணுற்றான். தம் பெண்ணுக்கு வந்துவிடும் வைதவ்யத்தை எண்ணிக்கூட அவர் மனம் கலங்காதிருந்ததைக் கண்டு வியந்தான். சாஸ்திரிமாத்திரம் சும்மாவிருந்தாரா! அவர் பரவசமாக விருந்து சரமாரியாகப் பொழியத் தொடங்கிவிட்டார். "என்தலையில் இப்பொழுதே இடி விழுந்து விட்டதென்று வைத்துக்கொள்வோம். எனக்கு ஒருவித நஷ்டமுமில்லை! எனது என்பது இங்கு ஏதாவதிருந்தாலல்லவோ எனக்குத் துக்கம் வரும். அவ்வாறில்லாததால் நான் இதை ஒருபொருட்டாக மதியேன். நான் பரம்பொருளுடனேயே இருப்பதால் எனக்கு என்ன குறைதான்வரும்! அவர் ஸர்வாந்தர்யாமி 'பொய்வளரு நெஞ்சினர் காணாதகாட்சியே' ஒழிய மற்றெல்லோருக்கும் அவர் விளங்கி நிற்பார். ஆஹா ! அவர் ஸந்நிதான விசேஷத்தை என்னென்று கூறுவேன்! என்ன சாந்தம்! என்ன ஜிலிஜிலிப்பு என்ன ஆனந்த அமைதி ! என்ன ஸுகம் ! அவரை உணர்ந்தவன் எவனால் அவரிடம் ஈடுபடாமலிருக்க முடியும்? மறைபடாப் பெருமை, மழுங்கா ஒளி, மாறா அன்பு, தெவிட்டா அமிருதமாகிய பரம்பொருளின் முன், பிரகாசிக்குஞ் சந்திரனது குளிர்ச்சி, மெதுவான ஆகாயத்தின் மௌனநிலை, ஆகிய இவைகள் எம்மாத்திரம். ஆஹா குழந்தாய் அதை ஒரு நிமிஷமேனும் அனுபவிக்கக்கிடைத்தால்—" என்று கூறி முடிக்கும் முன்னமேயே பேச்சு நின்றுவிட்டது, அவர் முகத்தில் ஒரு திவ்ய காந்தி தவழ்ந்து நடம் புரிந்தது. நிலவினும் இனியதாயும், மின்னலொளியின் மிகச் சிறப்பு வாய்ந்ததாயும் உள்ள ஜ்யோதியுடன்கூடிய அற்பு சாந்தம் ஒன்று அவர் மனத்தில் குடிகொண்டுவிட்டது.

ஒரு நிமிஷத்திற்குள் வாஸுதேவ சாஸ்த்திரி மாயமாய் பறந்து போய்விட்டார். நண்பர்களே ! அனர்த்தம் பண்ணிவிடாதேயுங்கள் ! அவர் தேஹம் அங்கேயேதான் இருந்தது ; எங்கும் போய்விடவில்லை. அவர் ஸமாதியிலாழ்ந்துவிட்டார். 'ஸர்வம் வாஸுதேவமயம் ஜகத்' என்றபடி அண்டபிண்ட சராசரங்களனைத்துமாகி நிற்கும் பரவாஸுதேவராகி நின்றுவிட்டார். சாஸ்த்திரி எங்கே என்று கேட்டீர்களே ! அவர் ஆகாயம், நக்ஷத்திரம், சந்திரன், ஜலம், வியாதியஸ்தன் அறை இவை முதலிய எவ்விடத்திலிருக்கிறார் என்று எண்ணமிடுகிறீர்களா? அவர் ஆணா, பெண்ணா, அலியா கல்லா தருவா? என்ற சங்கை பிறக்கும். அவர் எங்கும் நிறைந்திருந்தார் அரூபமே அவர் உருவமாகவிருந்தது. ஸர்வக்ஞத்வமே அவர் அறிவாகவிருந்தது. ஜகத்ஜ்யோதியே அவர் தேஜஸாகவிருந்தது. அவர் ஆத்துமா பரமாத்துமாவாக நின்றது. கற்பூரம் நெருப்புள் மறைவதை உற்றுநோக்கி இருக்கிறீர்களா? வெளிவரும் புகையைமாத்திரம் கவனியாது விடுங்கள், அதில் மிகுதியிருப்பதைக் கவனியுங்கள். கற்பூரம் நெருப்புள் கரைந்து கலப்பதுபோலச் சாஸ்திரி பரபிரஹ்மமாக மாறிவிட்டார். இவ்வளவுதான்! இதைத்தான் தாயுமானவரும்:—

'தானான தன்மயமே அல்லால் ஒன்றதைத் தலை
எடுக்கவொட்டாது. தலைப்பட்டாங்கே போனாலும், கற்
பூரம் தீபம்போலப் போய் ஒளிப்பதல்லாது புலம்
வேறின்றாம்' என்று எடுத்துப் பாராட்டியிருக்கிறார்.

நிமிஷம்வாரா, ஐந்து, பத்து, பதினைந்தாகவளர்ந்து அரைமணியுமாயிற்று சாஸ்த்திரி அசைந்தாரில்லை. அப்பொழுது ஒருவரும் மூச்சுக்கூட விடவில்லை. அன்னம்

மாள்கூட வாயை அடக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்குக் குடிகொண்டிருந்த அமைதி ஓய்ந்துவரும் கிருஷ்ணனுக்கு வரம்பிலா ஆனந்தம் விளைவித்து, அவனை நிஷ்டைக்குள் முழுத்தியது.

கிருஷ்ணா! தைரியமாகவிரு. உன்னையறியாது உன் கண்ணில் நீர் வருகின்றனவே! யமன் வந்துவிட்டான்; நன்றாகத் தெரிகிறது. உனக்குச் சுவாஸம் தடைப்பட்டு வரத் தொடங்கிவிட்டது. ஊர்த்வசுவாஸம் எடுத்துவிட்டது. சாஸ்திரி மெதுவாகக் கண்விழிக்கிறார். உன்னைப் பார்க்கிறார். லீலாவினோதனான பரமாத்துமா கிருஷ்ணனைப்பற்றி இடையறாது உன்னுடன் வசனிக்கிறாரே! அவர் வேணு, அவரிடமிருந்த கோபிகைகளது பக்தி இவைகளை நினைப்பு மூட்டுகிறார். உனக்கு என்ன குறை? சுவாஸம் குறைகின்றது. பின்னும் விடாது கோபிகைகளுக்குப் பகவான் பிரத்தியக்ஷமானதை எடுத்து விஸ்தரிக்கிறார்! அர்த்தங்கள் நிறைந்த அத்புத பிரணவமாம் ஓம் என்பதை உச்சரிக்கிறார். அது இவ்வாறு உன்னுள்ளிருக்கும் பரம்பொருளைக் குறிக்கிறது என்பதை வெளிப்படுத்தி உன்னைச் சொல்லச் சொல்லுகிறார். 'ஓம்' என்கிறாய். 'நன்றாகச் சொல்' என, 'ஓம்' என்கிறாய், மறுபடியும்' என 'ஓம்' என்கிறாய். பின்னர் அவர் இருந்த மௌனமே அவர் வாக்கைவிட நன்றாக அற்புதவிஷயங்களை உனக்குஉணர்த்தத்தொடங்கிவிட்டன. 'கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும் கருணாகரக்கடவுளிடம்' அவர் ஈடுபட்டு இரண்டறக் கலந்துநிற்கும் ஸமாதி உன்ஸம்சயத்தைப் பறக்கடித்து உன்னைத்தேற்றத் தொடங்கிவிட்டது. ஆயினும் நடுவே கடைசியாக லக்ஷ்மியைப்பார்க்கிறாய்! உடனே அழுது கொண்டு 'அவளுக்குத் தாங்களேகதி, உலகில் அவளே என் அன்பைக் கொள்ளை கொண்டவள், கைவிடாதேயுங்கள்!' என்று கூறுவதுபோல அவள் அருமைத் தந்தையை நோக்குகிறாய். உன் மனோபாவத்தை லக்ஷ்மி தெரிந்து கொண்டுவிட்டாள்! பாபம் அழுகிறாள். ஆயினும் பின்னர் உனக்கு வரும் ஸுகத்திற்கு அது எங்கே தடையாக ஏற்படுமோ என்ற அச்சத்துடன் முகத்தை மறைத்துக்கொள்ளுகிறாள், பாபம்! என்ன செய்வாள்! உன் துக்கத்தை உன்முழுபலத்தால் அடக்கிவிட்டு, மறுபடியும் சாந்தமாகத் தானாகவே 'ஓம்' என்கிறாய்.அவ்வளவுதான், உடனே ஒருதரம் கிளம்பி கடைமூச்சாக ஒரு பெருமூச்சுவிட்டு லக்ஷ்மிபிதாவைக் கட்டிக்கொண்டு விட்டாய்! அவர்தான் உன் கடைசி ஸ்நேஹிதன்; அன்பார்ந்த அந்தணர் என்றால் அவர்க்கே தகும்; அவரைப்போன்ற திடமான ஆதாரமும் உண்டோ!

## விசேஷக் குறிப்புகள்

### NEWS & NOTES

**கத்தரிக்கப்பட்ட தலைமயிருடையவர்கள்.**—கத்தரிக்கப்பட்ட தலையையுடையவர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று, கொச்சி ராஜா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

* *
*

**விருதுப்பட்டி தென்காசி ரெயில்வே.**—தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் விருதுப்பட்டியிலிருந்து தென்காசிக்கு ரெயில் போடுவதற்கு ஸர்வே செய்யலாமென்று ஸிம்லாவிலிருந்து உத்திரவு பிறந்திருக்கிறது. இந்த லயனுக்கு விருதுப்பட்டி தென்காசி ரெயில்வே லயன் என்று பெயராகுமாம்.

* *
*

**தேள் கொட்டுக்கு மருந்து.**—தேள் கொட்டினவிடத்தில் படிகாரத்தை எலுமிச்சம்பழ ரஸத்தில் அரைத்துப் பற்றுப்போட்டு அதற்குச் சமீபத்தில் நெருப்புத்தணலைப் பிடித்தால் வலி நின்றுவிடுமென்று ஒருவர் எழுதுகிறார். சென்னை மெயில் பத்திரிகை கூறுவது என்னவென்றால் உள்ளிப்பூண்டின் தோலை எடுத்துவிட்டுப் பருப்பை அரைத்துக்கொட்டினவிடத்தில் பற்றுப் போட்டால் 10, 20, நிமிஷத்தில் வலி நின்றுபோய் விடுமாம். இரண்டாம்தரம் பற்றுப் போட்டால் அங்குப் புண்ணாய்விடுமாம். நட்டுவாக்காலி கொட்டினாலும் இந்தப் பற்றினால் குணப்படுமாம்.

* *
*

**உருவத்தில் பெரிய மனிதன்.**—அமெரிக்கா கண்டத்தின் வடக்கிலுள்ள கனடா தேசத்தில் பிராஞ்சு ஜாதியானாகிய எட்வர்ட் பாவா என்பவன் 11-அடி உயரமுள்ளவனாயிருக்கிறானாம். அவனுக்கு வயது 30. அவன் நிறை 587-ராத்தல், அவன் கை 18-இஞ்சும், பாதம் 24-இஞ்சு நீளமும் 12-அங்குல அகலமும் இருக்கின்றனவாம். இவன் சிறு வயது முதல் சரீர விஷயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தி வந்ததால் எப்போதும் உற்சாகியாயிருக்கின்றானாம்.

* *
*

**ஒரு வேடிக்கை.**—இங்கிலாந்து தேசத்தைச்சேர்ந்த கிலாஸ்ரஸ் என்னும் மாகாணத்திலுள்ள ஆடிங்டன் என்னும் பட்டணத்தில் வசிக்கும் ஓர் மாதுவிடம் நல்ல திடகாத்திரமுள்ள இரண்டு பசுக்களிருக்கின்றனவாம். சில தினங்களாகப் பால் குறைவாக இருந்தமையால் காரணம் அறியாத அம்மாதின் பால்காரன் மாடு மேயும் மைதானத்திற்குச் சென்று பார்த்ததில் ஒரு மாடு புல்லில் சுகமாகப் படுத்துக் கிடந்ததாம், படுத்துக்கிடந்த மாட்டுக்குச் சமீபத்தில் இரண்டு பெரிய பாம்புகள் அம்மாட்டின் மடியில் பால் குடித்துக் கொண்டு கிடந்தனவாம்.

MADRAS

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது ஸு ஐப்பசிமீ ꞉ 1911-ஸு நவம்பர்மீ { பகுதி 5

## துக்கங்கள்

### THE SORROWS OF LIFE

உலகத்தில் துக்கம் இருக்கிறது என்பது ஸாதாரண நம்போன்ற பாமரர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆனால் பொதுவாகத் துக்கம் வந்து சேருங்கால் ஆதரவற்ற சிறுவர்கள்போலத் துடிதுடித்து, ஸுகம் வருங்கால் அதை முற்றிலும் மறந்து ஸுகத்தில் மூழ்குவதே நமது வழக்கமாக விருக்கிறது இவ்வாறின்றித் துக்கம் வருங்காலத்தில் துக்கத்தில் மூழ்கிப் பரிதவிக்காது, இது வருவது ஸஹஜந்தானே என்று எண்ணி அதனால் ஏற்படுங் கஷ்டத்தை வீண் மனோ ராஜ்யங்களால் வளர்த்துக்கொள்ளாமலும், ஸுகம் வருங்கால் பிறர்க்கு உண்டாகும் கஷ்டங்களைக் கண்டமாத்திரத்தில் மனங்கனிந்து ஸுகத்தில் கண்மூடியாக மூழ்கிவிடாமலும் நடந்துகொள்ள வேண்டியது அறிவுடையோர் கடன். இவ்வாறு நடந்துகொள்ளாவிடில் ஸுககாலங்களில் பிறருக்குத் தீங்கு செய்யும்படியாகவும், துக்காதிக்கத்தால் தற்கொலை முதலிய பாதகங்களைச் செய்யும்படியாகவும் நமது மனம் தூண்டப்பட, எக்காலத்திலும் ஓயாக்கவலையுடனே இருக்கும்படி நேரிடும். முற்கூறியபடி இருந்தால்தான் எக்காலத்திலும் ஒருவித சாந்தம் நமது மனதில் குடிகொண்டிருக்க நாம் எந்த ஸமயத்திலும் ஆனந்த ரூபியாகவே அமைதியுடனிருந்து, மரணத்தையும் கவனியாது தேஹத்தை நழுவவிடும் திறனுடையோர் ஆவோம்.

அறிவிலிகள் தான் ஸுககாலங்களில் ஒன்றும் விளங்காது மூழ்கிக்கிடப்பர். அறிவுடையோருக்கு உலகில், தமக்கே வாராவிடினும், வரக்கூடிய துக்கங்கள் பிறருக்கு வரும்போது மனம் கனியாமலிராது. இதனால் அவர்களால் கண் மூடித்தனமாக ஸுகத்தில் மூழ்கவே முடியாது. ஐந்தாறு பேர்கள் சேர்ந்து ஒரு காட்டருகாமையில் உல்லாஸமாக நடந்துபோகையில் ஒருவன்மேல் ஒரு புலி பாய்ந்து தூக்கிக்கொண்டு போய்விட்டது என்றால், மற்றவர்கள் மனம் என்னவாக விருக்கும்! இரண்டொரு வாரமாகாதா அவர்கள் பரபரப்பு அடங்க? அவர்களைப் புலிவந்து தொடக்கூடவில்லையே! ஆயினும் நம்மேல் பாய்ந்திருந்தால் நமது கதி என்ன! நமது நண்பன் என்னபாடு பட்டிருப்பான்! என்ற பயமும் மனக்கனிவும் அவர்களை வருத்தாது விடுமோ? இது போலவேதான் ஸுகத்திலிருக்கும் அறிவுடையவர்களுக்குப் பிறர் துக்கம் வந்து தாக்குவதால் அவர்கள் ஸுகத்தில் மூழ்கிவிடவே முடியாது. ஸுகத்தின் நிலையாமை அவர்களுக்கு ஸதா தோன்றிக்கொண்டிருக்கும். ஆதலால் ஸுககாலங்களில் சாந்தமாகக் கடவுள் பக்தியை நிஷ்காம்யமாக அவர்களால் செய்யமுடியும். துக்ககாலம் வந்துவிட்டாலோ எல்லோரையும் ஒரு புரட்டு புரட்டிவிடும். காம்யபக்தி பூர்ணமாக ஏற்படாவிடினும், உள்ள துக்கம் நீங்கினால் சாந்தமாகக் கடவுளைக் கருதலாமே என்று தோன்றும். தனக்கு வரும் துக்கத்தைச் சாந்தமாக அனுபவித்து வெளியேறுவது மிகக்கடினம். தேஹோபாதியைப் பொறுக்கும் தீரர் அபூர்வம். இத்தக் காலங்களில் பின்வரும் மனனம் பழக்கத்தின் பேரில் உதவியாக வந்து நிற்கும். 'துக்கமும் ஸுகம் போல நிலையற்றது. மேலும் ஸுகம் வேண்டும் என்று விரும்புகிறோமே அதுவும் துக்கத்துடன் கலந்தேதான் இருக்கும். அதனால் தானே ஒரு பெரியவர், துக்கம் ஒழிந்தாலும் ஸுகமில்லை அப்பா! என்றார்,' என்று கருதி மனனம் செய்யலாம். ப்ருஹதாரண்யக உபநிஷத்து அத். 5. ப்ரா. 11-ல் 'வியாதியால் உண்டாகும் கஷ்டங்களைத் தவத்தால் ஏற்படும் கஷ்டங்களாகவும், பிணத்தைச் சுடுகாடு கொண்டு போவதை வானப்ரஸ்தத்திற்கு அனுப்புவதாகவும், பிணம் எரிப்பதை அக்னிப்ரவேசத்தால் சுத்தப்படுத்துவதாகவும் கருதிவந்தால் பரமபதம் ஸித்திக்கும்' என்று நம்மை மனனம் செய்யத் தூண்டும். இதனால், வியாதி மரணம் முதலியவற்றால் உண்டாகும் பயமும் துக்கமும் நீங்கும்.

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது ஹு ஐப்பசி மீ [பகுதி 5


## விக்கிரஹாராதனக் கிரமம்

### IMAGE-WORSHIP—RULES

விக்ரஹாராதனம் அவசியம் என்பதையும், அதைச் சாஸ்திர உண்மைகளை மறவாதுசெய்து வந்தால் எவ்விதத்தீமையும் ஏற்படாதுஎன்பதையும் நன்றாக எடுத்து விளக்கிவிட்டோம். இங்கு விக்ரஹாராதனம் செய்யும் ஒழுங்கை எடுத்துக் கொள்ளுவோம். விக்ரஹாராதனம், ஒவ்வொருவரும் தனிமையாகச் செய்யும் பூஜை என்றும், பொது ஸ்தலங்களாகிய கோயில்களில் செய்யும் ஆராதனமென்றும் இருவகைப்படும். இவைகளுக்கேற்ப ஆராதனை ஒழுங்குகளும் இரண்டு விதமாகக் காணப்படும். இவைகளை இங்கு எடுத்து விவரித்து இந்த ஒழுங்குகளே வேத ரஹஸ்யங்களை உள்ளடக்கியுள்ளன என்பதையும் எடுத்து விளக்குவோம்.

தனிமையாகச்செய்யப்படும் பூஜைவிஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். முதலில் ஸங்கல்பம் செய்து மனதை ஒருவழிப்படுத்திப் பூஜைசெய்வதில் செலுத்தவேண்டும். பின்னர் தீர்த்தத்தை மந்திரங்களால் சுத்தப்படுத்தி பூஜாத்ரவியங்களிலும் தன்மேலும் ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். பின்னர் மணி அடிக்கவேண்டும். இதன் பின்புதான் பூஜை தொடங்குகிறது. ஆராதிக்க வேண்டிய இஷ்டதெய்வத்தையும் மற்றைஸகலதேவதைகளையும் தன்மனத்திலிருந்து வெளிப்படுத்தி எதிரில் இருக்கும் உருவத்தில் ஆவாஹனம் செய்து, பின்னர் இதை வற்புறுத்த ஹம்ஸஃ ஸோஹம்? முதலிய வேதமந்திரங்களால் பிராணபிரதிஷ்டை செய்யவேண்டும். அதற்கு ஒருஆஸனம்கொடுத்து அதற்குக் கால் அலம்ப வேண்டும். சிலர் இந்தத் தீர்த்தத்தை உட்கொள்வர். விக்ரஹத்திற்கு வேத மந்திரங்களைச் சொல்லி ஸாவதானமாக அபிஷேகம் செய்யவேண்டும். இது முடிந்ததும் விக்ரஹத்தை நன்றாகத் துடைத்து வஸ்திரமுடுத்தி, பூணூல் இட்டுச் சந்தனம் குங்குமம் புஷ்பம் முதலியவைகளால் அலங்கரிக்கவேண்டும். பின்னர் அக்ஷதை புஷ்பம் முதலியவைகளால் விக்ரஹத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் தகுந்தபடி வர்ணித்துப் பாதம் முதல் சிரஸ்வரையில் ஒழுங்காகப் பூஜை செய்யவேண்டும். பிறகு தேவதையின் 108 பெயர்களைச் சொல்லிப் புஷ்பத்தால் அர்ச்சனை செய்யவேண்டும். ஸாம்பராணி தூபம், தீபம் ஆகிய இவைகளைக் கொண்டு ஹாரத்தி செய்து ஆராதனம் செய்யவேண்டும். தான் உட்கொள்ளுவதற்காகச் செய்து வைத்திருக்கும் வஸ்துக்களை எல்லாம் விக்ரஹத்தின் முன்பாக வைத்து அதற்கு அவைகளை நிவேதனம் செய்யவேண்டும். இதன் பின்னர் கற்பூர ஹாரத்தி செய்து மூன்றுதரம் ப்ரதக்ஷிணம் செய்து தேவதையைத் தியானம் செய்துகொண்டு துதித்து நமஸ்காரம் செய்யவேண்டும். உடனே தேவதைக்கே பூஜையின்பலன் எல்லாவற்றையும் அர்ப்பிதம் செய்துவிட்டு, அதை ஆஸனத்திலிருந்து மந்த்ரபூர்வமாக எடுத்துத் தன் மனத்துள்ளேயே செலுத்திவிடவேண்டும். மறுபடியும் மறுநாள் தன் மனதிலிருந்து பூஜாகாலத்தில் வெளிப்படுத்தி முற்கூறியபடி செய்யவேண்டும்.

முற்கூறிய விஷயங்கள் விக்ரஹாராதனத்தைப் பழிக்கும் குணமுடையவர்களுக்குச் சிறுபிள்ளை விளையாட்டுப்போலத் தோற்றலாம். முதல் முதல் இதில் ஒரு பெரிய வேதரஹஸ்யம் அடங்கியிருக்கிறது என்பதை எந்தக் கண்மூடிகளாலும் மறுக்கமுடியாது. அதாவது, பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதால் ஆராதிப்பவனுள்ளும் இருக்கிறது. அவரை 'நம்மைவிட்டு எந்த வெளிரூபமாக ஆராதித்தாலும் மனவாக்கெட்டாச் சித்துருவை ஒரு கண்டவஸ்து வாக்கித்தான் செய்யவேண்டும் என்பதே. ஆதலால் எவ்விதமாகக் கடவுளை ஆராதித்தாலும் ஸரி, அது எவ்வளவு ஸூக்ஷ்ம வழியாகவிருந்தாலும் ஸரி, நம்மை விட்டு கடவுளை வேறாக எண்ணி ஆராதிப்பதெல்லாம் விக்ரஹாராதனமே. ஆதலால் வெளிவஸ்துவில் நமது மனதை நிலை நிறுத்த என்னென்ன செய்து தீரவேண்டுமோ அவைகளை எல்லாம் விக்ரஹாராதனைக்கும் செய்தே தீரவேண்டும். வெளிவஸ்துவிலிருந்து நேராக உடனே நமக்கு ஏதாவது ஸுகம் ஏற்படுமாயின் நமது முயற்சி அதிகமின்றியே மனம் ஒருமைப்பட்டுவிடும். அவ்வாறின்றிப் பரம்பொருள் விஷயம்போலப் பொறுமையான வெகுகால விடாமுயற்சியின் பின்னர் சிறந்த பலன் கொடுக்கும் விஷயங்களில் மனம் எளிதில் ஒருமைப்படாது. அடிக்கடிப் பழகினால் அன்றி இந்நிலை வாராது. முரட்டுத்தனமாய்ப் பழகத் தொடங்கிவிட்டால் மனம் கட்டுப்படாது முடிவில் நமக்கு மனத்தளர்ச்சி உண்டாக, மேல் முயற்சி செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே மனம்போன வழி சற்றுவிட்டு அது திரும்பி மேல்போகாது வருங் காலங்களில் அதைப் பிடித்துப் பழகவேண்டும். இம்மாதிரி விட்டுப் பிடித்துப் பழகி முடிவில் தேறுவதற்கே முற்கூறிய ஒழுங்குகள் ஏற்பட்டுள்ளன. இது நன்கு விளங்குமாறு ஒரு உதாரணம் எடுத்துக் கொள்ளுவோம். ஒரு வெள்ளை வேஷ்டியில் ஒரு கறுப்பு பொட்டிட்டு, வேறெங்கும் பாய்ந்தோடவிடாது அதிலேயே மனதைச் செலுத்த முயலுவோம். நேராக அதையே பார்க்கத் தொடங்கிவிட்டால் கொஞ்ச நாழிகையில் அது மறைந்து போகும், கண் இருண்டுவிடும், பூச்சி பறக்கும். வேறு எங்கேயாவது பார்க்கவேண்டும் என்று தோன்றிவிடும். இப்படித் தொடங்காது, 'வஸ்திரம் எவ்வளவு பெரிது; வெண்மை, அதனிடம் இப்பொட்டு எப்படி வந்தது, இதன் வெண்மைக்கு ஒரு மாசுபோலிருக்கிறதே, இது சிறிதாயினும் என்ன சக்தி இதற்கு' என்றிவ்விதமாக அதனோடு ஸம்பந்தப்பட்ட விஷயங்களில் மனதை முதலில் செலவிட்டால், மற்றைய விஷயங்கள் மனதுள் புக இடமேற்படாது. இவ்வாறு கொஞ்ச நாழிகை கழிந்ததும் கறுப்புப்பொட்டில் மனதை நிறுத்தி நோக்கினால் முன்னைவிட அதிக நாழிகை மனம் அங்கேயே நிற்கும். இக்கருத்தையே எல்லா நிலைக்கும் பொருந்தும்படி ஞானவாஸிஷ்டத்தில் 'வெளியே ஓடித்திரியும் சண்டிமாட்டை எவ்வளவு கட்டியும் அது அறுத்துக்கொண்டே போய்விடும். அதற்குப்புல்விட்டுக் கட்டிவிட்டால் பசுப்போல ஸாதுவாகக் கிடக்கும். இதுபோல விஷயங்களில் ஓடியாடுமனதை முரட்டுத்தனமாகத் தகையாது, அதைக் கவரும்படியான உள் விஷயங்களைக் கொடுத்து வசப்படுத்தவேண்டும்' என்று சொல்லியிருக்கிறது.

முற்கூறிய பூஜை ஒழுங்குகள் எல்லாம் இவ்வுள்விஷய வசிய வஸ்துக்களே. இவைகளுக்கும் மேல்ஞான நிலையில் உள்ள விஷயங்களுக்கும் நிரம்ப ஸம்பந்தமுண்டு. அவ்விஷயங்களையே இம்மாதிரியாக உருவகப்படுத்தி முதலில் எல்லோரும் பின் பற்றும்படி நமது பெரியோர் ஏற்படுத்தி இருக்கின்றனர் என்பதைப் பின்னர் நன்கு விளக்குவோம்.

நமது பூஜாமுறைகளை விளையாட்டு விஷயங்கள் என்று குற்றங் கூறுவோர் எல்லோரும் அக்ஞானிகளில் மிகத்தாழ்ந்தவர்கள் என்று முன்னரே கூறியாகிவிட்டது. இவர்கள் தொழில்கள் இவைகளைவிடக் கேவலமான சிறுபிள்ளை விளையாட்டுக்கள். இவர்களுக்கு ஆராதனை யோக்யமான சுத்த விக்ரஹங்களில் கல்லும் செம்பும் விளையாட்டும் தோன்றுகின்றதே ஒழிய, வெறும் கட்டை போன்றதாகிய தம் உறவினர் பிணத்தில் மிகுந்த அன்பும், விஷய ஸுகங்களில் வாம்புகிடந்த கனிவும், தம்மால் மதிக்கப்பட்ட

...ர் பட்டங்களில் ஒருவித ஸத்தியபுத்தியும், லௌகிகக்கொண்டாட்டங்களில் மிகுந்தபரபரப்பும் இதுபோன்ற சிறுபிள்ளை விளையாட்டையும்விட கேடுகெட்டதென்று யுக்தி பூர்வமாகத் தோன்றுபவைகளில் மிகுந்த மனப்பற்றும் காணப்படுகிறது. இவர்களிடம் உள்ள விளையாட்டுக்களைவிட மிகச் சிறந்தது பூஜை என்னும் விளையாட்டு. இவைகளைக் கைக்கொள்பவர்கள் பூஜையைப் பழிப்பதனால் அவர்களுக்கு வீண் பாபம் வருமே ஒழிய வேறொன்றுமன்று. உலக விளையாட்டுக்களிடையில் ஒரு விளையாட்டைக் கற்பித்து இவைகளை விட்டு நீங்கி ஸுகிக்க நமது முன்னோர் ஏற்பாடு செய்தால் இவைகளை அங்கீகரியாது உதறித்தள்ளும் அவஸரக்காரர்கள், மருந்து கொடுக்க வந்த வைத்தியனைக் கொன்று வியாதியை வைத்துக் காப்பவர்களுக்குத் தம்பிமார்களோ தமயன்மார்களோ அறியோம்!

முற்கூறிய பூஜை ஒழுங்கிலேயே இருந்து மனம் குவியப்பெற்று வரும் உத்தமனை அப்படியே இருந்துவிட இடங்கொடுப்பார்களா நமது பெரியோர்கள்! தகுந்த தருணம் வருங்கால் ஆராதிப்பவன் மனதில் 'எங்குமிருப்பவனை ஆவாஹனம் செய்வதெப்படி? ஸர்வாதாரனுக்கு ஆஸனம் கொடுப்பதெப்படி? பரமசுத்தருக்கு அபிஷேகமெதற்கு? அனந்தரைச் சுற்றிவருவதெப்படி? ஏகமேவாத்விதீயரை வணங்குவதெங்ஙனம்? ஆதலால் உண்மையாராதனம் யாதெனில் 'நானே அவன், அவனே நான்' என்ற பிரக்ஞை மாறாதிருப்பதே' என்ற ஆசார்யாள் வாக்கியம் மெதுவாக வந்து தாக்கும். ஆகவே அவன் பூஜை ஸமயத்தில் பரம்பொருளிடம் மனதைச் செலவிட்டதுபோலக் கூடியவரையில் மற்றெல்லா ஸமயங்களிலும் செலவிடுவான். ஆதியில் உதவிய பூஜையை விட அவனுக்கு மனம் வருமா? அதிலிருந்துதானே மனத்தின் ஒருமை ஸம்பாதித்திருக்கிறான். அதிலிருந்து ஏற்பட்ட மனோஜயத்தைத் தானே எப்பொழுதும் அவன் நிலைத்து நிற்கும்படி செய்ய முயலுகிறான்.

இப்படி இவன் பழகி யத்தனிக்கையில் இவன் பூஜாகாலங்களில் செய்துவரும் ஆவாஹனாதித் தொழில்களை நமது பெரியோர் தியானபரமாகப் பொருள்படுத்தி, அந்தத் தொழில்கள் செய்யும் பொழுதும் மனம் பரம்பொருளில் உள்ளபடி நிற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். ஆனால் நண்பர்களே! இந்நிலை வருவதற்கு முன் விக்ரஹாராதனத்தில் ஒருவன் பழகியிருக்க வேண்டும் என்பதை மறந்து நாமும் இப்படித்தான் பூஜை செய்கிறோம் என்று எண்ணிக் கர்விக்கலாகாது. இங்கு இவ்விஷயங்களை எடுத்துக் கூறுவதனால், விக்ரஹ ஆராதனைக் கிரமங்கள் மேலான நிலையில் இவ்வாறு கருதப்படுகின்றது என்பதை மாத்திரம் அறிந்து, அதற்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டும் என்று தெரிந்துகொள்ளுங்கள்.

ஞானவாஸிஷ்டத்தில் 'பாவனைகளை நாசம் செய்வதே உண்மையான பூஜை. தேஹம் நான் என்ற எண்ணம் வரவொட்டாது அடிப்பதே ஆராதனை. பார்த்தவிடமெல்லாம் பரவெளியாகக் கருதி வணங்குவதே ஆத்மநிஷ்டர்கள் செய்ய வேண்டிய நமஸ்காரம். வந்ததைக்கொண்டு திருப்தியுடனிருப்பதே ஞானார்ச்சனம்.' என்று சுருக்கமாக உபசாந்திப்ரகரணம் தேவபூஜைக்கதையில் கூறப்பட்டிருக்கிறது. மண்டலப்ராஹ்மண உபநிஷத்தில் இக்கருத்தினை நன்கு விஸ்தரித்திருக்கிறது. 'வியவஹார ஒடுக்கமே ஆவாஹனம். பரமஞானமே ஆஸனம். பரிசுத்த பரமானந்த மனமே; பரம்பொருளுக்கு(துரிய)பாத்யம். சித்த சமாதானமே அர்க்யம். மனதில் சிதானந்த அமிருதம் ஓயாது ஊறிக்கொண்டிருப்பதே அபிஷேகம். எங்கும் பரம்பொருளைக் காணுவதே சந்தனம். ஆத்மக்ஞானமே அக்ஷதை. திருப்திதான் புஷ்பம். சிதாகாச அக்கினியே தூபம். சிதாகாச ஸூர்யனே தீபம். அமிருத தாரையான சந்திர பிரவாஹத்துடன் கலப்பதே நைவேத்தியம். நிச்சலம் பிரதக்ஷிணம். நானே ஆத்மா என்ற உணர்ச்சி நமஸ்காரம். மௌனமே சிறந்த ஸ்தோத்திரம்.' இக்கருத்தையே தாயுமானவர் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்.



னுள்ளுமறியாமன்று பலி கொடுத்தேன், கர்ம
துஷ்டதேவதைகளில்லை!
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பனன் பபிஷேகநீர்,
உள்ளுணரையில் என்னுவி நைவேத் யம்பிராண
னேங்குபதி தூபதீபம்,
ஒருகாலம் அன்றிது ஸதாகால பூஜையா
வொப்புவித் தேன், கருணைகூர்
தெள்ளி மறைவடியிட்ட வமுதப் பிழம்பே!
தெளிந்ததே னேஜீனியே!
திவ்யரஸம் யாவும் திரண்டொழுகுபாகே!
தெவிட்டாத ஆனந்தமே!
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்
கலக்கவரும் நல்லஉறவே!
கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும்
கருணாகரக் கடவுளே!

இவைகளிலிருந்து மேல் நோக்கிப் போகுங்கால் விக்ரஹாராதன காலங்களில் செய்த கர்மங்கள் தடையாகாவண்ணம் பொருள்படுத்தப்படுகின்றன. இவ்வாறு செய்து கரை ஏறியவர்களுள் ஒருவர் இங்கு (திருமயிலையில்) அவதரித்த வாயிலா நாயனார் என்பவர். (தொகுதி 2, 296-ம் பக்கம் பார்க்க.)

இனிக் கோயில் ஸம்பந்தமாக ஒவ்வொருவனும் செய்யவேண்டும் ஆராதனைக்கிரமத்தை ஒருவாறு சுருக்கிக் கூறுவோம். கோயிலுட் சென்றதும் கொடிமரத்தருகில் நமஸ்காரம் செய்து ஸ்வாமி அம்மன் இன்னும் அங்கிருக்கும் பகவத் பக்தர்கள் எல்லோர் முன்னிலையிலும் சென்று துதிசெய்து பிரதக்ஷணம்சென்று வெளியில் வருகையில் நமஸ்காராதிகள் செய்து ஸ்வாமியைத் துதித்து வரவேண்டும். கோயில் சென்றால் கடவுளைத் துதிக்கவேண்டுமே ஒழிய, உலக விஷயங்களைப் பற்றிய வேண்டுகோள்களை எடுத்துரைக்கலாகாது. இப்படி இருப்பினும், அநேகர் அவ்வாறு செய்ய எண்ணியே கோயிலுக்குப் போவது வழக்கம். அங்குப் பெரியோர்களும் சுத்த மனதுடன், வருவார்களாதலால், நம்மைப் போன்ற காம்யபக்தர் உலகவிஷயப் பற்று வரவரக் குறைய முடிவில் நாமும் சுத்தராகலாம். ஏக்க எண்ணத்துடன் கோயிலுக்குச் சென்றபோதிலும் நாளடைவில் மனம் சுத்தமாகி நிராசை ஏற்படும்.

இவ்வாறு ஏற்படக்கூடிய விஷயங்கள் கோயிலில் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பின்னர் விவரிப்போம்.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 7. எண்ணெழுத்திகழேல்

கணிதத்தையும், இலக்கியத்தையும் இகழாதே என்பது இதன் பொருள். எண் என்ற பதம் அதனாலாகிய கணித சாஸ்திரத்திற்கும், எழுத்து என்பது அதனாலாகிய சொல்லால் ஏற்படும் நூல்கள் ரூபமாக விருக்கும் இலக்கியங்களையும் குறிக்கும். இவை இரண்டையும் எப்பொழுதும் நன்கு மதிக்கவேண்டும் என்பதாயிற்று. ஆகவே சிலர் அதை அவ்வாறு மதிக்காமலிருப்பர் என்பதுமாயிற்று. அறியாதவர் இவைகளைக் கற்குங்கால் ஏற்படும் கஷ்டங்களைக் கண்டு மலைத்துப் போய் இவைகளைப் பாடுபட்டுக் கற்பதால் யாதொரு பயனும் இல்லை, வீண்முயற்சிதான் மிகுந்து நிற்கும் என்று இகழ்வர். அப்படியிருக்க ஏன் இதை இகழாதிருக்கவேண்டும் என்ற சங்கை பிறக்கும். இதற்குப் பதிலாக 'கல்வி தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்' என்றும், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்றும் அறிவுடையோர் கூறியிருக்கும் வாக்கியங்களை எடுத்துக் கூறலாம். அதாவது எவ்விதக் கல்வியும் தொடக்கத்தில் கஷ்டமாகவிருந்தபோதிலும் முடிவில் அறிவை வளரச்செய்து மனதிற்கு அக்ஞானத்தால் உண்டாகக்கூடிய சஞ்சலத்தைத் தீர்த்து ஸுகமுண்டாக்கும். இம்மாதிரியான கல்விகளுக்கு எல்லாம் எண்ணும், எழுத்தும் கண்ணுக்கு ஸமானமானது. அதாவது எப்படிக் கண்ணால் எல்லா வஸ்துக்களையும் பார்த்து அறிவைப் பெறுகிறோமோ அப்படியே எண்ணிலும் எழுத்திலும் தேர்ச்சியடைந்த பின்னர்தான் அவை மூலமாக மற்றைய கல்விகளில் தேர்ந்து முதிர நம்மால் முடியும். ஆதலால் முதலில் ஏற்படக்கூடிய சிறு இடையூறுகளைக்கொண்டு மனம் தளர்ந்து இவைகளை அறிவிலிகள்போல் இகழவேகூடாது என்பது இந்நீதி வாக்கியத்தின் பொருள்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பதன் கருத்தைச் சற்று விஸ்தரிப்போம். உலக விஷயங்களை நன்கு அறிந்து ஒவ்வொரு ஸமயத்திலும் நடப்பதற்கு இரண்டுவித சக்தியில் நாம் தேர்ந்திருக்கவேண்டும். இதை நன்கு விளக்க ஒரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். பொதுவாக ஒருவரையும் ஹிம்ஸை செய்யலாகாது என்றிருக்கிறது. இதன் சிறப்பு இன்னது என்பதை விசாரித்து நமக்கு இதன்படி நன்றாக நடந்துவரத் திறன்வேண்டும். அதற்கு, இந்த விதியின் பொருள் என்ன, இதைப் பின்பற்றி பெரியோர் இவ்வாறு மேன்மை அடைந்தனர், என்ற விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசித்து இதைப் பின்பற்றுவதற்கு வேண்டிய திடம் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதற்கு எல்லா ஸமயங்களிலும் முடியாமற் போகலாம். நாம் ஒரு ரண வைத்தியன் என்று வைத்துக்கொள்ளுவோம். நமது நண்பன் ஒரு கட்டியால் மிக வருந்துவதைக் கண்டு, அவன் கட்டியை இந்த ஒழுங்குப்படி கருவி யிட்டாற்றாமலிருப்பதா? அல்லது ஒன்றையும் கவனியாது அறுத்து ஆற்றுவதா? என்ற சங்கை பிறக்கும். இதை ஸமயத்தை உத்தேசித்து, அறுத்தே ஆற்ற வேண்டும், ஆனால் அவனுக்கு அறுப்பதனால் உண்டாகும் கஷ்டத்தைத் தவிர வேறுவிதக் கஷ்டம் தோன்றாது செய்யவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு மனதிற்கு ஒருவித குவிவும், ஒருவித விரிவும் வேண்டும். ஒருவிதியின் சிறப்பைக் காணுங்கால் குவிவும் அவ்விதியை மற்றைய விஷயங்களோடு ஸம்பந்தப்படுத்துங்கால் இவ்வாறு மாற்றிக்கொண்டு செலுத்தவேண்டும் என்பதைக் காணுங்கால் ஒருவித விரிவும் அவசியம். ஆதலால் எந்த விஷயத்தையும் உணர்ந்து தேர்ச்சி அடைவதற்கு மனதைத் தக்கபடி குவிந்து நிற்கும்படியாகவும் விரிந்து நிற்கும்படியாகவும் செய்யும் திறன் நமக்கிருத்தல்வேண்டும். சிறு வயதில் உலக விஷயங்கள் மூலமாக முற்றிலும் இந்தத் திறன் வரும்படி செய்ய முடியாது. ஆகவே இம்மாதிரியான சக்திகளை உண்டாக்க எண்ணும் எழுத்துமே முக்கிய ஆதாரங்கள். எண் மனக்குவிவையும், எழுத்து அதாவது பெரியோர் மதுரமொழிகள் மனவிரிவையும் உண்டாக்கும் குணமுடையன. இவ்வாறு உண்டாகும் இருவித சக்தியைக் கொண்டே மற்றைய விஷயங்களை அறியவேண்டி யிருத்தலால் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றார் பெரியோர். மேலும் எண் உலக வியவஹாரங்களில் கணக்கு வழக்குப் பார்க்கவும், எழுத்து பிறருடன் பழகுங்கால் வாக் சாதுர்யம் முதலியவைகளையும் கொடுப்பதால் இவை இவ்வாறு கருதப்பட்டன என்பதும் பொருந்தும்.

எண்ணென்பதற்கு நிபந்தனைகளுக்கு அடங்கி ஒழுங்குபட்டிருக்கும் தர்க்கசாஸ்திரம் என்பது பொருள் என்று கொண்டு தர்க்கமும் இலக்கியமும் இகழத்தக்கவைகளல்ல என்று இவ்வாக்கியத்தைப் பொருள் படுத்துவாரும் உளர்.

சிறுவயதில் எண்ணும் எழுத்தும் கற்பது மிகக் கஷ்டமாக இருக்கின்றது என்று எண்ணி அநேகர் இவைகளைக் கவனியாது விட்டுவிடுவார்கள். இவைகளை விட இன்பமாக விருக்கும் விளையாட்டுக்களில் மனத்தைச் செலவிட்டுத் தாய் தகப்பனார் என்ன சொல்லியும் கேளாது, அவர் வேறுவேலையாகஇருக்குங்கால் ஓயாது விளையாடி, கண்டிக்குங்கால் இவைகளை இகழ்ந்துகொண்டே படிப்பதுபோலப் பாசாங்கு செய்வார்கள். இவ்வாறு செய்வதால் இவைகளில் தேர்ச்சி ஏற்படாமல் போக வரவர இவர்கள் மூடர்களேயாகிறார்கள். தகுந்த வயதுவந்து உலகநடவடிக்கையில் கலக்குங்கால் சோற்றுக்குக்கூட [illegible]தியற்ற நிலை வந்து விடுகின்றது. மனது எழுத்தால் (இலக்கியங்களால்) ஏற்படக்கூடிய பரிசுத்தத்தை அடையா திருப்பதால், தேர்ந்தவர்கள் கவலையின்றிக் காலங்கழிப்பதைக் கண்டு பொறாமை ஏற்படுகின்றது. 'இவர்களைப்போல நாம் கல்வி கற்காமல் போய்விட்டோமே! கிடந்து தவிக்கிறோமே!' என்ற ஏக்கம்பிடிக்க முன்னர் எண்ணெழுத் திகழ்ந்ததைப்பற்றி எண்ணி எண்ணித் துக்கிப்பார்கள். பரிசுத்த மில்லாத இவர்கள் மனம் ஏழ்மையால் தாக்கப்படுங்கால் கெட்ட வழியில் ஓடி, ஸ[illegible]கிக்கும் அறிஞர்களைக் கஷ்டப்படுத்துவதிலும், அவர்கள் பொருளை அபகரிப்பதிலும் பாய்ந்து செல்லும். இவர்கள் சூது வெளியானால் இவ்வுலகில் ராஜதண்டனைக்கு உள்ளாகி வருந்துவார்கள். வெளியாகாது இவர்கள் தப்புவித்துக்கொண்டுவந்தால் அடிக்கடிக் கெட்ட வழியில் பழகி ஜன்மாந்தரங்களையும் கெடுத்துக் கொள்ளும் பாபிகளாவார்கள். ஆகவே எண்ணெழுத்துக்களை இகழ்ந்து கவனியாது விட்டுவிட்டால் பெருங்கேடு விளையும் என்பது திண்ணம்.



## 8. ஏற்பதிகழ்ச்சி

'கொடுப்பதை ஏற்றுக்கொள்வது எப்பொழுதும் தாழ்ந்த விஷயமே என்பது இதன் பொருள். பொதுவாக நற்குணங்களைப்பற்றிக் கூறுங்கால் மஹான்கள் 'நற்குணமானது குணமுடையவனையும், அதனால் பயன் அடைபவனையும் ஆகிய இருவரையும் மேன்மைப்படுத்தும். ஆதலால் நற்குணம் இருவிதச் சிறப்புடையது. அது படிபடியாக உடையவனை ஆத்மகுண ஸம்பூர்ணனாக்கிக் கடவுளைப்போற் பரிசுத்தனாக்கிவிடும். ஆதலால் அவைகளில் ஒருவன் விடாது பழக வேண்டும்' என்று கூறுவது வழக்கம். தானம் செய்வது நற்குணங்களில் ஒன்று. இதுவும் முற்கூறிய குணமுடைத்தாதல் வேண்டும். உற்று நோக்குங்கால் ஒழுங்குப்படி செய்தால் தானம் கொடுப்பவனுக்கு மேன்மையே ஒழிய வாங்குபவனுக்கு இழிவு என்பது நன்கு விளங்கும். இதுபற்றியே ஔவையாரும் 'ஏற்பதிகழ்ச்சி' என்று கூறி 'ஈவது புகழ்ச்சி' என்பதை த்வனிக்கும்படி வைத்தாள்.

தேஹி என்று கேட்பவன்பாடு என்றைக்கும் கஷ்டம்தான். இந்நிலைக்கு வரும் முன்னரே யாசகன் எல்லாம் இழந்து உலகில் படாதபாடெல்லாம் பட்டு மொத்துண்டிருப்பான். இது போதாதென்று யாரை வந்து கேட்கிறானோ அவன் நிலை எப்படி இருந்தாலும் அதன்படி எல்லாம் இவன் ஆடவேண்டும். அவன் கோபவேளையில் கூறும் கொடிய மொழிகளை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு தன் காரியத்தில் கண்ணாகவிருக்கவேண்டும். இவ்வளவு இகழ்ச்சி பிச்சை கேட்பதில் இருப்பதால் மானிகள் இந்நிலைக்கு வருங்கால் இறப்பார்களே ஒழிய உயிர் தரித்திரார். பிச்சை எடுத்தே ஜீவிப்பவர்கள் சிலர் உண்டு. அவர்களுக்குத் தானம் வாங்குவதன் இழிவு நன்றாகத் தெரியவருமாயின், அவர் திருந்துவதற்கும் இடமுண்டு. க்ஷணசித்தம் க்ஷணபித்தமாகிய தனவான்கள் கொடுமைக்கு ஆளாகி அவதிப்பட்டு ஜீவிப்பதைவிட தாம் ஒரு தொழிலில் இறங்கி அதன் மூலமாக மானமாய்க் காலம் கழிப்பது நலம் என்பது அவர்களுக்குக் கஷ்டம் அதிகமாகும் சில காலங்களில் தோன்ற அவர்கள் சீர்திருந்தலாம். ஆகவே இந்நீதி வாக்கியம் கூடியவரை இரவாதிருக்கும்படியாகவும், வெட்கம் கெட்டவர்களைக் கூடிய சீக்கிரத்தில் இரவாதிருந்து விடும்படியாகவும் தூண்டும்.

இந்நீதி வாக்கியத்தின் கருத்தை 'என்ன விருந்தாலும் கொடுப்பவன் கைமேல், வாங்குபவன் கை கீழ்தானே' என் [illegible] மொழியும் நன்கு விளக்கும்.

இக்[illegible]ருத்தை நன்கு வெ[illegible]ளியிடும் கதை யொன்று மஹாபாரதம் **சாந்தி பர்வத்தில்** காணப்படுகின்றது. பீஷ்மர் பின்வருமாறு தர்மபுத்திரரை நோக்கி உபதேசம் செய்கிறார். 'தானம், கொடுப்பவனையும் வாங்குபவனையும் ஸ[illegible]கப்படுத்துகிறதாயினும், வாங்குபவனுக்கு அவ்வளவு சிறப்பு ஏற்படாது நல்லவர்களிடமிருந்து வாங்குவது அவ்வளவு ப[illegible]மன்று. கெட்டவர்களிடம் தானம் வாங்குவது மி[illegible]ந்த பாபம். முன் காலத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட ஸப்த ரிஷிகளும், அருந்ததியும் சாப்பிட ஒன்றும் அகப்படாது தத்தளித்தனர். அப்பொழுது தாங்கள் ஒரு யாக காலத்தில் பெற்றிருந்த ராஜபுத்திரன் ஒருவன் பசி தாங்காது இறந்துவிட்டான். அவன் மாம்ஸத்தின் மூலமாகவாவது பசி அடக்கலாம் என்று

எண்ணி அவர்கள் அந்தப் பிணத்தைச் சூழ்ந்துகொண்டனர். இந்த ஸமயத்தில் அங்குத் தற்செயலாய் வந்த விருஷதர்ப்பன் என்ற ராஜகுமாரன் ஒருவன் இவர்கள் கஷ்டங்களைக் கண்ணுற்று, சிறந்த தானங்கள் செய்து திருப்திப் படுத்துவதாகக் கூறினான். 'நாங்கள் நிர்க்கதியாகப்போனால் பாகாதி காலங்களில் ஒருவேலை வஹித்துத்தான் தானம் வாங்கலாமே ஒழிய, இப்பொழுது வாங்கவே கூடாது' என்று கூறி அவர்கள் மறுத்துவிட்டனர். ராஜகுமாரன் எவ்வளவு தந்திரமாகப் பார்த்தும் அவர்களைத் தானம் வாங்க இசையும்படி செய்ய முடியவில்லை. ஒரு ஸமயம் சில பழங்களில் தங்கத்தை மறைத்துவைத்து மந்திரி மூலமாக அனுப்புவித்துப் பார்த்தான். பழம் கனமாக விருப்பதைக் கண்டு அவர்கள் கீழே எறிந்துவிட்டனர். அரசனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. ஒரு ஆபிசாரஹோமம் செய்து அதிலிருந்து கிளம்பிய **யதூதனி** என்ற ராக்ஷஸியை நோக்கி, 'என் தானத்தை மறுத்து என்னை அவமானப்படுத்திய ஸப்த ரிஷிகளின் பெயர்களை நன்றாக விசாரித்துப் பின்னர் அவர்களைக் கொல்வாயாக' என்று கட்டளையிட்டான். உடனே யதூதனி ஒரு குளக்கரையில் வந்து தங்கினாள். உண்ண ஒன்றுகிடையாது. ஸப்தரிஷிகள் அலைந்துகொண்டுவருகையில் நன்றாகக்கொழுத்த தேஜோவானான சுனசகர் என்ற ரிஷியும் வந்து சேர்ந்தார். பஞ்சத்தின் கஷ்டம் இவருக்கு இல்லை என்று கண்டு இவரையும் கூட்டிக்கொண்டு தற்செயலாய் யதூதனி காத்திருந்த குளத்திற்கே இவர்களும் வந்தனர். குளத்தில் இளம் தாமரைத் தண்டுகள் ஏராளமாக விருந்தன. அவைகளை உண்ணுவதற்காகக் கொய்யத் தொடங்கினர். யதூதனி அவர்களை மறித்துக்கொண்டு 'உங்கள் பெயர்களையும் அவைகளின் உட்பொருள்களையும் கூறுங்கள். பின்னர்தான், குளத்துள்ளிறங்கலாம்' என்றாள். அவ்வாறே ஒவ்வொருவரும் கூற, முடிவில் சுனசகர் தமது பெயரைச் சொன்னார். அவர் பெயர் யதூதனி வாயில் நுழையவே இல்லை. யதூதனி 'மறுபடியும் கூறவேண்டும்' என்று கேட்க, கோபம் கொண்டு அவர் யதூதனியை அடித்துக் கொன்று விட்டார். பின்னர், எல்லோரும் குளத்துள்ளிறங்கித் தாமரைத் தண்டுகளைக் கொய்து கரையில் போட்டனர். ஸப்தரிஷிகள் அனுஷ்டானம் செய்துவிட்டு வந்துபார்க்குங்கால் ஒருதண்டைக்கூடகாணோம். ஒவ்வொருவரும் தாம் எடுக்கவே இல்லை என்று ஸத்தியம் செய்து, அப்படி எடுத்திருந்தால் கொடிய பாபிகளுக்கு வரும் நரகம் வரட்டும் என்று சபதமும் செய்தனர். சுனசகரோ தான் எடுத்திருந்தால் புண்ணியவான்களுக்கு வரும் மேலான பதவிவரட்டும் என்று சபதம் செய்தார். இதென்ன விபரீதம் என்று ஸப்தரிஷிகள் திகைத்து நிற்கையில் சுனசகர் தமது ஸ்வயரூபமாகிய இந்திர உருவமெடுத்து, 'நீங்கள் சுத்தாத்மாக்கள், மன உறுதி உடையவர்கள். இக்கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஸஹாயம் செய்யவேண்டும் என்று நானே வந்து யதூதனியைக் கொன்று உமது நேர்மையைப் பரிசோதிக்கத் தாமரைத்தண்டுகளையும் ஒளித்தேன். எனக்குத் திருப்தியாகிவிட்டது.' என்று கூறி மறைந்தார். ரிஷிகள் தாமரைத்தண்டுகளை உண்டு யதேச்சையாக ஸுகமாக உலாவலாயினர்.'

குட்டிகள்.—தேள் பார்வைக்கு ஒரு பூச்சிபோல் இருந்தாலும் பூச்சிகளைப்போல் முட்டையிடுவதில்லை. பூனை, நாய் இவற்றைப்போல் குட்டிகளையே போடும். தடவைக்கு எட்டு முதல் முப்பது வரையிலும் குட்டிகள் போடும். குட்டிகள் சற்றுப் பெரிதாகிறவரையிலும் தாய் தன்முதுகில் அவைகளைத் தூக்கிக்கொண்டு தான் போகும் இடத்திற்கெல்லாம் கொண்டுபோகும். தாயின் முதுகைக் குட்டிகளானது ஒரு கும்பலாகக் கெட்டியாய்ப் பற்றிக்கொள்ளும். பெண் தேளுக்கு முதுகு கொஞ்சம் அகன்றிருக்கும். தேளுக்குத் தேகத்தில் இரண்டே பாகங்களும் எட்டு கால்களும், நான்கு கைகளும் எட்டுச் சுவாசப் பைகளுமிருக்கின்றன. ஆதலால் அது பூச்சி வர்க்கத்தைச் சேர்ந்ததல்ல.

—ஜீவவர்த்தகபோதினி.



## 7. சூரியனும் பூமியும்—வருஷகதி

### THE SUN AND THE EARTH
### ANNUAL MOTION

இரவு முழுதும் மினுக்கு மினுக்கென்று நீலப்பட்டில் தெளித்த வைரக்கற்கள்போல ஒளியை உதிர்த்துக்கொண்டிருந்த நக்ஷத்திரங்களெல்லாம் அருணோதயமாகும்பொழுதே பிரகாசத்தை இழந்து வெள்ளைப்பூண்டுகள்போல், தேஜோமூர்த்தியான சூரியனுதிக்கும் காலங்கிட்டியதை யறிந்து வெட்கி ஒளிவதுபோல் கொஞ்சங் கொஞ்சமா யிருந்தவிடத்திலேயே மறைந்து விடுகின்றன. பூனைக்குப் பயந்து பொந்துகளுக்குள் ஓடி ஒளிந்த எலிக்கூட்டங்கள் அப்பூனை விலகியவுடன் பொந்துகளைவிட்டுத் தைரியமாய் வெளிவந்து சஞ்சரிப்பதுபோல, சூரியாஸ்தமன காலமறிந்து வெட்கத்தைவிட்டுச் சுயகாந்தியுடன் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கவும் ஆரம்பிக்கின்றன. சென்ற இரவு முழுதும் ஆகாயத்தில் எவ்வழியாக எவ்வேகத்துடன் சஞ்சரிப்பதாகத் தோன்றினவோ அதே வழியாக அதே வேகத்துடன் மறுபடியும் ஓடியுலாவுகின்றன. ஆனால் ஓரிரவில் பிரகாசிக்கும் நக்ஷத்திர மண்டலங்கள் மறுநாளுதயத்தில் அழிந்துவிடுகின்றனவென்றும், அடுத்த இரவில் புதிய நக்ஷத்திரங்கள் உதிக்கின்றனவென்றும் எண்ணுவதற்கு ஹேது ஒன்றுமில்லை. பகற்காலத்திலேயே, சூரிய வெளிச்சம் கொஞ்சங்கூட எட்டாதவிடத்தினின்று ஆகாயத்தைப் பார்த்தால் நக்ஷத்திரங்களைக் காணக்கூடும். ஆழ்ந்த சுரங்கங்களிலிறங்கி வேலை செய்யும் சுரங்கவெட்டிகள், அச்சுரங்கங்களின் வாய் வழியாகப் பகற்காலத்திலேயே நக்ஷத்திரங்களைப் பார்த்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பூரண சூரிய கிரகணகாலங்களில் இருள் சூழ்ந்தப் பிரதேசங்களிலிருக்கும் ஜனங்கள் பிரகாசமுள்ள சில பெருநக்ஷத்திரங்களைக் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

நாமிருக்குமிடத்திலிருந்து பூமிக்குள் ஊடுருவிச் சென்று, நமக்கு நேரெதிராகப் பூமியுருண்டையின் மறு பாகத்திலிருக்கும் அமெரிக்கா கண்டத்தில் வெளிப்படும்படி, நேராக ஒரு துவாரம் தோண்ட முடியுமானால், அத்துவாரத்தின் வழியாக அவ்வமெரிக்கா கண்டத்தாருக்குத் தோன்றும் ஆகாசமண்டலத்தின் அம்சம் நமக்குப் புலப்படும். நமக்குப் பகலாயிருக்கும்போது அத்தேசத்தாருக்கு இரவாதலால், அவ்வாகாசத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றிப் பிரகாசிப்பதையும் அத்துவாரத்தின் வழியாய் நாம் காணலாம்.

ஆகவே, இரவானாலும் பகலானாலும், நக்ஷத்திரங்களும் மற்றக் கிரகங்களும் எப்போதும் ஆகாசத்தில் பிரகாசித்துக்கொண்டேயிருக்கின்றனவென்றும், ஆனால் அவைகளின் அற்ப வெளிச்சம், சூரியனின் நிகரற்றப் பிரகாசத்தில் மறைக்கப்பட்டு நமது கண்ணுக்குப் புலப்படுகிறதில்லையென்றும் தெளிவாகிறது.

இப்பூமி 24-மணி நேரத்துக் கொருமுறை தன்னைத்தானே மேற்கிலிருந்து கிழக்கை நோக்கிச் சுற்றுவதால், சூரியன் முதலியவைகள் அத்திசைக்கு நேராய், கிழக்கிலுதித்து மேற்கிலஸ்தமிக்கிறதாகத் தோன்றுகின்றதென்று நாம் தெரிந்துகொண்டிருக்கிறோமல்லவா? இக்காரணம் பற்றி தினம்தினம் 12-மணி நேரம் வெயிலும், 12-மணி நேரம் இருட்டும் நமக்குக் கிடைத்து வருஷம் 365 நாளும் ஓரே விதமான அனுபவங்கள் நமக்கு ஏற்படுமென்பது நாமெல்லாரும் எதிர்பார்க்கக்கூடிய விஷயம். அப்படியானால், சித்திரை, வைகாசி, முதலிய சில மாதங்களில் சூரியன் அதி உக்ரமாகப்பிரகாசித்து, சகிக்க முடியாத தாபத்தை உண்டுபண்ணி நம்மை வருத்துகிறது. மார்கழி, தை முதலிய சிலமாதகாலங்களில், முன்போல் தாராளமாய் உஷ்ணத்தைத் தாராமல், நம்மைக் குளிரிலும் பனியிலும் விறைத்து நடுங்க விட்டுவிடுகிறது. மற்றுஞ் சிலமாதங்களில் ஓய்வொழி வில்லாமல் மழையைக் கொட்டி நம்மை வெளிவேலைகளைக் கவனிக்க வொட்டாமல் தடுக்கிறது. இவ்வநேகவித

மாறுதல்களுக்குக் காரணமென்ன? சற்று சாக்கிரதையாகக் கவனியுங்கள்.

மரஞ்செடி யில்லாத ஒரு அகன்ற மைதானத்தில் நாம் நின்றுகொண்டு தினம் தினம் சூரியனுதயமாகு மிடத்தைக் கவனித்து வந்தோமானால் அவ்விடம் எப்பொழுதும் ஒன்றாகவே இராமல் மாறிக்கொண்டே வருவதாகக் காண்போம். அதாவது, சிலநாள்களில் நமக்கு நேர் கிழக்கிலும், சிலநாள்களில் அதற்கு தெற்குப் பக்கமாகவும், மற்றநாள்களில் அதற்கு வடக்குப் பக்கமாகவும் சூரியன் உதிப்பதாகத் தோன்றுகிறது. அஸ்தமன காலங்களிலும், உதயகாலங்களில் தோன்றிய மாறுதல்களை யொற்று சில நாள்களில் நேர் மேற்காகவும், சிலநாள்களில் அத்திசைக்கு தெற்குப் பக்கமாகவும், மற்ற நாள்களில் வடக்குப் பக்கமாகவும் சூரியன் மறைவதாகக் காண்கிறோம். இதுவும் தவிர, எந்தெந்தத் தினங்களில் சூரியன் ஏறக்குறைய நேர் கிழக்கில் உதிப்பதாகத் தோன்றுகிறதோ, அத்தினங்களில் நமக்கு உஷ்ணம் அதிகமாகக் கிடைத்து வருத்துகிறோம். இதுதான் கோடைகாலம். நேர்கிழக்கிற்கு வெகுவாய் விலகி வடபாரிசமாகவாவது தென்பாரிசமாகவாவது உதயாஸ்தமனங்கள் உண்டாகும்பொழுது முன்போலச் சூர்யோஷ்ணம் அவ்வளவு கடுமையாக இராமல் குறைவு படுகிறதாக நாம் உணரலாம்.

இம்மாறுதல்களால் சூர்யோதயாஸ்தமன இடங்கள் வருஷத்தில் ஆறு மாதகாலம் வடக்கிலிருந்து தெற்கை நோக்கி நகருவதாகவும், மறு ஆறுமாதம் தெற்கிலிருந்து வடக்கை நோக்கி நகருவதாகவும் தோன்றுகின்றன. இம்மாறுதல்களையொத்தே நம் முன்னோர்கள் சூரியன் வடக்கை நோக்கி நகருவதாகக் காணப்படும் ஆறு மாதத்தை **உத்தராயனம்** (வடக்கு யாத்திரை—தைமுதல் ஆனி முடி) என்றும், மற்ற ஆறு மாதத்தை **தக்ஷிணாயனம்** (தெற்கு யாத்திரை—ஆடிமுதல் மார்கழி முடிய) என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அன்றியும், தக்ஷிணாயனமாரம்ப முதல் பகலின் நீளம் (கால பரிமாணம்) சூரியன் வடக்கு திசையாக செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டே வந்து, அவ்வயனக் கடைசி நாள் பகற்காலம் மற்ற பகல்களைவிட அதிகமாயிருப்பதாகவும், அதற்கு நேர் விரோதமாக உத்தராயனம் ஆரம்பித்தது முதல் பகல் கால அளவு க்ஷீணமடைந்துகொண்டே வந்து கடைசி நாளில் மற்றப் பகல்களைவிட குறைந்தும் காண்கிறது. ஒரு தின பரிமாணம் 24-மணியாதலால் பகற்காலமதிகரிக்கும்போதெல்லாம் இரவு குறைந்து கொண்டும், பகல் குறையும்போதெல்லாம் இரவு அதிகரித்துக்கொண்டும் வரவேண்டியதென்பதும் தெளிவாகிறது. நம் அனுபாவமும் இதுதான்.

இம்மாறுதலின் காரணத்தை அறிய பகற்காலத்தில் ஸாதனங்கள் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. இரவில்தான் ஏதாவது கிடைக்க வேண்டும். சூரியனுடைய கதி விசித்திரத்தைப் பற்றி அச்சூரியன் மறைந்த பின்னர் அதற்குப் பயந்து ஓடி ஒளிந்து இருந்த நக்ஷத்திரங்களைக் கேட்டுப் பார்ப்போம்.

இரவுதோறும் ஒரு குறித்தநேரத்தில் (8மணிக்கென்று வைத்துக்கொள்ளுவோம்) ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களின் ஸ்தானங்களைக் கவனித்தோமானால் இன்றைய தினம் அந்நேரத்தில் நமக்குத் தலைக்கு நேராக உச்சியில் தோன்றும் நக்ஷத்திரம், மறுநாள் அதே 8 மணிக்கு உச்சியில் வந்து சேராமல் அதற்குச் சுமார் 4 நிமிஷத்துக்கு முன்னடியே, அதாவது, 7 மணி 56 நிமிஷத்துக்கே உச்சிக்கு வந்து சேர்ந்து விடுகிறது. மறுநாளிரவில் அதே நக்ஷத்திரம் மேற்சொன்ன ஸ்தானத்திற்கு வந்து சேர 7 மணி 52 நிமிஷம் தான் ஆகிறது. ஆகவே இப்படி 15 தினங்களுக்குப் பிறகு 7 மணிக்கே அந்த நக்ஷத்திரம் உச்சியில் வந்து சேர்ந்துவிடும். இதேமாதிரி எல்லா நக்ஷத்திரங்களின் கதியும் மாறுவதாக நாம் கண்டுகொள்ளலாம். அவைகளின் உதயாஸ்தமனகாலங்களும் அதேவிதமாகத் தினந்தினம் சுமார் 4 நிமிஷம் முன் தள்ளப்பட்டுக்கொண்டே வரும். ஆனால் சூரியனுடைய கதியோ அப்படியல்ல. இன்றையதினம் பகல் 12 மணிக்கு உச்சஸ்தானத்தை யடைந்தால், எத்தினத்திலும் அந்த 12 மணிக்கே உச்சமாகிறது. ஆகையால் சூரிய கதியில் இவ்விதமான காலவித்தியாஸங்கள் இல்லாமலிருப்பதாகவும், ஒருநாளிரவு குறித்த நேரத்தில் நாம் காணும் நக்ஷத்திரங்கள், மறுநாளிரவில் அதே நேரத்தில் முன்னிருந்த ஸ்தானங்களிலிராமல், அவைகளுக்குக் கொஞ்சம் மேற்காக நகர்ந்திருப்பதாகத் தோன்றுகின்றன.

மேலும் இன்றைய தினம் 8 மணிக்கு உச்சமான நக்ஷத்திரம், மூன்றுமாத காலம் கழிந்த பிறகு, அதே 8 மணிக்கு அஸ்தமாவதாகக் காணப்படுகிறது. இப்படி ஒருவருஷகாலம் நாம் ஓய்வில்லாமல் ஆகாயப் பரீக்ஷை செய்துவந்தால், ஆரம்பித்த தினத்தினிரவில் எந்தெந்த நக்ஷத்திரங்கள் எந்தெந்த ஸ்தானங்களில் ஒரு குறித்த நேரத்தில் கண்டோமோ, அதே ஸ்தானங்களுக்கு அவையவைகள் திரும்பிவந்து விட்டதாகக் காண்போம். இது ஒரு பெரிய ஆச்சரியமான விஷயமல்லவா?

மேற்சொல்லிய மாறுதல்களை நீங்களே காணுமாறு, ஒருமாத காலம் நாம் அவகாசமெடுத்துக் கொள்வோம். இதற்கிடையில் முடிந்த வரையில் இராக்காலங்களில் கொஞ்சம் நக்ஷத்திர கதிப் பரீக்ஷை செய்துவிட்டு, அடுத்த மாதத்து 'போதினி'யில் இவ்விஷயத்தைப்பற்றி முற்றும் விசாரிப்போம்.

**எஸ். பாலகிருஷ்ண அய்யர், பி. ஏ., எல். டி.**



## மலேரியா என்னும் விஷஜ்வரம்

### *MALARIA*

மலேரியா அல்லது விஷஜ்வரமென்பது அபாயகரமான ஒரு வியாதி; இதனால் பிரதி வருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு—முக்கியமாய் யௌவன பருவத்திலுள்ள ஜனங்களுக்கு—தேகதுர்ப்பலமோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக்கொண்டிருக்கிற கிருமிகளால் இந்த வியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளை யணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பிடித்து அவைகளில் பலவற்றை அழித்துவிடுகின்றன; இக்காரணத்தினால்தான் விஷஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்துபோகிறான். மேலும் மேல்படி கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்கமும் நோயும் ஏற்பட்டு இதனால் காலக்கிரமத்தில் ஜ்வரக்கட்டி உண்டாகிறது. விஷஜ்வரக் கிருமிகளில் மூன்றுவகைகள் உண்டு! அவற்றுள் ஒரு வகையானது வெகு வேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி இருபத்துநாலு மணிநேரத்துக்கொருதடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொரு வகையான கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக்கொருதடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணிநேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜ்வரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக் காணும் ஜ்வரம் இன்னவிதமென்பது கொசுக்கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்னவிதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை

அனுசரித்ததாகும். முதல் வகையான கிருமியாயிருந்தால், அவனுக்குப் பிரதி தினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்றுவிட்டு ஒருநாள் ஜ்வரம் வரும் (இது சர்வ சாதாரணமானது); மூன்றாம் வகையானதாயிருந்தால் மூன்றுநாளைக் கொருதரம் ஜ்வரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும் நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால்தான் மேற்கண்டபடி ஜ்வரம் வரும்.

இம்மூன்றுவகைக் கிருமிகளில் ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொரு விதமான ஜ்வரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்த கிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள் மற்றொரு வகையைச் சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பட்சத்தில் கிருமியின் தோற்றத்தைக் கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜ்வரம் கண்டிருக்கிறதென்று சாமர்த்தியமுள்ளவொருவன் உடனே சொல்லக்கூடும்.

விஷஜ்வரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்தக் கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக் கூடும்; ஒவ்வொரு இரத்தத்துளியிலும் அவை நூற்றுக்கணக்காய் இருக்கின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத்துளிகளை உறிஞ்சுவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தைக் கொசுக்கள் உட்கொள்ளுகின்றனவோ அந்தமனிதனுடைய இரத்தத்தில் விஷஜ்வரக்கிருமிகள் இருக்கும்பட்சத்தில், அந்தக்கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுக்களின் இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அநோபிலிஸ் (anopheles) என்னும் ஜாதியைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வகையானதாயிருந்தால் அதன் இரைப்பையிலே ஷ கிருமிகளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின் மூலமாய்த் துளைத்துக்கொண்டு அவ்வவயத்தின் சவ்வுகளுக்குள் சென்று கடைசியாக அதன் உமிழ் நீர்க்கோளங்களில் பிரவேசிக்கும். அந்தக் கொசு மனிதனைக் கடிக்கும்போது தன் உமிழ்நீர்க் கோளங்களில் அடங்கியிருப்பவைகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது; அதனால், நம்மைக் கொசு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ்வளவோ பழக்கமாயிருக்கிற தினவு உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க் கோளத்திலுள்ள பதார்த்தத்திலேதான் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன; ஆகவே, இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கு ஷ கிருமிகள் மாற்றப்படுகின்றன. இந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகு வேகமாய் விருத்தியடைகின்றன. இவை போதுமான அளவுக்கு விருத்தியடைந்த பிறகு, அந்த மனிதனுக்கு ஜ்வரம் கண்டு, அதற்குப் பிறகு அது பிரதி 24 அல்லது 48 அல்லது 72-மணி நேரங்களுக்கொருதடவை வந்துகொண்டேயிருக்கும்.

விஷஜ்வர வியாதிஸ்தனைக் கொசு கடித்தவுடனே அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜ்வரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்ற முடியாது. கொசு விஷஜ்வர ரத்தத்தை உட்கொண்ட பிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்குமுன் பல நாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசு தேகாரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே ஜ்வரம் காணாது. அந்தக் கொசு சில கிருமிகளைமாத்திரமே செலுத்துகிறது; அவைகள் ஜ்வரமுண்டாகும்படி செய்யக்கூடியவைகளாயிருப்பதற்கு முன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாகவேண்டும். சாதாரணமாகக் கொசுக்கடி யுண்டான பிறகு முதல் தடவை ஜ்வரம் காணும்படி செய்வதற்குப் போதுமானபடி கிருமிகள் வளர்வதற்கு 14-நாளுக்குக் குறையாமலும் 24-நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுக்களுமே விஷஜ்வரத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையவைகளல்ல. பல வர்ணமுள்ள இறக்கைகளையுடைய கொசுக்களில்



அனோபிலன் என்னும் ஜாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைகளிலும் பெண் கொசுக்களுக்கு மாத்திரமே இந்தச் சாமர்த்தியம் உண்டாயிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்ன வகைபோக மற்றதும் மிக சாதாரணமுமான வகைக்குக் குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷஜ்வரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்காலில் கொண்டுவந்து விடக்கூடிய ஒரு வித கடும் ஜ்வரத்தை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச்செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுக்களையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக் காரியம் நிறைவேறும்.

வயது வந்த அனோபிலன் கொசுக்கள் சுவரின்மேல் தங்கும்போது தம் சரீரங்களை மூலைவாட்டாக வைத்துக்கொண்டிருக்கும்; அதாவது, தலையும், துதிக்கையும் (கொசுக்கள் கடிக்கும் வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து கொசுவானது சுவரில் சாய்வாக ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு சிறு முள்ளைப் போலக் காணப்படும்; இந்த அடையாளத்தைக் கொண்டு இந்த ஜாதிக் கொசுக்களைத் தெரிந்து கொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர்மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவை போல் காணப்படும். அனோபிலன் கொசுக்கள் இளங்கபில நிறமுள்ளவைகளாகவோ கருங்கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கரு நிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் பட்டைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். அனோபிலன் கொசுக்களின் இறக்கைகளில் புள்ளிகளிருக்கும்; குலிஸைன் கொசுக்களின் இறக்கைகள் சாதாவாயிருக்கும்.

(தொடரும்.)

V. RAGHAVACHARLU,

*Tamil Translator to Government.*

# ஸ்தல சரித்திரக் கதைகள்

## STORIES FROM LOCAL HISTORY. THE CHOLA KINGDOM.

### 4. வீரசோழராகிய முதலாவது பரந்தகர்

கரிக்கால சோழருக்குப் பிந்தி ஆண்ட சோழ அரசர்களில் முக்கியமானவர் பராந்தகர். இவருக்கு வீரநாராயண பரகேசரி வர்மன் என்ற மற்றொரு பெயருமுண்டு. இவர் பட்டத்திற்கு வந்த காலத்தில் சோழராஜ்யம் அதிக விஸ்தீரணமடைந்திருந்தது. ஆதி சோழராஜ்யம் தற்கால, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களென்றும், வடக்கே காஞ்சிபுரம்வரைக்கும் எட்டியிருந்ததென்றும் முன்னமே சொன்னோம். ஆனால் பராந்தகர் பட்டத்திற்கு வந்த காலத்தில், தற்கால சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களாகிய கொங்க தேசமும், தற்கால மைசூர் தேசமாகிய கர்னாட தேசமும் சோழ ஆளுகைக்குட்பட்டிருந்தன.

கரிக்கால சோழரைப் போலவே பராந்தகரும் யுத்தத்தில் ஒரு சிறந்த வீராய் விளங்கினார். தென்னிந்தியாவின் சோராராஜ்யம் தவிர, மற்ற ராஜ்யங்கள் எல்லாவற்றையும் ஜெயித்து, அவைகளைச் சோழராஜ்யத்தோடு சேர்த்து விட்டார். இவர் காலத்தில்தான் சோழராஜ்யம் தென்னிந்தியாவில் முதன்மையடைந்தது. யுத்தத்தில் பராக்கிரமசாலியாகவிருந்து அனேக தேசங்களை ஜெயித்தபடியால் இவருக்கு 'வீரர்' என்ற பெயருண்டாயிற்று.

இவர் ஜெயித்த நாடுகளில் முக்கியமானது பாண்டியநாடு. பாண்டியர்கள் அந்தக் காலத்தில் மிகவும் வலிமையும் அதிகாரமுமுடையவர்கள். பராந்தகர் பாண்டியநாட்டின்மீது மூன்றுதரம் படையெடுத்துச் சென்றார். முதல் படையெடுப்பில் பாண்டிய ராஜதானியாகிய மதுரையைப் பிடித்தார். இந்த ஜெயத்தாலுண்டான கர்வத்தினால் 'மதுராந்தகர்' என்ற பட்டத்தை வகித்தார். இரண்டாம் படையெழுச்சியில் ஒன்று

சேர்ந்துவந்த பாண்டிய லங்கை அரசர்களின் சேனைகளை முறியடித்தார். இவ்வளவு வீரத்தனத்துடன் இவர் சண்டை செய்தபடியால் 'போரில் பீமனைப்போன்ற வீரன்' என்ற பெயர் இவருக்கு உண்டாயிற்று. மூன்றாவது படையெடுப்பில் பாண்டிய அரசனை அவனுடைய ராச்சியத்தினின்றும் துரத்தினார். பாண்டியன் லங்கைத் தீவுக்கு ஓடிப்போய் அடைக்கலம் புகுந்தான். அப்படி அவன் ஓடியும் பரந்தகர் அவனை விடாமல் பின்தொடர்ந்து சென்று லங்கைத் தீவையும் ஜெயித்துவிட்டார். அப்பால் பாண்டிய அரசன் அத்தீவினின்று சேர ராஜ்யத்திற்கு ஓட்டம் பிடித்தான்.

இவர் வீராக விளங்கினதன்னியில் ஓர் சிறந்த பக்தராகவும் விளங்கி வந்தார். அனேக கோவில்கள் கட்டி அவைகளுக்கு ஏராளமான மான்யம் விட்டார். ஹிந்துமதத்தைப் பரவச் செய்து, பிராமணர்களுக்குச் சர்வ மான்யம் கொடுத்தார். சிதம்பரம் கோவிலில் நடராஜர் நடனம் செய்கின்ற கனகசபையைக்கட்டி, அதைத் தங்கத்தினால் நிரப்பினவர் இவரென்று சொல்லப்படுகிறது. இதனால் இவர் ஒரு சிவபக்தரென்றும், வீரநாராயண கேசரி வர்மனென்று இவர் பெயர் பூண்டமையால், இவர் ஒரு விஷ்ணு பக்தரென்றும் தெரிகிறது. இவருடைய ராஜதானிகள் தஞ்சாவூரும் காஞ்சிபுரமுமே.

### 5. தஞ்சாவூர் சிவாலயம்; ராஜ ராஜ சோழர்

**சோ**ழராஜ்யம் பரந்தகர் காலத்தில் பிரஸித்தி அடைந்ததென்று சொன்னோம். அவருக்குப் பிற்பட்ட சோழ அரசர்களில் மிகவும் கீர்த்தியடைந்து பேர்பெற்றவர் ராஜராஜ சோழர். இவரும் போரில் ஒரு சிறந்த வீரர். இவருடைய சேனையும் ஒரு சிறந்த சேனை. ஆகையால்தான் இவர் தென்னிந்தியா முழுமையும் ஜெயித்து அரசாண்டு வந்தார். இவர் காலத்தில் சோழராஜ்யம் அதிக உன்னத பதவியடைந்து.

பரந்தகர் காலத்தில் சேரராஜ்யம் ஜெயிக்கப்படவில்லை என்று சொன்னோம். ஆகையால் ராஜராஜ சோழர் சேரராஜ்யத்தின்மீது படையெடுத்து, சேரனுடைய கடற்சேனையையும், துறைமுகப் பட்டணங்களையும் அடியோடு அழித்துவிட்டுச் சேரனை தனக்குக் கப்பங் கட்டும்படி செய்தார். பாண்டிய தேசமும், கலிங்க தேசமும், லங்கைத் தீவும் இவரால் ஜெயிக்கப்பட்டன. இவர் ஜெயித்த தேசங்களைத் தஞ்சாவூர் சிவாலய சுவர்களிலுள்ள கல் வெட்டுகளால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ ராஜ சோழர் யுத்தத்தில் பேர்பெற்றது மன்னியில், தன் ராஜ்யத்தில் சண்டை சச்சரவன்னியிலும், திருடர் பயமன்னியிலும், அரசாட்சி செய்வதில் பேர் பெற்றவர். இவர் காலத்தில் ஜனங்கள் சுகமாக வாழ்ந்தார்கள். ராஜ ராஜர் குடிகளின் நன்மைக்காக அதிக பாடுபட்டு வந்தார். அனேக கோவில்களும் கட்டினார்.

அவைகளில் முக்கியமானது தஞ்சாவூரிலுள்ள சிவாலயம். இது ஒரு அழகான ஆலயம் (இவ் ஆலயத்தின் படமொன்று சென்ற செப்டம்பர் மாதச் சஞ்சிகையில் தொகுதி 4, 119-ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது.) இதன் கோபுரம் எவ்வளவு நேர்த்தியாக விருக்கிறது பாருங்கள்! இதன் உயரம் சுமார் இருநூறடி விருக்கலாம். இந்த ஆலயத்தில் ஒரே கல்லால் செய்யப்பட்ட பேர்போன பெரிய நந்தி ஒன்று இருக்கிறது. இப்பேர்ப்பட்ட நந்தி மற்றக் கோவில்களிலில்லை.

ராஜ ராஜர் விவசாயத்தை விருத்தி செய்வதற்காக அனேக கால்வாய்கள் வெட்டுவித்தார். இவர் காலத்தில் நிலங்கள் திருத்தமாக அளக்கப்பட்டு வந்தன. கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய கவிகள் இவர் காலத்திலிருந்தார்களென்றும், இவரால் ஆதரிக்கப்பட்டு வந்தார்களென்றும் தெரிய வருகிறது.

G. இரத்தினம் பிள்ளை பி.ஏ., எல்.டி.



# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

अन्धचटक न्यायः

### 9. அந்தசடக ந்யாயம்

**ஒ**ரு குருடன் ஒரு வழியே போய்க்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு சிட்டுக்குருவி அவன் கையில் வந்து உட்கார்ந்தது. அவன் அதைப் பிடித்துக்கொண்டு ஸந்தோஷப்பட்டான்; என்பது இந்நியாய ஸம்பந்தமான கதை. நாம் எதிர்பாராம லிருக்கையில் திடீரென்று ஒரு நன்மை நமக்கு வருங்கால் இந்த ந்யாயம் உபயோகப்படும். வந்து உட்கார்ந்த குருவி குருடன் கையிலிருந்து தப்பி ஓடிவிடலாம், அது போலத் தற்செயலாய் வந்த ஸுகம் திடீரென்று போய் விடலாம். ஆகவே தற்செயலாய் வரும் ஸுகங்களை எண்ணி ஸந்தோஷிப்பதில் பயனில்லை. அவ்வாறு செய்தால் அவைகள் நீங்குங்கால் பெருந் துயரத்திற்கு நாம் ஆளாக வேண்டி வரும்.

अन्धपरंपरा न्यायः

### 10. அந்தபரம்பரா ந்யாயம்

'விஷயம் விளங்காக் குருடன் ஒருவன் வேறு ஒரு குருடனிடம் போய்க் கேட்டானாம். அவனுக்கு அவ்விஷயம் விளங்காமலிருந்த போதிலும் தன்னைக் கேட்டமட்டில் விடக்கூடாதென்று, தெரிந்தவன்போல அவனுக்கு உபதேசித்தான். இந்த விஷயம் கேட்டவனுக்கு எவ்வாறு பயன்படும்? ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழி காட்டிப்போனால் எவ்வாறு இருவரும் குழியில் விழுவார்களோ, அதுபோலக் குருடனைக் கேட்ட குருடன் அதோகதியை அடைவான் என்பதற்கு என்ன சந்தேஹம்' என்பதே இந்நியாய ஸம்பந்தமான கதை. உலகில் நல்ல அறிவில்லாவிடினும், சிறந்த அறிவுள்ளதாகப் பாசாங்கு செய்து குருவாக விளங்கி அரைகுறையாய் விஷயங்களைப் போதித்து ஸத்சிஷ்யர்களை மோசம் செய்து வீழ்த்தும் மஹானுபாவர்கள் விஷயத்தில் இந்த நியாயம் பிரவர்த்திக்கும். ஸாதாரண உலகவியவஹாரத்தில் அம்மாதிரி வேஷம் போட்டு மோசம் செய்வது கொடியவர்கள் வழக்கம். மத விஷயத்தில் குருவென்று பெயர் வைத்துக் கொண்டு சிஷ்யர்கள் செய்யும் ஆராதனையைத் தாங்க யோக்யதையின்றி அவைகளுக்கு ஈடுபட்டு ஸுகமாய் வாழ்ந்து சிஷ்யர்களுக்கும் ஒருவித அசிரத்தையை மதவிஷயங்களில் உண்டாக்கும் பரமகுருக்கள் அநேகர் இக்காலத்தில் காணப்படுகின்றனர். இவர்கள் உபதேசங்கள் எல்லாம் அந்த பரம்பரை என்றே கூறலாம். இவ் விஷயமாகக் **கடவல்லியிலும்** பின்வரும் வாக்கியம் காணப்படுகின்றது. 'அக்ஞானத்தில் மூழ்கிக் கிடந்தும், தாங்கள் தீரர்கள், பண்டிதர்கள் என்று எண்ணி இறுமாந்து, மூடர்கள் அநேக கெட்ட வழிகளில் சுழன்று, குருடனால் நடத்தப்பட்ட குருடன்போலத் தயங்கித் தவிப்பார்கள்?

अपवाद न्यायः

### 11. அபவாத ந்யாயம்

**ஒ**ரு வஸ்துவில் அதனுடன் ஸம்பந்தப்படாத மற்றொரு வஸ்து தோற்ற மாத்திரமாகக் காணப்படுங்கால் பகுத்தறிவால், தோற்றம் பொய், வஸ்துவின் ஸ்வரூபம் இன்னது என்று உணருவதற்கு அபவாத யுக்தி என்று பெயர். ஒரு ஸ்படிகத்தின் அருகாமையில் ஒரு நீலோத்பலம் கிடக்குங்கால் அது நீல நிறமாகத் தோன்றும். இதை நன்கு ஆராய்ந்து ஸ்படிகம் நிறமற்றது அதில் தோன்றும் நீலம் புஷ்பத்தினது என்று தெளியுங்கால் இந்நியாயம் உபயோகப்படும். இது அத்யாரோப ந்யாயத்தோடு ஸம்பந்தப்பட்டது. அத்யாரோபத்தைப் பற்றி 110-ம் பக்கம் 5-ம் எண்ணில் கூறியவிடத்து இது வேதாந்த சாஸ்திரத்தில் உபயோகப்படும் விதத்தை நன்கு விவுரித்திருப்பதைக்காண்க,

### अर्धजरती न्यायः
### 12. அர்த்தஜரதீ ந்யாயம்.

ஒரு விட புருஷன் ஒரு தாஸியிடம் அவள் யௌவனகால முழுவதும் மிக அன்புடன் இருந்துவிட்டு, அவளுக்குக் கிழத்தனம் வந்ததும் முன்னிருந்த அன்பு குறைய அவளைத் தன் ஸுகானுபவமாத்திரம் கைக்கொண்டு மற்றைய விஷயங்களில் உபேக்ஷை செய்துவிடுவான். இது இந்த நியாயத்தின் ஸாரம். ஸாதாரணமாக சில வாதிகள் வேத வேதாந்தங்களில் தமது நிலைக்கு வேண்டியவைகளைக் கைக்கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிடுவது வழக்கம். தள்ளவேண்டியவற்றில் சிலவற்றைத் தமக்கனுகூலமாகவும் பொருள்படுத்துவது உண்டு. இக்காலத்தில் கல்யாண விஷயம் மற்றைய பொது விஷயம் ஆகிய இவைகளைச் சீர்திருத்தி முயற்சி உடைய அவஸரக்காரர்களும் இத்தகையவர்களே. இவர்கள் விஷயத்தில் இந்நியாயம் உபயோகப்படும்.

### अशोकवनिका न्यायः
### 13. அசோகவனிகா ந்யாயம்

எல்லா லோகங்களையும் கதறக்கதற அடித்த லங்கேசனான ராவணன், ஸ்ரீராமர் பெண்சாதியாகிய ஸீதாதேவியைத் தந்திரமாக ஒருவருமில்லாமலிருக்கையில் தூக்கிச் சென்று தன் பட்டணத்திற்கு அலங்காரமாகவிருந்த அசோகவனத்தில் வைத்தான். இந்தக் கதையைக் கேட்டு வருகையில் ஸீதையை அசோகவனத்தில் ஏன் ராவணன் கொண்டு வைக்கவேண்டும்? வேறெங்கேயாவது வைக்கக்கூடாதா? என்ற ஒரு கேள்வியை உண்டாக்கினால் எப்படிப் பதில் உரைப்பது? என்னமோ அங்கேதான் ராவணன் கொண்டு வைத்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தவிர காரணம் வேறொன்றும் ஏற்படாது. மேலும் ராவணன் அங்கு வைக்காது வேறு எங்கேயாவது கொண்டுபோய் வைத்தால் அங்கு தான் ஏன் வைக்கவேண்டும் என்று இம்மாதிரி கேள்விக்கு இடனில்லையோ. ஆகவே இந்தக் கேள்விக்குப் பயன் ஒன்றுமில்லை. இதற்கு எப்பொழுதும் பதில்கூறவும் முடியாது என்றே சொல்லவேண்டும். ஆகவே பயனற்ற கேள்விகள் பிறக்குமிடத்தில் இந்த நியாயத்தை உபயோகப்படுத்திப் பதில் கூறவேண்டும். மாயை உண்மையில் இல்லாததாயிருப்பின் அது எவ்வாறு ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்பட்டு உலகை உண்டாக்கும்? என்ற ஓயாக்கேள்வி ஒன்று வேதாந்த சாஸ்திரத்தில் உண்டு. இது பதில் கூற முடியாத கேள்வி. மேலும் இதைப்பற்றி விசாரிப்பதில் இப்பொழுதிருக்கும் பந்தங்களைவிட்டு நீங்குவதற்கு ஸஹாயம் ஒன்றும் இல்லை. ஆகவே இதுவும் அசோகவனிகா ந்யாயமாக இருக்கின்றது என்னலாம்.

இந்நியாயத்திற்கு வேறு ஒருவிதப்பொருளும் உண்டு. அசோகவனத்தில் சென்றால், அவ்விடத்தில் நல்ல நிழல் வாஸனைகள் முதலிய ஸுகங்களிருப்பதால் அதைவிட்டு வேறிடத்திற்குப் போகவேண்டும் என்ற ஆசை எழும்பாது, திருப்தி உண்டாகிவிடும். எந்த விஷயத்தைப் பற்றுங்கால் மேல் ஆசை கிளம்பாது திருப்தி உண்டாகுமோ அதன் விஷயமாக இந்த நியாயத்தை உபயோகப்படுத்தலாம். பரம்பொருளை உள்ளபடி அனுபவித்தறிந்து விட்டால் வேறு ஒன்று ஆவசியகமில்லை என்பது நிச்சயமாதலால் இந்த விஷயத்திலும் இந்நியாயம் பொருந்தும்.

### अश्मलोष्ट न्यायः
### 14. அச்மலோஷ்ட ந்யாயம்

ஓடுகளைக் காட்டிலும் கல்லும்; கல்லைக்காட்டிலும் கருங்கல்லும்; அதைக் காட்டிலும் மலையும் மிகக் கடினமானவைகள். ஆகவே ஒன்றைவிட ஒன்றன் ஏற்றத்தாழ்வு ஒழுங்குகளைக்கூறுங்கால் இந்த ந்யாயத்தை உபயோகப்படுத்தலாம். சரீரத்தைவிட இந்திரியங்கள் ஸூக்ஷ்மம், அதைவிட மனம், புத்தி, கற்பனாசக்தி, அந்தராத்மா ஆகிய இவைகள் முறையே அதி ஸூக்ஷ்மம் என்ற கீதாவாக்யமும்; எல்லா ஜந்துக்களையும்விட மனிதன்மேல், அவனைவிட ஈச்வரன் எவ்வளவோ மேல் என்ற சாஸ்திர வாக்கியமும் இந்நியாயம் உபயோகப்படக்கூடிய விடங்களே.



## மாட்சிமை தங்கிய நமது சக்கிரவர்த்தினி மேரி மஹாராணி*

## HER MAJESTY QUEEN MARY
### (A LIFE SKETCH)

இவர் கென்ஸிங்டன் அரண்மனையில் பிறந்தார். இவர் இங்கிலாந்திலே ரீச்மாண்டு என்னும் ஊரிலே ஒயிட்லாட்ஜ் என்னும் மாளிகையில் வளர்ந்து வந்தார்கள். அவர்களுடைய தாய் தந்தையர்கள் ஆங்கிலேய அரசர்களது வம்சத்தில் தோன்றினவர்கள். அவ்வம்மையும் சகோதரர்களும் கென்ஸிங்டென் ஒடி தோட்டங்களில் ஸாதாரண பிள்ளைகள்போல விளையாடுவதுண்டு. இவர்கள் பிளோரென்ஸ் (Florence) பட்டணத்தில் சித்திரமெழுதி வர்ணங்கொடுத்தல், ஸங்கீதம், பாஷைகள் ஆகிய இவைகளைக் கற்றுக்கொண்டார்கள். இவர்களுக்குப் பியானோ வாசிக்கும் திறமையும், நான்கு பாஷைகளிலும் தெளிவாய் ஸம்பாஷிக்கும் சக்தியும் உண்டு. இவர்கள் தம் தாயார் பொதுதர்ம விஷயமாக எந்தச் சங்கத்துக்குப் போனபோதிலும் தாயோடு தாமும் எப்பொழுதும் போவது வழக்கம். தன் தாயாருக்காகக் காலையிலும் மாலையிலும் தாங்கள் எழுதுவது உண்டு. இவர்கள் தாயார் (Needle-work Guild) தையல்வேலை சங்கத்திற்கு அக்கிராஸநாதிபதியாய் இருந்தார்கள். அச்சங்கத்திலிருந்து தைத்துவரும் சட்டைகளிலிருந்து ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புவதற்காகப் பிரயோசனமுள்ள சட்டைகளைத் தெரிந்தெடுப்பார்கள். அருகாமையிலுள்ள எளியவர்கள் வீட்டுக்குத் தாயோடு போவதுமுண்டு. கல்வியில் மெத்த தேர்ச்சி யடைந்தார்கள். இவர்கள் நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியை மணந்தபொழுது தேசம் எங்கும் உண்டான சந்தோஷம் இவ்வளவு என்று சொல்லி முடியாது. இவர்களுக்குத் தங்கள்பிள்ளைகளை ஜாக்கிரதையுடன் வளர்ப்பதில் அதிக கவனமுண்டு. குதிரையேறிச் சவாரி செய்தாலும் நந்தவனத்தில் உலாவப் போனாலும் தானும் பிள்ளைகளுமாகப் போவது வழக்கம். அடிக்கடி இவர்களோடு தகப்பனாரும் கூடியிருப்பதும் உண்டு. பிள்ளைகளுக்குச் சரியாய் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்பது இவர்களுக்கு ஒரு பெரிய கவலை. பிள்ளைகளை இன்னவிதமாய்ப் படிப்பிக்க வேண்டும் என்று தானே ஏற்பாடு செய்தார்கள். விளையாட்டாகவேகற்பிக்கின்ற கிண்டர்கார்ட்டன் போதனா முறையை அனுஷ்டித்துத் தன்பிள்ளைகளுக்கும் பாடங்களைப் படிப்பித்து வந்தார்கள். தனது குழந்தைகளது மனதில் அடக்கம், சுயநயத்தைக் கருதாமை, ஜீவகாருண்யம், தெய்வபக்தி, முதலிய மேன்மையான குணங்கள் உதிக்கும்படி செய்தார்கள். 1905வரு மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியோடு இந்தியாவுக்கு விஜயஞ்செய்தார்கள். அப்போது தன் அரிய சிறிய குழந்தைகளைக்கூட அழைத்துக்கொண்டு வராமல் இங்கிலாந்திலேயே விட்டுவிட்டு வந்தார்கள். இவர்கள் நமது இந்திய தேசத்திலும் இந்திய சகோதரிகளிடத்தும் வைத்திருக்கின்ற அன்பு அதிக மிகுதி. 'இந்தப் பிரயாணத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று என்னுடைய இந்து சகோதரிகளில் அநேகரைக் கூடியவரைக்கும் பார்க்கவேண்டுமென்பதே. ஏனென்றால் நீங்கள் உண்மையாய் என்ன விதமாய் ஜீவனம் செய்கிறீர்களென்பதை நான் எவ்வளவுக் கெவ்வளவு நேரில் பார்க்கிறேனோ அவ்வளவுக் கவ்வளவு இந்திய ஸ்திரீகளிடத்திலுள்ள புகழத்தக்க உயர்ந்த குணங்களை அறிந்து அவைகளுக்காக ஆச்சரியத்துடன் நன்கு மதிப்பேன் என்று நான் நம்புகிறேன்' என்பதாக மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தினி 1905-ம் வரு நவம்பர்மீ 11உ பம்பாய் மாதர்களிடம் சொன்னார்கள். அப்பொழுது பம்பாயிலுள்ள சீமாட்டிகளெல்லாம் நமது

* A paper read at the meeting of the National Indian Association, Kumbakonam Branch by Miss A. Govindaraja Mudaliar.

சக்கிரவர்த்தினிக்கு விலை உயர்ந்த வஸ்துக்களை வெகுமதியாகக் கொடுத்தார்கள். மேற்படி செய்தியைச் சமாசாரப் பத்திரிகையின் மூலமாய் தெரிந்துகொண்டுதான் என்தாயார் பாசினாலே இரண்டு நேர்த்தியான பெரிய விசிறிகள் தன்கைப்பட செய்து தன் இராஜ விசுவாஸத்திற்கு அறிகுறியாக அவர்கள் சென்னைப்பட்டணத்தை விஜயம் செய்யும்பொழுது அவர்களுக்கு வெகுமதியாகத் தபால் மூலமாக அனுப்பினார்கள். "அவ்விசிறிகளை அவர்கள் மனமகிழ்ச்சியுடன் அங்கீகரித்தார்கள். கிறிஸ்துபிறந்த பண்டிகையன்று குவாலியரில் இங்கிலாந்திலிருந்து தன்னோடு கொண்டுவந்த பொம்மைகள், இன்னும் மற்ற விளையாட்டுச் சாமான்களையும் இந்திய பாலர்களுக்கு இனாமாகக் கொடுத்தார்கள். சென்னையில் விஜயம் செய்தபொழுது மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் பார்ப்பதற்கு ஆவலுடன் வந்திருந்த ஒரு சிறுவனுக்கு காயம் உண்டாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டான். இதைக்கேட்டு அவனுடைய தேக நிலைமையைத் தனக்கு அடிக்கடித் தெரிவிக்கும்படி சர்ஜியன் ஜெனரல் அவர்களை அனுப்புவித்தார்கள். இதனாலேயே அவர்கள் இந்தியரிடத்தில் தாயினும் மிக்க அன்புள்ளவர்களென்றே தெரிகிறது. இந்திய மாதர்களது சீர்திருத்தத்திற்காக இங்கிலாந்திலே ஏற்பட்டிருக்கும் நேஷனல் இந்தியன் அஸோஸியேஷனுக்கு மாதாவாக இருக்கின்றார்கள். மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் **நோயற்ற வாழ்வுங் குறைவற்ற செல்வமும் பெற்று நீடூழிகாலம் நமது தேசத்தை விவரமாக ஆளும்படிக்கு ஈசுவரன் கிருபை செய்வாராக.**

---

**பொய்.**—மனோசாக்ஷிக்குவிரோதமாய்ப்பேசித் தன்பப்படுவதே பொய்யாகும். இப்பொய் பலவகையாகும். ஜீவனோபாயமாய் ஊதியத்திற்கு ஆசைப்பட்டும் நேர்ந்த நஷ்டத்திற்குப் பயந்தும் பொய் சொல்லுவார்கள். சிலர் தாமியற்றிய தப்பிதத்தினின்றும் தப்பித்துக்கொள்ளுவதற்குப் பொய் பேசுவார்கள். செய்த குற்றத்தைப் பொய் சொல்லாமல் ஒப்புக்கொண்டவர்களுக்குத் தண்டனை கிடையாது. அப்படிக் கிடைப்பினும் சிறிய தண்டனையே கிடைக்கும். இங்ஙனமின்றிக் குற்றத்தை மறைக்கும் பொய்யர்கள் அகப்பட்டு விட்டால் அவர்களுக்குக் கிடைப்பது கடிய தண்டனையே.

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 13. வஜ்ரஸூசிகோபனிஷத் [36]

முனிவர்கள்எதை உணர்ந்ததும் அத்யாச்சரியமான பிராஹ்மண்யத்தை அடைகிறார்களோ அந்த த்ரைபத பிரஹ்மத்வமாக நான் இருக்கிறேன் என்று சிந்திக்கிறேன். ஸச்சிதானந்த ரூபமாயும் எல்லோருடைய மனோ விருத்திகளுக்கும் ஸாக்ஷியாயும் வேதாந்தங்களால் உணர்த்தக் கூடியதாயும் அனந்த ரூபியாயும் உள்ள பிரஹ்மத்தை நமஸ்கரிக்கிறேன். அக்ஞானிகளைத் தூஷிப்பதாயும்,ஞானக்கண்ணுடையோர்களைப் பூஷிப்பதாயும், அக்ஞானத்தை வேரறுப்பதாயும் உள்ள வஜ்ஜிரஸூசியைச் சொல்லுகிறேன்.

‘பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய,சூத்திரர் என வருணங்கள் நான்கு. அவைகளுள் பிராஹ்மணனே மிகச் சிறந்தவன்’ என்று வேதங்கள் எல்லாம் கூறுகின்றன. இவ்விஷயமாகப் பின்வரும் சங்கைகள் பிறக்கும். ‘பிராஹ்மணன் என்பவன் யார்? ஜீவன் பிராஹ்மணனா? தேஹம் பிராஹ்மணனா? ஜாதி பிராஹ்மணனா? க்ஞானம் பிராஹ்மணனா? கருமம் பிராஹ்மணனா? தார்மிகன் பிராஹ்மணனா?

ஜீவனை பிராஹ்மணன் என்று சொன்னால் முக்காலங்களிலும் பலதேசங்களிலும் உள்ள ஜீவன் ஒரே ரூபமாயிருப்பதாலும், ஒரு ஜீவனுக்கே கருமவசத்தால் அநேக தேஹங்கள் ஏற்படுவதாலும் இதற்கு விரோதம் ஏற்படும்.

தேஹம் பிராஹ்மணன் என்று கூறுவோமா? சண்டாளர் முதலியோர்களது சரீரங்களும் பஞ்சபூத ஸம்பந்தமாக ஏற்பட்டிருப்பதால் தேஹங்களில் தாரதம்யம் இல்லை. ஜனனமரண முதலிய மாறுபாடுகள் எல்லாத்தேஹங்களுக்கும் பொது. மேலும் பிராஹ்மணன் வெளுப்பு, க்ஷத்திரியன் சிவப்பு, வைசியன் மாநிறம், சூத்திரன் கறுப்பு என்ற ஒழுங்கும் இல்லை. ஆகவே தேஹத்திற்குப் பிராஹ்மண்யம் கூறலாகாது. இவ்வாறு சொன்னால் தாய் தந்தையர் முதலிய உறவினர்கள் பிணத்தைத் தகனம் செய்வதால் புத்திரர் முதலியவர்



களுக்குப் பிரஹ்மஹத்தி தோஷம் உண்டாகும் என்று ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

ஜாதியால் பிராஹ்மண்யம் ஏற்படும் என்று கூற இடமில்லை. மனிதனல்லாத மற்றைய பிராணிகளிடமிருந்தும் மஹரிஷிகள் உண்டாயிருக்கிறார்கள். ரிச்யச்ருங்கர் மானிடம் உண்டானவர்; கௌசிகர் குசத்திலிருந்தும்; ஜம்பூகர் நரியினிடமிருந்தும்; வால்மீகர் புத்திலிருந்தும், வியாஸர் செம்படவப் பெண்ணிடமிருந்தும், கௌதமர் முயலிடமிருந்தும்; வசிஷ்டர் ஊர்வசியினிடமிருந்தும், அகஸ்தியர் கலசத்திலிருந்தும் உதித்தார்கள். இவர்களுக்கு ஜாதியினால் சிறப்பில்லாவிடினும் பரமஞானத்தால் உலகில் இவர்கள், விளங்கினார்கள். ஜாதிப்பிராஹ்மண்யம் என்பதில்லை.

ஆனால் ஞானஸம்பந்தம் பிராஹ்மண்யம் என்னலாமே? க்ஷத்திரியர் முதலிய மற்றைய வர்ணத்தாரிடத்தும் பரம்பொருளைப் பற்றிய அறிவு காணப்பட்டதால் அவர்களைப் பிராஹ்மணர்கள் என்று ஸாதிக்கவேண்டிவரும். ஆதலால் இவ்வாறும் கூறவிடமில்லை.

கருமம் பிராஹ்மணன் என்றாலோ, எல்லா பிராணிகளுக்கும் மூன்றுவித கருமங்களும் இருப்பதால் அவர்கள் எல்லோரும் கருமவசத்தராக விருப்பதாலும் இவ்விஷயத்தில் ஏற்றத்தாழ்வு கூறவேண்டிவரும்.

தருமம் செய்பவனே பிராஹ்மணன் என்றுஏன் கூறலாகாது? க்ஷத்திரியன்முதலான அநேகரிடத்தும் பணச்செலவு தருமம் முதலிய ஸத்குணங்கள் காணப்படுவதால் இவ்வாறு கூறிவிட முடியாது.

பின்பு யார்தான் பிராஹ்மணன்?

ஜாதி குணக்கிரியைகளற்றதாயும், இரண்டற்றதாயும், (பசி, தாகம், சோகம், மோஹம், கிழத்தனம், மரணம் என்ற) ஷடூர்மிகளற்றதாயும், (இருத்தல், உண்டாதல், வளருதல், திரிதல், குறைதல், நசித்தல், என்ற) ஷட்பாவ விகாரங்களற்றதாயும், ஸத்திய க்ஞானானந்த அனந்த ஸ்வரூபமாயும், நிர்விகல்பமாயும், மனஸ் ஸங்கல்பங்கள் எல்லாவற்றிற்கு ஆதாரமாயும், எல்லாப் பூதங்களிடத்தும் அந்தர்யாமியாகப் பரவியிருப்பதாயும், உள்ளும் வெளியும் ஆகாசம்போல இடையற்று நிறைந்திருப்பதாயும், அகண்டானந்த ஸ்வபாவமாயும், ஒப்புயர்வற்றதாயும், அனுபவித்தே அறியத்தக்கதாயும், அபரோக்ஷமாக பிரகாசிப்பதாயும், உள்ள ஆத்மாவை, உள்ளங்கை நெல்லிக்கனிபோல நேராக அனுபவிப்பவன், எவனாயிருந்தபோதிலும், கிருதக்கிருத்யனாகி, (காம க்ரோதம் லோபம் மோஹம், மதம், மாத்ஸர்யம்) என்ற அரிஷட்வர்கள் அற்றவனாய், (சமம், தமம், உபரதி, தீதிக்ஷை, ஸமாதானம் சிரத்தை என்ற) ஷட்க ஸம்பத்துக்களைப் பூர்ணமாக அடைந்து, ஸங்கல்பம், திருஷ்ணை, ஆசை, மோஹம், முதலியவைகள் நீங்கப் பெற்றவனாய், அஹங்காரம் முற்றிலும் ஒழிந்த மனமுடையவனாய் இருப்பவன் யாரோ அவன்தான் பிராஹ்மணன்; என்பது வேதங்களின் அபிப்பிராயம். வேறு எவ்விதத்திலும் ப்ராஹ்மண்யம் ஸித்திக்கவே மாட்டாது. ஆகையால் ஸச்சிதானந்த ஸ்வரூபமாயும், அத்வதீயமாயும் இருக்கிற பிரஹ்மத்தை எப்போதும் பாவனை செய்யவேண்டும்.

### 14. கைவல்ய உபநிஷத் [12]

(நித்தியாநித்திய வஸ்து விவேகம்,இஹாமுத்ராத்பல போகவிராகம்,சமாதி ஷட்க ஸம்பத்து, முமூக்ஷுத்வம் என்ற நான்கு ஸாதனங்களைப் பெற்ற) பின்பு ஆச்வலாயினர் பிரஹ்மாவிடம் போய் ‘ஓ பகவானே! மேலானதாயும், பெரியோர்களால் ஆராதிக்கத்தக்கதாயும், மறைவாயும், பாபத்தை நீக்கிப் பரம புருஷனை அடையும்படி செய்வதாயும் உள்ள பிரஹ்மவித்தையை உபதேசிக்கவேண்டும்’ என்று மஹா விநயத்துடன் கேட்டார். அதற்குப் பிரஹ்மா கூறுகிறார்:—

‘சிரத்தை பக்தி தியானம் என்ற யோகங்களாலேயே அறியவேண்டும். கர்மம், புத்ரன், பொருள், ஆகிய இவைகள் மோக்ஷஸாதனங்களாகா. மிகச்சிறந்ததாயும், இருதய குஹையிலிருப்பதாயும், உள்ள அந்தப் பிரஹ்மத்துள், வேதாந்த ஞானம்,ஸந்நியாஸம், யோகம் முதலியவைகளால் ஏற்படும் பரிசுத்தம் ஆகிய இவைகளையுடைய யதிகள், பிரவேசிக்கிறார்கள். அவர்கள் ஜன்ம முடிவில்பரமபதத்தில் பரமாத்மாவை அடைந்து முற்றிலும் விடுபடுவார்கள்.

‘தனிமையான விடத்தில் பரிசுத்த மனதுடன் கழுத்து தலை தேஹம் இவைகளை ஒழுங்காய் வைத்துக்கொண்டு ஸுகாஸனத்தில் இருந்து, ஆசிரமங்களுக்கு அப்பாற்பட்டவனாய், இந்திரியங்களை அடக்கி, தன் குருவைவணங்கிசுத்தமனதில் பின்வருமாறு பரமாத்மாவைத் தியானிக்கவேண்டும். பரிசுத்தர், துக்கமற்றவர், மனவாக்குக் கெட்டாதவர், காணமுடியாதவர், அனந்தரூபர், சிவர், சாந்தர், மோக்ஷஸ்வரூபர், மாயாகாரணர், அடிமுடி நடுவற்றவர், ஒப்புயர்வற்றவர், எங்கு நிறைகின்ற பொருள், ஞானானந்த ஸ்வரூபி, உருவற்றவர், ஆச்சர்யகரர், பிரபு, முக்கண்ணர், நீலகண்டர், சாந்தர், உமையோடு சேர்ந்தவர், என்று தியானிக்கவேண்டும். இவ்வாறு செய்யும் முனிவர்கள் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாகி, அக்ஞானத்திற்கு அப்பாற்பட்டு, பூதங்களின் ஆதிகாரணமான பரம்பொருளை அடைகிறார்கள். இப்பரம்பொருளே இந்திரன், பிரஹ்மா, சிவன், நாசமற்றவர், உத்தமர், விஷ்ணு ஸ்வயம் பிரகாசர், பிராணன், காலன், அக்னி, சந்திரன். முக்காலங்களிலும் உள்ளவைகள் எல்லாம் இவரே. நித்யமான இவரை அறிந்து மிருத்யூவைத் தாண்ட வேண்டும். முக்திக்கு வேறு வழியே இல்லை. எல்லாவற்றில் தன்னையும், தன்னுள்எல்லாவற்றைப்பார்க்கும் திறனுடையவன் பரப்பிரஹ்மத்தைஅடைகிறான். மற்ற

யாது காரணத்தாலும் இந்நிலை கைகூடாது. தேஹம் தான் அடி அரணிக்கட்டை. பிரணவம்தான் மேல் அரணிக்கட்டை (மத்து) அப்பியாஸம் என்ற கடைதலைச் செய்து பண்டி தன் பாசங்களை (பந்தங்களை) எரித்து விடுகிறான்.

'அந்தப் பரமாத்துமாவே மாயையால் மூடப்பட்டு அந்தக்காரணத்துடன்சேர்ந்து சரீரத்தைஅடைந்து எல்லாவிதச் செயல்களையும் செய்கிறான். அவனே விழிப்பில் ஸகல உலக இன்பங்களையும் அனுபவித்துத் திருப்தி அடைகிறான்; கனவில் தன் மாயையால் ஏற்படும் உலகங்களில் ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான்; தூக்கத்தில் எல்லாம் ஒடுங்கிவிட அக்ஞானத்தால் சூழப்பட்டு ஸுகரூபத்தை அடைகிறான்; மறுபடியும் மேல் மேலும் கர்மானுஸாரம் விழித்துக்கொண்டு தூக்கத்தை அடைந்து கொண்டே யிருக்கிறான். மூன்று புறத்திலும் (தேகத்திலும்) விளையாடிக்கொண்டிருக்கும் ஜீவனிடமிருந்தே எல்லாம் உண்டாகி, எல்லாவற்றிற்கு ஆதாரமாயும், ஆனந்தமாயும், பாகுபாடற்ற அறிவாயும் உள்ள அந்த ஜீவனிடமே மூன்று புறங்களும் ஒடுங்குகின்றன.

'இவனிடமிருந்து பிராணம், மனம், இந்திரியங்கள், பஞ்சபூதங்கள், ஆகிய இவைகள் உண்டாகின்றன. எல்லாமாய், பிரபஞ்ச ஆதாரமாய் அதிநுட்பமாய் நித்தியமாயிருக்கும் ப்ரஹ்மமே நீ, நீயே அது. மூன்று அவஸ்தைகளிலும் விளங்குவது எதுவோ அதுவே பிரஹ்மம். அது நானே என்றிருந்தால் பந்தம் நீங்கும். இதுதான் மோக்ஷம். மூன்று தேஹங்களிலும் அனுபவம், அனுபவி, அனுபவவஸ்து ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்ட ஸாக்ஷியாகிய சின்மாத்திரமான ஸதாசிவன் நான். என்னிடமே எல்லாம் தோன்றி, நின்று, ஒடுங்குகிறது. இந்த அத்வயமான பிரஹ்மம் நானே. நான் அணுவைக் காட்டிலும் அணு; மஹான், விசித்திர பிரபஞ்சம், பழமையானவன், புருஷன், ஈசன், ஜ்யோதிஸ்வரூபன், மங்களரூபன், எனக்குக் கைகால்களில்லாவிடினும் பெரும் சக்தி யுண்டு; நான் கண்ணில்லாமல் பார்க்கிறவன், காதில்லாமல் கேட்கிறவன்; எல்லாவற்றையும் அறிபவன். ஒரே ரூபமுள்ளவன். என்னை முழுவதும் உணரமுடியாது; நான் அறிவு ரூபம். வேதரஹஸ்யம்நானே,குருவும்நானே. எனக்குப் புண்ணியம், பாபம், நாசம், ஜன்மம், தேஹம், இந்திரியம், புத்தி, பஞ்சபூதங்களும் இல்லை. இருதயகுஹையில் உருவற்று, அத்விதீயமாகவும், ஸர்வஸாக்ஷியாகவும், ஸத் அஸத்களுக்கு அப்பாற்பட்டதாகவும், சுத்தமான பரமாத்மரூபத்தை அறிந்தவர்கள் அதை அடைகிறார்கள்.

இந்தச் சதருத்ரீயத்தை எவன் உணருகிறானோ அவன் பரிசுத்தனாகிறான், எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். பிரஹ்மத்தை அண்டினவனாகிறான், அதிவர்ணாசிரமியானவன், இந்த ஜபம் செய்தால் ஸம்ஸாரத்தை நீக்கும் அறிவைப் பெறுவன். இந்த ஆத்மாவை அறிந்தால் கைவல்யபதம் கைகூடும்.

# ஸுசீலா ஸ்வயம்வரம்

## SUSILA SWAYAMVARAM

(134-ம் பக்கத்துத் தொடர்ச்சி)

ஸுசீலையும் அவள் சேடியாகிய ஸுநந்தையும் சுமித்திரனைப்பார்த்தார்கள். அன்றுமுதல் ஸுசீலைக்கு ஸுமித்திரனிடத்திற்காதல்பிறந்ததென்னலாம். அதை வெளியிடலுக்குப் பயந்திருந்தாள். அரசனுக்கு மட்டில் எப்படியோ ஸமாசாரந்தெரிந்து ஸுமித்திரனும் சுசீலையும் ஒருவரை ஒருவர் பார்க்கவொண்ணமல் செய்யவேண்டுமென்ற கருத்துப் பிறந்தது.

சுசீலையை ஒருநாளழைத்து "கண்மணியே, கமலாலயம் என்று நமக்கு ஒரு கோட்டை, ராஜ்யத்தின் தென் பாரிசத்திலிருப்பது உனக்குத் தெரியுமே. இப்போது வஸந்தகாலம். அங்கு போய்ச் சிலகாலம் நீ வசித்தல் வேண்டும். உனக்குத் தக்க கணவன் உயர் குலத்தில் பிறந்த ராஜகுமாரனா யிருத்தல்வேண்டும். அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்து வருகிறேன். நீயும் உன் சேடி ஸுநந்தையும் நாளைக்கே புறப்பட ஆயத்தஞ் செய்துகொள்" என்று ஆஞ்ஞாபிக்க, சுசீலையும் பிதாவின் அபீஷ்டப்படி நடப்பதாக ஒத்துக்கொண்டாளாயினும் ஸுமித்திரன் என்னும் போர் வீரன் முகாரவிந்தத்தைத் தினமும் பார்க்கும் பாக்கியம் தனக்கில்லாமற் போவதை எண்ணி மனஞ்சற்றுச் சஞ்சலித்தது. பிதாவின் வாக்கியத்தை மீறி நடக்கவுந் துணிந்தாளில்லை.

அரசன் ஆணைப்படி மறுநாட்காலையில் ஸுசீலையும் ஸுநந்தையும் கமலாலயத்திற்குச் சென்றார்கள். அந்தக்கோட்டை நாலுபுறத்திலும் மலைகளாற் சூழப்பட்டு நடுவில் காச்மீர கண்டம்போன்ற பள்ளத்தாக்கில் அமைந்திருந்தது. கம்பநாட்டாழ்வார் இலங்கையை வருணித்தபடியே கமலாலயம் இருந்தமையால் அப்புலவர் சொன்னவற்றையே இங்கு எழுதலானோம்.

பொன்கொண் டிழைத்து மணியைக் கொடுபொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக் கொடுசமைத்த
என்கொண் டியற்றிய வெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டு மதிமுட்டு வனமாடம். (1)
நான நாண்மலர்க் கற்பக நறுவிரை நாறப்
பானம் வாயுற வெறுத்ததா ளாறுடைப் பறவை
தேன வாவிரைச் செழுங்கழு நீர்த்துயில் செய்ய
வான யாறுதம் மரமியத் தலந்தொறு மடுத்த. (2)
குழலும் வீணையும் யாழுமென் றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்கின்றமகளிர்



சுழலு நன்னெடுந் தடமணிச் சுவர்தொறுந் துவன்றும்
நிழலுந் தன்மையு மெய்ம்மைகண்டறிவரு நிலைமைய (3)
வாழு மன்னுயிர் யாவையு மொருவறி வாழ்
ஊழி நாயகன் றிருவயி றொத்துள திவ்வூர்
ஆழி யண்டத்தி னருக்கன்ற னலங்குதேர்ப் புரவி
ஏழு மல்லன் வீண்டுள குதிரையு மெல்லாம். (4)
தெய்வத் தச்சனைப் புகழ்துமோ செங்கண்வா யரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விரிஞ்
ஐயப் பாடிலா வரத்தையே மதித்துமோ வறியாத் [சன்
தொய்யற்சிந்தையாம் யாவறை யாதென்று துதிப்பாம்.

இவ்வாறு கமலாலயமானது எல்லா அழகும் பொருந்தியதாயிருந்தது. அதிலுள்ளஉத்தியானவனத்தின் அழகும் அமைப்பும் கவிகளும் வருணிக்க முடியாதவைகள். ஸுசீலையும் ஸுநந்தையும் உலாவுதற்கேற்றதாயிருந்தது முன் கூறியபடி காலமும் இளவேனிற்பருவம்.

கமலாலயக்காவற் சேனைக்குத் தலைவனுக்கு ரேசகன் என்று பெயர். அவன் வயதில் முதிர்ந்தவன்; ராஜவிசுவாஸ முடையவன்; ஸுசீலையைத் தன்மகள்போலாதரிக்குமியல்புடையன்; ஆதலின் அரசன் தன் ஏகபுத்திரியைக் கமலாலயத்துக்கு அனுப்ப உடன்பட்டான்.

ஸுமித்திரனைக் காணும்போதெல்லாம் அரசன் கண்ணில் நெருப்புப் பொறி பறக்கும். இளங்கன்று பயமறியாதாதலால் ஸுமித்திரன் அரசனுடைய கோபாக்கினிக்கு எள்ளளவேனும் அஞ்சவில்லை. பதினெட்டு வயது நிரம்பின ஸுமித்திரன் புருஷ வேசியாயிருந்தான். ஒரு முறை ஸுமித்திரனுக்கே தன் ஏகபுத்திரியை மணம் புரிவிக்க அஸூயாவர்மன் நினைப்பான். இன்னுமோர் முறை தபஸியின் வார்த்தையைப் பொய்யாக்க வேண்டுமென்ற பிடிவாதம் அவன் மனதிற் பிறக்கும். நல்ல எண்ணமும் கெட்ட எண்ணமும் தனித் தனியே அரசனைச் சலிக்கச் செய்தது. "உப்பொடு நெய் பால் பெய்தடினும் கைப்பறா பேய்ச்சுரையின் காய்" என்று முதியோர் சொன்னவாறு, அரசனுடைய இயல்பானது துர்க்குணமே மேலிட்டுஸுமித்திரனைக் கொலை செய்தலே தகுதி என்று தீர்மானம் அவன் மனத்திற் பிறந்தது.

ஸுசீலையும் ஸுநந்தையும் கமலாலயத்திற்குச் சென்று ஒரு பக்ஷமானவுடன் அஸூயாவர்மன் தன் ஏவலாட்களில் ஒருவனைக் கூவி "ஹரதத்தா, ஸுமித்ரனைக் கமலாலயத்திற்கு அனுப்ப உத்தேசம் செய்துவிட்டேன். அவனுக்கு வழி தெரியாது; நீ பாதி தூரம் அவனுக்கு வழிகாட்டிவிட்டுத் திரும்பிவா: நாளையே போவதற்கு ஆயத்தஞ்செய்" என்றான். ஹரதத்தனும் ஸம்மதித்தான்.

அரசன் ஸுமித்திரனை யழைத்து, "பிள்ளாய், நமது ராஜ்யத்தில் கமலாலயமென்று ஒரு கோட்டை யிருக்கிறது. அக்கோட்டையின் காப்புச் சேனைத் தலைவன் ரேசகன். அவனுக்கு ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை நீயே அவனிடத்தில் சேர்த்தல் வேண்டும். நாளைக்கே புறப்படவேண்டும். தாமசமாகாது. ஹரதத்தன் உனக்குத் துணையாக வருவான்"என்றான். ஸுமித்திரன் அரசனை வணங்கி ஆஞ்ஞைப்படி நடக்கக்காத்திருப்பதாகச் சொல்லி விடைபெற்று அரண்மனைக்கு வெளியே போனான்.

மறுநாள் உதயத்தில் ஹரதத்தனும் ஸுமித்திரனும் வெவ்வேறு அசுவங்களில் ஏறிக்கொண்டு பிரயாணம் போனார்கள். வழிகளில் மேடுகளும் பள்ளங்களும் காடுகளும் மிகுதியாக இருந்தன. இரண்டு நாள் பிரயாணம் முடிந்தவுடன் ஹரதத்தன் "இந்தமட்டில்தான் உனக்குத் துணையாக இருக்கும்படி அரசன் ஆணை; இனி நீ ஒண்டியாய்த்தான் போதல்வேண்டும். காட்டில் புலிகரடிகள் மிகுதி: பைசாசங்களும் அநேகமுளவாம்: நரமாமிசபக்ஷிணிகளாகிய இராக்ஷஸர்களும் சில இங்கு வருவார்களாம். நீ ஜாக்கிரதையாகப் போதல்வேண்டும். அரசன் உன்னிடத்திற் கொடுத்திருக்கிற கடிதத்தை ரேசகனிடத்தில் கொடுத்த நிமிஷத்தில் நீ ஸகல ஸாம்பிராஜ்யத்தையும் அடைவாய். ஸுகமாய்ப் போகலாம்" என்று சொல்லிக் குதிரையைத் தட்டிவிட்டு இமைக்கு முன் கண்ணிற்படாமல் மறைந்து விட்டான்.

ஸுமித்திரன் மனஞ்சற்றுக் கலங்கிற்று; ஆயினும் ஸஹஜமான தீரம் அவனைக் கைவிடவில்லை.ஹரதத்தன் குறித்த வழியே சென்று மூன்று நாள் கமலாலயக் கோட்டை வாயிலிற்போய்ச் சேர்ந்தான். உடனே குதிரையை விட்டிறங்கி வாயிற்காப்போனிடஞ்சென்று "நமது மஹாராஜா சேனாதிபதி ரேசகருக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருக்கிறார். அதை இந்த நிமிஷமே அவரிடத்தில் சேர்ப்பிக்க எனக்குக் கட்டளை பிறந்திருக்கின்றமையால் என்னை அவரிருப்பிடம் அழைத்துப்போ" என்று அதிகார தோரணையாய் ஸுமித்ரன் சொன்னதைக் கேட்ட கும்பகன் என்னும் துவாரபாலகன் "நீர் மிகவுஞ் சிறுபிள்ளையாயிருக்கிறீரே; பெரியவர்களை நினைத்தபோதெல்லாம் பார்க்கச் சரிப்படுமோ? சமயம் பார்த்தல்லவோ போகவேண்டும். நீரோ வியர்த்தோடி வந்திருக்கிறீர், உமக்குச் சிரமம் ஜாஸ்தியாய்த்தானிருக்கும்; ஆதலால் சற்று என்பக்க

வில் உட்கார்ந்து இளைப்பாறும். உமக்குச் சிறிது சிற்றுண்டிகளும் பானங்களும் கொடுக்கிறேன். அவற்றையுட்கொண்டான பிறகு ரேசகர் பேட்டி காணலாம்" என்று சொல்லவே, ஸுமித்திரனும் அதற்கிணங்கி அவன்பக்கத்தில் உட்கார்ந்து அன்னபானாதிகள்முடிந்த பிறகு முன்போலவே அவசரப்பட்டவனாய்க் காட்டினான். வாயிற் காப்போனாகிய கும்பகனோ "நீரென்ன சுடக் குடித்தவரா யிருக்கின்றீரே, ரேசகர் ஒரு பெரிய விருந்து செய்கிறார். அதற்கு அனேகர் வந்திருக்கிறார்கள். உணவு முடிந்து, ஆட்டம் பாட்டு முதலான தமாஷ்கள் ஆனபின்தான் அவரைப் பார்த்தலாகும். இடையில் யாரையாவது நான் அழைத்துப் போவேனாயின் உடனே எனக்கு உயிர்ச்சேதம் வரும். நமது அரசனுடைய புத்திரி இங்குவந்து சொற்பகால மாயிற்று. அவளுக்குக் கூடிய சீக்கிரத்தில் விவாகம் நடக்கப் போகிறதாம். மாப்பிள்ளை யாரென்று மாத்திரம் எங்களுக்குத் தெரியவில்லை. ரேசகருக்கு எல்லாந் தெரியும் அச்சமயத்திற் போவீராயின் உமது காரியம் ஒன்றும் நிறைவேறாது. பொறுத்து எந்தக் காரியத்தையும் பார்த்தல் வேண்டும்" என்று வற்புறுத்தினான். ஸுமித்திரனும் உடன்பட்டு இருவரும் பற்பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருக்கையில், கும்பகன் கோட்டைக்குள்ளிருக்கும் நந்தவனத்தையும் அதன் அதிசயங்களையும் அதில் இராஜகுமாரியும் அவள் சேடிகளும் களித்து ரமிக்கும் இடங்கள் அமைந்துள்ளதையும் எடுத்துச் சொல்ல, ஸுமித்திரனுக்கு என்றுமில்லாத ஆசை ஒன்று சடிதியிற் பிறந்தது. "யந்திரி வீட்டிலும் ஸந்நியாசி ஆசிரமத்திலும் வெகுகாலத்தைப் போக்கிவிட்ட எனக்கு அரண்மனைச் சேவகமொன்று கிடைத்தது. யுத்தஞ்செய்து கீர்த்தியடையலாமென்றெண்ணின எனக்குத் தபாற்காரனுத்யோகந்தான் கிட்டும்போலிருக்கிறது. சிங்காரமான உத்தியான வனத்தில் இராஜ குமாரியும் அவள் சேடிகளும் வந்து விளையாடுகிறார்களாம். அவர்கள் எப்படியிருப்பார்கள், என்ன விளையாட்டாடுவார்கள், அந்த வனத்திலதிசயங்கள் எவை; அவற்றை எல்லாம் நான் கண்ணால் ஒருமுறை கண்டாலன்றி என்மனம் ஆறுதல் அடையாது. ஆகையால் துவாரபாலகனைக் கேட்கிறேன்" என்று மனத்தில் நிச்சயஞ்செய்துகொண்டு "கும்பகா, உத்தியானவனத்தில் அதிசயங்களுண்டென்றாயே, அதற்குப் போகும் வழியைச் சொன்னால், ரேசகரைப் பார்ப்பதற்குமுன் அங்கெல்லாம் சுற்றிக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று ஸுமித்திரன் கேட்டவுடன் கும்பகன் வழியைச் சொன்னான். அப்போது சுமார் பகலில் பன்னிரண்டு நாழிகையாயிருக்கும் இளவேனிற்காலம். ஸுமித்திரன் கும்பகன் சொன்ன வழியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே உத்தியானவனத்திற் போய் மூலைக்கு மூலை சுற்றிப்பார்த்துக் கொண்டிருக்கையில் ஓரிடத்தில் லதாக்கிரஹம் ஒன்றும் அதின் நடுவில் ஒரு ஊற்றுக்கண் குளிர்ந்த நீரை வாரி இறைத்துக் கொண்டிருப்பதையுங் கண்டு அதனுட் பிரவேசித்துக் களைப்பாற நினைத்து உட்கார்ந்தான். தென்றல் வீசவே ஸுமித்திரன் கொஞ்சம் கண்ணயர்ந்தான்; பிரயாணத்தின் சிரமத்தினால் நல்ல தூக்கம் தூங்கிவிட்டான்.

ஸுமித்திரன் தூங்குங்காலத்தில் ஸுசீலையும் ஸுநந்தையும் லதாக்கிருஹத்தினண்டை வந்தார்கள். மெய்ம்மறந்து தூங்கும் புருஷனைச் சற்றுக் கவனமாய்ப் பார்த்தபோது முன் அதிசய நகரத்தில் அரண்மனைச் சேவகத்திலிருக்கக் கண்ட புருஷன்தான் இவனென்று உறுதி பிறந்தது. ஸுசீலை எட்டி நின்றாள்; ஸுநந்தை கிட்டப் போய்க் குனிந்து நிற்குங்கால், ஸுமித்திரனுடைய சட்டைப்பையிலிருந்து ஓர் கடிதம் வெளியில் பிதுங்கி நின்றது. அதை ஸுநந்தை எடுத்து ஸுசீலையிடத்திற் கொடுத்தாள். அது ரேசகனுக்கு அரசனால் அனுப்பப்பட்ட கடிதம். ஸுநந்தை தைரியஞ் சொன்னமையால் ஸுசீலை முத்திரையை உடைத்து உட்புறத்தில் எழுதியவற்றைக் கண்ணுறவே அவளுக்கு வந்த ஆத்திரமும் துக்கமும் அளவிறந்தன. ஸுசீலைக்கு ஸுமித்திரனிடத்திற் காதல் பிறந்ததென்பதிற் சந்தேகமில்லை; ஆயினும் தன்னுட்கருத்தைத் தன் தோழிக்குந் தெரிவிக்க ஸங்கோஜப்பட்டுச் சொல்வாளாயினாள்:—"ஸுநந்தா, வேறு ஒருவருக்கு எழுதிய கடிதத்தை உடைத்துப் பார்த்ததே ராஜதர்மத்திற்கு விரோதம். அந்தப் பாபத்திற்குள்ளாகிவிட்டேன். கடவுள்தான் என்குற்றத்தை மன்னித்தல் வேண்டும். இளையாள் மோகத்திலிருக்கும் என்பிதா என்னை மன்னிக்க மாட்டார். இங்கு தூங்கும் வீரன் "என்ன குற்றஞ் செய்தானோ? பிதாவின் கடிதத்தில் எழுதியவற்றைப் படிக்கிறேன், கேள்:—

நம்மிடத்தில் குறையாத விசுவாஸம் வைத்திருக்கிற ரேசகா, உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாவதாக. இதைக்கொண்டுவருகிற என் சத்துருவை உடனே கொலைசெய்து அவன் தலையைக் கோட்டைக்கு வெளியில் ஒருகம்பத்தில் பதித்துவைக்கவும். நாம் கமலாலயத்திற்குச் சீக்கிரத்தில் வருவதாக எண்ணியிருக்கிறோம்.'



என் பிதாவுக்குச் சத்துரு எனக்குஞ் சத்துருதானே. இந்தப் புருஷனைக் காப்பாற்றுதல் நமது கடமையன்று. அவனவன் எந்த விதிக்கு வந்தானோ அதை யனுபவித்தல் வேண்டும். பின்னும் ஒன்று சொல்லுகிறேன். இராஜகுலத்திற் பிறக்காத எவனையும் நான் மணம்புரிவதற்கு நாட்டிலுள்ளாராவது, என் உற்றோராவது உடன்படார். நீ நினைத்திருக்கிறது நான் இந்தப் போர்வீரனிடத்தில் காதல் கொண்டிருக்கிறேன் என்பது. அது முடியாத காரியம். எடுத்த கடிதத்தை மறுபடியுமொட்டி அந்தப் புருஷன் பையிலேயே வைத்துவிட்டு நாம் போவோம் வா" என்றாள். பாம்பின்கால் பாம்பறியுமென்றவாறு ஸுநந்தை ஸுசீலையின் காதலளவை நன்றாயறிந்தவளாதலின், "எல்லாத் தானத்திலும் பிராணதானம் மேலானது என்று கேட்டிருக்கிறோம். ஸ்திரீகளுக்கும் கொலைத்தொழிலுக்கும் வெகுதூரம். எனக்குக் குறிபார்க்கத் தெரியுமென்று உமக்குத் தெரியும். தூங்குகிறவனை உற்றுப்பார்த்ததில் அவன் உம்மையும் உமது பிதாவின் ராஜ்யத்தையும் ஆளப்பிறந்தவனென்று ஸ்பஷ்டமாய்க் காண்கிறது. பெண்பாலர்க்கியலாத கொலைத்தொழிலுக்கு இடங்கொடுத்தலாகாது. நான் சொல்லுமாறு வேறொரு கடிதத்தை ரேசகருக்கு எழுதி உமது பிதாவின் முத்திரையைப் போட்டுத் தூங்குகிறவன் பையில் வைத்துவிடல் வேண்டும். வலுவில் வருகிற சீதேவியைக் காலாலுதைத்தல் தர்மமல்ல, உமது மனத்தைத் திடஞ்செய்துகொண்டால் கடிதம் எழுதவேண்டிய முறையைச் சொல்வேன்," என்றாள்.

அமிருதம்போன்ற ஸுநந்தையின் வாக்கைக் கேட்ட ஸுசீலை "ஸுநந்தா, கடிதம் எழுதுவது எவ்வாறு, அதைச் சொல். பிறகு மற்றவைகளை யோசித்துக்கொள்ளலாகும்" என்றாள்.

ஸுநந்தை "அம்மணி, எனக்குத் தோன்றியவாறு சொல்கிறேன். தமக்குப் பொருத்தமாயிருப்பின் அவ்வாறெழுதலாம். முதலில் தமது பிதாவின் கடிதத்தைப்போலவே எழுதிவிட்டுப் பின்பு "நம்முடைய ஏக புத்திரியின் விவாகத்தைப்பற்றி யோசனை செய்ததில் இந்தக் கடிதங் கொண்டுவருகிற யௌவன புருஷனைத்தவிர வேறொருவரும் தக்கவராகத் தோற்றாமையால், நமது ஆஞ்ஞாபத்திரம் கையிற் கிடைத்த தினத்திலேயே மணத்திற்கு வேண்டியவற்றையெல்லாஞ் செய்து முடித்து, 'இருவருக்கும் பாணிக்கிரஹணமும் செய்வித்து ஸுமித்திரன் என்னும் எமது நண்பனுக்கு மகுடாபிஷேகமும் செய்துவைக்கக் கடவாய். கமலாலயத்திலுள்ள நமது பிரஜைகளெல்லாரும் நமது மருமகப்பிள்ளையையே அரசனாக ஏற்றுக்கொள்ளக் கடவர். இதில் எள்ளளவேனுந் தாமஸமுங் கூடாது. இதுதான் தெய்வ ஸம்மதமென்று எனக்குத் தோற்றுகிறது. காலஹரணஞ் செய்தோமாயின் கொலைப் பாவத்திற்குள்ளாவோம். தூங்குகிறவன் விழித்துக்கொண்டால் மோசம். துரிதமாய்க் காரியத்தை முடித்தல் வேண்டும்," என்றாள்.

அகங்காரத்தினால் மனிதர், தாமே எல்லாவற்றையும் சாதித்துவிட்டதாக எண்ணுகிறார்கள். அவரவர் கர்மாவுக்குத் தக்கபடி தான் புத்தி செல்லும். ஸுமித்திரனுடைய பாக்கியத்தால் ஸுசீலையும் ஸுநந்தையும் அவனிடத்தில் அனுதாபப்பட்டு அவனுக்கு உன்னத தசை வரும்படியான உபாயத்தைத் தேடுவாரானார். தெய்வமே ஸுமித்திரன் கக்ஷியிலிருந்தமையால் அவனுக்கு அன்று பெருந்தூக்கம் பகலில் வந்தது. இரண்டு சிறுமியரும் தாம் உறுதி பண்ணியவாறே புதிய பத்திரமொன்றெழுதி அரசன் முத்திரையைப்போட்டு ஸுமித்திரன் சட்டைப்பையில் வைத்துவிட்டுத் தம்மிடஞ்சென்றார்கள். ஸுநந்தை அன்று நடந்த காரியத்தினால் மிகுந்த களிப்புற்றவளாயிருந்தாள்; ஸுசீலையோ என்றும் ஒழுங்கீனமாய் நடந்திராமையால் அன்று தான் செய்த காரியத்தை நினைத்து மனமும் முகமும் வாடியிருந்தாள்:

ஸுமித்திரன் விழித்துக்கொண்ட பொழுது அஸ்தமன காலமாயிற்று. பரபரப்புடன்எழுந்து முகத்தை நன்றாய்க் கழுவிக்கொண்டு துவாரபாலகனான கும்பகனிடத்தில் வந்து ரேசகரிடத்தில் அழைத்துப் போகும்படி கேட்டவுடன் அவனும் ஸுமித்திரனைக் கோட்டைத் தளகர்த்தனிருந்த விடத்திற்கு இட்டுப்போனான்.

ரேசகன் ஸஞ்சீவியைப் போன்றவனல்லன். வயது முதிர்ந்தவன்; இச்சகம் பாடியல்லன்; தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் எக்காலமும் நடவான்; பூததயையுடையவன். அரசனிடத்தில் பக்தியுடையவன். அரசனுடையபுத்திரியைத் தன்புத்திரிபோலப்பாவித்து ஒரு குறையுமில்லாமல் நடத்திவந்தான். ஸுமித்திரனைப் பார்த்தக்ஷணமே ரேசகனுக்கு அவனிடத்தில் ஒரு பிரியம் உண்டாயிற்று. அரசனுடைய ஆஞ்ஞாபத்திரத்தைப் பார்த்தவுடன் அதைச் சிரசின்மேல் வைத்து "ஸுமித்திரா, நமது மகாராஜா கடிதத்தில் எழுதியிருப்பதை நீ அறிவாயோ?" என்று வினவ, ஸுமித்ரன் "பத்திரத்தைத் தங்களிடத்தில் தாச்

"சொன்னார்களையன்றி மற்றொன்றையும் நானறியேன்" என்று மறுமொழி சொன்னான். ஸுமித்திரனுக்குப் பல வுபசாரங்கள் செய்து தன்னோடிருக்கும்படி பிரியமாகக் கேட்டுக்கொண்டு, இரண்டு சேவகர்களை ஸுமித்திரன் வேண்டியபடி நடக்கும்படி கட்டளையிட்டு ரேசகன் ராஜகுமாரி இருந்த விடுதிக்குச் சென்றான்.

அங்கு சென்றகாலத்தில் ராஜகுமாரியும் அவள் சேடி ஸுநந்தையும் ஏதோ தமக்குள் இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஸுநந்தையின் முகம் மலர்ந்தும் ஸுசீலையின் முகம் வாடியு மிருந்தது. ரேசகன் நினைத்தது அரசன் தன் புத்திரியிடத்தில் உபேக்ஷையா யிருத்தலை அவள் அறிந்து முகமலர்ச்சியில்லாமலிருந்தா ளென்பது. உண்மையிலோ ராஜகுமாரி பிதாவின் கட்டளைக்கு விரோதமான காரியத்தைச் செய்ததினால் மனம் நொந்திருந்தாள். அவ்விரு சிறுமியரும் கடவுளும் மாத்திரம் கடிதத்தின் மருமத்தை யறிந்தவர்கள். சற்றுநேரம் சும்மா விருந்து ரேசகன் ராஜகுமாரியை நோக்கி, "அருமைக் குழந்தாய், உமக்கு நாளைக்கே திருமணம் முடிக்கவேண்டுமென்று எனக்கு ராஜகட்டளை வந்திருக்கிறது. உமது முகம் வழக்கம்போ லல்லாமல் வாடியிருப்பதேன்? உமக்கு வாய்க்கப்போகிற பர்த்தா அழகில் கோடி மன்மதர்களுக்குச் சமானர். வீரத்தனத்தில் அவரை ஜயிப்பது ஒருவராலு மில்லை. அவர் குலம் எனக்குத் தெரியாவிடினும், அவர் குணங்களினால் குலம் உயர்ந்ததென்றே சொல்லவேண்டும். கள்ளி வயிற்றின் அகில் பிறக்கின்றதல்லவா? உலகத்தில் குணத்தினாற் பெருமையே யன்றிக் குலத்தினாற் பெருமை பேசுவது ஏச்சுக்கிடம். உமது பர்த்தாவாக வேண்டியவர் என்னிடத்திலேயே இருக்கின்றார். நாளைக்குக் கலியாண மண்டபத்திற் பார்க்கலாகும்" என்று சொல்லிச் சேடியைப் பார்த்து "ஸுநந்தா, நீ வெகுகாலமாய் ஸகோதரியினும் அதிகப் பிரியமாகப் பாதுகாத்து வந்த ராஜகுமாரிக்கு நாளைக்கே திருமணமாகையால் மணக்கோலங்களைச் செவ்வையாகச் செய்து ஸபாமண்டபத்துக்கு நல்ல லக்கினத்தில் அழைத்து வா. ராஜகுமாரியின் முகம் வாடியிருப்பது எனக்கு வருத்தமாயிருக்கிறது. தக்க உபசாரங்கள் செய்து அவளைத் தேற்றி முக மலர்ச்சியோடு கலியாணப் பந்தலுக்கு வரவேண்டும். வேண்டிய பொருள்களை யெல்லாம் பொக்கிஷத்திலிருந்து எடுத்துக்கொள். சாவி இதோ இருக்கிறது. உனக்கு அதிகமாகச் சொல்லவேண்டியது அனாவசியம்," என்று கூறி அரசன் கட்டளை நிறைவேற்ற ஆயத்தஞ் செய்யப்போனான். அன்றிரவு முழுமையும் ஒருவருக்காவது தூக்கமென்பது இல்லை. ஸுமித்திரன் மட்டில் வெகு நன்றாய்த் தூங்கினான்.

ஜோதிஷர்கள் குறித்த லக்கினத்தில், ஸுசீலை மணப்பந்தலில் வந்தாள். ஸுமித்திரனும் கலியாணக்கோலத்தோடு அங்கே வந்தான். இவ்விருவரும் ஒருவரை ஒருவர் கடைக்கண்களால் பார்த்து மனம் பூரித்தார்கள். ஸுமித்திரன் "கிரமேண காட்டிலிருந்து நாட்டிற்கும், நாட்டிலிருந்து ஆசிரமத்திற்கும், அங்கிருந்து அரசனிடத்திற்கும், கடைசியாக மணக்கோலமும் பூண்டு நிற்கிறேன். நல்ல தசைகளும் துர்த்தசைகளும் கலந்தே வருகின்றன. இத்தருணம் வந்திருக்கிற அதிருஷ்டத்திற்குப்பின் துன்பம் வரலாம். எதுவந்தாலும் நான் அஞ்சுகிறதில்லை, எல்லாங் கடவுள் செயல்" என்று நினைத்து முகங்கோணாமலும் மனம்வாடாமலும் கண்டோரெல்லாம் அவன் அழகையும் நிலையையும் பார்த்துக் களிக்கும்படி நின்றான். ஸுசீலையும் பெண்களியற்கை மாறாமல் பந்தலில் தலை குனிந்து நின்றாள்.

புரோஹிதர் அவ்விருவர் கைகளையும் ஒன்றுசேர்த்து ஆசீர்வதித்தார். மங்களவாத்தியங்கள் முழங்கின. தேவர் பூமாரி பொழிந்தனர். எல்லாருடைய மனங்களும் களித்தன. ஸுமித்திரனும் ஸுசீலையும் அன்றனுபவித்த ஸந்தோஷத்தை எவராலும் அளவிடல் முடியாது.

பாணிக்கிரஹணம் ஆனவுடன் ஸுசீலை தன் நாயகனைப்பார்த்து, "தம்மிடத்திலுள்ள உத்தமகுணங்களைக் கண்டு என் பிதா உம்மை எனக்குப் பர்த்தாவாக நியமித்திருக்கிறார். அவருக்கு இஷ்டம் எதோ, அது தான் எனக்கும் இஷ்டம். என்னுயுள் உள்ளவரையில் தாமே எனக்குக் கடவுள். தமது மனங் கோணாமல் நடக்கும்படி ஈசுவரன் தயை செய்வாராக" என்றாள்.

ஸுமித்திரனும் தெய்வ சாக்ஷியாகச் சொல்கிறேன், என்னை இந்த உயர்ந்த நிலைமையை யடையச்செய்த அரசனுக்கு என்னுயிரையும் கொடுக்க எக்காலத்திலும் கடமைப் பட்டுள்ளேன். நீ என்னிடத்தில் வைத்திருக்கிற அன்புங்குறையா வண்ணம் நடப்பேனாக" என்றான்.



கமலாலயத்திலுள்ளவர்கள் களித்திருக்கையில் அரசன் மனம் பற்பல யோசனைகளாற் கலக்கமடைந்திருந்தது. ஸுசீலைக்கு அவன் நினைத்திருந்த கணவன் யுத்தஞ்செய்யப் போன விடத்தில் சத்ருக்களால் வதைபட்டு அவன் நாடுங் கைப்பற்றப்பட்டதென்று செய்தி வந்தமையால் அரசன் துக்கத்திலாழ்ந்திருந்தான். அந்தத் துக்கத்தை ஒருவாறு நிவர்த்தி செய்துகொள்ள ஸுமித்ரனுடைய வெட்டுண்ட தலையைப் பார்க்கலாமென்றெண்ணிப் பரிவாரங்களோடு கமலாலயத்துக்குப் புறப்பட்டு வந்தான். அங்கோ, பார்த்த விடமெல்லாம் மணக்கோலமாயிருந்தது. அதிவேகமாய் ஒரு தூதனை அனுப்பி ரேசகனைத் தருவித்து, "இது என்னமணக்கோலமாயிருக்கிறது. நமது ஆஞ்ஞா பத்ரம் உனக்குக் கிடைத்ததா? அதிலுள்ளபடி நீ செய்து முடித்தாயா? அப்படி நீ முடித்ததற்கு அறிகுறி ஒன்றுங் காணோமே," என்று கோபமாய்ச் சொன்னான்.

ரேசகன் "பிரபுவே, தமது ஆணைமீறி நான் நடந்ததுண்டா? இதோ தங்கள் பத்ரமிருக்கிறது. அதில் ஆஞ்ஞாபித் திருக்கிறபடி தாமனுப்பிய தூதனுக்கும் தமது புத்ரிக்கும் விவாகஞ்செய்து வைத்துவிட்டேன். கலியாணச் சடங்குகள் இப்போது நடந்தேறி வருகின்றன. என் தவறுதல்கள் ஏதாவதிருக்குமாயின் க்ஷமித்தல் வேண்டும்," என்றான்.

நாமொன் றெண்ணத் தெய்வமொன் றெண்ணுகிறது வழக்கமா யிருக்கிறது. அறிவீனத்தால் எதையும் நாமே செய்துவிடலா மென் றெண்ணுகிறோம். சீப்பை யொளிப்பதால் கலியாணம் நிற்குமா? அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா? அஸுயா வர்மனும் சிறிதுகாலம் மனங்கலங்கிநின்று பிறகு ரேசகனைப்பார்த்து, "நமது மருமகப்பிள்ளையை எமக்கெதிரி லழைத்துவா," என்று உத்திரவளித்தான்.

ஸுமித்ரனும் கலியாணக் கோலத்துடன் வந்து அரசனை வணங்கி நின்றான். அரசன், "பிள்ளாய், எனது நாட்டையும் என் புத்ரியையும் ஆளப்பிறந்தவன் நீ என்று பெரியோர் சொன்னது இன்று உண்மையாயிற்று. எனக்கும் வார்த்திகம் வந்துவிட்டது. நான் இனித் தபஸு செய்யக் காட்டிற்குப் போகின்றேன். நீயே ஏகாதிபதியாயிருந்து ராஜ்ய காரியங்களைச் செவ்வையாய் நடத்தித் தீர்க்காயுளும் மக்கட்பேறு முதலிய ஸகல பாக்கியங்களும் பெற்றுவாழ்," என்று சொல்லிப் பரிவாரத்துடன் வனவாஸஞ் செய்யப்போனான்.

ஸுமித்ரனும் ஸுசீலையும் ஸகல ஸௌபாக்கியங்களைப் பெற்று

உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரிலை [தில்
இத்தலத்தி லென்றிமையோ ரெம்மருங்கும்–கைத்தலத்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து.

(முற்றும்.)

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.



# நாகாநந்தம்

## NAGANANDAM: A CLASSICAL DRAMA

### 2-வது அங்கம்—முதல் காட்சி

**நாயகன்.**—

நாட்ட மென்விழி நோக்கத்து நாலிலை
காட்டு மாக்கிளை கணக்கிற் கலைபுரிக்
காட்டுத் தலைப்பெண திடைக்கணிற் காய்ந்துளேன்
வாட்ட மிற்கணை வாட்டலு மாங்கொலோ.

**விதூஷகன்.**—நண்ப! இங்கு பாரும்! உங்களுடைய ஆண்மை எங்கு பறந்தோடிவிட்டது?

**நாயகன்.**—நான் தீரன் அன்றோ; என்.—

மதியொடு ஒருவனேன் மாலிருள் கழித்திலன்?
இதழ்விரி நெய்தலின் மூக்கிசைத் திலதென்?
மாதவி மயங்கிய மாலைமாற் காற்றென்
பூதிகந் தன்னிற் போந்து வாட்டியதென்?
தாமரை ஓடையார் வண்டரின் தனியிசையென்
பாழ்ம்மனங் குடைய பாதவித் தனன்கொல்?
என்னை? காரணமி யாதுகொண் டியம்பினை?
மன்னிடும் துயர காலத்து மதிக்கு
மாண்மை யிலேயெனன தூற்றுவ தாகும்?
(யோசித்து)
நன்றே பகர்ந்தனன் நண்பன்!
கோழை நெஞ்சனென்று குறித்ததும் சரதம்.
உடலிலா ஒருவன் ஒட்டிய மலர்க்காய்
மடவரல் மனக்காய் மயங்கு மாண்மையேன், உன்
முனம்,
அடல் சான்றவனென அழைத்தலு மாமே.

**விதூஷகன்.**—(தனக்குள்) இவ்வாறு தன் உறுதியின்மையை வெளியிட்டு, தன் மனத்தில் ஊறும் துன்பத்தின் மூலத்தையும் வெளியிட்டனன். எவ்வாறு அதைத் தடுத்து மனது வேறு விஷயத்தில் பாயச்செய்வேன்—(உரக்க) அது எப்படித் தாங்கள் பெற்றோர்களுக்குச் சிச்ருஷை சிறிது செய்துவிட்டு இங்கு வந்துவிட்டீர்கள்?

**நாயகன்.**—நேசா! நீ பொருத்தமாகத்தான் கேட்டாய்—உன்னிடம் சொல்லாது வேறு யாரிடம் சொல்லப்போகிறேன். இன்று ஒரு கனவு கண்டேன். அதாவது: (விரலால் சுட்டிக்கொண்டு) இங்கு, இந்த சந்தனத்தோப்பில், பளிங்குமேடையின் மேல், என் மனத்தைக் கொள்ளைகொண்ட அவளும், கண்ணீரும் கம்பலையுமாகி என்னை நிந்திக்கக் கண்டேன், என் கண்

ஞர நானே கண்டேன். நான் கனவில் மனோஹரமாக என்காதலியைக் கண்ட இந்தப் பிரதேசத்திலேயே இன்றைய மிஞ்சிய பகலைப் போக்குவேன். வா! நாம் போவோம்.

விதூஷகன்.—நடவும்; ஐய! நடந்து வாரும். இருவரும் நடக்கிறார்கள்.

தோழி.—(செவிசாய்த்துகேட்டு, பரபரப்புடன்) அம்மணீ! இங்கு கால்நடை ஓசை காதிற் படுகிறது.

நாயகி.—(பரபரப்போடு தன்னைப் பார்த்துக்கொண்டு) தோழீ! இந்தக் கோலத்தில் நான் இருப்பதைக்கண்டால் என் மனநிலை எவரும் அறியலாம். எழுந்திரு! நாம் இந்தச் செவ்விய அசோகமரத்தின் பின் ஒளிந்து அது யாரென்று பார்ப்போம் (இருவரும் அவ்வாறே செய்கிறார்)

விதூஷகன்.—இதுதான் சந்தணவனம். வா! உள்ளே போய் உட்காரலாம்(இருவரும் தோப்பிற்குள் நுழைகிறார்கள்.)

நாயகன்.—(சுற்றி நோக்கி)

மதிமுக மிழந்த வானம் போன்று
பளிக்குத் தவீசுறீஇ படீரச் சோலையீ
தளித்தில தெனக்கு களிக்கு மின்பமே!

தோழி.—அரசி! உனக்கு எப்பொழுது நன்மையே துணைகொள்ளட்டும். உன் உள்ளத்திற் குடிகொண்டு அதைக்கொள்ளை கொண்ட மாணவன் அவன்தானடீ! அம்மணீ! அவனேதான்!

நாயகி.—(ஆசையோடு நோக்கி, நாணத்தோடு) அடீஇ! தோழி அவரைக் கண்டதும் லஜ்ஜையால் கூச்சத்திற்காளாகிவிட்டேன். இவ்வளவு கிட்ட நிற்க எனக்கு வெட்கமாய் இருக்கிறது; ஒருவேளை என்னை அவர் பார்த்தாலும் பார்க்கலாம். வேறு எங்கையாவது போவோம் வா. (தனது காலை அசைத்துக்கொண்டு) அடி ஏனிப்படி என் இடது துடை துடிக்கிறது?

தோழி.—(சிரித்து) பேதாய்! நீ இங்கு நின்று இருப்பதை யார் பார்க்கமுடியும். உனக்கு முன் இந்தச் செகப்பு அசோக மரமிருப்பதை மறந்துவிட்டாயா, என்ன? நாம் இங்கே உட்கார்ந்து சற்று இருக்கலாம் (இருவரும் அப்படியே செய்தல்)

விதூஷகன்.—(சுற்றி நோக்கி) நண்ப! இதோ பார் பளிங்குமேடை!

நாயகன்.—(கண்ணீர் சிந்த, நெட்டுயிர்த்தல்.)

தோழி.—என்ன அரசீ! கொஞ்சம் ஸம்பாஷணைக்கூட என் காதில் விழுகிறது. அதை உற்று கவனிப்போம் (இருவரும் செவி சாய்த்துக் கேட்டல்.)

விதூஷகன்.—(விரலால் சுட்டி) அந்தோ! நண்பா! இங்குதான் அந்தப் பளிங்குமேடை இருக்கிறதென்று நான்தான் சொல்லுகிறேனே.

நாயகன்.—நேசா! நீ நன்றாகக் குறிப்போடு பார்த்திருக்கிறாய்! (கையால் காட்டிக்கொண்டு)

புகைந்து விம்மி நெஞ்சம் பொங்கவும்
வகையொடு மனத்தென் வரவின் தாமதத்தை
எண்ணி எண்ணி ஏக்கங் கொண்டு
கண்ணீர் மல்கி கவலையைக் காட்டி
உதட்டிடை வெறுப்பின் பதட்டங் காட்டி
பதிந்த கோபக் கனலைப் பரப்பி—கவலையின்
வெண்முக வீதியில் செய்யகர மோட்டியென்
கண்ணினைக் கொள்ளை கொண்ட காரிகை
நண்ணிய நலத்தின் நயங்கொள்
பளிங்கு மேடை தெளிதி ஈதே!

வா! அதே மேடைமேல் நாமும் உட்காரலாம்.

(இருவரும் உட்காரல்)

நாயகி.—(யோசித்து) ஏனடீ தோழீ! அது யாராயிருக்கலாம்?

தோழி.—அரசி! நம்மைப் பார்க்கமுடியாமல் அவனைநோக்கால் தொடர்வதுபோலத் தம்மையும் அவர் கண்டிருக்கலாம் அல்லவா?

நாயகி.—அது ஸரி போகட்டும்—உடலில் பிணங்கியதாக எவளைப்பற்றி அவர் மனதில் ஆயாஸப்படுகிறார்?

தோழி.—அரசி! இப்படி ஸந்தேஹிக்காதே. மேலும் நாம் உற்று கேட்போம்.

விதூஷகன்.—(தனக்குள்)இந்தப் பயல் இக்கதையில் ஸந்தோஷப்படுகிறான்: இருக்கட்டும்! எல்லாம் அவன் வாயிலிருந்தே வரும்படிச் செய்கிறேன்—. (உரக்க) என் நண்ப! அவள் கண்ணீர் விட்டழுதபோது நீ அவளிடம் என்ன சொல்லினாய்?

நாயகன்.—அன்ப! நான் சொன்னதாவது,

கண்ணீர் கதுவ காந்தக் கல்லீது
தெண்ணீர் அருவியுண் நண்முக மதியின்



எழுச்சியின் முன்னர் பிலிற்றுவ திணைத்தே!

நாயகி.—(பொறுமையுடன்) சாதுரிகே! இன்னம் என்ன கேட்கவேண்டி இருக்கிறது? (கண்ணீர் விட்டுக்கொண்டு) நாம் போகலாம் வா.

தோழி.—(கையைப்பிடித்து தடுத்து)அம்மா! அப்படிச் சொல்லாதியும். உன்னைப் பார்த்தவர் வேறு விதமாகப் பேசமுடியும் என்றால் நம்பமுடியவில்லை. இரும். கதையின் முடிவை எதிர்பார்ப்போம்.

நாயகன்.—நண்பா! நான் அவளது உருவை இப்பளிங்கு மேடையில் சித்திரமாக எழுதி அதைக்கண்டு குதூஹலமாகக்காலத்தைப் போக்க எண்ணுகிறேன். நீ மலைச்சாரல் சென்று அரிதாரச் செந்தூரம் எடுத்து வா.

விதூஷகன்.—அப்படியே! தாங்கள் சொல்லிய விதமே. (போய்த் தேடி எடுத்து வரல்) ஐயா! தாங்கள் ஒரு வர்ணக்கல் வேண்டுமென்று கேட்டீர்; நான் கஷ்டமில்லாமல் ஐந்து வர்ணங்களைக் கொண்டுவந்து இருக்கிறேன். குஷாலாகத் தாங்கள் சித்திரமெழுதும்- (வர்ணங்களைக் கொடுத்தல்)

நாயகன்.—நண்ப நீ செய்தது நிரம்பஸரி! (அவைகளை எடுத்து மேடைமேல் சித்ரமெழுதல்—மயிர் கூச்சிட) பார்! நண்பா! இதோ பார்!

வெட்டுணு கோவை வாயின்
மிகைமனங் கொள்ளை கொண்ட
கட்டொணு காதல் மங்கை
கற்பித உருவு நோக்க
பட்டிடுந் தேய்ந்த திங்கள்
பண்டுபோல் முளைப்பக் கண்ட
தட்டொணு யுவகை வெள்ளந்
தழைத்துளம் தளிருங் கண்டாய்.

விதூஷகன்.—(ஆச்சர்யத்துடன் பார்த்து) ஹா! நண்பா! நேரில் இல்லாதபொழுதே இவ்வளவு அழகிய சித்ரம்! பஹு விசித்ரம்!!

நாயகன்.—(சிரித்து) நண்ப! இதிலென்ன விசித்ரம்?

நோக்கு நோக்கின்முன் நிற்றலை நோக்கியும்
போக்கில் புந்தியின் புகுத்து திரட்டியும்
ஊக்கத் தென்மனத் தெதிர்பதி யுருவைக்கண்
டாக்க லதிசய மாகுமுற் கியாண்டரோ.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay Writing

### III. விளக்க வ்யாஸங்கள்

### EXPOSITORY ESSAYS

### (4) புதிய ஏற்பாடுகள்—பள்ளிக்கூடப் பூர்ண ஏற்பாடு

### New Schemes—The School Final Scheme.

குறிப்பு.—முன் ஏற்பாடு—மாறக்காரணம்—புதிய ஏற்பாடு—ஸாதகம்—பாதகம்—முடிவுரை.

1909-ம் வருஷம்வரையில் ஸாதாரண ஆங்கலப் பள்ளிக்கூடங்களிலுள்ள வகுப்புக்களில் வருஷ முடிவுகளில் வகுப்பு மாற்றப்பட்டுத் தேர்ந்தவர்கள் இவைகளின் முடிவில் ஸர்வகலா ஸங்கத்தார் செய்து வந்த பிரவேச பரீக்ஷைக்குப் போய்த் தங்கள் படிப்பைப் பூரணம் செய்துகொண்டு மேல் ஸர்வகலாஸங்கப் பெரிய பள்ளிக்கூடங்களில் மேற்படிப்பை நடத்திச் சிறப்புற்றோங்கினர். இந்தப் பிரவேசபரீக்ஷையே ஸாதாரண பள்ளிக்கூடக் கல்விகளைப் பூர்ணம் செய்வதாக விருந்தது. இந்தப் பரீக்ஷைக்கு ஆங்கலம், இரண்டாம் பாஷை (ஸ்வதேச பாஷை), கணிதம், சக்தி வஸ்து தத்வசாஸ்திரம், சரித்திரபூகோளசாஸ்திரம் ஆகிய இவைகளைந்துமே பாடங்களாக ஏற்பட்டிருந்தன. இதனால் பூர்த்தியான உலகவிஷய ஞானம் ஏற்படாமல் போய்விடுமே என்று கருதியே ஸர்வகலாஸங்கம் முதலிரண்டு வகுப்பிலும் முற்கூறிய முதல் மூன்றிலும் மேலான ஞானமும், தேஹதத்வ சாஸ்திரம், புராதன சரித்திரம் ஆகிய இவைகளில் ஸாதாரண ஞானம் வேண்டும் என்று வைத்திருந்தது. இதனாலே இந்த வகுப்புக்களோடு நின்றுவிட்டால் பொதுவான ஞானம் வேண்டிய அளவு ஒருவனுக்கு உண்டாகி யிருக்கும். இதன்மேல் பி. ஏ. வகுப்புக்களில் இதுவரையில் படித்து வந்த விஷயங்களுள் ஆங்கிலம், இரண்டாம் பாஷை, மற்றவைகளுள் வாசிப்போருக்கு ருசியுள்ள ஒரு விஷயம் ஆகிய இம்மூன்றிலும் விசேஷ பாண்டித்யம் அவசியம் என வைத்து, இம்மூன்றிலும் தனித்தனியாகப் பரீக்ஷைக்குப் போகலாம் என்ற ஏற்பாடும் வைத்திருந்தது. மேலும் இவ்வேற்பாடுகளிருக்கையில் குளிர்ந்த

காலமாகிய மார்கழி தை மாதங்களில் பரீக்ஷைகள் நடந்து வந்தன.

இப்படி நடந்து வருகையில் பொதுவாக ஸாதாரணப் பள்ளிக்கூடங்களில் வாசிப்போர்களுக்குக்கணக்கு, தத்வசாஸ்திரம், சரித்திரம் இவைகளுள் எல்லாவற்றிலும் தேர்ச்சி பெறுவது கடினமாகவும், இவைகளில் முன் ஏற்பாட்டின்படி எல்லாவற்றிலும் ஒரே அடியில் தேறமுடியாமலும் போக, வருஷா வருஷம் அநேகர் பிரவேச பரீக்ஷையில் அநேகம் தரம் தோற்று வந்தனர். இதனால் அநேக குடும்பங்களில் வீண் பணச்செலவு ஆகிவிட அவைகள் ஏழைகளாகி விட்டன. பிள்ளைகள் தேருததற்கு இவைகளைத்தவிர அநேக உட்காரணங்களும் உண்டு. இவைகளை எல்லாம் பார்த்து ராஜாங்கத்தார், இவைகளை நீக்கி ஜனங்களுக்கு ஸுகம் உண்டாக்க வேண்டும் என்று கருதி பள்ளிக்கூடப் பூர்ண ஏற்பாடு என்ற புதிய ஒழுங்கை ஏற்படுத்தினர்.

இந்தப் புதிய ஒழுங்கு யாது என்பதைச் சற்று விசாரிப்போம். 'ஸர்வகலாஸங்கப் படிப்பு படிப்பின் சிறப்புக்காகப் படிக்க வேண்டியதே ஒழிய காசுபணம் ஸம்பாதிக்க வேண்டும் என்று கருதிப் படிக்கக்கூடாது. ஆகவே ஸாதாரண பள்ளிக்கூடப்படிப்பு முடிவில் பிரவேசப் பரீக்ஷை வேண்டியதில்லை. பொதுவாக மாணாக்கர்கள் அறிவை அளவிட ஒரு பரீக்ஷை போதும். இது ஸம்பந்தமாக விஷயங்கள் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும். முதல் வகுப்பு எல்லோரும் அவசியம் கற்கவேண்டியது. இரண்டாவது அவசியம் கற்கவேண்டியதாயினும் பொதுவான பரீக்ஷையுடன் ஸம்பந்தப்படாம லிருப்பது. மூன்றாவது அபிருசிப்படி மாணாக்கர்கள் எடுத்து ஆழ்ந்து ஆராயவேண்டியவை. இவைகளில் குறைந்தபக்ஷம் இரண்டு விஷயம் எடுத்துக் கற்கவேண்டும்' என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி முதல் பாகத்தில் ஆங்கலம், தேசீயவசன நடைப்பயிற்சியும் மொழிபெயர்ப்புப் பயிற்சியும், மூலகணிதம் ஆகிய இவைகளும், இரண்டாம் பகுதியில் மூலதத்வசாஸ்திரம், இந்துதேச சரித்ரம், பூகோளசாஸ்திரம், சித்ரம் வரைதல், தேகப்பயிற்சி ஆகிய இவைகளும்,மூன்றாம் பகுப்பில் தான் மற்றைய முன் கற்றுவந்த விஷயங்களும், தேசிய பாஷைகள், வர்த்தகவிஷயங்கள், தத்வசாஸ்திரங்கள் ஆகிய இவைகளும் அடங்கியுள்ளன. இவைகளுள் முதல்பாகத்திலும் மூன்றாம் பாகம் இரண்டிலும்தான் பொதுபரீக்ஷை உண்டு. இவைகளில் குறைந்த பாண்டித்யமுடையவைகளில் மாத்ரம் மறுபடி அடுத்த வருஷம் பரீக்ஷைக்குப் போகலாம். இதிலிருந்தே வேலைக்குப் போக விரும்புவர்கள் போகலாம், மேலே போகிறவர்கள் அவ்வாறே செய்யலாம். இதில் தேறியவர்கள் பட்டியை வெளியிடுவதில்லை.ஒவ்வொருவருக்குஏற்பட்டிருக்கும் புத்தகத்தில் அவரவர்கள் பாண்டித்ய குறியாகிய தொகைகளை எழுதிக்கொடுத்து விடுவது. இப்பரீக்ஷை வருஷம் ஒருமுறை பங்குனிமாதம் நடக்கும்.

இவ்வேற்பாட்டில் அநேக ஸாதகங்களிருக்கின்றன. முன் ஏற்பாட்டைப்போல எல்லோரும் எல்லா விஷயங்களையும் படிக்கவேண்டியதில்லை. ஒன்றில் தவறினால் முற்றும் தவறினதாகாது. மறுபடியும் போகவேண்டுமானால் தவறின பாகத்தில் மாத்ரம் போய் குறையைத் தீர்த்துக்கொள்ளலாம். இரண்டாம் பாகத்திலிருக்கும் விஷயங்களில் ஸாதாரணஞான மாத்ரம் வேண்டுமே ஒழிய பரீக்ஷைக்காக அவைகளை உருவேற்றி வீண் மனக்கவலைகொள்ள வேண்டியதில்லை. ஆகவே பரீக்ஷையில் முன்னிருந்த கடினம் இப்பொழுதில்லாமல் போகிறது. தேறின பட்டியை வெளியிடாததினால் சற்று ஏறக்குறைய இருக்கும் பிள்ளைகளுக்கும் மேலே போய்ப் படிக்க இடம் உண்டாகிறது. ஆதலால் முன்னர் மேலே சென்று படித்தவர்களைவிட இப்பொழுது அதிகம் பேர்கள் படித்து மேல் படிப்பை ருசிபார்க்கலாம். மேலே படிக்க விதியில்லாதவர்கள் இந்த ஏற்பாட்டுப் புத்தகத்தை வைத்துக்கொண்டே வேலைக்கும் போகலாம். மேலும் இந்த ஏற்பாட்டின்படி பள்ளிக்கூடத்திலேயே முடிவு வகுப்பின் முன்னுள்ள இரண்டாம் வகுப்பு முதல் அடிக்கடி மாணாக்கன் அபிவிருத்தியை அளந்தறிவதற்கு வேண்டிய ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் வருஷாந்தர பரீக்ஷைமாத்ரம் முக்கியமாகக் கருதப்படாது போய் விடுவதால் ஒவ்வொருவனும் ஒழுங்காகப் படித்து வருவான்.

இப்படி இருந்தும் இந்த ஏற்பாட்டில் அநேக பாதகங்களும் இருக்கின்றன. முன்னர் ஐந்து விஷயங்களிருந்தன. இப்பொழுதும் அது ஒன்றும் குறையவில்லை. முன்னிருந்தவைகளில் எளிதில் பாடபுத்தகங்கள் படித்துத்தேறமுடியும். இப்பொழுது என்னபடித்தும் தேறுவது ஸந்தேஹம். இதுவும் அன்றி இரண்டாம் பாகத்தைச் சேர்ந்த விஷயங்களில் இரண்டொன்று தவிர மற்றையவைகளில் பரீக்ஷை இருந்தால் நலமாக இருக்கும். அவ்வாறில்லாததால் அவைகள் கவனிக்காமல் விடப்படுகின்றன. பரீக்ஷை வைத்தாலோ முன்னிருந்



ததைவிட விஷயங்கள் அதிகமாகிவிடும். வருஷாந்தர பரீக்ஷையைக் கவனியாமல் தின அபிவிருத்தியைக் கவனிப்பதால் யோக்யமில்லாதவர்கள் மேல்வகுப்பிற்குப் போகும்படி நேருவதும் அன்றி, அடிக்கடிப் பரீக்ஷைகளின் கொடுமை வந்து விடுகின்றது. தேறின பட்டி வெளிவராததினால் ஸர்வகலாவகுப்பு இருக்கும் பள்ளிக்கூடங்கள் அதிகாரிகளின் தீர்மானப்படியே பிள்ளைகள் மேல் வகுப்பிற்கு எடுக்கப்பட அருகிலிருக்கும் தனி ஸாதாரணப் பள்ளிக்கூடங்கள் மாணாக்கரில்லாது ஓய வேண்டிவருகிறது. மேலும் முன் ஏற்பாட்டில் பீ. ஏ. போய் யோசித்து அபிருசியுள்ள படிப்பை எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயத்தை இந்த ஏற்பாட்டின்படி 4-வது வகுப்பின் சிறுவர்கள் செய்ய வேண்டி வந்து விட்டது. இதெல்லாம் போதாதென்று பரீக்ஷை நல்ல கோடைகாலத்தில் நடத்தப்படுகின்றது.

ஆகவே முற்கூறியவைகளிலிருந்து ஸாதாரணமாக இந்த ஏற்பாட்டின் அதிக பாதங்கள் இருக்கின்றன என்பது வெளியாகும். மேலும் கீழ்வகுப்புக்களிலேயே ருசிப்படி விஷயங்களை எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்துவிட்டபடியால் பள்ளிக்கூடங்களில் முன்னைவிட ஏராளமாக உபாத்தியாயர்கள் நியமிக்கும்படி வர படிப்புச்செலவு அதிகமாகிவிடுகின்றது. ஏழைகள் இக்காலத்தில் படிப்பது மிகக் கடினமாகிவிட்டது. இன்னும் வர வர இந்தக் கஷ்டங்கள் அதிகரிக்குமே ஒழிய வேறில்லை. இந்தக் கஷ்டத்தைத் தடுக்க நமது பெரியோர்கள் தகுந்த முயற்சிகள் செய்ய வேண்டுவது அவசியமே.

### இதுபோல விவரிக்கக்கூடிய வ்யாஸ விஷயங்கள்.

1. ஸர்வகலாசாலை ஏற்பாடு
2. வ்யாபார ஸங்கங்கள்
3. நாணய வ்யாபாரங்கள்
4. கல்விச்சங்கம்
5. நகர ரக்ஷணஸபை
6. கோயில் நாட்டாமை
7. நியாயம் தீர்த்தல்
8. ராஜரீக ஸபைகள்
9. வானசாஸ்திரசாலை
10. ராஜாங்க ஒழுங்கு.

### பொதுக் குறிப்புகள்.

1. முன் ஏற்பாடுகள்
2. மாறக் காரணம்
3. புதிய ஏற்பாடு
4. ஸாதகம்
5. பாதகம்
6. முடிவுரை

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models

**(8) The Queen and the herdboy.**

One day some years ago, when Queen Victoria was standing on the public road at Balmoral sketching the Castle from a particular point, a flock of sheep approached. Her Majesty being intent on her work, took little notice of the flock and merely moved a little nearer the side of the road. The boy in charge of the sheep shouted at the pitch of his voice, 'Stand oot o' the road, womane and let the sheep go by.' The Queen not moving out of the way so fast as the shepherd wished, he again shouted; 'What are ye stand' in' therefor ? gang oot o' that, and the sheep pass.' One of Her Majesty's attendants, who had been at a distance, on hearing her Royal Mistress thus rudely assailed, went up to the shepherd and demanded of him. Do, you know whom you thus rudely address, boy ?' 'No ; I neither ken nor care, but whoever she be, she sudna be in the sheep's road. 'That's the Queen,' said the official. The boy looked astonished, and after recovering his senses, said with great simplicity : 'The Queen! Why then, disna she pit on clothes that folk can ken her by ?'

### மஹாராணியும் இடைச்சிறுவனும்

சில ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் விக்டோரியா மஹாராணி பால்மொரல் அருகிலிருந்த பொதுச் சாலையில் ஓரிடத்தில் நின்றுகொண்டு அக்கோட்டையின் தோற்றத்தை வரைந்து கொண்டிருக்கையில், அவளண்டை ஓர் ஆட்டுமந்தை அணுகி வந்தது. கருமமே கண்ணாயிருந்த மாட்சிமை தங்கிய அவ்வம்மை இதைக் கவனியாது சாலையின் அருகே நகர்ந்து சென்றாள். உடனே ஆட்டிடையன், 'ஏ அம்மா! வழியை விட்டு நில்லு! ஆடுகள் அப்புறம் போகட்டும்!' என்று கூடுமான மட்டும் உரக்கக் கூவினான். தன் விருப்பப்படி ராணி கடிதில் விலகாதது கண்டு, 'அங்கிருந்து என்ன சாதிக்கிறாய் அம்மா? விலகி நில் என்றால்! ஆடுகள் போகட்டும்!' என்று அதட்டிப் பேசினான். தனது யஜமானியாகிய ராணியை இவ்வாறு கடுமையாய்ப் பேசியவைகளைக் கொஞ்சதூரத்திலிருந்து கவனித்த அரண்மனை வேலையாள் ஒருத்தி ஓடிவந்து, அவனை நோக்கி, 'பையா! நீ இவ்வளவு அதட்டிப் பேசுகிறாயே, யாரோடு என்று உனக்கு விளங்கவில்லையோ?' என்றாள். 'இல்லை. எனக்குத் தெரியவும் தெரியாது ; தெரிய வேண்டியதும் இல்லை. யாராய் இருந்தால் என்ன! ஆடுகள் போகும் வழியை மறித்துக் கொண்டிருக்கலாகாது' என்று அவன் அலக்ஷியமாகப் பேசினான். 'மஹாராணி அப்பா அவள்' என்று எச்

சரிக்கை செய்தாள் வேலைக்காரி. திடுக்கிட்டான் பையன். சற்றுத் தேறித்தெளிந்ததும் 'ராணியா இவள்! அப்படியானால் பிறர் எளிதில் கண்டறியத் தக்க உடைகளை என் அணிந்து கொள்ளவில்லை?' என்று சவடற்றுக் கேட்டுவிட்டான்.

**(9). Human Nature.**

Why did Othello permit any apprehension at all to cross his mind, any dark foreboding to overshadow the bright purity of his peace and happiness? Say not, dear reader, that suspicion lurked in the very nature of the Moor. Fear ever haunts the pedestal of earthly bliss : take man to the pinnacle and he will pray against a fall. The loveliest child sometimes strikes us as too lovely to live long. The presentiment of evil is indeed the very web of human nature and sits at the threshold of all highest happiness. It comes of itself and needs neither seed nor stimulus from without. In Othello, both were present : the seed had been sown in his heart by Brabantio (his father-in-law) and the stimulus was now given by the subtle suggestions of the devil (his *honest* friend). How could he prevent the shooting up a prickly sprout (of jealousy) though it might be in him to weed it out?

**9. மனித இயற்கை**

ஒத்தெல்லோ தன் மனதுள் ஒரு துஸ் ஸந்தேஹத்தைப் புக விடுவானேன்? தன் அமைதி, இன்பம், ஆகிய இவைகளின் சிறப்பைக் குறைக்கக்கூடிய கெட்ட எண்ணத்திற்கு இடம் கொடுப்பானேன்? 'ஒத்தெல்லோ என்ற மூர் ஜாதியானிடம் இயற்கையாகவே இச்சந்தேகம் மறைந்து கிடந்தது,' என்று, வாசிக்கும் அன்பர்களே! கூறிவிடாதேயுங்கள். உலகவின்பங்கள் ஏராளமாகவிருக்கும் நிலையிலும் பயம் ஓயாது வந்து தாக்கும். ஒருவனை மேலான பதவியில் வைப்போம், அவன் உடனே தாழ்வு ஏற்படக்கூடாது என்று கோருவான். மிக அழகுவாய்ந்த குழந்தையை நோக்குங்கால், சில வேளைகளில், அது தீர்க்காயுளுடன் இருக்கவேண்டுமே என்று தோன்றும். கெடுதலை முன்னர் கருதுவதே மனித தன்மையின் இயற்கை. இது எல்லாச் சிறந்த இன்பங்களுக்கும் முன்னர் தோன்றுவது. இது தானாகவே தோன்றும். உட்காரணமாவது வெளி உதவியாவது இதற்கு வேண்டியதில்லை. ஒத்தெல்லோ விஷயத்திலோ இவ்விரண்டும் இருந்தன. உட்காரணம் ப்ரபான்ஷியோவால் (அவன் மாமனால்) அவன் மனதுள் நாட்டப்பட்டது! வெளி உதவியோ பாதகன் (அவன் பரமயோக்யனான நண்பன்) சூதான குறிப்புக்களால் ஏற்பட்டது. அவனுக்குக் கொடிய எண்ணத்தை வேரோடு களைந்தெறியும் சக்தி இருந்தபோதிலும், அது கிளம்புவதை இப்பொழுது அவனால் எவ்வாறு தடுக்க முடியும்?

# கல்யாணி

## KALYANI *

(தொடர்ச்சி)

அடுத்த அறைக்கு வீரசேனன் வந்தபொழுது, தன் குமாரத்தியிருந்த அறையில் அவள் பாடுகிற பாட்டின் இனிய குரலைக் கேட்டான். பாடுகிறவர்கள் எதிரில்லாமலிருந்தால், பாட்டு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் நமக்குத் தந்து, மாமரங்களிலிருந்து குயில்கள் பாடுகிற இனிய கீதத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இவ்வகை இயற்கையும் சாந்தமுமான சங்கீதத்தாலுண்டாகும் மனோல்லாசம் அவனுக்குச் சாதாரணமாயில்லை யானாலும், அவனும் மனிதகோடியில் பட்டவனல்லவா? பிள்ளைகளைப்பெற்ற பிதாவல்லவா? ஆகையால் அங்கே நின்று கானத்தைக் கேட்டான். அவள் வாத்தியத்தில் அமைத்து தனது இனிய குரலில் பாடியது பின்வருமாறிருந்தது.

மாதர் மயக்கில் நீ வீழாதே—நல்ல
கீதக் குரலில் நீ மயங்காதே. (1)
மன்னர் சமரில் நீ மாளாதே—பசும்
பொன்னைக் கவர்ந்து நீ போகாதே. (2)
வாச மதுவை நீ யுண்ணாதே—பிறர்
பேசும் பொழுது நீ பேசாதே. (3)
கண்ணை இதயம் நீ காப்பாயே—பன்னாள்
மண்ணில் சுகித்து நீ மடிவாயே (4)

பாட்டு நின்றவுடன் தன் மகளிருந்த அறைக்குள் அவன் சென்றான்.

அவள் பாடின பாட்டு அவள் குணத்திற்குத் தக்கதாகவே இருந்தது. கல்யாணி பேரழகு வாய்ந்தவளாயினும், அவளுடைய பேதைப்பருவச் சின்னங்கள் மன அமைதியையும், மனஉறுதியையும், உலகவின்பம் கொடுக்கும் துச்சமான பொருள்களில் ஆசையின்மையையும், காட்டத்தக்கவைகளாக அமைந்திருந்தன. பனிமலையின்மேல் படியும் கார்மேகத்துண்டுகள் போல, அவளுடைய துய்ய வெண்மையான நெற்றியின்மேல், கருங்கூந்தல் வகிர்ந்து முடிக்கப்பட்டிருந்தது. அவள் முகத்தில் சாந்தமும் சீலமும் ஜ்வலித்தன. அன்னியன் ஒருவன் தற்செயலாய்த் தன்னைப் பார்த்துவிட்டால், தான் தலை கவிழ்ந்து லஜ்ஜையுடன் நடப்பதன்றி, தன்னழகைக் கண்டு அவன் பிரமிக்கும்படி அவள் நடப்பதில்லை. அவள் குடும்பத்தில் மற்றவர்கள் கருவமும், தீரமும், படபடப்பு முள்ளவர்களாயிருக்க, அவள் அப்படி யிருந்தது அவளுடைய சாதாரண தேகமென்மையினா லுண்டாயதா யிருக்கலாம்.

ஆனால் அவளுடைய அடக்கம், மற்றக்காரியங்களில் அசிரத்தையாலாவது அல்லது மனக்கசிவில்லாமையாலாவதுண்டானதல்ல. அவள் மனச்சார்பும் பிரியமும் அதிமானுஷிய விஷயங்களிலிருந்தன. புராணங்களில் கூறிய கற்புத்திறனும், பர்த்தா பாரியைகளின் உண்மையான அன்பும், கொடிய ஆபத்துகளிலும் கற்பில் நின்று வழுவாமையும் அவளுக்கு ஆனந்தத்தை விளைத்தன. அதுவே அவளுடைய போகபூமியாய் அதில் அவளால் நிர்மாணஞ் செய்யப்பட்ட மானசமாளிகையில் பிறரறியாது அவள் வசித்து வந்தாள். ஆனால் ஓடுகிற தண்ணீரில் எறியப்பட்ட புஷ்பம் அதனால் இழுப்புண்டு செல்வதுபோல, தன் குடும்பத்தினர் சென்ற வழியில் தான் வெளியில் சென்றுகொண்டிருந்தாள். அவர்கள் சொன்னபடியெல்லாம் அவள் கேட்டபடியால், அவர்கள் அவள்மேல் பேரன்புகாட்டி வந்தார்கள். உலக ஆசையும் இராஜ்ய தந்திரமும் நிறைந்த அவள் பிதாவுக்கு அவள்மேல் அளவற்ற பிரியமுண்டு. அதிகார ஆசை குடிகொண்டு தன் தகப்பனிலும் அதிகக் கருவமுள்ள அவள் தமயனும் அவளிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டினான். விளையாடி வீண்காலம் போக்கும் அவள் தம்பியும் அவளைச்சிநேகித்துத் தானும் தன் உபாத்தியாயரும் சண்டை போட்டதையும், தன் விளையாட்டுகளையும், இரகசியங்களையும் அவளிடத்தில் சொல்லிக்கொண்டிருப்பான். அவளும் அவைகளையெல்லாம் காது கொடுத்துக் கவனமாய்க் கேட்பாள். ஆனால் அவளுடைய தாயாருக்கு மாத்திரம் அவள்மேல் அவ்வளவு திருப்தியில்லை. தன் மகளின் சாந்தம் அவள் தகப்பனின் இரத்தக் கலப்பாலுண்டானதென்றும் சொல்லி அவளை இடைச்சியென்று கேவலமாய் அழைப்பதுண்டு. ஆயினும் அவ்வளவு அடக்கமும் சுசீலமுமுள்ள ஒரு பெண்ணை உபேக்ஷிக்க முடியுமா? ஆனால் அவள் எப்பொழுதும் தன் மூத்தகுமாரனைப் புகழ்ந்து பிரீதியுடன் போற்றி வந்தாள். "என்னருமை மகன்தான் பழிப்பற்ற தன் தாய் வமிசத்தின் கவுரவத்தை நிலைநிறுத்தி, தன் பிதிர்வமிசத்தை முன்னுக்குக் கொண்டுவரப் பிறந்தவன். கல்யாணி அரண்மனைக்கு யோக்யமானவளல்லள். அவளுக்கு வேண்டியவைகளைச் சிறிதும் வருத்தமில்லாமல் கொடுக்கக்கூடிய ஒரு நாட்டுப்புறத்துப் பிரபு தான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளவேணும். வீரசேனனுடைய கவுரவம் பழமையானதல்ல. இப்பொழுதுதான் புதிதாயுண்டாகிறது. அதைக் காப்பாற்றி விருத்திசெய்ய வேண்டும். பழங்குடிப் பிறப்பினர்க்கு ஜனங்கள் தம்படியே கீழ்ப்படிந்து கவுரவத்தோடு நடப்பார்கள். நமக்கு முன்னே தலை நிமிர்த்துத் தருக்கி நடக்கிறார்கள். அவர்கள் நமக்கு வணங்கி நடக்கும்படி நாம் செய்ய வேண்டும். இடையர் கூட்டத்திலிருக்கத் தகுந்த நம் கல்யாணி வணங்குவிக்க வேண்டியவர்களை வணங்கச் செய்யத் தக்கவளல்லள். எனக்கு மூன்றாவது ஒரு ஆண் குழந்தையை ஈசுவரன் கொடாததால், கல்யாணி அதற்கேற்ற குணம் படைத்தவளாய்ப் பிறந்திருக்க வேண்டும். அவளிலும் அதிகத் தீரமுடையவன் அல்லது அவளைப்போல் அதிகார ஆசை குறைந்தவன் கையில் அவளை என்றைக்குப் பிடித்துக் கொடுப்பேனோ அந்த நாள்தான் எனக்கு நல்லநாள்" என்று அவள் மனதில் எண்ணிக்கொள்வாள். தன் குழந்தைகளின் குணகுணங்களும், சமுசாரசவுக்கியமும் அவளுக்குச் சிலாக்கிய மல்ல. அவர்கள் அந்தஸ்தும் உலகமேன்மையுமே அவளுக்கு முக்கியம். கோபமும் துடுக்குமுள்ள பெற்றோர் சாதாரணமாயிருப்பதுபோல, அவளும் தன் குமாரத்தியின் சித்தவிகாரங்களை அறியாதவளா யிருந்தாள். கல்யாணி உதாசின குணமுடையவள்போலிருந்தாலும், ஒரே தினத்தில் முளைத்துக் கிளைத்துத் தளைத்துக் கண்டோருக்கு எதிர்பாரா ஆச்சரியம் விளைக்கக் கூடிய வித்து அதில் மறைந்திருந்தது. அவளுக்குப் பிரியமான காரியங்கள் ஒன்றும் நேரிடாமையால், அவள் அபிப்பிராயங்களெல்லாம், ஆசைப்பெருக்கும், மனக்கிளர்ச்சியும் அற்றவைகளாயிருந்தன. அவள் காலம் இதுவரை நிர்விகற்பமாயும் சாந்தமாயும் சென்றது. அருவியாகக் கீழே விழுவதன்முன் ஓடும் தண்ணீர் ஓடைபோலதிருந்தது.

அவள் பாட்டு முடியும்பொழுது, வீரசேனன் அவ்விடத்தில் பிரவேசித்து "சரி, கல்யாணி! உலகம் இப்படிப்பட்டதென்று தெரிவதற்கு முன்னமேயே, உன்னுடைய சங்கீத தத்வசாஸ்திரி அதை இகழ உனக்குப் போதித்துவிட்டானா? நிச்சயமாய் அது பிஞ்சில் பழுத்ததாகும். அல்லது தங்களை நாடித் தலைதடுமாறித் திரிபவர் தொந்தரை செய்யும்வரை இகலோக இன்பங்களைப் பழிக்கிற வன்புடைய மாதரைப்போல் பேசினாயா?" என்று கேட்டான்.

கல்யாணி நாணி முகம் சிவந்து தான் பாடின பாட்டிலிருந்து அப்படி ஒன்றும் அனுமானிக்கக்கூடா

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.

தென்று தத்தித்தமொறிச் சொன்னாள். தன்கூட உலாத்த வரவேண்டுமென்று தன் பிதா சொன்னவுடன் வாத்தியத்தை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு புறப்பட்டாள்.

அந்தக் கோட்டையின் பின்புறத்தில் ஒரு சிறு குன்றிருந்தது. அதில் அழகான பலவகை மரங்களும் செடிகொடிகளும் நிறைந்த வனமொன்றிருந்தது. அதில் ஒரு நடைபாதையில் தகப்பனும் மகளும் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்தார்கள். அதின் இருபக்கங்களிலுமுள்ள நெடிய மரங்களின் மேற்கிளைகள் ஒன்றோடொன்று பின்னி, அவைகளில் கொடிகள் படர்ந்து, அதன்மேல் பந்தலிட்டதுபோலிருந்தது. அதன் கீழ் கூட்டம் கூட்டமான கலைகளும் மான்களும் ஓடி விளையாடின. வீரசேனனின் வேலையின் சுபாவம் வேறுவிதமாயினும், அவனுக்கு இவ்விதக் காரியங்களில் ஆசையும் உருசியும் அழிந்துபோகவில்லை. அவைகளை யெல்லாம் கண்டு களித்து இருவரும் நடக்கையில், வில்லும் கையுமாய் ஒரு வேட்டைக்காரனும், ஒரு வேட்டை நாயைக் கழுத்தில் சங்கிலியிட்டுப் பிடித்துக்கொண்டு ஒரு பையனும், அவர்கள் பின்னாலே வந்து சேர்ந்தார்கள்.

அந்த வேட்டைக்காரன் தன் யஜமானனைக் கும்பிட, அவனும் கும்பிட்டுவிட்டு "அப்பா! மான்வேட்டையாடப்போகிறாயோ?" என்று கேட்டான்.

"ஆம். யஜமானனே! நான் வேட்டையாடுகிறதைத் தாங்கள் கண்டு களிக்கிறீர்களா?" என்றான்.

மானைக் கொல்லுகிறதைப் பார்க்கிறது என்கிற பாவனை மனத்திலுதித்தவுடனே வெளிறிப்போன முகத்தையுடைய தன் புத்திரியைப் பார்த்துவிட்டு "இல்லை, இல்லை" என்றான். ஆனால் அவள் சுபாவமோ, தன் பிதா அந்த வேட்டைக்காரன் பின்னாலே தாங்கள் வருகிறதாகச் சொன்னால், அதை வேண்டாமென்று தடுக்கக்கூடியதல்ல.

அந்த வேட்டைக்காரன் தன் தோளை அசைத்துக்கொண்டு "யஜமான்மார் வேட்டை காண வராமலிருப்பது எங்களை மனமடியச் செய்கிறது. சேனாநாயகனாகிய உங்கள் மூத்த மகன் சீக்கிரம் வீடு வந்து சேரவேணும். இல்லையானால் நான் கடையைக் கட்டவேண்டியதுதான். உங்கள் சின்னப் பையன் இரவும்பகலும் காட்டில் வேட்டையாடப் பிரிய முள்ளவன்தான். ஆனால் அவன் படிக்க வேண்டாமா? இப்பொழுது படிக்க வில்லையானால், பெரியவனானால் ஒன்றிற்கும் அவனுதவமாட்டானே. புனபதிகள் காலத்தில் இப்படி இல்லை. ஒருமானைக் கொல்லுவதானால் யஜமான்மாரெல்லாரும்அதைப் பார்க்கஓடி வருவார்கள். மான் அடிபட்டுக் கீழே விழுந்தவுடனே, பெரிய யஜமானனிடத்தில் கத்தியைக் கொடுப்போம். அந்த மரியாதைக்காக அவனுடனே ஒரு விராகன் கொடுப்பான். அவர்கள் நல்ல வேட்டைக்காரராயுமிருந்தார்கள். மாதவன் காட்டில் புகுந்து வில்லைக் கையிலெடுத்தால் எத்தனை மான்கள் மடியும். ஆ! இப்பொழுது இங்கே வனசாமர்த்தியமே இல்லாமல் போய்விட்டது" என்று வேடன் சொன்னான்.

இந்தப் பிரசங்கம் வீரசேனனுக்குப் பிரியமற்றதாயிருந்தது. அந்தக் காலங்களில், உண்மையான பிரபுக்களுக்கு இயற்கையும் இன்றியமையாததுமாகக் கருதப்பட்ட வேட்டை ஆசை தனக்கில்லாமைக்காகப் பயிரங்கமாகத் தன் தாழ்ந்த வேலைக்காரன் தன்னை அவமதித்தான் என்பதை அவனறியாமலிருக்கவில்லை. ஆனால் நாட்டுப்புறங்களிலெல்லாம் வேட்டைக்காரனை ஒரு முக்கியமான மனிதனாகப் பாவித்து மனம் போனபடி அவன் பேச இடங்கொடுப்பது வழக்கமாகையால் வீரசேனன் புன்சிரிப்புடன் தனக்கு அன்றைக்கு மானைக் கொல்வதிலும் முக்கியமான வேறே வேலையிருக்கிறதாகச் சொல்லித் தன் பையைத் திறந்து அவனுக்கு உற்சாக முண்டாகும்படி ஒரு விராகன் கொடுத்தான். தனக்குப் பணம் கிடைத்ததில் சந்தோஷமும், தன் யஜமானனுக்குக் கொடுக்கவேண்டிய விதம் தெரியாமைக்காக அலட்சியமும் தோன்றும்படி புன்னகை செய்துகொண்டு அவன் "யஜமானே! உங்களுக்குப் பணம் கொடுக்கும் வழி தெரியாது. வேலை முடிகிறதற்கு முன்னமேயே கொடுத்துவிட்டீர்களே. பணம் பெற்றுக்கொண்டு நான் மானைக்கொல்லத் தவறினால் என்ன செய்வீர்கள்" என்று கேட்டான்.

வீரசேனன் சிரித்துக்கொண்டு "சொன்னதைச் செய்வதற்காகக் கடன்" என்று நான் சொன்னால் உனக்குஅருத்தமாகாதென்று நினைக்கிறேன் என்றான்.

"சத்தியமாக எனக்குத் தெரியாது. சட்டமோ என்னவோ பேசுகிறீர்கள். பிச்சைக்காரன் மேல் என்ன வியாச்சியம். அது என்ன பலனென்று உங்களுக்கே தெரியும். சரி. ஆனால் நான் உங்களிடத்தில் நியாயமாய் நடப்பேன். என் கையும் வில்லும் குறி தப்பாவிட்டால், மார்பில் இரண்டு விரல் கனம் கொழுப்புள்ள ஒரு வேட்டை மிருகம் உங்களுக்குத்தருவேன்" என்று சொல்லிவிட்டுப் போகப் போனான். அப்பொழுது அவனைத் திரும்பக் கூப்பிட்டுத் தற்செயலாய்க் கேட்பதுபோல "உலகத்தார் சொல்வதுபோல மாதவன் அவ்வளவு பலசாலியா? நல்ல வேட்டைக்காரனா?" என்று கேட்டான்.

அதற்கு அந்த வலையன் சொல்லுகிறான். "பலசாலியா? அதிகப் பலசாலி, நிச்சயமாகச் சொல்லுகிறேன். ஒருதடவை அந்தப் பிரபுகூட காட்டில் வேட்டைக்குப் போனோம். ஒரு பெரியமானைத் துறத்தி ஒரு மூலையிலோட்டினோம். போக வேறே வழியில்லாமல் திரும்பி எங்களை எதிர்த்து நின்றது. அப்பா. எத்தனை பெரிய மான். பத்துக் கிளைகளுள்ள கொம்பும், ஒரு எருதின் தலையளவு பருமனும், ஒரு தடித்துக் கொழுத்த மான். அது மாதவன் தகப்பன்மேல் பாய்ந்தது. இமைப்பொழுதில் மாதவன் அதன்மேல் பாய்ந்து தன் கத்தியால் அதன்பின்காலை வெட்டி அதைக் கீழே தள்ளினான். இல்லையானால் புனபதி காரியம் வேறேயாயிருக்கும். அவனுக்கு அப்பொழுது வயது 16 தான். அவன் நன்றாயிருக்கவேணும்."

"கத்தியில்போலத் துப்பாக்கியிலும் அவன் சமர்த்தன்தானா?" என்று வீரசேனன் கேட்டான்.

"என் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் மத்தியில் இந்தப் பணத்தை நான் பிடித்துக்கொண்டால், 80-கஜ தூரத்திலிருந்து அதை அடித்துத் தள்ளிவிடுவான். விரலில் ஒன்றும் படாது. அவன், கண், கை, ரவை, துப்பாக்கிமருந்து இவைகளைப்பற்றி வேறே என்ன சொல்லவேண்டும்" என்று அந்த வில்லி சொன்னான்.

"ஆம் ஆம், வேறே ஒன்றும் வேண்டாம். நிச்சயந்தான். வேட்டையாடப் போகத் தடையாகிறது. நீ போ" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டான்.

அவன் பின்வருகிற பாட்டை வேடிக்கையாகப் பாடிக்கொண்டு போனான்.

1. பூசைமணி ஓசையிடப்
புகும் கோவில் பூசாரி
ஆசையுடன் குழலூத
அடையும் கான் நல்வேடன்.

2. தென்கூடல் சிகரமதில்
திரிந்தனகாண் கலைமான்கள்
வன்பொதிய மலைச்சாரல்
மயங்கினவே மானினங்கள்.

3. வண்டுறையும் பூஞ்சோலை
வந்ததொரு பெண்மானும்
கண்டதொரு வெண்மானுக்
கண்டமெலாம் விலையிலையே.





தூரத்தில் போகப் போக அவன் சத்தம் குறைந்துகொண்டே வந்து கடைசியில் அது கேளாமல் போனவுடன் வீரசேனன் "இந்தப் பையல் புனபதிகளிடத்தில் எப்பொழுதாவது வேலைக்கிருந்தானா? அவர்களிடத்தில் இவ்வளவு அன்புள்ளவனாக இருக்கிறானே. கல்யாணி! உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன் இந்தக் கோட்டையைச் சுற்றி யிருக்கிற ஒவ்வொரு காட்டாளையும் பற்றி நீதான் முக்கியமாய் விசாரித்து வைத்திருக்கிறாயே" என்றான்.

"எனது பிரிய பிதாவே! நான் சரியாகக் காலக்கிரமவர்த்தமானங்களை எழுதி வைத்திருக்கவில்லை. ஆனாலும் சொல்லுகிறேன். அவன் சிறு பையனாயிருக்கையில் அவர்களிடத்தில் வேலையிலிருந்தான். பிறகு வெளியே போயிருந்து, நீங்கள் அவனை வேலைக்கு வைத்தபொழுதுதான் இவ்விடம் திரும்பி வந்தான். முன்னிருந்தவர்களைப் பற்றி உமக்கேதாவது தெரியவேண்டுமானால் கிழவி முனியம்மாளிடத்தில் தெரிந்துகொள்ளலாம்" என்று கல்யாணி சொன்னாள்.

"குழந்தாய்! அவர்களைப் பற்றியாவது, அவர்கள் சரித்திரத்தைப்பற்றியாவது அவர்கள் சிறப்பைப் பற்றியாவது எனக்கு என்ன வேண்டும்" என்று தகப்பன் சொன்னான்.

"இல்லை ஐயா. அது எனக்குத் தெரியாது. மாதவனைப்பற்றி அந்த வேட்டைக்காரனை விசாரித்தீர்களே என்று சொன்னேன்" என்றாள் மகள்.

"சீச்சீ! போகட்டும். முனியம்மாள் யார்? இங்கேயுள்ள கிழவிகளையெல்லாம் உனக்குத் தெரியும்போலிருக்கிறதே" என்றான்.

"நிச்சயமாகத் தெரியும். தெரியாவிட்டால் அவர்கள் வருத்தப்படுகிற காலத்தில் அந்தப் பேதைகளுக்கு நான் எவ்விதம் உதவி செய்யக்கூடும். கிழவிகளுக்கெல்லாம் முனியம்மாள் யஜமானி. அவளுக்குப் பழங்கதைகளெல்லாம் தெரியும். அவள் குருடி. ஆனால் அவள் பேசும்பொழுது நம்மை நேரே உற்று நோக்கிப் பேசுவதாக நாம் நினைக்கும்படி யிருக்கும். அவள் குருடாகி 20 வருஷமாயிற்று. ஆனாலும் அவளிடத்தில் நான் பேசும்பொழுது என் முகத்திலுண்டாகிற வர்ணங்களை அவள் அறிகிறதுபோலத் தோற்றுவதால் அநேகமுறை என் முகத்தை மூடிக்கொண்டிருந்திருக்கிறேன். பல தடவை முகத்தைத் திரும்பிக்கொண்டிருந்திருக்கிறேன். திமிர்வாதம் பிடித்தும் கண் தெரியாமலுமிருந்தாலும் அவளுக்குள்ள கூர்மை

யான அறிவும், கம்பீர நடவடியும் அவளைப் பார்ப்பவர்க்கு நன்றாய் விளங்கும். வாரும். அவளை நீர் போய்ப் பார்க்கவேண்டும். அவள் குடிசை அரை நாழிகை வழித் தூரத்தி லிருக்கிறது" என்று கல்யாணி சொன்னாள்.

"என்னருமை மகளே! இவைகளெல்லாம் நான் கேட்ட கேள்விகளுக்குச் சமாதானமல்ல. இந்த விருத்தை யார்? அவளுக்கும் இதன் முன்னுடைமைக்காரனுடைய குடும்பத்திற்கும் என்ன சம்பந்தம்" என்று வீரசேனன் கேட்டான்.

"அவள் போன்மாரிருவர் உம்மிடத்தில் வேலைக்கிருப்பதால் அவளிங்கே இருக்கிறாள். அது அவளுக்குச் சம்மதமில்லை. ஏனென்றால் காலமும் பூமியும் மாறிப் போனதைப்பற்றி எப்பொழுதும் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறாள்" என்றாள் கல்யாணி.

"அவளுக்கு நிரம்ப வந்தனம். அவளும் அவளைச் சேர்ந்தவர்களும் என் அன்னத்தைப் புசித்துக்கொண்டு, தங்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறிதும் பயன்படக்கூடாத ஒரு குடும்பத்திற்கு ஆட்பட்டிருக்கவில்லையே என்று அழுது கொண்டிருக்கிறாளல்லவா?" என்றான்.

அப்பொழுது கல்யாணி "ஐயோ! என் பிதாவே! நீங்கள் சொல்லுவது அவளுக்குப் பொருத்தமே யில்லை. பட்டினிகிடந்து உயிர் போகிறதாயிருந்தாலும் ஒருகாசு கூடத் தருமமாகப் பெற்றுக்கொள்ள மாட்டாள். அவளுக்குப் பொருளாசையே கிடையாது. தங்களுடைய இளமைப் பருவங்களில் நடந்த கதைகளைச் சொல்லக் கிழவரைத் தூண்டிவிட்டால் அவர்கள் அவைகளைப்பற்றி ஓயாமல் பேசுவதுபோல அவளும் பேசுகிறாள். அனேக வருஷங்களாகப் புனபதிகளின் கீழ் வாழ்ந்திருந்தவளாதலால் அவர்களைப்பற்றிப் பேசுகிறாள். ஐயா! அவளை நீங்கள் இப்பொழுதே ரக்ஷிப்பதற்காக உங்களிடத்தில் மிகுந்த நன்றியறிவுள்ளவளாயிருக்கிறாளென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். உலகத்தில் மற்றெல்லாரையும் விட உம்மைக் கண்டு பேச அதிக ஆவலுள்ளவள். வாருங்கள் அவளைப் போய்ப் பார்ப்போம்" என்று கல்யாணிசொல்லி, செல்வக்குழந்தைகள் செய்கிற வழக்கம்போல் தன்பிதாவின் கையைப் பிடித்து அவள் குடிசைக்குப் போகும்வழி நோக்கி இழுத்தாள்.

S. V. கள்ளபிரான் பிள்ளை, பி. ஏ.

## மதுரை கல்விப்பொருட்காட்சி சாலை
## MADURA EDUCATIONAL EXHIBITION

மதுரை எலிமெண்டரி உபாத்தியாயர் சங்கத்தின் வருஷோற்சவமானது சென்ற செப்டம்பர்மீ 9௳ சனிக்கிழமையன்று வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது என்பதை முந்திய சஞ்சிகையில் தெரியப்படுத்தி யிருக்கிறோம். வழக்கம்போல் அன்று காலை 8 மணிக்குக்காட்சிசாலையானது மதுரை காலேஜ் ஹாலில் திறக்கப்பட்டது. அன்று இன்ஸ்பெக்டர் முதலான வித்தியாதிகாரிகளும் பாடசாலை மானேஜர் உபாத்தியாயர்களும், மற்றும் வித்தியாபிமான முள்ளவர்களும் சேர்ந்து சுமார் 200 பேர்கள் வந்து நிறைந்திருந்தனர். அக்காலத்து, சங்கத்தின் பிரசிடெண்டு ம-௱-௱-ஸ்ரீ N. S. ஜெம்புநாதய்யர் வருவோரை வந்தனபூர்வமாய் எதிர்கொண்டழைத்து, அவரவர்கட்கு ஏற்றவாறு ஆசனமளித்து அமர்த்தினர். 7-வது சர்க்கில் இன்ஸ்பெக்டர் கனம் ஹாட்ஜஸ் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தனர். ம-௱-௱-ஸ்ரீ ஜெம்புநாதய்யர் கண்காட்சி சாலையைப் பற்றிய ரிப்போர்ட்டு ஒன்று வாசித்தார். மதுரை காலேஜ் சித்திர உபாத்தியாயர் ம-௱-௱-ஸ்ரீ புண்ணியகோடி நாயகர் 'சாதாரண வஸ்துக்களை வரைவதெப்படி' என்பதைப்பற்றி மாதிரி சித்திரங்களுடன் ஒரு உபந்நியாசம் செய்தார். அக்கிராசனாதிபதி முடிவில் மேற்கண்ட விஷயங்களைத் திரட்டித் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுக் காட்சிசாலை திறக்கப்பட்டதென்று சொன்ன பின்னர் அனைவரும் எழுந்து காட்சிசாலையில் புகுந்து, அங்கு நிறைந்திருந்த பலவகைப் பொருள்களையும் கண்டு களித்தனர். ஞாயிற்றுக்கிழமை 5-மணி வரையில் யாவரும் சென்று பொருள்களைக் காணுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. பொருட்காட்சிக்காக இந்த ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பொருள்கள் வந்து குவிந்திருந்தன. அவை யாவும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பார்ப்போர் மனதைக் கவரத்தக்கபடி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தன. பாடசாலைப் பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் செய்தனுப்பிய பொருள்கள் மிக வியக்கத்தக்கவையாகவே யிருந்தன. பூகோள சாஸ்திரத்திற்கான படங்களும் உருவங்களும் ஏராளமாயிருந்தன. மற்றும் மரவேலை, களிமண்வேலை, ஓலை வேலை, காகித அட்டை வேலைகள், மணிகளாலும் கொட்டைகளாலும் செய்யப்பட்ட வேலைகள் பாய் பின்னுதல், சித்திரம் வரைதல், முதலியவற்றை விவரிக்கச் செய்தனுப்பப்பட்ட பொருள்கள் மிகவும் பாராட்டத்தக்கனவே. அநேக பாடக்குறிப்புகளும், மாதிரிப்பாடங்களும் எழுதியனுப்பி யிருந்தனர். குரங்கும் பூனைகளும், கிழவனும் அவன் குமாரர்களும் என்ற கதைகளைத் தத்ரூபத்தில் பொம்மைகள் மூலமாய் விளக்கிக்காட்டி யிருந்ததைப்பார்த்து ஆச்சரியமடையாதவரில்லை. இக்காட்சியைக் காண இந்த ஜில்லாவிலுள்ள வித்தியாதிகாரிகளும்உபாத்தியாயர்களும் வந்திருந்தனர்.



காலையில் கண்காட்சிசாலை திறந்து முடிந்ததும்மாலையில் சங்கத்தின் வருஷாந்தர மகோற்சவ கூட்டம் கூடிற்று. மதுரைக் காலேஜ் பிரின்சிபால் ம-௱-௱-ஸ்ரீ, S. வெங்கோபா சாரியார் அவர்கள் அக்கிராசனம் வகித்து 'பிரதம படிப்பைப்பற்றி' அரிய பிரசங்கம் ஒன்று செய்தார். அவர் தன் பிரசங்கத்தில் முற்கால மூலாதாரப்படிப்பையும், தற்கால மூலாதாரப் படிப்டையும், திரவிய சகாய விதிகளையும் சீர்தூக்கிப்பார்த்து, தற்கால மூலாதாரப் படிப்பின் நன்மைகளை உத்தேசிக்கும்போது தற்காலத்தில் மூலாதாரப் படிப்பிற்காகத் துரைத்தனத்தார் அளிக்கும் திரவிய சகாயக்குறைவை ஒரு பொருட்டாக மானேஜர்கள் நினைக்க இடமில்லையென்றும் இன்னும் நம் தேசம் க்ஷேமமடைய வேண்டுமானால் கனம் கோக்கலே அவர்கள் ராஜப்பிரதிநிதி சபையில் கொண்டுவந்திருக்கும் மூலாதாரப்படிப்பு மசோதாவை அங்கீகாரம் செய்வதுடன் அந்த மசோதா ஜாரிக்கு வரும்பொழுது அதினால் ஏற்படும் செலவின் சிறிது. பாகத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள பின்வாங்கக்கூடாதென்றும் வற்புறுத்தினார். சங்கத்துக் காரியதரிசி வருஷாந்தர ரிப்போர்ட்டு ஒன்று வாசித்தார். அந்த ரிப்போர்ட்டிலுள்ள இரண்டொரு விஷயங்களை மட்டும் இங்கு எடுத்துக்கூறுவது அவசியமாயிருக்கிறது. இச்சங்கத்துக்கு மெம்பர்கள் சுமார் 184 பேர் இருக்கிறார்கள். இச்சங்கமும் இந்த ராஜதானியிலுள்ள பெரிய உபாத்திமை சங்கங்களில் ஒன்றே என்றுசொல்லலாம். இந்தச் சபை செய்திருக்கிற முக்கியமான வேலைகளில் ஒன்று, வருஷாந்தர கொண்டாட்டத்தின் பொருட்டுக் கூடும் சபைக்கோர் அம்சமாக வருஷாந்தர கல்விபொருட்காட்சிசாலை யொன்றை ஏற்படுத்தி யிருப்பதேயாகும். மதுரை ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரும் சங்கத்தின் பிரசிடெண்டுமாகிய ம-௱-௱-ஸ்ரீ N. S. ஜெம்புநாத அய்யர் அவர்களால், இக்காட்சி 1908-ம் வருஷம் ஏற்பாடு செய்யப்பட்டு இப்பொழுது நான்கு வருடமாகஅந்நியர்களுதவியன்னியில் சங்கத்தின் செலவின் பேரிலேயே நடந்து வருகிறது.

இம்மாதிரி பொருட்காட்சியினாலுண்டாகும் நன்மைகள் அளவற்றனவென்பது சொல்லாமலே விளங்கும். இக்காட்சிசாலை ஒரு கிராம உபாத்தியாயருக்குக் கிடைக்கக்கூடிய மிகவும் நேர்த்தியான பொருட்பாடமாக விருக்கிறது. இக்காட்சியில் பார்க்கவரும் உபாத்தியாயர்கள் அநேக புதிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு நவீனமுறையில் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிக்கவும் கூடும். இவ்விஷயங்களில் சமர்த்தராக விருப்பவர்களுக்கு இக்காட்சி அவர்கள் சாமர்த்தியத்தை விர்த்திசெய்து, அவர்கள் மனதுள் மறைந்து கிடக்கும் பல விஷயங்களையும் அடுத்த காட்சியில் வெளிப்படுத்த ஒரு தூண்டுகோலாகும்.

ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் 5-மணியோடு கண்காட்சிசாலை முடிந்ததும் அன்றிரவு 8-மணிமுதல் 10-மணிவரை செயின்டு மேரி ஹைஸ்கூல், போனரே சாமியார் அவர்கள் நிழல் படம் காட்ட ம-௱-௱-ஸ்ரீ N. S. ஜெம்புநாதய்யர் அவர்கள், ஊர்வன ஜாதி, பட்சி ஜாதி இவைகளைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்.

இம்மட்டோடு இச்சங்கத்து இவ்வருஷத்திய மகோற்சவம் முடிவுபெற்றது. இன்னும் இச்சங்கம் மேன்மேலும் விர்த்தியடைந்து இப்பொருட்காட்சி சாலை வருஷந்தோறும் மேன்மையாய் நடைபெறும் வண்ணம் எல்லாம் வல்ல ஈசன் கருணை புரிவாராக.

---

**மயிலாப்பூர் பி. எஸ். பாடசாலை இலக்கிய ஸபை.**—இச்சங்கத்தின் மூன்றாவது வருஷோத்ஸவம் ராணடே ஹாலில் வெகு விமரிசையாகக்கொண்டாடப்பட்டது. அட்வோகேட் ஜனரல் கனம் **பி. எஸ். சிவஸ்வாமி அய்யர்,அக்ராஸனம் வகித்தார்.** ஹாலில் நிற்கக்கூட இடமில்லாமல் அனேகர் வெளியில் இருக்க நேரிட்டது. முதலில் இரண்டு சிறுவர் பள்ளிக்கூடத்தில் நடத்தும் ஸ்தோத்திரங்களை வெகு அழகாய்ச் சொல்லி முடித்தனர். சங்கங்களில் மாணாக்கர் அனேக விஷயமாய் எழுதியும் பேசியும் இன்னும் வேறுவிதமாய் அவர்கள் கொண்ட ஊக்கமும் உத்ஸாகமும் காரியதரிசி வாசித்த ரிபோர்ட்டிலிருந்து நன்றாய் விளங்கியது. 'புத்தியும் செயலும்' 'பெரிய பதங்களை உபயோகிக்கலாகாது', 'சில சரித்ரசங்கதிகள்' என்ற விஷயங்களைப்பற்றி ஒப்பிவித்த மாணாக்கர்களை யாவரும் புகழ்ந்து கொண்டாடினார். பிறகு ம-௱-௱-ஸ்ரீ சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றிய 'கள்வர்தலைவன்' ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த,(Much Ado About Nothing) என்ற நாடகங்களினின்றும் சில அங்கங்களை மாணாக்கர் எடுத்தாடியதைப் பார்த்தவர்களெல்லோரும் இச்சிறுவர் இவ்வளவு செயற்பாலரோ என ஆச்சரியமும் ஆனந்தமு மடைந்தனர். முடிவில் பிறர்மனதை அறியப்புறப்பட்ட பெரியவர்செய்தவித்தையைக்கண்டு நகைத்து சந்தோஷமடையாதவரொருவருமில்லை.

இவ்வேடிக்கைகள் முடிந்தபின்னர் கனம் வி. பி. இராமஸ்வாமி அய்யர் "பள்ளிக்கூடம் சிறுவர்களைநல்ல நகரவாஸிகளாக்கும் ஓர் போஷணசாலை" என்ற விஷயமாய் ஓர் பிரசங்கம் செய்தார்.

அதில் உபாத்தியாயரது நற்குண நற்செயல்களும், பள்ளிக்கூடத்திய மாணாக்கரின் சங்கங்களும், விளையாட்டுகளும், பிள்ளைகளுக்கு அறிவை ஊட்டி மேலான ஒழுக்கங்களைப் போதிக்க வல்லெனவெனும் கருத்தை அழகாய்ச் சுருக்கமாய் கூறி முடித்தார். பிறகு அக்கிராசனாதிபதி அவர்கள் எழுந்து அனேக விதமாய் தம்மை களிக்கச் செய்த சிறுவருக்கு வந்தனமளித்ததுமல்லாமல், பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர், கனம் கஸ்தூரிரங்க அய்யரைப்போன்ற கனவான்கள், பிள்ளைகளுக் கறிவூட்டுதலால் தவிர அவருக்குத்தக்க ஒழுக்கமும் மேலான நோக்கமும் போதிக்க வல்லவரென்றும் பள்ளிக்கூடத்தைப் புகழ்ந்துபேசினார். முடிவில் அக்கிராசனாதிபதிக்கும் பிரசங்கம் செய்தவருக்கும், பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் வந்தனமளித்து மாலையிட்டனர். மாணாக்கர் வந்தவர்களைத் தக்கபடி உபசரித்தனர். வருஷோத்ஸவம் இவ்வாறு வெகு உல்லாஸமாய் நிறைவேறியது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்தியாயம் 5
### அபரக்கிரியைகள்

*பிணம்பற்றிப் பிற்சென்று பேரின்பம் பாயுங்*
*குணம்பற்றிக் கோள்கொண்டு மீண்டும்—கணத்துல*
*பற்றிற் பதிந்து பரமார்த்தந் தேடாத [கப்*
*திற்றேயிம் மாந்தர் இயல்பு!*

ஹரி: ஓம். கிருஷ்ணன்வாழ்நாள் முடிந்துவிட்டது ஸ்திரீகள் வீண் அழுகைக்குக் கங்குகரையே இல்லை. வாஸுதேவ சாஸ்திரிக்குக்கூடக் கண்ணீர் ததும்பியது. லக்ஷ்மி கரைந்து உருகுகிறாள் பாவம்! பெண்மணீ! உன் உயிரே போய்விட்டது. அவரை அந்தியகாலம் வரை ஸுகமாகவே வைத்திருந்து முடிவிலும் ஸுக மாக வழியனுப்பி விட்டாய். உன்னைப் போன்ற உதவிவாய்ந்த அவனுக்கு ஸ்வர்க்கம் கிடைப்பது திண்ணம். கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும். பிணத்தை ஸ்மசானத்திற்கு எடுத்துச் சென்றனர். சிதை வரையில் பின்சென்றவர்களைப் பார்க்க ஸஹிக்க வில்லை. ஆவேசம்கொண்ட லக்ஷ்மிமேலும் யோக யத்தனித்தாள். அநேகக் கருணையற்றவர்கள் அவள் கணவனைச் சாம்பலாக்கத் தொடங்கும் நெருப்பில் விழாத வண்ணம் தடுத்து அவளை நிறுத்தினர். கணவன் நன்மைக்காக அத்புத தைரியத்தால் அடக்கி நிறுத்தப்பட்ட துக்கக்கடல் இப்பொழுது கரையை உடைத்துக் கொண்டு கிளம்பி விட்டது. அழுது அழுது அவள்விழி வெளிக் கிளம்பிவிட்டது.

நீக்கவேண்டிய ஆபரணத்திற்காகவும், எடுத்துவிட வேண்டிய அழகிய கூந்தலுக்காகவும் ஏற்பட்ட துக்கமாயிருந்தாலல்லவோ அடங்கும். அன்பு நிறைந்தவனும், தன் காதற்கு உறைவிடமாயும், தனக்குப் பெரியதனமாயும், தனக்கு ஆனந்தப் பெருக்காயுமிருந்த அருமைக்கணவனை எண்ணி எண்ணித் துக்கிக்கத்தொடங்கி விட்டாள் லக்ஷ்மி. இதற்கு முடிவு எப்படி ஏற்படும்!

கிருஷ்ணன் கார்யம் முடிந்தது. அவன் ஸஞ்சயன காலத்தில் பின் வருவதை எண்ணித் தேறவேண்டியதுதான்.

*இனியஞ்சல் கதிரவ னெரித்திடு வெப்பமுங்*
*கனைகுரற் காரிடிக் கனமறற் றேதையு*
*மனைதந்த வுலகினின் வினைமுடித் தாயினி*
*வினைதந்த பயன்கொண்டாய் வீடுசேர்ந் தேயரோ!*
*இனியஞ்சல் கனமிடித் தெரித்திடு மின்னலும்*
*மனமஞ்ச வெருட்டிடு மழைக்குலத் தார்ப்பையு*
*மினியஞ்சல் அலர்மொழி இசைக்குறைக் கூற்றமும்*
*னனிமுடிந் துன்றதுன் னன்பும்புன் றுன்பமே!*
*எண்ணுங்காதலி னையரு*
*எண்ணுங் காதல ரெல்லருந்*
*திண்ண முன்பதஞ் சேர்வரால்*
*மண்ணு மாவது மாண்பரோ!*

கிருஷ்ணன் இறந்ததால் திண்டுக்கல்லிலுள்ள சிறந்த கிருஹஸ்தருள் ஒருவன் போய்விட்டதாகவே எல்லோரும் எண்ணினர். இதனால் ஏழைகள் தமக்குத் தோழனாகவிருந்து அன்புடன் தாங்கிநின்ற ஓர் ஊன்றுகோல் போல்பவன் போய்விட்டான் எனப் பரிதவித்தனர். கிருஷ்ணனுக்கு ஏராளமாக நிலங்களிருந்தன. அவன் மனமோ அவைகளைவிட மிகப் பரந்திருந்தது. எந்த ஜாதியானாலும், தேஹி என்று அவன் வீட்டில் ஏறிவிட்டு இல்லை என்ற கொடுஞ் சொற்கேட்டுத் திரும்பினதில்லை. இல்லை என்னாது ஏழைகளுக்கு ஈயும் தன்மையுடையவனாக விருந்தான். வயதிற் சிறியவனாயினும், அவ்வூருக்கு நீதி விஷயத்தில் சுக்ராசார்யாராக விளங்கினான். அவ்வூர் பொது நன்மை விஷயங்களில் இவனே தலைமை வஹித்திருந்தான். தகன தினத்தில் பட்டணம் முழுவதும் உருகிப் பரிதவித்தது என்ன ஆச்சர்யம்? அறியாமல்ஸாதாரணமாக எல்லோர்வாயிலிருந்தும் தானாகவே கிளம்பின வேதாந்தத்திற்கு வரம்பேயில்லை. ஸ்மசான வைராக்கியத்தால் மானிட வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றிப் பேசி நீதிகளுரைப்பதே அன்று முழுவதும் ஓர் கொள்ளை நோய்போல ஊரெங்கும் பரவியிருந்தது. போனவர்கள் ஞாபகம் எப்படியோ நாளாக நாளாக அத்புதமாக மறைந்துபோகின்றது.. உலக விஷயத்தில் ஒருவித மாறுதலும் காணப்படுவதில்லை. 'விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல' எத்தகைய பெரியோர் மரணமும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுகின்றது. அந்தக் கொடிய தினத்திற்கூட ஆகாயத்தின் வழக்கமான அழகு குறையவே இல்லை. மறுநாள் உதித்த ஸூர்யன்கூட கிருஷ்ணன் இறந்துவிட்டானே என்று துக்கித்ததாகக் காணப்படவில்லை. மனிதர்களுக்கு, முக்கியமாகப் பணக்காரர்களுக்கு, துக்கம் வருங்கால், கிருஹங்கள், சந்திரன், நமது கடினமான பூமி ஆகிய இவைகள் கூடத் துக்கித்து அவர்களது மனோ தர்மத்திற்கேற்ப மாறுந்தன்மை வாய்ந்தன, என்ற விஷயத்தில் ஒருவித ஆதாரம் ஒன்றிருக்கிறது. ஸுமார் கி. பி. 1785-ல் இறந்த ஒரு ஜமீந்தாரிடமிருந்த ஸமஸ்தான கவி ஒருவர் அப்பொழுது ஸூர்யன் துக்கத்தை ஸஹியாது ஓடிவிட்டான் என்றும், பிரபஞ்சமே துக்கித்தது என்றும், துக்கத்தால் அன்று சந்திரனே உதிக்கவில்லை என்றும் பாடியிருக்கிறார். இவரிடம் ஸரஸ்வதி கடாக்ஷத்தாலேயே இவ்வாக்கு உண்டாயிருக்கலாம், ஆயினும் ஓடிவிட்ட ஸூர்யன் எவ்வளவுநாள் வராமலிருந்தான் என்றும், அன்றைக்குத் துக்காதிகத்தால் உதியாத சந்திரன் விஷயமான திதி இன்னதென்றும் மாத்திரம்அவர்வெளியிட மறந்துவிட்டார். இது எப்படி இருந்தபோதிலும், கிருஷ்ணனிறந்ததற்காக ஆகாயத்தில் துக்கக்குறிகள் ஒன்றும் காணப்படவில்லை. இது நடந்து அதிக நாள் கழிவதற்கு முன்னமேயே திண்டுக்கல் வாசிகள் முன்போலப் 'பழையகுருடி கதவைத்திறடி' என்ற கதையாகக் காலந்தள்ளத் தொடங்கிவிட்டனர். அன்னம்மாளுக்கும், கிருஷ்ணன் தாயாருக்குங்கூட துக்கம் ஆறிவிட, அவர்கள் எலியும் பூனையும்போலச் சண்டையிடத் தொடங்கிவிட்டனர். கிருஷ்ணன் தாயார் சூதாக 'படாரிலக்ஷ்மி ஜாதகமல்லவா என் பிள்ளையை வாரிக் கொண்டு போய்விட்டது' என்ற குறிப்பை வெளியிட்டாள். அன்னம்மாள், 'நன்னிகெட்ட அற்பாயுஸுக் காரப் பாவி கிருஷ்ணனுக்கு வாக்கப்பட்டாள்! என் பெண் அறுத்தாள்' என்று கதறிப் படை கலக்கினாள். எரிமலை போன்று கொந்தளிக்கும் அன்னம்மாள் மனம், பெண்ணறுத்த துக்கம்,ஸம்பந்தினியால்தூண்டப்பட்ட கோபம் ஆகிய இவ்விரண்டால் கலக்கப்பட, காலாகாலமின்றிக் கதித்தெழாவண்ணம் அதை அடக்கி நிறுத்த அவள் கணவன் வேதாந்த மெல்லாம் உபயோகப்படுத்த வேண்டிவந்தது.

லக்ஷ்மிகதிதான் நிர்கதியாகிவிட்டது. அவளை ஸமாதானப்படுத்த ஒருவராலும் முடியவில்லை; அவள் சில ஸமயங்களில் தற்கொலை செய்து கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தாள்; ஆனால் இராப் பகல் ஓயாது அநேக உறவினர்களால் சூழப்பட்டிருந்ததால் அவள் அவ்வாறு செய்யத் துணியவில்லை. அநேகர் அவளை நோக்கி மனப்பூர்வமாக இரங்கி பயன்படாத துக்கத்திற்கு ஆளாயினர். பத்தாம் நாள் அவள் வழக்கப்படி ஆபரணங்களை எல்லாம் அணிந்துகொண்டு துக்கம் கேட்க—துக்கத்தைக் கிளப்பிவிட—வருபவர்கள் மத்தியில் உட்கார்ந்து நிர்வகிக்க வேண்டி வந்தது. அப்பொழுது வீட்டிலுள்ளோர்களுக்குள் சண்டை சச்சரவு உண்டாயிற்று. வைதவ்யத்தில் அழுந்தி மழுங்கிப் போவதற்கு முன் அவள் பேரழகை கடைசியாக ஒரு தரமாகவாவது பார்க்க இடங் கிடைக்குமே என்ற ஆவலுடன் அன்னம்மாள் முதலியோர் அவள் நகைகளை எல்லாம் போட்டுக் கொள்ளத்தான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர்.

ஸகலவிதஸௌந்தரியமும் பொருந்திய லக்ஷ்மி நகசிக பரியந்தம் ஸர்வாபரண பூஷிதையாய் உட்கார்ந்து கொண்டு, கார்காலத்து மழைபோலச் சற்று விட்டுவிட்டு அடர்ந்து மேல் மேல் வரும் உபயோகமற்ற ஆழ்ந்த துக்கத்திற்கு ஆளாகிக் கதறியதைக் கண்ட யார் மனம் தான் பதைக்காது? அவளை இவ்வலங்கோல நிலையில் என்னமாயிருக்கிறாள் என்று வேடிக்கை பார்க்க மாத்திரம் ஆவல்கொண்ட அநேகர், வைதவ்யத்தில் சற்று நாழிகைக்குள் வகையறியாது மறையும் தருணமாகவிருந்த அவள் அத்புத அழகைக் கண்டு தம்மை யறியாது துக்கக் கடலில் மூழ்கிவிட்டனர். வந்தவர்கள் எல்லோரும் தொண்டையைக் கிழித்துக்கொண்டலறிப் போராவாரத்தை உண்டாக்கினர். மிகக்கொடியவர்கள், கல் நெஞ்சர்கள் ஆகிய இவர்கள் கண்களும் கலங்கின. அன்னம்மாள் துக்கப்பரவசமாகி வயிற்றி லறைந்து கொண்டதற்குக் கணக்கேயில்லை. அவள் கணவனால்கூட அந்தக் கண்ராவியைக் கண்டு ஸஹிக்கமுடியவில்லை.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## LADIES' PAGES

### ருக்மணி அல்லது பக்திநிலை
### ஞானமுணர்ந்த காதை

மற்றும் உயிரொழியாது பிழைத்திருந்த அரசர்கள் தலைதப்பினது தம்பிரான் புண்ணியமென்று அவரவரது ஊரை அடைந்தனர். ருக்மிக்கு மாத்திரம் தன் தங்கையைக் கவர்ந்தான் கண்ணன், இராக்ஷஸ மரபில் அவளுடைய மணம் நடந்தது என்னும் எண்ணங்கள் அவன் மனத்தைக் குடைந்தன. அவை அவன் கோபக் கனலில் சொரிந்த நெய்யாக விளங்கியன. கோபம் மேல்மேலும் மூண்டு, எப்பொழுதும் விளங்கிய அவனுடைய பகைமையை மூட்ட ஓர் அக்ஷௌஹிணி சேனையோடு ஸ்ரீ வாஸுதேவனைப் பின்தொடர்ந்து சென்றான். கவசமணிந்து, கையில் வில்லை எடுத்து நாண் மீட்டி அம்பைப்பூட்டி, நறநறவெனப் பற்களைக் கடித்துப் பொறுக்கமுடியாத கோபத்திற்காளாகி, தேஹந்துடிக்க ஆவேசங் கொண்டவனாகி, "ஆஹா! அந்தத் திருடன் என் தங்கையைக் கொள்ளைகொண்டு போகவும் பார்ப்பதா! அக்கொடிய கண்ணனுடைய உயிரையாவது, ருக்மணியையாவது கவராது இனி வரமாட்டேன். இந்தக் குண்டின புரத்திலும் நான் எட்டி அடிவைக்கமாட்டேன்" எனக் கூச்சலிட்டுக் கொண்டு தேரில் ஏறித் தேர்ப்பாகனை நோக்கி "சீக்கிரம்! சீக்கிரம்! கடத்து! கிருஷ்ணனிருக்கும் இடம்! குதிரைகளைத் தூண்டு! அவனோடு போர்புரிய வேண்டும். அவ்விடையனுடைய அகந்தையை இன்றைக்கே என்னுடைய கூரிய அம்புகளால் ஒழித்து விடுகிறேன். என் தங்கையைத் திருடிக்கொண்டுபோன அவ்வாட்டிடையனை இன்றைக்கே பரிபவப்படுத்துகிறேன். போ!" இவ்வாறுகூறிக்கொண்டு எம்பெருமானது பெருமையை அறியாத தீமனங்கொண்ட ருக்மி ஸ்ரீ பரந்தாமனைப் பார்த்து "நில்! நில்!!" என்று கூவிக்கொண்டு தன் தேரிலிருந்து மூன்று அம்புகளைக் கண்ணபிரான்மேல் ஏவினான். மேலும் "அடே யதுகுலாதமா! ஒரு க்ஷண நேரம் நில்லடா! யாகத்திலிடும் ஹவிர்பாகத்தைத் திருடியோடும் காக்கைபோல் என் தங்கையைத் திருடிக் கொண்டு எங்கடா போவாய்? அடே கொடியாய்! வீரப்பிரஷ்டா! என் பாணங்களால் புண் பட்டு இன்னமும் நீ யடங்கவில்லை. இதுவரையும் மாயையே செய்து வந்தாய். நான் உன்னை சும்மாவிடேன். உன் அகந்தையை ஒழிப்பேன். வீணாக போரிடாதே! என் தங்கையை விட்டுவிடு" என்று கூறினான்.

இதைக் கேட்டு நகைத்து, கண்ணன் ஆறு கணைகளால் ருக்மியின் வில்லை ஒடித்து, மூன்று கணைகளால் கொடியை முறித்து, இரண்டு அம்புகளால் குதிரைகளைத் தாக்கி, எட்டுகோல்வாங்கி ருக்மியின் உடலைத் துளைத்தனர். ருக்மி மற்றொரு வில்லைக்கொண்டு ஐந்து பாணங்களால் ஸ்ரீ கண்ணபிரானது உடலைத் துளைத்தான். கண்ணன் புண்பட்ட கோபத்தோடு

வில்லை வளைய வாங்கி இடைவிடாது சரமாரி பெய்தனர். அவன் வில்லை மறுபடியும் துண்டித்தனர். ருக்மி மற்றும் எடுத்து வளைத்த வில்லையும் கண்டித்தனர். சக்கரம், பிண்டிவாலம், பெருவச்ரம், கவாண்டு, கத்தி, வேல், யாமரம், முதலிய எந்த எந்த ஆயுதம் அவன் எடுத்து பிரயோகம் செய்தானோ அந்த அந்த ஆயுதங்களைக் கண்ணன் முறித்தது முறித்த வண்ணமாக இருந்தனர். ஆயுதங்கள் அனைத்தும் போய் கத்தி ஒன்றோடு கீழ் இறங்கி, அவ்வாளை ஓச்சி கண்ணனது உயிரை வாங்குவதே ஸரியென அவர்பால் ஓடினான். நெருப்பில் விழவரும் ஈப்போல் வந்த ருக்மியின் வாளைச் சின்னபின்னமாக்கி, ருக்மியின் உயிரைத் தன் வாளிற் கிரையிடுவதுபோலத் தன் வாளாயுதத்தை ஓங்கினார். அவனைக் கொன்றுவிடுவதே ஸரியென நிச்சயித்தனர்.

தன்முன்னவனது உயிரை வாங்குவதற்குக் கண்ணன் ஆயத்தமாவதைக் கண்ட ருக்மணிப்பிராட்டி, பயந்து நடுநடுங்கி எம்பெருமானது காலில் வீழ்ந்து ஓவென்றலறி "நாதா! யோகத்தின் தலைவா! ஆளைக் கொள்ளு உயிராய்! தேவாதிதேவா! உலகமுதலே! குணமென்னுங்குன்றே! நன்மையின் உருவே! வலியிற் சிறந்தாய்! தாங்கள் தயவுசெய்து என் அண்ணனைக் கொல்லாது இருக்கலாகாதா?" என்றாள்.

இவ்வாறு ருக்மணி மிகப்பயந்து, நடுநடுங்கி, உடல் முழுதும் துடிக்க, துன்பத்தின் கொடுமையால் நா உலர, பேசக்கூட முடியாமல் வாய்தடுமாற, தனது ஆபரணங்கள் குலைய ஒன்றுந்தெரியாது மயங்கி ஐயனது கால் இரண்டையும் பிடித்துக்கொண்டு சரணாகதமாக விழுந்துவிட்டாள். அவள்பால் கருணை மலர்ந்து கண்ணன் தனது செயலைத்தடுத்தனர். பின் அத்துஷ்டனைப் பந்தனம் செய்து தலை மயிரில் சிலசேதித்து ஐந்து குடுமிவைத்து, மீசையை அறை அறுத்து அவன் உருவத்தை விகாரப்படுத்தினர்.

மத்தகஜங்கள் தாமரைமலரைத் துகைத்தல்போல யதுசேனை பகைவரது சேனையை எதிர்த்தொழித்தது. கண்ணன் பால் சங்கர்ஷணர் வந்து ருக்மியைக் கண்டார். மனந்தளர்ந்து அவன் பந்தத்தைத் தளர்த்தினர்.

சங்கர்ஷணர்—,(கிருஷ்ணரை நோக்கி) "கண்ணா! இவன் மயிரைச் சேதித்து நீ தவறு செய்தாய். நண்பர்களது உருவைக் கோரப்படுத்தல் அவரைக் கொலை செய்தவதற்கே ஸமானம்" என்றார். ருக்மணியை நோக்கி "கற்பிற் சிறந்தாய்! உன்னுடன் பிறந்தான் இவ்வாறு கோரமடைந்ததற்கு எங்களை நிந்திக்கவேண்டாம். ஸுகமாவது, துக்கமாவது கொடுப்பவர் ஒருவருமில்லை. நன்மை விதைத்தால் நன்மைவிளையும்; தீமைவிதைத்தால் தீமைவிளையும். தாம் செய் வினைவழி பலனை அடைவார்" என்று மொழிந்தனர். பின் மற்றுங் கண்ணனை நோக்கி, "அப்பா நண்பன் ஒருவன் கொல்லத்தக்க காரியஞ் செய்தானாயினும் கொல்லத்தகுந்தவனல்ல. அவனைவிட்டு விடவேண்டியது. தன்பாபத்தாலே கொலையுண்டவனை நாமும் கொலைசெய்வதாமோ! செத்தபாம்பை அடிப்பதால் பிரயோஜனம் என்ன?" என்றார்.

சங்கர்ஷணர் ருக்மணியை நோக்கிக் கூறுகின்றனர்:—"அம்மா! ருக்மணி! இந்தத்தருமம் க்ஷத்திரியதருமம். பிரஹ்மாவால்ஏற்படுத்தப்பட்டது. அது மனத்தை வெருட்டக் கூடியதே. தன் தருமத்தைத் தான் நடத்தி வேண்டி வந்தால் ஒருதாய் வயிற்றுப்பிள்ளை அவளது மற்றொரு மகனையும் கொல்லலாம். ஆமாம், வீண்பெருமைக்குழைப்பவர், 'செல்வக்கள்ளாட்டயர்ந்து' கண்மூடியாக நிலம், சுகம், செல்வம், பெருமை, ராஜ்யம் இவைகளை அடைவதின் பொருட்டு மனத்தைத் துன்புபடுத்துகின்றனர். நாம் அப்படிச் செய்வது தகாது."

மேலும் பலராமர் ருக்மணியைப் பார்த்துத் திருவாய் மலர்ந்தனர்;—"அறியாத மடமைவாய்ந்த பெண்கள் போல நீ கேடே செய்துவரும் உன் உடன்பிறந்தார்க்கு நன்மை உண்டாக வேண்டுமென்று எண்ணுவது உனது மனம் விருத்தியடையாமையைக் குறிப்பிக்கும்; பக்குவமற்ற புத்தியை குறிப்பிக்கும்; உனது நண்பர்க்கு நீ ஏற்றமில்லாமையையும் குறிப்பிக்கும். பரமனது மாயையின் பரப்பால் இந்த ஜடமாகிய உடலைத் தாமாக எண்ணுவது அறியாதவர் இயற்கை. இப்பிரமையால் அவருக்குச் சிலர் நண்பராகவும், சிலர் பகைவராகவும், சிலர் உலகத்தில் ஸம்பந்தப்படாதவர் போலவும் தோன்றும். வாஸ்தவமாகப் பரமாத்மா ஒன்றே. அவ்வொன்றே யாவர் உள்ளும் இருப்பது. பல நீரில் பிரதிபலனத்தால்தோன்றும் சந்திர ஸூரியபிம்பம் போல என்று எண்ணுவது அறியாதார் கொள்கை. "அது ஒன்றே இரண்டற்றது"—அதுவே பிரஹ்மம். அவித்யையின் சேர்க்கையால் ஆத்மாவின் குணமாகச் சொல்லப்படும் பூதிய நோய்கள், மனோவ்யபாராவ்யாகூலங்கள், சட நோய்களுக்கு இடம் தரும் இவ்வுடல் உலக வாழ்க்கைக்கே வழிகாட்டும். கற்பிற் சிறந்தாய்! அத்தகைய சடப் பொருளோடு ஆத்மாவின் சேர்க்கையாவது பிறிவாவது முடியாது. கண்ணும் உருவும் சூரியனால் ஆவது போல இவ்வுடலிற்கு ஆத்மாவே காரணம். தேய்வும் வளர்ச்சியும் கிரணங்களதேயன்றிச் சந்திரனது அல்லாததுபோல இறப்பும் பிறப்பும் உடலின் மாறுபாடே அன்றி ஆத்மாவினுடையதல்ல. தூக்கத்திலிருப்பவன் அனுபவிப்பவன் நிலைமையையும், அனுபவிக்கப்படும் பொருளின் நிலைமையையும், அனுபவித்தலின் நிலைமையையும், பொருள் இல்லாதிருக்கும்பொழுது அனுபவித்தல்போல, அறிவிலாதவனும் உலக வாழ்க்கைக்குடன்படுகின்றனன். ஆகையால், புன்னகையுடையாய்! ஆத்மாவை அலட்டி அறியாமையுள் ஆழ்த்தும் அவித்யாவாஸனையால் உண்டான இவ்வியாகூலத்தை உனது ஞானப்பெருக்கால் ஜயித்து மன அமைதி அடைவாய்."

இவ்வாறு பலராமரால் தேற்றப்பட்டு ருக்மணி விசனத்தை ஒழித்து ஞானமுணர்ந்தாள். ருக்மியைத் தளர்த்திவிட்டு ருக்மணியுடன் கண்ணனும் ராமனும் துவாரகை அடைந்தனர்.



# விசேஷக் குறிப்புகள்

## NEWS & NOTES

### ஸர் தாமஸ் கிப்ஸன் டேவிட் கார்மிகேல் பாரோனட்

**His Excellency The Hon. Sir Thomas David Gibson Carmichael G. C. I E, K. C. M. G.**

நமது புதுக் கவர்னர் ஸர் தாமஸ் கிப்ஸன் டேவிட் கார்மிகேல் நவம்பர்மீ 1-ம் உ சென்னைக்கு வந்து சேர்ந்தார். 3-ம் தேதி மாலை 4-30 மணிக்கு போர்ட்டு ஸெயிண்டு ஜார்ஜு கௌன்ஸில் சேம்பருக்குச் சென்றார். அங்கு ஆக்டிங்கு சீப் ஸெக்ரிடரி H. A. ஸ்டேவர்ட்டு இவருக்கு மகாராஜா சக்கரவர்த்தி அவர்கள் சென்னைக் கவர்னர் வேலையைக்கொடுத்த ராயல் ஸயன்மானியுவலைப் படித்தார். உடனே 17 மரியாதைக் குண்டுகள் போடப்பட மிஸ்டர் ஸர் T. கிப்ஸன் கார்மிகேல் கவர்னர் ஸ்தானத்தை வகித்தார். இவர் 1859-ம் வருஷம் பிறந்து கேம்ப்ரிட்ஜிலுள்ள ஸெயிண்டு ஜான் காலேஜில் படிப்பிக்கப்பட்டார். 1881-ல் B. A. பரீக்ஷையிலும், 1884-ல் M. A. பரீக்ஷையிலும் தேறினார். 1895-ம் வருஷம் மிட்லோதியன் கவுண்டிக்கு காலஞ்சென்ற W. E. கிளாட்ஸ்டனுக்குப் பிறகு பிரதிநிதியாய்ப் பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம் வகித்தார். 1908-ல் விக்டோரியாவுக்குக் கவர்னராய் நியமனம் பெற்றார். இவர் லிபரல் கக்ஷியினர். விக்டோரியா கவர்னராய் இவர் 3-வருஷ காலம் வேலைபார்த்ததில் மிகவும் சாமர்த்தியமாகவும் பிரஜைகளிடத்து இரக்கத்துடனும் ஆண்டுவந்ததால் இவரது சென்னைக் கவர்னராட்சி பெரிதும் குணமாக இருக்குமென்று நம்ப இடமுண்டு.

4உ சனிக்கிழமை 12-மணிக்கு நமது புதுக் கவர்னருக்குப் பல உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. சென்னைக் கார்பொரேஷனும், சென்னை ஜமீன்தார்சங்கமும், ஆங்கிலோ இந்தியன் அஸோஸியேஷனும், கஞ்சம் ஜமீன்தார் சபையும் உபசாரவரவு பத்திரிகை படிக்க, எல்லாவற்றிற்கும் ஒருமிக்க கவர்னர் பதில் சொன்னார். இந்த பத்திரிகைகளில் முக்கியமாய் உபசார வார்த்தைகள்சொல்லப்பட்டு இரண்டொரு முக்கியமான விஷயங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தன. கவர்னர் பதில் சொன்னதில், சென்னைக் கார்பொரேஷனுக்கு வடிகால் செப்பனிடம் விஷயமாயும், குழாய்த் தண்ணீர் சுத்தப்படுத்தும் விஷயமாயும், தம்மால் கூடிய உதவி செய்வதாயும், ஸ்தல சுய ஆட்சியைப் பற்றித் தமக்குச் சிறிது அனுபோக மிருப்பதால் இந்தியாவில் அதை முற்படுத்துவது தமது கடமையாகுமென்றும், கஞ்சம் ஜில்லா சங்கமானது வில்லேஜ் சர்விஸ் செஸ்ஸை எடுத்துவிட இந்தியாக் கவர்மெண்ட் வாக்குறுதி கொடுத்திருப்பதால் அதை நிறைவேற்ற கவர்னர் ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு, அதைப்பற்றித் தனக்குத் தெரியாதென்றும், பதில் சொன்னார். மொத்தத்தில், கவர்ன்மெண்டை வகிப்பவர் நெறி தவறாது நியாயம் செலுத்த வேண்டுமென்றும், ஏகாதிபத்தியத்தில் எந்தப் பாகத்தில் வசிப்பவர்களானாலும் அங்குள்ளவர்கள் பொருளாதாரங்கள் விரியும்படி செய்யவேண்டுமென்றும், அவர்கள் நன்மையை உத்தேசித்து அவர்களுடைய சக்தியையும் திறமையையும் முற்றிலும் உபயோகிக்கும்படி செய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

*
* *

**கடலை நீந்தினான்.**—இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் நடுவிலுள்ள 30 மைல் விஸ்தீர்ணமுள்ள சமுத்திரத்தை பர்ஜெஸ் என்பவன் நீந்தினான். சென்ற 36 வருஷங்களாக எத்தனையோ நூற்றுக் கணக்கான நீச்சல்காரர்கள் பிரயத்தனப்பட்டும் சாதிக்க முடியாத விஷயத்தை பர்ஜெஸ் சாதித்தான். சென்ற 7 வருஷங்களாகப் பர்ஜெஸ் என்பவன் 15 தடவை பிரயத்தனப்பட்டு முடியாமற் போயும் விடாமுயற்சியினால் 16-வது தடவையாக கடைசியில் இந்த 30 மைல் தூரத்தையும் நீந்திக் கரையேறித் திரும்பினான்.

*
* *

**ராஜாங்க உடுப்பு.**—நமது மாக்ஷிமை தங்கிய ராணி மேரி, உடுப்பு விஷயமாய் வருஷம் ஒன்றுக்கு 2,000 பவுனும், அலெக்ஸாண்டரா வருஷம் ஒன்றுக்கு 2,000 பவுனுக்குக் குறையாமலும், உலாந்து தேசத்து மகாராணி வருஷம் ஒன்றுக்கு 4,000 பவுனும், சாதாரண சந்தர்ப்பங்களில் ஆடம்பரமில்லாத உடைகளை தரித்து வரும் ருஷ்யா தேசத்து ஸரீனா, ஐரோப்பாவில் உடுப்பு விஷயமாய்ச் செலவழித்து வருபவர்களை விட அதிகத் தொகையைச் செலவழித்து வருகிறதாகவும், ஜெர்மன் சக்ரவர்த்தினி உடுப்பு விஷயமாய் வருஷம் ஒன்றுக்கு சற்றேறக்குறைய 2,500 பவுனும், இத்தாலிய ராணி வருஷம் ஒன்றுக்கு 3,000 பவுனும் செலவழித்து வருகிறார்களாம்.

**டெல்லி முடிசூட்டில் சக்கிரவர்த்தியின் கிரீடம்.**—நமது மகாராஜா சக்கிரவர்த்தியவர்கள் டெல்லி தர்பாரின்போது இதற்காகவென்றே பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட ஒரு புது கிரீடத்தை அணிவார். சக்கரவர்த்தினி, அவர் லண்டன் முடி சூட்டின்போது அணிந்த கிரீடத்தை அணிவதோடு கோகினூர் என்ற நமது நாட்டில் அகப்பட்ட விலையுயர்ந்த கல்லையும் அணிவார். சக்கிரவர்த்தி நமது இந்தியப் பிரஜைகளுக்கு ஒரு பிரசங்கம் செய்வார். அப்பிரசங்கம் இந்தியாவில் வழங்கும் சகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு துண்டுக் கடிதங்களாக இந்தியாவில் எல்லா விடங்களிலும் கொடுக்கப்படும். சக்கிரவர்த்தி கப்பலில் வரும்பொழுது போர்டு ஸெயிட்டில் இறங்க மாட்டார். ஈஜிப்டு அரசனை கேடிவை, மெடினுக் கப்பலில் வருவித்துப் பேட்டி தருவார்.

* *
*

**ஒரு சிப்பாயும் புலியும்.**—லீக்கிய ரெஜிமெண்டு 33-வது வகுப்பைச் சேர்ந்த ஒரு சிப்பாய் ரூப்லிங் என்றவன், கல்கத்தாவுக்குச் சென்றிருந்தான். அவன் தனக்கு ஹிப் நாடிஸம் (கண்ணின் நோக்கினுல் பிற வஸ்துவை வசப்படுத்தல்—சாயாக்கிரஹணம்) என்பது தெரியுமெனத் தற்புகழ்ச்சி செய்து கொண்டு, ஸூலாஜிகல் தோட்டம் (துஷ்டமிருகங்கள் அடைத்துவைத்திருக்கும் தோட்டம்) சென்று ஒரு புலிக் கூண்டின் இரண்டு கம்பிகளுக் கிடையே முகத்தை வைத்துக்கொண்டு, புலியை உறுக்கி விழித்துப் பார்த்தான். இவன் உண்மையாகச் சாயாக்கிரஹண சக்தியைப் படைத்தவனு யிருந்தாலன்றே புலியை வசப்படுத்தக்கூடும். இவன் கற்றுக்குட்டி யாகையால், புலி இவனுக்கு வசியப்படாமல் பாய்ந்து வந்து முகத்தில்அறைந்து, மூக்கைப்பிடுங்கி, முகத்தை உருத்தெரியாது கிழித்துவிட்டது. பேதையான அச்சிப்பாய் இப்பொழுது ஆஸ்பத்திரியில் கிடக்கிறுன்.

* *
*

**காலஞ்சென்ற கோதாவரி.**—சேலம் கோதாவரி என்ற தாஸியைப்பற்றிக் கேளாத ஸங்கீத அபிமானிகளிருக்கமாட்டார்களென நம்புகிறோம். இவள் சென்னை தம்புசெட்டித் தெருவில் வசித்து வந்தாள். சென்ற மாதம் 20-ந் தேதி காலஞ் சென்றுள். இவள் கச்சேரி ஒன்றுக்கு ரூபா 150-க்குக் குறைந்து வாங்கினதே இல்லை. இப்படி ஸம்பாதித்து ஏராளமான செல்வம் பெருக்கியிருந்தாள். ஆனுல் செல்வம் படைத்தவர்களில் பெரும்பாலர்களுக்கு மனம் வராத ஒரு அரிய காரியத்தை இவள் மனமொப்பிச் செய்திருக்கிறுள். கம்பர் முதலாக எல்லா வித்வான்களும், தாஸிகளின் மனமானது பாலைவனம்போலப் பசையற்றது (அன்பற்றது) என்றும், இரவைப்போல இருண்டிருக்கின்றதென்றும், (அதாவது அஞ்ஞானம் பொருந்தியதென்றும்) கூறியிருக்கிறுர்கள். அப்படியிருக்க, இவள் மனம் பசையற்ற (அன்பற்ற) தாகவாவது இருண்டாவதிருக்கவாவது இருக்கவில்லை. இவள் அந்திய காலத்தில் செய்து வைத்த உயிலில், சென்னையிலுள்ள அனுதையான பாலர்களை ரக்ஷிக்கும் "பாலரக்ஷணை ஸங்கத்திற்கு ரூபா 5,000-மும், அன்னதான ஸமாஜத்திற்கு 1,000-ரூபாயும், பச்சையப்பன் காலேஜுக்கு 4,000-ரூபாயும், சேலம் காலேஜுக்கு 1,000 ரூபாயும், பிரம்மக்ஞான ஸங்கத்தை யடுத்த வேதபாடசாலைக்கு 1,000 ரூபாயும், சேலம் சிவன்கோவில் தேருக்கு 4,000 ரூபாயும், சேலம் சிவன் கோவிலில் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கும் அவர்களின் ஸௌகரியத்திற்கு வேண்டிய வேறு காரியங்கள் செய்து கொடுப்பதற்கும் ரூபா 600-ம் ஒரு பெரிய வீடும் அளித்ததாக தெரிய வருகிறது.

* *
*

**இந்திய ஸென்ஸஸ் உத்தியோகமுறைப்படி முடிவான கணக்கு.**—1911-வருஷத்திய ஸென்ஸெஸ் படிக்கு இந்தியாவிலுள்ள ஜனத்தொகையின் மொத்தம் 315, 132, 537 சென்ற ஸென்ஸைவிட நூற்றுக்கு 6· 71-அதிகமாயிருக்கிறது.

| | | | ஜனத்தொகை. |
|---|---|---|---|
| பம்பாய் ராஜதானி | ... | ... | 19672642 |
| மதராஸ் | ... | ... | 41405404 |
| ஐதராபாத்து | ... | ... | 13374676 |
| மைசூர் | ... | ... | 5806198 |
| கொச்சி | ... | ... | 918110 |
| திருவனந்தபுரம் | ... | ... | 3428975 |

இந்தியா மொத்த ஜனத்தொகை 315132537 ல் ஆண்கள் 161326,110 ம், பெண்கள் 153,806,427 ம் ஆவார்கள்.

* *
*

**ஒரு புதிய தீவு.**—ஸ்பெயின் தேசத்துக்கருகில் ஸமுத்திரம் குழம்பி ஓர் புதிய தீவு உண்டாகியதாகத் தெரிய வருகிறது.

# தலைவன் வழிபாடு

## TRIBUTE TO HIS MAJESTY






### கட்டளைக் கலித்துறை

வான்கொண்ட சோதி வழிகொண்ட தொன்மை மரபின்வந்த
தேன்கொண்ட மாரி திறல்கொண்டு பெய்த கொடையர்வாழ்ந்த
வான்கொண்ட ரூவ வரைநின்று கங்கை வளனும்பாயத்
தான்கொண்ட நாட்டை நினைவுந்த வந்த தலைவவாழ்க !

குவளைக் காங்கள் குவிந்தன்பி னீட்டி குறிப்பையுன்னி
பவளப் பரப்பின் பதுமங்க ளென்னு முகமலர்ந்து
தவளச் சிறப்பின் நகுவாய் மலர்ந்து தாளம்வீசி
யிவர்வளைக் கையலைத் தின்பத் தழைக்குமிந் நாடுகண்டாய் !

### விருத்தம்

ஐய வாரிய நாடிவ ளன்பலை கொழிக்கும்வெண் ணுரைமாலை
செய்ய மோலியின் மிலைதந்து புல்லுபுச் செஞ்செயிற் புணர்ச்சங்கம்
பெய்யும் பண்ணெடு மலரளை வண்டொடும் பெருகுத மதுவின்வாழ்
செய்ய தாமரை முகமலர்ந் தாசையி னழைத்திடுஞ் சிறப்பினன்றே!

காட்டின் வாழ்பற வைக்குலங் கருத்தினோ டினிமையி னிசைத்திடநற்
கூட்டின் வாழ்பவுங் கூட்டத் திருப்பவு மெழிலிசை யெனப்பயிற்ற
சூட்டு மோலியன் மனங்களித் தெனைப்புணர்த் துணிவினு னெனவிம்மி
வேட்டு மங்கமுங் கூச்சிட் டென்றிட மிகபயிர்த் தசைஞ்சிடுமால்!

**வேறு**

ஐம்பொறி யுற்றவு மன்றி வாழ்பவும்
பைம்புல னறுத்திட்ட புரையின் மௌனருந்
தம்புலன் வழிப்பட்ட தகைமைப் பெற்றரு
மெம்புரத் தலைவனென் றெண்ணுங் காண்டியால்.

வளர்த்திரு வையநின் வரவை நோக்கிப்புல்
வளர்த்திடு மிடம்படும் வறிய ரெண்வரேல்
கிளர்த்திரு விடம்படுங் கேண்மைக் கொண்டரும்
வளர்த்திடு மன்பின ராத லரியதென் ?

மழலையின் பொருட்கொளு மாண்பின் றந்தையுஞ்
சுழலையுண் மயக்கறுத் துணர்த்து சோதியும்
பிழையனைத் தையும்பொறுத் தாளும் பெற்றியும்
வழுவிலை ! நினையலான் வையத் தார்கொலோ ?

**வேறு**

பின்னைக் கேள்வன் பிறங்கிடு மருணிதி
தன்னை வழிகொளுந் தரணியின் மாமணி
மன்னு மன்பினின் மாமுடிச் சேர்த்திட
என்ன நற்றவத் தீட்டிய தாகுமால் ?

ஐய நின்முகங் காண்டிடு மாசையின்
நையு நெஞ்சம்புன் னகைதந்தெ ழுந்தினி
யுய்யு மென்வழி யுண்டென் றிசைத்திடிற்
செய்ய காட்சியைச் செப்பவும் வேண்டுமோ ?

பண்டு நற்றவப் பலிதங்கண் டாலென
மண்டு வாரன்பின் வாரியின் ஓதைமன்
கொண்ட விந்தியக் குழாத்தவர் காதன்னி
தண்ட ளிர்கழற் சாதலுங் காண்டியால் !

இம்மை யம்மையின் மெய்வழி யீதெனச்
செம்மை யாரிய நாட்டவள் சீர்முடி
மெய்ம்மை யிற்கொள வேட்டிய நின்கழற்
கெம்ம வர்பெயு மிறையன்புங் காண்டியால் !



ஆங்கி லப்பெயர் அணங்கினை யோர்பக்கிற்
றுங்க லன்றியுந் தடவரை யிந்தியைப்
பூங்கு ழற்றன்னைப் புல்லவு மறுபுறத்
தோங்கத் தூங்கலி னுளமுறற் காண்டியால் !

பெயரும் வண்மையும் பெய்ம்மழைத் தன்மையும்
வயிர வாண்மையு மையறு நெஞ்சமும்
முயிரின் மீதுள்ள முருகிடு முணர்ச்சியும்
பயினு மன்பனை பழிச்சலுங் காண்டியால் !

**வேறு**

வாவென் றழைத்து வழியுரைத்து வளருந் தவிசு மலரளித்துக்
கோவென் றெண்ணி யுளமுருகிக் குவிகைக் கொண்டு முடிசேர்த்தி
மாவென் றொழியா மாதவ ! நின் மாற்கண் டன்பாற் கழற்பணிந்து
நாவிற் குழைந்து நவின்மழலை நுகர்ந்துங் கண்ணிற் காண்டியால் !

கன்று மானுங் கலந்தென்னக் காண்பா னொழியா வன்பளக்கர்
குன்று விரக்கத் தலைவீசிக் குயிற்றுங் கருணை முத்தெரிக்கப்
பொன்றுப் புகழ்க்கொள் கோப்பிறையோன் புன்மைக் கொண்டற் குடற்கீறி
நின்றின் னூட்டி னிலவெரிக்கக் கிளைக்கக் காண்பக் காண்டியால் !

**வேறு**

சுடராழி திங்கள் வழிகொண்ட தொன்மை பொருநர்ப் புரந்த வுலகைச்
சுடரோன்றன் வாம மொழியாத நாட்டின் றலையாப் புகழ்க்கொள் பெரியோ
னிடராழி நீங்க வின்பந் திளைக்க விங்குற்று மௌலி புனையா
மடைபாயு மன்பி னறவத்தி தைய மலர்மாலை சூட்டுங் கண்டாய் !

**வேறு**

சுடர்விடு கதிரவ னுதையமு மாமெனத் துளவிடுந் திரையுறை யுலகளந் தானெனப்
படர்விடு வழிமனக் களிப்பவ னுமெனப் பழமையும் புதுமையும் பயிர்ப்பவ னுமென
யிடர்படு பவர்மனங் கிளைத்திடு வோனென இழிவினை யகற்றிநன் மதியளிப் போனெனத்
தொடர்கொளு மகர்களைத் துணைக்கர மோச்சிநற் றுணையென வருவது நமதரு ளேந்தலே.

**வேறு**

தனக்கிணை யிலாத தகைமையும் வீரமுந் தமர்களை விடாத கருணையுஞ் சாந்தமு
மனக்குறை விலாத முறைமையு மாட்சியு மறுநெறி வழாத வருள்பொழி யார்வமும்
பனிக்குடன் படாத விதயமும் வானவன் பணிவினைத் தடாத வொழுக்கமும் வாழ்க்கையுஞ்
சினக்கிடந் தராத செழுமையு நீர்மையுந் தனதிடத் தெனுக்கொ ளெமதரு ளேந்தலே.

**வேறு**

கொடிகுடை சாமரை கோலொடுநீர்க் குடமலர் மாலை நற்றோரணத்தேர்
டடலுடை வாரணம் வாரணங்கூர் அமர்வளை வாளெனும் வேந்துறுப்போ
டிடும்பத்தி ராசனத் தேரியிவ்வா ரியர்மன மூறன்பி னனஞ்செயா
முடிபுனை கோலத்தன் மூதுணர்வோன் முதலவன் வாழியென் றுசிசொலா.

**வேறு**

கோமடந்தைப் புயஞ்சேரக் குலமடந்தை யுடன்சேரக் கோணி லந்த
நாமடந்தை நலங்கூர நலமடைந்த ஜனங்களின களிகொண் டாட
மாமடந்தை யுடன்சேர்ந்திம் மண்மடந்தைத் தனைப்புல்ல மகுடஞ் சேர்த்தி
தாமடைந்தப் பெருந்தகையைத் தனிநாட்டு தலைவனென வாழ்த்திற் றன்றே.

**வேறு**

அறமோங்க வருள்சுரக்க வமுதம் பெய்ய ஆநந்தக் கடலின்வரூஉ மமுதம் போன்று
மறஞ்சாய மருள்வீழ மாண்பு வாழ மாலவன்றன் தகைமையின்வந் தவனி யாள
முறையோங்கு மாநிருபன் ஜார்ஜென் றேத்து மூதறிவின் வழிகொண்ட முதல்வற் கின்றே
இறைபுனைமா முடிசூட்ட விதயங் கூட்டி இன்பவா ழியிற்குளித்த தியம்பற் பாற்றோ ?

**வேறு**

நலமென்னுங் குடைவி ரித்து ஞானச்சா மரையி ரட்டக்
குலமென்னுந் தவிசி ருந்துக் கொற்றமென் வட்டம் வீச
நிலமென்னு மடந்தை வேட்டு நெறியென்னு நாண்மு டித்து
கலையென்னு கயஸ்ரீ தேந்தல் கவின்வரும் பவனி கண்டாய் !

**வேறு**

மன்ன னேயென மாதவ னேயென
பின்ன னேயென மிந்திர னேயெனும்
பன்னுங் காதலின் பார்த்திபன் றன்மையைச்
சொன்னச் சொற்களைச் சொல்லப் பெறுபவோ ?

ஆந்தி கழ்க்கொடை வேந்தனை யார்தமிழ்
பூந்தொ டைக்கொடு போற்றினன் சேடப்பேர்
வாய்ந்த வன்பினவ் வாரிய ணையிட
ஆழ்ந்த ணில்மண்கொண் டோம்பிய வாறென.

**வேறு**

வாழிய வரசன் ஜார்ஜு மேரியென் மாது மக்கள் ;
சூழியச் செழுமைச் செங்கோற் றுணையருள் விளங்கி ; யெங்குந்
தாழிய மறமும் பொய்யு தகாப்பொரு ளனைத்தும் ; வேத
வாழியப் பாமன் வீசு மருட்டிரு நோக்கின் மன்னே !

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ கார்த்திகை௴ : 1911-௵ டிசம்பர்௴ { பகுதி 6

## ஆசை

### DESIRE

புதிய விஷயங்களைக் காணுங்கால், அவைகளை நாம் அடைய வேண்டும் என்று நமது மனத்தில் எழும் உணர்ச்சிக்கு ஆசையென்று பெயர். முன்னரே நாம் அனுபவித்து ஸுகம் கொடுப்பவை என்று உணர்ந்திருந்த விஷயமாக இருந்து, நாம் முயன்றால் அது கிட்டத்தக்கது என்றும் தோன்றிவிட்டால், ஆசை அதிகரித்து நம்மை முயற்சிக்கும்படி தூண்டிவிடும். இதுவும் அல்லாமல் ஒரு விஷயத்தை அனுபவித்தறியாவிடினும், பிறர் அதன் ஸுகம் கொடுக்கும் தன்மையை எடுத்துரைக்கக் கேட்டபொழுது இவ்வாசை ஓங்கி எழும். ஆகவே பொதுவாக ஆசை ஸுகவஸ்துக்களிடம் தானாகவே எழும். அந்த விஷயம் முதலில் ஸுகம் கொடுப்பதாக விருந்து பின்னர் துக்கத்தைக் கொடுப்பதாக இருப்பினும் அதன்மேலேயே கண்மூடித்தனமாக ஆசைபாய்ந்து செல்லும். இத்தகைய விஷயங்களுக்குக் கெட்டவைகள் என்று பெயர். 'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயப்பவைகள்' நல்லவைகளே. இவைகளிடம் ஸாதாரணமாக ஆசை எளிதில் பாய்ந்தோடாது. இவைகளிடம் ஆசை செல்ல வேண்டுமாகில் பகுத்தறிவைத் தீட்டி கல்வியிலும் ஒழுக்கத்திலும் தேர்ச்சி அடைந்தால்தான் முடியும். எப்படி இருப்பினும் எல்லோரிடத்தும் பொதுவாக நன்மையைக் கருதாது ஸுகத்தை மாத்திரம் கருதிக் கதித்தெழும் ஆசை இல்லாமல் போகாது. இதனால்தான் பெரியோர்களுக்குத் துக்கம் உலகில் வருவது. இம்மாதிரியான விஷய ஆசை இல்லாப் பெரியோர்கள் அநேக ஆயிரத்தில் ஒருவர் இங்கு இல்லாமற் போகவில்லை. அவர்கள் நடவடிக்கைகளைப் பின்பற்றித்தான் நாம் எல்லோரும் ஆசையை அடக்க முயல்வது. அத்தகையோர் இல்லை என்ற திடஞானம் நமக்கு வந்துவிட்டால் ஆசையை அடக்க ஒருவரும் முயற்சிக்காது, அஸாத்தியம் என்று மனமழிந்து நிற்பர்.

அதிக ஆசை அதிக நஷ்டம் என்பது ஒரு பழமொழி. இது உலக விஷயங்களைப்பற்றி நிற்கும். மனத்தில் விஷய ஆசை அதிகமாக எழுங்கால் நமது மனம் எருமைமாடு விழுந்து கலக்கும் குட்டையைப்போலாய் விடும். பகுத்தறிவு மழுங்கிவிடும். ஆசைப்படும் விஷயத்தை அடைய வேண்டிய முயற்சிக்கு ஏற்ற மனோபலம் தேஹபலம் முதலியன குன்றும். மேலும் தகாத வழியில் அவஸரத்தில் தொடங்க விஷயம் கைகூடாமல் போய்விடும். ஆதலால் அதிக ஆசை அதிக நஷ்டத்தை ஏற்படுத்துமே ஒழிய லாபத்தைக் கொடுக்காது. மேலும் உலகவிஷய ஆசை வரவரக் குறைந்துகொண்டு வந்தால் நமக்கு ஒருவித ஸுகம் ஏற்படும். மனம் கலங்காதிருக்கும். கிட்டாத விஷயங்களில் ஏற்படும் ஆசை வீண் மனஸ்தாபம்தான். கிட்டக்கூடிய விஷயங்களிலும் அதிக ஆசையிருப்பின், அவை ஒருதரம் தவறினால் மனத்தளர்ச்சி ஏற்பட்டு மறு முயற்சி செய்யவேண்டிய வலிமை குறையும். ஆகவே எப்பொழுதும் ஆசையை மிதமிஞ்ச விடலாகாது. மேலும் அனுபவித்தால் ஆசை குறையும் என்பர் ஒரு சாரார். விஷயம் அநித்யம், அவைகள் பூர்ண ஸுகத்தைத் தரா ; வரும் ஸுகமும், துக்கத்துடன் கலந்தேயிருக்கும் ; கிடைக்கும் முன் கிட்டவில்லையே என்ற துக்கம், கிடைத்தபின் தக்கவேண்டுமே என்ற அச்சம்; அதிகமாகிவிட்டால் வெறுப்பு, ஆகிய இவைகளால் விஷய ஸுகம் பூர்ண ஸுகமில்லை. ஆதலால் இவைகளில் உள்ள ஆசை கேடு விளைப்பதே ஒழிய நல்லது அன்று என்ற பகுத்தறிவோடு விஷய ஸுகங்களை அனுபவித்து வந்தால்தான் ஆசை குறைந்துகொண்டே வரும். இல்லாவிடில் நெய்விட அக்நி வளருவதுபோல, அனுபவத்தால் ஆசையும் மனச்சஞ்சலமும் அதிகரிக்கும். எவ்வளவிருந்தும் ஆசை மேலெழும். இதற்கு யயாதி கதையே தகுந்த உதாரணம். ஆதலால் பகுத்தறிவால் ஆசையைக் குறைக்க முயன்றால் மனம் அடங்க சாந்தி உண்டாகும். இதுபற்றியே தாயுமானவரும் 'ஆசைக்கோர் அளவில்லை * * * ஆதலால் உள்ளதே போதும்நான் நான் எனக்குளறியே ஒன்றைவிட்டொன்று பற்றி பாசாடவிக்குளே விழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்று கதறுகிறார்.

விவேக போதினி

தொ 4] விரோதிகிருது௵ கார்த்திகைமீ [பகுதி 6

## விக்ரஹாராதனமும் கோயில்களும்

## IMAGE WORSHIP AND TEMPLES

அகண்டமாகிய பிரஹ்மபதத்தை அடைய, தொடக்கத்தில் கண்டமாகிய அக்னிஸூர்யன் முதலிய தோற்ற வஸ்துக்கள் மூலமாக ஆராதனை தியானாதிகள் செய்வது வேத ஸம்மதமான வழி என்றும், இதிலிருந்து சப்த ரூபமான வர்ணனைகளைக்கண்ணுக்குத்தோற்றும்படியான உருவங்களாக்கி ஸாதாரணப் பிராஹ்மணர்களும் பூஜை முதலியன செய்து கடைத்தேறவேண்டிய ஏற்பாடுகள் நமது முன்னோர்கள் செய்தார்கள் என்றும் எடுத்துக் காட்டிவிட்டோம். பொதுவாகப் பிராஹ்மணர் முதலிய எல்லா வர்ணத்தாரும் கடைத்தேற உதவி புரியும் பொருட்டு நமது முன்னோர்கள் இதனோடு நிறுத்திவிடாமல், **ஆகம சாஸ்திரங்களை** ஏற்படுத்தித் தனிமையாகப் பூஜை செய்து நிர்வஹிக்க முடியாதவரும் அவ்வாறு செய்து தேர்ந்து வருபவரும் ஆகிய எல்லோரும் ஆராதனை செய்து மேன்மை பெற அவைகள் பிரயோகங்களாகிய கோயில்களையும் அமைத்துவிட்டனர். இம்மாதிரி கோயிலில் ஒவ்வொருவனும் தனிமையாக இவ்வாறு மனத்தைச் சாந்த நிலையில் வைத்துக்கொண்டு, கடவுளுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து வரவேண்டும் என்பதை முன்னே எடுத்துக் கூறியாயிற்று. இங்குக் கோயில் விக்ரஹாராதன மூலமாக இவ்வாறு வேத சாஸ்திர உண்மைகளை வெளிப்படுத்தி ஆராதிப்பவர்கள் எத்தகையராயினும் இவ்வாறு அவர்களைச் சீர்திருத்த முயல்கின்றது என்பதை நன்கு விளக்குவோம்.

'தேஹமே தேவாலயம் அதனுள்ளிருக்கும் ஜீவனே சிவன்' என்று முறையிடுகின்றது **மைத்ரேயோபநிஷத்து**. இந்த ரஹஸ்யத்தை நன்கு விளக்கவே ஏற்பட்டவை கோயில்கள். ஸாதாரணமாக தேஹத்துள்ளிருக்கும் ஆத்மாவே ப்ரஹ்மம் என்று கூறிவிட்டால், இது எல்லோருக்கும் எளிதில் விளங்காது. ஆதலால் தேஹத்தின் அமைப்பைப்போலவே ஆலயம் அமைக்கப்பட்டு, அதிலிருக்கும் தத்வங்களுக்கு ஏற்ப அதனுள் பாகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யோகமார்க்கத்தில் தேர்ந்தவர் த்வஜஸ்தம்பம் முதுகெலும்பினிடம் இருக்கும் ஸுஷும்ந நாடி என்றும், நந்திகேச்வரர் கருடன் முதலிய கடவுள் முன்னிலையில் காணப்படும் பரமபக்தர் விக்ரஹங்கள் மோக்ஷவாயில் காவலாளர் என்றும் கூறப்படும். சமம்(அடக்கம்) விசாரம் (ஆராய்ச்சி) ஸந்தோஷம் (மனக்கிளர்ச்சி) ஸாது ஸங்கம் (நல்லோரிணக்கம்) ஆகிய இவைகளையும், கர்ப்பக்கிரஹத்தில் பிரகாசிக்கும் மூலலிங்கம் நமது தேகத்துள்ளிருக்கும் ஜீவாத்மாபோலக் காணப்பட்டு உண்மையில் ஸாக்ஷியாகவிருக்கும் பரமாத்மாவையும், இந்த லிங்கத்தின் உத்ஸவ விக்ரஹம் ப்ரபஞ்சரூபமாகப் பரிணமித்து அதனுள் அந்தர்யாமிபோல ஒளிரும் பரம்பொருள் உருவத்தையும், இந்த விக்ரஹங்களைச் சுற்றியிருக்கும் பிராகாரங்கள் ஆவரணங்களை (மறைப்பை)யும், இவைகளைச் சுற்றிவருவது இந்த மறைப்புக்களை நீக்கி நம்முள்ளிருக்கும் பரம்பொருளை உள்ளபடி உணருவதையும் குறிக்கும் என்று ஒருவாறு பொருள்படுத்துவர்.

கோயிலுள் நடத்தப்படும் சடங்குகளும் இம்மாதிரியே உட்பொருள்களை அடக்கி உள்ளன. ஆவாஹன மூலலிங்கத்திற்கு ஸ்தாபிதகாலத்திலேயே பெரியோரால் நடத்தப்பட்டிருக்கிறபடி



யால் அது அவ்வளவு நித்யபூஜையில் முக்கியமான பாகமன்று. அபிஷேகம் அலங்காரம் பூஜை முதலியவைகளுக்கு எல்லாம் தனிமையாக ஒவ்வொருவரும் செய்யும் பூஜையில் விஸ்தரித்தது போலப் பொருள்படுத்திக் கொள்ளலாம். நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பின்னர் தீபாராதனையே. ஆதியில் தூபம் காட்டுவது பிரஹ்மத்தினிடம் விளக்கமில்லாத அவ்யக்தம் (மாயை) வருவதுபோலக் காணப்படுதல், தீபம் காட்டுவது பரம்பொருளது ஸ்ருஷ்டிகர்த்திருத்வம், இரண்டு மூன்று முதல் பஞ்சஹாரத்தி வரை ஒன்றாக இருப்பது முறையே த்வைதம் (முடிவு, வழி) திரிபுடி (அறிவு, அறிபவன், அறிபடு பொருள் முதலியன) சதுஷ்டயம் (அந்தஃகரணம் நான்கு படுதல்)பஞ்சகம்(பூதங்களாதல்) முதலிய ஸ்ருஷ்டிக் கிரமத்தையும், அநேக ஹாரத்தி அடுக்கு ரூபமாக இருப்பது பிரபஞ்ச வைசித்திரியத்தையும் அநேகத்வத்தையும், பின்னர் முறையே பஞ்சஹாரத்திமுதல் வரிசையாகக் குறைந்து கும்பஹாரத்திக்கு வருவது ஒடுக்கத்தின் ஒழுங்கைக் காட்டி, அதில் கும்பஹாரத்தி முடிவில் ஜீவனில் எல்லாம் ஒடுங்குவதையும், பின்னர் வரும் கற்பூரஹாரத்தி அந்த ஜீவனும் கற்பூரம் ஜ்யோதியாய் விடுவது போல விக்ரஹத்தால் குறிக்கப்படும் பரம்பொருளாகி விடுவதையும் நன்கு உணர்த்தும். ஸமுத்திரநீர் அலையாகி நுரையாகிக் கிளம்பி, மடிந்து விழுங்கால் நாமரூபமற்று எவ்வாறு மறுபடி கடல் நீராகின்றதோ, அவ்வாறு எல்லாம் பரம்பொருளிடமே தோன்றி, விசித்ர நாமரூபங்களடைந்து, முடிவில் பரம்பொருளில் ஒடுங்கி அதுவே ஆகின்றது; ஆகவே இங்கிருப்பது பரம்பொருளே ஒழிய வேறொன்றுமல்ல ; மற்றவையெல்லாம் வெறும் இடைத்தோற்றமே ஒழிய வேறல்ல என்பதைத் தீபாராதனை வெகு விரிவாக உணர்த்துகிறது. இங்குக் கூறப்பட்டது எங்கும் நடக்கும் தீபாராதனைகளிலும் காணலாம். ஆனால் இவைகளுக்குமேல் அநேக விடங்களில் விசித்திரமான தீபாராதனைகளும் காணப்படும். அவைகள் சிருஷ்டி வைசித்ரியத்தை மிக விரிவாக உணர்த்துகின்றன என்று மதிக்கலாம்.

கோயிலில் அம்பிகை என்றும், தேவகுமாரர் என்றும் குறிக்கப்படும் விக்ரஹங்கள் உண்டு. அம்பிகை என்னப்படுவது பரம்பொருளது மனைவியாக உருவகப்படுத்தி உள்ளது. இல்லறதர்மத்தில் மனைவிமார் எவ்வாறு முற்றிலும் கணவர் ஆதீனமாகவிருந்து, பாதந்திரிகளாக இருக்கின்றார்களோ அதுபோல அம்பிகையால் குறிக்கப்படும் விஷயமும் பரம்பொருளில் முற்றிலும் அடங்கியதே. மூலலிங்கம் பரம நிலையையும், அம்பிகை அதைச்சென்றடையும் ஞானவைராக்கியம், அப்யாஸம்ஆகிய ஸாதனங்களான சக்திகளையும் உணர்த்தும். இவைகளின் முடிவு பரமநிலையாதலால், அம்பிகை எப்பொழுதும் பரம்பொருள் ஆதீனம்என்றும், அம்பிகை ஸஹாயமின்றிப்பரம்பொருளை அணுகமுடியாதென்றும் ஆகமங்கள்கூறும். அம்பிகைக்கு இதனால் **முக்திகாந்தா** (சிவகாமி) என்ற பெயரும் உண்டு. இக்கருத்தை ஒருவாறு நம்போன்ற பாமரருக்கு வெளிப்படுத்தக் கருணை நிறைந்த பெரியோர், கடவுள் புருஷன்; தகப்பன் போல நம்மைத்தண்டித்துச் சீர்திருத்தும் குணம் வாய்ந்தவர்: அம்பிகையோ தாய்போன்ற கருணை நிறைந்தவள், தகப்பனாகிய கடவுளது கடுமையைச் சிபாரிசு மூலமாக மாற்றும் திறனுடையவள்; ஆகவே அவளைத் துதித்துத் திருப்திசெய்துவிட்டால், நமக்கு எளிதில் பரமபதம் கிடைக்கும் என்று உருவகப் படுத்தியிருக்கின்றனர். இந்த மாதிரியான எண்ணம் அறிவுடையோர்க்கு அதிகமாக ருசிக்காது. மேலும் இம்மாதிரியான எண்ணம், 'என்ன பாபத்தைச் செய்துவிட்டபோதிலும் அம்பிகையைத் துதித்துவிட்டால் அவள் கடவுளுக்குச் சிபாரிசைச் செய்து, நம்மை மன்னித்துவிடும்படி செய்வாள். இவ்வாறு முகஸ்துதியால் கடவுளை ஏமாற்றிவிடலாம்' என்ற துர் எண்ணத்தை நாளடைவில் உண்டாக்கி, ஆராதனை செய்தும் பாபம் நம்மைவிட்டு நீங்கா

மலிருக்கும்படி செய்துவிடும். ஆகவே அறிவு முதிர, கடவுளையும், அம்பிகையையும் தகப்பன் தாயாக மதியாது, ஸாதக ஸாதனமாக மதித்தல் வேண்டும். இதற்காகவே கடவுளைப் புருஷன் உருவில்லாது லிங்காகாரமாகச் சிவன்கோயில்களில் வைத்திருக்கிறது. அப்பொழுது கடவுள் குமாரர்கள் ஸாதகவிஷயத்தில் மனம் செலுத்தி, ஸாதனம் செய்வதால் ஏற்படும் ஞானம் முதலிய அரிய ஆத்மகுணங்களைக் குறிப்பார்கள். கோயிலில் ஏற்பட்டிருக்கும் பள்ளியறை ஸாதக விஷயத்தில் மனம் ஊன்றி ஸாதனங்களில் பழகுவதை உணர்த்தும். இவ்வாறு கருதுவதால் கோயிலில் உள்ள லௌகீகப் பழக்கங்கள் நம் மனத்தை விஷயங்களில் சிதறி ஓடவிடாது தகைந்துவிடும். இப்பள்ளியறை விஷயம் ஆகமப்பிரகாரம் பரப்பிரஹ்மம் இரண்டாகத் தோற்றியது முதல் ப்ரபஞ்ச வைசித்ரியம் ஏற்பட்டுவிட்டது என்பதையும், அவைகள் ஒன்று பட்டால்தான் மோக்ஷநிலை கைகூடும் என்பதையும் உணர்த்தும். எப்படி இருப்பினும், கடவுள் அம்பிகை, குமாரர்கள், பள்ளியறை ஆகிய இவைகளை எக்காலத்தும் உலகதர்மரூபமாகக் கருதவே கூடாது. அவ்வாறு கருதுவதால் சிறப்படைய இடமில்லாமல் போவதோடுங்கூட, ஸங்மார்க்கத்திற்கு அது பலமான தடையாகவும் ஏற்படும். ஆகவே கோயிற் சடங்குகளை எல்லாம் முற்கூறிய உட்பொருள் விஷயமாகவே கருதி நாம் பழக முயலவேண்டும்.

கோயிற்சடங்குகளுள் வருஷம் ஒருமுறை நடக்கும் பிரஹ்மோத்ஸவமே மிக முக்கியமானது. இதன் ரஹஸ்யப்பொருளை ஆராயப் புகுவோம். இந்த உத்ஸவ ஆரம்பத்தில் கோயில் த்வஜஸ்தம்பத்தில் ஒரு படம் கட்டி, அதிலிருந்து நீண்ட வால்போலத் துணியைக்கட்டி அந்தப் படத்தை த்வஜஸ்தம்பம் உச்சி வரையில் ஏற்றி, வால் பாகத்திலிருக்கும் துணியைக் கொடி மரத்தைச்சுற்றிக்கட்டுவது வழக்கம். இதற்குக் கொடி ஏற்றம் என்று பெயர். இவ்வாறு கொடி ஏறின நாள் முதல் 10-நாள் கோயிலில் திருவிழாக் கொண்டாடுவது வழக்கம். இத்திருவிழாக் காலங்களில் உத்ஸவ விக்ரஹத்தை நன்றாக அலங்கரித்து, ஒவ்வொரு நாளும் இரண்டு வேளையிலும் வேளைக்கு ஒரு வாஹனமாக ஏற்றி, ஊரைச் சுற்றிக்கொண்டு வருவது வழக்கம். இக்காலங்களில் வாத்ய கோஷம், வேதபாராயண பாணவேடிக்கை முதலியவைகளும், ஸ்வாமி வரும் வீதிகள்தோறும் மகர தோரணங்களும், வீட்டு வாயில்கள் தோறும் இழைக்கோலங்களும் காணப்படும். ஒவ்வொரு வீட்டுவாயிலிலும் மங்களதீபம் ஏற்றப்பட்டு, அருகில் வீட்டு யஜமானர், வரும் ஸ்வாமிக்கு மரியாதை செய்யத் தேங்காய் பழங்கள் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். உத்ஸவம் பத்து நாளும் ஊர் ஜனங்கள் தமக்கு ஏதோ பெரிய சிறப்பு வந்ததாக எண்ணி ஸந்தோஷிப்பார்கள். இவ்வாறு கோயில் கொடி ஏற்றமானது ஊரையே குதூஹலப்படுத்தும். இவைகள் எல்லாம் முற்கூறிய உட்பொருள் விஷயமாக நோக்கில் அருமையான பொருளடக்கியுள்ளனவாக விளங்கும். வாலுடன் கூடிய கொடி த்வஜஸ்தம்பத்தில் ஏறுவது யோகசாஸ்திரப்படி மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தி என்ற பாம்பு கிளம்பி ஸுஷும்ணா நாடி வழியாக ஏறி, மூளையாகிய ஸஹஸ்ரதளத்தாமரையாகிய ஸ்தானத்தில் சேருவதே. இவ்வாறு ஏறிவிட்டால் யோகிக்குப் பரமானந்தப் பிராப்தியாகிய உத்தமமான பிறப்பு (உத்ஸவம்) ஏற்படுகிறது. இதுதான் உத்ஸவம். இதில் மோக்ஷவாயிற் காவலர்கள் என்று கூறப்படும் குணங்களைக் குறிக்கும் நந்தி, கருடன் ஆகிய இவைகளில் பகவான் அலங்கரித்து வெளியேறும் உத்ஸவம் மிகச் சிறந்த பாகம் என்பதன் கருத்து இன்னது என்பது இப்பொழுது வெளியாகும். இவ்வாறு கொஞ்சகாலம் ஆனந்தானுபவமிருந்து, முடிவில் இந்த அனுபவ போதமும் இழந்து, பரம்பொருளாகவே யோகி நிற்பான் என்பதை ஸாதனம் ஸாதகத்தில்



முடிவு பெறுவதைக் குறிக்கும் திருக்கல்யாணம் உணர்த்தும்.

முற்கூறிய பொருள்களுடனே கோயிலை நாம் கவனிக்காவிடினும், ஸ்தூலமாகக் கருதுங்காலும் அது பரமரஹஸ்யத்தைக் காட்டுகின்றது. கோயிலிலிருப்பது வெறும் கல், செம்பு முதலியவைகளாலாகிய விக்ரஹங்கள்தாம். அவைகளை மூலமாகக்கொண்டு கோயில் விஷயங்கள் ஒழுங்காக நடந்தேறுகின்றன. நடவாமலிருப்பின் லிங்கத்துக்கு யாதொரு குறைவுமில்லை. அதை மூலமாகக்கொண்டு ஆத்மகுணங்களை ஸம்பாதிக்க ஏற்பட்டிருக்கும் நமக்கே குறைவு. கடைத்தேற வேதவிதிப்படி ஏற்பட்ட மார்க்கத்தால் நாம் கடைத்தேறவில்லை என்பது நமக்கல்லவோ குறை! ஆகவே கடவுள் ஒருவர் உண்டு அவர் ஸந்நிதான மாத்திரத்தால் காந்தசிலைமுன் இரும்புகள் சேஷ்டிக்கு மாறுபோல எல்லாம் நடந்தேறுகின்றன என்ற வேதவாக்கியத்தை விசாரித்துணர்ந்தவர்களுக்குக் கோயிலில் உள்ள விக்கிரஹத்தால் இந்தப் பரம ரஹஸ்யத்தை நம் முன்னோர் எல்லோருக்கும் எளிதில் நன்றாக உணர்த்த முயன்றிருக்கின்றனர் என்று தோன்றி ஆனந்தமுண்டாக்காமல் போகுமா? மேலும் உத்ஸவாதிகள் நடக்கும் விமரிசைக்குத்தான் என்ன குறைவு; ஆட்டம், பாட்டு, வாத்யம், பாணவேடிக்கை, வேதகோஷம், பக்திபாவசமாக ஒவ்வொருவர் வாய்விட்டு அரற்றும் ஓசையெல்லாம், உயரத்தூக்கி நிறுத்தி எல்லார்கண்களையும் கவர்ந்திழுப்பதாயும் எவனாலும் பார்க்காமல் போய்விடமுடியாததாயும் உள்ள கடவுள் விக்கிரஹத்திற்காகத்தானே ஏற்பட்டிருப்பன! இவ்விஷயத்தில் செலவழிக்கும் பணத்திற்கு உலகவிஷயமான லாபம் ஏதாவது உண்டோ? அப்படியிருப்பினும் காசுக்கு இருகாசு வட்டி பார்க்கும் வணிகன்கூட இந்த விஷயத்தில் தங்குதடையின்றிக் கடவுளுக்காகச் செலவு செய்யத் துணியவில்லையா! மேலும் ஒவ்வொருவருடைய மன நோக்கத்திற்கு ஏற்ப அவர்களைத் திருப்திசெய்து கடவுள் ஸந்நிதானத்திற்கு இழுக்கும் உத்ஸவங்களில் இவ்விதமான உள்ளெண்ணங்கள் ஏன் மனக்குவிவை உண்டாக்காமல் போகும்? இவ்வாறு எல்லாம் கடவுள் விஷயமாக ஒவ்வொருவரும் மனக்குதூஹலத்தோடு அவரவர்கள் மனம் போனபடி செய்யும் கைங்கரியம் என்ற எண்ணம்தான் இப்பிரமாதமான சப்தக் குழப்பங்களுக்கிடையில் நமக்கு மனக்குவிவை உண்டாக்குவது. கோபுரவாயிலில் பகவான் புறப்பட்டு வருங்கால் எல்லோரும் 'ஹர ஹர' வென்று கூவி சிரமேல் கரங்குவிக்குங்கால் இந்தக் குவிவு எல்லோருக்கும் வெளிப்படையாய் விளங்கும். மற்றைய எல்லா ஸமயங்களிலும் இது ஊன்றி விசாரிப்போருக்கு நன்கு விளங்கும். ஆதலால் கடவுள் விஷயத்தில் நிச்சப்தமாகவிருந்து இதர மதஸ்தர்கள்போல உத்ஸவம் கொண்டாடினால்தான் மனக்குவிவு உண்டாகும் என்று அபிப்பிராயப்படும் சில மேதாவிகள் தீர விசாரித்தறியாது அவஸரமாகப் புதிய விஷயங்கள் எல்லாம் நன்மை; பழயவைகள் எல்லாம் குற்றம் என்று மதிக்கும் குணம் வாய்ந்தவரே. மேலும் சாஸ்திரங்களில் ப்ரஹவரிஷ்டன் (உலக ப்ரக்ஞையே அற்று ஸதா ப்ரஹ்மமாகவே நிற்பவன்) நிலையிலிருந்து ஒரு மஹான் இவ்வாறு உலக உபகாரம் செய்யாமற் செய்யமுடியும் என்ற வேதரஹஸ்யத்தை இவ்விக்ரஹங்கள் நன்றாக வெளிப்படுத்தும். என்ன கஷ்ட நிலைகள் வந்தபோதிலும், எவ்வளவு மஹான்கள் போய்விட்டபோதிலும், கோயில் காரியங்கள் நிலைபெற்று நெடுநாள் விடாது நடந்துவருவதும், விக்கிரஹங்கள் மாறாது ஒரே மாதிரி நிலைத்திருப்பதும் கடவுளது அழிவற்ற தன்மையை நன்றாகக்குறிக்கும். ஆகவே கோயில் விஷயங்களை ஸ்தூலமாகக் கருதினும் ஆஸ்திகன் பிழைத்துத் தேற வழியிருக்கின்றது.

இவ்வளவு சிறந்த வழிபாடாயினும் கோயில் ஆராதனத்தில் படுகுழி ஒன்று உண்டு. அது காம்ய ஆராதனம் என்பதே. தொடங்குங்கால் உலக ஸுகம் வேண்டும் என்றும், அது கைகூடினால் சிற்சில கைங்கரியம் செய்கிறேன் என்றும் வேண்டிக்கொண்டு காம்யமாக ஆராதனை செய்யலாம். ஆனால் இதிலேயே நின்றுவிடுவதுதான் வழிபடுவனைக் குங்குமம்

சுமக்கும் கழுதையாக்கி விடுவது. கோயிலுக்குப் போயும் இவன் கடைத்தேருமல் போய்விடுகிறுன். இதென்ன கஷ்டம்! ராமேச்வரம் போயும் சனைச்சரன் விடவில்லையே! என்று தோன்றும். இவ்வளவுதாளு? 'அரச மரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்தது' என்ற கதையாக, ஆராதிக்கும் தேவதையும் வர வர இம்மாதிரி பக்தர்களால் ஒளி சக்தி முதலியவைகளில் மழுங்கி ஸாத்வீக தேவதா நிலையிலிருந்து, ராஜஸ தாமஸ தேவதைகளாகி, முடிவில் க்ஷுத்ர தேவதையுமாகிவிடும். அந்தக் கோயில் பெரியோர் சாந்தமாக அணுகக்கூடாத இடமும் ஆகிவிடும். ஆதலால்தான், 'தொழுதவன் தெய்வத்தைக் கெடுத்தான்' என்ற பழமொழி, 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்பவைகளோடு கூடச்சேர்ந்து வழங்கி வருகிறது. ஸாத்வீக தேவதையாகிய மகா விஷ்ணுவான திருப்பதி ஸ்ரீநிவாஸன் கேவலம் ஆவேசமாக வரும் ஐயம்பிடாரி போலானதையும், ராமபக்தசிகாமணியாகி அவரிடம் ஈடுபட்டுத்தனியிருப்பிழந்த ஹனுமார் குட்டிச்சாத்தான் போல உபாஸகர்கள் கையிலகப்பட்டுத்தொழிற்படுவதையும், பரமஞானியாகிய பரப்ரஹ்மமான ஸாமிநாதன் என்னப்படும் பாலஸுப்ரமணியக் கடவுள், க்ஷுத்ர தேவதையைப்போல பிரார்த்தனை பெறத் தயாயிருப்பதையும் கண்ணுற்ருல் எந்தப்பக்தர் மனம்தான் வருந்தாது? இவ்வாருனவெல்லாம் கும்பிடப்போனவன் குடியைக்கெடுத்ததால்தான் ஏற்பட்டது. இதனுல் இந்தத் தேவதைகளை அன்புடன் ஆராதிக்கும் பக்தர்களுக்கு யாதொரு குறைவுமில்லை. இந்த மூர்த்தங்களுக்கு ஒரு இழிவும் இல்லை. முடிவாக ஏற்பட்டதென்னவென்ருல், அப்யாஸ நிலையிலிருக்கும் அன்பர்கள் இந்தக்காம்ய விடங்களை அணுகி இந்தத்தேவதைகளைச் சாந்தமாக ஆராதிக்கவும் முடியாது; இந்தச் சிறந்த தேவதைகளிடமிருந்து காம்யமாக ஆராதிப்பவர்களுக்கு யாதொரு சிறப்பும் வாராது. இவ்வளவுதான்! ஆதலால் கோயில்ஆராதனத்தில் காம்ய நிலையைச் சீக்கிரம் விட்டு நீங்கவேண்டும், இவ்வாறு உண்மையாகக் கடவுளை வழிபட்டுத் தேறுவதற்குத்தான் ஔவை 'கோயிலில்லாஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் கூறியிருக்கிருள்.

## டில்லிமாநகரமும்: சத்ரபதியின் தர்பாரும்

## DELHI & THE EMPEROR'S DURBAR

காண்டவப்ரஸ்தமென்று புகழ்மிகுந்த காட்டருகே தருமர், தாம் அரசு செலுத்தப் பெரியோரது அனுமதியின் பேரில் அஸ்தினுபுரத்திற்கு அருகு 50 மைல் தூரத்திற்குள் கட்டியது **இந்திரப்ரஸ்தம்.** இதுவே தருமர் இருந்த இடம். குருக்ஷேத்ர நகரம். அருகு இருந்த காண்டவத்தை அக்னிக்கு அர்ச்சுனன் இரையாக்கி நகரத்தை விஸ்தரித்தனன். பாரதயுத்த முடிவில் அஸ்தினுபுரமும் இந்திரப்ரஸ்தமும் ஒன்ருய் மயங்கி இருக்கலாம் என்று தோன்றுகிறது. இதற்கு ஆதாரங்களில்லை. இந்நகரமே முன் இந்திய நாட்டில் **புரோத்தம**மென்று கூறப்பட்டது. இந்நகர்க்குச் சக்ரபுரி, சக்ரப்ரஸ்தம், சதாக்ரதுப்ரஸ்தம், காண்டவப்ரஸ்தம் என்னும் வேறு அபிதானங்களுண்டு. அவை இந்திரப்ரஸ்தமென்னும் பொருளேபடும். பாண்டவர் வம்சத்தினர்க்குப் பின் இந்நகரிலே யாதவர் மன்னன் அனிருத்தன் மகன் வைரன் சக்கரவர்த்தியாக ஏற்படுத்தப்பட்டனன். மற்றும் இந்நகர் சரிதை இதிகாச புராணங்களிலிருந்து இதற்கு மேல் வெளிப்படையாக இல்லை. (பௌத்த அரசர் காலத்து க்ஷீணிக்காவிடினும், ஓங்கித் தலை நகரமாக விளங்கியதாகத் தெரியவில்லை. அவர் காலத்து முக்கிய நகரம் பாடலீபுரம் என்னும் பாலிபோத்திரமென்பது.)

அனிருத்தன் காலத்திலிருந்து 11-வது நூற்ருண்டு வரை நம்மால் ஒன்றும் இப்புரத்தைப் பற்றி சொல்லமுடியாது. 11-வது நூற்ருண்டில், தோமரவம்சத்து **அனங்கபாலனென்னும்** ராஜபுத்ரவீரன் "செய்ய கோட்டை"யைக் கட்டினுன். இது இப்பொழுது குடுப்மினர் இருக்குமிடத்திருந்தது. கோட்டையோடு ஒரு நகருங் கட்டினன். இவனே சந்த்ரகுப்த விக்ரமாதித்யனுடைய புகழ்பெற்ற அயசிலா சாதனத்தை வட



மதுரையிலிருந்து பெயர்த்துக் கோயிற்கலங்காரமாக இங்கு வைத்ததாகத் தெரியவருகிறது. கி. பி. 1052. (இக்கோயில்பொருள்களைக்கொண்டு ஆப்கானியர் மஸூதி கட்டினர்.) அவ்வரசன் இந்த ஸ்தூபியைக்கொண்டு வரப்போகும்பொழுது ஓர் பார்ப்பனன், "அதன் அடிவாஸுகித் தலைவரையுள்ளமையால் அந்நகர் நீடித்திருக்கும் நிலைமையது" என்று கூறினுன். அரசனும் தோண்டியபொழுது அதனடியிலிருந்து வாஸுகியின் தலையிலிருந்து ரக்தம்வரப் பயந்துஅதை மற்றும் இருந்த இடமே வைக்கமுடியாது திகைத்தனன். (இதுவே அவனிராஜ்ய மழிவிற்குங் காரணமென்பர்). **டிஹ்ல**மாக இருந்த ஸ்தூபியின் சம்பந்தத்தால் கட்டிய நகர்க்கு **டிஹ்லி** எனப் பெயர் வந்ததென்றேபர். இது பிற்காலத்து மதியூகக்கதையென்றே சொல்லவேண்டும். ஸாதாரணமாக ஹிந்துக்களெல்லாம் டில்லி என்பரே யல்லாது டிஹ்லி என்று சொல்வாரில்லை. டிஹ்லி எனப் பெயர்வந்தது மகமதியர் அரசாண்ட காலத்தில்தான். **டில்** என்னும் அடியைக்கொண்டு **டில்லி** எனப் பெயர் வந்திருக்கவேண்டும். **டில்** எனில் பெருமை எனப் பொருள்படும். பெருமைமிக்க நகரம் டில்லி என ஆயிற்று. இந்திர பிரஸ்தத்தைப் புரோத்தமம் என்றே பாரதத்திலும் கூறப்பட்டுள்ளது. அவ்விந்திரப்ரஸ்தமே இப்பொழுது **டில்லி** என வழங்கப்பெற்று வருவதும்.

அநங்கபாலன் காலத்திற்குப்பின் ஆஜமீளத் தலைவன் விசாலதேவன் தலைநகராய் விளங்கியது. அவன் பேரன், பெரும்பெயரும் கீர்த்தியும்பெற்ற பிருத்விராயின் காலத்து இந்நகரம் விசாலிக்கப்பட்டு சுற்றும் புறச்சுவர்கள் எழுப்பப்பட்டன. இன்னமும் குடுப்மினர் அருகும் காணலாம். அவன் காலத்து மஹம்மதியரை எதிர்த்துப் பாஞ்சால நாட்டிற்கும் குருநாட்டிற்கும் டில்லியைத் தலை நகராக ஏற்படுத்தினுன். மஹம்மத் கோரியினுல் பிருத்விராய் துரத்தப்பட்டபின் இப்பெரும்புரம் மஹம்மதியர் கைக்குள் விழுந்தது.

அவரிடம் பலநூற்ருண்டு நிலைத்திருந்தது. குட்புடீன் காலத்தே இங்கே குடுப்மினர் எழுப்பப்பட்டது. அவனே தன் பெயரால் விளங்கும் பெரிய மஸூதியையும் கட்டியது. அதன்பின் சில வலியற்ருர்களால் ஆளப்பட்டு **ஆல்டமஷ், பால்பன்** என்பவர்களது தலை நகராய் இருந்தகாலத்து மஹம்மதிய நகராய் விளங்கி, ஹிந்துக்களின் ஹிம்ஸைக்கே புரமாக விளங்கியது. அக்காலத்து மொகலாயர் படையெழுச்சியால் ஓடிவந்த அரச கூட்டங்கள் அவன் ஸபையில் அனேகமிருந்தன. அவர்களின் பெயர்களைக்கொண்டே டில்லியின் தெருக்களின் பெயரெல்லாம் அமைக்கப்பட்டது. இதை யின்னமும் காணலாம். இவ்வரசன் வம்சத்திற்குப்பின் **கில்ஜீ** வம்சத்தினர் டில்லியைக் கைக்கொண்டனர். (1288-கி. பி.) அப்பொழுது டில்லிச்சுவரெல்லாம் படைகளின் வாயில் பட்டுத் தத்தளித்தது. இங்தச்சமயத்தில் **ஜிலாலுடீன் கில்ஜி** தன்னகருள் மஹம்மதியராகிய மொகலாயர்க்காக ஓர் தனியிடம் உண்டாக்கினுன். இதற்கு மொகலாய புரமென்று பெயர். இதை இப்பொழுதுங் காணலாம். இவன் பின்வந்த **அல்லா உடீன்** டில்லியை மொகலாயர் நாசஞ் செய்வதைத் தடுத்தான். எதிர்த்தவரைப் பலமுறையும் தோல்வியடையச் செய்தனன். இந்த அரசன் காலத்தில்தான் **மாலிக்காபர்** தக்ஷிணம் படை எடுத்துக் கொள்ளையிட்டது. அவன் கொண்டுவந்த பொருள் இராஜாங்க பொக்கிஷத்தில் சேர்ந்தும் பிரயோஜனப்படாமலே அழிந்து போய்விட்டது. பின் **காபர்** தன் தலைவனைக் கொன்று நகரைக் கைக்கொள்ள முயன்று **குஸ்ரு** என்னும் கீழ்ம்மகன் கைக்கிரையானுன். இவனைத் **தோக்லக்** வம்சத்தார் கொலை செய்து டில்லி நகரைப் பற்றிக் கொண்டனர். இவ்வம்சத்து அரசனுகிய **மஹமத பின் தோக்லக்** என்னும் பித்துக்கொண்ட அரசனுல் தலை நகரம் டில்லியிலிருந்து தோக்லக்பாத்திற்கு மாற்ற மும்முறை முயற்சி செய்யப்படினும், **டேன்ஜியர்** நகரத்து **இன்பதூதன்** என்னும் தேசாசரனுல் காணப்பட்டு இந்திய

னாட்டு பெருநகர் என்று புகழப்பெற்றது. அத்தேசாசரன் இந்நகரத்தில் **பிரியதாஸி** என்னும் அசோகசக்கரவர்த்தியினால் எழுப்பப்பட்ட புத்த நிலையாகிய அசோக ஸ்தூபியைப் பற்றிப் புகழ்ந்து பேசியது இந்தியாது பெருமையையே குறிக்கும்.

இவ்வம்சத்தினர்க்குப்பின் பிரோஜ்ஷா ராஜ்யமாண்ட காலத்துத் தன் பின்னோர் செய்த பாபத்திற்குப் பிராயாஸ்சித்தமாகப் பிராஜஷபாத் என்னும் உபநகரமுண்டாக்கியதன்றித் தர்மஸம்ஸ்தாபனார்த்தஞ் செய்து, முன் மஹமதியர் செய்த அழிவை ஒழித்து டில்லியைப் புதிப்பித்து, தனதுராஜ்ய நிர்மாணங்களைப் பிராஜஷபாத் மஸூதியில் சாஸனஞ் செய்வித்தனன். இம்மஹானுக்குப் பின் வலியற்றோர் அரசாண்டு வந்தனர். அக்காலத்து **தாமர்லேன்** என்னும் மேற்றிசை கொள்ளைக்காரன் ஊரைக் கவர்ந்து, ரக்தப்ரவாஹத்தில் மிதக்கச் செய்ததன்றி, தான் செய்த பெருஞ்செயற்குத் தெய்வாராதனம் செய்தனன் எனத் தெரியவருகிறது. இக்கொள்ளையே மொகலாயர் டில்லியில் முதல் குடிகொள்ள அடிகொடுத்தது. தாமர்லேன் கொள்ளைக்குப்பின் இரண்டுமாதம் அராஜகம் டில்லியில் விளங்கியது. ஊரைவிட்ட ஜனங்களும் மெதுவாக மற்றும் குடியேற, ஜனமற்ற நகரம் மற்றும் ஜனநிறைந்தது. இதில் மிகவிளங்கிய பாகத்திற்கே புதிய நகரம் என்று பெயர்.

இதற்குப்பின் ஸய்யத் வம்சமும் லோடி வம்சத்தாரும் ராஜ்யத் தலைமையைக் கண்டதும், தலை நகரம் டில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றப்படினும், புராதன நகரம் தனது பெருமையையும் பெயரையும் ஒழிக்கவில்லை. இவ்வம்சத்தினர்க்குப் பின் தாமர்லேன் வம்சத்து மொகலாயன் டில்லியைக் கைப்பற்றிக்கொண்டனன். அவன் மகன் ஹூமாயூன் டில்லியையே தலைநகராகப் பாவித்தனன். அவன் இந்திரப்ரஸ்தமிருந்த இடத்து **புரான கில்லம்**(பழங்கோட்டை) என்னும் கோட்டையைக் கட்டினான். ஹூமாயூனைத் துரத்தி டில்லியைக் கைப்பற்றிய ஷர்ஷா கோட்டையின் அகச்சுவர்களையும் புறச்சுவரையும் புதிப்பித்துத் தடப்படுத்தினன். அவன் கட்டிய கோட்டைவழியில் ஒன்றாகிய **லால்தார்வாஜ்** என்பதை இன்னமும் காணலாம். அவன் மகன் **ஸலிம் கரம்** என்னும் உபபுரியைக் கட்டினான். ஆக்பரும் ஜீஹாங்கீரும் ஆண்டகாலத்து தமது காலத்தை முழுதும் ஆக்ராவிலே செலவிட்டனர். ஆக்பர்காலத்து டில்லி நகரம் ஆக்ராவைக் காட்டிலும் ஓங்கவில்லை என்பது “ **எனி ஆக்பாரி** ” என்னும் புத்தகத்திலிருந்து வெளிப்படும். ஜீஹாங்கீர் மகன் ஷாஜஹான் டில்லியையே தலைநகராகக் கொண்டாடினான். நகரமுழுதையும் புதுப்பித்தனன். அந்நகரமே ஸஜஹானபாத் என்று சொல்லப்படுவது. பிரோஜஷபாத்தும், ஷர்ஷா கட்டிய உபபுரமும் கிலமாயிருந்தமையால் அவற்றின் பொருளைக்கொண்டு ஊரின் கொத்தளங்களையும், கோட்டைவரிசைகளையும், உறுப்புகளையும் சீர்திருத்தி, நகரைப் பெரிதாகச் செய்து, பதினோரடி அகலமுள்ள சுவரால் மதிலுங் கட்டினன். ஜம்நா மஸூதியும் இவனே கட்டியது. இந்த ஷாஜஹானபாத்தையே சௌக்கியத்தின்பொருட்டாக ஜாஹனபாத் என்பார். இதுவே இப்பொழுது டில்லிமா நகரமாக விளங்குவதும். இப்புரத்தை முற்றும் கட்டுவதற்குள் ஷாஜஹானை அவனது கொடிய மகன் சிறையிட தான் கட்டிய நகரைக் காணாது இறந்தான். இதன்பின் சிறிது காலந் தவிர முற்றும் இதுவே மொகலாயரது தலைநகரமாக விளங்கியது. **அவுரங்கஜீப்** காலத்து கஷ்டமுண்டு, பின்வந்த வலியற்றோரால் முற்றுகையுண்டு, **சிவாஜீயின்** கோபத்திற்கு மெலிந்தும், மஹாராஷ்டிரத்தாரது கோளுக்கு நடுங்கியும் பெரியபுத்தகளமாக விளங்கியும், **லார்ட் லேக்கால்** 1803-வருஷம் செப்டம்பர்மீ 11உ **ஆங்கிலேய ராஜ்யத்தின் போஷணையின் கீழ் வந்தது.**

பிரிடிஷ் ராஜாங்க போஷணையிலிருப்பினும் மொகலாய அரசர்களது பெயராலேயே ராஜ்யம் நடத்தப்பட்டு வந்தது. மொகலாய வம்சத்துக்



கடைசியரசனும், அரசி விக்டோரியா அம்மையும் ஒரே வருஷத்தில்தான் பட்டமடைந்தனர். சிப்பாய் கலகத்தில் மற்றும் டில்லி அமளி கும்ளியாகித் தத்தளித்தது. 1857-ம் வருஷம் செப்டம்பர் மாதம் **ஈஸ்டிந்தியா கும்பெனி**யாரது ராணுவத்தாரால் கொள்ளப்பட்டு, அடுத்த வருஷம், ஆங்கில அரசாட்சியின் கீழ்க் கொள்ளப்பட்டது. இதற்குள் முழு இந்தியநாடும் ஆங்கில ராஜ்யத்தின் கீழ் வந்துவிட்டது. அவ்வருஷமே ராணி விக்டோரியாவினது இந்தியா நாட்டரசர்களுக்கும் ஜனங்களுக்கும் விடுத்த அறிக்கைப் பத்திரம் அவ்விடமே படிக்கப்பட்டது. 1876-ம் வருஷம் அரசர், ஏழாவது எட்வர்டார் டில்லியில் விஜயம் செய்தார். 1877-ம் வருஷம் அரசி அம்மை விக்டோரியா இந்திய நாட்டரசியென்னும் பெயரை வஹித்தனர். அவர் பின் எட்வர்டார் ராஜ்ய நிர்வாஹத்தைப் பெற்றுக்கொண்டதும் டில்லிமா நகரத்திலேயே அப்பொழுது ராஜப்ரதிநிதியாக இருந்த கர்ஸன் ப்ரபுவால் தர்பார் நடத்தப் பெற்றது. நமது அரசர் எட்வர்டார் சென்ற வருஷம் தேகவியோகமடைந்ததும், தான் 1905 வருஷத்தில் கண்டநாட்டில் தானே முடிபுனைய நினைத்திருந்த தேவியை மணக்க வருமன்னன் ஜார்ஜியாரது முடிபுனையும் நகராக விளங்கும் டில்லிநகரத்து வைபவமிற்றெனக் கூறப்பாலதோ ?

இந்திய நாட்டின் விருத்தியோடு விருத்தியும், தேய்வோடு தேய்வும் அடைந்து, பல அரசர் முடிபுனைந்த நகராகி, மதங்கள் பலவற்றின் இராஜ்யமாக விளங்கிய இந்த்ரப்ரஸ்தம் இந்திய நாட்டின் முகம்போல் விளங்கி, முடிபுனையத்தக்க நகராகி இருக்க அங்கு நமது ஐயன் அரசன் ஐந்தாவது ஜார்ஜியார் இந்திய நாட்டின் திருமுடியை முடிப்பது எல்லார் மனத்தும் மிக்க ஆநந்தத்தை யூட்டாதிருக்குமா ?

அவ்விடஞ் செல்வார் முடிபுனை கோலங்கண்டு தமது மனத்தை மன்னன்பால் ஈடு செய்வதன்றி ஊரின் அழகாலும்,வளப்பத்தினாலும், பெருமையாலும் விருத்தாந்தங்களாலும் மனத்தில் உத்பவிக்கப்படும் ஆவற்கு உட்பட்டுச் சென்றங்கு காணவேண்டிய விஷயங்கள் பல உள ; அவை வருமாறு:—

1. **இந்திரப்ரஸ்த ஸ்தானம்.**—இதற்கு இப்பொழுது இந்திரபதம் என்று பெயர். புரான கில்லம் என்றும் பெயர். இப்பொழுதிய நகரத்திற்குத் தெற்கு இரண்டுமைல் தூரத்திலிருப்பது. இது காண்டவப்ரஸ்தத்திலிருப்பது. இது டில்லி மாநகரத்து ஆதிபீடம். ஹிந்து அரசர் காலத்து **புரோத்தமம்** என்னும் பெயரோடு சிறப்புற்று விளங்கியது. இவ்விடமே தருமரால் ராஜஸூயயாகம் இயற்றப்பட்டது. (ஷர்ஷா ஆண்ட காலத்திற்கு இதன் பெயரை ஷர்கர் என்னும் பெயரால் மாற்ற முயற்சித்தான்.) இவ்விடத்தினருகு நிகமபோதகட்டமென்னும் பெருஞ்சிவ க்ஷேத்ரமிருக்கின்றது. இங்கே சிவபிரான் ஒழிந்த வேதங்களை மீண்டும் வரச்செய்தனர். இப்புரான கில்லத்தில் ஸோமவார அமாவாசைகளில் பெருஞ்சந்தை கூடும். இல்லத்தருகே **பானிபட்** என்னும் சரித்ரப் பெயர்பற்ற இடமிருக்கின்றது. அதனருகு பகவதம், சோனபதம் திலபதம் என்னும் இடங்கள் இருக்கின்றன. இவ்விடம் யாவரும் காணவேண்டியது. இந்தியாவின் ஆதிநகரம்.

2. **பிரோஜஷாபாத்.**—டில்லிக்குத் தென் அரைமயிலுக்குள் யமுனைக்கரையில் இருப்பது. இந்தப் பாகம் பிரோஜஷாவால் கட்டப்பட்டது. இப்பாகத்தில் ஸீதாராம பஜாரின முனையில் **ராஜீயா ஸுல்டானா**வின் ஸமாதி இருக்கின்றது. இந்தியாவின் முதல் அரசியின் கல்லறையே அது. அந்நாள்களில் குசுக்-யி-பிராஜ்ஷா என்று பெயர். இவ்விடம் பெரும் ரணரங்கமாக மாறி கிலமானதும் இதன் பொருள்களைக்கொண்டே ஷாஜஹான் புதுநகரங் கட்டியது. இந்நகரத்து வடப்பக்கத்து தலைவாயிலே லால்தர் வாஜா என்னும் பெயர்கொண்டது. இதற்குத் தெற்கில் இப்பொழுது கைதிகளை யிடும் ஜெயிலே

பரீட்கான் கட்டிய பெருஞ்சத்திரமாகும். இதற்கருகே பெயர்பெற்ற யமுனாமஸூதி (ஜும்மாமஸ்ஜித்) பிராஜஷாவால் கட்டப்பட்டது. இது சித்ரம் நிறைந்து அழகு பொலிந்து விளங்குவது. இந்தப் பாகத்திலேதான் அசோகனது கல்ஸ்தம்பம் இருக்கின்றது. இதைப்பொதுஜனங்கள் லாத் என்பர். இந்த ஸ்தம்பம் தோப்ராவிலிருந்து 42 சகட்டையுடைய வண்டியில் இலவம்பஞ்சமளியில் சேமித்து 5000 பேர்களால் இழுக்கப்பட்டு இந்த இடத்தில் முன் அது இருந்த இடத்தில் இருந்தவாறு பதிப்பிக்கப்பட்டது. இது நிலையில் நாட்டப்பட்ட விமரிசையைக் கண்ட விசித்திரத்தை, ஜியாயுத்தின் பர்ணீ, அவர் எழுதிய அக்காலத்து சரித்ரத்தில் விவரித்துரைத்திருக்கின்றனர்.

3. **புரான கில்லத்தருகாமை.**—புரான கில்லத்தருகாமையில் பல மொகலாய அரசரது மஸூதிகள் இருக்கின்றன. அவையன்றி, ஜந்த்ரமந்திரமென்னும் ஜயபுரத்தரசரால் கட்டப்பட்ட வான சாஸ்திரசாலை யிருக்கின்றது. ஜாட்படையால் மிக நாசமடைந்திருப்பினும் மத்யரேகா பரிமாண நிலை, நக்ஷத்ர கலை விபாகஞ் செய்யும் அளவைகளையுங் குறிப்பிக்கும் ஸ்படிக கமான் கொண்ட ககோளபரீட்சா சாலைகளிருக்கின்றன.

4. **ஜஹன்பநா.**—இவ்விடத்திற் கருகாமை டைமூர் கொள்ளையிட்ட ஸிரிக்கோட்டையிருக்கின்றது. ஷர்ஷாவின் மஸூதியும் இதனருகே இருப்பது. ஹுமாயூன் கீழ்வீழ்ந்திறந்த மாடியும் இங்கே இருக்கின்றது. இப்பநாவினுள் இருக்கும் பத்மண்டபயிலிருந்து ஊரின் அழகை நன்கு காணலாம். டைமூர் கொள்ளையிட்டபின் தன் படைத்தலைவரோடு கலந்த இடமாகிய ஹாஜ்காஸ் என்னும் இடம் பநாவின் மேற்பால் இரண்டு மைல் தூரத்தது.

5. **கில-ராய்-பிதரா.**—அநங்கபாலனும், பிருத்விராயும், அவன் வம்சத்தினரும் அரசாண்ட இடம். இங்கு அநேக கோட்டைகளிருக்கின்றன. அதன்றி அயஸ்தம்பம் ஒன்று இங்கு மிகு பிரஸித்தியாக விளங்கும். இந்த ஸ்தம்பத்தில்தான் சந்திரகுப்த விக்ரமாதித்யனது சாஸனம் செதுக்கப்பட்டிருப்பது. இதன் உயரம் அடிவாரம் உள்ளிட்டு $23\frac{3}{4}$ அடி. இதன் பருமன் அடியில் 164 அங்குலமும், மேற்பாங்கில் 12 அங்குல பரிமாணமாகும். இதன் வயது கிட்டத்தட்ட 1500 வருஷங்களுக்கதிகம். கொஞ்சமும் களிம்படையாது உலகத்தை மயக்குவதன்றி உலோஹ தத்துவ சாஸ்திரியின் மனத்தையும் வெருட்டி விளங்குகிறது. இது இந்தியரது மதியூகத்தையும் ரஸாயன சாஸ்திரப் பயிற்சியையும் குறிப்பிக்கும். யாவரும் பார்க்கவேண்டிய காட்சி. உலகத்தில் எங்கும் இரும்பை தட்டி நீட்ட முடியாத காலத்து பெருந்தொகுதியான இரும்பையடித்து 23 அடி நீட்டி என்றைக்கும் களிம்படையாது, கலப்பில்லா சுத்த இரும்பாக விளங்க வைத்த பெரியோரின் செயலைக் கண்டெந்தக் கைதான் தலைமேல் குவியாது. இது நிற்க. இப்பாகத்திலே ஜைனரது கைப்பழக்கமும் மனப்பழக்கமும் மிகுதியாக விளங்குவது. இவ்விடத்திலேதான் பிருத்விராயனால் கட்டப்பட்ட ஆலயமும் இருக்கின்றது.

இவ்விரும்புத்தூணுக் கருகாமையே மஹம்மதிய அரசன் குட்புடீன் கட்டிவைத்ததாகச் சொல்லப்படும் ஜய ஸ்தம்பமாகிய குடுப்மினார் லோகப்பிரஸித்தியாக விளங்குவது. இதையும் இரும்புத்தூணையும் புகழாதார் யாருமில்லை. இக்குடுப்மினார் மனத்தை யிழுத்துத் தன்பால் கொள்ளும் தன்மை வாய்ந்தது. ஓவிய சிறப்பிற்கும், கற்பனைப் பெருமைக்கும், சிற்ப நுட்பத்திற்கும் பெயர்போனது. இதற்கிணை இனி இவ்வுலகில் கிடையாத பாக்கியம் பெற்றது. இந்தியாவின் த்வஜஸ்தம்பம்போல் விளங்குவது. இதைக் காணாதார் நேத்ரானந்தம்பெற்றார் இல்லை என்றே சொல்லவேண்டியது. இதின் இயற்றுகையில் பல நாட்டுக் கைத்தொழில் கலந்தாற் போலக் காணினும் சைநரது கைத்திறமும் ஹிந்துக்களின் கைத்திறமுமே மேலோங்கி நிற்கும். இது பிரத்விராயால் கட்டப்பட்ட ஜயஸ்தம்பமாகியது, குட்புடீனால் கவரப்பட்டு அவன் பெயரால் விளங்கியதாகவும் கொள்கையுண்டு. அதற்கு ஆதாரங்கள் பல.

குடுப்மினாருக் கருகாமையிலிருக்கும் குடுப் மஸூதியும் நேத்ரோத்ஸவமென்றே சொல்லவேண்டும். இதன் பக்கத்திலே மஹ்ராளி என்னும் சந்தைகூடும் இடம் இருக்கின்றது.

6. **டோக்லகபாத்.**—இதில் தகப்பனைக் கொன்று அவனைப் புதைத்த இடத்தில் அழகில் சிறக்கக்கட்டிய டாக்லக்கோரி மனத்திற்கினியது. இது மஹம்மத் பின் டோக்லாக் வேலை. அதற்கெதிரில் இருக்கும் ஏரியில் பிரதிபலித்துத் தேஜோமயமாக விளங்குந்தன்மை வாய்ந்தது. இதற்கிரண்டு மைல்களுக்கப்பால் பெரிய கற்குளமொன்றுண்டு.

7. **ஸாஜஹானபாத்.**—இவ்விடத்தில் தான் இக்காலத்திய கட்டடங்களெல்லாம் இருப்பது. இதனுள் ஜும்மாமஸூதியும் ஜைனர்கோயிலும் இருக்கின்றன. முற்றுகை யிடமும் ராணுவரங்கமு மிங்குதான். இவற்றின் அருகே முற்றுகையிற் சாய்ந்த பகைவரை நாசஞ்செய்து நாசமடைந்த ஒன்பதுபடைவீரர்களின் ஞாபகச்சின்னமாக ஓர்பலகை பதிக்கப்பட்டிருக்கிறது.

இது முதலாய பல ஆச்சரியமான விஷயங்களை யூட்டக்கூடியதும், தன்னோடே சரித்திரம் வாழப்பெற்றதும் ஆகிய இடங்கள் டில்லி நகரத்திற் பல. 4000 வருஷங்களுக்கு முன்னிருந்து தலைநகராக வாழ்ந்த நகரத்தில் இத்தகையன இருப்பது அசாத்தியமன்று. பல ராஜ்யத்தின் வரிசையைக் கண்டும், பல மதங்களின் தலைமையைக் கண்டும், தன் சரித்திரமுங் குன்றாது சுக துக்கங்களை அநுபவித்து வந்திருப்பினும் அரசர்களுக்கு முடிபுனையும் இடமாகவே எப்பொழுதும் இருந்ததன்றி நமது அரசன் பல்லாயிரம் மைல் தூரத்திலிருந்து வந்து, நமது மனத்தை உயர்த்தவேண்டிய எண்ணங்கொண்டு நம்மேல், முன்பு சென்னையில் விஜயஞ்செய்த காலத்துக் காட்டிய கருணைக்கடலின் அலை வீசி, அதனடுவே சக்ரவர்த்தித் திருத்தன்மையாகிய பகலவன் உதயஞ்செய்யுங்காலத்து நமது ஹ்ருதயத்தாமரை மலர்ந்து பக்தியென்னுந் தேன் கசிய சத்ரபதியின் மனமாகிய வண்டு அதன் இனிமையை அனுபவியாதிருக்க முடியாது. இது இந்தியநாடு செய்த பாக்கியமே! அரசனே இங்குவந்து முடிபுனைந்தது இன்றே அல்லவா? தன்னூர் உறவு யாவும்விட்டு இராஜ்யதர்மத்தினால் தூண்டப்பட்டு முடிபுனைய இங்கு வந்த மஹானது அன்பிற்கு அளவுமுண்டோ?



# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 9. ஐயமிட்டுண்

**பி**ச்சையிட்டுப் பின்னர் சாப்பிடு என்பது இதன் பொருள். இதை விரிவாகக்கூறில் ஒருவனுக்கு எவ்வளவுபேர் உறவினர்கள் இருந்தபோதிலும், அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வரும்படிக்குள் அதிதிகளை ஆதரித்து உணவளிக்க முடியாமலிருந்தபோதிலும், தன் வீட்டிற்குத் தேஹி என்று வரும் பிச்சைக்காரருக்காவது பிச்சையிட்டுத்தான் பின்னர் உண்ணவேண்டும் என்றதாகும். இதற்கேற்பவே ஔவையார் ‘இட்டு உண்டிரும்’ என்றும், ‘மருந்தேயாயினும் விருந்தோடு உண்’ என்றும் கூறியிருக்கிறாள். இரண்டாவது சொன்ன வாக்கியத்துள் ‘ஐயமிட்டுண்’ என்ற வாக்கியத்தில் அடங்கியிருக்கும் ஒரு மறைபொருள் வெளியாகிறது. நம்மிடமிருக்கும் வஸ்துக்களிடம் நமக்கு ஒருவிதப் பற்று உண்டு. இந்த வஸ்துவால் சிறந்த பயன்கள் ஏற்படுமாயின் இந்தப் பற்று அதிகமாகும், இதைப் பிறருக்குக் கொடுக்க மனம் எழாது. இதுவும் அன்றி இந்த வஸ்து மிகுந்த முயற்சியின்மேல் கிடைத்ததாயின் நமக்கு அதனிடம் ஏற்படும் பற்றுக்கு எல்லையே இல்லை. இம்மாதிரி வஸ்துக்களை நாமே வைத்துக்கொண்டு அனுபவிக்கவேண்டும் என்ற துர் ஆக்ரஹம் உண்டாகிவிடும். இத்தகைய வஸ்து அமிருதம் என்பது. இந்த அமிருதமே நமக்குக் கிடைத்தபோதிலும் அதையும் பிறரோடு உண்ணவேண்டுமேயொழிய தனிமையாக உண்பது நல்லொழுக்கமன்று.

இந்த வாக்கியத்தை ஒட்டி சிற்சில பழக்கங்கள் நமது நாட்டில் நமது நித்திய கர்மங்களில் காணப்படுகின்றன. வாயிலில் யாராவது பிச்சைக்காரன் வந்தாலும்ஸரி, அல்லது ப்ரஹ்மசாரிகள் தேஹி என்று வந்தாலும்ஸரி எவ்வளவு ஏழையாயினும், பிச்சை எடுத்துப் பிழைப்பவனாயினும்

நமது நாட்டில் தன்னா லியன்ற மட்டும் கொஞ்சமாவது அரிசி அல்லது சோறு இடாமலிருக்க மாட்டான். அப்படி ஏழையாக இருப்பவர்கள் கூட உண்ணும் முன் காக்கைக்காவது பிடிசோறிட்டுத்தான் தாம் உட்கொள்ளத் தொடங்குவார்கள். இந்த வாக்கியத்தின் சிறப்பால்தான் நமது நாட்டில் அன்னதானம் விசேஷமாக நடந்து வருகிறது. பிற நாடுகளில் ஏழைகள் சோற்றுக்கில்லாது தெருக்களில் பட்டினி கிடந்து வயிறொட்டி அநேகக்கணக்காக இறப்பது உண்டு. பெரிய கண்டம் போன்ற பாரதநாட்டிலோ ஏராளமாக ஜனங்களிருந்தும் பட்டினி கிடந்திறப்பவர் மிகுதியாகவில்லை.

இப்படி இருப்பினும் வரவர மேல்நாட்டு எண்ணம் அதிகமாகிக்கொண்டு வர நமக்குத் தேவையானவைகள் அதிகரித்து விட்டன. ஆகவே கிடைப்பதெல்லாம் நமக்குப் போதாமல் போய்க்கொண்டு வருகிறது. ஆதலால் ஐயமிட்டுண் என்ற வாக்கியத்தின்படி நடப்பது இக்காலத்தியக் கல்வியின் சிறப்பால் குறைந்துகொண்டே வருகிறது. தேஹி என்று வருபவர்களுக்கு அப்போதைக்கப்போது நேரிடக் கொடுத்துக் கொடை மன உருக்கம் முதலியவைகளை விருத்திசெய்து மேன்மை யடையாது, இக்காலத்தில் படித்தவர்கள் தாம் கொடுப்பது பிறர்களுக்குத் தெரிந்து கீர்த்தி உண்டாக வேண்டுமெனத் தர்மஸங்கங்களுக்கு மொத்தப் பணம் கொடுத்துவிட்டு பொது நன்மை புரிந்து விட்டோம் என்று இறுமாந்திருக்கின்றனர். இவர்கள் கொடுத்த பணம் ஏழைகளைச் சென்று எட்டுகின்றதோ அல்லது அதைப் பரிபாலனம் செய்ய ஏற்படும் தர்மகர்த்தர்கள் கீழ் உள்ள சிப்பந்திகள் ஆகிய இவர்களிடம் பெரும்பாலும் அடங்கிவிடுகின்றதோ என்பதே அவர்களுக்குத் தெரியாது. இதை எல்லாம் தெரிந்துகொண்டு தான் நமது பெரியோர்கள், எவ்வளவுதூரம் ஒருவன் பொது நன்மைக்கு பெரும் நன்கொடைகள் அளித்திருந்த போதிலும் அவனிடம் வருபவனுக்கு நேரிடத் தானாகவே ஐயமிட்ட பின்னர் தான் விஷயங்களை அங்கீகரிக்கவேண்டும் என்று இவ்வாக்கியத்தால் வற்புறுத்துகின்றனர்.

ஆதலால் நமக்கு அதிதிகளோடு பங்கிட்டு உண்ணத்திறமில்லாம லிருப்பினும், அல்லது அதிக உறவினர்களைப் போஷிக்கும்படி நேர்ந்த போதிலும், அல்லது,நமக்கு மிகுந்தகஷ்டத்தின் பேரில் வஸ்துக்கள் அகப்பட்டபோதிலும், அல்லது நமக்குக்கிடைத்த வஸ்து மிகஅருமையானதாயினும், அல்லது, நாம் எவ்வளவு பொது நன்மைக்குக் கொடுத்திருந்தபோதிலும், இன்னும் எவ்வித விஷயங்கள் ஏற்பட்டபோதிலும், நாம் நேரிடக் கொடை அளித்து நம்மனத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம் என்பது இந்நீதி வாக்கியத்தால் நன்கு விளங்கும்.

இந்நீதி வாக்கியத்தின் சிறப்பை நன்கு விளக்கும் கதை ஒன்று **மதனகாமராஜன் கதை** (பன்னிரண்டுமந்திரிக்கதை)யில் பதினோராம் நாள் கதையாகக் காணப்படுகின்றது. இதற்கு **பிராஹ்மணப்பிள்ளை அன்னதானப் பலன் அறிந்த கதை** என்று பெயர். இதை ஒருவாறு சுருக்கிக் கூறுவோம். கலிங்க தேசத்தில் ஒரு அக்கிரஹாரம் உண்டு. அதில் ஒரு ஏழை பிராஹ்மணன் தன் மனைவி பிள்ளையோடு உபாதானம் எடுத்து ஜீவனம் செய்து வந்தான். பிள்ளைவெகு சீக்கிரத்தில் ஸகல கலைகளையும் எளிதில் கற்றுத் தேர்ந்தான். இவனுக்குப் பதினாறு வயதானதும் இவன் தகப்பன் இறந்து போய்விட்டான். இவனும் உபாதானத்தால் தன் தாயைக் காப்பாற்ற வேண்டி வந்தது. தாயோ இவன்கொண்டுவரும் வஸ்துக்களைத் தகுந்தபடி சமைத்து முதலில் ஒரு வேதியருக்கு இட்டுப் பின்னர் தானும் பிள்ளையுமாகப் பகிர்ந்து உண்டு வந்தாள். எவ்வளவு குறைவாகக்கிடைத்த போதிலும் அதிலும் ஐயமிட்டு உண்டு வரும் தாயை நோக்கி ‘அம்மா! நமக்கு வஸ்துக்கள் கிடைப்பது மிகக் கடினமாகவிருக்க இதைக் கவனியாது தினம் ஒருவருக்கு விடாது உணவு அளித்து வருகின்றனையே! இதற்கு என்ன காரணம்’ என்று வினவ, அதற்குத் தாய், ‘அப்பா! எவ்வித தானமும் அன்ன தானத்திற்கு நிகரன்று என்று பெரியோர் கூறுவர். எங்கள் பரம்பரையில் எல்லோரும் இதைச் செய்து வந்தார்கள். நானும் இவ்வாறு செய்து வருவதாக விரதம் பூண்டு விட்டேன். ஆதலால் இவ்வாறு செய்து வருகிறேன்’ என்றாள். இதனால் பூர்ணதிருப்தி வாராத பிள்ளை ‘எனக்குக் கட்டுச்சோறு தயார் செய்துகொடு யான் போய் தவமிருந்து அன்ன தானப் பலனறிந்து வருகிறேன்’ என்று கேட்க, தாயும் அவ்வாறே செய்து பிள்ளையை வழியனுப்பினாள். இவன் வெகுதூரம் காடுமலை வனம் வனாந்தரங்கள் கடந்து வருகையில் ஒரு நாள் ஓர் அடர்ந்த காட்டுள் வந்து சிக்கிக்கொண்டான். பொழுதுபோகும் தருணமாக விருந்தது. அப்பொழுது அங்குத் தற்செயலாக வந்த வேடன் ஒருவன் அச்சிறுவனை நோக்கி, ‘இருட்டும் தருணம் வந்துவிட்டது. என்னுடன் வந்து என் பரணில் இன்றிரவு தங்கிப் பொழுது விடிந்ததும் உன்னிஷ்டப்படி போகலாம்’ என்று அழைத்தான். சிறுவன் அதற்கு இசைந்து வேடன் பரண் போய்ச் சேர்ந்தான். அன்றிரவு ஆகாரத்திற்காகத் தேனும் தினைமாவும் தயாராயிருந்தது. அப்பொழுதுவேடன் தன் மனைவியைநோக்கி ‘பெண்ணே! நம்பரணுக்கு ஒரு விருந்து வந்திருக்கிறது. உன் பாகத்தில் பாதியும் என் பாகத்தில் பாதியும் சேர்த்து அவருக்குக் கொடுத்து, உன்னிடத்தில் பாதியும் என்னிடத்தில் பாதியும் அவருக்குப் படுக்கக் கொடுத்து இன்றிரவு அவரை ஆதரிப்போம்’ என்றான். அதற்கு அவள், ‘உங்களுக்கு என்ன வேலை? வழியில் போகிறவர்களை எல்லாம் அழைத்து வருகிறதுதான் வேலையோ! நீர் வேண்டுமானால் உமது பாகத்திலிருந்து கொடுத்து அவரை ஆதரியும். நான் கொஞ்சம்கூடக் கொடுக்கமாட்டேன்,’ என்று மறுத்துவிட்டாள். இவளை ஒரு பொருட்டாக மதியாது வேடன் தன் பாகத்தில் பெரும்பாலும் சிறுவனுக்குக் கொடுத்து, தன்னிடத்தில் ஒரு பாகத்தை ஒழித்து உள்ளே சிறுவனைப் படுக்கச் செய்து தான் பரண் ஓரமாகப் படுத்துக்கொண்டான். இரவில் தூக்கக் கலக்கத்தில் வேடன் பரணிலிருந்து கீழே விழ, அவனை புலி கொண்டுபோய் விட்டது. விடிந்ததும் சிறுவன் எழுந்து வேடனைக் காணாது அவனுக்கு என்ன ஆபத்து வந்ததோ, தனக்காக இவ்வளவு அன்பு பாராட்டியவனுக்குத் தானே யமனாகும்படி நேர்ந்ததே என்று பலவாறு துக்கித்துவிட்டு, அடங்காப் பிடாரியாகிய அவன் மனைவியை ஒருவாறு தேற்றித் தன் காரியமாகப் புறப்பட்டு விட்டான். போகும்வழியில் சில விடங்களில் தங்கும்படி நேர்ந்தது. அங்கிருப்பவர்கள் இவன் நோக்கத்தை அறிந்து மெச்சிக்கொண்டனர். அவர்களில் சிலர் தமக்கிருக்கும் சில குறைகளை எடுத்துச் சொல்லி அது தீரும்வழி இன்னது என்பதை கடவுளிடமிருந்து அறிந்து வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு ஒரு பெருங்காடு சென்று அங்கு கொஞ்சகாலம் கடும் தவம் செய்தான். இதன் முடிவில் பரமசிவன் பிரத்யக்ஷமாக அச்சிறுவன் ஸ்வயநயம் கருதாது மற்றவர்களுடைய குறைகள் விஷயமாகக் கேட்டுவிட்டு முடிவில் அன்னதானப் பலன் என்னவென்று கேட்டான். அதற்குப் பரமசிவம் ‘நான் கூறவேண்டியதில்லை. நான் கொடுக்கும் அக்ஷதையையும் விபூதியையும் கொண்டுபோய் விராடதேசத்தரசன் பெண்சாதிக்குக் கொடு. பிள்ளை இல்லாது தவித்துக்கொண்டிருக்கும் அரசனுக்கு ஒரு பிள்ளை உண்டாகும். அது பிறக்கும்பொழுதே பூமியில் படாது ஒரு பொற்றட்டில் ஏந்திவரச் சொல்லி அதைக் கேட்டால்அது உன் கேள்விக்குத் தகுந்தபதில் உரைக்கும்’ என்று கூறி மறைந்தார். சிறுவன் வரும் வழியில் எல்லோருக்கும் குறை தீரும் வழிகளைப் பரமசிவனிடமிருந்து கேட்ட வண்ணம் வெளியிட அவர்கள் குறைகள் தீர்ந்தன. அவர் கைம்மாறு செய்ய அவைகளை அவ்வவர்களிடம் அடைக்கலமாக வைத்துவிட்டு, நேரே விராட நக

ரம் சென்று அவ்வரசன் யோகக்ஷேமங்களை விசாரித்து, தான் அக்ஷதையும் விபூதியையும் கொடுத்து அவருக்குப் புத்ரஸந்தானம் உண்டாகும்படி செய்வதாகச் சொன்னான். அதற்கு அரசன் 'அப்பா நீயோ சிறுவன். உன்னால் என்ன முடியும். எவ்வளவோ பெரியவர்கள் முயன்றும் முடியாமற்போய்விட்டதே' என்று மனவருத்தத்துடன் கூற, அதற்குச் சிறுவன், 'நான் கொடுக்கும் விபூதி முதலியவைகளில் உமக்குப் பிள்ளை பிறக்காவிடில் நான் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்' என்று உறுதிமொழி கொடுத்தான். அரசன் வியப்படைந்து 'ஆனால் செய் பார்ப்போம்' என, பரமசிவத்தைத் தியானம் செய்து அரசன் மனைவிக்குச் சிவப்பிரஸாதத்தை உட்கொள்ளும்படி கொடுத்தான். கொஞ்சநாளில் அவள் கர்ப்பம் தரிக்க, அரசன் சிறுவனுக்கு ஆசார உபசாரம் செய்து பாதுகாத்து வந்தான். ப்ரஸவகாலம் வந்ததும் அச்சிறுவன் அரசனை நோக்கிக் 'குழந்தை வெளிவருங்கால், பொற்றட்டில் வாழைக் குறுத்திட்டு, அதைப் பூமியில் படாது ஏந்தி ராஜ ஸபைக்குக் கொண்டுவரவேண்டும்' என்று கூற, அரசன் அவ்வாறே செய்வித்தான். அச்சிறுவன் பொற்றட்டைக்கையிலெடுத்து அதிலிருந்த குழந்தையை நோக்கி 'அப்பா! அன்னதானத்தின் சிறப்பு என்ன?' என்று கேட்டான். ஸபையோர் கண்டு வியக்கும்படி அது வாயைத் திறந்து 'கொஞ்சம் தினைமாவு கொடுத்ததற்கு எனக்கு இந்நிலை வந்ததென்றால், ஒருவன் முற்றிலும் திருப்தி அடையும்படி அன்னதானம்செய்த தன்பலன் எவ்வளவு என்று நீரேபார்த்துக்கொள்ளும். என்னால் கூற முடியாது. மேலும் தானம் செய்ய மனம் வராத என் மனைவி இந்த ஊர் பரச்சேரியில் பன்னிக்குட்டியாகப் பிறந்திருக்கிறாள்' என்று கூறி நிறுத்திவிட்டது. உடனே சிறுவன் வந்த காரியம் முடிந்ததென்று புறப்பட்டு தனக்குக் கிடைத்தவைகளை அடைக்கலம் வைத்தவரிடமிருந்து வாங்கிக்கொண்டு தன் கிராமம் வந்து, தாயை வணங்கி, எல்லாவற்றையும் முழுவதும் கூறி அன்னதானத்தை விடாது செய்து பரமசிவன் அருளால் மேலான பதவியை அடைந்தான்.

இம்மாதிரியான கதை ஒன்று மஹாபாரதம் அச்வமேத பர்வத்தின் முடிவில் காணப்படுகின்றது. இதற்குப் பொன்னிறமான கீரிப்பிள்ளை அல்லது அதிதிபூஜையின் சிறப்பு என்று பெயர். இதன் விஸ்தாரத்தை **மஹாபாரத வினாவிடை மூன்றாம் பாகத்தில் காண்க.**

ஆத்திசூடியிலுள்ள முதல் 9-வாக்கியங்களையும் கொடைவிஷயமாகவே ஒருவாறு பொருத்தலாம். முதலாவது அறஞ்செயவிரும்பு. அதாவது 'ஈதலறம்' என்று கூறியதற்கு ஏற்பக் கொடுப்பதற்கு விருப்பமுடையவனாய்இரு என்பதாகும். ஆறுவதுசினம் என்பதால், கொடைக்கு முக்கிய விரோதி கோபம். பலருக்குக் கொடுக்கத் தொடங்கினால் ஏற்படும் குழப்பத்தில் இந்தக் கோபம் குறுக்கிட்டுக் கொடையைப் பயனற்றதாக்கிவிடும். ஆகவே கொடை சிறப்புற்றோங்க முக்கியமாகத் தணிக்கவேண்டியது கோபமே என்பது தோன்றும். இயலுவதைக் கரப்பதும், நாம் கரப்பதுபோலப் பிறரையும் கரக்கும்படி செய்து ஈவதை விலக்குவதும் கொடையாளிக்கு அழகன்று. ஆதலால் இவைகளை அவன் பின்பற்றவே கூடாது. இவ்வாறு செய்யக்கூடாதாயினும் கர்வமிகுதியால் தன் சிறப்பை எக்காலத்தும் தானாகவே வெளியிட்டுக்கொள்ளலாகாது என்பதை உடையது விளம்பேல் என்பது குறிக்கும். அவ்வாறு செய்துவிட்டால் கொடையின் மேன்மை குன்றிவிடும். இவ்வாறு வெகு பயபக்தியுடன் கொடுத்துவருங்கால் கொடுக்கப் பணம் இன்றி ஏழ்மை ஏற்பட்டு விட்டால் ஒருவாறு மனத்தடுமாற்றம் உண்டாகலாம். அப்



பொழுது 'நாம் செய்ய வேண்டியதை செய்து வந்தோம். அதனிடையில் இவ்வறுமை வந்தது. இது கடவுள் சோதனைதான். இதிலும் நாம் நமது விருதத்தைக் கைவிடாது கடவுள் கருணைக்குத் தகுந்தவனாக நடக்க வேண்டும். ஆதலால் நியாய வழிகளில் பொருள் தேடுவோம். கிடைத்தவைகளை மனதாரக் கொடுப்போம்' என்றிவ்வாறு மனனம் செய்து ஊக்கமதைக் கைவிடாதிருக்கவேண்டும். இப்படி இருக்கையில் பொருள் தேடுவதற்கு நல்ல வழி, கண்ணுக்கு நிகராகிய எண்ணையும் எழுத்தையும் பிறருக்குப் போதித்து அவைகளை இகழாவண்ணம் அவர்கள் ஞானக்கண்ணைத் திறந்து அவ்வாறு செய்வதால் அவர்கள் மனக்களிப்பால் குருதக்ஷிணை கொடுப்பதைக் கொண்டு நமது கொடைத்தொழிலை நடத்த வேண்டுமே ஒழிய, பிறரிடம்சென்று இழிவானதொழிலாகிய கெஞ்சிக்கேட்டுவாங்குவதைக் செய்யவேகூடாது. ஏற்பது இவ்வளவு இகழ்ச்சியாக விருப்பதால் காலகதியால் அவ்வாறு செய்யும்படி நேரிட்டவர்கள் நம்மிடம் வந்துவிட்டால் நமக்கு எவ்வளவு சிறப்பு அல்லது கஷ்டங்களிருப்பினும் மனங்கனிந்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் நமது முக்கியவேலைகளைச் செய்யவேண்டும். நமது உயிர் போவதாகவிருந்தாலும் மிக நொந்துபோய் பிச்சைக்கு வருபவர்களைத் திருப்தி செய்துவிட்டுத்தான் நமது உயிரைக் கவனிக்க வேண்டும். இதுவே உண்மையான தர்மம். இதை நன்றாகச் செய்து பழகி வருபவர்களை எவ்வளவு கொடிய துக்கமும் தாக்க சக்தி அற்றதாகிவிடும். அற்பமான விஷயஸுகம் இவரை எவ்வாறு முழுத்தும்? இதற்கு உதாரணம் பாகவதம் 9-வது ஸ்கந்தத்தில் காணப்படும். ரந்திதேவர் கதை, **பாகவத வினாவிடை** 1-ம் பாகத்தைப் பார்க்க.

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 15. अरुन्धतीप्रदर्शन न्यायः

### அருந்ததீ பிரதர்சன நியாயம்.

ஆகாயத்தின் வடபாகத்தில் பிரகாசமான ஏழு நக்ஷத்ரங்களாலாகிய வாலுடன் கூடிய காற்றாடி பறப்பது போன்ற உருவமுடைய நக்ஷத்ரக் கூட்டங்களுக்கு ஸப்தருஷிமண்டலம் என்று பெயர். இது கல்யாண மாதங்களாகிய தை முதல் ஆனிவரையில் சுமார் இரவு 6-மணிக்குக் கிழக்கே தோன்றத் தொடங்கி, வரவர முன்னர் பகலில் உதித்து ஆகாயத்தில் வெவ்வேறு பாகங்களில் காணப்பட்டு முடிவில் மாலை 6-மணிக்கு அஸ்தமித்துவிடும். இந்தக் கூட்டத்தில் வால் பாகத்திலிருக்கும் மூன்று நக்ஷத்ரங்களுள் மத்தியிலிருக்கும் நக்ஷத்ரத்திற்கு **வஸிஷ்டர்** என்றுபெயர். அதன் அருகாமையில் அதிஸூக்ஷ்மமாக ஊன்றிப் பார்க்குங்கால் ஒரு நக்ஷத்ரம் காணப்படும். அதுதான் **அருந்ததி** என்னப்படும்.

இந்த அருந்ததி நக்ஷத்ரத்தை ஸாதாரணமாக நமது கல்யாணங்களில் முகூர்த்த நாள் இரவு நடத்தப்படும் பிரவேசஹோம மத்தியில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் காட்டுவது வழக்கமாக நம்முள் வந்துவிட்டது. வஸிஷ்டரும் அருந்ததியும் எவ்வாறு இணைபிரியாதிருக்கின்றனவோ, அவ்வாறே மாப்பிள்ளையும் பெண்ணும் மனம் ஒருமித்து ஆதரவுபட்டுத் தர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டும் என்ற கருத்துடன் இவ்வாறு செய்யத் தொடங்கியதாக விருக்கலாம். பின்னர் அருந்ததி கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்கிற வரையில் ஆயுஸ்விருத்தி என்றும், அது தென்படாவிடில் மரணம் அணுகிவிட்டது என்றும், ஆதலால் மாப்பிள்ளையும் பெண்ணும் அதைக்கண்டு விட்டால் தீர்க்க ஆயுஸுடன் இருப்பார்கள் என்றும் உள்ள மூட நம்பிக்கைகள் இந்த வழக்கத்தைச் சுற்றிக் கிளம்பிவிட்டன.

இவ்வாறு அருந்ததியைக் காட்டுங்கால் நேரிட அதைக் காட்ட முடியாது. முதலில் ஆகாயத்தின் வடபாகத்தில் பிரகாசமான நக்ஷத்திரத்தை, இருக்குமிடத்தில் உள்ள மரங்களுடன் ஸம்பந்தப்படுத்தி முதலில் காட்டி, அதிலிருந்து படிப்படியாக வடக்கே காட்டிக்கொண்டே போய் ஸப்தரிஷியாகிய ஏழுநக்ஷத்ரங்கள் வந்து அதன் வாலைக் காட்டி அதன் நடு நக்ஷத்ரத்தைக் காட்டி அதன் அருகில் ஸூக்ஷ்மமாகப் பார்க்கச் சொல்லி அப்பொழுது காணப்படுவது தான் அருந்ததி என்றுகாட்டுவது. இம்மாதிரியே மூன்றாம் பிறைச்சந்திரனைக் காட்டும்போதும் அதன் அருகாமையில் மறைத்துக்கொண்டிருக்கும் பனை முதலிய மரங்களைக் காட்டி அவைகளின் மேல் பார்க்கச்சொல்லி ஆகாயத்திலிருக்கும் ஸூக்ஷ்மமான பிறையைக் காணும்படி செய்வது. ஆகவே ஸூக்ஷ்மவிஷயத்தைக் காட்டத் துணியும் ஒரு ஆசார்யன், அதனுடன் ஸம்மந்தப்பட்ட ஸ்தூல விஷயங்களை முன்பு காட்டிப் பின்னர் அவைகளை ஒழித்துக்கொண்டே வந்து ஸூக்ஷ்மவிஷயத்தை அணுகி அதைப் புகட்டுவதே இந்நியாயத்திற்குத் தக்க உதாரணம். இக்கருத்தை **கைவல்ய நவநீத** நூலாசிரியர்:—

*தாலத்தின் மரங்கள் காட்டித்*
*தனிப்பிறை காட்டுவார்போல்*
*ஆலத்தி னுடுக்கள் காட்டி*
*அருந்ததி காட்டுவார்போல்*
*ஸ்தூலத்தை முன்பு காட்டி*
*சூக்கும ஸ்வரூப மான*
*மூலத்தைப் பின்பு காட்ட*
*முனிவரர் தொடங்கினரே.*

என்று விளக்கிக் காட்டி இருக்கிறார்.

### 16. असाधारण्येन व्यपदेश न्यायः

### அஸாதாரண்யேன வ்யபதேச நியாயம்

**சா**ஸ்திர விஷயங்களுள் பிரமாணம் முதலிய பதார்த்தங்கள் பதினாறு என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இவைகளுள் சாஸ்திரங்களில் எல்லாவற்றையும் எடுத்துக் கூறுவதோடுங்கூட ஒவ்வொன்றில் ஒவ்வொன்றைச் சற்று ஏற்றமாகவும் விஸ்தாரமாகவும் கூறப்பட்டிருக்கும். இதனால் அந்தச் சாஸ்திரத்திற்கு அதை ஒட்டிய பெயரிட்டழைக்கப்படும். கௌதமர்செய்த சாஸ்திரத்தில் பதினாறு பதார்த்தங்களை எடுத்துக் கூறிவருகையில் நியாயம் என்ற பதார்த்தத்தை அதிகமாக பிரஸ்தாபித்திருப்பதால் அதற்கு நியாய சாஸ்திரம் என்றபெயர் கொடுக்கப்பட்டது. இம்மாதிரியே பிரஸ்தாபம் செய்யப்படும் விஷயங்களுள் அதிகமாக எடுத்துக்காட்டும் விஷயங்களைக் கொண்டு ஒன்றற்குப் பெயர் அமையும் இடத்தில் இந்த நியாயம் உபயோகப்படும். மோக்ஷத்திற் படிகள் போன்ற கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்ற யோகங்கள் நான்கிலும் நான்கின் லக்ஷணங்களும் உண்டு. அப்படி இருந்தும் ஒவ்வொன்றிற்கும் அததில் முக்கியமாக மதிக்கப்பட்ட அம்சங்களால் பெயரிடப்பட்டிருக்கிறது. இவைகள் இந்நியாயத்திற்கு உதாரணமாகும்.

### 17. अहिकुण्डल न्यायः

### அஹிகுண்டல நியாயம்

**பா**ம்பு எங்கிருந்தபோதிலும் குண்டலாகாரமாகச் சுற்றிக்கொண்டேயிருக்கும். இது அதனுடைய ஸ்வபாவம். ‘நாயைக் குளிப்பாட்டி நடுஉள்ளில் வைத்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு பீதின்னப் போகும்’ என்ற பழமொழி ஒன்று உண்டு. அது இந்நியாயத்திற்கும் உதாரணம். ஒருவனுக்குக் குணம் பெருந்தன்மை முதலியவைக ளிருந்து விட்டால் அவனுக்கு என்ன ஏற்றத்தாழ்வு ஏற்பட்டபோதிலும் அவன் குணம் மாறாது. அது போலவேதான் இழிவான குணமுடையவர்கள் விஷயமும். இதை **ஔவையார்** :—

*சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே*
*அல்லாதார் கெட்டாலும் அல்லாதார்—அல்லாதார்*
*பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்*
*மண்ணின் குடமுடைந்தக் கால் [என்னாகும்*

என்றாள். இம்மாதிரி ஸ்வபாவம் மாறாமலிருப்பதைப்பற்றிக் கூறுமிடத்து இந்நியாயத்தை உபயோகப்படுத்தலாம்.

### 18. आभाणक न्यायः

### ஆபாணக நியாயம்

**ஆ**பாணகம் என்பதுஉலகில் பிரஸித்தமானது என்பதை உணர்த்தும். ஒருவித வெளிப்படைக்குக் காரணமும் இல்லாது உலக ப்ரஸித்தமாக இருக்கும் விஷயங்களில் இந்த ந்யாயம் உபயோகப்படும். ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் பல பாகங்கள் எல்லாவற்றிற்கும் வெளிப்படையான காரணங்கள் கூற முடியாது. இம்மாதிரியேதான் சகுன விஷயங்களும். இவ்விஷயங்கள் இந்நியாயத்திற்கு உதாரண மாகவிருக்கலாம். தமிழ் நாடுகளுள் தாய்மார்கள், மாதம் ஒருமுறை வீட்டுக்கு வெளியாகும்பொழுது ‘ஏன் ஒதுங்குகிறாய்’ என்று கேட்கும் குழந்தைகளுக்கு ‘நான் ஓட்டை மிதித்துவிட்டேன். தீட்டு வந்துவிட்டது’ என்று கூறுவது எங்கும் ப்ரஸித்தமாகவிருக்கிறது. இதுபோலவேதான் ‘நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு’ என்ற பழமொழியும். இவைகள் எல்லாம் இந்நியாயத்திற்கு உதாரணம்.



### 19. आम्रवण न्यायः

### ஆம்ரவண ந்யாயம்.

**கா**ட்டில் அநேக மரங்களிருக்கலாம். அவைகளுள் ஒரு காட்டில் அநேகமாக மாமரங்களே இருப்பின் அதற்கு **மாங்காடு** என்ற பெயர் வந்துவிடும். இம்மாதிரியே ஒரு வஸ்துவில் அதிகமாக இருப்பவைகளின் ஸ்வபாவத்தால் அதற்குப் பெயரிடப்படுங்கால் இந்நியாயம் உபயோகப்படுத்தலாம். இது 16-ம் நியாயம்போலத் தோன்றுமாயினும் அதற்கும் இதற்கும் கொஞ்சம் வித்யாஸம் உண்டு. அது பிரஸ்தாப விஷயங்கள் ஸம்பந்தமாயும், இது வஸ்துக்கள் விஷயமாயும் உள்ளது. ஸ்தூலபஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும் பஞ்சீகரண விசேஷத்தால் மற்றைய பூதங்களின் அம்சங்க ளிருந்தபோதிலும் அதிகமாக உள்ள பூதத்தின் பெயரே அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இந்நியாயத்திற்குத் தகுந்த உதாரணம். ஆகாயம் என்னும் ஸ்தூல பூதத்தில் பாதி ஆகாயமும் அரைக்கால் ப்ருதிவி அப்பு தேஜஸ் வாயுவும் காணப்படுவதால் அதற்கு ஆகாயம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதுபோலவே மற்றைய ஸ்தூலபூத விஷயங்களும். ஆகவே இந்நியாயம் வஸ்து சம்பந்தமாக அதிக வஸ்துவின் பெயர் கொடுக்கப்பட்ட விடங்களில் மாத்திரம் தான் பிரயோகிக்கலாம்.



## மலேரியா என்னும் விஷஜ்வரம்

## MALARIA

**எ**ல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழுதசையிலுள்ள (larvæ) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24 மணி நேரமுதல் 48 மணி நேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக்கீழ் இருக்க வேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வர வேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால் நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளர முடியாது. அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழு தசையிலிருக்கும் அனோபிலென் ஜாதியைச்சேர்ந்த கொசுக்களை, அவைகள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளிப் பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக்குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது, நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய்

வளர்வதற்கு ஆறு முதல் பத்துநாள் வரையில் செல்லும்; சில சமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும். அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்தத் தசையானது இரண்டுநாள் முதல் நாலு நாள்வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரில் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இறக்கைகளுடன் கூடிய வயது வந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக் கொசு முழுவளர்ச்சியுடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்தி செய்வதற்கு ஸித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்துவைக்கப்பட்டிருக்கிற தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், சகலவிதமான தண்ணீர்க்கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக்கூடும். குறைந்த பக்ஷம் அரை அங்குலம் ஆழம் தண்ணீர்த் தேக்கமிருந்தாலொழிய அவைகள் தூறுகள், க்ரோடன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாக முடியாது.

தண்ணீர்ப் பாத்திரங்களை மூடி வைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானவையாகும். தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்துபோன புட்டிகள் முதலியவைபோன்ற அநாவசியமான எந்தச் சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப் பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளைத் தூர்த்து ௸ குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும்; குட்டைகளைத் தூர்த்துவிடமுடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்குத் தேத்தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரொஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழு தசையிலுள்ள கொசுக்களெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில ஏற்கெனவே விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக்கூடுமாகையால், அக்கொசுக்களெல்லாவற்றையும் முயன்று கொல்வதே விவேகமான காரியமாகும்.

தெரிந்திருக்கிறவரையில் விஷஜுரம் பரவுவதற்குக் கொசுவே சாதனமாயிருக்கிறது. விஷஜுரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷஜுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் கொசுக்களில்லா திருக்கும் பக்ஷத்தில் விஷஜுரமிராது; ஒரு நபர் தன்னை எப்போதும் கொசு கடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளக்கூடுமானால், அவனுக்கு விஷஜுரம் ஒருகாலும் வராது. இக்காரணத்துக்காகவே விஷஜுரப் பிரதேசங்களிலே பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுவலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஆனால் அவர்கள் எப்போதுமே கொசு வலைகளுக்குள் இருக்க முடியாதாகையால் சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசு கடிக்கவே கடித்துச் சிற்சில சமயங்



களில் அவர்களுக்கு விஷஜுரம் காணவே காணுகிறது.

இதை மாற்றிச் சொல்லும் பட்சத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுக்களுக்கு விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது; ஆகவே ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக் காட்டுப் பிரதேசங்களில் அனோபிலைன் ஜாதிக்கொசுக்கள் நிரம்பியிருந்த போதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாக முடியாதாகையால், எப்போதோ ஒருகால் அங்கே போகுமொருவனை அவை கடித்தாலும் அவனுக்கு விஷஜுரம் உண்டாகாது. விஷஜுரம் வாராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத் தெரிந்துகொள்ள இதன் மூலமாய் நமக்கு நேராக ஒரு உபாயம் கிடைக்கிறது. விஷஜுரத்திற்குப் பேர்போன பிரதேசத்தில் பிரயாணஞ் செய்கையில், சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம் போடாமலாகிலும் தங்காமலாகிலும் இருக்கவேண்டும்; அவ்விடத்துக்கப்பால் அரை மைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவருடன் கூடவரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரத்தத்தில் விஷஜுர கிருமிகள் ஏற்கெனவே நிறைந்திருக்கக் கூடும். ஆனால் ஒரே இடத்தில் ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால் கூடக் கெடுதி உண்டாகாது; ஏனென்றால், அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுக்கள் அவனைக் கடித்த பிறகு குறைந்தது ஏழுநாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது; ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது, அவை பின்தங்கிப் போய்விடுகிறபடியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தொத்துவியாதி சம்பந்தமுடைய பழைய கொசுக்களே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும்வரையில் விஷஜுரக் கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது **க்வினைன்** என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒரு தடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால் சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் அப்படிச் செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷஜுரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். விஷஜுரம் வாஸ்தவமாய்க் காணும்போது, க்வினைனை அதிக அளவாக உட்கொண்டு வந்தால் அது குணமாகும்; ஆனால் அப்போது இரத்தத்திலிருக்கும் கிருமிகளையெல்லாம் அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்று மாதகாலம் தினந்தோறும் க்வினைன் ஒரு தடவை உட்கொள்ள வேண்டியதவசியமாகும். பெரியவர்கள் (எப்ஸம் ஸால்ட் என்னும்) மக்னீஸியம் ஸல்பேட், 1 ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் 10 க்ரெயின் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

விஷஜுர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளின் இரத்தத்திலும் விஷஜுரக் கிருமிகள் இருக்கின்றன. இந்தக் கிருமிகளின் காரணமாக ௸ குழந்தைகளில் பலருக்கும் ஜுரக்கட்டி உண்டாயிருக்கும். விஷஜுரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் ஜுரக்கட்டி உண்டாயிருக்கும், சகலர்களுக்கும் மூன்றுமாத காலம் தினந்தோறும் க்வினைன் கொடுத்துவரவேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு விஷஜுரம் பூர்த்தியாய் குணமாய்விடும். ஆனால், அவர்களை மறுபடியும் கொசு கடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக் கொசுக்களையும் அழித்துவிடுவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்:

(1) விஷஜுரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கு மொருவனுக்குக் கொசுவினால் பரவுகிறதேயொழிய, தெரிந்தவரையிலும் வேறெந்தமூலமாகவும் பரவுகிறதில்லை.

(2) ஆகையால், கொசுக்களில்லாத பட்சத்திலும் அல்லது உங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடியபட்சத்திலும், உங்களுக்கு விஷஜுரம் ஒருபோதும் வராது.

(3) கொசுக்கள் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால், தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுக்களும் இரா, விஷஜுரமும் இராது.

(4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுக்களெல்லாவற்றையும் அழிப்பதவசியமில்லை; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள கொசுக்களே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றிலும் கால்மைல் தூரம்வரையிலுள்ள பிரதேசத்தில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில், கொசுக்கள் மிகவும் கொஞ்சமாயிருக்கும் அல்லது இருக்கவேயிரா; விஷஜுரமும் இராது.

V. RAGHĀVA CHĀRLU,
*Tamil Translator to Government.*

**டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்குப் பண உதவி.**— அடியிற்கண்ட தொகை மாகாணப் பண்டிலிருந்து டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது. அனந்தப்பூர் 26,100, வட ஆற்காடு 50,800, தென்னாற்காடு 65,000, செங்கற்பட்டு 75,200, சித்தூர் 40,500, கோயமுத்தூர் 45,700, கடப்பா 32,200, கஞ்சம் 72,300, கோதாவிரி 93,800, குண்டூர் 107,400 கிருஷ்ணா 141,700, கோரப்பட்டு 9,200, கர்னூல் 46,400, மதுரை 54,400, மலையாளம் 68,100, நெல்லூர் 65,700, நீலகிரி 10,000 ராமநாதபுரம் 50,400, சேலம் 39,000, தஞ்சாவூர் 83,000, திருநெல்வேலி 53,200, திரிசிராப்பள்ளி 61,000, விசாகப்பட்டணம் 80,700, ஆக மொத்தம் 14,60,700 ரூபாய். இந்த ஜில்லாக்களுக்கு இப்படிக் கிராண்டு பகிர்ந்தது அவ்வவற்றின் லோகல் பண்டு ரோட்டுகளின்நிலைமையைப் பொறுத்ததாகவும், டிஸ்டிரிக்டு போர்டுகள் அத்தொகையைச் செலவழிக்கும் திறமையைப் பொறுத்ததாகவும், அவற்றின் கைமுதலைப் பொறுத்ததாகவும் இருக்கும். செங்கல்பட்டு ஜில்லா போர்ட்டார் சென்னைக்குப் போகும் ராஜபாட்டைகளைச் சீர்படுத்திக்கொண்டு வரவேண்டியிருப்பதால் அந்தப் போர்டுக்கு 30,000 ரூபாய் அதிகம் கொடுத்திருக்கிறார்கள்.

# நன்றியறிவின் மஹிமை

## GRATITUDE *

காசி தேசத்தில் ஒருவேடன் வேட்டையாடுவதற்காக வனம் சென்றான். சமீபத்தில் சில மான்களைக் கண்டு விஷம் பூசின ஓர் அம்பை அவன் பிரயோகம் செய்தான். அது குறிதவறி பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தில் தைத்தது. விஷத்தினுடைய வேகத்தினால் மரத்தின் இலைகளும் காய் கனிகளும் உதிர்ந்து மரம் பட்டுப் போய்விட்டது. அந்த மரத்தின் பொந்தில் வெகு நாளாய் வசித்துவந்த கிளி ஒன்று மரம் பட்டுப் போயும் அதனிடத்திலிருந்த அன்பினால் அதை விட்டுப் போகாமல் அதிலேயே இருந்துகொண்டு வெளியில் போகாமலும் ஆகாரம் இல்லாமலும் தேகமெல்லாம் வாடி மரத்தோடுமரமாய்த் தானும் உலர்ந்துகொண்டே வந்தது. இந்த உதாரமானதும், மனுஷ்யனைக் காட்டிலும் உயர்ந்த நடத்தையுள்ளதும், சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாராட்டினதுமான பிராணியைப் பார்த்து இந்திரன் மிகவும் ஆச்சர்யப்பட்டு அல்ப ஜாதிக்கு இயற்கையில்லாத நன்றியறிவுயென்ற உத்தம குணமானது இந்தப் பக்ஷிக்கு எப்படி வுற்பட்டதென்று வியப்படைந்து பிறகு பிராணிகளுக்குள்ள எல்லா லக்ஷணங்களும் எந்தப் பிராணியிடத்திலும் இருக்கலாம் என்கிற நிச்சயத்தைச் செய்தான். அதன் மேல் இந்திரன், மனுஷ ரூபத்தை யடைந்து ஒரு பிராஹ்மண வேஷம் பூண்டு பூலோகத்தில் இறங்கி அந்தப் பக்ஷியைக்கண்டு "ஓ, பக்ஷியே, இந்தப் பட்ட மரத்தை விட்டுப்போகாமல் ஏன் அதிலேயே இருந்துகொண்டு கஷ்டப்படுகிறாய். இந்தப் பெரிய வனத்தில் அழகிய இலைகளோடும், பொந்துகளோடும், நீ நன்றாய் சஞ்சரிக்கக்கூடிய ரம்யமான இன்னும் பல விருக்ஷங்கள் இருக்கின்றனவே. அப்படியிருக்க இலை யுதிர்ந்து பட்டுப்போய் ஸாரமற்று அழகு குலைந்து வஸிக்க இடமில்

* Adapted from Mahabharata, Anusasana Parva.



லாத இந்த மரத்தை ஏன் அண்டிக்கொண்டிருக்கிறாய். உடனே விட்டு விடு" என்று இந்திரன் சொன்னான். அதற்கு மிகவும் உத்தம ஸ்வபாவமுள்ள அப்பக்ஷி, பெருமூச்சு விட்டு மிகவும் தீனமான ஸ்வரத்துடன் இவ்வாறு சொல்லிற்று. "இந்த மரத்தில் நான் பிறந்து, இதிலேயே இளவயதில் காப்பாற்றப்பட்டு இதிலேயே நற்குணங்கள் பொருந்தி வளர்ந்தேன். ஆகையால் இந்த மரத்தினிடத்தில் நன்றியறிவுள்ளவனாய் அன்பு பாராட்டி பக்கத்தில் போகாமல் அதோடு நசித்துக்கொண்டிருக்கும் என்னிடத்தில் கருணை பாராட்டி ஏன் என்னுடைய நல்ல விரதத்திற்குக் குறைவை யுண்டு பண்ணுகிறீர். தேவதைகளுக்கெல்லாம் அரசனாயிருந்துகொண்டு தர்மவிஷயமாய் தேவதைகளுக்குக்கூட ஏற்படும் சந்தேகத்தைத் தாங்களே நிவர்த்திசெய்ய வேண்டியவர்களாய் இருக்கிறீர். அப்படிக்கிருக்க, இந்த மரம் நன்றாய் இருந்த காலத்தில் அதை யண்டி ஜீவித்துவிட்டு அது பட்டுப்போன காலத்தில் அதை விட்டுவிடும்படி தாங்களே எனக்கு உபதேசம் செய்வது தகுதியல்ல."

இந்த அழகான வார்த்தைகளைக் கேட்டு, இந்திரனுக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகி உனக்கு வேண்டிய வரனைக் கேளென்று சொல்ல, அந்தக் கிளியானது, "அந்த மரம் திரும்பவும் துளிர்த்துத் தழைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது. இந்தக் கிளியினிடத்துள்ள திருடமான பக்தியையும், குணங்களையும் கண்டு சந்தோஷப்பட்டு அந்த மரத்தின்மேல் கொஞ்சம் அமிருதத்தை இந்திரன் தெளித்தான். உடனே, அந்த மரத்திற்கு அழகான கொம்புகளும் கிளைகளும் உண்டாகி, துளிர்களும் இலைகளும் தழைத்துப் பழங்கள் நிறைந்து முன்னிருந்ததைப் பார்க்கிலும் மிகவும் செழிப்பாய் விளங்கிற்று. அந்தக் கிளியும் இறந்த பிறகு இந்திரலோகத்தை யடைந்தது. இவ்விதமாகவே பக்தியுள்ள ஒரு மனுஷனை அண்டினால் எப்பொழுதும் நல்ல கதியுண்டாகும்.

G. S. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி. ஏ.

# யானைகள்

## ELEPHANTS

மேஜர் ஸ்கின்னர் என்பவர் (Major Skinner) யானைகளைப்பற்றி சொல்லும்போது பெரிய காட்டு யானைகளா யிருக்கிறவைகளும் கூட மிகவும் கீழ்ப்படியக் கூடியனவாயும், அமைதியுள்ளனவாயிருப்பதும் தவிர, மிகவும் ரோஷமுள்ளனவாயுமிருக்கின்றன என்று கூறி யிருக்கிறார். இலங்கைத்தீவில் சிங்களர்கள் பெரும் யானைகளைப் பிடிப்பதற்குச் சிறிய யானைகளை விட்டு ஏய்த்து வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்யும்போது அப்பெரிய யானைகள் தங்களைப் பிடித்துக்கொடுக்கும் சிறு யானைகளுக்கு யாதொரு தீங்கும் விளைக்கிறதில்லை. இதுவும் தவிர காட்டிலிருந்து புதிதாய் பிடிக்கப்பட்ட யானையானது அது பிடிபட்ட அன்று மாலையிலேயே ஒரு மனிதனுடைய கையிலிருந்த உணவைத் தன் தும்பிக்கையினால் எடுத்துத் தின்றதாம். இவ்வளவு நற்குணமும், அமைதியுமுள்ளதா யிருந்தபோதிலும் கோபம்வரும் காலத்தில் மிருகேந்திரனை சிங்கத்தைக்காட்டிலும் அதி மூர்க்கமுள்ளதாயிருக்கும். அப்படிக் கோபமும் ரோஷமும் அதிகரிக்கும் தருணத்தில் தன்னுயிரைத் தானே வலிதில் மாய்த்துக்கொள்ளக்கூடியதாயு மிருக்கிறது.

ஸர் சாமுவேல் பேக்கர் என்பவர் (Sir Samuel Baker) யானைகள் இலங்கையில் செய்த வேலைகளைப்பற்றி அடியிற்கண்டவாறுகூறியிருக்கிறார். ஒரு தரம் 20-எருமைக்கடாக்களாலும் இழுக்க முடியாத ஒரு பெரிய ஏர்க்கருவியைக்கொண்டு வந்ததாகவும், அதை ஒரு யானையானது ஒரு வேடிக்கைக் கருவியைக் குழந்தைகள் என்னவிதமாய் இலகுவாய் இழுத்துக்கொண்டு போகுமோ அம்மாதிரியாக அதை யிழுத்துக்கொண்டுபோய் ஒரு பழத்தைக் கூர்மையான கத்தியைக்கொண்டு அறுத்தால் எவ்வளவு சுலபமாக அறுக்கலாமோ அவ்வளவு சுலபமாக மிகவும் கெட்டியாயும்

கிராய்ப்புல் உள்ளதாயும் இருந்த தரையை உழுது கொண்டு போனதாகவும் சொல்லியிருக்கிறார். அதுவும் தவிர அந்த நிலத்தை விதை விதைத்த பிறகு மேற்கூறிய யானையானது, இரண்டு பெரிய மண் சமன்படுத்தும் கருவிகளையும், இரண்டு சிறிய மண்சமன்படுத்தும் கருவிகளையும் அதற்குப் பின்னால் மண்சமன் படுத்தக்கூடிய உருண்டு கொண்டேவரும் பளுவான ஒரு கருவியையும் கட்டி ஒரே சமயத்தில் இழுத்துக்கொண்டு போயிற்றாம். இப்படி ஒரு யானை செய்த தொழிலினால் எவ்வளவு கால லாபமும், தொழில் லாபமும், பணலாபமும் இருக்கிறதென்பது தானே விளங்கும்.

இம்மாதிரி வயல்களில் வேலையில்லாத காலங்களில் யானைகள் ஆறுகளுக்கு அணைமுதலானதுகள் போடுவதிலும் உபயோகப்படுகின்றன. இதற்குதாரணமாக இலங்கையில் நடந்த ஒரு சங்கதியைப்பற்றிச் சொல்லுவோம். இலங்கைத் தீவில் ஒரு நீரோட்டத்தில் அணைபோட வேண்டி நேரிட்டதாம். அந்த இடத்திற்குச் சமீபத்தில் 50-கஜ தூரத்துக்குள் புதிதாய் ஒரு காட்டையழித்து அதிலிருந்த மரங்களைப் பெருங்கட்டைகளாகத் துண்டித்துப் போடப்பட்டிருந்ததாம். அவைகளில் சில 15 அடி நீளமும் 18 அங்குல குறுக்களவும் உள்ளதாயிருந்ததாம். பாகன் உத்திரவு பண்ணியதின்மேல் யானையானது இம்மாதிரிக் கட்டைகளைத் தன் வாயில் கவ்வி தன் துதிக்கையில் அவைகளை இருபுறமும் கனம் சரியாயிருக்கும்படி யமர்த்தித் தூக்கிக்கொண்டு வந்து அந்நீரோட்டத்தில் ஒன்றுக்கொன்று வரிசையாக அடுக்கிற்றாம். இன்னும் பெரிய கட்டைகளாயிருப்பனவற்றைத் தன் தலையாலும் கால்களாலும் தள்ளித் தள்ளிக்கொண்டுபோய் சரியானபடி மட்டமாய் அடுக்கி அணைபோட்டதாம்.

யானையானது இவ்வளவு புத்தி கூர்மையுள்ளதாயிருந்தபோதிலும், அவைகளை இம்மாதிரித் தொழில்களுக்கு உபயோகப்படும்படி செய்ய நெடுநாள் பயிற்சி செய்யவேண்டும். எவ்வளவு காலம் அவைகளுக்குப் பயற்சிசெய்தாலும் அதற்கேற்ற பிரயோஜனத்தை யடையலாம். எப்படி யென்றால் யானை மற்ற மிருகங்களைப்போலச் சில காலத்துக்குள் இறந்துபோகும் மிருகம் அல்ல. சாதாரணமாய் ஒரு யானையானது 100 வருஷம் உயிரோடிருக்கும். சராசரியாய் எடுத்துப் பார்த்தால் யானைக்கு வயது 80-வருஷத்துக்குக்குறையாது. ஆனால் இலங்கைத்தீவிலோ சில யானைகள் 150 வருஷம் வரை உயிரோடிருந்து வேலைசெய்து கொண்டிருந்ததாகவும் தெரிகிறது.

பழகின யானைகளை இலங்கைத்தீவில் காடுகளை யழிப்பதிலும், மரங்களை யிழுப்பதிலும், பாதைகள் போடுவதிலும், கற்பாலங்கள் கட்டுவதற்குப் பெருங்கற்களைக் கொண்டுவந்து சேர்க்கவும் உபயோகப் படுத்துகிறார்கள். யானையின் தலையில் எலும்பும் தசையும் சேர்த்துச் சுமார் 8 அங்குல கனமுள்ளதா யிருக்கிறது. அப்படி யிருக்கும்போது அதைக்கொண்டு எவ்வளவு பலமாயும் வேகமாயும் தள்ளும் என்பதைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. யானையின் மத்தகம் அவ்வளவு பெரியதாயும், கெட்டியாயும், கனமுள்ளதாயிருந்தபோதிலும் அதற்குள்ளிருக்கும் மூளையானது மண்டையின் அரைக்கால் பாகத்தில் தான் இருக்கிறது. இக்காரணத்தினால்தான் யானையைச் சரியான இடத்தில் எய்து இறக்கச் செய்வது கடினம். அப்படி இடங்கண்டு பிடித்து எய்து கொல்லக்கூடியவன் மிகத்திறமையுள்ளவனும் தேர்ச்சியுள்ளவனுயு மிருக்கவேண்டும்.

யானையின் உற்பத்தியும் வளர்ச்சியும் மிகவும் தாமதமானது. சாதாரணமாய் ஒரு பெண் யானையானது பக்குவப் பிராயம் அடைய பதினைந்து வருஷம் செல்லும். அது குட்டியை இருபத்திரண்டு மாதகாலம் வயிற்றில் வைத்திருந்து தான் ஈனும். ஆகையால் முதல்குட்டி போடுவதற்குள் பெண்யானைக்கு வயது 17 ஆகிவிடும். ஒவ்வொரு தடவையிலும் ஒரு குட்டிதான் போடும். அதற்கு இரண்டு வருஷகாலம் பால் கொடுத்து வளர்க்கும். அவைகளுக்கு இரண்டே



முலைக்காம்புகள் தான் உண்டு. அவைகள் முன்னிரண்டு கால்களுக்கும் மத்தியில் இருக்கின்றன. யானைக்குட்டிகள் வாயினால்தான் பால் குடிக்கும், தும்பிக்கையினால் குடிக்காது. ஆண் யானைகள் சரியான வயதுக்குவர இருபது வருஷமாகும். ஆனால் பிடித்து வளர்க்கும் யானைகளுக்கு 25 வருஷமாகும்.

யானை இவ்வளவு பெரிய ஜந்துவாய் இருந்தபோதிலும் மிகவும் மிருதுவான தேகத்தை உடையதா யிருக்கிறது. சரியானபடி பாதுகாக்காவிட்டால் யானையின் பாதமானது வெகு சுலபமாய் புண்ணாகக் கூடியதாயும், திரேகத்தின் மேல்தோல் மிகவும் இலேசில் வழுவுண்டு போகக் கூடியதாயும் இருக்கின்றது. யானை பெரு உருவமாயிருந்தபோதிலும் மிகச் சிறுத்த இருகண்களை உடைத்தாயிருக்கிறது. அக்கண்களோ கொஞ்சம் வெயில் அதிகமாய்ப் பட்டால் பொங்கி அழற்சியை யுண்டாக்கக்கூடிய தன்மைத்தாயிருக்கின்றன. யாதொரு வியாதியுமற்ற ஒரு யானையானது ஒருநாளைக்கு நாற்பது மைல் ஒரே நடையாய் நடந்துபோகும். ஆனால் அதை வேகமாய்த் தூரத்திக்கொண்டு போனதினால் அதற்கு உபத்திரவம் ஏற்பட்டு இறந்து போனதாகவும்கூடத் தெரிகிறது. இதனால் யானை பாதத்தின் மெல்லிய தன்மையும் திரேகத்தின் மேன்மையும் நன்கு விளங்கும்.

யானைகளின் பாதங்கள் மிருதுவானவைஎன்று காட்டுவதற்குத் திருஷ்டாந்தமாகப் பிரிஸ்டல் (Bristol) நகரத்தில் ஒரு பழகின யானைக்கு நேர்ந்த ஒரு விஷயத்தைப்பற்றிக் கூறுவோம். அந்த யானையானது இருந்தாப்போல் இருந்து யாதொரு காரணமும் தெரியாமல் திரேக அசௌகர்யத்தை யடைந்ததுமன்றி நொண்டியாயும் போய்விட்டதாம். லண்டன் நகரத்தின் விலங்கினங்கள் கண்காட்சிசாலை சூப்பிரண்டாக மிஸ்டர் பார்லெட் (Mr. Barlett) என்பவரைக் கேட்டுக்கொண்டதின்மேல், அவர் யானையைவந்து பார்வையிட்டு இவ்விடத்தில் எலிகள் இருக்கின்றனவா என்று கேட்டாராம். இது பழங்கட்டடம் ஆனதினால் எலிகள் இருக்கின்றன என்று சொன்னார்களாம். அதற்கு அவர் அந்த எலிகள் இந்த யானையின் பாதத்தை அரித்திருக்கின்றன. நீங்கள் பார்த்தால் உள்ளங்காலில் பல்பட்ட இடங்கள் நன்றாய்த் தெரியும். யானை தூங்கும்போது எலிகள் வந்து அதின் பாதத்தை உட்சதையில் படும்வரை தின்றிருக்கிறது. அப்படித் தின்றதனால் பாதத்தில் சிறு பள்ளங்கள் ஏற்பட்டிருக்கிறது. அப்படி யிருக்கும்போது யானை வெளியில் நடந்துபோனதினால் சிறுக்கல் துண்டுகளும், மண்ணும் அதில் நுழைந்து கொண்டு யானை இம்மாதிரியாக நொண்டுகிறதென்றாராம். பிறகு அந்த எலிகளைப் பிடித்துவிட்ட பிறகு யானை சவுக்கியத்தை யடைந்ததாம். இதைப்பார்க்கும்போது யானையின் பாதம் மிகவும் கெட்டியாக வெளித் தோற்றத்திற்குக் காணப்பட்டபோதிலும் உண்மையாய் இவ்வளவு மிருதுவானதென்பது நன்றாய் விளங்கும்.

கடைசியாய் யானைகள் தண்ணீரில் நீந்தும் சக்தியைப்பற்றி சொல்லி முடிப்போம். தரையின் மீது வசிக்கும் எல்லா ஜீவப்பிராணிகளிலும் யானையானது தண்ணீரில் நன்றாய் நீந்தக்கூடிய திறமையுள்ளது. இலங்கையில் இருப்பதைவிட இந்தியாவில் பெருநதிகளிருப்பதால் யானைகள் இவ்விதம் நீந்துவதை இந்தியாவில் விசேஷமாய்க் காணலாம். மைசூரிலிருந்த மிஸ்டர் சாண்டர்ஸன் (Mr. Sanderson) என்பவர் தான் ஒரு சமயத்தில் டக்கா (Decca) விலிருந்து பாரக்பூர் (Barrackpore) என்கிற இடத்திற்கு 79-யானைகளை யனுப்பினதாகவும் அந்த மாதிரி போகும்போது அவைகள் கங்காநதியை மாத்திரமன்றி இன்னும் சில கிளைநதிகளையும் கடந்து சென்றனவெனக் கூறுகிறார். அந்த யானைகள் இடைவிடாமல் ஆறு மணி நேரம் நீந்தினவாம். பிறகு மணற்கரையில் சற்று நேரம் இளைப்பாறி மறுபடியும் அதே மாதிரியாக இன்னும் மூன்றுமணி நேரம் நீந்தினவாம். இவைகளினால் யானையின் நீந்தும் உன்னத சக்தி யினிது விளங்கும்.

பி. ஆர். வெங்கடேசலு நாயுடு.

## அட்டைகளும், மண் உண்ணிப் புழுக்களும்

### LEECHES AND WORMS

நெளிந்து நகரக்கூடிய பிராணிகள் ஒவ்வொன்றையும் பொதுவாகவே புழு அல்லது கிருமி என்று சொல்வது இந்நாட்டில் வழக்கமாயிருக்கிறது. அவ்வினத்தினுடைய பொது லட்சணங்களைச் சற்று விசாரிக்குமுன் அவ்வினத்திற் சேர்ந்த சில சாமான்ய புழுக்கள் அல்லது கிருமிகளையும் அவைகள் காணுமிடங்களையும் பற்றிக் கொஞ்சம் விசாரிப்பது அவசியம். தாமரைக் குளங்களில் பூப்பறிக்கச் சென்றவன் அட்டை கடித்தது என்கிறான். அதுவும் ஒரு புழுதான். மீன் பிடிக்கிறவன் தூண்டிமுள்ளுக்குப் பட்சணமாக மண் உண்ணிப்பூச்சி என்ற புழுவைத் தோண்டி உபயோகப்படுத்துகிறான். அதுவும் ஒரு ஜாதிப்புழு. நமது குடலில் புழுக்கும்படியான * நாக்குப்பூச்சி என்ற புழுவும், நாடாப்புழு (Tape-worm) என்றதுவும், நரம்புச்சிலந்தி என்ற வியாதியை உண்டுபண்ணும் படியான கிருமியும், புழுவினத்தைச் சேர்ந்தவைதாம். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இனமாக உட்பிரிவுகளுடன் வளர்ந்து வாழ்வனவாயினும் இவைகள் ஒவ்வொன்றின் செய்கைகளும் வெவ்வேறு விதமாகத் துக்கசுகத்துக்கு ஆஸ்பதமான செய்கைகளில் நாம் கண்டபோதிலும் அவைகளெல்லாவற்றிற்கும் சில பொதுவான லட்சணங்கள் அல்லது பொது அங்க அடையாளங்கள் உண்டென்று உயிர்நூலாராய்ச்சி யுடையோர் கூறியிருக்கின்றனர். அவைகளாவன.

(a) மேற்சொல்லிய புழுவினங்கள் ஒவ்வொன்றும் உருண்டு நீண்டு தேகமே வரையறுக்கப்பட்டுக் காணுவதுடன், அநேகமாய் ஒரு நுனியில் வாயையும் இன்னொரு நுனியில் ஆசனத்தையும் பெற்றுக் காணும்.

(b) நகர்ந்து நிலைபெயர உபகாரமாயுள்ள கைகால்கள் பிரத்தியேகமாயில்லாதபோதிலும் தேகத்தைச் சுருக்கி நீட்டுதலாலும், நெளியும் திறமை ஏற்பட்டு அட்டையைப்போல் நீந்தவும், மற்றையப் புழுக்களைப்போல் நெளிந்து நகரவும், சக்தியோடு இருக்கின்றன. பிடித்துக்கொள்ள, உறிஞ்சும் அவயவங்கள் (Suckers) அட்டைகளினிடத்திலும், நம் தேகத்தில் புழுக்கக்கூடிய மற்றைய கிருமிகளிடத்திலும் காணலாம். மற்றப்படி நகருவதற்கு உபகாரமாக மண்பூச்சிகள் தேகம் முழுமையும், கடினமாயும் மிக நுட்பமாயுமுள்ள முட்களால் (Setæ) நிறைந்த ஒரு போர்வையை யுடையனவாய்க் காணும்.

(c) உண்டு களிக்க உபயோகப்படும்படியாக மூன்று மேல்வளைந்த ரம்பம்போன்ற நாக்குகளை அட்டைகள் உறிஞ்சும் வாயில் அடக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளினுபயோகத்தினாலே தான் நொடிப்பொழுதில் மூன்று பிளவுகளை நம் தோலில் உண்டாக்கி, உறிஞ்சும் வாயால் வயிறார இரத்தம் குடிக்கிறது.

பிராணிகளின் தேகத்தின் உட்புழுக்கும் கிருமிகளோ உறிஞ்சும் அவயவங்கள் தவிர வாய்ப்பக்கத்திலோ அல்லது ஆஸனப்பக்கத்திலோ சில கொக்கிகளுடன் காணும். இவைகளினுதவியினால்தான் அவைகள் நம் குடலின் உள் தோலைக் குத்திப்பிடித்துக்கொண்டு உள்ளேயேயிருந்து தம் வாழ்நாளைக் கழிக்கின்றன. நாக்குப்பூச்சி மருந்துபோன்ற மயக்கம் தந்து ஹிம்ஸை செய்யக்கூடிய மருந்துகளால்தான் அவைகளை இடம்விட்டு விலகி ஒழியச் செய்யலாம். சாப்பிடும் உணவு, தேகமாகக்கூடிய ஜீரணித்த நிலைமையிலிருக்கிறபடியால் மேற்கூறிய கிருமிகளுக்கு ஜீரணக்கருவிகள் அதிகம் வேண்டியதில்லை. ஆனால் குடித்த ரத்தம் உறைந்து போகாதபடி பாதுகாக்க அட்டைகளுக்கு உமிழ்நீர் உறுப்புகள் இருக்கின்றனவாம். மண்புழுக்கள் மண்ணையே தின்று ஜீவிக்கிற விசேஷத்தை நம்மூவர்கள் முன்னமேயே கண்டறிந்திருக்கிறார்கள் என்பதற்கு மண் உண்ணிப்பூச்சி யென்ற பெயரே அத்தாட்சியாக இருக்கிறது. மண்ணைத் தின்று பிழைப்பன செடிகளன்றோ? மண்புழுவெனப்படுவது பிராணியன்றோ? இவ்வாறிருக்கையில் மண்ணைப் பிராணி எவ்வாறு உண்ணும் என்று நாம் தெரிந்துகொள்ளல் அவசியம். மண்ணோடு கலந்து அநேக செடிவஸ்துவும் பிராணிவஸ்துவும் அழுகி நிலைகுலைந்து ஒருவித ரஸ பதார்த்த நிலைமையிலிருக்கின்றன. அவ்வித ரஸ பதார்த்தத்தையே உட்கொள்ளும் பொருட்டு மண்ணை இப்புழுக்கள் உட்கொள்ளுகின்றன. உபயோகமுள்ள பதார்த்தத்தைத் தேகத்துக்கு உணவாக எடுத்துக்கொண்டு தங்களுக்குஉபயோகமில்லாத மண்ணைக் கழிவு பதார்த்தத்துடன் மலமாக விலக்குகின்றன. இவ்வாறு மண்புழுக்கள் செய்யும் செய்கை நிலத்துக்கு உழுது உரம் வைத்ததுபோல் ஆகிறது. மேல்மண் கீழ்மண்ணைகப் புரளவும், இப்பிராணிகளின் கழிவு பதார்த்தங்களோடு சேர்ந்த மண்ணே உரமாகவும் ஏற்படுகிறது. இவ்விஷயத்தை (Darwin) டார்லின் என்ற உயிர்நூல் நிபுணர் விஸ்தாரமாக ஒரு புஸ்தகத்தில் கண்டுபிடித் தெழுதியிருக்கிறார்.

ஆகையால் இவைபோன்ற ஜீவராசிகள் மனிதற்குச் செய்யும் உபகாரத்தை உற்று நோக்குங்கால், உபகாரார்த்தமாகவே ஜீவிக்கும் ஜீவராசிகள் அளவிறந்தன வென்றும் அவைகளை நாம் போற்றி ஆதரிக்க வேண்டியது அவசியமென்றும் இவைகளால் புலப்படும்.

புழுவினத்தில் ஆண் பெண் என்ற விபரம் நாக்குப்பூச்சிபோன்ற சில புழுக்களில்தான் காணலாம். ஏனைய புழுக்கள் ஆணுறுப்புகளையும் பெண்உறுப்புகளையும் தனித்துத் தன்னிடமே கொண்டு அர்த்தநாரியாக விளங்குகின்றன. இருந்தபோதிலும், ஒரு பிராணியின் ஆண்உறுப்பும் பெண் உறுப்பும் ஒரேகாலத்தில் விகசித்துப் பக்குவகாலம் அடைகிறதில்லை. அவ்வாறு அடையுமாயின் அவைகளின் சேர்க்கையால் கருத்தரித்துப் புழு இனமே குன்றிக் குலைந்து நசித்துப் போய்விடும். அதற்கு அத்தாட்சி வெகுதூரம் போய் விசாரிக்கவேண்டாம். ஒன்றுக்குள் ஒன்று நெருங்கிய சம்பந்தத்தையே நாடும் குருக்கள் ஜாதிபோன்ற சில ஜாதிக் குடும்பங்களைப் பரிசோதித்துப் பார்த்தால் தெரியும். சகோத்திரம் உதவாது என்றும் ஏழு தலைமுறை விலகி இருக்கவேண்டு மென்றும் சம்பந்த முறைகளைக் கூறவந்த மனுவும் இதே அபிப்பிராயத்துடன் இருந்தா ரென்பது நிச்சயம். ஆகவே ஒரு புழுவின் சுக்கிலத்திற்கும் இன்னொரு புழுவின் சுரோணிதத்துக்குமே விவாகம் ஏற்பட்டு அவ்வினத்தில் மக்கட்பேறு நடந்தேறி வருகிறது.

புழுக்கள் கருத்தரித்தால் முட்டை யிடுகின்றனவா, குட்டி போடுகின்றனவா என்ற விபரமும் நமக்குத் தெரியவேண்டியது அவசியம். பெரும்பாலும் இவைகள் முட்டைகள்தா னிடுகின்றன. சில நாக்குப் பூச்சி இனத்தைச் சேர்ந்த புழுக்களை வயிறு நிறையத் தம் குஞ்சுகள் நெளிய நிற்கும் நிலைமையில் நான் பரிசோதித்திருக்கிறேன். அவைகளே குட்டிபோடும் இனம். வியாதிகளுக்குக் காரணபூதமாக இருக்கும் நரம்புச் சிலந்தியோ, நாடாப்புழுவோ இவைகள் மலத்தின் மூலமாகத் தம் முட்டைகளைக் கடத்திவிட்டு, அவைகள் மறுபடி ஜலத்தின் மூலமாகவோ, அஜ்ஜலத்தைப் பருகும் ஆடு, கோழி போன்ற பிராணிகள் மாமிசத்தின் மூலமாகவோ, மறுபடி மனுஷ தேகத்தையே அடைகின்றன. ஆகையால் நாம் குடிக்கும் ஜலமும் சாப்பிடும் உணவும் சுத்தமாக இருப்பதுடன் நன்றாகக் காய்ச்சிக் கொதிக்க வைத்ததாக இருக்கவேண்டு மென்பது அவசியமாக இருக்கிறது.

இப்புழுக்களைப்பற்றிய ஆராய்ச்சியினாலும் நமக்குச் சுகாதாரமுறைகளை அனுசரிப்பது எவ்வளவு அவசியம் என்பது நன்றாகவிளங்குகிறது.

புழுக்களிலும் சில, வைத்திய முறைகளில் உபயோகப்படுத்தக் கூடியவைகளாயும் இருக்கின்றன. இரத்தத்தைக் கடித்து உறிஞ்சும் அட்டையின் சுபாவத்தைக்கண்டு, வேண்டாத இரத்தம் ஒருவருடைய தேகத்திலிருக்குமாயின் அட்டைகளைக்கொண்டு உறிஞ்சச் செய்கிறார்கள், விஷநீர்ப்பெருக்கத்தினால் வீக்கமுள்ள இடங்களிலும் அதே பிரயோகம் செய்கிறார்கள்.

N. S. ஜம்புநாதன், B.A., L.T., F.Z.S.

* நாக்குப்பூச்சி யென்பதை நாகப்பூச்சி யென்று நூலாசிரியர்கள் கூறுவர். நாகம்போன்ற பூச்சியாதலின் அதற்கு இப்பெயர் வந்தது போலும்.

# வஸ்துதத்துவ போதினி

## CHEMISTRY

### Air

காற்று அல்லது ஸஹஜவாயு

**What it contains.—அதிலடங்கியிருக்கும் வஸ்துக்கள்.**

உலகத்தைச்சுற்றிலும் காற்றுமண்டலம் அல்லது வாயுமண்டலம் மூடிக்கொண்டிருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். இந்த ஸஹஜவாயுவை நாம்கண்ணால் பார்க்கமுடியாவிட்டாலும், வேறு உணர்ச்சிகளால் அறிகிறோம். நமது கைகளை அங்குமிங்கும் அசைக்கினாலும், ஒரு விசிறியை எடுத்து விசிறினாலும், நம்மைச் சுற்றிக் காற்றிருப்பதை அறிகிறோம். இம்மண்டலத்திலுள்ள ஸஹஜவாயு அங்குமிங்கும் அடிக்கப்படுவதால் நிலக்காற்று, கடற்காற்று, புயல், தென்றல் முதலிய காற்றசைவுகள் உண்டாகின்றன. இந்த வாயுவின் குணங்களை அறிவதற்கு முன், இதிலடங்கியிருக்கும் வஸ்துக்கள் இன்னவையென்று பார்ப்போம். முக்காலத்தவர்கள் இவ்வாயுவை ஒரு மூலவஸ்து என்று நம்பினார்களென்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆனால் இதில் வெவ்வேறாகப் பிரிக்கக்கூடிய அநேக வஸ்துக்கள் இருப்பதை, இப்பொழுது பார்ப்போம்.



படத்திற் காட்டியிருப்பதுபோல், மணிபோன்ற வடிவமுள்ள, அதாவது ஒரு பக்கம் அகன்ற வாயும், மற்றொரு பக்கம் குறுகியவாயுமுள்ள, ஒருகண்ணாடிப்பாத்திரத்தை எடுத்துக்கொள்வோம். தண்ணீர் நிறைந்த ஒரு பீங்கான் தொட்டியை எடுத்து, தண்ணீரின்மேல் ஒருசிறு பீங்கான்கிண்ணத்தை மிதக்கச்செய்வோம். பிறகு நிபாக்கினி (பாஸ்பரஸ்) துண்டு ஒன்றை (சிறு பட்டாணி அளவு) யெடுத்து, அப்பீங்கான் கிண்ணியில் போடுவோம். இந்த நிபாக்கினியை எடுத்துப்போடுவதில் மிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இதைக் காற்றுப்படும்படி சிறிது நேரம் வைத்தால், நெருப்புப்பற்றி தானே எரிய ஆரம்பிக்கும். ஆகையால், இதை ஒரு புட்டியில் குளிர்ந்த நீரை ஊற்றி; அந்நீருக்குள் வைத்திருக்கவேண்டும். நமது சாதாரண தீக்குச்சியின் சிவப்பான நுனியில் வைக்கப்பட்டிருக்கும் வஸ்து இந்த நிபாக்னியே. இப்பொழுது நமது பீங்கான் கிண்ணத்திலிருக்கும் நிபாக்னித்துண்டை ஒரு சூடான இரும்புக்கம்பியினாலாவது, கண்ணாடிக்குச்சியினாலாவது தொடுவோம். உடனே இத்துண்டு தீப்பற்றி எரியும். மிக சீக்கிரமாக நமது மணிபோன்ற பாத்திரத்தைத் தொட்டியின் ஜலத்திற்குள், பீங்கான் கிண்ணம் பாத்திரத்திற்குள் அகப்படும்படி, வைக்கவேண்டும். உடனே மேலிருக்கும் பாத்திரத்தின் சிறுவாயை ஒரு தக்கையால் மூடவேண்டும். சற்று தாமதித்தாலும் நிபாக்னி எரிவதாலுண்டாகும் வஸ்து வாயுமண்டலத்தில் சிதறிவிடும். இப்பொழுது நமது பாத்திரங்களைக் கொஞ்சம் கவனிப்போம். நிபாக்னி எரிவதால் உண்டாகும் ஒருவித புகைபோன்ற வஸ்து முதலில் பாத்திரம் நிறைய காணப்படுகிறது. நிபாக்னி கொஞ்சம் எரிந்து பிறகு அணைகின்றது. இந்தப் புகைபோன்ற வஸ்து வரவரக் குறைந்து, சிறிது நேரத்திற்கெல்லாம், முற்றிலும் நிறைகிறது. இவ்வஸ்து எங்கு போகக்கூடும்? வாயுமண்டலத்தில் சிதறியிருக்க முடியாது; ஏனென்றால், பாத்திரத்தின் வாயை இறுக தக்கையால் மூடியிருக்கிறோம். ஆகையால் தொட்டியின் ஜலத்தில் கரைந்திருக்க வேண்டும். இதில் மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டும். இப்புகைபோன்ற நீரில் கரைந்து



கொண்டிருக்கும் போதே, பாத்திரத்தில் முதலிலிருந்த நீர்மட்டத்திற்குமேல் ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறுவதைக் கவனித்திருக்கலாம். கடைசியாக, முதலிலிருந்த நீர்மட்டத்திற்கு வெளியே காணப்பட்ட பாத்திரத்தில் ஏறக்குறைய 5-இல் ஒரு பாகம்(1/5) ஜலம் ஏறியிருக்கிறது. அதாவது அப்பாத்திரத்திலிருந்த காற்று அல்லது ஸஹஜவாயுவின் 5-ல் ஒரு பாகம் எங்கேயோ போய்விட்டது. அக்காற்றிருந்த இடம் காலியாக, நீர் உயர ஏறிற்று. இப்படிக் காணமல் போன வாயு நிபாக்னியோடு கலந்து எரிய, அப்புகைபோன்ற வஸ்து வந்தது. இப்பொழுது பாத்திரத்தில் தங்கியிருக்கும் வாயுவைச் சற்று பார்ப்போம். ஒரு எரியும் திரியையாவது, மெழுகுவத்தியையாவது, பாத்திரத்தின் தக்கையை எடுத்துவிட்டுச் சீக்கிரமாகச் சிறுவாயின் வழியாய்ப் பாத்திரத்தின் வாயுவில் வைப்போம். எரிகின்ற திரி அல்லது மெழுகுவத்தி அணைகின்றது. மெழுகுவத்தியை எடுத்துத் தீப்பற்றச் செய்து மறுபடி அந்த வாயுவில் வைப்போம். இப்பவும் வத்தி அணைந்துபோகிறது. ஆகையால் நமது ஸஹஜவாயுவில் இரண்டுவித வஸ்துக்கள் இருக்கின்றனவென்று தெரிகிறது. வஸ்துக்களை **எரியச்செய்யக்கூடிய வாயு** ஒன்றும், வஸ்துக்களை **எரியவிடாத வாயு** மற்றொன்று மிருக்கின்றன. இதில், முதலாவதற்குப் **பிராணவாயு** என்றும், இரண்டாவதற்கு **உப்புவாயு** என்றும் பெயர். இவைகளைப்பற்றி பிறகு பார்ப்போம்.

இவைகளைத்தவிர வேறு வஸ்துக்கள் ஸஹஜவாயுவில் இருக்கின்றனவா என்று பார்ப்போம். ஒரு கண்ணாடி மூக்குக்கிண்ணத்தை எடுத்து, அதில் கொஞ்சம் பனிக்கட்டியைப் போடுவோம். சற்று நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தில் நீர்த்துளிகள் காணப்படுகின்றன. இவை எங்கிருந்து வந்தன? உள்ளிருக்கும் பனிக்கட்டியின் நீர் வெளியே கசிந்திருக்கக் கூடுமா? இல்லை. நீர் மட்டத்தின் வழியாய் கசிவதுபோல், கண்ணாடிப் பாத்திரத்தில் கசியாது நமது மூக்குக்கிண்ணத்தின் வெளிப்பக்கத்தில் நாம் ஜலத்தைத் தெளிக்கவில்லை. ஆகையால் வாயுமண்டலத்தில் நீராவி (நீரின் ஆவி) இருக்கிறதென்றும், அந்த ஆவி பனிக்கட்டியின் குளிர்ச்சியால் நீர்த்துளிகளாக மாறிற்று என்றும் தெரிகிறது. பாத்திரத்தில் பனிக்கட்டியோடு கொஞ்சம் சாதாரண உப்பைக் கலந்து வைத்துப் பார்ப்போம். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தில் ஒருவித வெண்மையான வஸ்து காணப்படுகிறது. அதைக் கையால் தொட்டுப் பார்ப்போம். தொட்டவுடன் நீராக மாறுகிறது. இது என்ன? உப்பும் பனிக்கட்டியும் சேர்ந்தால் **சீதோஷ்ண நிலை** குறைகிறது. மிகக்குளிர்ந்த நிலையிலிருப்பதால், பாத்திரத்தின் சமீபத்திலுள்ள (வாயுமண்டலத்தின்) நீராவி உறைபனியாக மாறிப் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தில் தங்குகிறது. அதை நாம் தொடும்போது நமது தேகத்தின் உஷ்ணம் படுவதால் அது நீராக மாறுகிறது. இவ்விரண்டு பரீட்சைகளாலும் வாயுமண்டலத்தில், அதாவது ஸஹஜவாயுவில் நீராவியிருக்கிறதென்று அறிகிறோம்.

நமது வீடுகளில் உள்ள சுண்ணாம்புப் பாத்திரத்தின் தண்ணீரின்மேல் என்ன பார்க்கிறோம்? ஏதோ வெண்மையான வஸ்து ஒரு படையாக மிதக்கப் பார்க்கிறோம். அது என்ன? நாம் முதலில் பாத்திரத்தில் சுண்ணாம்பைப் போட்டு, தண்ணீர் விட்டபோது இது காணப்படவில்லை. இவ்வெண்மைப்படை சீமைச் சுண்ணாம்புப் படை. ஆகையால் எவ்விதமாகவோ இச்சீமைச் சுண்ணாம்பு உண்டாயிருக்கவேண்டும்.

சீமைச் சுண்ணாம்போ, சுண்ணாம்பும்,கரியமில

வாயுவும் கலந்த ஒரு சேர்க்கைப்பொருள். ஆகையால் இப்பொழுது இச்சீமைச் சுண்ணாம்பு உண்டானதற்கு இவ்விரண்டு வஸ்துக்களும் வேண்டும்; அதில் சுண்ணாம்பு, பாத்திரத்தின் நீரில் கரைந்து இருந்தது. கரியமில வாயு எங்கிருந்தது? வாயு மண்டலத்தில் அல்லது ஸஹஜவாயுவில் கலந்திருக்கவேண்டும். ஆகையால் ஸகஜ வாயுவில் **கரியமிலவாயு** இருக்கிறதென்று தெரிகிறது. ஒரு சிறு பீங்கான் கிண்ணத்தில் கொஞ்சம் சுத்தமான சுண்ணாம்பு ஜலத்தை எடுத்துக் காற்றுப்படும்படி வைத்தால், சிறிது நேரத்திற்கெல்லாம் சீமைச்சுண்ணாம்புப் படை அந்த நீரில் மிதக்கும். அந்த ஜலத்தைக் கலக்கிக் கொண்டேயிருந்தால், அது கொஞ்சம் கொஞ்சமாக வெண்மை நிறம் அடையும். சீமைச் சுண்ணாம்புப் பொடிகள் அந்த நீரில் மிதப்பதால் இவ்வெண்மை நிறம் உண்டாகிறது. இவ்விஷயத்தாலும் ஸஹஜ வாயுவில் **கரியமில வாயு** இருக்கிறதென்றாகிறது.

ஆகையால் முற்காலத்தவர்கள், **மூல வஸ்து**வென்று நம்பின ஸஹஜ வாயுவில் **உப்புவாயு, பிராணவாயு, நீராவி, கரியமிலவாயு** முதலிய வஸ்துக்கள் இருக்கின்றன. இன்னும் **நவச்சாரவாயு, உப்பு அமிலம்** அல்லது உப்புவாயு புளிப்புத் திராவகம் முதலிய வஸ்துக்களிருக்கின்றன. இவைகளைத்தவிர **ஆர்கான்**, கிரிப்டான், நியான் முதலிய வஸ்துக்களும் மிகக் கொஞ்சம் இருப்பதாக இப்பொழுது வஸ்து தத்துவ சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இவைகளில் உப்புவாயு ஏறக்குறைய 5-இல் 4 பாகமும் (4/5), பிராணவாயு ஏறக்குறைய 5-இல் ஒரு பாகமும் (1/5) மற்றவை மிகக் கொஞ்சமாயுமிருக்கின்றன.

M. R. சுப்பிரமணியம், பி. ஏ.

# வஸந்த மாளிகை

## YASANTHA MALIKAI

## அத்தியாயம் 3.

### திருவூர் மடம்.

**பா**ண்டியர் காலம் முதல் திருவூர் என்னும் கிராமத்தில், ராஜபுருஷர்கள் வஸதியின்பொருட்டு, உஷ்ண காலங்களில், தங்குவதற்காக ஓர் அரண்மனை யிருந்ததென்றும், அஃது கி. பி. 1310-ம் வருஷத்தில், டில்லியில் அரசாண்ட மகமதிய சக்ரவர்த்தி, 'அல்லாவுதீன்' என்பவரின் ஸேனாதிபதியான 'மாலிக் காபர்' என்பவரால் முற்றுகை போடப்பட்டு, அவ்வரண்மனையும் கைவசப் படுத்தப்பட்டபொழுது, ஆங்கு அடைக்கலம் புகுந்தவர்கள் கத்திக்கு இரையாக்கப்பட்டதுமல்லாமல், அவ்வரண்மனையும், அதைச்சார்ந்த சித்திரவேலைப்பாடுகளும், உயர்ந்த மாடமாளிகைகளும், ரமணீயமான உத்யான வனங்களும், அன்னவன் ஆக்ஞைப்படி, ராணுவ வீரர்களால் நாசஞ்செய்யப்பட்டனவென்றும், அதுமுதல் அவ்வரண்மனையில் அன்றிருந்தோரின் பிசாசங்கள் நிலையமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருந்ததால், அப்பக்கத்தில்கூட மனிதர் நடமாடக் கூடாமல் அவ்வரண்மனை பாழடைய விடப்பட்டதென்றும், இப்பொழுது நமது சரித்திர காலத்தில், சுமார் நானூறு வருஷங்கள் சென்று விட்டனவாதலாலும், அங்கே வஸிக்கும் பண்டார ஸந்நிதியின் மந்திர சக்தியாலும் ஜபதபாதிகளாலும், அப்பிசாசங்கள் முக்திபெற்றுப் போயினவென்றும் அச்சந்நிதியின் அற்புதச் செய்கைகளால், அதிக சந்தோஷமடைந்த மஹாராணியார், அவ்வரண்மனையையும், அதைச் சுற்றிலுமுள்ள திருவூர் கிராமத்தையும், மந்திரியின் சிபார்சின் பேரில், அப்பண்டார ஸந்நிதிக்கே தானம் செய்து சாசுவதக்கௌலும் கொடுத்திருப்பதாயும், அவ்வரண்மனை இப்பொழுது திருவூர் மடமாய் விளங்கி வருவதாயும் அதில் திருவூர் பண்டார ஸந்நிதி யொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாயும், சரித்திரங்கள் மூலமாயும், சில சாஸனங்கள், தாம்ரசாஸனங்கள், பிரத்யக்ஷதர்சிகளாலும், தெரிய வருகின்றன.

அம்மடாதிபதி யெப்பொழுதும் ஸ்நாநாதி ஜபதபம் யோகம் பிரம்மவிசாரணை முதலான வேதாந்த விசாரங்களிலேயே அதிபுத்திமான்களுடனும் நல்லோர்களுடனும் ஸத்காலக்ஷேபம் செய்துவருவதால், ஸாதாரண ஜனங்கள் அப்பக்கம் எட்டிப்பார்த்தாலும் அதைப் பற்றிப் பேசினாலும் ராஜதண்டனைக் குட்படுவார்களென்றும், அவ்வளவு கட்டுக்காவலுடன் அம்மடம் பந்தோபஸ்து செய்யப்பட்டு வருகிறதென்றும், அப்பிரதேசத்தைச் சார்ந்த ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் நமது சரித்திர தினத்துக்குமுன் சிலநாட்களாய், ஓர் யௌவன மங்கை அபகரிக்கப்பட்டு, அம்மடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்றும் அவ்விடத்திற்கு மந்திரியின் கார்யதர்சியாகிய 'மஹாவீரன்' போய் வருகிறான் என்றும் உலக அபவாதம் அப்பிரதேசம் முழுமையும் பாவியிருக்கிறது.

நமது சரித்திர காலத்தில், அவ்வரண்மனையின், இடிந்த கோபுரங்களும், ஆங்காங்கு வெடித்த மதில்களும், அக்கட்டிடங்களின் பலவிடங்களில் முளைத்து வளர்ந்திருக்கும், அரசு, ஆல் முதலான விருக்ஷக்கன்களும், மனிதர்கள் கைநாடாது ஒடிந்துகிடக்கும் உன்னதவிருக்ஷ சாலைகளும், அடர்ந்த புதர்களும், மூலைகளிலும், மாடங்களிலும் வைக்கப்பட்ட பக்ஷிக்கூடுகளும், அவ்வரண்மனையானது பாழடைந்த நிலைமையைத்தெரிவித்தனவாயினும், முன் ஒரு காலத்தில் அதன் உன்னத நிலைமையும், காலக்கொடுமையால் இவ்வாறு இக்கோலத்துக் குட்படுத்தப்பட்டதென்றும், பார்ப்பவர்கள் மனதில் அஃது ஓர் பரிதாபநிலையைத் தெரிவித்தன.

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபடி, நமது பிரயாணிகள் வாசற் காவலனிடம் தங்கள் குதிரைகளை ஒப்புவித்துவிட்டு, உள்ளே புகுந்து ஆசார வாசலை நோக்கிச் சென்றார்கள். 'கொ', 'கொ,' 'கொ' என்றும் 'சல' 'சல' வென்றும் இன்னும் பலவிதமான பக்ஷிகளின் சத்தம் இடையிடையே கலந்து கலந்து கேட்டதைத் தவிர வேறு யாதொரு மனித அரவமுமின்றி நிச்சப்தமாயிருந்தது. அப்பொழுது நமது குதிரைவீரன் வலபத்ரனை நோக்கி "ஐயா! நாயுடுகாரு நீர் என்ன அய்யா! பிறர் அரண்மனைக்குள் அனுமதியின்றி இவ்வளவு தைரியமாய்ப் பிரவேசிக்கின்றீரே! யாராவது உம்மைத் தடுத்தால்—"

**வலபத்ரன்.**—'சீ! நீயொரு ஆண்பிள்ளைதானா? வீரனும் வெறியனும் காலதேச வர்த்தமானங்களைக் கவனிப்பானா? கையெங்கே போச்சு, கத்தி யெங்கே போச்சு?" என்று சொல்லிக்கொண்டு தன் உடைவாளை வலக்கையால் உருவி கிறுகிறுவென்று தன் தலைக்குமேல் சுழற்றி தர்மராஜன் மார்புக்கு நேராகப் பிடித்தான்.

தர்மராஜன் 'இதேதடா! ஆபத்து! நல்ல சிநேகிதம் பிடித்தோம்—குடிகாரப்பயலைப்பார்த்து. ஆ! என்ன செய்வது! கார்யம் ஆகும்வரை கழுதையின் காலைப் பிடிக்க வேண்டியதுதான்' என்று மனதைரியப்படுத்திக்கொண்டு, வேண்டுமானால் ஸமயத்துக்கு உதவும் பொருட்டு, தன் வலக்கையால், தன் இடுப்பில் தொங்குகின்ற வாளின் பிடியைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டவாறே, தன் மனக்கலக்கத்தை வெளிக்காட்டாதவனாய்ப் "புன்சிரிப்புடன் பேஷ் 'நாயுடுகாரு அதுதான்—புருஷலக்ஷணம்—தைரியம் புருஷலக்ஷணம்—உம்முடைய மனோ தைரியத்தை யறியும்பொருட்டு—"

**வலபத்ரன்.**—தர்மூ! நானென்ன கும்பினியான் பட்டாளத்திலே, இந்தக் கையாலே (பாடுகிறான்.)

அடே! கும்பினியான் சண்டையிலே!
கும்பினியான் சண்டையிலே,
கொலைகள் மெத்தச் செய்தேனடா!
கும்பினியான் கொடுத்தகள்ளு குடம்குடமாய்
குடித்தேனடா!
நன்னானே! நன்னானே!

என்று குதித்துவிட்டு மறுபடி நடந்து நமது வீரர்கள் ஆசாரவாசலுக்குமுன்னுள்ள சோலை வந்து சேர்ந்தார்கள்.

**தர்மராஜன்.**—(மறுபடி)வலபத்ரரே! நீர் இவ்வளவு திண்ணிவாய்ச் சொல்லுகிறீரே!—உம்முடைய தைரியத்துக்கு யாதொரு குறைவும் நான் கல்பிக்கவில்லை.—நான் கேட்பது:—அங்கே யாராவது உமக்குப் பழக்கமா? என்ன காரணமாய்ப் போகிறீர். உமக்கு வேதாந்தம் முதலானவைகளில் பைத்தியமுண்டென்று தோன்றவில்லை—"

**வலபத்ரன்.**—'வேதாந்தமா! அதென்னது, அதைப்பற்றிச் சொல்லாதே. ஆனால் உண்மையைச் சொல்லுகிறேன்—நான் பலவிடங்களில் விசாரித்தமட்டில் அப்பண்டார சந்நதி யெனக்குமுன் பழக்கமென்று தோன்றுகிறது.—சரி! அதிருக்கட்டும்—உனக்கென்ன ஜோலி?—"

**தர்மராஜன்.**—நான்தான் முன்னமே சொன்னேனே வேடிக்கையாய்—

**வலபத்ரன்.**—ஆ! வேடிக்கை—என்னிடமே காது குத்துகிறாயே. நீங்களெல்லாம் பெரிய மனுஷ்யாள். என்ன பொய் சொன்னாலும் அது லௌகீக ஸம்பிரதாயம் (Policy) நாங்கள் சொன்னால் அது பொய்—ஆ— அப்படித்தானே. நாங்கள் மாத்திரம்,கபடமன்னியில்—"

**தர்மராஜன்.**—வலபத்ர! அப்படி வருத்தப்படலாகாது. உண்மையாய்ச் சொல்லுகிறேன். சும்மா வேடிக்கையாய்த்தான். தாங்கள் சொல்லப் பிரியமுண்டானால் சொல்லுங்கள். இல்லாவிட்டால்—"

**வலபத்ரன்.**—'தாராளமாய்க் கேட்டுக்கொள். தன்நயம் (Selfishness) ஸமயோசிதமாய் நடத்தல் (Adaptability),கபடம் (Humbug) என்னும் மூவ்வகைப்பட திறமைகள் வாய்ந்தவனே இவ்வுலகில் கஷ்டப்படாமல் காலங்கழிக்கவல்லவன்—ஆ!முகத்தை வலிக்கின்றாயே—இதுதான் கபடமென்பது—எப்படியானாலும் சரி! இது என்னுடைய சித்தாந்தம்.

**தர்மராஜன்.**—ஒவ்வொருவனும் ஸ்வயலாபத்தைத் தான்—

**வலபத்ரன்.**—'தடையென்ன, ஸ்வயநயம் பாராட்டாதவன் உலோகத்தில் இல்லவேயில்லை. ஆனால் அதை ஸாதித்துக்கொள்ளுவதால் பலபேர் பலவிதமான ஸாதனங்களை உபயோகிக்கின்றார்கள். இதில்

ஏதோ தான் ஸ்வயநயம் கருதாமல், பரோபகாரந்தான் முக்கியம் என்றுசொல்லுபவன் ஓர் கபடஸ்தன். அவன் தான் பிறர்குடியைக் கெடுத்தாவது தன் கார்யத்தை ஸாதித்துக்கொள்ளுகிறவன்.

தர்மராஜன்.—(தன் தலையைக் கைவிரல்களால் அழுத்திக்கொண்டு) 'ஏதோ நீர் சொல்லுவது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. இதைப்பற்றி யென்ன பேச்சு. நீர் சொல்லுகிறபடியே வைத்துக் கொள்ளுவோம்—அதிருக்கட்டும்—நீர் போகிற விஷயம்—"

வலபத்ரன்.—ஆ! அப்படி வா! என் செலவுக்கோ ஏராளமான பணம் வேணும் (தன் பணப்பையைக் குலுக்கி உயர எறிந்து மறுபடி கையில் பிடித்துக் கொண்டு). பணம் இல்லாதவன் பிணத்துக்குச் சமானம்—நான் உத்தேசித்தபடி இந்தப் பண்டாரசந்நிதி, என் தோழனாய் இருந்துவிடும் விஷயத்தில்—ஒரு பெரிய கல்பக விருக்ஷத்தைக் கண்டு பிடித்த மாதிரி தான்—தவிரவும்—ஒரு குட்டியொன்று இருக்கிறதாகவும் கேள்வி—இந்தப் பண்டாரத்துக்கு—ஆ! பெண் என்றால் வாயைப் பிளக்கிறாயா? வா! வா! நல்ல ஆஸாமி நீ—

நமது வீரர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டே முன்வாசலில் வந்து சேர்ந்தார்கள்.

வலபத்ரன்.—வாயிற் காப்போனைப் பார்த்து, 'ஏனப்பா! சாமியாரவர்கள் என்ன செய்துகொண்டிருக்காங்க? இப்போ அவுங்க தரிசனங்கிடைக்குமா?—

காவல்காரன்—சாமியாரவுக நிட்டையிலே இருக்காங்க,—இப்போ ஒருவனும் போகக்கூடாது—உத்தரவாயிருக்குது.—

வலபத்ரன்.—'சீ! மூடா!' (ஓர் வெள்ளி நாணயத்தைக் காவல்காரன் முன் எறிய அது 'கல்' என சத்தித்து, உருண்டோடி யவன் பாதங்களில் வீழ்ந்தது. அதைக் காவல்காரன் எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்ளவே மறுபடியும் வலபத்ரன்:—அடே முட்டாள்! இப்பொழுது சொல்: சாமியாரை அவசியம் இப்பொழுதே பார்த்தாகவேணும், ஓர் அவஸர ஸமாசாரம்; உன் வெகுமதியும் அதிகமாகும்.

காவல்காரன்.—'இதோ வந்துட்டேன். எசமாங்களே. நாய்க்குட்டி மன்னிச்சுக்கிடணும்' என்று உள்ளே சென்றான்.

வலபத்ரன்.—தர்மராஜனைப்பார்த்து 'பார்த்தாயா காசுசெய்கிற வேலையை?' என்று சொல்லி கண்களைச் சிமிட்டினான்.

உத்தம குணவானான, தர்மராஜன் வலபத்ரன் செய்கைகளைப் பார்த்து இஃது ஏதோ அற்புதமான கனவு போல் தோன்றுகின்றதென்று உணர்ந்து, தன் துக்கங்களுக்கு மத்தியில் சற்றுப் புன்சிரிப்புமடைந்தான்.

இதற்குள் காவல்காரன் ஓடிவந்து, நமது வீரர்களை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான்.

**ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், பி.ஏ., பி.எல்.**

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## வியாஸ விதானம்
## Essay writing
## IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
## REFLECTIVE ESSAYS
### 1. பழமொழிகள்—பழகப்பழகப் பாலும் புளிக்கும்

Proverbs:—Familiarity breeds contempt

குறிப்பு.—உண்டானவிதம்—அதன் பொருளும் உதாரணங்களும்—புறனடைகள்; எல்லை—மதவிஷயப் பொருத்தம்—விளக்கும் கதைகள்—முடிவு.

பால் மிக ருசியான வஸ்து; உடலுக்கு ஸௌக்யத்தை உண்டாக்கும் குணம் அதற்கு உண்டு. இதை மிதமாகச் சாப்பிடவேண்டிய காலங்களில் உட்கொள்ள வேண்டிய முறைப்படி குடித்து வந்தால், அதைக் காணும்பொழுதெல்லாம் நமக்கு ஒருவித திருப்தியும், அதை உட்கொள்ளவேண்டிய ஆவலும் உண்டாகும். அவ்வாறு இன்றி, செல்வ மிகுதியாலோ அல்லது வ்யாதி மிகுதியாலோ பாலை அடிக்கடி நாம்உட்கொள்ள வேண்டி வந்துவிட்டால் முன்னிருந்த விருப்பும் போய் வெறுப்பு உண்டாகிவிடும். இதை இப்பழமொழியில் புளிக்கும் என்ற மொழியால் விளக்கப்பட்டிருக்கிறது. ருசிகளுள் தித்திப்புமிகச்சிறந்ததென்பதும் புளிப்பு தாழ்ந்த ருசியில் ஒன்றென்பதும் எல்லோரும் அறிந்தவிஷயம். இதற்கேற்பவேதான் இங்கு ருசியில் வெறுப்புண்டாகும் என்பதைக் காட்டப் புளிக்கும் என்ற பதம் இட்டிருக்கிறது. ஆகவே பால் எவ்வளவு நல்ல வஸ்துவாயினும் அதை அளவுக்கு மிஞ்சி அடிக்கடி குடித்துவந்தால் அதுவும் ருசியில் குறைந்துவிட்டாற்போலத் தோற்றும் என்ற அனுபவத்திலிருந்து இப்பழமொழி உண்டாயிருக்கிறது.

முற்கூறிய வெறுப்பு பால் விஷயத்தில் மாத்திரம் காணப்படுவதல்ல. எந்த ஸுகமான விஷயத்திலும் இந்த அனுபவம் எல்லாருக்கும் உண்டு. பஞ்சணை, சுகந்த வஸ்துக்கள், அழகிய தோற்றம் முதலிய உலக விஷய இன்பங்கள் எவையாயிருந்தபோதிலும் அவைகளுடன் பழகப் பழக முன்போல அவைகள் ஸுகத்தையும் ஆச்சர்யத்தையும் விளைக்கா. ஸமுத்ரத்தைக் காணாதவன் கண்டால் அவனுக்கு உண்டாகும் ஆனந்தம், அதிலேயே கிடந்துழலும் செம்படவனுக்கு இருக்குமா? இக்காலத்தில் பட்டணங்களில் மாடு குதிரையின்றித் தானே ஓடும் வண்டிகளைக் கண்டவுடன் கிராமத்தானுக்கு உண்டாகும் ஆச்சர்யமும்மனக் குவிவும் ஒரு பட்டணத்தானுக்கு உண்டாகுமா? புதியவர்களைக் கண்டால் உண்டாகும் பயம் முதலியன குழந்தைக்குத் தாயைக் கண்டால் உண்டாகுமா? வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்கள் தோன்றிய காலங்களில் எவ்வளவு பயத்தை உண்டாக்கினவோ அவ்வளவு பயமும் இப்பொழுது இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப்போகவில்லையா? ஆதலால் இப்பழமொழி பால் விஷயமாக ஏற்பட்டபோதிலும் இது எல்லா விஷயங்களுக்குப்பொதுவான பொருளை உடையது. எந்த உலக விஷயத்தோடு ஒருவன் அதிகமாகப் பழகுகிறானோ அந்த விஷய சம்பந்தமான ஆச்சர்யம், ஆனந்தம், பயம் முதலிய மனோநிலைகள் குறைந்து கொண்டே வரும் என்பதே இதன் பொருள்.



பழகிவிட்டால் ஒருவிஷயத்தின் மேன்மை குறைந்ததாகக் காணப்படுமே என்று நாம் நல்ல விஷயங்களிலிருந்து முற்றிலும் ஒதுங்கிவிடவும் கூடாது, அதிகப் பழக்கம் வெறுப்பை உண்டாக்கும் என்றெண்ணி கெட்ட விஷயங்களில் அதிகமாகப் பழகிவிடவும் கூடாது. ஆகவே இந்தப் பழமொழியின் எல்லையை நன்கு உணரவேண்டும். கெட்ட விஷயங்களில் எவ்வளவு பழகியும் அதில் மனிதர்களுக்கு எளிதில் வெறுப்புத் தட்டாது, நல்ல விஷயங்களில் எவ்வளவு பழகியபோதிலும் அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்புக்கு முன்னர் அவசியம் இருக்கவேண்டிய அதிக ஆவலே உண்டாவதில்லை. ஆகவே பழகப் பழக நல்ல விஷயங்களில் ஆவல் திடமாக நிலைப்பதரிது, கெட்ட விஷயங்களோ புளிக்கா, அப்படி இருந்தும் கொஞ்சகாலம் நிஸ்ஸாரமாகத் தோன்றின போதிலும் மறுபடி அவைகள் விஷயமான விருப்புத் திரும்பிவந்துவிடும். ஆகவே உலக விஷயங்களுடன் அதிகமாகப் பழகினால் அவைகளிடம் உள்ள மேன்மை விளங்காது, அவைகளிடம் அதிக ஆவல் முன்னர் இருந்தால் அது குறைந்தும் காணப்படுமே ஒழிய திடமான வெறுப்பு ஏற்படாது என்பதாயிற்று.

இனி மதவிஷயமாக இந்தப் பழமொழியைப் பொருத்துங்கால் இதன் ஆழ்ந்தபொருள் நன்கு விளங்கும். பரம்பொருள் நம்மை உண்டாக்கி நாம் நேர்வழியில் அனுபவித்துக் கடைத்தேற உலகையும் உண்டாக்கி யிருக்கிறார். இதற்கு விரோதமாக நம்மைத் தடுத்து நமது சக்தியை நன்றாக வெளிப்படுத்தப் பலமான தடைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார். அவைகளுள் இந்த அதிகப் பழக்கத்தின் கேடு ஒன்று. இதனால் உலக விஷயங்களோடு ஏற்படும் அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்பை நீடித்திருக்கும்படி செய்து ஒருவித வைராக்யம்கொண்டு, இதே அதிகப் பழக்கத்தால் ஸ்ருஷ்டி வைசித்ரியம் சிறப்பு முதலியவைகளை உள்ளபடி காணவொட்டாது தடுக்கும் சக்தியைத் தகைந்து, அதற்கு ஆளாகாது பகவத் விஷயத்தில் ஈடுபடுவதில் அப்பியாஸம் செய்து கடைத்தேறவேண்டும் என்பதே கடவுள் கருத்து என்று வெளியாகிறது. இப்படி இருக்க நாம் பொதுவாக உலக விஷயங்களில் உண்டாகும் வெறுப்பைத் தகைந்து அதற்கு ஆளாகாதும், ஸ்ருஷ்டிவிஷயத்தில் ஒருவித ஆச்சர்யக் குறைவை விருத்திசெய்தும் கொண்டு உலகில் கிடந்துழலுகிறோம். இது நீங்கிப் பிழைக்கவேண்டுமாகில் முற்கூறியபடி அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்பைத் தடுக்கவேண்டிய விடத்தில் தடுத்து, திடப்படுத்த வேண்டிய விடத்தில் நிலைநிறுத்திப் பழகவேண்டும்.

இவ்விஷயமான கதைகள் அநேகம் உண்டு. கிருஷ்ணபரமாத்மா தகப்பனுருக்கு வஸுதேவர் என்று பெயர். அவர் ஒருகால் மேன்மை பெறவேண்டி குருக்ஷேத்திர பூமியில் ஒரு யாகம் செய்ய உத்தேசித்தார். அப்பொழுது நாரதர் அங்கு வந்து சேர அவரை அந்த யாகத்தை நடத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டார். 'பகவானைப் பிள்ளையாகப் பெற்றும் மேன்மைபெற இவர் யாகம் செய்ய எண்ணுகிறாரே! யக்ஞேச்வரன் கிருஷ்ணனாகவிருக்க, இப்படி இவர் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறாரே! இது அதிகப் பழக்கத்தின் கொடுமை. இப்பொழுது உமது பிள்ளைதான் பரம்பொருள் என்று கூறிவிட்டால் அபிமானம் நிறைந்த அவர் மனதில் பதியாது. இந்த யாக முடிவில் பார்த்துக்கொள்ளுவோம்' என்று யாகம் செய்துவைத்தார். அதில் வந்த மந்திரங்கள், செய்த தானங்கள், பிரஸங்கிக்கப்பட்ட பரமாத்ம வைபவங்கள் எல்லாவற்றாலும் வஸுதேவர் மனத்திலிருந்த அதிகப் பழக்கத்தின் கொடுமை கழல நாரதர் கிருஷ்ணன் பெருமையை எடுத்து உபதேசித்தார். அன்றுமுதல் கிருஷ்ண பரமாத்மாவை அதிகப் பழக்கத்தால் பிள்ளை என்று கருதாது கடைசிவரை பரம்பொருளாகக் கருதி கடைத்தேறினார் வஸு

தேவர். மஹாபாரதத்தில் விராடநகரத்தில் கௌரவ ஸேனையைக் கண்டு பயந்தோடிய உத்தரன் பாரத யுத்தத்தில் பழக்க விசேஷத்தால் வெகு தைர்யமாக யுத்தம் செய்தான். தவளைகள் அரசன் வேண்டுமென்று கடவுளைக் கேட்டபொழுது அவர் ஒரு கட்டையை விட்டெறிந்தார் என்றும், அது தண்ணீரில் விழுந்த வேகத்தால் பயந்திருந்த தவளைகள் காலக்கிரமத்தில் அது அசையாததுகண்டு பயம் நீங்கி அதன்பேரில் எறிக்குதிக்கத் தொடங்கின என்று ஒரு கட்டுக்கதையும் உண்டு.

ஆகவே அதிகப் பழக்கத்தால் ஸத்விஷயங்களுக்கு ஏற்படக்கூடிய கெடுதியைத் தடுத்து, அதனால் அஸத் விஷயங்களில் ஏற்படும் வெறுப்பை நிலைத்த வைராக்கிய மாக்கி வெகு ஜாக்கிரதையாக இவ்வுலகில் நாம் கடைத்தேறவேண்டும்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸங்கள்

* 1. கெடுவான் கேடு நினைப்பான்.
2. நன்மை விதைத்தால் நன்மை விளையும்.
3. இக்கரைக்கக்கரை பச்சை.
4. கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ ?
5. ஆருமில்லா வூரில் அசுவமேத யாகம் பண்ணுகிறாயா ?
6. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.
7. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
8. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
9. அடாது செய்பவர் படாது படுவர்.
10. உனக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதோ ?
11. முயற்சி யுடையோர் இகழ்ச்சி அடையார்.
12. கொன்ற பாபம் தின்றால் போகும்.
13. ஆத்திச்சூடி முதலிய நீதிநூல் வாக்கியங்கள்.

* இவைகள் எல்லாம் விவேகபோதினியில் முன்னரே விஸ்தரிக்கப்பட்டவை.

### பொதுக்குறிப்புகள்

1. உண்டான விதம்.
2. அதன்பொருள் உதாரணங்கள்.
3. புறனடைகள் : எல்லை.
4. மத விஷயப்பொருத்தம்.
5. விளக்கும் கதைகள்
6. முடிவு.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## TRANSLATION MODELS

### (11). HOW FAR IS THE SKY FROM US ?

What we call the sky is nothing but the appearance of blue that we get on a bright day, owing to the fact that particles in the air reflect the blue part of sun light to our eyes. When we see the blue sky, then what we really see is the air. The height of the particles that reflect this blue light to our eyes is not very great. It is perhaps fifty or sixty miles at the most, and compared with the size of the Universe, that is nothing at all. But by the sky we mean, not the blue sky of day time, but the great space. around us, that we may see on any bright night. We see vastly farther then than in the day time because we can see right through the air out to the stars, whilst in the day time the sun is lighting up all the air around us, so that though we seem to see a long way, we cannot really see past the lit-up air—except when there is something very bright beyond it, such as the sun itself and sometimes the moon.

### நம்மிடமிருந்து வானம் எவ்வளவு தூரம் ?

ஸூர்யன் ஒளியின் நீலபாகத்தை நம் கண்களுள் புகும்படி வாயுவின் அணுக்கள் பிரதிபலனம் செய்கின்றன என்ற உண்மைக்கு ஏற்ப, பிரகாசமான பகலில் நீலவர்ணமாக மேலே உண்டாகும் நீலத்தோற்றத்தைத் தவிர நாம் வானம் என்று கூறுவது வேறொன்றும் அன்று. நீலவானத்தைப் பார்க்குங்கால் நாம் உண்மையில் வாயுவைத்தான் காண்கிறோம். இவ்வாறு நீல ஒளியை நமது கண்களில் விழும்படி பிரதிபலனம் செய்யும் அணுக்களிருக்கும் உயரம் வெகு அதிகமல்ல. அதிகமாக விருந்தால் ஒருவேளை இது 50 அல்லது 60 மைல் தூரம் இருக்கலாம்; இதைப் பிரபஞ்ச அளவோடு ஒப்பிடுங்கால் இது ஒன்றுமே இல்லாமல் போய்விடும். ஆனால் வானம் என்று கூறும்பொழுது பகலில்பார்க்கும் நீல வானமல்லாது, சிற்சில வேளைகளில் இரவு நிர்மலமாக இருக்குங்கால் நம்மைச் சுற்றிக் காணப்படும் பெரிய வெளியையும் நாம் கருதுவது உண்டு. இக்காலங்களில் வாயுவின் வழியாக ஊடுருவி அப்பாலிருக்கும நக்ஷத்ரங்களைக் காணமுடியும். ஆதலால் பகலைவிட இரவில் நாம் அதிக விரிவாகக் காணலாம். பகற்காலத்தில் சுற்றியுள்ள வாயுவை ஸூர்யன் ஒளிவிடும்படி செய்வதால் அதிகதூரம் நாம் பார்க்கமுடியும் என்று தோன்றும். ஆனால் பிரகாசமான வாயுவுக்கு அப்பால், ஸூர்யனையும் சிற்சில வேளைகளில் காணப்படும் சந்திரனையும் போன்ற மிகப்பிரகாசமான வஸ்துக்கள் இருந்தால் அல்லது நம்மால் உண்மையில் அந்த வாயுவுக்கு அப்பால் பார்க்கவே முடியாது.



### (12). THE USES OF GRIEF.

Sweet are the uses of grief : it softens the heart, and ripens the understanding ; it has a smoothening effect like the dews of December, and often has it been the instrument of salvation. In all Vedantic treatises, the student is made to weep before his guru, before he is saved. Sorrow has made saints of men, and in the intensity of grief, the sensory organs of mortals have been made alive to sights and sounds far above those of the earth. In the *Peria Purana*, the child *Tirugnana Sambhanda* is represented as having been rewarded for his weeping with Parvati's milk ; and in life the weeping child it is, that first receives the caresses of the mother. The first of the four truths that Buddha discovered under the Bodhi Tree was that the world is filled with misery ; and the first right thing in Buddhism is the recognition of the sorrows of life and grief for them. Sorrow is the sweet unction to the heart and as Jesus Christ said 'Blessed are they that mourn for they shall be comforted.'

### துக்கத்தின் பயன்

துக்கத்திற்கு இனிமையான பயன்கள் உண்டு; அது மனதை உருகச் செய்யும்; அறிவை முதிரச் செய்யும்; மார்கழிமாதத்திய பனியைப்போல அதற்குக் கனிவிக்கும் திறன் ஒன்று உண்டு; அடிக்கடி இதுவே மோக்ஷஸாதனமாகவும் ஏற்படும். வேதாந்த நூல்களில் கரை ஏற்றப்படும்முன் சிஷ்யன் குரு முன்னிலையில் கரைந்தழுவதாகக் காட்டியிருக்கின்றது. அடிக்கடி துக்கம்தான் மனிதர்களை மஹான்களாக்குவது. துக்கம் கரைபுரண்டோடுங்கால் உலகவிஷயங்களுக்கு அப்பாற்பட்ட தோற்றங்களும் ஒலிகளும் மானிடர்கள் ஞானேந்திரியங்களுக்குப் புலப்படுகின்றன. பெரிய புராணத்தில், மனமுருகி அழுததற்காகத் திருஞான சம்பந்தர் என்ற குழந்தைக்கு பார்வதியின்(ஞான)பால் கிடைத்தது என்று கூறியிருக்கிறது. உலகவாழ்க்கையிலும் அழுங்குழந்தைகளே முதல்முதல் தாயின் சீராட்டிற்கு ஆளாகின்றன. போதி மரத்தடியில் புத்தர் கண்டறிந்த நான்கு உண்மைகளுள் முதலாவது 'உலகம் துக்கமயம்' என்பதே. புத்தமதப்படி வாழ்க்கையின் துயரத்தை நன்கு உணர்ந்து அதற்காகத் துக்கிப்பதே நேரான கொள்கைளுள் முதன்மையானது. துக்கம் மனதை ஆற்றும் ஒருவிதத் தைலம். இயேசுகிறிஸ்து நாதர் கூறினபடி 'துக்கப்படுவோர் தேற்றப்படுவார், ஆதலால் அவர்களே பாக்யவான்கள்.'



## சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

#### அத்தியாயம் 6

#### ஸூப்பியும் காட்டுப்பூனையும்

*பேராசை யாற்பார் பிணிக்கப் படுகிறது*
*ஏரார் தொழிலாலும் எண்ணாலும்—சோர்வாகி*
*ஓங்காயு ளின்குறைவை ஓர்வதில்லை ஆதலினால்*
*தூங்காதீர் தூங்காதீர் சோர்ந்து*

கிருஷ்ணன் வீட்டில் இம்மாதிரியான துக்கக்கடல் கரைபுரண்டு எல்லோரையும் மூழ்த்திக் கொண்டிருக்கையில், சில வீடுகளுக்கு அப்பால் ஒரு வீட்டுவாயில் திண்ணையில் கரிய கெட்டமுகத்தை உடையோன் ஒருவன் பெரிய மனோராஜ்யத்தில் ஆழ்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் முகம் மாறிய விதங்களையும், அதிற் காணப்பட்ட கோணல் முதலியவைகளையும் உற்று நோக்குங்கால் அது நல்ல விஷயத்தைப் பற்றி யல்ல என்பது விளங்கும். அவன் எதிரே ஒரு கோவணம் கட்டாத புழுதி படிந்த சிறுவனொருவன் விளையாடிக்கொண்டிருந்தான். நடுநடுவே விளையாட்டு ஆனந்தத்தால் அவன் கூவிக்கொண்டுமிருந்தான். இப்படி ஏற்பட்ட சப்தம் ஒன்றைக்கேட்டு முற்கூறியபடி இருந்தவன் திடீரென்று மனோராஜ்யம் விட்டெழுந்து அவன் பிள்ளையாகிய அந்தப் பையனண்டைபோய், அவனை வாரி எடுத்து இறுகத்தழுவி ஆனந்த பரவசனாகி முத்தமிடத் தொடங்கிவிட்டான்.

'காட்டுப்பூனை' என்று பட்டப்பெயர் பெற்ற அவன் தன் பிள்ளையை இவ்வாறு சீராட்டினதேயில்லை. ஸாதாரணமாக இவன் கடுகடுப்பாக விருப்பது வழக்கம். ஆதலால், அவனைவிட்டுத் தப்புவித்தால் போதும் என்றாய்விட்டது அச்சிறுவனுக்கு. நாயனா சாஸ்திரி—அதுதான் காட்டுப்பூனையின் பெயர்—அவனை விடாமல் நன்றாகப் பிடித்துக்கொண்டு "அடே! குழந்தாய்! என்னருமைக் குழந்தாய்! என் ராஜா! என் ஆனந்தமே!" என்று பலவாறாகக் கொஞ்சி விளையாடினான். 'என்னைவிடு! நான் போகட்டும்! இல்லாவிட்டால் அம்மாவோடே செல்வேன்!' என்று கத்திக் கொண்டே காலால் விண் விண் என்று உதைத்துக் கொண்டே யிருந்தான் அச்சிறுவன். தகப்பன் விட்ட

பாடில்லை. அடிக்கடி அவனைச் சேரக்கட்டிக்கொண்டு அத்புதமான செல்ல மொழிகளால் சீராட்டினான். என்னசெய்தும் பையன் முன்போல ஓயாது உதைத்து தொலைத்தானே ஒழிய வேறொன்றுமில்லை. தகப்பனார் இதனால் கோபங்கொள்ளாது ஸந்தோஷமாகக் குலுங்க நகைத்தார். திடீரென்று தகப்பனார் சீராட்டுவதற்குக் காரணம் இன்னதென்று குழந்தைக்கு விளங்காததால் வரவர வெறுப்பே அதிகரித்தது. ஒருவன் சிரித்துக்கொண்டு ஆனந்தத்தாண்டவ மாடுகையில், மற்றொருவன் கையைக்காலை உதைத்துக்கொண்டு வீரிட்டழுதான்.

இந்த விஷயம் நடந்தேறி வருகையில் ஒருஸ்திரீ அங்கு வந்து காலலம்ப ஜலம் கேட்டாள். அவள்தான் நாயன சாஸ்திரி பெண்சாதி; கிருஷ்ணன் வீதக வீட்டிலிருந்து வந்தபடியால் அவள் தண்ணீர் கேட்டாள். அவளைக்கண்டதும் பையன் அப்பன் முகத்தில் ஒரு உதை உதைத்து அவன் பல்லைஅசையும்படிசெய்து வெளியேறி அம்மாவை நோக்கி ‘ காட்டுப்பூனை ! காட்டுப் பூனை !!’ என்று கதறிக்கொண்டோடினான். முதல் முதல் நாயன சாஸ்திரியை அவர் அருமைக் காதலி இந்தச் செல்வப் பெயரிட்டு அழைத்தாள். அடுக்குள்ளிலிருந்து இப்பெயர் அம்பலமேறியது.” அந்தவூர் சிறுவர்களுக்கு இப்பெயரிட்டு அழைத்தால்தான் இவரைத்தெரியும். இப்பெயர் பெண்சாதி வாக்கிலிருந்து வரும்பொழுது எவ்வளவு அருமையான செல்வப்பெயரென்று இவர் மதித்து மகிழ்ந்திருந்த போதிலும், ஊர்க்குழந்தைகள் இப்பெயரிட்டுத் தம்மை அழைக்க இவரால் ஸஹிக்கமுடியவில்லை. அடிக்கடி இவருக்கு இவ்விஷயத்தில் கெட்ட கோபம் வந்துவிடும். திருட்டுப் பயல்கள் இந்த உளவை அறிந்து விட்டார்கள். இவரைக் கண்டுவிட்டால் கோபம் மூட்டி வேடிக்கை பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு உண்டாகிவிடும். அவர் பின்னாலே இவர்கள் ‘ காட்டுப்பூனை ! காட்டுப் பூனை !’ என்று ஸ்வஸ்திவாசனம் சொல்லிக்கொண்டு புறப்படுவார்கள். இதைக் கேட்டதும் கழிசறைப் பயல்களா!—என்ன நீங்கள் என்பெண்சாதிகளா? என்ன ?’ என்று முறு முறுத்துக்கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்து சென்று வாயில் வராதவைகளை எல்லாம் திட்டிக் கொட்டிவிடுவார்.

இவர் வெளியில் வந்துவிட்டால் போதும், ஊரில் வேட்டைபட்ட பாடு படும். ‘காட்டுப்பூனை’ என்று இவரை ஸ்வாதீனமாக அழைக்க இவர்பெண்சாதி ஒருத்திக்குத்தான் பாத்யதை.

முற்கூறிய காட்டுப்பூனையினிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கதறிக்கொண்டு அந்தப் பையன் ஓடோடியும் வந்து அவளிடம் சேர்ந்ததும், மிகுந்த கம்பீரமாகக் கணவனை வீட்டுள் போக சைகை செய்தாள். உள்ளே போனதும் விதிப்படி விசாரணை செய்யத் தொடங்கிவிட்டாள். ‘ ஊர் முழுவதும் அழுவதாகப் பாசாங்கு செய்யுங்கால், காட்டுப்பூனே ! நீ மாத்திரம் தெருவிலிருந்து சிரித்துக்கொண்டிருந்தையே ! இதுக்கென்ன அர்த்தம்? அதுதான் போகட்டும் ; என் கண்மணியை என் இவ்வாறு வருத்தினாய், என்றாள். ஓட்டைப்பல்லைக் காட்டிக்கொண்டு ‘ஓஹோ ஹோ’ என்று காட்டுப்பூனை சிரித்தானே ஒழிய வேறொன்றுமில்லை. ‘ என்ன உனக்கு வெறி மண்டைக்கேறி விட்டதா?’ என்று செல்லமாகக் கண்டித்து, வைது, பின்வரும் வாக்குமூலத்தை அவள் மெதுவாக அவனிடமிருந்து வாங்கினாள். அப்பொழுது அவன் நான் நன்றாகக் கணக்கிட்டுப்பாத்துட்டேன், நாம் திடீருன்னு பணக்காரராய் விட்டோமே !’ என்று தாண்டவமாடினான்.

‘ கணக்கிட்டதினாலேயே எங்களை நீ பணக்காரர்களாக்கி விடுவையானால்,சாப்பாடுகூட இல்லாமல் கணக்கிட்டுக்கொண்டு கிடந்து கழியேன் ! என் பிள்ளையை என் படுத்துறாய்’ என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள். ‘எல்லாம் அவனாலேதானே ! இந்தச் செல்வம் ஏற்பட்டதெல்லாம் என் செல்லத்தாலேதானே ! ஒனக்குத் தெரியாதா? என்று அவன் மறுமொழி கூற, மிகுந்த பரபரப்புடன் ஸ்ரீப்பி அவன் பெயர்’ ‘என்ன! என் அருமைக்காட்டுப்பூனே! ‘அவன் புதயலெடுத்துக் கொடுத்து விட்டானா என்ன’ என்று கேட்டாள். ‘ இல்லை ! அப்படி இல்லை ! அந்தப்பயல் கிருஷ்ணன் போய்விட்டானே இல்லையோ ! அவன் ஸொத்துக்கு வார்ஸ் யாரு ! நம்ம பயல் தானே ! தெரிஞ்சுதா நோக்கு ? ’ என்று வீடிடியக் கத்தினான்.

இந்த ரஸமான ஸம்பாஷணைக் கிடையில் சிவபூஜை வேளையில் கரடியை விட்டாற்போல மூன்றாவதொருவன் திடீரென்று தோன்ற, இது மேலோடாமல் தடைபட்டது.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## டெல்ஹி தர்பார்க் கும்மி

### காப்பு

சீர்பெறு விக்டோரி யாமகா ராணியின்
செல்வப் பவுத்திரன் டெல்ஹி தன்னில்
பார்புகழ் தர்பார் நடத்து மகிமையைப்
பாடக் கணேசன் பகர் துணை யாமே.

### நூல்

அன்னமே யன்ன நடையுடை யீர் ! அங்கைக்
காகும் கொடிநிகர் மெல்லிடை யீர் !
கன்ன லனைய மொழியுடை யீர் ! இரு
காதளை வோடும் விழியுடை யீர் ! (1)

மாமதி போன்ற முகமுடை யீர் ! மறு
மாசுக ளில்லா அகமுடை யீர் !
தாமதம் சற்றும் இலாது தயாபரன்
தாளினை போற்றிநாம் கூடுவ மே ! (2)

கூடுவோம் ! கோமகன் ஜார்ஜு மகீபதி
கொற்ற முடிபுனை உற்சவத் தைப்
பாடுவோம் ! கும்மி பரிந்தவர் செங்கோலிப்
பாரினில் ஓங்கிட வாழ்த்துவ மே. (3)

இங்கிலாந் தென்ப தொருநாடு, தொழீ !
எங்குமே இல்லை அதற் கீடு
பொங்கு கடல்சூழும் நாற்பாடும், கமழ்
பொங்கரிற் கிள்ளை கவி பாடும். (4)

சங்கென வெள்ளிய * சாக்குக்குன்று பல
சங்கரன் தங்கும் சைல மென
பொங்குறும் பூம்பொழி லூடே நதிபல
பூமணம் ஏந்தியே பாய்ந்திடு மே. (5)

கப்பல் துறைகளும் கைத்தொழிற் சாலையும்
கற்கரி தோண்டும் கனிபல வும்
செப்பரும் அச்சுக்கூ டங்களும் பத்திரிகை
சேரிடம் புத்தக சாலைக ளும் (6)

கப்பல் காலாட்படை தங்கும் இடங்களும்
கல்வி பயில்சாலை பற்பல வும்
ஒப்பரும் கண்காட்சிச் சாலையும் வர்த்தகம்
ஓங்கு மளிகையும் உண்டனந் தம். (7)

“ லண்டன் ” நகரே தலைநகராம் விரி
மண்டலத்தின் நடு நாயக மாம்.
அண்டர் பதியும் அதற்கிணை ஆகுமோ !
கண்டோ எனு மொழிக் கன்னிகையே ! (8)

* Chalky Cliff

தேவர் நதியிற் சிறந்த நதியாகும்
“ தேமஸ் ” நதிநகர் பற்றியோ டி
மூவ ருலகினும் இல்லாமுப் போக
முறையே அளித்துப் பொலிவு றுமே. (9)

எண்டிசையு முள்ள பற்பல சாதியர்
எண்ணில் நானாவகைப் பாஷையி னர்
கொண்டற் குழலே ! குரைகடல் தாண்டியே
கூடுவர் ஆங்கே கலைபயில் வான். (10)

மன்னும் உயிர்க்குயர் ஞானம் அளித்தலால்
மல்கு பொருட்செல்வ மிக்குள தால்
மின்னு கதிர்செலும் தேயமெலாம் ஏக
வெண்குடைக் கீழ்வைத்தே ஆளுவ தால். (11)

தேவர் பதியும் அதுவெனலாம் ஜக
நாதன் பதியும் அதுவென லாம்
பூவமர் தேவும் புனல்முடி யோனும்
வியும் பதிய தெபொனல் ஆமே. (12)

குலத்தில் பெரியர் சிறியர் எனப்படும்
கோஷ்டிகள் சற்றும் அங்கில்லை யடி !
நலமுங் குணமும் படிப்பும் உடையோரே
நற்குலத் தார், அங்கே ; நங்கை யரே ! (13)

ஆங்கிலர் எண்ணில் அருங்குணம் வாய்ந்தவர்
அண்டம் எங்கும்புகழ் கொண்டவர் காண்
தீங்கிலர் மோசம் கபடு தெரிகிலர்
தெள்ளிய சீலர் தீந்தேன் மொழியே! (14)

சத்தியம் தீரம் சுதந்திரம் என்பன
நித்தம் அவர் தொழும் கர்த்தரடி !
மெய்த்திருவே! வெற்றி எத்திசையும் பெற்றே
உத்தம ரானார், அத னாலே. (15)

பெண்ணும் புருஷனும் தெய்வப் படைப்பினில்
பேதமில் ஸ்தானம் உடையர் என
கண்ணிய சீலர் கருத்திருத்திப் பெண்கள்
கல்வி பயிலத் துணைபுரி வார். (16)

ஆண்பெண் இருகண்கள் ஆண்டவருக் கென்னில்
அவற்றுள் பெருமை சிறுமை எண்ணில்
பூணொளிர் கச்சணி மங்கையரே ! மக்கள்
புன்மையாம் என்பதை ஓரா ரோ ! (17)

“ பெண்கள் புருஷர்க் கடிமையே” என்பவர்
பெற்று வளர்த்ததம் தாய்மார் கள்
கண்கணீர் சிந்தப் பல் ஏவல்கள் செய்து
கலுழ்ந்து வருந்துதல் காண்பா ரோ ? (18

பெண்களைக் கண்ணியம் செய்பவர் தங்கள்
பிறப்பைப் பெருமைப் படுத்துவ ரே.
கண்கண்ட தேவரெனச் சிறந் தாங்கிலர்
காசினி ஆள்வதிக் காரணத் தால். (19)

அன்னவர் நாட்டின் பெருமை உரைத்திட
ஆகுமோ ஆதிநற் சேஷனுக்கும்!
கன்னல் மொழியே! குபேரன் அளகையும்
கற்பக நாடுஞ்சற் றெவ்வா தே. (20)

அத்துணைச் செல்வம் அமைதரு நாட்டினை
ஆண்டனள் விக்டோரி யாரா ணி.
உத்தம மன்னுயிர் அத்தனைக்கு அன்னை
உண்மை நெறிக்குக் கருக்கா ணி. (21)

ஆயிரத் தெண்ணூற் றி யைம்பத்தி யெட்டாவ
தாண்டினிற் பாரதப் பொன்னாட் டின்
தாயெனச் சக்கிர வர்த்தினி ஸ்தானமும்
தார்குழலே! அவர் பெற்றனரே. (22)

அந்நாளே முற்பிறப் பிந்தியா செய்த
அருந்தவம் கைவந்த நன்னா ளாம்.
பன்[illegible] நாமுற்ற துன்பம் பரிதிமுன்
பட்ட பனியாய்ப் பறந்த துவே. (23)

இந்தியர் மீதவர் சந்ததமும் கிருபை
வந்திய நோக்கே செலுத்தி வந்தார்
நந்திரு நாட்டின் நலம்பெருகத் தினம்
நன்மைகள் பற்பல செய்து வந்தார். (24)

அம்மை விக்டோரியா ஆதிபரன் பதம்
ஆனபின் அன்னவர் நற்புதல் வர்
செம்மைநெறி தவறாத "யெட்வார்ட்" மன்னன்
சீருடன் பாதுகாத் தார் நமையே. (25)

"வலிமை யுடையன் வலியன்" எனும் நீதி
வாரிதி சூழ்புவி விட்டோ ட
சலியா துழைத்துச் 'சமாதானம்' எங்கணும்
தங்கச் செய்தார் அவர் தண்மதியே! (26)

அத்தனடி அவர்பற்ற அவர் மகன்
உத்தமன் ஜார்ஜைந்தாம் கோமக னார்
"சத்தியம் தீரம் தருமம்" இவையெலாம்
சார்ந்துருப் பெற்றதோர் தன்மையி னார். (27)

"செய்கடன் தேர்ந்து திருத்தமாய்ச் செய்வதே
தெய்வ குணம்" எனும் கொள்கையி னார்
மொய்குழல் மாதே! முறைப்படி நாவிகம்
முற்று முணர்ந்த திறமையி னார். (28)

கப்பற்றலைமை வகித்தவர்காண் பல
கண்ணியப் பட்டங்கள் பெற்றவர் காண்.
செப்பரிய அரசாங்க முறைமை கள்
செவ்வையின் ஆய்ந்தே அறிந்தவர் காண் (29)

ஈஜிப்து துர்க்கி இலங்கை இந்துதேசம்
எய்துபுகழ் சீனா ஜப்பா னும்
பூஜித போர்னியோ, ஜாவா, மலைதீபம்
பொன்மலி தென்னாப்பி ரிக்கா வும். (30)

ஆர்புகழ் ஆஸ்திரே லியாவும் புவி
யோர்புகழ் கானடாப் பொன்னா டும்
சீர்பெற யாத்திரை செய்துலக ஞானம்
நேர்பெறப் பெற்ற நெறியா ளர். (31)

நம்மைப் புரக்கும் பெருமைபெற் றோம் புது
நன்மைகள் பெற்றுக் கவலை யற்றோம்.
பொம்மை யெனமுன்னம் வாழ்ந்தது போகப்
புரக்கும் தொழிலிலும் பங்கு பெற்றோம். (32)

பாலொடு தேனும் பழமொடு சீனியும்
பாற்கட லானொடு பூமா தும்
பூக்கொடுதேனே! பொருந்திய தொப்ப நம்
பூபதி வாழ்க்கைத் துணைவி பெற்றார். (33)

"மே" யெனும் செல்வப் பெயர்பெற்ற பெண்மணி
"மேரி" யே நம்மிறை யின் தேவி.
தாயென மன்னுயிரி யாவும் கருத்துறத்
தண்ணருள் காட்டிடும் சீதே வி. (34)

வாசிப்பில் மிக்க விருப்புடையாள் வீணே
மாத்திரை போக்க வெறுப்புடை யாள்.
தேசுறு சித்திரத் தையல்முதல் பல
செய்ய தொழிலில் படிப்புடை யாள். (35)

ஆதர வற்ற பிணியாளர் தங்கும்
அனாதை வைத்திய சாலை யெலாம்
மாதரசி மேரி பார்த்து நோயாளி
மனங்களிக்கப் பல ஏந்தல் செய்வார் (36)

நங்கையே! இத்தகை மன்னனும் தேவியும்
நாடும் டிசம்பரில் தேதி ரெண்டில்
பொங்கும் கடல்கடந் திங்கே நம்பாக்கியம்
பொங்கிய தொப்ப வந்தெய்தி னரே. (37)

தேதிபனீ ரெண்டாமின்று டெல்ஹிப் பதி
சோதியுருப் பெற்றுத் தான் விளங்க
ஓதிம மென்னடை மேரியொடு மன்னன்
சோதி மணிமுடி தானணி வார். (38)

பண்டு தருமனும் ராமன் அசோகனும்
பாவையே! மாமகு டஞ் சூடி
அண்டர் புகழ்திருப் பாரதம் ஆண்டதும்
யாவுமே இன்று பழங் கதையே. (39)

இன்றடி! இந்திரப் பிரஸ்தமாம் டெல்ஹியில்
எங்கள் தருமவான் ஜார்ஜு மன்னர்
சென்றடி போற்ற ஜகப்புகழ்ந் தேத்தவே
தெய்வத் திருமுடி தான் புனைவார். (40)



இலங்கையோ டிந்தியா இங்கிலாந் தாதி
இருநிலம் யாவும் ஒருகுடைக் கீழ்
நலங்கொளக் கண்கண்ட ராமனா யின்றடி
நங்கையே! மாமுடி ஜார்ஜணிவார். (41)

இந்து ஜயினம் எழில்பெறு புத்தமோ
டிஸ்லாமும் கிறிஸ்து சமயம் முதல்
எந்தச் சமயமும் ஏத்தும் அசோகராம்
ஏந்தல் ஜார்ஜின்று முடி தரிப்பார். (42)

எண்ணில் தருமனும் ராமன் அசோகனும்
எம்மிறை ஜார்ஜோ டிணையா கார்.
கண்ணில் காணும் ஜகநாதனுக்குப் பழங்
காதைசொல் வேந்த ரீடாவா ரோ! (43)

கொற்றமுடி ஜார்ஜுச் சக்கிரவர்த்தி செங்
கோலுக் கடங்கித் திறை செலுத்தும்
சிற்றரசத் தொகை தேன்மொழியே! சொல்வேன்
சற்றே கவனமாய்க் கேளடி யே! (44)

மிஞ்சுபுகழ் வஞ்சிபாலன் கிருபா கரன்
மேவு திருமூல ராம வர்மன்.
கொஞ்சு கிளிமொழியார் மலி கொச்சிமன்
கூர்மதி தொண்டமான் பூபதியும். (45)

ஆவிடையாள் கிருபை யாளுடையார் மைசூர்
மேவுடையார் விரி நாடுடை யார்,
பூவிடை மேவும் பொலிவுடையான் பங்கன்
சேவடியார் சேது நாடுடையார். (46)

மெய்த்திரு நாடாளும் ஐதரா பாத்துக்கோன்,
மேவு பரோடா ஜய வேந்தன்,
எய்த்தவர்க் கீயும் இந்தூரின்கோ, குவாலியர்
ஏந்தல், ஜயபுர ராஜாவும், (47)

காசிமா மன்னன் காஷ்மீர்மா வேந்தனும்
கண்ணியன் ஆஜ்மீர் மஹா ராஜன்
பூசிதன் பீஹார் பதியும், பட்டியாலா
பூபதி, பீஜ்வார் ராஜா வும். (48)

ராஜகர் வேந்தொடு ரீவா மகீபதி
ரஞ்சித ஈடார் இயல் வேந்தன்
தேஜன் திவாஸ்மஹா ராஜன், பவல்புர
ராஜன், ஜம்மூபதி, அஜ்மீர் பதி, (49)

ஆவி ஜயப்பூர் அதிபன், கபர்த்தாலம்
ஆளும் அரசன் முத லாக,
நாலிரு திக்கிலும் நம்மிறை ஜார்ஜடி
நாளும் பணியும் நரேந்திரர் கள், (50)

தத்தமக்குச் சொந்த மான விருதொடு,
தாரணி ஆளும் மன்னாதி மன்னன்
உத்தமன் ஜார்ஜின் பதம்பணியும் பரி
சித்தரையில் யாரே பெற்றன ரே! (51)

டெல்லிப் பதியின்று பெற்ற சிறப்பினைச்
சொல்லித் தெரிக்கச் சொல் வன்மையுள்ள
வில்லி கூத்தன் கம்பன் மெய்ப்புகழேந்தியு
மேவெம்மே * சுந்தரனும் இலரே. (52)

ஆங்கிலர் ஆட்சியில் நாம்பெற்ற நன்மை
அநந்தம் எனினும் அவையிற் சில
பூங்குயிலே! மொழிவேன். சம பாவனை,
போர்ப்பய மின்மை, பொருட் காப்பு. (53)

சாதி முறைமை கருதாச் சமநீதி,
சஞ்சல மற்ற சுக வாழ்வு,
ஓதி உணர எவர்க்கும் சுதந்திரம்,
உத்தமக் கல்வி பயில் சாலை. (54)

சீக்கிரம் யாத்திரை செய்யப் புகைவண்டி
செய்தி யறியத் தபால், தந்தி
நோய்க்கிரை ஆனோரைப் போற்ற மருத்துவ
நூல்வலோர், ஔஷத நற் சாலை. (55)

வர்த்தகம் பற்பல கைத்தொழில் வேளாண்மை
விர்த்தி யடைய நல்லேந்தல் களும்,
அர்த்த நிசியிலும் சொஸ்தமா யாத்திரை
யார்க்கும் செய நல்ல ரஸ்தாவும், (56)

குடிகள் மிகுபொருள் சேமிக்கப் பாங்குகள்
கொண்டு கொடுத்திட நாணயங் கள்
கடிநகர் தோறும் கண்காட்சிப் பொருட்சாலை
காலி மருத்துவச் சாலை களும், (57)

அச்சுக்கூடங்கள், அரசியல் மாட்சி
ஆராய்ந்து தெரிந்திடப் பத்திரி கை,
மெச்சு பிரசங்க சாலைகள், சங்கங்கள்
மேவு சமுதாய நல்லுணர்ச்சி. (58)

சர்வ சமய சமரச பாவனை,
சாதி யொன்றே யெனு மெய்யுணர்வு,
பூர்வ வழக்கங்களிற் கழி வாயின
போக்க விருப்பம் இவை யாமே. (59)

ஆங்கில ரோடுற வாடியே நாம்பல
ஆசார நன்மைகள் பெற்றனமே,
பாங்கியே! அன்னார் பரிந்துசெய் நன்றிக்குப்
பாரதம் செய்யும் கைம்மா றேதே! (60)

வாழ்க! அரசனும் தேவியும் மக்களும்
வாழ்க! பாராள்மன் று மெம்பரு மே
வாழ்க! பெருமக்கள் ஆங்கிலரும் நனி,
வாழ்க! அரசியல் வாழிய வே. (61)

வாழிய! நந்தமிழ்த் தேமொழியு மோங்கி
வாழிய! செந்தமிழ்ப் பாவல ரும்,
வாழிய! நந்தமிழ் மாக்களும், நாடுமே
வாழிய! நூல்களும், வாழிய வே! (62)

* 'மனோன்மணீயம்,' ஆசிரியர், Prof. P. சுந்தரம் பிள்ளை, M. A.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ராஜ தம்பதிகள் வந்து சேருதல்.**—ராஜ தம்பதிகளை ஏற்றிவந்த மெடினா கப்பல் பம்பாய் துறைமுகத்துக்குள் சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நுழைந்ததும், 101 ராஜமரியாதைக்குண்டுகள் போடப்பட்டன, நமது ராஜப்பிரதிநிதி அவர்கள் தமது பரிவாரங்களுடன் 10-45 மணிக்கு மெடினா கப்பலுள் சென்று ராஜ தம்பதிகளிருவரையும் வழக்கப்படி மரியாதைகளுடன் கண்டு கொண்டார்கள். பிறகு 11 மணிக்கு நமது ராஜப்பிரதிநிதி பம்பாய் கவர்னரவர்களை ராஜ தம்பதிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். ராஜ தம்பதிகள் 4 மணிக்கு அப்பாலோ பந்தர் வந்துசேர அவர்களிருவரும் ராஜப்பிரதிநிதியால் வரவேற்கப்பட்டார்கள் 101 மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. ராஜதம்பதிகள் தமக்கென்று அமைக்கப்பட்டிருந்த சிங்காரப் பந்தலுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு, அவர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த ஆஸனங்களில் அமர்ந்ததும், பம்பாய் முனிசிபல் கார்ப்போரேஷன் உபசாரப்பத்திரம் ஷை கார்போரேஷன் பிரஸிடெண்டு ஸர். பி. மேதா அவர்களால் வாசிக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டு மஹாராஜா சக்கிரவர்த்தியவர்கள் அன்புடனும் கருணையுடனும் பதில் அளித்தார்கள்—இதைப் பற்றியும். ராஜதம்பதிகள் நாளை வியாழக்கிழமை மிகுந்த கோலாஹலத்துடன் டெல்ஹிமாநகர் அடைந்து அங்கு நடக்கப்போகும் வைபவங்களைப்பற்றியும் அடுத்த பத்திரிகையில் விரிவாய் எழுதுவோம்.

*
* *

**சென்னை மகுடாபிஷேகக் கொண்டாட்டம்.**—இம்மாதம் 12-ந்தேதி 12-மணிக்குக் கவர்ன்மெண்டு விருந்து மண்டபத்தின் படிமீதிருந்து, அதிகாரிகளால் ராஜவிளம்பரம் வாசிக்கப்படும். அப்போதங்கு காலேஜியில் வாசிக்கும் 3000-மாணவர்கள் கூட்டப்பட்டிருப்பார்கள். சம்ஸ்கிருத பாஷையிலும் தேசபாஷைகளிலும் தேசகீதம் பாடப்படும். காலேஜ் மாணவர்கட்குச் சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி, யவர்களி னுருவமமைந்த பதக்கங்கள் கொடுக்கப்படும். பீபில்ஸ் பார்க்கில் கீழ்தரப்பாடசாலைகளிலும் ஹைஸ்கூல்களிலும் வாசிக்கும் 10000-பிள்ளைகள் வரையிற் கூட்டப்பட்டு, சிற்றுண்டி தரப்படுவார்கள். பீபில்ஸ் பார்க்கிற்குப் போவதற்குக் கூடாத சிறுகுழந்தைகள் பற்பல விடங்களிற் கூட்டப்பட்டு, சிற்றுண்டிகள் தரப்படுவார்கள். பழைய ஹைகோர்ட்டிலிருந்து மவுண்டு ரோட்டின் மைதான பரியந்தம் ஊர்கோலமொன்று நடைபெறும். ஷை மைதானத்தில் வேடிக்கை பல நடைபெறும். சென்னையிலுள்ள பல மத தேவாலயங்களில் தீபாலங்காரங்களும் ஆராதனைகளும் நடைபெறும். தேசகீதங்கள் அச்சிட்டுள்ள துண்டுப்பத்திரங்கள் இலட்சக்கணக்காக மாணவர்கட்குக் கொடுக்கப்படும். இந்நகரமுழுதும் மிகவும் அழகாய் அலங்கரிக்கப்படும்.

* *
*

**நூறாண்டுள்ளவர்களின் தொகை.**—ஜர்மனியிலெடுத்திருக்கும் கணிதப்பிரகாரம் ஐரோப்பாக்கண்டத்தில் அடியிற் குறிப்பிட்டவாறு 6760 பேர் நூறு வயதுடையவர்களாக விருக்கின்றனர். டென்மார்க் 2, பெல்ஜியம் 5, ஸ்வீடன் 10, நாற்வே 23, ஜர்மனி 76, ருஷியா 89, கிரேட்பிரிட்டன் 92, ஆஸ்டிரியோ ஹங்கேரி 113, இத்தாலி 197, பிரான்சு 213, ஸ்பெயின் 410, செர்வியா 573, ரோமானியா 1074, பல்கேரியா 3883.

*
* *

**துக்க ஸம்பவங்கள்.**—இக்கோலாஹலங்களுக்கிடையில் நமது பத்திரிகாபிமானிகளுள் இருவராகிய ம-ள-ள-ஸ்ரீ, ராவ்பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள், பாலவநத்தம் ஜமீந்தார் ம-ள-ள-ஸ்ரீ பாண்டித் துரைஸாமி தேவரவர்கள் இறக்கும்படி நேர்ந்த துக்க சங்கதியைக் கூறாமல் விட எமக்கு மனமெழவில்லை. இவர்களைப்பற்றி விரிவாகப் பின்னால் எழுதுவோம்.

*
* *

**டில்லி தர்பாரும் கைதிகளின் விடுதலையும்.**—நமது சக்ரவர்த்தி யவர்களின் மகுடாபிஷேக ஞாபகார்த்தமாகத் திருவனந்தபுரத்துச் சென்ட்ரல் ஜெயிலில் 12-கைதிகள் விடுதலை யடைவார்களென்று தெரிகின்றது.

*
* *

**உண்ணும் நெய்யில் பாம்பின் கொழுப்பு.**—கொஞ்சநாளைக்கு முன் ஹூக்ளி ஸப் ஜட்ஜு முன்பாக ஒரு கேஸ் விசாரணைக்குவந்தது. அந்தக்கேஸில் கக்ஷிக்காரன் ஒரு மகமதியன். நெய் வியாபாரம் செய்வோன். அவனால் தாக்கல் செய்யப்பட்ட கணக்குபுத்தகத்தை கோர்ட்டார் அவர்கள் பரிசோதனை செய்ததில் நேபாளப் பிரதேசங்களிலிருந்து பாம்பு வாங்குவதற்கு ரூ 500-சிலவானதாய் எழுதி யிருந்தது. அதன் விபரத்தை கோர்ட்டாரவர்கள் கேட்டதற்கு, தான் விற்றுவரும் நெய்யில் பாம்பின் கொழுப்பைக் கலப்பது வழக்கமென்று சொன்னான். இது வாசிப்பவர்களுக்கு மிகவும் அருவருப்பையும், ஆச்சர்யத்தையும் உண்டாக்கும்.



மாட்சிமைதங்கிய நமது
சக்கிரவர்த்தி ஜியார்ஜ் V.

மாட்சிமைதங்கிய நமது சக்கிரவர்த்தினி
மேரி மஹாராணியார்.

# THE DURBAR & THE IMPERIAL VISIT

## அரசன் சத்ரபதியின் விஜயமும், அவர் தர்பாரும்



சீற்றந் செற்று பொய்நீக்கிச் செங்கோலினாற்
கூற்றங் காய்ந்து சொடுக்க வெணுந்துணை
மாற்றமே நவின் ருன்றடு மாற் றத்துத்
தோற்றந் தன்னையுங் காமுறத் தோன்றினன்—குண்டலகேசி

**‘திருவுடை மன்னர்க்காணின் திருமாலைக் கண்டேன்’** என்று ஆழ்வார் பணித்த திரு
வாக்கு திருவருள் பிரகாசம் வீசுங் கண்ணன்டால் கொண்ட அன்பினால் கூறப்பட்டதே ஆயினும்,
அம்மாலோனுடைய அம்சபூதனாகி அவர்செயலில் ஓர் பங்கிற்கு ஆளாகி பொருப்பு பூண்ட மன்
னனைக் காண நேருமிடத்துக் கூட்டங்கூட்டமாக வரும் பெருஞ்சனத்தொகையின் நெருக்கத்தையும்,
பல தொழிலாளர்கள் நிறைந்து, மதபேதமின்றி யாவருங்கலந்து மனமொருமித்து ஈடுபடுஞ்
செயலையுங்கண்டு மனம் பரவசமாகி “உம் கொண்ட சமயத்தன்னன் உருவை’ நினைத்த ஸமயவாதி
கள் யாவரும், தம்முள் பேதப்படினும் அம்மூல பரம்பொருள் வரில் எதிரில் கைக்குள் கைக்கலந்து
அவனது குணத்தை அனுபவித்தலாகிய மனோதர்மத்திற்குடன்பட்டவராய் விடுவர் என்ற எண்
ணம் மனத்தின்முன் பிரதிபலிக்கக்கண்டவர், அவ்வைபவகாலத்துச் சிறியரும் பெரியரும், பல செய
லினரும், பல கொள்கையருங் கலந்து, பல சடங்கு நடத்தியும் ஒடுக்கியுங் காட்டு நிலையுங்கண்டு—
‘ இவனே தானம் மூலமுதற் காரணமென்பான் ’ என்று விராட் புருஷனது உருவத்தை அனுப
வித்து வாய்மலர்ந்ததாயினும் உருவத்திலிருந்து அருவத்தைக் காண முயன்றதாகும். அவ்வாறு
பெரியோர் கூறியவாறு இந்நாட்டில் உள்ளூறிப் பாயும் ஆசைவெள்ளத்தின் பெருக்கத்தில் இடை
யறுது அலைக்கும் ஆனந்த ஆலோலம் அன்று, 1911ஹு டிசம்பர்மீ 2உ மாட்சிமைதங்கிய
அரசன், தலைவியோடு, பொம்பயி நகரத்து துறைமுகத்து ஆங்கடித்த அலையின் ஆரவாரத்தில்
மயங்கிக் காதில் படாதிருக்குமென்று சொல்ல யார் நா எழும்? நாட்டிற்குத் தலையாய், ஜனங்களின்
ஸுக துக்கங்களிற்குப் பாத்தியப்பட்டவனாய், தனது ஊழியரது ஜாக்ரதாஜாக்ரதைக்குப்
பொருப்பனாய், காவலிற்கு முதல்வனாய்,

“உறங்கு மாயினு மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்”

என்ற திருத்தக்கதேவரது வாக்குபோல் தான் வெளியிருந்து, இந்நாட்டிற்குள் இல்லாதிருப்பினும் தனது பெயர் மிகுதியால் ஆண்டு வருமன்னன் தான் கொண்ட நாட்டைக் காணவந்தபொழுது யார் இந்நாட்டின் “இன்றைக்கு அரசர் கப்பல்விட்டு இந்நாட்டில் கால்வைத்தார்” என்று சொல்லாதவர்? அரசர் இறங்கியதும், “முன்வந்து கண்டு சென்ற ஞாபகந்தாண்ட மற்றும் எமது அரசியுடன் உம்மைக்கண்டு செல்ல வந்தேம்” என்று கூறிப் புராதன நகராகி இந்தியர் மனத்தில் ஊன்றி விளங்கு இந்த்ரப்ரஸ்தஸ்தானத்தில் விளங்கிவரும் டில்லிமா நகரில் ப்ரவேசஞ் செய்தகாலத்து வைசிராய் அவர்கள் இந்திய ஜனங்களுடைய வரவேற்கும் பத்திரிகையை அளித்த காலத்து இந்நாட்டு ஜனங்களின் விருத்தியும், ஸுகமே தனது முக்கியமானதென்று கூறினர். மற்றொருமுறை தர்பாரை ஆரம்பித்தபொழுது,

“உம்மிடம், உள்ளுறி வழியும் அன்பின் பாத்ரனாக நாமின்று நிற்கிறோம். என்றுங்
“காணத் தாங்கமுடியாத பெருஞ்செயல்களைக் காணும்படியான அத்ருஷ்டத்தை அரசிக்கும் எனக்
“கும் இவ்வருஷம் கொடுத்திருக்கிறது. தாங்கமுடியாதாயினும், மனத்தை வெருட்டக் கூடிய
“தன்று—ஆனந்த மிகையால் பொறுக்கச்செய்வது. நெடுநாள் கடந்தும், நெடுந்தூரம் சென்
“றும், உம்மை எம் காதலியோடு முன்கண்டதும் எங்கள் மனத்தில் பதிந்த ஞாபகம் விடாது
“தூண்ட, அப்பொழுது நாகரீக விஷயங்களைப் படிக்கக் காணவந்து எமது வீடென அனுபவித்த
“இந்நாட்டை மற்றுங்காணவேண்டும் என்ற ஆவல் முந்த இங்கு வந்துளேம். அவ்வாறு செய்த
“தில் சென்ற வருஷம் நெடும் பகல் தினம் (ஜூன்மீ 22உ) கடவுள் அருளை முன்னிட்டு எமது
“மூதாதையரது மகுடம் இம்முடிமேல் அணியப் பெற்ற அந்நாள், உறுதியோடு நாம் உமக்கு
“அளித்த வாய்மொழியையும் பூரிக்கச் செய்ததாகும். எமதரசியும் யாமும் எமது ஜனங்களிடத்தி
“லும், சாமந்தராஜர்களிடத்திலும் எங்களுடைய ஆசைமிகுதியையுங் காட்டவும், அவர்களுடைய
“ஸுகமும் வாழ்வும் எமது மனத்திற் கினியதென்பதைக் காட்டவும், வந்தனே. ஆயினும்
“நம்மை வந்து எமதூரில் முடிசூட்டு நாளில் காணமுடியாதவர்கள் இப்புராதன நகராகிய
“டில்லியில் நடக்கும் வைபவங்களை அனுபவிக்கவேண்டுமென்பது எமது திடக்கொள்கை. இப்
“பெரும் ஸமூஹத்தைக் காண அரசி மனமும் எமது மனமும் ஆனந்தத்தில் பொங்குகிறது.
“* * * * * ஸாமந்தராஜர்களும் நீங்களும் ஒற்று வாழவேண்டும் என்ற அபீஷ்டம் இச்சிறந்த
“ஸமயத்தில் எமதுமனத்தில் உத்பவிக்கின்றது. * * * உம்முடைய அன்பைப் பாராட்டி
“யாமும் எமது அருள் காட்ட விரும்புகிறோம். எமது பிரதிநிதி பின் அதைப் பிரசுரிப்பர்.
“அத்ருஷ்டவசமாக நாம் இன்று உமக்கு என் முன்னோர் உமது ஸுகம், தர்மம், நியாயம்
“முதலியவைகளைப்பற்றி அளித்த வாக்கை யாமே உம்முன் நின்று பின்பற்றுவதாக வாக்களிக்க
“ஸந்தோஷப்படுகிறோம். எமது ஜனங்களின் நிலைமை மேலோங்கும்படிக்குப் பரம்பொருளின்
“தெய்வீக அருள் காத்து எம்மையும் அவர்க்கு ஸுகமும் சீரும் ஓங்க உழைக்க உதவி
“புரியுமாக! * * * *”

என்று உரைத்த மொழிகள் அவரது மனதில் உதித்து எழுந்து அலைத்த அன்பின் பிரவாஹத்தைக் காட்டவில்லையா? இவ்வாறு பெரியோன் பேசிய பிறகு பிரதிநிதியார் அரசரது நன்கொடைகளைப் பிரசுரம் செய்தனர். அவை வருமாறு:—

(1) **பாலபோதன விஷயமாக 50 லக்ஷரூபா** செலவிட உத்தரவு. இது இந்திய நாட்டிற்கு முற்றும் போதாவிடினும் நல்ல ஆரம்பம்; விருத்திக்குவரவேண்டியது. இதைப்பற்றி பலமுறை நாம் ராஜாங்கத்தாரை வேண்டிக்கொண்டது.

(2) **அரைமாத சம்பள இனும்**—இது கடல் 'தரை படைகளிலும், ஸிவில் பிரிவிலும் உள்ள ராஜாங்க உத்யோகஸ்தர்களுக்குள், காயமான சம்பளம் 50 ரூபாய்க்கு மேறபடாதவற்கு அளிக்கப்பட்டது.



(3) **பெருமை விஷயம்.**—திவான் பஹதூர், ஸர்தார் பஹதூர், முதலிய பட்டங்களுக்கு அடையாளக் குறிகளிருக்கவேண்டும் என்றும், படித்தோர்களில் மஹாமஹோபாத்யாயர், ஷாம்ஸ்-உல்-உல்மா என்னும் கௌரவப்பட்டம் பெற்ற பெரியோர்க்கு வருஷவாரி பென்ஷன் கொடுக்க வேண்டும் என்பதும்.

(4) இந்தியர்களுக்கு “**விக்டோரிய கிராஸ்**” பட்டங்கொடுக்கலாம் என்பதும்.

(5) **வடமேற்கு பாகத்தில் நிலக்கோடை.**—வடமேற்கு மாகாணத்திலும், பெலுசிஸ்டானிலும், வரியில்லாமல் நிலம் பெற்றோர் தமது வாழ்க்கை முழுதோ ஸந்ததி வாழ்க்கை முழுதோ, ஸ்வதேச ராஜாங்க அபிப்பிராயப்படி வரிபோடப்படாமலிருக்கவேண்டும் என்பதும்; கைப்பற்றிய நிலங்களை மற்றும் திருப்புதல் என்பதும்.

(6) இந்திய சிற்றரசர் தமது ஆதிக்கிய மடையும்பொழுது கட்டவேண்டிய “**நாஜரானு**” செலுத்த வேண்டியதில்லை என்பது—இது ஸாமந்த ராஜர்களுக்காகச் செய்த நன்கொடை. இது மாத்ரமன்றிச் சில அரசர்களது கடன்களை ஒழிக்கவும் சில வழிகள் ஏற்படுத்தியது.

(7) கைதிகளை விடுதலை செய்தது.

(8) பலபேர்களுக்குக் கௌரவப்பட்டங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டது.

இவைகள் அனைத்தையும் காட்டிலும் ஜனங்களது மனத்தை உத்ஸாஹமூட்ட செய்த செயல்கள் இரண்டுண்டு. அதை நாமிப்பொழுது விரிவாக எழுதுவோம்.

**டில்லி இந்திய தலைநகராக மாற்றப்பட்டது.—**

சென்ற மாதத்திய ஸஞ்சிகையில் எழுதிய டில்லிமா நகரத்தின் சரித்ரத்தைப் படித்தவர், அந்நகரத்தின் வயதை அறிந்திருக்கமாட்டார் என்று சொல்லமுடியாது. அவ்விடம் டில்லியானது முடிசூட்டுமிடமாகவே என்றும் விளங்கியதென்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு முடிசூட்டும் இடம் முடியைச்சூடும் இடமாகவும் அமைந்த தன் பாக்யமே! ஆயினும் சிலர் இவ்வாறு மாற்றியது தவறென்பராயினும், புராதன நகராகி இந்தியரது மனத்தில் புராண இதிஹாஸங்களின் வாயிலாகப் பதிந்து கிடக்குமிடத்தைப் புனருஜ்ஜீவனம் பண்ணி பழைய பிரதான நகரம் இன்றும் பிரதான நகரமாகியதென்று காண்பது யாவர்க்கும் மனத்திற்கின்பமே! காளிகட்ட நகரார்க்கது அருவருப்பாக இருக்கலாம். ஆனால் எல்லா விஷயங்களையும் ஆய்ந்து ஓய்ந்து பார்த்தே டில்லி தலைநகராக்கப்பட்டதென்று, கனம் இந்திய மந்திரிக்கும், இந்திய ராஜப்ரதிநிதிக்கும் நடந்த கடிதங்கள் மூலமாய்த் தெரியவரும். அதைப்பற்றி நாம் வீணில் பேசுவதும் நியாயமன்று. தாம் நின்று சிங்காதனம் ஏறிய இடமும் புறச்சாரலும் எல்லாங் கலந்து ராஜாங்க மந்திரமும் புறப்புரமுமாக வேண்டுமென அரசனே அபிப்பிராயப்பட்டதாகத் தெரியவருகிறது. மற்றும் அநேக அரசர்கள் ஆண்ட இடமென்னும் சரித்திரப் பெருமையுங் கலந்து, தான் ஞாபகச் சின்னமுமாக அவ்விடத்தை ராஜாங்கபீடமாகச் செய்திருக்கலாகாதென்று சொல்ல முடியுமா?

**பிரிந்த வங்காளத்தின் சேர்க்கை.—**

இவ்வாறு ராஜாங்கத்தலைநகர் தன்னைவிட்டுச் சென்றுவிட்டதே என்று வ்யாகூலம் வங்காளம் அடையக் கூடாதென்னும் வ்யாஜங் கொண்டு, அத் திடநெஞ்சன் அன்று துண்டித்த வங்காளத்தைச் சேர்த்து வங்காளிகளுக்கு மாளாத ஆனந்தத்தை யுண்டாக்கியது யாவர்க்கு மானந்தமே! கீழ் வங்காளத்தோடு, பர்த்வான், மிதனபுரி, சித்தகாங், டக்கா, ராஜ்ஷாய் ஜில்லாக்கள் கலந்து வங்காள ராஜதானியாக மாற்றப்பட்டது. இந்த ராஜதானிக்கு ஒரு கவர்னரும், அவர் நல்ல ப்ரபுவின் வம்சத்தில் தோன்றி இருக்கவேண்டும் என்று ஸித்தாந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. பீஹார், சோடாநாகபுரம், ஒரிஸ்ஸாவையுஞ் சேர்த்து ஓர் லெப்டினெண்ட் கவர்னர் கீழ் வைத்தலோடு, அஸ்ஸாமிற்கு ஓர் கமிஷணர் ஆதிபத்யமும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு எல்லாம் நடந்ததற்குக் காரணம் அரசனும், அவர்க்கினிய மந்திரியும்,நன்மனங் கொண்ட பிரதிநிதியுமேயாகும்.

இவ்வாறு செயல்களால் மனத்தை உத்ஸாகத்தில் மூழ்கச் செய்த அரசன் தனது அன்பினாலும் ஜனங்களை வசியஞ்செய்யக் கூடிய மகானாக விளங்குகின்றனர். டர்பார் நடந்ததும் காளிகட்டத்தில் சென்றவ்விடம் தன்னைக் காணவிரும்பிய ஜனங்களைத் தடைசெய்த கொத்தவாலைத் தடுத்து ஜனங்கள் யாவரும் காணும்படி நின்றது அவர் இந்தியரிடம் கொண்ட பேரன்பைக்காட்டும். இது முதலிய செயல்களால் ஜனங்களது மனதை மலர்த்தி அதனிடமிருந்து வழிந்த மதுவையுண்டு ஸுகமாகக் காலம் கழித்து வந்த நமது அரசன், நடக்கும் மாதம் 10உயன்று பொம்பாய் நகரத்துக் கடற்கரை வழியாய்த் தன்னுடன் இந்திய நாட்டாரது நல்லெண்ணம் தொடர, அவ்விடம் விச்வாஸம் வளரவும் தமது புரம் நோக்கலாயினர். ஆயினும் தாம் கண்ட காட்சியும், எங்குங் காணாத ஆரவாரமும், ஜனங்களின் விச்வாஸமும், பக்தியும், அவர் கண்ணின் ஒளிபோல் எதிர் நின்று நாட்டியஞ் செய்யக்கண்டு மனமுருகி இந்தியர்க்கென்செய்வதென் றேக்கங் கொள்ளாதிரார்.

மனது நம்பால் இழுக்க, உடலை அந்நாவாய் ஊர்பாலிழுக்க இடையிற் பட்டு ஊசலாடு சிந்தையோடு ஞாபகம் மயங்கி அறியாத இந்திய உருவம் மனதிற் பதிந்து அவரிடம் அன்பாகிய கப்பத்தைச் செலுத்து மிந்தியரிடம் அருள்வீசி விளங்குவதென்பதற் கையமில்லை.

இந்தியர்நாட்டு ஆசீர்வசனங்கள் உடன்காத்துவர, பெரியோனது அருளும் உடன் போற்ற அரசற்கு நீடூழி வாழ்வும் பெருமையும் சீரும் குணமும் யாவும் பூரணமாக விளங்கவேண்டுமென்பது இந்நாட்டின் கோரிக்கை. கருணைவிலாஸத்தின் மஹிமையால் தன் பக்கங்கொள்ளும் தலைவன், தம் ஊர் அல்லாததாகிய நாட்டில் இருந்து தம்பதி ஸமேதராய் தம்மூர் அடையுங் காலத்து இம்மி அளவும் உடற்சலனமாவது மற்றெச்சலனமாவது உண்டாகாது, என்றும் பசுமை வாழ செழித்து, வாழை அடிபோல் வாழ்ந்து, இப்புண்ய பூமியாகிய தேசத்தின் பெருமையை மேன்மை படுத்தும் வழிகளுக்கியக்கமிட்டு, சரீர ஸம்பத்துடன் சௌக்ய ஸம்பத்துமடைந்து, ஜனங்களின் நம்பிக்கையின் வழி யீடேறும்படிக்குச் செய்யக் கடவுள் அவர்க்கு மதியும் பலனும் முண்டாக்கி என்றுந் திரண்டு சுடர்ப்பிழம்புபோல் துல்யமாக விளங்கி நீடூழி வாழ்ந்து, நெடும்பெயரடைந்து, குலப்பெருமையை வளர்த்து, இந்திய ஜனங்களின் வருத்தங்களை ஒழித்து, உயர்த்த, கடவுளைப் பிரார்த்திக்கிறோம். அரசன் ஊரைவிட்டுச் செல்வது மனத்திற்காறா விஷயமாயினும், அவர் தமது வம்சத்தாரைக் காணச் செல்லும்பொழுது அவருடைய உயிர்க்கும் உடற்கும் தினையளவும் குறை வாராது நிற்க இவ்வூர் ஜனங்களும், இந்நாட்டு ஜனங்களும், அவ்வவர் வீட்டுக்குல தெய்வங்களைப் போற்றுவதும் யாம் இப்பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி, இந்தியர் மனமாகிய மலர் ராஜ சூர்யனால் மலர்ந்து வழிந்த அன்பின் ஒழுக்கின் மிகையையும் அதை அரசன் அனுபவித்திருந்திருக்க முடியாதென்பதையும் திடமாகக் கூறுவோம்.

“ வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லாமா னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. ”

# விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ மார்கழிமீ : 1912-௵ ஜனவரிமீ { பகுதி 7

## திருப்தி
## CONTENTMENT

ஆசையால் அலைக்கப்படும் மனம், கலக்கம் நீங்கி நிற்கும் நிலையே திருப்தி என்னப்படும். இந்தத் திருப்தி மனத்தின் ஓய்வாதலால் இதில் ஒருவித ஸுகம் எப்பொழுதும் உண்டு. இந்த ஸுகத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்தே எல்லோரும் தமது ஆசைகளைப் பூர்த்திசெய்ய முயல்கின்றனர். நாம் ஆவலுடன் அடைய விரும்பிய விஷயம் கைகூடுங்கால் இந்த மன ஓய்வு அல்லது சாந்தரூபமான திருப்தி உண்டானபோதிலும், இந்தச் சாந்தம் நீடித்து நிற்பதில்லை. ஆதலால் கொஞ்ச காலமானதும் ஆசை மீண்டும் வேறோர் விஷயமாகக் கதித்து எழுகின்றது. இதனால் கைகூடிய விஷயங்களில் உண்மையான ஆசை நமக்கு இல்லை என்பதும், கைகூடுவதால் உண்டாகும் மனஸ் ஸமாதானமே நாம் கோருவது என்பதும், அது நீடித்து நிற்கவேண்டும் என்பதே நமது அடங்கா ஆவல் என்பதும் நன்றாக வெளியாகும். நாம் எல்லோரும் அறிந்தோ அறியாமலோ அடைய விரும்பும் நீடித்த மனஸ் ஸமாதானத்திற்கே திருப்திஎன்று சாஸ்திரங்களில் பெயர். விஷய ஸுகானுபவங்களால் உண்டாகும் ஸமாதானத்திற்கு உபசாரமாகத் திருப்தி என்ற பெயர் இடப்பட்டு உலகில் வழங்கிவருகிறது. உலக விஷயத்திருப்தி விஷயச்சிறப்பு ஏராளமாக இருக்குங்கால் வெறுப்பு ரூபமாகவும், மிதமாக இருக்குங்கால் ஸுகரூபமாகவும், இல்லாவிடில் துக்க ரூபமாகவும் மாறுதலடையும் தன்மையது. எல்லோரும் அடைய உண்மையில் விரும்பும் திருப்தியோ முற்கூறிய மூன்று நிலைகளிலும் மாறுதலடையாது : சித்த சாந்தியாக விருந்து எப்பொழுதும் ஒருவித ஸுகத்தைத் தந்துகொண்டேயிருக்கும் தன்மையது.

உலகவிஷயமாக ஏற்படக்கூடிய வெளிதிருப்தி ஒருவனுக்கு வந்துவிட்டால் அஸூயை, பொறாமை, பேராசை முதலிய கெட்ட குணங்கள் புகுந்துவிட இடங் கொடுக்காமலிருக்குமாயினும், ஸன்மார்க்கத்தில் மேல் மேல் முயன்று, நாம் எல்லோரும் தேடித்திரியும் பரம திருப்தியை அடைவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யவொட்டாது, தாம் இருக்கும் நிலையைவிட மேலான நிலை இல்லை என்ற இறுமாப்பை உண்டாக்கும். ஆகவேபெரியோர் இவ்வகைத்திருப்தி ஒரு ப்ரதிபந்தம் மருட்சிமை உண்டாக்கும் ஓர் நோய் என்று கூறுவர். இதற்குத் தரித்திரமே நல்ல மருந்து. இது வந்துவிட்டால் விஷயநிலையாமை விளங்க அதுகாறும் இருந்த சாந்திக்கு ஆதாரமாகத் தோன்றிய வெளிவிஷயப்பற்று நீங்க, அது நிலைத்து நிற்பதற்குக் காரணமாகிய நிராசையின் சிறப்பு நன்கு வெளியாகும். ஆகவே உலக விஷய ஸம்பந்தப்பட்டமட்டும்திருப்தி பொதுத்தன்மையுடையது.நாம்அதைமேற்கொள்ளுங்கால் அதனால்மேல் விருத்திக்கும் தடை ஏற்படாதபடி பழகிவரவேண்டும்.

விஷயம் நிலையில்லாதது, அதைப் பிடிப்பதால் ஏற்படும் சாந்தியே நமக்கு முக்யம், இந்தச் சாந்தி நமது உள்நிலை, இது விஷயத்தால்தான் வருவது என்று நம்பி நாம் அதைப் பின்பற்றுகிறோம் ; தற்கால சாந்தி உண்டாயினும் அது விஷய ஸம்பந்தமுடையதாதலால் மாறிவிடுகின்றது, ஆதலால் விஷயத்தைப் பின்பற்றி ஓடித் திரிவது இந்த சாந்திக்கு ஒரு தடை. ஆகவே இவ்விஷயத்தில் ஆசை எழுவதே துக்கம், என்று நிராசையில் பழகி, மனம் அடங்கிவரச்செய்து சாந்தி பெறுவதாகிய நித்யதிருப்தி எல்லோராலும் விரும்பத் தக்கது. எந்த விஷயத்திலிருந்து ஆசை குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த விஷயத்தால் ஏற்படக் கூடிய துக்கம் குறைய, சித்தம் கலையாதிருக்கும். இம்மாதிரி ஒதுங்குவதால் ஏற்படக்கூடிய திருப்தி ஒருவிதக்கேட்டையும் விளைவிக்காது. ஸமாதானம், ஸுகம் எல்லாம் நம்முள்ளிருக்க என் வீணில் வெளிப்பட்டு உழலுவானேன் என்று திரும்புவதால் உள்நாட்டம் ஏற்பட்டு, விஷய திருப்தியை மிகத் துச்சமாக நினைக்கும் நிலை நமக்கு வரும். இதனால் உள்விஷய ஆராய்ச்சி அதிகரித்து முடிவில் நிலைத்த திருப்திக்கு ஆதாரமாகவிருக்கும் வஸ்து விளங்க இந்தத் திருப்தி எப்பொழுதும் ஒரேவிதமான நிலையில் நமது யத்தனமின்றியே நிற்கும் மோக்ஷநிலை கைகூடும். இதுதான் அளவில்லா ஆசை அடங்கும் இடம்.

விவேக போதினி

தொ 4] விரோதிகிருதுஸு மார்கழிமீ [பகுதி 7

## விக்ரஹாராதனமும் வேதரஹஸ்யமும்
## IMAGE WORSHIP AND VEDIC TEACHINGS

கர்மகாண்ட உபாஸனகாண்ட பாகங்களில் காட்டப்பட்டுள்ள வர்ணனை முதலியவைகளைக் சப்தரூபமாக ஆராதித்து வருவது ப்ராஹ்மணர்களுக்கேற்றது என்றும், அவைகளை உருவங்களாக்கி, முற்கூறியபடி வழிபட முடியாத ப்ராஹ்மணர்கள், இன்னும் மற்றைய ஜாதியார்கள் எல்லோரும், எளிதில் வழிபட்டு எல்லோருக்கும் பொதுவாகிய ஞானகாண்ட முடிவை அடைய, நமது முன்னோர் விக்ரஹாராதனத்தை விதித்திருக்கின்றனர் என்றும் முன்னரே கூறியாகிவிட்டது. இங்கு ஞானகாண்ட ரஹஸ்யத்தையும் இவ்வாறு விக்ரஹாராதனம் உள்ளடக்கியுள்ளது என்பதை நன்கு விளக்குவோம்.

விக்ரஹ ரூபமாகக் கடவுளை ஆராதிப்பது என்பது வேதங்களிலிருந்து உண்டான சைவ வைஷ்ணவ ஆகமங்களாலும், அவைகளை முறையே தேச பாஷைகளில் விவரித்த நாயனார்கள், ஆசாரியர்கள், ஆழ்வார்கள், தாஸர்கள், பாகவதர்கள் முதலியவர்கள் முயற்சியாலும் விரிந்து, இப்பொழுது எல்லோருக்கும் வேதரஹஸ்யம் இன்னது என்பதை உணர்த்தி அவர்களை எளிதில் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அடையும்படி தூண்டுகின்றது. இதன் ஸஹாயத்தால் தான் பறையராகிய நந்தனும் திருப்பாணாழ்வாரும்,வேடராகிய கண்ணப்பரும்,குயவராகிய திருநீலகண்டரும், ப்ராஹ்மணகுலம் தவிர மற்றைய குலங்களில் பிறந்தும் ஆழ்வார்களும் நாயனார்களும், உபநிஷத்ருஷிகள் நிலையை அடைய அவர்கள் அருள்வாக்குக்கள் வேதமென இக்காலத்தும் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆகவே இம்மாதிரி சிறந்த மஹான்களை ஸகல ஜாதிகளிலும் உண்டாக்கும் திறனுடைய விக்ரஹாராதனம் மிகச்சிறந்த வழி என்பதை எடுத்துரைக்கவும் வேண்டுமா !

இதுவரையில் கூறிவந்தது இந்த விக்ரஹாராதன மார்க்கம் வேதங்களின் கர்ம உபாஸ காண்ட ரஹஸ்ய விவரணம் என்பதையே. இவைகளை ஏற்படுத்தி, ஸாதாரண ஜனங்கள் எளிதில் பின்பற்றி அடைந்து ஆனந்திப்பதற்காக, இவைகளின் முடிவு பரமாத்மாவின் பாகமாக நாம் விளங்குவது, அல்லது பரமாத்மாவில் ஒளி இழந்து கலந்து லோகானுக்ரஹார்த்தம் திவ்ய உருவந் தாங்கிவருதல், என்பவைகளை எடுத்துக் காட்டியும், வேதங்களில் கூறப்படும் பரம்பொருளோடு இரண்டறக் கலத்தல் என்ற நிலையை மறைத்தும் கூறியுள்ளார் நம்முன்னோர். ஆயினும் இந்த முடிவான நிலை இவ்விக்ரஹாராதனை மூலமாக உற்று நோக்குவோருக்கு வெளிப்படாமலிராது. அதாவது ஞானகாண்டத்தில் கூறப்படும் ரஹஸ்யங்களும் இதில் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

வேதமுடிவாகிய ஞானகாண்டத்தில் இரண்டு வித ரஹஸ்யங்கள் கூறப்பட்டுள்ளன. இவைகள் முறையே **அபர வித்யை** (தாழ்ந்த வித்யை) **பரவித்யை** (மேலானவித்யை) என்பவைகளே. பரம்பொருளைப்பற்றி ஆராய்ந்து அதை அடைய மானிடர்க்கு வழிகாட்ட உதவியாக இருக்கும் ஞானகாண்டம், பந்தம் நீங்கி ஆனந்திக்கப் புகும் முமுக்ஷுவின் நிலையை நன்கு ஆராய்ந்து, அவனுள்ளும் அதுபோல மற்றவருள்ளும், ப்ரபஞ்சம் எங்கும் பரவியிருந்து எல்லாம் உண்டாகி, நிலை பெற்று, ஒடுங்க ஆதாரமாகவிருக்கும் பொருள் ஒன்று உள்ளது, ஸர்



வாந்தர்யாமியாகிய அதற்கு ஸர்வசக்தி ஸர்வக்ஞத்வம், முதலிய சிறந்த குணங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டி, அதை மோக்ஷம் அடைய விரும்புவோர் இங்கு கூறியபடி கேட்டுத் தியானிக்க வேண்டுமென்று கட்டளையிடுகின்றது. இந்த விஷயத்தைப் பெரும்பாலும் வியாஸர் எழுதிய ப்ரஹ்மஸூத்ரம் யுக்தி பூர்வமாக ஸ்தாபித்து இதிலிருந்து வரக்கூடிய பயனை நன்கு எடுத்து விளக்குகிறது. இந்தப் பொருளுக்கு வேதத்தில் **சப்தப்ரஹ்மம்** (கேட்டு கேட்டவாறு தியானித்து அடையவேண்டிய ப்ரஹ்மம்) என்று பெயர். இதற்கு ஸகுண ப்ரஹ்மம் என்றும், அபர ப்ரஹ்மம் என்றும் பெயர். இதை அடையச்செய்யும் வித்யைக்கு அபரவித்யை என்று பெயர். இந்தப் பிரஹ்மத்தைத்தான் ஆகம சாஸ்திரம், லிங்கம் முதலிய குறிகளால் வெளிப்படையாகக் காட்டி எல்லோருக்கும் இதை அடைய ஊக்கம் உண்டாகும்படி செய்கின்றது. இந்தச் சப்த ப்ரஹ்ம விஷயமாக நோக்கில் உலகில் உள்ள ஜீவராசிகள்,ஜடமான ப்ரபஞ்சம் எல்லாம் இந்த ப்ரஹ்மத்திற்குச் சரீரம் போன்றவை; இது இவைகளுக்கு எல்லாம் உயிர் போன்றது இவ்வளவு நெருங்கிய ஸம்பந்தம் இங்கு உண்டு. ஜீவர்களது அறியும் சக்தி மிக சிறியதாயினும் அது இப்பிரஹ்மத்தின் ஸர்வக்ஞத்வத்தின் ஒரு லேசமே ஒழிய வேறல்ல. ஆகவே ஜீவர்களுக்கு இந்த ப்ரஹ்மத்தை விட்டுத் தனி இருப்பே இல்லை என்பதாகும். பகவத்பக்தி, அவனன்றி ஓரணுவும் அசையாது, நாம் கடவுளிடம் நமது உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் ஒப்புவித்து அவரை வழிபட வேண்டும், முடிவான மோக்ஷமும், அவன் அருளாலே வரவேண்டியது, நாமாக அதைகூடக் கைம்மாறாகக் கருதி பகவத் ஆராதனம் செய்யக்கூடாது என்ற ஆராதன ஒழுங்குகளால் முற்கூறிய உண்மைகளை எல்லாம் ஆகமங்கள் விக்ரஹாராதன விஷயத்தில் வற்புறுத்துகின்றன. பாமரர்களாகிய நாம் எல்லோரும் உள்ளபடி நிஷ்காம்யமாக இந்த ஸகுண ப்ரஹ்மத்தை விக்ரஹ மூலமாக அவைகள் உட்கருத்து உணர்ந்து வழிபட்டாலே போதும். அதுகூடச் செய்ய இயலாது வாயால் ஸகுண ப்ரஹ்மம் உபாஸனார்த்தம் கல்பிதம், அது உண்மையில் இல்லை, உண்மையில் இருப்பதாகிய நாமே ப்ரஹ்மம் என்று அஸார வேதாந்தம் பிதற்றுவதே நமது கதியாகிவிட்டது. தாமரைகளுக் கிடையில் இருந்தும் தவளைகளுக்கு எவ்வாறு அவைகள் தேனை ருசிபார்க்க முடியாமல் போய்விடுகிறதோ, அதுபோல இக்காலக் கொடுமையாலோ அல்லது நமது கர்மவிசேஷத்தாலோ நமக்கு வேதரஹஸ்யங்களை உணரும் திறனிருந்தும், பரமரஹஸ்யங்களை உணர்ந்தும், அவைகளுள் மிகத் தாழ்ந்ததான நிலையிலிருந்து வரக்கூடிய அனுபவானந்தத்தில் மூழ்க நாம் கொடுத்து வைக்கவில்லை, என்ன விபரீதம் !

வேதாந்தமாகிய ஞானகாண்டம் ஸகுணப்ரஹ்மத்தை மாத்திரம் கூறி நிறுத்திவிட வில்லை. இதில் ஆங்காங்கு பரம்பொருள் ஸச்சிதானந்தம், அவாங்மனஸ் கோசரம், (மனவாக்கிற் கெட்டாதது), ஏகமேவா த்விதீயம், (ஒன்றே இரண்டற்றது) என்று கூறப்படுகின்றது. இதன் விஷயமான அனுபவத்தைக் கூறுங்கால் இந்நிலையை அடைந்த ரிஷி ‘என்னுள் ப்ரபஞ்ச லேசமே கிடையாது, அது சிதறிப்போய்விட்டதா அஸ்தமித்து விட்டதா ’ என்றும், ‘ எல்லாம் நானே, நானே அது, அதுவே நான் ’ என்றும், ‘ அனுபவிக்கும் வஸ்து, அனுபவிப்பவன் இரண்டும் நானே’ என்ற இவை முதலான அபேத வாக்யங்கள் காணப்படுகின்றன. இந்த ப்ரஹ்மத்திற்கு **நிர்க்குண ப்ரஹ்மம்** என்று பெயர். இதற்குப் பரப்ரஹ்மம் என்றும் பெயர். இதை அடைந்து நிலைபெற ஏற்பட்டிருக்கும் ஸாக்ஷி விருத்தி, ஸமாதி பழகல் முதலியவைகளுக்குப் **பரவித்தை** என்று பெயர். இது மிக ரஹஸ்ய விஷயமாதலாலும், இது வெளிப்பட்டால் ஸாதாரணமாக எல்லோருக்கும் அனுபவத்திற்கு முன்னரே விஷயம் தெரிந்துவிட்டது என்ற திருப்தியை

உண்டாக்கி மேற்செல்லவொட்டாது விபரீத நிலைகளை விளைக்குமாதலாலும், ஸகுண ப்ரஹ்மத்தை உள்ளபடி உபாஸித்துவந்தால் முடிவில் பழம் நழுவிப் பாலில் விழுவதுபோலவும், தூங்குபவன் கையிலிருந்து புஷ்பம் நழுவுவது போலவும், ஸகுணப்ரஹ்மம் குணம் நழுவி நிர்க்குணமாகி ஆராதிப்பவனையும் விழுங்கி நிற்கும் ஆதலாலும், இது குறிப்பாகவும், சிற்சில விடங்களில் வெளிப்படையாகவும் பிரஹ்மஸூத்ரத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.. இந்த நிர்க்குண முடிவை நன்கு உணர்ந்தே ஸகுணோபாஸனை செய்ய வேண்டும்; இல்லாவிடில் பிரயத்தனம் வீணாகும், அல்லது ஸகுணோபாஸனையின் முடிவில் உண்டாகும் நிர்க்குணத்தில் மூழ்குதல் என்பது பயத்தை உண்டாக்கி அதை நாம் அணுகவொட்டாது செய்து விடும் என்பதே அத்வைதிகளது கொள்கையே ஒழிய, ஸகுணப்ரஹ்ம உபாஸனையே அவசியம் என்று அவர்கள் கூற வரவில்லை. ஆனால் மற்றைய மதஸ்தர்கள் ஸாதாரண ஜனங்கள் விஷயத்தில் இந்த நிர்க்குண ப்ரஹ்ம ஞானம் ஸகுணப்ரஹ்ம உபாஸனையின் வலுவைக் குறைத்து விடும் என்று கருதி, இதைத் தமது மதத்தில் வெளிப்படுத்தாமலும், சிற்சில விடத்தில் கண்டித்து மிருக்கின்றனர். எப்படியாயினும் நாம் செய்யும் விக்ரஹாராதனத்தில் இந்த ஞானகாண்ட பரமரஹஸ்யமாகிய நிர்க்குண ப்ரஹ்மவிஷயம் குறிப்பாக வெளியாகாமல் போகவில்லை. விக்ரஹாராதனத்தில் எதிரிலுள்ள விக்ரஹத்தைக் குருமூர்த்தமாகத் தியானம் செய்யும் வழி ஒன்று உண்டு. விக்ரஹபாவம் நீங்கி இப்பாவம் திடப்பட்டால் அப்பொழுது மனத்தில் உண்மை வெளியாகும் என்பது அனுபவிகள் துணிபு. இதற்காகவே சிவன் கோயில்களில் பரம்பொருளைப் பரம குருவாகிய தக்ஷிணாமூர்த்திவடிவமாகவும், சிற்சில விஷ்ணுகோயில்களில் பரம்பொருளைக் கீதாசார்யனை பார்த்தஸாரதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மார்க்கம்தான் விக்ரஹாராதனத்தை ஸகுணப்ரஹ்ம உபாஸனையிலிருந்து நிர்க்குண ப்ரஹ்ம உபாஸனைக்குக் கை தூக்கிவிடுவது.

இனி விக்ரஹாராதனம் இவ்வாறு நிர்க்குணோபாஸனைக்கு ஆதாரம் என்பதை ஆராயப்புகுவோம். நிர்க்குண ப்ரஹ்மஉபாஸனையில்முதிர்ந்து தாமே ப்ரஹ்மமான அனுபவி ஆரூட்களை வேதம் வர்ணிக்கும் விதத்தைப் பின்வருமாறு **கைவல்ய நவநீத** நூலாசிரியர் எடுத்துக்கூறுகிறார்.

பேதகர் மத்தால் வந்த ப்ராரத்தம் நாநா வாகும்,
ஆதலால் விவஹாரங்கள் அவரவர்க் காவ வாகும். [வர்
மாதவம் செயினும் செய்வர் வாணிபம் செயினும் செய்
பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பர் ஜீவன் முக்தர்.

பின்னைமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற்றிருப்பார்தேக சஞ்சாரநிமித்தந்தானும் [கும்
உன்னுவோன்வரன்வேற்றோராலுணர்பவன் வரியானா
அன்னியர்தம்மாற்றன்னை லறியாதோன் வரிட்டனாமே.

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னாலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்
வரியானும்வரனுமற்றை வரிட்டனுஞ்சுகமாய்வாழ்வார்

இம்மேற்கோள்களால், பரமநிலையை அடைந்தவர்கள் நான்குவிதம் என்பதும், அவர்களுள் உலகிற்கு உபகாரம் தன்இயக்கமின்றியே ப்ரஹ்மவித்தால் ஏற்படும் என்பதும், ப்ரஹ்மவரிஷ்டன் தன் ஸந்நிதான மாத்ரத்தால், ஈசுவரன்போல, உணர்ந்து அணுகுபவரைக் கரை ஏற்றுவான் என்பதும் வெளியாகும். இந்த வரிஷ்டநிலையே மனிதர் இவ்வுலகில் உயிருடனிருக்கையில் அடையக்கூடிய மேலான நிலை. இந்த நிலையில் அவன் ப்ரஹ்மமே. இந்த வரிஷ்டன்தான்வேதத்தின் பரம ரஹஸ்யம். இம்மாதிரி வரிஷ்டர்கள் இக்காலத்தில் இல்லாமல் போய்விடவில்லை. கும்பகோணத்தில் **மௌனஸ்வாமிகள்** என்ற மஹான் ஒருவர் இந்நிலையில் நெடுநாளிருந்தார் என்பதுஎல்லோரும்அறிந்த விஷயமே. இவரைச் சேர்ந்தவர்கள் இவரை அன்புடன் ஆதரித்து சிறந்த உலக ஸுகங்களைப் பெற்றிருக்கின்றனர். இவரை அணுகிய பாமரர் பரிசுத்தராகியும், பரி



சுத்தர் வேதாரஹஸ்ய நிலையில் அவாப்பெற்றும் இருந்தனராம். பரமநிலையில் அவாப்பெற்றவர் அதில் நிலைபெற்றும் இருப்பர், ஆனால் அவர் விஷயம் எளிதில் வெளிப்படக் கூடியதல்ல. இந்த மௌனஸ்வாமிக்குக் கோயிலில் நடக்கும் உபசாரங்கள், பூஜைகள், உத்ஸவங்கள் நடப்பதுண்டு. என்ன செய்தும் உலகப்ரக்ஞைக்கே வாராது தமது வாழ்நாள் முழுவதும் இவர் இருந்தார். இம்மாதிரியே ஜடபரதர் வரிஷ்ட நிலையில் உலாவியதாக ஸ்ரீமத் பாகவதத்தில் விஸ்தாரமாகக் கூறியுள்ளது. கங்கா ப்ரஹ்மபுத்ரா ஸங்கம பூமியிலிருக்கும் ஸுந்தர வனத்தில் ஒரு பெரியவர் இந்த வரிஷ்டநிலையில் ப்ரஹ்மமாய்க் கிடந்தார் என்றும், இந்நிலையின் அருமையை உணராத வேடன் ஒருவன் அவரை கண்டெடுத்து என்ன செய்தும் உயிர் இருக்கிறதோ இல்லையோ என்ற ஸந்தேகம் நீங்காதிருக்க முடிவில் ஈயத்தைக் காய்ச்சி அவர் மேல் விட அவருக்குத் தேஹ உணர்ச்சி வந்து,உடனே தேஹத்தியாகம் செய்து ப்ரஹ்மை பூதானார் என்றும், அவர் ப்ராத்வசமாயிருந்த பாபத்திற்கு வேடன் ஆளானான் என்றும் ஒரு ஸமாசாரம் கொஞ்ச நாளைக்கு முன்னர் வெளியாயிற்று. இம்மாதிரியே ஆப்ரிக்காகண்டம் ஈஜிப்த் தேசத்தில் பாயும் **நைல்** நதிக்கரையில் ஒரு பெரியவர் இந்நிலையில் பாலைவன உஷ்ணத்தையும் கவனியாது கிடந்தார் என்றும், இந்நிலையின் அருமையை அறிந்து ஆனந்திக்கக் கொடுத்துவையாத ரேனான் என்ற குணதோஷ ஆராய்ச்சியில் தேர்ந்தவர்,இங்கு கல்லைப்போல் அசையாது உலக உபகாரமின்றிக்கிடக்கும் இவரை இகழ்ந்து விட்டு, உள்ளிருக்கும் ப்ரஹ்மானந்த ஸுகத்தை நம்பாமல் போய்விட்டார் என்றும் உள்ள ஸங்கதி எல்லோரும் அறிந்த விஷயமே. ஆகவே ப்ரஹ்மமே ஆகி நின்று உலக ப்ரக்ஞைக்குத் திரும்பி வாராது நிற்றலே வேதரஹஸ்யமான பரமநிலை. இது எவ்வளவுதான் நம்மால் அடைய முடியாததாயினும், நமக்கு அடைய விருப்பம் ஏற்படக் கூடிய நிலை யில்லாவிடினும், வேதரஹஸ்யம் வேதரஹஸ்யமே. இந்த வரிஷ்டநிலையையே கோயில் விக்ரஹங்கள் நன்கு உணர்த்துகின்றன. இதைக் குறிக்கவே தான் மிகச்சிறந்த கோயில்களும் சிறந்த விக்ரஹங்களும் பரம யோகிகளது தேஹத்தை ஸமாதி வைத்திருக்கும் இடங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சிலாரூபமாக இருந்துகொண்டும் திருஷ்டமாக உள்ள ஒருவித பயனையும் நேரிடக் கொடுத்திடாது, ஆராதிப்பவர் மனோபாவத்திற்கேற்ப தன்னிடம் ஒருவிதப் பற்றை உண்டாக்கிக்கொண்டும், ஸகலவித பூஜைகள் செலவுகள் எல்லாவற்றையும் பிறர் செய்யும்படித் தூண்டிக் கொண்டும், நிற்கும் மூலஸ்தான விக்ரஹங்கள் ப்ரஹ்மரிஷ்ட நிலையில் ப்ரஹ்மமேயாகி நிலைத்து நிற்கு மஹானை எப்படி அறிந்தோருக்கு நினைப்புறுத்தாமல் போகும்? மேலும் அநேகவிதமாக அலங்கரித்து விதம்விதமான வாஹனங்களில் ஏற்றிப் பற்பல வாத்யங்கள் முதலிய கோலாஹலங்களுக்கு இடையில் தூக்கிவரப்படும் உற்ஸவமூர்த்திகளைக் காணும்பொழுது கொஞ்சமேனும் சாஸ்திரப் பழக்கமுடையவருக்குக் கும்பகோணம் மௌன ஸ்வாமிகளைப்போன்றவர்கள் இம்மாதிரி ஸமயங்களில் இருந்தநிலை ஞாபகம்வாராமல் போய்விடுமா? ஸகலஜனங்களுடைய வந்தனை வழிபாடுகளையும் ஏற்று ஒருவித விகாரமுமடையாது அவரவர்க்கு ஆவன ஈந்து அவரவர்களைத் தத்தம் நிலைக்கு அடுத்த மேல் நிலையில் நிறுத்தும் திறன் ஈசுவரனுக்கு உண்டு என்று கூறும் சாஸ்திரமே ப்ரஹ்மவரிஷ்டனுக்கும் அது உண்டு என்று கூறுவது மஹோத்ஸவங்களுக்கிடையில் சற்றுக் கற்றுத் தேர்ந்தவருக்கு ஞாபகம் வராமல் போகுமா! இம்மாதிரியான வேதப்ரஹ்ம ரஹஸ்யம் விக்ரஹாராதனையில் அடங்கி இருப்பதால் தான் பட்டினத்தடிகள், தாயுமானவர், சங்கராசாரியர் முதலிய மஹான்கள் உத்ஸவங்களையும் கோயில்களையும் கொண்டாடி அனுபவிப்பதும்.

இனிக் கோயிலுள் காணப்படும் விக்ரஹங்களின் அமைப்பிலேயே இங்குக் கூறப்பட்டுள்ள இருவித வேதரஹஸ்யங்களாகிய ஸகுண, நிர்க்குண ப்ரஹ்ம விஷயங்கள் இவ்வாறு புதைந்து கிடக்கின்றன என்பதைப் பின்னர் விவரிப்போம்.

## ஹிந்துக்களின் பூர்வ நாகரீகம்
## ANCIENT HINDU CIVILIZATION

தற்காலத்தில் சிறப்புற்றோங்கும் நாகரீகங்களில் தாம் உயர்நிலை யடைந்திருப்பதாய்ப் பெருமை பாராட்டிக்கொள்ளும் ஏனைய ஜாதியார்களின் முன்னோர்கள், நாகரீகமென்பதே கனவிலும் கண்டிராதவர்களாகவும், தாங்கள் உண்ணும் உணவைப் பக்குவம் செய்யத் தெரியாதவர்களாகவும், உடுக்கும் உடையை நெய்துகொள்ள வறியாதவர்களாகவும், கேவலம் மிருகங்களுடன் மிருகங்களாய் வனங்களில் ஸஞ்சரித்து, குகைகளில் துயின்று கட்டைகளையும், கற்களையும் ஆயுதங்களாய் உபயோகித்து, அநாகரீகமென்னும் அந்தகாரத்தி னடுவே உழண்டுகொண்டிருந்த அந்தப் புராதன காலத்தில், நமது இந்து தேசமானது, கல்வி, செல்வம், ராஜரீகம், கைத்தொழில்கள் முதலான எண்ணிறந்த நாகரீகங்களில் உயர்பதவி யடைந்து, இவ்வுலகத்தின்கண் பரவியுள்ள நாகரீகங்களுக்கெல்லாம் ஜன்மபூமியாகவும், இவ்வுலக முழுமைக்கும் ஓர் கொடிவிளக்குப் (Beacon Light) போல் அதியுன்னத தசையிலிருந்த அப்பூர்வகாலமே, இந்தியாவின் பூர்வசரித்திர காலமாகும்.

### ஆர்யர்களின் ஜன்மபூமி

மேற்கூறியவாறு ஹிந்து ஆர்யர்களின் பூர்வகால நிலைமைகளையும், சரித்திரங்களையும், நாகரீகங்களையும், பெரும்பான்மை வேத ஆதாரங்களைக்கொண்டே நிர்ணயிக்கவேண்டும்.

ஆனால் ஆர்யர்களின் இந்திய வாஸச் சரித்திரம் தவிர வேறு அவர்களின் இன்னும் பூர்வசரித்திரங்களைப்பற்றியும் அநேக ஸித்தாந்தங்கள் (Theories) மனிதநூலோர் கூறுகின்றார்கள்.

இந்தியாவிலுள்ள ஆர்யர்களின் ஸம்ஸ்கிருத பாஷையும், வேதங்களும், ஜெண்ட் அவஸ்தா முதலான பார்ஸி, இரேனியர்களின் வேதங்களும், க்ரீக், லாடின் பாஷைகளைச்சேர்ந்த பூர்வசரித்திரங்களும், ஆங்க்லோ ஸாக்ஸன் முதலானவர்களின் பூர்வ சரித்திரக்கதைகளையும் பாஷைகளையும் ஆராய்ச்சி செய்து பார்க்கின், இவர்களெல்லோரும் முன் ஒரு காலத்தில் ஒரே ஜன்மபூமியில், ஒரே பாஷையைப் பேசிக்கொண்டும், ஒரேவித நடையுடை பாவனைகளனுஸரித்துக்கொண்டும், ஒரேவிதமான தெய்வங்களைப் பூஜித்து ஒரேவித மதாசரணைகளை யனுஷ்டித்தும் வந்திருக்கவேண்டுமெனத் தெரியவருகின்றது.

பூர்வ ஆர்யர்களின் ஜன்ம பூமியைப்பற்றி பலர் பலவிதமாய் ஊகிக்கின்றனர். முன்னொரு காலத்தில், பூர்வ ஆர்யர்கள் ஐரோப்பாவின் வடமேற்கு தேசமான ஸ்காந்திநேவியாவில் வசித்திருக்கவேண்டுமென்றும், அவர்களில் ஓர் பிரிவினர் தென்கிழக்கே சென்று க்ரீக், இத்தாலி முதலான தேசங்களில் குடியேறி இருக்கவேண்டும் என்றும், மற்றோர் பிரிவினர், ஆசியா கண்டத்தில் பிரவேசித்து, பாரஸீகத்தில் ஓர் பிரிவினரும், ஹிமயமலைக் கணவாய்களின் வழியாய்ச் சென்று இந்தியாவின் உத்தர பாகமான பஞ்சாப் தேசத்தில் ஸிந்து நதிக்கரைகளிலும், அதைச் சார்ந்த பீடபூமிகளிலும் குடியேறி இருக்கவேண்டுமென்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இந்தியாவின் உத்தர பாகமே பூர்வ ஆர்யர்களின் ஜன்மபூமியென்றும், அவ்விடத்திருந்தே அவர்களில் அநேக பிரிவினர், மேற்கூறியவாறு மற்றதேசங்களில் தங்கள் நாகரீகங்களுடன் பரவியிருக்கின்றார்களென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

மத்ய ஆசியாவின் பீடபூமியின்கண், ஆக்ஸஸ் நதி தீரங்களே பூர்வ ஆர்யர்களின் ஜன்மபூமியென்றும், அவ்விடத்திருந்தே அவர்கள் பல பிரிவாகப் பிரிந்து, மேற்கூறியவாறு பல தேசங்களில் குடியேறி இருக்கின்றார்கள் என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

மேற்கூறிய மூன்றுவித ஸித்தாந்தங்களைத் தவிர, த்ருவ ஸித்தாந்தம் (Arctic Home of the Aryans) என்ற ஓர் ஸித்தாந்தமானது இப்



பொழுது அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. அதன்பிரகாரம், பூர்வ ஆர்யர்கள் முன் ஒரு காலத்தில் உத்தரத்ருவப்ரதேசங்களில் வஸித்திருக்கவேண்டுமென்றும் காலபேதத்தால் அப்பிரதேசங்கள் பனி மிகுதியால் (Glacial Periods) மனிதர்கள் வஸிக்கக்கூடாதவாறு அவ்வளவு குளிர்ச்சியடைந்து விட்டபடியால், ஆங்கிருந்தோர் சிதறுண்டு நாநாதேசங்களிலும் பரவி மேற்கூறியவாறு குடியேறி இருக்கவேண்டும் என்றும், அவர்களில் ஓர் பிரிவினரே தெற்கே சென்று பாரஸீகத்திலும், உத்தர இந்தியாவிலும் குடியேறி இருக்கவேண்டுமென்றும், திலகர் முதலான சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த த்ருவஸித்தாந்தத்துக்கு ஆதாரமாய், உத்தரத்ருவ ப்ரதேசங்களையும், ஆங்கே இன்றைக்கும் பார்க்கத்தக்க பற்பல அதிசய காட்சிகளையும், இரவு ஆறுமாதம், பகல் ஆறுமாதம் என்ற கால அமைப்பையும், சூரியன் உச்சமடையாமல் அடிவானத்திலேயே மஹாமேரு என்று சொல்லப்பட்ட உத்தரத்ருவத்தை ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றி ஸஞ்சரிப்பதையும், த்ருவ நக்ஷத்திரம், ஸப்தர்ஷிமண்டலம் முதலான நக்ஷத்ரமண்டலங்கள், தலைக்கு நேரே உச்சியில் பிரகாசிப்பதையும் இவைபோன்ற இன்னும் எண்ணிறந்த அதிசயமான உத்தரத்ருவ காட்சிகளையும் பற்றி வேதங்களில் சில மந்திரங்கள் விவரமாய்க் கூறுவதால், அவைகள், அவ்வுத்தரத்ருவகாட்சிகளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகளித்த ஆர்யர்களாலேயே மனமகிழ்ச்சியுடன் கவனம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று தெரியவருகின்றது. மேற்கூறிய ஆதாரங்களால், இந்திய ஆர்யர்களின் பூர்வீகர்கள், முன் ஒரு காலத்தில் உத்தரத்ருவ ப்ரதேசங்களில் வஸித்திருக்க வேண்டுமென்றும், உத்தரத்ருவப்ரதேசமே பொதுவாக ஸகல ஆர்யஜாதியார்களின் ஜன்மபூமியாயிருந்திருக்க வேண்டுமென்றும் ஊஹிக்கப்படுகின்றது. அவ்வுத்தர த்ருவப்ரதேசங்களினின்றும் மேற்கூறிய காரணங்களால், ஆர்யர்களின் ஓர் பிரிவினர், ஹிமயமலைக்கணவாய்கள் வழியாய் உத்தர இந்தியாவில் முதல் முதல் குடியேறத் துவங்கியகாலமே, இந்தியாவின் பூர்வ காலத்தின் ஆரம்பமாகும்.

இந்துதேசச் சரித்திரமானது பூர்வகால சரித்திரமென்றும், மத்யகால சரித்திரமென்றும், தற்கால சரித்திரமென்றும், காலவரைக் கிணங்க மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படலாம்.

மகததேசத்தி லரசாண்டுவந்த மௌர்ய ராஜவம்சத்து முதல்வனான சந்திரகுப்த மஹாராஜனுடைய அரசாட்சி காலத்துக்கு முந்தின காலமே பூர்வ கால மெனவும், அதற்குப்பின், ஆங்கிலேயர்கள் இந்துதேசத்தில் முதல்முதல் ராஜத்வம் (Sovereignty) அடைந்த 1765-ம் ஆண்டுவரை மத்யகால மெனவும், அதற்குப் பிற்காலமே தற்காலம் எனவும் வகுக்கப்படலாம்.

க்ரீக் சக்கரவர்த்தியான அலக்ஸாந்தர் அன்னவர் ஸேனாதிபதியான ஸேலுகஸ், சந்திரகுப்த மஹாராஜன் ஸதஸில் க்ரீக் ஸ்தானாதிபதி (Ambassador) யாய் விளங்கிய மகாஸ்தனிஸ்— இவர்களுடைய சரித்திரங்களாலும், புஸ்தகங்களாலும் சந்திரகுப்த மஹாராஜன் கி. மு. 4-ம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்டிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது

ஆகையால் பூர்வகாலம் என்பது மகததேசத்தில் சந்திரகுப்த மஹாராஜன் அரசாளத் தொடங்கிய காலமான கி. மு. 4-ம் நூற்றாண்டின் பிற்பாகத்துக்கு முன் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முந்திய காலமாகும். அக்காலத்தில் நடந்தவர்த்தமானங்களை, காலபரம்பரையாய் (In chronological order) துல்யமாய் ஒழுங்குபடுத்திக் கூறுவது அஸாத்யமாகும். ஆனால், மேற்சொல்லிய பூர்வகாலத்தில் உண்டான நூல்

1 "The age of Chandraguptha is the sheet anchor of Indian Chronology"—*Maxmuller*. சந்திரகுப்தன் கி. மு. 315-ம் ஆண்டில் மகத தேசத்தில் பட்டம் தரித்ததாய் மாக்ஸ்மூல்லர் அபிப்பிராயப் படுகிறார். (Vide History of Ancient Sanskrit Literature by *Maxmuller*)

களைக் கொண்டும், ஏனைய ஆதாரங்களைக் கொண்டும், அவைகளின் காலக்கிரமங்களைமாத்திரம் ஒருவாறு சொல்லலாம்.

### பூர்வகாலம்—நான்கு பிரிவுகள்

பூர்வகால நூல்கள் (Literatures) ச்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் என நான்கு பிரிவுகளாக, அவைகளின் அமைப்பு (Style) சந்தஸ் (Metre) கருத்துக்கள் (ideas) தேச வர்ணனை, காலவர்ணனை, ஜ்யோதிஷக்குறிப்புக்கள் (Astronomical references) முதலான பலவித அந்தரங்க ஆதாரங்களைக் (internal evidences) கொண்டு பிரிக்கப்பட்டிருக்கின்றன.

### ச்ருதி

அனாதியாய், ஹிந்து மதத்துக்கே ஆதியாதாரமாய், மனிதர்களால் மாற்றப்படக்கூடாததாய், உலகத்தையே சிருஷ்டித்த ஈசுவரனாலேயே கல்பிக்கப்பட்டனவாய்ச் சொல்லப்படும் வேதங்களே ச்ருதிகள் என்று சொல்லப்படும்.

### வேதங்கள்

**வேதங்கள்** இவ்விந்துமத க்ரந்தங்களுள் மாத்திரமன்று, இவ்வுலகத்துள்ள எண்ணிறந்த க்ரந்தங்களுள்ளும், ஆதியானவை. வேதங்களுக்கு முன் ஏதாவது நூல்களிருந்தனவோ வென்று கூட இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உலகத்தின்கண் பரவியிருக்கும் நாகரீகங்களினுடையவும், மனித ஜாதியார்களினுடையவும், அவர்களின் புத்திவிசாலத்தின் பரம்பரா நிலைமைகளி (Various stages of development of human intelligence) னுடையவும், ஆதியாதாரங்களை (Germs) வேதங்களிலேதான் காணலாம்.

**வேதநூல்கள்,** (1) மந்திரம், (2) ப்ராஹ்மணம், (3) **உபநிஷதம்** என மூன்று பிரிவாக இருக்கின்றன. அதற்கிணங்க வேதகாலமானது, மந்திரகாலம், ப்ராஹ்மணகாலம், உபநிஷதகாலமென மூன்று காலங்களாகப் பிரிக்கப்படலாம். ஆனால், மேற்கூறிய காலப்பிரிவினையானது அவ்வளவாகத் துல்யமாய்ச் சொல்லத் தக்கதன்று. ஏனென்றால், மந்திரங்களில் பிந்தியவைகளில் சில ப்ராஹ்மணங்கள் கவனம் செய்ய ஆரம்பித்த காலத்துக்குப் பின்னும், ப்ராஹ்மணங்களில் பிந்திய சில உபநிஷதங்கள் கவனம் செய்ய ஆரம்பித்ததற்குப் பின்னும் கவனம் செய்யப்பட்டனவென்று நிர்ணயிக்கப்படுகின்றன.

### நான்கு வேதங்கள்

**ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்** என வேதங்கள் நான்கு. அவைகளில் ரிக்வேதமே ஆதியில் உண்டானதாய்த் தெரிகின்றது. ஆகையால் முன் ஒருகாலத்தில் ஒரே வேதம் (அதாவது ரிக் வேதம்) மாத்திரமிருந்ததென்றும், பின்பு ரிக், யஜுஸ், ஸாமம் எனமூன்று வேதங்களுண்டான காலமும், பின்பு அதர்வண வேதமும் சேர்ந்து நான்கு வேதங்களான காலமுண்டென, காலக்ரமப்படி வேதக்ரமங்களும் ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. மேலும் ரிக்வேதம் மாத்திரம் ப்ராஹ்மண காலத்துக்கு முன்னமே இருந்ததாகவும், யக்ஞம், யாகம் முதலான கர்மகாண்ட ஸம்பந்தமான (Sacrificial systems) நூல்கள் பலவாறாகப் பெருகி ஒவ்வொரு யாகத்தையும் * நான்குவித ரித்விக்குகள் நடத்தவேண்டுமென்ற விதிகள் ஏற்பட்ட ப்ராஹ்மண காலத்திலேயே அந்த ரித்விக்குகள் உச்சரிக்கத்தக்க பல மந்த்ரங்கள், ரிக்வேதத்தினின்றும், † யஜுர் வேதத்திலும், ஸாமவேதத்திலும் சேர்க்கப்பட்டனவாய்த் தெரிகின்றது.

“அது (யாகம்) மூன்று வேதங்களாலும் நடத்தப்படவேண்டும். ரிக், யஜுஸ், ஸாமம் என்ற

---

* குறிப்பு—இவ்வாறு மூன்று வேதங்கள் மாத்திரம் உள்ள (முவ்வேத) காலத்தைப்பற்றி, ஆபஸ்தம்பர், பரிபாஷ்ய ஸூத்ரத்தில் கூறுவதாவது,

† साત्रिभिर्वेदैः विधियते (3)
ऋग्वेद यजुर्वेद सामवेदैः (4)
ऋग्वेदेन होता करोति (16)
सामवेदेनाद्गाता (17)
यजुर्वेदे नाध्वर्युः (18)
सर्वै ब्रह्मा (19)



விக்டோரியா மஹாராணியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1838-ம் ஞு ஜூன்மீ 28௳



வேதங்களால் ரிக்வேதத்தால் **ஹோதா**வும், ஸாம மந்திரங்களால் **உத்காதா**வும், யஜுர் மந்திரங்களால் **அத்வர்யு**வும், ஸகலவேத மந்திரங்களாலும் **ப்ரஹ்மா**வும் தங்கள் தங்கள் க்ரியைகளைச் செய்யவேண்டும். *

**तत्परिचरणौ इतरौवेदौ** ॥ 6 (2)

மேற்கூறியவாறு நான்கு வேதங்களாக அமைந்த விதத்தைக் காலக்ரமப்படுத்தப் புகின், அவைகள் முறையே (1) ஏகவேதகாலமெனவும், (2)†முவ்வேதகால மெனவும், (3) சதுர் வேதகாலமெனவும், மூன்று காலமாய்க் கூறலாம்.

முன்கூறியவாறு, மற்ற மூன்று வேதங்களிலும் பெரும்பான்மை ரிக்வேத மந்திரங்களே காணப்படுவதாலும், மூன்று வேதங்களும், ரிக்வேத காலத்துக்குப்பின், யாகாதிக்ரதுக்களுக்கு உசிதமாய்ச் சேர்க்கப்பட்டன வாதலாலும், ரிக்வேதமே மற்ற மூன்று வேதங்களுக்கும் ஆதாரமாய்ச் சொல்லப்படலாம்.

R. S நாராயணஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

* கௌஷீதகீ ப்ராஹ்மணத்தில் மற்ற இரண்டு (யஜுஸ், ஸாம) வேதங்களும், ரிக்வேதத்தின் உப வேதங்களெனவே கூறப்பட்டிருக்கின்றது.

† குறிப்பு:—த்ரயீ (**त्रयी**) என்னும் பதமானது மூன்று வேதங்களையும், முன்னொரு காலத்தில் மூன்று வேதங்கள் மாத்திரமுண்டென்றும் தெரிவிக்கும். இவ்வாறே பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

**கடவுளைக் கண்டவனை உலகம் பாதிக்காது.**—'கண்ணும்பூச்சி' யென்னும்விளையாட்டில் தாய்ச்சியைப் போய்த் தொட்டுவிடுகிறவன் குருடனாவதில்லை. அதுபோல் கடவுளை யொருமுறைக் கண்டுவிட்டவனை இவ்வுலகபாசங்கள் கட்டுப்படுத்தா. தாய்ச்சியைப் போய்ப் பிடிக்கிறவன் திருடனாக்கப்படாமல் சுயேச்சையாய்த் திரிவதுபோல் எம்பெருமானது திருவடிகளைத் தொட்ட தொண்டர்கள் இப்பிரபஞ்சநாடக அரங்கத்தில் நிர்ப்பயமாய் ஓடியாடி உலக மாயாபாசங்களினின்றும் விடுதலை பெறுகின்றமையால் அவர்களை மீண்டும் எதுவும் ஒருநாளும் பந்திக்காது.



# தேவாரம்-சிற்றாராய்ச்சி

## SAIVITE HYMNS—A CRITICAL NOTE

(தொடர்ச்சி)

தமிழ் அவாவினோருக்குத் தண்ணமுதொக்கும் விஷயதான போதினியாம் விவேக போதினிக்கண் சென்ற ஜூன்மீ திருஞான சம்பந்த சுவாமிகளது சரித்திர விஷயங்களில் அவர்தம் பாசுரங்களினின்றே அறியக்கூடியவைவை எடுத்தெழுதினேன். இனி, அவர் காலத்திலேயே விளங்கின திருநாவுக்கரசு சுவாமிகளது சரித்திர விஷயங்களை அந்நாவுக்கரசரது தேவார வாயிலாகவே ஆராய்ந்து ஈண்டு எழுதுகின்றேன்:—

### 1. திருநாவுக்கரசு சுவாமிகளது சரித்திர சம்பந்தமான விஷயங்கள்.—

(1) சமணமதத்தைத் தழுவித் திகைப்புற்ற தம்மீது சூலைநோயை ஏவி, அந்நோயினால் தாம் மிகவருந்தி நோயைத் தீர்த்தருளுமாறு சிவபெருமானை வேண்ட அவர் அவ்வேண்டுகோளுக்கிரங்கி, நோயைத்தீர்த்து, சமணர் கூட்டத்தினின்றுந் தம்மை மீட்டு, தன் தலையிற் பாலைத் தெளித்துச் சுத்திசெய்து, பாததரிசனந் தந்து, ஆட்கொண்டுபொருட்படுத்தித் தம்மீது பாமாலை பாடும்படி அருளினரென்பது.—

" அமணர்கள்த மறவுரைகேட் டலமந்தேன்."

" சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர் *** அதிகைக் கெடில வீரட்டானத் துறையம் மானே."

" குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டு, உருகுவித்தெனுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப்போக்கி, யருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்."

" வெஞ்சொற் சமண் சிறையி லென்னை மீட்டார்."

" சூலைதீர்த் தடியேனை யாட்கொண் டாரே."

" பண்டமாப் படுத்தென்னைப் பால் தலையிற் றெளித்துத்தன் பாதங் காட்டி."

" ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டவன்."

"பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூற் றமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளினானை."

(2) தம் மதத்தை விட்டுச் சைவத்தைத் தழுவிய காரணத்தால் இவர்மீது பொறாமைகொண்ட சமணர்கள் மதயானையை இவர்மீது ஏவின போது "அதிகைப் பெருமானுக்கு உறவினன் ஆய்விட்டேன். ஆதலினால் யான் எதற்கும் இனி அஞ்சேன்" எனத் திருப்பதிகம் பாடினது.—

"திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை."

(3) அழுக்காறு கொண்ட அமணர் விஷங் கலந்த பாற்சோற்றைத் தமக்கு உண்ண அளித் தனரென்பதும் அவ்வுணவை அமுதமாக்குவித் தார் சிவபிரான் என்பதும்.—

"வஞ்சனைப் பாற்சோறாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி யடிகளாரே."

(4) சமணர்கள் தம்மைக் கல்லோடு கட்டிக் கடலிலிட்டபோது நமச்சிவாயப் பதிகம் பாடித் தாம் உய்ந்தன ரென்பது.—

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."
"கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வய னீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே."

(5) தில்லையில் நடன தரிசனம் பெற்றது.—

"திருத்தமாந் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி
நேர்பட வந்த வாறே."

(6) திருஞானசம்பந்த சுவாமிகளோடு தலங்கள்தோறுஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்தன ரென்பது.—

"பண்மலிந்த மொழியவரும் * யானு
மெல்லாம் பணிந்திறைஞ்சி."

(7) திருப்பதிகம் பாடிப் பரிசிலாகப்பழங்காசு பெற்றது.—

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாட வாட்டந் தவிர்ப்பார்"—

(8) திருமறைக்காடு எனப்படும் வேதாரணியத்தில் அடைபட்டிருந்த திருக்கதவத்தைத் திறந்தருளும்படி சிவபிரானை வேண்டினது.—

"பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே."

(9) தாமிருக்கும் இடத்துக்கு வந்து யாம் இருக்கும் ஊர் திருவாய்மூர்; அங்கு வருதி எனச் சிவபிரான் சொல்லிப்போக, அவரைப் பின் தொடர்ந்து இவர் செல்ல சுவாமி ஒளித்துக்கொள்ள செந்தமிழ் அரசாம் திருஞான சம்பந்தரும் அங்கு வந்து சேர, "சுவாமியே, இனி நீர் ஒளித்துக்கொள்ளல் இயலாது; மறைக்கதவம் அடைப்பித்த மாட்சியாளராம் சம்பந்தர் வந்துள்ளார்" எனச்சொல்லி தரிசனம் பெற்றது.—

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ."
"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருண்ணின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

(10) இவர் தூங்கும்போது சிவபிரான் வந்து "நம்மூர் புறம்பயம்" என்று சொல்லிப் போனது.—

"துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்லமாட்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப் [டேன்
புறம்பயநம் மூரென்று போயினாரே."

* பண்மலிந்த மொழியவர் = திருஞான சம்பந்த சுவாமிகள்.



(11) நல்லூர்க் கடவுளைக் கனவின்கண் கண்டு தொழுதது.—

"நல்லூருறை நம்பனை நானொருகாற்
றுஞ்சிடைக்கண்டு கனவின் றலைத்
தொழு தேற்கவன்றான்
நெஞ்சிடை நின்றகலான் பல காலமு நின்றனனே."

(12) திருவடியைத் தம்மீது பொறித்து வைக்கும்படி திருச்சத்தி முத்தத்துக் கடவுளை வேண்டின ரென்பது.—

"** ** கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை **
தேவா திருச்சத்தி முத்தத்துறையுஞ்
சிவக்கொழுந்தே."

(13) மேற்சொன்ன வேண்டுகோளுக்கிரங்கி நல்லூர்ப் பெருமான் திருவடி சூட்டினரென்பது.—

"நல்லருளாற் றிருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

(14) திருவையாற்றிற் கயிலாய தரிசனம் பெற்று, கண்ட ஒவ்வொரு பொருளும் காதலன் காதலி சொரூபமாக இருப்பதாகவும், கண்டறியாத அரிய விஷயங்களைக் கண்டதாகவும் பாடினது.—

"ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்."

(15) திருக்கடந்தை என்கிற பெண்ணாகடத்தில் வீற்றிருக்கும் சிவபிரானைச் சூலக்குறியும் இடபக்குறியும் தம்மீது பொறித்து ஆட்கொள்ளுமாறு வேண்டி விண்ணப்பஞ் செய்தது.—

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூல
மென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே."
"இடபம் பொறித்தென்னை யேன்று
கொள்ளாய் இருஞ்சோலை திங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை
மாடத்தெந் தத்துவனே."

(16) தாம் மூத்த வயதின ரென்பது.—

"தளையவிழ் கோதை நல்லார்
தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தாய்
என்செய்வான் தோன்றினேனே."

(17) திருப்புகலூர் என்னும் க்ஷேத்திரத்திற் சிங்கரூபமாய்த் தோன்றின சிவபிரானது திருவடி நிழலைச் சேர்ந்தது.—

"சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே !!"

II. இவரது தேவாரத்திற் கூறப்பட்டுள்ள நாயன்மார், முநிவர், அரசர், முதலியோர்.—

இராவணன், அருச்சுனன், பகீரதன், தசரதர், ஸ்ரீராமர், கோச்செங்கணான், மாபலி, மார்க்கண்டர், அகத்தியர், சண்டேசுரநாயனார், கண்ணப்ப நாயனார், சாக்கிய நாயனார், கணம்புல்ல நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பூதியடிகள், தில்லைவாழந்தணர், அமர்நீதிநாயனார், நமிநந்தியடிகள், தருமி, மேலும், "பேய்த்தொழிலாட்டியைப் பெற்றுடையீர்" எனவருந் தேவாரத்தாற் காரைக்காலம்மையாரையும், "நரியைக் குதிரை செய்வானும்," "குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்," "வையைத் திருக்கோட்டி நின்றதோர் திறமுந் தோன்றும்," "குசையும் அங்கை

யிற் கோசமுங் கொண்டவவ் வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே" எனவரும் தேவாரத்தால் மாணிக்கவாசகரையும் குறிப்பிட்டிருக்கின்றனரோ என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

### III. அப்பர் தேவாரத்தில் அருமையாகச் சொல்லப்பட்டுள்ள சில விஷயங்கள்.—

(1) மகாவிஷ்ணுவே சிவபெருமானுக்குத் தேவி என்பது.—

"காவியங் கண்ணளாகிக் கடல்வண்ண னாகி நின்ற
தேவியைப்பாகம் வைத்தார் திருப்பயற் றூரனாரே."
"அரியலாற் றேவியில்லை ஐயனை யாறனார்க்கே."
"மறிகடல் வண்ணன் பாகா மாமறை யங்க மாறும்
அறிவனே யாலவாயி லப்பனே யருள்செ யாயே."
"நாரணனை யிடப்பாகத் தடைத்தார்போலும்."

(2) கெடிலநதி தென்றிசைக் கங்கை என்பது.

"நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே"

### IV. இவரது தேவாரத்தில் விசேடித்துச் சொல்லப்பட்டுள்ள திருவிழா முதலியன.—

1. திருவாரூர்த் திருவாதிரைவிழா
2. திருவாரூர்த் தேர்
3. திருவிடைமருதூர்ப் பூசஸ்நாநம்
4. கடுவாய்க்கரைப்புத்தூர் பூசஸ்நாநம்.

### V. இவரது தேவாரத்திலுள்ள பழமொழி போன்ற வாக்கியங்கள்:—

1. தன்னை யடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ தலையா யவர்தங் கடனாவதுதான்.
2. கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் நானே.
3. முயல்விட்டுக் காக்கைப் பின் போன வாறே.
4. அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே.
5. பனிநீராற் பாவைசெயப் பாவித்தேனே.
6 தென்போர்க் காதனாயகப்பட்டேனே.
7. இருட்டறையின் மலடு கறந் தெய்த்தவாறே.
8. விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே.
9. பாழூரிற் * பயிக்கம் புக் கெய்த்தவாறே.
10. தவமிருக்க பவஞ்செய்து தருக்கினேனே.
11. கரும்பிருக்க இரும்பு கடித் தெய்த்தவாறே.
12. உற்றாராருளரோ, உயிர் - கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லானமக் குற்றாராருளரோ.
13. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை.
14. ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்.
15. கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது.
16. நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.
17. வெஃதநீ றருங்கலம் விரதிகட்கெலாம்.
18. அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்.
19. அறுகயிறூசல்.
20. மன்றத்துப் புன்னைபோல மரம்படுதுயரம்.
21. நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தோற்றம்.
22. கழியிடைத் தோணி போன்றேன்.
23. உற்றலால் கயவர் தேறார்.
24. ஒருமுழம் உள்ள குட்டம் ஒன்பது துளை யுடைத்தா யரைமுழம் அதனகலம் அதனில்வாழ் முதலை ஐந்து.
25. காம்பினை மூழைபோல.
26. மத்துறு தயிரேபோல.
27. என்னிலாரும் எனக்கினி யாரிலை.
28. நாலும்வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே.
29. ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே.
30. யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம் மாதே வனலாற் றேவர்மற் றில்லையே.
31. கூவலாமை குரைகடலாமையைக் கூவலோ டொக்கு மோகட லென்றல் போல்.
32. நரிவிருத்தமதாகுவர் !
33. செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை.
34. எங்கெழிலென் ஞாயிறு? †

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

* பயிக்கம் = பிச்சை

† சூரியன் எந்தத் திசையில் உதித்தால் என்ன?



# கம்பநாடர் சரித்திர விளக்கம்

## LIFE OF KAMBAN

கம்பநாடனுமை செவி சாற்றுபூங்
கொம்பநாடன் கொழுனனி ராமப்பேர்
பம்பநாடழைக்குங் கதை பாச்செய்த
கம்பநாடன் கழறலையிற் கொள்வாம்.

### 1. முகவுரை

இவர் ஓர் மகாகவி; கவி சக்கிரவர்த்தி என்று புகழ்ப்பெற்றவர். வேதத்தி னுட்பொருள்களாகிய தர்மங்களை அனுபவரூபமாய் எடுத்துக்காட்டியதும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பயன்களைத் தழுவியுள்ளதும், வீரம் கருணை அற்புதம் சாந்தம் இன்ப முதலிய நவரஸங்களையுடையதும்; சத்தியம்பொறை ஊக்கம் பத்திமை நேயம் ஆற்றல் முதலிய பல ஏற்றங்கள் அமைந்துள்ளதுமான, இதிஹாஸ ரத்னமாகிய ஸ்ரீமத் இராமாயணத்தைத் தமிழ்நாட்டவருக்கு இனிய செந்தமிழிலியற்றி உதவி புரிந்தவருமிவரே.

இவர் கவியைக்கண்டு மகிழாத தமிழ் மாந்தர் இம்மாநிலத்திலிரார் (கம்பநாடன் கவிதையிற் போற் கற்றோர்க்கிதயம் களியாதே) என்ற கவியின்படி யாவர் மனதிற்றான் குடிகொண்டிராது. இதை அறியாதார், தமிழ்ச்சுவை யறியாதாரேயாம். சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை திருக்குறள் ஆகிய அற்புதமான பற்பல சங்க நூல்களாகிய அங்கலக்ஷணமுற்ற தமிழ்தெய்வத்தைப் பாவசமாகி ஈடுபட்டு (இன்பம்) புகழ் என்ற பரம நிலையைப் பெற்றவர் இப்புலவர் பெருமான் ஒருவரே.

ஆகையால் கல்வியிற் பெரியோன் கம்பன், என்னும் தமிழுலக முழுதையும் ஆண்டனுபவித்த திறத்தினாலேயே கவி சக்கிரவர்த்தியென்றும், சொன்னயம் பொருள் நயம் கற்பனாலங்காரம் ஓசையுடைமை ஆழமுடைமை முதலிய பல, அழகுகளமைந்து 'கம்பசித்ரம்' 'கம்பசூத்ரம்' இது என்ன கம்பராமாயணம், "கம்பர்வீட்டுளொரு சிறு புள் கட்டுத்தறியும் கவி பாடும்" என்று மிக்க அருமை மொழிகளால் பாராட்டப்படுவதுமிவர் நூல் ஒன்றே.

இவரைப்பற்றி விநோதரஸமஞ்சரி, புலவர்புராணம், தமிழ் நாவலர் சரிதை, பாவலர்சாத்திரதீபம், சோழமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம், தனிச்செய்யுட் சிந்தாமணி, ஏரெழுபதும் அல்லாமல் பல சமயங்களில் பல வித்வான்களால் எழுதப்பட்டிருக்கிற அனேக புஸ்தகங்களினும் இவர் தேசம் வாசம் பேர் முதலியவைகளைப் பற்றி ஒன்றிலேனும் முற்றும் விவரிக்கப்படவில்லை.

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபம் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுங்கா ணன்மறையை
ஓதுவித்து வாழு மழுந்தூர்.

என்ற கவியால் திருவழுந்தூரிலே பிறந்தார் என்றார். சிலர் அதற்கடுத்த மூவலூர் மறையோன் மனையிற் பிறந்து திருவழுந்தூர் வந்து சேர்ந்தார் என்றார்.

கன்னன் பிறப்பு பினுளிற்
றுலங்கிற்று கம்பன் பிறப்
பின்னந் தெரிந்தார்க ளிலையில்லை
முக்காலு மிதுமெய்மையே.

என்றது புலவர் புராணம். இவர் பேரினும் இப்படியே பெருஞ் சந்தேகம். (அதாவது)

சிலர், கம்பங்கொல்லை காத்ததனாற் கம்பன் என்றார். (கம்பம்) தூண் எனும்படி இளம்பருவத்தில் மலைத்து நிற்கும் காரணத்தால் சிலர் கம்பன் என்றார். சிலர், மனம் நிலைகொள்ளாது சலிக்கும் சுபாவத்தால் கம்பன் என்றார்; (கம்பம்) (நடுக்கம் சலனம். சோழராஜன் முன் கொண்டுபோய் விடப்பட்ட போது ஒரு கொம்பு (கம்பும்) கையுமாய் நின்றதைக் கண்டு காலிங்கராயன் குதிரையைக் கொன்றதும் எழுப்பியது மிக்கம்பனா என அன்றுதொட்டுப் பெயர் வழங்கலானதென்றார். கம்பத்தி னருகோர் சிசு கிடந்திட்டதாற், கம்பன் என்று இவ்வாறெல்லாங் கூறினர்.

நமது நாட்டில் பூர்வம் இருந்த எந்த வித்வான்கள் பெயர்தான் உள்ளபடி வெளிப்பட்டிருக்கிறது! எல்லாம் குணம்,குறி, இடம், மாபு முதலிய காரணங்களைக்கொண்டு விளங்கி இருக்கின்றதை அன்றி வேறில்லை. வால்மீகி முனிவர் பேரும் இப்படித்தானே. வால்மீகம் புத்து அதினிடம் தோன்றியவர் என்பதுபோலும். வள்ளுவர் குலத்துற்ற திருவம் இவைபோல்வன சான்றுகளனேகம். அவை பின்வரும் கம்பநாட்டிற் பிறந்த காரணத்தாற் கம்பருக்கு இப்பெயர் வந்தது.

இவர்இயற்றிய இராமாயணத்தில் இவர் குமாரரும் பெரும்புலவருமான அம்பிகாபதி, என்பார் (கம்பநாடன் கழறலையிற் கொள்வாம்) என்றபடி இத்துடன் 6, தனியன் செய்யுட்கள் இப்பெயரே புனைந்து கிடக்கின்றது. வெள்ளிடை மலைபோல் விளங்கக் கண்டும் கொம்பைவிட்டு வாலைப் பிடிப்பார் போல் நாடன் பெயரை விட்டு கம்பர், என்னும் மொழியைத் தொட்டு பிஷ்ட பேஷணமாவை அரைக்கும் நியாயமாக அப்பெயரை துகைக்கிறார்கள்.

சிலர் இவருடைய முன்னோர் ஜன்மதேசம் கம்பநாடாக இருக்கலாம், என்று நுனி நாவினை விடறினார்கள். ஆனால் பெரும்பாலர் இவரை முதிர்ந்த வைஷ்ணவர் என்று சொல்லி குதுகலிக்கிறார்கள். ஆயினும்அது இராமாயணம்பாடி (கம்பநாட்டாழ்வான்கவி) என்று ஆசாரிய புருஷர்களாலும் பகவானாலும் கொண்டாடப் பெற்று ஆழ்வார்பட்டம் பெற்றது மலை மீதேற்றிய தீபம் போல் மாநிலமுழுதும் இராமாயண ஒளி வீசிய பின்னரே என்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயமே. இராமாயணம் பாடிய புலவர்க்கெல்லாம் இப்பட்டம் சித்தம் என்பது பின்னரும் எடுத்துக் காட்டப்படும்.

அதற்கு முன்னிருந்த இவர் நிலைமைகளையும் பெயரையும் ஜாதியையும் தொழிலையும் உபாசனைக் கிரமங்களையும் பிள்ளைக் கிட்டிருக்கிற பெயரையும் வேறு செய்திருக்கும் நூல்களையும் பிரபல ராமாயணத்திலேயே எடுத்து ஆண்டிருக்கும் உள்நோக்குகளையும் நன்றாய் சமாதான புத்தியுடன் உய்த்துணரவல்லார்க்குக் கைத்துறு நெல்லியிற் காணல் ஆம் இவர் கொள்கை. ஆகையால் ஒவ்வொருவரும் முற்றும் துலக்காது தமக்கு வேண்டிய அளவே எடுத்து விளக்கிக் கொண்டனர்போலும்.

வடமொழியில் வால்மீகி முனிவர்போல் தென்மொழியிற் இவர் பாராட்டப் படுகிறாராதலின் இவருடைய சரித்திர முழுதும் விஸ்தாரமாய் தெரிந்துகொள்ள வேண்டிய ஆசை யாவருக்கும் மனத்தினளவாய் நெடுங்கால் நிரம்பிக் கிடந்தமையால், அதைக்கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு உள்ள நியாயங்களை விளக்கி பக்ஷபாதமின்றி ஆதியோடந்தமாய் ஒருவாறு வெளியிடப்பட்டிருக்கிறது.

## 2. இவர் பிறந்த நாடு!

மிக்க புண்யபூமியாகிய பாதகண்டத்தின் தென்பாகமாகிய தமிழ்நாட்டில் தொண்டைநன்னாடு சான்றோருடைத்து எனப் புகழ்பெற்ற தொண்டை நாட்டிலிவர் தோன்றினார். இந்நாட்டைத்தான் கம்பநாடென்பர். இங்கு கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானைக் கம்பர் என்பர், இங்குள்ள புண்ய நதிகளிற் சிறந்தவொன்றைக் கம்பை என்பர். இதனை திருஞானசம்பந்த மூர்த்திகள்

காயவரன் மதன் பட்டதுங் கம்பமே
கண்ணுதற் பரமற்கிடங் கம்பமே. என்றும்

சுந்தரமூர்த்திகள் கண் பெற்றபோது

கால காலனைக் கம்ப னெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே என்றும்

சேக்கிழார் சுவாமிகள்

“ குழ விமையைக் கொம்பு கம்பர்
கொள்ளும் பூசனை குறித்த தானம் ”
“ கம்ப மேவிய தம் பெருமானை
கம்பர் காதலிதழுவ மெய் குழையக் கண்டு.”



என்று திருநெறித் தமிழாகிய தேவாரம் பெரிய புராணங்களில் கூறியுள்ள கம்பநாடாகிய காஞ்சிமாநகரில் முன்னவராகிய மறையவர் குலத்தில் ஆதிகாவியமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தை வடமொழியி லமைத்தபடி இனிய தென்மொழியிலு மளிக்கத் திருவுளம்கொண்டு அவ்வான்மீகி முனிவரே இவ்வடிவம் கொண்டவதரித்தார்.

வடமொழியிலும் தென்மொழியிலும் இராமாயணத்தை ஒருங்குணர்ந்த அறிவுடையோர், இவரை அபர வால்மீகி என்பர். அதற்குக் காரணம் இவரியற்றிய இராமாயணத்தின் அருமைப் பாட்டுகளே என்பது பின் விளங்கும்.

## 3. இவர் காலம்.

சாலிவாகன சகம் 770-ம் ஆண்டுக்குமேல் இவர்காலம் என்று ஊகிக்கப்படுகிறது. இராமாயணம் அரங்கேற்றிய காலம் சாலிவாகனம் 807-ம் ஆண்டென்று ஸ்பஷ்டம். அதற்கு ஆண்டு 35-க்கு முன் இக்குழந்தை பிறந்த பின் சில ஆண்டு செல்லவே காலகெதியால் தாய் தந்தையரும் காலம் சென்றனர். ஆருமற்ற அகதியான அக்குழந்தை அவ்வூரரால் போஷிக்கப்பட்டு பரமனருளால் வளர்ந்து வந்தது.

## 4. பாலப் பருவம்.

அப்பொழுது சோழநாட்டில் திருவழுந்தூர் ஒச்சர்குலத்து **ஆதித்தன்** என்பான், தன்மனைவியோடு மக்கட்பேறு விரும்பி பலத்தலயாத்திரை செய்து கடைசியிற் காஞ்சியடைந்து கம்பமேவிய கடவுளைத் தொழுது கண்ணீர் பெருகக் கசிந்து உருகி ‘காதலர் இல்லாக்குறையை நீக்கி யருளவேண்டும் கடவுளே’ என்று அச்சந்நிதானத்திலேயே அன்று முழுதும் (கம்பத்தடியிற்றவம்) ஆன * உபவாசமிருந்து வருந்தினர். அக்கடவுள் கிருபை கூர்ந்து நின்கவலை ஒழியும் என்று அசரீரிமுகத்தாற் கூறக்கேட்ட ஆதித்தன் வெகுசந்தோஷமடைந்து மறுபடியும் பிரதக்ஷணம் செய்து பணிந்து விழுந்து எழுந்து சந்நிதினின்று நீங்கி கோபுர வெளி மண்டபத்தில் வந்தான். ஒரு சிறு குழந்தை ஓடி வந்து அப்பாவென்று தன்னைக் கட்டிக்கொள்ள கண்ட ஆதித்தன், அபரிமித மகிழ்ச்சி யடைந்து இது என்ன ஆச்சர்யம்? யாவர் குழந்தையோ திசை தப்பி வந்து நம்மை தாய் தந்தையார் என்று தழுவிக்கொண்டது. யார் குழந்தையாயிருந்தால் தான் என்ன? ‘மக்கள் மெய்தீண்ட லுடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டலின்பஞ்செவிக்கு’ என்றுஎடுத்து அணைத்து பிறர் குழந்தையாவது, நம்மை அப்பாவென்றழைக்கப் பெற்றோமே இதுவே பாக்கியம், ஈசுவரன் நமக்கும் கடாக்ஷம் செய்வார், என்று கட்டி முத்தமிட்டு குழந்தாய் நீ! யாவன்? என்றான், அதற்கு அது ‘நான் இந்தவூர். எனக்கு அம்மாவுமில்லை. அப்பாவுமில்லை. சாதம் போட ஒருவருமில்லை’ என்றது. இதனைக் கேட்டவர்கள் முன்னிலும் அதிக மகிழ்ச்சியும் பரிவு மடைந்து ஈசர் திருவருளே இவ்வடிவாய் வந்ததுபோலும் என்று திகைத்து நின்றார்கள். பின்பு தேறி, அப்பா குழந்தாய், நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உனக்கு என்ன குறைவு, இனி ஒன்றுமில்லை. நாங்கள்தான் உன் தாயும் தந்தையும் என்று தேற்றி, அக்குழந்தையின் மலர்ந்த கண்களையும், அழகிய முகத்தையும் சிறந்த தோற்றத்தையும், இனிய மழலைச் சொல்லையும், பழுதற்ற அவயவங்களையும், பார்த்துப் பார்த்து ஆனந்தித்து மனையாட்டியை நோக்கி இந்தா! உன் மலட்டுக்குறை தீர்த்த மாணிக்யம் என்றளிக்க, அவளுமப்படியே புதையல் எடுத்தனம் போலும்குருடனடைந்த கண்போலும் மகிழ்ந்து ‘கச்சி கம்பர் தந்த கட்டி திரவியமே’ என அணைத்து முத்தமிடவே, மனமுருகிப் பால் சுரத்தல், புளகமுறுதல், கண்ணீர் வரல் முதலிய செயல் கண்டு

கொம்பொத்தவவள் மார்பிலமுதூற
னமுதலாயகுண மெய்தலால்
நம்பத்தி கண்டீசனருள் செல்வ
மீதுவென்ன நனியெண்ணினர்.

என்றபடி ஆனந்தித்து அக்குழந்தைக்காகவே சிலநாளங்கிருந்து மூவரும் நாள்தோறும் ஆலயம் போய் கடவுளைப் பணிந்து முக்காலும் தொழுது சிலநாள் கழித்துப் புதல்வனுடன் தம் வாசஸ்தலமாகிய திருவழுந்தூரை யடைந்தார்கள்.

வஸிஷ்ட பாரதி.

* இது காஞ்சியிலுள்ள ஆறு அற்புதங்களில் ஒன்று இதனைக் காளமேகர்

அப்பா குமரகோட்ட கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்ப்பருத்திக் குளநீர் செப்புவர்
சற்காற்று கம்பத்தடியிற்றவங் கருமா
றிப்பாச்சல் யார்க்கு மினிது.

என்று கூறியிருக்கிறார்.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 10. ஒப்புற ஒழுகு

தகுந்தபடி நட என்பது இதன் பதப்பொருளாயிற்று. எதற்குத் தகுந்தபடி என்ற கேள்வி பிறக்கும். உலகம் அதாவது உலகில் பெரியோர் நடந்துகொண் டிருப்பதற்குத் தக்கபடி என்பதே இதற்குத் தகுந்த விடை. பெரியோர்கள் நடத்தையையும், அவர்கள் எந்த மனோபாவத்துடன் எந்த ஒழுங்கைப் பின்பற்றி நடந்தார்கள் என்பதையும் நன்கு உணர்ந்து அவர்கள் நடத்தைப்படி நாமும் நடப்பதற்கு, போதுமான சாஸ்திரஞானம் வேண்டும். ஆனால் சாஸ்திரத்தைக்கொண்டு மாத்திரம் நடத்தையை முற்றிலும் ஒழுங்குப்படுத்திவிட முடியாது. கொக்கு ரூபமான யக்ஷன் விஷக் குளக்கரையில் தர்மபுத்திரரைக் கேட்ட அற்புதக் கேள்விகளுள் 'எது மோக்ஷபந்தா' என்பது ஒன்று. அதற்கு அவர், 'வேதங்கள் பலவாறாக இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்களோ பேதப்பட்டிருக்கின்றன. மதவிஷய உண்மைகளோ மிக ரஹஸ்யமாக விருக்கின்றன. ஆகையால் பெரியோர் நடத்தையே மோக்ஷபந்தா' என்று மறுமொழி கூறியிருக்கிறார். ஆதலால் எவ்வளவு கற்றும், குழப்பமான நிலைகளும் ஸந்தர்ப்பங்களும் வந்துவிட்டால் இவ்வளவும் குழப்பத்தை அதிகப்படுத்தி நாம் சரியான வழியில் தொழில்பட்டு வெளியேற வொட்டாது அவைகளுக்கு ஆளாகித் தத்தளித்து அதோகதியை அடையும்படி செய்துவிடும். இந்த ஸமயங்களில் நமக்குத் தெரிந்த பெரியோர்கள் சாஸ்திர உண்மைகளுக்கு விரோதமின்றி இவ்வாறு நடந்துகொண்டிருக்கின்றனர் என்பதை நன்கு உணர்ந்து நடக்கவேண்டுமே ஒழிய நமக்குத் தெரிந்தவரையில் சாஸ்திர உண்மைப்படி கொக்கு மூக்கு நேரே வழி என்று பிடிவாதமாக நடந்துவிட்டால் மஹாபாபம் அபாயம் முதலியன வந்துவிடும். ஆகவே எவ்வளவு கற்றுத் தேர்ந்தவராயினும் நமக்கு ஒழுக்க விஷயத்தில் ஸந்தேஹம் வருங்கால், அதேமாதிரியான ஸந்தர்ப்பங்களில் பெரியோர் எவ்வாறு நடந்திருக்கின்றனர் என்பதை நாம் உணர்ந்து நடக்கவேண்டும் என்பதே இந்நீதி வாக்யத்தின் பொருள். உலகத்தோ டொத்துவாழ் என்பதற்கும், ஊருடன் கூடிவாழ் என்பதற்கும் இம்மாதிரி பொருளுரைக்கினும் பொருந்தும்.

இந்நீதி வாக்யத்திற்கும் எல்லையுண்டு. அதற்கு அப்பால் இதை உபயோகப்படுத்தினால் இதனால் அனர்த்தம் விளையும். இந்த எல்லையை முன் எழுதிய விரிவுரையில் **ஒழுக்க விஷயத்தில் சந்தேஹம் வருங்கால்** என்ற தொடர்மொழியால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஸந்தேஹமில்லா விடங்களில் சாஸ்திரப்படி நடக்க வேண்டுமே ஒழிய பெரியோர் மாறான நடத்தைகளைக் கைக்கொள்ளவே கூடாது. மரணம் உலகில் **ஸஹ**ஜம். நமது தாய் முதலியோர் இறந்தால் நாம் அழுவது நமது மன இழிவைக் காட்டும் என்பது சாஸ்திரங்கள் துணிபு. நமது தாய் முதலிய நெருங்கிய உறவினர் இறக்கும்படி நேரிடுங்கால் 'ஒப்புற வொழுகு' என்று ஔவை கூறியிருக்கிறாள். பட்டினத்துப் பிள்ளையாகிய மஹான்கூட தாய்க்கு அழுதிருக்கிறார். ஆகையால் நாமும் அழுது ஆர்ப்பாட்டம் பண்ண வேண்டும் என்று அழப்புகுதல் இந்நீதி வாக்யத்தை எல்லை கடந்து பொருத்துவதே. இம்மாதிரி கூறுவதால், பெரியோர்கள் ஏமாந்து சாஸ்திர விருத்தமாக நடந்த நடத்தைகளை உலகரிய வெளிப்படுத்தி அவர்களுக்கு ஒரு இழுக்கு உண்டாகும்படி செய்த பாபம் நமக்கு வருமே ஒழிய, ஒப்புறவொழுகியதால் ஏற்படக்கூடிய புண்யம் வாராது. ஸ்ரீமத் சங்கராசார்யர் ஒரு ஸமயத்தில் கள்ளுண்டார், ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபஸ்திரீகள் அநேகரோடு உல்லாஸமாக விருந்தார், நாமும் அவ்வாறே இருப்போம் என்று கூறுவது இந்நீதி வாக்யத்திற்கு முற்றும் விரோதமே.



ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1902௵ ஆகஸ்டு௴ ௯உ

விக்டோரியா மஹாராணியும் அவர் வம்சத்தார்களும்



| ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தி | இந்திய இளவரசு | ஜ்யார்ஜ் V. சக்ரவர்த்தி | விக்டோரியா மஹாராணியார் |
|---|---|---|---|



படித்துவந்த மற்றை மாணாக்கர்களுக்கும் இவர்க்கும் உணவு, உடை, வேலை முதலியவற்றில் சிறிதும் வித்தியாசம் இல்லை. நாளடைவில் கப்பல் நுணுக்கங்களைக் கண்டுணர்வதில் நம் ஜியார்ஜ் மிக்க தேர்ச்சியுள்ளவரானார். நாவிகக்கலை நன்குணரும்பொருட்டு, மத்தியதரைக்கடல் (Mediterranean Sea), மேற்கு இந்தியா (West India) முதலிய தூர ஸ்தலங்களுக்கும் போனார். அப்படிப் போனபோது, தம் பெற்றோருக்கு அடிக்கடித் தமது யாத்திரையைப்பற்றிக் குறிப்புக்களை எழுதி யனுப்புவது வழக்கம். 1880-ம் வருஷம் இவர் கப்பல் மூலமாக ஒரு முறை பூப்பிரதக்ஷிணம் செய்து ஆங்காங்குப் பற்பல அதிசய காட்சிகளைக் கண்ணுற்றார். 1884-ம் வருஷம் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறி “சப் லெப்டினெண்ட்” (Sub Lieutenant) என்ற பட்டம்பெற்றார். பிறகு அதனோடு திருப்தி யடையாது கிரீனிச் (Greenich) பட்டணத்துள்ள உயர்தர நாவிக காலேஜ் சேர்ந்தார். அங்கும் தளரா ஊக்கம் உடையவராயிருந்து வந்தார். 1889-ம் வருஷம் விக்டோரியா மஹாராணியார் தமது திருப்பெயரனது திறத்தினை வியந்து அவரைத் தமது கப்பல் மெய் காப்பாளரில் (Naval Aides-de-camp) ஒருவராய்ச் செய்துகொண்டார்.

1891-ம் வருஷம் இவர் சேனைத்தலைவர் (Commander) ஆனார். இவ்வாண்டின் இறுதியில் இவர் தமையனாராகிய டியூக் அப் க்ளாரென்ஸ் (Duke of Clarence)க்குத் தங்கள்சுற்றத்தாருள் ஒரு பெண்ணை மணம் செய்யவேண்டும் என நிச்சயம் செய்தார்கள். ஆனால் அவ்வரசிளங்குமார் திடீரென்று நோயுற்று 1892-ம் வருஷம் ஜனவரி மீ காலமாயினர். அப்போது அவர் பெற்றோரும், மற்றோரும் துன்பக்கடலுள் ஆழ்ந்தனர். அரசுக்குரிய மூத்த புதல்வன் மணஞ் செய்துகொள்ள இருக்குஞ் சமயத்தில் மரிக்க நேர்ந்ததைக் குறித்து யார்தான் வருந்தியிருக்கமாட்டார்?

[illegible]த்துக்க சங்கதி நம் ஜியார்ஜின் வருங்கால நிலைமையைப் பெரிதும் மாறுபடச் செய்தது. தனக்கும் அரசுரிமைக்கும் சிறிதும் இயல்பு இல்லை எனக் கருதி வந்த அவர்க்கு 27-ம் பிராயத்தில் ராஜ்யத்துக்கு பாத்தியதை தெய்வ சங்கற்பத்தால் உண்டாயிற்று. தம் தமையனார் மணப்பதற்கிருந்த கன்னியையும், அவர் (ஜியார்ஜ்) தாமே மணக்கும்படி ஏற்பாடு ஆயிற்று.

இப்போது முதல் நம் ஜியார்ஜ் ‘ட்யூக் அப் யார்க்’ (Duke of York) என்னும் பட்டம் பெற்றார். அவர் தந்தையாரும், பாட்டியாரும் அவருடன் அடிக்கடி அரசியல் விஷயங்களைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கலானார். அவரும் பாராளுமன்றுக்கு (Parliament) அடிக்கடிச் சென்று அங்கு நிகழும் விஷயங்களை மிக்க கவனத்துடன் ஆராய்ந்து வந்தனர். அவர் ஆங்காங்கு சபைகளில் அக்கிராசனம் வகித்துப் பிரசங்கம் செய்ய நேரிட்டபோதெல்லாம், பாராளுமன்றில் தாம் சிறந்த பிரசங்கங்களைக் கேட்டு வந்தது அவருக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது.

விரைவில், அவர் சுருக்கமாகவும், விளக்கமாகவும் பிரசங்கம் செய்வதில் மிக்க சமர்த்தர் என மதிக்கப்பட்டார். ஒரு சமயம், ஜீவபிராணி ஹிம்ஸ நிவாரண சங்க (Society for preventing cruelty to animals)த்தில் தலைமை வகித்து அச்சங்கத்தின் நோக்கங்கள், அது செய்து வரும் வேலை முதலியவற்றில் மிக்க அனுதாபங்காட்டிக் கேட்டோரெல்லாம் மனமுருகும்படி பேசினார். அப்பிரசங்கத்தின் பயனாக அச்சபை கலைந்தபோது, 2800 பவுன் அச்சங்கத்திற்குதவியாக அங்கு வந்திருந்தவர்கள் அளித்துச் சென்றனராம்.

நம் ஜியார்ஜ் இளவரசரின் மணத்தினைப்பற்றி முன்னோரிடத்தில் குறித்தோம். அவர்க்கு வாழ்க்கைத் துணையானவர், அவருடைய நெருங்கிய உறவினருள் ஒருவராகிய ‘மேரி’ என்னும் இளவரசியே. மேரி யிளவரசி 1867-ம் ஆண்டிற் பிறந்து தக்க ஆசிரியரால், உரிய காலத்தில் சித்திரம் எழுதல், வஸ்திரம் நெய்தல், பந்து ஆடல் முதலியவற்றில் செவ்வனே பயிற்றப்பட்டு

வந்தாள். அவளுடைய போழகுபற்றி அவளுக்கு இங்கிலீஷ்காரர் 'எல்லாம் இங்கிலீஷ் ரோஜா' எனச் செல்வப்பேரிட்டனர். அவள் இளம்பிராயம் முதலாகவே ஏழைகளுக்கிரங்கும் இயல்புடையவள். இவ்விரு தம்பதிகளுக்கும் 1893-ம் வருஷம் ஜூலை மாதம் 6-ம் தேதி மிக்க வைபவத்துடன் வதுவை நடந்தேறிற்று. அப்போது இங்கிலாந்து முழுவதும் இணையில்லாத இன்பம் எய்திற்று.

1894-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ந் தேதி இவர்களுக்கு முதற் குமாரன் பிறந்தனன். 1895-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் இன்னொரு புத்திரன் பிறந்தனன். 1897-ம் வருஷம் ஏப்பிரலில் ஒரு செல்வப் புதல்வியுந் தோன்றினள்.

பிறகு மனைவியும் தாமுமாக இளவரசர் ஐர்லாந்துக்குச்(Ireland) சென்றபோது ஐர்லாந்தார் மிக்க களிப்புடன் இவர்களை வரவு ஏற்று உபசரித்தார்கள். இங்கிலாந்துக்குத் திரும்பிய பிறகு ஐர்லாந்து வைசிராய்க்கு நமதிளவரசர் "நாங்கள் ஐர்லாந்துக்கு வந்தபோது நீங்கள் எங்களை வரவேற்றது எங்கள் மனத்தினின்று ஒருபோதும் அகலாது" என்று எழுதியனுப்பினார்.

பிறகு தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் ஆரம்பித்தது. அப்போது அதைக் குறித்து அரச வம்சத்தார் பட்ட கவலைக்கு அளவேயில்லை. 1901-ம் ஆண்டில் 64-வருஷம் அரசாண்டு, அழியாக் கீர்த்திபெற்ற அரசியாகிய விக்டோரியாவும் மேலுலகம் சென்றனள்.

உடனே இளவரசராயிருந்த எட்வர்ட் என்பவர் இங்கிலாந்துக்கு அரசானார். நமது ஜியார்ஜூம் பட்டத்துக்குரிய இளவரசாய் பிரின்ஸ் ஆப் வேல்ஸூ (Prince of Wales) ஆனார். பிறகு ஜியார்ஜூம் மேரியுமாக நியூ ஸிலேண்ட் (New Zealand), தென் ஆப்பிரிக்கா (South Africa), வட அமெரிக்கா, (Canada)முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்குள்ள காட்சிகளைக் கண்டு அவ்வவ்விடங்களில் உள்ள இங்கிலீஷ் குடிகளுக்கு இன்பம் விளைத்துப் பின் இங்கிலாந்து வந்து சேர்ந்தனர். வந்தஉடன் 'கில்டு ஹாலில்' இவர் செய்த பிரசங்கம் மிகச் சிறந்ததென எல்லாரும் எண்ணினார்கள்.

1904-ம் வருஷம் ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் சண்டை நேரிட்டபோது அவ்விஷயத்தைக் குறித்து நமதிளவரசர் கவனித்து வந்ததுபோல மிகச்சிலரே கவனித்திருக்கக்கூடும். ஏனெனில் ருஷியா அரசர் முதலாயினோர் தனது நண்பரும், சுற்றத்தாரும் ஆனவர்கள். ஜப்பான் தலைவர்களாகிய 'அட்மிரல் டோகோ,' 'ஜெனரல் நோகி' என்பவர்கள் நம் ஜியார்ஜ் இளவரசர்க்கு நன்றாய்த் தெரிந்தவர்கள். இன்னும் கப்பற்போரில் உள்ள நுணுக்கங்களெல்லாம் இவர் நன்குணர்ந்தவர். ஆதலால், அந்த ருஷியா—ஜப்பான் யுத்தத்தில் இவர்க்கு மிக்க கவனம் ஏற்பட்டது. ஒருமுறை 'ஓர்ஸஸ்ட'ரில் (Worcester)நமதிளவரசர் சென்று பிள்ளைகளுக்குப் பரிசளித்தபோது, அவர் கூறியதாவது:—"ஒவ்வொரு ஓர்ஸஸ்டர் மாணாக்கனும் உலகெலாம் புகழ்பெற்ற உயர்தரக்கப்பல் தலைவராகிய 'அட்மிரல் டோகோ' என்பவர் ஓர்ஸஸ்டரில் ஒன்றரை வருஷம் கல்வி பயின்றார் என்பதைக் குறித்துச் செருக்கடைய வேண்டும்" என்று கூறினார்.

ஏழாவது எட்வர்டரசர் பட்டத்துக்கு வந்தது முதல் உலகில் சண்டை சச்சரவு இல்லாமல் அமைதியே அதிகமாக இருக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் மிகவும் உழைத்து வந்தார். அவர் ராஜ காரியங்களிலெல்லாம் நமதிளவரசர் ஜியார்ஜோடு யோசித்தது மன்றி, ராஜ தந்திரம் இன்ன இன்ன எனப் பல விஷயங்களைக் குறித்து அவர்க்குக் கடிதம் எழுதி வைத்தது முண்டு.

1905-ம் ௵ நமது இளவரசரும் இளவரசியும் இந்தியாவுக்கு வந்த விஷயம் பலர்க்கும் ஞாபகம் இருக்கலாம். அவர்கள் ஏறக்குறைய



ஆறு மாதம் இந்தியாவிலுள்ள முக்கியபட்டணங்களுக்கெல்லாம் சென்று, அங்கங்குள்ள விஷயங்களை எல்லாம் ஆராய்ந்தறிந்துகொண்டு 1906-ம் வருஷம் இங்கிலாந்து சென்றனர். சென்றவுடன் 'கில்டு ஹாலில்' தாம் இந்தியாவிற் கண்டுணர்ந்தவற்றைக் குறித்துச் செய்த ஒரு பிரசங்கமானது சிறந்த கருத்துக்கள் அமைந்து விளங்குகிறது. அதன் கண்ணேதான், அவர் "**இந்திய அரசாட்சியில் இன்னும் 'அனுதாபம் என்பதை' நாம் அதிகமாகச் சேர்த்தால், நமதாட்சி சிறக்கும்**" என மிக்க பெருந்தன்மை கூட்டிப்பேசினார். இவ்வாக்கியம் அன்றுமுதல் ஒவ்வொருபடித்த இந்தியன் மனத்திலும் பசுமரத்தாணிபோற் பதிந்து, இந்தியர்களது இயற்கை இராஜ விசுவாசத்தை எண்மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறது.

இச்சமயங்களில் இங்கிலாந்தில் அமைச்சர்கள் அபிப்பிராய பேதத்தாலும் பிற காரணங்களாலும் அடிக்கடிமாறிவிடும்படி நேர்ந்தது. அப்போதெல்லாம் நமதிளவரசர் ஜியார்ஜூம் ராஜாங்க நிலைமையைச் செவ்வனே சிந்தித்து வந்தனர்.

1910-ம் வருஷம் மேமீ 6-ம் தேதி ஜலதோஷங்காரணமாக எட்வர்டரசர் திடீரென்று எவரும் எதிர்பாராதபடி தேகவியோகமாகவே, அதுவரையில் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' ஆய் இருந்த நம் ஜியார்ஜூம் 'ஐந்தாம் ஜியார்ஜ்' என்னும் பேருடன் இங்கிலாந்துக்கரசரும் இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியும் ஆனார். பட்டத்துக்கு வந்தவுடனே, அவர் தாமும் தந்தையார் கொள்கையையே தம்மால் இயன்றமட்டும் மேற்கொண்டு நாட்டினை ஆண்டு வருவதாக வாக்களித்தார்.

கேனடாவு(Canada)க்குக் கவர்னர் ஜனரல்ஆக அரச வம்சத்தைச் சேர்ந்த ட்யூக் ஆப் கன்னாட் (Duke of Connought) என்பவரையே நம் ஜியார்ஜ் அரசர் அனுப்பினார். இதற்கு முன் அரசவம்சத்தைச் சேர்ந்தவர் 'கவர்னர் ஜனரல்' ஆக எங்கும் நியமிக்கப்பட்டதேயில்லை. கேனடா (Canada) தேசத்தார் இதைப்பற்றி மிகவும் திருப்தி அடைந்தனர்.

நம் வேந்தர் பெருமான் சிறிய பிள்ளையாய் இருந்தது முதல் மிக்க சுறுசுறுப்புள்ளவராயிருந்தார் எனக் கூறினோமன்றோ? அவர் தாம் செய்யும் வேலைகளில் மிகவும்ஒழுங்கு வாய்ந்தவர். சாதாரணமாக ஒவ்வொரு நாளும் அவர் காலங் கழிக்கும் விதம் பின்வருமாறு:—காலையில் $6\frac{1}{2}$ மணிக்கே அவர் எழுந்து விடுவார். இங்கிலாந்து அதிக குளிர்ச்சியுள்ள தேசம் என்பதை நினைத்தால் $6\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருப்பது ஆச்சரியகரமானதே. உடனே, காரியதரிசியால் முறைப்படுத்தப்பட்டிருக்கும் கடிதங்களையும், மனுக்களையும் பார்ப்பார். காலையிற் பிரசுரமாகும் சமாசார பத்திரிகைகளையும் அப்போதைக்கப்போதே அதி காலையிற் பார்த்துவிடுவார். பிறகு காலை போஜனமான பிறகு பகல் 1 மணிவரை தம்மைக் காண வருபவர்க்கு முன் குறித்திருக்கும் நிமிஷக் கணக்குப்படி முறை தவறாது 'பேட்டி' தருவார். பிறகு பிற்பகலில்தாம் தனித்திருக்குங் காலத்தில் குதிரைவண்டியிலாவது, குதிரைமீதாவது சவாரிபோவார். அன்றி ராஜகுமாரர்கள் முதலியோர் அரண்மனையில் இருப்பார்களேயானால் அவர்களுடன் ஏதேனும் விளையாடிப் பொழுது போக்குவார். மாலையில் ஏதேனும் நல்ல புஸ்தகத்தை எடுத்துப்படிப்பார். இரவில் 11, அல்லது 12, மணிக்கே நித்திரை போவார். இவ்வாறு பிரதிதினமும், சிறிது நேரமும் வீணே கழிக்காமல், காலத்தின் அருமையினைத் தம்செயலால் பிறர்க்குச் சக்கரவர்த்தியார் தெரிவிக்கிறார்.

நமதரசர் ஏழைகளிடத்து வைத்துள்ள அன்புக்கறிகுறியாக, அவர் தம் சொந்தப் பணத்திலிருந்து எட்வேர்டரசர் ஏற்படுத்திய மருத்துவச்சாலைநிதிக்குத் (Hospital Fund) தவறாமல் சந்தா அனுப்பிவருவது மன்றித் தன் புத்திரர்களையும் அவ்வாறே செய்வித்திருக்கிறார்.

நமதரசர்க்கு நண்பராயுள்ளவர், அரச வம்சத்

தைச் சேர்ந்தவர்கள்தாம் என்று நாம் எண்ணக் கூடும். அது தப்பெண்ணம். விக்டோரியா அரசி முதல் தலைமுறை தலைமுறையாகவே ஆங்கில அரசர்க்கும் ஆங்கிலநாட்டிலுள்ளமேதாவிகளான க்ளாட்ஸ்டன் (Gladstone), ரோஸ்பரி (Rosebury), ஸாலிஸ்பரி (Salisbury), டனிஸன்(Tennyson) முதலிய நிபுணர்களுக்கும் நெருங்கிய நட்பு வாய்ந்திருந்தது. எத்தனையோ முறை நம் ஜியார்ஜ் மன்னர் தமது ஆப்த சிநேகிதர்களுக்கு, அவர்கள் சுகதுக்கத்தைக் குறித்து, மற்றையோ ரெனவரினும் தாமே முதலாவராகத் தந்தி யடித்ததுண்டு.

1911-ம் ஆண்டாகிய இவ்வாண்டில் ஜூன் மாதத்தில் நம் ஜியார்ஜ் அரசர்க்கு லண்டனில் மகுடாபிஷேகம் மிக்க சிறப்புடன் நடந்தது. அது முடிந்தவுடன், ஜியார்ஜ் மன்னரும், இந்தியராகிய நம்மீது தமக்குள்ள அளவில்லாத அன்பினைக் காட்டுவதற்காகத் தாம் இந்தியாவுக்கு வந்து சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்தார். அது கேட்டு இந்தியா முழுவதும் மிக்க சந்தோஷம் அடைந்தது. மகுடாபிஷேகத்துக்காக டில்லியில் நடந்த வைபவங்களை யெல்லாம் வர்ணிக்க எவராலும் இயலாது. இங்கிலாந்தரசர் இந்தியாவுக்கு வந்து முடிசூட்டிக் கொள்வது இப்போதுதான் முதல் முறை. இந்தியாவும் மகுடந் தரிக்கும் அரசனைக் கண்டு நூற்றுக் கணக்கான வருஷங்களாயின. சிற்சில இடங்களில் சில பேதைச் சிறுவர்கள் ஆங்கில ஆட்சியில் அதிருப்திகொண்டு சில்லறைக் குறும்புகள் செய்ததனல் நாட்டில் கலகம் ஏற்படும் எனக் கவர்ன்மெண்டார் பயந்திருந்த இத்தருவாயில் மணிமுடி சூட, அரசர்பிரானே இந்தியாவுக்கு நேரில் வருவதைவிடச் சிறந்த ஏற்பாடு எதுவாகும்?

நம் சக்கரவர்த்தியாரும் சில நாட்களுக்குமுன் பம்பாய் வந்து சேர்ந்து, அங்குப் பேசியபோது **"கடைசியாக இந்தியாவின் நன்மைக்காக ஈசனைப் பிரார்த்திக்கிறேன்"** என்றதும், தாம் டில்லியில், முடிசூட்டிக்கொண்டதற்கு அறிகுறியாகப் **பங்காளப் பிரிவினையை ரத்து செய்ததும், பிரைமரி படிப்புக்காக 50 லட்சம் ரூபாய் அளித்ததும்,** பிறவும் இந்தியர் மனத்தில் எல்லையில்லாத இன்பத்தை விளைத்திருக்கின்றன. இத்தகைய அன்பு மிக்க அரசர் ஆட்சியில் குடிகள் பல நன்மைகளை அடைவார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

நாமக ளும்மவள் நாடுகிலாத
பூமகளும் புகழ் ஓங்குநம் மேரிக்
கோமகளும் மகிழ் கோமுடி சூடப்
பூமகளும் மினிப் பொங்குவ ளின்பம்.

ஆதலால் இந்தியரெல்லோரும், "நம் மன்னர் பிரானும், அவர் மனைவியாரும், அவர்கள் அருமைப் புதல்வர் ஐவரும், புதல்வி ஒருத்தியும் மற்றுமுள்ள அரசவம்சத்தார் அனைவரும் இறைவனருளால் ஆக்கமும், ஆயுளும், மேக்குறப் பெற்று விளங்குவார்களாக" என்று மனப்பூர்வமாக விரும்புவோமாக.

சீர்வளரும் ஐந்தாம் ஜியார்ஜ மகீபனெனப்
பேர்வளரும் வேந்தர் பிரானே! நீ—ஏர்வளரும்
மேரி யரசியொடும் மேதகுநல் லாட்சியோடும்
பாரில்மிக வாழி பரந்து.

வே. முத்துசாமி ஐயர், பி. ஏ., எல். டி.

உபகாரம்:—உபகாரமென்பது அந்நியர்க்குத் துன்பம் வந்தபோது உதவுதலாம். உலகத்தில் நாம் நம்முடைய சொந்த நன்மைகளை மாத்திரம் கருதி நடப்பது பெரிதல்ல. அப்படியே நம்மைச்சேர்ந்த பந்துவர்க்கத்தாருக்கும், அக்கம்பக்கங்களில் வசிக்கும் இதர ஜனங்களுக்கும் ஏதாவது துன்பம் வந்த காலங்களில், அது நமக்கே வந்ததாகப் பாவித்து, நம்மாற் கூடுமானவரையில் அது நீங்கும்படி வகைதேடல் வேண்டும். ஒவ்வொரு மனிதரும் அனேக சமயங்களில் அந்நியருடைய ஒத்தாசையைக் கோருவது உலகத்தில் சாதாரணமாய் இருக்கிறது. உபகாரம் செய்வதில் இன்ன ஜாதியாருக்காவது இன்ன மதஸ்தருக்காவது செய்யவேண்டு மென்பது விதியல்ல. கஷ்டப்படுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அது நீங்கும் பொருட்டு இயன்றதை நாம் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். ஒருவருக்கு உபகாரம் செய்வதிலும் பாத்திரா பாத்திரங்கள் அறிந்து செய்வது உத்தமம். அதாவது துஷ்டர்களுக்கு உபகாரம் செய்தால் எப்போதும் அபகாரம் செய்யவேண்டுமென்கிற எண்ணமே உண்டாகிறது. அதையே நல்லவர்களுக்குச்செய்தால், அவர்கள் நன்கு மதித்துப் பதில் உபகாரம் செய்ய முயலுவார்கள். அது எப்படி யென்றால், பசுவுக்குப் புல்லைப் போட்டால் அது மதுரமான பாலைக் கொடுக்கும்; அந்தப் பாலை பாம்புக்கு வார்த்தால் அது விஷத்தையே கொடுக்கும். ஆகையால் ஒருவருக்கு உபகாரம் செய்வதில் பாத்திரா பாத்திரம் அறிந்து செய்வதோடு சமயமறிந்து செய்வதும் உசிதம்.





பாக்கியைமகங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1911-ம் ஞு ஜூன்மீ 22உ

# சோழன் கரிகாலன்

## CHOLAN KARIKALAN

ஆதிகாலத்தில் சோழநாட்டை யாண்டுவந்த அரசர்களுள் அநேசர் கடைச்சங்கப் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் **சோழன் கரிகாலனை** முதன்மையானவன் எனச் சிறப்பித்துக் கூறலாம். அவனைச் சோழன் கரிகாலன் என்றும், சோழன் கரிகால் வளவன் என்றும், சோழன் கரிகாற் பெருவளத்தான் என்றும் சொல்வதுண்டு

தேசத்தை ஆளும் வன்மையிலும், பகைவரை வெல்லும் ஆண்மையிலும், கற்றோரைப் பரிபாலித்து அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வண்மையிலும்,பிரஜைகளுடைய குறைகளைத் தீர விசாரித்தறிந்து அவர்களுக்குவேண்டிய ஸௌகரியங்களை அப்போதைக் கப்போதே செய்யும் அன்பிலும், விவகாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நியாயமளிக்கும் நுண்ணறிவிலும், அவன் சிறந்து விளங்கினானென்பது பழமொழி, பத்துப்பாட்டு, புறநானூறு,முதலிய நூல்களால் தெரிகின்றது.

சோழன் கரிகாற் பெருவளத்தான் என்ற பெயரில் கரிகாலன் என்பது காரணம்பற்றி வந்தது. இவன் சிறுவயதில் காலில் நெருப்பு பற்றி கால் வெந்து போனதால், கரிகாலன் என்ற பெயர் இவனுக்கு காரணம்பற்றி வந்த பெயராயிற்று. இதனை,

"முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகா
விச்சக் கரமே யளந்ததாற்-செய்ச்செ
யரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று."

என்ற பழைய செய்யுள் தெரிவிக்கின்றது.

இவன் பால்யத்திலேயே சிங்காதனம் ஏறினதாக அறியக் கிடக்கின்றது. இவன் பட்டத்துக்கு வந்தவுடனே ஒரு ஆச்சரியமான விஷயம் நிகழ்ந்தது. இரண்டு முதியவர்கள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு நியாய ஸ்தலத்துக்கு வந்தார்கள். அவர்கள் நெடுந்தூரத்தில் வரும்போது நியாய ஸபையில் ஓர் சிறுவன் சிங்காதனத்திலிருப்பதைக் கண்டு, தமது வழக்கை அச்சிறுவனால் தீர்க்க முடியாதென்று ஸந்தேகித்தார்கள். அவர்கள் பேசிக்கொண்ட விஷயத்தை ஒற்றர் மூலமாகவோ வேறு விதமாகவோ அறிந்துகொண்ட கரிகாலன், அரண்மனைக்குள் விரைவாகச் சென்று சிழவனைப் போல வேஷந் தரித்துக்கொண்டு சிங்காதனத்தில் வந்து உட்கார்ந்தான். இதற்குள் ஸபையை நெருங்கி வந்த இரண்டு முதியவர்களும் சிங்காதனத்தில் வயது சென்ற அரசனே இருக்கிறானென்று தங்கள் ஸந்தேகம் தீர்ந்தவராய், அவ்வரசனிடம் தமது வழக்கைத் தெரிவித்துக்கொண்டார்கள். இளம்பிராயத்தானாயினும், கூரிய புத்தியுள்ள கரிகாலன் அன்னவர் மாறுபாட்டை விசாரித்து நியாயமளித்தான். இச்செய்கை இவ்வரசனது நுண்ணறிவை விளக்குவதோடு, பிரஜைகள் மனம் எவ்வாறோ அவ்வாறேதான் நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனிடம் இருந்ததென்பதையும் புலப்படுத்துகிறது. இதனை

"உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்"

என்ற பழமொழிச் செய்யுளால் அறியலாம்.

அவன் அநேகம் தடாகங்கள், கால்வாய்கள் முதலிய ஜலாதாரங்களை உண்டுபண்ணியதன்றி, பழைய ஊர்களைப் புதுப்பித்தும், புதிதாக அநேகம் பட்டணங்களை ஸ்தாபித்தும், குடிகளுடைய விவஸாயம், வியாபாரம், ஆகிய இரண்டும் செழித்தோங்குவதற்கு இன்றியமையாத ஸாதனங்களையெல்லாம் குறைவின்றிச் செய்தான்.

முன்னே காடிருந்த விடமெல்லாம் நாடு உண்டு பண்ணி, ஜலாதாரம் உண்டு பண்ணி, விவஸாயிகளுடைய க்ஷேமத்தைப் பெருக்கி, பிரஜா லக்ஷணத்தைச்சீர்படுத்தி, கோயிலமைத்து, தன்னிராஜதானியைச் சுற்றி மதிலெழுப்பி, அம்மதிலில் அங்கங்கே மறைந்து எய்வதற்கு ஸௌகரியமாகச் சிறு துவாரங்களைக் கட்டி, தேசத்தின் பாதுகாப்பைச் சரிவரச் செய்தான் என்பது.

"காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலைமாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇ"

என்ற **பட்டினப்பாலை** செய்யுளடிகளால் தெரியக் கிடக்கின்றது.

இத்தகைய பாதுகாப்பு காரணமாக விவஸாயிகள் மிக்க சிறப்புடன் விளங்கினார்கள். வியாபாரம் மிகச் செழித்தது. வெளிதேசங்களிலிருந்து குதிரை; கற்பூரம், சந்தனம், அகில் முதலியவை விசேஷமாகத் தென்தேசத்துக்குக்கொண்டுவரப் பெற்றன. தென்தேசத்திலிருந்து முத்து, பவழம், மிளகு, வாஸனை ஸாமான், முதலியவை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பெற்றன. இவ்விதமாக வியாபாரம் நடந்து வந்தமையால், அரசனுக்கு ஏற்றுமதி இறக்குமதி மூலமாக வரக்கூடிய இறைவரியிலிருந்து வருமானமும் அதிகரித்தது. கடலோரங்களில் கட்டப்பட்டுள்ள பெரிய மண்டிகளில் இரவும் பகலும் வந்திறங்கிய பொருள்களுக்கு இறைவரி யதிகாரிகள் அப்போதைக்கப்போது வரி போட்டு, அதைப் பெற்றுக்கொண்டு, ஸாமான்களை எடுத்துப்போக உத்தரவு கொடுத்தார்கள்.

> "அளந்தறியாப் பலபண்டம்
> வரம்பறியாமை வந்தீண்டி
> யருங்கடிப் பெருங்காப்பின்
> வலியுடை வல்லணங்கினோன்
> புலிபொறித்துப் புறம்போக்கி."

என்ற செய்யுளடிகளால் அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கு சென்று பண்டப்பொதியின்மீது சோழன் கொடியின் அடையாளமாகப் புலிப்பொறியை அப்பண்டப்பொதிகளின்மீது பொறித்து விடுவார்கள். அவ்வாறு பொறித்த பிறகு, வரியைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டுதான் வியாபாரிகள் தமது பண்டங்களை எடுத்துப் போவார்கள்.

வியாபாரத்துக்காக வெளியூர்களிலிருந்து வந்துள்ள வர்த்தகர்கள் உள்ளூரிலிருந்த வர்த்தகர்களோடு இனிமையாக உறவாடி கலந்து வாழ்ந்தார்கள். அவர்களைப் பற்றிப் பேசுமிடத்து, கவி,

> "பதிபழகிக் கலந்தினி துறையும்"

வர்த்தகர்கள் என்று சிறப்பித்திருக்கிறார்.

இவ்வாறு கரிகாலன் தானும் நடுநிலைமையினின்றும் வழாது, குடிகளும் வழாமல் இருக்கத் தக்க ஏற்பாடுகளையும் செய்து சிறப்புற்றோங்கினான்.

C. P. வேங்கடராமய்யர், எம். ஏ.

# நியாய மாலா

## POPULAR MAXIMS EXPLAINED

### इक्षुरस न्यायः

ఇక్షురస న్యాయః

### 20. இக்ஷுரஸ ந்யாயம்

**க**ரும்பு மிக ருசியான வஸ்து. இதில் ரஸ பேதம் உண்டு. கரும்பின் நுனிபாகம் போக, ருசி குறைந்துகொண்டும், அடிபாகம் போகப்போக ருசி அதிகமாகிக் கொண்டும் வரும். இந்த நியாயம் பொதுவாக முதலில் ஒருவிதமாகவிருந்து வரவர அதிகரிக்கும் விஷயங்களிலும், அல்லது குறையும் விஷயங்களிலும் உபயோகப்படும். துஷ்டர்கள் நேசம் முதலில் மிக ஸுகமாயிருந்து வரவர பெரியதுக்கத்தை விளைக்கும். இது கரும்பின் ருசி அடியிலிருந்து நுனி போகும்கால் குறைவதுபோலிருப்பது; நல்லோர் இணக்கமோ முதலில் மிகக் கஷ்டமாக விருந்து முடிவில் பெரிய ஸுகத்தை விளைக்கும். இது கரும்பின் ருசி நுனியிலிருந்து அடிநோக்கிப் போகும் கால் அதிகரிப்பதுபோலவுள்ளது. இது போலவேதான் நல்லோர் வாக்கால் ஏற்படும் இலக்கியம், அதாவது எழுத்தாலாகிய கல்வியும், தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும். இந்த விஷபத்தில் ஒரு பெரிய கவி வேறுவித உபமானம் ஒன்று கூறுகிறார். தீயோர் இணக்கம் காலை ஸூர்யன் ஒளியால் ஏற்படும் நிழல் வரவரக் குறைந்து, நடுப்பகல் ஒன்றுமில்லாமல் போவது போல முதலில் ஸுகமாகவிருந்து குறைந்து முடிவில் ஸுகம் இல்லாமலே போய்விடும்; பெரியோர் இணக்கமோ நடுப்பகல் ஸூர்யனால் ஏற்படும் நிழல் ஒன்றுமில்லாமலிருந்தும் மாலைக் காலம் வரவா நீண்டு வருவதுபோல முதலில் ஸுகமில்லைபோலத்தோன்றினும் வரவர ஸுகத்தில் அதிகரித்து முடிவில் பேரின்பத்தைவிளைக்கும். **கடோபநிஷத்திலும்** இந்நியாயத்திற்கு உதாரணம் ஒன்று உண்டு. யமன் நாசி **கேதஸ்ஸு**க்கு உபதேசம் பண்ணத் தொடங்குகையில் 'உலகில் சிரேயஸ்கரமானவை, ஸுககரமானவை என விஷயங்கள் இரண்டு விதம்' என்று கூறுகிறான். ஸுககரமானவை முதலில் இன்பமாயிருந்து முடிவில் வெறுப்புக்கிடனாகும். ஆதலால் கரும்பின் ரஸம் அடியிலிருந்து நுனி நோக்கித் தின்று போகுங்காலிருப்பது போலவிருக்கும். சிரேயஸ்கரமானவையோ முதலில் வெறுப்பானவைபோலவிருந்து முடிவில்போனந்தத்தை விளைக்கும்; கரும்பை மாறாய்த் தின்று வருங்காலிருக்கும் ருசிபோல வாகும். ஆகவே விஷயஸுகத்தின் நிலை அடியிலிருந்து நுனி வரையில் தின்னப்படும் கரும்பின் ருசிபோலவும், பரம்பொருள் தியான விஷயம் கரும்பை மாறாகத் தின்னுவது போலவும் இருக்கும்.



### इक्षुविकार न्याय ः

ఇక్షువికార న్యాయః

### 21. இக்ஷுவிகார நியாயம்

**க**ருப்பஞ்சாறு திரவமாக விருக்கிறது. அதிலிருந்து உண்டாகும் சர்க்கரை, வெல்லம் முதலியவை கடின பதார்த்தமாகவிருக்கின்றன. ஆகையால் பிரகிருதியைப்போல (காரணத்தை; ஆதியைப்போல) விகிருதி (கார்யம்; முடிவு) இருப்பதில்லை. சிற்சில பாகங்களில் ஒற்றுமையுடனுமிருக்கலாம். இங்கு ருசியில் எல்லாம் ஒரே மாதிரியாக விருக்கின்றன. ஆகவே வஸ்து விஷயத்தில் மாற்றமின்றி, உருவம் முதலிய சக்தி விஷயத்தில் மாறும் மாற்றமாகிய **சக்திதத்வ மற்ற** (Physical Change) விஷயமாக இந்த நியாயம் உபயோகப்படும்.

### इषुवेगक्षय न्यायः

ఇక్షువేగక్షయ న్యాయః

### 22. இக்ஷுவேகக்ஷய நியாயம்

**பா**ணம், குண்டு முதலியவைகளை விடுகையில் முதலில் வேகமாகப் புறப்பட்டு வரவர வேகத்தில் குறைந்து முடிவில் வேகம் ஓய்ந்து விழுந்து விடுகின்றன. எந்த விஷயத்திலும் முதலில் வெகு ஊக்கத்துடன் இருந்து வரவர உத்ஸாஹம் குறைந்துபோகும் குணமாகிய **ஆரம்பசூரத்வ** விஷயமாக இந்நியாயம் உபயோகப்படும்.

### उत्पाटितदन्तनाग न्यायः

ఉత్పాటిత దంతనాగ న్యాయః

### 23. உத்பாடித தந்தநாக ந்யாயம்

'**பை**ங்கண்ணரவிற்கு விஷம் பல்லளவே' என்றபடி பாம்புக்கு விஷம் பல்லிலே. அதைப் பிடுங்கி விட்டால் அதைப் பூமாலைபோலப் பயமின்றி எடுத்து மேலே போட்டுக்கொள்ளலாம். பாம்பு சாந்தமாகிவிடும். இதுபோலவே துஷ்டர்கள் சக்தியை ஒடுக்கிவிட்டால் அவர்கள் வெகு நல்லவர்களாகி விடுவார்கள். இந்திரியங்களுக்கு வெளிச் சென்று விஷய ஸம்பந்தப்பட்டு ஸுகம் அடையமுயல்வதேவிஷப்பல். இந்தப்பல்லை ஞான நிஷ்டையால் பிடுங்கிவிட்டால், ஞானி இவைகளோடுகூடியிருந்தும், இவைகளால் ஒருவிதகெடுதியும் ஏற்படாது. எப்பொழுதும் ஸுகரூபியாகவே இருப்பான். இம்மாதிரி செய்தால்தான் இப்பாழுலகில் ஆனந்த ரூபியாக விருக்கலாம் என்பதைக் கிருஷ்ண பரமாத்மா ஐந்தலை (பஞ்சேந்திரிய ரூபமானக்) காளிங்கன் மேல் நர்த்தனமாடி விஷத்தைக் கக்கும்படி செய்து விட்டுவிடுவதும், பாலஸுப்ரஹ்மண்யர் சூர பத்மாஸுரனுடன் அநேக விதமாகப் போர்செய்து அவன் கொடிய உருவங்களை நீக்கி நல்ல உருவங்களான மயில் கோழியாக வருங்கால் வாஹனமும் கொடியுமாக ஏற்று ஆட்கொண்டதும் நன்கு விளக்கும். ஆகவே **கூர்ம விருத்தி** (அபாய காலங்களில் ஆமை தனது நான்கு கால், தலை ஆகிய ஐந்தையும் வெடுக்கென்று தன்னை அறியாதும் இழுத்துக் கொள்ளுவது போல, விஷயங்கள் வந்து தாக்குங்கால் இயல்பாகவே ஐந்து இந்திரியங்களையும் உள்முகப் படுத்தும் சக்தி) வாய்ந்த ஞானிக்கு ஐந்தலை நாகமாகிய இந்திரியங்கள் பல்லெடுத்த பாம்பே ஒழிய வேறொன்றுமன்று. ஈசுவர ஸ்ருஷ்டியில் உள்ளவைகள் பொது, அவைகளிலிருந்து கொடியவைகளைத் தகைந்து நல்லவைகளை கிரஹிக்கு மிடங்களில் இந்நியாயம் உபயோகப்படும்,

## VIII. சூரியனும், பூமியும் வருஷகதி

### THE SUN & THE EARTH—ANNUAL MOTION

(தொடர்ச்சி)

சென்ற நவம்பர் மாதத்து விவேக போதினியில் (199-பக்கம்) சூரியோச்ச காலங்கள் பிரதி தினமும் 24-மணி நேரத்துக்கொரு முறையும், நக்ஷத்திரங்களின் உச்ச காலங்கள் 23-மணி, 56-நிமிஷத்துக் கொருமுறையும் சம்பவிக்கின்றனவென்று சொன்னோம். இவ்விதத் தினகதித் தோற்றம் பூமி தன்னைத்தானே சுற்றுவதாலுண்டாகிறதல்லவா? ஆகையால் பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றுவது நக்ஷத்திரங்களை அபேக்ஷித்து 23-மணி 56-நிமிஷத்துக்கொருதரமென்றும் சூரியனை அபேக்ஷித்து 24 மணிக்கொருதரமென்றும் ஏற்படுகிறது.

சூரியன், நக்ஷத்திரங்கள், இவை யெல்லாம் அந்தரத்தில் அசைவற்று நின்றால் இவ்விதக்கால வித்தியாஸங்களேற்படுவதற்குக்காரணம் யாது? ஒருவிதம், சூரியன் நக்ஷத்திரங்களை அபேக்ஷித்துக் கிழக்கு நோக்கி நகர்வதாகவேண்டும். அவ்விதமாயின், நக்ஷத்திர உச்சகாலங்களைவிட சூரியோச்ச காலங்கள் தினமொருமுறை 4-நிமிஷம் தாமதப்படுவதற்கு ஹேது வேற்படும். அல்லது, நக்ஷத்திரங்களெல்லாம் சூரியனை அபேக்ஷித்து, மேற்கு நோக்கி நகர்வதாகவேண்டும். அவ்விதமாயின், நக்ஷத்திரோச்ச காலங்கள் தினமொருமுறை சூரியோச்சகாலங்களை விட 4-நிமிஷகாலம் முன்னால் சம்பவிக்கலாம். தவிர இவ்வித காலபரிமாண வித்தியாஸத்தால், சூரியன் இன்று எந்த நக்ஷத்திரத்துக் கருகாமையில், எந்த ஸ்தானத்தில் காணப்படுகிறதோ, அந்த ஸ்தானத்தை விட்டு விலகி மறுநாள் கொஞ்சம் கிழக்கே தள்ளப்பட்டிருப்பதாகத் தோன்றவேண்டுமென்பது தெளிவாகிறது. இப்படிக் கொஞ்சங் கொஞ்சமாக மேற்சொன்ன ஸ்தானத்துக்கும் சூரியனுக்குமுள்ள தூரமதிகரித்துக்கொண்டே வந்து, கடைசியாக ஒரு வருஷகாலமானதும், சூரியன் முன் ஸ்தானத்துக்கே வந்து விடுவதாகத் தோன்றும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டிய விஷயமொன்றுண்டு. நமக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் சுமார் 9-கோடி மைல். ஆனால் பூமிக்கும் நக்ஷத்திரங்களுக்குமுள்ள தூரமோ அதைவிட அநேக மாயிரம் மடங்கு கொண்டது. இவ்விஷயத்தை வான சாஸ்திரிகள் வெகுப்பிரயாஸைப்பட்டு நிஸ்ஸந்தேகமாய் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

எப்படித் தினகதித்தோற்றம் பூமி தன்னைத் தானே ஒருமுறை தினம் சுற்றுவதாலுண்டாகிறதென்று கண்டோமோ, அதேவிதமாய் இவ்வருஷ மாறுதல்களும், பூமி சூரியனைச்சுற்றி வருவதால் ஏற்படலாமென்பது பின்வரும் உதாரணங்களால் தெளிவாகும்.




இந்தப்படத்தில் காட்டியிருக்கிற வீட்டின் முன் நிற்கும் மரத்தை, அதன் அருகாமையிலிருக்கும் ரஸ்தா வழியே போகும் ஒரு மனிதன் பார்த்துக் கொண்டேபோனால், A - இடத்தில் போகும்போது அம்மரம் வலது பக்கத்து சன்னலுக்கு எதிராகவும், B - இடத்தில் அவ் வீட்டின் வாயிற்படிக்கெதிராகவும், C - இடத்தில் இடதுபக்கத்து ஜன்னலுக்கெதிராகவு மிருப்பதாகத் தோன்றும். X, Y. இந்த இடங்களிலிருக்கும்போது அம்மரத்தின் திசை வீட்டை விட்டு விலகிக் காணப்படும். இம்மாறுதல்



காலஞ்சென்ற ஹானரபிள்
மிஸ்டர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ.

THE GUARDIAN PRESS MADRAS



களெல்லாம் அம்மனிதன் மாறுவதாலுண்டாவதே தவிர வேறில்லை.



**Fig. 2.**

இதேமாதிரி, இங்கு படத்தில் காட்டியபடி, சூரியனை ஸ்திரமாக வைத்து, அதைச்சுற்றி பூமி வருஷமொருமுறை வருமானால், பூமி $E_1$ இடத்திலிருக்கும்போது சூரியன் A-என்னும் நக்ஷத்திரத் திசையில் இருப்பதாகவும், $E_4$-ல் இருக்கும்போது B-நக்ஷத்திரத்தருகே இருப்பதாகவும், பூமி யொருமுறை முழுதும் சுற்றி வந்தவுடன், சூரியன் மறுபடியும் A-என்னும் ஸ்தானத்துக்கே திரும்பி வந்து விட்டதாகவும் தோன்றுகிறது.

ஆகையால் சூரியன் நக்ஷத்திரமண்டலங்களின் நடுவே வருஷ மொருமுறை சுற்றி வருவதாகத் தோன்றுவது, பூமியானது சூரியனை வருஷமொருமுறை சுற்றி வருவதாலாகிய தோற்ற மென்றேற்படுகிறதல்லவா? மேலும், பூமி சூரியனை விட அநேகமாயிரம் மடங்கு சிறியதானதால், சூரியன் பூமியைச் சுற்றுவதைவிட, ...சூரியனைச்சுற்றுவது எளிதாகவும் யுக்த... ...தோன்றுகிறது.

...கதியின் வேகம் எவ்வளவென்று ... சூரியனுக்கும் பூமிக்கும் 9-... ...ரமாகையால், இப்பெரும் யாத்திரையின் சுற்றளவு சுமார் 58½ கோடிமைலாகிறது. இந்த யாத்திரையை ஒருதரம் செய்து முடிக்க 365-நாள்கள் செல்வதால், நாளொன்றுக்குப் பூமி 16-லக்ஷம் மைல் தூரம் ஓடுவதாகிறது. அதாவது இந்த க்ஷணத்தில் இருந்த இடத்தை விட்டு இன்னம் ஒருமணிநேரத்தில் சுமார் 67-ஆயிரம் மைல் தூரம் விலகிவிடும்! இவ்வளவு வேகமான ஓட்டமும், தன்னைத்தானே பூமி சுற்றுவதும் வெகு அமரிக்கையாய் கொஞ்சங்கூட சலன மில்லாமல் நடக்கிறபடியால் நாம் சிறிதும் அவைகளை உணர்வதேயில்லை.

ஒரு வண்டி சக்கரம் தன்னைத்தானே சுற்றும்போது, அதன் எல்லாப் பாகங்களும் அதன் அச்சை சுற்றி வருகின்றன. பம்பர மொன்று அசைவற்று நின்று சுற்றும்போது, அதன் ஆணி மத்திய ரேகையை அப்பம்பரத்தின் ஒவ்வொரு பாகமும் சுற்றுகிறது. இவைகள் போலவே, பூமி தன்னைச் சுற்றும் விஷயத்தில், அதன் அச்சுஸ்தம்ப ஸ்தானத்தில் ஒரு ரேகையைச் சுற்றிச் சுழல்வதாக நாம் நினைத்துக் கொள்ளலாம். இதற்கு உதாரணமாக, ஒரு கிச்சிலிப் பழத்தின் மத்தியமாக ஒரு இரும்பு ஊசியைச் சொருகிப் பார்ப்பதைச் சொல்லலாம். இவ்வூசி அப்பழத்தில் ஓரிடத்தில் பிரவேசித்து அதற்கு நேராக எதிர்புரத்தில் வெளிப்படும். அதுபோல பூமியின் அச்சுரேகை பூமிதலத்தில் எதிர்முகமாயுள்ள இரண்டு (N, S) இடங்களில் முடிவு பெறவேண்டும். அவைகளில் ஒன்று (N) துருவ நக்ஷத்திரத்தை (P)யை நோக்கி இருப்பதால் அதற்கு உத்தரத் துருவ மென்றும், மற்றொன்றுக்கு (S) தக்ஷிணத்துருவ மென்றும் பெயரிடலாம். இவ்விரு துருவத்தினின்றும் சமதூரமாய் பூமியைச் சுற்றி (ER) ரேகையை ஏற்படுத்தி, அதற்குப் பூமத்திய ரேகை (Equator) என்று பெயரிடலாம்.

பூமியானது சூரியனைச் சுற்றி வருகையில், மேற் சொன்னத் துருவரேகை (NS) பூமியின் கதிமார்க்கமட்டத்துக்கு (plane of the Earth's orbit) A, என்னு மிடத்தில் காட்டியபடி




Fig. 3.

செங்குத்தாயிராமல், B, இடத்தில் காட்டியபடி சாய்வாயிருக்கிறது. மேலும், பூமி சூரியனைச்




Fig. 4.

சுற்றிச் செல்லும்போது, இவ்வச்சுச் சாய்வு எப்பொழுதும் ஒரே பக்கமாக, ஒரே திசையை நோக்கி நிற்கிறது. இவ்விஷயம் இப்படத்தினால் தெளிவாகலாம். ஒருபந்தில் நீண்ட இரும்பு கம்பியைக்குத்தி, அது மேற் சொன்னவளவு சாய்ந்து நிற்கும்படி பந்தை ஒரு பக்கத்தில் கனப்படுத்தி ஒரு தொட்டி ஜலத்தில் பாதிவரையில் மூழ்கும்படி மிதக்கவிட்டு, கையால் திரித்துச் சுற்றிக்கொண்டே வந்தால், பூமி சூரியனைச் சுற்றிவரும் விதத்தை ஒருவாறு உதாரிக்கலாகும். (தொட்டி மத்தியில் சூரியனிருப்பதாகப் பாவனைசெய்துகொள்ளவேண்டும்). மேலே சொன்ன பூமியின் துருவரேகை (அச்சு) யின் சாய்வு எப்போதும் ஒரேபக்கமாய்ச் சாய்ந்திருக்குமாவென்று சந்தேகப்பட இடமில்லை. வெகு வேகமாய்ச் சுற்றிவரும் பம்பரம், அதன் 'தலை




Fig. 5.

கனம்' எவ்வளவு இருந்தபோதிலும், அவ்வேகம் தணிகிறவரையில் தலை சாய்க்காது. அதே மாதிரி, பூமிபோன்ற வெகு வேகமாய்ச் சுழன்று கொண்டிருக்கும் வஸ்துக்களின் அச்சின் திசையை மாற்றுதல் கடினம்.

இவ்வாருகப் பூமிச்சுற்றிச் செல்லுகையில், BD, என்னுமிடத்தில் பூமி வரும்போது அதன் மத்திய பாகத்துக்கு (Equatorial regions) நேராகச் சூரியன் அத்தினங்களில் உதித்து, ஆகாயத்தைக் கடந்து, அஸ்தமிக்கும் C யிடத்திலிருக்கும்போது உத்தரத்துருவம் சூரிய வெளிச்சத்தை யடையாமல் மறைபட்டு, தக்ஷிணத்துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்திருப்பதால் சூரிய வெளிச்சத்தைப் பூர்ணமாயடைந்து, பூமி மத்தியரேகைத் தெற்கிலுள்ளோருக்கு உஷ்ணம்அதிகமாகக்கிடைக்கும். A தில் பூமி வரும்போது C இடத் தற்கு நேர்விரோதமாக தக்ஷிண வப் பிரதேசங்களில் அநுபவங் தோன்றும். பூமி மத்தியரே



161440

பிரதேசங்களில் வசிப்போர்கள் உஷ்ணத்தை யதிகமாய் அடைவார்கள். இதன் விபரம் சித்திரத்தால் நன்கு விளங்கும். ஏனெனில், A இடம் வழியாய் பூமி போகும்போது, மேல் சொன்ன உத்தரப்பிரதேசங்களில் பகல் இரவைவிட நீண்டதாகவும், C இடத்தில் பூமி வரும்போது, தக்ஷிண பாகத்திலிருப்போர்க்குப் பகல் இரவைவிட நீண்டதாகவும் இருக்குமாகையால், அந்தந்த இடங்களில் உஷ்ண லாபங்கள் ஏற்படும். A, B, C, D, இந்த ஸ்தானங்களுக்கிடையில் பூமி வரும்போது, தாரதரப்படி வெளிச்சமும் இருட்டும் அந்தந்தத் தினங்களில் ஏற்படும்.

மேலும், படத்தில் காட்டியபடி, பூமியின் மார்க்கத்தில் AB, BC, CD, DA, என்பவை ஒவ்வொன்றும் கால்பாகம். ஆகையால் A யிலிருந்து B க்குப்போக 3-மாதகாலமாகும். இதே மாதிரிதான் மற்றமூன்று பாகங்களிலும்.

இம்மாறுதலையொட்டி, நம் நாட்டாருக்குச் சில நாள்களில் நமக்கு வடக்குப்பக்கமாகவும், சில நாள்களில் நமக்குத் தெற்குப்பக்கமாகவும், மற்றுஞ்சில நாள்களில் ஏறக்குறைய கிழக்கு மேற்காகவும் சூரியோதய, உச்ச, அஸ்தமனங்கள்




Fig. 6.

காணப்படுகின்றன. இது படத்தில் தெளிவாய் விளங்கும். முன் தினங்களில் சூரியன் ஆகாயத்தில் செல்லுவதாகத் தோன்றும் மார்க்கங்கள் வரையப்பட் டிருக்கின்றன. மேலும் நாம் ஏற்கனவே தெரிந்துகொண் டிருக்கிற பிரகாரம் உத்தராயண காலத்தில் அகஸ்ஸு (அதாவது பகலளவு) இரவளவைவிட அதிகமாய்க்கொண்டே வருவது, அதற்கு விரோதமாய் தக்ஷிணாயனத்தில் பகல் க்ஷீணித்து இராப்பொழுததிகரித்துக் கொண்டே வருவதும் தெளிவாய் விளங்கும்.

ஆகவே, நமக்கு ஏறக்குறைய நேர் கிழக்கு மேற்காய் சூரியதினகதி ஏற்படும்போது, நம்மிடத்துக்கு அநேகமாய்ச் செங்குத்தாய் சூரிய கிரணங்கள் பகல் மத்தியில் வந்து சேருவதாலும், இரவைவிட பகல் நேரமதிகமாயிருப்பதாலும், சூரிய உஷ்ணம் ஜாஸ்தியாகக் கிடைத்துக் கோடைகால சமயம் ஸம்பவிக்கிறது. மற்றக் காலங்களில் சூரியகிரணங்கள் முன்போல அவ்வளவு செங்குத்தாக விராமல் சாய்வாக நம... க் கிடைப்பதாலும், பகல் நேரம் இரவைவிடக் கு..றந்து வருவதாலும் சூரிய உஷ்ணம் குறைந்து குளிர்காலம் ஏற்படுகிறது.

இதுவும் தவிர, பூமி A என்னுமிடத்தில் (See fig. 5) பூமிவருகையில் சிலகாலம் சூரியன் எப்போதும் அடிவானத்துக்கு மேலேயே உலாவுவதாகத் தோன்றி உத்தரத்துருவத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலும் நெடும்பகலைக் கொடுக்கும். இதேமாதிரி C இடத்தில் பூமி வரும்போது தக்ஷணத்துருவப்பிரதேசங்கள் அநுபறங்களுண்டாகும்!

S. பாலகிருஷ்ணய்யர், பீ. ஏ., எல். டி.

நீதிஸாரம்.—1. மனிதர்கள் புண்ணியத்தின் பயனை விரும்புகிறார்களேயன்றி, அதனைப் பெறுவதற்குக் காரணமாகிய புண்ணியத்தைச் செய்ய விரும்புகிறதில்லை; அவ்வாறே பாவத்தின் பலனை விரும்புகிறதில்லை; ஆனால் பாவத்தையோவெனின், வேண்டுமென்றே செய்கிறார்கள்.

2. ஜனங்கள் கிருபணனிடத்திற்குச் சென்று எனக்குக் கொடு" என்று அவனைக் கேட்பதானது, "நீ கொடாதிருந்து என்னைப்போலாகவேண்டும்," என்று அவனுக்கு உபதேசஞ் செய்ததுபோலாகுமேயன்றி ஏற்பதாகாது.

3. அறிவுடையோரது காலமானது, அருங்... விநோதர்களாய், நீதியையும் சாஸ்திரங்களையுங் கற்பதில் கழிகின்றது. மற்றவர்களின் காலமோவென்றால் தூங்குவதினாலாயினும், கலகமிடுவதினாலாயினுங் கழியும்.

4. கொடுக்க மனமிருந்தால் பொருளிராது; பொருளிருந்தால் கொடுக்க மனமிராது. இவ்விரண்டுமிருந்தால், கொடுக்க நல்ல பாத்திரமகப்படாது; ஆதலால் நல்ல மனது, பொருள், பாத்திரம் இம்மூன்றும் ஒருவன் புண்யஞ் செய்திருந்தாலன்றி அவனுக்குப் பொருந்தாவாம்.

## பறவைகளின் கூடுகளும் முட்டைகளும் குஞ்சுகளும் *

### BIRDS' NESTS, EGGS &c.

தேவையானவை.—பல பறவைகளின் முட்டைகளும் கூடுகளும் குஞ்சுகளும் பல. கோழிமுட்டைகள் இரண்டு மூன்று. கத்தி ஒன்று. தட்டு ஒன்று. கிண்ணம் ஒன்று. தீபம் ஒன்று. பந்து ஒன்று. இவைகளே.

பறவைகளெல்லாம் முட்டைகளையே இடும் என்பது உங்களுக்குத் தெரியவரும். அவற்றில் புல்புல், வானம்பாடி முதலிய சிறு பறவைகள் வருஷத்தில் ஒரு தடவையும், கோழி, வாத்து போன்றவைகள் அநேக தடவையும் முட்டைகளை யிடும். இதோ இங்குள்ள பலவகை முட்டைகளைப் பாருங்கள். இது ஒரு சுண்டக்காயளவு தானிருக்கிறது. இது ஒரு சிட்டுக் குருவியின் முட்டையாகும். இதோ புறுவின் முட்டை. இதோ வாத்தின் முட்டை. இதோ கோழி முட்டை. இவை ஒவ்வொன்றும் ஒரு எலுமிச்சம் பழமளவிருக்கின்றன. ஒட்டகப் பக்ஷியின் முட்டையானது ஒரு உரித்த தேங்காயளவிருக்கும். இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன? முட்டைகளின் ஆகிருதி அவைகளின் தாயின் ஆகிருதிக்குத் தக்கபடி இருக்கிறதென்றே.

அன்றியும் பறவைகள் இடும் முட்டைகள் எண்ணிக்கையிலும் வித்தியாசமுண்டு. சில பறவைகள் தடவைக்கு ஒன்று அல்லது இரண்டும், சில நாலைந்தும் முட்டைகளை இடுகின்றன. இப்படிக்கேன்? பறவைகள் முட்டைகளை இடும் இடங்களைக் கவனிப்போம். கோழி வாத்து போன்ற பறவைகள் திறந்த வெளிகளில் வெறுந் தரையிலாவது அல்லது மணலில் சற்றுப் பள்ளம் பறித்தாவது அநேகம் முட்டைகளை யிடுகின்றன. இம்முட்டைகள் நமக்கும் பல பிராணிகளுக்கும் மிகுதியாய் இரையாய் விடுவதால் ஏதோ தப்பிப் பிழைத்தன சிலவே முட்டை உடைந்து குஞ்சுகளாகின்றன. அதனால் தான் இப்பறவைகள் அநேக முட்டைகளிடுகின்றன. கிளி, புறு, ஆந்தை போன்ற சில பறவைகள் அவை வசிக்கும் மரப்பொந்துகளில் முட்டை இடுகின்றன. மற்றும் சில பறவைகள் முட்டையிடுவதற்கு வெகுகாலம் முன்னதாகவே தாயும் தந்தையுமாகப் பல விடங்களில் அகப்படும் புல், முள், இலை, உரோமம், குச்சி முதலியவற்றைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து மரத்தின் உச்சியிலும் பாறைகளினிடையிலும் நமது வீட்டு அட்டங்களிலும் மற்றும் பத்திரமான விடங்களிலும் கூடுகட்டி அதில் ஒன்று இரண்டு முட்டைகளை யிடுகின்றன. கூடுகளில் வளரும் இம்முட்டைகள் எளிதில் நாசமடைவதில்லை. அதனால்தான் இப்பறவைகள் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை இடுகின்றன.



கூடும் குஞ்சுகளும்

கூடு.—இப்பொழுது இந்தப் பலவிதமான பறவைக் கூடுகளைப் பாருங்கள். வெகு நேர்த்தியாயும் பல மாதிரியாயும் செய்யப்பட் டிருக்கின்றன. ஒருவிதக் கூடானது அகன்ற வாயையுடைய கிண்ணம்போ லிருக்கின்றது. பச்சென்ற பல இலைகளைச் சேர்த்துத் தைத்ததுபோலுமிருக்கின்

* இதைப்போன்ற மற்றப் பாடங்களை "ஜீவவர்க்க போதினி" என்னும் புஸ்தகத்தில் பார்க்கலாம்.



றது. இது ஒரு தைலத்தின் (Swallow) கூடு. தைலமானது பல இலைகளைத் தன் எச்சிலோடு கலந்து கூடுகட்டும். இந்தக் கூட்டைக் கொண்டு வந்து அநேகர் ருசியுடன் உண்பார்கள். இதோ இந்தக் கூடோ கவிழ்த்துவைத்த ஒரு நார்ப்பை போலிருக்கிறது. இது தூக்கணாங் குருவியின் கூடாகும். இது குச்சியால் முடைந்த பெட்டி போலிருக்கிறது. இது காகத்தின் அல்லது நாரையின் கூடாகும். இதனால் பல பறவைகள் பலவிதமான கூடுகள் கட்டுமென்று தெரிந்து கொண்டோம்.

நிறம்.—இப்பொழுது நாம் முன் பார்த்த பல முட்டைகளின் நிறத்தைக் கவனிப்போம். சில முட்டைகளை கோழிமுட்டைகளைப்போல் வெண் மஞ்சள் நிறமாயும், புறு, சிட்டுக்குருவி இவற்றின் முட்டைகள் நீலமாயும், வேறு சில முட்டைகள் பல வர்ணங்களமைந்த சிறு புள்ளிகள் உள்ளனவாயுமிருக்கின்றன. இவ்வித மிருப்பானேன்? கோழியானது தரையில் மணலில்தானேமுட்டையிடுகிறது. அதனால்தான் அதன் முட்டைகள் மணல்போல் வெண்ணிறமா யிருக்கின்றன. இந்த முட்டைகள் செடிமரங்களில் இடப்பட்டபடியால்தான், இலை, மரத்தின்பட்டை இவற்றின் நிறம்போலிருக்கின்றன. ஆதலால் முட்டைகளின் நிறம் அவை இடப்படும் இடத்தை ஒத்திருக்குமென்றாயிற்று. இதனால் உண்டாகும் சாதகம் என்ன? கூறுங்கள்.

உருவம்.—இதோ இந்தக் கோழிமுட்டையைப் பாருங்கள். இது எப்படி இருக்கிறது. சற்று நீண்ட உருண்டை வடிவாக இருக்கிறதல்லவா? ஒரு பக்கம் கனமாயும் எதிர்ப்பக்கம் லேசாயும் இருக்கிறது. இப்படி இருப்பானேன்? நான் செய்வதைக் கவனியுங்கள். இதோ! இதென்ன? ஒரு பந்துதானே. இதன் உருவம் என்ன? மிகவும் உருண்டையா யிருக்கிறதல்லவா? ஆம். இதை மேஜையின்பேரில் வைக்கிறேன். பிறகு அதன் பேரில் மெதுவாக ஊதிக் காற்றைச் செலுத்துகிறேன். என்னவாகிறது. பந்தானதுஉருண்டுகொண்டேபோய்த் தொப்பென்று கீழேவிழுகிறதல்லவா? இப்பொழுது ஒரு கோழிமுட்டையை அதுபோலவே மேஜையின்பேரில் வைத்து அதை ஊதிப் பார்ப்போம். இதுவும் உருளுகிறது. ஆனால் நேரே ஒழுங்காக உருளவில்லை. ஒருநுனி பெருத்தும் கனமாயுமிருப்பதால் அதேவிடத்தில் சுற்றிச் சுற்றி உருளுகிறதே தவிர மேஜையிலிருந்து கீழே விழவில்லை. இம்முட்டையும் பந்துபோல் உருண்டிருந்தால் உருண்டுகொண்டே போய்த் தொப்பென்று கீழே விழுமல்லவா? கீழே விழுந்தால் உடையும். முட்டை உடைந்தால் உள்ளிருப்பது எல்லாம் வெளிவந்துவிடும். அப்படியாயின் குஞ்சுகளாகா வன்றோ?

இந்தப் பல பறவைகளின் முட்டைகளைக்கவனியுங்கள். சிறியதும் பெரியதுமா யிருந்தபோதிலும் எல்லாம் கோழி முட்டைபோல் நீண்ட உருண்டை வடிவமாகவே இருக்கின்றன. பறவைகள் பாறையிலும் மரத்திலும் முட்டையிடுமென்று சொன்னோம். காற்றுப் பலமாக அடிக்கும்பொழுது இம்முட்டைகள் பந்தைப்போலிருந்தால் உருண்டுபோய்க் கீழே விழுந்து உடைந்து போகுமல்லவா? அப்படி உருண்டு போகாமலிருப்பதற்கே முட்டைகளெல்லாம் நீண்ட உருண்டை (Oval) வடிவாக இருக்கின்றன.

**முட்டையின் அமைப்பு.**—இப்பொழுது முட்டைகளின் அமைப்பைக் கவனிப்போம். இதோ ஒரு கோழிமுட்டை. இதைக் கையிலெடுத்துச் சற்று அமுத்திப் பாருங்கள். கைக்குக் கெட்டியாய்க் காண்கிறதல்லவா? இப்பொழுது தூக்கிப்பாருங்கள். சற்றுப் பளுவாயிருக்கிறது. இதனுள் என்ன இருக்கிறதென்று பார்க்க இதோ இந்த மேல் பக்கத்தில் கத்தியால் கொஞ்சம் துவாரமிடுகிறேன் பாருங்கள். இப்போது இதனுள் என்ன இருப்பதாகத் தெரிகிறது. ஏதோ ஒருவித ஜலமிருப்பதாகக் காண்கிறதல்லவா? இதை மெதுவாக இந்தத் தட்டில் ஊற்றுகிறேன். நீங்கள் நான் ஊற்றும்போது கவனித்துப் பாருங்கள். இப்பொழுது வெள்ளை ஜலம்

விழுந்ததல்லவா ? இப்பொழுதென்ன, மஞ்சள் ஜலமல்லவா விழுகிறது. இதை நன்றாகக் கவிழ்க்கிறேன். ஜலம் எல்லாம் விழுந்துவிட்டது. இதற்குள் பாருங்கள். உள்ளே ஒன்றுமில்லாமல் போலாகத் தெரிகிறதல்லவா ? இதற்குத்தான் ஓடு என்று பெயர். இதுதான் உள்ளிருந்த ஜலத்தை வெளிவிடாமல் காத்து வந்தது. இந்த ஓட்டை நொறுக்கிக் கீழே போடுகிறேன். தனித்தனி தூளாக விழுகிறதா ? இல்லை. ஓடு உடைந்துமட்டும்போய் தூட்களெல்லாம் ஒன்றோடொன்று உட்பக்கமிருக்கும் ஒரு வெளுப்பான மெல்லியதும் மிருதுவானதுமான தோலில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன பாருங்கள். ஆகையால் இந்தத் தோலும் உள்ளிருந்த நீரைச் சுற்றியிருந்ததே.




உடைத்த கோழிமுட்டை

1. ஓடு 2. வெண்பிசின் 3. மஞ்சட் பிசின் 4. கரு.

இப்பொழுது இந்தத் தட்டில் நாம் முட்டையிலிருந்து ஊற்றின நீரைத் தொட்டுப் பாருங்கள். பிசின்நீர்போல் கையில் ஒட்டிக்கொள்ளுகிறதல்லவா ? இந்த வெள்ளை மஞ்சளாகிய இரண்டுவித நீரும் முட்டைக்குள் எவ்விதமாய் அமைந்திருந்தன வென்பதையும் அவைகளின் உபயோகமென்ன வென்பதையும் கவனிப்போம். இதோ இந்தக் கோழிமுட்டையை நீரில் போட்டு 10 நிமிஷம் வேகவைக்கிறேன். உஷ்ணம் நீங்கச் சற்றுநேரம் இம்முட்டையை ஆறவைப்போம், இப்பொழுது நன்றாய் ஆறிப்போய்விட்டது. இது இப்போது முன் பார்த்தபடிதானே இருக்கிறது. எங்கே, இதன் ஓட்டை முன் போலவே துவாரமிட்டுக் கவிழ்க்கிறேன். ஒன்றும் வெளிவரக் காணுமே ? இதில் முன்னிருந்த ஜலம் எங்கே போயிற்று. ஓட்டை ஜாக்கிரதையாக உடைத்து எடுப்போம். முன் பார்த்த வெள்ளைத் தோல் மூடியையும் உரித்தெறிவோம். இப்பொழுதும் முட்டைவடிவாகவே யிருக்கிறதே. மிக வெளுப்பாகவும் காண்கிறது. இதைத் தொட்டுப் பாருங்கள். கைக்கு மிருதுவாய், அழுத்தினால் அமுங்குகிறதல்லவா? இதுதான்நாம்முன்பார்த்த வெள்ளைப்பிசின். இது இப்படிக் கெட்டியானதற்குக் காரணம் நாம் வேகவைத்ததே. அந்த முட்டையை நாம் முன் கவிழ்த்தபோது வெள்ளைப்பிசினுக்குப் பின் விழுந்த மஞ்சட்பிசின் எங்கே இங்கு காணும். அது இதற்குள்ளிருக்கிறதோவென இதைச்சரிபாதியில் அறுத்துப் பார்ப்போம். நடுவில் மஞ்சளாகத் தெரிகிறதல்லவா ? இதுதான் அந்த மஞ்சட் பிசின். வேகவைத்ததால் இதுவும் கெட்டியாய் விட்டது. மற்றொரு பாதிமஞ்சள் எங்கே ? இதோ இந்தப் பாகத்திலிருக்கிறது. இந்த இரண்டு மஞ்சட் பாதியையும் இவைகளின்மேல் சூழ்ந்திருக்கும் வெள்ளையிலிருந்து வெளியிலெடுத்து ஒன்றோடொன்று சேர்க்கிறேன். இப்போது ஒரு மஞ்சள் நிறமான பந்தைப்போலிருக்கிறதல்லவா? இதோ மஞ்சளின் மேல் இங்கே கடுகளவு சற்றுச் சிவப்பாய்த் தெரிகிறதைப் பாருங்கள். இதுதான் கோழியினுடைய கரு. இக்கருவானது தன்னைச் சுற்றியிருக்கும் மஞ்சளைத் தின்று பெரிதாக வளர்ந்து பின்பு குஞ்சாகிறது. ஆனால் வெள்ளைப்பிசினும் வெள்ளைத்தோலும் மேல் ஓடும் எதற்காக விருக்கிறதென்றால், வளரும் கருவை நன்றாகக் காப்பாற்றுவதற்கேயாம்.

ஆனால் இந்த ஓடு ஏன் கெட்டியாக விருக்க வேண்டும் என்பீர்கள். ஓடு மெல்லியதாயிருந்தால் என்னவாகும்? நாம் முட்டையைச்சுடுநீரில் வைத்ததும் முட்டையினுள்ளிருந்த வெண்நீரும் மஞ்சள்நீரும் எப்படிக் கெட்டியாய்விட்டதோ அப்படி முட்டையின்பேரில் உஷ்ணக்காற்றுபடுவதால் அவைகள் இறுகிவிடும். அதனால் அதனுள்ளிருக்கும் கரு அழிந்து போம்.



அதற்காகவே ஓடு கெட்டியாயமைந்திருக்கிறது. இந்த ஓட்டில் இன்னொரு விசேஷம். அதை நன்றாகச் சோதித்தால் அதில் நமக்குக் கண்ணுக்குத் தெரியாத அநேகம் சிறு துவாரங்களிருக்கும். வெளிக்காற்றானது இத்துவாரங்களின்வழியாய் முட்டையினுட் சென்று கருவுக்கு நல்ல காற்றைக் கொடுக்கிறது. உள்ளிருக்கும் கெட்ட காற்றும் இத்துவாரங்களின் வழியாகவே வெளிவருகின்றன. அதனால்தான் குஞ்சுகள் நன்றாக வளருகின்றன. ஆகையால் குஞ்சுகள் வளர இத்துவாரங்கள் அவசியமாகும். இத்துவாரங்கள் எவ்விதத்திலாவது அடைபடுமாகில் குஞ்சுகள் வளரா. ஒரு முட்டையைச் சுற்றிலும் நாம் வார்னிஷைப் (varnish) பூசி வைப்போமாகில் இத்துவாரங்கள் அடைபடுமாகையால் உள்ளிருக்கும் குஞ்சானது இறந்துபோம். முட்டையின் ஒரு பக்கத்தில்மட்டும் வார்னிஷ் பூசினால் அப்பக்கத்திலிருக்கும் குஞ்சின் அங்கங்கள் குறைவுறும்.

கோழிமுட்டையை நாம் உடைத்து முன் சோதித்தோமல்லவா ? இப்பல முட்டைகளையுமுடைத்துச் சோதித்தால் கோழிமுட்டைபோலவே இம்முட்டைகளும் அமைந்திருக்கக் காணலாம். கெட்டியான ஓட்டினுள் மிருதுவான தோலும் வெண் பிசினும் மஞ்சட் பிசினும் இருக்கும். இந்த மஞ்சட் பிசினைக் கருவானது உண்டுவளரும். கருவானது குஞ்சாவதற்கு வேண்டிய உஷ்ணத்தைத் தாயாவது தந்தையாவது அல்லது இருவருமாகவாவது அடைகாத்துக் கொடுக்கும். அப்பொழுது முட்டைகளின் எல்லாப்பாகங்களிலும் உஷ்ணம்படும்படி தாயானது அவற்றை அடிக்கடிப் புரட்டிப் புரட்டி அடைகாக்கும். புரட்டுவதால்தான் முட்டைகளின் எல்லாப் பாகங்களும் ஒரே அளவாகச் சூட்டை அடைகின்றன. இல்லாவிடில் குஞ்சுகளின் சில பாகங்கள் அதிகமான சூட்டை அடைந்துமிகவும் பெரிதாய் வளர்ந்துவிடும். அக்குஞ்சுகள் வெகு விகாரமாயிருக்கும். சில பறவைகள் அடைகாப்பதில்லை. அவற்றில் குயில் ஒன்று. அது காக்கை அல்லது கருமா இவற்றின் கூட்டில் முட்டைகளையிட்டு ஓடிப்போய்விடும். அப்பொழுது காக்கையானது தன் சொந்த முட்டைகளோடு அம்முட்டைகளையும் அடைகாக்கும். முட்டையுடைந்து வெளிப்படும் குயிலின் குஞ்சுகளுக்கும் காக்கை ஆகாரம் தேடிக்கொண்டு வந்து ஊட்டும். குயிலின் குஞ்சுகள் சற்றுப்பெரிதானதும் நன்றிகப்யில்லாமல் காக்கையின் குஞ்சுகளைக் கூட்டினும்ருந்து விரட்டிவிடும். ஒட்டகப்பக்ஷியும் தன் முட்டைகளை அடைகாப்பதில்லை. அது மணலில் ஒரு பள்ளந்தோண்டி அதில் முட்டையை இட்டு விட்டுப் போய்விடும். மணலிலிருந்தே முட்டையும் உஷ்ணமடைந்து குஞ்சாகும்.

**குஞ்சுகள்.**—பறவைகளின்குஞ்சுகள் முட்டையினுள் நன்றாக வளர்ந்ததும், தங்கள் அலகின் நுனியால் முட்டையை உள்ளிருந்து கொண்டே டப் ! டப் ! என்று அடித்து ஒரு சிறு பொத்தல் விடும். பொத்தலின் வழியே முட்டையினுட் செல்லும் காற்றைத் தங்கள் சுவாஸப் பையினுள் கொண்டு இரண்டொருநாள் முட்டையினுள்ளேயே வசிக்கும். சற்று வலுவந்ததும் முட்டையை நன்றாக உடைத்துக்கொண்டு வெளியில் குதிக்கும். கூடு கட்டாத சில பறவைகளின் குஞ்சுகளுக்கு முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடனே இறக்கைகளும் கால்களும் நன்றாகவளர்ந்திருக்கும் அதனால் அவை தாமே ஆகாரத்தைத் தேடி உண்டு உலாவும். கூடுகட்டும் அநேகம் பறவைகளின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டதும்இறகுகளில்லாததால்பலமற்றவைகளாயிருக்கும். அதனால் அவை தாமே நடமாடி ஆகாரம் தேடி உண்பதில்லை. இறக்கைகள் முளைத்து தாமே பறக்க சக்திவருமட்டும் தாயானது பலவிடங்களில் திரிந்து புழுபூச்சிகளைத் தேடிக் கொண்டுவந்து அவற்றைத் தன்னுடைய பால் போன்ற ஒருவித எச்சிலோடு கலந்து அதைத் தங்கள் குஞ்சுகளின் வாயில் போட்டு ஊட்டும். அப்படி ஊட்டுவதை எல்லாம் நழுவவிடாமல் பிடித்துக் கொள்வதற்குத்தான் இக்குஞ்சுகளின் வாயானது அகன்றதாயும் உதடானது சதையாலமைந்ததாயும் இருக்கின்றன பாருங்கள்.

நம்மில் அநேகர் கோழி வாத்து முதலிய பறவைகளை ஏராளமாக வளர்க்கிறோமல்லவா? அவற்றில் ஒவ்வொன்றும் அநேகம் முட்டைகளை யிடுமென்று சொன்னோம். முட்டைகள் எல்லாம் குஞ்சாக வேண்டுமாகில் எல்லாவற்றிற்கும் ஒரே தடவையில் உஷ்ணம் அகப்படவேண்டு

ல்லவா? ஆனால் ஒரு தாய்க்கோழிக்கு அவ்வளவு முட்டைகளுக்கும் எப்படிச் சூடுகொடுக்கமுடியும்? முடியாதல்லவா? அதனால் அநேகம் முட்டைகள் போதுமான உஷ்ணம் பெறாமல் இறந்துபோய் விடும். அதனால் நமக்கு நஷ்டமுண்டாகும். இதற்காகக் கோழி வாத்து இவைகளை வளர்ப்போர் ஒருவித அடைகாக்கும் இயந்திரத்தை வாங்கி வைத்துக் கொள்வதுண்டு. அதற்கு இங்கு



பேடர்(Incubator)என்றுபெயர். இது சுமார் 10 ரூபா விலைதானிருக்கும். இது ஒருவிதத் தகரப் பெட்டியாகும். இப்பெட்டியின் எல்லாப் பக்கங்களின் உட்பக்கமும் போலாக விருக்கும். அதில் நீரை நிரப்பி, பெட்டியின் ஒருபக்கத்திலிருக்கும் ஒரு சிறு விளக்கை ஏற்றி வைப்பார்கள். கோழிகள் முட்டைகளை யிட்டதும் அம்முட்டைகளை இப்பெட்டியில் வைப்பார்கள். அவை சுடுஞ் சலத்திலிருந்து சூட்டை அடைந்து சில நாட்களுக்கெல்லாம் குஞ்சுகளாய்விடும்.

V. R. துரைசாமி சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி.

# ஸ்தல சரித்திரக் கதைகள்

## STORIES FROM LOCAL HISTORY
## THE CHOLA KINGDOM

### 6. கங்கைகொண்ட சோழபுரமும், ராஜேந்திர சோழரும்.

முன் கதையில் ராஜராஜ சோழர் அனேகமாய் தென்னிந்தியா முழுமையும் ஜெயித்தாரென்றும், அவர்காலத்தில் சோழராஜ்யம் உன்னதபதவி யடைந்ததென்றும் சொன்னோம். அக்காலத்தில் தென்னிந்தியாவிற்கு வடக்கே இரண்டு ராஜ்யங்களிருந்தன. அவைகள் மேல சௌளுக்கிய, கீழ சௌளுக்கிய ராஜ்யங்களே. இவைகளில் பெரியதும் வலிமையுமுடையதும் மேல சௌளுக்கிய ராஜ்யம். கீழ சௌளுக்கிய ராஜ்யத்தின் ஒரு பாகத்திற்கு வெங்கி நாடென்று பெயர். வெங்கி நாட்டை ராஜராஜர்ஜெயித்த காலத்தில், சௌளுக்கியர் சோழராஜ்யத்தின்மீது படையெடுக்காமல் தடுப்பதற்காக வெங்கிநாட்டரசன் சிநேகம் சம்பாதிக்கும்பொருட்டு, அந்த அரசனுக்கு அவனுடைய ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுத்தது மன்னியில் தன்னுடைய பெண்ணையும் அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்.

ராஜராஜர் அரசாண்டுகொண்டிருக்கையிலேயே, இவர் புத்திரனான ராஜேந்திரருக்கு இளவரசாக முடிசூட்டப்பட்டது. ராஜேந்திரருடைய எண்ணமும் சோழராஜ்யத்தை மேன்மைபடுத்த வேண்டுமென்பதே. இவர் காலத்தில் மைசூரிலுள்ள கங்கர்கள் கலகம் செய்து, சௌளுக்கியர்களோடு சேர முயன்றார்கள். உடனே ராஜேந்திரர் இவர்களை முறியடித்து, தன் மருமகனான வெங்கி நாட்டரசனுக்குத் தன்மகளைக் கல்யாணம் செய்துகொடுத்து, வெங்கிநாட்டு உறவைப் பலப்படுத்தினார். ஆகையால் வடதிக்கிலிருந்து சோழ ராஜ்யத்திற்கு யாதொரு அபாயமுமில்லாமலிருந்தது.

வட எல்லையைப் பலப்படுத்தினபின்பு தெற்கேயுள்ள லங்கைத் தீவை ஜெயித்தார். சோழ அரசர்களுக்குக் கடற்சேனை யுண்டென்று முன் கதையில் சொன்னோம். ராஜேந்திரருடைய கடற்சேனை பர்மா தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று, போகும் வழியில் அந்தமான், நிக்கபார் தீவுகளைப் பிடித்தது.



ராஜேந்திரர் கங்கைநதிவரையிலுள்ள தேசங்களின்மீது படையெடுத்துச் சென்றதாக



பெருமை பாராட்டி, 'கங்கைகொண்ட சோழர்' என்று பெயர் பூண்டாரென்பது, அவர் கட்டின ஜெயஸ்தம்பங்களைக்கொண்டு தெரியவருகிறது. அவைகளிலொன்று கஞ்சம் ஜில்லாவிலுள்ள மஹேந்திரமலை மீதிருக்கிறது. ராஜேந்திரர் புதிதாக ஒரு ராஜதானி ஏற்படுத்தி, அதற்குக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்று பெயரிட்டார். இது திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலிருக்கிறது. இதில் ஒரு அழகான கோவிலும் கட்டி, ஒரு பெரிய ஏரியும் வெட்டுவித்தார்.

### 7. ராஜேந்திரசோழ தேவகுலோத்துங்கர்

ராஜேந்திர சோழர் இறந்தவுடன் சோழ ராஜ்யத்திற்கு அனேக கஷ்டங்களுண்டாயின. பாண்டியர்களும், சேரர்களும், கங்கர்களும், கலகம் செய்தார்கள். மேல சௌளுக்கியர்கள் சோழ மண்டலத்தின்மீது படையெடுத்தார்கள். இவர்களை எதிர்த்த சோழராஜன் யுத்தகளத்தில் இறந்து போனான். வெங்கிநாட்டு கீழ சௌளுக்கியர்கள்கூட உறவைப்பாராட்டாமல் கலகம் செய்யத் தொடங்கினார்கள். சுமார் இருபத்தெட்டு வருஷகாலம் சோழ ராஜ்யத்திற்குச் சனியன் பிடித்து, பின்பு நல்ல காலம் பிறந்தது.



முன்கதையில் ராஜேந்திர சோழர் சோழ ராஜ்யத்தின் வடஎல்லையைத் பலப்படுத்துவதற்காகத் தன் பெண்ணை வெங்கி நாட்டரசனுக்கு விவாகம் செய்து கொடுத்தாரென்று சொன்னோம். இந்தப் பெண்ணினுடைய பிள்ளைதான் ராஜேந்திரனென்கிற குலோத்துங்கர். இவர் வெங்கி நாட்டை ஆண்டுகொண்டிருந்தார். இவருக்கும் சோழ வம்சத்திலேயே ராஜேந்திரருடைய பேத்தியைக் கலியாணம் செய்து, கொடுக்கப்பட்டது. ஆகையால் இவர் சோழராஜ்யத்தை அடைவதற்கு அனேக பாத்தியங்களுள்ளவராகவிருந்தார். இத்துடன் பார்ப்பவர் மனதைக் கவரும்படியான வெளித் தோற்றமும், அழகும், தைரியமும் வாய்ந்தவர். போரில் ஒரு சிறந்த வீரர். சோழ ராஜ்யத்தின் சத்துருக்களான கலிங்கர்களையும், கங்கர்களையும், பாண்டியர்களையும் வென்று, அவர்களுடைய தேசங்களைப் பிடித்து, சோழ சிம்மாசனத்தின்மீது ஏறினார். தென்னிந்தியாவில் இவரால் ஜெயிக்கப்படாத தேசம் ஒன்றுமில்லை.

இவர் சுமார் ஐம்பது வருஷகாலம் அரசாட்சி செய்தார். ராஜ்யத்தில் சமாதானமே தவிர, சண்டை சச்சரவுகளே கிடையாது. ஆகையால் தான் தன் ராஜ்யத்தை நன்றாய் ஆளுவதற்கு இவருக்குச் சாவகாசமிருந்தது. இவர் காலத்தில் ராஜ்ய முழுமையும் ரிவினியூ சர்வே செய்யப்பட்டது. இவர் அனேக ராஜ்யங்களின்மீது படையெடுத்து ஜெயித்தபடியால், இவரிடமிருந்த பொருளுக்கு அளவில்லை. இப்பொருளுதவியால், ராஜ ராஜரைப்போல் அனேக கோவில்களையும் கட்டி, தமிழ் தெலுங்கு பாஷைகளைப் பரிபாலித்து வித்வான்களுக்குத் தகுந்த பரிசுகள் கொடுத்து வந்தார். அக்காலத்தில் வியாபாரிகளும், பிரயாணிகளும் ஒரு ஜில்லா விட்டு மற்றொரு ஜில்லா போனால் கடுமையான சுங்கான் கொடுக்கவேண்டி யிருந்தது. இவ்விதமான வரியினால் வியாபாரமும், பிரயாணமும் மிகவும் கஷ்டமாக விருந்தன. குலோத்துங்கர் இப்பேர்ப்பட்ட வரிகளை அடியோடு தள்ளிப் போட்டார். இதனால் வியாபாரம் விருத்தியடைந்து, சோழ தேசத்தினுடைய செல்வமும், நாகரீகமும் மேன்மேல் பெருக ஆரம்பித்தன.

G. இரத்தினம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 15. ஜாபால உபநிஷத் (13)

**ஓம்:—ப்ருஹஸ்பதி யாஞ்ஞவல்க்யரை** நோக்கி, 'குருக்ஷேத்ரம் தேவர்களுக்குத் தேவயக்ஞமாயும், எல்லாப் பூதங்களுக்கும் ப்ருஹ்மஸ்தானமாயும் உள்ளது. இதற்கு அவிமுக்தம் என்று பெயர். ஆதலால் எங்கே போனாலும் குருக்ஷேத்ரத்தை முன் கூறியபடி கருத வேண்டும். பிராணிகளுக்குப் பிராணன் இங்கிருந்து கிளம்பும்பொழுது ருத்ரன் தாரக மந்திரத்தை உபதேசிக்கிறார். இதனால் அவர்கள் அமிருதத்தைப் பெற்று மோக்ஷம் அடைகிறார்கள். ஆதலால் இந்த அவிமுக்த க்ஷேத்ரத்தைக் கைவிடாது ஸேவிக்கவேண்டும்' என்று உபதேசித்தார்.

**பின்னர் அத்ரி என்பவர் யாஞ்ஞவல்க்யரை அடுத்து,** 'அனந்தமாயும் அவ்யக்தமாயும் உள்ள ஆத்மாவை நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்?' என்று கேட்டார். அதற்கு **யாஞ்ஞவல்க்யர்,** 'நீர் கேட்ட ஸ்வரூபமுடைய ஆத்மா அவிமுக்தத்தில் நிலை பெற்றிருப்பதால் அதனோடு பொருத்தி ஆத்மாவை உபாஸிக்கவேண்டும். அந்த அவிமுக்தம் வாரணைக்கும், நாசிக்கும் இடையில் ஏற்பட்டுள்ளது?' என்றார். 'வாரணை என்பதென்ன? நாசீ என்பதென்ன'? என்று வினவினார் அத்ரி. 'இந்திரியங்களால் ஏற்படும் தோஷங்கள் எல்லாவற்றையும் தடுப்பதால் அதற்கு வாரணை என்று பெயர். இந்திரிய ஸம்பந்தமாக ஏற்படும் பாபங்களை நாசம் செய்வதால் அதற்கு நாசி என்று பெயர்' என, அத்ரி, 'இவைகளின் ஸ்தானம் எது?' என்று கேட்டார். 'புருவங்களுக்கும் மூக்குக்கும் நடுவிலுள்ளது இவைகளின் ஸ்தானம். ப்ருஹ்மவித்துக்கள் இந்தச் சேர்க்கையைத்தான் ஸந்தியியாக உபாஸிக்கின்றனர். ஆதலால் இது எல்லோராலும் உபாஸிக்கத் தகுந்தது. இதனால் மோக்ஷ ஸாதனமான ஞானம் கைகூடும்' என்று உபதேசித்தார் யாக்ஞவல்க்யர்.

வேறு ஒரு ஸமயத்தில் சில ப்ரஹ்மசாரிகள் யாக்ஞவல்க்யரை நோக்கி, 'மந்திரத்தினால் மோக்ஷம் கைகூடுமா?' என்று கேட்டார்கள். அதற்கு யாக்ஞவல்க்யர், 'சதருத்ரீயத்தினாலே மோக்ஷம் கிடைப்பது திண்ணம். அதுவே மோக்ஷ ஸாதனம்' என்றார்.

மற்றொரு காலம் வைதேஹ ஜனகர் யாக்ஞவல்க்யரை அணுகி, 'ஸந்யாஸத்தைபற்றி விஸ்தரிக்கவேண்டும்' என்று கேட்டார். 'ப்ருஹ்மசரியம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம் முதலிய முதல் மூன்று ஆச்ரமங்களையும் முறையே முடித்துப் பின்னர் ஒருவன் ஸந்யாஸியாகவேண்டும். தகுந்த வேறு காலங்களில் முதல் இரண்டு ஆச்ரமங்களி லிருந்தபடியே நேரிட ஸந்யாஸத்தைக் கைப்பற்றலாம். நியமம் இருந்தாலும் ஸரி இல்லாவிட்டாலும் ஸரி, ஸ்நாதகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஸரி, அக்நிகார்யத்தை முடித்தவனாகிலும் ஸரி இல்லாவிட்டாலும் ஸரி எப்பொழுது ஒருவனுக்கு (நிஜ) விரக்தி உண்டாகிறதோ அப்பொழுது அவன் ஸந்யாஸத்தைக் கைக்கொள்ள வேண்டும். சிலர் செய்வதுபோலப் பிராஜாபத்ய இஷ்டியைச் செய்யாது, பிராணரூபமான அக்நி ஸம்பந்தப்பட்ட ஆக்னேய இஷ்டியைச் செய்யவேண்டும். இதில் ஒரு மந்திரபூர்வமாக அக்னியை முகர்ந்து, பின்னர் கிராமாக்னியையும் அவ்வாறே செய்ய வேண்டும். அக்னி கிடைக்காவிடில் ஜலத்திலே ஹோமம்செய்ய வேண்டும். ஜலமே ஸர்வதேவதாஸ்வரூபம். அதில் 'எல்லா தேவதைகளுக்கும் ஹோமம் செய்கிறேன்' என்று செய்துவிட்டு, வேதவிதிப்படி சிறந்த ஹவிஸ்ஸை நெய்யோடு உட்கொள்ள வேண்டும்' என்று யாக்ஞவல்க்யர் விஸ்தரித்தார்.

இதன் பின்பு அத்ரி யாக்ஞவல்க்யரை நோக்கி, 'யக்ஞோபவீதமற்றவன் எவ்வாறு பிராஹ்மணனாவான்' என்று கேட்க, யாக்ஞவல்க்யர், 'முற்கூறியபடி எவனொருவன் உண்டுஆசமனஞ்செய்துபரிசுத்தனாகிறானோ அவன் பரிசுத்தமே யக்ஞோபவீதம். இது எல்லாவித விருத நியமங்களிலும் உள்ளது. காஷாயம், முண்டனம், பத்னியில்லாமை, பரிசுத்தம், துரோகமின்மை, பிக்ஷான்ன போஜனம் ஆகிய இவைகள் அமையப் பெற்ற ஸந்யாஸி பிரஹ்மத்வத்தை அடைகிறான். நோயால் வருந்துபவன் வாக்கினாலும் மனத்தினாலும் ஸந்யாஸம் செய்துகொள்ளலாம். ஸுகமாகவிருப்பவன் இவ்வாறு செய்யவேகூடாது. இவ்வாறு ஸந்யாஸியாகிவிடுபவன் பிருஹ்மவித்தாகிறான். ஸம்வர்த்தகர், ஆருணி, சுவேதகேது, துர்வாஸர், ரிபு, நிதாகார், ஜடபாதர், தத்தாத்ரேயர், ரைவதகர் முதலியவர்கள்



இம்மாதிரியான பரமஹம்ஸர்களே. இவர்கள் மறைவான ஆசாரமுடையவர்களாகவும் தோற்றமாத்திரத்தில் உன்மத்தர்போலவும் காணப்படுவார்கள். இப்படி இருக்கும் பரமஹம்ஸன், 'திரிதண்டம், கமண்டலு, காவடி, ஜலபாத்ரம், சிகை, யக்ஞோபவீதம் ஆகிய இவைகளை ந்திரபூர்வமாக ஜலத்தில் எறிந்துவிட்டு, ஆத்மாவை த்யானம் செய்யவேண்டும். பிறந்த மேனியாக ஒன்றுடனும் ஸம்பந்தப்படாமல் பிரஹ்மத்யான மார்க்கத்தில் நன்றாப் பழகிவரவேண்டும். சுத்தத்தன்மை; பிராண தாரணத்திற்காக சாஸ்திரீய காலங்களில் வயிறுகி பாத்திரத்தில் பிக்ஷான்னத்தை இடுதல்; லாபநஷ்ட ஸமத்வம்; பாழ்வீடு, தேவாலயம், புற்றரை, புதர், மரவேர், குயவன்வீடு, அக்நிஹோத்ரசாலை, நதியில் உள்ள மணல்திட்டு, குஹை, பொந்து, மலையருவி, கட்டாந்தரை, இவைகளில் வஸிப்பது; முயற்சியற்றிருத்தல்; அகங்காரமின்மை; நாராயணத்யானம்; ஆத்மவிசாரம்; பாபத்தை நாசம் செய்தல்; என்றவைகள் அடங்கிய ஸந்யாஸத்திலிருந்து தேஹத்தை விடுபவர்கள் தான் பரமஹம்ஸர்கள். ஓம் தத்ஸத்.

### 16. அம்ருதபிந்து உபநிஷத் (20).

**ம**னம் இரண்டுவிதம். ஆசை நிறைந்ததற்கு அசுத்த மனமென்றும், ஆசையற்றிருப்பதற்குச் சுத்த மனம் என்றும் பெயர். மனிதர்கள் பந்தமோக்ஷங்களுக்கும் இந்த இருவிதமான மனதேதான் முறையான காரணம். விஷயப்பற்று அற்ற மனதால் மோக்ஷம் அடையலாமாகையால் முமுக்ஷுக்கள் எப்பொழுதும் தமது மனதைப்பற்றற்றதாக வைத்திருக்கவேண்டும். மனம் பற்றற்று ஹ்ருதயத்துள் அடங்கி ஆத்மஸ்வரூபத்தை அடைவதே பரமபதம் என்னப்படும். ஹ்ருதய ஸங்கல்பம் ஒயும்வரை மனோ நிரோதம் செய்யவேண்டும். இது தான் ஞானம் என்பதும் தியானம் என்பதும். மற்றவைகள் எல்லாம் வீண் ஆடம்பரப் பேச்சுகள். (ஸுகம் கொடுக்கும் வெளி வஸ்துவாக) எண்ணமுடியாததும், (துக்க வஸ்துக்களைப்போல) தள்ளிவிடமுடியாததும், வாக்குக்கும் மனஸுக்கும் ஸம்ஸாரத்திலிருப்பவர்களுக்கும், தட்டாததும், (அதன் சிறப்பால்) ஸதாத்தியானிக்கத் தகுந்ததுமாக இருக்கும் ப்ரஹ்மம். முற்கூறிய அறிவுண்டாகுங்கால் மனம் இந்தப்பக்ஷபாதங்களிலிருந்து விடுபட்ட பிரஹ்மமாகிறது. ஸ்வரத்தால் யோகாப்யாஸம் செய்து அஸ்வரமாகிய ப்ரஹ்மத்தை ஒருவன் த்யானம் செய்யவேண்டும். இதனால் ஒருவனுக்கு எல்லாவித எண்ணங்களிலிருந்தும் விடுபட்ட வஸ்து விளங்கிநிற்கும். இந்த அகண்டப்ரஹ்மம் எண்ணத்திற்கு அப்பாற்பட்டு பரிசுத்தமாகவுள்ளது. 'அந்த ப்ரஹ்மம் நானே' என்றுணர்பவன் அசைவற்ற ப்ரஹ்மமாகிறான். அனந்தமான இது காரண உதாரணங்களுக்குஅப்பாற்பட்டது, அறிவுக்கு அடங்காதது, ஸ்வயம்புவானது, இதை உணர்ந்து ஞானி விடுபடுவான். ஜனனம், மரணம், பந்தம், அப்யாஸி, முமுக்ஷு, முக்தன் இவை உண்மையில் இல்லை. இது தான் பரமார்த்தமானது.

ஜாக்ரதை, ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுள்ளும் ஒரே ஆத்மா இருப்பதாகக் கருத வேண்டும். இம்மாதிரி மூன்று ஸ்தானங்களுக்கும் அப்பாற்பட்டவனுக்கு மறு ஜன்மமே கிடையாது. சந்திரன் ஒன்றாயினும் ஜலங்கள்தோறும் வெவ்வேறாகி அநேகமாகக் காணப்படுவதுபோல ஒரே ஆத்மாதான் பூதங்கள்தோறும் வெவ்வேறுபோலக் காணப்படுகிறது. ஒரு பானையை எடுத்துச் செல்லுங்கால் அது மாத்ரம் நகர உள்ளிருக்கும் வெளி எப்படி நகராதிருக்கிறதோ அதுபோலவேதான் ஜீவனும். பானைகள் வெவ்வேறாகவிருந்து அடிக்கடி உடைந்துபோக, அதனுள்ளிருக்கும் ஆகாசம் இதை உணராது. ஆனால் ஜீவனோ எல்லாவற்றையும் உணருகிறான். சப்தரூபமான மாயையால் மூடப்பட்டிருப்பவன், அது நீங்கும் வரையில் விடுபடாது, பின்னர் எல்லாம் ஒன்றே என்பதைக்கண்டு தெளிகிறான். சப்த அக்ஷரரூபமாக (ப்ரணவமாக) பரப்ராஹ்மம் உள்ளது, அதன் முடிவில் எது மிகுதியாக விருக்கிறதோ அந்த அழிவற்றதைச் சாந்தி பெறவேண்டுமாகில் ஒருவன் தியானிக்கவேண்டும்.

சப்த ப்ரஹ்மவித்தை, பரப்ரஹ்மவித்தை என வித்தை இரண்டுவிதம். முதலில் தேர்ந்தவன் பின்னதை அடைவான். வேதாதி பரம்பொருள் விஷயமான நூல்களைக் கற்று அறிவு ஒழுக்கம் இவைகளில் பற்றுள்ளவனாய் முடிவில் தான்யத்தை விரும்புபவன் வைக்கோல் உமி முதலியவைகளை எறிந்துவிடுவது போல இந்த நூல்களை நீக்கவேண்டியது. பசு அநேக வர்ணங்களோடிருந்தபோதிலும் பால் ஒரே வர்ணம் தான்; உண்மை ஞானத்தைப் பாலைப்போலவும், ரூபங்களடங்கிய பிரபஞ்சத்தைப் பசுக்கள் போலவும்கருதுவர் பெரியோர். சித்ருவான ஆத்மா பாலுள் மறைந்து கிடக்கும் வெண்ணெய்போலப் பூதங்கள்தோறும் மறைந்துள்ளது, மனதை மத்தாகவும், ஞானத்தைக் கயிறாகவும்கொண்டு, கடைந்து நெருப்புப்போன்ற பரம்பொருளை வெளிப்படுத்துங்கள். 'அகண்ட நிச்சலசாந்த

ரூபமான பிரஹ்மம் நானே' என்று உணரப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் எல்லாவற்றுள்ளும் வஸிப்பதால் வாஸுதேவனாக இருப்பவனும் நானே.

## 17. ஸ்கந்தோபநிஷத் (51).

**ஓ** மஹாதேவா! உங்கள் அருள் நிவலையாலே நான் அழிவற்று, அறிவுவடிவமாகி, மங்களகரனாகி விட்டேன். இதைவிடச் சிறந்தது எது? அந்தஃகரணக் கலக்கத்தால் உண்மை உள்ளபடி. விளங்கவில்லை; அதன் ஒடுக்கத்தாலே ஹரி ஞானஸ்வரூபியாக விளங்க, நானும் அவ்வாறே விளங்கி பிறப்பு நீங்கினேன். இதைவிட மேன்மையானது ஏதேனும் உண்டோ? ஆத்மா நீங்கலான மற்றையவைகள் எல்லாம் ஸ்வப்னம் போன்றவை. ஆத்மானாத்மாக்களை அறிபவன் எவனோ அவன் அழிவற்றவன், ஞானஸ்வரூபன், அவனே மஹாதேவன், ஹரி, ஜ்யோதிக்கெல்லாம் ஜ்யோதி, பரமேச்வரன், ப்ரஹ்மம்: அந்தப்ரஹ்மம் நான், ஸந்தேஹமே இல்லை!

ஜீவனே சிவன்: சிவனே ஜீவன்: இதற்கு ஐயமில்லை. உமியால் மூடப்பட்டிருக்குங்கால் நெல்லாகவிருப்பது, உமி நீங்கில் அரிசியேயாகும். கர்மபந்தம் நீங்கும் வரையில் ஜீவனாகவிருப்பது முடிவில் சிவனேயாகும்.

விஷ்ணு ரூபமான சிவனுக்கும், சிவரூபமான விஷ்ணுவுக்கும் நமஸ்காரம். சிவன் ஹ்ருதயமே விஷ்ணு, விஷ்ணு ஹ்ருதயமே சிவன். இவர்களை ஒன்றாகக் கருதும் அளவுக்கு ஏற்ப எனக்கு ஸந்தோஷமும் மாறா இருப்பும் உண்டாகட்டும். சிவகேசவர்களுள் பேதமேயில்லை.

தேஹம தேவாலயம்; ஜீவன் தேவனாகிய ஸதாசிவன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அஞ்ஞானம் என்ற நிர்மால்யத்தைத் தள்ளி, அவனே நான் என்ற பாவனையுடன் பூஜை செய்யவேண்டும்: அபேதப் பார்வை ஞானம்: மனம் விஷயப்பற்றின்றி நிற்றல் த்யானம்: மனத்தோஷம் நீக்கலே ஸ்நாநம்; இந்திரிய நிரோதம் சௌசம்: ப்ரஹ்மாம்ருத அனுபவமேபானம்:

தேஹதாரணத்தை முன்னிட்டு பிக்ஷை எடுத்து உண்ணவேண்டும். ஒருவனாகத் தனிமையாக வாஸம் செய்யவேண்டும். இரண்டற்ற ப்ரஹ்மத்தில் மாறாப் பாவனையுட னிருக்கவேண்டும். இவ்வாறு நடக்கும் புத்திமான் முக்தியடைவான்.

ஸ்ரீமத் பரம்ஜ்யோதிக்கு நமஸ்காரம்! ஸந்தோஷமும் மாறாநிலையும் வரட்டும். ஓ நரஸிம்மா, தேவேசா உமது கிருபையாலே விருஞ்சி நாராயண சங்கர ஸ்வரூபியாய், அசிந்த்ய, அவ்யக்த, அனந்த, அவ்யய, தேவதாத்மகமாயும் உள்ள ப்ரஹ்மத்தை உள்ளபடி பெரியோர் உணருகிறார்கள்.

அறிவுடையோர் விஷ்ணுவின் பரமபதத்தை ஊனக் கண் எவ்வாறு ஆகாயப்பரப்பைக் காண்கின்றதோ அவ்வாறு எளிதாயும், ஓயாதும் காண்கின்றனர். எப்போதும் விழித்துக்கொண்டிருக்கும் ஞானக்கண்ணை உடைய ப்ராஹ்மணர்கள் இந்நிலையைப் புகழ்ந்து கூறி எல்லோரும் அறிய வெளியிடுகின்றனர். இது தான் மோக்ஷ விஷயமான வேதாக்ஞை என்பது உபநிஷத்.

## 18. தக்ஷிணாமூர்த்தி உபநிஷத் (49).

ப்ரஹ்மவர்த்தத்தில் பந்தீர ஆலமரத்தடியில் ஸனகாதியோகிகள் ஒரு பெரிய யாகம் செய்ய வந்து கூடினர். அப்பொழுது அவர்கள் உண்மையை உணர விருப்பம் உடையவராகி ஸமித்தைக் கையில்கொண்டு, சிரஞ்ஜீவியாக அங்கு இருந்த மார்க்கண்டேயரை மஹாவிநயத்துடன் அணுகி 'இந்த மாறா இருப்பு உங்களுக்கு எப்படி வந்தது? இந்த ஆனந்தம் உமக்குக் கிடைத்தது எவ்வாறு?' என்று வினவினர்.

அதற்கு மார்க்கண்டேயர், 'இவைகள் எனக்குப் பரமரஹஸ்ய சிவதத்வ ஞானத்தால் ஏற்பட்டன' என்றார். அதற்கு அவர்கள், பரமரஹஸ்ய சிவதத்வ ஞானம் என்றால் என்ன? அதற்குத் தேவதை யார்? அதற்கு மந்த்ரம், நிஷ்டை, ஞானஸாதனம், ஸஹாயம், அர்ப்பணம் செய்யவேண்டியது, காலம், ஸ்தானம் எவை?' என்று மறுபடியும் விஸ்தாரமாகக் கேட்டார்கள்.

மார்க்கண்டேயர் கூறலுற்றார். 'தக்ஷிணாமுகராகிய சிவனை நேரிட அனுபவித்தறியும் ஞானமே பரமரஹஸ்ய சிவ தத்வஞானம் என்பது. இவர்தான் ஸம்ஹாரகாலத்தில் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்டு தம்முள்ளிருக்கும் ஆனந்தத்தாலேயே மகிழ்வடைந்து ப்ரகாசிப்பவர். [இங்கு 5 மந்திரங்கள் காணப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றன் முடிவிலும் பின்வரும் தியான ச்லோகங்கள் காணப்படுகின்றன].

1. த்ரிநேத்திரராயும் சந்திரகலாதரராயும், ஸ்படிகம் வெள்ளி இவைகள் நிறத்தை உடையவராயும், கைகளில் முத்துமாலை, அம்ருதகலசம், புத்தகம், சின்முத்ரை முதலியவைகளை உடையவராயும், பாம்பை அரையில் கயிறாகத் தரித்தவராயும், அநேக ஆபரணங்களை உடையவராயும் உள்ள தக்ஷிணாமூர்த்தியை தியானம் செய்கிறேன்.

2. பால்போல வெளுத்து, முக்கண்களையும் உடையவராயும், ஆலமரத்தடியில் சுகர் முதலிய ரிஷிகளால் சூழப்பட்டு கைகளில் சின்முத்ரை, மான்மழு வேந்தி ஒரு கையை முழங்கால்மேல் வைத்துக்கொண்டிருப்பவராயும், பாம்பை அரைஞாணாக்கி, சந்திரகலையை ஜடையில் தரித்தவராயும் உள்ளவர் எமக்குப் பாவசுத்தி (மனத்தூய்மை) யைக்கொடுக்கட்டும்.

3. விபூதியால் வெளுத்தவராயும், சந்திர சூடராயும், தமது கரகமலங்களில் சின்முத்திரை அக்ஷமாலை, வீணை, புஸ்தகம் இவைகள் பிரகாசிக்க யோகக்கட்டுடையவராய் குருபீடத்தில் உட்கார்ந்து அநேக ரிஷிகளால் சூழப்பட்டு நாகாபரணராக விருக்கும் ஈசனாகிய தக்ஷிணாமூர்த்தி எம்மைக் காப்பாராக.



4. கைகளில் வீணை புஸ்தகம் அக்ஷமாலை ஆகிய இவைகளையும் மேகம் போன்ற கண்டத்தையும் உடையவராய், வரந்தருவதில் சிரேஷ்டராய், பெரிய பாம்பை அரைக்கிசைத்தவராய், சுகாதியோகிகள் வந்து அணுக ஆலடியில் அமர்ந்திருக்கும் பரம்பொருளை நாம் தியானிப்போம்.

5. வேதங்களால் கூறப்பட்டவராயும், புஸ்தகம், அக்னி, பாம்பு ஆகிய இவைகள் ப்ரகாசிக்கும் கைகள் உடையவராயும், முத்துமாலை, சந்திரகலை பொருந்திய கிரீடம், இவைகளால் அலங்கரிக்கப்பட்டு ஆலடியில் அமர்ந்திருக்கும் பிரஸன்ன வதனத்தை உடைய பவனீபதியான அக்ஞானம் நீக்கும் பரமகுருவைப் பரமபதம் பெற தியானிக்கிறேன்.

முற்கூறிய பரமரஹஸ்ய சிவதத்வஞானத்திற்கு, அவனே நான் என்ற ஆகாரமாக நிலைத்திருப்பதே நிஷ்டை. அபேத மந்திரத்தை ஜபிப்பதே ஸாதனம். மனதை ஏகாக்ரப்படுத்தி அவன்மேல் நிறுத்துவதே ஸஹாயம்; தேஹ சேஷ்டைகளை ஈச்வரார்ப்பணம் பண்ணுவதே நிவேதனம்: அவஸ்தாத்ரயங்களே காலம். துவாதச ஸ்தானமாகிய ப்ரஹ்ம ரந்த்ர ஸ்தானமே ஸ்தானம்' என்று கூறி முடித்தார் மார்க்கண்டேயர்.

மறுபடியும் ஸனகாதிரிஷிகள் மிகுந்த ச்ரத்தையுடன் 'அவர் உதிப்பது எவ்வாறு? அவர் ஸ்வரூபம் யாது? அவர் உபாஸகர் யார்? என்று வினவினர்.

மார்க்கண்டேயர் சொல்லுகிறார். பூர்ண ஞானமாகிய தகளியில் வைராக்யம் என்ற எண்ணையிட்டு பக்தியாகிய திரியிட்டு ஞானம் என்னும் விளக்கேற்றிப் பார்க்க வேண்டும். மோஹாந்தகாரம் நீங்க சிவன் தாமே தோற்றுவார். அடர்ந்த இருளை நீக்க வைராக்யத்தை அடி அரணியாகவும், ஞானத்தை மேல் அரணியாகவும், உபாஸகன் கொண்டால் பரம் பொருள் ரஹஸ்யத்தை வெளிப்படுத்தும். விவேகம் என்னும் மார்க்கண்டேயர் மோஹம் என்ற யமனால் தகையப்பட்டு தத்வ விசாரம் இன்மை என்ற கயிறுகளால் கட்டுண்டு த்வைதம் என்னும் பயத்திற்கு ஆளாகித் தத்தளிக்கையில் உபாஸகன் உள்ளிருக்கும் ஸ்வஸ்ரூபமாகிய நிஜானந்தம் விவேகம் என்னும் மார்க்கண்டேயரைக் கிளப்பி உயிர் தருகின்றது.

தக்ஷிணா என்பதற்கு புத்தி என்பது பொருள். புத்தி என்னும் கண்ணுக்கு நேரே போதமாவதால் சிவன் தக்ஷிணாமுகர் என்று ப்ரஹ்மவாதிகள் மதிக்கின்றனர்.

ஸ்ருஷ்டிகாலத்தில் விருஞ்சியாகிய ப்ரஹ்மதேவர் சிவனை உபாஸித்து ஸ்ருஷ்டி சக்தியை அடைந்து ஸந்தோஷித்தார். இம்மாதிரி நிலைத்திருக்கும் உபாஸகன் இஷ்டபூர்த்தி அடைந்து ஸுகிப்பான்.

இந்த பரமரஹஸ்ய சிவதத்வ வித்யையைப் படிப்பவன் ஸகல பாபங்களிலிருந்து விடுபட்டு முக்தி பெறுவன்.

ஓம் தத்ஸத்.

# ஷேக்ஸ்பியர்

## SHAKSPEARE (A LIFE SKETCH)

*(Concluded)*

**ஷே**க்ஸ்பியர் நாடகங்களை மூன்று முக்கிய பிரிவாகப் பிரித்தல் கூடும். வேடிக்கை நாடகங்களென்றும், சரித்திரத்தி னின்றெடுக்கப்பட்ட நாடகங்களென்றும், மனிதரது துயரங்களைக் காட்டுவனவென்றும் மூன்றாகும். ஆனால் இங்ஙனம் பிரிக்கப்பட்டவை ஒன்றோடொன்று ஊடுருவிச் செல்லுவதால் இவ்விதப் பிரிவு எல்லா நாடகங்களிலும் பயன்படாது. ஆகையால் உற்று யோஜிக்குமிடத்து ஒருவிதமான பிரிவும் பிரயோஜனமில்லை. மாரிகாலக்கதை என்னும் நாடகம் வேடிக்கையானது என்று சொல்லுகிறோம். என்றாலும் அதிற் படுந்துயரம் மனதை முள்ளிட்டுக் கிழிக்கிறது. ஷேக்ஸ்பியர் நாடகங்களிலுள்ள பையன்களிலெல்லாம் அதிகச் சிறந்த மாமிலியஸ் என்னும் பையன், இந்நாடகத்தின் முதலிலேயே இறந்து விடுகிறான். இதை யென்னென்று சொல்வது. என்றாலும் வேடிக்கைக் கதைகளுள் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு அனேகர் வேடிக்கை நாடகத்தி லிருப்பவரும், துயரப்பட்ட நாடகத்திலிருப்பவரும், அனேகவிஷயங்களைப்பற்றி ஒரேமாதிரி பேசுகிறார்கள். வீண் அமக்களம் என்னும் நாடகத்தில் பெனிடிக் என்பவன் 'ஒருவன் சாமுன்னர் தனக்குத் தானே ஒரு கல்லறை கட்டிக்கொள்ளாவிட்டால், அவனிறந்ததற்காக மணி யடிப்பதும், அவன் மனைவி யழுவதையும் தவிர வேரு எவ்விதமாயும் மனிதர் ஞாபகத்திலிருப்பதரிது என்று சொல்லுகிறான். அப்படியே ஹாம்லேட்டும் நம்மை எவ்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் கோவில் கட்டினால்தான் ஞாபகமிருக்கும். இல்லாவிட்டால் விளையாட்டுக் கருவிகளை விசிறி விடுவதுபோல் நம்மையும் வெகு சீக்ரத்தில் விசிறிவிட்டு, முற்றிலும் மறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறதையும் பார்க்கலாம். என்றாலுமிவை முதலாவது வேடிக்கைக் கதையினின்று இரண்டாவது துயரக்கதையினின்று மெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே ஷேக்ஸ்பியர் நாடகங்களில் வேடிக்கையும் விசாரமும் அதிக வித்யாஸமின்றி, உலகிலுள்ளது போல் ஒன்று சேர்ந்தே யிருக்கின்றன.

வெரோனு நகரத்திருவா என்னும் நாடகத்தில் புரோட்டியஸ் என்பவன் மிகவும் போலியனாயிருந்த போதிலும், கதை நன்றாய் முடியும்பொருட்டு அவ

னுக்கு ஜூலியாவை மணம் புரிவிக்கிறார். என்றாலும், பன்னிரண்டாவது இரவு என்னும் நாடகத்தில் வயோலா, என்பவளது உண்மையும், அன்பும் அறிவு மழகுங்காணுங்கால் அவள் மனம்போல மணம் புரிவித்தது சரியென்றே தோன்றுகிறது. இந்நாடகத்தில் வானவில் எப்போதும் பிரகாசித்துக்கொண்டு, வாழ்நாளே ஒரு வேடிக்கை யல்லது ஒரு கனவு என்று நினைத்து ஓடியாடித்திரியும் விஷயமாயிருக்கிறது. அதிலுள்ள எல்லோரும் சந்தோஷமாயிருப்பதால் சோம்பலாயும், ஒருவரை யொருவர் காமுற்றுத் திரிபவராயுமிருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் தனக்கு வேண்டாத காரிய புருஷர்களைத் திடீரென்று தள்ளிவிடுகிறார். இது விஷயமாக மாரிகாலக்கதை என்னும் நாடகத்தில் ஆன்டிகோனஸ் என்பவனைத் தள்ளிவிட்டவிதம் பார்க்கலாம். அவனைக் கரடி ஒன்று தூரத்திக்கொண்டுபோய் கொன்று கிழித்துவிடுகிறது. இப்படிச்சிறிய நாடகங்களிற் சாதாரணமாய்ச் செய்வித்தாரேனும் தனது சிறந்தவற்றில் சிறிதுந் தவறாது, வெகு சாதுர்யமா யமைத்திருக்கிறார். ஒதெல்லோவைத் தன் மனதிற்கிணங்க பக்ஷமும், தயாளமும், தைரியமும், பெருந்தன்மையு முடையவனாக்கி யிருக்கிறார். வெனிஸ் நகரத்து அதிகாரியாகிய பிரபான்டோ, அனேக மனிதர்களைக் கூட்டிக்கொண்டு, ஒதெல்லோ தன் மகளைக் கூட்டிக்கொண்டு போய்விட்டானென்று எதிர்த்து வரும்போது, ஒதெல்லோவினுடைய தைரியமும், பெருந்தன்மையுங் காட்டப்படுகின்றன. பிரபான்டோவுடன் தெருச்சண்டை யிழுப்பதிருவருக்கு மிழிவு என்றும், பிரபாண்டோவினது வயதும் பெருமைக்கும் யோஜித்து, இரண்டு வார்த்தையில் தன் மரியாதையுங் கெடுத்துக் கொள்ளாமல் பேசுவது எவ்வளவு மனப்பெருமையும், குணகீர்த்தியும், பெருந்தன்மையுங் காட்டுகிறது. இப்படிப்பட்ட ஒதெல்லோவிற்குக் கஷ்டமினி நேரப்போகிறது. அதற்காக ஷேக்ஸ்பியர் அயாகோ என்பவனை யுண்டுபண்ணுகிறார். ஒன்றின் பின் ஒன்றாய், ஒழுங்காய்க் கொண்டுவந்து இச்சிங்கத்தை வலையிற் பிடித்தாற் போலப் பிடிக்கிறார் இவ்விதமாய் ஆழ யோஜித்துக் கெடுதிசெய்வது அவருக்குப் பிடியாது, அவருக்குத் தெரியவும் தெரியாது. சண்டையாயின் எதிரியோடு சிங்கம் போல் போர்புரிபவருக்கு இவ்விதச் சில்லரை விஷயத்தில் கஷ்டமுண்டாகிறது என்றாலும் கடைசிவரை தன் பெருங்குணமும், உயர்ந்த மனமும் தாழ்வுபடாமலே யிருக்கிறார்.

ஆன்றணியும் கிளியோபேற்றவும், என்னும் நாடகத்தில் கிளியோபேற்றா, அகஸ்டஸ் ஸீஸர் கையிலகப்பட்டபோது, ஒருவிதமான தீங்குஞ் செய்வதில்லை யென்று சொல்லியும், கிளியோ பேற்றா அவனைத் தனது எஜமானென்று சொல்லி அவனைக் குறிப்பாகப் பார்க்கிறாள். இல்லை இல்லை என்று ஒருமாதிரி சொல்லிவிட்டுப் போவதைப்பார்த்து உடனே, இவனை வசப்படுத்துதல் முடியாது, நாம் உயிர் பிழைத்தால் மானமிழத்தல் வேண்டுமென்றுடனே கண்டுபிடித்து விஷப்பாம்பைத் தன்னைக் கடிக்க விட்டு இறந்துபோகிறாள். இவள் தன் காலமெல்லாம் வெகு உல்லாஸமாயிருந்து அரசர்களையு மரசர் குடிகளையு மாண்டு வந்தவள் உடனே இக்குறிப்பைக்கண்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டது என்றும் ஆச்சரியப்படக் கூடியதே. இது ஷேக்ஸ்பியர் சாதுர்யத்தின் சிகரத்திற்குச் சிகரம் என்று சொல்லலாம். இதே நாடகத்தில், ஆட்டம் ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கும், திரும்பவும் ஆபிரிக்காவுக்கும் மின்னல்போல பாய்கின்றது. வழியில் ஆசியாவிலும் போய் வருகிறது. இதிற் காட்டிய திறமையும், வர்ணனையினுடைய செழிப்பும் சிறப்பும் யோஜிக்குமிடத்து, அன்பைப் பற்றிய இக்கவியின் நாடகங்களெல்லாவற்றிலு மிதுவே சிறந்ததென்று சொல்லச் சிறிதுமையமில்லை.

ஷேக்ஸ்பியரது நாடகங்கள், உலக நடவடிக்கை போலவே அத்யந்த மிருப்பதுபற்றி ஒரு சிறு விஷயம் ஹாம்லெட் என்ற நாடகத்திலிருந்து காணலாம். அஸ்ரிக் என்பவன் லேயார்டிஸ் கடிதத்தை ஹாம்லெட்டுக்குக் கொடுப்பதைவிட வேறு வேலையொன்றுமில்லை என்றாலுமவனை ஷேக்ஸ்பியர் வெகு குறிப்பாகக் காண்பித்திருக்கிறார். அவன் அரண்மனைகளில் முகஸ்துதியும் வீண்பேச்சும் பேசிக்கொண்டு, வெயில் நாளில் பறந்து, மழைகாலத்திலிறந்துபோம் வண்ணாத்திப் பூச்சிபோல் அங்குமிங்கும் பறந்துபோகும் வீணர்களிலொருவன். அவனை இங்ஙனம் குறிப்பிட்டதுபற்றியே அரண்மனையைப்பற்றிய விஷயங்கள் அதிக வுண்மை வாய்ந்திருக்கின்றன. இனி வேண்டாத காரிய புருஷரையுங் கொணர்ந்து, அவர்களுக்கு உயிர் கொடுத்து நாடகத்தி லாட்டிவைக்குந் திறமுடையரென்பதுபற்றி சரிக்குச்சரி என்னு நாடகத்தில் பார்னடயின் என்னுங் கைதியைக் குறிப்பிட்டதில் காணலாம்.

இனி ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் பெண்களை எவ்விதமாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்று காண்



போம். இவ்விஷயத்தின் முக்கிய மென்னவென்றால், ஒவ்வொரு மனிதனுடைய பெருமையும் பெருந்தன்மையும், அவன் தன் தாய், தங்கை, தமக்கையர், அவர்களினின்று மற்றப் பெண்ணாய்ப் பிறந்தவரனைவரையு மிருந்த மரியாதையுடனும் உள்ளன்புடனும், உதவி புரிந்து காப்பாற்றுதலாலும், பெருந்தன்மையுடையவனாய் நடந்துகொள்ளுவதாலும் பெரியோனாவன். ஷேக்ஸ்பியர் முதலிலிருந்தே மார்லோ முதலானவர்களுக்கு முடியாததாய் இவ்விஷயத்தில் பெண்ணரசியரை மேன்மைப்படுத்தி யெழுதியிருக்கிறார். கிரீக் தேசத்திலெழுதியவர், பெண்களைப்பற்றி நாடகங்களில் சரிவர எழுதல் முடியாது போயிற்று. மார்லோ முதலானவர்களுக்கு, தக்க பழக்கமில்லாமல், பெண்களில் பெரியோரும் பெருந்தன்மை யுடையோரையும் வரைதல் முடியாமல் போயிற்று. ஷேக்ஸ்பியர் ஒருவரே, இவ்விஷயத்தில் தக்கவாறு இவர் குணங்களையுங் குணாதிசயங்களையுங் குறிப்பிட்டிருக்கிறார்.

ரோசலிண்டு, இமோஜன், வையோலா, டெஸ்டிமோனா, ஒபிலியா, முதலியவருடைய குணசிரேஷ்டங்களை யாங்காங்கு அவர் சரிதத்தைக் கூறும்போது வேண்டியவாறு எடுத்துரைப்போம். இப்போது சில குணசீலரைப்பற்றியே சொல்ல முடியும்.

ஹென்றி யெட்டாவர் என்பவரது ராணியாகிய காதரயின் என்பவள் பெண்ணிற் சிரேஷ்டமானவருள் ஒருவள். இவள் உண்மையும், பொறுமையும், மனையாளுக்கான குணச்சிறப்பத்தனையும் வாய்ந்தவள். தன் கணவன் இவளால் தனக்கு ஆண் குழந்தைகள் பிறக்கவில்லையென்று இவளை மணம்புரிந்தது, தகுந்ததன்றென்று தள்ளி வைக்கும்போதுங்கூட அவரது நன்மையே கருதுபவளாயும் உல்ஸி போன்ற மற்றவர்கள் அரசனைத் தூண்டிவிட்டு இவளிடம் வந்து அரசன் ஆணைப்படி அப்படித் தள்ளிவைக்கச் சம்மதம் கேட்கும்போது அவர்களை உதறி உதறிப்பேசி, தான் ராஜாத்தியென்று அக்கெட்ட மனசுள்ள பாதகருக்குக் காண்பித்தும், தன் கணவனுக்கெதிரே மிகுதியும் பணிவுள்ளவளாயிருந்தாள். ஆகவே அவ்வரசனே இவளில் சிரேஷ்டமான பெண்ணரசி யுண்டென்பவன் பொய்யன் என்று அவளை வியந்து பேசும்படி நடந்து கொண்டாள்.

இனி ஜூலியஸ் ஸீஸர் என்னு நாடகத்தில், புருட்டஸின் மனைவியாகிய போர்ஷியா என்பவளுமித்தகைய பெருமாட்டியேயாம். அவள் மற்றப் பெண்கள் போலில்லாமல், மனித தைரியமும், குணமாட்சிமையுமுடையவள். ஆகவே அவள் புருஷன் தான் செய்யும் விஷயங்களைக் குறித்து இவளுடன் யோஜித்துக் கொள்வதுண்டு. ஸீஸர் கொடுங்கோல் மன்னனாக முயலுகின்றானென்ற வுடன் அவரைக் கொல்ல ஏற்பாடு செய்யும்போது அது விஷயம் தன் மனைவிக்குச் சொல்லிப் போகிறான். அச்சமயத்தில் அவள் அரசாங்க ஸபைக்குப்போன கணவனுக்கு ஒரு கெடுதியும் வரப்படாது என்று மனம் பதைத்துக் கொண்டு எவ்வளவு தைர்யசாலியா யிருந்தாலும், அன்பு மேலிட தன் கணவனைப் பார்த்துவா ஒரு வேலைக்காரனை அனுப்புகிறாள். ஆனால் அவனுக்கு இன்ன விஷயம் என்று சொல்லாமல் நீ அச்சபைக்குப்போய் என்று ஆரம்பித்துத் தன்மன ஆவலில் என் இன்னம் போகாதிருக்கிறாய் என்று சங்கதி முழுவதும் சொன்னவள்போல் பதைபதைப்பது அவளன்பையும், ஆவலையுங் காண்பிக்கும். பிறகு தன் கணவன் போர்க்களத்தி லிறந்துவிட்டானென்றதும் தன் தகப்பனது பெருமையையும் தன் கணவனது பெருமையையு முத்தேசித்து வேலைக்காரரப்புறம் போயிருக்கையில் நெருப்பை விழுங்கி யிறந்து போனாள்.

இனிப் பெண்ணாய்ப் பிறந்தவரில் தெய்வகுணமேயுடையவளெனப்பட்ட கார்டீலியாவைப்பற்றிச் சில சொல்லுவோம். தன் தமக்கையர் புருஷரோடுசேர்ந்து கொண்டு அரசனாய தம் தகப்பனை மிகுதியும் பங்கப்படுத்தி மானக்குறைவு செய்யுமிடத்து அத்தகப்பன் தன்னை யதிகமாய்ப் பிரியத்துடன் நடத்தாவிட்டாலும், தான் பிரான்சு தேசத்தரசனாய தன்கணவனுடன் சந்தோஷமாயிராமல், இத்தகப்பனுடன் இருந்து அவர் படுங் கஷ்டங்களை யெல்லாம் அவருடன் பட்டு, அவர் கடைசி காலத்தில் தன்னாலியன்றமட்டும் அவருக்காறுதலு முதவியுஞ் செய்து வந்தாள். இது பொறாமல் அவள் தமக்கையர் இவளையு மிவள் தகப்பனையும் தங்கள் தகப்பனென்றும், தங்கள் தங்கையென்றும் பாராமல் கொன்று விடுகிறார்கள். ஆனால் தீமை விளைப்பவரொன்று முருப்படுவதில்லை. ஆகவே இவரொவ்வொருவராய்ப் பட்டழிகிறார்கள். இக்கதையில் இத்தகைய தெய்வகுணம் வாய்ந்ததாகக் கார்டீலியாவைக் குறிப்பிட்டது ஷேக்ஸ்பியர் பெண்களில் கெட்டவர்களிருந்தாலும், கைகூப்பிக் கும்பிடக்கூடியபடி பெருந்தன்மையுங் குணகீர்த்தியு முடையவரிருக்கிறார்களென்று காண்பிப்பது, அவர் பெண்களென்றா லெவ்வளவு மரியாதையுஞ் சிறப்பும் வைத்து எவ்வளவு பெருமையாயவர் குணங்களைப் பாராட்டி வந்தாரென்று தெரிய வருகிறது.

இவ்விதமாய் ஆண் பெண், அரசர் பாலர், பெரியோர் சிறியோர், குணசீலர், சண்டாளர் முதலிய அனைவரையு மாராய்ந்துற்றுணர்ந்து ஒரு விதமான குணத்தையுந் தவறவிடாது தன் நாடகங்களிலேயே உலகத்திலுள்ள பலவிதமான பண்பையு மொன்று சேர்த்து,எப்பொருளினும்,அறிவிற் சிறந்ததால்மெய்ப்பொருள் கண்டது அவரது மாட்சிமையாகும். இது பற்றியே மற்ற கவிகளிற் குற்றமின்னது குணமின்னது என்று சீர்துக்கிக் குணமதிகப்பட்டதென்று அவர் கவிகளைக் கற்பதுபோலில்லாமல், அத்தனையும் பழுது சிறிதுமின்றிச் சிறந்த கீர்த்தி வாய்ந்தவையென்று புகழ்ச்சியினால் மட்டுமல்ல தினந்தோறும் எவ்விடத்திலும் எல்லாவிதமானவரும்,எத்தொழில்புரிபவராயினுந் தமதுணவுபோல் இவரதுநாடகங்களை வாங்கிப்படித்து வருவதாலும், இவரோடு பழகினவர் மட்டுமல்ல, உலகிலெல்லாவிடத்தில் எல்லா ஜாதியாரு மொருங்கே யிவரைப் பிரசித்தி மேன்மை யடைந்தவரென்று சொல்லுதலாலும், அநேக நூற்றாண்டுகளாயும் மனிதரது அறிவு மென்மேலும் விர்த்தியடைந்துவந்தும், அவரது எண்ணங்கள் பல விஷயங்களில் மாறுபட்டிருந்தபோதிலும், ஷேக்ஸ்பியரது அறிவின் ஆழத்தையு முயர்வையும் அறிதல்கூடாம லிருப்பதாலும், அவரைப் பற்றியு மவர்நாடகங்களைப் பற்றியு மெண்ணிறந்த புத்தகங்கள் அநேக சிறந்த கிரந்த கர்த்தாக்களெழுதியிருப்பதாலும், அவரது குணசீலரை நாம் அநேக விஷயங்களுக் கடிக்கடிக் குறிப்பிடுவதாலும், அவர் வார்த்தைகளும் வாக்கியங்களும், ஆங்கிலபாஷையிலெழுதப்பட்ட புத்தகமதனைத்தினிலு மாங்காங்கே சேர்த்தெழுதப்பட்டிருப்பதாலும் பழமொழியாகப் பயன்படுவதாலும், கவிகள், அரசாட்சி செய்யுமன்னர், மந்திரிகள். முதலியோர் மனிதரைத் தம் வழி செலுத்த வாக்கு வல்லமையை உபயோகிக்குங்கால் ஷேக்ஸ்பியரது வாக்கியங்களையும் அவரது பிரயோகங்களையும் கையாண்டுவருதல், இக்காலத்திலு மெல்லாவிடத்திலு மெவ்வண்ணம் ஷேக்ஸ்பியர் மனிதர் மனத்தைக் கவர்ந்து, அவரறிவை அதிகரிப்பித்து நல்வழி செலுத்தி வருகிறாரென்பதற்கு இவையே ஏராளமான அத்தாக்ஷியாகும்.

இதனாற்றான், இதுவரை இவரை கடலுக்கும், மலைக்கும், சூரிய சந்திர நக்ஷத்திர மண்டலங்களுக் கொப்பிடும்போதும் இவரது பெருமை அத்தகைய பெருமையையு மெளிதிற்றாங்கி நிற்கின்றது. இதுபற்றியே இனி எவ்வளவு காலமாயினும் ஆங்கிலேய பாஷையிலும் மற்றுலகிலுள்ள எல்லாப் பாஷையிலும் மனிதர் தம்மியர்க்கையின்படி மேன்மேலு மறிவு மிகுந்தவராகவாகச் சிறப்புப்பெற்றாராகிலும் அவர் அறிவினை விர்த்தி யாக்குவதோர் முக்கியமான சாதனமாகும். அவற்றின் எல்லையில்லாப் பொருளும், வாடாத வாய்மையுங், கவித்திறமு மிவ்வகைச் சீர்த்தி செய்யுமென்பது திண்ணம்.

—*A Master of Arts.*

# பெரும்புயல்

## THE TEMPEST

இத்தாலியாதேசத்துக் கீழ்க்கரை யோரத்தில் மிலான் என்னும் பட்டணத்தில் **பிராஸ்பெரோ** என்னும் பிரபு அரசாட்சி செய்துவந்தார். இவர் மிகுந்த பராக்கிரமசாலியாய் இருந்த படியினால், அவர் அரசாட்சி எங்கும் பிரபல்லியமாய் நாடெங்குஞ் செழித்து, நலமெங்கு மிகுந்து, ஜனங்கள் பெருகிச் சந்தோஷித்து இவ்விதமாய் குடியுயர கோனுயர்ந்தது. ஆனால் அரசனுக்கு **மிராண்டா** என்னும் பெண்ணைத்தவிர வேறு சந்ததியில்லை. என்றாலும் நம்முள்ளிருப்பதுபோல் ஆண்பிள்ளைகள் மட்டுமே யன்றி, பெண்பிள்ளைகளும் பட்ட மேறுதலால், இப்பெண் அவருக்குப் பின்பட்ட மேறுதற்குரியவள். ஆகவே அரண்மனையில் மிகுந்த சிறப்புடனும், செல்வாக்குடனும், அவள் வளர்ந்து வந்தாள்.

அக்காலத்தில் அநேகர் மாந்திரீக விஷயமாக அநேக நூதன விஷயங்களை அறிந்து கொள்ளும்படி அதைப்பற்றிய நூற்களை விசேஷமாய்க் கற்றுவந்தார்கள். **பிராஸ்பெரோ** அரசாட்சியிலெவ்வளவு பராக்கிரமமுடையவரோ அவ்வளவு சகல கல்வியிலுந் தேர்ச்சியுடையவராதலின் இப்புது விஷயமென்னவென ஆராயப்புகுந்து நாளுக்குநாள் அதிலேயே ஊக்கமதிகமாய் ஊன்றி, தன் ராஜாங்க நடவடிக்கைகளை தன் தம்பியாய **அன்டோனியோ** விடம் ஒப்புவித்தார். **அன்டோனியோ** சாதாரணமாக நற்குணம் வாய்ந்த மனிதன். ஆனால் அநேகருக்கு அவரிருக்குமிடம், கிடைக்கும் சாவகாசம் முதலியவற்றால் அவர் குறைநிசயங்கள் ஏற்படுவதால், தன் தமையன் இவ்விதமாய் உலகவிஷயங்களைவிட்டு விலகி அரசாட்சியைக் கவனியாமல் மாந்திரிகங்கற்று வருவதனால், தானே அதிகாரம் செலுத்துவதுடனும், அரசனாகவே யிருக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் நாளுக்குநாள் அவன் மனதில் குடிபுகுந்து அவன் நற்குணத்தை யெல்லாம் சிறிது சிறிதாகப் போக்கி பிராஸ்பெரோவுக்கே ஒரு கெடுதி சூழச் செய்வித்தது. ஆகவே இதைச் செய்து முடிக்கும்படி, ராஜாங்கத்தில் தனக்கு வேண்டியவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங் கொடுத்து, வேண்டாதவர்களை சிறிது சிறிதாக நீக்கியும், மற்றுமுள்ளவர்களை ஆங்காங்கே ஆசை வார்த்தைசொல்லி சொற்ப நன்மை முதலியன செய்து முற்றிலும் தன் வசப்படுத்திக்கொண்டான். விரிந்து அகன்று நாற்புறமும் வேரூன்றி



கிளைகளைத் திசையிலு மடர்ந்து நிறைந்து நிற்கும் ஆலவிருக்ஷமும், அதனடியில் வளரும் கரையான் புற்றினால் நாளடைவில் வேறற்று வீழ்ந்து போகிறது. மாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த அறிய பெரியதொரு அரண்மனையும், அதன்மேல் பாசி படர்ந்து, பின்னர் பார்பாராய்ப் பிளந்து பாழடைந்து போவதுண்டு. அவ்வண்ணமே, **பிராஸ்பெரோ** தான் எவ்வளவு பராக்கிரமமுடையவனாயிருந்தாலும்,குடிகள் தன்னை யெவ்வளவு அதிகமாய் அன்பு பாராட்டி வந்தாலும் அதையே பெரியதாய் எண்ணி இவ்விதம் தன் தம்பி கையில் அரசாட்சியை ஒப்புவித்துவிட்டபடியால், அவனுஞ் சிறிது சிறிதாய் அதிகாரத்தைக் கவர்ந்து, **நேப்பிள்ஸ்** நகரத்து அரசனுக்குச் சிற்றரசனாயிருந்து தன் தேசத்தை அவனுக்குக் கீழ்ப்படுத்தி, கப்பம் கட்டிவருவதாய் ஏற்பாடுபண்ணி, அவ்வரசனை மிலான் பட்டணத்திற் கெதிராக படையெடுத்துவரச் செய்தான். மிலான் ராச்சியமோ சுயராச்சியமாயிருந்தது. அதாவது அவ்வரசாட்சி மற்ற ஒருவருக்குங் கீழ்ப்படாமலும்,அத்தேசத்தவரால், அத்தேசத்திலுள்ளவர்கள் நன்மையே முக்கியமாய்க் கருதி நடத்தப்பட்டு வந்தது. இப்போது **அன்டோனியோ** செய்த ஏற்பாடு என்னவென்றால்,' தான் முடிசூட்டிக்கொள்ள வேண்டுமென்பதற்காக, தன் சுயநயம் பாராட்ட தன்னாட்டை மற்றொரு அரசனுக்குக் கீழ்படுத்தி அவன் கட்டளைக்குள்பட்டு நடத்தும்படியாயிற்று. **நேப்பிள்ஸ்** அரசன் இவ்விஷயத்தைக்குறித்து]சந்தோஷப்பட்டு உடனே படையெடுத்து வந்தான். **அன்டோனியோ** அவருக்குதவியாய் கோட்டை வாசல்களை துரோகமாய்த் துரந்துவிட்டு, ஊரை எளிதில் பிடித்து விடும்படி செய்தான். பின்னர் கூடுமானால் பிராஸ்பெரோவையும் அவன் குமாரத்தியையும் கொல்லவே ஏற்பாடு செய்வதாயிருந்தான். ஆனால் அவர்களிருவரைப் பற்றியும் ஜனங்கள் நினைத்திருந்த நல்லெண்ணமும், அவர்களைக் கொன்றுவிடுவதால் தன்னை யெல்லோரும் வெறுக்கவேண்டி வருவதையும் உத்தேசித்து, பழுதுபட்ட கப்பல் ஒன்றில், ஓட்டத்துடுப்பும் பாய் மரமுமொன்றுமின்றி, திசைகாட்டுங். கருவியுமின்றி, திக்கற்று திசையற்றுப் போய்விடும் வழியாய் இரவிலேயே அவர்களிருவரையும் ஏற்றி கடல் மார்க்கமாய் அனுப்பிவிட்டான். அன்டோனியோ இப்படிக் கப்பலைத் தயார் செய்யச் சொல்லி ஏற்படுத்தின ஆள் உண்மையாகவே பிராஸ்பெரோவுக்கு வேண்டியவனாயும், அவனுக்கு என்ன கெடுதி வருமோ தெரியவில்லையே, நம்மால் மற்ற யெதுவுஞ் செய்ய முடியாவிட்டாலும் இந்த கடைசி நேரத்திலாவது இயன்ற உதவி செய்வோமென்று, யாருக்குந் தெரியாமல் பிராஸ்பெரோ எல்லாவற்று மதிகமாய் எண்ணியிருந்த மாந்திரீக புஸ்தகங்களையும், அவர்களிருவருக்கும் சில நாட்களுக்கு வேண்டிய உணவும் இரகசிமாய்ச் சேர்ப்பித்துக் கப்பலில் வைத்திருந்தான்.

ஆகவே தகப்பனும் குமாரத்தியும், இராப்பொழுதில் மிகுதியும் பழுதுபட்ட ஒரு கப்பலிலிருந்து, கடல் அலை மோதின பக்கமெல்லாம் காற்றடித்த திசையெல்லாம் அல்லாடி, இருட்டிலும், மழையிலும், குளிரிலும் வருந்தி, விடியற் காலையில் நிர்மானுஷ்யமான தீவொன்றில் கரையில் வந்து சேர்ந்தார்கள். பிராஸ்பெரோ அந்தக் கப்பலிலிருக்கும்போது தன் தம்பியின் துரோகத்தை நினைத்து வருத்தம் சகிக்க மாட்டாமல், இப்பாழும் உயிர்தான் என்ன வென்று உயிரை வெறுத்து கடலிலிறந்துவிடத் தான் அடிக்கடி துணிந்தார் என்றாலும் தன்னுடன் தன் புத்திரியிருந்தபடியால் தான் அப்படி இறந்துவிட்டால் தன் மட்டில் சவுக்கியமாயிருப்பதன்று அந்தப் பைங்கிளியாகிய பெண்மணி யென்னவாளென்று அடிக்கடி நினைந்து அவளுக்காக தானும் உயிர் பிழைத்து, தக்க சவுகரியந் தேடினார். இது விஷயத்தை பின்னால் மிராண்டாவிடம் ஒருதரம் அவர் சொல்லுகையில் அவள் ஐயோ! அந்தச் சமயத்தில் உங்களுக்கு நான் எவ்வளவு தொந்தரவா யிருந்திருப்பேன். உங்கள் சவுகரியந் தேடிக்கொள்ளக் கூட முடியாத சமயத்தில் எனக்குஞ் சேர்ந்து என்னையுங் கவலையாய்ப் பார்த்துக்கொள்வது எவ்வளவு கஷ்டமென்று அவள் வருத்தப்பட்டாள். அப்பொழுது பிராஸ்பெரோ அப்படியன்று குழந்தாய்! உன்னால்தான் உனக்கென்றுதான் நானும் உயிர் பிழைக்க வேண்டியிருந்தது. ஆகவே உன்னால் தான் நான் உயிர் பிழைத்திருக்கிறேன் என்று என் உயிரைக் காப்பாற்றின உன்னைக் கொண்டாட வேண்டுமென்று சொன்னார். என்ன விது. இது உலகில் யாவரும் அனுபோகத்தில் அறிந்துகொள்ளக் கூடியதே. புருஷனை யிழந்தவள், பிள்ளைக்காக உயிர் பிழைத்திருக்கிறாள். மற்றபடியும், **வேர்ட்ஸ்வர்த்** என்னுங் கவிஞர் சொல்லுவதுபோல், மனிதர்க்கு வயது ஆக ஆக உயிர் வாழ்வின் ஊக்கம் குறைவுபடுகிறது. அப்படி ஊக்கம் குறைவுபட்டு பிணம்போல் கிடந்து மூச்சு மட்டும் விட்டு நெட்டுயிர் போலுற்ற

பிணம்போ லில்லாதிருப்பது, குழந்தைகளினுலும், அவர்கள் வேடிக்கைகளையும், அவர்கள் இனி எவ்வழி திரும்புவார்கள், அவர்களுக்கு வேண்டிய விஷயங்களென்னவென்று நினைத்து தக்க முயற்சி யெடுப்பதால் மட்டுமே மனிதனுக்கு உயிர் வாழ்வின் ஊக்கம் வருவதால் மக்கள் பேறினும் மனிதற்குக் கடவுள் தரும் பெரும்பயன் வேறொன்றுமில்லை யென்று அக்கவி சொல்லி யிருக்கிறார்.

இதுநிற்க, அவர்கள் வந்து இறங்கிய தீவு கடலின் நடுவே, எவ்வித தேசத்திற்கும் வெகுதூரத்திற் கப்பாலிருந்தது. அதில் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பாக, மாந்திரீகத்திற்காக தன் தேசத்தினின்று தள்ளப்பட்ட ஸைகோராக்ஸ் என்னும் அம்மையார் கிழவி ஒருத்தி இருந்து வந்தாள். அவள் அந்தத் தீவிற்கு வந்தபொழுது கற்பிணியா யிருந்து, அதற்கு வந்த பின்னர் மனிதவுருவில்லாமல் அசங்கியமாய், அறுவறுப்பான ஜெந்துபோன்ற குழந்தை யொன்று பிறந்தது. அவர்களிருவரும் அந்த விடத்தில் தனியாசு போலிருந்து கொண்டு வந்தார்கள். இந்த ஸைகோராக்ஸ் மூக்கு கட்டைவிரலி விடித்து உடல்முழுவதும் சக்கிரம்போல் வளைந்துபோன குடுகுடு கிழவி; யென்றாலும் தன் மந்திரசக்தியினுல் இவள் அந்த தீவிலுள்ள பூதங்களை யாண்டு வசப்படுத்தி வந்தாள். காலையி லெழுந்ததும், அல்லது அனேகமாய் இரவிலேயே யிவள் அண்டங்காக்கையி னிறக்கை கொண்டு, சதுப்புநிலம், இலை முதலியன அழுகி வீச்சம்வீசும் குளங் குட்டைகளிலும் சில மரங்களி னிலைகளிலும் சேர்ந்து நிற்கும் பனித்துளிகளைத் தடவி யெடுத்து மருந்து சேர்த்து மாந்திரீகத்துக்கு வைத்துக்கொள்வதுண்டு. இதுபோல மற்ற அறுவறுப்பான இடங்களிலெல்லாம் தனக்கு மருந்துவேண்டிய விஷயங்களுக்கு அத்தீவில் உள்ள பூதங்களை அடிக்கடி ஏவி வருவதுண்டு. அப்பூதங்கள் நல்ல பூதங்களென்றும் கெட்ட பூதங்களென்று மிரு பிரிவினவா யிருந்தன. அதில் கெட்ட பூதங்கள் ஸைகோராக்ஸ் சொல்லியபடியெல்லாம் செய்யத் தயாரா யிருந்ததால் அவைகள் சௌக்கியமா யிருந்தன. நல்ல பூதங்களுக்கு அது மிகவும் கெட்டகாலமா யிருந்தது. இப்படி நல்ல பூதங்களில் ஏரியல் என்பதொன்று. அது இந்த அம்மையார் கிழவி சொல்லுவன வற்றிற்கெல்லாம் உடன்படாமல், அவளிட்ட அறுவறுப்பான வேலைகளைச் செய்யாத படியினுல், ஆலமரத்தை யொன்றைப் பிளந்து அந்தப் பிளப்பில் ஏரியலை குட்டையிலடைத்தாற் போல பலமாயிருக்கி மந்திர சக்தியால் அடைத்து விட்டாள். அது அவ்விடமிருந்து மிகுதியும் கஷ்டப்பட்டது. பிறகு சிறிது நாள் சென்றபின் அந்த அம்மையார் கிழவியும் இறந்துபோய் விட்டாள். அவள் பிள்ளையான மிருக மனிதனுய் காலியனுக்கு மந்திரமும் மாயமும் ஒன்றுந்தெரியாது. கிழவியும் ஏரியலை விடுவியாமலே யிறந்துபோய் விட்டாள். ஆகவே அந்தப்பூதம் கரடிகளும் புலிகளும் கூட மனமிளகும்படி, காடெங்கும் அதிறி எதிரொலி பிரபலித்து முழங்கும்படி, ஐயோ நான் உதவியன்றி இங்கே அவலமாய்ப்போகிறேனே என்று பிரலாபித்து அழுது கொண்டிருந்தது.

இந்த சமயத்தில் நாம் முற்கூறியவாறு பிராஸ்பிரோவும் அவர் புத்திரி மிராண்டாவும் அக்கப்பலினின்றும் கரையில் வந்து சேர்ந்தார்கள். இது எவ்விதத்தீவு. இதில் நாமெப்படி யிருந்து உயிர்வாழலாமென்று அந்த இடமெல்லாம் சுற்றிப் பார்க்கையில், மிருக மனிதனுன காலிபன் கண்ணுக்குத்தென்பட்டு இது நல்ல தண்ணீர் இடம். இது மழைக்குத்தங்கத் தக்க குகையென்றெல்லாம் வந்து இவர்களுக்குத் தெரிவித்தான். அதையெல்லாம் தெரிந்து கொண்டு பின் அவ்விடத்தில் அடைபட்டிருந்த பூதங்களை தன் மந்திர சக்தியால் விடுவித்தார். ஏரியல் என்னும் பூதம் இவர்மேல் மிகுந்த விசுவாசமும் நன்றியறிவுள்ளதுமாய் இவருக்கு அத்தீவில் முக்கிய வேவுகாரனுக வேண்டிய வேலைகள் யாவுஞ் செய்துவந்தது.

பிராஸ்பெரோ முதலில் காலிபனை வெகு பிரியமாக நடத்தி அவன்பேரில் அதிக பக்ஷமுடையவராய் மிருகமாயிருந்தவனை மனிதனுகத் திருப்பவேண்டுமென்று மிகவும் முயற்சிசெய்து, பாஷைகற்பித்து இயற்கையினழகை யெல்லாம் காண்பித்து, கடலிலலை உயர்ந்து சுருட்டி மிகுந்த இரைச்சலோடு, பாறையிடிந்தாற்போல் விழுவதையும், சூரியன் உதிக்கும்போது கடலில் அலையிலிருந்து அலைக்கு மின்னல் ஒளிபோல் பிரகாசித்து எவ்விடத்திலும் வெளிச்சம் பரவி அழகு வாய்ந்து நேரஞ்செல்லச்செல்ல உயருவதையும், பக்ஷிகள் மரக்கிளைகளில் பாடுவதினினிமையும், சோலைகளினிடையே சூரியன் உச்சத்தில் நின்று உக்கிரமாய் கிரணங்கள் விடுக்கும்போதுங்கூட அக்கிரணங்கள் சிறிதும் பிரகாசிக்கக் கூடாமலடர்ந்த விடங்களின் நிர்சப்தமான மாட்சிமையையும், மற்ற விடங்களில் சூரிய வெயில், சந்திரவெளிச்சம், நக்ஷத்திர வெளிச்சம் முதலியன மரங்களின்மேல் தண்ணீர் போல்



கட்டி நிற்பதுபோலவும், காற்றடித்து இலையசைந்து இடையிடையே சிறிது சிறிதான வழிதோன்ற அதின் வழியாய் வெளிச்சம் இறங்கியதுபோலும் உடனே மறைந்ததுபோலும், இன்னும் பலவிதமாய் ரம்மியமான இயற்கை யழகையும், இயற்கை யற்புதங்களையும் அவனுக்குக்காட்டி இதுவரை அதுபோன்ற காக்ஷிநிறைந்த அந்தத்தீவில் குடியிருந்தாலும் அதனருமை பெருமை யறியாததலால் அவனுக்கு அந்த அழகையெல்லாம் தெரிவித்து அவனை மனிதரில் மிகவும் நுண்ணறிவு பொருந்தி அழகின் வண்மை தெரிந்தவனுக்கமுயன்றார். இதுவுமன்றி தாகத்திற்கு தண்ணீர் அருந்தும்போது அதில் ருஜிக்காகவும், வாசனைக்காகவும் காட்டு மாம்பழம் போன்ற சிறு கனிகளைப் போட்டுக்கொடுத்து வெகு நாகரீகமாகவும், சொகுசாகவும், எவ்விதத்திலும் உயர்நடை, நல்ல பழக்கமுடையவனுக்க முயன்றார். என்றாலும், இவர் கற்பிப்ப தொன்றுமே தக்க முயற்சியுடன் பயின்று கொள்ளவு மில்லை, தன் மிருக புத்தியே மேலிட்டு, மிருகத்தின் சோம்பேரித்தனமும் முரண்டு முட்டாள் தனமுமே அதிகரித்து தன் குருவின் குழந்தைக்கே வற்புறுத்தி பலாத்காரமாய் மணம்புரியும்படி ஒரு கெடுதி சூழவாரம்பித்தான். அது உடனே பிராஸ்பெரோவுக்குத் தெரிந்து சீச்சீ! இனி இத்தகைய மனிதனுக்கு இத்தகைய கல்வி பயிற்றுவது சரியன்று. நாம் கற்றனவெல்லாம், யார் யார் பயிற்சிக்குத் தக்கதோ அவற்குப் பயிற்றுவதன்றி, மற்றப்படி கல்லாதார் செவி மாட்டின், அதில் கையுறும் குற்றம் நமதே பிரிதன்றன்றென்று பெரியோர் வாக்கியமிருக்கிறதல்லவா. மற்றப்படியும் கருங் காக்கையைக் கழுவி வெண்மை செய்யத்தொடங்கி முயலு முயற்சியத்தனையும் பயன்படாத்துயரம். தாழ்ந்தவேலை செய்வதற்கே யிவன் தகுதி அவையன்றி மற்ற எவ்வித முயற்சியு மிருவருக்கும் பயன்படாது என்று கண்டு அவனை விறகுகொண்டுவந்து சேர்க்கவும், தண்ணீர் கொண்டு வந்து கொட்டவும், மற்று மிதுபோல வேலை செய்யச்செய்து அவன் வேலையை ஏரியல் என்னும் நற்பூதம் மேற்பார்த்து வரும்படி கட்டளையிட்டார். ஏரியல் மிகவும் மனோரம்மியமும் சந்தோஷகரமும் பொருந்திய பூதம். பலவித சக்தியுமுடையது. மனிதர் கண்ணுக்குத் தோன்று உருவும் கண்ணுக்குத் தோன்றுவன வற்றில் பற்பல உருவும் எடுக்கக்கூடிய சக்தியுண்டு. மிகவும் வேடிக்கை புத்தியுள்ள பூதமாதலால் காலிபனை வேலை யேவுவது அனேகமாய் கண்ணுக்குக்காணுத உருவமாய் நின்று எவ்வித மாயமாய் ஒருவன் தன்னையடிப்பதும் கிள்ளுவதும் போலிருக்கும்படியும் இன்னும் பலவிதமாய் வேடிக்கையாயும் வினயமாயும் தூண்டி வேலை வாங்குவதுண்டு. காலிபன் முணுமுணுத்துக் கொண்டாவது, தொந்தரவு பொறுக்கமாட்டாமல் திட்டிக்கொண்டு வைது கொண்டே வேலையைச் செய்து முடித்து வருவான்.

ஏரியல் இவனை வேலை வாங்குவதோடு, பிராஸ்பெரோவுக்கு என்ன செய்யவேண்டுமோ அந்த வேலைகளை யெல்லாம் ஒழுங்காகவும் சரிவரவும் செய்து வந்தது. அனேகமாய் அவர் மாந்திரீக விஷயமாய் வேண்டியவற்றிற்கு இது காற்றில் பறந்துபோயாவது, கடலில் நீந்தியாவது கடலின் அடி வண்டலில் நடந்துபோயாவது பூமி யடியிலுள்ள சுரங்கங்களில்வேலை செய்தாவது வேண்டுவன பொருள்களைக்கொண்டு வந்து சேர்ப்பிப்பதாம். இவ்வித உதவி எல்லா பூதங்களுஞ் செய்ய, மனிதராலாவது மற்ற யெவ்விதத்தாலாவது யாதொரு இடையூறுஞ் சிறிதுமின்றி, தன்னன்பு அழுந்தியூன்றி நின்ற மாந்திரீகத்தை மேன்மேலுங்கற்று சகலவிதமான சக்தியையும் பெற்று நாளுக்குநாள் மிகுதியுஞ் சிறப்புவாய்ந்து, பிராஸ்பெரோ தன் மகளை அன்போடுஞ் சௌகரியத்தோடும் வளர்த்து வந்து மற்றொரு பன்னிரண்டு வருஷங்கள் ஆயின.

இதனிடையே மிலான் பட்டணம் ஆண்டுவந்த அன்டோனியோ, நேப்பிள்ஸ் அரசனுக்குக் கப்பம் கட்டிவந்து அவனுக்குக் கீழ்ப்படிந்து வந்தான். நேப்பிள்ஸ் நகரத்தரசனுக்குக் கிளாரிபெல் என்னும் பெண்ணும் பர்டினண்டு என்னும் ஆண்பிள்ளையுமிருந்தார்கள். பிராஸ்பொரோவுக்குத் தம்பியிருந்தது போல் நேப்பிள்ஸ் அரசனுகிய அலான்ஸோவுக்கும் செபாஸ்டியன் என்று ஒரு தம்பியிருந்தான். இப்படி பன்னிரண்டு வருஷங்களாயின வென்று சொல்லப்பட்ட வருஷத்தின் இறுதில், கிளாரிபெல் என்னும் ராஜஸ்திரியை டியூனிஸ் என்னும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பட்டணத்தில் அவ்வூரரசனுக்கு மணம் புரிவித்தார்கள். அக்கல்யாண வைபோகங்களுக்கு என்று, அனேக அழகான பெருங்கப்பல்களை சேர்த்துக் கொண்டு, சிற்றரசர் சூழ, பலவாத்தியம் முழங்க, மிக்க ஆடம்பரத்தோடும், கம்பீரத்தோடும், மணம்புரிவித்து விட்டு எல்லோரும் திரும்பவும் நேப்பிள்ஸ் போகப் புறப்பட்டு கடல்மார்க்கமாய் வந்து கொண்டிருந்தார்கள். —*A Master of Arts.*

# கல்யாணி

## KALYANI *

### 3-ம் அதிகாரம்

வீரசேனன் தன் இராஜ்ய தந்த்ரவேலைகளிலும் ஜனாசார பரிபாலன சந்தோஷங்களிலும் முழுகி, இராஜதானியில் எப்பொழுது மிருப்பவனாதலால், அந்தப் பரந்த ஜமீனிலுள்ள இடங்களை யெல்லாம் விவரமாகத் தெரியாதவனாயிருந்தான். கல்யாணியோ, தன் தாயுடன் திருப்புனத்தில் கோடைகாலமெல்லாம் வஸிப்பவளாதலாலும், அவளுக்கு இயற்கையாயுள்ள பிரியத்தாலும் வேறே விநோதங்களில்லாமையாலும் அடிக்கடி அங்கே திரிவதாலும், அவ்விடத்திலுள்ள மூலையும் முடங்கும், நெடுவழிகளும், குறுக்குப் பாதைகளும், காடடர்ந்த மார்க்கங்களும், முட்டுச் சந்துகளும் தெரிந்தவளாயிருந்ததால் தன் பிதாவுக்கு வழிகாட்டிச் சென்றாள்.

வீரசேனன் சுயமாக இயற்கைப் பொருள்களின் அழகுகளில் பிரியமற்றவனல்லவென்று சொன்னோமல்லவா. அவனுடைய சூதற்ற அழகிய குமாரத்தி போகும் வழியில் புத்திரீய வாஞ்சையுடன் அவன் கையில் தொங்கிக்கொண்டு ஓரிடத்தில் நிற்கும் வெகு நாள் சென்ற ஒரு தேக்குமரத்தின் பரிமாணத்தைக் காட்டினாள். எதிர்பாராத மற்றோர் இடத்தில் வழி திரும்பி மலைகளின் மத்தியில் சென்று அவர்களுக்குத் திகைப்புண்டாக்கிற்று. உடனே ஒரு உயர்ந்த மேட்டிலேறினார்கள். அவ்விடத்திலிருந்து பார்க்கும் பொழுது கீழே பெரிய மைதானம் தோன்றிற்று. அவர்கள் சிறிது தூரம் குன்றுகளுக்கும் காடுகளுக்கும் மத்தியில் செல்ல அது கண்ணுக்குத் தெரியாமல் போய், ஒரு தாழ்ந்த ஏகாந்த ஸ்தலத்தை அடைந்தார்கள். அப்பொழுது அவனுக்குண்டான பெருமகிழ்ச்சிக்களவில்லை.

கண்கவர் காட்சியாயிருந்த அவ்விடத்தில் போகையில், முனியம்மாள் குடிசை அதன் சமீபத்திலிருப்பதாகக் கல்யாணி சொன்னாள். சிறு குன்றிலிருந்து திரும்பினவுடன் அதைச் சுற்றி ஒரு கால்வழி போயிற்று. அதில் தினந்தோறும் நடப்பவர் கால்கள் பட்டு அது தேய்ந்ததா யிருந்தது. அதில் செல்ல அது அந்தக் குடிசையின் எதிரில் கொண்டுவந்து விட்டது. ஒரு பள்ளமான இருண்ட குகைவாயில் அந்தக் குடிசை யிருந்ததானது அதில் வசிப்பவர்களின் கருகிய மன நிலைக்குத் தக்கதாய் மனதாரச் செய்யப்பட்டது போலிருந்தது.

அது ஒரு பெரிய பாறைக்குக் கீழே இருந்தது. மேலிருந்து கல்லுகள் பெயர்ந்து கீழே விழும்போல் தோன்றிக்கொண்டிருந்தன. சுவர்கள் கழுப்பற்றையால் கட்டப்பட்டு, கூறை புல் மேய்ந்திருந்தது. அதில் அநேக பாகங்கள் பழுதாயிருந்தன. அதிலிருந்து இலேசாகப் புகை எழும்பிச் சுருண்டு மேலே செல்வது அந்த முகட்டிலிருந்து மேலே தொங்கிக் கொண்டிருந்த பாறைக்கு ஒரு தூண் நிறுத்தியது போன்றிருந்தது. அங்கு மிங்கும் சிதறி நிற்கும் சில செடிகளை மாத்திரம் வேலியாகவுடைய நாகரீகமற்ற ஒரு சிறு தோட்டத்தில் தனக்கு ஜீவனோபாயமான தேன்கூடுகளின் சமீபத்தில் அந்தக் கிழவி உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

துர் அதிர்ஷ்டத்தால் செல்வமெல்லாமொழிந்து இழிவான குடிசையில் அவளிருந்தபோதிலும், அவளைப் பார்த்தவுடனேயே அவளுடைய தள்ளாமையாவது, தரித்திரமாவது, துர்ப்பாக்கியமாவது, கண்தெரியாமையாவது ஆச்சரியப்படத்தக்க அந்தப் பெண்பிள்ளையின் மனஊக்கத்தைக் கெடுக்கவில்லையென்று எல்லாரும் இலேசில் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு பெரிய பழைய மரத்தடியில் போட்டிருந்த ஒரு மண்மேடைமேல் அவளிருந்தாள். அவள் நெட்டை, கம்பீரமானவள். ஆனால் வயது சென்றமையால் கொஞ்சம் கூனுண்டாயிருந்தது. குடியானவளுடைய உடுப்புத் தரித்திருந்தாலும் சாதாரணக் குடித்தனக்காரருடைய உடுப்புப்போலல்லாமல் அசாதாரணமாக அது சுத்தியாயிருந்தது. அவர்களுக்குள்ள மாதிரியில்லாமல் அவள் அதை நன்றாயும் வேறுவிதமாயும் தரித்திருந்தாள். ஆனால் அவளுடைய முகத்தின் தீர்க்கத்தைக் கண்டுதான் அவளைப் பார்ப்பவர்கள் அவள் ஒரு சிறு குடிசையிலிருந்தபோதிலும் அவளிடத்தில் மரியாதையுடனும் உபசாரத்துடனும் பேசும்படி நேரிடுகிறது. அது தனக்குரியது தானென்ற மன அமைதியுடன் அவள் அதை அங்கீகரிப்பாள். அவள் இளமையில் அதிக அழகாயிருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது குன்றியிருப்பினும் பொறிகளின் வன்மையும், ஆழ்ந்த யோசனையும், சரியான பெருமையும், அவள் நிலையிலிருப்பவர்களிலும் எவ்வளவோ அவள் மேன்பட்டவளென்று காட்டக் கூடியவைகளாயிருந்தன. கண்ணொளியில்லா முகத்திற்கு இவ்வளவு தீர்க்க

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.



மிருக்குமென்று ஒருவரும் நினைக்க முடியாது. அவள் கண்கள் ஏறக்குறைய முழுவதும் மூடப்பட்டிருந்தாலும் முகத்திற்குப் பழுதொன்றும் செய்யவில்லை. தன்னைச்சுற்றித் தேனீக்கள் செய்யும் ரீங்காரத்தைக் கேட்டுக்கொண்டு சாந்தையாய்த் தூங்காமல் யோகத்திலிருப்பவள்போல, ஆழ்ந்த யோசனையில் அவளிருந்துகொண்டிருந்தாள்.

அந்தத் தோட்டக் கதவின் சங்கிலியைத் திறந்து கல்யாணி "முனியம்மாள்! என் பிதா உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று சொன்னாள்.

"உன் தகப்பனாருக்கு வந்தனம். கல்யாணி! உனக்கும் வந்தனம்" என்று வந்தவர்களுக்கு எதிரில் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு முனி சொன்னாள்.

அவளுடைய வெளித்தோற்றத்தைக்கண்டு ஆச்சரியமடைந்த வீரசேனன், அவளுடைய சம்பாஷணையும் இனிமையாயிருக்குமோ என்று தெரிய ஆவல் கொண்டு "அம்மா! உன் தேன்கூடுகளுக்கெல்லாம் இன்று காலைப்பொழுது அனுகூலமாயிருக்கிறது போலும்" என்றான்.

"ஆம். அப்படித்தான். இப்பொழுது ஆகாசம் முன்னிலும் சாந்தமாயிருக்கிறதாக எனக்குத் தெரிகிறது" என்றாள்.

"அம்மா! இந்தத் தேனீக்களை யெல்லாம் நீதானா காப்பாற்றுகிறாய்? அது எப்படி நடக்கிறது?" என்று வீரசேனன் கேட்டான்.

"அரசர்கள் தங்கள் குடிகளைக் காப்பாற்றுவது போல், பிரதிநிதிகளால், என்னுடைய பிரதான மந்திரி எனக்கு வாய்த்தது என் அதிர்ஷ்டம். அவள் பெயர் பார்வதி" என்று முனியம்மாள் சொல்லி, தன் கழுத்தில் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்ததும் வீட்டு வேலைக்காரரை அழைக்க அக்காலத்தில் வழங்குவதுமாகிய ஒரு சிறு வெள்ளி ஊதுகுழலை வாயில் வைத்தூதினாள். உடனே 15 வயதுள்ள பார்வதி குடிசையிலிருந்து வந்து அவள் முன் நின்றாள். அவள் முனியம்மாளுக்குக் கண் தெரிந்தால் எவ்வளவு துப்புரவாய் சேலை கட்டியிருப்பாளோ அவ்வளவில்லாவிட்டாலும் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியதிலும் அதிகச் சுத்தமாய் வஸ்திரம் தரித்திருந்தாள்.

"பார்வதி, இம்மந்திரிக்கும் கல்யாணிக்கும் கொஞ்சம் தினைமாவும் தேனும் கொண்டுவந்து கொடு. சுத்தியாயும் காலதாமதமில்லாமலும் நீ கொண்டுவந்து கொடுத்தால், நீ அவலட்சணமாய்ச் செய்வதை அவர்கள் பாராட்டமாட்டார்கள்" என்று சொன்னாள்.

பார்வதி தன் எசமாட்டியினுத்தரவை நாம் எதிர்பார்க்கக்கூடியவண்ணம் அழகாகச் செய்து முடித்தாள். அவளுடைய கால்களும் பாதங்களும் நொண்டுபோல ஒருபக்கம் செல்லவும், குடித்தனக்காரரும், வேலைக்காரரும் இதுவரை காதால் கேட்டதே ஒழியக் கண்ணால் கண்டிராத யஜமானனைப் பார்த்துக் கொண்டே தலை மற்றொரு பக்கத்தில் திரும்பவும் அவள் போனாள். ஒரு வெறும் இலையில் தினைமாவும் தேனும் கொண்டு வந்து வைத்ததை அவர்கள் மரியாதையுடன் அங்கீகரித்தார்கள். விழுந்து கிடந்த ஒருமரத்தின் பழுதாய்ப் போன அடிக்கட்டையி லிருந்துகொண்டே வீரசேனன் இன்னும் பேச்சை நீட்டிக்க வேண்டுமென்னும் ஆசையுடையவனாய் எந்தத் தக்க விஷயத்தைப் பற்றி எவ்விதம் பேசுவதென்று தெரியாம லிருந்தான்.

சற்றுப் பொறுத்து "அம்மா! நீ இந்த இடத்தில் வெகு கால மிருந்திருக்கிறாயோ?" என்று வீரசேனன் கேட்டான்.

"நானிவ்விடம் வந்து 60 வருஷமாயிற்று". என்று கேட்ட கேள்விக்கு இன்றியமையாத உத்தரம் மரியாதையுடனும் கவுரவத்துடனும் அவள் சொன்னாள்.

"உன்னுடைய பேச்சிலிருந்து ஆதியில் நீ இந்த ஊர்க்காரியல்ல வென்று தோன்றுகிறது" என்றான்.

"அல்ல. நான் மலையாளத்தில் ஜனித்தவள்" என்றாள்.

"ஆனாலும் உன் சொந்த நாட்டில் போலவே இவ்வூரிலும் ஆசையுடையவள்போல் தோற்றுகிறாய்" என்றான்.

"ஈசுவரன் எனக்கு விதித்த சுகதுக்கங்களை நான் அனுபவித்தது இவ்விடத்திலேதான். யோக்கியனும் அன்புள்ளவனுமான கணவனுக்கு மனைவியாக இங்கே 20 வருஷமிருந்தேன். சீரும் சிறப்பும் பெற்று நல்ல ஸ்திதிக்கு வரக்கூடியவர்களாயிருந்த ஆறு குழந்தைகளை நான் பெற்றதும் இவ்விடந்தான். இவ்விடத்திற்றான், ஈசுவரன் அந்த இன்பங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டது. அவர்களெல்லாரும் இறந்தொழிந்ததும் இவ்விடத்திலேயே; அவர்களுயிரோடிருந்த போது அவர்களுரைவிட வேறே ஊர் எனக்கில்லை. இப்பொழுது அவர்களிறந்து இங்கே புதைக்கப்பட்டிருப்பதால் அவர்களுடையதைத் தவிர எனக்கு வேறே நாடில்லை" என்று கண்ணில்லா விருத்தை சொன்னாள்.

"உன் வீடு அதிகப்பழுதாயிருக்கிறதே" என்று வீரசேனன் கேட்டான்.

அப்பொழுது சொஞ்சம் கூசிக்கொண்டு கல்யாணி மிகுந்த ஆவலுடன் "என் பிரிய பிதாவே! உமக்குச் சரியென்று தோன்றினால் அதை உடனே ஜீரணோத்தாரணம் செய்யும்" என்று சொன்னாள்.

"என்னருமைக் கல்யாணி! என் ஜீவகாலம் வரை இது நிற்கும்; என தெஜமானனுக்கு இது விஷயமாய்ச் சிறிதுகூட தொந்தரை கொடுக்கப் பிரியமில்லை" என்று முனியம்மாள் சொன்னாள்.

"ஆனால் ஒருகாலத்தில் உனக்கு நல்ல வீடும் மிகுந்த ஐசுவரியமுமிருந்தன ஐயோ! இப்பொழுது உன் முதிர்ந்த வயதில் இந்தக் குடிசையில் குடியிருக்கிறாயே" என்றாள் கல்யாணி.

"கல்யாணி! நான் எவ்வளவுக்குப் பாத்திரமோ அவ்வளவு நன்மையும் எனக்கிருக்கிறது. நான் பட்ட பாட்டினாலும், மற்றவர்கள் பட்டதைப் பார்த்ததாலும் என்னுயிர் எப்பொழுது மடியவில்லையோ அப்பொழுதே இவ்வுயிர் வல்லுயிரென்று எனக்குத் தெரியும். அதைத் தாங்க என் சரீரமும் சலிக்காததே" என்று கிழவி கூறினாள்.

"அனேக மாறுதல்கள் உனக்குண்டாயிருந்திருக்கின்றன வென்று தோன்றுகிறது. ஆனால் உன் அனுபோகத்தால் அவைகள் வருமென்று நீ எதிர்பார்த்திருக்கலாமே" என்று வீரசேனன் சொன்னான்.

"அவைகளை யெல்லாம் சகித்துக்கொள்ள அது கற்பித்தது பிரபுவே" என்றாள் முனியம்மாள்.

"காலம் செல்லச்செல்ல அவைகள் சம்பவிக்க வேண்டியவைகள் தானென்று உனக்குத் தெரிந்திருக்கலாமே" என்றான்.

"ஆம். இப்பொழுது நீருட்கார்ந்திருக்கிற அடிக்கட்டை ஒரு காலத்தில் உயர்ந்து தடித்த மரமாயிருந்தது. அது பழுதாகியோ, வெட்டப்பட்டோ மற்றொரு காலத்தில் கீழேவிழ வேண்டியதுதானென்பது எனக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் என் வீட்டிற்கு நிழல் கொடுத்துக்கொண்டிருந்த மரம் அழிந்து கீழே விழுவதை என் கண்கள் காணாமலிருக்குமென்று நம்பினேன்" என்றாள்.

"மற்றொரு குடும்பத்தினர் இந்தச் சமஸ்தானத்தை யாண்ட நாட்களைக் குறித்து நீ விசனப்படுகிறதாயிருந்தாலும், உன்னிடத்தில்எனக்குண்டாகியஇதம் குறையுமென்று நீ நினைக்கவேண்டாம். அவர்களிடத்தில் அன்புடனிருக்க உனக்குப் போதுமான காரணம் சந்தேகமில்லாமலிருந்தது. அவர்களிடத்தில் உனக்குள்ள நன்றியறிதலைக்கண்டு எனக்கு உன்னிடத்தில் மிகுந்த கவுரவமுண்டாகிறது. உன் குடிசையைச் சிறிது செப்பனிடச் செய்வேன். நாமிருவரும் இன்னும் நன்றாய்ப் பழகினால், சிநேகிதர்களாவோமென்று நம்புகிறேன்" என்று வீரசேனன் சொன்னான்.

"என்னைப்போல் வயது சென்றவர்களுக்குப் புதுச் சிநேகிதர் கிடைக்கிறதில்லை. உமது உதாரத்துவத்திற்காக உமக்கு வந்தனம். நிச்சயமாக அது நல்லெண்ணத்துடனுண்டானதுவே. ஆனால் எனக்கு வேண்டியதெல்லாமிருக்கிறது. என்னுடைய யஜமானனிடத்திலிருந்து வேறே அதிகமொன்றும் நான் பெற்றுக்கொள்ள முடியாது" என்று முனியம்மாள்சொன்னாள்.

"ஆனால், சரி. நீ தோற்றத்திலும் அதிகப் புத்தியும் படிப்புமுடையவளாயிருக்கிறாயென்று நானுன்னை நினைக்கிறதாயும் உன்னாயுள் காலம்வரை இவ்விடத்தில் வரி கொடுக்காமல் குடியிருப்பாயென்று நான் நம்புகிறதாயும் சொல்ல இடங்கொடு" என்றான்.

"நான் அப்படிச் செய்வேன். உமக்குப் புனபதி இந்த நாட்டை விற்ற கிரயப்பத்திரத்தில் அதொரு நிபந்தனையென்று நான் நம்புகிறேன். இந்த அற்பவிஷயம் உம்முடைய ஞாபகத்திலிருந்து நழுவி யிருக்கலாம்" என்றாள்.

வீரசேனன் திகைத்து "என் ஞாபகத்திற்கு வருகிறது. உன் பழய சிநேகிதரிடத்தில் அதிகப் பிரியமிருப்பதால், அவர்களுக்குப் பின் வந்தவனிடத்தில் எவ்வித அனுகூலமும் பெற உனக்குப் பிரியமில்லையென்றெனக்குத் தெரிகிறது" என்றான்.

"பிரபுவே! அப்படியல்ல. நீரெனக்குச் செய்ய விரும்பும் உதவிகளை நான் வேண்டாமென்று மறுத்தாலும் உம்முடைய விருப்பத்திற்காக நான் நன்றி யறிதலுடையவளாயிருக்கிறேன். அதற்குக் கைமாறாக நானிப்பொழுது சொல்லப் போவதிலும் மேலானதைச் செய்யஅசக்தையாயிருப்பதற்காக விசனப்படுகிறேன்" என்று சொன்னதைக்கேட்டு வீரசேனன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான். "கனவானே! நீர் செய்வதைக் கவனித்துச் செய்யும். செங்குத்தான மலையின் ஓரத்தில் நிற்கிறீர்" என்று அழுத்தமாயும் பயபக்தியுடனும் அவள் தொடர்ந்து சொன்னாள்.

"அப்படியா! இராஜதுரோகமா? சதியா? உன் காதிற்கு ஏதாவதெட்டியிருக்கிறதா" என்று, தன் மனம் அத்தேசத்தின் இராஜ்ய தந்திரங்களில் செல்ல, அவன் கேட்டான்.

(தொடரும்.)

S. V. கள்ளபிரான் பிள்ளை, பி. ஏ.



# உல்லாஸன் சரித்ரம்

## ADVENTURES OF ULYSSES

### பீடிகை

**வா**ல்மீகி மஹாமுனியால் வடமொழியிற் செய்யப்பட்டிருக்கிற இராமாயண கதையை அறிந்தவர்கள், உல்லாஸன் சரிதம் படிக்குங்கால் புதுமை ஒன்றுங் காணாரெனினும், ஹிந்துக்கள் இராமாயணத்தைக் கொண்டாடுமளவு இதர ஜாதியார் கொண்டாடும் இதிகாசங்கள் உண்டென்று இந்நூலால் அறிந்து கொள்ளலாம். ஏறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன் கிரேக்கர்களில் ஹோமர் என்று ஒரு மஹாகவி இருந்தார். அவர் 'இலியத்', 'ஒடிஸ்ஸி', என்றிரண்டு இதிகாசங்கள் செய்தார். "ஒடிஸ்ஸி" என்பது முதலிற் சொன்ன நூலின் தொடர்ச்சியாம். 'இலியத்' என்னுங் காவ்யத்தின் கதையைச் சுருக்கிச் சொல்வோம்.

ஆசியா கண்டத்தின் மேற்குப் பாகத்தில் இலியம் அல்லது த்ரோஜா என்னும் மாநகர் ஒன்றிருந்தது. அதனரசனுக்குப் **பிரியம்** என்று பெயர். அவன் குமாரர்களில் **பாரிஸ்** என்பவன் மிகுந்த விடன். கிரீஸ் தேசத்தில் ஸ்பார்டா என்று ஒரு நகரமுண்டு. அந்நகரதிபன் **மனிலாஸ்**; மனிலாஸின் மனைவி ஹெலன். ஹெலனுடைய ரூபலாவண்யங்களைக் கண்டு, தேவர்களும் அவள்மேல் மோகங்கொண்டார்களாம். பாரிஸ் ஸ்பார்டாவுக்குச் சென்றான். பாரிஸ் அழகு நிறைந்த இளைஞன். ஹெலன் பாரிஸைக் கண்டவுடனே அவனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்தாள். உண்ட வீட்டிற்கு இரண்டு நினைக்கிற பாரிஸ், ஹெலனை எவ்வாறோ தன் வசப்படுத்திக் கொண்டு அவள் புருஷன் ஊரிலில்லாத ஸமயத்தில், அவளை இட்டுக்கொண்டு தன் பிதாவின் ஸ்தானமாகிய **த்ரோஜா** நகரத்திற்கோடிவந்து அங்குத் தானும் ஹெலனும் கணவனும் மனைவியும் போலச் சுகித்திருந்தார்கள்.

மனிலாஸ் ஸ்பார்ட்டாவுக்குத் திரும்பவந்து, மனைவி காணாமற் போனதை நினைந்து மனமுருகி இருக்கையில், பாரிஸ் அவளைத் திருடி த்ரோஜா நகரத்தில் வைத்திருக்கிறான் என்னுஞ் செய்திகிடைத்தது.

புறத்தேசத்தவன் கிரீஸில் பிரவேசித்து அந்நாட்டரசன் மனைவியைக் கவர்ந்தோடினதைக் கேட்ட கிரேக்கர்களுக்கு மிகுந்த கோபம் பிறந்தது. யுத்தவீரர்களும் பேரரசர் சிற்றரசர் முதலானோரும் தங்கள் படைகளைச் சரிவர ஆயத்தஞ் செய்து கொண்டு த்ரோஜா நகரத்தைப் பிடிக்கச் சென்றார்கள்.

இவ்வாறு போர்புரியப் போனவர்களில் இதாகா என்னும் தீவில் அரசு செலுத்திவந்த **உல்லாஸன்** ஒருவன். மற்ற வீரர்களைவிட இவன் யுக்தி, ஸத்யம், புஜபலம், முதலிய ராஜகுணங்களிலுயர்ந்தவன். இவன் பிதாவுக்கு **லெயர்கீஸ்** என்றும், இவன் மாதாவுக்கு **அந்திக்லியா** என்றும்பெயர். இவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்மணி **பனிலோபி**. உல்லாஸன் த்ரோஜா நகரத்திற்குப் புறப்படுங்காலத்தில் பனிலோபிக்கு இருவது வயதுதானிருக்கும். உல்லாஸன் குமாரன், தலைமகன் ஆறுமாதத்திய கைக்குழந்தை. வீட்டு விஷயங்கள் மேற்சொன்ன நிலைமையிலிருக்க எவனாவது யுத்தத்திற்குப் புறத்தேசம் போக மனந்துணிவானோ? உல்லாஸனோ மனிலாஸுக்கு ஸம்பவித்த மானபங்கம் தன்னதே யென்றெண்ணினான். பரதுக்கஞ் சகியாத பரமகாருணியன். விஷயாதிகளில் பிரியமிருக்கக்கூடிய யௌவன காலத்தில் மனையையும் மனைவியையும் மகனையும் மாதாபிதாக்களையுந் துறந்து தூரதேசத்திற் போர்செய்யப் போனான்.

மேற்சொன்ன போர் பத்தாண்டு நடந்தது. உல்லாஸன் செய்த யுக்தியினால் த்ரோஜா நகரம் பிடிபட்டு அக்கினிக்கிரையாக்கப் பட்டது. இருதிறத்தாரிலும் சண்டையில் மாண்ட வீரர்களுக்குக் கணக்கில்லை. கிரீஸிலிருந்து போன படையாட்களில் பிழைத்தவரின் ஸங்கியை சிறிது. அச்சிறுபடையைக் கப்பல்களிலேற்றிக்கொண்டு திரும்பி இதாகாவுக்கு வருங்கால் உல்லாஸனுக்கு நேர்ந்தகாரியங்களைச் சொல்லுங் காவியத்திற்குத்தான் ஹோமர் "ஒடிஸ்ஸி" என்று பெயரிட்டார்.

உல்லாஸனுக்கு இஷ்டதேவதை மினெர்வா. ஹிந்துக்களுக்கு ஸரஸ்வதி பூஜ்யையாயிருப்பது போலவே கிரேக்கர்களுக்கு முன்காலத்தில் மினர்வா பூஜ்யையாயிருந்த தேவதை. உல்லாஸனுக்கு ஆபத்துக்கள், மனத்தளர்ச்சி முதலானவைகள் உண்டானபோதெல்லாம் மினெர்வா அவனுக்குப் பிரஸன்னமாகி மனவெழுச்சியுண்டாக்கிப் புகழடைவித்தாள்.

ஜன்மபூமியான இதாகாவுக்கு உல்லாஸன் திரும்பிவந்து சேர இருபது வருஷமாயிற்று. இந்த நீண்ட காலத்திலுண்டான மாறுதல்களனேகம். அவைகளையெல்லாம் சரித்திரத்திற்காணலாம். கவித்திறத்தில் ஸமஸ்கிருத பாஷையில் கிரந்தங்கள் செய்திருக்கிற புலவர்களுக்கு, ஏகதேசமாவது ஹோமர் ஸமானன் என்று புலப்படும். ஹிந்துக்களுடைய தற்கால மதக்கொள்கைகளையே மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த கிரேக்கர்கள் அனுசரித்து வந்தாரென்பதும் தெளிவாகும். உல்லாசனுடைய குணாதிசயங்கள் மெச்சத்தக்கவையென்பதும் திண்ணம். இத்தியாதிகாரணங்களை முன்னிட்டே ஒடிஸ்ஸி என்னுங் காவியத்தை மொழிபெயர்க்கலானோம்.

## முதல் அத்தியாயம்

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

உல்லாஸன், த்ரோஜா நகரத்தை அழித்தபின், சென்ற பலநாடுகளையும், செய்த பல காரியங்களையும் பற்றி இனிச் சொல்வோம். நாட்டையும், வீட்டையும், மனைவியையும் விட்டுப் பிரிந்து பத்தாண்டானமையால் உயிர்த்துணைவியையும் ஜன்ம பூமியையும் பார்க்க வேண்டுமென்கின்ற அவா உல்லாஸனுக்கு மேலிட்டிருந்தது. ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளின் செல்வப்பெருக்கையும் செழிமைப்பெருக்கையும் உத்தேசிக்குமளவில் இதாகாவைப் பாழ்நில மென்றுதான் சொல்லவேண்டும்; ஆயினும், காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சென்றபடி, உல்லாஸனுக்கு அன்னியதேசம் ஒன்றும் தன் நாட்டைப்போல இன்பமானதாயும் விரும்பத்தக்கதாயும் தோன்றவில்லை. இந்தக்காரணம் பற்றியேதான் காலிப்ஸோ அளித்த அமரத்வத்தையும், ஸூர்ய புத்ரியாகிய ஸூரவி செய்த மாயங்களையும் உல்லாஸன் வெறுத்தான்.

த்ரோஜா நகர் நீங்கிக் கப்பலேறிக் கடலைக் கடந்து வருகையில் பெரும் புயலடித்து உல்லாஸனும் அவன் போர்வீரர்களும் இருந்த கப்பல்கள் கிரேக்கர்களுக்கு விரோதிகளான சைக்கர் துறையில் ஒதுக்கப்பட்டன. உல்லாஸன் தன் ஆட்களோடு கரையிறங்கி சைக்கர் பிரதான நகரத்தைப் பிடித்து எதிர்த்தவர்களைக் கொன்று அவர்கள் பொருளையும் பறித்துக்கொண்டான். கிரேக்கர்கள் பெற்ற வெற்றியே அவர்களுக்குப் பிராணாபாயமுண்டாக்கிற்று. கொள்ளைப் பொருளும் ஸம்பிரமமான உணவும் அகப்பட்டமையால் உல்லாஸன் ஆட்கள் உண்டு களித்துச் சத்ருக்கள் இருக்கிறார்களென்பதையே முற்றிலும் மறந்து விட்டார்கள். சைக்கர்கள், தங்கள் விரோதிகள் கள்ளுண்டு மயங்கிக் கிடக்கும் சமயம் பார்த்துப் படைகளைச் சேர்த்து கிரேக்கர்களை எதிர்த்து அனேகரைக் கொன்று பறிகொடுத்த பொருள்களையெல்லாம் மீண்டும் பெற்றுத் தங்கள் வீரத்தனத்தைக் காட்டவே, உல்லாஸனும் அவனாட்களும் சைக்கர் நாட்டினின்று சீக்கிரம் கப்பலேறி வெளிக்கிளம்பினார்கள்.

உல்லாஸனும் அவனுடனிருந்தவர்களும் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று மனத்தை உறுதிப்பாடு செய்துகொண்டு பிரயாணத்தை நடத்தினார்கள். இரண்டொருநாள் சென்ற பின் சண்டமாருதம் ஒன்று வீசி உல்லாசனுடைய கப்பல்களை அங்குமிங்கும் அலைத்துப் பெருங்கஷ்டத்தை யுண்டாக்கிற்று. மூன்றுநாள் ஆகாயத்திலிருந்த மேகங்கள் விலகி ஸூர்யப்பிரகாச முண்டாயிற்று. உல்லாஸன் இதாகாவுக்கு யாதொரு தடையுமில்லாமல் கப்பல்களை நடத்திக்கொண்டு போகலாமென்று நம்பிக்கைகொண்டிருந்தான். இப்படி யிருக்கையில் மேல்காற்று வீச ஆரம்பித்துக் கப்பல்கள் இதாகாவுக்குப் போகாமல் தடை செய்யப்பட்டன. பத்து நாளிவ்வாறலைந்தபின் உல்லாசனும் அவனாட்களும் 'லதபுக்' என்ற நாட்டார் துறையைச்சேர்ந்தார்கள். அவ்வூரார் ஓர்மரத்தின் கனியையுண்டே ஜீவித்திருந்தவர்கள். குடிதண்ணீர் கப்பலுக்குக் கொண்டுவரவேண்டியதற்கு உல்லாஸன் தன் ஆட்களிற் சிலரைத் துறையிலிறக்கி அனுப்பினான். புதிதாய் வந்தவர்களுக்கு ஊரார் பலவுபசாரங்கள் செய்து தமதுணவுகளைக் கொடுத்தார். அதை வயிறாவுண்ட உல்லாஸனாட்கள் வந்த காரியத்தை முற்றிலுமறந்து நாடு நகரம் மனைவிமக்கள் எதையும் நினையாமல் மதிமயங்கிக் கிடந்துவிட்டார்கள். உல்லாஸன் சிறிது காலம் காத்துப் பார்த்தும் ஒருவரும் திரும்பி வாராமையால், "முன்பின்னறியாத துறையில் என் தோழர்களை இறக்கினேனே, அவர்கள் உயிரோ



டிருக்கிறார்களோ, கொலையுண்டார்களோ, என்ன செய்வேன்?" என்று துக்கப்பட்டதைச் செவியுற்ற வேறு சிலர், "மஹாராஜாவே, தாம் இவ்வாறு விசனித்தல் தகுதியன்று. எங்களிற் சிலர் நேரில்போய் நடந்த விஷயங்களைப் பார்த்து வருகின்றோம். அனுமதி அளித்தல் வேண்டும்," என்று விண்ணப்பிக்க, உல்லாஸனும் சம்மதித்தான். இவர்கள் நாட்டிற்குள் சென்று பார்க்குங்கால் தமது தோழர்களெல்லாரும் கள்ளுண்டு மயங்கினவர்கள்போல் கிடந்ததைக்கண்டு அவர்களைத் தொட்டெழுப்பி, "நமது அரசன் உமக்கிட்ட கட்டளையை முற்றிலும் மறந்தீர்களோ? குடிதண்ணீர் கொணரவந்த நீவிர் குடிவெறி கொண்டவர் போலிருக்கின்றீர்களே. ஊரையும் வீடு வாசல்களையும் மனைவி மக்களையும் பார்க்க உமக்கு விருப்பமில்லையா? உங்கள் நடவடிக்கைகளை நமதரசனறிந்தால் சிரஸாக்கினை செய்துவிடுவாரே. உறக்கத்தை விட்டெழுங்கள். கப்பலேறி ஊர் செல்வோம்" என்று சொல்ல, கனியுண்ட காளைகள் "எங்களுக்கு நாடும், மனைவியும், மக்களுந் தேவையில்லை. இங்கே எப்பொழுதுமிருந்து கனியுண்டு களித்திருப்போம். உங்களோடு கப்பலில் இனி யாத்திரைசெய்ய வரமாட்டோம்" என்று உறுதியாய்ச் சொல்ல, புதிதாய் வந்த உல்லாஸன் ஆட்கள் முன் வந்தவர்களை யெல்லாங் கயிற்றால் பிணித்துக் கப்பலிலேற்றிச் சிறைப்படுத்தி வைத்து 'லதபுக்' நாட்டிலிறங்கின ஸம்பிரமம் போதும் போதுமென்று நினைத்து இதாகாவை நோக்கிக் கப்பல்களை நடத்திக்கொண்டு போனார்கள்.

அன்றிரவு முழுமையும் பல வூர்க்கரையோரங்களாய் மரக்கலங்களை ஓட்டிக்கொண்டு போய் மறுநாளுதயத்தில் ஸீக்லாப் என்னும் ஜாதியார் வசித்த நாட்டின் கரை சேர்ந்தார். ஸீக்லாப்பர் பருத்தவுடலர்; தொழிலில் ஆட்டிடையர்; வேளாண்மைத் தொழில் செய்யாதவர்; உழுது பயிர்செய்யாமலே அந்தப் பூமியில் கோதுமையும் வாற்கோதுமையும் விளைந்தன; சட்டதிட்டங்களுள்ள ராஜகரம் அந்த நாட்டிலில்லை. மலையுச்சியிலுள்ள குகைகளில் ஸீக்லாப்பர் வசித்தனர். கணவனும் மனைவியும் குழந்தைகளும் தந்தலையாட்டமுள்ளவர்கள். மனம்போன போக்கெல்லாம் போனவர்கள். அவர்களுக்குக் கப்பலாவது தோணியாவது இல்லை. கைத்தொழிற் செய்பவரும் கிடையாது. அவர்கள் புறத்தேச யாத்திரை செய்வதுமில்லை. அந்த நாட்டுக் கடற்றுறையில் கப்பல்கள் தங்கும்படியான துறைமுகங்கள் மட்டும் மிகுந்திருந்தன. உல்லாஸன் தன் ஆட்களில் பன்னிரண்டு பெயர்களை இட்டுக்கொண்டு ஸீக்லாப்பர் நாட்டின் வளமை பெருமைகளைக் காண வென்று கப்பலை விட்டிறங்கிச் சென்றான்.

குடியிருக்கும் வீடுபோலத் தோன்றியமுதற் கட்டிடத்திற்குள் உல்லாஸனும் உடன் வந்தவர்களும் பிரவேசித்தார்கள். கைவேலைத் திறமொன்றுங் கண்ணிற்படவில்லை. இழைக்காத முழு மரங்களையே தூண்களாக வைத்திருந்தமையால் வேலைக்காரருடைய உடல்வலிக்கு அத்தாக்ஷி ஏற்பட்டதேயன்றிக் கச்சித வேலைக்காரர்கள் அந்த நாட்டிலுண்டென்பதற்கு ஸாக்ஷியம் ஒன்றுமில்லை. அந்தக் குகைக்குரியவனை நேரிற்பார்க்க அவாப் பிறந்தது. தானோபாயத்தினால் மூடர்களையும் வசப்படுத்திக் கொள்ளலாகும் என்னும் நம்பிக்கையால் உல்லாஸன் தன் கப்பல்களில் வைத்திருக்கும் சாராயத்தைப் பெருமிதமாய் வீட்டுக்குடையவனுக்குத் தந்து அவனால் உபகரிக்கப்படலாமென்றெண்ணங் கொண்டான். கிரேக்கர்கள் சாராயம் ஸுகந்தமானது. மஹா பலிஷ்டனும் தண்ணீரைக் கலக்காமல் அம்மதுவை மாத்திர முண்ணுதலில்லை. அதன் ஸுகந்தத்தை ஒருமுறை மோந்தவன் அதைப் பருகாமலிருக்க மனங்கொள்ளான். மதுவை உட்கொண்ட எவனுக்கும் வீராவேசம் பிறத்தலுண்டு.

உல்லாஸனும் அவனாட்கள் பன்னிருவரும் அக்குகைக்குட் பிரவேசிக்கும் போதே ஒரு தோற்பை நிரப்பிய சாராயத்தை எடுத்துப்போனார். அக்குகை பலபீமன் என்னும் ஒரு ராக்ஷஸனுடையது. அவன் மடைப்பள்ளியில் இறைச்சித்துண்டங்கள் மூலைக்கு மூலை சிந்திக்கிடந்தன. தொட்டிகளிலும் சட்டிகளிலும் ஆட்டுப்பால் கறந்து வைக்கப்பட்டிருந்தது. உயிர்ப்பிராணிகள் சிலவற்றை அடைத்திருந்த அறை ஒன்றிருந்தது; ஆடுகளை யெல்லாம் மேய்ச்சலுக்கு ஓட்டிப் போயிருந்தான். குகையின் புதுமைகளை உல்லாஸனும் அவன் தோழர்களும் பார்த்துக்கொண்டிருக்கையில், பலபீமன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு குகைவாயிலண்டை வந்தவுடன், தன் தலைமீதிருந்த விறகு மூட்டையைக் கீழே வீழ்த்தின சத்தம் இடி வீழ்ந்தாற் போலக் கிரேக்கர்கள் காதிற்பட்டது. உல்லாஸன் முதலானோர் மிகுந்த அச்சமுற்றார்கள். பலபீமன் பருமனில் பருவதம்போலிருந்தான்; வருணகுமாரனென்று பெருமை சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு நடுநெற்றியில் ஒரே கண்ணுண்டு. அவன் அதை உருட்டி விழிக்கையில் மனிதருக்குக் கர்ப்பங்கலங்கும். பெண்ணாடுகளை உட்புறத்தில் ஓட்டி, ஆணாடுகளை வெளியிலேயே நிறுத்திவிட்டான். இரவில் வேறொருவரும் குகைக்குள் பிரவேசியாதிருத்தலுக்கு ஒரு பெரிய பாறாங்கல்லை எளிதில் தூக்கி வாசற்படியை யடைத்துவிட்டு ராக்ஷஸன் உள்ளே வந்து கறவை ஆடுகளையெல்லாம் கறந்து பாலைத் தொட்டி

யிலும் சட்டியிலும் சேகரித்து நெருப்புமூட்டிச் சுற்று முற்றும் பார்க்கையில் உல்லாஸனுடன் வந்த சிலர் அவன் திருஷ்டியிற் பட்டார்.

அவர்களைக் கண்ட மாத்திரத்தில் பலபீமன் "நீர் யார்? வணிகரோ, திருடரோ?" என்று அதட்டியும் உரத்தும் கேட்க, கிரேக்கர்கள் பேச நாவெழாமல் பிரமித்து நின்று விட்டார்கள்.

உல்லாஸன் ஒருவன் மட்டில் துணிவாய் ராக்ஷஸ னிடத்திற் போய், "பிரபுவே, நாங்கள் திருடரு மல்ல, வணிகருமல்ல; த்ரோஜா நகரத்திலிருந்து திரும்பி வரும் கிரேக்கர், அத்ரியஸ் குமாரனுன ஆக மெம்னன் என்பவனுல் நடத்தப்பட்ட யுத்தத்தில் த்ரோஜா நகரம் அழிக்கப்பட்டது. தாம் எல்லோரிலும் வல்ல பிரபு; தமக்கு நாங்கள் ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்கிறோம். எங்களைப்போன்ற அதிதிகளுக்குத் தாம் அன்னபானுதிகள் தந்தால் கடவுளுடைய கிருபைக்குப் பாத்திராவீர்; அன்றேல் அவர் கோபத்தினுல் தமக் குக் கேடு விளையும்," என்றான்.

ராக்ஷஸன், "அடா முழுமூடா, தெய்வத்தினிடத் தில் பயம் வைத்தல் வேண்டுமென்று போதித்தலுக்கு இவ்வளவு தூரம் வருவானேடா, ஆட்டுப்பால் குடித்து வளர்ந்த உங்கள் தேவனுக்கு நாங்கள் எள்ளளவும் அஞ்சமாட்டோம். உங்கள் தேவர்களை விட நாங்கள் பலிஷ்டர்கள். வேண்டுமாயின் உங்கள் தேவனை எங்க ளோடு சண்டைசெய்து பார்க்கச்சொல். அந்த யுத்தத் தில் நீங்களும் சேர்ந்து கொள்ளலாம். அது நிற்க. கப்பல்களில் வந்தீர்களல்லவா, உங்கள் கப்பல்கள் எங்கு தங்கியிருக்கின்றன? உம்மோடு எத்தனைபேர் வந்திருக்கிறீர்கள்?" என்றான்.

உல்லாஸன் மஹா மேதாவியானபடியால், "மஹா பிர புவே, எங்களுக்குக் கப்பலுமில்லை, தோழர்களுமில்லை. எங்கள் கப்பல் பாறையில் மோதி உடைந்துபோயிற்று. இங்கு வந்திருப்பவர்களைத் தவிர மற்றவரெல்லாம் கடலில் மூழ்கி இறந்தார்கள்" என்று விடை பகர்ந்தான்.

ராக்ஷஸன் ஒன்றும் பேசாமலே சுற்றுமுற்றும் பார்த்து உல்லாஸன் தோழரிலிருவரைப் பிடித்துத் தரையி லடித்து மூளையைச் சிதறச்செய்து அவர்கள் மாம்ஸத் தையும் ரத்தத்தையும் உண்டு ஆட்டின் பாலைப் பருகிக் கீழே படுத்துறங்கினன். கீக்லாப்பர் நரமாம்ஸ பக்ஷி ணிகளென்றறிந்தே ஒருவரும் அவர்கள் துறையிலிறங் குவதில்லை. ராக்ஷஸன் நித்திரை செய்யுங்காலத்தில் உல்லாஸன் கத்தியை உருவிக்கொண்டு ராக்ஷஸனை ஒரே வெட்டாய் வெட்டி விடலாமென்றெண்ணங் கொண்டான். குகை வாசலையடைத்த கல் ராக்ஷ ஸனைத்தவிர மற்றொருவரும் பெயர்க்க முடியா தென்று யோசித்து அவனைக் கொல்லாமல் விட்டான். அன்றிரவு முழுதும் எந்த வேளையில் பிராணச்சேதம் வருமோ என்று அஞ்சிக்கொண்டே உல்லாஸனும் உடனிருந்தவர்களும் காலத்தைக் கழித்தார்கள்.

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

## அத்தியாயம் 4.

### ஸந்நிதி

*His Holiness*

உயர்ந்த சிற்பப்பணிகளுடன் அமைக்கப்பட்ட ஓர் மண்டபத்தின் மத்தியில், பொன் வெள்ளி முத லான உயர்வகை உலோகங்களால் நிர்மிக்கப்பட்டு, பட்டு மெத்தை தைக்கப்பட்ட ஓர் அழகிய ஆஸனத் தின்கண் அமர்ந்து, சீனு வெண்பட்டால் தைக்கப் பட்ட திண்டில் சாய்ந்துகொண்டு, உயர்ந்து பருத்த சரீரமும், பொன்னிறமாய், தளதளவென்று ப்ரகாசிக் கும் மேனியும், முகத்தில் செழித்து வளர்ந்து, இடை யிடையே நரைகளுடன் கலந்து மார்பின்மேல் துவ ளும் தாடியும், கழுத்துமுதல் கால்வரை துவளும் காஷாயப் பட்டு உடையும் தலையில் கட்டிய சால்வை யுடனும் சுமார் 45 வயதுள்ள நமது திருவூர் மடாதி பதிகள் வீற்றிருந்தார்கள்.

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபிரகாரம், நமது வீரர்கள் ஸந்நிதானத்துக்கு முன் அழைத்துச் செல் லப்பட்டார்கள். தர்மராஜன் மடாதிபதியைப் பார்த்த வுடன், மரியாதையாய் வந்தனஞ்செய்து பக்கத்தில் நின்றான்.

வலபத்ரனே ஸ்வாமிகளைப் பார்த்ததும் யாதொன் றும் செய்யத் தோன்றாமல், ஆச்சரியத்தாலும், பொரு மையாலும், சந்தோஷத்தாலும் வயிற்றெறிச்சலாலும் மாறி மாறி பாதிக்கப்பட்டவனாய் கற்சிலைபோல் திகைத்து நின்றான்.

வலபத்ரனைப் பார்த்தவுடன், ஸ்வாமிகளின் உடல் முழுதும் மின்சார ப்ரயோகமான்துபோல் திடீரென்று நடுநடுங்கிற்று. அவரது மலர்ந்த வதனமானது திடீ ரென்று கறுத்து ஓர் விகாரமடைந்தது. அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா?

ஆயினும் தன் மனக்கலக்கங்களையும் முகவிகாரங்களை யும் ஒருவாறு மறைத்துக்கொண்டு, மனோ தைரியத் துடன், வந்தவர்களை நோக்கி,

**ஸ்வாமிகள்.**—"வாருங்கள். உட்காருங்கள். தாங் கள் எவ்விடமோ? தங்கள் நாமதேயம்? இவ்விடம் வந்த விசேஷம் என்னவோ?" என்று பரபரப்புட னும் நடுக்கத்துடனும் வினவினர்.



**தர்மராஜன்.**—"எல்லாம் ஸந்நிதானத்தைத் தர் சித்து விட்டுப் போகலாமென்றுதான்.—"

**ஸ்வாமிகள்.**—"ரொம்ப ஸந்தோஷம். வேறே ஏதா வது விசேஷம் உண்டானுல் தெரிவிக்கிறது" என்று சொல்லிவிட்டு, உயர்பிறப்பையும் உத்தமகுணத்தை யும் தெரிவிக்குந் தர்மராஜனிடமிருந்து பதில் எதிர் பார்ப்பவர்போல் அவன் முகத்தைப் பார்த்தார்.

தர்மராஜு பதிலுரைக்க ஆரம்பிக்குமுன் நமது **வலபத்ரன்** "ஏதோ ஸந்நிதானத்தைப் பார்த்து ரொம்ப நாளாச்சுது. சங்கிலிகருப்பன், ஷம்ஸுதீன், ஜான், ஸந்நிதானம்—அடியேன்—வலபத்ரன்"

ஸ்வாமிகளின் முகத்தில், கோபமும் துக்கமும், மாறி மாறி வேதனை செய்ய, ஸ்வாமிகள் வலபத்ரனை நோக்கி "உம்முடைய பெயர் வலபத்ரனு?" என்றார்.

வலபத்ரன் "ஆமாம். ஸந்நிதானம் ஆதியில் சங் கிலிக் கருப்பனுய்ப்பிறந்து—கர்னுடக நவாப் ராணுவத் தில் 'ஷம்ஸுதின்'—கும்பினியான் ராணுவத்தில் ஜான்—முதலானவர்களுடைய நெருங்கிய சினேகி தன்—சந்நிதானம்—இப்பொழுது—அடியேன்—"

தர்மராஜுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வலபத் ரன் இவ்வளவு ஸரஸமாய் வெகுநாள் பழக்கம்போல் பேசுவதும் ஸ்வாமிகளின் முகம் அடிக்கடி வாடுவதை யும் பார்க்க அவனுக்கு ஆச்சரியமும் சந்தேகமும் உண் டாயின.

**ஸ்வாமிகள்.**—"வலபத்ரரே அவர் யார்?"

**வலபத்ரன்.**—"அவரா—அவர்—பெரிய மனுஷ் யாள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே— அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவரென்று சொல்லிக்கொள்ளு பவர்களில் ஒருவர் அவர்—இப்பொழுதுதான் நமது கோஷ்டியிலே சேர அதிக ஆவலுடன்—இருக்கப்பட் டவர். நல்லபுத்திசாலி. சீக்கிரம் நமக்கு மேலேவரக் கூடியதிறமையுடையவர். ஆனுல் ரொம்பயோக்யர்—" என்று முன்னும் பின்னும் சம்பந்தமன்னியில்சொல்ல

**ஸ்வாமிகள்.**—திடீரென்று ஆஸனத்தினின்றும் எழுந்து, "வலபத்ரரே தாங்கள் மாத்திரம் உள்ளே வரலாமோ? உமது நண்பர் இங்கேயே இருக்கட்டும்— அவாள்-மனது—

**தர்மராஜன்.**—"அதனுல் பாதகமில்லை. தாங்கள் திரும்பிவரும் வரை நான் இவ்விடத்திலேயே காத்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொல்ல, வலபத்ர னும், ஸ்வாமிகளும், அவ்வறையினின்றும் வெளி யேறி 'ஸரஸ்வதி மஹாலு'க்குள் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வறையானது முன்காலத்தில் ஓர் பெரிய 'புஸ் தகசாலை' (Library) யாய் உபயோகிக்கப்பட்டிருந் தது. மாலிக்காபரின் கோபாக்னிக்குத்தப்பின சில ஏட் டுப்பிரதிகள் மாத்திரம், இப்பொழுது, சில கட்டிய கயிறுகள் அறுந்ததாகவும், சில பாகங்கள் கரையான் களுக்கு இரையானதாகவும், சில முறிந்தும், சில ஒட் டடைக்குள் அகப்பட்டதாகவும், பற்பல விதமாய்க் காலக்கொடுமைக் குட்பட்டு, கவனிப்பாரன்றி, நாச மடைந்து கொண்டிருந்தன.

**வலபத்ரன்.**—உள்ளே நுழைந்ததும் அதிக ஸரஸ மாய் ஸ்வாமிகளை நோக்கி "என்னப்பா! ஷம்ஸு தீன்—!

**ஸ்வாமிகள.**—கோபத்துடன் வலபத்ர! இனி மேல் இவ்வாறு பிதற்றாதே. இந்தமாதிரி யெல்லாம் அழைக்காதே—உன் தடித்தனம்—"

**வலபத்ரன்**—"ஸரி! என்னப்பா! ஜான்!"

**ஸ்வாமிகள்.**—"என்னடா தடியா! இந்தமாதிரி"

**வலபத்ரன்.**—என்னப்பா! சங்கிலி!

**ஸ்வாமிகள்.**—"என்ன!" என்று பற்களை நற நற வென்று கடித்தார்.

வலபத்ரன் கைகளைக்கொட்டி மடமட வென்று சிரித்து "பேஷ்! சாமியாரே பேஷ்!"

"சங்கிலி யாய்த் துலுக்கனுய்,
'ஜான்' என்ற கிறிஸ்தவனுய்,
சாமி யாராய்—"

அடேடே! பேஷ், சாமியார்! இனிமேல் உன் னைச் சாமியார் என்றே கூப்பிடுகிறேன். அடே டே உனக்கு வேட்டிகட்டிக் கொள்ளுவது போலிருக் கப்பா! நீ மதம் விட்டு மதம் மாறுவது—"

**சாமியார்.**— (இச்சரிதம் முழுதும் இப்பெயரா லேயே இக்கதாபுருஷனைக் குறிப்பிடுவோம்). அடே! வலபத்ர உன்னை இப்படியே தூக்கிப் பக்கத்திலுள்ள அகிழில் எறிந்து விட்டால்—

**வலபத்ரன்.**—( கண்களைச் சிமிட்டிக்கொண்டு ) "அதுமுடியாதே! முதலாவது—துணியமாட்டாய்.— துணிந்தாலும் உன்னுல் முடியாது. உன்னைப் பார்க் கிலும் நான் சிறுவயது—பலசாலி," என்று சொல்லித் தன் வலக்கையைக் குவித்துக்கொண்டு தன் முன் கையின் சதைப் பற்றைப் பார்த்து மகிழ்ந்து, குவித்த கையைச் சாமியாரின் தலைக்கு நேரே பிடித்தான்.

இதற்குள் சாமியார் நடுநடுங்கி வலபத்ரன் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

வலபத்ரன் கீழே கிடந்த ஓர் "ஏட்டை" கையிலெடுத்து அங்கிருந்த ஓர் தூணில் ஓங்கியடிக்கவே அது பழைய பிரதியானதால் சிதறிப்போய் விட்டது.

**வலபத்ரன்.**—"ஏ! இப்பொழுது இந்த ஏடுகள் உன் வசத்திலகப்பட்டு சீரழிவதை, இவ்வேடுகள் எழுதினவர்கள் கண்டால் வயிறெரிவார்கள். உன் வீட்டிலே விறகுக்குக்குறைவில்லை மழைகாலத்தில்—"

**சாமியார்.**—என் பரிசாரகன் இதைத்தானே உபயோகிக்கிறான். நன்றாய் எரிகிறதாம்.

**வலபத்ரன்.**—சாமியாருக்கு மூளை இருந்தாலல்லவோ பரிசாரகனுக்கு மூளை—

**சாமியார்.**—சரி! வலபத், சரி! நீ வந்த கார்யம்?

**வலபத்ரன்.**—(கண்களைச் சிமிட்டிக்கொண்டு)"எல்லாம் ஸந்நிதானத்தில் யாசகத்தின்பொருட்டுத்தான்."

**சாமியார்.**—"நான் என்ன செய்யக்கூடியது. நானே தரித்திரனிலேயும் தரித்திரன்—"

**வலபத்ரன்.**—"இதெல்லாம் வீண்பேச்சு. ஒரே வார்த்தையாய்ச் சொல்லுகிறேன். நீ பிறந்து, துலுக்க மதத்தைச் சேர்ந்து 'ஷம்ஸூதீன்' என்று கர்னாடக சேனையிலிருந்ததும், அதில் ஸூபேதார் 'ஆலிம்' என்பவரின் கொலை—'

**சாமியார்.**—திடுக்கிட்டு நடுநடுங்கினார்.

**வலபத்ரன்.**—பயப்படாதே—ஆகையால் அதுவும் தெரியும், கிறிஸ்தவனாய் மாறி கும்பினிப்பட்டாளத்தில் 'ஜான்' என்று திரிந்ததும் அதைவிட்டு ஓடிவந்ததும், இப்பொழுது, திருவூர் பண்டார ஸந்நிதிகளாய் விளங்குவதும்—எல்லாம் தெரியும். உன் அதிருஷ்டம் நீ இந்தத் தசையிலிருக்கிறாய். என் அதிருஷ்டம் நான் திண்டாடுகிறேன். அது போகட்டும், ஆகையினாலே—நான் சொல்லுவது!—என்னையும் சேர்த்துக்கொள்—இரண்டுபேரும் சேர்ந்தோமோ உலகத்தில் நமக்கு நிகரில்லை. சிஷ்யனாய் இருக்கிறேன்–அல்லது—என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன். எனக்குப்பணம்—பணந்தான் குறி. "பணமில்லார்க்கிவ்வுலகமில்லை"—என்னவோ யாரோ சொன்னபடி,—பணம்—பணம்—பணந்தான் எனக்கு வேண்டும். எல்லாம் நீயே அனுபவிக்க ஆசைப்படாதே. பேராசை பெருநஷ்டம், எனக்கு ஏதாவது சரியானவழி சொல்லவில்லையோ—அப்பொழுதும் உன்பாடும் திரிசங்குஸ்வர்க்கந்தான். வேட்டைக்குப்போவதில் ஒன்றுக்கு, இரண்டு நாய் இருப்பது நல்லதுதானே. சொல்லு! நாமிருவரும் சேர்ந்தே—

**சாமியார்.**—மனம் நொந்தவராய், வலபத்ரனை நோக்கித் தீனமான குரலுடன் "வலபத்ர, வீணாக என்னையும் கெடுத்து, உன்னையும்—"

**வலபத்ரன்.**—அதென்ன! இருந்தால், ஹாயீ! சௌக்கியமாய் இருக்கவேண்டும்!

**சாமியார்.**—நான் ஒரு ஏற்பாடு செய்கிறேன். எனக்கு யார் எஜமான் ஆக இருக்கின்றாரோ, எவருடைய பேருதவியால், நான் இவ்வளவாவது காலக்ஷேபஞ்செய்து வருகிறேனோ அவரிடத்தில் நீயும் ஓர் வேலைக்காரனாக—

**வலபத்ரன்.**—"ஆனால், சும்மா பரிசாரகன், மசாலிச்சி—இப்படியெல்லாம்," என்று தன் மீசையை முறுக்கிக்கொண்டான்.

**சாமியார்.**—அப்படி யொன்றுமில்லை, உன் அந்தஸ்துக்கும், உன் ஆண்மைக்கும், உன் பலத்துக்கும் தக்கபடி—நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நீ மாத்திரம் ஒரு உதவிசெய்யவேண்டும்.

**வலபத்ரன்.**—"ஹா! ஷம்ஸூதீன்! ஆ ஜான், ஆ சாமியாரே மறந்தல்லோ போய்விட்டேன். நீ உயிரைக் கொடுக்கச்சொன்னாலும் கொடுக்கிறேன்—சொல்!"

**சாமியார்.**—என் பூர்வவிருத்தாந்தத்தை நீ வெளியே சொல்லி என் பிழைப்பைக் கெடுத்து விடாதே. உனக்குக் கோடிப்புண்ணியமுண்டு. இந்த மாதிரியெல்லாம் முன்போலச் சிறுபிள்ளைத் தனமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தால், நாலு பேர்கள் இருக்கும்பொழுதும் வாய்தவறி வந்துவிடும். உன் குடிவெறியாலும் பிதற்றிவிடுவாய்—ஆகையால்—நீ தயவுசெய்து—

**வலபத்ரன்.**—"இந்தப் பதினெட்டாம் படியான் ஆணை சொல்லுகிறேன்! நீ சொன்னபடி நீ செய், நான் சொன்னபடி நான் செய்கிறேன். இதுதான் நமக்குள் ஒப்பந்தம். நீயும் அப்படியே ப்ரமாணஞ்செய்—ஆ!—நீ எதை வைத்து ப்ரமாணம் பண்ணப் போகிறாய், மதுரை வீரனா? கொரானா, பைபிளா, அல்லது கீதையா—உனக்குத்தான் ஒருமதமும் ஸ்திரமில்லையே!" என்று சொல்லிக் குலுங்கச்சிரித்தான். இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், பக்கத்து அறையிலிருந்து "ஐயோ! ஐயோ!" என்று ஓர் பெருங்கூக்குரல் கேட்டது. சாமியார் "இலாபில்லா! அல்லாஹோ! தொலைந்தேனே! தொலைந்தேனே"என்று தலையிலடித்துக்கொண்டு சத்தம் பிறந்த அறையை நோக்கி விரைந்தோடினான். வலபத்ரன் "அட்டே மூடப்பயலே! பூர்வஞாபகம்போலிருக்கிறது. என்னை யிவ்வளவு போதித்துவிட்டுத்தான் 'அல்லா,' 'அல்லா' என்கிறான்" என்று சிரித்துக்கொண்டு தானும், சாமியார்கூட அவ்வறைநோக்கி ஓடினான்.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 2. ஸாதாரண உபமானங்கள்—குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற்போல

Familiar Metaphors—Monkey's treatment of garlands

**குறிப்பு.**—உபமான விளக்கம்—உபமேய விஷயங்கள்—மதவிஷயப் பொருத்தம்—விளக்கக் கதைகள்.

குரங்கு மிகச் சஞ்சலமுடைய ஒரு ஜந்து. அது இருந்தவிடத்திலிராது எப்பொழுதும் எதையாவது ஒன்றைச் செய்துகொண்டு ஓடியாடித் திரியும். தன் மனதில் தோன்றுவதற்கு ஏற்ப அது காரியங்களை நடத்திவிடும். இப்படிப்பட்ட ஜந்துவிடம் பார்வைக்கு அழகாயும் விதம் விதமான வர்ணங்கள் வாஸனைகள் உடையதாயும் உள்ள புஷ்பங்களால் அமைந்த மாலை ஒன்றைக் கொடுத்துவிட்டால் அது அதை முதலில் கையில் எடுத்துப் பார்க்கும். அப்பொழுதே அந்த மாலை குலுங்கி அசையும். உடனே இது ஒரு ஜந்து என்ற அச்சம் வந்துவிடும். அநேக வர்ணங்கள் அதன் பயத்தை அதிகப்படுத்தும். உடனே அதை அதிகமாக அசைத்துப்பிய்த்து எறியப்பார்க்கும். மாலை அதிகமாக வளைந்து அசையத் தொடங்கும், அதற்குப் பாம்பு என்ற ஞாபகம் வருமோ என்னமோ! அதை அசைத்துத் தேய்த்துச் சிதறி அடித்துவிடும். மாலை இறந்துவிட்டது என்ற நம்பிக்கை அதற்கு வந்ததும் அதன் அருகில் செல்லும். அதன் வாஸனை தாக்கத் தொடங்க, கசங்கிய புஷ்பங்களை எடுத்துமுகர்ந்து நோக்கிக் கொஞ்சம் ஆனந்தத்தை அடையும். ஆதலால் குரங்கின் கையில் மிக மிருதுவான புஷ்பமாலை அகப்பட்டால், அதை உள்ளபடி வைத்துப் பார்த்தும் முகர்ந்து பார்த்தும் ஆனந்திக்கலாம் என்பதை உணராது அதை முதலில் கசக்கி எறிந்து பின்னர் வாஸனையை மாத்திரம் அனுபவித்து நிற்கும்.

இந்த உபமானம் ஸாதாரணமாக உலக விஷயங்களில் உபயோகப்பட்டு வருவது. ஒரு வஸ்துவின் அருமை அறியாத ஒருவனிடம், அது போய்ச்சேர, அதைக்கெடுத்து அனுபவிக்கும் ஸமயங்களில் எல்லாம் இந்த உபமானத்தை உபயோகிக்கலாம். மிகுந்த அழகுடையவளாயும் குணவதியாயும் உள்ள பெண்சாதி, வீட்டில்இருக்க அவள் மனம் நோகும்படி கொடியவழிகளில் நடந்து பரஸ்திரீகளிடம் ஈடுபட்டு மானமிழக்கும் பாதகன், பூமாலையை அலங்கோலப் படுத்தும் குரங்கே. நல்ல உடைகளை அணியும் விதம் தெரியாது அல்லது நல்ல துணிகளைத் தக்க உடைகளாக அமைக்கத் தெரியாது வீணாக்கும் குணமுடைய ஒருவன் இவ்வுபமானத்திற்கு ஏற்றவன். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவன் போல ஸகல ஸுக விஷயங்கள் அமையப்பெற்றிருந்தும் அவைகளை நீக்கித் தாழ்ந்தவைகளில் உழல அவைகளை உபயோகப்படுத்தும் கண்மூடிகளான பணக்காரர்களே இத்தகையோரிற் சிறந்தவர். நல்ல பாடுபட்டுழைக்கும் வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு அவர்களை ஸந்தோஷப்படுத்தி வேலையை முடித்துக்கொள்ளத் தெரியாது அவர்களைப் புண்படுத்தி மிகுந்த கஷ்டத்தின் பேரில் அப்ரீதியாக வேலை வாங்கும் அதிகாரி இக்குரங்கு என்பதற்கு என்ன தடை? ஆகவே குரங்கின் கைப்பட்ட பூமாலையைப் போலச் சீரழியும் விஷயங்கள் உலகில் பலவுள. அவ்வவற்றை எளிதில் கண்டு தெளிய முற்கூறிய சில உதாரணங்களே போதும்.

இனி மதவிஷயமாக இவ்வுபமானம் எவ்வாறு எடுத்தாளப்படுகின்றது என்பதை ஆராய்வோம். தகுந்த ஸ்வரத்தோடு சொல்லமுடியாது ஸபைகளில் வாயில் வந்தபடி எல்லாம் இழுத்து எடுத்துரைக்கும் திறனுடையோர் கையில் வேதம் குரங்கின்கைப் பூமாலை போலாய்விடும் என்னலாம். இது தக்ஷிணதேசத்தில் சிற்சில கூட்டத்தார் தவிர மற்றை வேதத்தை உச்சரித்தாள்பவர் பெரும்பாலார் விஷயங்களில் முற்றிலும் பொருந்தும். இவர்கள் அதிகமாகப் பலரறிய ஸபைகளில் வேதங்களை எடுத்து ஆளாமலிருப்பது நலம். இம்மாதிரியேதான் மதவிஷய உண்மைகளின் சிறப்பை உணராது அவைகளைக் குதர்க்கம் செய்பவரும். கடவுள் எங்கும் பரவியிருக்கிறார் என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவான உண்மை. ஒருவன் இதை வைத்துக்கொண்டு இதன் எல்லையை உணராது, 'என் கெட்ட எண்ணங்களுள்ளும் கடவுள்தானே இருக்கிறார். இந்தப் பாழும் கடவுள்தானே என்னைக் கொடியவனாக்குகிறார்' என்று கடவுளை வெறுத்துக்கொண்டு, கெட்டவழியில் நடப்பதை விடாது நிற்பவன் முற்கூறிய மதவிஷய உண்மை சிதறி அடிக்கும் குரங்கே எந்த உண்மையால் மேன்மை பெற்றுச் சாந்தி

பெற்று நித்ய திருப்தனாக வேண்டுமோ, அதைக் கொண்டே இந்த மஹான் மாருச்சஞ்சலத்தை ஸம்பாதிக்கிறானே! இவனைவிட அறிவுடையோர் உலகில் யாராவது உண்டோ! ஆகவே அரிய மதவிஷயங்களை அதிகாரிகளில்லாதவர்களுக்கு உணர்த்தினால் அது குரங்கின் கையில் கொடுத்த பூமாலைபோல நாசமடைந்து கைக்கொள்பவனையும் மீளாநரகில் வீழ்த்தும். இதற்கேற்பவேதான் அரிய வேதாந்த உண்மைகள் அச்சில் வந்து விட்டபடியால் அவைகளைக் கற்றுணர்ந்து அநேகர் அஸாரவேதாந்தம், கலுவாய் வேதாந்தம், விதவை வேதாந்தம், முதலிய ஆபாஸ வேதாந்தங்களைப் பின்பற்றி, ஈச்வரபக்தி, தானதர்ம புத்தி, விஷய வைராக்யம் முதலியவைகளை இழந்து தத்தளித்துக்கொண்டு வாசாவேதாந்தம் பேசி வருகின்றனர். இவர்கள் கையில் அகப்பட்ட வேதாந்தம் குரங்கின் கைப்பட்ட பூமாலையே. ஆகவே எந்த உண்மையையும் எல்லை உணராது மனம்போனபடி திருப்பிக்கொண்டு தத்தளிப்பதே இந்த உபமானத்திற்குத் தக்க உபமேயம்.

இந்த உபமானத்திற்கேற்ற கதை ஒன்று ஷேக்ஸ்பியர் இயற்றிய அற்புத நாடகங்களில் ஒன்றாகிய ஓதெல்லோ என்பதில் காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வெனிஸ் என்ற பட்டணத்தில் ஒதெல்லோ என்ற ஒரு மூர் ஜாதியானிருந்தான். இவன் அந்த நாட்டு ஸேனாபதி. நாட்டிற்காக வெகு பாடுபட்டு எதிரிகளைத் தலை எடுக்க ஒட்டாது அடித்து மிகுந்த உதவி புரிந்தவன். அந்த ஊர் ஆலோசனை ஸபையாரில் ஒருவராகிய ப்ரபான்ஷியோ என்பவர் இவனை அடிக்கடித் தமது வீட்டிற்கு அழைத்துவந்து இவன் வீரச்செயல்களை இவன் வாயிலிருந்தே கேட்டு ஆனந்திப்பது வழக்கம். இப்படி இருக்கையில் இவைகளைக் கேட்டுவந்த ப்ரபான்ஷியோ பெண்ணாகிய டேஸ்டிமோனா என்பவளுக்குப் பெரிய அபாயங்களிலிருந்து தீரமாக வெளியேறிய ஒதெல்லோவிடம் மெய்க்காதல் பிறந்தது. ஒரு நாள் நள்ளிரவில் தகப்பனுக்குத் தெரியாது இருவருக்கும் கல்யாணமும் நடந்தேறியது. இதை உணர்ந்த தகப்பன் ராஜ ஸபைக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்து ஒதெல்லோவுக்குத் தக்க தண்டனை வரும்படி செய்து கல்யாணத்தை உடைத்துவிட வேண்டும் என்று முயன்றான். அதே ஸமயத்தில் நாட்டை எதிரிகள் படை எடுத்து வர ஒதெல்லோ ஸஹாயம் அரசனுக்கு அவசியம் வேண்டியிருந்ததாலும், டெஸ்டிமோனாவும் நேரிட அரசன் முன்னிலையில் தன் மெய்க்காதலை வெளியிட்டதாலும் ப்ரபான்ஷியோ எண்ணியபடி யாகாமல் போய்விட்டது. டெஸ்டிமோனாவும் தகப்பனை மிக வருத்த மனம் வாராது ஒதெல்லோவோடே சண்டைக் களத்திற்குப் புறப்பட்டு விட்டாள். அயல் வாழ்ந்தால் ஆறு மாதம் பட்டினி என்ற கதையாக விருக்கும். ஒரு கீழ் அதிகாரி ஒதெல்லோவிட மிருந்தான். அவன் பெயர் ஐயாகோ. அவன் எப்படியாவது இவர்கள் காதலைப் பிரித்து ஆபத்து விளைக்க வேண்டுமென்று சூழ்ச்சிகள் செய்தான், ஒதெல்லோவிற்குக் கீழ் அடுத்த படியில் மிக அழகு வாய்ந்தவனாயும் நல்லவனாயும் அவன் பிரீதியை ஸம்பாதித்தவனாயும் உள்ள காஸியோ என்ற ஒரு உத்யோகஸ்தன் இருந்தான். அவன் பேரில் ஒரு பழி சுமரும்படி செய்து அவனுக்கு வேலை போகும்படி செய்தான். அவனிடம் சென்று டெஸ்டிமோனா மூலமாகப் போனால் மறுபடி வேலை கிடைக்கும் என்று தூண்டிவிட்டு, ஒதெல்லோவிடம்போய் டெஸ்டிமோனாவுக்கு அழகிய காஸியோவிடம் காதல் உண்டாய்விட்டது என்று தூபம்போட்டுவிட்டான். உண்மையில்தான் மிகுந்த அழகு வாய்ந்தவனாய் இல்லாதிருந்ததாலும், டெஸ்டிமோனாவின்மெய்க்காதலின்சிறப்பை உணராததாலும், 'போரிலும் கொள்ளிவைத்துமாரிலும் அடித்துக்கொள்ளும்' குணம் வாய்ந்த ஐயாகோவின் சூதை உணராததாலும், ஒதெல்லோவுக்கு டெஸ்டிமோனா மேல் ஸந்தேகம் வந்துவிட்டது. காஸியோவுக்காக அவள் பரிந்துகொண்டுவர இந்த ஸந்தேகம் திடப்பட்டுவிட்டது. ஐயாகோவும் சிற்சில குறிகளால் இதை நிலை நிறுத்திவிட்டான். முடிவில் ஒதெல்லோ டெஸ்டிமோனாவைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்து ஓர் இரவில் அவள் கழுத்தைப்பிடித்து நசுக்கிவிட்டான். அப்பொழுதுகூட கணவனைக் கடிந்துகொள்ளாது அவள் உயிர் விட்டாள். இந்த விஷயத்தில் ஸீதையைவிட இவள் மிகச்சிறப்புற்று விளங்கினாள். இவள் இறந்ததும் ஐயாகோவின் பெண்சாதி மூலமாக அவன் சூது வெளிப்பட்டது. பின்னர் ஒதெல்லோ டெஸ்டிமோனாவின் சிறப்பை எடுத்துப் பாராட்டித் தானும் உயிர் விட்டான். டெஸ்டிமோனா ஒதெல்லோ என்னும் குரங்கின் கைப்பட்ட பூமாலை என்று கூறவும் வேண்டுமோ?



## பொதுக்குறிப்பு

1. உபமான விளக்கம்.
2. உபமேய விஷயங்கள்.
3. மதவிஷயப் பொருத்தம்.
4. விளக்கக் கதைகள்.

## இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. நெருப்பிற் பட்ட மெழுகைப்போல.
2. கருடனைக்கண்ட பாம்புபோல.
3. வெண்கலக் கடையில் யானை புகுந்தாற் போல.
4. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற் போல.
5. ஆடிக்காற்றில் இலவம்பஞ்சு பறப்பதுபோல.
6. ஸூர்யனைக் கண்ட பனிபோல.
7. காயும் பயிருக்குப் பேயும் மழைபோல.
8. எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்ததுபோல.
9. சிவபூஜைவேளையில் கரடியைவிட்டடிப்பதுபோல.
10. கற்பூரமலையில் ஆக்நேயாஸ்திரம் ப்ரயோகித்தது போல.
11. பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோல.
12. யானை தன்தலையில் மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வது போல.
13. பார்த்தால் பசுபோல பாய்ந்தால் புலிபோல.
14. புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டாற்போல.
15. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல.
16. * பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல.
17. * இலவுகாத்த கிளிபோல.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models

(13) *A curious thief catcher*:—A thief prowling about the hall of a hotel in search of plunder, came upon a basket filled with vegetables. Inserting his hand to secure the contents, his fingers were severely bitten by a scorpion, which happened to be in the basket. He withdrew his hand with all speed, but could not manage to shake off the encumbrance. The scuffle, and the cries which the bitten thief gave vent to, brought in the landlord and the rest of the household. Before thief could escape, he was secured, and given into custody.

### ஒரு விநோதமான திருடன் பிடிப்போன்

ஒரு சாப்பாட்டு விடுதியிலிருந்தகூடத்தில்கொள்ளை விரும்பி ஒரு திருடன் உலாவிக்கொண் டிருக்கையில் காய்கறிகள் நிறைந்த கூடை ஒன்றைக் கண்டான். அதனுள்ளிருந்தவைகளை எடுத்துப் பத்திரப்படுத்திவிட அதனுள் கையிட அந்தக்கூடையுள்ளிருந்த தேள் ஒன்று அவன் விரல்களில் கடுமையாகக் கொட்டிவிட்டது. அவன் கையை உடனே எடுத்துவிட்டபோதிலும், கூடை சரிந்து ஏற்பட்ட தடையை அவனால் நீக்கிக் கொள்ள முடியவில்லை. அங்கு ஏற்பட்ட சச்சரவு, வலி பொறுக்கமுடியாது திருடன் இட்ட கூக்குரல் முதலியவைகள், விடுதிக்காரரையும் அங்கிருந்த மற்றும் உள்ளோரையும் அங்கு வரும்படி செய்தது. திருடன் தப்பியோடும் முன் பிடிபட்டு காவற்காரர் வசம் ஒப்புவிக்கப்பட்டான்.

(14) *Why can we put out a candle by blowing?*:—The candle, like a fire, goes on burning after it is lit, because it produces heat enough to warm the stuff of which it is made up, to the temperature at which it combines with oxygen. The wax of the candle is made into gases by the heat, these hot gases are burnt with oxygen of the air. If we blow the candle, we blow away the hot gases with our breath, and, though our breath is warm, it is not nearly warm enough to keep the candle alight. What really happens, then, is that, by blowing, we lower the temperature of the candle to a point below that at which the stuff of the candle and the oxygen of the air are capable of combining with each other. We thus put the candle in the same state as it was before it was lit, and it will not start burning again until new heat is supplied to it by another match.

### நாம் ஊதுவதால் மெழுகுவத்தி அணைவானேன்?

மெழுகுவத்தியில் அடங்கி யிருக்கும் வஸ்துக்களைப் பிராணவாயுவோடு பொருந்த சேர்க்கத்தகுந்த உஷ்ண நிலைக்கு ஏற்றப் போதுமான உஷ்ணம் மெழுகுவத்தி ஏற்றிய உடன் உண்டாவதால் அதுவும் ஸாதாரண நெருப்பைப்போல ஏற்றிய பின்னர் எரிந்துகொண்டே இருக்கும். மெழுகுவத்தியின் மெழுகு உஷ்ணத்தால் வாயுக்களாக மாற ஸாதாரண வாயுவிலுள்ள பிராண வாயுவோடு சேர்ந்து எரிந்து போகின்றன. நாம்

ஊதுங்கால் நமது மூச்சுக் காற்றால் உஷ்ண வாயுக்கள் சிதறிப்போகின்றன. நமது மூச்சு உஷ்ணமாயினும், மெழுகுவத்தியை எரியும்படிசெய்யப் போதுமான உஷ்ணமுடையதல்ல. ஆகவே, அதன் வஸ்துக்கள் ஸாதாரண வாயுவிலுள்ள பிராணவாயுவுடன்பொருந்த சேருவதற்கு வேண்டிய உஷ்ண நிலைக்குக் கீழ் மெழுகுவத்தியின் உஷ்ணத்தை இறக்கிவிடுவதே நாம் ஊதுங்கால் உண்மையாய் நடப்பது. இவ்வாறு மெழுகுவத்தி எற்றுவதற்கு முன்னிருந்த நிலைக்கே அதை இப்பொழுது கொண்டுவந்து விடுகிறோம். வேறொரு நெருப்புக்குச்சியால் புதிய உஷ்ணம் வந்து சேர்ந்தால் அல்லது அந்த மெழுகுவத்தி மறுபடி எரியத் தொடங்காது.

(15) *Boldness*:—It deserves to be considered that boldness is ever blind, for it sees not dangers and inconveniences. Therefore it is bad in council though good in actual work. The right use of bold persons, therefore, is that they never command in chief but serve as seconds under the direction of others. For in council it is good to see dangers, and in actual work not to see them, unless they are very great. If in boldness he ignores great dangers, he belongs to the class of fools who rush in where angels fear to tread. Fortune sometimes befriends the bold.

### தைர்யம்

ஆபத்துக்கள் அஸௌகரியங்கள் முதலியவைகளைக் கவனியாதிருப்பதால் தைர்யத்திற்கு ஒருவித கண் மூடித்தனம் உண்டென்பது நாம் ஆராயத் தகுந்ததே. ஆதலால் அது கார்யஸித்திக்கு அவசியமாயினும், ஆலோசனைக்கு மிகக் கெட்டது. எப்பொழுதும் தலைமை வஹியாது, பிறர் ஏற்பாட்டின் கீழிருந்து தொழில் புரிவதே தைர்யவான்களது நேர்மையான உபயோகம். ஆலோசனை செய்யுங்கால் அபாயங்களைக் கருதுவது நன்மை, தொழில் நடத்துங்கால் மிகப் பெரியவைகளாக விருந்தாலன்றி அபாயங்களை நினைக்கவே கூடாது. தைர்ய அதிகத்தில் பெரிய அபாயங்களை மதியாதிருப்பவர், பெரியோர் நாட நடுங்குமிடங்களில் புகுந்து கலக்கும் மூடர்கள் வகுப்பினரே சிற்சில வேளைகளில் தைர்யவான்களுக்கு அதிர்ஷ்டமும் அனுகிவிடலாம்.

## நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

நாயகி.—(கண்ணீர் விட்டுக்கொண்டு) இந்தக் கதையின் முடிவு இன்னமும் தெரிந்ததில்லையா? ஸரி—வா—மித்ராவஸுவைப் போய்க் காணலாம் வா.

தோழி.—(வியஸனத்தோடு—தனக்குள்) ஐயோ! என்ன மெய்ம்மறந்து, உயிர்மேல் கவலையில்லாமல், அவள் வார்த்தை வெளிவருகிறது. (உரக்க) நாயகி! முன்னமே மனோஹரிகை அங்குபோனாள். ஒருவேளை, எனது தலைவன், மித்ராவஸு இங்கையே வரவுங்கூடும்.

(மித்ராவஸு வரல்)

மித்ராவஸு.—என் தந்தையால் இவ்வாறு ஆணையிடப்பட்டிருக்கிறேன்—'குழந்தாய்! மித்ராவஸு! அரசிளங்குமாரன் ஜீமூதவாஹனன் நமதருகே இருப்பதாக நாம் அறிகிறோம்; அவனே தக்க வரனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான்; ஆகையால் அவனுக்கே மலையவதியைக் கொடுக்கப்படும்.' ஆனால் பிரிய மிகுதியால் எனக்கென்னமோ வேறுவிதமாகப் படுகிறது.

கலைநிறைந்து நெறிபுகழ்ந்த
கைநிறைந்து வீரநன்
னிலைநிறைந்து துணையிறந்த
வணைநிறைந்து நெடுமரு
ளலையெரிக்க வுயிர்த்துறக்கு
மாண்மைவிஞ்சை மணியினை
விலையிறந்த பின்னைவேட்டன்
வேட்டுமெற்கு துன்பமும்.

நான் இந்த ஜீமூதவாஹனன் கௌரியாலத்திற்கு அருகு சந்தனப்பொதும்பரில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இங்குதான் சந்தனத்தோப்பிருப்பது. இதனுள் போவேன்.

(உள் நுழைதல்)

விதூஷகன்.—(ஆத்ரத்துடன் பார்த்துக்கொண்டு) நண்பா! இந்தச் சித்திரப்பெண்ணை வாழையிலையால் மூடு. ஒருவேளை இங்கு வருகிற வித்தர் நாட்டு இளவரசு, மித்ரவஸு, அவளைக் காண நேரிடலாம்.

நாயகன்.—(சித்ரத்தை வாழை இலையால் மூடுகிறான்).

மித்ரா.—(உள் நுழைந்து) ராஜகுமாரா! உமக்கு மித்ராவஸு வந்தனமளிக்கின்றனன்.

நாயகன்.—(நோக்கி) மித்ராவஸு! வரவேணும் இங்கு உட்காரும்.



தோழி.—அரசி! குமரன் மித்ராவஸு வந்திருக்கிறார்.

நாயகி.—தோழி! எனக்கு மிகவும் சந்தோஷம்.

நாயகன்.—மித்ராவஸு! வித்தர்நாட்டு மன்னன் விச்வாவஸு சௌக்கியமே அன்றோ?

மித்ரா.—ஆம்; எந்தை ஸுகமே; அவரது ஆணைமேலே உம்மிடம் வந்துளேன்.

நாயகன்.—பிரஸ்தாபர் என்ன கூறுகின்றனர்?

நாயகி.—(தனக்குள்) அப்பாவின் ஆணை என்னவென்று கேட்பேன்.

மித்ரா.—இவ்விதம் என் தந்தை கூறுகின்றனர்:

'எமக்கு மலையவதி என்றோர் மகள்; அவள் வித்தர் குலத்து உயிரே ஆகும். அவள் என்னால் உனக்கு அளிக்கப்படுகிறாள்; பெற்றுக்கொள்ளப்படுவாளாக!"

தோழி.—(ஸந்தோஷத்தோடு—சிரித்துக்கொண்டு) அம்மணீ! நீர் என் இப்பொழுது கோபங்கொள்ளவில்லை?

நாயகி.—(சிரிப்போடு, மடைமையுடன் கீழ்நோக்கிக்கொண்டு) தோழீ! பரிஹாஸம் செய்யாதே! அவர் வேறு யார் மேலோ மோஹங்கொண்டிருப்பதை நீ மறந்துவிட்டாய்.

நாயகன்.—(மறைவாக) நண்பா! நான் இப்பொழுது தர்மஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

விதூஷகன்.—(மறைவாக) அஹா! எனக்குத்தெரியும்! உன்னெஞ்சம் அவளிடம் தவிர மற்றவரிடம் ஆனந்தமடையாது. ஏதோ சாக்கு போக்குச் சொல்லி இந்தப் பயலை அனுப்பிவிடு.

நாயகி.—(இகழ்ச்சியுடன்—தனக்குள்) என்ன கல்நெஞ்சன்! யார்தான்—இதை—முன்னே சொல்லமாட்டார்?

நாயகன்.—மித்ராவஸு! உமது கௌரவப் பெருஞ் சேர்க்கையை யார்தான் விரும்பார்? ஆனாலும், வேறு இடத்தில் பதிந்த மனத்தைத் திருப்புவது அஸாத்யமாகப்படுகிறது. ஆகையால் அவளை பெறமுடியாதவனாய் இருக்கிறேன்.

நாயகி.—(மூர்ச்சிக்கிறாள்.)

தோழி.—அரசீ! தைர்யத்தை விடாதே!—தைரியத்தை விடவேண்டாம்!!

விதூஷகன்.—ஐயா! இந்த மனிதன் பிறருக்குள் பட்டவன். இவனைத் தொந்தரை செய்வதில் என்ன பிரயோஜனம். இவர் தந்தையிடம் போய் உமக்கு வேண்டியதைக் கேளுமே.

மித்ரா.—(தனக்குள்) அந்த ஆள் சொல்லியது ஸரிதான். இவன் பெற்றோர் மொழியை மீறான். இவன் தந்தையும் இக்கௌரி ஆச்ரமத்திலேயே இருக்கிறான். நான் அவன் பெற்றோரிடம் சென்று மலையவதியை அளிப்பேன்.

நாயகி.—(மூர்ச்சையிலிருந்து தெளிகிறாள்.)

மித்ரா.—(வெளிப்படையாக, உரக்க) நாம் எமது எண்ணத்தை வெளியிட்டிருக்க, நமது விருப்பத்தைத் தடுப்பது நியாயமோ என்பது அவ்விடம், அரசகுமாரற்கு, நன்றாகத் தெரியும்.

நாயகி.—(வெறுப்போடு—சிரித்து) என்ன இது; மித்ராவஸு, வார்த்தையைத் தடுத்து அவமானப்படுத்தப்பட்டும், இன்னம் என்னமோ வேண்டுகிறான்.

(மித்ராவஸு போதல்)

நாயகி.—(தனக்குள்—கண்ணீரும் கம்பலையுமாகத் தன்னை நோக்கி) கொடுந்துயரத்தாலும், கொடுந் துரதிருஷ்டத்தாலும் இழைக்கப்பட்ட இந்த பாழும் உடலையான்வைத்து—இனி என்ன பயன்உண்டு? இறத்தல்தான் வழி. இருந்து என்ன உண்டு? இந்த அசோக மாத்தடியில்—இவ்வதிமுக்தக்கொடிக் கென்னுயிரைக் கொடுத்துவிடுகிறேன்—இதுதானகடைசியில்—(சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, உரக்க) தோழி! மித்ராவஸு தூரம் சென்றானா இல்லையா பார். நானும் போகவேண்டும்; பார்.

தோழி.—(சில அடிகள் பெயர்த்து வைத்து, பின்னோக்கி, தனக்குள்) அவள் மூளை சரியில்லைபோலிருக்கிறது. நான் முன்னடவாது, இங்கு தெரியாதிருந்து அவள் என்ன செய்கிறாள் என்று பார்ப்பேன்.

நாயகி.—(சுற்றுமுற்றும் பார்த்து, கயிற்றைக் கைக்கொண்டு, கண்ணீர்விட்டு) அம்மணீ! கௌரி! நான் இந்த ஜன்மத்தில் உனக்குப் பிரீதயுண்டாக்கவில்லை. மறு ஜன்மத்திலாவது இவ்வாறு அதிருஷ்டமற்றிராமல் இருக்கச்செய்யும். அம்மணீ! இனி என்வேலையை முடிப்பேன். (கழுத்தைசுற்றிக் கயிறு சுற்றுகிறாள்.)

தோழி.—( பார்த்து, பரப்பரப்புடன் ஓடிவந்து) கொலை! ஐயோ! கொலை! சகாயம்! ஓ! சகாயம்! இங்கு யாருமில்லையா? அரசி கொலைபுரிகிறாள்! ஐயோ! ஐயையோ! சகாயமிங்கு யாருமில்லையா?

நாயகன்.—(பரபரப்புடன் ஓடிவந்து) அவள் எங்கே? எங்கே?—அவளெங்கே?

**தோழி.**—இதோ ! அசோக மரத்தண்டை.

**நாயகன்.**—(சந்தோஷத்துடன் உற்று) ஹா ! இதுவே என்னுசைக்குகந்த பொருள் ! (நாயகியை கைமேல் சாய்த்துக் கொடிகளை அறுக்கிறான்.)

பேதாய் அழகி தடுக்கா துடுக்காற் பீடற்றாய்
போதார் காம்விட் டெரியாய் புரையார் கொடியிற்றே!
தாதார் மலர்பூ தறிக்கத் தரிக்கா கைப்பேதின் [தரோ!
றேதே மிடற்றைக் கொடியீர்த் திடச்செய் திட்ட

**நாயகி.**—(வெருண்டு) தோழி ! இது, யார் இது இப்பொழுது இங்கு ? (நன்றாகப் பார்த்து, வெறுப்புடன் அரசன் கைகளை எடுத்தெரிந்து) அஹோ ! என் கையை விடு ! நீ யார் என்னைத்தடுக்க? உயிரைவிடவும் உன்னைக் கேட்டா ஆகவேண்டும் ?

**நாயகன்.**—

பூண்ப ழிச்சுமை புன்கைப்பொன் னுற்செயு
நாண்ப தித்தல நாணிற்கொன் னுண்பட்டு
வீண்ப டச்செயு வேதங்கண் டெடுத்துநீ இ
காண்ப தன்றிப்பின் கடப்பது மாகுமென் ?

**விதூஷகன்.**—(தோழியிடம் வந்து) அம்மணீ ; இந்த அம்மாள் தன்னுயிரை வாங்க முயற்சித்தாளே அதன் காரணம் யாது ?

**தோழி.**—அதோ—உன் நண்பன், அவர்தான் காரணம்.

**நாயகன்.**—என்ன ? நானு அவள் தற்கொலை புரிவதற்குக் காரணம் ! எனக்கது விளங்கவில்லை !

**விதூஷகன்.**—அது எப்படி அம்மணீ ?

**தோழி.**—(அர்த்தமாகும்படி) "உமது நண்பரது மனத்தைக் கொள்ளை கொண்டவளுடைய உருவம் மேடைமேல் அவரால் சித்தரிக்கப்பட்டது. அவள்மேல் ஆசையால், மித்ராவஸு அளித்தும், என்னை அவர் கொள்ளவில்லை" என்று ஏக்கங்கொண்டு, மனங் கலங்கி இவ்வாறு செய்ய நிச்சயித்தாள்.

**நாயகன்.**—(ஸந்தோஷத்தோடு தனக்குள்)—என்ன? இவள் விச்வாவஸுமகள் மலையவதியா? இல்லாவிடில், கடலிலிருந்து அல்லது எங்கிருந்து சந்திர ஒளி கிளம்பும்? அடே! நான் எப்படி ஏமாற்றப்பெற்றேன் !

**விதூஷகன்.**—அப்படியானால், அம்மணீ ! என் நண்பன் நிரபராதி. இம்மாதே அங்கு சித்தரிக்கப்பட்டது. நம்பிக்கை இல்லாவிட்டால் நீங்களே நேராகச் சென்று பளிங்கு மேடையைப் பாரும்.

**நாயகி.**—(ஸந்தோஷத்துடன் நாயகனை நோக்கிக் கொண்டு, கூச்சத்தால்கையை இழுத்துக்கொள்கிறாள் )

**நாயகன்.**—(சிரித்துக்கொண்டு) நான் விடமாட்டேன், நீ என் மனங்குடிகொண்ட பெண்ணைக் கல்லின் மேல் காணுவிடில்—.

(எல்லோரும் சந்தனப்பொதும்பருள் போகின்றனர்.)

**விதூஷகன்.**—(வாழை இலையை எடுத்துவிட்டு) அம்மணீ ! இதோ பாரும் அவரது மனங்கொள்ளை கொண்ட மாதை.

**நாயகி.**—(பார்த்து, மறைவாகச் சிரித்துக்கொண்டு) சாதுரிகே ! ஏனடீ ! நானு இங்கு எழுதப்பட்டிருக்கிறேன் ?

**தோழி.**—(சித்ரத்தையும், நாயகியையும் நோக்கி) அம்மணீ ! என்ன சொல்லுகிறீர் ? இங்கு நீங்கள் எழுதப்பட்டீரா என்றா?—என்னால் சொல்லமுடியாது? உன்னை இந்த ஸலவைக்கல் பிரதிபிம்பமாகக் காட்டுகிறதோ ? அல்லது உன்னையே அந்தச் சித்திரத்தில் பதித்திருக்கிறதோ? அது எதுவோ ? இரண்டும் ஒன்றாகவே இருக்கிறதே !

**நாயகி.**—(சிரித்துக்கொண்டு) இவர் என்னை இந்தச் சித்திரத்தில் காட்டியதால், தோழி, நான் வசைக்காளாய் விட்டேனடி.

**விதூஷகன்.**—ஓகோ ! ஐயா ! உமது காந்தர்வமணமாய் விட்டது. இனி அரசியின் கையை விட்டுவிடும். இங்கு யாரோ ஓர் மடந்தை பரபரத்து ஓடி வருகின்றனள்.

(ஓர் தாதி வரல்)

**நாயகன்.**—(சிரித்துக்கொண்டு, மெதுவாக நாயகியின் கையை நழுவ விடுகின்றனன்.)

**தாதி.**—(ஸந்தோஷத்துடன், பரபரக்க ஓடிவந்து) அம்மணீ ! நீங்கள் நிரம்ப அதிர்ஷ்டசாலி ! அரசன் ஜீமுதவாஹனனது தாய் தந்தையரால் தாங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டீர்.

**விதூஷகன்.**—(கூத்தாடிக்கொண்டு) பலே! பலே ! எங்கள் ஐயன் இஷ்டம் பலித்துவிட்டது ; ஓஹோ ! இல்லை,—அரசி மலையவதியின் இஷ்டம் பலித்தது ;



அடே அதுவும் இல்லையா, இந்தக் கட்டை தடிப்பிரமசாரி, தனியன், பார்ப்பான் இவன் இஷ்டந்தான் பலித்தது.

**தாதி.**—(அரசியை நோக்கி) அம்மணீ இளவரசு மித்ராவஸுவினால் ஆணையிடப்பட்டதாவது! "இன்றே மலையவதியின் கல்யாணத்தைப்பற்றிய சுபகார்யங்களை எல்லாம் நடத்தி விடவேண்டியது. "சுபஸ்ய சீக்கிரம், நீ போய் அவளைத் துரிதமாக அழைத்துவா." ஆகையால் நாம் போவோம் வா.

**விதூஷகன்.**—ஆனால் நீ போய்விட்டாய் ! தேவடியாள் மகளே ! அரசியையும் அழைத்துப் போவாய் ! அரசே ! நாம் என் இனி இங்கு இருக்கவேண்டும் ?

**தாதி.**—அடே மடையா! படபடத்து பேசாதியடா! உனக்கும் ஸ்நாநம் பண்ணவேண்டிய காலம் வந்து விட்டதடா.

(தாதிகளோடு அரசி கடைக்கண்ணால் கூச்சத்தோடு நாயகனை நோக்கிக்கொண்டு போதல்.)

**நேபத்யத்தில்,** (காயகர் பாடுதல்—)

காலிரைக்கும் பொடிச்சுண்ணங்
காலையிற்செக் கரைக்காட்ட
மாலிரைக்கும் பொற்சுண்ணம்
பொன்காட்ட மேருவென
மாலுறைக்கு மலையத்து
மடநலார்நும் மஞ்சனக்கு
காலுறைக்குங் கவிக்கலந்து
காலத்தை காண்டனரே.

**விதூஷகன்.**—நண்பா ! அதிருஷ்டமே. ஸ்நாந வேளை நெருங்கி விட்டது.

**நாயகன்.**—(ஸந்தோஷத்தோடு) அப்படியானால் நண்பா ! நாம் என் இங்கு இருக்கவேண்டும். போகலாம் வா ; நாம்போய் எனது தந்தையைத் தொழுது மஞ்சனம் ஆடுமிடம் போகலாம்.

மனத்துள் ஒற்று மணர்ந்தனர்ச் சில்லரி
லினத்துள் ஒற்று மிளமையி லொற்றுநற்
கனத்துள் ஒற்றுங் கவின்பிறப் பொற்றியு
மனத்துள் ஒற்று மணந்தனர்ச் சில்லரே.

**இரண்டாவது அங்கம் முற்றிற்று.**

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 7

### ஸமயோசித தந்திரம்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

**கா**ட்டுப் பூனைகள் ஆணும் பெண்ணுமாகக் கூடி மிக ரஸமாகப் பேசி வந்த பேச்சைக் கட்டை போட்டு நிறுத்தியவன் அவர்கள் அயல் வீட்டுக்காரருள் ஒருவன். அவன் வழியில் அவன் பெயர் போனவன். உலகிலுள்ள அற்புதங்களுக்கு அளவே இல்லை. காணக் கண் படைத்தோர்கள் தடையின்றி இவைகளைக் காண்பார்கள். நமது சிறு கதையும் இவ்வுலகத்தின் சிறு துண்டாதலால் இதிலும் சில அற்புதங்கள், ஆங்காங்கு காணப்படும். இம்மாதிரியான விஷயங்களுள் வந்தவனாகிய **சுந்தரய்யன்** ஒருவன். இவனிடம் கலகம் மூட்டுந் திறம் குடிகொண்டிருந்தது. ஆதலால் இவனுக்கு ஸங்கீத சிரோமணியான நாரதரது பெயர் அவ்வூரரால் கொடுக்கப்பட்டு வழங்கி வந்தது. தேஹம் நீங்கிய கிருஷ்ணனது வீட்டு வீட்டிலிருந்து திரும்பி வரும் பொழுது சூதுக்காரனான நாயன்னு முகம் உத்ஸாஹத்தால் பூரித்துக்காந்தியுடனிருப்பதை இவன்கண்டுவிட்டான். வீட்டுக்குப்போதல், உலர்ந்த வஸ்திரம்தரித்தல், நாயன்னு வீடு வருதல் எல்லாம் அரை நொடியில் முடிந்துவிட்டன. பகவத் ஸங்கல்பப்படி ரஹஸ்யங்களைத் துப்பறிந்து வெளியிடும் கூட்டத்தாருள் தானாகவே தலையிட்டுக்கொண்டிருந்த இந்தச் சேவகன், காட்டுப் பூனைகள் கலந்து பேசிக்கொண்டிருக்கையில் ஒன்றையும் விடாது ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். 'அந்தப் பயல் கிருஷ்ணன் போனானே இல்லையோ ? நம் பயல் தான் ஸொத்துக்குப் பாத்யஸ்தன் !' என்ற பரமரஹஸ்யத்தைக் கூறி மிக ரஸமாக இப்பொழுது 'தெரிஞ்சுதா ?' என்று தலை அசைத்துக்கொண்டு உத்ஸாஹமாகக் காட்டுப்பூனை கேட்ட காலத்தும், நண்பன் ஸுந்தரய்யன் ஒருவருக்கும் தெரியாது அங்கேதான் ஒளித்திருந்தான். தான் மறைந்திருப்பது அங்கு

யாருக்கோ தெரிந்து விட்டது என்ற ஸந்தேஹம் அவனுக்கு உண்டாகிவிட, சதியாலோசனை முடியும் வரையில் மறைந்திருந்தே கேட்டுவிடவேண்டும் என்று எண்ணங்கொண்ட அவன் அவ்வாறு செய்யமுடியாமல் போய்விட்டது. விஷயங்கள் ரஸாபாஸமாகப் போவதற்கு முன்னமே அதை ஸரிப்படுத்த எண்ணி 'பொடி இருந்தால் கொடு' என்று கேட்டுக் கொண்டே தைர்யமாக வீட்டுள் நுழைந்து விட்டான். நமது ஸமூக வாழ்க்கையில் இந்த அல்பப்பொடி படுத்தும் பாடு தான் என்ன ! ப்ராஹ்மணன், சூத்ரன் ; ஜமீன்தாரன், அவன் நாய்க்காரன் ; திவான் அவன் சமயல்காரன், ஆகிய இதுபோன்ற அநேகரைத் தமது நிலை தடுமாறி நெருங்கிக் கலக்கும்படி செய்வது இந்த காந்தச் சூர்ணம்தான். இம்மாதிரி எல்லாவற்றையும் ஸமரஸப்படுத்தும் இப்பொடியைத்தான் ஸுந்தரய்யன் இந்த ஸங்கட ஸமயத்தில் ஸஹாயமாகக் கொண்டு தகுந்த சாக்குக்காட்டி உள்ளே புகுந்து விட்டான். வழக்கப்படி இவன் வந்ததும் நாயன்னு மனைவி விலகி விட்டாள். அப்பொழுது இவன் 'சங்கரா ! என்ன சிரமம் !' என்று சொல்லிக்கொண்டு ஒழுங்காக உட்கார்ந்து விட்டான்.

**நாயன்னு.**—(கூட உட்கார்ந்து கொண்டு) என்ன ! என்ன ஸங்கதி ? என் இவ்வளவு களைப்பு ஒனக்கு ?

**ஸுந்தரய்யன்.**—ஒரு பிச்சைக்காரப்பயல், அவனுக்கு மதுரையாம், அவனோடேபோட்ட சண்டை போரும் போரும் என்னுச்சு.

**நாயன்னு.**—அவனுரு ? அவனோடே சண்டை என்ன ?

**ஸுந்தரய்யன்.**—அந்தப் பயல் அந்தப் பாவி லக்ஷ்மிக்கு ஒறவாம் : கிருஷ்ணன் ஸொத்தெல்லாம் அவளுக்கும் அவள்கொடிய தகப்பனுக்கும் தான் போக வேண்டும் என்று பாத்யம் கொண்டாடரான். ஒரு பைஸாகூட அவளுக்குப் போகாதபடி பார்த்துக் கொள்ளத்தக்கவாள் இருக்கா என்று கூறிக் கோபம் அதிகமாக வாயில் வந்தபடி எல்லாம் அவனைத் திட்டினேன். இந்த மதுரைப் பயல்கள் எல்லாம் முடிச்சு மாறிகள். என்ன சொல்லரே ?

**நாயன்னு.**—இந்த மதுரை முடிச்சுமாறிகளுக்கு என்ன பாத்யம் இந்த ஸொத்தில் ?

**ஸுந்தரய்யன்.**—நிஜம்தானே ! அதற்குத் தகுந்த பாத்யஸ்தாள் இருக்காளே !

**நாயன்னு.**—(உறக்க) பாத்யஸ்தாளா ! என்ன ! பாத்யஸ்தாள் இன்னாரயே ? அதற்குப் பாத்யஸ்தன் ஒருத்தன்தான். அவனுக்குத்தான் அதுபோகும் !

**ஸுந்தரய்யன்.**—ஸரிதான்! நீ சொல்ரது நெஜம். பாத்யஸ்தன் ஒருத்தன்தான். அவன் ஒன் பந்து ஸீதாராமன் தானே ? எனக்கு நன்னுத் தெரியுமே.

**நாயன்னு.**—(கோபித்து முகமும் கண்ணும் சிவக்க கதறுகிறான்) நான் கணக்கிட்டுப்பாத்தேன் ! பாத்துட்டேனே ! ஸீதா ராமனுகட்டும் எந்தப் பிசாசாகட்டும் கிட்ட வரட்டும் ! அவனுக்குச் சொல்லரே வழி ! கொன்னுடுவேன்தொட்டான்னு ! ஸொத்து என்னது! நான்தான் யஜமானன் !

**ஸுந்தரய்யன்.**—நீயா ! அது எப்படி ? சொல்லு பார்ப்போம்.

**நாயன்னு.**—ஆமாம், சொல்ரேன் கேளே, நானல்ல. ஆனுல்—

இந்தத் தருணத்தில் அடுப்பங்கரையிலிருந்து ஒரு பெரிய அழுகுரல் கேட்டது. அது தன் கண்மணி குரல் என்று அறிந்த நாயன்னு வாரிப் புடைத்துக் கொண்டு எழுந்து என்ன விசேஷம் என்று பார்த்து வர ஓடினுன். போய்ப் பார்ப்பனே ! ஸுப்பி கை ஓயாது அந்தப் பயலை அடித்துக்கொண்டிருந்தாள். 'அடிகண்ணுட்டி ! என்னடீ இது ! என்ன என் கண்மணியை இப்படி அடிக்கிறயே! என்ன ஸங்கதி?' என்று கூச்சலிட்டான். என்ன செய்தும் அடி மேல் மேலும் பலமாக விழத்தொடங்கியது. அழுகைக்குரலும் அதிகப்பட்டது. நாயன்னு அவளைமறுபடி கடிந்து கொள்ள, நான்கு வீடு கேட்கும்படி அவள் திருவாய் மலர்ந்தருளலானுள். 'நான் அவனை என்ன செய்தா என்ன ? குடிபாழாய் போனு என்ன ? ஒங்களுக்கு இங்கே எது புத்தி? வழிலேபோர பறப்பயகளோடே எல்லாம் ஒங்கள் யோசனைகள் தந்தரங்கள் இவைகளைப் படித்துச் சொல்லத்தான் ஒங்களுக்குப் போது சரியாக இருக்கே ! வீட்டுவேலை எவ்வளவு கடக்கு ! கன்னுதண்ணியில்லாது சாகரது, எலை காய்கரி தோட்டத்திலே இருந்து கொண்டுவரணும், தோய்க்க வேண்டிய வேஷ்டியோ மலையாகக் குமிஞ்சிருக்கு, நீங்க மாத்ரம் வாயோயாது 'மொச் மொச்' சென்னு பேசிக்கொண்டிருங்கோ. உங்களுக்கு என்ன பேச்சு வச்சிருக்கோ ! நீங்க சோம்பலாக எடத்தை விட்டசையாதிருங்கோ ! இந்தப் பயல் சாதம் சாதம் என்னு அடிச்சுக்கரான் ! எலை இல்லாது என்ன சோத்தைக்கொட்டித்தொலைக்கிறது! எருமமாட்டு முதுகிலே மழை பேஞ்சாப்பிலேவந்தவன்போனவனிட்டெல்லாம் வம்பு பேசிக்கொண்டிருங்கோ' என்று சரமாரியாக அடித்து விட்டு, பயல் முதுகிலேயும் சரமாரியாக அடிகளைச்சொரிந்தாள். ஸுந்தரய்யன்காதிலும் இதுவிழுந்தது என்று சொல்லவும்வேண்டுமோ ? திருடனல்லவா அவன், தான் இந்த ஸமயம் மதிமோசம் போனதைத் தெரிந்துகொண்டு விட்டான். நாயன்னுவினுடைய மனோராஜ்யத்தை வெளியே இழுக்க வேறு நல்ல தருணம் பார்த்துக்கொண் டிருக்கும்படியாய் விட்டது.

நண்பர்களே ! இதற்குள் உங்களுக்கு விஷயம் விளங்கிக்கொண்டு வரலாம் ஸுப்பி அடுப்பங்கரையிலிருந்து கணவனுக்கும் அவன் தோழனுக்கும் நடந்து வந்த ஸம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தன் கணவன் கணக்கிட்டதாயுள்ள தன் மனோராஜ்ய ரஹஸ்யத்தை மடத்தனமாய் அவனிடம் வெளிவிடும் தருணம் வந்ததையும் கண்டுவிட்டாள். உடனே இந்த அலங்கோலம் நேராதபடி தடுக்க அவனைத் தோழனைவிட்டுப் பிரிக்க எண்ணி இந்தப் பிள்ளையை அடிக்கும் உபாயத்தை மேற்கொண்டாள். இவ்வளவும் ஸுந்தரய்யனுக்குத் தெரியாதா ? உடனே அப்பொழுது போய்விடுவதே நலம் என்று கருதி 'நாயன்னு நான் போய்வரேன், எனக்கு வேலை இருக்கு' என்று வாய் வார்த்தையாகக் கூறிவிட்டு, மனதிற்குள் 'இந்த நாயன்னு மனோராஜ்யத்தைக் கொண்டு இதில் ஸம்பந்தப்பட்டவர்களை எல்லாம் எப்பாடு படுத்துகிறேன் பார் !' என்று கருவிக்கொண்டு வெளியே போய்விட்டான். ஸுப்பி பலமாக அவன் பின்னரே சென்று மடார் என்று கதவைத் தாளிட்டு விட்டு, 'வழியில் போகிறவனுக்கெல்லாம் ஸொத்து விஷயமான ஏற்பாடுகளை வெளிவிடலாகாது, அதிலும் ஸுந்தரய்யனை நம்பவே கூடாது' என்னும் அரிய விஷயத்தைப்பற்றித் தன் கணவனுக்குப் பெரிய தலையணை மந்திரம்ஒன்று உபதேசித்துத்தீர்த்தாள். இந்தப் பிரஸங்கம்முற்றுப்பெற்றதும், தன் கணவன் அடிக்கடி வெளியேபோனுல் உளரிக்கொட்டிக்களரி மூடிக்கொண்டிருப்பானே என்று அஞ்சி அவனை வீட்டு பந்தோபஸ்தில் சில காலம் அடைத்துத் தடை செய்தாள்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES.

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்திமலர்ந்த காதை

போதெல்லாம் போது கொண்டுன்
  பொன்னடி புனைய மாட்டேன் ;
தீதிலா மொழிகள் கொண்டுன்
  திருக்குணம் செப்ப மாட்டேன் ;
காதலால் நெஞ்ச மன்பு
  கலந்திலேன் ; அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கற் கல்லேன் !
  என் செய்வான் தோன்றி னேனே !—

தொண்டரடிப் பொடியாழ்வார்.

**அ**ன்பெனுங் கடலையடைந்து இன்பமடையவேண்டுமென்று தனதுள்ளம் என்னு மத்தால் தவறாத பக்தி என்னும் கயிற்றால் கடைந்து, ஆராத வமுதனுகிய அன்பனை அடைந்தும், உடலோடு வந்த தனது உடன் பிறந்தவனிடம் ஆசையானது ஓர்பால் மனதைச் சலிக்கச்செய்யினும், ஸ்ரீ பலராமரது உத்தம உபதேச மொழிகளால் அவ்வாசையை ஒழித்து, பரந்தாமனிடம் நிலைத்த பேரன்பு திருநின்ற உருவாகி, கொழுந்து விட்டு படரும் இளங்கொடிபோல் எண்ணுதற்கு முடியாத காலத்திற்குள் வளர்ந்து, படர்ந்தெரியும் பிழம்பு போல ஓங்கித்திரண்டு விளங்கிய எம்பெருமாட்டியின் மனோ நிலைமையைக் கூறுதலும் வேண்டுமோ ? துவாரகா நகரத்தை அடைந்து எம்பெருமான் யாவரும் காண தன் முழு மனத்தோடு அம்மையார் பால் அன்பொழுக ஆனந்த மென்னும் கடலைக் கண்ட பெரும் அழகிய சந்திரன்போன்ற பிராட்டியாரை மணக்க ஊர் முழுதும் அலங்கரித்தும், ருக்மணியின் மனத்தின் ஒழுங்கின் அழகைச் சமம்பெறவில்லையென்று நாம் சொல்ல வேண்டுமோ ? மாமரத்தை நாடுங் கொடியைப்போல எம்பெருமானைச் சரணமடைந்த கருணைக்கொடியாகிய ருக்மணியின் அழகின் முன் ஊர் அழகு ஈடுபடுமோ ? மற்றும் தன் துணைவரையும் பெற்றோரையும் விட்டு பிறர்பால் வீழும்படி நேர்ந்த காலத்து தன்மனத்திற் கொப்பாததை ஒப்பாது எம்பெருமானை நாடவேண்டு மென்று துன்பத்தையுமடைந்து கண்ணனைக் கொண்டு ஆனந்தமுண்ட அம்மையாரின் மனோநிலைமுன் ஊரின் இன்பத்தில் ஆனந்தமடைந்தது எதிர் நிற்குமோ ? இதை முற்றும்

உணர்ந்தவராஹெலும் ஸ்ரீ பரந்தாமன் தனது கருணை விலாஸத்தின் மஹிமையால் தன்னை விரும்பிய லோக ஜனங்களுக்குத் தன்னுருவைக் காட்டலன்றி தன்பால் பூர்ணமாகிய மனத்தினோடும் ஈடுபட்ட சீலையாகிய பிராட்டியாரின் வைபவத்தையுங் காட்டவேண்டும் என்று உலக வழக்கின்படி மணஞ்செய்து ருக்மணியை தனது மனைவியாக அடைந்து அவள்பால் பிரத்யும்நன் என்னு மகனை அடைந்தார். அவனை நடுவில் இழக்க நேரிட்ட பொழுதும் அதைக் கவனியாது தனது நாயகனது சிசுருஷையே மேலிட்டுக் கொண்டு விளங்கிய காலத்தில் மற்றும் தன் மதலையை வைசித்ரிகமாக அடைந்து கண்ணனுக்கு செய்ய வேண்டியதையே தன்தொண்டாகப் பெற்று வாழ்ந்துவந்தாள்.

இவ்வாறு இருக்குநாளில் ஓர் நாள், தன் தோழிகளோடு ருக்மணி தனது முதல்வனாகிய பரந்தாமனை விசிறிக்கொண்டிருந்தாள். ஐயன், உலக முதல்வனாகிய மாயன், ஸுகமாக தனது படுக்கையில் படுத்து இருந்தார். அதர்மத்தை ஒழித்து நன்மையை ஸ்தாபிக்க, பிறவியற்ற முச்செயலுக்குந் தலைமையைப் பூண்ட எம்பெருமான், தனது காவலை நடத்த தானே யதுகுலத்தில் அவதரித்தனர். அந்தப்புரமுழுதும் முத்துவரிசைகளாலும், மணியிழைத்த விளக்கின் பங்க்திகளாலும் அலங்கரிக்கப்பட்டு தேஜோமயமாக விளங்கியது. மல்லிகை மலர்ச்சாலையில் தேனீக்கள் நடனம் செய்து கொண்டிருந்தன. அகில்கட்டை நாற்றம் சூழ்வதோடு மந்தமாருதத்தால் கொண்டுவரப்பட்ட பாரிசாதாதிமலர்களின் வாசனைகளிலும், இடை இடையே சிறிய சதுக்கங்களின் வழியாக ஸூரிய சந்திரர்களின் நெடுங்கிரணங்களும் உள்நுழைந்து வீட்டைச் சித்தரித்தன. உள்ளறையில்வெண்மையானபடுக்கையில்அமைந்திருந்த ஸ்ரீவாஸுதேவனுக்கு ருக்மணி பிராட்டியார் தொண்டு செய்துகொண்டிருந்தனள். சேடிகளிடமிருந்த சாமரைகளை வாங்கித் தானே தனது தலைவனுக்கு வீசினள்; அவர் சிரமத்தை ஆற்றிக்கொண்டிருந்தாள். அச்சுதர் பக்கத்தில் அம்மையார் அழகு மிகவும் பூரித்து தோன்றியது. அவள் சவரி வீசிய காலத்தில் கையிலிருந்த கணையாழிகளின் ஓசை கங்கணங்களின் ஓசையிலும் நூபுரங்களின் ஓசையிலும் மயங்கி இசைச் செய்தன. அளகபாரத்தின் ஒழுங்கினாலும், அணிகளாலும் தன் மனங்கனிய உருவுகொண்டு எதிரில் விளங்கிய புன்னகையும் நன்னடையுங்கொண்ட ருக்மணியை நோக்கி ஸ்ரீ வாஸுதேவன் புன்னகைதந்து கீழ்வருமாறு கூறினார் :—

“அடி அரசி! லோகபாலர்க்கு ஸமானமான வலிமையும் வீரமும் பெருமையையும் பெற்ற அழகும் பெருந்தன்மையும் பெற்ற அரசர்களால் விரும்பப்பட்டனை! உன்னுடன் பிறந்தாராலும் தந்தை முதலானோர்களாலும், அன்று அச்சபையில் காம இச்சையால் உன்னை அடைய தோன்றிய சேதி யரசர்க்கு கொடுப்பதாக நிச்சயித்திருக்க, அவர்களை வெறுத்து, அவர்களுக்கு தினையளவும் ஸமானமில்லாத என்னை ஏன் விரும்பினாய்? ஜராஸந்தனுக்காக நடுங்கி, அழகுடையாய்! நாங்கள் இந்த ஸமுத்ர நடுவில் பதுங்கி கிடக்கிறோம்! அழகிய வளைந்த கண்களையுடையாய்! பெண்களுக் கடங்காத மனிதனை மணந்து பெண்கள் மனவெறுத்துவிடலாகுமல்லவா? நான் எளியன்; ஏழை! ஏழை ஜனங்கள் என்னை விரும்புவரேயன்றி, செல்வத்தில் விளங்கும் பெரியோர்கள் என்னைஸ்மரிப்பதுகூட இல்லை. என்னை லக்ஷியமும் செய்யார். செல்வத்தாலும் குணத்தாலும், ஒழுங்காலும், அந்தஸ்தாலும், பிறப்பாலும், வரவாலும், செலவாலும் ஒத்தாரிடத்தே மணப்பதே தகுந்தது. ஏழைகளைச் செல்வர் அடைவது ஸுகத்தைத்தரவே தராது. ஹே! வைதர்பி! நீ முன்னமே ஆலோசியாமல், தெரிந்தும், எளியவர்களால் விரும்பப்படும், குணங்களின்று விளங்கும் என்னை மணந்து விட்டாய். போனாலும் போகட்டும். இப்பொழுதும் ஒன்றுங் கெட்டுப்போக வில்லை. இப்பொழுதே நீ உனக்கு மனத்திற் கினியவனையும், இம்மைக்கும் மறுமைக்கும் சுகத்தை யளிக்கக்கூடிய பரமவீரனாகிய க்ஷத்ரிய னொருவனை வரிக்கலாம். அதற்கொன்றும் நேரமாகவில்லை. எனக்கு இன்னமும் சேதிநாட்டரசன், தந்தாவக்ரன், ஜராஸந்தன் முதலியவர் மாத்திரமன்றி உனது உடன்பிறந்த ருக்மி முதலியோரும் பகைவர்களாக இருக்கிறார்கள். அடீ இ குணமுடையாய்! செல்வச் செருக்கால் கர்வித்து வீராப்புடன் வாழும் அவர்களை எதிர்த்ததால் கீழோர்களது கோபத்திற்கு இலக்கு ஆகி விட்டேன். அது மாத்ரமோ. நாங்கள் ஸந்யாஸிகள். எங்களுக்குபெண்டு, பிள்ளை செல்வம் இவை எல்லாம் எதற்கு? நாங்கள் எங்கள் உடம்பு வீடு இவைகளைக்கூட கவனியாதவர்கள். நாங்கள் ஞானவிருத்தியால் ஒளிபோல் களங்கமற்று ஆத்மானுபவத்தையே விரும்பினவர்;— ஆதலால் என்னை விரும்புவதில் உனக்கு ஸுகமும் கிடையாது : பெருமையுங் கிடைக்காது. இடையனைக் கட்டிக்கொண்டு பெருங் கொற்ற மன்னன் மகளாகிய ருக்மணி வாழ முடியுமா? அது எவ்வாறு முடியும்—?”

இவ்வாறு தனது உண்மை அன்பிற்குரிய நாயகியை நோக்கி கூறி ருக்மணியின் மனநிலைமைக் குன்றும்படி செய்துவிட்டு ஸ்ரீ பரந்தாமன் வாய்மூடிக்கொண்டு சும்மா இருந்தனர்.

இவ்வாறு என்றுங்கேளாத மொழிகள் தனது ஆசைநாயகன் வாயினின்று வெளிவரக்கண்ட ருக்மணி நடுநடுங்கி, திகைத்து, சிந்தாக்கிராந்தையாய், தம்பித்து நின்றாள். மூவுலகின் தலைவர்க்கும் தலைவனாகிய எம்பெருமானது மொழிகளைக்கேட்டு கவலைகொண்டாள். அவள் மனந்துடித்தது. உடல் வெயர்த்தது. பின் தனது அழகிய கால்விரல்களால் பூமியைக்கீண்டு, தலை குனிந்து சொரிந்த கண்ணீரால் மார்பிலணிந்த குங்குமத்தை மையாக்கி சிந்தைகொண்டாள். ஒன்றும் தோன்றாது, பேசவும் நாவெழாது, வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டு கீழ்நோக்கிய பார்வையோடு



கீழ் உட்கார்ந்து விட்டாள். துன்பமானது மனத்தைக் கலக்க, பயத்தால் மனங்குழம்பி, ஒன்றுந்தோன்றாது தன்கையிலிருந்த விசிறியை நெகிழவிட்டாள். துன்பத்திற்காளாகி ஒன்றுந்தோன்றாது தலைமயிர் முழுதும் சூழப்படா கீழ்மயங்கி வீழ்ந்து விட்டாள். காற்றால் அடிபெயர்ந்து வீழ்ந்த வாழைபோல் கீழிருந்த ருக்மணியை நோக்கி எம்பெருமான்-கண்ணன்-கருணை வீசி தன்மனத்திற்கினிய கண்ணாட்டியை, ஆசைமொழியின் எளனத்தைக்காணாதஅந்தப்பிராட்டியாரை, தன் கட்டிலிலிருந்து இறங்கி தனது கைகளால் வாரி அணைந்து, தலைமயிரைக் கோதி முகத்தைத் தனது செந்தாமரைக்கரங்களால் தடவிக்கொடுத்து, வழிந்த நீரைத்துடைத்து, முகத்தோடு முகம் வைத்து அணைந்தனர். அசரசரண்யனை ஸ்ரீவாஸுதேவன், பக்தர்களை ரக்ஷிக்கும் பெரியோனை அந்த கண்ணன் தனது நயமொழிகளால் மனங்குலைந்து வருத்தமுற்ற ருக்மணியைத் தேற்றினார். மேலும் பின்வருமாறு கூறினார்.—

“அடி அழகுடையாய்! நான்சொன்னவார்த்தைக்கு கோபியாதே! நீ என்னிடங்கொண்ட பக்தி எனக்கு நன்றாகத்தெரியும். உனது வில்லைப்பழித்து வளைந்து நீண்ட புருவங்கள் கோபத்தில் துடித்து, உதட்டின் படபடப்பில் மயங்கி உன்முகம் கோபாவேசத்தில் காணவேண்டும் என்று ஆவல் கொண்டு உன்னை பரிகாசம் செய்தேன். கிருஹஸ்தர்களுக்கு, அழகுடையாய், தமது காதலரோடு பரிஹாஸமாக பொழுதுபோக்கல் ஒரு பெரும்பாக்கியமன்றோ?”

இம்மொழிகளைக் கேட்டு தன்னை பரிகாசஞ்செய்ததாக தெரிந்துகொண்டு பரந்தாமனைவிட்டு பிரிய நேராதென்றுணர்ந்து தனது பயத்தை ஒழித்து, அழகிய தனது திருவாய்மலர்ந்து கடைக்கண்வீசி மெல்லிய வசனங்களால் கீழ்வருமாறு சொல்லுவாள்—

“செந்தாமரைக்கண்ணா! எனது |பெரியோய்! உமக்குச்சமானமில்லை என்று நீசொல்லியது உண்மைதான்! நீங்கள் யார்? மூவர்க்கு முதல்வனாகிய முதல்வர் அன்றோ? நான் யார்? “குணம்பொல்லேன்”. பெருமையிற்சிறந்தாய் நீயன்றோ ஆத்மன்? குணம் ஒழிந்து பரமஞானமாக செழித்து விளங்கும் பரம ஆத்மன் நீங்களே அன்றோ? தாங்கள் பயந்து கடலுள் ஒளிந்து இருப்பதும் உண்மைதான்? அனந்த குணங்களைக்கண்டு நடுங்கி உணர்ச்சியின் உள்ளுறையும் கடலுள் உறைந்து நிற்கின்றீர். எக்காலத்திலும் பூதங்களுடன் சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்றீர். அநர்த்த பரம்பரா வாஸமாகிய ராஜாங்க நிலையை ஒழித்து உமது அன்பர் உம்மை நாடுகின்றனர். அவர்கள் எளியவர்கள் தானே! உமது பாதாரவிந்த ஸேவை செய்து ஆராத வமுதனை அடைந்து அமுதமுண்ணும் முனிவர்களது அறியவொண்ணா நடக்கையை மானிட உருவங்கொண்ட மிருகங்களின் மனத்தில் ஏறுமோ?

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

### *Hon. Mr. V. Krishnaswami Aiyar, C. S. I.*

**கனம்-வே-கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ**

சென்ற வருஷத்து கடைசிமாதம் 28-ம் தேதியில்தான் கனம் ஸ்ரீமான் வே. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் இவ்வுலகைத்துறந்து இந்நாடு முழுதையும் குதூஹலத்திலிருந்து துன்பமடையும்படிச் செய்தது. அரசன் சக்ரவர்த்தியின் மஹா மகுடாபிஷேகத்தைக்காண சென்றவர், தான் போகப் புறப்படுவதற்குமுன் அவருடைய வயிற்றின்கீழ் தோன்றிய சிறு சிரங்கு வலிகொண்டு உள்ளுறவோடி மிகவும் அயரும்படிச் செய்ய இடையே மகுடம் புனைவதைக் காண்பதைவிட்டு தன்னூர் அடைந்து, சற்று வியாதி குறைந்து பின்நிறைந்து அதிதீவிரமாய் சிரங்கு அறுக்க ஸ்வஸ்த மடையலாமென்று அதற்கு இணங்கி, எல்லா வைத்யர்களாலும் கைவிடப்பட்டு பெரியோருலகை அடைந்தனர். காலை 5 மணிக்கு உயிர் நீங்கியது. பெரியோர்களாலும் விசாரிக்கப் பட்டதன்றி, அநுதாபத்தின் பொருட்டு கனம் கவர்னர் அவர்கள் விசாரித்துவிட்டு அன்று முழுதும் கோட்டையில் கொடியை அரை மட்டம் தாழ்த்தி, சென்ற உயிரின் பெருமை பாராட்டி குண்டுகள் போடும்படிச் செய்து, அன்றுமுதல்|ஜனவரி 3-ம் தேதி முழுதும் ராஜ்யத்தில் துக்கம் கொண்டாடும்படியாகப் பிரசுரம்செய்து, அன்று அய்யர் அவர்களது பெருமை, சீர், செயல் முதலிய கொண்டாடி “போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட், எக்ஸ்ட்ரார்டினரி” ஒன்று வெளியிட்டனர். வீட்டில் வந்த பொழுது சவத்தை சுடலைகொண்டு செல்லும்பொழுது ராஜாங்கராணுவ மரியாதை செய்வதாகவும் சொன்னார். ஆனால் அவ்வாறு செய்வது மதவிரோதமுண்டாக்கக்கூடும் என்று அறிந்து செய்யவில்லை.

ஜில்லா முனுசீப்பாக காலஞ்சென்ற வேங்கடராமய்யருடைய மகனாக 49 வருஷங்களுக்கு முன் தோன்றிய இவர் சென்னை ராஜாங்க கலாசாலையில் படித்து பி. ஏ. பரிக்ஷை கொடுத்து 1883-ம் வருஷம் நியாயவாத பரீக்ஷை தேறி, நியாயவாதியாக 1885-ம் வருஷம் அப்யசிக்க ஆரம்பித்தனர். பின் தனது புத்தி விசேஷத்தாலும், மதியூகத்தாலும், வாக்தாடியாலும், நட்பத்தாலும், யாவற்றையும் அதிசீக்கிரத்தில் கிரஹிக்கக்கூடிய திறமையினாலும் வரவர மேன்மை ஓங்கி மிக உயர்ந்த வக்கீலாக விளங்கியதன்றி, ராஜாங்க விஷயங்களிலும் தலை நுழைத்து மஹாஜன சபையில் மிக உழைத்து, அநேக தானதர்மங்களைச் செய்து, கைத்தொழில் அபிவிருத்தியின்பொருட்டு ப்ரேரேபணைகளும் செய்துக்கொண்டும் இருந்தனர். இந்திய காங்கிரஸ் என்னும் மஹாநாடுக் கூட்டத்திலும் கலந்துழைத்து வந்தனர்.

ஸ்ரீரங்கம் வித்வான் கிருஷ்ணமாசாரியார், அய்யர் டர்பாருக்கு போவதற்குமுன் எழுதிய பாக்களில் கண்டவாறு, நோயால் பிணிப்பட்ட உடம்பைஅழியாது காக்க ஓர்வைத்தியசாலையும், மாயையால் பிணிக்கப்பட்ட உயிரைக்காக்க ஓர் கலாசாலையும் ஏற்படுத்தினர். இதற்கு முன்னமே தனது மனத்திற்கு மிக நேசனாக விளங்கிய ரானடேயின் ஞாபகச் சின்னமாக செய்ய ஓர் சரித்திரஸங்கமும் உயிர்க்க உதவி புரிந்தனர். இவ்வாறு இவர் செய்த தர்மங்களைக் குறித்து ராஜாங்கத்திலும் கெய்ஜர்—இ—ஹிண்டி என்னும் மெடலும் கொடுக்கப்பட்டது.

இத்தகையாராகிய கொடையான் ராஜாங்க சட்ட நிர்மாண ஸபையில் செய்த ப்ரஸங்கங்களின் மேன்மையைக்கொண்டு 1910-ஹு ஹைகோர்ட் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டு, 1911-ஹு கவர்னரின் ஆலோசனை அங்கத்தினரில் ஒருவராக ஏற்படுத்தப்பட்டனர். இந்த நிலைமையே ஒரு இந்தியன் ராஜாங்கத்தில் அடையக்கூடிய உன்னத நிலையாகும். அங்கு அவர் தனது வேலை மாத்திரமன்றி தனது வேலைபன்றி மற்றைய அங்கத்தினருடைய வேலையைக்கூட ஆக்ரமித்துக் கொண்டுவந்தனர். இவர் சக்தியை உத்தேசித்து அரசன் மகுடாபிஷேககாலத்து இந்திய தாரகா நேசன் (C. S. I.) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது.

இது அவர் வாழ்க்கைவழி. அவர் செய்த தர்மம் பல. சில முன்னமே சொல்லப்பட்டன. மற்று தர்ம ரக்ஷண ஸபையுண்டாக்கி கோயில்களைச் சீர்திருத்த முயன்றது; காசி ஹிந்து கலாசாலைப்பொருட்டளித்த கொடை; இன்னமும் சில்லரையில் பல. அவர்க்குப் பழைய ஆரிய திராவிட பாஷைகளை விருத்திசெய்ய வேண்டுமென்பது பிரபலமாகிய எண்ணம்: இதற்காக, சென்னை சர்வாங்க கலாசாலையில் "கிழக்கத்திய பாஷையில் டிக்ரி" ஒன்று உண்டாக்கினர்.

அவர் குணம் குற்றமற்றதென்று கூற யாவரும் தைர்யம் கொள்ளார். தாமரைத் தண்டிற்கு முள்ளுண்டாயினும் அழகிய மலர்களை உண்டாக்குகின்றன—அதுபோல், அய்யரவாள் இறந்த நாளன்று தமிழிற் சிறந்தார் ஒருவர் கூறியவாறு அவரிடமிருந்த "இளங்கோபம்" பின் அவர் மனம் மலர இடம் கொடுத்ததென்பதற் கையம் இல்லை. ஆயினும் அவர் சில ஸங்கதர்மம் (Institutional Charities) செய்தனரோ அன்றி அம்மஹான் ஏஸு(Jesus)கூறியவாறு தன் வலதுகை செய்த தருமம் இடதுகை அறியாதிருக்கட்டும் என்று செய்தது பலவன்று. இங்கு கூறியது அய்யாவாது பெருமையைக் குறைக்கவன்று. ஸத்ஸங்கதர்மமானது பின்பற்றுவர் கையில் பட்டு தத்தளிக்கு நிலைமையில் வாராது காப்பது மாத்திரமன்றி தமது பெயரைப் பிரதிஷ்டைச் செய்யச் செய்ததென்று சொல்லக்கூடியதென்னும் வடுச்சொல்லைக்குறித்தே அவ்வாறு சொல்லியது. அவர் ராஜாங்கவேலையில் செய்த செயல்கள்யாவும் ஜனங்களுடைய மனத்திற் கினியதோ இல்லையோ என்று விந்தாந்தப்படுத்த அவர் இருந்த காலம் சிறிதே ஆகும். அவ்விஷயம் பல அபிப்பிராயங்களிற் இடம் கொடுக்கக்கூடிய தாயினும் அதைச் சொல்லத்துணிய காலம் தானே கைக்கொள்ளும். தன்னுடைய அபிப்பிராயத்தில் ஒப்பாதவர்களிடம் அவர் கொண்ட அஸூயையும், வாக்படபடப்பும், எடுத்தெரிந்துபேசும் தன்மையும், உன்னத நிலையே உண்டாக்கி இருக்கலாம். தன்னுடைய செயல் நியாயம் என்று தான் கொண்ட அபிப்ராயத்தால் அவ்வாறு செய்தார் என்பது பிறருடைய மனவிசாலத்தை பாராதவர் என்று சொல்ல இடம் தரும். "நெற்கும் உமியுண்டு" என்றவாறு பலாமுள்போல வெளிக்காட்டிய ஸ்வபாவத்தின் உள்ளிருந்த இனியபாவம் அவரோடு பழகியவர் அனைவரும் கண்டிருப்பார் என்பதற்கு ஐயமில்லை. அவருடைய குணவிசேஷம் எவ்வாறு இருப்பினும் அவர் தனதுநாட்டு பாஷைகளின் விருத்தியின் பொருட்டும், தருமங்களின் நன்னிலமையின் பொருட்டும் உழைத்தது மற்றெல்லாவற்றையும் மறக்கும்படிச் செய்யும். அதுமாத்திரம் அன்று. அவருக்கு ஸமானம் நுட்பமாக விஷயத்தை கிரஹிக்கும் தன்மையும், அதிசீக்கிரத்தில் எதையும் செய்யக்கூடிய சக்தியும், மனோதைரியமும், திட அபிப்ராயமும் இந்த ராஜதானியில் இனிக்கிடையாது. இத்தகையபெரியோர் உலகில் அநேகர் கிடைப்பதரிது. இவரும் அதிசீக்கிரத்தில் பேருலகிற்கு அழைக்கப்படுவார் என்று யாரும் எண்ணவில்லை. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தேகவியோகமடைந்தார் என்பது அன்று ஓர் கனவாகத்தோன்றியதே அன்றி நடந்த செயலாகப் படவில்லை. இம்மானுஷகாயத்தின் நிலைமை அவ்வளவு தான். ஆயினும் அவர் செய்த தருமமானது, ஸங்கதருமமதுவே ஆயினும், என்றும், யாவராலும் போற்றக் கூடியதாகி அவற்கு புகழுடம்பை அளித்து, அது ஜனங்கள் மனத்தில் வாழச், செய்யும் என்பதற்கையமில்லை. ஆகையால் அப்புலவர் கூறியாங்கு,

தோன்றிற் புகழொடு தோன்றுக : அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.



கணேசர்.



ஸுப்ரஹ்மண்யர்.



மஹாவிஷ்ணு.



பரமசிவன்



# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." —திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருதுஹு தைமீ : 1 12-ஹு பிப்ரவரிமீ { பகுதி 8

## கீதா மஹான்கள்

## THE GREAT MEN OF THE GITA

### 1. ஸ்திதப்ரஜ்ஞன் (கீதை II,54—72)

அர்ஜுனன் பகவானை நோக்கி 'ஸ்திதப்ராஜ்ஞன் லக்ஷணம் யாவை? அவன் எவ்வாறு பேசுவான், இருப்பான், உலாவுவான்?' என்று கேட்டான். அதற்குப் பகவான் பின்வருமாறு கூறுகிறார்.

'மனத்தின்கண்ணுள்ள காமாதிகளை அறவே விட்டு தன்னுள்ளேயே ஆத்மதிருப்தி உடனிருப்பவனே ஸ்திதப்ராஜ்ஞன் எனப்படுவான். துக்க காலங்களில் மனச்சஞ்சல மற்றவனும், ஸுக காலங்களில் மனம் பற்றில்லாதவனும், ராகம், பயம், கோபம் ஆகிய இவைகளிலிருந்து விடுபட்டவனும் இருப்பான் அவன்.

எவ்விதப் பற்றுமின்றி, சுபாசுபங்கள் வந்தபோதிலும், விருப்பு வெறுப்பு அற்றவனாய் இருப்பவன் புத்தியே ஸ்திரமாயுள்ளது. அபாயகாலங்களில் தன்னை அறியாமலே தனது அங்கங்களை உள்ளிழுத்துக்கொள்ளும் தன்மை வாய்ந்த ஆமையின் குணத்தைப்போல விஷய ஸம்பந்தப்படுங்கால் இந்திரியங்கள் முதலியன அந்தர் முகப்படும் குணமாகிய கூர்மவிருத்தி வாய்ந்த மஹானது புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது என்று கூறலாம்.

'விஷயங்கள் ஸாதாரணமாக ஒதுங்குபவரை வந்து அதிகமாகத் தாக்காவிடினும், விஷய ஆசை பரம்பொருளை உணர்ந்தக்கால்தான் முற்றிலும் நீங்கும். சஞ்சலமடையும் இந்திரியங்கள் அறிவுடையோர் முயற்சியை வீணாக்கி அவர் மனதை வேறு விஷயங்களில் இழுத்துச் செல்லும். இவைகளை எல்லாம் அறவே அடக்கி, இந்திரியங்களை எல்லாம் தகைந்து பரமாகிய என்னை உணர்ந்து நிற்பவன் புத்தியே ஸ்திரப்பட்டிருப்பது.

'விஷயத்தை நினைத்ததும், அதனுடன் ஸம்பந்தம் ஏற்படுகிறது, இதனால் முறையே காமம், கோபம், மோஹம், அறிவு மயக்கம், புத்தி நாசம் முதலியவைகள் உண்டாகி ஸாதகன் அதோகதி யடைகிறான்.

ஆதலா விஷயங்களுக்கிடையிலிருந்தும் விருப்பு வெறுப ன்றி அடங்கிய விருத்தியுடையவன் சாந்தி பெறுவ . இதனால் துக்க நிவிருத்தியும், ஸ்திரபுத்தியும் உ ாகிறது.

'அயு ர்களுக்கு (தகாதவர்களுக்கு) புத்தி, பாவனை, முதலிய வகள் இல்லாமல் போக இவர்களுக்குச் சாந்தி ஏ டாது, இவர்களுக்கு எப்படி ஸுகம் ஏற்படும்? ச லமான இந்திரியங்களுக்கு மனம் வசப்பட்டு வி ால் கடலில் புயல்காற்றுள் அகப்பட்ட கப்பல் க அதற்கு வந்துவிடும். ஆதலால் இந்திரியம் அட பெற்றவர் புத்தியே திடப்பட்டது என்னலாம்.

'எல்லே க்கும் இருளாக (விளங்காததாக) இருக்கும் பரமந ஸ்திதப்ராஜ்ஞனுக்குப் பட்டப்பகல்போலவும் (நேரி அறியக்கூடியதாகவும்); எல்லோருக்கும் பட்டப்பக போலவிருக்கும் உலகநிலை அவனுக்கு இருள்போ காணப்படும். பாயும் ஆறுகளால் பூரிக்காத போல, தாக்கும் ஆசைகளால் அசையாத தன்ன வாய்ந்தவனே சாந்தி பெறுவன். ஆதலால் ஆசை விட்டு மற்ற அகங்காரம் மமகாரம் நீங்கப்பெற ன சாந்தி பெறுவன். இதுதான் பரமநிலை; இதை டைந்தவன் குழம்புவதில்லை. முடிவு காலத்தில் நிலைபெற்ற போதிலும் பிரஹ்ம நிர்வாணத்தை டைவான்.'

### 2. க்ருத பன் (அத் 3-சுலோ 15—19)

'இவ்வுலக கர்மகதியைப் பின்பற்றி செய்ய வேண்டிய கா ளச் செய்யாது இந்திரியங்கள் மூலமாக ஸுகங் விடாது அனுபவித்து எவன் அழுந்துகிறு வன் வாழ்க்கை வீணே. ஆனால் ஆத்மாவினிட உள்ளக்கிளர்ச்சி, திருப்தி, தடையற்ற ஆனந்த லியவைகள் உடையவன் எவனோ அவன் செய்ய டிய கர்மம் ஒன்றுமே இல்லை. செய்கை செய் என்பவற்றால் அவனுக்கு ஆவதும் ஆகாததும் மில்லை. அவனுக்கு ஆகவேண்டிய காரியம் வஸ்துவையும் பொருத்ததல்ல. ஆதலால் நீ செ டிய கர்மத்தைப் பற்றில்லாது செய் இவ்வாறு ால் மேலான (க்ருதக்ருத்ய) நிலையை நீ அடை '

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ தைமீ [குதி 8


## விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGS

### பீடிகை

விக்ரஹாராதனத்தின் ஆதாரத்தைப்பற்றிக் கூறுங்கால் வேதத்திலுள்ள அக்னி, ஸூர்யன் முதலியவைகளைப் பரம்பொருள் தேற்றங்களாகக்கொண்டு ஆராதிப்பதும், மாசப்தங்களைக்கொண்டு, வழிபடும் பரம்பொருடதோற்றமாக விருக்கும், சப்தப்பிரமத்தை ஆராதிப்பதும் ஆகிய ப்ரதீக (ப்ரதிவஸ்து) ஆராதனமே விக்ரஹாராதனத்திற்கு ஆதாரம் என கூறப்பட்டுள்ளது. மேலும் தேவதைகளை த்யானிப்பதற்கு ஏற்பட்டுள்ள த்யான சுலோகங்களும், சிறந்த வேத உட்பொருள்களும் ரஹங்கள் ரூபமாக அமைக்கப்பட, அவைகள் ஆராதிப்பவனுக்கு அவைகளைப் புகட்டு அறிகுறிகளும் ஆகின்றன. இதனால்தான்விக்ரஹங்கள் ஞானிமுதல் பாமரன் வரையில்லோருக்கும் உபயோகமாக விருக்கின்றன

விக்ரஹங்களையே பரம்பொருளாக் கருதி வழிபட்டு காம்யமான பிரார்த்த முதலியவைகள் செய்து உழலுவது பகள் ஒழுங்காயினும், அது சற்று அறிவானவர்களுக்கும், ஞானிகளுக்கும் பொருந்த வழிபாடு. இவர்கள் விக்ரஹங்களை வழிபல் எவ்வாறு வழிபடுவார்கள்; விக்ரஹங்களைவாறு மதிப்பார்கள் என்பவைகளை இங்குப்புகுவோம்.

ஆகவே விக்ரஹத்திலுள்ள ரஹஸ்யங்களை இருவிதமாக எடுத்துரைக்கலாம். அவையாவன: ஸாதாரணமாக அறிவுடையோர் நோக்கும் விதமாகிய ஈசுவர அல்லது பக்தி வழியென்றும், ஞானிகள் நோக்கும் குரு அல்லது வேதாந்த வழி என்றும் உள்ள இருவகையே. இதில்முன்வழியில் அறிவுடையோர்கள் விக்ரஹத்தை எங்கும் பரவி அந்தர்யாமியாகக் கலந்திருக்கும் கடவுளின் அறிகுறியாகக் கொண்டு,கடவுளது அனந்த கல்யாண குணங்களை விக்ரஹங்களின் ஒவ்வொரு சின்னங்களும் உணர்த்துகின்றன என்று மதித்து அக் கடவுளைத் தம்மைவிட்டுப் பொதுவாக வேறாக நினைத்து அவர் கல்யாண குணங்களில் ஈடுபட்டு நிற்பர். ஞானிகளோ அவ்வாறின்றி எங்கும் நிறைந்த ஸத்யவஸ்துவாகிய பரம்பொருள் விக்ரஹத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளி, தான் அடையக்கூடிய முடிவான நிலையாகிய ப்ரஹ்மமே யாதல் என்னும் பரம ரஹஸ்யத்தை அநேகவிதச் சின்னங்களால் உணர்த்தி தன் மனதைக் குவிய வைத்து ஆட்கொள்ளுவது என்று கருதுவர். இவ்வாறு ஞானிகள் கருத்து என்பதற்கு ஆதாரம் என்ன? என்றசங்கை உண்டாகலாம். ஸ்ரீமத் பாகவதம் ஏகாதச ஸ்கந்தத்தில் காணப்படும் அவதூத ஸம்வாதத்தில் யது மஹாராஜன் தத்தாத்ரேய மஹாயோகியை நோக்கி, 'இப்பேரின்ப நிலையை எவ்வாறு நீர் பெற்றீர்' என்று கேட்க அதற்கு அவர் கூறுவார்:—

தரை, புனல், கனல், கால், வானம்,
தபனம், வெண் திங்கள், வாரி,
வரையுரை அரவு, மான், கான்
வருகரி, பதங்கம், மீனம்,
முரலளி, கணை எய்கின்றோன்,
மொழிதருங் குமரி, தேனீ
யுரைதரு புறவு, தாசி,
ஊன்கவர் அன்றில், நாகம்,
உறைந்நூல் சிலம்பி, மைந்தர்,
ஊதுவண் டெடுத்த கீடம்,
சிறந்தன இவை நாலாறும்
சிந்தையிற் குருவென் றாக்கி



மறந்தரு மவைகள் தீதாம்
மற்றவை நலனும் என்றிங்,
கறிந்தனன் இன்பம் உற்றேன்
அவ்வகை அரசே கேண்மோ.

இங்குக் கூறியிருக்கிறபடி ப்ரபஞ்சம் முழுவதையும் மோனானந்த நிலையை உணர்த்தும் குருவாகக்கொள்வது ஞானிகள் இயல்பேயானல் கோயில் விக்ரஹங்களையும் அவ்வாறே கொள்ளுவர் என்று சொல்லவும் வேண்டுமா!

பொதுவாக நமது விக்ரஹங்களை ஞானிகளும் அறிவுடையோர்களும் இவ்வாறு கருதுவர் என்பதை ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் பின் வருமாறு கமலாம்பாள் சரித்திரத்தில் எடுத்துச் சுருக்கிக் கூறுகிறார்:

நம்முடைய பெரியவர்கள் கடவுள் மூர்த்தங்களை எல்லாம், ஞானனந்த மூர்த்திகளாக, பாவனைபண்ணியிருக்கிறார்கள். நான் அறிந்தமட்டில் வேறெவர்களும் கடவுளை இப்படி அறியவில்லை. கடவுள் அழிவில்லாத ஆனந்தமூர்த்தி. கணபதியோ ஆனந்தம் பொழிந்து, அந்த ஆனந்த வெள்ளத்தில் கண்சிறுத்த யானை ஸ்வரூபம். ஸுப்ரஹ்மண்யரோ மயில் வாஹனத்தின்மேலேறி ஆனந்தப் பிரமை பாடுகிறார். மஹாவிஷ்ணு பாற்கடலைத் தேடிப் பள்ளிகொண்டிருக்கிறார். நித்திரை வராவிடிலோ கருடன்மீதேறி ஆனந்தமாய் பவனி வருகிறார். நடராஜரைப்பற்றித் தான் கேட்கவேண்டியதேயில்லை. 'சித் ஸபையில் ஆனந்த நர்த்தமிடும் கருணாகரக் கடவுளே' என்று நன்றாய் (தாயுமானவர்) சொன்னார்.

வேதாந்த உல்லாஸத்திலும் 'நாட்டிய உடைகள், பழமையான நாற்காலிகள், புகைக் கப்பல்கள் ஆகிய, நாகரீகம் உடையோரால் நன்கு மதிக்கப்பட்ட விஷயங்களைக் கொடுத்து நம்மை மேன்மைப்படுத்தாவிடினும், நம்முன்னோர்கள், வெள்ளியங்கிரி, தங்கமலை, பாற்கடல், தெய்வ நதி, காமதேனு, கல்பகவிருக்ஷம்,வெள்ளையானை, கருணையங்கடவுள், ஆழ்ந்தவேதாந்தம், ஆகிய இவைகளை வைத்திருக்கின்றனர். இவைகளை ஒருவாறு குறிப்பாகக் காட்ட இம்மண்ணுலகிலும், ஹிமாலயம்,கங்கைமுதலியவைகளும் அமைந்து கிடக்கின்றன. நமக்கு என்னகுறை?' என்று கூறியிருக்கிறார்.

இம்மாதிரியான கூட்டத்தில் சேர்ந்தவை விக்ரஹங்களும். இதற்கேற்ப நாம் வழிபட்டு வரும் சிற்சில விக்ரஹங்களுள் அடங்கியிருக்கும் இருவிதமான உட்கருத்தை ஒருவாறு இங்கு வெளியிடுவோம்.

### 1. கணேசர்

யானை முகம் பருத்த தொந்தி சதுர்புஜங்களுடன் வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ரூபமாக இந்த விக்ரஹம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் யானைத்துதிக்கையில் மோதகம் அல்லது அமிர்த கலசம் கொடுக்கப்பட்டு அதை இடக்கை ஒன்றால் பிடித்திருப்பதாக அமைக்கப்பட்டிருக்கும். மற்றைய இடக்கையில் பாசமும், ஒரு வலக்கையில் சங்கமும் மற்றொரு வலக்கையில் அங்குசமும் காணப்படும். வலக்கொம்பு ஒடிந்திருக்கும். இவருக்கு வாஹனம் மூஷிகம். இவருக்கு முக்கியநாள் சதுர்த்தி. இவர் நித்ய ப்ரஹ்மசாரி. இவர் கோயில்கள் கண்டவிடமெல்லாம் இருக்கும். எந்தக்காரியம் தொடங்கியபோதிலும் இவரை முதலில் பூஜை த்யானம் முதலியன செய்துவிட்டுத்தான் தொடங்கவேண்டும். இவருக்கு மோதகமே அதிகப்ரீதி.

இவ்வாறு அதிவிசித்திரமான உருவத்தைக் கண்ட உடனே இதை நேரிடக் கடவுள் எனக் கருதி வழிபட்டால் ஒருவேளை ஞானக்கண்ணுக்கு இது எதிர்ப்படுமாயின் இதைக்கண்டு பயப்பட நேரிடுமே ஒழிய வேறில்லை என்று தோன்றும். ஆகவே இந்த விசித்திரபிம்பத்தில் உட்கருத்து ஏதோ ஒன்று இருத்தல்வேண்டும். இல்லாவிடில் இதை நம் பெரியோர் சிறந்ததெனக் கொண்டாடி வழிபட்டிருக்க மாட்டார்கள். கணபதி விஷயமான புராணமும் மதமும் உபநிஷத்தும் ஏற்பட்டு ஓங்கியது என்பதும் இதன் உட்கருத்தின் சிறப்பையே குறிக்கும்.

கணபதியின் உருவம் ப்ரணவத்தின் ரூபம். இதற்கேற்பவே ப்ரணவகணபதி என்ற வசன

மும் வழங்கி வருகிறது. ஒடிந்த கொம்பு ப்ரணவத்தின் சுழி இருக்குமிடம். ப்ரணவ எழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கைகள் வழியாகக் கிரீடத்தைச் சுற்றிச் சென்று இடக்கை பாசம் வரையில் வந்து திரும்பி வளைந்து நெற்றித் திலகம்வரையில் போய் துதிக்கை வழியாகக் கீழ் இடக்கை வந்து, கால்வரை இறங்கும். இங்கு கூறப்பட்ட ப்ரணவ உருவம் கிரந்தாக்ஷரம்: மற்றைய பாஷைகளில் உள்ள ப்ரணவ உருவமும் சற்றேறக்குறைய இதைப்போலவே இருக்கும். யானையின் சப்தமும் ப்ரணவநாதம் போல இருப்பதால் இந்த விக்ரஹத்திற்கு யானைமுகம் அமைக்கப்பட்டது. ஆகவே ப்ரணவம் எவ்வாறு ஸகல சப்தங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறதோ அதுபோல ஈச்வரனும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறார் என்பதை இந்த உருவமே குறிக்கும். வலக்கையில் இருக்கும் சங்கமும் அதன் நாதம் தலைகீழாக நிறுத்துங்கால் உள்ள உருவம் இவைகளும் ப்ரணவத்தையே உணர்த்தும். ஸகல வேத மந்திரங்களும் ப்ரணவத்தால் தொடங்கப்படுவது போல ஸகல காரியங்களும் கணபதி ஆராதனையால்தான் தொடங்க வேண்டும். இரு கைகளிலுள்ள பாச அங்குசங்கள் ஈசுவரன் ஜீவாசிகளை அவரவர்கள் கர்மங்களால் பிணித்து அவைகளின் பலன்களைக் கொடுப்பவர் என்பதைக் காட்டும். வலக்கையில், மோதகம் அல்லது அமிர்தகலசத்தை உடைய துதிக்கையைப் பிடித்திருப்பது, அழிவற்ற தன்மை நிஜானந்தம் (மோதகம்) முதலிய கல்யாண குணங்கள் அவரிடம் குடிகொண்டிருப்பது என்பதைக் காட்டுகின்றது. ஆகவே அதையும் அனுக்கிரஹத்தால் ஆராதிப்பவர்களுக்கும் கொடுக்கவல்லவர் என்பதையும் காட்டும். பெரிய வயிறு ஸகல உலகங்களும் தன்னுதரத்துள் அடங்கும் என்பதைக் குறிக்கும். இவர் வாஹனம் சிறிதாகிய மூஞ்சூறு: இவர் பரிவாரங்கள் சிறியனவாகிய எறும்பு தேள் கணங்கள் என்பவைகள், கடவுள் மஹத்துக்கு மஹத்தாயும், அணுவுக்கு அணுவாயும் உள்ளவர் என்பதை விளக்கும்.இவர்பெயர் விநாயகர் என்பது நாயகரற்றவர்,ஒப்புயர்வற்றவர் என்பதைக் குறிக்கும். ஆகவே கணபதி விக்ரஹம், தன் உருவத்தாலும் சின்னங்களாலும் வேதரஹஸ்யமாகிய ஈசுவர ஸ்வரூபத்தை நன்கு உணர்ந்து ஆராதிப்பவர்களுக்கு விளக்குகின்றது.

குரு தமது சிஷ்யனை நோக்கி என் ஸம்பந்தப்பட்ட ப்ரபஞ்சம் கர்மம் செய்தல் அதன் பலனை அனுபவித்தல் ஆகிய வெல்லாம் என் வசப்பட்டுவிட்டது. என்னை அவைகள் தாக்கா, கடவுளுடன் ஒன்றாகி நிற்றலாகிய அழிவற்ற ஆனந்த நிலையிலிருக்கிறேனாகையால் எல்லாம் என்னுள்ளும், என்னை எல்லாவற்றுள்ளும் காணும் நிலையிலிருக்கிறேன் என்ற தமது அனுபவத்தை வெளியிட்டு அவ்வாறே நீயும் இருக்கிறாய் அனுபவித்து உன்னுள் உணர் என்று கணேச விக்ரஹம் ஞானிகளுக்கு உபதேசிக்கும் குருவாக விளங்கும். இந்த விஷயத்தில் உள்ள சிறப்பான அர்த்தங்களையும் வீராஸனத்தின் உட்கருத்தையும் பின்னர் நடராஜ தக்ஷிணாமூர்த்தி விக்ரஹங்களைப்பற்றி விவரிக்குங் கால் விஸ்தாரமாக வெளியிடுவோம். பெரும்பாலும் ஸகுண உபாஸனைக்கே ஏற்பட்ட மூர்த்தியாகிய கணபதியினிடத்து அதிகமாக வேதாந்த அர்த்தத்தைப் புகுத்திக் கூறுவது நியாயமன்று. ஆதலால், இதைக்கூட ஞானி தன் மனோநிலைக்கு இசைய பொருள்படுத்தி ஆனந்திப்பன் என்பதைக் காட்ட மாத்திரம் முற்கூறிய உட்பொருள் எழுதப்பட்டதே ஒழிய பிறர்களுக்கு எடுத்து விஸ்தாரமாக வெளிப்படுத்தி ஒருவித ஆராதனா வழியை ஏற்படுத்தக் கூறியதல்ல.

## 2. ஸுப்ரஹ்மண்யர்

இப்பதத்திற்கே நல்ல ப்ரஹ்மத்தன்மை வாய்ந்தவர் என்று பொருள். மற்ற ஆயுதங்களாலும் வழிகளாலும் அறுத்தள்ளப்பட்டும் அநேக விசித்திர உருவங்களோடு எழுந்து கொண்டே



யிருந்தது, அதிக ஆயுஸால் வயது முதிர்ந்து மஹாபலம் வாய்ந்த அஸுரராஜனான சூரபத்மனை இவர் வெகு இளம்பிராயத்தில் வேல் என்னும்புதிய ஆயுதங்கொண்டு வெட்டித்தள்ள,அப்பொழுதும் உடலை மயிலாகவும், தலையை கோழியாகவும் மாற்றிக்கொண்டு அவன் வர, மயிலின் பேரில் ஏறிக் கோழியைக் கொடியாகப்பிடித்து அவனை வசம் செய்தவர். இதன் பின்னர் இவரிடம் இரண்டு தேவிமார் வந்து சேர்ந்தனர். வேறொரு அவஸரத்தில் இவரே தம் பிதாவாகிய பரமசிவத்திற்கு ப்ரணவப்பொருள் கூறி, ஸாமிநாதன் என்று பெயர் பெற்றவர்.

கடவுள் ப்ரபஞ்சமாயையைத் தன் வசப்படுத்தும் ஞானஸ்வரூபி.எவ்விதமான உருவுடன்வந்தபோதிலும், எவ்வித வித்தைகளாலும் அடக்க முடியாதிருந்தபோதிலும் மாயை அவர் வேலாகிய ஞானத்திற்கு அடங்கிவிடும் என்றும், இவர் கையிலுள்ள திரிசூலம் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் முதலியவைகள் தன்னிடமிருந்தே உண்டாகின்றன என்றும்,இவரை இரண்டு தேவிமார் வந்தடைந்தது, பக்தி ஞானம் இவரை அடைய ஏற்பட்டுள்ள மார்க்கம் என்றும் ஸுப்ரஹ்மண்ய விக்ரஹம் வெளிப்படுத்தும்.

இதுபோல ஞானியும்,எவ்விதத்தில் கற்ற வித்தையைக்காட்டியபோதிலும் அப்பொழுதும் உருமாறி வரும் அனாதியாய் உள்ள அவித்தை ரூபமான அகங்காரம் நிஷ்டானுபூதியால் அப்பொழுதே எழுந்ததான பால்ய ஞானமாகிய அஸங்கம் என்னும் வேலால் சிதைவுண்டு தன் வசப்பட்டதையும், தன்னிலையை அடைய பக்தியும் ஞானமும் வேண்டியது அவசியம் என்பதையும், தன் ஸம்பந்தப்பட்ட ப்ரபஞ்சம் தன் இச்சாமாத்திரம் என்பதையும் ப்ரணவ ரஹஸ்யமாகிய பரம்பொருள் இத்தன்மையது என்பதையும் வெளிப்படுத்தும் ஆசார்யர் ஸுப்ரஹ்மணியர் என்று கருதுவன்.

## 3. மனிதரூபமான விக்ரஹங்கள்

இவைகள் பொதுவாக ஒரு மனிதன் நிற்கிறது போலவும், அவன் வலது கையை அமைதிக்குறியாகத் தூக்கிப் பிடித்து,இடது கையைக் கீழ் நோக்கிப் பிடித்திருப்பது போலவும், மற்றைய இரண்டு கைகளில் மான்மழுவும் அல்லது சங்கு சக்ரமும் ஏந்தி நிற்பதாகவும் காணப்படும். சில விக்ரஹங்களில் கீழ்நோக்கியகையில் காலைச் சென்று எட்டும்கதை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அருகில் ஒரு அம்பிகை விக்ரஹம் ஒன்று காணப்படும். இது பொதுவாக மனித. ரூபமான விக்ரஹங்கள் அமைப்பு.

இவைகளைக் காணும் பக்தன், கீழ்நோக்கிய கையால் தமது பாதத்தைக் காட்டி அதுவே வழிபடுவன் கதி, என்பதையும் அபயமுத்திரையால் அவனுக்கு அதனால் சாந்தி உண்டாகும் என்பதையும் குறிப்பாகக்காட்டுகிறார் ஈசன் என்றும், அவர் தமது ஸ்ருஷ்டியாதிகளுக்குக் காரணமான சஞ்சல ஸ்வபாவமுடைய மான்போன்ற மாயையை தம்வச முடையவர் ; மழுவாகிய கர்மபலன் கொடுக்கும் சக்தி வாய்ந்தவர், அல்லது சகத் காரணமாகிய நாதம் உண்டாக்கும் சங்கால் ஸ்ருஷ்டியாதிகளைத் தம்வசம் உள்ளவர் சக்ரம் போல ஆதி அந்த மற்றவர் என்பதையும், கதை காலைத்தொட்டு நிற்பதால் புத்தியை பகவான் பாதார விந்தத்தில் செலுத்தவேண்டும் என்பதையும் விளக்கி தம்மை அடைவதற்குச் சிரத்தையே முக்கியம் என்பதை தம் அருகிலுள்ள அம்பிகை மூலமாகக்காட்டுகிறார் கடவுள், என மதிப்பன்.

ஞானியோ அபயஹஸ்தால் சாந்திமுதலியவைகளைக் குறித்து, கீழ்நோக்கிய கையால் இன்றே இப்பொழுதே சிரத்தையுடன் அடைய முயன்றால் அது கிட்டுவது, இறந்தபின் தான் கிடைப்பது என்று எண்ணவேண்டாம் என்று

ஆசார்யன் உபதேசிப்பதாகக் கொள்ளுவான். உடனே

நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந்திரிய மெல்லாம் நீத்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பிலதனை உணர்ந்து உணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே.

என்று கூறிய **நம்மாழ்வார்** வாக்கு யாருக்குத்தான் கடவுளின் அபயஹஸ்தம், கீழ் நோக்கிய ஹஸ்தம் இவைகளைக் கண்டவுடன் ஞாபகம் வாராமலிருக்கும்! இவ்வாறு உயிருள்ள போதே பெறக்கூடிய பரமநிலையில் தாம் இருப்பதால் தமக்கு மான்போலச் சலிக்கும் மனமும், அது ஸம்பந்தமான விஷயங்களைத் திடமாகச் சேதிக்கும்படியான அஸங்கம் என்னும் மழுவும் எல்லாம் வசப்பட்டிருக்கும், சங்கல்பத்தால் குறிக்கப்படும் காரணத்தால் உண்டாகும் ப்ரபஞ்சம் எல்லாம் தம் வசம், தாம் சக்கரம்போல ஆதி அந்தமற்ற நித்யர் என்று ஆசார்யர் தமது அனுபவ நிலையை உணர்த்தி சிரத்தையுடன் அநுஷ்டித்தால் உனக்கும் இந்நிலை வரும் என்று அருகிலுள்ள முக்தி காந்தாவால் வெளியிடுகிறார் என்று மதிப்பான் ஞானி.

ஆகவே இதுவரையில் கூறிவந்தவைகளிலிருந்து பக்தன் விக்ரஹங்களைக் கடவுளென மதித்து அவர், தம்முள்ளும் எங்கும் பரவி தொழில் நடத்துபவர், அவரன்றி ஓரணுவும் அசையாது என மதித்துப் பரவசப்படுவான் என்பதும், ஞானியோ எங்கும் உள்ள பரம்பொருள் தாமாகி நின்று, சிஷ்யனும் அவனுள்ளிருக்கும் பரம்பொருளை அவ்வாறு உணர்ந்து ஒன்றுபட்டு அந்நிலையை அடையும்படி, அனுக்கிரகிக்கும் குருமூர்த்தமாகக் கொண்டு விக்ரஹங்களை வழிபடுவன் என்பதும் விளங்கும். இது போலவே மற்றுஞ்சில விக்ரஹங்களைப் பின்னர் எடுத்து விளக்குவோம்.

# கம்பநாடர் சரித்திர விளக்கம்

## LIFE OF KAMBAN

281-வது பக்கத் தொடர்ச்சி

இது தற்காலம் தேரழுந்தூர் என வழங்கிவருகிறது. மாயூரமென்ற ஸ்தலத்திற்கு மேற்கு, குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு $2\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. சைவசமயாசாரியர்களால் பாடல்பெற்ற சிவக்ஷேத்திரம் 274. அவற்றுள் காவேரி நதியின் தென்கரையிலுள்ள 127-ல் இது ஓர் திவ்ய க்ஷேத்திரம். வைஷ்ணவாசாரியர்களான ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பெற்ற 108 திருப்பதிகளினுமிதொன்று.

### திருஞான சம்பந்த மூர்த்திகள்

அருஞானம் வல்லாரழுந்தை மறையோர்
பெருஞான முடைப்பெருமா னவனைத்
திருஞான சம்பந்தன் செந்தமிழ்கள்
உருஞான முண்டாமுணர்ந்தார் தமக்கே."

### சுந்தரமூர்த்திகள்

காட்டூர் கடலே கடம்பூர் மலையே கானப்பேருராய்
கோட்டூர் கொழுந்தே யழுந்தூரரசே...

### திருமங்கையாழ்வார்

தந்தைகாலிற் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண்
வந்தவெந்தை பெருமானார் மருவிநின்ற வூர்போலும்
முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாள
ரந்திமூன்று மனலோம்பு மணியார்வீதி யழுந்தூரே."

உச்சிமேற் புலவர்கொள் **நச்சினார்க்கினியர்** பொருளதிகாரவுரையில் எடுத்துக் காட்டியது மிவ்வழுந்தூரேயாம்.

மன்றே புகழுந் திருவழுந்தூர்
என சடகோபாந்தாதியினும்
சீரணிசோழ நாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்
என ராமாயணத்தும் கூறப்படுவது காண்க."

இனி **கம்பநாடர்** கதையை எடுத்துக்கொள்வோம்.



**ஆதித்தன்** என்னும் ஒச்சன் தம்மினத்தவர்களோடு ஜாதி முறைமையின்படி அம்மன் சந்நிதியிற் கூட்டம் கூடி, தனக்குக் காஞ்சியில் கடவுள் அருளால் கிடைத்த அப்பிள்ளையின் வரலாற்றைக் கூறித் தங்களில் பெரியோருடன் இப்பிள்ளைக்கு என்ன பேரிடலா மென்றாலோசித்தான். அதனைக் கேட்டவர்கள் மகிழ்ந்து கம்பநாட்டிற் கம்பரருளாற் கிடைத்த காரணம்பற்றி **கம்பநாடன்** என்பதே தகுதியென்று நாமகரணம் சாற்றி தேவியின் பிரசாதமான திருநீறளித்து (கண்டி) உருத்திராக்ஷமாலை முன்னூல் முதலிய பூசாரிச்சாதிக் கேற்ற கோலம் புனைவித்து, தத்துக்கொண்டாரோ, தாங்கள்தான் பெற்றாரோ வென அவ்வூரா ரெல்லாம் கொண்டாட, அனைவருக்கும் உண்டி யளித்து மகிழ்ந்தார்கள்.

இனி ஒச்சர் மரபைச் சிறிது விளக்குவோம். **ஒச்சர்** என்பார் குயவர்களின் ஒரு பகுதி. குயவரிற் தாதனில்லை. தாதனிலாண்டியில்லை என்பதொரு பழமொழி. அதாவது குயவரில் வைஷ்ணவாசாரமுடையவரே இல்லை. அது போல் (தாதர்) யாதவர் இனத்தில் சைவாசாரமுடையவர் இல்லை என்பதாம். **ஸ்ரீரங்கத்துக்** குயவர் மாத்திரம், நெற்றியில் நாமதாரணம் செய்துகொள்வர். அவ்வூரில் மற்ற ஜாதியாரிடத்திலும் இந்தச் சம்பிரதாயம் காணலாம்—கோவில் சம்பந்தமான வேலையுள்ளோர்க்கு இந்த நிர்பந்தம் பிற்காலத்துண்டானது. இது வயிற்றுப்பிழைப்பு என்றறிவார். இக்குயவர்கள் பிரமசிருட்டியன்றிச் சிவனால்சிருட்டிக்கப்பட்டனர்—அதனாற்றுனிவர்களை - கு, சிவன் கு, சத்தி - பூமியில் சிவசத்தி யம்சங்கள் விளங்க இப்பெயரிட்டனர்களென்றும் குலாலபுராணம் கூறும்) அன்றியும் ஆந்திர தேசத்தில் இவ்வருக்கத்தில் (மொல்லம்மாள்) என்னும் ஓர் குசப்பெண் ஸ்ரீமத் ராமாயண மியற்றித் தன்பேரால் (மொல்லராமாயணம்) என பத்யகாவியமாக விளங்கச் செய்திருப்பது தற்காலத்தில் யாவருமறிந்த விஷயம். அக்காவியம் ஆங்கில கலாசாலைகளிலும் பாடம் நிகழ்ந்து வருகிறதும் காண்க. இவ்வக்கத்தின் ஓர் பகுப்பினராகிய ஒச்சர் குயவர்கள்போல் (பாண்டவிர்த்தி) சட்டிபானை செய்யும் தொழிலினரல்லர். இவர்கள் கிராம தேவதையாகிய, (பிடாரி) காளி கோவில் பூஜகர்களாம். இது நமது தென்னாடு முழுதும், ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள கோவில்களில், இவ்வருக்கத்தினரே பூஜை செய்து வருவதையும் அதற்காகக் கிராமங்களில்மானியம் **உம்பளம்** நெடுங்காலமாகப் பூர்வீக ராஜாங்கத்தாரால் விடப்பட்டிருப்பதையும் காணலாம். இவர்களுக்கு **விபூதி, ருத்ராக்ஷம், முன்னூல் இயற்கை லட்சணம்**. இவ்வோச்ச மரபினர்கள் சென்னை, தஞ்சை, திரிசிரபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய பல இடங்களிலும் வசிக்கிறார்கள்.

இவர்களில் சிலர் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதம், தென்மொழியாகிய தமிழ் முதலிய பல பாஷைகள் பயின்று கவிகளாகவுமிருக்கிறார்கள். சிலர், சங்கீத வாத்திய சாமர்த்தியர்களாகவுமிருக்கிறார்கள். சிலர் வைத்தியம், சோதிட முதலிய தொழில் பயின்று வருகிறார்கள். அனேகர் தென்னாட்டில் தங்களியற்பெயரோடு **கம்பர்** என்னும் பட்டப்பேரும் தரித்து வழங்கி வருகிறார்கள்.

**ஆதித்தன்** தன் மகனை **கம்பநாடனை** நாடோறும் காலையில் அம்மன் கோவில்வாயிலில், பொழுதுவிடியுமுன் சங்கூதும்படி சட்டமிட்டு, பூஜா காலங்களிலும் தன்னுடன் வைத்துக்கொண்டு பூஜா விதானங்களையும் தெரிவித்து வந்தான்.

ஈடார் தருஞ்சோழ நாடதிலுருந்
திருவழுந்தூரினிற்
பீடாருமோச்சக்குலத் தொருவனவ்வூர்
பெருங்கோயின்வாய்
நாடாளுதிக்குந்தொறுஞ் சென்று
சங்கூது நல்வேலையான்
கோடாமலது செய்து வருநாளி
லொருநாளிற் கூராயிடை"

அத்திருவழுந்தூருக்கு அடுத்த மேல் கிராமமாகிய வெண்ணைநல்லூரில் வேளாளர் குலதிலக

ராகவும், மிக்கசிறப்பாகவும் வாழ்பவர். பரம்பரையாகவே பெரிய குடித்தன மிராசுடையவர். தமிழ் நாட்டரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களால் மிகவும் நன்கு மதிக்கப்பட்டவர். பெருங்கொடையாளர். கவிவாணர்களெல்லாம் கற்பகம் என்றுபலகாலும் பாராட்டத்தக்கவர் (**சடையப்ப வள்ளல்**)இவருக்குப் புதுவைச் சேதிராயர்,புதுச்சேரிக்குடையார், திரிகர்த்தாரயர், பிள்ளைப் பெருமாள் எனப் பல சிறப்புப்பேர்களுமுண்டு.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டுவந்த வஞ்சிமார்த்தாண்டன் மூத்த திருவடிகள் சேரமான் பெருமான் என்னுமரசர் சடையப்ப பிள்ளைக்கு விடுத்ததாக அதன் பக்கத்து கிராமம் மூவலூர் கோவில் கல் வெட்டில் காணப்படுகிற

காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தரும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து."

"பேராசைப்பிள்ளை பெருமாளைச் சோதிப்பனை" என்ன கவிகளால் இவர் சிறப்புப்பெயர்கள் வெளியாகின்றன. இவர்க்குக் கண்ணப்பப்பிள்ளை, சரராமபிள்ளை என்ற இரண்டு (பாகு) கைகள் போன்ற சகோதரர்களுண்டென்பதும், சேதுப்பிள்ளை என்ற அருமைக் குமாருமுண்டென்பதும் ஸ்ரீராமாயணத்தில் விளக்கப்படுவதுங் காண்க."

இவர் தந்தை சங்கரபிள்ளை. இடம் உதவித் தொழில் புரிந்திருந்த ஒட்டக்கூத்தனை அக்காலத்தில் கல்விபயில்வித்து கவிராக்ஷஸன், கவுடப் புலவன் என உயர்த்திச் சிறப்பித்த காங்கேயன் என்னுமரசன் நன்றிபாராட்டிய கூத்தப்புலவரைக் கூறிய

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களிறு கைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் களங்கள் வியந்துகாங் கயன்மேல்
கூறுநா லாயிரக் கோவைகொண் டுயர்ந்தோன். என்ற

கம்பநாடர் தந்தை ஆதித்தன் உத்திரவுப்படி தேவியின் கோயில் பணிவிடையி லமைந்து பூஜை வேலையிற் பழகி வருநாளில்,

ஒருநாள் வெண்ணை நல்லூர் மகா பிரபுவாகிய சடையப்பபிள்ளை திருவழுந்தூர் காளி கோயிலுக்குத் தெரிசனார்த்தம் வந்தார். ஆதித்தன் மிக்க பிரீதியோடு தங்கள் நாட்டுத்தலைவராயும், தங்கள் காளிகோயிலுக்கு மானியம் விட்டிருப்பவராயும், தேர் திருவிழா நடத்துபவராயுமுள்ள சீமான் சடையப்பபிள்ளை வரவே கண்டு எதிர்சென்று மிக வணக்கத்துடன் உபசரித்து, கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய், தேவிக்குத் தீபாராதனை முதலியன செய்து மிக அன்போடு விபூதி, திருமாலை முதலிய பிரசாதங்கள் அளிக்கும்போது, பிள்ளையவர்களும் மிக்க பக்தியோடு சாஷ்டாங்கமாகப் பரதேவதையின் சந்நிதியிற் பணிந்து எழுந்து பெற்றுக்கொண்டு மிக்க சந்தோஷத்தோடு ஆதித்தனைப் பார்த்து உம் பக்கத்திலிருக்கும் இப்பையன் யாவன்? குட்டிப்பூசாரியோ? என்று கேட்டார். ஆதித்தன் மிக விநயத்துடன் சிரித்துக்கொண்டு ஓ, ஓ, இது அவ்விடத்திற்குத் தெரியாதோ அடியேன் பாக்கியம், நமது பையன்தான் என்றான்.

கவியால் சடையப்பபிள்ளை தந்தை சங்கர பிள்ளையென்றது வெளியாகிறது. வெண்ணெய் நல்லூர் என்பது தற்காலம் கதிராமங்கலம் என வழங்குகிறது. இது முற்கூறிய குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கில் இரண்டுமெயிலுள்ளது. வெண்ணெய் நல்லூர் என்ற பெயரை மாற்றி கதிர்வேய். மங்கலம் எனக் **கம்பரால்** அமைக்கப்பட்டதென்றும் அது மருவி கதிராமங்கலமென வழங்கி வருகிறதெனச் சொல்லுவார். அன்றியும் அவ்வூர் வெள்ளைப்பிள்ளையார் கோவிலிலிருக்கிற செப்புவிக்கிரகத்தின் பீடத்திலும் வெண்ணை நல்லூர் பிள்ளையார் என்று எழுத்துக்கள் வெட்டியிருக்கின்றன. இவ்வூரில் சடையன் திடல், கம்பர்திடல், என்னு மிடங்களின்னும் அறிகுறியாக விளங்குகின்றன. இதன் விருத்தாந்தம் இனி சரித்திரத்தால் வெளியாகும்,



அதற்குச் சடையப்ப பிள்ளையவர்கள் 'இதேது புதுமை? உமக்கு இப்படி ஒரு பிள்ளை யிருக்கிறதோ நான் அறியேனே?' என்றார். ஆதித்தன் 'ஆண்டவனே எல்லாம் ஈசுவரி கடாக்ஷம். அடியேன் சில நாளைக்குமுன் காஞ்சிக்கு யாத்திரை சென்றேனல்லவா, அப்போது பல ஸ்தலங்களுக்கும் போய்த் தெரிசனம் செய்துகொண்டு கடைசியில் காஞ்சி சென்று அக்கடவுளைப் பணிய, அக்கம்பாருளால் இப்பிள்ளையைப் பெற்றேன்; இவ்வளவு காலம் பிள்ளையில்லாக் குறையுமற்றேன்' என நடந்ததைக்கூற இதையெல்லாம் சடையப்ப பிள்ளை கேட்டு மிகமகிழ்ந்து அப்பையனைச் சமீபத்திலழைத்துத் தடவிக்கொடுத்து, உற்றுப் பார்த்துப் பார்த்துக் களிப்படைந்து 'நல்லது பையன் உமக்குக் கிடைத்தது தேவியின் கிருபையே! இப்பையன் மிக்க மேன்மை யடைவான், இவனால் நீர் வெகு சிறப்பை யடைவீர்' என்று பின்னரும், சடையப்ப வள்ளல் 'இவன் பெயரென்ன'வென ஆதித்தன் '**கம்பன்**' என்றான். 'நல்லது தக்க வயதை அடைந்திருக்கிறானே? வித்தை என்ன நிலைமையிலிருக்கிறது' என, ஆதித்தன் 'ஆண்டவனே, அதுதான் பூச்சியம். இனிமேல்தான் ஆரம்பஞ்செய்யவேணும். பூஜை செய்வான். சாதி முறை கொஞ்சம் பழக்கி யிருக்கிறேன் அன்றி வேறில்லை' என்றான். அதைக் கேட்டுச் சடையப்ப பிள்ளை 'அப்படியா, அது நியாயமல்ல. அவசியம் படிப்பிக்கவேண்டும். மனிதர்களில் யாவரேயாயினும் கல்லாத மாந்தர், நெல்லுடன் பிறந்த பதானன்றோ, அவர்க்கு இவ்வுலகத்தில் என்ன இன்பம் உண்டாகும். படியாதவர்களுக்கும் நாற்கால் பிராணிகளாகிய மிருகங்களுக்கும் ஏதாவது பேதம் உண்டோ? இல்லை. ஆகையால் அது அவசியம் வேண்டுவதே. இக்கல்வியை அவர்களுக்குப் புகட்டுவது பெற்றோர் கடனே. நீர் அதை எத்தனியாதது நியாயமன்று. ஆயினும் இப்பிள்ளையைக் கண்டவுடனே எனக்கு மனது ஒருவிதமாகச் சந்தோஷமடைந்தது. நான் என்ன உதவிசெய்யலாம் என்றாலோசித்தேன். நீர் இதைச் சொன்னபிறகு, எக்காலத்துமழியாப் பெரும் பொருளாயும், எவற்றினும் மேன்மை யுடையதாயும், நீங்கா நெடுந் துணையாயும், இம்மை மறுமைப் பயன்களை யளிக்க வல்லதாயுமிருக்கிற கல்வியினும் கைகண்ட பொருள் வேறுண்டோ? இல்லை. ஆகையால் அப்பொருளை உம் புதல்வனுக்கு நானே உதவி செய்விக்கிறேன்' என்றார். அதைக் கேட்ட ஆதித்தன் மிக சந்தோஷித்து 'ஆண்டவனே! நாங்கள் என்றும் தங்களை அடுத்தோர்களாகையால், எங்கள்மேல் கிருபைசெய்து காக்கத் தாங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். எல்லாந் தங்களுடையது. தங்களிஷ்டப்படி நடத்திக்கொள்ளலாம். ஈசுவரி காப்பாற்றுவாள்' என்று, பையனைப் பார்த்து 'அப்பா **கம்பா**, எல்லாம் கேட்டுக்கொண்டனையா. நீ தேவியை நமஸ்கரித்து ஐயாவுடன் போ. அவர்கள் சொன்னபடியே கேட்டு நட. நம்மை என்றும் காப்பாத்தும் எஜமான்கள்' எனக், **கம்பனும்** அப்படியே அம்மையைப் பணிந்து தந்தை உத்திரவையும்பெற்றுக்கொண்டு **சடையப்ப** பிள்ளையுடன் மிக்க விநயமாய்ச் சென்று வெண்ணெய் நல்லூரை யடைந்தான்.

**சடையப்ப** வள்ளலும் தன் கிராமத்தில் தன்னாலமைக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயராகிய கணக்காயரிடத்தில் ஒப்பிவித்து, ஐயா இப்பிள்ளைக்கு மிகச் சிரத்தையாய்க் கல்வி கற்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்.

அவருமப்படியே சம்மதித்து ஒரு நல்ல நாளில் அக்ஷராப்பியாசந் தொடங்கினர். **சடையப்ப** வள்ளலோ அன்னம், வஸ்திரம் முதலிய வளித்துத் தன் மக்களினு மிக்க அன்பு பாராட்டிக் கவனித்து வந்தார்.

**கம்பன்** பள்ளியில் தன்னொத்தவர்களோடு படிக்கத்தொடங்கி மாந்தர்க்கினிய கண்ணெனத் தகுவதாகிய, எண்ணு மெழுத்தும் பயின்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருளிச்செய்த திருக்குறள் பாடம் பெற்றான். ஆனாலும் இளம் பருவத்தில் புத்தி கொஞ்சம் மந்தகுணத்தால்

மூடப்பட்டிருந்தது. ஆயினும் பாடம் படிப்பதில் சோம்பலில்லை. மனதில் படிவது கடினமாயிருந்ததால் அடிக்கடி சிந்தனை செய்யவேண்டியதவசியமாயிருந்தது. இதற்குக் காரணம் 'இளமையிற்கல்' என்னுமொழிக்கு மாறாய் கொஞ்சமுதிர்ந்த பருவத்தில் கல்வி தொடங்கியதேயாம்.

அப்பால் சிலகாலைக்குப்பின் திருவழுந்தூரில் சடையப்ப வள்ளல் பிரதி வருஷங்களிலும் நடத்துகிற அம்மன் திருவிழா வந்தது. வெண்ணெய்நல்லூர் ஜனங்களெல்லாம் திருவழுந்தூருக்குச் சென்றார்கள். பள்ளிக்கூடமும் விடுக்கப்பட்டது. சடையப்ப பிள்ளை உத்திரவின்பேரில் வாத்தியார் தம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளோடு திருவழுந்தூர் சென்று, தேவியாலயத்தில் தோரணம் புனைதல், மலர்களெடுத்தல், தொடுத்தல், தண்ணீர் தெளித்தல், முதலிய வேலைகளை வழக்கம்போல் பையன்களைக் கொண்டு செய்வித்தார்.

கம்பனோ தந்தையுடன் கலந்து கோயிலுக்குள் போய் அபிஷேக திரவியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் மறுநாள் பாடமாகிய

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

என்னும் குறளை மனனம் செய்துகொண்டேயிருந்தான். அதற்குள் தகப்பனாகிய ஆதித்தன் 'அப்பா! கம்பா! நாழியாச்சுது. எஜமான் வந்து விட்டார்கள். அபிஷேகம் செய்யவேண்டும், நீ சீக்கிரம் அம்மன் திருவாபரணம், திருமாலை, பரிவட்டம முதலியதை மாற்றி ஜாக்கிரதை செய்' என்றார்.

அப்போது வாத்தியங்கள் முழங்க வாரம்பித்தன. கோவில் பிரகாரத்தில் பலிக்காக அனேகம் கடாக்களைக் கொண்டுவந்து நிறுத்தவும் மே, மே, என்று கதறத் தொடங்கின.

கம்பன் சந்நிதித் திரையை இழுத்துவிட்டு உள்ளே சென்று (அகண்டத்தை) தீபத்தைத் தூண்டினான். வாயினால் தனது பாடத்தை மறவாமலிரைந்து சொல்லிக்கொண்டே திருவாபரணங்களைக் கழற்ற வாரம்பித்தான். இவனது பூர்வஜன்ம புண்யமும் பரிபாகமடைந்தபடியால், அம்மன் திருவுளம் மகிழ திருமறைப்பொருளாகிய அக்குறள் பாட்டொலியும், கதறுகிற ஆட்டொலியும், லோகமாதாவினது திருச்செவியில் செவ்வையாய் நுழைந்ததும், உடனே ஜெகதீசுவரி திவ்ய சுந்தர வடிவத்தோடு பிரசன்னமாகி மந்தஹாஸ வதனத்தோடும் "குழந்தாய் கம்பா! உனக்கென்ன வேண்டும்" என்றார். கம்பன் திடுக்கிட்டு இதேது சப்தம் என்று பிரமித்து, சுற்றுமுற்றும் பார்த்து மூல பிம்பத்திலிருந்து தோன்றும் விசித்திரத்தைக் கண்டு, அம்பாளை பற்றியபடியே தன்னை மறந்து சாஷ்டாங்கமாகத் தேவியின் திருவடியில் வீழ்ந்தான். பிறகு எழுந்து காரணமின்றியே கண்கள் நீர் பெருக ரோமம் சிலிர்க்க மறுபடியும் பணிந்தான்.

உடனே தேவி,கைகளால் அணைத்து எடுத்து 'உனக்கென்ன வேண்டு'மென, 'தாயே எனக்கு உன்னருள் வேண்டும். பாடம் மறவாதிருக்க வேண்டும்' என்றான். தேவியார் "நீ எனக்குப் போற்றி வளித்ததால் உலகத்தார்க்கெல்லாம் போற்றிவளிக்கக் கடவை" யென ஆசீர்வதித்து, தனது ஓர் அம்சமாகிய சரஸ்வதி கலையின் பீஜாக்ஷரத்தையுமனுக்கிரஹித்து, உனக்கு எல்லாம் சித்திக்க ; எத்திறனுமுண்டாக : இம்மை மறுமைப் பயனெய்தக் கடவாய் !' எனவருள் புரிந்து யாவருங் காணாதபடியே தனது மூல வடிவிற் கலந்தனள். அப்போது கம்பன் தேகம் வியர்த்தது. மெய்ம்மறந்து,சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமலிருந்தான். பிறகு கண்ணைத் திறந்து பார்க்க அம்மையின் பிம்பம் எப்போதும்போல் அசையாமலிருக்கக் கண்டான்.

இதற்குள் சீக்கிரம், சீக்கிரம், என்று ஆதித்தன் வந்து அபிஷேகம் செய்யத் தொடங்கினான். அலங்காரம் செய்து பூஜைகள் கிரமமாய் நடந்தது. கோயில் சந்நிதியில் பலிக்கு ஆடுகளையும் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அந்தச் சமயத்



தில், வழக்கம்போல் சகுனம் ஆகவில்லை, அப்போது சடையப்ப பிள்ளை அம்மன் உத்திரவு கொடுக்க வில்லையே? என்று வருந்தி பூசாரியைப் பார்த்தார்.

மற்ற பூசாரிகள் யாவரும், சங்கு, உடுக்கு, மணி, சேகண்டி, திருச்சின்னம், திமிலை,சண்டை முதலிய பல வாத்தியங்களை முழங்கி, தூபம் தீபாராதனைகளாலும் துதிப் பாட்டுகளாலும், அம்மனை வருந்தி, வருந்திப்போற்றவே, ஆதித்தன்மேல் தேவீ ஆவேசம்கொண்டு, சடையப்ப வள்ளலை நோக்கி,யாவரும் காண உரத்து, இன்று முதல் "உயிர்ப்பலி வேண்டேன், வேண்டேன், நமக்குப் பள்ளயமே கொள்ளத்தகுந்தது உன் பூஜை யுகந்தேன்" என்று விபூதி அள்ளி சடையப்ப பிள்ளை கையில் கொடுக்கவே, ஆவேசமடங்கியது. இதை யாவரும் கேட்டும் பார்த்தும் ஆச்சர்யமடைந்தார்கள்.

## திருவருட்பேறு

பூஜை முற்று முடிந்து பிரசாதம் பெற்று சடையப்பபிள்ளை முதலினோர் கம்பனுடன்வெண்ணெய் நல்லூரை யடைந்தார்கள். கம்பனும் மறுநாட் காலையில் வழக்கம்போல் பள்ளியை யடைந்தான். புத்தி வெகு தீக்ஷண்ணியமாய் துலங்கிற்று. பாடங்கள் படிக்காமலே, 1330, அருங்குறளும் பாயிரத்தோடு பரிமேலழகர் செம்பொருட் டெளிவோடு சிக்கெனத் தோன்றியது. மனது வெகு தைரியமடைந்தது. உபாத்தியாயராகிய கணக்காயரிடம் மிக்க நேயம் உதித்தது.

தான் கண்ட அம்மையின் திருக்கோலம் ஒருகாலும் மனதைவிட் டகலவேயில்லை. கவிபாட நா துடித்தது. ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.மறுநாள் வாத்தியார் மானியத்தில் கதிர்கள் விளைந்து அறுக்கும் பருவமாயிருந்தபடியால், தினம் காவலுக்குப் பள்ளியிலிருந்து பிள்ளைகள் செல்லும் முறையில் கம்பன் முறை வரவே, வாத்தியார் கம்பனைப் பார்த்து அடா பயலே தூங்காதே, ஜாக்கிரதை யென்று எச்சரித்து அனுப்ப, அவனும் அப்படியே போய்க் காவல் புரிந்துகொண்டிருந்தான்.

அப்போது அவ்வூர் தலையாரி காளிங்காயன் என்பான் குதிரை வந்து கதிரை மேயக்கண்டு, கம்பன் துரத்தியும் அது போகாமல் தின்னக் கண்டு கண்சிவந்து குருபத்தி நேயத்தால் தேவியை நினைந்து துடிப்பான மனதோடு

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
யாய்த்த வரையி லணிதிகழக்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ. *

எனவே குதிரை கீழே விழுந்து உதைத்துக்கொண்டிருந்தது. உடன் எல்லாரும் கம்பன் குதிரையை யடித்துக் கொன்று விட்டான் என்றார்கள். கிராமமுழுதும் கொல்லென்று பரவியது. காளிங்கராயனறிந்து எங்கே அவனென்று தன்னவர்களோடு பெருங் கூட்டமாக, வெகு கோபத்துடன் வந்தான். இதற்குள் ஊர்முழுதும் பேரிரைச்ச லுண்டாச்சுது, வாத்தியாருக்கு இந்தச் செய்தி தெரியவே நடுக்கம் பிடித்தது. தலையாரி நாட்டுத்தலைவராகியசடையப்ப பிள்ளைக் கறிவிக்க, அவரும், வாத்தியாரும் மற்றோரும், அவ்விடம் வந்து கிடக்கிற குதிரையையும் கண்டு நிற்கிற கம்பனையும் கண்டு, கேட்க அவனும் நடந்தபடி சொன்னான்.

அது கேட்டு சடையப்ப பிள்ளை இது என்ன புதுமை,இவன் கவிபாடவாவது குதிரை யிறக்கவாவது என்று மலைத்தார். சிலர் அப்படிச் செய்தது உண்மையானால்,எழுப்பவும் கவிபாடலாமே யென்றார்.சிலர் இவனால் என்ன முடியுமென்றார். சிலர் எப்படிக்கொன்றானென்றார். இப்படி ஆளுக்

* இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆலயம் வாய்ந்த வயிரபுரம் என்று முற்கவியில் சுட்டியதாம். இது வெண்ணெய் நல்லூரின் பக்கத்து கிராமம். காவிரியின் வடகரையி லுள்ளது. இது தற்காலத்தில் (க்ஷேத்ரபாலபுரம்) என வழங்குகிறது. (க்ஷேத்ரபாலன்) பைரவக் கடவுள். இவ்வூரில்தான் மூற்சொன்ன குதிரை மேஞ்சான் என்னும் வயலுமிருக்கிறது.

ஒரு பேச்சு பேச சடையப்ப பிள்ளை மனம்கூசி, காளிங்காராயனையும் சமாதானம் செய்து, கம்பனைப் பார்த்து 'அப்பா! கம்பா! இது என்ன பெரு வம்பாயிருக்கிறதே,என்னகாரியம் செய்தா' யெனக் கம்பன் கெம்பீரமாகப் பிள்ளையை நோக்கி "ஐயா தாங்கள் ஒன்றுக்கு மஞ்சவேண்டாம், எங்கள் வாத்தியார் நஷ்டத்தை இவர் தந்தால், இவர் குதிரையின் நஷ்டத்தையும் அம்பாள் தருவாள்" என்று சொல்லக் கேட்டவர்கள் பிரமித்து நகைத்தார்கள்.

அதற்குள் காளிங்காராயன் 'ஆம், ஆம், நியாயம், நியாயம், ஒரு பங்குக்கு 10-பங்கு தருகிறேன். குதிரைவந்தால் போது'மென்றான். கம்பனும் முன்போல்தேவியைத்தியானித்துக்கொண்டு

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
யாய்த்த வரையி லணிதிகழக்—காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்க ராயன்
குதிரைமீ ளக்கொண்டு வா.

என்று அந்தக் கவியின் ஈற்றடி இரண்டு மொழிகளை மாற்றிக் கூறவே குதிரை கனைத்து உதறிக் கொண்டெழுந்தது. இதைக் கண்டவர்களுக்குண்டான சந்தோஷம் சொல்லமுடியுமோ? அந்தத் தினம் தேவியின் திருநாள்போலவே விளங்கிற்று. சடையப்ப பிள்ளை, கம்பா என் மானத்தைக் காப்பாற்றினையே யென்று தழுவிக் கொண்டார்.

கணக்காயரும், 'கம்பா! உன்னாலே நமக்கு இந்த ஊரை விட்டோடும் காலம் வந்த தென்று பயந்தேன். நீயே இந்த ஊரும் பேரும் மானியமும் நிலைக்கச் செய்தாய். உன்னால் நானும் பெருமை பெற்றே' னென்றார்.

இதைக் கேட்டுக் கிராமத்திலுள்ள அந்தணர் முதலிய மஹா ஜனங்களெல்லாம், ஆச்சர்யமடைந்து, இந்தத் தெய்வசக்தி இவனுக்கு எப்படி யுண்டாச்சுது—பூர்வஜன்ம புண்ணியம், சாபானுக்கிரக (வாக் ஆகிவிட்டான், இதுதான் விட்டகுறை தொட்டகுறை என்று வியந்தார்கள்.

பயத்தோடும் பரபரப்போடும், இதற்குள் ஆதித்தன் இச்செய்தி கேட்டுத் திருவழுந்தூரிலிருந்து குடல்தெரிக்க ஓடிவரக்கண்ட சடையப்ப பிள்ளை 'ஐயா பூசாரி; பயப்படாதே ஒன்றுமில்லை. நீர் நல்ல மகனை யடைந்தீர். உம் புண்யமே புண்யம், இவ்வுலகத்தில் ஒருவருக்குமில்லை. உம்மகன் கவிபாடி இறந்த குதிரையை எழுப்பினான். நீங்கள் என்றும் அம்பாளை நம்பிய குடிகளாகையால், அந்தத் தேவி உம்மகன் நாவில் குடிகொண்டு விட்டாள். உமது மகன் தெய்வக்கவி ஆனான்' என்று எல்லாரும் ஒருவாயாகப் புகழ்ந்துபேச, ஆதித்தன் கேட்டு, பெருமூச்சு விட்டு மனத்துயாறி "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்" என்றபடி பெற்றவன்றினும் பெரியதோர் உவகையனாகி "சடையப்ப வள்ளலை நோக்கி, ஐயா எல்லாம் தங்கள் அன்ன விசேஷம்" எனக் கண்ணீரோடு கரைந்து போற்றித் தேவி கிருபையெனத் திருநீறு அளித்தான்.

இதை எல்லாம் கண்டிருந்த காலிங்கராயன் வெகு சந்தோஷமடைந்து, தான் சொன்னபடியே தந்து, அக்குதிரையையும் கம்பருக்கு வெகுமதியாக அளித்தான். அவ்வூரார் யாவரும் சேர்ந்து கம்பரை அக்குதிரையின்மீது ஏற்றி, கொம்பு தம்பட்டை முதலிய வாத்தியமொலிக்க சடையப்ப வள்ளல் முதலினோர் முன்னும் பின்னுஞ் சூழ்ந்துவர, ஊர்வலம் வந்து, அக்கிராம தேவதையின் சந்நிதியிற் போய், பூசை முதலிய நடத்தி மறையவர் முதலிய மகாஜனங்களெல்லாம் ஒரு முகமாகத் "தேய்வப்பரியான் திருவருட்புலவன்" எனப் புகழ்ந்தார்கள்.

கணக்காயரும் கம்பனை நோக்கி நீ மெத்தப் புகழ்படைத்த கவியாகத் தேவி கிருபையாலே அமைந்து விட்டபடியால், பள்ளிப்படிப்பு இனியுனக்கு வேண்டாம். "நூலும் வேண்டுமோ நுண்றுணர்ந்தோர்கட்கே." எல்லாம் தானே வரும். உனக்கு உபாத்தியாயராக நான் தக்கவன்



அல்லேன், என்று விடைகொடுக்கக் கம்பன் குருவைப் பணிந்து மனையிற்சென்று பிள்ளையவர்களிடம் தெரிவித்தான்.

## ஆராய்ச்சி

அப்பால் கம்பர் கல்வியாராய்ச்சியில் கண்ணுடையராய் அக்காலத்து விளங்கும் அரிய சங்க நூல்களையும், சங்கமறுவிய நூல்களையும், இலக்கிய விலக்கணங்களையும் சந்தேக விபரீதக் குற்றமகல, நன்றாயாராய்ந்து, ஆரியம் முதலிய பல பாஷைகளையும் செவ்வையாய்ப் பயின்று தேர்ந்தார்.

இப்படியிருக்க சிலநாட்களின் பின் ஒரு நாள் கொங்கிற் பெருமழை பெய்து எங்கும் நீர் பொங்கி வர,காவேரி வெள்ளம் கொண்டு உடைப்பெடுக்கும் தருணமானது கண்டு, அப்போது கிராமங்கள் முழுதும் கூட்டமாக ஜனங்கள் சேர்ந்து அணைகட்ட முடியாமல் வெள்ளத்தைக் கண்டுபயந்து கதறினார்கள். சடையப்ப வள்ளலோ, ஏது கிராமம் முழுகிவிடும் என்று அஞ்சித் தத்தளிக்கும்போது கம்பர் சடையப்ப வள்ளலைப் பார்த்து யாவரையும் கையமர்த்திக்—கங்கா தேவியை நினைத்து, லோகமாதாவே கன்னி யழிந்தாளென்றும், கங்கை திறம்பினாள் என்றும், பொன்னிகரை யழிந்தாளென்றும், உலகோர் பழித்துக் கூறும் உரை கொள்ளாதே. எல்லா உயிர்களாகிற மக்களையும் காப்பது உனது கடமை யல்லவா? என்று

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினாள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீ
ருரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண்.

எனப் பாட வெள்ளம் குறைந்தது. யாவருக்கும் உள்ளம் நிறைந்த சந்தோஷம் பொங்கி, அதிசயித்து இவர் பூமிக்கோர் அவதாரம், இவ்வற்புத, சக்திகளைப் புகழ்ந்து, நம்மால் சொல்லமுடியாது என்று அந்தணர் முதலினோர் யாவரும் மிகவும் நன்கு மதித்துப் பேசி முன்னினு மதிகமாகக் கொண்டாடினார்கள். சோழநாட்டிலெங்கும் இவர் பெரும்புகழ் தவழ்ந்தது.

அப்பால் சடையப்ப வள்ளலுக்கு இவரிடத்திலுண்டான செயல்களைக் கண்டும், உலகத்தாரால் புகழ்ந்து பேசப்படுகிறதைக் கேட்டும், அதிகப் பிரீதியோடு பயபக்தி முதலியது மிகுந்தது.

கம்பர் சடையப்ப பிள்ளையையே தன்னுடைய தந்தையினும், குருவினும், மற்றப் பெரியோரினும், பெரியவராகப் பாவித்தார். அவர் அன்னதாதா வாகையால் அவரை யன்றி இவ்வுலகத்தில் நமக்கு வேறு யாரு முரியாரில்லை என்ற எண்ணமே சத்தியமாக உள்ளத்தில் விளங்கியது.

பிறகு கம்பரோ கவிபாடுவதிலூன்றிய மனதுடையவரானார்.சடையப்பவள்ளலின் மாடு வீடு முதலிய குடித்தனத்தைச் சிறப்பித்து

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
விட்டளவும் பால்சொரியு வெண்ணையே-நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு
முடையான் சடையப்ப னூர்.

என்னும் கவியால் மேய்ந்து கொழுத்துக் குளங்களில் முழுகி, நீர் குடித்து வரும் எருமைகள் மடியில் முட்டிய வவரால் மீன்களைக் கன்றென்று நினைக்கவே சுரந்த மடிகளிலிருந்து பால் தானே சொரிய,கூட்டங்கூட்டமாய்க் கொட்டில்களுக்கு வருவதையும், செல்விருந்தோம்பி, வருவிருந்தினரை வழிநோக்கி, உபசரிப்பவர்களால் நிரம்பி எக்காலத்தும் (அடையாமல்) சாத்தாமல் திறந்து விளங்கும் திருவாசல் சிறப்பையும், தன்னை நோக்கி வருபவர்களையும், மற்றோரையும் ஒரே விதமாக அன்போடு பார்த்து, அருமையான இனிய சொற்களாலுபசரித்து, அவர் வறுமை முதலிய பிணிகளைப் போக்கும் பெருங்கொடை வண்மையாலும் இவ்வுலகத்திலிவர்க்கு நிகருண்டோ என்றும் புகழ்ந்தார்.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போலுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா றறிந்து.

இவ்வுலகத்தில் எவரும் மதிக்க வாழும் சடையப்ப வள்ளல் மனைக்கு இனிய விருந்தாக வருகிற பேர்கள் குளித்தும், உண்டு களித்தும் கைகழுவிய நீர் அன்றோ, இப்படிக் காவேரியென்னும் பேர் பெற்றதோர் பெருநதிபோலப் பெருகி ஓடுகிறதென்றும்,

மேழி பிடிக்குங்கை வெல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நினைக்குங்கை நீடூழி
காக்குங்கை காராளர் கை.

என்றும் தாழ்வடையாத மேழிக்கொடி யுடையோன், அரசர்களுக்குப் பொருள் வேண்டிய காலங்களில் கொடுத்துதவும் கீர்த்தியாளன், ஆழிதரித்த கையாளன், அனைவர்க்கு முதவுங் கொடையாளன், அடுத்தோரை விடாது கார்க்கும் காராளன் சடையப்ப வள்ளல் என்னுமவர் கைச் சிறப்பையும் கூறி,

கலித்துறை

* காலப் புயல்நிகர் காராளர் தம்மைக் கடலுடுத்த
தாலக் குலமங்கை பெற்றதனுற் சதா காலமுமால்
கோலத் திருமுகத்தாலே முகந்தனன் கூடலிலே
சூலக் கரப்படையான் றலைமீது சுமந்தனனே.

பருவ மேகம்போல் தருணமறிந்து கொடுக்கும் உதார சீலர்களாகிய சடையப்பன் முதலிய வேளாளரைப், பெற்றதினாலேயே இந்தப் பூமாதேவி என்னும் சிறந்த பெண்ணை, வராக வடிவம் கொண்ட திருமால் தனது கொம்பினும், சூலபாணியாகிய சிவபெருமான் தனது சிரத்தினும், இடைவிடாமல் சர்வகாலமும் சுமந்து கொண்டே யிருக்கிறார்கள் எனப் பல கவிகளால் சடையப்ப வள்ளலின் குலத்தையும் நலத்தையும் வேளாண்மைத் தொழிலையும் துதித்துப் பாராட்டினார்.

பின் தனது ஜனன தேசமாகிய காஞ்சி நகரத்தில் கோயில்கொண்டருளிய பெருமான்மீது உண்டான நேயத்தால் காஞ்சிப்பிள்ளைத் தமிழ், காஞ்சிக் குறவஞ்சி, † காஞ்சிப் புராணம் முதலிய பல பிரபந்தங்களையுமியற்றிப் பிரசித்தி பெற்றார். இவர் பெரும் புகழ் சோழநாடு முதலெங்கும் மிகுதியாகப் பரவியது.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 11. ஓதுவதொழியேல்

படிப்பதை நிறுத்தாதே என்பது இதன் பொருள். எந்தப் படிப்பை என்ற சங்கை பிறக்கும். இதற்கு உத்தரம் கூறுங்கால் காலத்திற்குத் தக்கபடி கூறிவிடலாம். ஔவை காலத்தில் இதற்கு வேதம் முதலிய மதவிஷய நூல்களை ஓதுவது என்றும், இக்காலத்தில் ப்ரகிருதி, மானிட சாஸ்திரங்களை ஓதுவது என்றும் பொருள்கொள்ள வேண்டும். வேதம் முதலியவைகளை ஓதுவதால் இவைகள் விஷயத்தில் மனம் ஸதா ஊறிக்கொண்டிருக்கும். தர்மஸங்கடங்கள் வருங்கால் ஓதி உணர்ந்த பெரியோர் நடத்தைகள் ஞாபகம் வர நமக்கு ஒப்புரவொழுகும் நிலை வரும். ஆகவே வேத விஷயங்கள் மிக எளிதான விஷயங்களாக இருப்பினும், அவைகளை உள்ளபடி உணர்ந்து அனுஷ்டித்து மனங்கலையாதிருப்பது மிகக் கடினமாதலால் விடாது வேதம் முதலியவைகளை ஓதி இந்தக் குறையை நீக்கிக்கொள்ள வேண்டும். இது பற்றியே ஔவை 'ஓதாதார்க்கில்லை உணர்வொடுவொழுக்கம்' என்று கொன்றைவேந்தனில் கூறியிருக்கிறாள். இக்காலத்திய ப்ரகிருதி மானிட சாஸ்திர விஷயமாக இதை உற்று நோக்குவோம். இவை வெளி விஷயமாதலால் இவைகள் விசித்திரங்களும், இவைகளின் ஒழுங்குகளை உணர்ந்து நமக்கு இவைகளை ஸாதகப்படுத்திக் கொள்ளும் வழிகளும் முடிவில்லாதன. இவைகளைப்பற்றிய ஞானம் இன்னமும் பூர்ணமாகாது மேல்மேலும் விருத்தியாகி வருவதால், இவ்விஷயங்களைப்பற்றிப் புதிய ஞானம் ஸம்பாதிக்கப் புதிய நூல்களை விடாது பயின்று, முன் நாம் உண்மை என மதித்தவைகளுக்கு விரோத முகாந்திரங்களைக் கண்டுவிட்டால் பக்ஷபாதமின்றி உதறித் தள்ளும் பழக்கத்தையும் விஷயத்தை ஆழ்ந்து யோசிக்கும் பழக்கத்தையும்

* இந்தக் கவியால் ஸ்ரீ ஹரியின் வராக அவதார வைபவத்தையும் ஈசுவரர் மதுரையில் பிட்டிற்கு மண் சுமந்ததும் கூறினார்.

† முற்சொன்ன நூல்கள் காணப்படவில்லை. தற்காலம் விளங்கும் காஞ்சிப்புராணம் திருநெல்வேலி ஜில்லா தாம்ரபரணி உத்பத்தி ஸ்தானமாகிய பாபவிநாசத்திற்குக் கீழ்புறம் உள்ள விக்கிரமசிங்க புரத்தில் அவதரித்து அகஸ்திய முனிவர் அருள்பெற்று, மகாக்ஷேத்ரமாகிய திருவாவடுதுறை யாதீனபீடமமர்ந்த திராவிட பாஷ்ய கர்த்தா 'சிவஞான முனிவர்' அவர் மாணாக்கர் கச்சியப்ப முனிவர் என்ற மஹான்களாலியற்றியது.



வரவர பலப்படுத்தி வரவேண்டும். மனிதன் உயிருள்ளவரை ஓதுவதை ஒழியாது ஸதா சிஷ்யபாவத்தில் மனதைப் பக்ஷபாதம் ப்ரமாதம் முதலிய நிலைகளில்லாது பாதுகாத்து வரவேண்டும். ஆதலால் முன் அர்த்தப்படி பூர்ண விஷயத்தை அடிக்கடி அணுகுவதாகிய ஓதுவதால் அதை உள்ளபடி உணரவேண்டிய முயற்சியிலேயே ஒருவன் இருக்கவேண்டும் என்றும், பின் அர்த்தத்தால் முடிவில்லா ஸ்ருஷ்டி வைசித்ரியத்தைப் புதிதாக உணர்ந்து அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுவதற்கும் முடிவு எத்தன்மையதோ என்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதற்கும் வெளிவிஷய சாஸ்திரங்களை ஓயாது காற்று வரவேண்டும் என்றும் இந்நீதி வாக்கியத்திற்குப் பொருள் கூறலாம்.

இனி இதன் எல்லை வாக்கியத்தை நன்கு உணர்ந்து எம்மாதிரியாக ஓதிக்கொண்டிருக்க வேண்டும் என்பதை அறியப்புகுவோம். 'புத்திமான் கிரந்தங்களை ஞான விக்ஞானிகளில் கண்ணுக ஓதி, தானியத்தை விரும்பி அறுப்புக்குப் போகிறவர்கள் வைக்கோல் உமிகளைத் தள்ளிவிடுவதைப் போலக் கிரந்தங்களை நீக்கிவிடவேண்டும்' என்பது அமிருதபிந்து உபநிஷத்வாக்கியம். ஓதலின்றே வேதியர்க் கொழுக்கம், என்பது கொன்றைவேந்தன் வாக்கியம். வேதத்தை ஸதா மொந்தைஉருப்போடுபவரை நோக்கிப்பெரியோர், 'குங்குமம் சுமக்குங்கழுதை' என்று இகழ்ந்துள்ளார். ஓயாது படிப்பவர்களை நோக்கி இக்காலத்தவரும் 'புத்தகப் புழு' என இகழ்ந்து வருகின்றனர். ஆகவே இந்த வாக்கியங்கள் எல்லாம் ஓதுவது ஒழியேல் என்ற வாக்கியத்தின் எல்லையை நன்கு குறிக்கும். இந்த எல்லை உபநிஷத் வாக்கியத்தில் 'ஞான விக்ஞானங்களில் கண்ணுக ஓதி' என்ற தொடரால் விளங்கும். இக்கருத்தையே திருவள்ளுவரும்:—

"கற்கக் கசடற கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்று கூறுகிறார். ஓதுவதெல்லாம் அதன்படி நடக்கவே. ஆகவே கற்றபடி நடக்கவேண்டிய காலத்திலும் ஓதிக்கொண்டிருக்கலாகாது. நூதனப்பொருளோடு பொருத்துங்கால் கற்றபடி வெளிப்பொருள்கள் இருக்கின்றனவா என்று உற்று நோக்குவதே கற்றபடி நடந்துபார்த்தல் இவ்வாறு உற்றுநோக்கும் சக்தியைக் கவனியாது படித்துக்கொண்டே இருக்கலாகாது. ஆகவே ஓதுவதன் நோக்கம் இன்னது. அதில் இவ்வாறு நிலைபெறுவது என்பதையே கவனியாது ஓதிக்கொண்டே இருப்பவர்களைப் பழித்த வாக்கியங்கள் முற்கூறியவைகள். ஆதலால் ஓதுங்கால் ஓதியபடி நிற்பதற்கு வேண்டிய மனோதிடம் ஞானம் முதலியவைகளைச் சம்பாதித்துக்கொண்டு, அதன்படி நிற்குங்கால் ஓதுவதை நீக்கி அப்படி நிற்கவேண்டாத காலத்தில் ஓதுவதை ஒழியாது இருக்கவேண்டும் என்பதே இந்நீதி வாக்கியத்தின் உண்மைப் பொருள். இம்மாதிரி ஓதுவதை ஒழியாது பெரியோர்கள் இருப்பர் என்பதை ஒருவர் 'அதை நினைந்தும் அதை உரைத்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்கான நீதி' என்று எடுத்துக் கூறிப் பாராட்டி இருக்கிறார்.

தேஹப்ரக்ஞை நீங்கி மேலான நிலை அடைவதற்கு முன்னமே சில அப்யாஸிகள் ஓதுவது ஒழியேல், சாஸ்திர குப்பையைத் தள்ளு என்னும் இருவித வாக்கியங்களின் எல்லையை உணராது, பிறர் தம்மிடம் காட்டிவரும் மதிப்பு மரியாதைகளை அங்கீகரித்துத் தம்மை யறியாது வியவஹாரங்களுள் இழுக்கப்பட்டு அதோகதியை அடைகின்றனர். இவர்கள் வெறும் வேஷதாரிகளாக மிஞ்சி அநேக கஷ்டங்களுக் காளாகின்றனர். ஜடபாதர் முதல் ஜன்மத்தில் நாடுநகர் எல்லாம்துறந்துவெளிப்பட்டு தகுந்தபடி ஓதுவதின்

(மனனம் முதலியவைகளின்) வலிக்குறைவால் பூஜை ஒழிந்தவேளைகளில் தாம்காப்பாற்றிவிட்ட அனுதையான மானிடம் அன்பு வளர்க்க, வரவர வழிபாடுகள் குறைந்து இழிவான மான்ஜன்மத்தை அடைந்தார். ஆதலால் எவ்வளவு பெரியவராயினும் தம்வரையில் கற்ற ஞானப்படி நிற்பதும் மற்ற வேளைகளில் அதை நினைத்தும் உரைத்தும்நிற்பதாகிய ஓதுவதை ஒழித்துநிற்பராயின் பரதர் பட்டபாடு படவேண்டியதுதான்.

இனி இதன் எல்லை வாக்கியத்தை விளக்க ஒரு கதை ஒன்றுண்டு. முன்னொரு காலத்தில் மஹரிஷிகள் எல்லாம் பரமேசுவரைத் தரிசித்து கிருதார்த்தர்களாக வேண்டும் என்று கைலாஸத்தில் வந்து கூடினர். அப்பொழுது ஒரு ரிஷி பெரிய வண்டி நிரம்பப் புஸ்தகங்களை நிறைத்துக்கொண்டு இழுக்கமாட்டாது இழுத்து வந்தார். அவர் வண்டியுள் அடங்காத புஸ்தகங்களைத், தலை தோள்கள் முதுகு முதலிய விடங்களில் சுமந்து வந்தார். அப்புஸ்தகங்கள் எல்லாம் சிறந்த நூல்கள். அவைகளிடம் அவருக்கு விசேஷப் பற்றுண்டு. இவ்வளவு விசித்திரமாக இவர் கைலாஸத்தில் புகுந்ததும், மற்றைய ரிஷிகள் வயிறு வெடிக்க நகைக்கத் தொடங்கினர், ‘ஏன் நகைக்கிறீர்கள்’ என்று புஸ்தகரிஷி கேட்க, ‘இப்படிப் புத்தகத்தைக் கட்டிக்கொண்டழுகிற வரையில் உமக்குக் கடவுள் வெளிப்படார். இங்குள்ள விஷயம் புத்தகத்தில் இல்லவே இல்லை. நீர் படித்தவைகளை மறந்தபின்தான் இது விளங்கும். உமக்காவது, கடவுள் தோன்றவாவது’ என்று ஒளியாது கூறிவிட்டார் ஒரு ரிஷி. இதன் ரஹஸ்யம் ஓதியுணர்ந்த புத்தக ரிஷிக்கு உடனே விளங்கிவிட அவர் சாஸ்திர மூட்டை ஸமுத்திரத்தில் எறிந்துவிட்டார். உடனே பகவான் அவர்கள் முன் தோன்றினராம்.

## யானையில் முத்துக்களுண்டா ?

செப்டம்பர் மீ’ த்திய விவேக போதினியில் மிஸ்டர் ம. கோபால கிருஷ்ணையர் முத்துக்களைப்பற்றிய ஓர் அருமையான வியாசம் எழுதியிருக்கிறார். அவை யுண்டாகு மிடங்களைப்பற்றி விஸ்தரிக்குங்கால் யானையை அதன் பிறப்பிடங்களிலொன்றாகப் பல ஆதாரங்களுடன் நிருபித்திருக்கிறார்.

சென்ற செப்டம்பர்மீ’ 12உ “ஹிந்து” பத்திரிகையில், மிஸ்டர் T. S. விசுவநாதன் என்பவர் குமாரசம்பவம் முதல் சர்க்கம் 6-வது சுலோகத்தை எடுத்துக்கொண்டு, ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தச் சுலோகமும் அவர் எழுதியதும் பின்வருமாறு:—

पदं तुषारस्रुतिधौतरक्तं यस्मिन्नदृष्ट्वापि हतद्विपानां ।
विदन्ति मार्गं नखरन्ध्रमुक्तैर्मुक्ताफलैः केसरिणां किराताः ॥

(இதன் பொருள்).—யாதொரு ஹிமயமலையில், பனிப் பெருக்கத்தால் அலம்பப்பட்ட ரக்தத்தையுடைய யானைகளைக் கொன்ற சிம்மங்களின் அடிவைப்பை (அந்த ரக்த அடையாளங்கள் பனியால் அலம்பப்பட்டு விட்டபடியால்) கண்டுபிடிக்க முடியாவிடினும் (சிம்மங்களின்) நகங்களின் இடைவெளிகளிலிருந்து நழுவின முத்துக்களினால் வேடர்கள் வழியை அறிகிறார்கள்.

இந்தச் சுலோகத்திலுள்ள **मुक्ताफलैः** என்னும் பதத்திற்கு முத்துக்கள் அர்த்தமல்லவென்றும் முத்துக்கள் போலொத்த பனித்திவலிகள் அர்த்தமென்றும், யானையிலிருந்து முத்துக்களுண்டாகிறதென்ற மூடத்தனமான கொள்கையைக் காளிதாசரும் நம்பினாரென்று எண்ணக்கூடாதென்றும் சொல்லிவிட்டு, அதற்கு ஆதாரமாக டாக்டர் செவன்ஹெடின் என்னும் பிரயாணி “ஹிமாலயாவின் கீழ்ப்பாகத்தில் பனி அதிகக் கடினமில்லாமலிருப்பதுடன் காட்டு மிருகங்களின் அடிவைப்புக்கள் பனியால் நிறைந்து முத்துக்களின் கோர்வை போலிருக்கிறது” என்று எழுதியிருப்பதை எடுத்துக் காட்டுகிறார். இன்னும் அவர் சொல்வதாவது.—“நமது பிரா
“சீனக்கல்வி பொக்கிஷத்தின் உண்மையான
“சில போதர்களுள் ஒருவராக நான் கருதும்
“ஒருவரிடமிருந்து இந்தப் பொருளை நான்
“அறிந்தேன். சமுஸ்கிருத காவியங்களில்,
“முக்கியமாய் காளிதாசருடையவைகளில்,
“அபிமானமுள்ள ஒவ்வொருவரின் அறிவிப்பு
“புக்கும் அங்கீகாரத்திற்கும் நான் இதை அனுப்
“கிறேன். இதைப் பத்திரிகைக்கு அனுப்பும்
“படி என்னைத் தூண்டிய பிரதானமான காரணங்
“களில் ஒன்று, மேலே சொல்லிய இந்தச் சுலோ
“கத்தில் காளிதாசருடைய தாத்பரியத்தை
“அந்த மல்லிநாதர்கூட அறியவில்லை என்பது
“தான்.”

இம்மாதிரி அவர் வரைந்ததிலிருந்து அதிகமாய் ஒன்றும் எழுதத் துணியவில்லை. டாக்டர் செவன்ஹெடின் பார்த்து எழுதியபடி காட்டு மிருகங்களின் காலடிகள் பதிந்து பனி முத்துக்கோர்வைபோ லிருக்கலாமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதைக்கொண்டு யானையில் முத்துக்களிருக்கக்கூடாதென்று சொல்ல யாதொரு ஆதாரத்தையும் காணேம். மல்லிநாதர்கூட அந்த அர்த்தத்தை யறியவில்லையென்று அந்நிருபர் காட்டுகிற குறைக்கு இடங்கொடுத்திருப்பவர் ஸ்ரீமல்லிநாதரல்லவென்றும் உலகத்திலுள்ள வியாக்கியான கர்த்தாக்களுள் முதல்மையானவரென்று எல்லா வித்துவான்களாலும் ஒருங்கே கொண்டாடப்படுபவர் ஸ்ரீமல்லிநாதர யென்றும் இந்த ஸமயத்தில் சொல்ல வேண்டி வருகிறது.

ஸ்ரீமல்லிநாதர் இந்தச் சுலோகத்துக்கெழுதிய வியாக்கியானத்தின் இறுதியில் இம்மாதிரி சந்தேகமுண்டாகக் கூடாதென்றே அடியில் கண்ட ஆதாரத்தை எடுத்தெழுதி யிருக்கிறார்.

யானை, மேகம், பன்றி, சங்கு, மீன், சிப்பி, மூங்கில், இவைகளில் முத்துக்களுண்டாவது உலகில் பிரசித்தம். அவைகளுள் சிப்பிகளிலுண்டாவதே அதிகம்” என்பது இதன் பொருள். ஆகையால் முத்துக்களின் பிறப்பிடங்களில் யானையுமொன்றென்பதைஆட்சேபிக்கவிடமில்லை.

V. பஞ்சாபகேசன்.





## நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 25. உதகநிமஜ்ஜன ந்யாயம்

ஓர் அரசன் அரண்மனையில் திட்டுடுபோய் விட்டதாம். அப்பொழுதுசேவகர்கள் யாரோ ஒருவனைப் பிடித்து வந்து குற்றவாளிஎன்று சாதித்தனர். அவன் தன்பேரில் குற்றமே இல்லைஎன்று எவ்வளவு மன்றாடியும் ராஜசபையிலுள்ளோர் இதை ஒப்புக்கொள்ளாதது கண்டு ‘நான் குற்றவாளியல்ல என்று தெளிவு வரும்படி செய்ய நான் ஒரு சபதம் செய்து கொடுக்கிறேன். ஒரு குளத்துள் நான் முழுகி விடுகிறேன். உங்கள் வேலைக்காரருள் ஒருவன் குளத்திலிருந்து குறிப்பிட்ட தூரம் ஓடி அதே வேகத்தோடு திரும்பிவரட்டும். அவன் வந்து சேர்ந்ததும் நான் உள்ளிருந்து கிளம்பாமலிருந்தால் குற்றம் என்பேரிலில்லை. கிளம்பிவிட்டால் என்னைக் குற்றவாளி என்று கருதுங்கள்’ என்று வேண்டிக்கொண்டான். இம்மாதிரியேசெய்து தான்குற்றவாளியல்லவென்று எல்லோரும் அறிய தெளிவித்து இவன் விடுபட்டான். ஆகவே எந்தவிதஅபவாதம் ஏற்பட்டகாலத்தும்ஏதாவது ஒரு கொடியப்ரதிக்ஞை செய்து அதன்படி நடந்து அந்த அபவாதத்தை நீக்கிக்கொண்டு வெளியேறும் இடங்களில் இந்நியாயம் உபயோகப்படும். இக்காலங்களைப் போல சாக்ஷி மூலமாக நியாய விசாரணை விஷயம், இடம், அதிகாரிகள் முதலிய ஒழுங்குகள் அதிகமாக எல்லோருக்கும் பொதுவாக ஏற்படாத முன் காலங்களில் ஒருவன்மேற் குற்றம் சுமத்தப்பட்டால் அவன் பாம்புக்குடம், எரியும் நெருப்பு, கொதிக்கும் எண்ணெய்க் கொப்புரை, முதலியவைகளில் கையிடுதல், அல்லது மூழ்குதல் முதலிய கொடிய ஸாஹஸச் செயல்களைச் செய்து தன் குற்றத்தை நீக்கிக்கொள்ளுவது வழக்கம். இதுவன்றி கடவுளின்பேரில் சத்தியம் செய்தல், கடவுளின் முன்னாவது, நியாயாதிபதி

யின் மூன்ருவது எரியும் கற்பூரத்தைச் சபதம் செய்துகொண்டு அணைத்தல் முதலிய சாதாரணப் பழக்கங்களுமிருந்தன. இதற்கேற்பவே பெண்கள் நாயகமாகிய ஸீதை, ராவணன் அசோக வனத்தில் தனிமையாகக் கொஞ்சநாள் இருந்ததால் பிறருக்கு தன்மேல் ஏற்படக்கூடிய சந்தேஹத்தை நீக்கி ராமர் தம்மை அச்சமின்றி அங்கீகரிப்பதற்காக முதலில் தீயில் மூழ்கித் தனது பரிசுத்த நிலையை வெளிப்படுத்தினுள். இப்படிச் செய்தும் ஜன அபவாதம் நீங்காமல் போக ராமரால் நீக்கப்பட்ட காலத்தில் மறுபடியும் அயோத்தியை வரும்படி நேர மிக வெறுப்பால் கொடிய சபதம் செய்து அதன் மூலமாகப் பூமிதேவியால் எடுத்துச் செல்லப்பட்டு மறைந்து தனது பரிசுத்த நிலையை வெளிப்படுத்தினுள். வெளிதேசங்களிலும் இம்மாதிரியான கொடிய ஒழுங்குகள் பழக்கத்திலிருந்தன. ஐரோபாவில் முன் காலத்தில் குற்றம் அவதூறு முதலியவைகளுக்கு ஆளானவர், இவைகளைச் சுமத்துபவரோடாவது, அல்லது அவர்கள் ஆட்களோடாவது, அல்லது தமது ஆட்களுள் இருவரையாவது தனிச்சண்டை செய்யும்படி ஏற்பாடுசெய்து யார் ஜயம் பெறுகின்றனரோ அவர் வாதம் உண்மையென மதிப்பதாகிய சண்டை நியாய நிர்ணயம் என்ற பழக்கம் இருந்து வந்தது. ஆகவே இம்மாதிரி விஷயங்கள் எல்லாம் உதகநிமஜ்ஜனநியாயத்திற்கு உதாரணங்கள்.

### 26. உபயன்ன பயந்தர்ம இதிந்யாயம்

மாங்காய் காயாக விருக்கும்போது பச்சை வர்ணத்துடனிருக்கும். அது பழுக்கும்போது அதற்கு மஞ்சள் வர்ணம் வந்து விடும். உள்ளே ருசிமாற்றங்களும் ஏற்படும். இதற்குப் பழம் என்ற நிலையும் வருகிறது. ஒரு வஸ்துவுக்கும் தர்மம் (வஸ்துதத்வம்) மாறுவதால் விகாரம் ஏற்படுகிறது. இந்த வஸ்துதத்வமாற்றமே (Chemical Change) இந்த நியாயத்தின் கருத்து. இம்மாதிரியான மாறுதல் ஏற்படும் விஷய ஸம்பந்தமாக இந்த நியாயம் பிரவர்த்திக்கும்.

### 27. உபவாஸ பைக்ஷந்யாயம்

பட்டினி கிடப்பதென்ருல் எல்லோருக்கும், எக்காலத்தும் கஷ்டம். அதைப் பிச்சை எடுத்துத் தடுக்கவேண்டி வருவது மானிகளுக்கு மிகக் கஷ்டம். இந்நிலைக்கு அவர்கள் வாதபடி ஜாக்கிரதையுடன் இருப்பார்கள். ஆனல் இந்தக் கஷ்டநிலை வந்துவிட்டால் என்ன செய்வது என்ற விஷயம் வந்துவிடும். ஏதாவது ஒருவழி நடந்தே தீரவேண்டி வந்துவிடும். இறப்பதா அல்லது பிச்சை எடுத்து இருப்பதா என்ற கேள்வி எல்லோரையும் வருத்தத் தொடங்கி விடும். பொதுவாக இவ்விரண்டில் அதிகக் கஷ்டமில்லாததாகிய பிச்சை எடுத்தலையே எவரும் மேற்கொள்ளும்படி வந்துவிடும். ஆகவே இம்மாதிரி தர்ம சங்கடமாக வந்து ஏற்படும். ஸமயங்களில் குறைந்த கஷ்டம் கெடுதி உள்ள வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்யும் இடங்களில் இந்நியாயம் உபயோகப்படும். நல்லோருக்கு இம்மாதிரியான கஷ்டம் வருங்கால் தம்மால் கூடியவரையில் முற்கூறியபடி முயலுவர். ஸ்ரீராமர் ராவணனை வெறுங்கையனுக யுத்தகளத்தில் நிறுத்தி 'இப்பொழுது உன்னை நான் கொன்று விடுவேன்: என் கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிடும். கொல்லாவிடில் என் கஷ்டம் அதிகரிக்கும். ஆனல் உனக்கு நன்மை புரிந்ததாகும். ஆகவே பிறருக்கு நன்மை எவ்வளவு செய்யலாமோ அவ்வளவும் செய்யவேண்டியதாதலால் உன்னை விட்டு விடுகிறேன். போய் ஸீதையைத் திருப்பிக்கொண்டுவா இஷ்டமானல் அவ்வாறே செய்: சண்டையை இதோடு நிறுத்தி விடுவேன். இல்லாவிடில் சண்டைக்கு வா பின்னர் உன்னைக் கொல்லுகிறேன்' என்று கூறித் தமது பெருந்தன்மைக்கு ஏற்ப தமது மனதிற்குக் குறைந்த கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய தர்மவழியில் ராமர் நடந்தார். கொடியவர்களோ தமது மனம் போன வழிசென்று கெட்டதை நல்லதெனக் கருதி அதையே பின்பற்றுவர். முற்கூறியபடி சொல்லியும் ராவணன் 'ஸீதையைக் கொண்டு ராமரிடம் விட்டுவிட்டால் நாம் உலகில் கீர்த்தியின்றிச் ஸுகமாக வாழலாம். இல்லாவிடில் கீர்த்தியுடன் இறக்கும்படி நேரிடும். ஆகவே புகழோடு இறத்தலே மேல்' எனக்கருதி விஷயம் கெட்டது என்று சற்றும் நினையாது மாண்டான். ஆகவே இரண்டுவித கஷ்டநிலைகளில் குறைந்த கஷ்டமுடையது இன்னது என்பது தீர்மானம் செய்பவர் குணத்தைப் பொருத்தது.



### 28. உபயதః பாசரஜ்ஜுந்யாயம்

கயிற்றின் இருபுறத்திலும் வஸ்துக்களை கட்டிவிடலாம். ஆகவே அதற்கு இரண்டு புறத்திலும் கட்டும் திறன் உண்டு. இதைப்போல எவ்விதத்திலும் நீக்கமுடியாத ஆபத்துக்களால் சூழப்பட்ட ஒருவன் என்ன செய்தும் ஏதாவது ஒருஆபத்துள் அகப்படும்படியாக இருக்குங்கால் இந்நியாயம் உபயோகப்படும். இருதலைக் கொள்ளி எறும்பு என்ற பழமொழி இந்த நியாயத்தின் கருத்தை நன்கு விளக்கும். ஒரு விறகுகட்டையில் ஒரு எறும்பு ஏற அதன் இரு நுனியிலும் நெருப்புப் பற்றிவிட்டால் அந்த எறும்பின் கதி என்ன? ஓரங்களில் நகர்ந்து சென்ருல் நெருப்பில் சாம்பலாக வேண்டியதுதான். இருந்தவிடத்திலிருந்தால் கொஞ்சகாலத்திற்குள் எரிந்து சாம்பலாக வேண்டியதுதான். ஆகவே அது எப்படியும் இறக்கவேண்டியதே. இம்மாதிரியான விஷயம்தான் இந்நியாயத்துள் அடங்கி இருப்பது. சாஸ்திர உண்மைகளையும், பெரியோர் நடத்தையையும் நன்கு ஆராயாது, எதையாவது ஒன்றை பிடிவாதமாகப் பின்பற்றிப் பின்னர் இவை இரண்டுள் எதன்படியாவது நடக்க எண்ணங்கொள்பவன் எவ்விதத்திலும் பாபம் சம்பாதிக்க நேருவது இந்நியாயத்திற்கு உதாரணம். மஹாபாரதம் கர்ணபர்வத்தில் கௌசிக பிரஹ்மசாரி கதை கூறப்பட்டுள்ளது. அவன் சாஸ்திரப்படி சத்தியஸந்தனுக விருந்தான். திருடர் வருவதை உணர்ந்து பெரியோர்கள் செய்வதைப்போல ஒதுங்கிவிடாது, ஊரார்கள் ஓடிப் போய் ஒளித்தும் தான் போகாது இருந்ததால் திருடர்கள் கையில் அகப்பட்டான். அவர்கள் ஊரார் எங்கே என்று கேட்டார்கள் 'தெரியாது' என்ருல் பொய் சொன்ன பாவமும், இருக்குமிடங் கூறினுல் கொடியவர்களை ஸஹாயம் செய்து நல்லோரைக் கெடுத்தபாபமும் வரத் தக்க நிலையை அடைந்து இருதலைக் கொள்ளி எறும்புபோலானுன். இவன் இந்நியாயத்திற்கு உதாரணம்.

## அல்லஹபாத்—(ப்ரயாகை)

## ALLAHABAD (PRAYAG) ITS SCENERIES.

### அதன் காட்சிகள்

கங்கையும் யமுனு நதியும் சேரும் இடத்தில் உள்ள இந்த நகரம் எல்லா ஜனங்களுக்கும் நன்ருய்த் தெரியும். சிலர் யாத்திரையாகப் போயிருப்பார்கள். அநேகர்கள் அதன் பெருமையைக் கேள்விப்பட்டிருப்பார்கள். அது வைதீகஸம்பிரதாய மரியாதைக் குட்பட்ட எல்லாராலும் ஒரு மகா புண்ணிய ஸ்தலம் என்று கொண்டாடப்படுகின்றது.

2. எந்த நதியிலாயினும் வேறு எந்த இடத்திலுள்ள தண்ணீரிலாயினும் மனிதர்கள் இறந்தால் துர் மரணமாய்ப் போனவர்கள் என்று வருத்தப்படுவார்கள். இரண்டு புண்ணிய நதிகளும் சங்கமமாகிற இடத்தில் மரணமடைந்தவர்கள் பிறகு நல்ல கதியை அடைவார்கள் என்று நம்புகிருர்கள். கையினுல் சிலர் வேண்டும் என்றே உயிரைவிட விரும்புகிருர்கள். அவர்களைத் தடுக்கும் பொருட்டு கவர்ன்மெண்டார் தகுந்த காவல்களை ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

3. அதிலுள்ள இரண்டு பாகங்கள் தாராகஞ்சம், கீடகஞ்சம் என்பவைகளை விசேஷமாய்க் கொண்டாடப்படுகின்றன. கங்கை நதிக்கரையிலுள்ள சில பட்டணங்களும் கிராமங்களும் ஆபத்துக்கிடமாகின்றன. அதிக வெள்ளகாலத்தில் கரையை உடைத்துக்கொண்டு மூன்று மயில் வரையிலுள்ள வீடுகளையெல்லாம் நாசம் செய்து, புதிய வழியாய்ப் பிரவாகிக்கிறது. இந்த 'காம்' அவ்வித ஆபத்துக்குள்ளாகாதபடி, வீடுகள் தூரமாய் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் எப்படியிருந்தபோதிலும் இதுவரையில் எவ்விதமான கெடுதியும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

4. பனரிஸ் என்று சொல்லப்பட்டு வரும் காசி என்பதும் புண்ணிய ஸ்தலமே, அங்கே கங்கை ஓடுவதற்கும் இங்கே ஓடுவதற்கும் அதிக பேதமுண்டு. காசியில் பாராங்கல் மதில்களை தண்

ணீரில் கட்டி அவைகளின் மேல் பெரிய மாடிவீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். 64 கட்டங்களிலும் இப்படியே நெடுந்தூரம் இருக்கிறது. தவிரவும் அவைகள் வளைவாகவும் இருக்கின்றன. ஆகையினால் இவ்வளைவுக்குள் உள்ள தண்ணீர் ஓட்டமில்லாமல் தங்குகிறது. இந்த இடத்தில் ஓட்டம் சாதாரணமாய் அதிகமாக இல்லை. விசேஷமான பிரவாக காலத்தில் வேகமாய் ஓடும்போது தங்கியிருக்கும் தண்ணீர் போய் புதிய தண்ணீர் ஓடுகிறது. இவ்வித நாட்களில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு ஜ்வரம் முதலிய வியாதிகள் உண்டாவதில்லை. மற்ற காலங்களில் காசி ஜ்வரம் என்று ஜனங்கள் நடுங்கும் குளிர் ஜ்வரம் உண்டாகிறது.

ப்ரயாகையிலோ, வேகமாய் ஓடுவதோடு, ஆநந்தமாய் மணலில் இறங்கி ஸ்நானம் செய்யலாம். முழங்கால் மட்டு ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்தால், உடம்பு முழுதும் ஜலத்துக்குள்ளிருந்து ஸ்நானம் செய்தால் அதற்குள் கொஞ்ச தூரம் தள்ளிவிடும். ஆனால் உயிர்ச்சேதம் நேருகிறதில்லை. காசியில் கட்டங்களில் நீர் அதிக ஆழமாய் இருக்கிறது. பாராங்கல் படித்துறைகள் உண்டு. தவிரவும் இரும்புக் கம்பங்களை நிறுத்தி ஜனங்கள் முழுகிப்போகாமலிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஆழத்தினால் கொஞ்சம் தவறினவர்களுங்கூட இறந்து போகிறார்கள். இதற்குக் காரணம் "காச்யாந்து மரணான் முகதி" என்றபடி காசியில் இறந்தால் மோட்சம் கிடைக்கும் என்று நம்பிவேண்டுமென்று செய்வதாய்ச் சொல்லுகிறார்கள். இது பெரும்பான்மை ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. க்ஷேத்திரத்தில் வஸித்து ஊருக்குள் இறந்து போனால் மட்டும் அது ஸரியென்று எல்லாரும் சொல்லுவார்கள்.

5. "கங்கையமுனயோர் மத்யகுப்தா ஸரஸ்வதி" என்றபடி கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியில் ஸரஸ்வதி என்ற ஒரு நதி மறைந்திருக்கிறது என்று வழக்கமாய்ச் சொல்லுகிறார்கள். மூன்று நதிகள் சங்கமமானபடியால், திருவேணி என்று ஒரு பெயர் வழங்குகிறது. முற்காலத்தில் ஸரஸ்வதி என்ற நதிகண்ணுக்குத் தெரிந்து இப்போது பூமிக்குள் போய்விட்டது என்கிறார்கள். ஸரஸ்வதி என்ற பெயருள்ள நதிகள் ஒன்பது உண்டு. அப்பெயருள்ள இரண்டு ஒன்றில் ஜலம் சிறியதூரம் ஓடிவந்து மணலில் உள்ளே போய் மறுபடி இரண்டுமயிலுக்குப்பிறகு குமிழியாகக் கிளம்பி ஓடுவதாக நேரில் பார்த்து ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது நிற்க.

6. ஜனங்கள் ஸ்நானம் பண்ணுவதற்குமுன் பால், பூ, முதலியவைகளால் கங்கையைப் பூஜை செய்கிறார்கள். மகாராஜர்களும் மணலில் நடந்தே ஸ்நானம் செய்வது விசேஷமாய் வழக்கமாயிருந்தது. மணலில் அதிகதூரம் நடந்தால் களைப்பாகிறது என்று பல்லக்குகளில் வந்து சிறிது தூரம் இருக்கும்போது இறங்கிவருகிறார்கள். இப்படி வருகிறவர்களுக்குப் பின்வரும் பரிவாரங்களும், வெவ்வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு ஆடைகளுடன் போகிறவர்களும், மணற்கரையில் பெரிய கொடைகளை நட்டுக்கொண்டு அவைகளின் கீழிருந்து மந்திரங்கள் சொல்லி வைக்கும் பண்டாக்களும், அவர்களுடன் கூடுகிற ஆண் பெண், குழந்தைகள் கூட்டங்களும், பைராகிகள், ஸங்யாஸிகள் முதலியவர்களும் ஆயிரக்கணக்காய் ஸ்நானம் செய்து மணலில் நிற்பதைப் பார்த்துக் களிக்க இரண்டு கண்கள் போதுமோ என்று மனதில் எண்ணமுண்டாகிறது. தவிரவும் நீல நிறமுள்ள யமுனை ஜலமும், வண்டல் மணல் உள்ள சிறிது சிவப்பான கங்கை ஜலமும் சேரும் இடத்தில் சூரிய உதயமாகும்போது பத்தரை மாத்துத் தங்கத்தை உருக்கி ஓடவைத்தால் போல், வெகு தூரம் பள பளவென்று தெரிகிற அழகை என்னவிதமாய் வர்ணிக்க முடியும்? ஜலத்தில் ஒரு மயிலளவு படகுகள் அநேகங்கள் இருப்பதைப் பார்த்தால் அதிக விநோதமாயிருக்கும். ஜலம் தெளிந்த காலத்தில் சந்திரன் உதயமாகும்போது பார்த்தால், கண்ணுக்குண்டாகும் களிப்பைப் பார்ப்பவர்கள் அநுபவித்தே தெரிந்துகொள்ளத் தகுந்தது. கரைகளில் மரங்களும், செடிகள் முதலாகப் பசுமையாய்த் தெரிகிறவைகளும் கரைகளிலின்று ஒரு பக்கம் பார்வையிலும் சங்கமமாகும் இடத்



தில் தெரிகிற நிறம் மற்றொருபக்கம் பார்வையிலும் கண்ணுக்கு முன்னிருக்கும்போது அதைவிட அழகு வேறு உளதோ?

7. நகரத்தில் ரஸ்தாக்கள் அகலமாயும், ஒன்றோடொன்று சேருகிற இடங்களில் ஒழுங்காயும் இருக்கின்றன. இவ்வளவு பெரிய பட்டணமாயிருந்து ஜனக்கூட்ட மதிகமாயிருந்தாலும், இவ்வளவு சுத்தமான பட்டணத்தைப் பார்ப்பது அரிது. சமீப காலத்தில், வடமேற்கு மாகாணங்கள் என்று பெயரிடப்பட்டு வழங்கிவந்த பிராந்தியத்திற்கு, ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த பிராந்தியம் என்று கவர்ன்மெண்டார் புதுப் பெயர் வைத்து இருக்கிறார்கள். அதிற்கு இந்நகரம் பிரதான பட்டணம். ஆக்பர்கோட்டையும் ம்யூர் மத்திய காலேஜ் என்ற கட்டிடமும், அதற்குள் தென்பாகத்தில் அல்லஹபாத் யூனிவர்ஸிடி என்று சொல்லப்படுகிற கல்விசங்கத்தார் பீ. ஏ, எம். ஏ. முதலிய பட்டங்கள் கொடுக்கும் ஹாலும், ஜிஹாங்கிர் கட்டியிருக்கிற மசோலியமும், ஹைகோர்டு ரிவினியூபோர்டு முதலிய பெரிய கச்சேரிகளும் இருக்கின்றன. அக்பர் நாளில் எல்லாரையும் பார்க்க உத்திரவுகொடுத்து, தர்ப்பார் பண்ணக்கட்டிய ஹால், மிகுந்த விநோதமானது. துலுக்கர் அரசாண்ட காலத்தில் இருந்த முக்கிய கோட்டை முதலிய கட்டிடங்களைப் பாதுகாத்து நல்ல நிலைமையில் வைக்கும்படி கவர்னர் ஜனரல் கர்ஸன் பிரபு ஏற்பாடு செய்து வைத்தார். அவ்வாறு செய்யப்படாத காலத்தில், அவைகளிருந்த நிலைமையைப் பார்த்த கேயன் என்ற ஆங்கிலேய நண்பர் பரிதபித்துச் சொல்லியிருக்கிறார்.

8. கல்கத்தாவிலிருந்து 500 மயிலிலும் பொம்பாயிலிருந்து 800 மயிலிலும் இருக்கிறது. எல்லாப் பாகங்களில் இருந்தும் இருப்புப்பாதை மார்க்கமாய் போகக்கூடிய மத்திய இடத்தில் இருக்கிறது. ஆகையினால் வர்த்தகத்துக்கும் அநுகூலமான நகரம். தண்ணீர் வழியாகவும் படகுகள் கப்பல்கள் சென்று வியாபாரத்துக்குச் சவுகரியமாயிருக்கிறது. டிஸம்பர் கடைசியில் கான்க்ரஸ் ஸபை கூடியது. இந்தியா முழுவதிற்கும் காட்சியும் நடந்தது. இதுவரையில் நேரில் பார்த்தும் கேட்டும் தெரிந்தவைகளை எழுதப்பட்டிருக்கின்றன.

# இராஜபக்தி

## LOYALTY.

1. அரசனால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களின்படி நடந்து, அவனை அந்நியோன்னியமாகச் சேவித்து, அவனுக்கு அனுகூலப்படாத விரோதிகளையெல்லாம் சாதித்து, அவனது அருளைப்பெற்று, அவனால் நன்கு மதிக்கப்படும்படி நடந்துகொள்வதுதான் இராஜபக்தி எனப்படும்.

2. ஏன் அவ்விதம் நடக்கவேண்டுமென்றால், இப்பூவுலகிலுள்ள ஸகல ஜீவராஜிகளையும் படைத்துக்காப்பவர் கடவுளேயாம். என்றாலும் படைத்தற்றொழிலுக்குப் பிரமனை ஏற்படுத்தியதுபோலவே, காத்தற்றொழிலுக்கு மன்னனை ஏற்படுத்தியிருக்கின்றார். அனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப்பைம்பூணிறை (இலைமுகத்தைப் போல் பசிய பொன்னாலாகிய ஆபரணத்தையுடைய அரசன் அனைவருக்குந் தெய்வமாவான்) என்று நீதிநெறி விளக்கத்திலும், "திருவுடை மன்னர் காணின் திருமாலைக் கண்டேனே" (அஷ்ட ஐசுவரியங்களையுடைய மன்னரைக் கண்டால் மஹாவிஷ்ணுவைக் கண்டது போலாகும்) என்று திருவாய்மொழியிலும், 'முறை செய்து காக்கும் மன்னவன் மக்கட்கு இறையென வைக்கப்படும்' (நீதியுடன் உலகத்தைக் காக்கும் காவலன், மனிதர்களுக்குத் தெய்வம் என்றே சொல்லப்படுவான்) என்று தமிழ் வேதமாகிய திருக்குறளிலும் கூறப்பட்டிருப்பதை உய்த்துணர்ந்தால், அரசன் கடவுளே அல்லது கடவுளுக்குப் பிரதிநிதி என்று ஏற்படுகின்றது.

எவனொருவன் ஈசுவரனிடத்து உண்மையான பக்தி பாராட்டுகின்றானோ அவன் மறுமையில் மேலான பதவி யடைகின்றான் என்பதை எந்த மதத்தினரும் மறுக்கமுடியாது. அங்ஙனமிருக்க, கடவுளுக்குப் பிரதிநிதியாகும் காவலனிடம் உண்மையான பக்தி விசுவாசம் பாராட்டினால் இம்மையில் நல்வாழ்வு, மேன்மை, பெருமையடையலாம் என்பது வெளிப்படை. இதை அனு

பவத்தில் நாம் அறிந்தே வருகிறோமல்லவா? இன்னும் நமக்குப் பல பிதாக்களும், பல தாய்மார்களும் உண்டென்பதை நமது சாஸ்திரங்கள் கூறா நிற்கும்.

'தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா, தனை வளர்த்தவனொரு பிதா, தயையாக வித்தையைச் சாற்றினவனொரு பிதா, சார்ந்த சற்குரு ஒருபிதா, அவமறுத்தாள்கின்றவரொரு பிதா' என்று குமரேச சதகமும் முறையிடுகின்றது. ஆதலால் அரசனும், அரசபத்னியும் நமக்கு முறையே தந்தை தாயாகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை, தந்தை தாய்ப்பேண் என்று நாமகள் அவதாரமாகிய ஔவையாரும் திருவாய் மலர்ந்திருக்கின்றனள். ஆதலால் நாம் அரசன் அரசியிடத்து அன்பு கொள்ளவேண்டும். அவர் சொற்படி அடங்கி நடக்கவேண்டும். அப்படி நடந்தால் அவர் நம்மீது அன்புகொண்டு சந்தோஷப்படுவார்கள் என்பது உண்மையே. இதை மறுக்க யாவராலுமாகாது.

இனி அரசனே நமக்கு அத்தியாவசியமான பள்ளிக்கூடம், கச்சேரி,ரயில், தந்தி, வியாபாரம், மதம், வியவசாயம், கைத்தொழில் முதலியன சரிவர நடந்துவர காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றதாலும், சமயோசிதமாகவும் சாதனமுள்ள ஏற்பாடுகளைச் செய்துவருகின்றானன்றோ?

முற்காலத்தில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போனாலும், சமாசாரம் சொல்லியனுப்பினாலும், சாமான்கள் தருவித்தாலும் எவ்வளவோ மாதக்கணக்கான நாட்களாவதோடு வழியில் நேரிடும் கஷ்டங்களுக்கும் அளவில்லையென்பது அனைவோரும் அறிந்த விஷயமே. இக்காலத்திலோ சங்கடங்கள் கிஞ்சித்தேனுமில்லாமல், போக்குவரவு, பிரயாணம் முதலியன யாவும், வெகு சுலபமாகவும், சீக்கிரமாகவும், லாபகரத்துடனும் நடந்து வருகின்றன வென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ? பல்லாயிர மைலுக்கப்பாலுள்ள கண்டங்களிலுள்ள தேசங்களாகிய லண்டன், பாரிஸ், நியூயார்க் முதலியவைகளுக்கு நாட்கணக்கில் சென்று திரும்பலாம். மேலும் முற்காலத்தில் நெருப்புண்டாக்க வேண்டுமானால் சகிமுகிக்கல்லினால் வெகு கஷ்டப்பட்டு உண்டாக்கவேண்டியிருந்தது. சரியான சாமான்களும் கிடைப்பதருமை. இக்காலம் இங்கிலீஷ் இராஜாங்கத்தாரால் நாம் நன்மைகளை எடுத்துச் சொல்வதென்றால் பலநாளும் சொல்லிக்கொண்டிருக்கலாம். நிற்க, நம் பொருளை ஒருவன் களவாடிச் சென்றாலும், நம்மை ஏசிப்பேசி பிறர் தொந்தரவு செய்தாலும் உத்தியோகஸ்தர்கள் குடித்தனக்காரர்களுக்குத் தீங்கு விளைவித்தாலும் புகலிடம் எது? அரசனே. உடனே மன்னன் அவர்களை ஏற்றவாறு சிட்சித்து நம்மை ஆபத்தினின்று நீக்கிவிடுகிறான். தெய்வம் ஒருவன் செய்த குற்றத்திற்கு உடனே தண்டிப்பதில்லை. அரசன் அக்கணமே செய்துவிடுகிறான். இதுவே மேலாகும். இது பற்றியே அரசு அன்று ஒறுக்கும், தெய்வம் நின்று ஒறுக்கும் என்னும் பழமொழியும் வழங்கி வருகின்றது.

கொலையாற் கொடியாரை வெந்தொறுத்தல் பைங்கூழ்களை கட்டதனொடு நேர். குடிபுறங்காத்தோம்பிக் குற்றங்கடிதல் வழுவன்று வேந்தன் றொழில், என்ற பிரமாணத்தால், எப்படிப் பயிரைச் சுற்றி யிருக்கும் களையைப் பிடுங்கி யெறிந்தால்தான் பயிர் நன்றாய் வளருமோ, அதுபோல, நல்லவர்களாகிய பயிரிடையே தோன்றும் தீயோரைத் தண்டித்தால்தான்,நல்லவர் சுகமுடன்வாழலாகும். துஷ்டநிக்கிரஹமும், சிஷ்டபரிபாலனமும் அரசநீதியே என்று தெளிவாக விளங்குகிறது. தீயோரை ஒறுத்தலும்,நல்லோரைப் புரத்தலும் வேந்தன்றொழில் என்னும் பழமொழியும் சான்றாகும். இன்னமும் "அந்தணர் நூற்கும், அருமறைக்கும் ஆதியாய்—நின்றது மன்னவன் கோல்" என்பதுதிருக்குறள். பிரம, க்ஷத்திரிய,



வைசிய, சூத்திரர் என்ற நான்கு வருணத்தாரது ஆசாரமும், சாஸ்திரங்களும் சரிவரச் செழித்தோங்கக் காரணபூதமாயிருப்பது அரசனது இறைமாட்சி. "மாதவர் நோன்பும், மடவார் கற்பும் காவலன் காவலன்றித் தங்கா" (தவசிரேஷ்டர்களது தவமும், பெண்மணிகளது கற்புநிலைமையும் கலங்காதிருப்பதற்கு ஆதாரம் அரசனது ஆக்ஞை). "என்பது சிலப்பதிகாரம் வானோக்கிவாழு முலகெல்லாம் மன்னவன் கோனோக்கிவாழுங்குடி" உலகத்திலுள்ள ஸகல சராசரங்களெல்லாம் மழையினாற்றான் உயிருடன் வாழ்கின்றன. அதுபோலவே மன்னவனது செங்கோலினால்தான் ஜனங்கள் சுகமடையும் என்றிருத்தலால் அரசனது ஆளுகையினால் தர்மம் பெருகி, அதர்மம் குறுகி, புல், பூண்டு, ஈ, எறும்பு முதல் மனிதர்வரையிலுள்ள யாவத்து ஜீவகோடிகளும் உயிருடன் உயர்வாகவும், சுகமாகவும் வாழக்கூடும் என்பதற்கு ஆக்ஷேபமேயில்லை. "இகல் மன்னன் சீர்வழிப் பட்டதே மன்பதை, மற்றென் செய்யும் நீர்வழிப் பட்ட புணை" (திருக்குறள்). தண்ணீரில் மிதக்கும் கட்டை, தண்ணீர் எவ்வழி ஓடுகின்றதோ அவ்வழியேதான் போகக்கூடும். வேறுவழி போக முடியாது. அதுபோலவே மனிதர் அரசனது ஆட்சியை அனுசரித்தே நடக்கவேண்டும் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

முன் குலோத்துங்க சோழ மகாராஜனுக்கு மகுடாபிஷேகம் நடந்த காலத்தில் புலவர் பலரும் அவன்மீது கவிபாடி வாழ்த்தினார்கள். அச்சமயம் அங்கிருந்த நமது அன்னையாம் ஔவை "வரம்புயர" என்று வாழ்த்த இதன் உண்மைப் பொருளை யுணராத சிலர் ஔவையைப் பரிகசித்தார்கள். உடன் "வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும், கோனுயரக் கோனுயர்வான்', என்று பூர்த்தி செய்தனள் ஔவை. அக்காலை மன்னனும் குலோத்துங்க சோழனுக்கு ஔவையின்மீது உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை "தவமும் அரசிலாரில் வழியில்லை, அரசனும் இல்வாழ்வாரில் வழியில்லை" (நான்மணிக்கடிகை). "குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்" என்ற நீதிவாக்கியங்களை நன்குணர்ந்து, அருட்கடலுக்கும், கல்விக்கடலுக்கும் உறைவிடமாய் விளங்கும் நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் மன்னரும், இப்பாதகண்டமாகிய இந்திய நாட்டிற்கு, தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், பிறவுயிர்களாலும், யாதொரு தீங்கும் வாராதபடி, தன்னுயிர்போல் மன்னுயிரைப் புரப்பதோ தனக்கு ஒரு யெருமகிழ்ச்சி என்றும் திருவாய் மலர்ந்ததை யாவரும் மறக்காது அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட காரணங்களால் குடி ஜனங்கள் இராஜபக்தியுடன் இருக்கவேண்டும் என்பது அத்தியாவசியமாகின்றது. அவ்விதம் இராஜபக்தியில் குறைபவர்கள் என்ன கதியடைவார்கள் என்று நம் சாஸ்திரங்கள் சாற்றும் சில மொழிகளையும் இங்கு எடுத்தியம்புவது இயல்பே.

1. மன்னனைக் கடவுளுக்குச் சமானம் என முற்கூறி யிருந்தால் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" எனவழங்கும் முதுமொழியும் மறக்கத்தக்கதன்று. கடவுளை நம்பாதவர் கைவிடப்படுவர் என்பது திண்ணம்.

2. இராஜனும் இராஜபத்தினியும் தந்தை தாய் என்றிருப்பதால் இராஜபக்தியிற் குறைகிறவர்கள் மாத்ருதுரோகம், பித்ருதுரோகம் என்பவைகளுக்கு ஆளாவார்.

3. நமக்கு இன்றியமையாத சௌகரியங்கள் இறைவன் செய்துவருகின்றான். நாம் பெற்ற உதவிக்குப் பிரதி செய்யச் சக்தியில்லையாயினும் அதை மறத்தல் ஆகாது என்பதை வற்புறுத்த "நன்றி மறவேல்" என்று ஔவையும், "நன்றி மறப்பது நன்றன்று" என்று எழுதுண்ட மறையும்.

நன்றியை மறந்தால் அதற்குப் பிராயச்சித்தம் வேறில்லை என்பதற்கு ஆதாரம் "எந்நன்றி கொன்றார்க்கும், உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (வள்ளுவர் வாய்மொழி) "நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்றார்க்கு உய்தியில்" (புறநானூறு). ஆனால் ஒருபரிகாரமுண்டு அதாவது படுதாகே!

தினைதுணை நன்றிசெயினும் பனைத்துணையாக் கொள்ளவேண்டும் என்றிருக்க, அளவிடப்படாத நன்றியைப் பெறுபவர் மறத்தலாகுமே?

(4) யாரைப் பகைத்தாலும் பகைக்கலாம், அரசனைப் பகைத்தல் ஆகாது. மழைக்குக் குடை பிடிக்கலாமே யொழிய, இடிக்குக் குடைபிடிக்க யாராலாகும்? ஒருவராலுமாகாது. வேந்தன்சீறின் ஆந்துணையில்லை (கொன்றைவேந்தன்). அரசனைப் பகைத்திட்டார் ஆருயிர் இழப்பர்தாமே (விவேக சிந்தாமணி) என்ற நமது முன்னோர் முதுமொழிகளும் முழங்கிக்கொண்டிருக்கின்றன.

நதி உடைப்பெடுத்தால் அணை போடலாம், கடல் கரைபுரண்டால் யார்தான் கரைபோடக் கூடும். ஆதலின் அரசனிடத்து அன்புகொள்ள வேண்டும். மேலும் இராஜத்வேஷிகளது நாவை நறுக்கித் தேசப்பிரஷ்டம் செய்யவேண்டும் என்பது (Yajnawalkya Samhita) (Dharma Sastras, Sloka 305) தர்மசாஸ்திரம் யாஜ்ஞவால்கிய ஸம்ஹிதை 305-வது சுலோகத்தின் பொருள்.

இராஜபக்தியினால் உண்டாகும் நன்மைகள் இன்னின்னவை யென்று எடுத்துச் சொல்ல என்னாலாகாது போனாலும் ஒரு வாக்கியத்தில் சொல்லி முடிக்கிறேன். "கொற்றவனறிதல் உற்றிடத்துதவி" (கொன்றைவேந்தன்) மேல் எடுத்துக்காட்டப்பட்ட பிரமாணங்களை மறவாது இராஜபக்தி கொண்டிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

மூத்தோர் சொல்லும் வார்த்தை யமிர்தம். இராஜபக்தி என்ற வியாசத்தை இராஜவாழ்த்துடன் முடிக்கிறேன்.

### இராஜ வாழ்த்து

("சங்கரனே" என்ற தேவாரமெட்டு.)

வாழ்கவே வாழ்கவே
ஜார்ஜ்மன்னன் வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
ஜார்ஜ்மன்னன் வாழ்கவே.

ஆங்கில நாடதனில்
பாங்குடனே தோன்றியவன்
வீங்குலகம் யாவுமாளும்
வீறுள்ள வேந்தனவன்

டெல்லிமா நகர்தன்னில்
தேவியுடன் வந்தானே
பல்லியம் பலமுழங்கப்
பட்டமதைக் கொண்டானே

தில்லைநடராஜனருள்
எங்கள்மன்னன் ஜார்ஜ்மே
எல்லாம்வல்ல இறைவனருள்
எங்களன்னைமேரியுடன்

அன்னவர்தம் மைந்தர்களாம்
அன்புள்ளகுழந்தைகளும்
முன்னவன்தனைப்பணிந்து
வாழ்கவென்றுவாழ்த்துமே

H. S. சுப்ரமணிய அய்யர்.



# சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

## ஒளி—பிரதிபலனம்

## LIGHT REFLECTION

வெளி வஸ்துக்கள் நமது கண்ணுக்குப் புலப்பட வேண்டுமாகில் அவைகளிலிருந்து வெளியேறும் வெளிச்சம் நமது கண்களுள் வந்து தாக்கவேண்டும், என்று முன்னமே கூறியாகிவிட்டது. இந்த வெளி வஸ்து ஸூரியன், நக்ஷத்திரங்கள், நெருப்பு முதலிய பிரகாசமான வஸ்துக்களாயின் இவைகளே ஒளி விடும் தன்மை உடையனவாதலால் இவ்வொளி கண்களில் விழ இவைகள் புலப்படும். கல், வீடு, மேஜை முதலிய இருண்ட வஸ்துக்களாயின் தாமே ஒளிவிடும் திறனில்லாததால் ஒளிவிடும் வஸ்துக்கள் முன்னிலையில் இவைகள் நமது கண்ணுக்குப் புலப்படுகின்றன. ஆதலால் இந்தக் காலங்களில் இவைகளிலிருந்து ஒளி நமது கண்களில் புகுந்துகொள்ளவேண்டும். ஆனால் இவைகள் தாமே ஒளிவிடா, ஆதலால் ஒளிவிடும் வஸ்துக்களின் ஒளி இவைகள்மேல் விழ அது திரும்பி இவ்வஸ்துக்களிலிருந்த நமது கண்களில் விழவேண்டும். ஆகவே ஸூரியன் முதலிய ஒளிவிடும் வஸ்துகள் முன்னிலையில் அவைகளிலிருந்து வரும்ஒளியைச் சுற்றியுள்ள இருண்ட பதார்த்தங்கள் நாற்புறமும் சிதறிப்போகும்படி செய்து தம் இருப்பை உள்ளபடி உணரும்படி கண்ணுடையோரைச் செய்கின்றன. இம்மாதிரி ஒளி இருண்ட வஸ்துக்களால் திரும்பி வெளி ஏறும் தோற்றத்திற்கே பிரதிபலனம் என்று பெயர்.

இந்தப் பிரதிபலனம் உண்டாவதை வேறுவிடங்களிலும் காணலாம். ஒரு வீட்டுமுற்றத்தில் நடுப்பகலில் ஸூரியன் காய்ந்துகொண்டிருந்தால் சுற்றுமுள்ள கூட ஒருவாறு முற்றயிரதிபலனத்தால் விளக்கப்படும். இப்படி இருக்கையில் ஒரு வெள்ளை வேஷ்டியை முற்றத்தில் கட்டினால் கூட விளக்கம் அதிகப்படும், எடுத்துவிட்டால் முன்போலவாகிவிடும். இது வெள்ளை வேஷ்டி ஸூரிய ஒளியைப் பிரதிபலனம்செய்யும்விதத்தைக் காட்டுகிறது. நமது சமயல் அறைமேல்பாகத்தில் உள்ள ஓட்டைகள்வழியாகச்சிற்சிலஸமயங்களில்ஸூரியன் ஒளி புகுந்து தரையில் வட்டமான வெளிச்சத்தை உண்டாக்கும். சாதாரணமாக ஓட்டை எங்கிருக்கிறது என்று கண்டுபிடிக்க வட்ட வெளிச்சத்தில் கையை வைத்து நேரே வெளிச்சம் போகாது நமது கண் உயரம்வரை உயர்த்திப் பின்னர் ஒளி கண்ணில் விழும்படி நின்று மேலே நோக்கி அதைக்கண்டுபிடிக்க வேண்டும். இங்கு நகரும் கையிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியால் ஸூரியன் ஒளி மார்க்கத்தைக் கண்டு இவ்வாறு செய்யவேண்டியிருக்கிறது. இப்படிக் கண்டபின்பும் ஓட்டை இருக்குமிடமும் தரையில் வட்ட வெளிச்சமும் தெரியுமே ஒழிய இடையில் உள்ள வெளிச்சம் விளங்காது. புதிதாய் உள்ளே வரும் ஒருவனுக்குத் தரையைப் பார்த்தாலன்றி உள்ளே ஸூரியன்ஒளி விழுந்திருக்கிறது என்பதுவிளங்காது இப்படியிருக்கையில் அடுப்பை மூட்டிபுகையையாவது அல்லது தரையைப் பெருக்கி தூசியையாவது கிளப்பிவிட்டால் உடனே ஒரு பட்டைக் கோடுபோல அந்த உள்ளே வட்டவெளிச்சம் முதல் கூறை ஓட்டைவரை ஒருபிரகாசக்கோடு வெளியாகும் உடனே ஓட்டை இருக்கும் இடமும் முன் கஷ்டமின்றி எளிதில் விளங்கும். இங்கு புகை, தூசி முதலிய இருண்ட வஸ்துக்கள் மேற்கிளம்பி உள் நிறைத்ததும் ஒளிவரும் இடைவெளியிலும் அமர்ந்து, வரும் ஒளிகளைப் பிரதிபலனம் செய்து நமது கண்களில்புகும்படி செய்ய ஒளிபோகும் மார்க்கம் விளங்கி விடுகின்றது. ஆகவே ஒளி நேரிடவாவது அல்லது பிரதிபலனம் செய்யும் இருண்ட வஸ்துவின் மூலமாயாவது நமது கண்ணில் விழுந்தால்தான் ஒளியின் விளக்க சக்தி வெளிப்படும். அப்படி இன்றி நமது கண்களில் விழாது சுற்றிலும் ஒளிநிறைந்திருப்பினும் விளக்கமின்றி இருளிலிருக்க வேண்டியதுதான்.

ஸூரியன் அஸ்தமித்துகொஞ்சநாழிகைவரையிலும், உதயத்திற்குக் கொஞ்ச நாழிகைக்கு முன்னரும் ஸந்தியா வெளிச்சமிருப்பதற்கு நம்மைச்சுற்றிலும் உள்ள வாயு ஸூரியன் ஒளியைப் பிரதிபலனம் செய்து நமது கண்ணுள் புகுத்துவதால்தான். ஸூரியன் அதிகமாகக் கீழே இருக்குங்கால் பூமியின் நிழல்போகுமிடம் தவிர ஆகாயத்தின் மற்றைய பாகமெல்லாம் ஸூரியன் ஒளியால் நிறைந்திருக்கிறது. இது க்ரஹ, சந்திரர்கள் இரவிலும் தாம் ஸூரியன் ஒளியால் பிரகாசிப்பதால் விளங்கும். கிரஹணம்வரும் பௌர்ணமி இரவிலும் கிரஹணம் பிடிக்கும்வரையில் சந்திரன் ப்ரகாசிப்பதால் பிடிக்குமிடம் தவிர மற்றைய விடங்களில் ஸூரியன் ஒளியிருக்கிறதென்பது புலப்படும். அப்படியிருந்தும் இந்த வஸ்துக்களிருக்குமிடம் தவிர மற்றைய விடங்கள் எல்லாம் இருளாகத்தான் தோற்றுகின்றன. அங்கு நிறைந்திருக்கும் ஒளி மேல் நோக்கியே போவனவே ஒழிய நமது கண்ணுக்குத் திருப்படாததால் அங்கு விளக்கமின்றி இருண்டிருப்பதாகக் காணப்படுகிறது. ஆகவே ஸூரியன் ஏராளமாக ஒளி விட்டுக்கொண்டிருக்கிறபோதிலும் சுற்றுமுள்ள வாயு தரை வீடு முதலிய பிரதிபலன பதார்த்தம் இல்லாவிடில் ஸூரியனைப்பார்த்தால் அன்றி எங்கும்இருளாகத்தான் இருக்கும். இதுபற்றியே வானசாஸ்திரிகள் பூமியைவிட்டுக் கிளம்பி ஸுமார் 10 கோடி மைல்தூரம் வெளியில் போய் விட்டால் எங்கும் இருட்டாகவிருக்கும் என்றும், அந்த ஓயா இரவில்ஸூரியன் நக்ஷத்திரம்முதலிய ஒளிவிடும் பொருள்களே மின்மினும் பூச்சிபோல பிரகாசிக்க நிற்கும் என்றும் கூறுகின்றனர். ஆதலால் சகல ஒளி விளக்கத்திற்குக்காரணமாகிய இந்தப்பிரதிபலனத்தையும் அதன் ஒழுங்கையும் நாம் நன்கு விசாரிக்கப்புகுவோம்.

உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒளியை பிரதிபலனம் செய்வதாலே நமது கண்ணுள் விழும்படி செய்து அவைகளின்உருவம்முதலியவற்றை நாம்உணரும்படி செய்தபோதிலும் அவைகள் எல்லாம் நன்றாகவும் ஒழுங்காகவும் ஒளியை பிரதிபலனம் செய்யாததனால் அவைகளிடமிருந்து வரும் ஒளியைப் புகை தூசி முதலியவைகள் மூலமாக நாம் காணமுடியாது. ஆனால் அவைகளுள் கண்ணாடி, தண்ணீர், எண்ணெய் முதலிய வஸ்துக்கள் ஒளியை ஒருவாறு ஒழுங்காக பிரதிபலனம் செய்வதால் பிரதிபலன ஒளியை முன்கூறிய வழிகளால் காணவும் கூடும்,: பிரதிபலன ஒளியை ஒளியில்லாவிடத்தில் விட்டுப் பார்த்தால் அங்கு ஒளி விழும் இடம் பிரகாசமாக விருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடி மெருகு வரும்படி தேய்பட்ட வஸ்துக்கள் ஆகிய இவைகளே ஒளியைப் பூர்ணமாகவும் ஒழுங்காகவும் பிரதிபலனம் செய்யும் திறனுடையவை. ஆகவே பிரதிபலன ஒழுங்குகள் காரியங்கள் முதலியவைகளை உற்றுநோக்கி உணரவேண்டுமாகில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய முகம் பார்க்கும் கண்ணாடியிலும் தண்ணீரிலும் ஸம்மந்தப்படுத்தி உணரவேண்டும்.

ஒரு கண்ணாடியைவட்டமாகத் தரையில் ஸூரியன் ஒளி விழும் இடத்தில் வைப்போம். அதன்மேல் ஒரு தொளையுள்ள அட்டையைச் சரிவாக நிறுத்திச் சிறு ஸூரியரச்மி மாத்திரம் விழும்படி வைப்போம். இது கண்ணாடியில் விழுமிடத்தில் ஒரு மட்டமான அட்டை அல்லது தகரத் தகட்டை நேராக நிறுத்தி மெதுவாக அந்த விடத்தைச் சுற்றித் திருப்புவோம். ஒரு நிலையில் ஒரு புறமிருந்து வரும்ரச்மியும், பிரதிபலன ரச்மியும் இந்த அட்டைமேல் விழுந்து நிற்கும். இந்த ஸமயத்தில் ரச்மி விழுமிடத்தில் ஒரு குச்சியை நேராக நிறுத்தி அட்டையில் மேல்கோடிழுத்து, ரச்மிகள் படுமிடத்திலும் கோடுகள் வரிந்து காட்டி விடுவோம் வெளியில் அட்டையை எடுத்துநோக்கினால் நடுநேர்க்கோடுஇரண்டு ரச்மிக்கோட்டிற்கு மையமாகப் போவதைக்கண்டு கொள்ளலாம். இதிலிருந்து இரண்டு விஷயம் வெளியாகின்றது.



(1) வரும் ரச்மியும் அதன் பிரதிபலன ரச்மியும் கண்ணாடி விஷயமாக ஸமச்சரிவை உடையனவாக விருக்கும். (அட்டையிலிருக்கும் கோடாகிய கண்ணாடிக்கு நேர் கோணக்கோட்டிற்கு ஸமசரிவுடையதாக இவைகள் இருத்ததால் இது ஊகிக்கப்பட்டது)

(2) வரும் ரச்மிக்குநேர் எதிர்ப்புறம்பிரதிபலனரச்மி கிளம்பிப்போகும் (இரண்டு ரச்மிகளும் மத்தியிலுள்ள நேர்க்கோணக்கோடும் ஒரே அட்டையில் விழுவதால் இது ஊகிக்கப்படும்.)

முற்கூறிய கண்ணாடியை இருக்கிறபடி வைத்துத் தூசியைக் கிளப்பினால் இரண்டு ரச்மிகளின் மார்க்கம் நமக்கு நன்றாகப் புலப்பட்டு முற்கூறிய உண்மைகளை நன்கு வெளியாக்கும்.

இவ்வொழுங்குப்படி ஒளிப்பிரதிபலனம்ஏற்படுவதால் ஆகும் காரியங்களை எடுத்து விளக்குவோம். ஒரு சுவரில்ஒரே உயரத்தில் ஒற்றைப்படையான பொட்டுக்கள் ஸமஇடைவெளியுடன் அகலமாக இட்டு, மத்தியப் பொட்டில் பூஜ்யம்போட்டு மற்றையபொட்டுக்களருகில் 1, 2, 3 என்ற எண்களை ஒழுங்காக இருபுறங்களில் இடுவோம். எதிர் சுவரில் இதே உயரத்தில் பொட்டிற்கு நேரெதிரில் ஒரு வட்டக்கண்ணாடியைப் பதிப்போம். இப்பொழுது 0 பொட்டில் நாம் கண்வைத்துப் பார்த்தால் கண்ணாடியுள் 0 பொட்டுத்தெரியும், 1-ல் வைத்துப்பார்த்தால் மறுபுறம் 1 பொட்டு தெரியும், 7-ல் கண்வைத்துப்பார்த்தால் மறுபுறம் 7-ம் பொட்டு தெரியும். இதனாலே மறுபுறம் 7-ம் பொட்டிலிருந்து புறப்படும் ரச்மிசரிவாக வட்டக்கண்ணாடியில் விழுந்து நம் கண்ணிருக்கும் 7-ம் பொட்டி வருகிறதென்றாயிற்று. இதுவும் முற்கூறிய பிரதிபல ஒழுங்கிற்கு ஒத்ததாகவே இருக்கிறது. இங்கு நடுப்பொட்டியிலிருந்து ஒரு தட்டியை வைத்து, ஒரு புறம் உள்ள பொட்டுகள் மறுபுறமிருந்து பார்த்தால் தெரியாதபடி செய்துவிட்டபோதிலும், வட்டக்கண்ணாடியில் உள்ள தோற்றம் மறையாது. நேராகவரும் ரச்மியை தட்டி மறைத்தபோதிலும் கண்ணாடியில்விழும் ரச்மியை இது மறைக்காததால் இவ்வாறு கண்ணாடியுள்ளிருக்கும் தோற்றம் மாறாதிருக்கின்றது. இதுபற்றியேதாம் நம்மைவிடச் சிறிய குருக்களவுள்ள கண்ணாடிகளிலு



ஒரு தூரத்தில் நன்றாய் நமது தேக முழுவதையும் பார்க்கமுடியும்.

கண்ணாடிபோன்றஒழுங்காகவும் பூர்ணமாகவும் பிரதிபலனம் செய்யும் வஸ்துக்களுள் பிரதிபிம்பம் உண்டாவதும் இந்த பிரதிபலனத்தால்தான். வஸ்துக்களிலிருந்து போகும் ஒளிகண்ணாடியில்பட்டு நமது கண்ணுள் புகுங்கால் ஒளிகண்ணாடியிடமிருந்தே நேராக வருவதால் அந்த மார்க்கத்துக்கு நேரே ஒளிவிடும் பொருளிருப்பதாக நமக்கு ஒரு தோற்றம் உண்டாகிறது. இதற்கே பிரதிபிம்பம் என்று பெயர். இது கண்ணாடியுள்ளிருப்பதாகத் தோற்றியபோதிலும் உண்மையில் அப்புறம் இல்லாததால் இதற்குப் போலி பிரதிபிம்பம் என்றும் பெயர். இது தோற்ற மாத்திரமேயாயினும் வஸ்து கண்ணாடியை விட்டு விலகினால் பிரதிபிம்பம் கண்ணாடியுள் போவதுபோலவும், கண்ணாடியை அணுகினால் அதுவும் நெருங்கிவருவதாகவும் தோற்றுகிறது. ஆகவே இந்தப் பிரதிபிம்பம் எவ்வளவுதூரம் உள்ளிருப்பதாகத் தோற்றும் என்பதை ஆராய்வோம்.

ஒரு மேஜையின் நேராக ஒரு கோடிழுத்து அந்தக் கோட்டிற்கு நேர்குறுக்காக ஒரு கண்ணாடியை நிறுத்துவோம். ஒரு சிறுமெழுகுண்டையில் ஒரு நேரான துடைப்பக்குச்சியைச் சொருகி கண்ணாடியில் முன்புறத்தில் கோட்டின்மேல் வைப்போம். கண்ணாடியுள் இந்தக் கோடு நேராக உள்ளே போவது போலவும் அங்கு உள்ளே ஒருமெழுக்குண்டையில் ஒரு குச்சி நிற்பது போலவும் காணப்படும். வேறொரு மெழுக்குண்டையில் முன்னதைவிட நீளமாகியும் கண்ணாடிக்குமேல் உயரமாகியும் உள்ள குச்சி ஒன்றைச் சொருகிப் பின்புறம் இருக்கும் கோட்டின்வழியே நகர்த்திச் செல்லுவோம். போகும்போது முன்புறமிருந்து கண்ணை வெவ்வேறு இடங்களில் நிறுத்தி பிரதிபிம்பத்தையும் கண்ணாடிக்கு மேல் தெரியும் குச்சியையும் உற்று நோக்குவோம். ஓரிடத்தில் இரண்டும் ஒன்றாகக் காணப்படும். கண்ணை எங்கு வைத்துக் கண்ணாடியுள் நோக்கியபோதிலும் இந்த நிலையில் இவ்விரண்டு குச்சிகளும் ஒன்றுபட்டே காணப்படும். ஆதலால் பின்னிருக்கும் குச்சிஎங்கிருக்கிறதோ அங்கேதான் உள்ளிருக்கும் பிரதிபிம்பம்இருப்பதுபோலத் தோற்றுகிறது. இப்பொழுது கண்ணாடியிருக்கும் இடத்தில் முன்புறமும் பின்புறமும் கோடுகிழித்துக் கண்ணாடியை எடுத்துவிட்டு இக் கோட்டிலிருந்து முதலிழுத்த நேர்கோட்டு வழியாக இரண்டு குச்சிகளிருக்கும் தூரத்தை ஒப்பிடுவோம். இவை இரண்டும் சமமாகவே இருக்கும். கண்ணாடி இருந்த கோட்டில் எங்கிருந்து குச்சிகளிருக்கும் இடம் வரை அளந்து ஒப்பிட்டாலும் அந்த இரண்டு தூரங்களும் ஸமமாகவே இருக்கும். ஆகவே கண்ணாடியுள்ளிருக்கும் பிரதிபிம்பமானது கண்ணாடிக்குமுன் அதன் வஸ்து எவ்வளவு தூரத்திலிருக்கிறதோ அதே தூரத்தில் பின்னே இருப்பதாகத் தோற்றும். மேலும் கண்ணாடியில் எந்த இடத்திலிருந்து வஸ்து வரை அளந்தபோதிலும் அதே தூரத்தில்தான் பிரதிபிம்பம் அந்தவிடத்திலிருந்து உள்ளே இருக்கும். உள்ளேதெரியும் பிரதிபிம்பம் வெளிவஸ்துவைநோக்கியிருப்பதால், அதன் இடது வலது புறங்கள் மாறிக் காணப்படும். இந்த ஒழுங்கின்படிதான் தடாகம் முதலிய நீர் நிலைகளுள் எதிர் புறம் இருக்கும் வஸ்துக்கள் பிரதிபிம்பித்து விளங்குவதும், நேரே பார்த்தால் தெரியாதவைகள் தண்ணீர் உள் சிலவேளை பிரதிபிம்பித்து விளங்குவதும். சில நிலைகளில் நேரே பார்த்தால் தெரியும் வஸ்துக்களின் பிரதிபிம்பம் தண்ணீருள் தெரியாமலும் போகும்.

இனி இரண்டு கண்ணாடிகளைச் சேர்த்துக் கதவு போல அமைத்து மூடவும் திறக்கவும் வரும்படி செய்துவிட்டு இங்கு உண்டாகும் பிரதிபிம்பங்களை ஆராய்வோம். இவை இரண்டுள் மேஜையில் ஒன்றை வைத்து மற்றொன்றை நேராக மேஜைமேல் நிறுத்துவோம். இரண்டிற்கும் இடையில் ஒரு நேர் கோணப் பிரிவு இப்பொழுது இருக்கிறது.

[ஒரு நேர் கோணம் 90 ஸமபாகமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு டிகிரி என்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு கோடு ஒரு நுனியை ஸ்திரமாகக் கொண்டு ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு சுற்றத் தொடங்கினால் முறையே 90 டிகிரியை விட சிறிய கோணங்களையும் நேர் கோணம், இதைவிடப் பெரிய கோணம், இரண்டு நேர் கோணம் மூன்று நேர்கோணம் முதலியவைகள் உண்டாகும் சரிவில் நின்று முடிவில் புறப்பட்டவிடம் வருகையில் நாலு நேர்கோணம் அதாவது 360 டிகிரி கோணம்ஏற்படுத்திவிடுகிறது.]

உடனே முதல் கண்ணாடிக்குள் இரண்டாவதும், இரண்டாவதுள் முதலதும் நேராகத் தெரிந்து மொத்தம் நாலு நேர்கோணம் உண்டாக்கிவிடும். இவைகள் இடையில் ஒரு வஸ்துவைப் பிடித்தால் உள்ளிருக்கும் மூன்று நேர்கோணங்களில் ஒவ்வொன்றில் ஒவ்வொரு பிரதிபிம்பம் காணப்படும். ஆகவே 3 பிரதிபிம்பங்கள் தோற்றும். இவைகள் கண்ணாடி சேர்த்திருக்கும் கோட்டில்நேரான இடத்திலிருந்து ஒரே தூரத்திலிருப்பதால் அந்த இடத்தை மத்தியாகவும் அதிலிருந்து வஸ்துவரையில் உள்ள அளவைக்கொண்டு ஒரு வட்டமிட்டால் அதிலேதான் பிரதிபிம்பங்களும் இருக்கும். இம்மாதிரியே 60 டிக்கிரியில் கண்ணாடிகளை நிறுத்தினால் பிரதிபிம்பங்கள் ஒரு வட்டமாக ஒழுங்குபட்டு நிற்கும் என்பது விளங்கும். இவ்வாறு நிறுத்தியதும் 60 டிகிரி 360-இல் 6-இல் ஒரு பங்காதலால் இரண்டு கண்ணாடிகளையும் உள்ளிருக்கும் பிரதிபிம்பக் கண்ணாடிகளையும் சேர்த்தால் மொத்தம் 6 கண்ணாடிகள் காணப்படும். இடையில் ஒரு வஸ்துவைப் பிடித்தால் மற்றைய ஐந்து இடவெளிகள் ஒவ்வொன்றில் ஒன்றாக 5 பிரதிபிம்பங்கள் காணப்படும். ஆகவே பொதுவாகக் கண்ணாடிகளுக்கிடையில் என்ன

டிகிரிப் பிரிவு இருந்தபோதிலும் 360-ஐ அந்த அளவால் வகுத்துவரும் தொகையிலிருந்து ஒன்றைக் கழித்துவிட்டால் கிடைக்கும் தொகையே அப்பொழுது உண்டாகும் பிரதிபிம்பங்களின் தொகை. ஆகவே கண்ணுடிகளை நெருக்க நெருக்க பிரதிபிம்பங்கள் அதிகமாகிக்கொண்டே வரும். முடிவில் இரண்டு கண்ணுடிகளையும் பிரித்து எதிர் எதிராகப்பிடித்தால் இவைகள் ஒன்றின்மேல் ஒன்றுபட்டமாதிரியில் ஒதுக்கியதற்கு சமானம். இங்குக் கணக்குக்கு அடங்கா பிரதிபிம்பங்கள் காணப்படுவதை நாம் கண்ணுரக் காணலாம். ஒளி பிரதிபலனத்தால்| இரண்டு கண்ணுடிகள் விஷயத்தில் ஏற்படும் விசித்திரம் இது.



இம்மாதிரி மூன்று சிறியநீண்டகண்ணுடிகளைச் சேர்த்தே திருநாள்களில் வரும் கால் அணு விலையுள்ள **விசித்திரக்குழாய்** செய்யப்பட்டிருக்கிறது கண்ணுடிகளுக்குள் ஏற்படும் பரஸ்பர பிரதிபலனத்தால் சுற்றி முக்கோணப்பட்டை பிரதிபிம்பங்கள் ஒழுங்காக உண்டாக இடையில் வரும் வர்ணக்கண்ணுடிச்சில்லுகள் ஒவ்வொருபட்டையுள்ளும் பிரதிபிம்பமாகக் காணப்பட்டு விசித்திர ஒழுங்கான புதிய தோற்றங்களை உண்டாக்குகின்றன. கண்ணுடி முதலியவைகள் பிரதிபலன சக்தியைக் கொண்டே மயன் தர்மபுத்திரருக்கு ஸபையை அமைத்துச் சுவரிருக்குமிடத்தில் வாயிலிருப்பதுபோலவும், வாயிலுள்ளவிடத்து சுவரைப்போலவும், தண்ணீர் உள்ள விடத்து இல்லாதது போலவும் இல்லாதவிடத்தில் உள்ளதுபோலவும்காட்டிவிசித்திரத்தோற்றங்களை உண்டாக்கித் தன் சிற்பத்திறமையை அங்குக் காட்டியிருந்தான். இந்த ஒழுங்கை முன்னிட்டுத்தான் திருவிழாக்களில் காட்டப்படும் பேசும்தலை என்ற தோற்றம் உண்டாக்கப்படுகிறது. ஒரு மேஜை கீழ்ப்புறத்தில் ஒருகண்ணுடி முழுவதும் மறைக்கும்படி வைத்துவிட்டுப் பின்புறம் ஒருவனிருந்து தலை நீட்டிக்கொண்டு பேசுவான். மேஜையின் முன்புறம் கண்ணுடியுள் பிரதிபலித்து மேஜை முழுவதும் இருப்பதாகக் காட்டும் கண்ணுடி பின்புறம் இருப்பவன் அங்கங்களை மறைக்கத் தலை மாத்திரம் வெளிப்பட்டு நிற்கும். இதனுல் தலைமாத்திரம் பேசுவதுபோலத் தோற்றும்.

இதுவரையில் கூறிவந்தது மட்டக்கண்ணுடியில் ஏற்படும் பிரதிபலனத்தையே. இனி வளைந்த வஸ்துக்களில் ஏற்படும் பிரதிபலனத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம். குதிரை வண்டிகளின் பின்புறம் வளைந்து பளபளப்பாக விருக்கும். அங்கு காணப்படும் பிரதிபிம்பத்தை நோக்கினுல் நமது முகம் தட்டையாகி விகாரமாக விருக்கும். அதன் எதிரில் நடந்து பார்த்தால் சித்திரக்குள்ளன் அசைந்தாடி வருவது போன்ற வேடிக்கைத்தோற்றம் உண்டாகும். இம்மாதிரித்தோற்றம் ரஸகுண்டுகளில் காணப்படும். இது குவிவான வளைந்த பதார்த்தங்களில் உண்டாகும் தோற்றம். இனிக் குழிவான வஸ்துக்களில் உண்டாகும் தோற்றங்களை நோக்குவோம். விளக்குக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரதிபலனத்தட்டை எடுத்து நெருங்கி நோக்கினுல் முகம் பூதாகாரமாகப் பெரியதாகித் தெரியும். சற்று ஒதுங்கி நோக்கினுல் பிரதிபிம்பம் தலைகீழாகவும் சிறியதாகவும் விளங்கும். ஆகவே வளைந்த வஸ்துக்கள் முன்னுள்ளவைகளை ஒருவிதமாக விகாரப்படுத்தியே காட்டும்.

குழிவான வஸ்துக்களில் ஏற்படும் பிரதிபலனத்தில் சிலவிசேஷங்கள் உண்டு. வளைவான குழிந்த கண்ணுடியை எடுத்து ஸூரியனுக்கு நேராகப்பிடித்துக் கீழிருக்கும் அசியைக்கிளப்புவோம். பிரதிபலன ரச்மிகள் எல்லாம் குவிந்து கண்ணுடிமுன்பு கொஞ்சதூரத்தில் ஒருபுள்ளியில் வந்து சேர்ந்து விரிந்துபோகும். இது சேருமிடத்தில் ஒரு காகிதம், பஞ்சு முதலிய எளிதில் எரியும் வஸ்துக்களைப் பிடித்தால்உடனே ஜ்வாலைவிட்டு அவைகள் எரியும்.' ஆகவே ஒவ்வொரு வளைந்து குழிந்த கண்ணுடிக்கும் இம்மாதிரி ஸூரிய ரச்மி சேருமிடம் ஒன்று உண்டு. இதற்கு முக்கிய சேர்க்கை இடம் என்று பெயர். இவ்விடத்தில் காகிதத்தைப் பிடித்துப் பார்க்கும்போது அது எரிவதற்குமுன் அங்கு காணப்படும் புள்ளியைக் கவனித்தால் அதன் அசைவு உருவு முதலியவைகளால் ஸூரியனது பிரதிபிம்பம் என்பது வெளியாக, ஆகவே முக்கிய சேர்க்கைப்



புள்ளியில் இக்கண்ணுடி வெகு தூரத்திலுள்ள வஸ்துக்களின் உண்மை பிரதிபிம்பத்தை உண்டாக்குகிறது. இதுபோலவே அருகாமையிலுள்ள வஸ்துக்களின் பிரதிபிம்பங்களையும் இது உண்டாக்கும். வளைவின் சமயம்வரையில் வெளியிலுள்ள வஸ்துக்களில் பிரதிபிம்பத்தை இது முக்கியச் சேர்க்கைப் புள்ளிக்கும் மையத்திற்கு இடையில் சிறிதாகவும் தலைகீழாகவும் உண்டாக்குவதையும், இந்த இடையில் அமையும் வஸ்துக்களுக்குத்தலைகீழாகவும்,பெரியதாகவும் உள்ள பிரதிபிம்பம் மையத்திற்குஅப்பால்உண்டாக்குவதையும்,முக்கிய சேர்க்கை ஸ்தானத்திற்கும் கண்ணுடிக்கு இடையிலிருக்கும் வஸ்துக்கள் கண்ணுடியுள் நேராகவும் பெரிதாகவும் உள்ள போலி பிரதிபிம்பத்தை உண்டாக்குவதையும் நாம் எளிதில் காணலாம். இதனுல் இக்குழிவானகண்ணுடிகள் தமது முக்கிய சேர்க்கைஸ்தானத்திலுள்ள வெளிச்சத்தில் ஒளியை ஸமப்படுத்தி பிரகாசப்படுத்தும் பிரதிபலக் கருவியாகவும், தூரதிருஷ்டிக் கண்ணுடிகளில் வெளி வஸ்துக்களி லிருந்துவரும் ஒளிகளைக்குவித்துச் சிறியனவாயும் பிரகாசமாயும் தலைகீழாகவும் உள்ள உண்மை பிரதிபிம்பத்தை அருகே உண்டாக்கி அதைப் பரீக்ஷித்து அறிவதை எளிதாக்கவும் உபயோகப்படுகின்றன.




# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 19. கர்மோபநிஷத் (17)

கர்மோபனிஷத்தில் விளங்குவதாயும், கர்ப்பத்தில் ஆத்மஞானத்தை விளக்குவதாயும், சரீரம் பொய்யாகி விட மேல் விளங்குவதாயும், விஷ்ணுஸ்வரூபமாயும் இருக்கும் பரமாத்மாவைத் தியானம் பண்ணுகிறேன்.

சரீரம் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என ஐந்து|பூதங்களாலாகியது; இதில் கடினமாக விருப்பது ப்ருதிவி, த்ரவமாகவிருப்பது அப்பு, உஷ்ணமாக விருப்பது தேஜஸ், ஸஞ்சரிக்கும் குணமுள்ளது வாயு, வெறும் இடமாகவிருப்பது ஆகாசம். இந்தச் சரீரம், ஐந்து இந்திரியங்களிலிருப்பது;' காதுகள் சப்தத்தையும், தோல் ஸ்பர்சத்தையும், கண்கள் ரூபத்தையும், நாக்கு ரஸத்தையும்,|மூக்கு கந்தத்தையும் உணருகின்றன. இது தித்திப்பு, உவர்ப்பு,புளிப்பு, கைப்பு,உரப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவைகளுக்கு ஆச்ரயமானது; ஷட்ஜ, ரிஷப, காந்தார, மத்யம, பஞ்சம, தைவத நிஷாத சப்தங்கள் மனதின் தியானத்தால் 10 விதமாகின்றன. இது வெளுப்பு, சிவப்பு, கறுப்பு, சாம்பல்வர்ணம், மஞ்சள், கபிலம்,பாண்டரம் (வெளிப்புச்சிவப்பு) ஆகிய ஆறுகுணங்களோடு கூடியது.

ஒருவனுக்கு(தேவதத்தனுக்கு)பணம்முதலியவைகள் உண்டாகுங்கால் ஒருவிதமான சாந்தகுணத்தால் ஆறுவிதரஸங்கள்உண்டாகின்றன.இவைகளிலிருந்து, ரக்தம், மாம்ஸம், கொழுப்பு, நரம்பு, எலும்பு, உந்தண்ணீர், ரேதஸ் ஆகிய இவைகள் முறையேமுன்னதிலேயிருந்து பின்னதாக உண்டாகின்றன. ரேதஸ்ரக்தம் இவைகள் ஸம்பந்தத்தால் மாதாவின்வயிற்றில் கர்ப்பம் உண்டாகின்றது. ஒருநாளைக்குப் பிறகு இது கருவாயும், ஏழுநாளில் குமிழியாயும், இரண்டுவாரங்களில் பிண்டமாயும், ஒரு மாதத்தில் கடுமையாயும் மாறுகிறது. இரண்டாம் மாதம் தலையும், மூன்றுவதில் கால்களும், நான்காவதில் இடுப்பு முழங்கால், வயிறு முதலியவைகளும், ஐந்தாவதில் முதுகும், ஆறுவதில்

முகம் மூக்கு கண் காது முதலியவைகளும், எழாவதில் ஜீவனும்,எட்டாவதில் எல்லா லக்ஷணங்களும் உண்டாகின்றன.

தகப்பனுர் ரேதஸ் அதிகமாயின் பிள்ளையும், தாய் ரேதஸ் அதிகமாயின் பெண்ணுமாக அந்தக் குழந்தை ஏற்படும். இருவரதும் ஸமமாயின் நபும் ஸகனுகிவிடும். குழந்தை உண்டாகுங்காலத்தில் தம்பதிகள் மனம் துக்கமடைந்திருக்குமாயின் பிறக்கும் குழந்தைகளுக்குக் கூன், குருடு,முடம்,நொண்டி,குள்ளம் முதலிய குரூபங்கள் உண்டாகும். இருவருடைய வாயு பீடையால் ரேதஸ் இரண்டாகப் பிரிந்து விட்டால் இரட்டைப் பிள்ளைகள் உண்டாகும்.

பஞ்சபூத விகாரனுயும், பஞ்சஇந்திரியங்களை உடையவனுயும், சப்தஸ்பர்சாதி ஞானமுடையவனுயும்,கர்ப்பத்திலுள்ள குழந்தை அக்ஷரங்களுக்கெல்லாம் அக்ஷரமான பிரணவத்தை அப்பொழுது நினைக்கிறது. உடனே அதற்கு எட்டு ப்ரகிருதிகளும், 16 விகாரங்களும், சரீரத்தில் உண்டாகின்றன. பிறகு தாய் உட்கொள்ளும் உணவின் ரஸம் அதனிடம் போய்ச்சேரும் வழியாகிய தொப்புள் கொடியால் அதற்கு ப்ராணன் உண்டாகின்றது. பிறகு ஒன்பதாவது மாதத்தில் வரவேண்டிய லக்ஷணங்களெல்லாம் குழந்தைக்கு வந்துவிடுகிறது. உடனே முந்திய ஜன்மஸ்மரணம் உண்டாகிறது அப்பொழுது சுபாசுபகர்மங்களை நினைத்துக்கொண்டு, 'முன்னர் நான் எத்தனையோதரம் தாயின் கர்ப்பத்தை அடைந்து, ஆகாரம் கிரஹித்து, பிறந்து தாய்ப்பால் குடித்தாகிவிட்டது. எத்தனையோதரம், என்னைச் சேர்ந்தவர்களுக்காகச் சுபாசுப கர்யங்களை ஆத்தரத்துடன் செய்தாகிவிட்டது. வாழ்நாள் முடிவதுகூடத் தெரியாது எத்தனையோதரம் மரித்துமாகிவிட்டது. என் வினை என்னையே சுற்றி தனிமையாக இக்கஷ்டத்தை மறுபடி அனுபவிக்கும்படி செய்துவிட்டது. ஐயோ! துக்க ஸமுத்திரத்தில் விழுந்து கரை ஏற வகையறியாது தத்தளிக்கிறேனே! எனக்குத் துணைசெய்வார் ஒருவருமில்லையே! என்னைச் சேர்ந்திருந்தவர்களோ நான்செய்த கர்மங்களின் பலன்களை ஸுகமாகப் பெற்றுக்கொண்டு, இந்த ஸமயத்தில் என்னைத் தனியாகத் திண்டாட விட்டுவிட்டார்களே! என் செய்வது! இனியாவது பிறந்தவுடன் ஜாக்கிரதையாக விருந்து அசுபகர்மங்களை நீக்கி, மோக்ஷமடையும்படி செய்யும், சிவ கேசவர்களைச் சரணம் புகுவேன்; அல்லது ஸாங்கய யோகத்தை அப்யஸிப்பேன்; அல்லது சிறந்த பரம்பொருளை உள்ளபடி தியானித்து இத்துக்கத்திலிருந்து விடுபடுவேன்' என்று பலவாருக அக்குழந்தை மனோராஜ்யம் செய்கிறது.

இப்படி யிருக்கையில் வைஷ்ணவ (சட) வாயு யந்திரம் வேலைசெய்வதுபோலக் குழந்தையைத்தலைகீழாகப் ப்ரட்டியோனித்வாரம் வழியாக வெளிப்படுத்துகிறது. உடனே முற்கூறிய ஜனனமரண ஸ்மரணை இருந்தவிடம்தெரியாமல் பறந்தோடிப்போய் விடுகிறது. முன் பண்ணின தீர்மானமும் வீணுகிறது.

தேஹத்திற்குச் சரீரம் என்றொரு பெயர் உண்டு. ஞானுக்னி, தர்சனுக்னி, கோஷ்டாக்னி ஆகிய மூன்று அக்னிகள் தங்கி நிற்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. கோஷ்டாக்னி, உட்கொள்ளுபவைகளை ஜீர்ணிக்கும் ஜடராக்னி என்பதே: தர்சனுக்னி உருவத்தைத் தோற்றும்படி செய்யும் கண் ஸம்பந்தமான சக்தி. ஞானுக்னி, பகுத்தறிவை உண்டாக்கும் அறிவுருவாக விருப்பது. இவைகளுக்கு முறையை கார்ஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணுக்னி என்ற மூன்று பெயர்களும் உண்டு. இவைகளுக்கு முறையே வயிறு, முகம், ஹ்ருதயம் ஸ்தானங்கள்.

இவைகள் ஸம்பந்தமாக நடக்கும் யாகத்தில் ஆத்மாவே யஜமானன். மனஸ் ப்ருஹ்மா, காமக்ரோதாதிகள் பசுக்கள் தைர்யம் தீக்ஷை, ஸந்தோஷம் புத்தி, (ஞானே) இந்திரியங்கள் யஞ்ஞபாத்ரங்கள், கர்மேந்திரியங்கள் ஹவிஸ்ஸுக்கள், சிரஸ் கபாலம், கேசங்கள் தர்ப்பங்கள். முகம் அந்தர்வேதி, நான்கு கபாலங்களுடன் கூடியது சிரஸ். தேஹத்தில், 32 தந்தங்கள், 107 மர்மங்கள், 180 ஸந்திகள், 109 நரம்புகள், 700 நாடிகள், 500 உந்தணிகள், 300 எலும்புகள், 66 கோடி ரோமங்கள், ஹ்ருதயம் 8 பலம், நாக்கு 12 பலம், பித்தம் 1 மரக்கால், கபம் 2, ரேதஸ் 3, மதஜலம் 2 உண்டு. ஆஹாரத்திற்குத் தகுந்த மலமூத்ரங்களும் காணப்படும்.

## 20. சாரீரகோபநிஷத் (62)

பஞ்ச மஹா பூதங்களின் சேர்க்கையே சரீரம். இப்பூதங்கள் ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்பவைகளே.

1. ப்ருதிவி கடின ஸ்வபாவமுள்ளது. கந்தத்தை விஷயமாக உடைய மூக்கு; ஆனந்திப்பதைத் தொழிலாக உடைய உபஸ்தம்; அபிமானத்தைக் கார்யமாகவும், ஹ்ருதயத்தை ஸ்தானமாகவும் உடைய அகங்காரம்; எலும்பு, தோல், நாடிமயிர், மாம்ஸம் ஆகிய இவைகள் பூமி அம்சம். இதற்குச் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தமாகிய ஐந்து குணங்களும் உண்டு.

2. அப்பு நெகிழ்ச்சியான ஸ்வபாவமுள்ளது. ரஸத்தை விஷயமாக உடைய நாக்கு; மலஜலம் விடுதலைத் தொழிலாக உடைய பாயுரு; நினைப்பைக் கார்யமாகவும், நாபியை ஸ்தானமாகவும் உடைய சித்தம்; மூத்ரம், கபம், ரத்தம், சுக்லம், வேர்வை ஆகிய இவைகள் ஜலாம்சம், இதற்குச் சப்த ஸ்பர்ச ரூப ரஸமாகிய நான்கு குணங்கள் உண்டு.

3. தேஜஸ் உஷ்ண ஸ்வபாவமுள்ளது. ரூபத்தை விஷயமாக உடைய கண்; நடத்தலைத் தொழிலாக உடைய பாதம்; நிச்சயத்தைக் கார்யமாகவும் முகத்தை ஸ்தானமாகவும் உள்ள புத்தி;பசி,தாகம்,சோம்பல், மோஹம், மைதுனம், ஆகிய இவைகள் அக்கினி அம்சம். இதற்குச் சப்தஸ்பர்ச ரூபமாகிய மூன்று குணங்கள் உண்டு.



4. வாயு ஸஞ்சாரஸ்வாபவமுள்ளது. ஸ்பர்சத்தை விஷயமாக உடையதோல்; கொடுத்தலைத்தொழிலாக வுடையகை, அலைவதைக் கார்யமாயும், கண்டத்தை ஸ்தானமாயும் உடைய மனம்; நடத்தல், கிறுதல், கண்களை மூடுதல், திரத்தல் ஆகிய இவைகள் வாயு அம்சம். இதற்கு சப்த ஸ்பரசமாகிய இரண்டு குணங்கள் உண்டு.

5. ஆகாசம் இடங்கொடுக்கும் ஸ்வபாவமுள்ளது. சப்தத்தை விஷயமாக உள்ள காது; பேசுதலைத் தொழிலாக உடைய வாக்கு; (விரிவைக் கார்யமாக உடைய உள்ளம்); காமம் க்ரோதம், லோபம், மோகம், பயம் ஆகியஇவைகள் ஆகாசாம்சம். இதற்குச்சப்தமொன்றே குணம்.

முற்கூறியவைகளில் காது, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, கை, பாதம், பாயுரு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்குக் கர்மேந்திரிங்கள் என்றும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் (உள்ளம்) ஆகிய இவைகளுக்கு அந்தஃகரணம் என்றும் பெயர்.

**முக்குணங்கள்.**—ஸத்வ ரஜஸ் தமஸ்என்றவைகளே.

**ஸத்வம்.**—கொல்லாமை, ஸத்யம், திருடாமை, ப்ரஹ்ம சர்யம், பிறர்பொருள் விரும்பாமை, கோபமின்மை, குருவை வழிபடுதல், சுத்தி, ஸந்தோஷம், நேர்மை, தற்புகழ்ச்சி இன்மை, டம்பமின்மை, ஆஸ்திக்யம், தீங்குசெய்யாமை, பூர்ணஞானம் (ப்ருஹ்ம ஞானம்) ஆகிய இவைகள் ஸத்வஸம்பந்தமானவை. இவைகளை உடையவன் ஸ்வர்க்கத்தில் பிறப்பான்.

**ராஜஸம்.**—செய்பவன், அனுபவிப்பவன், அபிமானமுடையவன் என்ற எண்ணங்கள், தர்ம ஞானம் ஆகிய இவைகள் ராஜஸ ஸம்பந்தமானவை. இவைகளை உடையவன் பூமியில் வந்து பிறப்பான்.

**தாமஸம்.**—நித்ரை, சோம்பல், மோஹம், ஆசை, மைதுனம், திருட்டு, அக்ஞானம் ஆகிய இவைகள் தாமஸ ஸம்மந்தமானவை. இவைகளை உடையவன் நரகலோகத்தில் பிறப்பான்.

**அவஸ்தைகள்.**—10 இந்திரியங்கள், அந்தஃகரணம் இவைகளுடன் கூடி இருப்பது ஜாக்ரதாவஸ்தை (விழிப்பு). அந்தஃகரணத்துடனிருப்பது ஸ்வப்நாவஸ்தை (கனவு). சித்தத்துடனிருப்பது ஸுஷுப்தி (தூக்கம்) ஜீவனேடு இருப்பது துரீயம் (நான்காவது நிலை). இவ்வவஸ்தைகளுள் முதல் மூன்றிலும் இருக்கும் ஜீவாத்மா பரமாத்மாக்களுள் ஜீவனே க்ஷேத்ரஜ்ஞன். 10 இந்திரியங்கள் 5 ப்ராணன்கள், மனம் புத்தி ஆகிய பதினேழும் ஸூக்ஷ்மதேஹம், அல்லது லிங்க தேஹம். பஞ்சபூதங்கள்,மனம்,புத்தி,அகங்காரம் ஆகிய இவைகளுக்கு 8 ப்ருகிருதிகள் என்று பெயர். இங்குக் கூறிய இருபத்துமூன்றுக்கும் அப்பாலுள்ள அவ்யக்தத்தையும்விட சிரேஷ்டன் புருஷன். இது உபநிஷத்.

# வஸந்த மாளிகை
## VASANTHA MALIKAI
### அத்தியாயம் 5.
### காமக்கேடு—*The Evil of Lust*

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணேடாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றுன்.

—திருவிளையாடற்புராணம்.

வலபத்திரனும், ஸ்வாமியாரும், தர்மராஜனைத் தனிமையாய் முன் அறையில் இருக்கச் சொல்லி, ஸரஸ்வதீ மஹாலுக்குள் சென்றார்களென்று முன்னமே சொன்னேமல்லவா?

தர்மராஜன் தனது கருவிழிகள் படபடவென்று துடித்துக்கொண்டு அவ்வறையின் நாற்புறங்களையும் சுற்றிப்பார்த்தான். அவனுள்ளத்தில் ஓர்விதமான வெறுப்பும், வலபத்திரனைப் போன்ற அற்பர்களுடன் கொஞ்சகாலமாவது தனது ஆயுள் நாளில் ஸகவாசம் செய்ய நேர்ந்த தனது துர்பாக்கியத்தால் ஓர் வேதனையும் அவன் உள்ளத்தைப் புண்படுத்த ஆரம்பித்தன.

நிந்தையில்லாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவ
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். *

"ஆஹா! நல்ல ஸஹவாஸங்கள் பிடித்தாய்! பானுமதீ! உன் தந்தை யுன்மேல் பாராட்டி வந்த அன்புக்கு நல்ல பிரதியுபகாரஞ் செய்தாய்! உன் பேதமையால், பெண்களுக்குப் போணிகலனுய் விளங்கும் அச்சம், நாணம், மடமை, மாட்சி யென்னும் கற்புக்கு இன்றியமையாக் குணங்களைத் தவிர்த்து, ஐயோ! சண்டாளர் கைவசப்பட்டு, காமவலையிலகப்பட்டுத் துயர்வது உன் விதியோ! பெண்ணே! ஏகபுத்திரியான உன்னைக்கொண்டு தன் விருத்தாப்பிய காலத்தில் எவ்வளவோ இன்பமாய்க் காலங்கழிக்கலா மென்றிருந்த உன் தந்தையின் வயிற்றில் நெருப்பிட்டாயே! பேதாய்! முன் ஒரு காலத்தில் யான் உன்மீது காதல் கொண்டது உண்மையாயினும், இனி யான் உன்னை வேண்டேன்! துப்பின சோற்றை யாரெடுத்துண்பார்? ஆயினும் உன் தந்தையின் அன்னத்தை நான் புஜித்தவனுதலாலும், உன்னிடத்திலும் கொஞ்சகால

* நீதிவெண்பா.

மாவது அன்பு பாராட்டிய தோஷமும் துர்ப்பாக்கியமு முடையவனாதலாலும், எப்படியாவது உன்னை மீட்டி உன் தந்தையிடம் சேர்ப்பிப்பதே என் கடமை. ஆனால் என் மனத்திருந்தும் கொள்ளை போயின உன்னை மறுபடியும் நான்—"

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவ்வறையின் பக்கத்துக் கதவு மெள்ளத் திறக்கப்பட்டது. அவன் சிந்தை கலைந்து திடுக்கிட்டு அப்புறம் நோக்கினான். கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது போலத் தான் இதுவரை தேடிவந்த மாதைக்கண்டு கொண்டான். உடனே அவனுள்ளத்தி லுதித்த வெறுப்பினால் தன் ஆடையால் தன் முகத்தை மறைத்துக்கொண்டான்.

இந்நிலைமையில், மின்கொடி போல் துவளும் அழகிய சரீரமும், பொன்போன்ற மேனியும், சந்திரபிம்பம் போல் அழகிய வதனமும், கொவ்வைக் கனிபோல் சிவந்த அதரமும், அதிரூபலாவண்யம் வாய்ந்த பதினெண் வயதுள்ள ஓர் யௌவனமங்கை அக்கதவைத் திறந்ததும் "பிராணநாதா!" என்று காதல் மொழியால் ஸம்போதனஞ் செய்துகொண்டு மான்போல் துள்ளித் தர்மராஜன்மேல் பாய்ந்து அவனை யிறுகத்தழுவி மார்பின்மேல் முகம்பதித்து விம்மிவிம்மி யழஆரம்பித்தாள்.

இப்பரிதாபத்தைக்கண்ட தர்மராஜனும், தன்முகத்தை மூடியவாறே தானும் விம்மிவிம்மி யழுதான்.

உடனே அம்மாது அன்னவன் முகத்தை நோக்கி "என் உயிர்க்காதலா! என்னிடம் இவ்வாறு தமக்கு வெறுப்பும் நேரிட்டுவிட்டதோ? என்மேல் தாம் பாராட்டிய மெய்க்காதலைக் கொள்ளைகொள்ள வேறு மங்கையும் வந்துவிட்டாளோ. என் ஆசைநாதா! நீர் இவ்வாறு செய்வது தர்மமா? என்று தீனமானகுரலுடன், அவன் கைகளை முகத்தினின்றும் விலக்க,

தர்மராஜன்.—"ஐயோ! பானுமதி! ஐயோ! ஐயோ!" என்று தீனமான குரலுடன் விம்மி விம்மி யழ ஆரம்பித்தான்.

தர்மராஜனுடைய முகத்தைப் பார்த்ததும் அவன் குரலைக் கேட்டதும் பானுமதியின் மனநிலை நிமிஷ நேரத்தில் மாறிவிட்டது. உடனே திடுக்கிட்டுப் பின்னடைந்து, நெஞ்சும் மார்பும் படபடவென்று துடிக்க ஒன்றும் சொல்லத் தோன்றாதவளாய் தர்மராஜனையே நோக்கிய விழிகளுடன் சித்திரப்பாவைபோல ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

தர்மராஜனும் சற்றுநேரம் திகைத்து நின்றுவிட்டு, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடலாகாதே என்ற பயத்தால், தைரியப் படுத்திக்கொண்டு, அம்மங்கையை நோக்கி "பானுமதீ! நீ என் பயப்படவேண்டும்?" என்று தீனமாய்க் கூறினான்.

பானுமதீ.—"உன்னிடத்தில் ஒருவித பயமுமில்லை! தர்ம! உன்னிடத்தில் எனக்கு என்ன பயம்! சரி அது இருக்கட்டும்! நீ என் இவ்வாறு என் அந்தப்புரத்தில் பிரவேசித்தாய். உன்னை இங்கே யார் அழைத்தார்?"

தர்மராஜன்.—"உன் அந்தப்புரம்! ஐயோ! இச்சிறைச்சாலை உனக்கு அந்தப்புரமாகவா விளங்குகின்றது. ஐயோ! இச்சிறைச்சாலையில் ஓர் கொடிய பாதகன் வசத்துக்குட்பட்டு.—"

பானுமதீ.—"தர்ம! இது என் அரண்மனை. என் இஷ்டப்படிதான் நான் இங்கே ஏகாந்தமாய் வஸித்து வருகின்றேன். இதற்கு ஆட்சேபிக்கத் தக்கவன் எவன்?"

தர்மராஜன்.—உன்னைப் பெற்ற—"உன் தகப்பனார் வயிறெரியச் செய்தாயே—அப்படிப்பட்ட உன் தகப்பனார், உன்னைத் தேடிவருமாறு அதிகாரத்துடன் என்னை யனுப்பியிருக்கிறார். அவர் வெளியேறக்கூடாத நிலைமையிலிருக்கின்றார். பார்த்தாயா இந்தக் கடிதத்தை? அவர் மனம் பிரிந்து தவிக்கும் நிலைமையில் கண்ணும் கண்ணீருமாய் இதை எழுதியிருக்கின்றார். அவர் அவஸ்தை—"

பானுமதீ.—"அவஸ்தை! அப்படியானால் என் தகப்பனார் வியாதியால் வருந்துகின்றாரா?"

தர்மராஜன்.—"ஆமாம் பெண்ணே! ஆமாம்! நீ வேகமாய்ச் சென்றாலும், அவரை உயிருடனாவது பார்க்கக்கூடுமோ வென்பது ஸந்தேகம். அவ்வளவு அபாய நிலைமையிலிருக்கின்றார். பெண்ணே! சீக்கிரம் புறப்படு. உடனே அழைத்துச் செல்லுகின்றேன்!"

பானுமதீ.—"தர்ம! நான் அவ்வளவு திடீரென்று புறப்பட முடியாது. அப்படிச் செய்யவும் மாட்டேன். இவ்விடத்தினின்று திடீரென்று வெளியேற துணியவும் மாட்டேன். தர்ம! ஆகையால், என் தந்தையிடம் சென்று, நான் உத்திரவுபெற்று, இன்னும் 30 நாழிகைப் பொழுதில் அவரை வந்து பார்ப்பதாக அவரிடம் சொல். தர்ம! சீக்கிரம் புறப்படு! நான் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருப்பதாகவும், அவர் எண்ணிய எண்ணத்துக்கு மேலான பதவியிலேயே நான் இருப்பதாகவும் சொல். தர்ம! நீயும் என்னை மன்னித்துக்கொள்! கொஞ்சம் மனவருத்தம் உண்டு பண்ணி விட்டேன்! என்ன செய்யலாம், தெய்வ ஸங்கல்பம், நான் உன்னிலும் உயர் பதவியடைந்து வாழ எனக்குப் பாக்கியமிருக்கின்றது. தர்ம! வருத்தப்படாதே! நான் சிறுவயது முதல் உன்னிடம் பழகிய அன்புக்கு ஒருவிதத்தாவில்லாத போனாலும், வேறு பலவிதமாய் உனக்கு உதவிசெய்து, உன்னை நல்ல நிலைமையில் நாட்ட எனக்குச்சக்தியுண்டு.—

தர்மராஜன்.—பானுமதி! என்னைப்பார்த்து இவ்வார்த்தைகள் சொல்ல நீ எவ்வாறு துணிந்தாய்! பானுமதி, நீ ஆயிரஞ் சொன்னாலும், உன்னால் என் மனம் நொந்த புண் ஆறுமா? ஒருநாளுமில்லை. ஏதோ நான் உன் தயவுக்கு வந்திருப்பதாக எண்ணாதே! உன்னுடைய நன்மைக்காக, உன்னைக் காப்பாற்றும் பொருட்டு வந்திருக்கின்றேன். நீ இப்பொழுது ஓர் கைதியாயிருக்கின்றாய், இல்லாவிட்டால், என் வார்த்தைகள் காதில் விழுந்ததும், பறந்தோடி உன் பிதாவின் பாதத்தில் விழமாட்டாயா? பேதாய்! துரதிருஷ்டம் பிடித்தவளே! உடனே புறப்படு. என் நன்மைக்காக நான் சொல்லவில்லை. உன்னை அப்பொழுதே வெறுத்து விட்டேன். போனதுபோகட்டும் உன் தகப்பனாரை உயிருடனாவது கண்டு, அவர் பாதங்களில் வீழ்ந்து, நீ செய்ததெல்லாம் பிசகென்று அவர் மனதை ஆற்றி, அவரிடம் மன்னிப்பும் ஆசீர்வாதமும் பெற்றுக்கொள்.

பானுமதீ.—"தர்ம! நான் அப்பொழுதே சொல்லவில்லையா? கட்டாயம் வந்துவிடுகின்றேன். எனக்கு உத்தரவு கிடைத்ததும்—"

தர்மராஜன்.—"உத்தரவு! உன்னுடைய தகப்பனாரை, அவர் மாணாபாய நிலைமையில் இருக்கையில்—உன் தகப்பனாரைப் பார்க்க—உத்தரவு! எந்தச் சண்டாளனிடம் நீ பெறவேண்டும். உன் தகப்பனிட்ட அன்னத்துக்குத் துரோகம் நினைத்து, உன்னையும் அபகரித்துச் சென்று, உன் தகப்பனாருடைய மனதையும் பிளக்கச்செய்த அச்சண்டாளனிடத்தா.—"

பானுமதீ.—"தர்ம! இனி இவ்வாறு பிதற்றாதே. பெரிய இடத்துக் காரியம். நீர் நிந்திப்பது யாரையென்று அறிவாயா? தலைபோய்விடும். பத்திரம்! நான் இட்ட கட்டளைப்படி செய் இனிமேல் அனுப்புவதானால் உன்னைத் தவிர வேறு ஒருவனைத் தூதனாய் அனுப்பச் சொல். உடனே வெளியே சொல்!"

தர்மராஜன்.—"பானுமதீ! இதற்கெல்லாம் நான் அஞ்சினவனல்ல! இருக்கட்டும்! ஒருவிஷயம் மாத்திரம் சொல். உனக்கு இப்பொழுது உத்தரவுஅளிக்கத் தக்கவன் உன் கணவன் ஸ்தானத்திலா அல்லது—"

பானுமதீ.—"துஷ்டா! இனி இவ்வாறு மரியாதைக் குறைவாய்ப் பேசாதே! நான்—"

தர்மராஜன்.—தெரிந்தது அறிந்துகொண்டேன் பானுமதி! நீ இந்நிலைமைக்கு வரும்படி உன் தலையிலும் எழுதியிருக்கின்றது பார்த்தாயா? நீ என்ன சொன்னாலும் சரி! உன்னை இச்சிறையினின்றும் மீட்டி, உன் தகப்பனாரிடம் சேர்ப்பிப்பதற்கு, ராஜஸாஸனம் பெற்றிருக்கின்றேன். இதோ பார்!

பானுமதீ.—"தர்ம! சும்மா பயமுறுத்தவேண்டாம். உன்னை இப்பொழுதே வெளியேற்ற எனக்கு அதிகாரமுண்டு—"

தர்மராஜன்.—"ஒருவராலும் முடியாது. நீ செய்யும் தொழிலோ கெட்ட தொழில். நானே அதிகாரம் பெற்றிருக்கின்றேன். பானுமதி! நீ காம வலைக்குட்பட்டு, மயங்கி காமப் பிசாசால் பிடிபட்டிருக்கிறாய். அப்பிசாசை இப்பொழுதே ஓட்டிவிடுகின்றேன் பார். உன் தகப்பனார் கொடுத்த அதிகாரத்தை முன்னிட்டு, உன்னை இப்பொழுதே புறப்படும்படி ஆக்ஞாபிக்கின்றேன். புறப்படுகிறாயா? இல்லையா? இவ்வாறு அதிகாரத்துடன் கம்பீரமாய்க் கர்ஜித்துக்கொண்டு தர்மராஜன் பானுமதியின் கிட்ட நெருங்கி அவள்கைகளை எட்டிப் பிடித்தான். உடனே அவள் திடுக்கிட்டுத் திகிலடைந்து கைகளைத் திமிறிக்கொண்டு பின்னடைந்து "ஐயோ! ஐயோ!" என்று கதறவே, அச்சத்தத்தைக் கேட்டு வலபத்திரனும் ஸ்வாமியாரும், விரைந்தோடி வந்து சேர்ந்தார்கள். (தொடரும்)





# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

### 3-வது அங்கம்

களம்-1—மலையமலையில் ஓர் உய்யான வனம்

(விசித்திரமான பலவர்ணமான உடைதரித்து தடுமாறி குடிவெறியோடு விடனும், மதுபாத்திரத்தோடு சேடனும் வரல்)

விடன்.—(சந்தோஷத்துடன்)

ஒழியாக் கள்குடிப்பான்—கயல்
விழியுடை காதலித்தனைக்கலந்து
கூடிக் குலாவிடுவான்—இவர்
இருவரு மேபரம் பொருளறிவீர்
காக்குந் தெய்வமவர்—பல
தேவனு காமத்து தேவனெனு
அவர்தம் பெயர் கண்டாய்—
(தள்ளாடிக்கொண்டு)

இன

சேகரா எனதா கத்துயிர்
பலன்கண் டிடுங்கண்டாய்—கரு
விழியுடைக் காதலி யெழிலுருவின்
நுழைந்தாள் என்மனத்தே—கருந்
தாமரை யோடுவெண் மாமதுவும்
வாயோ மணம்வீசும்—எழில்
வாச மலர்கண்ணி நேசித்தென்றன்
தலையோ மிலைதருமால்—மன
சேகர கன்எனு நாகரிகன்
அதன்மேல் வாழ்பவனும் (தடுமாறுதல்)

யாரடா அது? என்னை-பிடிச்சு-தள்றது? (ஸந்தோஷத்தோடு) ஆமாம்! ஆமாம்! அவெத்தான்! நோமாலைத்தான் எங்கிட்டெ பரிகாசம் பண்றா!

சேடன்.— அப்படிக்கில்லெங்கோ! ஆண்டே! நோமாலை இன்னமிங்கே வரக்காணலயே?

விடன்.—(கோபத்தோடு) இன்னெ ராவு பகல் மொதல் ஜாமத்தே யல்லவோ மலையதிம்மா கலியாண திருழா தடபுடலா நடந்துட்டது. அடே கிளக்கு வெளுத்துட்டது! இன்னம் அவளெ வரக் காணலயே! (ஸந்தோஷத்துடன்-யோசித்து) ஆமாங்கரே! இந்த மலையதிம்மா கலியாணத்லே வரப்பட்ட மனிசான்! அந்த சித்த விஞ்சாதஆ அவங்கவங்க ஆசை கண்ணாட்டிங்களோடே இந்தப் பூஞ்சோலையிலே குடிச்சு

கிட்டு குஷாலாக கூத்தாடிக்கிண்ணு இருக்கருங்கோ. நோமாலை அங்கெயெத்தான் என்னை வரப்பாக்ரா போலெ இருக்கு; நாங்கூட அங்கெத்தான் போறேன். நவ்மாலை இல்லாட்டா சேகரம்யாதுக்கோ?

(தள்ளாடி நடக்கிருன்)

சேடன்.— இதோ வழி! ஐயா! பூஞ்சோலை இங்கிருக்கு, ஐயா, உள்ளே போமே.

(இருவரும் சோலையுள் நுழைதல்)

விதூஷகன் ஒரு சதை வேஷ்டியை தோளிற் கட்டிக்கொண்டு வரல்.

விதூஷகன்.—நான் இன்றைக்கு என் நேசன் உத்தியான வனத்திற்குப் போகப் போகிறதாகக் கெள்விப்பட்டேன். ஈனும் அங்குப் போகிறேன். (முன் நடந்து, உற்று நோக்கி) இதுதான் உத்தியான வனம். இதற்குள் நுழைகிறேன்—(உள் நுழைந்து, தேனீக்களால் தொந்தரை அடைந்தாற்போலக் காட்டிக்கொண்டு) அகோ! இந்தப் பாழும் மதுகராள் என்மேல் ஏன் இப்படி விழுகிருர்கள்.—(தனது உடம்பின் வாசனையைக் கவனித்து) ஆமாம்! எனக்கு நன்ருகத் தெரிகிறது! தமது மருமகனுடைய ஆத்மநேசன் என்று அறிந்த மலையவதியின் பந்துக்கள், வாசனைப் பூச்சுகளை.என் உடம்பில் லேபனம் செய்து இருக்கிருர்கள். ஸந்தான சேகரகம் என்னும் மாலையையும் என்தலைமேல் சூட்டி இருக்கிருர்கள். அவர்களுடைய பெரும் விதரணை எனக்குப் பெருந்தொல்லைக்கிடம் கொடுத்து விட்டது. நான் இங்கு இனி என்ன செய்வது? இல்லாவிட்டால் ஒன்று செய்கிறேன். மலையவதியிடம் பெற்ற இந்த இரண்டு சிகப்பு வஸ்திரங்களைக்கொண்டு பெண் வேஷங் கொண்டு மேலாடையால் முகத்தை மறைத்து முட்டாக்கிட்டுக்கொண்டு போவேன். அப்போது இக்கொடும் மதுகரங்களால் என்னசெய்ய முடியும்.

விடன்.—(ஸந்தோஷத்துடன்-நோக்கி) இதோ பாரடா! சேடா! (சுட்டிக்காட்டி - சிரித்துக்கொண்டு) அதோ என்னை பாத்துக்கிண்டு வராளே அவோத்தான் நோமாலை; நான் வருகரத்துக்கு நேரமாய்டுன்னு மூஞ்சை மூடிக்கிட்டு போரு பாத்தியா! நான் அவொளுத்தை. கட்டிக்கிண்டு அவோகோபத்தைத் தணிக்கிறேன்(பரபரப்புடன் ஓடிவந்து விதூஷகனைக் கட்டிக்கொண்டு அவன் வாயில் தம்பல உமிழயத்திரிக்கிருன்)

விதூஷகன்.—(கள்வாசனை மோந்து) சீச்சீ! தடியா சே! போடா அன்னண்டே! (மூக்கை பிடித்துக்கொண்டு மறுபுறம் பார்த்து-தனக்குள்) மதுகரங்களைத் தப்பி வந்தேன்! அடே என்ன இந்து மதுகரங்கள் கையிலகப்படவா அப்டிச் செய்தேன்?

விடன்.—அடே! கோபத்தோடே என்ன முறிக்கிக்கிரு! ஸரி அவள் காலிலே விளுந்து கெஞ்சிக்கிறேன் (அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தல்) நோமாலை கோபியாதடி! கோவம் வாண்டாம்! மனஸை ஸரிபடுத்திக்கோ!

(தாதிவரல்)

தாதி.—அரசி மலையவதியின் தாயால் இவ்வாறு ஆணையிடப்பட்டிருக்கிறேன்.—"நவமாலிகே! நீ உத்தியான வனம் சென்று, என் மருமகன் மலையவதியோடு அங்கு வருவன் ஆசையால் தாமலசாலையை நன்ருக அலங்கரித்துவைக்கத் தோட்டக்காரன் பல்லவிகனுடன் சொல்." நான் பல்லவிகனுக்கு அவ்வாறேசொல்லி இருக்கிறேன். இரவுமுழுதும் என்னைப் பிரிந்ததால் வருத்தமடையும் என் நேசன் சேகரகனை இனி அடைவேன். (உற்று நோக்கி) இதோ இருக்கிருன் சேகரகன் (கோபத்தோடு) அவன் யாரோ வேறு ஸ்த்ரீயையல்லவா ஸந்தோஷப்படுத்தப் பார்க்கிருன். இங்கையே நான் இருந்து அவள் யாரென்று கவனிப்பேன்.

விடன்.—(ஸந்தோஷத்தோடு)

வணங்கா முடியனிவன்—சிவன்
அரியயன் யாரையும் அடிபணியான்
பெயரால் சேகரகன்-கயல்
விழிநோ மாலைநின் கழல்தலைமேற்
கொண்டா னிதுகண்டாய்—

விதூஷகன்.—அடே! அஸத்து! மரியாதை கெட்டப்பயலே! குடிவெறியா! நோமாலை இங்கு எங்கடா இருக்கிருள்.

தோழி.—(நோக்கி-சிரித்துக்கொண்டு) என்ன! மதிமயங்கி, ஒன்றும் தெரியா அந்த ஆத்ரேயனைப் பிடித்து என்ன பாடுபடுத்துருன். கள்ளுண்ணும்படி வெருட்டுகிருன். நான் கோபங்கொண்டவள்போலக் காட்டி இவ்விரண்டு பேரையும் பரிஹாஸப்படுத்துவேன்.



# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULLYSES

(தொடர்ச்சி).

உதயமானவுடன் கிரேக்கர்களில் இரண்டுபேரை அடித்துத் தின்று ஆட்டுப்பாலை வயிறுநிரம்பக் குடித்துவிட்டு ஆடுகளை வெளியிலோட்டிப் போகையில் வாசற்கல்லைத் துரும்புபோலெடுத்துப்போட்டுத் தானும் ஆடுகளும் வெளி வந்தபின் கல்லை யெடுத்து வாயிலை ராக்ஷஸன் மூடிவிட்டான். உல்லாஸனும் அவனுட்களும் சிறையிலடைபட்டவர்கள் போலானுர்கள். ராக்ஷஸனோ உற்சாகமாகச் சிட்டியடித்துக்கொண்டு மேய்ச்சல் நிலத்திற்கு ஆடுகளை ஓட்டிக்கொண்டு போனுன்.

உல்லாஸனை உலகமறியாத சிறு குழந்தையாகத்தான் ராக்ஷஸன் எண்ணியிருக்கவேண்டும். உல்லாஸன் புயவலியினும் புத்திவலியில் எல்லோரினும் மேம்பட்டவனென்பது ராக்ஷஸனுக்குத் தெரியாது. குகையிலடைபட்டிருக்கையில் உல்லாஸன் ஒரு யுக்தி செய்தான். ராக்ஷஸன் கொணர்ந்திருந்த விறகு கட்டையொன்றை யெடுத்து அதன்முனையைச் சுட்டுக் கூர்மை பண்ணித் தன்னுட்கள் அதை வைத்துக்கொண்டு செய்யவேண்டுவது என்னவென்று அவர்களுக்குச் செவ்வையாய்க் கற்பித்திருந்தான். பொழுதுபோனவுடன் ராக்ஷஸன் குகைக்கு ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தான். வழக்கத்துக்கு விரோதமாக அன்றிரவு ஆண் ஆடுகளையும் உள்ளே ஓட்டிவந்தான். இதுவும் தெய்வத்தின் செயலென்பது பின்பு விளங்கும். உள்ளே வந்தவுடன் கிரேக்கர் இருவரைப் பிடித்துத்தின்று ஆட்டுப்பாலைக் குடித்துப் படுக்கப்போகுமுன்னே உல்லாஸன் ராக்ஷஸன் ஸமீபத்திற்போய், "இரண்டு மனிதர்களுடைய மாம்ஸம் உன் இரைப்பையிற் சேர்ந்திருக்கின்றது. அது ஜீரணமாவதற்கு நான் கொடுக்கும் மதுவைப் பானம் பண்ணு. அப்படிச் செய்தபின் எங்களூர்ச் சாராயத்தின் மகிமையை நீ அறிவாய. நீ எனக்குச் செய்யவேண்டிய கைம்மாறு மிகுந்தவர்களை ஹிம்ஸை செய்யாமல் விடலாம். உன் வீட்டிற்கு வந்த விருந்தினர்களை அருந்திவிடுவாயானுல் உன்னைத்தேடி எவர் வருவார்?" என்று சொல்லி ஒரு பாத்திரம் நிறைந்த மதுவைக் கொடுத்தான்.

ராக்ஷஸன் மதுவை ஆவலோடு வாங்கிப் பருகி இன்னும் வேண்டுமென்று மதுவைத்திருந்த தோற்பையினருகே நகர்ந்தான். தனக்குப் பேருதவி செய்தவனென்று உல்லாஸனைப் புகழ்ந்தான். "உட்கப்படாஅரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங் கட்காதல் கொண்டொழுகுவார்" என்று பெரியோர் சொன்னது பொய்யாகுமா? குடிவெறியில் மனவெழுச்சியுண்டாகி ராக்ஷஸன், "கிரேக்கரை, நீர் யார்? இவ்வளவு ருசியான மதுவை யென்றும் நான் பருகினதில்லை. எங்களூரில் திராக்ஷப்பழம் மிகுதிதான். ஆயினும் உங்களூர் மதுவைப்போல மாதுர்யமான பானத்தை எம்மனோர் செய்ததேயில்லை. உம்முடைய பெரைச் சொல்வீராயின் உமக்குத்தக்க ஸன்மானஞ்செய்வேன்," என்ருன்.

உல்லாஸன் ஸமயோசிதமாய்ப் பேசத் தெரிந்த சாதுர்யவானுகையால் ராக்ஷஸனை நோக்கி, "எனக்குப் பெயர் நமன் எங்களூரார் என்னை நமனென்றுதான் அழைப்பார்கள்." கள்மயக்கத்தில் ராக்ஷஸன், "நமனுக்கு நான் செய்யும் பிரதியுபகாரம் இதுதான். மற்ற ஆட்களைத் தின்றுனபின் நமனைத் தின்பேன். இது தக்க கைம்மாறல்லவா?" என்று சொல்லிக்கொண்டேலாகிரியால் தூக்கம்வந்து பிணம்போற் கிடந்தான்.

ராக்ஷஸன் மெய்ம்மறந்து குறட்டைவிட்டுத் தூங்குஞ் சமயம் பார்த்து, உல்லாஸன் தன்னுட்களைத் திடம்பண்ணி கூர்மைபண்ணின விறகுகட்டையை நெருப்பில் பழுக்கக் காய்ச்சிப் பலபீமன் நெற்றிக் கண்ணைத் தொளைக்கும்படி வைத்தழுத்தவே, ராக்ஷஸன் கண்ணிலிருந்து புகைக்கிளம்பி கண் புண்ணுகிப் பொட்டையாயிற்று. உல்லாஸனுடைய தைரியத்தையும் யுக்தியையும் என்னென்று சொல்வோம்!

கண்ணிலுண்டான வலியால் ராக்ஷஸன் எழுந்து இடி முழக்கம்போல் அலறினுன். உல்லாஸனும் அவனுட்களும் மூலைக்கு மூலை போயொளித்துக் கொண்டார்கள். ராக்ஷஸன் கண்ணிற் புதைபட்டிருந்த விறகு கட்டையைப் பிடுங்கி வெறிகொண்டவன் போலெறிந்தான். இவன் நள்ளிரவில் ஓலமிட்டதைக் கேட்ட கீக்லாப்பர் ஓடிவந்து வாயிலில் நின்று "பலபீமா, உனக்கு என்ன ஆபத்து வந்தது? நீ யேன் அலறுகின்ருய்? நரன் எவனுலாவது உனக்குத் தீங்கு ஸம்பவித்ததோ? எவர் வஞ்சனையினுல் நீ துன்பமடைந்தாய்?" என்று கேட்டதற்கு ராக்ஷஸன், "நமன் என்னை வருத்திக் கொலைசெய்கின்ருன். என்னுடன் நமனிருக்கின்ருன்" என்று மறுமொழி சொல்ல, மற்ற கீக்லாப்பர், "நமனே உன்னிட மிருப்பானுயின் நாம் செய்யக்கூடிய தொன்றுமில்லை. நமன் செய்தாலும் தெய்வஞ் செய்தாலுமொன்றே. எங்களாலுனக்காகக் கூடியதொன்றுமில்லை. எங்கள் தூக்கத்தை நீ அலறிக் கெடுத்ததுதான் பலன். நாங்கள் வீட்டிற்குப் போகின்ரும்," என்று கூறிவிட்டு அவரவர் ஸ்தானத்திற்கு ஊரார் சென்ருர்.

கெ. வெங்கட்ராமய்யர், பி.ஏ.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## வியாஸ விதானம்
## Essay writing
### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
### REFLECTIVE ESSAYS
### 3. விரிவுவிளக்கம்:—

*உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்
தேர்க்கச்சாணி அன்னார் உடைத்து.* [தேர்க்

Expansion of thought :—Things are not what they seem

குறிப்பு:—பொருள் முதலியன—மேற்கோள்களும் பயனும்—உதாரணங்கள்—மதவிஷயப் பொருத்தம்—கதை.

இக்குறள் அங்க வியல் வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தில் காணப்படுகிறது மந்திரியின் லக்ஷணங்களைக் கூறி வருங்கால் வினைசெய்யும் திறன் வெளித் தோற்றத்தால் மாத்திரம் மதிக்கத்தக்கதல்ல; பார்வைக்குச் சிறியனாகத் தோற்றினும் திறமையில் சிறந்தவனாக விருக்கலாம் மந்திரி என்று கூறப்புகுந்த விடத்து அமைந்துள்ளது இக்குறள். உருளும் பெரிய தேரை அச்சாணி சிறிதாயினும் எவ்வாறு திடமாக விருந்து காக்கின்றதோ அவ்வாறு திறமைவாய்ந்து உருவிற் சிறியவராயினும் காரியத்தில் புலிகள் போன்றவரை உடையது இவ்வுலகம். ஆதலால் தோற்ற இழிவைக் கண்டு எவரையும் இகழலாகாது என்பது இக்குறளின் பொருள். நாம் உலகில் பழகிவருங் காலத்து அநேகரைக் காணும்படி நேரிடும். அவர்களுள் தோற்ற மாத்திரத்தில் கம்பீரமாக விருப்பவரைக் கண்டதும் நமக்கு அவர்கள் விஷயத்தில் ஒருவித நல்லெண்ணமும், அவ்வாறில்லாது சாதாரணமாகத் தோற்றுபவர் விஷயத்தில் ஒருவித வெறுப்பு அல்லது அனாதரவும் உண்டாவது இயற்கை. இவ்வாறு உண்டான போதிலும் இதை மேல் ஓங்கி நமது அபிப்பிராயத்தை நிலைபெறச் செய்யும்படியாகவும், இதற்கேற்ப அவர்கள் விஷயத்தில் நடந்து கொள்ளும்படியாகவும் செய்யவொட்டாது தடுக்க வேண்டும் புத்திமான்கள். இம்மாதிரியாக வெல்லாம் மேற்காரியங்கள் நடத்துவதற்கு முன்னர் நம் எதிரே தோன்றுபவர்கள் நடத்தை விஷயங்களை நன்கு விசாரித்து உணர்ந்து பின்னர்தான் முதல்தோன்றிய எண்ணத்தை வற்புறுத்தவாவது மாற்றவாவது வேண்டும். அதுவரையில் முதல் எண்ணத்தைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு நடுநிலையில் இருக்கவேண்டும் என்பதே இக்குறளின் கருத்து. இவ்வாறு மனதை நடுநிலையில்வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பதைத் திடப்படுத்த தேரின் அச்சாணியின் உபமானத்தைக் காட்டியிருக்கிறது. இதன்படி உருவிற் சிறியாரைக்கண்டு ஆராயாது இகழலாகாது என்பதுமாத்திரம் இக்குறளின் பொருளாயினும், இதனோடு சம்பந்தப்பட்டதாயுள்ள 'உருவின் பெருமைக் கண்டு மோசம் போகலாகாது' என்பதையும் பொதுவாக ருவிக்கப்பட்டது. அறிவுடைய மந்திரி விஷயமாகக் கூறியதால் ஒரு வழியாகக் கூறி நிறுத்திய குறளைப் பொதுவாகப் பொருள் படுத்துங்கால் அதனோடு ஸம்பந்தப்பட்ட எதிர் விஷயத்தையும் இங்கு சேர்த்துக் கூறியுள்ளது.

இந்த விஷயத்தை மற்றைய கவிகளும் நன்கு எடுத்து ஆண்டிருக்கின்றனர். ஔவை மூதுரையில்

மடல்பெரிது தாழை, மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்

என்றும், அதிவீரராமபாண்டியன் நறுந்தொகையில்:—

தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே;
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப்புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே;

(ஆதலால்)

பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாஞ் சிறியரு மல்லர்
பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்

என்றும், இதுபோல மற்ற கவிகளும் அநேகவிதமாக இக்கருத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இதுவும் அன்றி நமது பேச்சிலும் ஸாதாரணமாக இக்கருத்து பழமொழி ரூபமாக வழங்கியும் வருகிறது. அவன் என்னடா 'பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி போலிருப்பவன்' என்றும், 'வெளுத்ததெல்லாம் பாலாகுமா, கருத்ததெல்லாம் தண்ணீராகுமா' என்றும் நாம் ஸாதாரணமாகக் கூறுவது இக்கருத்தையே அடக்கியுள்ளது. ஆகவே இம்மாதிரியான விஷயங்களை உணர்ந்த நாம்இவ்வுலகில் பழகுங்கால் எந்தப் புற்றில்எந்தப் பாம்பிருக்குமோ என்று எண்ணி ஜாக்கிரதையாக விருப்பது போல எந்த உருவத்துடன் சிறந்தவர்களிருப்பார்களோ என்று கவனித்தே ஒழுகவேண்டும்.

இந்த விஷயத்தில் புராணாதிகளிலிருந்து உதாரணங்கள் கொடுக்கலாம். போஜராஜன், தன் ஸபையில் வந்திருந்த தாய் தகப்பன் பிள்ளை நாட்டுப்பெண் என்ற இவர்களாலாகிய கவி குடும்பத்தை நோக்கி 'பெரியோர்களுக்கு க்ரியாஸித்தி அவர்கள் ஸத்வத்தால் ஏற்படுவதே ஒழிய கருவிகளால் அல்ல' என்ற கருத்துடைய ஒரு அடியைக் கொடுத்துச் சுலோகத்தை முடிக்கும்படி சொல்ல, அவர்கள் முறையே அகஸ்தியர், ஸூரியன், ஸ்ரீராமர், மன்மதன் ஆகிய இவர்களைச்சொல்லி, இவர்களுக்கு ஸஹாயம் அதிகமாக இல்லாவிடினும் இவர்கள் பெரிய காரியஸித்தி பெற்றுத் தம்மைக் கண்டு இகழ்ந்த விரோதிகளையும் அடக்கி யிருக்கின்றனர் என்றார்கள். இதுபோலப் புராணங்களில் தர்மவான்கள் மிகக் கஷ்டப்பட்டு முடிவில் ஈச்வரகிருபையால் வெளியேறி தமது வலிமையை வெளியிட்டுச் சிறப்புற்றோங்கினர் என்று காட்டியிருக்கின்றனர் நம்முன்னோர்.



மதவிஷயத்தில் இந்தக் குறளுக்கு நல்ல பொருத்தம் உண்டு. கர்மங்களை ஞானத்தழல் சுட்டு வெண்ணீராக்கும் என்பது மதவிஷயத்துணிபு. பஞ்சுப் பொதிகள் எவ்வளவு பெரிதாக விருப்பினும் அவைகளை எல்லாம் மிகச்சிறிதான நெருப்புப் பொறி சாம்பலாக்கி விடுவதுபோல ஞானம் உள்ளபடி பிறந்தஉடன் கர்மங்கள் எவ்வளவிருப்பினும் அவைகளை இருந்தவிடம் தெரியாமல் பறக்கடிக்கும். இதுபற்றியே குருவைச் சிறியவர் என்றும், சிஷ்யர்களைப் பெரியவர்கள் என்றும் தக்ஷிணாமூர்த்தி விஷயத்திலும், இளங்குழந்தையான ஸுப்ரஹ்மண்யர் மிக வயதுசென்ற வரபலமுடையவரான சூரபத்மாதியரை அழித்துவிட்டதாக ஸ்காந்தத்திலும் கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஞானிகள் பாலர், உன்மத்தர், பிசாசுகள் போலவும், சாம்பல்பூத்த நெருப்புப் போலவும், ஸாதாரண ஜனங்கள் போலவும் இருப்பார்கள் என்று வேதமே கூறும். ஆகவே ஞானத்தின் மேன்மையை உணர்ந்து பெரியோரை அடுத்து வீடு என்னும் பரமபுருஷார்த்தத்தை அடைய விரும்பும் அப்பியாஸி 'உருவுகண் டெள்ளாமை வேண்டும்.'

இக்குறள் விஷயத்தை நன்கு விளக்கி, இதற்கு விரோதமாக நடந்தால் வரும் கேடு இத்தன்மையது என்பதைக் காட்டுவது ஸ்ரீமத் பாகவதம் 8-ம் ஸ்கந்தத்திலுள்ள மஹாபலி கதையே. மஹாபலியின் வலியை அடக்கித் தேவதைகளுக்கு உதவிபுரியும் பொருட்டு மஹாவிஷ்ணு வாமன உருக்கொண்டு அவனிடம் ஒரு யாக ஸமயத்தில் சென்று தம் காலால் மூன்றடிமண் வேண்டுமென்று யாசித்தார். 'என்னிடம் வந்து இதுதானா உமக்குக் கேட்கத் தோன்றியது! என்னிடம் எவ்வளவோ விலையுயர்ந்த பொருள்கள் உள. அவைகளில் எதையாவது கேட்கலாகாதா? பூமிதான் அதிகம் வேண்டுமென்று கேட்கலாகாதா' என்று பலவாறாக மனக்குறைப்பட்டுக் கொண்டு வாமனமூர்த்தியின் உருவம், அவர் யாசகத்தின் அளவு இவைகளை உணர்ந்து இவ்விஷயத்தை ஒரு பொருட்டாக மதியாது தானம் செய்துவிட்டான். இதனால் பின்னர் அவன் ராஜ்யம் முதலியவைகளைப் பறிகொடுத்து இவ்வுலகைவிட்டுப் பாதாள உலகம் போகும்படியும் நேரிட்டது. ஆகவே தோற்றத்தைக் கண்டு அம்மாத்திரத்தில் ஒருவிதமாகத் தீர்மானம் செய்து நாம் தொழில் தொடங்கிவிட்டால் நமக்கு எப்படியும் முடிவில் அபாயம் வரும் அல்லது நமது காரியம் கைகூடாமல் போய்விடும், என்பது இதிலிருந்து வெளியாகும்.

### போதக் குறிப்புகள் :—

1. பொருள் முதலியன.
2. மேற்கோள்களும் பயனும்.
3. உதாரணங்கள்.
4. மதவிஷயப் பொருத்தம்.
5. கதை.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய மேற்கோள்கள்

" தீர்வரு மின்னல் தம்மைச்
செய்யினுஞ் செய்ய சிந்தைப்
போரு ளாளர் தத்தம்
செய்கையிற் பிழைப்பதுண்டோ?" (1)

—இராமயணம்.

"—வெள்ளம்.

"வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு." (2)

—நன்னெறி.

"ஆதாவுடையான் செய்யும் அல்லவு நல்ல வாகும்
ஆதர விலாதான் செய்யும் நல்லவும் அல்ல வாகும்." (3)

—பிரபுலிங்கலீலை.

"உதவாம லொருவன் செய்தவுதவிக்குக் கைம்மாறாக
மதயானை யனைய மைந்த மற்றுமுண்டாக வற்றோ."

—இராமாயணம்.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு." (5)

—திருக்குறள்.

" இளமையும் செல்வமு யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்" (6)

—சிலப்பதிகாரம்.

" மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழி
னறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு." (7)

—திருக்குறள்.

வெகுளியே யுயிர்க்கெல்லாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே அறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால். (8)

—காஞ்சிப்புராணம்.

நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையேன் றறிதல் வேண்டும். (9)

—சிலப்பதிகாரம்.

"காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—* * *" (10)

—நாலடியார்.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத், தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை. (11)

—திருக்குறள்.

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொல லென்று மகிழாதே—* * * (12)

—நன்னெறி.

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லா
லெள்ளுவ வென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத நீது கொடுப்பது நன்றால் (13)

—இராமாயணம்.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே. (14)

—தாயுமானவர் பாடல்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று (15)

—திருக்குறள்.

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள் (16)

—சிலப்பதிகாரம்.

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
டத்தித்தத் திச்சடை தட்டிக்கட் டிப்புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு (17)

—பட்டினத்தார் பாடல்.

வளம்பட வேண்டாதார் யார்? யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரிரனச் செய்தாரு மில் (18)

—நாலடியார்

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models
### A NOBLE ACT.

A man who had reached a great age, and amassed much wealth feeling that his end was near, divided his, property among his three sons. Thereafter he set aside a jewel of great value, which he determined to give to that one of his sons who should within three months perform the most noble act, 'Father' said his eldest son one day, 'a person lately entrusted me with a large sum of money. As he was quite stranger to me, and had no acknowledgment from me in writing, I might easily have appropriated the money; but when he asked it back from me, I gave him the whole and refused his offers of reward.' The Father replied, 'yours was an act of duty.' The Second son said, 'I was walking along the edge of a lake when a child fell in. At the risk of my life, I plunged in, and saved it. Was that not a noble act, Father?' No, my son; it was an act of Sympathy.' The youngest son then said,. 'One dark night I found my mortal enemy asleep on the edge of precipice. The slightest movement on waking would have plunged him down the fearful abyss. I took care to rouse him with proper care, and directed him to a place of safely.' 'My dearest son,' said the father, embracing him, 'the jewel is certainly thine'.

### பெருந்தன்மையான தொழில்

அதிகப்பணம் சேர்த்து வைத்திருந்த வயது முதிர்ந்த ஒருவன் தன் முடிவுகாலம் அணுகிவிட்டது என்று உணர்ந்து தன் பிள்ளைகள் மூவருக்கும் தன் சொத்துக்களைப் பகிர்ந்து கொடுத்து விட்டான். பின்னர் விலையுயர்ந்த நகை ஒன்றை அவன் வேருக எடுத்து வைத்து, மூன்று மாதத்திற்குள் பெருந் தன்மை வாய்ந்த செயல் ஒன்றைச் செய்யும் தன் பிள்ளைக்கு அதைக்கொடுத்து விடுவது என்று தீர் மானித்தான். இப்படி இருக்கையில் ஒருநாள் மூத்தபிள்ளை வந்து; 'அப்பா! கொஞ்ச நாளைக்கு முன் ஒரு புதிய மனிதன் என்னிடம் பெருந்தொகை யை வைத்திருக்கும்படி கொடுத்திருந்தான். எழுத்து மூலமாக அவன் என்னிடம் ஒரு ஸம்மதிப்பத்திரமும் வாங்கிக்கொள்ளாததால் பணம் என்னுடையது என்று நான் கூறிவிட்டிருக்கலாம். ஆனுல்அவன் வந்து கேட்ட உடன் அதை முழுவதும் அவனிடம் கொடுத்தது மல்லாமல் அவன், அப்பொழுது கொடுக்கவந்த பரிசையும் மறுத்துவிட்டேன்' என்ருன். அதற்குத் தகப்பன் 'உன்தொழில் உனது கடமையே யல்லது வேறல்ல' என்ருன். பின் ஒருநாள் இரண்டாம் பிள்ளை வந்து 'நான் ஓர் ஏரிக்கரை ஓரமாக உலாவிக்கொண்டிருக் கையில் ஒருகுழந்தை ஏரியில்விழுந்துவிட்டது. உடனே என் உயிருக்கு வரக்கூடிய ஆபத்தையும் ஒரு பொருட் டாக மதியாது உள்ளே மூழ்கி குழந்தையைக் கரை யேற்றினேன். அந்தத்தொழில் பெருந்தன்மைவாய்ந்த தல்லவா? என்று கேட்டான். 'இல்லை' என்று தகப் பன் கூறி 'உன் செயல் மனக்கனிவுள்ளதே ஒழிய வேறல்ல?' என்றுமுடித்தான். வேறொருநாள் கடைக் குட்டிவந்து 'ஒரு நள்ளிரவில் என் ப்ராண சத்ரு ஒரு செங்குத்தான பாறை ஓரத்தில் தூங்குவதைக் கண் டேன். விழிக்குங்கால் சற்று அசைந்தால் போதும், பயங்கரமான பாதாளத்தில் உருண்டு விழவேண்டியது தான். அவனைத் தகுந்த ஜாக்கிரதையுடன் எழுப்பத் துணிந்து அபாயமற்ற விடத்திற்கு அவனை அனுப்பி விட்டேன்' என்ருன். உடனே அவனை அன்புடன் அணைத்துக் கொண்டு 'என் அருமை மகனே! நகை உன்னதே!' என்று தகப்பன் கூறினுன்.



## சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள்
## CHILDREN'S AND LADIE'S PAGES
### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI
### அத்யாயம் 8
### விஷய விரஸம்

இடமிலா விரதியோடே தீர்க்கமாம் பவமாகின்ற
கடலுடைக் கரையிலேறக் காதல்செய் முமுட்சுதன்னை
விடயமா நக்கரம்தான் அவனுடை கண்டத் தீழ்த்திக்
கடலுடைமத்தியத்தில் கடிதினின் மூழ்கவைக்கும்.

ஆண் பெண்ணடங்கலான காட்டுப்பூனைகள் விஷ யத்தையும் திண்டுக்கல் மஹாஜனங்கள் விஷயத்தை யும் இதோடுவிட்டு நமக்கு முக்கியனுக உள்ள ஒரு தோழன் விஷயத்தைக் காண மதுரை போவோம். நள் ளிரவாக இருக்கிறதென்றும் இப்பொழுது அங்குப் போக புகைவண்டி ஸௌகர்யம் இல்லையே என்றும், நமது தூக்கம் கெட்டுவிடுமே என்றும் மயங்கவே வேண் டாம். ப்ராதிபாஸிகஸத் என்று வேதாந்திகளால் மதிக் கப்படும் தீர்க்கஸ்வப்னமாகிய இவ்வுலகில் உள் ஸ்வப்ந மாகிய இக்கதையில் நமது ஸூக்ஷ்மசரீரமாத்ரத்தாலே நாம் பார்த்தல் முதலிய தொழில்களை நடத்தவல்லோம். கைகால்கள் இல்லாவிடினும் நமது வேகத்திற்கு யாதொரு குறைவும் இல்லை. கண் காது இல்லாவிடி னும் எல்லாவற்றையும் பார்க்கவும் கேட்கவும் வேண் டிய சக்தி நம்மை விட்டகலவில்லை. நம்மை நாம் அறியா விடினும் மற்றவை எல்லாவற்றை உணரும் திறன் நமக்கிருக்கிறது.

யாத்திரைக் கருவிகள் முதலியன இவ்வாறு பணச் செலவின்றி ஏற்பட்டுவிட, நாம் மதுரையில் ஓர் மாடிவீட்டை அணுகுவோம். அது ம-ா-ா-ஸ்ரீ, திவான் பஹதூர் நாராயணய்யர் அவர்கள் வீ-ஐ-இ னுடையது என்பது உடனே உங்களுக்குத் தெரிந்துவிடும். டிப்டி கலெக்டர் தூங்கிக்கொண்டிருக்கிருர்; ஒருவேளை அவர் தமது சிறந்த பட்டங்கள் கவர்னர் ஸம்பாஷணை இவைகளை உண்ணி கனுக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அவரையும் அவர் குடும்பத்தையும் எழுப்பாது அப்புறம் போவோம். நமக் குத் தூங்குபவரிடம் காரியமே இல்லை. திறந்த மாடி யின்மேல் போய்ச் சேருவோம். என்ன ஆச்சரியம்! அங்குஒருகையில்லாத நாற்காலியில் ஒரு யௌவன புரு ஷன் உட்கார்ந்திருக்கிருன்! அந்தநடுநிசியில்அந்தகாரத் தில் தனிமையாக உட்கார்ந்துகொண்டு வெறும் வெளி யைவெருண்டு நோக்கிக்கொண்டு ஏதோ யோசனையில் அவன் ஆழ்ந்திருந்தான். அவன் கருமையான பெரிய கண்களிலிருந்து கண்ணீர் முத்துமுத்தாக ஒழுக அவன் கன்னங்கள் நனைந்து காணப்பட்டன. ஒரு கை நாற்காலியில் தொங்கிக்கிடந்தது. மற்றொரு கையை அவன் தன் தொடைமேல் ஊன்றிக்கொண்டு பிரகாசமாயும் துக்கமாயும் உள்ள தனது முகத்தை உள்ளங்கையால் தாங்கிக்கொண்டிருந்தான். கார்மே கம் போன்ற அவன் சுருட்டையான தலைமயிர் அவன் தோளின்மேல் அவிழ்ந்து விழுந்துகிடந்தது. அவன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்ப தைப் பார்த்தால் துக்கமே ஓர் உருவெடுத்து வந்தாற் போலத் தோற்றிற்று.

அந்த ஸமயத்தில் பிரபஞ்சமுழுவதும் அவன் துக் கத்தைக்கண்டு பரிதவிப்பதுபோலக் காணப்பட்டது. மௌனமாகச் சுற்றி வரும் நக்ஷத்திரக் கூட்டங்களு டன் கூடிய ஆகாயம் நிச்சப்தமாக விருந்தது. தரை யிலோ ஒரு பூச்சிகூட அசைந்து கொடுக்கவில்லை. நடுநிசியிலிருந்த நிச்சப்தமானது அந்தஹாரவிரு ளால் மிக, பயங்காம்ாகக் காணப்பட்டது. இதை அதிகப்படுத்துவதுபோலச் சில பெரிய கார்மேகங்கள் ஆகாயத்தில் அங்குமிங்கும் ஓடியாட, மலைப்பாம்புகள் விழுங்குவதுபோல ஒன்று மற்ருென்றை மறைத்து முன்சென்றது. கோயில்கோபுரங்கள் பெரியஜடாமுனி கள்போல இருளில் புதைந்து வானுறவோங்கினின்றன. அவைகளுள் வேலைமுடியாத ஒன்றன் விஷயமாக ஒருவித ஐதிஹம் இருந்தது. அதில் ஒரு பிசாசு இருக்கின்றது என்றும் அது விலைமகள் வீடுசென்று திருட்டுத்தனமாகத் திரும்புவர் அனேகரை அடித்து யமனுலகேற்றியதென்றும் எல்லோரும் நம்பியிருந்த னர். அது முடியாது மொட்டையாக இருட்டில் நிற்பதே அநேக பயங்குள்ளிகளுக்குப் பேய்பிடிக்கும் படி செய்யப் போதுமானதாக விருந்தது. அதிலிருந்த பிசாசு அதைப் பூர்த்திசெய்ய விடுவதில்லை என்றும், அதை முதலில் ஒரு இரவில் சில பிசாசுகள் கட்டத் தொடங்க முடிவதற்குள் கோழி கூவிவிட்டதென்றும், பின்னர் அதைப் பூர்த்திசெய்ய என்ன முயற்சிசெய் தும் முடியாமல் போயிற்றென்றும் அநேகர் முன்னர் சொல்லிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அந்தப் பெரிய கோபுரம் கட்டி முடிந்து விட்டது. ஆயினும் அதில் பிசாசு இருக்கின்றது என்ற மூடநம்பிக்கை மாத்திரம் போகவில்லை. இன்னும் செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமைகளில் அந்தக் கோபுரம் பூமாமலை முதலியவைகளால் அலங்காரம் செய்யப்பட்டு வருகின் றது. ஸாதாரண ஹிந்துக்கள் இரவில் அந்த வழி நடக் கவே மாட்டார்கள், நடுநிசியில் அதைக் கண்ணெடுத் துக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

ஆனுல் மாடியில் உட்கார்ந்திருந்த ஸ்ரீநிவாஸன் மன தில் கொஞ்சமேனும் அச்சமே இல்லை. அவன் உள்ளபடி மனப்பூர்வமாக மரணத்தை துரும்பாக மதித்திருந்தான். அநீதி துர்மார்க்கம் ஆகிய இவை கள் நிறைந்து இவ்வுலகிலிருந்து யமன் தன்னைக் கொண்டுபோய் விட்டால் மிகுந்த நலமாக விருக்கும் என்பது அவன் துணிபு. இவ்வுலகில் ஸகல ஸுகங் களும் கெட்டவர்களிடத்திலும், ஓயாத்துக்கம் நல்லவர் களிடத்திலும் விடாது போய்ச் சேருவதால் இவனுக்கு

இவ்வெறுப்புத் தட்டிவிட்டது. இவன் பின்வருமாறு சிந்திக்கலானான்.

'கடவுள் என்றொருவன் இருக்கிறானா என்ன? அப்படி இருந்தால் இவ்வுலகில் அவிசாரிகள் அடர தீர்க்காயுஸுடன் வாழ்வதேன்! லக்ஷ்மியைப்போன்ற குணசிகாமணிகள் வைதவ்யம், தீராத்துயரம் இவைகளில் வீழ்வதேன்! நல்ல யௌவனதிசையில் ஒரு பாபமும் அறியாத தர்மாத்மாவான தெய்வம்போன்ற கிருஷ்ணனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் இவ்வுலகில் வாழ்வதாலாவதென்? அஹா! என்னருமைத் தோழன் கிருஷ்ணா, நீ ஒருவனே! என் துக்க காலங்களில் என்னைத் தேற்றுவதும், எனக்கு ஏற்பட்டிருக்கும் மனோவ்யாகூலத்தை, அடிக்கடி வாழ்க்கையின் சிறந்த பாகங்களை எடுத்து வர்ணித்து மாற்றுவதுமே உன் நோக்கமாக விருந்ததே! நீ போயும் நானிருக்கவா? ஆஹா! லக்ஷ்மீ! உன்னைப்போன்ற பெண்சாதி வாய்ப்பது அரிது! அரிது! உனது ஆனந்தமான சாந்தஸ்வபாவம், உனது மாறாக்காதல், உனது பூததயை, நீ கணவனோடு சேர்ந்து வாழ்ந்த அழகு, உனது வாழ்க்கையில் ஏற்பட்ட சிறந்த மனோதர்மம், உன் தகப்பனாரிடமிருந்து ஸ்திரீதனமாகப் பெற்ற வேதாந்த ஞானம், அதற்குத் தகுந்தபடி உன் நடத்தையை நீ பொருத்தி வந்த விதம், ஆகிய இவைகளைப்பற்றி எவ்வளவுதரம் ஏகாந்தமாகக் கிருஷ்ணன் என்னிடம் மிகுந்த ஆவலுடன் எடுத்து விஸ்தரித்திருக்கிறான்! நீயும் கிருஷ்ணனும் இப்படியா பிரிந்து போவது! இனி என்றைக்கும் நீங்கள் சேர முடியாதே! இதுதானா வாழ்க்கைப் பயன்? இதனுள் நம்மை இவ்வாறு அனுப்புவித்து சித்திரவதை செய்ய யாருக்கு அதிகாரம்? நாம் என்ன விதிக்கு அடிமையா? இம்மாதிரி விதி நம்மை வருத்துவது என்ன நியாயத்தோடு சேர்ந்தது? இது ஈசுவர ஆக்ஞை என்று சொல்லுகிறார்களே! மனிதன் படும் பாடுகளையும், அநாதைகளான பிராணிகள் கிடந்து துடிப்பதையும் கண்டுகளிக்கும் கடவுள் என்ற கொடிய பிசாசம் எங்கே இருக்கிறது? உலகமே ஒரு கொடிய காரியம், பிரபஞ்ச இயற்கையே ஒரு பெரிய மோசமான ஜாலம், அது நம்மை இடையறாது ஏமாற்றுகிறது. நாம் மூடர்கள் என்று நன்றாகக் கண்டு, அது நம்மைக் கிழிந்தசெருப்பால்ஓயாது கொஞ்ச நாழிகை அடித்துவிடுவதும் பின்னர் நம்மை அது தட்டி கொடுத்துச் சர்க்கரை ஈந்து ஸமாதானப் படுத்துவதுமாக மாறிமாறி இவ்வாறு செய்து வருகிறது. நன்றாகப் பாடி அதைக் கேட்டவர்களை எல்லாம் பன்றியாக மாற்றும் நாசகாலியைப்போல இவ்வுலகம் தனது அற்ப ஸுகங்களை மிகுந்த துக்கமத்தியில் சிறுககாட்டி நம்மைக் கழுதைகளாக்கி விடுகின்றது. ஸாரமற்றமண்ணுருண்டைகளான ஸூர்ய சந்த்ராதி கோளங்கள் உதயமாகின்றன அஸ்தமிக்கின்றன, ஏன்? அந்தப் பாபி பாழும்பிரபஞ்ச இயற்கையால் அவ்வாறு செய்யும்படி தூண்டப்படுவதால் அப்படி உருண்டு வருகின்றனவாம்! இந்த வெறும் கோளங்கள் தேவதைகள் வாஸம் செய்யும் ஜ்யோதிர்லோகங்களாம்! இப்பொழுது அநேகர் குரட்டைவிட்டுக்கொண்டு மெய்ம்மறந்து தூங்குவதும் அந்தப் பாபியின் தூண்டுதலாலேயாம். இதனாலேதான் அவர்கள் மறுநாள் காலையில் விழித்தெழுந்து பரபரப்புடன் தொழிற்பட்டு 'நான் தூங்கினேன்! நான்விழித்திருக்கிறேன்! நான் இதைச் செய்துவிடுவேன், அதை முடிப்பேன், வேறொன்றை முடித்துவிட்டேனே' என்ற இதுபோன்றபேச்சுக்களைப் பேசுகிறார்கள். வெட்கம்கெட்ட வான்கோழியைப்போல இப்பொருளில்லா 'நான்' என்ற பதத்தை உச்சரித்துக் கொண்டுஒவ்வொருவரையும் எழும்படிசெய்வதுஇந்தப் பாழும் இயற்கையின் சூது. மனிதனாகட்டும் எந்த ஜந்துவாகட்டும் எதிலும் தானாக ஒன்றையும் செய்வதில்லை. எல்லாம் இந்தப்பாழும் பிரபஞ்ச இயற்கை, ஸ்வபாவத்தாலே ஒழிய வேறில்லை. இந்தப் பிரகிருதிஎன்னும் இயற்கைதான் இந்த'நான்' என்பதைப் பிறப்பித்தது, அந்தக் கிருஷ்ணனை வெளியே ஒட்டிவிட்டது, பரமசுத்தையும் நிர்தோஷமுமான லக்ஷ்மியின் மனத்தைச் சின்னாபின்னமாகச் சிதற அடித்தது! போதும் இந்த உலகவாழ்க்கை! மறு ஜன்மம் வருமே என்று ஜனங்கள் கூறினால், எப்படி வரும் பார்ப்போம்? எங்கே இப்பொழுது நான் தற்கொலைசெய்துகொள்ளுகிறேன்! பார்ப்போம்! மூடர்களால் வாழ்வு என்றும் ஞானிகளால் மரணம்என்றும்மதிக்கப்பட்ட இந்தப் பைத்தியக்கார உலக வாழ்க்கையில் வரும்படி தூண்டும் சக்தி எது என்பதைப் பார்த்து விடுகிறேன்! வரட்டும் அந்தச் சக்தி என்னிடம்! ஒரு கைபார்த்துத்தான் விடுவது! விடமாட்டேன்!' என்று கூறிவருகையிலேயே ஸ்ரீனிவாசன் கடைசிபாகத்தைப் பரவசமாக மெய்ம்மறந்துவாய்விட்டு உரக்கக்கதறி தன்கால்களால் மிகுந்த ஆவேசத்தோடு தரையை ஒரு உதை உதைத்தான்.

இந்தச் சமயத்தில் 'பிராணநாதா! மோசம்வந்ததே! பிராணநாதா' என்று கூக்குரலிட்டுக்கொண்டு ஒரு 18-வயது யுவதி ஒருவள் தலைவிரிகோலமாய் புடவை கலைந்து பின்னே புரண்டுவர ஓடோடியும் வந்து; அவன்பேரில்விழுந்து, தண்ணீரில்விழுந்துமூழ்குபவன் ஒரு த்ருணம் அகப்பட்டாலும் குரங்குப்பிடியாகப்பிடிப்பதுபோல அவனை இவள் இறுகக் கட்டிப்பிடித்தாள். இவள் முகம் பயத்தால் வெளுத்திருந்தது.

ஸ்ரீநிவாசன்.—[அவளை ஒருபுறம் தள்ளிவிட்டு]

'ஒதுங்கிப்போ! சனியனே! ப்ராணாவுமாச்சு! நாதனுமாச்சு! இவ்வுலகிலாகட்டும் இவ்வுலகுக்கப்பாறபட்ட விடங்களிலாகட்டும் உண்மைக்காதல் என்பதேயில்லை! ஒதுங்கி நில்.'

பெண்.—என் கண்ணே! நான் மிகப்பயந்திருக்கிறேன். என்னைக் குரூரமாய் நடத்தாதேயுங்கள்! புண்ணியம் உண்டு. (அவள் கண்ணீர் அகன்ற ஸ்ரீநிவாஸன் மார்பில் ஆறாய்ப் பெருகியோடக் கரைந்து சற்று அழுதுவிட்டு.) என்மனம் பதைக்கிறதே! என்தேஹம் பதறுகிறதே! என்னை அணைத்துக்கொண்டு தேற்றலாகாதா என் நாதா!

என்று தேம்பித்தேம்பி அழுதுகொண்டு மன்றாடினாள் அப்பெண்.

இந்தப் பெண்ணைப் பார்த்தால் நமக்கு தெரிந்தவள் போலிருக்கிறதே! எங்கே! ஆம், ஆம் அடங்காப்பிடாரி அன்னம்மாள் திண்டுக்கல்லிலிருந்து வந்தகாலத்தில் வாஸுதேவ சாஸ்திரி வீட்டில் இவள் தாயாரோடுகூட இவளை பார்த்திருக்கிறோம். இவள்தான் ருக்மிணி, திவான் பஹதூர் நாராயணய்யர் பெண்மணி. இதுவரை உலகவியற்கை அதன் வழிகள் இவைகளிடம் கோபங்கொண்டிருந்த ஸ்ரீநிவாஸன் தான் டிப்டி கலெக்டர் மாப்பிள்ளை. ருக்மிணி 'நீயே கதி' என்று அவன்மேல் வந்து சாய்ந்ததும், பயத்தால் அவள் நெஞ்சும் மாரும் படபடவென்று பறையடிக்றவதைக் கேட்டான் ஸ்ரீநிவாஸன். அரைமனதுடன் அவளை அணைத்துக்கொண்டு, கோபாதுக்கத்தால் பல்லை நெறநெறவென்று கடித்துக்கொண்டு சொல்லுகிறான்.

ஸ்ரீநிவாஸன்.—அஹா இந்த உலகவியற்கை என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடும் போலிருக்கிறதே! நீ ஏன் இப்படி என்னை வந்து தொந்திரவு செய்கிறாய்? எனக்கு இன்னொருவருக்கும் என்ன ஸம்பந்தமிருக்கிறது, ஒன்றுமில்லை! நீங்கள் எல்லோரும் இந்த உலக வழிக்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள்! நான் அவ்வாறிருக்கமாட்டேன்! மாட்டேன்!!

ருக்மிணி.—நாதா! நான் பயந்து சாகும்பொழுது இப்படித்தானா என்னை அலங்கோலப்படுத்துவது? உம்மைவிட்டால் எனக்கு வேறு கதி யார்? இதுவரையில் உம்மிடமிருந்த தயையும் அன்பும் எங்கே போய் விட்டது, என் கண்ணே! என் பயத்தை நீக்கும்! பின்னர் எல்லா விஷயங்களையும் கூறிவிடுகிறேன். இந்த நடுநிசியில் இங்கிருக்கப் பயமாக விருக்கிறது, முதலில் உள்ளேபோவோம் வாருங்கள்!

தற்காலத்திற்காவது உலகவழி விஷயமாக ஏற்பட்டிருந்த கோபத்தை ஒருபுறம் ஸ்ரீநிவாஸன் ஒதுக்கி வைத்துவிட்டு உள்ளே போகவேண்டி வந்தது. பெண்கள் புண்பட்டுவருந்துங்கால் எந்தக் கல்மனம்தான் கனியாதா? அவர்கள் ஓர் அகன்ற அறையுள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டனர். விளக்கேற்றி ருக்மிணி சுற்று முற்றும் பார்த்து எல்லாம் ஸரியாக விருக்கிறது என்று கண்டு தேறினாள். உடனே கணவனை நோக்கி நடந்த விஷயங்களைக் கூறலுற்றாள்.

ருக்மிணி.—என் கண்ணே! என்னை இப்படித் தான் தனிமையாக விட்டகலுவதோ? இந்த இருளில் நான் வந்து பார்க்கும் முன் எவ்வளவு நாழிகை நீங்கள் அங்கு உட்கார்ந்திருந்தீர்களோ! அறியேன். நான் கொடிய ஸ்வப்நம் ஒன்றுகண்டேன். அதற்கேற்றபடி தாங்களும் நடந்துகொண்டு விட்டீர்களே!

ஸ்ரீநிவாஸன்.—பெண்களைப்போன்ற பித்தர்களே உலகில் இல்லை. ஸ்வப்நம் கண்டா பயந்தாய்? இதென்ன அற்ப விஷயம். இதென்ன சொல் பார்ப்போம்.





ருக்மிணி.—என்ன கொடுமை! நளன் தமயந்தியை விட்டோடியதுபோல நீங்கள் என்னை ஆலாய்ப் பறக்கவிட்டு அடர்ந்த நிர்மானுஷ்யமான காட்டுள் புகுந்து ஒரு அகாதமான பள்ளத்தின் மேல் நீட்டிக்கொண்டிருக்கும் செங்குத்தான பாறையின்மீதேறி உமது உயிரை மாய்த்துக்கொள்ள பிரயத்தினம் செய்ததாகக் கண்டேன்! எப்படியோ நான் உங்களைக் கண்டுவிட்டேன். அந்த ஸமயத்தில் என் காதில் 'நான் இப்பொழுது தற்கொலைசெய்துகொள்ளுகிறேன். என்னை மறுபடியும் ஜென்மமெடுக்கச்செய்ய எந்தச் சக்தியால் முடியும்? பார்ப்போம்!' என்று கூறிய உங்கள் குரல் விழ வாரிப் புடைத்துக் கொண்டெழுந்தேன். இந்த அபாயமான தருணத்தில் உங்கள் கோபக்குரலும் நீங்கள் தரையை மிதித்த மிதியும் என்னை அலறச் செய்ய என் ஸ்வப்நம் தடைபட்டது. நான் நன்றா விழித்துக் கொண்டேன். பக்கத்தில் பார்க்கிறேனோ சுருங்கல் விழாத படுக்கையும் நலுங்காத தலையணையும் இருந்தன 'இதென்ன விபரீதம்'என்றுநினைக்க என்தேஹம் பதறியது. பயம் அதிகமாகிவிட கூக்குரலிட்டுக்கொண்டு வெளியே வந்து நீங்களிருந்த விடத்தில் உங்களைக்கண்டேன். இதென்ன விபரீதமான இரவாகவிருக்கிறதே!

ஸ்ரீநிவாஸன்.—இது விசித்திர ஸ்வப்னந்தான்! ஸந்தேஹமில்லை! எனக்கு மனபூர்வமாக உயிரை மாய்த்துக்கொண்டு உலகவழிக்கு அடிமையாகாது தப்புவித்துக் கொள்ளவேண்டுமென்று தோன்ற, நீ கூறியபடி உரக்கவாய்விட்டுக்கதறினது உண்மையே. இந்த உலக வாழ்க்கை பெரும் மாயம், இதை எப்படியாவது ஒழிக்க வேண்டும்!

ருக்மிணி.—(அழுதுகொண்டு) என்னை அநாதையாகப் பறக்கவிட்டுப் போய்விடப் போகிறீர்களா? நாதா! இதுதானா மாயையிலிருந்துதப்புவதற்குதகுந்த வழி? வஸிஷ்டாதி மஹாரிஷிகள்கூட தமது பெண்சாதிகளுட னிருக்கவில்லையா?

ஸ்ரீநிவாஸன்.—அவர்கள் எப்படி உலகிலிருந்தும் அதன் மாயைக்கு ஆளாகாது இருந்தனரோ? இந்த வார்த்தைகள் எல்லாம் வெறும்புரட்டு! நிஸ்ஸாரமானவை!

ருக்மிணி.—நாதா! எனக்கு அதெப்படியோ தெரியாது. வாஸுதேவசாஸ்திரி 'மனம் மாறில் ஜகம் மாறும்' என்று சொல்லுகிறார். உலகவழி அல்லது மாயை என்பது ஒருவன் மனமே ஒழியவேறில்லையாம். அலைகிற மனம் அடங்கி நிலையில் நின்று விட்டால் மனிதன் அமரனாவனாம். அக்காள் லக்ஷ்மிக்குத் தொலையாத்துன்பம் வருவதற்குக் கொஞ்ச நாளைக்குமுன்பு தான் அவர் சில சுலோகங்கள் சொன்னார். அதில் ஒரு மஹான் 'நான் எப்பொழுதும் அழிவற்றவன்! நான் ஸர்வக்ஞன்! நான் பரமாநந்தன்! நான் மாயைக் கப்பாற்பட்டவன்! நான் தேஹமல்ல, எனக்குப் பிறவி எது? நான் அகங்காரமல்ல; எனக்குப்பசிதாஹமேது? நான் மனமல்ல, எனக்கு காமாதிகளும் துக்க

மும் எது? நான் கர்த்தாவல்ல, எனக்குப்பந்தமோக்ஷம் எது?" என்று ஆனந்தபரவசமாகக் கூறுகிறார்.

ஸ்ரீநிவாசன்.—இம்மாதிரி விஷயங்களை நான்படித்ததில்லையா என்ன! இவைகள் எல்லாம் பேச்சு! வெறும்பேச்சு! வீண்பேச்சு! இம்மாதிரி உலகவழிக்கும் அப்பாற்பட்டு மாயையாகிய திரையை கிழித்த ஒருவனைக் காட்டு பார்ப்போம்! எது நடந்தாலும் உபேக்ஷையாக விருந்து இறக்கும் பொழுதும் தான் அழிவற்றவன் என்றெண்ணும் மஹான் ஒருவனையும் காணோமே! இவைகள் எல்லாம் வீண்வார்த்தைதானே!

ருக்மிணி.—ஸூரியன் உஷ்ணமாயிருந்தாலும் ஸரி குளிர்ந்திருந்தாலும் ஸரி; நெருப்பு மேல் நோக்கி எரிந்தாலும் ஸரி கீழ்நோக்கினாலும் ஸரி; தம்மைப் பூஷித்தாலும் ஸரி, தூஷித்தாலும் ஸரி, பூஜித்தாலும் ஸரி, வைதாலும் ஸரி; ஆறிலிறந்தாலும் ஸரி நூறிலிறந்தாலும் ஸரி ஒன்றையும் புதுமையாகவாவது ஒரு பொருட்டாகவாவது மதியாத பெரிய மஹான் இன்னும் இல்லாமல்போகவில்லை, என்று மாமா வாஸுதேவர் கூறக் கேட்டிருக்கிறேன். அதெப்படியேன் ஆகட்டும், என் அன்பே! மனதை ஸமாதானப் படுத்திக்கொண்டு தூங்க வாருங்கள் உங்களுக்கு தூக்கமே இல்லையே! காலை அதிகாலையில் எழுந்திருக்க வேண்டாமா? படுக்கும் முன் என்னை ஒருபொழுதும் விட்டுப் பிரிவதில்லை என்றும், இனிமேல் இம்மாதிரி வெட்டவெளியில் நடுநிசியில் சென்று தனிமையாக உட்காருவதில்லை என்றும் வாக்களித்து என்னை தைரியப்படுத்தலாகாதா? வாரும்!

இவ்வாறு ருக்மிணி அழைத்து அவனைக் கஷ்டப்படுத்த, தனிமையாகத்தன்னை விட்டுவிட்டால் போதும் என்றான். ஸ்ரீநிவாஸனிடமிருந்து மிகுந்த கஷ்டத்தில் மேல் அரைமனதுடன் வெளிவந்த ஸம்மதியைப் பெற்றுக்கொண்டு அவள் உறங்கத் தொடங்கினாள்.

'மனதை அடக்கவா? என் மனம் ஏற்கனவே தான் அடங்கி நசுங்கி அடிமைபட்டுக் கிடக்கிறதே! இது போகாதா?" என்று எண்ணமிட்டுக்கொண்டு ஸ்ரீநிவாஸன் படுக்கையில் சாய்ந்து மனனம் செய்யத் தொடங்க அது நல்ல வேளையாகத் தூக்கத்தைக் கொண்டுவிட்டது. அவன் தூக்கங்கூட வேதாந்தத் தூக்கமாகவே இருந்தது. அதில் அவன் தீர்க்கஸ்வப்நம் ஒன்று கண்டான். அங்கு அவன் ஒருவேதாந்தம் பேசும்யோகியைக் காண அவர் அவனுக்கு யோகரஹஸ்யங்களை உபதேசிக்க கருணைகூர்ந்தார். அவருக்குச்சிஷ்யனாகிவிட அவன் ஆயத்தப்படுகையில் ஓர் அற்புத விஷயத்தைக்காண அவனை வந்து சிலர் அவஸரமாக எழுப்பி விட்டனர்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**கனம் ஸ்ரீ P. S. சிவஸ்வாமி அய்யர் அவர்கள் ஸி ஐ. இ.**—கனம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமியய்யர் தேஹவியோகமானதும் வெகுநாளாகக் காலியாயிருந்த இந்திய மெம்பருடைய ஸ்தானம் கனம் அட்வகேட் ஜனரலாக இருந்த ஸ்ரீமான் சிவஸ்வாமி அய்யரவர்களுக்குக்கொடுக்கப் பட்டதைக்கேட்டு ஸந்தோஷிக்கிறோம். இவர் 1864-௵ உத்பவித்து தஞ்சையில் முதலில்படிப்பையடைந்து பின் 1882-ம் வருஷம் சென்னை இராஜாங்க சாலையில படித்து பி எ. பரீக்ஷை தேறி, 1884-௵ (பி, எல்) தேறி 1885-௵ வக்கிலாயினர் ஹை கோர்ட்டில் பெருங்கீர்த்தி யடைந்த நியாயவாதியாக விளங்கி, கொஞ்சநாள், 'லாகாலேஜில்' நியாயபோதகராயிருந்து, 1904-௵ சென்னை ஸர்வகலாஸங்கசட்ட நிர்வாண ஸபை அங்கத்தினராகதேர்ந்தெடுக்கப்பட்டு, 1907-௵ அட்வகேட் ஜனரலாயினர். இத்தகைய லோக வியவஹாரசக்தியும், திடசித்தமுமுடைய நமது அய்யர் இப்பொழுது ராஜாங்கத்து ஆலோசனை அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டது யாவர்க்கும் ஆனந்தம். அவர்க்கு அப்பதவிக்குரியவாறு ஸத்தியத்திற்கும் இந்திய ஸமூஹத்தின் நன்மைக்கும் உழைக்க அவர்க்கு ஸமயோசித பலமும் திடச்சித்தமும், நடுநிலை முதலியயாவும் என்றும் இடைவிடாது உதவிசெய்யக்கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

**லார்ட் கார்மைகேல்.**—நமது அன்பின் மிக்க நன்மையே மனங்குடிகொண்டு உண்மையறிந்து ஊர்க்குதவிபுரிய அன்பே உருவெடுத்தாற்போல ராஜாங்கம் நடாத்திய தலைவன் கனம் கவர்னர் கார்மைகேல் பெருமானை வங்காளத்திற்கு மாற்றப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டது கொடுத்ததை கொள்ளை கொண்டாற் போல இருப்பினும், நமது தேசத்தில் மிகவும் மனச் சலனமடைந்த நமது உற்றாராகிய வங்காளியர் சற்றமைதியடைந்து ஸுகம் பெறவேண்டும் என்னும் நம்மவர்பாலாசையும் சேர்ந்து இன்பமும் துன்பமுமடைய நமதுமனம் ஊசலாடுவதைச்சொல்லவும் வேண்டுமோ?

**புதியகவர்னர்.**—பெண்ட்லண்ட் பிரபு நமது புதிய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரைத்தான் முதலில் வங்காளத் தலைமையைப் பெறக் கேட்டது. அவர் மறுத்ததின்பின் நமது இப்பொழுதிய கவர்னர் அங்கு மாற்றப்பட்டனர். நமது கஷ்டத்தை ஒழிக்குமாறு இம்மஹானை நமது இராஜதானித் தலைவனாக சக்கிரவர்த்தியால்நியமிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது. இவரே இங்கிலண்ட் கேபினட்டிலிருந்து முதலில் இந்திய கவர்னராக நியமிக்கப்பட்டது. இவர் மிகவும் ஸாதுவென்றும் ஸத்திய வாதி என்றும் கேழ்விப்படுகிறோம். அவரை அடைந்து நமதுநாடு செழிக்க வேண்டுமென்பது எமது அபீஷ்டம். இவர் உடனே வரமுடியாமையால் கார்மைகேல் பிரபு வங்காளம் சென்றதும், பெண்ட்லண்ட் பிரபுவரும்வரை கனம் ஹாமிக் துரையவர்கள் கவர்னராக வேலை பார்ப்பார்.



சிவலிங்கம்



நந்தி

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருதுஸு மாசிமீ : 1912-ஸு மார்ச்சிமீ { பகுதி 9

## கீதா மஹான்கள்

## THE GREAT MEN OF THE GITA

### 3. பகவத் பக்தன் (அத் 12, சுலோ 13—20)

எனக்குப் பிரியமான பக்தன், எந்தப் பிராணியிடத்தும் த்வேஷம் இல்லாதவனாகவும், ஸ்நேஹம், தயை உடையவனாகவும், அகங்காரம் மமகாரம் (நான் எனது என்ற எண்ணங்கள்) அற்றவனாகவும், ஸுகதுக்கங்களை ஸமமாகக் காண்பவனாகவும், பொறுமையுடையவனாகவும், மாறாத்திருப்தியுள்ளவனாகவும், அடங்கிய மனத்தையும், உறுதியான நிச்சயத்தையும் உடையவனாகவும், மனம் புத்தி ஆகிய இவைகளை என்னிடமே ஒப்புவித்தவனாகவும் இருப்பான். இவனைக்கண்டு உலகம் நடுங்காது, இவனும் உலகைக் கண்டு நடுங்கான்; மகிழ்ச்சி, பொறாமை, அச்சம், கலக்கம் இவை இவனை அணுகா. இவன் விருப்பற்றவனும், தூயவனும், தேர்ந்தவனும், கவலையற்றவனும், குழப்பமற்றவனும், முயற்சியற்றவனும் காணப்படுவான். ராகம், த்வேஷம், துக்கம், காமம், சுபாசுபங்கள் ஆகிய இவைகளற்றவனாக இருப்பான் என்பக்தன். நண்பன் பகைவன், மான அவமானம், சீத உஷ்ணம், ஸுகதுக்கம் ஆகிய த்வந்தவங்களில் ஒரே மாதிரி இருப்பதும், பற்றற்று இருப்பதும், இகழ்ச்சிபுகழ்ச்சிகளை ஒன்றாகப்பார்ப்பதும், மௌனம் குடிகொண்டிருப்பதும், எதுவந்தபோதிலும் திருப்தியுடனிருப்பதும், வீடில்லாதிருப்பதும், அலையுமனம் நிலையில் நிற்கும் குணமுடையதுமே என் பரமபக்தனிடம் எப்பொழுதும் காணப்படும். என்னிடம் பக்தியுடையவர்களாகி முற்கூறிய லக்ஷணங்களைப் பின்பற்றியார் பழகுகிறார்களோ அவர்களும் என் பக்தர்களே.

### 3. த்ரிகுணாதீதன். (அத்—14, சுலோ 22—27)

'விளக்கம், முயற்சி, மோஹம் ஆகிய எவை வந்தபோதிலும் ஒன்றையும் வெறுக்காது, போனவற்றை எண்ணி விரும்பாது, தாக்கற்றுக் கவலையின்றிக் குணங்களால் அசைக்கப்படாமலிருந்து 'குணங்கள் தொழில் நடத்துகின்றன' என்றுணர்ந்து நிலைபெற்றிருப்பான் த்ரிகுணாதீதன். ஸுகம் துக்கம்; ஓடு, பொன்; இஷ்டம் அநிஷ்டம், இகழ்ச்சி புகழ்ச்சி ஆகிய த்வந்தவங்களில் ஒரே நிலைமையுடையவனாக விருந்துகொண்டு, தன்னிடமே நிலைபெற்றுத் தீரனாக இவன் இருப்பான். மானாவமானங்கள், நண்பன் பகைவன், இன்றி முயற்சியற்றவனாக விருப்பான் குணாதீதன். என்னை பக்தியோகத்தால் கடைப்பிடித்தவன் குணங்களைத்தாண்டுவான்.

### ப்ரஹ்மஞானி (அத், 4, சுலோ--18-24-25-33)

கர்மத்தில் அகர்மத்தையும் (தொழில் நடக்குங்காலும் ஆத்மா மாறாதவன் என்பதையும்) அகர்மத்தில் கர்மத்தையும் (செயலற்றிருப்பதும் ஓர்விதத் தொழில் என்பதையும்) உள்ளபடி காண்பவன் எவனோ அவனே ஞானி, ஞானநிஷ்டை கைகூடியவன். கர்மங்கள் எல்லாம் செய்து முடித்தவன். ஆசை அபிமானம் நீங்கியதும், ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கியதுமான கர்மங்கள் எவனிடமுளவோ அவனே பண்டிதன். கர்மபலத்தைக் கவனியாது, மாறாத்திருப்தி உடையவனாகி எதையும் தனக்குத் தாக்காகக் கொள்ளாமல் அவன் எந்தக்கர்மங்கள் செய்தபோதிலும் அவன் செயலற்றவனே. ஒன்றையும் எதிர்பாராதவனாய், மனம் முதலியவைகளை அடக்கி, தனதானவைகள் எல்லாவற்றையும் விட்டு, தேஹதாரணமாத்திரமாக இவன் செய்யும் கர்மங்களால் இவனுக்குப் பாபமொன்றும் ஏற்படாது. கிடைத்ததைக்கொண்டு திருப்தியாகியும், த்வந்த்வங்களுக்கு அப்பாற்பட்டவனாகியும், பொறாமையற்றவனாகியும், காரியம் கைகூடினும் கூடாவிடினும் ஒரேமாதிரி இருப்பவனாகியும், உள்ள இவனை எந்தக் கர்மம்தான் பந்தப்படுத்தும்? பற்றில்லாது, விடுபட்டு, ஞானத்தில் நிலைபெற்று இருப்பதால் இவன் செய்யும் யாகம் கர்மம் முதலியன ஒடுங்கி விடுகின்றன. எந்தக் கர்மம் செய்தபோதிலும் அர்ப்பிப்பது, ஹவிஸ், அக்னி, ஆஹுதி, யஜமானன், முடிவு எல்லாம் பிர்ஹ்மம். இம்மாதிரி முடிவுபெறக் கூடிய யாகங்கள் வேதத்தில் அநேகம் உள. விஷய ஸம்பந்தமாகச் செய்யக்கூடிய இவ்யாகங்கள் எல்லாவற்றிலும் ஞான யக்யமே சிறந்தது. (அதை உள்ளபடி உணர்ந்தவன் இந்தப் பிரஹ்ம ஞானி.)

விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ மாசிமீ [பகுதி 9

## விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### 4. சிவலிங்கம்

இந்த விக்ரஹம் எல்லாச் சிவன் கோயில்களிலும் மூலஸ்தானத்தில் வைத்திருப்பது. மற்றைய விக்ரஹங்கள்போன்ற இது மானிட உருவமாக இராது. இந்த விக்ரஹத்தின் அடிப்பாகத்தில் உடுக்கைப்போன்ற பீடமொன்று காணப்படும் : இதற்கு **ஆவடை** என்றும் இதன்மேல் உருண்டு நீண்டதான தண்டு காணப்படும்: இதற்குப் **பாணம்** அல்லது **லிங்கம்** என்றும் பெயர். இவைகள்தான் சிவலிங்கத்தின் முக்கியமான பாகங்கள். இவைகளோடுங்கூட லிங்கத்தின் ஒருபுறம் ஆவடையின்மேல் மட்டத்திற்கு ஸரியாக கோமுகம் ஒன்று காணப்படும். இது பொதுவாக எல்லா லிங்கங்களுக்கும் உள்ளதாயினும் சிற்சிலவற்றில் இல்லாமலும் இருக்கும். ஆகவே இந்த விக்ரஹ உருவம் இவ்வளவு எளிதாக உள்ளது. ஆனால் இதனுள் அடங்கியிருக்கும் ரஹஸ்யப்பொருள் மிக விரிவாகவுள்ளது.

இந்த லிங்கத்தை நோக்குங்கால் எல்லோருக்கும் இது மாத்திரம் ஒரு உருவமும் இன்றி வெறும் குறிப்புபோலக் காணப்படுகின்றது என்பது தோன்றும். மற்றைய விக்ரஹங்களுடன் ஸம்பந்தப்பட்ட புராணங்கள் இருப்பதுபோல இதற்கும் கொஞ்சம் ஸம்பந்தப்பட்ட புராணங்களிருப்பினும், அவைகளிலிருந்தெல்லாம் இந்த உருவம் எல்லோரும் ஆராதித்துக் கடைத்தேறக் கொடுத்த உருவம் என்று விளங்கும். இவைகளைத்தவிர அதிககதாவிஷயங்கள் லிங்கஸம்பந்தமாக ஏற்படா. இதிலிருந்து ஏதோ அரிய விஷயம் இந்த உருவத்திலே அமைந்து கிடத்தல்வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். லிங்கம் ஏதோ ஒரு ரூபமாக அமைந்துகிடப்பினும் அது வேற்றுமைகளடங்கிய மற்றை ரூபங்களைப்போன்றதல்ல. இதனால் பரம்பொருள் உண்மையில் உருவமற்றவராயினும் மற்றைய உருவங்களைத் தம்மிடம் உடையவர், அதாவது அவருக்கு ரூபாரூபம் என்பதே ஒரு உருவம் என்று கூறும் வேதரஹஸ்யம் குறிக்கப்படும். இவ்விஷயம் மற்றைய விக்ரஹங்களில் சிற்சில அடையாளங்கள் மூலமாக வெளியாவதாயினும், இங்கு விக்ரஹமே இவ்வுட்கருத்தை உடையதாக விளங்குகிறது. இதையே உலகம் ஸ்ருஷ்டியாவதற்குமுன் பரம்பொருளில் அடங்கி இருக்குங்கால் உள்ள ரூபாரூபநிலை என்று மதிப்பர் சிலர். லிங்கம் திரிமூர்த்திஸ்வரூபம் என்றும் அதன் ஆவடையில் ப்ரஹ்மவிஷ்ணுக்களும், பாணத்தில் சிவனும் அடக்கம் என்பர் சிலர். பஞ்சபூதங்களுடன் ஸம்பந்தப்படுத்தி லிங்கம் ஐந்து சிரேஷ்டமான வழிகளில் ஆராதிக்கப்பட்டு வருகின்றது. காஞ்சிபுரத்தில் பிருதிவியுடனும், திருவானைக்காவலில்(ஜம்புகேசவரம்)அப்புவுடனும், திருவண்ணாமலையில் தேஜஸ்ஸுடனும், ஸ்ரீகாளஹஸ்தியில் வாயுவுடனும், சிதம்பரத்தில் ஆகாயத்துடனும் பொருத்தப்பட்டு லிங்கம் ஆராதிக்கப்படுகிறது. இது வைதிக ஆராதனமே. பஞ்சபூதங்களை லிங்கமாகக்கொண்டு அதனுள்ளிருக்கும் பரம்பொருளைத் தியானித்து வந்தால், இவைகளாலாகிய பிரபஞ்சத்துள் முழுவதும் பரம்பொருளைக் கண்டு விடுபட மிகுந்த ஸஹாயமாகவிருக்கும்.

நமது வீடுகளில் பூஜைக்கு உபயோகமான ஜ்யோதி என்ற ஒரு விளக்கு உண்டு. அதில் நெட்டமாக திரியிட்டு விளக்கேற்றினால் இந்த லிங்காகிருதி வரும். இதிலிருந்து ஆவடை என்பது அடியாகிய ஆதார ரூபமான பிரபஞ்சம் எனறும், மேல் விளங்கும் பாணம் இதன் மேலாடும் ஒளிபோல ப்ரபஞ்சத்தில் அதற்கு அப்பாற்பட்டு விளங்கும் பரம்பொருள் என்றும் தோன்றும். கல்லால் இந்த ஒளியைக் காட்டச் செய்திருக்கும் பாணம் நுனிக்கூறில்லாது தண்டு போலக் காணப்படுகிறது. இந்தத் தண்டு ஜ்யோதிரூபம் என்பதை ஆதியில் பரம்பொருள் அக்னிஸ்தம்ப ரூபமாகத் தோன்றி ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி கர்த்தர்கள் வழிபடு கடவுளானார் என்று கூறும் அருணாசல புராணமும், இதை அனுஸரித்து வருஷாவருஷம் திருக்கார்த்திகையன்று செய்யப்படும் சொக்கப்பானை என்ற ஸ்வர்க்கஸோபனம் என்னும் உத்ஸவமும் திடப்படுத்தும். தாமே விளங்கிக்கொண்டு மற்றவைகளை விளக்கும் குணமுடைய பரம்பொருள் ஜ்யோதிரூபமாக ஆராதிக்கத் தகுந்ததே.

இந்தப் பாணத்தின் உச்சி பாகத்தில் விபூதிப் பட்டை மூன்று இட்டிருக்கும். விபூதி என்பது ஒருவிதச் சாம்பல். எந்தச் சாம்பலாகட்டும் ஒருவித உருவம் பசை முதலியவைகள்உள்ள சேர்க்கைவஸ்து நெருப்பின் ஸம்பந்தத்தால் அவைகள் நீங்கி அந்த உருவத்தை அடைய வேண்டும். மேலும் சாம்பலாகி விட்டால் அதை வேறு எந்த ரூபமாகவும் பஞ்சபூதங்களால் மாற்ற முடியாது. இத்தகைய விபூதியை கண்டதுமே நமக்கு எவ்வளவோ வேதரஹஸ்யங்கள் மனதில் தோன்றிவிடும். ஞானம் என்னும்அக்னியால் எரிக்கப்பட்டு கர்மங்களில் இருந்து வெளிப்பட்டு நாமரூபம் நீங்கி நிற்கும் நிலையை விபூதி உணர்த்தும். இந்தப் பொருளை உள்ளடக்கியே பரமசிவன் நாமரூப நீங்கி எல்லாம் பிடிசாம்பலாக மாறுமிடமாகிய ஸ்மசானத்தி லிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதை மூன்று பட்டையாக மட்டமாயிடுவது நாமரூபாதிகள் நீங்கிய நிலையில் முக்குணம் அடங்கி ஒன்றுபட்டு சாந்தம் பிறக்கும் என்பதை நினைப்பூட்டும். இது பாணத்தின் உச்சியில் அமையப் பெற்றிருப்பது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டு போத ரூபமாக விளங்குங்கால் முற்கூறிய நிலை ஏற்படும் என்பதை விளக்கும்.

லிங்கம் என்ற பதத்திற்கே **குறி** என்று பொருள். இது வெளிப்படையாகக் காணப்படும் தோற்றம் என்ற பொருளிலும் வரும். இந்தப் பொருளில்தான் 'பசுக்கள் அநேக வர்ணமாயினும் பால் ஒரே வர்ணமாக இருக்கும். அறிவுடையோர் ஞானத்தைப் பால் போலவும், லிங்கங்களைப் பசுப்போலவும் மதிப்பர்.' என்ற அமிருதபிந்து உபநிஷத் வாக்கியத்தில், லிங்கம் என்னும் சொல் அமைந்திருக்கிறது. இதிலிருந்து பிரபஞ்சம் முழுவதையும் பரம்பொருளைக் குறிக்கும் விக்ரஹமாக மதிக்கலாம் என்பதாயிற்று. இதுபோலச் சிவலிங்கம் எதைக் குறிக்கிறது ? நாமரூபம் நீங்குங்கால் இன்னதென்று நேரிடக் காட்டமுடியாத வஸ்துவை முடிவாகக்காட்டும் குறியே இந்த லிங்கம். ப்ரபஞ்சமுழுவதும் ஞானசாஸ்திரப்படி ஐந்தாலாகியது ; அதாவது ஸத் சித் ஆனந்தம் நாமரூபம் ஆகிய இவைகளே இவைகளுள் நாமரூபமாகிய மாயாலக்ஷணம் நீங்கிய பின்னர் சேஷிப்பது ஸச்சிதானந்தம் என்னும் ப்ரஹ்மலக்ஷணமே. இதைத்தான் குறிக்கிறது இந்தலிங்கம். ஊர்த்தவமுகமாகநிற்பதால் பிரபஞ்சாதிகளுள் ஸூக்ஷ்மமாக நிற்பது **ஸத்** என்பதையும், ஜ்யோதிரூபத்தால் சித் என்பதையும், மேல் விபூதிதரித்து நிற்பதால் ஆனந்தம் என்னும்ரூபத்தையும் ஒருங்கேஉணர்த்தும் இந்த ரூபம். இந்த உருவத்தை முதல் முதலில் உணர்ந்து மனதில் இதன் ஸத்ரூபத்தை ஒருவாறு அனுபவித்துவிட்டால் நாமரூபாதி கழல மண் பெண் பொன் இவைகளிலுள்ள ஆசை நழுவி மோக்ஷாபேக்ஷை வளரும். இவ்வளவு ரஹஸ்யமாயும், கூடியவரையில் நேராயும் பரமநிலைஉணர்த்தும் விக்ரஹம் கோயில்மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றியேதான் ஒரு பெரியவரும் 'ஸகலத்தோற்றமும் அதாவது நாம

ரூபங்களும் கடந்து அப்பாற்பட்டு சேஷிப்பது எதுவோ அதுவே முடிவான மூலலிங்கம்' என்று கூறியிருக்கிறார்.

இந்த லிங்கத்தின் முன்பாக ஒரு காளைமாடு காணப்படும். அதற்கு நந்தி என்று பெயர். அது வெள்ளைமாடு. மாடுஎன்பது சாஸ்திரங்களில் தர்ம தேவதை எடுக்கும் ரூபம். ஆதலால், மாடு தர்மத்தை உணர்த்தும். வெண்மையான மாடாதலில் அது ஸாத்வீகமாயும் பரம்பொருளாகியலிங்கத்தினிடம்கொண்டு சேர்க்கும் ஸத்குணங்களாகிய **சமம், விசாரம், ஸந்தோஷம்,** ஸாதுஸங்கமாகிய நான்கு ஆத்மகுணங்களையே உணர்த்தும். நந்தி என்னும் பதத்திற்கு ஆனந்திப்பது என்றும் பொருள். இந்நான்கு குணங்களையும் சாஸ்திரங்களில் மோக்ஷவாயில் காவலாளர்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதற்கேற்பவ நந்தி எப்பொழுதும் லிங்கத்தையே நோக்கி உட்கார்ந்திருப்பதாகக் கோயில்களில் அமைக்கப்பட்டுள்ளது. சிவஸ்தானமாகிய கைலாஸத்தில்நந்திவாயில் காப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நந்திஅனுமதி இன்றிச் சிவதர்சனம் செய்யமுடியாது என்பது ஆத்மகுணங்களாகிய சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாதுஸங்கம் என்ற இவைகள்ஏற்பட்டால் அல்லது பரம்பொருளை ஸச்சிதானந்த அறிகுறி ரூபமாக உணரமுடியாது என்ற வேதாரஹஸ்யத்தை நன்கு வெளிப்படுத்தும். நந்தியைத் தாண்டிக்கொண்டுதான் லிங்கத்தைத் தர்சிக்க வேண்டும் என்பது விதி. இதுமுற்கூறிய குணங்கள் கிடைத்தபோதிலும் அவைகளோடு நின்றுவிடாமல் (அவைகளால் ஏற்படக்கூடிய சக்தி விநோதாதிகளில் ஈடுபட்டு கல்யாண சந்தடியில் தாலிகட்டமறந்ததுபோலநின்றுவிடாமல்)அவைகள் சென்றடையும் முடிவாகிய தன்னை, ஸச்சிதானந்தமாக அனுபவிக்கும் நிலையை,அவைகளுக்கு அப்பாற்பட்டே அடைய வேண்டும். ஆகவே இவைகளைப் பெற்ற போதிலும் நேராகப் பரம்பொருளை அனுபவிப்பதில் இவைகளும் தடையாகவே ஏற்படுமாதலால் இவைகளுக்கும் அப்பாற்படவேண்டும் என்பதாயிற்று. ஆனால் இவைகளை அலக்ஷ்யம் செய்யவேண்டும் என்பதல்ல. இதைக் குறிப்பிக்கக் கோயிலில் ப்ரதக்ஷிணதிகள் செய்யுங்கால் நந்திக்கும் லிங்கத்திற்கும் குறுக்கே போகலாகாது நந்தியையும் சுற்றவேண்டும் என்ற விதி ஒன்றிருக்கிறது. அதாவது ஸச்சிதானந்த அனுபவத்திலிருந்து வெளிப்பட்டு பிரபஞ்சவ்யவஹாரத்தில் வருங்கால்ஆத்ம குணங்கள் வழியாக அனுபவம் சேரும் வழிக்கு விரோதமானவைகளைச் செய்யாது ஆத்ம குணங்களிலேயே நிலைக்கவேண்டும் என்று கூறியதாயிற்று.

இத்தகைய சிறப்பு வாய்ந்த லிங்கத்திலிருந்து தான் தோன்றிய ஒருவர் மார்க்கண்டேயர் யமபயத்தை நீக்கினார், என்று சிவபுராணங்கள்கூறும். ஆகவே ஆத்மகுணங்கள் வழியாக ஏற்படும் மூலமான அனுபவத்திலிருந்து என்ன உண்டாகி என்ன செய்யும் என்ற சங்கை பிறக்கும். மார்க்கண்டேயர் திவ்ய கதை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆதலால் இங்கு எடுத்துக் கூறாது அதன் உட்பொருள் விஷயமாகக் கூறும் தக்ஷிணமூர்த்தி உபநிஷத் பாகத்தை இங்கு எடுத்து எழுதுவோம்.

गाढतामससंशान्त्यैगूढमर्थं निवेदयेत्
मोहभानुजसङ्क्रान्तं विवेकाख्यं मृकण्डुजम् ॥
तत्त्वाविचारपाशेन बद्धद्वैतभयातुरम् ।
उज्जीवयन्निजानन्दे स्वस्वरूपेणसंस्थितः ॥

'அடர்ந்த இருளை நீக்கிப்பரம்பொருள் ரஹஸ்யத்தை உள்ளபடி உபாஸகனுக்கு வெளிப்படுத்தும். விவேகம் என்னும்மார்க்கண்டேயர் மோஹ என்ற யமனால் தகைப்பட்டு('இந்த உடலை நான் என்று வரும் அந்தகற்கு ஆளாகவோ' என்பது தாயுமானவர் வாக்கியம்) தத்வ விசாரமின்மை என்ற கயிறுகளால் கட்டுண்டு, த்வைதம் என்னும் கொடிய பயத்திற்கு ஆளாகி தத்தளிக்கையில் உபாஸகன் உள்ளிருக்கும் ஸ்வஸ்வ ரூபமாகிய நிஜானந்தம்,விவேகம் என்னும் மார்க்கண்டே



யரைக் கிளப்பி உயிர் தருகின்றது' என்பது தக்ஷிணமூர்த்தி உபநிஷத் வாக்கியம். சிவலிங்கத்தை முற்கூறியபடி ஸச்சிதானந்தத்தை உணர்த்துவதாகக் கொண்டு உள்ளபடி வழிபட்டு வரவர ஒருவனுக்கு ஆத்மாவின் ஸத்ரூபம் தோன்றி நன்றாகத் திடப்பட அந்த உபாஸகனுக்குத் தேஹம் நான் என்ற புத்தி நீங்கி ஆனந்த போதமுண்டாகி அனந்தத்வம் ஸித்திப்பதை லிங்கத்துள்ளிருந்து பரம்பொருள் வெளியாகி யமனை உதைத்துக் காப்பது என்று மார்க்கண்டேய சரித்திரம் கூறும். ஆகவே லிங்கத்தை ஆராதனை செய்யச் செய்ய உபாஸகன் உள்ளேயே அந்த உபாஸகன் உள்ளிருக்கும் லிங்க ரூபத்திலிருந்து ஒரு ஸ்புரிப்புத் தோன்றி அவனுக்கு மோஹம், த்வைதம், தத்விசாரமின்மை ஆகிய இவைகளால் ஏற்பட்டிருக்கும் துக்கங்களைத் தீர்த்துநிஜானந்தமாக விளங்கும் என்பதாயிற்று. இந்த நிஜானந்த ரூபத்தை நடராஜ விக்ரஹத்திலும், உபாஸகன் உள்ளத்தில் ஸ்புரிப்பு ஏற்படும்படி செய்வதைத் தக்ஷிணமூர்த்தி விக்ரஹத்திலும் நன்கு விளக்கிக் காட்டியிருப்பதைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

இனி லிங்கத்தின் ஆகிருதியினாலே மேலான வேதரஹஸ்யம் ஒன்று நன்கு வெளியாகும். இதனாலேயே பெரியோர்கள் லிங்கம் மிகச்சிறந்த உருவம் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றனர். யோகிகள் த்யானம் செய்யுங்கால் ஆஸனமிட்டு உட்காரும் நிலைக்கு **யோகாஸனம்** என்று பெயர். காலை மடித்து உட்காருவதை போல உட்கார்ந்துமுழங்கால்களைமேலே தூக்கிக் கால்களைக் குறுக்காக நிற்கும்படி செய்து, அவ்வாறே மார்புக்கு எதிரே நிற்கும்படி நிறுத்திக் கட்டிக்கொண்டிருப்பதே இந்த ஆஸனத்தின் ஸ்வரூபம். இந்த ஆஸனம் இட்டு உட்கார்ந்ததும் அவர்களுக்கு இந்த லிங்க ஆகிருதி வந்துவிடும். ப்ரஹ்மைபூதரான ஸந்யாஸிகளை ஸமாதிவைக்குங்கால் இம்மாதிரி ஆஸனத்தில் கட்டிவைத்துத்தான் ஸமாதிவைப்பது. ஆதலால் வஸ்திரம் உடுத்தி பாணத்தின் தலைமேலும் வரும்படியாக முட்டாக்கிட்டு வஸ்திரம் சாத்தித் தூரவிருந்து நோக்கினால் யோகாஸனத்தில் வீற்றிருந்து தேஹபாவம் நீங்கி சித்திர தீபம்போல அசைவற்று ப்ரஹ்மமாகி நிற்கும் ப்ரஹ்மவரிஷ்டன் உருவம்,சாஸ்திர விஷயங்களை ஒருவாறு கற்றவன் எவனுக்குத்தான், லிங்கத்துள் அடங்கியிருக்கிறது என்று தோன்றாமலிருக்கும் ! ஆதலால் யாதொருவிளக்க ரூபத்தின் ஸஹாயமின்றியே சிவலிங்கம் தனது உருவத்தினாலேயே வேதாரஹஸ்யமான ப்ரஹ்மவரிஷ்ட நிலையை நன்கு விளக்கும். இவ்வாறு அசைவற்றிருந்துகொண்டு தன் ஸந்நிதானமாத்திரத்தில், ஒரு விஷயத்திலும் தாக்கின்றி, கோயில் ஸம்பந்தப்பட்டவர்கள் எல்லோரையும் தொழிற்படும்படி செய்து, அவரவர்கள் மனோதர்மத்திற்கேற்ப அவரவர்களுக்குத்தோன்றித் தகுந்த சீர்திருத்தங்களை உண்டாக்கி, தனது ரூபபேதங்களாகி தன் நிலையின் சிறப்பை வெவ்வேறு விதமாக ஜனங்களுக்கு விளக்கும் தன்மை வாய்ந்தமற்றைமானுஷ விக்ரஹங்களைத் திருவிழாக்களில் வெளியேற்றி எல்லோரையும் குதூஹலப்படுத்திப் பரிசுத்தமாக்கி, தான் ஒன்றொடும் தாக்கற்று எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு நிற்கின்றது. இச்சிவலிங்க மூலஸ்தான உருவம். இதனாலே அந்தப் பரமநிலையிலிருக்கும் ப்ரஹ்மவரிஷ்டன் இவ்வாறு தன்னிலை நழுவாது உலகிற்கு உபகரிப்பான் என்பதை இந்த லிங்கம் குறிக்கின்றது. இந்தக் கருத்துக்களுக்கேற்பவே மஹான்கள் ஸமாதிகளில் சிவலிங்கஸ்தாபனம் செய்தும் ஆலயங்கள் கட்டியும்,அவர்கள் உயிருள்ளவரையில் இதைப்போன்ற நிலையிலிருந்து பின்னர் இது உணர்த்தும் பரப்ரஹ்மமே ஆகிவிட்டனர் என்பது தோன்ற நமது பெரியோர்கள் செய்து வைக்கின்றனர். கோயிலில் சென்று வழிபடுங்கால் இத்தகைய எண்ணங்கள் நமது மனதுள் ஊறி நம்மைப் பரவசப்படுத்துமாயின், நமக்குஎளிதில் மேலானநிலையை அடையும்திறன் உண்டாகும் என்று கூறவும் வேண்டுமா ?

# இலங்கை
## CEYLON

இலங்கை என்பது இந்தியாவிற்குத் தெற்கில் இந்திய சமுத்திரத்தின்கணுள்ள ஒரு தீவு. இந்தியாவி லுள்ளவர்களுக்கு இலங்கையைப்பற்றிப் பேசப்புகுவது அநாவசியமாகத் தோன்றும்; கொல்லர் தெருவில் ஊசி மாறுவதோடு ஒக்கும் என்றும் சொல்லலாம். ஏனெனில் இந்தியருள் இராமாயணம் அறியாதார் யார்? இராமனையும் அவர் தமது தந்தை தசரதர் ஆணையால் தமது மனைவி சீதையோடும் தம்பி இலக்குமணரோடும் வனத்திற்குச் சென்றதையும்,வனத்திலே இராக்கதர்களோடு பகைத்ததையும், அது காரணமாக இலங்கைக்கரசனாகிய இராவணன் அவர் மனைவி சீதையைக் கவர்ந்து சென்றதையும், அவளை அவன் இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைத்ததையும், இராமர் சுக்கிரீவன் அநுமான் முதலியவாநரவீரர்களைத் துணைக்கொண்டு கடலில் அணைகட்டி இலங்கைமேற் சென்று இராவணனை யுத்தத்தில் வென்று சீதையைச் சிறைமீட்டியதையும், இலங்கைக்கரசனாக விபீஷணனை முடிசூட்டியதையும் இராமாயணம் படித்து அல்லது கேட்டு அறியாதார் யாவர்? ஆயினும் இராமாயணம் படித்தவர் ஒருவராயின் அதனைக் கேட்டறிந்தவர் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரா யிருத்தலினால் இலங்கையின் தன்மையை உள்ளபடி அறிந்தவர் ஒரு சிலரேயாவர். ஏனையோர் அறிந்த இலங்கை இப்போதுள்ள இலங்கையுமன்று; இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கையுமன்று, இராமாயணப் பிரசங்கிகளின் இலங்கையேயாம். இராமாயணப் பிரசங்கிகள் ஒன்றைப் பத்தாக்கி, பத்தை நூறாக்கி, நூற்றை ஆயிரமாக்கிப் புனைந்துரைப்பவர்களாதலின் அவருடைய இலங்கைக்கும் உண்மையிலங்கைக்கும் உள்ள ஒற்றுமை பெயர் மாத்திரையே யாகும். ஆதலின், இலங்கையைப் பற்றிப் பேசப் புகுவதில் குற்றமில்லை என்றே கொள்ளலாம். ஆயினுமென், நாம் பேசுவது இலங்கை அன்று; பொய்! பொய்! என்று ஒரே சொல்லில் ஒதுக்குவார் இப்போதும் இல்லாமல் இல்லை. இலங்கையை யார் கண்டார்? அங்கே யார் போகமுடியும்? கடலில் ஒரு சுழல் இருக்கின்றது; அங்கே போகிறவர்கள் அதனுள் அமிழ்ந்துவிடுவார்கள்; இலங்கைபோய்ச் சேரமாட்டார்கள். விபீஷணன் சிரஞ்சீவி; அவன் இலங்கையில் அரசாண்டு கொண்டிருக்கிறான்; அங்கே இராக்கதர்கள்தான் வசிக்கிறார்கள். மனிதர்கள் இல்லை. இங்கிலீசுகாரன் கண்டேனென்று சொல்வது இலங்கையன்று; பொய்! பொய்! என்று சொல்லுபவர்கள் இப்போதும் எத்தனை பேர் உளர்! இவர்களது அறியாமையை நீக்க முயலாதிருப்பது நன்றன்று; ஆதலின் இலங்கையைப் பற்றிப் பேசுவது அநாவசியகமாகாது.

ஈழம், ஈழமண்டலம், ஈழநாடு என்பனவும் இலங்கைக்குப் பெயர். ஈழம் என்பது பழஞ்சிங்களத்தின் பெயர். ஆகவே ஈழமண்டலம், ஈழநாடு என்பனவற்றிற்குச் சிங்களதேசம் என்பது பொருள். ஈழம் பொன்; பொன்மலையாகிய மகாமேருமலையின் கொடுமுடியுள் ஒன்றாதலின் இலங்கைக்கு ஈழமென்று பெயராயிற்றென்பது புராணகதை. இராமாயணத்தில் மாத்திரமன்றி வேறு பல வடநூல்களிலும் தமிழ்நூல்களிலும் மேலைத் தேசவாசிகளாகிய கிரேக்கர் உரோமருடைய நூல்களிலும் இலங்கை கூறப்பட்டுளது. ஆயினும் அவற்றுளொன்றிலாயினும் அதன் சரித்திரங் கூறப்படவில்லை. இலங்கையிலுள்ள சிங்களவரின் நூலாகிய மகாவமிசம் தீபவமிசம் என்பவைகளே அதன் சரித்திரத்தைக் கூறுகின்றன. இந்நூல்களின்படி கிறிஸ்து பிறப்பதற்கு 543 வருஷங்களுக்கு முன் வட இந்தியாவிலிருந்து விஜயனென்பவன் சில பரிவாரங்களோடு இலங்கை வந்துசேர்ந்து, அங்கிருந்த ஒருதலைவனுடைய மகளை மணம்புரிந்து, அவன் உதவியால் இலங்கையைக் கைப்பற்றி அதற்கரசனாயினானென்று தெரிகின்றது.



விஜயனும் அவன் பரிவாரங்களும் பேசின பாஷை பிராகிருதபாஷை. அதனிலிருந்தே சிங்களமுண்டாயிற்று. ஆகவே விஜயன் வருமுன் இலங்கையில் வசித்தவர்கள் பேசின பாஷை வேறு. அது தமிழேயாதல் வேண்டும். ஏனெனில் தென் தேசப் பாஷை தமிழே யாதலினாலும் இலங்கையில் சிங்களமும் தமிழுமன்றி வேறு பாஷையில்லாமையாலும். குறுந்தொகை என்னும் சங்கத்தமிழ் நூலில் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் பாட்டுத் தொகுக்கப் பட்டிருப்பது இலங்கையில் ஆதிகாலந் தொட்டுத் தமிழ் வழங்கி வந்ததற்கு ஒரு சான்றாகும்.

விஜயனும் அவன்பின் வந்தோரும் பெரிய குளங்கள் கட்டி நீர்ப்பாய்ச்சி உழவு தொழிலை விருத்தி செய்து இலங்கையைச் சிறப்புறச் செய்தனர். அவர்கள் அரசு செய்துவந்த காலத்திலே, கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு வருஷங்களுக்கு முன்னே இந்தியாவிலிருந்து அசோக சக்கிரவர்த்தியின் மகனாகிய மகிந்தனென்பவன் இலங்கைக்குப் போய்ப் பௌத்தமதத்தை உபதேசித்துச் சிங்களவர்களைப் பௌத்தர்களாக்கினான். அவனால் அக்காலத்தில் நிலை நாட்டப்பட்ட பௌத்தமதம் இன்னும் இலங்கையில் சிறந்து விளங்குகின்றது. ஐரோப்பியர் காலத்தில் கிறிஸ்தவர்களான சிலரொழிய ஏனையசிங்களவர்கள் பௌத்தர்களே. அவர்களுடைய மதம் பர்மா சீனா ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள பௌத்தமதம் போல வேறு கொள்கைகள் கலக்கப் பெறாது சுத்தமாக விளங்குகின்றது. சிங்களவரசர் காலத்திலே பௌத்த மதம் எவ்வளவு சிறப்புற்றிருந்ததென்பதற்கு இலங்கையின் பழைய ராஜதானிகளாகிய அநுராஜபுரத்திலும் பொலனறுவாவிலும் உள்ளனவாகிய கண்டோர் வியக்கும் ஆலயங்களும் விகாரைகளும் போதிய சான்றாகும். இவைகளிற் பல கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றைம்பது வருஷங்களின் முன் கட்டப்பட்டனவென்றால், இலங்கையின் சீர்திருத்தம் எவ்வளவு பழங்காலத்தது என்பது ஒருவாறு விளங்கும்.

அந்தக் காலத்திலேயே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மாறுபாடுண்டாகி யுத்தங்கள் நடந்து இலங்கை சில காலம் தமிழரசர் கைக்கீழும் சிலகாலம் சிங்களவரசர் கைக்கீழுமாகி யிருந்தது. சிலகாலம் இலங்கைலிருந்த சிங்கள வரசர்களும் தென்னிந்தியாவிலிருந்த சோழ பாண்டிய வரசர்களும் சிலகாலம் நண்பு கொண்டாடிக் கொள்வனவு கொடுப்பனவு செய்தும் சிலகாலம் பகைத்து யுத்தஞ் செய்தும், வந்தார்கள். பத்தாம் நூற்றாண்டில் தஞ்சாவூரில் அரசுபுரிந்த இராச ராசச்சோழன் இலங்கையைக் கைக்கொண்டு தனது இராச்சியத்தில்சேர்த்தான். அவனுடைய காலத்தின்பின் இலங்கை மீண்டு சிங்கள வரசாகி விட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலங்கையில் அரசாண்ட பராக்கிரம வாகு என்பவன் மிக்க பலமுள்ள அரசனாயிருந்தான். அவன் தனது நாட்டை அறமும் வளமும் சிறக்க அரசு செய்ததுமன்றித் தென்னிந்தியாவின்மேற் படையெடுத்து மதுரையில் ஆண்டிருந்த பாண்டியனை வெற்றிகொண்டு மற்றொருவனுக்கு முடிசூட்டினான்.

பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் பறங்கிக்காரர் என வழங்கும் போர்த்துகீசர் (Portuguese) இலங்கைக்கு வந்தனர். அவர்கள் முதலில் சிங்களவரசனிடத்திலிருந்து அநுமதி பெற்றுக் கொழும்பில் ஒரு கோட்டைகட்டி, பின்பு மெல்லமெல்ல யாழ்ப்பாணம் திருக்கோணமலை முதலிய கடலோரத்திலுள்ள ஊர்களைக் கைப்பற்றி, இலங்கை அரசர்களோடு ஓயாத சண்டையிட்டு தமிழர்களையும் சிங்களவர்களையும் கிறிஸ்தவர்களாக்க முயன்றனர். இவர்கள் ஏறக்குறைய நூற்றுநாற்பது வருஷம் இலங்கையில் அரசாண்டனர். பதினேழாம் நூற்றாண்டில் உலாந்தாக்காரர் (Dutch) வந்து,கண்டியிலிருந்த சிங்களவரசனோடு சந்துசெய்துகொண்டு, போர்த்துக்கீசரைத் துரத்த முயன்று, 1644-ம் வருடம்

நிகும்பலையைக் கைக்கொண்டு கோட்டைகட்டி, 1656-ம் ஆண்டு கொழும்பைப் பிடித்து, 658-ம் ஆண்டு பறங்கிக்காரரைக் கடைசியாக யாழ்ப்பாணத்திலிருந்தும் துரத்திவிட்டனர். உலாந்தாக்காரரும் இலங்கையில் நூற்றுநாற்பது வருஷமே யிருந்தனர். 1795-ம் ஆண்டு உலாந்தாக்காரருக்கும் இங்கிலீசுகாரருக்கும் சண்டை நேர்ந்தபோது இங்கிலீசுகாரர் இலங்கைமேற் படையெடுத்துச் சென்று உலாந்தாக்காரரைத் துரத்தி அவர்கள் ஆண்டுவந்த ஊரைக் கைப்பற்றினர். பின்பு 1815-ம் ஆண்டு கண்டியில் அரசு செய்துகொண்டிருந்த ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனைச் சிறைப்படுத்தி அவனிடமிருந்து இலங்கை அரசுரிமையை எழுதி வாங்கிக்கொண்டனர். அன்று தொடுத்து இலங்கை முழுவதும் இங்கிலீசுகாரரால் ஆண்டு வரப்படுகின்றது.

இலங்கையரசு இங்கிலீசுகாரருடையதாயினும் இந்தியாவோடு சம்பந்தமுடையதன்று. அது நேரே இங்கிலாந்து தேசத்து அரசரால் நியமிக்கப்படும் கவர்னர் ஒருவரால் ஆளப்படுகின்றது. ஆறுவருஷத்துக்கு ஒவ்வொரு கவர்னர்நியமிக்கப்படுவர். அவர்க்கு அரசியல் நடத்துதற்குத் துணையாகச் சட்டநிருவாகசபை சட்டநிரூபண சபை என இரண்டு சபைகளுள. முதலது ஒருவகை மந்திரசபை; இரண்டாவது சட்டங்கள் செய்யும் சபை. இச்சபை இந்தியாவிலுள்ள சட்டநிரூபண சபைகள்போல இவ்வருடம் பெரிதாக்கப்பட்டுளது. அச்சபையோரில் சிலரைத் தாமே தெரிந்து நியமிக்கக் குடிகளும் சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். அரசியலின் மற்றைய அங்கங்கள் இந்தியவரசியலின் அங்கங்களையே பெரும்பாலும் ஒத்தன. இந்திய அரசியலின் காரியங்கள் இங்கிலாந்திலுள்ள இந்திய மந்திரியால் பார்க்கப்படுமாறு போல இலங்கையின் காரியங்களெல்லாம் இங்கிலாந்திலுள்ள அகப்புற நாட்டு மந்திரியால் பார்க்கப்படும்,

(இன்னும் வரும்.)

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 12. ஔவியம் பேசேல்

பொறாமைச் சொற்களை நீ சொல்லாதே என்பது இதன் பொருள். இது கட்டளைரூபமாக இருப்பது. ஏன் பேசாதிருக்கவேண்டும், பேசினால் என்ன கெடுதி என்ற சங்கை நிகழும் இடத்து, கொன்றை வேந்தனில் 'ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு' அதாவது பொறாமைச் சொற்களை சொல்லுதல் சொல்லுபவன் செல்வத்திற்கு அழிவாம், என்று கூறியிருக்கிறாள் ஔவை. ஆகவே இங்கு ஒருவிதிவாக்கியத்தைக் கூறி அதை மீறி நடந்தால் ஏற்படக்கூடிய கெடுதியை எடுத்து விளக்கியதாயிற்று. இனி இதன் பொருளைச் சற்று ஆழ்ந்து ஆராய்வோம்.

ஔவியம் என்பது பொறாமைச்சொல் என்பதாயிற்று. ஆகவே பொறாமை உள்ளே அடக்கி அதை ஆதாரமாகக்கொண்டு வெளிவரும் சொல் என்பதும், உள்ளிருக்கும் பொறாமையை வெளிப்படுத்தும் சொல் என்பதும், ஸஹியாது படபடப்பாக வெளியிடப்படும் சொல் என்பதும் இதனுள் புதைந்து கிடக்கும் பொருள்களாயின. ஆக்கம் என்பதில் அகச்செல்வமாகிய ஒழுக்கமும் புறச்செல்வமாகிய பொருளும் அடங்கியுள்ளன.

இவைகளுள் ஒருவன் நம்முடன் சொல்லும் வார்த்தைகளை ஸஹியாது பொறுமையின்றி நாம் பேசுவதாக வைத்துக்கொள்ளுவோம். நமக்குப் பொறுமையில்லாததற்கு இரண்டுவிதக் காரணங்களிருக்கலாம். முதலாவது பேசுபவன் நமக்கு வேண்டியவனாக விருந்தும் நமது குற்றங்களை எடுத்துக்கூறி நம்மைத் திருத்த முயலுபவனாக இருக்கலாம். பிறர் குற்றங்களைத் தாராளமாக எடுத்துக்கூறி அவர்கள் சீர்திருந்த இருக்கும் வழிகளை வெளியிடும் சிறப்பும் நுட்பமும் வாய்ந்த அநேக மஹான்களுக்குத் தம் குற்றத்தைக்கண்டு சீர்திருந்த வகையறியாது விழிக்கும்



தன்மை அமைந்து கிடக்கும். இப்படி இருந்தும் பிறர் எடுத்துக் கூற வருங்கால் கோபம் முதலியன வருவதுண்டு. இது முதலில் நமது குற்றங்களுக்கு ஒருவாறு ஸமாதானம் கூறுவதாகத் தொடங்கும். வாக்கு முதிரமுதிர குற்றங்காட்டித் திருத்த வந்தவன் குற்றங்களை எடுத்துக் காட்டுவதாகிய ஔவியம் பேசுதலில் வந்துமுடியும். இதனால் ஒழுக்கச் செல்வம் குன்றும். அன்புடன் நம்மைச் சிறப்புறச்செய்யும்படி செய்ய வந்த நண்பன் இனி இவ்வாறு செய்யத் துணியான். நமது குற்றங்கள் வரவரப் பெருகிக்கொண்டே வந்து ஒழுக்கத்தை மாற்றி,' முடிவில் பொருள் சேருதலையும் அபகீர்த்தி மூலமாகத் தடுத்து விடலாம். இரண்டாவது, பேசுபவன் கெட்டவனாக விருந்து நய வார்த்தையால் நம்மை ஏமாற்ற வந்தவனாக விருக்கலாம். முகஸ்துதியில் ஈடுபட்டு பல்லிளியாத பிரபு, பகவான் ஒருவரே. அவரையும் பல்லிளிக்கப்பண்ணி விடுவோம் என்று துர்எண்ணங் கொள்ளுகிறான் துதி செய்யும் பக்தன். தெய்வத்தை ஏமாற்றப் பார்க்கும் மனிதன் தம்முள் சேர்ந்த பிரபுவைக் கண்டால் விடுவானா? இவ்வாறு செய்யும் ஒருவன் கருத்தை அறிந்த பிரபுவுக்கு நற்குணமிருப்பின் முதலில் கோபம் வரலாம். படபடப்பாய் அவனை வைது அனுப்பி விடும்படியும் நேரிடும். இவ்வாறு செய்வது நலம் என்றே உலகத்தவரும் கூறலாம். இவ்வாறு செய்யாவிடில் கொடியவர்கள் இம்மாதிரி நல்லவர்களின் குண உளவுகளை அறிந்து, கொள்ளை அடிக்கும்படி நேரிடும். ஆதலால் படபடப்புடன் கூறுவது நியாயம்தான் என்றும் தோன்றலாம். இதனால் பிரபுவுக்குப் புறச்செல்வமாகிய பொருளுக்கு யாதொரு குறைவு வாராமலும் இருக்கலாம். ஆயினும் இந்தப் படபடப்பையும் கூட அடக்கி விடவேண்டும் புத்திமானான பிரபு. முகஸ்துதி பண்ணுபவன் சொல்லி முடியும்வரையில் சும்மாவிருந்து இடையிடையே அவன் கூறுவதை நாம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதை முகக்குறிகளால் காட்டி முடிவில் ஸாவதானமாக அவன் இதுவரையில் கூறிவந்தது பயனற்றது என்பதைப் படபடப்பின்றித் தெரிவித்து விட்டு நமது வேலையை நாம் பார்த்துக் கொண்டிருப்பதே அகச்செல்வமாகிய ஒழுக்கத்தை இழக்காது இத்தருணங்களில் நடந்துகொள்ளும் விதம். இதை உள்ளடக்கியே தான் பொதுவாக ஔவியம் பேசேல் என்ற விதிவாக்கியம் பிறந்தது.

இனிப் பொறாமைச் சொல்லென்பதற்குப் பிறர் சீரும் சிறப்பையும் கண்டு ஸஹியாத கெட்ட குணத்தைக் காட்டும் சொல் என்று கொண்டு, இதை வெளிப்படையாகக் காட்டும் சொல்லால் விளையும் ஆக்க அழிவை எடுத்துக் கூறுவோம். சொல்லால் இக்குணம் வெளியாகும்படி ஒருவன் நடந்துகொண்டால் அவனுடன் பேசும் நற்குண முடையோருக்கு அவனிடம் வெறுப்புண்டாக நல்லோரிணக்கமும் அதன் மூலமாக ஏற்படக்கூடிய நியாய ஸம்பாத்திய வழியும் தடைபட்டுவிடும். இவனைப் போன்ற பொறாமைக்காரர் நேசமே ஓங்கிவிடும். இதன் மூலமாகக் கொடியவழிகளில் பொருள் தேடும் கொடிய குணமும், பொறாமைக்கு ஆதாரமாகவிருப்பார் கஷ்டங்களைக் கண்டு மகிழும் துர்க்குணமும், அவர்களுக்குப் பொல்லாங்கு செய்யவேண்டிய சூழ்ச்சியும் குடிகொள்ள அவன் உலகத்திற்கே ஒருவித கண்டகனாகி விடுவான். ஆதலால் இவனுக்கு ஒழுக்கச் செல்வமும் பொருட்செல்வமும் குன்றி அதோகதி யடையும்படி வந்துவிடும். இவன் முதலில் மனித தண்டனைக்கு ஆளாகி முடிவில் கடவுள் தண்டனைக்கு உட்பட வேண்டிவரும்.

பின்னர் பொறுமை இன்மையை உள்ளடக்கிக் கொண்டு வெளியே கூறும் சொல்லால் விளையும் கேடு என்ன? பொதுவாக அகம் வேறு புறம் வேறு என்றிருக்கும்படி நடப்பதே ஒழுக்கக் கேடல்லவா? இந்த விஷயத்தில் அகத்தைப்போலப் புறத்தையாக்குவதும் பெருங்கேடு என்று முன்னரே கூறியாகி விட்டது. ஆதலால் புத்திமான் உள்ளிருக்கும் பொறாமையை அழித்துவிட முயல

வேண்டும். இம்மாதிரி ஔவியம் பேசுதல் தேர்ந்தவர்களுக்கும் ஒவ்வொரு ஸமயங்களில் உருமாறிவரலாம். ஒரு பெரியவருக்கு ஒருவன் தீங்கிழைத்து விட்டான் என்று வைத்துக் கொள்ளுவோம். பொறுமையில் பழகுபவராதலால் மற்றவர்களைப்போல அவருக்குப் பொறுமை இன்மை கொடிய சொற்கள் மூலமாக வெளிப்படாது. முழுப்பொறுமையுடனிருப்பாராயின் அவன் செய்த தீங்கை லக்ஷ்யம் செய்யாமல் இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாது மனம் கொஞ்சம் கலங்கும். இப்படியிருக்கையில் அவரிடம் மரியாதையுள்ள ஒருவன் கொஞ்சம் இரங்கி அவருக்கு வந்த கஷ்டத்தை எண்ணித் துக்கித்தால் போதும், ‘அவன் எப்படியேன் போகட்டும். நாம் எதற்கு அவனை வையவேண்டும். எல்லாருக்கும் பொதுவான கடவுளிருக்கிறார் தகுந்தபடி படியளக்க’என்று உள்ளிருக்குஞ் சஞ்சலம் வெளியாகும். இது வையாமல் வைத வசவு, உள்ளிருக்கும் பொறுமை இன்மை பெரியவருக்கும் தெரியாத வேஷங்கொண்டு வெளிவரும்விதம் இதுவே. பழக்க விசேஷத்தால் இதுகூட வெளிவாராது மௌனமாக மனங்கலையாதிருக்கும் நிலையைப் பற்றவேண்டும். உள்ளே கலக்கம் எழுங்கால் ‘எங்கும் பரம்பொருளேயாக விருக்கும் இப்பிரபஞ்சத்தில் யார்யாரை வருத்துவது’என்ற கம்பீரபாவம் வந்து அதைத் தடுக்கும்படி பழகவேண்டும். இதை வாய்விட்டுமாத்திரம் கூறிவிடலாகாது. இதுவரையில் மனக்கலக்கம் உள்ளிருக்க வெளிவரும் ஔவியம் பேச்சையும், அது இவ்வாறு ஒழுக்கமாகிய ஆக்கத்திற்கு அழிவு என்பதையும் விளக்கினோம். இனி ஸாதாரணமாக வேதாந்தம் கற்பவர் மனக்கர்வத்தால் உலகச் சிறப்பைப் பழிப்பதும் ஔவியம் பேசுதலே. உலகச்சிறப்பை இகழ்ந்து கூறுங்கால் தமக்கு அது இல்லாததனால், அது வருங்கால் ஆவலுடன் ஏற்கும் குணம், அப்பொழுது குற்றங் கூறப்படுவோரைப்போல நடக்கும் ஆற்றல் இவைகள் தம்மிடமே இருப்பவை என்று உணராது ஒருவித கொடிய வெறுப்பால் பழித்துக்கூறுவது உண்டு. இதனால் விஷய வைராக்யம் என்னும் மேலான ஒழுக்கநிலை உண்டாகவே மாட்டாது. தாம் பரம வைராகி என்று மோசம்போய் தகுந்த சமயங்களில் விஷயங்களில் மாட்டிக்கொண்டு இவர்கள் தத்தளிப்பர். இத்தகைய ஔவியத்தையும் பேசலாகாதுஎன்பதை ஒருபெரியவர், ‘துன்பமே அநேகருக்கு ஒரு பெரிய மோக்ஷ ஸாதனமாக இருக்கிறது, ஆதலால் தனவானுடைய தனத்தையும், ரூபவானுடைய ரூபத்தையும், போகத்தில் உல்லாஸமாய்க் களித்திருப்பவரது போகத்தையும் நாம் கண்டு பொறாமைகொள்ளாது, அவற்றிற்கு ஆளாயிருப்போருக்கு இரங்கி, துன்பரூபமாகக் கடவுளது அனுக்ரஹத்தைப் பெற்றோரைக் கண்டு கைகூப்புவதே ரஹஸ்யமான தத்வ வழியாம்.’ என்று விளக்கி உபதேசிக்கிறார்.

**இடலி** என்னும் தேசத்தில் வெனிஸ் என்னும் ஒரு பட்டணம் உண்டு. அதில் முன்னொரு காலத்தில் **அண்டோனியோ** என்ற ஒரு வர்த்தகனிருந்தான். இவன் பிராண ஸ்நேகிதனான **பெஸானியோ**, ஒரு பெரிய சீமாட்டியை விவாஹம் செய்ய நினைத்து அண்டோனியோவிடம் பொருளுதவியைக் கோரியிருந்தான் அந்த ஸமயத்தில் அவனிடம் ரொக்கப் பணமில்லாமலிருந்தது. தோழன் காரியம் முக்கியம் எனக் கண்டு, அவ்வூரிலிருந்த ஷைலாக் என்ற ஸாவகாரிடம் போய்க் கடன் கேட்டான். அந்த ஸாவகார், ஜாதியில் யூதன், இவர்களோ கிறிஸ்தவர்கள். சாந்தர்களாக விருக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் என்று அவர்கள் மதம் எவ்வளவு கூறினும் கிறிஸ்தவர்களுக்கு யூதர்களிடம் ஜென்மப்பகை. அவர்களை நாய் என்றும் பேய் - என்றும் ஏசுவது பரிஹாஸம் செய்வது வழக்கம். அதற்கேற்ப யூதர்களிடம் பணத்தாசையும் இருந்தது. கடினமான வட்டி வாங்குவது அவர்கள் வழக்கம். இப்படி எல்லாம் இருந்ததால் கிறிஸ்தவர்களிடம் யூதர்களுக்கும் துவேஷம். ஷைலாக்கிடம் அண்டோனியோ நயமாகக் கேட்டுத் தன் தோழனுக்காக



3000 நாணயங்கள் வாங்க யத்தனிக்க அப்பொழுது நடந்த ஸம்பாஷணையில் அண்டோனியோவும் அவன் தோழர்களில் சிலரும் கொடிய பொறாமைச் சொற்கள் சொல்லி வழக்கம்போல் அவனைப் புண்படுத்தினர். எவனுக்கும் புண்படுத்திவிட்டால் கோபம்வரும். ஆதலால் ஷைலாக்கிற்கு முன் இவர்களிடமிருந்த பகையும் வந்துசேர மனம் பதைத்தது. ‘எத்தனை நாளைக்குள் கொடுப்பாய்?’ என்று கேட்டான். ‘மூன்றுமாதத்திற்குள்: வட்டி என்னவேண்டும்?’ என்று மறுமொழி பிறக்க, ‘எனக்கு வட்டி வேண்டியதில்லை. நீ அதற்குள் கொடுக்காவிட்டாலோ! என்ன தண்டனைக் குட்படுகிறாய்?’ என்று வினவினான் ஷைலாக். அவனை மறுபடியும் கேலிபண்ணிவிட்டு ‘நீ என்னவேண்டும் என்கிறாயோ அதன்படி நடக்கிறேன்’ என்று மிகக் கர்வமாகச் சொன்னான். ‘ஸரி அப்படியானால் நீ குறித்தகாலத்தில் கொடுக்காவிட்டால் உன் தேஹத்தில் ஹிருதயத்தருகிலிருந்து ஒரு பவுன் மாம்ஸம் அறுத்து எடுத்துக் கொள்ள அனுமதிகொடுக்க வேண்டும்’ என்றான். கூடிய சீக்கிரத்தில் இந்தப் பணத்தைத் திருப்பிவிட்டு யூதன் கொடுமையைப் பின்னர் தூற்றலாம் என்று எண்ணிக்கொண்டே அண்டோனியோ ஒப்புக்கொண்டு விட்டான். இருதிறத்தார் பக்கத்திலும் ஔவியம் பேசுதல் ஏராளமாக விருந்தது. இப்படியிருக்கையில் அண்டோனியோ, கப்பல்கள் கடலில் அழிந்துவிட அவனுக்குப் பெருநஷ்டம் வந்துவிட்டது. வாங்கியதொகையைக் குறிப்பிட்ட காலத்தில் கொடுக்க முடியாமல் போக யூதன் பொறாமை அதிகரித்து விட்டது. மிகுந்த ஆக்கிரகத்துடன் உடன்படிக்கைப்படி நடத்தக் கச்சேரியில் மனுக்கொடுத்து விட்டான் ஷைலாக். அண்டோனியோ ஔவியம் பேசி பிறரைப் புண்படுத்தியதற்குத் தகுந்தபடி சீரும் சிறப்பும் இழந்து கச்சேரிவந்து உடன்படிக்கைப்படி உள்படத் தயாரானான். இதற்குள் அவன் தோழன் பெண்சாதியான சீமாட்டி பெரிய வக்கீல் வேஷம் பூண்டுவந்து கச்சேரியில் மிகத் திறமையுடன் வாதாடி முதலில் ஷைலாக்கிற்கு அனுகூலமாகப் பேசுவதுபோலக் காட்டி என்ன பணம் கொடுத்தாலும் இப்பொழுது’ எனக்கு வேண்டியதில்லை. எனக்கு உன் உடன்படிக்கையே குறி என்று அடிக்கடி அவனைச் சொல்லும்படி செய்து, அவனை மாம்ஸம் அறுக்கத் தயாராகும்படி செய்தாள். அண்டோனியோ காரியம் முடிந்து விட்டது என்று எல்லோரும் துக்கித்தனர். இத்தருணத்தில் அவள், உடன்படிக்கையை வாசித்து ‘ஷைலாக் இதைப் பார், உனக்கு உடன்படிக்கையேஆதாரம்; இதற்கு அணுவேனும் மாறி நடக்கலாகாது. இதில் ஒரு பவுன்மாம்ஸம் மாத்திரம் எடுக்கும்படிதான் கண்டிருக்கிறது. நீ எடுப்பது பொன் நிறையாக ஒரு பவுன்தான் இருக்கவேண்டும்! சற்று ஏறவும் கூடாது குறையவும் கூடாது! மேலும் ரக்தத்தைப்பற்றி இதில் பேச்சே இல்லை. ஆதலால் ரக்தம் ஒரு பொட்டுக்கூட வரக்கூடாது ஜாக்கிரதை! உன் உடன்படிக்கைப்படி நீ ஸரியாக நடந்து உன் கார்யத்தை முடித்துக்கொள். சற்று விரோதப்பட்டால் நீ பெரும் குற்றத்திற்கு ஆளாவாய். உடன்படிக்கையைப் பார் இதோ!’ என்று அவன் கையில் அதைக் கொடுத்துவிட்டாள். பார்த்தான் ஷைலாக்! தன் உடன்படிக்கையிலேயே தான் மாட்டிக்கொண்டுவிட்டான்! என்ன செய்வான்! மூன்று பங்கு பணம் கொடுத்துவிட்டும் எனக்குப் போதும் என்று வழிக்கு வந்துவிட்டான். வந்த வக்கீல் யுக்திசாலியாகையால், ‘உனக்கு உன் உடன்படிக்கையே ஆதாரம், அதன்படி மூன்றுபங்கு பணம், அல்லது ஏதாவது பணம் வாங்க அதிகாரம் இருக்கிறதா பார்? என்று ஒரு கேள்வி கேட்டாள். நடுநடுங்கிப்போய் விட்டான் ஷைலாக். தனக்கு ஒரு காசுகூடக் கிடையாது என்று தோன்றிவிட்டது. ‘வீட்டிற்குப் போகிறேன்’ என்று புறப்பட்டான். அதற்குள் வக்கீல் ‘நில் போகாதே! பொறாமையால் ஒருவன் மற்றொருவன் உயிரைக் கவர நினைந்தான்’ என்று கச்சேரியில் தெரிந்து விட்டால்,

அக்கொடியவன் ஸொத்தில் பாதி ராஜனைச் சேர்ந்தது; பாதி கஷ்ட ஸ்திதியிலிருப்பவனைச் சேர்ந்தது என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அது உன் விஷயத்தில் இப்பொழுது பொருத்தமுடையதாகவிருக்கிறது. ஆதலால் உனக்கு ஸொத்து இப்பொழுது ஒரு காசுகூடக் கிடையாது. நீ அண்டோனியோ தயவை எதிர்பார்க்க வேண்டியதுதான்’ என்று கூறி ஷைலாக்கை அதோகதிக்குக் கொண்டுவந்து விட்டாள். பின்னர் ஷைலாக் நல்லவனாகிக் காலம் கழித்து வந்தான். இங்கு அண்டோனியோ எவ்வளவுநல்லவனாகியும் ஔவியம் பேசியதால் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகித் தத்தளித்தான். ஷைலாக் கெட்டவனாயிருந்தபடியால் அவன் கொடுமைக்குத் தகுந்த காரணமிருந்தபோதிலும், பொறாமை மிகுதியால் மீளா அதோகதியை அடைந்தான்.

இனி:—

மாதர்முன் னுத்தரனும் மாபலவான் போலுரைத்துக்
காதமரில் அர்ச்சுனனாற் கட்டுண்டான்—ஆதலினால்
வண்மைபெறு புன்னை வனநாதா சீருடைய
திண்மையுன்னி ஔவியம்பேசேல்.

என்பது இந்த நீதிவாக்ய ஸம்பந்தமான ஆத்திசூடி வெண்பா. இதில் விராடராஜன் பிள்ளை உத்தரன் பெண்டுகள் முன்னிலையில், தான் ஒருவனே கௌரவர்களை எல்லாம் முறியடிப்பதாகக் கூறிப் பெருமைபேசி பிரகந்நளையாகிய அர்ச்சுனனால் தேரோட்டப்பட்டு யுத்தகளம்போய், அங்கு ஸமுத்ரம்போன்ற சேனைகளைக் கண்டு வெருண்டு ‘ஐயோ! நான் சித்திரத்திலிருக்கும் ஸேனைபோல் அசையாதிருக்கும் இது என்றல்லவோ எண்ணினேன். இவைகள், கோரமாக அசைந்தாடுகின்றனவே’ என்று நடுங்கி ஓட ஆரம்பித்தான். அவனைத் தேர்தட்டில் உட்காரவைத்து ஸாரதிஸ்தானத்தில் கட்டிவைத்து அர்ச்சுனன் சண்டைசெய்து ஜயித்தான். உத்தரன் ஔவியம் பேசிப் பட்ட பாடு இங்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## கிராமங்களில் குடியமர்ந்த மாஜி உத்தியோகஸ்தர்கள் ஜனானுகூலமாய் என்ன செய்யலாம்

## WHAT RETIRED OFFICIALS CAN DO TO IMPROVE THE RYOTS.

நமது நாடு நானாவிதத்தினுஞ் சீர்பட்டுக் கொண்டுவரினும் ஆங்கில பாஷையைக் கற்று பட்டணவாசஞ் செய்துவருஞ் சில புத்திமான்களைத் தவிர, நம்மில் பெரும்பாலர் காலத்துக்கேற்ப ஒழுக்கங்களை யனுசரித்து மேம்பட வியலாதவர்களாயிருக்கிறார்கள். இதன் காரணத்தை யெளிதிலுணரலாம். நமது தேசம் எப்பொழுதும் விவசாயத் தொழிலையே மேற்கொண்டிருந்ததால் ஜனங்களில் பெருந்தொகையார் கிராமங்களிலமர்ந்து சாகுபடி செய்து வருகிறார்கள். மற்றெவ்வகைப்பட்டார்க்கும் பழுதிருக்க, உழுதுண்டு வாழ்பவர்க்கு மாத்திரம் எக்காலத்திலும் இம்சையில்லாதிருந்ததால் அவர்கள், ராமனாண்டாலென்ன ராவணனாண்டாலென்ன வென்று வெளியில் நடக்கும் சச்சரவுகளையுஞ் சமாதானங்களையுங் கவனிக்காமலும் அவற்றிற் கலக்காமலுஞ் சுகமே வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நிலத்திலிருந்து ஏராளமான தானியமும் மற்றைய உள்பொருளுங் கிடைத்ததால் எவர் பரிபாலனஞ் செய்தபோதிலும் அவர்க்குச் சேரவேண்டிய இறையைச் சரியாகக்கொடுத்துக் கிராமப்பஞ்சாயத்தார் ஏற்படுத்திய சட்டதிட்டங்களுக்கடங்கி ராஜாங்கவதிகாரிகளைக் காணவேண்டிய நிமித்தமில்லாமலே வாழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட கிரரமவாசிகள் இப்பொழுது மிகுந்துகொண்டு வருகிறார்கள். பட்டணங்களில் கல்வி கற்ற தமது சகோதரர்கள் சுதேசத்துக்காகவுஞ் ஜனத்துக்காகவும் பரிந்தியற்றுங் காரியங்களை யிவர்கள் கவனிக்கிறதில்லை. கிராமவாசிகளின் பிள்ளைகளும் ஆங்கிலங் கற்று உத்தியோகத்திலோ வியாபாரத்திலோ பட்டணங்களிற்



சென்று அமருகிறார்களென்பது உண்மையே. இப்பிள்ளைகளும் கால மாறுபாட்டை யுணர்ந்து அதற்குத் தக்கபடி சீர்திருத்தமடைகிறார்களென்பது முண்மையே. ஆனால் இப்பிள்ளைகளின் பெற்றோர் தம்மக்கட்கு ஆங்கிலவித்தையளிப்பது சம்பாத்தியஞ் செய்வதற்கே யென்றும், அப்பிள்ளைகள் சீர்திருத்தக் கொள்கைகளைக் கொண்டிருப்பின் அது நீசபாஷையைக் கற்றதாலேற்பட்ட விக்கினமென்றும் நம்புகிறார்கள். அப்படிச் சீர்திருத்தம் பெற்றவொருவன் ஒருகிராமஞ்சென்று தன்னபிப்பிராயங்களை வெளியிடினோ அவன் நிர்வாண தேசத்திற் கௌபீனதாரியாகிவிடுகிறான். அவன் சநாதன தர்மத்தினின்றும் வழுவினவனென்றும் ஆங்கிலபாடசாலையில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவனென்றும் நிராகரிக்கப்படுகின்றான். கிராமத்தாரின் நிர்ணயமென்னவென்றால் தம் வாழ்வுக்கு எவ்வாழ்வு மீடாகாதென்பதே.

இப்படி இந்திய ஜனத்தொகையில் பெருங்கணக்கினர் சீர்திருத்த விஷயத்தில் பாராமுகமாயிருக்கும்போது ஊக்கமும் விடாமுயற்சியுமுள்ள ஒரு பாகத்தினர் மாத்திரம் பரிதபித்து மன்றாடி சகல ஜனங்களுக்குமென்று சில அனுகூலங்களைப் பெறுவதிலென்ன பயன்? இவ்வனுகூலங்களைப் பெரும்பாலாராவது தகுந்தபடி யுபயோகிக்கக் கூடியவரா யிருக்கவேண்டும். இப்பொழுது நாம் பல சுதந்தரங்களையும் உரிமைகளையும் பெற்றிருக்கிறோமென்பது வாஸ்தவமே. ஆனால் அவ்வுரிமைகளைக் கிராமங்களில் வசித்துவரும் நம்மினும் அனுபவமும் பகுத்தறிவும் குன்றிய நமது சகோதரர்களுடன் கலந்தனுபவித்தாலொழிய நமது கடமையை நாம் சரியாகச் செலுத்தினவராக மாட்டோம். ஆதலால் மாஜி உத்தியோகஸ்தர்களுடைய முதற்கடமை கிராமங்களில் போயமர்ந்து கிராமவாசிகளுக்குத் தற்கால விருத்தாந்தங்களைப் போதித்து அவர்கள் சுதந்திரங்களைப்பெறவும் அவற்றைச் செவ்வனே யுபயோகிக்கவும் அருகராகச் செய்வதே. அப்படிச் செய்யும் உத்தியோகஸ்தர்கள் தம்மாத்திரம் எவ்வளவு சீர்திருத்தமுடையவரா யிருப்பினும் கிராம வழக்கங்களை முற்றிலுங் கண்டனஞ் செய்யாமல் அவற்றில் குணமுள்ளவற்றையும், பாதகமில்லாதவற்றையும் தாமும் அனுசரித்துக் கிராமத்தாரைத் திருப்தி செய்து அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தம் வழிகொண்டு வரவேண்டும். இப்படியே யன்றோ பூர்வத்தில் ஆரியர்கள் திராவிடர்களை இந்துக்களாக்கினார்கள்.

கிராமங்களில் மேற்சொன்ன உத்தியோகஸ்தர்கள் செய்யக்கூடிய திருத்தங்களாவன:—

முதலாவது. இல்லாத விடங்களில் பிரதம வித்தையையேனுங் கற்பிக்க சிறு பாடசாலைகளை யேற்படுத்தல். தென்னிந்திய கிராமங்களில் இது ஒரு பிரமாத காரியமல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோவிலேனுஞ் சத்திரஞ் சாவடியேனு மவசியமிருந்து தீரும். இவ்விடங்கள் பொது ஸ்தலங்களாதலின், நானா ஜாதியாருந் தடையின்றி யவற்றுட் புகலாம். பாடசாலைக்குத் தனிக்கட்டிடம் வேண்டுமென்றுந் தொந்தரையின்றிப் பொது ஸ்தலங்களிலேற்படுத்தலாம். பட்டணங்களிற்போல காலை 10-மணி முதல் மாலை 4 மணி வரையில் பாடசாலையைத் திறந்து வைப்பதென்பது கிராமங்களில் முடியாத காரியம். குடியானவப் பிள்ளைகள் மாடு மேய்க்கவோ, சுள்ளி பொறுக்கவோ, புல் பிடுங்கவோ குறித்த சமயங்களில் போகவேண்டி யிருக்குமாதலினாலும் அப்பிள்ளைகளினுதவி பெற்றோர்களுக்கவசியமாதலாலும், பெற்றோர்களிடம் யோஜித்து சௌகரியமான சமயங்களில் பிள்ளைகளைச் சேர்த்துக் கற்பிக்கவேண்டும். பள்ளியில் தெய்வபக்தி மாத்ருபக்தி, பித்ருபக்தி, குருபக்தி இவற்றைக் கற்பிப்பது போலவே தேசபக்தியையும் புகட்ட வேண்டும்.

**2-வது.** கிராமவாசிகள் தேச விருத்தாந்தங்களை யறியும்பொருட்டு ஒரு புத்தகசாலை ஏற்படுத்தி ராஜவிசுவாசமும் தேசபக்தியும் பொருந்திய சமாசாரப்பத்திரிகைகளையுந் தருவிக்கவேண்டும். ராஜாங்க வேற்பாடுகளையும் ஜனங்களுரிமைகளையும், இதரநாட்டபிவிருத்திகளையுங் கூறுங் கிரந்தங்களைக் கிராமத்தார்க்குப் படிக்கத் தந்து குறித்த காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். உத்தியோகஸ்தர்களும் நியாயவொழுக்கங்களைப்பற்றியும், தேசாபிமானம், ஜனானுகூலக் கைங்கரியங்கள், ஜாதிகளுக்குள் சகோதரத்துவம், ஒற்றுமை, இழிந்தோரையுயர்த்தல் முதலிய விஷயங்களைப்பற்றி அடிக்கடி உபந்நியசிக்கவேண்டும்.

**3-வது.** விவசாயத் தொழிலினபிவிருத்திக்காக அயல்நாடுகளில் கண்டுபிடித்துள்ள சாதனங்களையும் ஏற்பாடுகளையும் ஜனங்களுக்குக் கற்பிக்கவேண்டும். உழைப்பாளிகளான குடியானவர்கள் இலகுவில் சொற்பவட்டியில் கடன் வாங்கித் தங்கள் கழனிகளைச் சீர்திருத்தவும் சாமக்கிரியைகளைப் பெறவும் சகாய நிதிகளேற்படுத்த வேண்டும்.

**4-வது.** வழக்குகளை நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகாமல் உள்ளூரிலேயே தீர்த்துக்கொள்ள பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

**5-வது.** நாகரீகத்தின் கழிப்புகளாகிய குடி, சூது முதலியன வணுகாவண்ணம் மிக்க கவனமாய்க் கிராமத்தைப் பாதுகாக்கவேண்டும்.

**6-வது.** கிராமத்திலுண்டாகும் விளைபொருள்களில் அதிகமானவற்றை அயலூர்களில் சரியாக விக்கிரயப்படுத்தவும் கிராமத்துக்கு வேண்டிய பொருள்களைச் சரசமாய் வாங்கிக் கிராமத்தார்க்களிக்கவும் ஒரு பண்டகசாலையேற்படுத்தலாம்.

**7-வது.** கிராமத்தாருக் கனுகூலமான சிறு கைத்தொழிற் சாலைகளேற்படுத்தி அவற்றில் கிராமச் சிறுவர்களைப் பயிற்றுவிக்கலாம்.

**8-வது.** பாலிய விவாகம், கன்யாசுல்கம், வரசுல்கம், வயோதிக வாலிப விவாகம், பெருஞ்செலவு மணம், நகைப்பைத்தியம் முதலியவற்றின் கெடுதிகளை ஜனங்களுக்கு விவரித்து அவ்வழக்கங்களைத் தடுக்க முயலவேண்டும்.

**9-வது.** சுகாதாரவழிகளை ஜனங்களுக்கு நன்குணர்த்தி ஒவ்வொருவரும் தம் வீடுவாசல்களையும் பொதுஸ்தல பொது ஜலங்களையும் சுத்தமாயும் அழகாயும் வைத்திருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**10-வது.** தீண்டா ஜாதியாரென்று சொல்லப்படும் நீசஜாதியாரை விலக்கி அந்நிய நாட்டாரிடம் ஒப்பிவிக்காமல் அவர்களைக் கருணையுடன் ஆதரித்து அவர்கள் கல்வி கற்கவும் திருப்தியுடன் வாழவும் வேண்டிய அனுகூலங்களைச் செய்யவேண்டும்.

வி. சுப்பிரமணியம், பீ ஏ.

**சிரிப்பு**—தெரியாத மூடனும் நற்பயிற்சி யற்றவனுமே எடுத்த காரியத்திற்கெல்லாம் படபடவென்று நகைப்பார்கள். இப்படி நகைத்தல் பாமர ஜனங்களின் ஸ்வபாவமேயன்றிக் கற்றறிந்தவர்களுடைய குணமல்ல. ஹ! ஹ! ஹா! என்று வாய்விட்டுச் சிரித்தல் சிலரிடம் பெரும் பயித்தியக்காரத்தனம். உண்மையான ஹாஸ்யம் மனதிற்கு ஒருவித சந்தோஷத்தை மாத்திரம் கொடுக்கும்; வாய்விட்டுச் சிரிக்கும்படி ஒருநாளும் செய்யாது, அவ்வித சந்தோஷமானது மூகத்தைப் பிரசந்நப்படுத்துவதில் தென்படுமேயல்லாது பல்லையிளிப்பதில் விளங்காது. அசட்டுத் தனமான விகடம் பரிஹாசம் இவைகள்தாம் வாய்விட்டு மனிதனைச் சிரிக்கச் செய்கிறது. ஒருமனிதன் பின்னால் நாற்காலி இருப்பதாக நினைத்து உட்காரப்போய் அப்படியில்லாமல் விழுவானேயானால் சிலர் படபட வென்று சிரித்துவிடுவார்கள்; ஆனால் அந்தச் சபையில் தெரிந்த வித்வான்களும் நற்பயிற்சி உள்ளவர்கள் மட்டும் இருந்தால் அவர்கள் சிரிக்கவே மாட்டார்கள். இப்பேர்ப்பட்ட சமயங்களில் சிரித்துவிடுவது எவ்வளவோ இழிவான காரியம். சிலமனிதர்கள் பேச்சுக்குப் பேச்சு சிரிப்பார்கள். சாதாரணமான சங்கதி சொல்லும்போதுகூடச் சிரித்துக்கொண்டே சொல்லுவார்கள். இவர்களைப் பெரும் பயித்தியக்காரர்களென்றே சொல்ல வேண்டும்.



## ஒரு நூற்றாண்டில் இந்திய நாட்டிலேற்பட்ட மாறுபாடென்ன?

## CHANGES IN INDIA DURING A CENTURY

இதரதேசங்களில் பல நூற்றாண்டுகள் சென்றாலன்றி முடியாத சீர்திருத்தங்கள், ஒரு நூற்றாண்டில் இந்தியாவில் சாத்தியமாயின வென்றால் நமது நண்பர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆயினும் உண்மையை விவகரித்தால் விஷயங்கள் விசிதமாகும். பாரசீகம், ஆப்கானிஸ்தானம், சீனா, சீயம் முதலிய நாடுகள் எத்தனை நூற்றாண்டுகளாக அந்நியர் கைப்படாமல் சுயமாகவே ஆட்சி புரிந்துவருகின்றன. அப்படியிருந்தும் அந்நாட்டுக் குடிகளுக்கிருக்குஞ் சுதந்தரமென்ன? அக்குடிகளனுபவிக்குஞ் சௌகரியங்களென்ன? அந்நாட்டரசர்களால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளுடையவும் அதிகாரிகளுடையவும் நடத்தைக்கு வரம்பு என்ன வேற்பட்டிருக்கிறது? இராஜாங்கத்தை கண்டித்தேனும் அதிகாரிகளை நிந்தித்தேனும் எவனாவது பேசினாலும் அல்லது எழுதினாலும் அவன் அதோகதி யாவானன்றோ? ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்நாட்டரசர்க்கு மந்திரிகளாவதுண்டா? சிற்றூர்களையும் பேரூர்களையுமாட்சிபுரிய குடிகளுக்குச்சுவாதீனமுண்டா? விசாரணையின்றிச் சிறைச்சாலையில் வைத்தலும், அற்பக் குற்றங்களுக்குத் தேக உறுப்புகளை வெட்டிவிடலும், பெருங் குற்றங்களாயின் சித்திரவதைக்குட் படுத்தலும் இந்நாடுகளில் சாதாரண வழக்கங்கள். ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கிருக்கும் அதிகாரம் கங்குகரையற்றது. அவ்வதிகார பலத்தைக்கொண்டு அவர்கள் செய்யுமக்கிரமம் சொல்லத் தரமல்லாதது. தெய்வத்துக்குப் பயந்து தர்மத்தைக் கடைபிடித்த சிலவதிகாரிகள் தவிர மற்றைய எவரும் சுயநலம் பாராட்டி ஜனங்களை வருத்தி அதிலாபமடைந்து வருகிறார்கள். இவ்விராஜ்யங்களில் வாழ்வுந் தாழ்வும் நீர்க்குமிழியை யொத்தன. வேலியே பயிரை மேய்ந்த கதையாக இவ்வதிகாரிகளின் உபத்திரவம் பொறாமலும் தங்கள் குறையைத் தீர்த்துக்கொள்ள வேறுவகை தோன்றாமலும் நலிந்த குடிகள் அயல் நாடோடிப் பிழைத்து வருகிறார்கள்.

நமது இந்திய தேசமோ பத்து நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்நிய நாட்டாரால் ஆளப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற ஒன்றரை நூற்றாண்டுகளாகத் தான் ஆங்கிலேயர், நந்நாட்டில் ஊர்ஜிதமாக ஸ்தாபனஞ்செய்து ஆட்சிசெலுத்தி வருகிறார்கள். சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் நாம் நமது தேசத்தில் நடக்கும் விஷயங்களையே அறிந்துகொள்ள வழியில்லாமலும், அயல்நாடுகள் எங்கிருக்கின்றன அவற்றின் நாகரீகம் நடையுடை பாவனை எப்படிப் பட்டவையென்பவற்றை யறியத் திறனில்லாமலு மிருந்தோம். கூப மண்டூகம்போல நாமிருக்குமிடமே சொர்க்கம், நமது ஊரார் சொல்வதே வேதசாஸ்திரமென்றெண்ணி நமது சாமர்த்தியத்தை யெல்லாம் நங்குடியானவரிடத்திலும் நம்முயற்சியையெல்லாம் ஏருழுவதிலும், பரம்படிப்பதிலும், நீர் பாய்ச்சுவதிலும் களை பிடுங்குவதிலும் செலுத்தி வந்தோம். நம்மில் எவரேனுங் காசிக்கேனும் இராமேசுவரத்துக்கேனும் போய் வந்துவிட்டால், அவன் லோகப் பிரதட்சிணம் பண்ணினவனாய் விடுகிறான். என்று குதிரைக்காரன் (துருக்க வீரர்) வந்து விடப்போகிறானோ வென்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு காலங் கழித்து வந்தோம். இந்த நூறு வருஷத்தில் இந்தியாவி லேற்பட்ட மாறுபாடு தானென்ன? உலகத்தில் எந்தத் தேசத்தில் என்ன சாகசங்கள் செய்தபோதிலும் அவ்வித சாகசங்களை நாமுமறிய வகைகளேற்பட்டிருக்கின்றன. இன்று அமெரிக்காவில் நடக்கும் விஷயங்களை நாளை நாமறிய சக்தியுடையவர்களா யிருக்கிறோம். பதினைந்தே தினத்தில் லண்டன் நகரம் போய்ச்சேர

நம்மாலாகும். கன்னியாகுமரி யிலிருப்பவன் காஷ்மீரத்திலிருக்கும் தன் நண்பனுக்குக்காலணா செலவில் தன் அபிப்பிராயத்தை வெளியிடலாம். நாம் சேகரிக்கும் பொருளை நமது சந்ததிகளனுபவிப்பார்களென்ற நம்பிக்கை கொள்ளலாம். வெந்தழல் ரதமேறி உலகமெல்லாஞ் சுற்றலாம். ககனமேற் பறக்கலாம். ராஜாங்கத்தை யெதிர்த்து வழக்கிடலாம். வெகு சொற்பச்செலவில் உலகில் பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான்களுடையவும் வாக்சமத்காரருடையவும் பாட்டையும் பேச்சையும் அவர்களை வரவழைக்காமலே நமது வீட்டில் கேட்கலாம். அங்கங்கு நடந்த விசேஷ கார்யங்களையும் பிரபல யுத்தங்களையும் நம்மூரிலேயே நடந்தது நடந்தபடி காணலாம்.

இம்மாத்திரமேயா? இந்த நூறு வருஷங்களுக்குள் நாம் அயல் நாட்டாரின் சாஸ்திரங்களையும் வித்தைகளையுங் கற்று அந்நாட்டாருக்கு நாம் எவ்விதத்திலு மிழிந்தவரல்ல வென்று சொல்லும்படி நமது சாஸ்திர நிபுணர்களையு மடைந்திருக்கிறோம். நம்மவர்கள் அயல்நாடுகளிலெல்லாஞ் சென்று கீர்த்தியுஞ் செல்வமும் பெற்று வந்திருக்கிறார்கள். ஐரோப்பியர் வகித்திருக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தையும் நாமும் பழுதின்றி வகிக்க அருகரானோம். ஒவ்வொரு பேரூரையும் நம்மால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களே பரிபாலனஞ் செய்யும்படியான சுதந்தரத்தைப் பெற்றோம். நமது கவர்னர்களுக்கும், ராஜப்பிரதிநிதிக்கும் நமது குறைகளைத் தெரிவித்து நாமுவக்கும்விதமா யனுகூலங்களைச் செய்யும்படிக்குப் புத்தி சொல்லத்தக்க புத்திமான்களைத் தேர்ந்தெடுத்தனுப்புகிறோம். இந்திய காரியதரிசியும் நமது நாட்டாரை யமைச்சரா யழைத்துக்கொள்ளும்படியான பாக்கியத்தைப் பெற்றோம். நாமனைவருமொருங்கு கூடி நமது குறைகளை யுணர்ந்து அவற்றை வெளியிட வருஷாவருஷங் கூட்டங்கள் கூடுகிறோம். தேசாபிமானத்தையும் மதாபிமானத்தையும் நாளுக்குநாள் அபிவிருத்தி செய்யும்படி வற்புறுத்தும் தலைவர்களையும் பெற்றுள்ளோம். இழிந்தோரையு மெளியோரையு முயர்த்தவும் ஜனானுகூலஞ் செய்யவும் பாடுபட்டு வருகிறோம். கல்வியுங்குணமும் மேம்பட்டு நாம் புனிதராக வேண்டிய வேற்பாடுகளையுஞ் செய்து வருகிறோம். ஆபாச வழக்கங்களை யகற்றி யறிவுள்ளவராகிறோம். நமக்குரிய சுதந்தரங்களையும் உரிமைகளையும் முழுதும் பெற முயலுகிறோம். பலமதங்களைத் தழுவும் இந்திய ஜனங்களுக்குள் ஒற்றுமையையும் சகோதர பாவத்தையு முண்டு பண்ணிவருகிறோம். தங்குதடையின்றி நினைத்தவிடம் போய்வரச் சுதந்தரம் பெற்றுள்ளோம். அயல் நாட்டார் படையெடுத்து வருவார்கள், யுத்தங்கள் நேரிடும் என்ற பயமில்லாமலே வாழ்ந்து வருகிறோம். பிண்டாரி தக் ஜாதியாரின் திகிலில்லாமலிருக்கிறோம். எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்குமென்னு முதுமொழி, எளியாரை வலியாரடித்தால் வலியாரை நியாய மடக்குமென்று மாறி வருவதைக் காண்கிறோம்.

~~~~~~~~~~

**ரஹசியம்.**—நீ ஒரு சங்கத்தில் கேட்ட சங்கதிகளை மற்றொரு சங்கத்தில் கொண்டுபோய் ஒப்பிவிக்காதே. சில சங்கதிகள் வெளியில் ஒன்று மில்லாதது போல இருக்கும் ; அநேக ஜனங்களிடத்தில் பாவப் பரவ நமக்குத் தெரியாமலே நமக்குத் தீங்கை விளைவிக்கும். ஒருவன் நம்முடன் ஸம்பாஷிக்கும்பொழுது சம்பாஷிப்பவன் கருத்து என்னவென்றால், நாம் அவனிடம் கேட்கும் சங்கதியைப்பகிரங்கமாய் எல்லாரிடமும் சொல்லிக்கொண்டு திரியாமலிருப்போம் என்பதேயாம். அப்படியில்லாமல் ஒருவரிடத்தில் கேட்கும் சங்கதியை மற்றொருவருடன் சொல்லிக்கொண்டு நாம் திரிவோமேயானால் நாம் நம்மையே அநேக ஆபத்துக்களுக்கு உள்ளாக்கிக் கொள்வதுடன் நமது மதிப்பையும் குறைத்துக்கொள்வதற்கு இடமாகும். வேறு சபைகளில் நாம் பிரவேசித்தாலும் நம்மை ஜனங்கள் நம்பமாட்டார்கள்.
~~~~~~~~~~



ஆனரபிள் மிஸ்டர்
பி. எஸ். சிவஸ்வாமி அய்யர், ஸி. ஐ. ஈ.
எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் மெம்பர்.



# நியாயமாலா

## POPULAR MAXIMS EXPLAINED

### 24. उदकनिमज्जन न्यायः
ఉదక నిమజ్జన న్యాయః
உதக நிமஜ்ஜன ந்யாயம்

### 25. उपयन्नपयन्धर्मे न्यायः
ఉపయన్నపయన్ధర్మ న్యాయః
உபயன்ன பயந்தர்ம ந்யாயம்

### 26. उपवासभैक्ष न्यायः
ఉపవాస భైక్ష న్యాయః
உபவாஸ பைக்ஷ ந்யாயம்

### 27. उभयतः पाशरज्जु न्यायः
ఉభయతః పాశరజ్జు న్యాయః
உபயதః பாசரஜ்ஜு ந்யாயம்

---

### 28. उष्ट्रकण्टकभक्षण न्यायः
ఉష్ట్రకంటక భక్షణ న్యాయః
உஷ்ட்ரகண்டக பக்ஷண ந்யாயம்

**ஒ**ட்டகம் ஸாதாரணமாக முள் நிறைந்த இலை அல்லது வேப்பிலை முதலியவைகளைத் தின்னும். இவைகள் வாயைக் குத்தி ரக்தம் வழியும்படி செய்தபோதிலும், வாய்க்கு ருசியாக வில்லாத போதிலும், அதையே விடாது தின்னுவது அதன் இயற்கை. இம்மாதிரி ஒருவிஷயத்தில் அற்ப சுகம் வருகின்றது என்று அதனால் உண்டாகும் பெருங் கேட்டைக் கருதாது, அவ்விஷயத்திலேயே முயற்சிக்கும் பற்றுடையவர்கள் விஷயத்தில் இந்யாயம் உபயோகப்படும். இதற் கேற்பவே **குமரகுருபர ஸ்வாமிகளும்** தாம் எழுதிய நீதிநெறி விளக்கத்தில், தன் பெண்சாதி எவ்வழியிலும் சிறந்தவளாக விருப்பினும், பிறர் தாரமே கதி என்று அலையும் சிற்றின்பத்தில் மூழ்கும் பாமரர்கள் நிலையை இந்த ந்யாயத்தால் விளக்குகிறார்.

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

என்பதில் இந்யாயம் அமைந்துகிடக்கின்றது.

*　*　*　*　—கற்பில்லா

மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

என்றாள் **ஔவை**.

வேம்பன்றோ காக்கை விரும்புங்கனி

என்பது நன்னெறி

இவைகளிலிருந்து இந்யாயம் உபயோகப்படும் இடங்கள் நன்கு விளங்கும்.

### 29. एकंसन्धित्सतोऽपरंप्रच्यवत इति न्यायः
ఏకం సంధిత్సతో పరమ ప్రచ్యవతేయితి న్యాయః
எகம் ஸந்தித்ஸதோ பரம்ப்ரச்யவத இதி ந்யாயம்

**வெ**ண்கலப்பாத்திரத்தை ஒரு இடத்தில் ஓட்டை யடைக்கப் புகுந்த ஒருவன், கொடுக்கும் சூடால் சிற்சில ஸமயங்களில் வேறுபக்கம் உருகி ஓட்டை விழுந்துபோகும். இதுபோல ஒரு கஷ்டத்தை நீக்க முயலுகையில் அந்த முயற்சியாலேயே வேறுகஷ்டம் கிளைக்கும் இடங்களில் இந்த ந்யாயத்தை உபயோகிக்கலாம். உலகத்திற்கு உபகாரம் செய்வது, உலகதுக்கத்தை நீக்கமுயலுவது எல்லாம் இந்த ந்யாயத்திற்கு உதாரணம். உலகம் வளைந்த நாய்வாலைப்போல என்று ஒருவர் கூறுகிறார், அதை எவ்வளவு ஜாக்கிரதையாக நீட்டிவைத்தபோதிலும் அது உடனே வேகமாகச் சுருண்டுகொள்ளுந் தன்மை உடையது, அதுபோல உலகத்தில் ஒருவிதமாக நன்மைசெய்யத் தொடங்கினால் அது வேறு விதத்தில் கஷ்டமாக ஏற்படுவது நமது அனுபவம். இக்காலத்தில் விதவாவிவாகம் செய்து பால்ய விதவைகள் நிலையை உயர்த்தவேண்டும் என்று ஜீவகாருண்ய முயற்சி செய்கின்றனர் மனங்கனிந்த சில மஹாஜனங்கள். இந்தச் சீர்த்திருத்தம் நிலைபெற்றிருக்கும் மேனாட்டில் பால்ய ஸ்திரீகள் நிலை உயர்ந்து விட்டதா? பால்ய ஸ்திரீகள் கல்யாணமில்லாது தவிக்கவேண்டி வந்துவிட்டது. இந்த நியாய விஷயத்தை **விவேகாநந்த** ஸ்வாமிகள்

இந்த உதாரண விஷயமாகப் பொருத்திக் கூறுகிறார். 'நமது நாட்டிலே பூமி எல்லாம் பால்ய விதவைகள் கண்ணீரால் சேறுகிறதே என்கிறார்கள் சில கோழை மனதுடையோர். மேனாட்டிலோ வாயுவெல்லாம் பால்யப்பெண்கள் கல்யாணமில்லாது தவிக்கும் பெருமூச்சால் நிறைந்திருக்கிறது. ஆதலால் அவஸரப்பட்டு எவ்வித ஒழுங்கையும் பழித்துவிடாதேயுங்கள், சீர்திருத்தப்புகுந்தவர்களே. மனிதன் உலக நன்மைக்குச் செய்யும் கார்யங்கள் முடிவு இதுதான். துக்கத்தை ஒரு இடத்தில் ஒருதிறத்தாரிடமிருந்து நீக்கினால், அதே முயற்சியால் அவர்களுக்கே வேறு விதமான துக்கம் ஏற்படுவது என்பதே இவ்வுலக ஒழுங்கு. வீணாக ஆராயாது பழிப்பதால் சண்டை சச்சரவு ஏற்படுமே ஒழிய ஒருவித நன்மையும் ஏற்படாது' என்று கூறி இந்யாய விஷயம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

### 30. एकसंबन्धि ज्ञानमपरसंबन्धिस्मारकं न्यायः

### ఏకసంబంధి జ్ఞానమపర సంబంధి స్మారక న్యాయః

### ஏகஸம்பந்திஞான மபரஸம்பந்தி ஸ்மாரக ந்யாயம்

இரண்டு வஸ்துக்களை நாம் எப்பொழுதும் சேர்ந்தே பார்த்திருந்தோமாகிலும் அல்லது கேட்டிருந்தோமாகிலும், அவைகளில் ஒன்றை மாத்திரம் வெகுநாள் கழிந்தபின்னர் பார்க்க அல்லது கேட்கவேண்டி நேரிட்டால் அதனோடு சேர்ந்த மற்றொன்றும் உடனே ஞாபகம் வந்து விடும். யானையையும் பாகனையும் சேர்ந்தே பார்ப்பது வழக்கம். பின்னொரு காலத்தில் இவ்விரண்டுள் எதையாவது தனிமையாகக் கண்டு விட்டால் மற்றொன்று திடீரென்று ஞாபகம் வந்துவிடும். ஆங்கல கவிதாக்கள் இந்த விஷயத்தில் ஐந்து இந்திரியங்கள் மூலமாக இந்த ஸம்பந்த வஸ்து ஞாபகம் வருவது ஸாதாரணமாயினும் வாஸனை அதாவது மூக்கின் மூலமாகக் கிளறப்படும் ஞாபகமே ஏராளமாகவும் மிக தீவிரமாகவும் இருக்கும் என்று அபிப்பிராயப் படுகின்றனர். இதனாலேதான் நல்ல புஷ்பங்களைப் பகவானுக்கு அற்பிதம் செய்து வரவேண்டும் என்பதும், அப்படிச் செய்துவந்தால் அந்தப் புஷ்பங்கள் வாஸனை நம் மூக்கில் படும்பொழுது,பூஜை த்யானம் முதலியன உடனே ஞாபகம் வந்து சற்று மெய் மறக்கச் செய்யும் என்பதும் நம் முன்னோர் கொள்கை. திருநெல்வேலி ஜில்லாவில் அரளிப்பூ அல்லது கஸ்தூரிப்பட்டை என்ற புஷ்பம் ஏராளம். உத்ஸவங்களில் வாஹனத்தைச் சுற்றியுள்ள சப்பரத்தில் இப்பூவாலாகிய மாலையைத் தொங்கவிட்டு அலங்கரிப்பது வழக்கம். இக்காலங்களில் அவ்வூர்க்கோயிலில் சென்று பழக்கமிருப்பவர்களுக்கு எவ்வளவுகாலம் சென்றபோதிலும் இந்தப் புஷ்பம்,இதன் அத்தர் இவைகளைமுகரும்படி நேரிட்டால் கோயில் அமைப்பு, உள்ளே ஸ்வாமியை வாஹனத்தில் அலங்கரித்துக்கொண்டிருத்தல், அங்குள்ள ஏற்பாடுகள் முதலியன திடீரென்று மனதில் தோன்றி சற்று மண்ணைத்தைக் கவர்ந்துவிடும். காமுகர்களும், ஜாதிமுதலிய புஷ்பங்களை முகர்ந்து தமது காதலிகள் விஷயத்தில் ஈடுபட்டு மெய்ம்மறந்திருப்பது வழக்கம். ராஜா ரவிவர்மா என்ற அத்புத சித்ரங்கள் எழுதுபவர், தாம்எழுதியுள்ள ரஸிகமனோராஜ்யம்(Sweet recollections) என்ற படத்தில் ஒரு பெண் ஒரு புஷ்பத்தை முகர்ந்ததும் நாயகனுடன் தான் இருந்த மாதிரிகளின் ஞாபகம் மனத்தில் தீவிரமாக எழச் சொக்கிக் கிடப்பதுபோல வரையப்பட்டிருக்கிறது. இதனால்தான் மனதில் நாம் செய்யும் கர்மங்களால் ஏற்படும் ஒருவிதப் படிவிற்கு நம் முன்னோர்கள் வாஸனை என்று பெயரிட்டார் போலும். மூக்கால் முகரப்படும் வாஸனை எவ்வாறு நமது எண்ணங்களைக் கிளறி விட்டு நம்மைப் பரவசமாக்குகின்றதோ அதுபோல நாம் முன்னர் ஆவலுடன் செய்துள்ள கர்மங்களுக்கேற்ப உண்டாகியிருக்கும் மனப்படிவு ஒன்று வெளிவருங்கால் அதன் ஸம்பந்தமான மற்றவைகளைக் கூடவே தீவிரமாகக் கிளப்பி பெரிய மனோராஜ்யத்தில் ஆழ்த்திவிடும். ஆகவே உலக விஷயங்களில் தர்மப்படிஒவ்வொருவனும் அனுபவித்துத் தீரவேண்டியவைகளை எல்லாம் பகவத் விஷயம் ஆத்மவிஷயம் ஆகிய இவைகளுடன் ஸம்பந்தப்படுத்தி அனுபவித்து வந்தால், அவ்விஷயங்களைக் காணுங்கால் நமக்கு ஒருவித அந்தர்முக ஸத்விஷய நாட்டம் ஏற்பட இந்யாயப்படி விஷய ஸம்பந்தம் குறைந்துகொண்டே வரும். உலகில் ஸுகதுக்கங்கள் மாறிமாறி ஒன்றன்பின் ஒன்றாக ஸம்பந்தப்பட்டு வருகின்றன. இந்யாயத்தை அனுஸரித்துத் துக்கம் வருங்கால் பின்னர் எப்படியும் ஸுகம்வந்தே தீரவேண்டும், விடியா இரவும் உண்டோ ஆதலால் ஸுகம்வரும் என்று தேறி துக்கத்தில் மூழ்காமலும், ஸுகம் வருங்கால், இது அல்பம் திடீரென்று துக்கத்தில் கொண்டுவிடும் என்று இந்யாயப்படியே மதித்து அதில் தாக்கற்றும் நிற்கவேண்டியது அறிவுடையோர் கடன். எது எது வருகிறதோ அததில் அழுந்தி மேல் ஒன்றுமில்லை என்று கிடந்து துடித்து மூழ்கும் மாந்தருக்கும் இந்யாய விசாரம் நாளடைவில் சாந்த மனதை உண்டாக்கும்.

### 31. कण्ठचामीकर न्यायः

### కంఠచామీకర న్యాయః

### கண்டசாமீகர ந்யாயம்

இது கழுத்தில் அணியப்படும் ஆபரண ஸம்பந்தமான ந்யாயம். ஆட்டைக் கழுத்தில் போட்டுக்கொண்டு ஊரெங்கும் தேடுகிறாயா என்ற வசனம் இந்யாயக் கருத்தை அடக்கியுள்ளது. இந்த ஆபரணம் கழுத்தில் போட்டுக்கொள்ளுவதாதலால் சிற்சில ஸமயங்களில் இதை மறந்துவிடும்படி நேரிடும். அப்பொழுது கழுத்திலிருக்கிறது என்று உணரும்வரை இதைப் போட்டுக்கொண்டிருப்பவர் பாடு கஷ்டந்தான். இது கழுத்தோடு ஒட்டி நிற்குமாதலால் நேரிடக் காணவும் முடியாது. கழுத்திலிருக்கிறது என்ற திடநம்பிக்கை வர முதலில் நமக்கு வேண்டியவன் எதிரிலிருந்து 'உன் கழுத்தில் அந்த ஆபரணமிருக்கிறதே! ஏன் தேடுகிறாய்?' என்று தெளியக் கூறவேண்டும். உடனே இந்த ஞாபகம் வந்து அவன் கஷ்டத்தைத் தீர்க்கும். இக்கருத்தைக் **கைவல்ய நூலாசிரியர்.—**

மனைக்குள் வைத்தபண்டங்களை மறந்தவன்
வருஷ நூறழுதாலும்
நினைத்து உணர்ந்தபின் கிட்டும், அப்படி
இந்த நிர்மல ஆத்மாவும்
அனர்த்தமான தன் மறதியைக் கெடுத்து
தன்னறிவினால் காணாமல்
கனத்த கர்மங்கள் நூறுகம் செய்யினும்
காணுமோ காணாதே'

என்று கூறி இந்யாயத்தின் மதவிஷயப் பொருத்தத்தையும் நன்கு விளக்கி யிருக்கிறார்.

இந்யாயம் முக்கியமாக மதவிஷய ஸம்பந்தமானது என்பதை இங்கு நன்கு விவரிப்போம். கழுத்தோடு ஒட்டியிருக்கும் ஆபரணம் ஒன்றைப் போட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்குத் திடீரென்று அந்த ஆபரணம் எங்கே என்ற மயக்கமாகிய மறப்பு உண்டாயிற்று. அது ஏன் உண்டாயிற்று எப்பொழுது உண்டாயிற்று என்று அவனால் கூறமுடியுமா. ஆகவே அது இருக்கிறது என்பதுதான் விளங்குமே ஒழிய விசாரிக்கப்புகின் அவனுக்கு அது அனாதி என்று மாத்திரந்தான் தோன்றும். உடனே ஆபரணமில்லையே என்ற எண்ணம் பிறக்கும். உடனே ஐயோ கெட்டுப் போய்விட்டதே என்று பரிதவிப்பான். இப்படித் திண்டாடுங்கால் நமது தோழன் வந்து 'அடே மூடா! ஆபரணத்தைக் கழுத்தில் போட்டுக்கொண்டே வீடெங்கும் தேடுகிறாயே' என்று கூற 'ஆஹா! அப்படியா' என்று தேறுதல் உண்டாகும். உடனே தோழன் அவன் கையை ஆபரணத்தில் வைத்து 'இதோ இருக்கிறதே! வேண்டுமானால் பார்!' என்று கூறி ஒரு கண்ணாடி எடுத்துக் காட்ட தொட்டுப் பார்த்தும் ஆபரணமிருக்கிறது என்ற உணர்ச்சி ஏற்படும். உடனே படபடப்பு நீங்கும். மனம் இவ்விஷயத்தில் அலைபாய்ந்து ஓடாது நிலைபெற்றுச் சுகமுண்டாகும். ஆகவே இந்த மனோராஜ்யத்திற்கு ஏழு நிலை உண்டு, அவையாவன (1) மறப்பு, (2) இல்லை என்பது, (3) கெட்டுப்போய் விட்டது, என்று பதறுதல் (4) தோழன் வாக்கால் தேறுதல், (5) தோழன் காட்ட நேரிடக் காணுதல், (6) பதட்டம் அடங்குவது, (7) சாந்தாநந்தம், ஆகிய இவைகளே. இந்த ஏழு அவஸ்தைகளையும் **கைவல்ய நூலாசிரியர் தசபுமான் திருஷ்டாந்தத்தால்** நன்றாக விளக்கி இந்யாயத்தின் அருமையைக் காட்டுகிறார்.

இந்த மாயையினால் ஜீவர்க்கு
எழு அவஸ்தைகள் உண்டாகும்,
அந்த எழவஸ்தை தம்மை
அடைவினில் மொழியக் கேளாய்
மூந்த அஞ்ஞானம், மூடல்,
முளைத்தல், காணாத ஞானம்,
ஸந்ததம் கண்ட ஞானம்,
தழல் கெடல், குளிர்மையாதல்:
பிரஹ்மமாம் தன்னை மறந்த
பேதமையே அஞ்ஞானம்,
பானிலை காணேம் என்று
பகர்தலாவரண மூடல்,
நரனொரு கரத்தால் ஜீவன்
நானெனல் முளைத்த தோற்றம்,
குரவன் வாக்கியத்தால் தன்னைக்
குறிகொளல் பரோக்ஷஞானம்.

தத்துவ விசாரம்செய்து ஸகலமும் தேகமும்போய்
அத்துவிதானந்தனாதல் அபரோக்ஷ ஞானமாகும்
கத்தனும் ஜீவபோதம் கழிவது துக்கம்போதல்
முத்தனாய் எல்லாம் செய்து முடிந்ததானந்தமாமே.

இது நினக்கறியும் வண்ணம் இப்படி ஒருதிருஷ்டாந்தம்
புதுமையாம் கதைகேள், பத்துப் புருடரோ ஆற்றைநீந்தி
உதக தீரத்திலேறி ஒருவன் ஒன்பது பேரெண்ணி
அதனொடு தசமன் தான் என்றறியாமல் மயங்கிநின்றான்.

அறியாதமய லஞ்ஞானம் அவனில்லை காணேம் என்றல்
பிறியா வாவரணமாகும், பீழைகொண்டழல் விக்ஷேபம்
நெறியாளன் தசமனுண்டு நிற்கின்றான் என்றசொல்லைக்
குறியாகவெண்ணிநெஞ்சில்கொள்வதுபரோக்ஷஞானம்.

புண்ணியபதிகன்பின்னும் புருஷர் ஒன்பதின்மர்தம்மை
எண்ணும் நீ தசமனானை, என்னவே தன்னைக்காணல்
கண்ணிற் கண்டஞானம், கரைதல்போவது நோய்போ
திண்ணிய மனதில் ஐயம் தெளிதலானந்தமாமே. [தல்

இங்குக் கூறப்பட்டுள்ள பத்துப்பேர் அவிவேக பூர்ண குருவின் சிஷ்யர்கள் என்றும், இக்கதை உணர்த்தும் ஜீவனது எழு அவஸ்தைகளும் முறையே (1) அஞ்ஞானம், (2) ஆவரணம், (3) விக்ஷேபம், (4) பரோக்ஷஞானம், (5) அபரோக்ஷ ஞானம், (6) துக்கநிவர்த்தி, (7) ஆனந்தப்ராப்தி ஆகிய இவைகளே என்றும் சாஸ்திரங்கள் கூறும். தன் உண்மைஸ்வரூபத்தை மறந்தவன் வெகுகால அப்யாஸத்தால் தன்னைப்பகுந்து உணர்ந்து அனுபவிக்குங்கால் 'தத்வமஸி' நீயே பரம்பொருள், என்று குரு உணர்த்த தேறி நிற்பதே மனிதரது பரமபுருஷார்த்தம் என்று குறிப்பதே இந்நியாயத்தின் நோக்கம்.

# நல்லொழுக்கம்

## GOOD CONDUCT

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்—திருக்குறள்.

உலகில் எல்லாப் பொருள்களிலும், உயிரானது சிறந்ததாயினும் அவ்வுயிரானது நல்லொழுக்கத்தைப்போல இழிந்தார்க்கும் உயர்ந்தார்க்கும் ஒப்ப விழுப்பந் தாராமையின், அவ்வொழுக்கத்தை உயிரைக்காட்டினும் ஒப்பப்படும் என்றார் திருவள்ளுவ நாயனார். ஒருவனுடைய நற்குண நற்செய்கைகளானவை அறத்துக்குக் காரணமாய் இம்மையிலும் மறுமையிலும், இன்பத்தைப் பயக்கும். ஆனால் தீயவொழுக்கமோ, பாவத்துக்காரணமாய் இம்மையிலும் துன்பத்தையே பயக்கும். உலகில் மானிடராய் பிறந்தோரெல்லாம் அடையக்கூடிய எல்லாவற்றிற்கும் சிறந்த இன்பமானது இம்மை மறுமையின்பமே. இதை யடைய யாவரும் நன்னெறி பூண்டொழுகுபவராயும் தெய்வபக்தி மிகுதியுமுடையவராயும் இருத்தல் அவசியம்.

பக்தியுடைமை, ஈகையுடைமை, பொறையுடைமை, அடக்கமுடைமை, உண்மையுடைமை, வெஃகாமை, வெகுளாமை, புறங்கூறாமை, செய்ந்நன்றியறிதல், பிறனில் விழையாமை, நடுவு நிலைமை இவைகளும் இவைபோன்ற பிறவும் நல்லொழுக்கங்களாம்.

நற்குணமுடைமைக்குப் பக்தியுடைமை முதற்காரண மாகலின் அதனை முதலில் எடுத்துக் கூறினும். இடம் பொருள் ஏவல் முதலியவைகளைக் கவனியாமல் தங்களால் இயன்றவளவு நற்குண நற்செய்கையுடையவராயிருத்தல் வேண்டும்.

ஈகையுடைமை யென்பது தரித்திரத்தினால் வருந்தி தம்மிடம் வருவார்க்கு இல்லை யென்னாமற் கொடுத்தல். யாசித்தால் இல்லை யென்று மறுக்காமலும் இவன் உறவினன் இவன் சினேகிதன் இவன் அப்படியல்லாதவன் என்று வரையறை செய்யாமலும் வறுமைப் பட்டவர்களுக்குத் தன்னாலியன்ற மட்டில் கொடுக்கவேண்டும். ஒருவன் தன்னாலியன்றமட்டும் தருமத்தைச் செய்வானானல் அவ்வறமானது அவனுக்கு இம்மையில் புகழையும், மறுமையில் சுவர்க்கமும் கொடுக்கும். ஆனது பற்றியே நல்லாதனார்,

" இல்லார்க் கொன்றீயு முடைமையு மிவ்வுலகில்
நில்லாமை புள்ளு நெறிப்பாடு மெவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாததூய்மையு மிம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க் குள. "

எனக் கூறி யுள்ளார்.

பொறையுடைமையாவது ஒருவன் யாதோ காரணத்திலாவது அறிவின்மையினாலாவது தனக்குக் குற்றஞ் செய்யில் அதனைத் தானும் செய்யாமல் பொறுத்தலை யுடையனாதல். ஒருவன் சால்புடைமையைத் தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின் அவன் பொறை யுடைமையை அழியாமற் காத்தல் வேண்டும்.

அடக்கமுடைமையாவது, மெய்ம்மொழி மனங்கள் தீநெறிக்கட்செல்லாது அடங்குதலை யுடையராதல். அவைகளிலும் முக்கியமாய்க் காக்க வேண்டியது இடையிற் கூறியுள்ளதாகிய மொழி. அதினால்தான் திருவள்ளுவநாயனார் தம்மாற் காக்கப் பட்டவைகளில் எதைக் காக்கமாட்டாமற் போனாலும் நாவொன்றினைமட்டும் கட்டாயம் காத்தல்வேண்டும். இல்லாவிடில் அப்படிக் காக்காதவர் சொல்லிழுக்குப்பட்டு தாமே துன்புறுவர் எனக் கூறியுள்ளார்.

" யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"—திருக்குறள்

உண்மை யுடைமை அல்லது மெய்ம்மை யென்பது யாதெனில், யாதொன்றும் தீமையில்லாத சொல் அதாவது பிறிதோருயிருக்கும் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். வெஃகாமையாவது பிறர்க்குரிய பொருள்களை வெளவக் கருதாமை.

இந்நற்குணங்களெல்லாம் ஒருவனுக்கு அமைந்திருக்குமாயின் அவனே பெரியோனாவன். அப்பேர்ப் பட்டவர்களைக்குறித்துக் குமரகுருபரசுவாமிகள் அடியிற் கண்டவாறு கூறியிருக்கின்றார்.

" கண்ணேக் கரும்பா நகைமுகமே நான்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடை யாரன்றே
சலியாத கற்ப தரு."

அவ்வித நல்லொழுக்கமாவது மனோவாக்கு காயங்களில் குற்றமுண்டாகாமல் நடப்பதாம் என்பதை விளக்க மேற்கூறிய சுவாமிகளே

" பொய்குறளை வன்சொற் பயனிலையென் றிந்நான்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில் [கும்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா ரெனல்.

என்றும் கூறியுள்ளார்.

இம்மேற்கூறிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே பொருந்தப்பெற்றுப் பெருமைவாய்ந்திருந்த பஞ்சபாண்டவருள் மூத்தவராகிய யுதிஷ்டிரரை இதற்கு ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

அவர் தனக்குச் சந்தோஷ முண்டாயிருந்த காலத்தும் துன்ப மேற்பட்டிருந்த காலத்தும் மனந்தளராது தெய்வத்தையே இடைவிடாது கைப்பிடித்துப் பக்தி பாராட்டினது உலகத்தோர் யாவருக்குந் தெரிந்த விஷயமே. தன்னாடு நகரமுதலியவற்றை அக்கிரமமாய்க் கைப்பற்றிக்கொண்டு தங்களையும் வனவாசம் செய்யும்படி யலையவிட்ட காலத்திலுங்கூட அந்தத் துரியோதனாதியர்க்காவது மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது யாதொரு தீங்கிழைக்க மனத்திலும் நினையாமலிருந்த அவரது பெருந்தகைமையும்; துரியோதனன் துர்ச்சாதனன் முதலியோர் பாஞ்சாலியைச் சபையின் மத்தியில் நிறுத்தி அவளை மானபங்கம் பண்ணும் பொருட்டு வஸ்திராபரணம் செய்தகாலத்துத் தன் இளையாரெல்லாம் துடிதுடித்து வாய் பதைத்து வெருண்டு எழுவதைக் கண்டும் அவர்களை யெல்லாம் கையமர்த்தித் தானும் ஒன்றும் செய்யாமல் இருந்த அம்மகானுடைய அடக்கமும் பொறையும்; கைம்மாறில்லாமல்

கொண்டல் பொழியும் மாரிபோல், தான் நல்ல ஸ்திதியிலிருந்தபோதும், அடவியில் வசித்திருந்த காலத்திலும் அவர் செய்த குன்றா அறமும் மிகவும் வியக்கத்தக்கதே.

எக்குலத்துதித்தோனாயினும், எவ்வருணத்தோனாயினும் தத்தம் நிலைமைக்கேற்றபடி நற்குண நற்செய்கை யுடையவனாய் நடப்பானானால் நற்கதி யடைவானென்பதற்கு யாதுமையமில்லை. ஒருவன் மேலான ஜாதியில் பிறந்தவனானாலும், ஹீனஜாதியில் ஜனித்தவனானாலும், அரக்கனானாலும், அவன் நன்னெறி பூண்டொழுகின், அவனே பண்புடையான், அவனே மற்றோருக்கு நீதிநெறியைப் போதிக்கவல்லான், அவனே முத்தி யடைய அருகனாவான். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சிறு கதை கூறுவோம்.

விசிட்டாபுரம் என்னும் பட்டணத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் பிரமச்சாரியாய் தன் தாய் தந்தையரைத் துறந்து சன்மார்க்க நெறியை அறிய விரும்பி தேசாந்திரமாய் திரியுங்காலத்தில் மிதிலாபுரியிலுள்ள தருமவியாதனென்னும் ஒரு வேடனிடம் போய்ச் சேர்ந்தான். அவ்வேடன் செய்த தொழிலோ மாமிசத்தை நறுக்கி விற்பனை செய்யும் தொழிலாயும், அவனிருந்த யிடமோ பிராமணர்கள் கிட்ட நெருங்க முடியாத அசுத்தமான இடமாயும் இருந்தன. அவ்வேடன், அவ்வந்தணன் வந்த காரணத்தை, அவனைக் கேளாமலே சொன்ன மாத்திரத்திலே அப்பிராமணன் அதிசயித்து அவனருகில் சென்று அவனுடன் வெகுநேரம் சம்பாஷித்து, அவனில்லத்திற்குச் சென்று அவன் தன் மாதா பிதாக்களுக்குச் செய்யும் பணிவிடைகளையும், அவர்களை அவன் பூசிப்பதையும் அவ்வந்தணன் கண்டு வியந்து, அவ்வேடனால் நன்னெறி புகட்டப்பெற்றுத் தன்னிருப்பிடம் திரும்பிவந்து ஒரு குணவதியை மணந்து தன்பெற்றோரைப் பேணி பூசித்து அளவற்ற விசுவாசத்தோடும் வாழ்ந்து வந்தான் என்று மகா பாரதத்தில் ஒரு கதை யிருக்கிறது.

பிரதாப லங்கேசுவரனாகிய இராவணன் இராமபிரானுடைய திருத்தேவியாராகிய சீதாப்பிராட்டியார்மீது மையல்கொண்டு, அவளைச் சிறையெடுத்து வந்து இலங்கைத்தீவில் வைத்திருந்த காலத்தில் அவனுடன் பிறந்தோனாகிய விபீஷணன் தன் தமையன் செய்த தீநெறிக்கண் தானும் செல்லாது, தன் தமையன் தன் சொல்லை எள்ளளவும் மதியாமல் மீறி நடந்ததினால் தான் வருத்தமுற்று, தன் சகோதரனுக்கு மேற்கூறிய தீச்செயல்களினால் விளைய நிற்கும் தீங்கினை உன்னி துக்கமுற்று, தானும் அரக்கனாயிருந்தபோதிலும் நெறிதவறி நடக்காமல், ஸ்ரீராமபிரானது பாதாரவிந்தத்தையே சிக்கெனப் பிடித்துக் கடைசியாய் அந்த ஸ்ரீராமமூர்த்தியால் இலங்கா பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பெற்றும், ஆசீர்வதிக்கப்பெற்றும், சிரஞ்சீவிப்பட்டமும் பெற்றிருக்கிறார்.

ஆகையால் இதையெல்லாம் உற்று நோக்குமிடத்து, நற்குண நற்செய்கைகளால் ஒருவன் மேலோன் கீழோன் நல்லகுலம், என்று ஏற்படுகிறதேயல்லாமல் அவன் குடிப்பிறப்பில் யாதொரு பயனுமின்று. ஆனதுபற்றியே ஜயின முனிவர்களா லருளிச்செய்யப்பட்ட நாலடி நானூறில்

“ நல்லகுல மென்றும் தீயகுல மென்றும்
சொல்ல ளவல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற் றானாகும் குலம். ”—நாலடியார்.

எனக் கூறப்பட்டிருக்கிறது.

நான்மணிக்கடிகையில்

“ கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தன்கண்வெகுளி விடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.”



என்று கூறியிருக்கிறபடி. இவ்வுலகில் இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையில்லாததாகையால், மாந்தர்கள் நல்லறிவும், நல்ல தேககிடமும் உள்ளபோதே தம்மாலியன்றமட்டும் பேராசை நீக்கி, கோபம் லோபம் மோகம் இவைகளை விடுத்துப் புத்தி சிதறவொட்டாமல், தரும வழியிலே நின்று, ஒருவன் செய்த தீங்கினைப் பொறுத்து, உடனே அதை மறந்து, துஷ்டவுறவை விலக்கி, வீண்காலம் போகவொட்டாமல் நல் விஷயத்தைப் பெற்று, பிறன் பழி கூறல், குடிதோஷமுரைத்தல் இவைகளை யகற்றிப் பெரியோரையும் உலகத்தையும் தழுவி நடக்கும் நெறியை விடாமல் ஒழுகவேண்டும்.

இவ்வித நற்குண நற்செயல்களை ஒருவன் செய்ய முயலுவதற்கு முதற்காரணமாய் இறைவனிடத்துப் பக்தி பூர்த்தியா யிருக்கவேண்டியதவசியமானதால் குமரகுருபரர் தான் உலகத்தார்க்கு நீதிகளின் வழியை விளக்குவதற்கு இயற்றிய நூலாகிய நீதிநெறி விளக்கத்தில் முதற் செய்யுளாகக் கடவுள் பக்தி யவசியம் வேண்டுமென்பதை யடியிற்கண்டவாறு கூறியுள்ளார்.

“ நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.”

பி. ஆர். வெங்கடேசலு நாயடு.

---

**கடிதம் எழுதுதல்.**-கடிதம் எழுதத் தெரியவேண்டுமென்பது மிகவும் அவசியம். அன்றியும் அது நாம் நாள்தோறும் செய்யவேண்டிய காரியமாயும், நமக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதாயும் இருக்கின்றது. கடிதம் எழுதும்பொழுது எழுத்துப்பிழை சொற்பிழை இவைகள் ஒன்றுமில்லாமலிருக்க நாம் பார்க்கவேண்டும்.

நாம் ஒருவருக்குக் கடிதம் எழுதும்பொழுது சாதாரணமாயும் சுவபாவமாயும் எழுதுவதுடன் நேரிலிருந்தால் அவரிடம் எப்படிப் பேசுவோமோ அப்படியே எழுதவேண்டும். அன்றியும் கடிதத்தை எழுதிய பிறகு அதை அழகாய் மடித்து நன்றாய் லகோடா பண்ணுவதில் எவ்வளவோ நன்மையுண்டு. நமது கடிதத்தைத் திறக்குமுன்னமே மேல்விலாசத்தையும் லகோடா பண்ணியிருக்கும் அழகையும் கண்டே வியக்கும்படி யிருக்கவேண்டும்.

## “ இராஜாங்கமுறை ” பிரதமக் கொள்கைகள்

## MORALS AND CIVICS : ELEMENTARY PRINCIPLES

### மூதாதையரிடத்து செலுத்தவேண்டிய கடமைகள்

நீ உன் பெற்றோரிடம் பிரியமாக இருப்பதோடு, உன்னோடு சேர்ந்து வாழும் மூதாதையரிடத்தும் அன்பாக நடந்துகொண்டால்தான் உன் அன்பு பரிமளிக்கும்.

உன் தாயும் தந்தையும் உன்னை இப்போது எவ்வளவு அன்போடு கவனித்து வருகிறார்களோ, அவ்வளவு அன்போடு உன் தகப்பனாரை உன் பாட்டனாரும் பாட்டியாரும் கவனித்திருக்கிறார்கள். உன் குடும்பத்தின் தற்கால ஸௌக்கியத்துக்கு, அவர்கள் சிரமமே காரணம். அநேக தலைமுறைகளாக உழைத்து வந்தால்தான் ஓர் குடும்பம் தக்க ஸ்திதிக்கு வரக்கூடும். உன் பாட்டனார் குணங்களே உன் தகப்பனாரிடம் இருக்கிறது. பிறகு அந்தக் குணங்கள் உன்னிடத்தும் காணப்படுகின்றன.

உன் மூதாதையரிடம் நீ செலுத்தவேண்டிய கடமைகள் மனதுக்கு ரம்மியமானவை. மூதாதையர் சிறு குழந்தைகள் விஷயத்தில் விசேஷ பிரியமுள்ளவர்கள். தாய் தகப்பனாவது ஒரு வேளை குழந்தைகள் தவறி நடந்தால் கண்டிப்பாகத் தண்டிப்பார்கள். ஆனால் மூதாதையரோ அப்படிச் செய்யமாட்டார்கள். அவர்கள் மனமுழுமையும் அன்பால் நிறைந்திருக்கும். அவர்கள் சொல்லும் பழய கதைகளைக் கேட்கச் சிறுவர்கள் எவ்வளவு பிரியப்படுகிறார்கள். பெரியவர்கள் சொன்னபடி நீ கேளாமற் பிடிவாதங் கொண்ட காலத்தில் உன் தாயாரும் தகப்பனாரும் உன்னைத் தண்டிக்க வருவார்கள். அந்தச் சமயத்தில் உனக்காக மூதாதையரேயன்றி வேறு யார் பரிந்து பேசுவார்கள். உனக்கு தேக அஸௌக்கியமாக இருக்

கும்போது உன்னைக் கருத்தாகக் கவனித்து நல்ல மருந்துகளைத் தயார் செய்து கொடுப்பவர் யார், உன் பாட்டியாரே உன்னை அன்போடு கவனித்து வருவார். அவளே கிழிந்து போன வஸ்திரத்தையும் தைத்துக் கொடுப்பாள்.

பாட்டியார் நாள் முழுமையும் உழைத்துச் சிறு குழந்தைகளைப் பரிவோடு கவனிப்பாள். பாட்டனார் அவர்களை வெளியே உலாவ அழைத்துக் கொண்டுபோய் நல்லபுத்தி சொல்லி அவர்கள் பெரியவர்களாக ஆனபோது எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதைப்பற்றி நல்ல புத்தி புகட்டுவார். எந்தச் சிறுவன் மூதாதையரை மரியாதையோடு நடத்தி வருகிறானோ அவனுக்கு நான்கு நன்மைகள் உண்டாகின்றன. அவை யாவன, தீர்க்காயுள், புத்தி, கீர்த்தி, பலம் என்பவையே.

## ஸகோதரர் ஸகோதரிகளிடத்து செலுத்த வேண்டிய கடமைகள்

ஸகோதரிகளும் ஸகோதரரும் ஒரே குடும்பத்திற் பிறந்து ஒரே தாய் தகப்பனையும் ஒரே மூதாதையரையும் விஸ்வஸிக்கிறார்கள். அவர்கள் பிரிந்து போன காலத்திலும், தாங்கள் ஒரே குடும்பத்திற் பிறந்தவர்களென்ற ஞாபகம் அவர்களைவிட்டு அகலாது. அவர்கள் எல்லோரும் ஒரே படுக்கையிற் படுத்துத் தூங்கி ஒரே பாட்டைச் சொல்லிக்கொண்டு விளையாடினவர்கள் அல்லவா ? அந்த விஷயங்களை அவர்கள் எக்காலத்திலும் மறவார்.

இவ்விதமாக ஒரே தாய் தகப்பனுருக்குப் பிறந்து ஆதிமுதல் அந்நியோந்நியமாக விளையாடிய சிறுவர்கள் பிற்காலத்திலும் நீங்காத ஸ்நேகமும் அன்புமுள்ளவர்களாகவே யிருக்க வேண்டும். அவர்கள் அப்படி நடந்துகொண்டால் பார்ப்பவர்களுக்குக் கண்ணியமாக இருக்கும். அவ்வாறன்றி அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் பார்ப்பவர்நகைத்து அவர்களை வெறுப்பார்கள். ஸகோதரரும் ஸகோதரிகளும் ஒருவரை யொருவர் விஸ்வஸித்தால் பிற்காலத்தில் ஒருவருக்கொருவர் உதவி வாழ்வார்கள். ஆகையால் குழந்தைப் பருவமுதல் அவர்கள் அந்நியோந்நியமாகவே வாழவேண்டும்.

உன் ஸகோதரரையும் ஸகோதரியையும் நீ பிரியமாகக் கவனிப்பாயாக. அவர்களை ஒருபோதும் வருத்தாதே. அவர்களுக்கு எவ்வித கெடுதியையும் செய்ய நினையாதே. அவர்களைத் திட்டாதே. அவர்களை அடிக்க வேண்டுமென்று எண்ணாதே. உனக்கு எது வேண்டுமென்று இருக்கிறதோ அதே பொருள் அவர்களிடத்தில் இருந்தால் அந்தக் காரணத்தால் நீ அவர்கள்மீது கோபியாதே. அந்தப் பொருளை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நினையாதே. அவர்களுக்கு வேண்டிய பொருள் ஏதாவதொன்று உன்னிடம் இருக்குமானால் அதனை அவர்களுக்குக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய். நீங்கள் சேர்ந்திராமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் அந்தச் செய்கை உங்கள் தாய் தகப்பனுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணும். ஏனென்றால் அவர்கள் உங்களை யெல்லாம் ஒரே விதமான அன்போடு கவனிக்கிறார்கள். நீங்கள் ஒருமித்து ஸமாதானமாக மகிழ்ந்து வாழவேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். உங்கள் பெற்றோரிடத்தும், ஸகோதரர் ஸகோதரிகளிடத்தும் நீங்கள் பக்ஷமாக நடந்து கொள்ளாவிட்டால் உலகத்தார் உங்களை மதிக்க மாட்டார்கள்.

"தங்களைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரிடத்தும், தங்களோடு ஒரே குடும்பத்திற் பிறந்து பழகிய ஸகோதரர், ஸகோதரிகளிடத்திலேயே அவர்கள் அன்பு பாராட்டவில்லை யென்றால் அவர்கள் வேறு யாரிடத்தில்தான் பிரியமாக இருப்பார்கள்" என்று உலகத்தார் உங்கள் நடையைக் குறித்து வெறுத்துப் பேசுவார்கள்.

ஸகோதரரும் ஸகோதரிகளும், அன்பாக நடந்துகொள்வதில் கவனிக்கத்தக்க விசேஷம் ஒன்றுண்டு. சிறு பிள்ளைகள் பெரியவர்களைவிட அதிக ஸந்தோஷமுள்ளவர்களாகவும், சண்டை



செய்வதில் பிரியமுள்ளவர்களாகவும் இருப்பதால், அவர்கள் ஒருவேளை தமக்குள் சண்டையிட்டாலும் அவர்களுக்குள் உண்டாகிய அன்பு குறையாது. இவ்விஷயம் உங்கள் அனுபவத்துக்குச் சரியாக இருக்கும். சிலவேளைகளில் சண்டை செய்தபோதிலும் பழைய அன்பு மாறாது. ஆனால் ஸகோதரர் ஸகோதரிகள் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. ஸகோதரர்களைவிட ஸகோதரிகள் பலஹீனர்களாகவும் சீக்கிரத்தில் மனச்சஞ்சல மடையக்கூடியவர்களாகவும் இருப்பதால் ஸகோதரர்கள் தங்கள் ஸகோதரிகள் மனம் புண்ணாகாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

அவர்களைத்தான் அதிக பக்ஷமாகக் கவனிக்க வேண்டும். தகப்பனுக்குப் பிறகு அவர்களை ஸகோதரர்களே அன்போடு நடத்திவரவேண்டும். உங்களுக்குப் பின்பிறந்த ஸகோதரிகள் அதாவது உங்கள் தங்கைகளிடம் நீங்கள் இப்படி விசுவாஸமாக நடந்துகொள்ளவேண்டியது. உங்கள் குழந்தைப்பருவத்தில் உங்களுடைய தமக்கைகள் உங்களைத் தாயார்போல எடுத்து வளர்த்துப் பாதுகாத்து வந்தமையால், நீங்கள் அவர்களை மரியாதையோடு கவனிக்கவேண்டும். அவர்கள் உங்களுக்குச் செய்த உதவிக்கு நீங்கள் செய்ந்நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

C. S. சுந்தரம் அய்யர், பி.ஏ., எல். டி.

**உன் அபிப்பிராயங்கள் மற்றவைகளுக்கும் இடங் கொடுக்கட்டும்.**—நமக்கு எதில் நம்பிக்கையோ அதை நம்பி நடக்க ஒருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். அதுபோல மற்றவர்கள் அவரவர்கள் நம்பிக்கைப்படியும் கொள்கைப்படியும் நடக்க நமக்கு என்ன ஆக்ஷேபம். சில மதஸ்தர்கள் வேறு மதஸ்தர்களைக் கண்டால் தூஷித்துப் பரிகாஸம் பண்ணுவார்கள். நமக்கு நமது மதம் எவ்வளவு ஸ்வாதீனமோ அதுபோலல்லவா அவனுக்கு அவன்மதமும்? எந்தப்பானையில் எந்தச்சர்க்கரையிருக்குமோ என்று நமது சத்துருக்களிடமும் ஏதோ குணங்களிருப்பதாக நாம் நடக்கவேண்டுமே யல்லாது, அவரை அலட்சியம் பண்ணலாகாது. இக்குணம் அதாவது மற்ற மதங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் இடங்கொடுக்கும். குணம் நம்மிடமிருந்தால் நாம் எல்லாருக்கும் நல்லவர்களாய் வெகு யோக்கியர்களெனப் பெயரெடுத்து வாழ்வோம்.



## B. மைநர் கார்டு
## MINOR CHORD

(126-ம் பக்கத் தொடர்ச்சி)

**மே**லே காட்டிய ஸ க (3) ப ஸ் என்னும் சுகம் தரும் ஸ்வரகணம் போலவே, கொஞ்சம் குறைவான சுகம் தரும் ஸ்வரகணம் ஒன்றுண்டென்று ஐரோப்பிய ஸங்கீத சாஸ்திரத்தில் வழக்கத்தில் இருக்கிறது. அது ஸ க(2) ப ஸ் என்னும் ஸ்வரகணமாம். இந்த ஸ்வரகணத்தில் க(3) என்னும் பெரிய (Major) க வுக்குப் பதிலாய் க (2) என்னும் சிறிய (Minor) க வருவதால் இதை மைநர் கார்டு (Minor Chord) என்றும், முன் சொன்னதை மேஜர் கார்டு (Major Chord) என்றும் சொல்லுவதுண்டு.

மேலே காட்டிய மாதிரி, ஸ வுக்கும் க (2) க்கும் இடையில் எவ்வளவு ஸ்வரங்கள் வரலாம் என்று பார்ப்போம்.

(1) ரி (2) என்பது: (a) ஸ வுக்கும் ரி (2) க்கும் $16/15$ என்பது இடைவெளியானதாலும்; (b) மேலும், $16/15 \times 9/8 = 6/5$ என்பதால்

ரி (2) என்பது ஸ வுக்கும் க (2) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

(2) ரி (4) என்பது: (a) ஸ வைவிட $9/8$ மடங்கு வேபநத்தால் ஆனது; மேலும், (b) $9/8 \times 16/15 = 6/5$ என்பதால்,

ரி (4) என்பது ஸ வுக்கும் க (2) க்கும் இடையில் வரலாம் என்று காண்க.

மேலே காட்டியபடிக்கு, பின்வரும் ஸ்வரகணங்கள் ஒத்துவருமென்று காணலாம். அவை : (1) ஸ ரி (2) க (2) (2) ஸ ரி (4) க (2)

க (2) க்கும் ப வுக்கும் இடையில் மேலே காட்டினபடிக்குக் கணக்கிட எத்தனை ஸ்வரம் வரும் என்று பார்ப்போம்:—

(1) ம (1) என்பது. (a) $6/5 \times 10/9 = 4/3$ ; அதாவது ம (1) க (2) ஐவிட $10/9$ மடங்கு வேபநங்களாலானது ; (b) மேலும், $4/3 \times 9/8 = 3/2$ ; அதாவது, ப ம (1) ஐவிட $9/8$ மடங்கு வேபநத்தாலானது. என்பதால்

ம (1) என்பது க (2) க்கும் ப வுக்கும் இடையில் ஒத்து வரலாம் என்று காண்க.

(2) ம (2) என்பது (a) $6/5 \times 9/8 = 27/20$ ; அதாவது க (2) ஐவிட ம (2) $9/8$ மடங்கு வேபநங்களாலானது ; (b) மேலும், $27/20 \times 10/9 = 3/2$ ; அதா

வது ம (2) ஐவிட ப 10/9 மடங்கு வேபநங்களாலானது என்பதால்,

ம (2) க (2) க்கும் ப வுக்கும் இடையில் வரலாம் என்று காணலாம்.

(3) ம (4) என்பது (a) $6/5 \times 6/5 = 26/25$ ; அதாவது க (2) ஐவிட ம (4) 6/5 மடங்கு வேபநத்தாலானது ; (6) மேலும், $36/25 \times 25/24 = 3/2$ ; அதாவது, ம (4) ஐவிட ப 25/24 மடங்கு வேபநத்தாலானது: என்பதால்,

ம (4) க (2) க்கும் ப வுக்கும் இடையில் வருமென்று காண்க.

மேல்குறித்தபடி பின்வரும் ஸ்வரகணங்கள் சேர்ந்து வரலாம் என்று காண்க.

(1) க (2) ம (1) ப
(2) க (2) ம (2) ப
(3) க (2) ம (4) ப

மேலே கணக்கிட்டுக் கண்டவரையில் குறித்திருக்கிற மடங்கு வேபநங்களாலான அடியில் காட்டியிருக்கும் ஸ்வரங்கள் வரலாம் என்று பார்த்தோம் அவை:— ஸ, ரி (1), ரி (2), ரி (3), ரி (4), க (2), க (3), ம (1) ம (2), ம (3), ம (4) ப.

அது மாத்திரமல்ல. ப வுக்கும் ஸ் வுக்கும் இடைவெளி ஸ வுக்கு ம (1) க்கும் உள்ள இடை வெளியான 4/3 என்பதே என்னும் காரணத்தால், ஸ வுக்கும் ம (1) க்கும் இடையில் வரும் ஸ்வரங்கள் மாதிரியே ப வுக்கும் ஸ் வுக்கும் இடையில் வரலாமல்லவா ? அவைகள் பின்வருமாறுகும்:—

த (1), த (2), த (3), த (4), நி (2), நி (3) என்பவைகளே.

ஸ விலிருந்து ஆரம்பித்து ஆரோஹணக் கிரமமாய் போய்க்கொண்டு கணக்கிட்டதில் ஸ வுக்கும் ஸ் வுக்கும் இடையில் 18 ஸ்வரஸ்தாநங்கள் இருப்பதாகப் பார்த்தோம்.

அவரோஹணக் கிரமமாய் கணக்கிட்டுப் பார்த்தோமானால்,

ப த (1) என்பதற்கு ஜவாப்பாக நி (4) ஸ் என்பது கிடைக்கிறது.

ப த (2) என்பதற்கு ஜவாபு நி (3) ஸ் என்றும்
ப த (3) என்பதற்கு நி (2) ஸ் என்றும்
ப த (4) என்பதற்கு நி (1) ஸ் என்றும்

கிடைக்கிறது அல்லவா ? அதாவது, புதிதாய் நி (1) என்பதும் நி (4) என்பதும் வந்தது. அதேமாதிரி ஸ வுக்கும் ம (1) வுக்கும் இடையில் க (1) க (4) என்னும் இரண்டு புதிய ஸ்வரங்கள் கிடைக்கிறது.

ம (1) க (4) ஐ விட 25/24 மடங்கு வேபநங்களால் ஆனது. ம (1) க (1) ஐவிட 9/8 மடங்கு வேபநங்களால் ஆனதாம்.

மேல்காட்டியபடிக்கு, ஸ என்பதற்கும் ஸ் என்பதற்கும் இடையில்,

ஸ, ரி (1), ரி (2), ரி (3), ரி (4), க (1), க (2), க (3), க (4), ம (1), ம (2), ம (3), ம (4), ப, த (1), த (2), த (3), த (4), நி (1), நி (2), நி (3), நி (4) என்னும் 22 ஸ்வரஸ்தாநங்கள் இருப்பதாகப் பார்த்தோம். இந்த 22 ஸ்தாநங்களுமே நமது புஸ்தகங்களில் சொல்லியிருக்கும் 22 சுருதிகளாயிருக்கலாம் என்று என் அபிப்பிராயம்.

ஒரு ராகத்தில் எப்படி எல்லாவிதமான ரிஷபமும், எல்லாவிதமான காந்தாரமும் வராமல் ஒரேவிதமான ரிஷபமும் ஒரேவிதமான காந்தாரமும் மட்டும் வருமோ அதுபோல மேலே சொன்ன ஸ்வரங்கள் 22 ஐயும் வைத்துக்கொண்டு பிரஸ்தரித்தால், குறித்திருக்கிற இடை வெளிகளல்லாத ஸ்வரங்கள் சேர்ந்து சத்தித்தால் சுகம் தராதாகையால் சில ராகங்கள்மட்டும்தான் உண்டாகும். கணக்கிட்டுப் பார்த்தபோது, ஸ வுக்கும் க வுக்கும் ஒரு ஸந்தர்ப்பத்தில் ஒரு ஸ்வரந்தான் இடையில் வரமுடியும் ; அதேமாதிரி க வுக்கும் ப வுக்கும் இடையில் ஒரு ஸ்வரம்தான் வரமுடியும்.

அதேமாதிரி ப வுக்கும் ஸ் வுக்கும் இடையில் இரண்டு ஸ்வரங்கள்தான் வரமுடியும். ஆகவே 7 ஸ்வரங்கள் சேர்ந்து ஒரு ஸ்தாயியில் உச்சரிக்கப்படலாம் ; அதற்குமேலிருக்கமுடியாது என்பதால், நமது சாஸ்திர புஸ்தகங்களில் **ராகம்** என்பதற்கு **ஸப்தகம்** அல்லது 7 **ஸ்வரங்களாலானது** என்னும் பிரதிபதத்தை உபயோகித்திருக்கிறார்கள்.

மேலும், ம என்னும் ஸ்வரம் அந்த எழு ஸ்வரங்களில் மத்தியில் வருவதால் **மத்தியமம்** எனப் பெயர் வகித்தது. ப என்பது **ஐந்தாவதாய்** இருப்பதால் **பஞ்சமம்** எனப் பெயர் பூண்டது.

இவ்விதம் ஐரோப்பிய சுருதிசாஸ்திர ரீதியாய் (Acoustics) 22 சுருதிகளை நிர்ணயம் செய்துவிட்டதுமன்றி, **சுருதி வீணை** என்று பெயர்கொண்ட ஒருவீணையைத் தயார்செய்து பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டதில் வெகு ஸங்கீத வித்துவான்கள் இந்த யுக்திஸாதநத்தால் 22 சுருதிநிர்ணயம் ஆனதாய் ஒப்பிவிட்டார்கள்.

சுருதி வீணை விஷயமும், 22 சுருதி விஷயமும் இங்கு எழுதுவோமானால், புத்தகம் பெரிதாகுமென்று நினைத்து, வேறு எவ்விதமான கேள்விகள் கேட்கவேண்டுமானாலும் எனக்காவது ம-ா-ா-ஸ்ரீ நாகோஜிராயர் அவர்களுக்காவது எழுதிக்கேட்டுக்கொள்ளலாம்.

இனி ராகங்களைப்பற்றி விசாரிப்பாம்.

**P. S. சுந்தரம் அய்யர், B. A., L. T.**



# உபநிஷத் ரத்நமாலா

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 21. நாராயணோபநிஷத் (18)

ஸ்தூல ஸ்ருஷ்டிக்குப் பிறகு நாராயணர் ஜீவர்களை வெளிப்படுத்துவோம் என்று இச்சித்தார். எல்லாம் வெளிப்பட்டன. பிராணன் மனம், இந்திரியங்கள், ஆகாய முதலிய பஞ்சபூதங்கள், ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன், ப்ரஜாபதி, துவாதசாதித்யாள், ருத்ரர்கள், வஸுக்கள், வேதங்கள் இவை இவரிடமிருந்து யுண்டாகி, நிலைபெற்று, ஒடுங்குகின்றன என்று ருக்வேத உபநிஷத்துக்கள் கூறும்.

நாராயணன் நித்யன். ப்ரஹ்மா, சிவன், இந்திரன், காலம், திக்குகள், உபதிக்குகள், மேல், கீழ், உள், வெளி, இருப்பன, இனி வரப்போகின்ற ப்ரபஞ்சம் எல்லாம் நாராயணனே. இவன்தான் களங்கம், தோஷம், மாறுபாடு, பெயர், இவைகள் அற்றவனாகி, சுத்தனாகியும், தேவனாகியும் இருப்பவன். இரண்டாவது வேறு ஒன்றும் இல்லை. இவ்வாறு உணர்பவன் விஷ்ணுவே யாகிறான் என்று யஜுர்வேத உபநிஷத்துக்கள் கூறும்.

ஓம் **நமோநாராயணாய** என்ற எட்டு எழுத்துக்களாலாகிய இதுதான் நாராயண அஷ்டாக்ஷரபதம் என்பது. இதை எவன் உணர்ந்து ஜபிக்கிறானோ அவனுக்கு எல்லாம் கைகூடும் என்று ஸாமவேத உபநிஷத்துக்கள் கூறும்.

பூர்ணானந்தனும் ப்ரஹ்மபுருஷனும் ப்ரணவஸ்வரூபனும் ஆகியவனை உச்சரித்து, யோகி பிறவிக்கடலை கடந்து விடுகிறான். இந்த அஷ்டாக்ஷரத்தை வழிபடுபவன் வைகுண்டம் அடைவான். அது இந்த ஹ்ருதயம், ஞானஸ்வரூபம், மின்னல் ஒளி யுடையது, ஒப்புயர்வற்று, எங்கும் பரவி, ஸர்வாகாரணனாயும், ஸ்வயம்புவாயுமுள்ள நாரயணனே ப்ரஹ்மம் என்று அதர்வண வேத உபநிஷத்துக்கள் கூறும்.

இந்த உபநிஷத்தை உணர்ந்தவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு ஸகல வேதங்களையும் கற்றுணர்ந்த பலனைப் பெறுவன். ஸ்ரீமந் நாராயண ஸாயுஜ்யத்தைப் பெறுவன் என்பது திண்ணம்.

### (22) ஆத்மபோதோபநிஷத் (42)

ஓம். தனியானந்தமும், ப்ரஹ்மத்வமும், ப்ரணவ ஸ்வரூபமும் மாகியுள்ள எவனை உச்சரித்து யோகி பிறவிக்கடலைக் கடக்கிறானோ அந்தச் சங்கு சக்ர கததாரியான நாரயணனை நமஸ்கரிக்கிறேன்.

ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரத்தை வழிபடுபவன் வைகுண்டம் பெறுவன். அந்த வைகுண்டம் ஹ்ருதயமாகிய ப்ரஹ்மபுரம். அது மின்னலொளியுள்ளது ; தீபத்தைப்போன்ற ஒளியுள்ளது. ப்ரஹ்மண்யனான விஷ்ணுதான் அச்சுதன், புண்டரீகாக்ஷன், தேவகீ புத்திரன், மதுஸூதனன். எங்கும் பரவிய காரணமாகி, ஸ்வயம்புவாயுள்ளவன். துக்கமோஹங்களில்லாத தனி வஸ்துவான நாரயணனை த்யானிப்பவர் துக்கம் நீங்குவர். பயம் நிறைந்த துவைதத்திலிருந்து அத்வைதநிலை பெறுவர். எவன் இங்கு பேதம் காண்கிறானே அவன் பல ஜன்மங்கள் அடைந்து மரணத்தின் வாய்ப்பட்டுத் தத்தளிப்பன்.

ஹ்ருதயத்தில் ப்ரக்ஞையையே கண்ணாக உடைய ப்ரஹ்மம் உள்ளது. ஜீவர்களுக்கு ப்ரக்ஞையே இருப்பிடம் கண் ஆகையால் **பிரக்ஞானமே ப்ரஹ்மம்**. வழிபடுபவன் இந்த ப்ரக்ஞானத்தின் உதவியால் இவ்வுலகை விட்டு நீங்கி சிறந்த ஸ்வர்க்கத்தில் கோரிக்கைகள் கைகூட மரண மற்றவனாகிறான். எங்கு ஜ்யோதி விளங்கி பூஜிக்கப்படுகிறதோ அங்கு ஓயாது என்னை நிலைபெறச் செய்.

நான் மாயையற்றவன், ஞான ரூபமான வஸ்து, நிர அஹங்காரி, ஜகஜ்ஜீவபரபேத மற்றவன், உத்தமன், ப்ரஹ்மமாயிருப்பவன், விதி நிஷேதமற்றவன், ஆச்ரமமற்றவன், எங்கும் நிறைந்த ஞானரூபி, சாக்ஷி, விருப்பற்றவன், என் சிறப்பிலேயே ஈடுபட்டவன், அசையாதவன், கிழத்தனம், நாசம், தன்து பிறாது என்ற பேதம்,முதலியவை யற்றவன், ஞானத்தை ரஸமாக உடையவன், மோக்ஷானந்தஸாகரம், ஸூக்ஷ்மன், மாறுபாடற்றவன், நிர்க்குணன், குணாதீதன், எல்லாம் அடக்கியுள்ளவன், கூடஸ்தன், அறிபவன், நிலைத்த ஜ்யோதி, யுக்திக்கு அப்பாற்பட்டவன், பூர்ணன், நிர்மலன், நிரவயவன், பிறப்பற்றவன், சத்தாமாத்ரன், அகண்ட ஞானம், மங்களன், அபேதன், ஸர்வவ்யாபி, அடிநடுமுடிவற்ற ஸத்வன், வேதவிஷயம், பூஜ்யன், ஸுகரூபி, பரமானந்தகனன், சுத்தன், அத்வயன், நித்யன், அனாதி, தேஹரஹிதன், முக்தன், அந்தர்யாமி, ஸமரஸன், தனித்த பரதத்வம்.

இரண்டற்ற ஆத்மாவை விவேகத்தால் உணர்ந்தபோதிலும் பந்த மோக்ஷாதி பேதங்கள் தோன்றுகின்றன. ப்ரபஞ்சம் நீங்கியபோதிலும் உண்மைபோல காணப்படுகிறது. கயிற்றில் பாம்புபோன்ற ப்ரபஞ்

சத்தில் ஆதாரமாக ப்ரஹ்மமே காணப்படுகின்றது. ஆதலால் ப்ரபஞ்சமே இல்லை. கருப்பஞ்சாறு எப்படிச் சர்க்கரையுள் பரவியிருக்கிறதோ அதுபோல ப்ரஹ்மமாகி நான் எங்கும் நிறைந்திருக்கிறேன். கடலில் அலை நுரை குமிழிகள் எவ்வாறு கற்பிதமோ அதுபோல ப்ரஹ்மாமுதல் ஸ்தம்ப பரியந்தம் என்னிடம் கற்பிதம். கடல் அலைகளை லக்ஷ்யம் செய்யாததுபோல விஷயானந்தத்தை ஆனந்தரூபியான நான் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. பணக்காரனுக்குத் தரித்திரத்தில் ஆசை உண்டாகாததுபோல ப்ரஹ்மானந்தத்தில் மூழ்கிக்கிடக்கும் எனக்கு விஷய ஆசை உண்டாகுமா? அமிருதத்தையும் விஷத்தையும் காணும் புத்திமான், விஷத்தைத் தள்ளி விடுவதுபோல, ஆத்மாவைக் கண்ட நான் அனாத்மாவைத் தள்ளிவிடுகிறேன். குடமுடைவதால் அதை விளக்கும் ஸூர்யனுக்கு ஒருவிதக் குறைவும் ஏற்படாததுபோல, தேஹம் நீங்குவதால் சாக்ஷியாகிய எனக்குக் குறைவொன்றுமில்லை. எனக்கு முக்தி, சாஸ்திரம், குரு ஆகிய இவைகள் மாயாமயமாக விருப்பதால் இல்லவே இல்லை. ப்ராணன், மனம் ஆகிய இவைகள் எப்படியாவது அவைகள் தர்மப்படி தொழிற்பட்டபோதிலும், ஆனந்தமாகிய என்னை அவைகள் எப்படித் தாக்கும்?

ஆத்மாவை உள்ளபடி உணர்ந்தேன். அக்ஞானம், கர்த்திருத்வம், ஆகிய இவைகள் எங்கேயோ பறந்தோடிப் போயின. ஸ்தூலதேக ஸம்பந்தமான பெயர் ஜாதி முதலியன என்க்கு இல்லை. காரணதேஹஸம்பந்தமான ஸந்தோஷம் முதலியன எனக்கு இல்லை. கோட்டானுக்கு ஸூர்யன் ஒளியில் இருட்டு காணப்படுவதுபோல மூடனுக்கு ஸ்வப்ரகாசம் விளங்கவில்லை. மேகம் மறைக்குங்கால் ஸூர்யனே இல்லை என்பவன்போல, தேகத்தால் சூழப்பட்டிருப்பதால் நான் ப்ரஹ்மமல்ல என்று நினைக்கிறான். விளக்கு எவ்வளவு சிறிதாயினும் பெருஇருளைப் போக்குவதுபோல ஞானம் தோன்றியதும் உடனே அக்ஞானப்பொதியைச் சாம்பலாக்கிவிடும். கயிற்றில் பாம்பு எப்பொழுதும் எப்படி இல்லையோ அதுபோல இரண்டற்ற என்னிடம் பேதவஸ்து ஒன்றுமேயில்லை. அக்ஞானத்தால் ஜகத்தோற்றமாத்திரமாக இருக்கிறது.

இந்த ஆத்மபோதோபனிஷத்தை ஒரு முகூர்த்தம் உபாஸிப்பவனுக்கு மறுபிறப்பே இல்லை.

## காலஞ்சென்ற ஸ்ரீமத் ஆனரபிள் வே. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்

## AN ELEGY ON THE DEMISE OF THE HON'BLE Mr. V. KRISHNASWAMY AIYAR, B. A., B. L., F. M. U., C. S. I.

பொன்னியெனும் புநிதநதி புடைதொறும்பாய்
புனனாட்டிற் பொலிவுற் றோங்கும்
பன்னரிய சிவதலத்தும் அரிதலத்தும்
சிறந்தபழம் பதியா யுள்ள
மின்னுபுகழ் அரிவிழிமங் கலம்இயற்றும்
அரியதவ விளைவே ! யாண்டும்
துன்னுகலை அருளறிவு நண்புபொறை
ஆதியன துலங்குந் தூயோய் ! (1)

போற்றிடுவள் ளுவர்"தோன்றிற் புகழொடுதோன்
றுக"வென்னப் புகன்ற வாறே
பாற்கடலிற் பனிமதியும் பாஞ்சஜன்
யச்சங்கிற் பண்பார் முத்தும்
தோற்றுவபோல் தொல்புகழ்சேர் தூமறைவேங்
கடரமணன் தோன்ற லாகி
நாற்றிசையும் ஏத்திசைகொள் வே.கிருஷ்ண
சாமியெனும் நாமத் தோனே. (2)

வேறு

சீராறு பேத மதமுங்க டந்த
ஸ்ரீராம க்ருஷ்ண மிஷனைப்
பாராரு மாந்தர் பற்றற்று நின்று
பவமற்று நாளு முயவே
நேரான சென்னை எனுநல்ல ஊரி
னிதிதந்து நிறுவு புகழோய் !
காராரு மேனி ஒருதேவ நாம !
கறையற்ற பூர்ண மதியே ! (3)

வேறு

மன்றுதிகழ் மதுரைநகர் மாணவர்செந்
தமிழ்ச்சங்க மாண்பால் என்றும்
நன்றுதிகழ் உயர்நச்சி னார்க்கினியர்
ஞாபகச்சின் னக்கொண் டாட்டத்
தன்றுகுழு மியசபையில் அக்ராஸ
னாதிபதி ஆனோய் ! நின்னை
என்றினியாம் காண்பதுரை வேகிருஷ்ண
சாமியெனும் இசைமிக் கோனே ! (4)



நெல்லையிற்கூ டியசென்னை மாகாணச்
சபைத்தலைமை நீயே பூண்டாய்.
கல்விநலம் வளர்சென்னைச் சர்வகலா
சாலையர்ச காவா நின்றாய்.
பல்கலைதேர் அதன்பிரதி நிதியாகச்
சட்டநிரு பணசங் கத்தில்
எல்லவரும் புகழ்ந்தேத்த இருந்தனைநீ
எங்குற்றாய்? இயம்புவாயே. (5)

நம்பெரியோர் நாட்டியபல் நல்லறமும்
நாளுநனி நடக்கு மாறும்
எம்பெருமான் ஆலயம டாலயங்கள்
யாவுமினி திலங்கு மாறும்
பம்பியசீர் உயர் " தர்ம ரக்ஷணஸ
பா "வெனும்பேர் படைத்த தாய
அம்புவிக்கோர் அவசியமாம் அறக்காவற்
கழகமதை அமைத்திட் டாயால். (6)

" நும்மெய்வருந் திக்கைசெய் துய்ம்மின் "என
நம்முதியோர் நுவன்ற தெண்ணி
செம்மைசெய்சு தேசநிதி கைத்தொழிற்சங்
கம்நிறுவிச் செழிக்கச் செய்தாய்.
கைம்முதலை ' அர்ப்பதினெட் கம்பெனி ' நேர்
கம்பெனியிற் கவிழ்த்தி ரங்கி
நம்மவர் அழாதவணம் " இந்தியன் பாங்க் "
எனும்நிதியை நாட்டி னையால். (7)

கோடைபலவற் றினுமுணவு கல்விதால்
சிறந்ததெனும் கொள்கை யால்நன்
நடைபெறுபல் மாணவர்க்கும் நற்கலைகள்
அவர்க்கியம்பும் நாவல் லோர்க்கும்
உடைஉறையுள் உணவுடனே உரியவகை
சம்பளமும் உதவி யேநீ
ஜடை கனமார் மறைநூலும் வைத்தியமா
தியபிறவும் தழைக்கச் செய்தாய். (8)

உடனோயால் வருந்துபவர் அந்நோயா
வுந்தீர்ந்திங் குய்யு மாறு
தடமார் "வேங் கடரமண வைத்தியசா
லை"யைநிறுவித் தழைக்கச் செய்தாய்
மடனோயால் வருந்துபவர் அந்நோயா
வுந்தீர்ந்து வயங்கு மாறு
திடமாஓர் வடமொழிக்க லாசாலை
தனைநாட்டித் திகழச் செய்தாய். (9)

கோதில்"இவன் தந்தை என்னோற்
றான்கொல்!" எனக் குவலயத்தோர் கூற வந்த
வேதியர் சிகாமணியே ! வே. கிருஷ்ண
சாமியெனும் மேதக் கோனே !
ஓதுபுகழ் "ராணிபேட்டைத் தகசாலை"
தனைநிறுவி ஓங்கச் செய்தோய்!
காதன்மிகும் எமைநீக்கிக் கடிதகன்ற
காரணம்நீ கழறு வாயே. (10)

வேறு

நைக்குவரும் பொருளொன்றே கருதித் தீய
கருமமுஞ்செய் தீத்துணை ராகித் தாமே
துய்க்குமனப் புன்மையர்நா டோறும் நாணித்
தூநெறியிற் செல, யாரும் துன்பம் நீக்க
மெய்க்கணியாய்ப் பொய்ப்பகையாய்ப் புகழின் வாழ் [வாய்
மேதகு ஹைகோர்ட் வக்கீல் வேலை பார்த்தாய்
தக்கநெறி மிக்கநிதி யீட்டி நின்போல்
தந்துவக்கும் தன்மையுளார் தாமிங் குண்டோ? ()

சீருநலமும் உருநலமும் திகழும் நின்றன்
திறமையையும் பெருமையையும் தெரிந்தே யன்
கருணைமலி நமதுதுரைத் தனத்தார் நிற்குக் [றே
கனமிகு ஹைகோர்ட் ஜட்ஜுத் தானம் நல்கி
அருமைமிகு கவர்னர் உறுங் கவுன்ஸில் மெம்பர்
ஆகநினை ஆக்கியதும் அவற்றை மிக்கப்
பொருள்வருவாயையும்வெறுத்தேற் றதும்நீ நன்மை
புரவலர்க்கும் பொதுஜனர்க்கும் புரிதற் கன்றோ?(12)

வேறு

நிலவுலகம் பலநெடுநாள் காத்தளித்த
விக்டோர்யா நேச மைந்தன்
" உலகசமா தான "னென ஒருதிருநா
மம்புனைதற் குரிமை பூண்டே
இலகியநல் ஏழாம்எட் வர்டென்னும்
இறையவனும் எழில்மிக் கார்ந்த
குலவுபுகழ் அலெக்ஸாண்ட்ராக் கோமகளு
முன்னாளிற் குறித்துச் செய்த (13)

அருந்தவநற் பெரும்பயனா அவதரித்த
ஐந்தாம்ஜார் ஜரசர் கோவும்

பெருங்கருணைத் தடங்கடலாப் பிறங்குமவர்
  மனைவியெனும் பெருமை வாய்ந்த
இருங்குணஞ்சேர் மேரியெனும் எழில்மாதும்
  நமதிறைவன் இறைவி யாக
பொருந்துபுகழ் டில்லியினில் எழுந்தருளிப்
  பொன்மகுடம் புனைந்த காலை, (14)

அரசனா சியர்காண அந்திநகர்த்
  துப்பயணம் ஆன நின்னை
விரசுபிணி இடைதடுக்க யாமடைந்த
  விசனமும்நின் மேன்மை நோக்கிப்
பரசுபுகழ் நமதிறை ஸி. எஸ். ஐ. எனப்
  பகருமுயர் பட்ட மீந்த
வரிசையினால் யாமடைந்த மகிழ்வையும்
  நீ அறிகுவையே மதிமிக் கோனே! (15)

ஒண்மையினால் நோற்றதிரு உண்மையினால்
  தக்கோர்க்கே உதவும் மேலாம்
வண்மையினால் பிரசங்க வன்மையினால்
  எங்கும்செல் வாக்கால் வாய்மைத்
திண்மையினால் தூயமனத் தண்மையினால்
  செய்கடன்செய் திறத்தால் ஞான
நுண்மையினால் தன்னிகரில் ஒண்மணியே
  எங்கொளித்தாய் நுவலு வாயே. (16)

இதுகாறும் செயற்கரிய பலசெய்தாய்!
  விக்டோரியா—எட்வர்ட் ஹால்நற்
றுதியாரும் மதுரையினிற் றோன்றிடுவான்
  ஆயிரத்துத் தொளா யிரத்துப்
பதினோராம் வருடத்திற் பதினோராம்
  மாதத்திற் பதினோராம்நாள்,
அதிமகிழ்வோ டதன்அஸ்தி வாரக்கல்
  நாட்டியநீ அகன்ற தென்னோ? (17)

வேறு

காணாத பரம்பொருளைக் காண்டற் கேயோ?
  காதன்மிகு பெற்றோரைக் காண்டற் கேயோ?
நாணாளு நின்மனத்தி னீங்காச் சாமி
  நாதனைக்காண் டற்கேயோ? நாண மாதி
பூணாகப் பூண்கற்பின் மிக்கா ளான
  பொன்னனைய நின்மனையைக் காண்டற் கேயோ?
வாணாளைப் பொதுநலத்தில் முற்றும் போக்கி
  வான்புகழை நிலைநிறுத்தி வானுற் றாய்நீ. (18)

வேறு

பாராளு வோரு மூராரு நன்கு
  பகர்நீதி யாள நலமே
தாராவி ரோதி கிருதொன்று சூன்ய
  தனுர்மாத நீர்மை தரவே
ஆராரு நின்னை அறிவேது மற்ற
  அவ்வாண்டு மாத மவைசேர்
ஈராறு மொன்று மியைநாள்வி யாழ
  னிவணெம்மி னீக்கி யனவே. (19)

வேறு

என்னையே! நின்போல் இன்குணம் நிறைந்த
  இதயமுள் ளவர்இனி எவரே?
மன்னுநல் அறிவும் புனிதமும் நிறைந்த
  மதிவலி படைத்தவர் எவரே?
பின்னுமோர் உலக முளதெனில் அதன்மேற்
  பேரின்ப நிலையமே பெற்றாய்
அன்னதொன் றிலையேல் இப்புவி வாழ்பே
  றனைத்தையும் பெற்றவன் நீயே. (20)

வேறு

ஆனரபிள் டாக்டர் **ஸர் எஸ் சுப்பிரமண்**
  **யர்** கெ. ஸி. ஐ. ஈ. என்னும்
மானவன்பால் தொழில்பயின்றை கோர்ட் வக்கீல்
  ஆகியவன் வகித்த பற்பல
தானமுமற் றவற்றின்மேற் றானமுமுற்
  றவன்போன்றார் சார்புங் கொண்டே
ஈனமில்பன் னலமியற்றி இலகியநின்
  சீர்த்திநலம் என்றும் வாழி. (21)

**ம. கோபாலகிருஷ்ணையர்.**

**குற்றத்தைக்கண்டால் உடனே அகற்று.**—நம்மிடம் ஏதாவது ஒரு குற்றம் இருக்க நாம் கண்டாலும் அல்லது நமக்கு வேண்டியவர்கள் காண்பித்தாலும் அதை நாம் உடனே அகற்றவேண்டும். "புண்வைத்து மூடார் பொதிந்து" ராஜபிளவை நம்மிடம் உண்டாயிருக்க அதைக் கீறி சீழை வெளிப்படுத்தி ஆற்றிக் கொள்ளாமலிருக்கலாம். குற்றத்தை அறிந்துகொண்டும் தெரிந்துகொண்டும் அகற்றிக்கொள்ளும் குணம் பெருங்குணம். அவ்வாறு செய்கின்றவன் வெகு தைரியசாலியா யிருப்பான். அக்குணத்தை உலகத்தார்கள் அவனிடமிருப்பதாகத் தெரிந்துகொண்டு அதற்காக அவனை வெகுவாய் மெச்சுவார்கள்.



# வஸந்த மாளிகை
## VASANTHA MALIKAI
### அத்தியாயம் 6

"ஐயையோ! தொலைந்தேனே! தொலைந்தேனே!" என்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு நமது சாமியார், அறைக்குட் புகுந்து, "என்னடா! அனர்த்தமாக முடிந்துவிட்டது" "அடிபெண்ணே! உள்ளேபோ!" வலபத்ர! கத்தியை உருவு—இவன் உன் சிநேகிதனா யாரானாலும் சரி—இந்தத் துஷ்டனை இப்பொழுதே—வெளி யேறினலாச்சுது—இல்லாவிட்டால்—

**வலபத்ரன்.**—"அப்பப்பா! என்னால் முடியாது. இவனோ என்கூட வந்திருப்பவன். அவனுக்கு விரோதமாய்க் கத்தியை யுருவமாட்டேன். "அடைக்கலம் புகுந்தோரை எதிர்ப்பதே கூடாது" என்று யுத்ததர்மசாஸ்திரம் சொல்லியிருக்கிறது. மறுபடி தர்மராஜனை நோக்கி, 'அப்பா! நல்ல சிநேகிதம் வாய்த்தாய்—நீ எங்கேடா வந்து சேர்ந்தாய்?—பாம்பன் ஆறு குறுக்கிட்டாற்போல—பிழைக்க வந்த இடத்தில்—பூஜைவேளையில் கரடியை ஓட்ட விட்டமாதிரி—வரும்போதே இடியும்முழக்கமாய் வந்துவிட்டாயே! போதும் அப்பா! உன் ஸகவாஸம்—உன் பெரியோருக் கெல்லாம் கோடிப்புண்யமுண்டு—நல்லவேளை பார்த்து—வெளியேறு — இல்லாவிட்டால் — இந்த உடைவாளுக்கு வேலை கொடுக்க வேண்டியதுதான்—" என்றுசொல்லி அஃதையுருவி தர்மராஜன் மார்புக்கு நேரேபிடித்தான்.

"சீ! நாயே! தள்ளி நில்," பானுமதியை நோக்கி, "பேதாய்! போய் வருகின்றேன். ஏதாவது அரைகுறை உயிர் தரித்திருந்தாலும் இக்கொடும் ஸமாசாரம் கேட்டதும் அதையும் இழந்து விடுவார், உன் தகப்பனார்" என்று கம்பீரமாய்ச் சொல்லிவிட்டு தர்மராஜன் வெளியேறினான்.

"தர்மராஜா! அவ்வளவு தடித்தனமாய் ஒன்றும் சொல்லாதே! என்னைப்பற்றி அபவாதங்கள் கூறாதே" என்று பானுமதி சற்று மனவருத்தத்துடன் சொல்லுவதைக் கொஞ்சமேனும் காதில் கொள்ளாமல் சரேலென்று தர்மராஜன் வெளியே சென்றான்.

"இதெதோ கோளாறில் வந்து விட்டது. அம்மணி! உள்ளே போங்களேன்! வலபத்ர என்னடா அனர்த்தத்துக்கு இழுத்துவிட்டாய்—அம்மணி! உள்ளே போங்கள்—"

"அதிகாரம் ஒன்றும் இங்கே செய்துகொண்டிருக்க வேண்டாம். மரியாதை தப்பி நடக்காதே!" என்று கோபாவேசத்துடன் பானுமதி கூற,

**சாமியார்.**—"அம்மணி! நீங்கள்போகத்தான் வேண்டும். மரியாதைகள் பரிவர்த்தனைகள் செய்ய இது காலமல்ல. தயவு செய்து உள்ளே போகத்தான் வேண்டும்."—அடே வலபத்ர! உடனே அந்தப் பயல் பின்செல்—உனக்கு ஏதாவது பிழைப்பு நடக்கவேண்டுமென்ற எண்ண மிருந்தால்—இப்பொழுதே யவனை இந்த இலாகாவுக்கு அப்பால் விரட்டி விட்டுவா!—இந்த முரண்டுக்காரப் பெண்ணை அதற்குள் சமாதானம் செய்து உள்ளே அனுப்புகிறேன். உருவு கத்தியை—போ அவன் பின்னாலே—"

**வலபத்ரன்.**—கத்தியை உருவிக்கொண்டு, "அவனை டில்லிக்கப்பாலே விரட்டிவிடுகிறேன்—ஆனால்—அவனை யடிக்கமாத்திரம் மாட்டேன்.—அவன் கணக்கில் இன்று பகலில் இரண்டு போகணி சீமைச்சாராயம் சாப்பிட்டுவிட்டேன்—அது சரிக்கும்வரை உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கலாகாது,—"என்று சொல்லிக்கொண்டு, தர்மராஜனைத் தொடர்ந்து சென்றான்.

தர்மராஜன் இதற்குள் அவ்வரண்மனையினின்றும் வெளியே செல்லும் வழி தப்பிச் சுற்றிச் சுற்றிக்கடைசியாய்ப் பின்பக்கம் வாசலண்டை வந்து சேர்ந்து சற்றுத் தயங்கி நின்றான்.

"எப்படியாவது அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துதான் தீரவேண்டும். இந்தப் பெண்ணோ—புத்தி தவறிவிட்டாள்—அவளுக்குச் சனியன் பலமாய்ப் பிடித்து விட்டான் — அதனால்தான் எவ்வளவோ ஹிதமாய்ச் சொன்னாலும் விபரீதமாய்ப் படுகின்றது.—ஏதோ—அவள் தகப்பனார் மூலமாய்—மகாராணியாருக்கு விண்ணப்பம் செய்து பார்க்கவேண்டும்—ராஜ்யமோ—இயற்கெனவே—சீர்குலைந்து கிடக்கின்றது! எங்கே பார்த்தாலும் கட்சி! எங்கே பார்த்தாலும் கலகம்—இந்த மந்திரி நரசிம்ம ராஜன் எங்கேயிருந்து வந்தானோ—நியாயம்—தர்மம்—எல்லாம் பறந்து போய் விட்டன—'.

இவன் இவ்வாறு அக்கதவின் உட்புறம் நின்று ஆலோசித்துக் கொண்டிருக்கையில்—அதன் திறவுகோல் துவாரத்தின் வழியாய்—வெளிப்புறத்தினின்றும் ஓர் திறவுகோல் செலுத்தப்பட்டு, அஃது சுழலவே—தாள் தள்ளப்பட்டது—சிறிது நேரத்தில் கதவும் திறக்கப்பட்டது.

க்ஷணப்பொழுதில் தர்மராஜன் ஓர் குதிரைவீரன் முன் நின்றான். அக்குதிரைவீரன் தன் அடையாளங்களைப் பிறர் அறியாவண்ணம் பாதாதிகேச பர்யந்தம்,வேஷம் மாறுடியிருந்தான்,நமது இரண்டு வீரர்களும் நேருக்கு நேராய்ச் சந்தித்ததும், 'மஹாவீர!'என்று தர்மராஜனும், 'தர்மராஜன்!' என்று மற்றவனும், தாங்களறியாமல், ஆச்சர்யத்தாலும் கோபாவேசத்தாலும் உரக்கக் கூவினார்கள்.

**மஹாவீரன்.**—"தன் ஆச்சர்யம் தீர்ந்தவுடன்,இங்கே எங்கே வந்தாய்? தர்மராஜ்! எங்கே வந்தாய்? உன்னை யார் அழைத்தது—" என்று தன் மீசைகள் படபடவென்று துடிக்கக் கோபாவேசத்துடன் உரக்க வினவினான்.

**தர்மராஜன்.**—"அது கிடக்கட்டும்! மஹாவீர! நீ எங்கே வந்தாய்? அப்பெண்பேதையின் கற்பைக் குலைக்க வந்தாயோ? சீ! நாயே! உருவு உன் கத்தியை—சாமர்த்திய முண்டானால்—" என்று சொல்லிக்கொண்டே தன் கத்தியை உருவினான்.

**மஹாவீரன்.**—தன் கத்திப்பிடியைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டு "தர்மராஜ! நீ பைத்தியங்கொண்டு விட்டாய். என் நடத்தைகளெல்லாம் எனக்கு விரோதமாகத்தான் தோன்றும். ஆயினும்—உண்மையைச் சொல்லுகின்றேன். பாநுமதிக்கு என்னால் யாதொரு கெடுதியும் கிடையாது. இந்த விஷயத்தில் உனக்கும் தீங்கு விளைவிக்க எனக்கு மனம்வரவில்லை—எனக்கும் சண்டைசெய்யச் சாமர்த்தியமுண்டு—"

**தர்மராஜன்.**—ஆமாம்! அப்படித்தான் சொல்லிக்கொண்டு திரிகிறாய். வாயால் புலம்புவதைப் பார்க்கிலும்—உனக்கு ஆண்மையுண்டானால்—கார்யத்தால் அல்லவோ நிரூபிக்க வேண்டும்—."

**மஹாவீரன்.**—"ஆஹா! குசலாய்! என் பலத்தை நீ யறிவாய்" என்று சொல்லித் தன் கத்தியை யுருவிக்கொண்டு, கோபாவேசத்துடன் தர்மராஜன்மேல் பாய்ந்தான். க்ஷணப்பொழுதில் தர்மராஜன், மஹாவீரனுடைய கத்திக்கிரையாய் விடுவான் போலத் தோன்றினான்.

ஆனால் தர்மராஜன் அதிக ஆக்ரஹத்துடன், தன் வாளால் மஹாவீரனைத் தகைந்துவிட்டு, அதிவேகமாய் அதைச் சுழற்றி மஹாவீரன் மார்புக்கு நேரே குத்தவே, அஃது சற்று லக்ஷ்யம் தவறி யவன் உடையில் பாய்ந்து சிக்கிக்கொண்டது. தன் வாளை யுருவுமுன் மஹாவீரன் தன்மேல் பாய்ந்து கத்தியால் தலையில் ஓங்கியடிக்கத் தர்மராஜன் தலைப்பாகை தறித்துக் கீழே வீழ்ந்தது. இவ்வாறு இருவர்களும் அகோர யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். க்ஷணத்துக்கு க்ஷணம் ஜயமானது மாறிக்கொண்டே வந்தது. கடைசியாய், தர்மராஜன் மிதமிஞ்சின ஆவேசத்துடன், காட்டுப்புலி போல் திடீரென்று மஹாவீரன்மேல் பாய்ந்து, அவனைக் கீழே சாய்த்து, மார்பின்மேல் முழங்காலிட்டு மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு, தன் இடக்கையால், அவன் வலக்கையை யழுத்திக்கொண்டு, தன் வலக்கை கத்தி நுனியை மஹாவீரன் நெஞ்சின் மேல் மெதுவாய் ஊன்றிக்கொண்டு "அடே! பாதக! சண்டாளா! உண்டவீட்டுக்குஇரண்டு நினைத்ததுரோகீ! அவர் வீட்டில் உண்டதுமல்லாமல், அவர் அருமைப் புதல்வியின் கற்பையும் அழிக்கக் கருதினாயே! அடே பாபி! உன் துரோகத்துக் கிரையாய்த் தவிக்கும் அம்மங்கையை மீட்டவேண்டிய உபாயம் சொல். இல்லாவிடில் உன்னை இப்பொழுதே யமலோகம் அனுப்பி விடுகின்றேன்" என்று சொல்லிக்கொண்டு கோபத்துடன், தன் கத்தியைச் சற்று மஹாவீரன் கழுத்தில் அழுத்தினான்.

மஹாவீரன் யாதொன்றும் சொல்லத் தோன்றாமல் ஆவேசத்துடன், திடீரென்று கிளம்பப் பார்த்தான். உடனே தர்மராஜன் தன் வலக்கை வாளை, தலைக்கு மேலே ஓங்கி மஹாவீரன் நெஞ்சில் குத்துவதற்காக, அதிவேகமாய்க் கீழ்நோக்கிக்கொண்டு வருகையில், அவன் கையானது திடீரென்று பிடித்துக்கொள்ளப்பட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கையில் வலபத்ரன் சிரித்துக்கொண்டு, "வா! அப்பா என் சிநேகிதா. நல்ல சிநேகம் வாய்த்தாய். இன்று யார் முகத்தில் விழித்தேனோ! உனக்கு உஷ்ணம்—கொஞ்சம்—ஜாஸ்தியாயிருக்கிறது.—ஆலமரத்துக்குப் போவோம் வா! இன்னும் இரண்டு போகணி தீட்டிவிட்டால் தான் கொஞ்சம் சாந்தமாகும்—என்று சொல்லிப் பரிகசித்துக்கொண்டு நின்றான்.

சீ! அற்பமே! நானும் என் எதிரியும் சண்டை செய்துகொண்டிருக்கையில்—நாயே! நீ எவ்வண்ணம் குறுக்கிடத் துணிந்தாய்?

"நாயே!, பேயே! உம்! என்ன வேண்டுமானாலும் சொல்லு. உனக்கு வாயாலே பதில் சொல்லுவதைப் பார்க்கிலும், கத்தியாலேயே சொல்லி யிருப்பேன். போகட்டும்! இன்றைக்கும் உன் கணக்கில் இரண்டு போகணி குடித்துவிட்டதால்—கொஞ்சம் — உண்ட வீட்டுக்கு த்ரோகம் நினைக்க முடியவில்லை. சரி! ஏன் பிதற்றுகிறாய்-நாங்கள் இருவர்-நீயோ ஒருவன்."



வலபத்ரன் சொன்னது வாஸ்தவந்தான். இதற்குள் மஹாவீரன் எழுந்து, ஆயுத ஸந்நத்தனாய் மறுபடி எதிர்த்து நின்றுவிட்டான். 'இனி சண்டை செய்வது புத்தியீனம்' என்று தர்மராஜன் உணர்ந்து, தன்உடைப் பையினின்றும் ஐந்தாறு வெள்ளி நாணயங்களை வலபத்ரன் முன் எறிந்து 'நாயே! பொறுக்கித் தின்றுகொள். மஹாவீர! போய்வருகின்றேன். தக்க சமயத்தில் சரியான இடத்தில் மறுபடி சந்திப்போம்—உன் ஆண்மையை—உண்டானால்—காட்டிக்கொள்' என்று சொல்லிவிட்டு— வெறுப்புடன் திரும்பிச் சரேலென்று வெளியே சென்றான்.

மஹா வீரன் தான் சற்று முன் கீழே வீழ்ந்த வேகத்தாலும், களைப்பாலும், அவனைப் பின்தொடர எத்தனிக்கவில்லை.

வலபத்ரனை நோக்கி 'யாரப்பா நல்ல பிள்ளையாய் இருக்கின்றாயே! நீ ஸ்வாமியாருக்கு நெருங்கிய தோழனோ?' என்று வினவினான்.

**வலபத்ரன்.**—'ஆமாம்! கேட்பானேன். கத்தியும் பிடியும்போல் அவ்வளவு நெருங்கிய பழக்கம்.'

மஹாவீரன்.—ஓர் கால் வராகன் நாணயத்தை யவன் முன் எறிந்து 'இதை எடுத்துக்கொள். அந்தப் பயலைத் தூயர்ந்து செல். அவன் எங்கே போகின்றான், எங்கே தங்குகின்றான் என்பவற்றை யறிந்துவந்து—சீக்கிரம்—இந்த அரண்மனையில்—என்னிடம்—சொல்லு. ஜாக்ரதையாய்— ஒருவருக்கும்— தெரியாமல்— ஞாபகமிருக்குமா?

**வலபத்ரன்.**—அப்படியே செய்கிறேன். அந்தப் பயல் டில்லிக்கு வேண்டுமானாலும் போகட்டுமே—வேட்டைநாய் மாதிரி துயர்ந்துவிடமாட்டேனா?

**மஹாவீரன்.**—'சரி! சீக்கிரம் போ. என்று ஆக்ஞாபித்து விட்டு தன் உறையில் மறுபடி வாளை யடக்கம் செய்துகொண்டு அரண்மனை நோக்கிச் சென்றான்.

வலபத்ரன், தன்முன் எறியப்பட்ட நாணயங்களைப் பொறுக்க ஆரம்பிக்கையில், தனக்குள் சிரித்துக்கொண்டு, "பேஷ், பேஷ், குபேரனும்—பட்டணமாம்.—கெட்டதே குபேரப் பட்டணம்—கெட்டதே கல்ப மரம். ஏது நிமிஷநேரத்தில்—காசு மழையாய்ப் பெய்துடுத்தே!—நம்ம - மங்கம்மா ராச்சியம் நல்லா இருக்கணும்—நமக்கென்ன குறைவு—கத்தியும் கையுமிருக்கும்வரை,' என்று புலம்பிச் சந்தோஷித்தான்.

# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

### 4-வது அங்கம்

**சேடன்.**—(தோழியைப் பார்த்து, சேகரகனைப் பிடித்திழுத்து, சுட்டிக் காட்டிக்கொண்டு) ஐயா! இந்தப் பொம்பளை கையை விட்டுடு. இவோ நோமாலியல்ல. வாஸ்தவமா அதோ! அவோ செக்கச்செவக்க கோபிச்சுண்டு கண்லே நெருப்புப் பொறி பறக்க ஓடியாரா பாத்தியா?

**தோழி.**—(நெருங்கி) சேகரகா! நீ கெஞ்சிக்கிறயே இந்த மனிசி யார்?

**விதூஷகன்.**—(தன் வேஷத்தைக் கழற்றிவிட்டு) நான்தான்—அந்தப் பாழும் முண்டைபிள்ளை.

**விடன்.**—விதூஷகனைக் கண்டு, கோபத்தோடெழுந்து' அடாக் கருங்கொரங்கே! வாலில்லா வண்கொரங்கே! சேகரகனெ நேரிலாகவே நீ எளனஞ் செய்யறே? (விதூஷகனைக் குத்துகிறான்.) சேடா! இந்தப் பயலே இங்கேயே மடக்கிவை சொல்றே. நான் நோமாலையண்டை நல்ல வார்த்தை பேசுட்டு ஸமாதானம் பண்ணிக்கிண்டு வர்றேன்.

**சேடன்.**—அய்யா சொன்னபடியே!

**விடன்.**—(விதூஷகனைவிட்டு சென்று நவமாலிகையின் காலில் வீழ்கிறான்) மன்னிச்சூடு நோமாலே! மன்னிக்கணம்.

**விதூஷகன்.**—(தனக்குள்)இதுதான் நல்ல ஸமயம்-பிச்சிக்கிண்டு போவதற்கு.

**சேடன்.**— (விதூஷகனுடைய பூணூலை யிழுத்து அவனைப் பிடிக்க அது அறுந்து விடுகிறது.)

**விடன்.**—அடாக் கருங்கொரங்கே! எங்கடாவிழுந்தடிச்சிக்கிண்டு போறே? (தன் வஸ்த்ரத்தால் அவன் கழுத்தைக் கட்டி இழுக்கிறான்)

**விதூஷகன்.**—அடி நல்லாய்! நவமாலிகே! என்னை இப்பந்தத்திலிருந்து விடுவித்து விடுமே!

**தோழி.**—(சிரித்துக்கொண்டு) தலையைப் பூமிமேலே நட்டுகிண்டு என் கால்லே விழுந்து கும்பிட்டா நா ஒன்னை விடுவிச்சூடுவேன்.

**விதூஷகன்.**—(நடுங்கி கோபத்துடன்) என்ன! காந்தருவத் தலைவனது ஆத்மநேசன்!—அதுமாத்திரமா—ஒரு ப்ராஹ்மணன்—நான் கேவலம் அபகீர்த்தியடைந்த ஓர் ஸ்த்ரீயின் காலில் விழுந்து வணங்குவதா?

**நாதீ.**—(தனது விரலால் மிரட்டிக்கொண்டு, சிரித்து) இதோ வந்தாட்டேன்—நான் ஒன்னை வணங்கப் பண்றேன் பாரே!—சேகரகா எழுந்திரு! ஒன்னிடம் எனக்கு நெரம்ப ஸந்தோஷம்!—(அவனைத் தழுவிக் கொள்கிறாள்) ஆனா இதோ இந்தப் பிராமணன், நம்ப அரசன் மருமகனுக்கு ரோம்ப வேண்டியவா! அவாளை நீ நெரம்ப அவமதிச்சூட்டே! மித்ராஸு கேட்

டாக்கே கோபிச்சிக்கும்—நல்ல தனமா அவனை ஸரிப் படுத்தி கோபத்தைப் போக்கடிச்சூடு.

**விடன்.**—நோமாலை சொன்னபடிக்கி! (விதூஷகன் கழுத்தைச் சுற்றிக்கட்டிக்கொண்டு)—நீ ஸம்மந்தின்னு ஒன்னெ பரிகாசம் பண்ணெ—(தலையைக் கீறிக் கொண்டு)சேகரகன் வாஸ்தவமா ஒரு குடிகாரப்பயலா?

**விதூஷகன்.**—இல்லை, இல்லை!

**விடன்.**—(ஸந்தோஷத்தோடு) அப்படியான பரிகாஸம் ஜில்லுன்னு நடக்கட்டம். (வேஷ்டியை பிரமணை போல் சுற்றி ஆஸனமாக அளித்து) நம் ஸம்மந்தி நல்லவர்! இந்த ஆஸனத்லே ஒக்காருமே!

**விதூஷகன்.**—(தனக்குள்) நல்லவேளை-அப்பாட! இந்தப் பயலுடைய குடிவெறி முடிவுக்கு வந்தூட்டாப் போல்ருக்கு!

**விடன்.**—நோமாலை! அவர்பக்கம் நீயும் ஒக்காந் திண்டிரு. ஒங்கரெண்டு பேருக்கும் மரியாதை செலுத்தரே.

**தாதீ.**—(சிரித்துக்கொண்டு, உட்காருதல்.)

**விடன்.**—அடே! மனசா! இங்கெப்பார்! இந்த மொந்தையிலே அந்த வெள்ளக்குதிரை சவாரி செய் யட்டும்—ஹூம்!

**சேடன்.**—(பாத்ரத்தில் கள் நிரப்பல்)

**விடன்.**—(தன்தலையிலணிந்திருந்த மாலையிலிருந்து சில புஷ்பங்களை அதில் போட்டு, குனிந்து, வணக்கத் துடன் மதுபாத்ரத்தை நவமாலிகையிடம் தரல்) நோமாலை இத்தெ நீ குடிச்சூட்டு அவருக்குந் தா.

**தாதீ.**—(சிரிப்புடன்) சேகரகன் சொன்னப்பலயே! (அவ்வாறே செய்து பாத்ரத்தை விடனிடம் தரல்)

**விடன்.**—(பாத்ரத்தை விதூஷகனிடம் நீட்டிக் கொண்டு) இந்த கள்ளு தெம்பாருக்கும். நோமாலை வாய் ஒதடுபட்டு அதன் ருஸி ரெட்டிச் சூட்ருக்கு, சேகரகன் தவிர மத்த யாரும் இத்தை இன்னம் காணல்லே. இத்தெ குடியும். இதைக்காட்டி வேறே நா என்ன மரியாதைப் பண்ணக்கூடும்.

**விதூஷகன்.**—(தர்மஸங்கடத்தில் பட்டு-சிரித்து) சேகரகா நான் பிராஹ்மணன் என்று உனக்குத் தெரிந் திருக்க வேண்டியது!

**விடன்.**—நீ பராமணனேக்கே ஒன் பூணூல் எங்கே?

**விதூஷகன்.**—(தேடிப் பூணூலைக் காணாது) இந்த தடியன் சேடன் என்னை இழுத்தபொழுது அறுந்து போய்த்தான் இருக்கவேண்டும்.

**தாதீ.**—(சிரித்துக்கொண்டு) அப்படியா! ஆனுக்கெ எதோ கொஞ்சம் வேதத்திலிருந்து சில வாக்யம் சொல்லே பார்க்கலாம்.

**விதூஷகன்.**—அடியம்மா! இந்த பாழும் மது வாஸனை என் வேதமந்த்ரங்களை யெல்லாம் ஓட்டி விட்டதே!—என்னடா இது—சனியன் ஒன்னோடெ தர்க்கம் ஏனோ? இதோ இந்த பிராஹ்மணன் உன் காலில் வீழ்கிறான். (அவள் காலில் விழப் பிரியப் பட்டதாகக் காட்டிக்கொள்கிறான்.)

**தாதீ.**—தனது கைகளால் தடுத்துக்கொண்டு) அய்யா! அய்யா! அப்படிச் செய்யாதியங்கோ. (சேகரனை நோக்கி) சேகரகா ஒதுங்கு! ஒதுங்கு! இவர் வாஸ் தவமாய் பிராமணர் (விதூஷகன் காலில் வீழ்கிறாள்) அய்யா நீங்கோ கோபிக்கக்கூடாது. எங்கள் பெண் யாத்துக்கி சம்மந்தி இன்னு பரிகாஸம்பண்ணோம்.

**விடன்.**—நானும் அவர் மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்—(விதூஷகன் காலில் விழுந்து தொழு கிறான்) அய்யா மன்னிப்பு கொடும். ஏதோ நான் குடி வெறிலே தெரியாபடிக்கு செஞ்சிருக்கலாம்—அய்யா எல்லாம் மன்னிக்கணம்—நான் நோமாலையோடு குடி வீடுக்கு போகவே போயூட்ரே!

**விதூஷகன்.**—நான் உங்களை மன்னித்து விட் டேன். நீங்கள் இருவரும் போகலாம். நானும் என் நேசனைப் பார்க்க வேண்டும் இப்பொழுது.

(விடன், சேடன், தோழி இவர் போதல்)

**விதூஷகன்.**—நல்ல வேளை! அப்பா அத்ருஷ்டம் தானடா! ஒரு ப்ராஹ்மணன் இந்த யமன் வாயி லிருந்து உயிரோடு தப்பித்துக்கொண்டு வெளிவந்து விட்டான். இந்த குடியாது ஸம்பந்தத்தால் உண்டா கிய அபஸ்மாரங்களைத் துலைக்க இந்த குளத்தில் போய் ஸ்நானம் செய்வேன். பின் என் நேசனைக் காண்பேன். (அவ்வாறு செய்து, அரங்கத்தைப் பார்த்து) இதோ வருகிறான் என் நேசன். மங்களதேவதை அவதாரஞ் செய்தாற்போல விளங்கும் சுபஉருவங்கொண்ட மலைய வதியோடு இதோ வருகிறார். ஆகையால் நான் என்ன அவர்க்கு வேண்டுமோ அதைச் செய்வேன்.

(நாயகன் கலியாணக் கோலத்தில் மலையவதியுட னும் பரிசனங்களுடனும் வரல்)

**நாயகன்.**—(மலையவதியை உற்று)

நோக்குவள் நிலத்தை நோக்க,
　　நுவல்கலள் மொழிக்கெதிர்த்தான்,
சேக்கையின் முகந்தி ருப்பும்,
　　சேர்த்தணைந் திடின டுங்கும்,
சேர்க்கையின் துணைவர் செல்லச்
　　செல்லவு மெண்ணும், இந்த
பூக்கொடிப் பிணக்கு மென்பாற்
　　பொருமன்பை வளர்க்கு மென்னே!

(மலையவதியை நோக்கி)

உம்மென் விடையளித் துயர்மௌன மாற்றியும்
அம்ம திக்கொழுந் தணற்றுடல் வாட்டியும்
செம்மை யெற்பகல் செறிமன மெய்த்தவக்
கம்ம! காண்டதிவ் வார்முக நற்பயன்

**நாயகி.**—(மறைவாக) அடீஇ! தோழி! சாதுரிகே! அவர் காண்பதற்குத்தான் கண்காட்சியோ! அது மாத் ரமா? மனங்கனிய பேசும் இங்கித மொழியும் பெற்ற வரடீ!

**தோழி.**—(சிரித்துக்கொண்டு) அடீஇ! ஆசையால் மதிமயங்கினவளே! வெகு வாஸ்த்தவம்! நீகூறியது



மிகவும் ஸரிதான்! அவர் பேசியதில் என்ன முகஸ் துதி இருக்கிறது?

**நாயகன்.**—சாதுரிகே! உத்யானவனத்திற்கு வழி காட்டு.

**தோழி.**—என் ஐயனே! இப்படி வாரும்.

**நாயகன்.**—(முன்னடந்து, நாயகியை நோக்கி) மந்த மாக, சற்றுமெதுவாக நீ நடந்தால் பரவாயில்லை. ஏனென்றால்.—

கொங்கையான் தளர்ம ருங்குழல்
　　கொடியாரக் கிளைக்க வேண்டும்?
தங்கிடைக் கயர்ந சுப்புந்
　　தாங்குமிப் பட்டி கை? பொன்
றங்குளங் கிடைக்கு வாடுந்
　　தாட்சிலம் பேற்கு மென்கொல்?
மங்கைநின் அழகிற் கிந்த
　　மணியணி மற்று மென்னே!

**தோழி.**—இதோ! உத்யான வனம்; ஆர்ய! நீங்கள் உள்செல்லலாம்.

(எல்லாரும் உள் நுழைகிறார்கள்)

**நாயகன்.**—(சுற்றுமுற்றும் ஆராய்ந்து நோக்கி) அஹோ! எவ்வளவு வைசித்ரிக அழகுநிறைந்த உய் யானம் இங்கு—

சந்தணத் தருப்பொழில் பங்கங் கெழுமி
முந்தி படர்ந்து மொய்ந்தடர்க் கொடியின்
தொகுதி நிறைந்து மிகுமனக் கினிய
பொதும்பரின் ஓடும் புதுவழி யிடைதொறும்
சாந்தமு சீதமும் தகைமையின் கமழுமால்!
அருவியின் நிலைபடா தருஞ்சிறு சர்சர
மருவில சுழல்படு குறுநடை அலைதரூஉம்
ஓதையின் இளமிடி யீதென இசைபடா
நாடுங் கலாபம் நலந்தர விரித்து
ஆடு மஞ்ஞைநுதாம், அரித்தரித் தலைத்து
தலைவழிப் பட்ட தருக்களை வீட்டியப்
பலதரு இரைத்திடு பயன்தமை கொள்ளைகொண்டு
செய்ய மலர்தருஞ் சீர்ப்பொடி யளைந்து
மெய்யெலாஞ் சிவந்து மேதினி புறண்டு
வேக மடுத்து மிகைபடு மார்ப்பின்
தடதட வரூஉம் தடமாறு மன்றோ!
அதான்றி,
உண்டும் சுகித்து முறவுகொண் டாடியும்
வண்டார்த் திங்கிம் மலர்ப்பள்ளி திருடியும்
தாதிடை யளைந்து தளர்படா நடித்து
கோதிலா மதுவை குறைபடா துண்டும்
மலர்வீ தியின்தொறும் கலீரென நடித்து
உலைவிலாப் பண்ணுள் உம்பரைக் கலக்கலும்,
தலைப்படு மதுவின் மயங்கித் தளர்ந்து
சுரும்பர் தேன்பால் சுரத முண்டு
உறங்காக் கண்ணன் உறவு கலந்து
ஆசையின் வழியின் பாசங் கொண்டு
நேசித் தெங்கு நிறைவின் குறையா
மாசில் ஆனந்தத்து மயங்கி
குடிவிளை யாட்டை குறித்திடு மன்றே!

**விதூஷகன்.**—(வந்துகொண்டு) ஐய! ஐய! ஆர்ய! அம்மணீ! வாழ்க!

**நாயகன்.**—நெடுநாள் கடந்து காணப்படுகிறாய்.

**விதூஷகன்.**—அஹோ நேசா! வாஸ்தவமாக நான் அதிசீக்கிரமாக வந்திருக்கிறேன். ஏன்? வித்த வித் யாதரர்கள் கூடிக்குலாவி கல்யாண விழாவைக் கொண்டாடி குடித்தும் நடித்தும் மயங்கிக்கிடக்கும் விசித்ரத்தைப் பார்த்துக்கொண்டு வந்தால் தாமஸித்தி ருக்கலாம். எனது அன்பனுமதைக் காணட்டும்.

**நாயகன்.**—ஆமாம். அது நீ சொல்லியப்படித்தான். (சுற்றும்பார்த்து) நண்ப! அங்கு சற்று உற்றுக்காண்.

பணிஅணி மணியின் படர்தரூஉம் கதிரின்
வணத்தின் மயங்கி வரிபல பதிந்துறூஉம்
கலையின் சித்த விஞ்சையக் கவினோர்
சந்தணச் சேறளைச் சிந்துரத் தோளிடை
சந்தான கமலர் கண்ணி தரித்துதம்
உயிர்பெரும் காதலர் உதட்டின் பசைப்பட்
டுயிர்பெரு மினிமைகொள் உயர்கட் குடீஇ
அடரிலைச் சந்தண தடந்தருப் படர்தறூஉம்
சாயலி லாஆங் கோயா மயங்குறூஉம்
காட்சியைக் காண்டனை கண்பெறீஇ
மாட்சியி னேச என் அன்பின் மாண்பினோய்!

**ஸ்ரீ!** இனி நாமும் அந்தத் தாமல மரவீதியை அடை வோம். (யாவரும் போதல்)

முதல் அங்கம் முற்றிற்று.

## ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகள்

“ஏகமேவாஸத் விப்ரா பஹுதா வதந்தி,” ‘மூலம், ஒன்றே அதனை அறிந்தோர் பலவாறு கூறு கின்றனர்,’ என்ற வேத வாக்கியத்தின் உண்மையை யாவர்க்கும், தான் பேசும் பொழுதெல்லாம் எடுத் தாட்டியும், தமது சாந்தம், தயை முதலிய குணங்களால் வளர்த்தும், தவ நிலைமையும், சோகமடைந்தவரது மனத்தைத் தனது தரிசனமாத்திரத்தால் போக்கும் பெருமையும் பெற்று விளங்கிய அந்தணர் தலைவன், அத்வைத மடாதிபதி, ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகா சார்யவர்ய ஸ்ரீ கோவிந்த பகவத் பாதாசார்ய சிஷ்ய, ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய **ஸ்ரீ ஜகத்குரு நரஸிம்ம பாரதீ** ஸ்வாமிகள் முமுக்ஷுத்வம் அடைந்து பிறிவறக் கலக்கும் வெளியிற் கலந்து ஸித்தியடைந்தனர். ஓம் தத்ஸத்.—

# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULYSSES

பலபீமன் தட்டுக் கெட்டுத் தடுமாறி குகை வாயிலண்டையிற்போய்க் கல்லையெடுத்தெறிந்துவிட்டு உள்ளிருந்து வெளியில் வருகிறவர்களைப் பிடிப்பதற்கென்று கையை நீட்டிக்கொண்டு உட்கார்ந்தான். தன் பெயர் நமன் என்று சொல்லி ஊராரால் ராக்ஷஸனுக்கு உதவி கிட்டாமற் செய்த யுக்திசாலியாகிய உல்லாஸனா ராக்ஷஸன் கையிலகப்படுவான்? உரோமம் நிரம்பிய ஆண் ஆடுகள் உள்ளே வந்திருந்தமையால் அவற்றில் மும்மூன்றை ஒரு வரிசையாகப் பழுதைக் கயிற்றாற் கட்டி, அவற்றின் அடிவயிற்றில் தன் ஆட்களில் ஒவ்வொருவனைப் பிணித்து, ஆடுகளை வெளியில் ஓட்டினான். ராக்ஷஸன் ஆட்டின் மேற்புறத்தை மாத்திரம் தொட்டுப் பார்த்துச் சும்மாவிருந்தான். மற்ற ஆடுகளைவிட மிகுந்த ரோமமுடையதாயிருந்த ஒரு ஆட்டின் அடிவயிற்றில் உல்லாஸன் தன்னைக் கட்டிக்கொண்டு வெளியிற்போகையில் அதைத் தடவிக்கொடுத்து "அருமை அஜமே, என் கண்ணை அவித்த நமனிருக்கும் இடத்தைக் காட்டுவாயாகில் அவனைத் தக்ஷணமே கொன்று கோபமாறுவேன். நான் உன்னைப் பிரியமாய் வளர்த்தவனன்றோ? எனக்கு இவ்வுதவி புரியலாகாதா?" என்று பிதற்றும்பொழுது உல்லாஸன் தலைமயிர் ராக்ஷஸன் கையிற் பட்டது. உல்லாஸன் உயிர் மயிர்க்கிடைதான் தப்பிற்று. ராக்ஷஸன் ஆட்டைவிட, உல்லாஸன் பிழைத்து வெளிவந்தான்.

தங்களுயிர்களைக் காப்பாற்றின ஆண் ஆடுகளை உல்லாஸனும் அவனாட்களும் கப்பலிலேற்றிக்கொண்டு புறப்படுந் தருணத்தில் பலபீமன் கடற்கரையோரத்தில் நின்றதைக் கண்டு உல்லாஸன், "அடா, ராக்ஷஸப்பதரே, அதிதியாய் வந்த எங்களிற் பலரை அடித்துத் தின்ற துரோகியல்லவோ நீ. ஸர்வேசுவரன் என் மூலமாய் உனக்குத் தக்க தண்டனை விதித்தார். உன் வீட்டில் வந்த நமன் யாரென்று எவராவது வினவினால் "லேர்தீஸ் புத்ரனும், இதாகா அரசனும், நகராந்தகனுமான உல்லாஸனென்று சொல்" என்று உரத்துக் கூவ ராக்ஷஸனுக்குக் கோபமூண்டு அங்கிருந்த மலையில் ஓர் பாறையைப் பிடுங்கிக் கடலில் எறிந்தான். அது உல்லாஸன் மரக்கலத்தை அமிழ்த்தும் போலிருந்தது. தைவகிருபையால் அந்த விபத்து நீங்கவே, பாய்களை விரித்துத் தம் ஊர்க்கு யாத்திரைபண்ண உல்லாஸனும் அவனாட்களும் ஆரம்பித்தார்கள். காற்றும் அனுகூலமாயிருந்தமையால் அவர்கள் வாயுபகவான் வாஸஸ்தானமாகிய இயோலஸ் தீவின் துறையிற் கப்பலை நிறுத்தினார்கள்.

வாயுபகவான் உல்லாஸன் முதலானோர்களைத் தன்னிடத்தில் ஒரு மாத காலம் வைத்துபசரித்துத் தன்னுடைய துவாதச குமாரர்களையுங் காட்டிப் பிரயாணம் தொடங்குங் காலத்தில் மேல் காற்று ஒன்று நீங்கலாக மற்றத் திக்குக் காற்றுகளையெல்லாம் ஒரு தோற்பையிலடைத்து அந்தப்பையைப் பாய்மரத்தினுச்சியிற் கட்டி வைக்கும்படி கட்டளையிட்டான். உல்லாஸனும் மனமகிழ்ந்து தோற்பையை உயரக்கட்டி மேல்காற்றின் வீச்சினால் அதிசீக்கிரம் ஜன்மதேசம் போய்ச் சேரலாமென்ற நம்பிக்கையோடிருக்கையில், ஒரு நாள் பகலில் உல்லாஸனுக்கு என்றுமில்லாத தூக்கம் மேலிட, மெய்ம்மறந்து கப்பலில் நித்திரைபோனான். பையிற் கட்டிவைத்த பொருள் இன்னதென்று உல்லாஸனாட்களறிந்தாரில்லை. வாயுபகவான், தங்கள் தலைவனுக்கு அபரிமிதமான பொன்னையும் வெள்ளியையும் அடக்கஞ்செய்து கொடுத்திருக்கிற பேடகமென்று தனது பேராசைக் கொத்தவாறு எண்ணின ஒருவன் மற்றவரை நோக்கி, "உல்லாஸனுக்கு எப்போதுஞ் சுக்ரதசையாகவே இருக்கின்றது. எங்குப் போனாலும் அவனுக்கு வெகுமானமும் நமக்கு அவமானமுமாயிருக்கின்றது. வாயுபகவான் கொடுத்திருப்பது யாதென்றெண்ணுகிறீர்? பொன் வெள்ளிக் குவியலன்றி வேறில்லை. இதை நீங்கள் நம்பவேண்டும்" என்று பொறாமையாய் சொன்ன தக்ஷணமே, அவர்களிற் சிலர் பாய்மரத்தினுச்சியிலேறிப் பையை அவிழ்க்கவே, சிறைப்பட்டிருந்த காற்றுக்களெல்லாம் சீறிக்கொண்டு வெளிக்கிளம்பிக் கப்பலை மூலைக்கு மூலை இழுத்து அசைக்கவே, தூங்கின உல்லாஸன் விழித்துக்கொண்டான். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதென்னும் பழமொழி உண்மையாயிற்று. "நல்லினத்தினூங்குந் துணையில்லைத் தீயினத்தினல்லற் படுப்பதூஉமில்" என்றவாறு உல்லாஸன் இனத்தார் தீயோராயிருந்தமையால் ஒன்பது நாள் யாத்திரை செய்து இதாகா தீவின் கரை, கண்ணிற் படுமளவும் ஸமீபமாக வந்தவர்களை மாருதங்கள் ஒரு முகூர்த்தகாலத்தில் வாயுதேவன் இருந்த தீவிற்கே மறுபடியும் கொண்டு சேர்த்துவிட்டன. பாவிகளுக்குக் கைக்கெட்டினவை வாய்க்கெட்டாவாம். உல்லாஸன் அளவிடற்கரிய மனத்துன்பமூண்டு கடலில் வீழ்ந்து உயிரைத் துறக்கப் பார்த்தான். தைவத்தின் வரத்தைச் சரிவரப் பாதுகாக்கத் தவறிவிட்டமையால் வாயுபகவானிடத்தில் இரண்டா முறை வரங் கேட்கப்போக அவன் மனந்துணியவில்லை. ஆபத்துக் காலத்தில் அவமானத்தைக் கவனித்தால் அனர்த்தமாக முடியுமென்றஞ்சி வாயுபகவான் அரண்மனை வாயிலிற்போய் உல்லாஸன் உள்ளே பிரவேசிக்க மனமெழாமல் நின்றதைக் கண்ணுற்ற கடவுள் "உல்லாஸா, நாம் கொடுத்த வெகுமானங்கள் அற்பமானவையென்றெண்ணித் திரும்பவும் நமது ஸன்னிதிக்கு வந்தாய் போலும். "எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகுவார்" என்பதை நீ உணர்ந்திலை. ஸர்வேசுரன் உன்னைப் படாதபாடுகளுக்குள்ளாக்க எண்ணியிருக்க, எம்போலியர் உன்னைக் காக்க முயல்வது அவமேயாகும். இங்கு நிற்காமற்போ" என்று வெறுத்துச் சொல்ல, உல்லாஸன் தலைகுனிந்து தோழர்செய்த அபராதத்தை நினைத்து மனம்புண்ணாகி வெளியில் வந்தான்.



மாருதன் தீவினின்று புறப்பட்டுப் போகையில் காற்றுப் பலவிதமாய் வீசினமையால் உல்லாஸன் கப்பல் அலைப்புண்டு துன்பமுற்றது. உல்லாஸனாட்கள் கொண்ட பேராசைக்குத் தக்க ஔஷதம் கிடைத்துவிட்டபடியால் அவர்கள் நிராசையாய் ஊர்போய்ச் சேருவதற்கே முயல்வாராயினார்கள்.

ஆறு நாள் யாத்திரை செய்தபின் உல்லாஸன் கப்பல்கள் லோஷ்டிரகோணியர் கரையைச் சேர்ந்தன. விசாலமான துறையிருந்தமையால் அங்கு மரக்கலங்களை நங்கூரம் போட உத்தேசம் செய்யுங்கால் உல்லாஸன் தானிருந்த கப்பலைமாத்திரம் வெளியில் தனியே நிறுத்தி மற்றக் கப்பல்களைத் துறையில் நிறுத்தும்படி ஆஞ்ஞாபித்தான். துறையிலேயே எல்லா மரக்கலங்களையும் நங்கூரம் போட்டால் தீங்குவருமென்பதை உல்லாஸன் முன்னதாகவே உணர்ந்தான் போலும். கரையோரத்திலிருந்த குன்றின்மேலேறிப் பார்க்கையில் அங்கு மனிதஸஞ்சார முண்டென்றறிந்து, உல்லாஸன் தன்னாட்களிலிருவரை உள் நாட்டிற் சென்று அங்குள்ள வளங்களைப் பார்த்துவரும்படி கட்டளையிட்டான். அவரிருவரும் போய்ப் பார்க்கையில் அந்த நாட்டார் பயிர்த்தொழிலொன்றுஞ் செய்பவராயில்லை. நிலமுழாமற் கிடந்தது. எருதுகள் கலப்பைகளிற் பூட்டப்பட்டனவாகத் தோற்றவில்லை. அவ்விருவருக்கெதிரில் நீரெடுக்கப் பாத்திரந் தலைமேற்கொண்டு லக்ஷணமான பெண்ணொருத்தி வந்தாள். அவள் அவர் கேட்ட கேள்விக்கு மறுமொழி சொல்லாமலே தன் பிதா அந்திபனிருந்த அரண்மனைக்கு அவ்விருவரையும் அழைத்துப் போனாள் அந்திபனும் அவன் பிரஜைகளும் ராக்ஷஸர்கள். அரண்மனைக்குப் போனவுடன் அந்திபன் மனைவி, தன் புருஷனைக் கூப்பிட்டாள். வந்த அந்திபன் கிரேக்கர் இருவரில் ஒருவனைப் பிடித்து விழுங்கி விடுவான்போல் அச்சுறுத்த, மற்றொருவன் கடற்கரை யோடிக் கப்பலேறினான்.

துறையிற் கப்பலும் மனிதர்களும் வந்த செய்தி தெரிந்து ராக்ஷஸக்கூட்டம் புற்றிலிருந்து ஈசற் கிளம்பினதுபோலக் கரையோரத்தில் வந்துகூடி அங்குள்ள மலைப்பாறைகளைப் பிடுங்கிக் கப்பல்கள்மேல் வீசக் கப்பல்கள் நூறு சுக்காயுடைந்து உள்ளிருந்த ஆட்களெல்லாரும் அலையில் மிதக்கும் தருணம்பார்த்து நரமாம்ஸ பக்ஷிணிகளாகிய ராக்ஷஸர் பெரிய ஈட்டிகளால் மனிதரைக் குத்தித் தூக்கிக் கரையில் வைத்துத் தின்ன ஆரம்பித்தார். வெளிப்புறத்தில் தன் கப்பலை நிறுத்தியிருந்த உல்லாஸன், உடன் வந்தவருக்கு வந்த விபத்தைத் தீர்க்க இயலாதவனாய், மிகுந்த ஆட்களைக் கொண்டு தன் ஒற்றைக் கப்பலை ராக்ஷஸர் கையிலகப்படாமற் செய்வதே கஷ்டமாயிருந்தது. உடன் வந்தவர்களின் கதியைக் கண்ட உல்லாஸனாட்கள் கல்லாய்ச் சமைந்தார்கள். தம்மைக் காத்தல் அவசியமாய்விட்டபடியால் உல்லாஸனும் அவனாட்களும் தம்மொற்றைக் கப்பலைச் செலுத்திக்கொண்டு இதாகாவை நோக்கிப் போனார்கள்.

## இரண்டாம் அத்தியாயம்

*கண்காட்டும் வேசியர்தங்கண் வலையிற் சிக்கிமிக*
*அங்காடி நாய்போ லலைந்தனையே நெஞ்சமே!*

உல்லாஸனுடைய ஒற்றைக்கப்பல் யாத்திரை செய்து வருங்கால் ஸூர்யபுத்ரியாகிய **ஸூரஸி** வசித்த **எய்யா** என்னுந் தீவிற்கு வந்தது. ஸூரஸி மஹா மாயைக்காரி; அழகினால் வீராப்படைந்தவள்; அவள் கூந்தல் கதிரவன்போல் ஒளிவீசிற்று.

கப்பலில் சேகரித்து வைத்திருந்த உணவுப்பொருள்களும் குடிதண்ணீரும் குறைந்துவிட்டமையால் எய்யாத் தீவினுட் சென்று அவையிரண்டையும் தேடவேண்டியதாயிற்று. உல்லாஸன் தன்னாட்கள் சிலரையழைத்துத் தீவினுட் புகுந்து ஆகாரந்தேடி வரும்படி ஆஞ்ஞாபிக்க, கிக்ளாப்பியரும் லோஷ்டிரகோணியரும் தமது தோழர்களுக்குச் செய்திருந்த தீங்கை எண்ணி மனந் துடித்துக் கண்ணீருகுத்து ஒருவரும் போகச் சம்மதிக்கவில்லை. பின்பு உல்லாஸன் தன்னாட்களை இரண்டு கக்ஷியாகப் பிரித்து ஒன்றினுக்குத் தன்னைத் தலைவனாயும் மற்றொன்றினுக்கு, அநேக யுத்தங்கள் செய்து தீரன் எனப் பெயர் பெற்ற யூரிலாகன் என்பவனைத் தலைவனாயும் நியமித்துச் சீட்டுப்போட்டு எந்தக் கக்ஷிக்குச் சீட்டு விழுகின்றதோ அந்தக் கக்ஷி எய்யா தீவுக்குள் போகிறதென்று தீர்மானித்ததில் யூரிலாகன் கக்ஷி போகவேண்டியதாகச் சீட்டெடுபட்டது. யூரிலாகனும் அவனாட்களும் கப்பலிலேயிருந்த தமது தோழர்களைத் திரும்பிவந்து பார்த்ததில்லையென்று எண்ணி ஒவ்வொருவரையுங் கட்டித் தழுவி அழுதுவிட்டுத் தீவிற்குட் சென்றார்கள். போனவிடங்களிலெங்கும் காட்டு மிருகாண்டிகளும் நரமாம்ஸ பக்ஷிணிகளுந்தானிருப்பார்களென்று யூரிலாகனும் அவனுடனிருந்தவர்களும் எண்ணலானார்கள்.

எய்யா தீவினுட்பிரதேசத்தை யூரிலாகனும் அவனுடன் சென்றவர்களும் பார்க்கும்போது ரத்னகசிதமான மாளிகை ஒன்று கண்ணிற்பட்டது. அம்மாளிகையிற்றான் ஸூரஸி வாஸஞ் செய்தனள். அரண்மனை வாயிலில் ஸூரஸியின் மாயவித்தையினால் கட்டுண்டு மூர்க்க சுபாவத்தை முற்றிலும் துறந்த சிங்கங்களும், ஒனாய்களும், புலிகளும் வேறு காட்டு மிருகங்களும் கூடியிருந்தன. யூரிலாகனையும் அவனாட்களையுங் கண்டவுடன் மேற்கூறிய விலங்குகளெல்லாம் பின்னங்கால்களினால் நின்று புதிதாய் வந்தவாருகிற் சென்று உறவு கொண்டாடின. இந்தப் புதுமையைக் கண்ணுற்ற யூரிலாகன் முதலானவர்கள், மனத்தி லச்சமடைந்தார்கள். கதவண்டை சென்றபோது ஸூரஸி தறியில் வேலை செய்துகொண்டே தேவகானம்போன்ற சங்கீதம் பாடினதைக் கேட்ட யூரிலாகனும் அவன் தோழர்களும் ஆநந்த பரவசமாய் மெய்ம்மறந்து நின்றார்கள்.

ஸௌரவியின் கானத்தைக் காதினாற்கேட்ட தக்ஷணமே மஹாவிவேகிகளுக்கும் கதவை இடித்துப் பாடுகின்றவளைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுண்டாகாமற் போகாது. யூரிலாகன் தோழர்களிற் சிலர் கதவை இடிக்க, ஸௌரவியே நேரில்வந்து கதவைத்திறந்து கதவிடித்தவர்களை யுள்ளே வந்து போஜனஞ்செய்தல் வேண்டுமென் றுபசரித்தாள். யூரிலாகன் மாத்திரம் ஸம்சயந்தோன்றி யுட்போகாமலிருக்கையில், மற்றவர் ஸௌரவியின் உள்ளே சென்றார். உட்சென்றவர்களுக்கு உயர்ந்த ஆஸனமளித்து அற்புதமான உணவுகளையும் பானங்களையும் அவர்க்கெதிரில் வைத்துப் புசிக்கும்படி வருந்தினாள். உணவுகளும் பானங்களும், அந்தோ மாயமருந்துச் சரக்குகள் கலந்தவை. அவர்கள் முன்வைத்த பொருள்களைத்தின்றானவுடனே, ஸௌரவி தன் மாத்திரைக் கோலால் ஒவ்வொருவரையுந் தொட்ட நிமிஷத்தில் அவர்கள் மனுஷரூபம் மாறிப் பன்றி யுருவத்தை யடைந்து உறுமினார்கள். பிரஞ்ஞை மனிதருடையதாகவும், ரூபம் மிருகத்தினுடையதாகவு மிருப்பதை யறிந்த யூரிலாகன் ஆட்கள் பட்ட துக்கம், மிகப்பெரியதா யிருந்தது. வஞ்சனையினாலுருவத்தை மாற்றினபின் அவர்களையெல்லாம் பன்றிகள் கட்டுந் தறியிலோட்டிப் பன்றிகளுக்குரிய ஆகாரத்தையும் போடும்படி ஸௌரவி கட்டளையிட்டாள்.

வெளியிலிருந்த யூரிலாகன் அரண்மனைக்குள் நடந்த விபரீத மொன்றையு மறியாதவனாய் மதிமயங்கி நிற்கையில் உள்ளிருந்து மனிதரொருவரும் வெளிவராமல் பன்றிக்கூட்டம் வருவதைக் கண்டு அஞ்சிக் கப்பலுக்கோடி நடந்தவற்றைத் தெளிவாய்ச் சொல்ல இயலாமல் 'மாளிகை ஒன்று, பாடினவள் ஒருத்தி, வெளிப்புறத்தில் சிங்கங்கள் உள''என்றுமாத்திரம் வாய்குழறிச் சொன்னான். பீதியினால் பேச்சுங் குழறுமன்றோ? உடன் சென்றவர்கள் மாயமாய் மறைந்தார்களென்றும் யூரிலாகன் சொன்னான்.

இதைக்கேட்ட உல்லாஸன் ஜாலவித்தை ஏதோ நடந்திருக்கிறதென்று யூகித்து யூரிலாகனை நோக்கித் தன்னை அந்த விடத்திற்கு இட்டுப்போகும்படி வேண்ட, யூரிலாகன் "மஹாராஜாவே, தாம் தைவரக்ஷணையிலிருப்பது வாஸ்தவம்: அவ்வரண்மனைக்குட் செல்வீராயின், தமக்கும் கப்பலிலுள்ளவர்களுக்கும் நாசம் நிச்சயம். தங்களை நமஸ்கரித்து விண்ணப்பஞ் செய்கின்றேன். இந்த மாயத்தீவிற்குள் தாம் செல்லுதல் எள்ளளவேனும் எனக்குச் சம்மதமில்லை"யென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

உல்லாஸன் கோபமூண்டு, "நீ கப்பலிலேயே உண்டு களித்திரு; நான் தனியே செல்லுகின்றேன்; பெரிய ஆபத்தில் முன்பின் பார்த்தல் சரியன்று" என்று சீறிச் சொன்னான். யூரிலாகன் உடன் போகாமல் கப்பலிலேயே இருந்து விட்டான். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயன்றோ?

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 4. நற்குணங்கள்—ஜீவகாருண்யம்

Virtues—Kindness to Animals

குறிப்பு.—ஸ்வரூபம்—எல்லை—தர்மசங்கடம்—காரணம்—காரியம்—கதைகள்.

ஜீவகாருண்யம் என்ற சொல்லுக்கு ஜீவர்களிடம் தயையோடிருத்தல்; தன் உயிரைப்போல மற்ற உயிர்களையும் கனிவுடன் கருதுவது என்பதே பொருள். கருணை என்பது பிறர்படும் கஷ்டத்தை நோக்க உண்டாகும் ஒருவித மனக்கனிவு. ஜீவன் என்றதனாலேயே ப்ரபஞ்சத்தில் காணப்படும்பொருள்கள் எல்லாவற்றையும் குறிக்கும். எங்கும் ஜீவாத்மா உள்ளது ஆயினும் வெவ்வேறு நிலையில் சிற்சில அறிவுகள் மழுங்கி இருக்கின்றது என்பது நம்மதக்கொள்கை. இந்தக் கருத்தையே **பூததயா** என்ற சொல் நன்கு உணர்த்தும் எந்த ஜீவனுக்கேனும் கஷ்டப்பட நேரிட்டால் அதன் விஷயமாக மனக்கனிவு ஒன்று நமக்கு உண்டாக, அதன் துயரத்தை நீக்க முயலுவதும், நாமாக ஒரு கஷ்டத்தையும் அதற்குத் தராமலிருக்க முயலுவதும் இதன் தொழில். இதுவன்றி ஒரு ப்ராணி மிகக் கஷ்டப்படுங்கால் அதை உடனே கொன்றுவிடுவதை இக்காலத்திய சில மஹான்கள் கூறுவதுபோல ஜீவகாருண்யம் என்று கூறலாமா? வியாதியால் கஷ்டப்பட நேரிடுபவர்களை மருந்தால் சீக்ரம் கொன்று கஷ்டம் தீர்ப்பது அன்பின் குணமாயின் முன்னர் கூறியதும் ஜீவகாருண்யமே! ஆகவே ப்ராணிக்கு இறப்பது கஷ்டநிவர்த்தியாயினும் அப்பொழுதும் அதைக் கொல்லாதிருத்தலே ஜீவகாருண்யத்தின் ஸ்வரூபம். கொல்லாமை இந்நல்லொழுக்கத்தின் சிறந்த பாகம். கொன்றதையும் தின்னாதிருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் நமக்காகப் பிறர் கொல்லாமலிருப்பர். இவைகளை உள்ளடக்கியே திருவள்ளுவரும் 'அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என்று முடிவாகக் கூறி யிருக்கிறார். உணரும்உயிர் அற்ற செடி கொடிகளிடத்திலும் இந்த ஜீவகாருண்யத்தைக் கூடியவரையில் காட்டவேண்டும். அகாலத்தில் பூ காய் முதலியவைகளைத் திருகாமை, கிளைகளை ஒடியாமை, மரங்களை வெட்டாமை ஆகிய இவைகளே அசேதனப் பொருள்களிடம் காட்டக்கூடிய ஜீவகாருண்யம்.



ஜீவகாருண்யம் ஒரு எல்லை கடந்து விட்டால் நம்மை வீழ்த்தும் அபிமானமாகிவிடும். உயிர்ப்பிராணிகளுக்கு நம்முன் வரும் கஷ்டங்களை நீக்கி, அவைகளுக்குக் கஷ்டமாக ஏற்படக்கூடிய மாம்ஸம் உண்ணுவதைத் தகைவதற்கு மேல், ஒருஜீவனை எடுத்து வளர்த்துக் காத்து வருவதுஜீவகாருண்யமேயல்ல. அது ஜீவாபிமானமே. மற்றை உலகப்பற்றுக்கள் நமக்குச்சிலகாலங்களில் எவ்வளவு துயரத்தைக் கொடுக்குமோ அதைவிட அதிகத் துயரத்தை உண்டாக்கும் இந்நிலை. ஆதலால் ஆடு கோழிகளைக் கருணையின்றிக் காய்கறிபோல நறுக்கித்தின்னுபவர்கள் வீட்டில், நாய் பூனை கிளி முதலிய பிரியபிராணிகளை வளர்த்தபோதிலும் அவர்கள் ஜீவகாருண்யத்தில் பழகுபவர் அல்லர். மாம்ஸபக்ஷணம் செய்பவர்களிடம் ஜீவகாருண்யம் இல்லாததால் ஏற்படும் கல்நெஞ்சோடுங்கூட, மிகத்துக்கம் விளைக்கக் கூடியதாகிய துர்அபிமானமும் இதனால் சேருமே ஒழிய வேறொன்றும் அன்று. பிரிய ப்ராணிகளை வளர்ப்பதாலே மிகுந்த மனக்கனிவு வாய்ந்தவர்களே ஜீவ அபிமானத்திற்கு ஆளாகித் தத்தளிப்பர் என்றால், மற்றையவர்கள் நிலையைப்பற்றி கூறவும் வேண்டுமா? ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பழகுங்கால் நமக்குத் தோன்றும் வரையில் ப்ராணிகள் கஷ்டங்களைத் தீர்த்துவிட்டு ஒதுங்கிவிடவேண்டும். அதை முற்றிலும் காத்துவிடுவது எல்லோருக்கும்படியளக்கும் பரம்பொருள் செயல். அதை எண்ணி எண்ணி மனங்கலங்குவது இவ்வொழுக்கம் ஜீவாபிமானமாகத் தடிக்கும் நிலையே ஒழிய இவ்வொழுக்கத்தின் அங்கமன்று.

சிற்சில ஸமயங்களில் இவ்வொழுக்கத்தில் பழகுங்கால் இவ்வழி ஒழுகுவது என்பதைப் பகுத்தறியக்கூடாத நிலை வந்துவிடும். ஒரு குளத்தின் கரைஓரமாய் நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு பாம்பு தவளையை பிடித்ததைக் கன்டோமென்று வைத்துக்கொள்ளுவோம். இப்பொழுது என்ன செய்வது? தவளைபடும் பாட்டை நோக்கில் அதை விடுவிக்கவேண்டியது அவசியம். அதை விடுவித்தால் பாம்புபிடித்த இரையை இழந்து பரிதவிக்கும். என்ன செய்வது என்றகுழப்பம் உண்டாகிவிடும். பாம்பின் பசி பெரிதா? தவளையின் உயிர் பெரிதா? தவளையின் உயிர்தான் பெரிது; ஆதலால் தவளையை விடுவிக்கவேண்டும். ஆனால் பாம்பு எப்படியும் தவளையைத் தின்றுதானே பிழைக்கவேண்டும். ஆகவே நாம் அதைவிடுவித்து என்னபயன்? என்றால் அது இதே தவளையைத்தான் பிடிக்கிறது என்பது என்ன நிச்சயம்! மேலும் நமது கண்மறைவில் என்னவாவது நடக்கட்டும்; இந்த ஸமயத்தில் தவளையை விடுவித்துத் தீரவேண்டும். பாம்பினிடம் காருண்யம் அதிகமாயிருந்தால் சிபி வல்லூறுக்குச் செய்ததுபோல் நமது அங்கத்தில் கொஞ்சம் அறுத்து வேண்டுமாகில் போடலாம். அவ்வாறு செய்யமுடியாத நாம் தவளையை விடுவிக்குங்கால் பாம்பினிடம் த்வேஷ புத்தியில்லாமலும் கல்லெடுத்துப் பாம்பை அடிக்காது, சச்சரவு உண்டாக்கிப் பாம்பு ஓடிப்போகும்படி செய்யலாம். விடுத்த தவளை பின்னர் இறக்குமோ, அல்லது நாம் போன பின்பு பாம்பு அதே தவளையை வந்து பிடிக்குமோ, என்று வருவதைப்பற்றி வீண் எண்ணங் கொள்ளாது தவளையை வேறிடம் கொண்டு சேர்த்துவிட வேண்டிய வரையில்தான் ஜீவகாருண்யத்தைச் சேர்ந்தது. மற்றவைகள் ஜீவ அபிமானம், ஜீவத்வேஷம் அல்லது குதர்க்கம் ஆகிய கொடுங்குணங்களைச் சேர்ந்தவைகள்.

ஏன்ப்ராணிகளிடம் இம்மாதிரி தயையுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கலாம். மாம்ஸபக்ஷணம் செய்துகொண்டு தமது உபயோகத்திற்காக சில பிராணிகளை அன்பு வைத்து வளர்ப்பவர்கள் 'அவைகள் ஸந்தோஷமாக விருந்தால்தானே நமது காரியம் ஆகும். மேலும் அவைகள் ஆனந்தமாயிருப்பதைப் பார்த்தால் நமக்கே ஒருவிதத் திருப்தி உண்டாகும்' என்று கூறுவர். இந்தக் காரணத்தின் வலுக் குறையுங்கால் இவர்கள் ஜீவகாருண்யம் பறந்தோடிப் போய் விடும். வியாதி அல்லது அதிக வயது இவைகளுக்கு பிராணி ஆளாகிவிட்டால் அடங்காக் காருண்யத்தால் முன் திருப்தியைப்பற்றிக் கூறியவனே அதைக் கொன்றுவிடுவான். இது உலக ப்ரயோஜனத்தைப் பொருத்ததாதலால் இக்கொடிய முடிவிற்கு வருகிறது. இவர்களைவிடச் சற்று ஆராய்பவர்கள் 'நமக்கு ஏதாவது கெடுதிகள் ஏற்பட்டால் வாய் விட்டு சொல்லித் தகுந்த வழிகளில் தடுக்க அல்லது தீர்க்க திறன் உண்டு. பிராணிகளுக்கு அவ்வாறில்லாததால் அவைகளின் நோக்கமறிந்தே நாம் நடக்கவேண்டும். திறமை இல்லாதவர்களுக்குக் காட்டும் தயை மனதிற்கு ஒருவித ஆனந்தத்தைக் கொடுக்கும். ஆதலால் ஜீவகாருண்யத்தில் பழகவேண்டும்' என்பர். இது முன்னதைவிட நல்ல முகாந்திரமாயினும், நாம் செய்யும் சிறு நற்செயல்கள் மூலமாக வீண் கர்வம் முதலிய கொடுங் குணங்களுக்குக் காரணமாகும். மத விஷயமான காரணமேமிகச் சிறந்தது. 'ஜீவாத்மாக்கள் எங்கும் உள. அவைகள் தம் நிலையிலிருந்து மேன்மை அடைய வெவ்வேறு விதமாக முயலுகின்றன. இதற்கு ஸஹாயமாகவே இவ்வுலகமும் ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த ஜீவராசிகள் மேன்மை அடைவது மிகக் கஷ்டமாதலால் அவைகள் நடுவில் தடைபடாது வாழ்ந்து உயரவேண்டியது அவசியம். ஆதலால் அவைகளை எவ்விதத்திலும் வருத்தாது அவைகளுக்கு ஏற்படும் கஷ்டங்களை நீக்க முயலவேண்டும்', என்பதே மதவிஷய முகாந்தரம். மத விஷயத்தின் முடிவான எங்கும் பரம்பொருளைக்கண்டு தெளிவதற்கு இந்த ஜீவகாருண்யம் முக்யமாக படிபோன்ற நிலை. ஆகவே முடிவிற்கும் விரோதமான நிலையுமன்று.

ஜீவகாருண்யத்தால் ஏற்படும் ப்ரயோஜனம் யாது? ஆடுகளுக்குக் கசாப்புக் கடைக்காரனைக் காணும்பொழுதே ஒருவித பயம் ஏற்படும். இதுபோல மற்றைய ஜந்துக்களுக்கும் கொடிய சித்தமுடையவர்களைக் கண்டதும் ஒருவித பயம் ஏற்பட அவைகள் மனிதர்களைத் தாக்கும். பாம்பு பயந்துதான் கடிக்கிறது: மனிதன்

பாம்பு கடிக்குமே என்று பயந்துதான் அடிக்கிறான். இந்தக் குழப்பத்தில் ஜீவகாருண்ய முடையவன் நிலை மிக ஸுககரமானது. தனக்குப்பெரிய அபாயம் வருங்காலம் தவிர மற்றை வேளைகளில் ஒருவிதப் பரபரப்பின்றி இவனாலிருக்க முடியுமாதலால் இவனுக்கு மற்றைய ப்ராணிகளிடமிருந்து யாதொரு பயமும் இல்லை. நிர்பயம் இவன் மனதில் ஏற்படும். பயமற்றவாழ்வைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. எங்கும் பரம்பொருளைக் கண்டு தெளிவதற்கு வேண்டிய மனக்கனிவு சாந்தம் இவைகளை இக்குணம் எளிதில் கொண்டு சேர்க்கும். மற்றைய நற்குணங்கள் வந்து கூடும் என்று கூறாமலே விளங்கும். இதை ஜீவாபிமானமாக தடிக்க விடவே கூடாது. அவ்வாறு இடங்கொடுத்துவிட்டால் இது மோக்ஷத்திற்குத் தடையாக ஏற்படும்.

ஜீவகாருண்ய ஸ்வரூபம் எல்லை முதலியவைகளை நன்கு விளக்கும் புராண கதைகள் அநேகம் உள. சிபிசக்ரவர்த்தி மாடப்புறாவுக்காக அதைத் துரத்தி வந்த வல்லூறுக்குத் தன் தேஹத்தையே கொடுத்தது, ஜீவகாருண்யத்தின் ஸ்வரூபத்தையும் தர்மஸங்கட ஸமயங்களில் இவ்வொழுக்கத்தில் நிலைபெறும் விதத்தையும் நன்கு விளக்கும். ஜீவகாருண்யத்தால் தூண்டப்பட்டு ஜடபரதர் ஒரு மானை ஆற்றிலிருந்து கரை ஏற்றப் பின்னர் அதனிடம் அன்பு வளர்த்து மான் ஜன்மம் அடைந்த கதை ஜீவகாருண்யத்தை ஜீவ அபிமானகத்தடிக்கவிட்டால் வரும் கேட்டை நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. இவைகளை நன்றாக ஆராய்ச்சி செய்தால்தான் ஜீவகாருண்யத்தின் உண்மை நன்றாக வெளியாகும்.

### போதுக் குறிப்புக்கள்

1. ஸ்வரூபம்.
2. எல்லை.
3. தர்மஸங்கடம்.
4. காரணம்.
5. காரியம்.
6. கதைகள்.

### இதுபோல விவரிக்கக்கூடிய வ்யாஸ விஷயங்கள்

1. பொறுமை.
2. நேர்மை.
3. தாய்தந்தையர் வழிபாடு.
4. அடக்கம்.
5. கொடை,
6. படிப்பு.
7. திருப்தி.
8. பெருந்தன்மை.
9. மௌனம்.
10. பகுத்தறிவு.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## Translation Models

### Thoughts about Sick Rooms

The sick room is a holy place, where none but gentle feet might tread. All suffering is sacred, and admits of no mockery and no abuse. The bed on which a human being is thrown prostrate is an altar, where the pride of the sufferer is submitted for sacrifice, where the combined incense of prayer and pity goes up to Heaven. Women, whatever their frailties are, are generally the officiating priests at the sacrifice. Their calm self-denial their long night vigils, their soft soothing words, the eagerness with which they attend to the patient's wants, the strong restraint they put upon their tears which want to roll down in torrents, the patience and readiness with which they endure scenes too hard to bear even for medical men, and the silent prayer from which they never cease, convert the sick chamber into a temple, where one might prostrate and worship. More philosophy is learnt and practised within its four walls than anywhere else. Here is religion without its rituals, philosophy without its dryness, and love without its vanity.

### நோயாளி யறையைப்பற்றிய ஆராய்ச்சி

நோயாளி அறை, ஒரு பரிசுத்தமான இடம். இங்கு உள்ளங் கனிந்தவர்கள் அல்லது மற்றவர் அணுகவே கூடாது. துக்கம் அனுபவிப்பது மிகப் பரிசுத்தமானது ; அதைக்கண்டு நகைக்கவாவது இகழவாவது கூடாது. ஒரு மனிதன் பெரும் படுக்கையாகக் கிடந்து வருந்தும் படுக்கை அவன் அகங்காரத்தைப் பலியாக ஸமர்ப்பிக்கப்படும் ஒரு பலிபீடம். இங்கு ப்ரார்த்தனைகளும் இரக்கமும் சேர்ந்த தூபப்புகையே கடவுளைச் சென்று தாக்கும். எவ்வளவு அபலைகளாயினும் பெண்மணிகளே இந்த யாகத்தில் ஹோமகர்த்தர்கள். அவர்கள், தம் நயம் கருதாமை, இரவில் ஓயாக் கண்விழிப்பு, கனிந்தமொழிகள், நோயாளிவிருப்பத்தை உணர்ந்து தீர்க்கும் ஆவல், அருவியாகப் பாய்ந்தோடக் காத்திருக்கும் கண்ணீரை முயற்சித்துத் தடுத்தல், வைத்யர்களாலும் தாங்குவதற்கரிய காட்சிகளை மனமிசைந்துபொறுமையுடன் பார்த்து ஸஹித்தல் ஓயா மானஸப்ரார்த்தனை ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்து நோயாளியின் அறையை நமஸ்கரித்து வழிபடத்தக்க கோயிலே யாக்கிவிடுகின்றன. இந்த அறையுள் வேதாந்தம் அறிந்து அனுஷ்டிப்பதுபோல வேறெங்கும் செய்யவே முடியாது. இங்குதான் சடங்குகளுக்கு அப்பாற்பட்ட மதமும், விரஸம் நீங்கிய வேதாந்தமும், வீண்பெருமை நீங்கிய அன்பும் காணப்படும்.



## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 9

### ஓர் அத்புத உருவம்

*சில்பெரியோர் தாமடைந்த ஸித்திகளால் கர்வமின்றிப்*
*பல்பலர்க்கு நன்மைசெய்வர், பாரியார்—சொல்புகழை*
*வாஞ்சித்து மற்றோரை வஞ்சிக்கும் எண்ணமுளார்*
*ஆஞ்சித்தி காட்டுவர் வீணே.*

**காலை** 6 மணி ஸுமாருக்கு ஒரு வேலைக்காரி நாராயணய்யர் அவர்கள் வீட்டு வாயிலில் பெருக்கிக்கொண்டிருந்தாள். வீட்டுள்ளே தன்னைவிட்டுக் கொஞ்சதூரத்தில் தனக்கு எதிரே இருந்த சிறு பெண்ணை இடையிடையே அதட்டிக்கொண்டும் இவள் இருந்தாள். 'என்னடீ! ஒங்காரியத்தை பாராது வழியிலே போரவரவங்களை எல்லாம் இப்படி முழிச்சு முழிச்சு பாக்கரையே! ஏண்டி அப்படி பாக்கிறே, மூடமே! நாங்கேக்கரே! என்னசும்மா யிருக்கே!' என்று அதட்டினாள். உண்மையிலேயே அச்சிறு பெண் அப்பொழுது அதிகப் பயத்தால் நாவெழாது தான் பார்ப்பதைக் கூறமாட்டாமல்தெருவில் ஏதோ ஒன்றைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தது. தன் சொல் பயன்படாதது கண்டு தாய் மறுபடியும் 'ஒன் வேலையைப்பார் இன்னா? இன்னும் கேக்கலியா? சொன்னபடி கேக்கரையா? இந்த வாரியலாலே அடிக்கட்டுமோ?' என்று அதட்டிக்கொண்டு கையிலிருந்த துடைப்பக்கட்டையை ஓங்கி தான் கூறியபடி செய்யத் துணிந்து விட்டதாகக் காட்டிவிட்டாள். இம்மாதிரி குழந்தையை பயப்படுத்தி நல்வழிக்குக் கொண்டுவர துடைப்பத்தை உயர்த்திக் கொண்டு இவள் நிமிர்ந்ததது தான், தன்னருகே பின்புறம் பயங்கரமான உருவம் ஒன்று நிற்கக் கண்டுவிட்டாள். கழுத்திலிருந்து கால்வரை தொங்கி ஆடிக்கொண்டிருந்த காஷாயவஸ்த்ரம் உடுத்தவராயும், கழுத்தில் ஒரு கிருஷ்ணஸர்ப்பம் சுற்றிக் கொண்டு படமெடுத்து ஆடிக்கொண்டிருக்கப் பெற்றவராயும் உள்ள ஒரு யோகிபோல அவ்வுருவம் காணப்பட்டது. பாம்பு மண்டலமிட்டிருப்பதுபோல ஒழுங்காக சுற்றிக்கட்டப்பட்டஜடாமகுடம் அவர் தலையில் காணப்பட்டது. நீண்ட தாடி இருந்தது. நெற்றிபுருவங்களில் எல்லாம் விபூதி அணிந்து கொண்டிருந்தார். நடுநெற்றியில் அகன்ற குங்குமப்பொட்டிட்டிருந்தார். கையில் யோகதண்டம் பிடித்திருந்தார். அவர் நல்ல சிவப்பு வர்ணமுடையவர், நல்ல தேகக் கட்டுடையவராய் ஸுமார் ஆறு அடிக்குமேல் உயர்ந்து காணப்பட்டார். அவர் முகத்தில் ஒருவித தேஜஸ் ஜ்வலித்தது. அவர் இஷ்டப்படி கண்ணை ஒருமாதிரி நெறித்துக்கொண்டு நோக்கவும், பயங்கரமாகச் சுழற்றவும் அவருக்கு விசித்ர சக்தி ஒன்றிருந்தது. இதைக் காணும் சிறுவர்களும் பெண்டுகளும் பயந்து அலறிவிடுவார்கள். வேலைக்காரி பார்க்குங்கால் இவர் விக்ரஹம் போல விரைப்பாய் அசையாது நின்று கண்ணை நெறித்துக்கொண்டும் பயங்கரமாகச் சுழற்றிக்கொண்டும், அவள் அருகில் நின்றுகொண்டிருந்தார். பாம்போடு கூடிய இந்த உருவம்அருகில் நிற்பதைக்கண்டவுடன், துடைப்பத்தை நழுவ விட்டு விட்டு, பயந்து அலறிக்கொண்டு, உள்ளே போய்விட்டாள் வேலைக்காரி : இதுவரையில் நாவெழாது ஸ்தம்பித்துப்போன அவள் சிறுபெண் பெருங்கூக்குரலிட்டு அம்மா! அம்மா!! என்று ஓலமிட்டுக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள். உள்ளே இருந்த வேலையாள் ஒருவன் ஓடோடியும் வந்து 'என்ன! என்ன!!' என்று விசாரித்தான். மறுமொழி கூற வாய் எழாது அலறிக்கொண்டே அவர்கள் வாயிற்பக்கம் காட்டினார்கள். வெளியில் வந்த வேலைக்காரன் திடீரென்று அத்புதயோக கம்பீரத்துடன் விரைப்பாய் நிற்கும் உருவைக்கண்டதும் பயந்து பின்னடைந்து 'நீர் யார்?' என்றுகேட்க வாய்எடுப்பதற்குமுன், இடிமுழக்கம்போன்ற தமது குரலால் 'உன்யஜமானனிடம் அவர் யஜமானன் வந்திருப்பதாகக் கூறு. சீக்கிரம் போய் அவரை வரச்சொல்' என்று உத்தரவளித்தார் அந்த யோகி.

வேலையாள் உடனே யஜமானனைத் தேடிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். யஜமானனோ யோகிவிஷயத்தை உணராது நித்திரை செய்துகொண்டிருந்தார். வேலையாள்பாடு தர்மசங்கடமாகப் போய்விட்டது : ஒருபுறமோ டிப்டி கலெக்டர் கோபம், மறுபுறம் யோகியின் கோபம்! ஒன்றும் செய்ய முடியாது விழித்து நின்றான் வேலையாள். இந்த ஸங்கடம் வேறு ஆள்களால் சீக்கிரம் நிவர்த்தியாகிவிட்டது. வேலைக்காரியும் அவள் பெண்ணும் இட்ட கூச்சல் வீட்டைக் கலக்க, ஸீதாலக்ஷ்மிக்கும் ருக்மிணிக்கும் இந்த அதிதிவிஷயமாக இன்னது செய்வது என்பது விளங்கவில்லை. உடனே இருவரும் தம்தம் கணவர்களிடம் சென்று அவர்களைத் தட்டி எழுப்பினர். 'எழுந்திரும் பிராணநாத! வாரும் சீக்கிரம்! ஒருசிறந்த யோகி, அத்புதரிஷி! எழுந்திரும் கீழேவாரும்' என்றுகூவித் தன் கணவனை எழுப்பினாள் ருக்மிணி. யோகி என்றுகேட்டதும், ஸ்ரீநிவாசன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து கீழே ஓடிவந்து அதிதியின் முகத்தை ஏறிட்டு நோக்கி, அவர் காலில் விழுந்து, 'ஈசா, எவ்வளவு கருணை! என்ன ஸத்யம்! நீர்தான் ஸர்ப்பபூஷணர்! கைலாஸபதி! என் கனவிலும் நீர்தான் வந்தவர்! என்ன ஆச்சர்யம்! ஸ்வாமி! ப்ரபோ உள்ளே எழுந்தருளலாமே, ஸத்குரோ! உள்ளே ப்ரவேசித்து இந்த வீட்டைப் பரிசுத்தப்படுத்துங்கள். யாரடா அங்கே! கொண்டா ஒரு நாற்காலி' என்று மஹா விநயத்துடன் யோகிக்கு நல்வரவு கூறினான். நாராயணய்யரை இவ்வளவு சீக்கிரம் கிளப்பி

விட முடியவில்லை. அப்பொழுது அவர் ஒரு ஸ்வப்நம் கண்டுகொண்டிருந்தார். தன்னிடம் மிகுந்தமதிப்புடன் இருந்த கலெக்டரிடம் ஏதோ முக்ய விஷயங்களைப் பற்றிக்கலந்து பேசிக்கொண்டிருந்ததாகக் கண்டார். நல்ல ஸ்வப்நத்திலிருந்து விழிப்பது எளிதல்ல. வெகு நேரம் குலுக்கிய பின்னர் தான் ஸ்வப்நத்திலிருந்து ஜாக்ரதாவாஸ்தைக்கு வர இசைந்தார் **டிப்டி கலெக்டர்.** அப்பொழுது எதிரேயிருந்த வேலையாள் வசவிற்குப் பயந்து மஹாவிநயத்துடன் அத்புத அதிதி கூறிய உத்தரவைக்அவர்கூறியபடி அங்கு ஸமர்ப்பித்துவிட்டான். உடனே தன் யஜமானன் என்பது கலக்டெரை என்று மாருகக்கொண்டு, 'யாரடா அங்கே கொண்டாடா பட்டுசட்டை, ஜரிகைத் தலைப்பாகை, முதலியவைகளை' என்று உத்தரவளித்துவிட்டு, அந்தப் பெரிய ஸாயிப்புவைத் தகுந்தபடி நல்வரவு கூறுவதற்கு வேண்டிய வக்கணைகளை மனதில் அமைத்து வைத்துக்கொண்டார். இந்த மாறெண்ணத்தை உடனே மாற்றிவிட்டாள் அவர் மனைவி, அவரும் கீழே ஓடிவந்து அதிதிக்கு நல்வரவு கூறி அவர் ஸௌகர்யங்களை விசாரிக்கத் தொடங்கிவிட்டார்.

இதற்குள் வீட்டோர், பின் தொடர ஸ்ரீநிவாஸன் வழிகாட்ட அதிதி தாமே மேலே வந்துவிட்டார். நாராயணய்யர் வரும்பொழுது அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் தோளில் ஸர்ப்பம் இழைந்துகொண்டிருந்தது; ஸ்ரீநிவாஸன் அவர் பாதத்தில் மறுபடியும் விழுந்து 'ஸத்குரு! ஸ்வாமி!' என்று துதித்துக்கொண்டிருந்தான். வைதிகமுறைப்படி அவர் நமஸ்கரித்ததும் குலுங்க நகைத்தார் அதிதி; யாது காரணமோ அவருக்குத்தான் தெரியும். 'ஓர் அதிதி உம் வீட்டிற்கு வலியவருவது; உள்ளேபுக அரை நாழிகை காத்திருக்கவேண்டியதா? பரவாயில்லை. நல்ல ஸமாசாரம் வருகிறது இன்றைக்கு உமக்கு' என்று குறி சொல்லிமுடித்தார் யோகி. பின்னர் தம் விபூதிப்பையிலிருந்து ஒரு சிமிடா விபூதியை எடுத்து அருகிலிருந்த ஒரு பெண்வாயிலிட்டார். உடனே 'அதோ இந்திரன்! இந்திராணி அதோ இருக்கிறாளே! ஊர்வசி, ரம்பை எல்லோரும் விளங்குகிறார்களே! என்ன ஆனந்தம்! இதோ வந்து சேருகிறேன்' என்று பலவாறாகக் கூறி ஆனந்தத் தாண்டவமாடி வயிறு வெடிக்கச் சிரித்தாள். அதிதி அவள் சிரமேல் கைவைத்ததும் இந்த ஆட்டம் ஆனந்தம் எல்லாம் அடங்கி விட்டன. இரண்டாவது சிமிடா விபூதி மற்றொருவன் கையில் ஒரு சிரங்கு புறப்படும்படி செய்தது. இவ்வாறு தமது ஸித்திகளைப் பலரறிய அதிதி வெளிப்படுத்திக்கொண்டிருக்கையில், இரண்டு வீட்டிற்கப்பால் வஸித்த ப்ராஹ்மணர் ஒருவர் ஓடோடியும் வந்து அவர் பாதத்தில் மும்முறை விழுந்து 'நீர் ஸித்த புருஷர் என்பதற்கு ஸந்தேஹமே இல்லை! முதல் தரம் திருசிர புரத்தில் தாயுமானவஸ்வாமி விக்ரஹத்திலிருந்து இத்திருவுருவம் வெளிவருவதைக் காணக் கொடுத்து வைத்த என் கண்கள், நேற்றிரவு இப்பொழுது தெரியும் ஸர்ப்பத்தோடு கூடிய இத்தேஜோ ரூபத்தை, ஆகாயத்தில் இவ்வூருக்கு நேராகப் போவதாகக் கண்டு களித்தன. எவ்வளவோ தேஜோரூபங்கள் உம்மைப்புடைசூழ்ந்து வந்தன. அவர்களும் ஸித்தர்களாகதிதா னிருக்கவேண்டும். இப்பொழுதுதான் தாங்கள் இங்கு வந்ததைக் கேள்வியுற்றேன். இந்த யஜமானர் பாக்கியமே பாக்கியம்' என்று ஆனந்தபரவசமாக வெளியிட்டார். 'தோழா! இவைகளைப் பலர் அறியக் கூறாதே! இவைகளில் என்ன இருக்கிறது?' என்று அமர்த்தினார் அதிதி. 'உண்மைதான்! உம்மைப் போன்ற ஸித்தர்களுக்கு இவைகள் எல்லாம் ஒரு பொருட்டா?' என்று மறுமொழிகூறினார் ப்ராஹ்மணர். தனித்து ஒருமணிநேரம் ஒரு உள்ளில் தாம் இருக்க வேண்டும் என்று யோகி விரும்ப, ஒரு உள் காலி செய்யப்பட்டது. அதனுள் புகும்பொழுது 'சென்னைப்பட்டணத்தில் கற்சுவர்களால் கூட உம்மைக் கட்டிப் பிடிக்கமுடியவில்லையே! திடீரென்று அந்தர்தானமாவதில்லை (மறைவதில்லை). என்று எங்களுக்கு வாக்களியும் என்று' அந்த ப்ராஹ்மணர் வேண்ட 'இன்று முழுவதும் இங்கேயே இருக்கிறேன் அப்பா! பயப்படாதே' என்றுகருணையுடன் மறுமொழி கூறிக்கதவைச் சாற்றிக்கொண்டார் ஸித்தர்.

ஸித்தர் உள்ளே சென்றதும், ப்ராஹ்மணர் நாராயணய்யரை அணுகி, 'உமக்கு அதிதியாகக் கிடைத்தவர் ஸாமான்யரா? பெரிய ஸித்தராச்சுதே! இவரை அதிதியாகப் பெற்ற உமது பாக்யமே பாக்யம்' என்று ஸ்தோத்ரம் செய்தார். பின்னர், தான் அனேகருக்கிடையில் திரிசிர புரத்தில் தாயுமான ஸ்வாமியைத் தர்சனம் செய்துகொண்டிருக்கையில் **டிப்டி கலெக்டர்** அதிதி எல்லோரும் அறிய விக்ரஹத்திலிருந்து வெளியான விதம், அங்கிருந்தவர்களைக் கடாக்ஷிக்க சற்றுதங்கிப் பின்னர் அவர்பட்டப் பகலில் பறந்துபோனவிதம், ஸித்தர்களுக்கு விதி நிஷேதமில்லை என்ற வேதவாக்யத்திற்கிணங்க பட்டணத்தில் இவர் கையில் சாராயஸீஸாக்களுடன்வெளியானவிதம்,இவைகளுக்கு அனுமதி உத்தரவு வாங்காததால் அவர் ஸேவகர்களால் பிடிக்கப்பட்டு மேலதிகாரியின் உள்ளேயே அடைக்கப்பட்டதும், அவர் இருந்த அறையைப்பூட்டி மேலதிகாரியே சாவியை வைத்துக்கொண்டிருந்தும் அரை மணிக்குப்பின்னர் அவர் அதேஸீஸாக்களுடன் கடற்கரைஓரமாக உலாவி வந்த விதம், பின்னர் எந்த முகாந்திரம் பற்றியும் அவரை ஸேவகர்கள் பிடிக்கக்கூடாது என்று உத்தரவு பிறந்தவிதம், முன்னாள் இரவு அநேக ஸித்தர்களால் சூழப்பட்டு இவ்வூருக்கு மேலே அவர் பறந்து வந்தவிதம், இதுபோல ஸித்தர் சரித்திரத்திலிருந்த அற்புத விஷயங்கள் ஆகிய இவைகளை மிகுந்த சொற்சுவை பொருட்சுவை முதலியவைகள் அமைந்த அற்புத வாக்கால் எடுத்துப்பொழிந்து விட்டார் அந்த ப்ராஹ்மணன். அதிதி யிடமிருந்த விபூதியின் மஹிமையை தாம் ஒப்புக்கொள்ள வேண்டிவந்த போதிலும் நாராயணய்யரால் இவ்வளவு வாய்ப்பந்தல்



களையும் நம்பமுடியவில்லை. ஸ்ரீநிவாஸன் 'எல்லாம் உண்மையாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிடில் நான்கண்ட ஸ்வப்நத்திற்கும் இதற்கும் இவ்வளவு இசையுமா? என்று கூறித் தான் கண்ட ஸ்வப்னத்தை எடுத்து விஸ்தரித்தான். முடிவில் 'இவர் கூறிய தெல்லாம் உண்மையாக இராவிடில் எனக்கு இந்த ஸ்வப்நம் வாக் காரணம் என்ன? அப்பொழுது இந்த ஸித்தர் ஆகாயத்தில் வந்திருந்து தான் இங்கு இறங்கியிருக்க வேண்டும். என்ன பொருத்தம்!' என்று யுக்திவாதம் செய்தான் ஸ்ரீநிவாஸன். அதிதி ஓர் அத்புத புருஷர், ஒருவேளை அமானுஷசக்தி வாய்ந்த ஸித்தராக விருக்கலாம் என்று எல்லோரும் ஒருங்கேமதித்தனர். இப்பொழுது கூறப்பட்டவைகளுக்கு எல்லாம் தம்மைப் போன்ற கௌரவஸ்தர் இசைந்து அவைகளைச் சிறப்புற்று ஓங்கும்படி செய்வது தகுதியா என்ற சந்தேகம் மாத்ரம் நாராயணய்யரைப் பாதித்தது. அப்பொழுது ஓர் அத்புத விஷயம் ஒன்று நேரிட, எடுத்து வெளியிடப்பட்ட அத்புதங்களுமன்றி இன்னும் தமக்குத் தெரியாத விசித்ரங்கள்கூட உண்மையாகவே இருக்கும் என்ற பூர்ண நம்பிக்கை நாராயணய்யருக்கு வந்துவிட்டது.

---

**உனது சினத்தைக் காத்துக்கொள்.**—எவனுக்குக் கோபமிருக்கிறதோ அவன் அரை மனிதன் என்றும், கோபத்தால் தேகத்தில் அதிக படபடப்பு உண்டாய் அக்காரணத்தால் தேக சௌக்கியம் பலவிதமாக மாறுபடுகின்றதென்றும் எல்லாப் பிரஸித்த வைத்தியர்களும் சொல்லியிருக்கிறார்கள். வெளிவிட்டு நாம் காட்டிக்கொள்ளும் கோபம், மனத்தின்கண் அடக்கி வைத்துக்கொள்ளும் கோபம், இவ்விரண்டும் நமது தேக சௌக்கியத்திற்குப் பெரும் சத்துருக்கள். கோபமென்பது சிறிதும் கூடவே கூடாது. கோபமென்பது இல்லாமலிருப்பதுடன், நாம் நம்மிடம் சாந்தகுணமே மேலிட்டிருக்கும்படியாகப் பழக்கிக்கொண்டு வரவேண்டும். இப்பழக்கம் சிறுபிராயம் தொடங்கியே ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுதே நாம் ஆரம்பித்த சாந்தகுணத்தை அப்பியஸித்து வந்தாற்றான் நாம் எப்பொழுதும் அக்குணம் நம்மிடம் குடிகொண்டிருக்கக் காண்போம். அதிக காலம் ஜீவித்திருப்பவர்கள் எல்லாரும் சாந்தகுணம் உள்ளவர்களாயிருப்பார்கள். சாந்தகுணம் நாம் சிரஞ்சீவிகளாயிருப்பதற்கு ஓர் பிரதான காரணம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

பெரியோய்! தங்களிடம் ஈடுபட்டோர் செயலே தெய்வீகமானால் தமது செயல்கள் விசித்திரமானவைகள் என்று சொல்லவும் வேண்டுமோ? நீர் ஏன் ஏழை என்றீர்களோ? பிறரிடம் அடையும் உணவை அடைகின்றவர் உம்மிடமிருந்தல்லவா அடைகிறார்கள்? செல்வக் கள்ளைக் குடித்து மதித்து குதிக்கும் குருடர்கள் உம்மைத் தமது கொலையாளி என்று அறியார்கள். தமது ப்ரஸாதத்தை அடைபவருங்கூட எல்லாங் கொடுக்கும் உம்மை உணரமாட்டார்கள். நீங்கள் வீரவான். யாவற்றையும் வெறுத்தோரைவிரும்பி அவர்க்குப் பலன் அளிப்பவர். நாயகா! தொண்டு செய்வதும் அதை அடைவதும் அத்தகையார்க்கே அமையும் அல்லாது, கணவனும் மனைவியுமாக ஸுகதுக்கங்களுக்குப்பாத்யப்பட்டவர்களிடம்காணமுடியுமா? பற்றறுத்த பரமயோகிகளன்றோ உம்முடைய ப்ரதாபத்தை அறிவர்? தாங்கள் இவ்வுலகத்திற்கு மூலாதாரம். ஆத்மாவின் உட்பொருளும் நீங்களே! காலத்தின் வளரும் பலத்தால் ஸௌபாக்யம் களங்கமடையும். அம்மலரில் வந்தாளையும் ஸுரநாதனையும் விட்டு, கேவலம் யானே உம்மைவரித்தடுத்திருக்க மற்றவர்களைப்பற்றி பேசவும் வேண்டுமோ? மற்ற மிருகங்களைப் பதாஅடித்து ஓட்டி ஸுவேச்சையோடு தனதுணவை யுட்கொள்ளும்ஆண் சிங்க வீரக்களஞ்சியமாகிய தாங்கள் தமது சார்ங்கமென்னும் அந்தப் பெரும் பாரவில்லை வளைத்து நாண் கூட்டி தொனித்த டங்கார சப்தமொன்றாலேயே அங்கிருந்த அரசகூட்டத்தை அலண்டு ஓடச்செய்து என்னைக் கொண்டீர்! தாங்கள் பயந்து, நடுங்கி, இந்தப் பாழும் சமுத்திரக் குகையுள் ஒதுங்கி, ஒடுங்கி, ஒளித்திருப்பதாகச் சொல்லியது நியாயமாகுமோ? தமது பாதாரவிந்தங்களில் தமது மனம்பதிய எண்ணங்கொண்டு ஆத்ரத்துடன் அடைந்த அந்த ராஜரத்னமாகிய அங்கனும், மற்றும் பிரிது,பரதன்,யயாதி,கயன் முதலிய அரசர்களும் காட்டிலலைந்து, ஹேமுகுந்த' என்தலைவ! செந்தாமரைக் கண்ண! உன் பாதங்களில் ஈடுபட பாக்கியம் பெற்றவர் தளர்ச்சி யடைந்தனரோ? அவர் ஏன் தளர்ச்சி யடையவில்லை? எனது பெரியோய்! உமது பாதாரவிந்தங்கள், அனர்த்த பரம்பரையை ஒழித்து அடைய முடியாத பேரின்பவாசனை வீசி, திருநிற்கும் கோயிலாக விளங்க, அவற்றை லக்ஷியங் கொள்ளாது, செல்வப் பேராசையால் தூண்டப்பட்டவளாகி எந்தப் பெண்பால் வெறும் குரோதமே குடிகொண்ட மனுஷனை அடைய விரும்புவள்? ஹே! உலகமுதல்வா! நான் உம்மை எனக்குத் தக்க

வரனென்றே அடைந்தேன். ஆத்மாவிலொன்றி இகபரத்திற்கு இயைந்தவரெண்ணியே அடைந்தேன். பல யோனி பேதங்களின் பால்பட்டு உழன்று, தன்னை முழுநம்பிக்கையுடன் அனன்னய பாவமாகி ஒழுங்கு மாறாது பஜிப்பவராது துக்க பரம்பரையை சூரியன் முன்பட்ட பனிபோலொழித்து அவர்க்கு மோக்ஷப்ரதமாகிய முடிவிலானந்தத்தைக் கொடுத்து துணையளிக்கும் பக்த ரக்ஷண கடாக்ஷங்கொண்ட உமது பாதபத்மங்களை சரணாக அடைய பாக்கியம் பெற்றேன். ஹே அச்யுதா! ஹரன் விரிஞ்சன் முதலிய தேவசபையில்என்றும்புகழப்பட்டு பாடப்பெற்றுவரும்உமதுப்ரபாவத்தை மனத்தில் சிறிதுங்கொள்ளாது கணிசியாது வாழும் பெண்ணோடு உமது உபதேசம் அடைந்தும், மிருகப்ராயமாகி, கழுதை, பசு, பூனை, நாய், வேலைக்காரர்கள் போல் உழைத்து வரும் அவ்வரசர்கள், வாழத்தக்கவரல்லர். அம் மடைக்குணம் வாய்ந்த மடந்தை, புழுக்கூண்டாகி, மாம்சபிண்டமாய், இரத்தம், தசை, எலும்பு, கிருமி, மலம், நாற்றக்காற்று, கோழை முதலிய கொடுஞ் சடங்களைப் பின்னலிட்டு, தோற்பையால் மூடி, கேவலம் நகம், மயிர், சிறகு முதலிய ஆபாசங்களால் பூசப்பட்டிருக்கும் அவ்வாபாசப் பொட்டலை, மலங்கெழுமி திரண்டு உருவு கொண்ட அந்த அநர்த்த பரம்பராவாஸத்திற் கிடமாகிய அப்பாழ் உடலை, பஞ்ச பௌதிகப் பொருளால் ஆக்கப்பட்ட அந்த வெறும் சரீரத்தை, அழிவதற்கென்றே தோன்றிப்பின் சுட்டெலும்பாய்ப் படும் அந்தத் தோற்பையை, சவத்தை, நீறாகி பிடியில் பின்னடங்கும் அந்த மனத்தை மாயைக்குள் ஆக்கும் அவ்வநியாய பாண்டத்தை மெய்யென்று எண்ணி அதைத் தனது கணவனாகப் பாவித்து அதனுள் உஜ்ஜீவித்து இடைமயங்கி நின்ற பெரும்பொருள் கிற்பதை அறியாது, அதனுடன் தன்னுயிர்க் கலக்க இடம் தராது, மனம்படாது, துஷ்ட சரிதங்களில் பாய்ந்து விளங்குவள். பொன் போலும் உமது சரண மலர்களினின்று வழியும் அம்ருதமாகிய தேனை யுண்ணாத அவ்வெறியர் வேறு எப்படி வாழமுடியும்? ஹே பங்கேருஹா! கண்ணா! தாங்கள் தமக்குள் ஆநந்தமடைகிறீர்கள். அவனிடத்து கொஞ்சமல்ல அன்பு கொண்டுள்ளது. எனக்குமேன்மேலும்உமது சரணசேவையில ஈடுபடும் ஊக்கமும் பாக்யமும் பெருகட்டும். ஹே மதுவைரி! தாங்கள் உலகத்தின் பிரஜா விருத்தியின் பொருட்டு மாயாவேஷனாகி என்னை நோக்கிடில் நான் அதைப் பெரும்பாக்கியம் என்றே எண்ணுவேன். அக்காசிராஜன் மகள் அம்பை சல்யனிடமும் ஆசைகொண்டாள்; துர்நடத்தைக்குள்பட்டவர்கணவனையடைந்தும் பிறரை அடைய விரும்புவர்; ஆனால் பெரியோர் அவர்களை லக்ஷியஞ்செய்யார். அப்படி அவர் செய்வாராயின் இகத்திலும் பரத்திலுமிரண்டிலும் பெயர்குன்றி அவமதிப்புக்கே ஆளாகிவிடுவர். அச்யுதா! தாங்கள் என்னைக் குறித்துக் கூறிய மொழிகள் யாவும் உண்மையே அன்றி வேறல்ல.

(இன்னும் வரும்.)

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ஸ்ரீ சிருங்கேரி குருபீடம்.**—மார்ச்சு மாதம் 20உ காலை 11-மணிக்கு ஸ்ரீ சிருங்கேரி மடம் ஸ்வாமிகளான ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள் ஸித்தி யடைந்தார்கள்.

**லார்ட் கார்மைகேல்.**—ஜனங்களால் கொண்டாடப்பட்டு மேன்மை பெற்று விளங்கிய நமது கவர்னர், மார்ச்சுமீ 29உ வெள்ளிக்கிழமை தினம், எல்லாருடைய நல்லெண்ணமும் தொடர வங்காளத்து கவர்னர் ஸ்தானத்தை வகிக்க, கல்கத்தாவுக்குப் பிரயாணமானார்.

**குழந்தைகளின் கொலை.**—ஆஸ்ட்ரியாவின் தலைமைப்பட்டணமான வியன்னாவில், 1910-ம் வருஷத்தில் 1458 குழந்தைகளும், 1911-ம் வருஷத்தில் 1416 குழந்தைகளும் கொலை செய்யப்பட்டனவாம்.

**வியாபாரத் தடை.**—இங்கிலாந்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்பவர் வேலைக்குப் போகாது கலகஞ்செய்து வருவதால், நிலக்கரி யகப்படுவதில்லை. அதுபற்றி, இப்போது இங்கிலாந்தினின்றும் இந்தியாவிற்கு வரும் பேப்பர்களின் தொகை குறைந்து வருகின்றது.

**லார்ட் பெண்ட்லண்ட்.**—மிஸ்டர் ஆஸ்குவித்துக்கு முன், லிபரல் கவர்ன்மெண்டின் தலைவராயிருந்த ஸர் ஹென்ரி காம்பல் பானர்மேன் நமக்குக் கவர்னராய் வரும் லார்ட் பெண்ட்லண்டைத் தமது பிள்ளையைப்போலப் பாவித்து வந்தாரென்று “பி. டிஸ் வீக்லி” என்ற பத்திரிகை சொல்லுகிறது.

**நீளமான தெருக்கள்.**—அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள சிகாகோ நகரத்தில்தான் உலகத்திலுள்ள தெருக்களிலெல்லாம் நீளமான தெருக்கள் இருக்கின்றனவாம்.



லேடி கார்மைகேல்



லார்ட் கார்மைகேல்

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ பங்குனிமீ : 1912-௵ ஏப்ரில்மீ { பகுதி 10

## கீதா மஹான்கள்

## THE GREAT MEN OF THE GITA

### 6. ஸந்யாஸி (அத் 5. சுலோ. 3, 7—12)

எவன் விருப்பு வெறுப்பு அற்றவனாக இருக்கிறானோ அவன் துவந்துவங்களிலிருந்து நீங்கி, கர்மபந்தத்திலிருந்து விடுபடுவன். அவன் கர்மயோகத்தில் தேர்ந்து பரிசுத்தனாகி, தேஹேந்திரியங்களை அடக்கி, தன் ஆத்மாவையே எங்கும் நிறைந்துள்ள ஆத்மாவாகக் கண்டவனாதலால் என்ன செய்தபோதிலும், அவனை ஒன்றும் ஒட்டாது உண்மையை உணர்ந்து தேர்ந்தவன், பார்த்தல் முதலிய ஞானேந்திரியத் தொழில்கள், பேசுதல்முதலிய கர்மேந்திரியத் தொழில்கள், தூக்கம் முதலிய மற்றைத் தொழில்கள், ஆகிய இவைகளுள் எது நடந்தபோதிலும், 'இந்திரியங்கள் விஷயங்களுள் உலாவுகின்றன! நான் செயலற்று நிற்கிறேன்!' என்று மதித்திருக்கவேண்டும். எவன் பகவத் பரமாக விருந்து கர்மம் செய்கிறானோ, அவன் தண்ணீரிலிருந்தும் தாமரை இலை நனையாதிருப்பது போலத் தாக்கற்றே நிற்பன். இவன் கர்மம் செய்யுங்கால் அவைகளின் பலனைக் கவனியாது கடமையாகச் செய்து விடுவதால், இக்காலத்தும் நிஷ்டையின் பலனாகிய ஒழிவு இவனிடம் குடிகொண்டிருக்கும். மனத்தில் எல்லாக் கர்மங்களிலும் உள்ள பற்று நீங்கிவிட செய்பவன், ஏற்பவன் என்ற எண்ணம் நீங்கப் பெற்று இந்த நவத்வார நகரத்தில் ஸுகமாக அசைவற்றிருப்பான்.

### 7. ஸமதர்சி (அத் 5, சுலோ. 3, 7—12)

ஸாங்க்யத்திற்கும் யோகத்திற்கும் உள்ள பேத ... பொருட்டாக மதியாது. இவைகளுள் ஒரு ... காண்பவன். பரம்பொருளிலேயே புத்தியுடையவனாகி, அதையே ஆத்மாவாகக்கொண்டு, அதையே சரணம் புகுந்தவன், ஞானத்தால் மனோபாவங்கள் தேயப் பெற்று, மீளாநெறி எய்துவன். இவன், ஒழுக்கமுடைய வேதியன், பசு, யானை, நாய், நாய் மாம்ஸம் உண்போன் ஆகிய இவர்களிடத்து எல்லாம் ஒன்றையே காணும் பண்டிதன். பிரஹ்மம் பொதுவாக விருப்பதால், மனம் நடுநிலை பெற்ற இவன் ஸந்தோஷம், துக்கம் இவைகளுக்கு ஆளாக முடியாது. வேறாகித் தனித்துத் தொடங்கி முடியும் குணமுள்ள வெளிவஸ்துக்கள் ஸம்பந்தமான ஸுகம் துன்பமே யாதலால் வெளிப்பற்றற்று, ஆத்மஸுகம் அடைந்து, எல்லாவற்றின் ஸுகத்தையும் பாவிப்பதால் இவன் பிரஹ்மானந்தத்தில் மூழ்குவன். இதனால் ஆசை சினம் இவைகளின் வேகம் இவனுக்கு ஒரு பொருட்டேயில்லை.

### 8. யோகி (அத். 6)

தன்னைத்தானே அடக்குபவனுக்குத் தானே நண்பன். இவ்வாறு செய்யாதவனுக்குத் தானே பகைவன். அடங்கும் குணமுடையவனுக்கு, குளிர்வெப்பம், இன்பதுன்பம், மானஅவமானம், ஆகிய இவைகளில் மனம் ஒருமைப்பட்டு அசையாதிருக்கும். அறிவு அனுபவம் இவைகளால் இந்திரியஜயம், மண் கல் தங்கம் இவைகளை ஒன்றாகப் பார்த்தல், ஆகிய இவைகள் அமைந்த யோகியே நடுநிலை பெற்றவனாவான். எல்லோரிடத்தும் ஸமதிருஷ்டி வந்துவிடும். இவ்வாறு மனம் அடங்கிய யோகி, முடிவான சாந்தி பெறுவன். அடங்கிய இவன்மனம் ஆத்மாவினிடத்திலேயேநிலைபெறும். காற்றில்லாவிடத்தில் உள்ள விளக்குப்போல அசைவற்றிருக்கும். இந்திரியங்களால் உணரமுடியாது புத்திக்கு அப்பாற்பட்டு நிற்கும் அனந்த ஆனந்தம் இவனுக்கு விளங்கும். இதற்கு மேலான ஆனந்தம் ஒன்றுமில்லை, எந்தக் கஷ்டம் வரினும் இந்நிலையில் பிரியான். துக்கஸம்பந்தம் நீங்குபவனே யோகி, இவன் எங்கும் தன்னையும், தன்னுள் எல்லாவற்றையும் பார்ப்பான்.

விவேக போதினி

தொ 4] விரோதிகிருதுஸுபங்குனிமீ [பகுதி 10

# விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### 5. ஆனந்த நடேசர்

இந்த விக்ரஹம், ஒரு நடனமாடும் புருஷன் ரூபமாக அமைந்துள்ளது. வலது காலைக் கீழே ஒரு அரக்கன்மேல் மிதித்து, இடது காலை மேலே உயர்த்தி, ஒரு இடது கையால் உயர்ந்த காலைக் காட்டி, மற்றைய இடது கையில் அக்னி தாங்கி, ஒரு வலது கையில் அபய ஹஸ்தம் பிடித்து, மற்றொரு வலதுகையில் உடுக்குப் பிடித்து நிற்பதாக இவ்விக்ரஹம் அமைந்துள்ளதால், இதைப் பார்ப்பவர்களுக்கு இது நடனமாடுவதுபோலவே தோன்றி ஆச்சர்யத்தை உண்டாக்கும். இந்த ஆச்சர்யத்தோடு பக்தியும் சேர்ந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா ! பக்தி பரவசத்தில் ஈடுபட்டு, ஒரு மஹான் இந்நடனத்தை,

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கைசிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறைதந்த பிரஹ்மனாட
கோனாட, வானுலகு கூட்டமெல்லாமாட
குஞ்சரமுகத்தனாட
குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாட
குழந்தை முருகேசனாட
ஞான சம்பந்தரொடு இந்திரர் பதினெட்டு முனி
அட்டபாலகரு மாட
நரை தும்பையறுகாட நந்திவாஹனமாட
நாட்டியப்பெண்களாட
வினையோட உனைபாட வெனைநாடி யிதுவேளை
விருதோடியாடி வருவாய்
ஈசனே ! சிவகாமி நேசனே ! யெனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே !

என்று எடுத்துக்கூறிப் பாராட்டியிருக்கிறார். இந்தத் தாண்டவத்திற்கு உட்பொருள்படி ஆனந்தத்தாண்டவம் என்ற பெயராதலால் இவ்விக்ரஹத்திற்கு **ஆனந்த நடேசர்** என்றபெயர் வந்தது.

இப்புருஷன் பரம்பொருளை யுணர்த்துகிறான். ஒரு வலது கையில் பிடித்திருக்கும் டமருகத்தி (உடுக்கி)லிருந்து வரும் ஒலியால் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாம் பெரு நெருப்பிலிருந்து பொறிகளும், ஊற்று நீரிலிருந்து குமிழிகளும் வருவபோன்ற கதித்தெழுவதைக் குறிக்கப்படுகிறது.(சப்தநிஷ்டம் ஜகத் ப்ரபஞ்சம் சப்தத்தில் பிறந்து அதிலேயே நிலைபெற்றிருப்பது என்பது வேதம்). அமைதிக்குறியைக் காட்டும் அபயஹஸ்தம் ததாஸ்து(அப்படியே ஆகுக) என்பதைக் காட்டிப்ரபஞ்சம் முழுவதும் மாறாததும் தவறாததுமான ஒழுங்குப்படி பரிபாலனம் செய்யப்படுவதைக் குறிக்கும். இடது கையில் தாங்கியிருக்கும் அக்னி, விளங்காததாயும் சிறந்ததாயும்,மலை, நக்ஷத்ரம், ஸமுத்ரம் ஆகிய இவைகளை அநித்யமாக்கும் ஸம்ஹார சக்தியையும், ஊன்றிய வலது கால், ஸ்ருஷ்டி ஆதி விஷயங்களை எவர்களுக்கும் விளங்கவொட்டாது மறைக்கும் மாயா சக்தியையும், குஞ்சித பாதமாகிய தூக்கியிருக்கும் இடது கால், எல்லோரையும் மயக்கும்படியான அநாதியாயும் அனந்தமாயும் உள்ள ஸ்ருஷ்டியாதி நாடகத்திலிருந்து விடுபட்டு ஓய்வு அடையும்படி செய்யும் நிழல்போன்ற கடவுள் கருணையையும்,குறிப்பாகக் குஞ்சித பாதத்தைக் காட்டும் இடதுகை இந்தக் கருணையன்றி வேறு கதி இல்லை ப்ரபஞ்சத்துள் அகப்பட்டிருப்பவர்

'விவேக போதினி' அநுபந்தம்



ஆனந்த நடேசர்



நடராஜர் தாண்டவ வைபவம்

குளிர்ச்சியையும்; நாகாபரணங்கள் காலத்தால் கடவுள் கட்டுண்டவர் அல்லர் என்பதையும், இருபுறமிருக்கும் பதஞ்சலி வ்யாக்ரபாதாள் யோகம் பக்தி அதாவது இவைகளின்சேர்க்கை விசேஷங்களாலாகிய பலமதங்களும் உள்ளபடி பின்பற்றுபவரைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கும் என்பதையும் உணர்த்தும். மற்றைய ஊர்த்வ தாண்டவம் முதலியவைகள் பகவத் அனுக்ரஹத்திற்கும் மேலுள்ள நிலைகளை உணர்த்துவதால் அவைகளை ஞானி நோக்கும் ஆசார்ய பாவத்தை விளக்குங்கால் நன்கு விவரிப்போம்.

இதுவரையிலும் கூறிவந்த பொருள் பக்தி வைராக்யாதி ஆத்ம குணங்களில் பழகித் தேர்ந்து வருபவர்களுடையது. இம்மாதிரி நிலையிலிருக்கும் ஒருவர் நடராஜ விக்ரஹ விஷயத்தைப் புராணகதைகளோடு ஒட்டிப் பின்வரும் கீர்த்தனையைப் பாடி இருக்கிறார்.

### ராகம்-காம்போதி-திரிபுடைதாளம்

### பல்லவி

நடமாடித்திரிந்த உமக்<br>
கிடது காலு தவாமல்<br>
முடமானதேது சொல்லய்யா.

### அநுபல்லவி

தடமேவும் தில்லைநகர்<br>
மருவுபே ரானந்தத்<br>
தாண்டவரே நிதம் எம்மை<br>
ஆண்டவரே ஸபை அறிய (நடமாடி)

### சரணங்கள்

1. திருநீற்றைச் சுமந்தீரே<br>
நெருப்பான மேனிதனில்<br>
சீதத்தினால் மிகுத்த வாதகுணமோ?<br>
ஒருமையுடன் மார்க்கண்டருக்<br>
குதவியாய் மறலிவிழ<br>
உதைக்கச் சுளுக்கே றுண்டகுணமோ?<br>
பரவை தன்னின் தெருவாசப்<br>
படி இடறித்தோ என்தன்<br>
பாபமோ சிவனே<br>
மூவருக்கு முதல்வரென்று (நடமாடி)

2. தனஞ்ஜெயமஹிபனுடன்<br>
சமரிலடிபட்டுவிழ<br>
சந்திலே முழிபிசகி நொந்ததுவோ?<br>
இனம்புரிந்த தாருகாவனம்<br>
எங்கும்திரிந்து முள்ளேறி<br>
உண்டோ சொல்லும் முறிந்ததுவோ?<br>
கனகஸபை தன்னில் நடனம்<br>
கண்டோர் அதிசயித்து<br>
கண்ணேறுண்டோ சொல்லும்<br>
விண்ணவருக்கு முதல்வ ரென்று(நடமாடி)

3. பக்தி செய்யும் பெரியோர்கள்<br>
பாபநாசன மென்னும்<br>
பரமபதம் இதுவென்று தூக்கிநின்றதுவோ?<br>
சக்திசிவ காமிவல்லி<br>
தன் பாதம் நோகும் என்று<br>
தரையிலே அடிவைக்க தயங்கிநின்றதுவோ?<br>
ஸத்திய லோகாதிபதி<br>
தாளத்திற் கேற்பநடம்<br>
தாக்கியே ஒரு காலை<br>
தூக்கி நின்றததுவோ. (நடமாடி)

இனி ஞானிகள் நோக்கும் வேதாந்த பரமாக இந்த விக்ரத்துள் அடங்கி இருக்கும் பொருளை வெளியிடுவோம். இதன்படி ஸகல பந்தங்களினின்றும் விடுபட்டு ஆனந்த ரூபியாகிய ப்ரஹ்மமான ஸத்குருவை உணர்த்துகிறது இவ்விக்ரஹம். அவர் தம் நிலையையும், அதை அடைந்த வழியையும் தமது சின்னங்களால் நன்கு வெளியிடுகிறார். இங்கு தான் கொன்ற புலியின் தோலை அரைக்கிசைத்திருப்பது, அகங்காரத்தை வேரோடு களைந்துவிட்டதை உணர்த்தும். அகங்காரத்தால் விளையும், கோபம் சண்டை முதலிய உலக வ்யவஹாரங்களை உற்று நோக்கில் இங்கு அதைப் புலியாக உருவகப்படுத்தியதின் பொருத்தம் வெளியாகும். காலடியில் இருக்கும் அரக்கன் மாயையும், மான் மனத்தையும் உணர்த்தும். அரக்கர்கள் மாயாசக்தியும், மானின் சஞ்சல ஸ்வபாவமுமே இதற்குத் தகுந்த ஆதாரம். ஜாக்ரத் (விழிப்பு), ஸ்வப்நம் (கனவு), ஸுஷுப்தி (தூக்கம்) ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்ட துரிய (நான்காவது)





அழகர் கள்ளர் வேஷத்துடன் மதுரைநோக்கி வருதல்

நிலையைக் குஞ்சிதபாதம் உணர்த்தும். இதுமனதையும் மாயையும்விட்டு நீங்கி வெளிப்படுங்கால் ஏற்படுவது என்பதை, அரக்கனையும் மானையும் விட்டு இது உயர்ந்து நிற்பதே நன்றாகக்காட்டும். மேலும் அரக்கன் ஜாக்ரதாவஸ்தையையும், மான் ஸ்வப்னத்தை இடைவெளி ஸுஷுப்தியையும், குஞ்சிதபாதம் துரியத்தையும் உணர்த்துவதும் வெளியாகும். ஆகவே ஊர்த்வ தாண்டவத்தில் குஞ்சிதபாதம் தலைக்குமேல் போய் நிற்பது துரியத்திற்கு மேலுள்ள துரியாதீதமாகி பிரஹ்மவரிஷ்ட நிலையைக் காட்டும். இதைக் கண்டதும் மாயையாகிய காளி வெட்கி ஓய்ந்து விடுகிறாள். சித்சக்தியாகிய சிவகாமி இப்படி நம்மையும் முழுத்தும் ஒருநிலை இருக்கிறதே என்று ஆச்சர்ய பரவசையாகிறாள்.

இந்நிலையின் சிறப்பை வற்புறுத்தவே கைகள் முதலியவைகள் ஏற்பட்டுள்ளன. குஞ்சித பாதத்தைக் குறிப்பாகக்காட்டும் கை இந்தத் துரிய பதம் தவிர மானிடர்களுக்கு ஸூசித்திருக்குமிடம் இல்லை என்பதையும், ஊர்த்வதாண்டவத்தில் தலைமேலுள்ள காலைக்காட்டும் கையோடு குஞ்சித பாதத்தைக் காட்டும் கையும் இருப்பது, துரியாதீதம் தான் மீளா நிலையாயினும், அது துரியத்தின் மூலமாயல்லாமல் கிடைக்காது என்பதையும் வற்புறுத்துகின்றன. ஒருகையிலுள்ள டமருகம், சப்தரூபமாக நிலை பெற்றிருக்கும் ஜகத் இந்நிலையிலிருக்கும் ஆசார்யன் இச்சைமாத்ரம், அதனுள் அடக்கம் என்பதையும், அபயஹஸ்தம் இந்நிலையிலுள்ள சாந்திரஸத்தையும், ஒரு கையிலுள்ள அக்னி, அதைப் பார்த்தே உணரவேண்டும், அதை உணர கண் மாத்திரம் போதும். வேறு விளக்கு வேண்டியதில்லை என்பதன் மூலமாக, இந்நிலை அனுபவமே ஒழிய வாசாஞானத்தால் உணரப்படுவதல்லவென்றும், இதை உணர விருத்தியாகிய ஆவல் மாத்திரம் போதும், உணருபவனாகிய ஜீவன் நிலை வேண்டியதில்லை என்பதையும், விளக்கிக் காட்டும். ஆகவே இங்குள்ள நடனம் முற்கூறிய விடத்தில் ஏற்படும் ஆனந்த பரவசத்தால் வரும் கூத்து. இக்கருத்துக்களை உள்ளடக்கியேதான் தாயுமானவரும்:—

> கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும்
> கருணாகரக்கடவுளே

என்று நடராஜரைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

இவர் நடமாடும் இடம்! தில்லைவனம், ஸ்மசானம். தில்லைவனமென்பது மாறுபாடுகள் நிறைந்த இப்பிரபஞ்சத்தையும், ஸ்மசானம் என்பது நாமரூபாதிகள் எல்லாம் அழிந்து எல்லாம் பிடிசாம்பலாகச் சேஷிக்கும் இடமாதலால், நாமரூபாதிகளுக்கு அப்பாற்பட்ட விடத்தையும், குறிப்பிக்கும். ஆலங்காட்டார் ஊர்த்வ தாண்டவமாடும் இடம் வெட்டவெளி என்பது நாமரூபம் நீங்கியும் தோன்றும் சூன்யத்திற்கு அப்பாற்பட்ட பரவெளி என்பதைக் காட்டும். தில்லை நடராஜருக்குப் பின் உள்ள ரஹஸ்யம் இதுதான். இம்மாதிரியான அற்புதத்தை அனுபவித்தறிந்தே தாயுமானவர் 'ஆகாரபுவனம் சிதம்பர ரஹஸ்யம்' என்னும் தொகுதியில் இந்த நிலையை 'அறிவாகி ஆனந்தமயமாயென்றும்' என்று தொடங்கும் பாட்டுமுதல், 'கதியன்றி உறங்கேன் மேற்கரும்பாரேன்' என்று முடியும் பாட்டுவரையில் 5 பாடல்களில் விரிவாக விளக்கி உபநிஷத் அர்த்தத்தை எல்லோரும் கண்டு தெளியும்படிசெய்துவிட்டார். நடராஜர், அவர் ஆடும் தில்லை ஸபை அவைகளின் உட்பொருள்கள் எல்லாவற்றையும் **ஸ்ரீமான் கோபால கிருஷ்ணபாரதியவர்கள்** தாம் பாடிய **நந்தன்** சரித்திரக் கீர்த்தனைகளில் எடுத்துப் பாராட்டி எல்லோரும் ஆவலுடன் கேட்டுணரும்படி ஸங்கீதத்தில் இசைத்துவிட்டார். ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் பின்வருமாறு இவைகளில் ஈடுபடுகிறார்.

' தில்லை ஸ்தலமே ஸ்தலம். தில்லை தில்லை என்றால் பிறவி இல்லை இல்லை என்று மறை மொழியும். தொல்லை தொல்லை என்ற கொடுவினை வல்லை வல்லை என்று அகலும். ஸ்வாமி உண்டென்பதும் அங்கே தான், இல்லை என்பதும் அங்கேதான் ; கடவுள் ஆனந்

தத்தாண்டவமாடுவதும் அங்கேதான், அசைவற்று வெளியாயிருப்பதும் அங்கேதான்; அறியாதார் அறிவைப் பெறுவதும் அங்கேதான், அறிந்தவர்கள் அனுபவிப்பதும் அங்கேதான்; உருவமும் அங்கேதான், ஒளியும் அங்கேதான்; ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் அங்கேதான். அங்குதான் உபநிஷத்தின் உட்கருத்தை உள்ளடக்கி யமைத்த ஆலயமும்; அதற்குள் ஸ்ருஷ்டிக்கு முன்னும் பின்னும், ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும், ஆகாயரூபத்தையும், ஆனந்தத்தாண்டவத்தையும், ஒருமித்து உருவகம் செய்திருக்கும், ஸபாபதியும், ரஹஸ்யவெளியும், அவற்றிற்குப்பின் திருமூலர் திருமந்திரமும் அமைந்துள்ளது.'

ஆகவே வேதாந்த பரமாகநோக்கில், ஆசாரியன் முற்கூறியபடி தமது நிலையை உணர்த்தி 'நீயும், உன்னுள்ளிருக்கும் ஆத்மாவின் ஆனந்தநிலையை அனுபவித்து விடுபட வேண்டினால், அகங்காரத்தை வேரோடு களைந்து, மாயை மனது முதலியவைகளுக்கு அப்பாற்பட்டு துரிய நிலையை அடைய முயலவேண்டும், துரியாதீதம் தானாக வரும். இந்நிலையில் அமைதியும், சாந்தியும் பிறக்கும். பிரபஞ்சம் உன்னைவிட்டுத் தனித்திராது. காலத்திற்கு அப்பாற்படுவாய். சித்சக்தி முதலியவைகள் நிறைந்திருக்கும். இவை அனுபவித்து உணரவேண்டுமே ஒழிய வாசா ஞானத்தால் விளங்கா' என்று உபதேசிப்பதாக ஞானிகள் மதித்துத் தம்முள் தாமே நிலைபெறுவர்.

இதை நன்கு உணர்ந்து வழிபடுங்கால் ஏற்படக்கூடிய தடைகளை **ஸ்ரீராமலிங்கஸ்வாமிகள்** பின்வருமாறு எடுத்துக்கூறி, ஏங்கி பகவத்கிருபையை எதிர்பார்த்திருப்பதே இவ்வழிபாட்டின் அந்தரங்க ஸாதனம் என்று விளக்குகிறார்.

களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்தது ஒருகாய்தான்.
விளக்கமுறப் பழுத்திடுமோ? வெம்பி உதிர்ந்திடுமோ?
வெம்பாது பழுக்கினும் என்குறிப்பிலகப்படுமோ?
கொளக்கருதும் மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ?
குரங்குகவராதெனது கரத்திலகப்படினும், [மோ?
துளக்கமற வுண்ணுவனோ? தொண்டைவிக்கிக்கொளு
ஜ்யோதித்திரு வுளமெதுவோ? எதுமறிந்திலனே!

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 13. அக்கஞ் சுருக்கேல்

உறவினர்களைக் குறையும்படி செய்யாதே அதாவது உன் செல்வ நிலைக்கேற்றபடி உன் உறவினர்கள் அநேகரைக் காப்பாற்றி அவர்கள் ஓங்கிவரும்படி செய்யவேண்டும். இக்கருத்தை **அதிவீரராம பாண்டியன்** தாம் எழுதிய **நறுந்தொகையில்** 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்று கூறியிருக்கிறார். இங்கு **அக்கம்** என்பது உள் என்று பொருள்படும் அகம் என்பதன் திரிபு. வெளி என்று பொருள்படும் **பக்கம்** என்பதே இதன் எதிர்ப்பதம். ஆகவே **அக்கம் பக்கம்** என்னும் தொடருக்கு உள்ளே இருப்பவராகிய உறவினரும், வெளியிலிருப்பவராகிய அயலாரும் என்பதே பொருள். சுருக்கேல் என்பதனால் நம்மால் கூடிய அளவு காப்பாற்ற வேண்டும் அந்த அளவிற்குக் குறையும்படி செய்யவே கூடாது என்பதாயிற்று.

ஆனால் செல்வம் வருங்கால் உறவினர்களை அலக்ஷ்யம் செய்யும்படியான நிலை வந்துவிடுமோ? அதை நீக்கத்தான் இந்த நீதி வாக்கியத்தை ஒளவை கூறியிருக்கிறாளோ? என்ற சங்கை பிறக்கலாம்.

செல்வம்வந் துற்ற காலைத்
    தெய்வமும் சிறிதும் பேணார்
சொல்வன வறிந்து சொல்லார்
    சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால்
    வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார்
    மண்ணின்மேல் வாழு மாந்தர்.

என்று கூறியிருக்கிறார் **வில்லிபுத்தூராழ்வார்.**

இதனால் செல்வம் வரும்பொழுது உறவினர்களை அலக்ஷ்யம் செய்யும்படி யாகிவிடும் என்பதாயிற்று. தனம் அதிகமாகிவிட்டால் அந்நிலைக்கு



11 JUN 1912 MADRAS

ஏற்ற தனவந்தர்கள் இணக்கம் நமக்கு ஏற்பட ஏழைகளான உறவினர்களிடம் பழகுவதே ஒருவித இழிவு என்ற துர் எண்ணம் உண்டாகிவிடுவது வழக்கம். ஏழையாகவிருந்து நல்ல நிலைக்கு வந்த ஒருவன் வைதிகமாகச் சாந்தராகி யிருந்த தன் தகப்பனாரைத் தனக்கு ஸமானமானவர்கள் முன்னிலையில் தகப்பனார் என்றுஒப்புக்கொள்ளக் கூசினான் என்று ஒரு கதைகூட உண்டு மேலும் உறவினர்கள் செல்வம் வந்தசாலத்தில் வந்துகூடி, செல்வம் நீங்கிய காலத்தில் விட்டுப் போய் அலக்ஷ்யமாக விருப்பார்கள் என்ற உண்மை செல்வவந்தர்களைத் தமது உறவினர்கள் விஷயத்தில் பராமுகமாகவிருக்கும்படி செய்துவிடுகிறது. இதனால் சில தனவான்கள் பிடிவாதமாக உறவினர்களை வெறுத்துப் பிறருக்கே உதவி புரியத் தொடங்கி விடுகின்றனர். இக்காலக் கொடுமையால் இந்தத் துர்க்குணம் இன்னும் அதிகமாகிவிட்டது. 'ஒருவன் கஷ்டப்பட்டு ஸம்பாதித்துத் தனவந்தனாகவாவது, மற்றவர்கள் பிடுங்கித் தின்னும் கழுகுகள்போலத் தின்று தூங்குவதாவது? அவனவன் நெற்றி வேர்வை நிலம் தோய கஷ்டப்பட்டல்லவோ, ஸ—கிக்கவேண்டும்' என்பது இக்காலத்து நாகரீகமுடையார் அற்புதக் கொள்கைகளுள் ஒன்று. ஆகவே ஒருவன் அடையும் செல்வத்தைஎல்லாம் உறவினர்களுக்குக் கொடுப்பதாகிய தர்மத்தை விட்டு, பலருக்கும் பொதுநன்மை செய்யவேண்டும் என்ற துர் ஆக்ரஹத்துடன் ஸமூகதர்மத்திற்குப் பொருள் சேர்த்து வைக்கின்றான். கிளைஞரைத் தாங்குவதைப் பெரிய தர்மமாக மதியாது இதை வெறுத்து ஸமூகதர்மத்திற்குப் பொருளை விட்டுவிடுவது ஒரு பெரிய துர்க்குணம். கிளைஞருக்கு உதவும் பொருள் விஷயம் மற்றதைப்போலக் கீர்த்தி தருவதல்ல. இதனால் வெறும் உலககீர்த்தியை விரும்பி செய்ய வேண்டிய கடமையைச் செய்யாது விடுவதான நிலைவரும், ஆதலால் இது துர்க்குணமே. மேலும் பொது நன்மைக்காகவிடப்படும் பொருள் முற்றிலும் உத்தேசித்தவரிடம் போய்ச் சேருவது என்பதும் இல்லை. அதைச் செலவிட ஏற்படும் தர்மகர்த்தருக்கும் சிப்பந்திகளுக்கும் போனவை போக மிகுந்ததுதான் கருதியவரிடம் போய்ச் சேரும். ஆதலால் கிளைஞரைத் தாங்குவதற்கு வேண்டிய பொருளுக்குமேல் ஒருவனிட மிருந்தால் அவன் பொதுநன்மைக்கு அதைக் கொடுத்து விடலாம். பொதுநன்மைப் பயித்தியம், தனிஸம்பாத்யம் செய்யவேண்டும் என்ற ஆக்ரஹம், கீர்த்திஆசை, கௌரவஎண்ணம் முதலிய துர்க்குணங்கள் தனவந்தர்களிடம் இக்காலக்கொடுமையால் அதிகமாகிவிட்டன. இது போல முன்னரும் இருந்திருக்கும். இம்மாதிரியான துர் எண்ணத்தை நீக்கவே மூதாட்டியான ஒளவையார் இந்நீதி வாக்கியத்தைக் கூறினாள்.

உறவினர்களைத் தாங்கவேண்டியது தனவான்களுடைய கடமை. அவர்கள் தனம் நீங்கிய காலத்தில் அவனை அலக்ஷ்யம் செய்வார்களாகில் நன்றிகொன்ற பாபம் அவர்களுக்கு வரும். அதைப்பற்றி தனவான் ஆலோசிப்பது அனாவசியம்; அதனால் செழுங்கிளை தாங்குவதை நிறுத்துவது மஹாபாபம். தர்மத்திற்கு விரோதமாக நடந்தவர்களுக்கு வரும் கதி அவனுக்கும் வந்துவிடும். மேலும் ஒவ்வொருவரும் தாம் பொருள் சேர்ப்பது தமது உறவினர்கள் செழிக்கத்தான் என்று எண்ணி இந்தக் கடமை ஒழுங்காக நடத்தி வருவார்களாயின் பொது நன்மைப் பணம்வைத்தல் என்ற பித்தம் தெளியும். பொது நன்மையைக் கோருபவர் அநேகர் இருக்கவேமாட்டார்கள். பிச்சைக்காரர்கள் யாசகர்கள் கணக்குக் குறையும். மிக அவசியமான விஷயங்களில் மாத்திரம்தான் பொது நன்மைக்குப் பணம் கொடுக்க வேண்டிவரும். இந்நீதி வாக்யத்தைப் பின்பற்றி ப்ரபுக்கள் நடப்பார்களானால் இக்காலத்தில் உண்டாகியிருக்கும் அநேக பொதுநன்மை ஸமூகங்கள் அனாவசியமாகிவிடும். தனவந்தர்கள் இந்தத் தர்மத்தைக் கடைப்பிடித்து நடக்காவிடில் இன்னும் பொதுநன்மைப் பித்து அதிகரித்துப் பணம் எல்லாம் வீணாகவே

போய்விடும்: கார்யம் மாத்திரம் ஒன்றும் நடவாது. ஒரு தெருவில் ஒவ்வொரு வீட்டுக்காரனும் தன் வாயிலைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால் தெருவு முழுவதும் சுத்தமாகவேயிருக்கும் என்பது போலத்தான் இதுவும். இக்காலத்திற்கு அனுகுணமாக உறவினர்களைக் காப்பதில் ஒருவித மாறுபாடு ஏற்படுத்தலாம். முன் காலத்தில் செய்ததுபோலப் பணம் கொடுத்து அவர்களைச் சோம்பேறிகளாக்கிவிடாமல், அவர்களுக்குத் தனவந்தர்கள் தம் பணம் செலவழித்து ஏதாவது வயிற்றுப்பாட்டிற்கு வேண்டிய தொழிலைக்கற்றுக்கொடுத்து அவர்களைநேராகவே பணம் ஸம்பாதிக்கும்படி செய்யலாம். என்ன செய்தாலும் உறவினர்களுக்குத் தன் பணம், தன் நிலை ஆகிய இவைகளால் ஒழுங்குப்படி செய்யக்கூடிய உதவி செய்துவிட்டுத்தான் ஒருவன் பொதுநன்மையை யோசிக்கவேண்டும். பொதுநன்மைப் பித்து என்பது ஸமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைப்பதுபோல வீணானகார்யமாக முடியும். சிறுகூட்டத்தாரை ஸரிவர திருப்திப்படுத்த வேண்டிய பொறுமை, சிரத்தை முதலியவைகள் இல்லாதவனா பொது நன்மைக்கு உள்ளபடி உழைத்து வாரிக் கட்டிக்கொள்ளப் போகிறான்! ஒருநாளும் இல்லை. உறவினர்களைக் காப்பதாகிய கடமையைச் செய்யாது விட்ட பாபம், மேல்தர்மத்தை ஆத்திரத்துடன் கைக்கொண்ட பாபம், கோரிய கீர்த்தி கிடைக்காதிருந்தால் வரும் துக்கம், கிடைத்துவிட்டால் வரும் வீண் கர்வம், தன்பொருள் எண்ணியபடி உதவாதிருந்தால் ஏற்படும் சஞ்சலம் ஆகிய இவைகளுக்கு ஆளாகித் தத்தளிப்பானேயொழியவேறல்ல. இவைகளை எல்லாம் எண்ணித்தான், ஔவையார் 'அக்கம் சுருக்கேல்' என்று மிகப்பரிவுடன் கூறி, சுருக்கில் வரும் அனர்த்தத்திற்கு அளவில்லை என்று தோன்றும்படி விட்டுவிட்டாள். இந்த விஷயத்தில்.—

மைக்கடல்கொண் முட்டைதனை வாங்குவோ மென்று [சிட்டு
புக்கதனை வென்றுதன் புத்தியினால்-அக்கதைபோல்
வேளாளா புன்னைவன மேகமே யுண்மையெனக்
கேளாயஃகஞ் சுருக்கேல்.

என்பது ஆத்திசூடி வெண்பா. இதில் ஸமுத்ரக் கரையில் முட்டையிட்டு வைத்துவிட்டுப் பெண் பறவையைத்தைர்யமாக இரைதேட அழைத்துச் சென்ற ஆண்சிட்டு திரும்பிவந்து பார்க்கையில் முட்டையைக் காணாது, அதைக் கொள்ளை கொண்டு சென்ற ஸமுத்திரத்திலிருந்து வாங்கிய விதத்தைக் கூறும் பஞ்சதந்திர கதை குறிக்கப்பட்டிருக்கிறது. இக்கதையில் ஆண் சிட்டும் பெண்சிட்டும் ஸமுத்திரத்தில் மூழ்கி வெளியே வந்து சிறகுகளை உதறி ஸமுத்திரத்தை வற்ற வைக்கச்செய்த ஏற்பாட்டைப் பறவைகள் கண்டு நகைத்து, முடியாத காரியத்தைக் கைக்கொண்டாயே என்று கேலிப்பண்ணத் தொடங்கின. அதற்கு ஆண்சிட்டு கோபம் கொண்டு, மற்றப் பறவைகளை அவமதித்துப் பேசாது, மிகுந்த அமைதியுடன் உறவினர்களை நோக்கி, 'நீங்கள் நம்மினத்தைச் சேர்ந்தவர்கள். நான் செய்யத் தொடங்கியது அஸாத்ய வேலையாயினும் நீங்களும் என்னுடன் சேர்ந்தால் இதில் எனக்கு ஜயம் உண்டானாலும் உண்டாகும். நீங்கள் என்னை இம்மாதிரி அதைர்யப்படுத்தினால் என் காரியம் கைகூடுவதாக விருந்தாலும் முடிவு பெறாது. இந்தப் பொதுவான காரியத்தில் நம்மினத்தாருள் அபிப்பிராயபேதம் வரக்கூடாது. ஆதலால் என்னோடுசேர்ந்து இந்தக் காரியத்தில் முனைந்தால் நலம். உங்கள் உதவியை முக்யமாக நான் எதிர்பார்க்கிறேன்' என்று உறவினர்களைத் தழுவிப் பேசவே,அவைகளுக்குத் தமது உறவுக் கட்டின்படி உதவிபுரிய வேண்டும் என்ற மனக் கனிவுண்டாயிற்று. இவைகள் சேர்ந்து செய்த

‘விவேக போதினி’ அநுபந்தம்

உபந்யாஸ அவஸரம்



நிஷ்டாவஸரம்



ஸித்தியடைந்த ஸ்ரீ ச்ருங்கேரி மடாதிபதி ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்



வேலையைக் கண்ணுற்ற நாரதர், கருணை மூலமாகக் கருடமந்திரத்தால் செட்டின் கார்யம் முடிந்தது. ஆகவே உறவினர்களை இனிய மொழியால் சேர்த்துக்கொண்டால் இவ்வளவு சிறப்பு இருக்குமாகில், அவர்களைத் தனவந்தர்கள் தாங்கித் திருப்தியாக வைத்திருந்தால் எவ்வளவு மேன்மை ஏற்படாது?

தர்மபுத்திரர் மஹாதர்மாத்மா. அவரால் கூடிய வரையில் மஹாபாரதயுத்தத்தைத் தடுக்கப்பார்த்தார். இது நடந்தால் உறவினர்கள் இறந்து, தாம் தனித்து நின்று, செல்வம் நிறையுங்கால் அக்கம் சுருக்கித் தட்டழிய வேண்டுமே என்பதுதான் அவர் எண்ணம். இதனாலே, எப்படியாவது சண்டை மூட்டிவிட்டு வரவேண்டும் என்று தூது செல்லவிருந்த கிருஷ்ண பரமாத்மாவிடம் வற்புறுத்திக் கூறிய பீமனை நோக்கித் தர்மபுத்திரர்:—

உற்றாரை எல்லாம் உடன்கொண் டரசாளப்
பெற்றால் அதன்மிக்கப் பேறுண்டோ?—வெற்
பனிமருவும் பாழியம் தோள் வீமா! [பார்
தனிமாறும் தோப்பாமோ தான்.

என்று அக்கம்சுருக்காமலிருப்பதால் விளையும் நன்மையை நன்கு விளக்கியிருக்கிறார் யுத்தத்தில் மூண்ட அர்ச்சுனனுக்கும் போர்முனையில்,

உற்றாரை எல்லாம் உடன்கொன்றரசாளப்
பெற்றாலும் யான் வேண்டேன் இம்மண்ணரசு.

என்று தோற்றியது. இப்படியிருந்தும் துர்யோதனனுடைய பிடிவாதத்தால் பாரதயுத்தம் நடந்தேறி முடிந்தபின்னர், தர்மபுத்திரருக்குமாத்திரம் அக்கம் சுருக்கிய பாபியானேனே என்ற துக்கம் மாறவேயில்லை. அதுமுதல் அவருக்கு உலக வெறுப்பு உண்டாகிவிட்டது. தர்மாத்மா நியாயப்படி நடந்தபொழுதும் இவ்விஷயத்தில் இப்பாடு படும்படி நேரிட்டால், தயங்காது தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால், கொக்குக்கு மூக்கு நேரே வழி என்பதுபோல, உறவினர்களை அனுதாவு செய்து பரோபகாரம் புரிய எண்ணும் மூர்க்கன் கதி என்னவாகும்?



## ஸித்தியடைந்த ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்

## THE PASSING AWAY OF SRI SANKARA CHARYA OF SRINGERI MUTT

“இவனுக்கென்ன ஒரு கொம்பு முளைத்திருக்கிறதா?” என்பது ஒரு பழமொழி. அதாவது மஹா பண்டிதனாகி யாரையும் வெல்லக்கூடிய ஸாமர்த்தியம் உள்ளதா என்பதை அந்த முதுமொழி குறிக்கும். இக்கதைக்கு ஆதாரம் கலைக்கோட்டு மஹாமுனிவர். அவரே ரிஷ்யசிருங்கர். அவர் பெரு மஹான். அவர் பிறந்த இடம் ஸ்ருங்ககிரி. அதனை ஜனங்கள் ஸ்ரீங்கேரி என்பர். அது ஒரு சிறியமலை. மனதை இழுத்து அழகிற் பதித்துத் தேவதையின் அழகை யூட்டுமிடம். அவ்விடம் காண்பார்க்கு நல்ல காட்சியே! மனவிசாலத்திற்கினிய சூட்சியே. இத்தகைய இடத்தைத் தமது பீடமாக வைத்து விளங்கினவர் ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய கோவிந்த பகவத் பாதாளுடைய சிஷ்யராகிய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள். இவர்க்குப் பின் அம் மடாதிபத்யத்தை 33 பேர் அடைந்து வந்தனர். அவரில் இப்பொழுதிருந்து கொண்டிருந்தவர் ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள். இவர் கடந்த மார்ச்சுமீ 20உ யன்று பரம்பொருளில் ஒன்றினார்.

இவர் பெரு மஹான். அவரைக் குறித்தெழுத யாம் பெற்றது பாக்யமாகும். எம்பெருமானது கருணை விலாஸத்தை விசாரித்து யாவர்க்கு மளித்து ஞானமூட்டி, மெய்யுணர்வுகாட்டி, மாயையொழித்து, மனமடங்கி மேல்வழி யடைய இவர் அனைவர்க்கு, மனக்குழப்பங் கழிந்து சாந்தியடைய வழிக்காட்டியவர். இவர் சிறு வயதிலேயே, தபஸிக்குத் தக்க உபவாஸாதி

களை இயற்கையா யடைந்து மடாதிபத்யம் பெற்றதும், மிதமின்றி ஆஹாரம் உட்கொள்ளாதும், வரவர உணவைக் குறைத்தும் உடலை இளைக்கச் செய்தனராயினும், அவரது முகத்தைக் கண்டதும், அங்கு விளங்கிய தேஜஸின் மஹிமையால், எதிர் வந்து நின்ற பெருங் குழப்ப மடைந்த மனமும் சாந்தி யடைந்து விடும். இது யாவரும் பெறத்தக்க பாக்கிய மன்று.

இவர் மடாதிபத்யத்தில் வந்ததும் காலக்ரமத்திற் கேற்ப நிர்ணயாதிகளைச் செய்தும், பல உபந்நியாஸங்கள் ஜனங்கள் அறியக்கூடிய பாஷைகளில் செய்தும், ஒருவர் மற்றொருவரது மதத்தை ஏளனம் செய்யக் கூடாதென்பதைப் புகட்டியும், தத்தம் மதந்தழுவி பிறமத தூஷணை ஒழிக்கச் செய்தும், பிறமதத்தாரிடத்து அன்பு கொண்டாடியும், யாவர்க்கு மின்பஞ் செய்தனர். வடமொழி அபிவிருத்தியின் பொருட்டு ஒரு கலாசாலை ஏற்படுத்தினர்.

கோள தேசத்திற் குண்டாகிய வடுச் சொல்லை நிவர்த்தி செய்யவேண்டு மென்ற ஆவல் கொண்டு காலடி என்னும் ஸ்ரீ ஆதிசங்கரரது திவ்ய க்ஷேத்ரத்தில் சங்கரப் பிரதிஷ்டை செய்தனர். அச்சிறு ஊரை ஓர்சிறு பட்டணமாக்கினர். இது இந்திய ஸமூகத்திற்கு இம்மஹான் செய்த நன் கொடையாகும். மற்று கணித ஜ்யோதிஷஸங்கமொன்று கூட்டி, பஞ்சாங்க பரிசீலனம் செய்ய முயன்றனர். அதுஸரியாகப் பலன் தராதொழியினும் அவரது குற்றமென்று சொல்லமுடியாது. ஸமுத்ரயாத்ரா விஷயமாகவும் மற்றும் இக்காலத்திய வ்யவாஹாரங்களைப்பற்றியும் தமது அபிப்ராயத்தை வெள்ளிமடைமலைபோல் விளங்க அருளி இருக்கின்றனர்.

இவர் ஓர் தபஸி. மஹாரிஷியென்றே சொல்ல வேண்டும். நல்மொழி யுடையவர். ஞானமறியும் குணமுடையவர். இவர் திக்விஜயம் செய்து கொண்டு வரும்பொழுதிடைதிடை செய்த அதிசயங்களைக் கேட்டால் எத்தகைய ஸந்தேஹ ஹ்ருதயமும் அவரிடம் பவ்யமாகும் என்பதிற் கையமில்லை. ஓர் நாஸ்திகன் அவர் முன்போய் "கடவுளில்லை" என்று சொல்ல நாவெழாது நின்றனன். மற்றோர் இடத்தில் அவர் தீர்த்தப்ரஸாத மளிக்குமிடத்தில் ஓர் ஸுமங்கலி தீர்த்தம் கேட்டபொழுது அவளை அகன்றுபோகச் சொன்னார். அவள் மனத்துயரோடு வீடுசென்ற போது தன் கணவனிறந்ததாகத் தந்தி வந்திருக்கக் கண்டாள். இதுமுதலாகிய விசித்ரஸம்பவங்கள் அனேகம். அவர் சென்ற விடமெல்லாமது ப்ரஸித்தம். நாம் கூறவேண்டியதில்லை.

இரண்டாவது வயதில் தன் தகப்பனிறக்க தாயால்வளர்க்கப்பெற்றுபின் ஸ்ருங்கேரி அடைந்து குருகுலவாஸம் செய்து ஸ்ரீகுரு அவர்களால், ஸ்ரீங்கேரிபீடாதிபதியாக ஏற்படுத்தப்பட்டுமஹா விபவத்துடனிருக்கக்கூடியகாலத்தில் யாவற்றையும் வெறுத்து, குணப் பெருங்குன்றாய் விளங்கி, ஒழுக்கம் குன்றாது, தவமே தர்மங்கொண்டு உடலைச் சுருக்கி, புணவைக்குறைத்து, ஜீவன் முக்த தசையிலுழைத்து, உள்ளன்பூறி, உலக ஜனங்களின்பொருட்டு அவர்கள் ஞானவிசாலிக்க உபந்நியஸித்து, தன்னுள் உணர்வை அவன்பால் சேர்த்துத் திடவைராக்யத்துள்பட்டு மாயா விகாரத்தை ஒழித்து அவன்பால் மயங்கிய இப் பெருமஹானது வைபவம் யாவர்க்கும் உத்ஸாக மூட்டி அவரது நடத்தையையும் வாழ்க்கையையும் உயர்த்தி மனோவிசாலத்தில் ஆழ எம் மதமும் ஸம்மதமாக்கி "ஏகம் ஸத்விப்ரா பஹுதாவதந்தி" என்ற வேதவாக்யத்தின் உண்மையுணர்ந்து அதை அனுபவிப்பாரென்பது யான் மாத்ரமன்றி யாவரும் விரும்பக்கூடியதே. ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:



# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 32. कदम्बगोलक न्यायः

కదంబగోళక న్యాయః

### கதம்பகோளக ந்யாயம்.

கதம்பம் என்பது அடம்பம் என்று கூறும் ஒருவித மரம். இதனடியில்தான் அம்பிகை எழுந்தருளியிருப்பதாக த்யானம் செய்வதுவழக்கம். கோளகம் என்பதற்கு மொட்டு என்பது பொருள். கதம்ப மரத்தில் மொட்டுவிட்டதின் பிறகு எல்லாம் ஒரே அடியாகப் புஷ்பிப்பது வழக்கம். இம்மாதிரி அநேக விடங்களில் ஒரே கார்யம் ஒரே ஸமயத்தில் நடந்தேறிப் பலிக்குங்கால் இந்த ந்யாயம் உபயோகப்படும். மின்சார தந்தி, கம்பி இல்லாத் தந்தி முதலியவைகள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் எல்லாப் பொதுவிஷயங்களும் கதம்பகோளக நியாயப்படி நடந்தேறும். உதாரணமாகச் சென்ற 1911ஸு கார்த்திகைமீ டில்லியில் நடந்த நமது சக்கரவர்த்தி மகுடாபிஷேகக் கொண்டாட்டம் உலகெங்கும் ஒரே ஸமயத்தில் சற்றேறக்குறைய ஒரேமாதிரியாகக் கொண்டாடப்பட்டது, இந்தநியாயத்திற்கு உதாரணம். வேதாந்த சாஸ்திரத்தில் இருவித ஸ்ருஷ்டிகள் கூறப்படுகின்றன. அவையாவன க்ரமஸ்ருஷ்டி, ப்ரபோத அல்லது யுகபத் ஸ்ருஷ்டி என்பவைகளே! தூக்கத்தில் ஒன்றும் தோன்றாது விழித்ததும் ப்ரபஞ்சவைசித்ரியம் தோன்றுவது போல, ஒரே ஸமயத்தில் இச்சாமாத்திரத்தில், அவுட்பாணத்திலிருந்து புஷ்பம் தோன்றுவது போல வெளிப்படுவது ப்ரபோத ஸ்ருஷ்டி யாதலால் அதுவும் இதற்கு உதாரணம்.

### 33. कफोणिगुड न्यायः

కఫోణిగుడ న్యాయః

### கபோணிகுட ந்யாயம்.

கபோணி என்பதற்குப் புறங்கை என்பது பொருள். நாம் எடுத்து உண்ணும் வஸ்துக்கள் எல்லாம் அகங்கையால் எடுப்பதாயினும், புறங்கையை நக்குங்கால் எடுத்த வஸ்துவின் மேல் நமக்கு ஆசை என்பது வெளியாகும். ஆகவே உள்ளங்கையால் எடுத்த வெல்லம் போன்ற வஸ்துவின் மேல் நமக்கிருக்கும் ஆசை அது இல்லாத புறங்கையை நக்குவதால் குறிக்கப்படுகிறது. இது போல ஒன்றில்லாத விடத்தில் அதைத் தேடப் புகுந்து அந்த வஸ்துவினிடத்திலுள்ள ஆசை வெளிப்படுங்கால் இந்த நியாயம் உபயோகப்படும். இதற்கு உதாரணமாக உலகப்ரவிருத்தியையே எடுத்துக் கொள்ளலாம். இதனால் மனஸ் ஸமாதானம் பெறலாம் என்று நாம் ஓயாதுமுயலுகிறோம். ஆனால் வெளிவஸ்துக்களிலிருந்து ஏற்படும் ஸமாதானம் நீடித்திராததால் நாம் மேல்மேலும் முயன்று வருகிறோம். ஆகவே இதிலிருந்து நமக்கு வெளி விஷயத்தில் உண்மையாகவே இச்சை இல்லை என்றும், அதனால் நமக்கு உண்டாகிவிடும் என்று அறியாமையால் மதிக்கும் மாறு ஸமாதானத்தில்தான் நமக்கு ஆசை என்பது தெரியவரும். இதிலிருந்து உலகப்ரவிருத்தி புறங்கையை நக்குவது போலிருப்பதால் இந்த நியாயத்திற்குத் தகுந்த உதாரணம்.

### 34. करकङ्कण न्यायः

కరకఙ్కణ న్యాయః

### கரகங்கண ந்யாயம்

கங்கணம் என்றால் கரபூஷணம் என்றே பொருள். கையில் போட்டுக்கொள்ளும் ஓர் அணி என்று கங்கணம் என்ற சொல்லுக்குப் பொருளாதலால், கரகங்கணம் என்றுசொல்லுவது அனுவசியம் என்று தோற்றும். ஆயினும் அது கையிலே அணியப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்தும். ஒன்றோடு ஸம்பந்தப்பட்ட மற்றொன்று வேறாயிருப்பினும் அவை இரண்டும் சேர்ந்திருக்கின்றன என்று குறிக்கும்படி இரண்டையும் அனுவசியம்போலக் காணப்படும்படி சேர்த்துச் சொல்லுங்கால் இந்யாயம் உபயோகப்படும். 'என் வயிறு பசிக்கிறது,' 'என் கண்ணால் கண்டேன்' என்ற ஸாதாரணமாக நாம் கூறும் மொழிகள்

இந்யாயத்திற்கு உதாரணம். பசி வயிற்றிலே ஏற்படும் ஒரு அனுபவமாயினும், இம்மொழி கூறுங்கால் அப்பொழுது தனக்குப் பசிவந்துவிட்டது என்பதையும்,காண்பது கண்ணாலேதான் இருந்தபோதிலும் குறிப்பிட்டிருக்கும் விஷயஸம்பந்தமாகத் தன்கண் உபயோகப்பட்டது என்று உணர்த்த அவசியம்போலத் தோன்றும்வயிறு, கண் என்ற பதங்கள் இங்கு அமைந்து கிடப்பதால் இவை இந்யாயத்திற்கு உதாரணமாயின.

### 35. काकतालीय न्यायः
### కాకతాళీయ న్యాయః
### காகதாளீய ந்யாயம்

பதப்படி நோக்கில் காக்கை பனம்பழ ந்யாயம் என்பதாகும். இவை இரண்டுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பலவிதமாகப் பொருள்படுத்துவது உண்டு.

(1) ஒரு காகம் பனைமர உச்சிக்குப் பறந்து வந்து அங்கிருந்த ஒரு பழுத்த பழத்தின் மேல் உட்காரப்பார்த்தான் ஒருவன். உடனே பனம்பழம் விழத்தொடங்கியது. காகம் ஆதாரம் நழுவுவது கண்டு மேலே பறந்துபோய் விட்டது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தவன் காக்கை தான் பனம்பழத்தைத் தள்ளிவிட்டது என மதிக்கலாம். இப்படி இருக்கையில் நுட்ப புத்தியுடைய ஒருவன் வந்து 'அதென்ன! அப்படிச் சொல்லுகிறாய்! பனம்பழம் மரத்தில் பிடித்திருக்கும் சக்தி என்ன காக்கையின் அளவுஎன்ன! காக்கையாவது பனம்பழத்தைத் தள்ளவாவது! காக்கைஏறப் பனம்பழம் விழுவதும் சரியாகவிருந்தது.பனம்பழம்விழுந்தருணமாக விருக்க காக்கை ஏறியது. தகுந்த ஸமயத்தில் வந்து முன்னாக வாய்த்துக்கொள்ள இது அதற்குக் காரணம் போலத் தோற்றியதே ஒழிய உண்மையில் காரணமாகாது' என்று விளக்குவன். உலகத்தில் நன்மை தீமைகள் ஒருவனுக்கு வருவது அவன் தற்கால நற்செய்கை,நற்குணம்முதலியவைகளால் ஏற்படுபவைகள் அல்ல. அப்படி இருந்தால் உலகில் நல்லவர்கள் எல்லாம் ஸுகமடையவும், கெட்டவர்கள் எல்லாம் வருத்தப்படவும் காணவேண்டுமே! அவ்வாறின்றி நல்லோருக்குத் துன்பம் அடுக்கடுக்காகவும், தீயோருக்கு ஸுகம் மேல்மேலும் வருவது நமது அனுபவம். ஆதலால் சிற்சில சமயங்களில் நல்லோருக்கு நன்மையும் தீயோருக்குத் தீமையும்வரக்கண்டபோதிலும், அல்லது மாறாக வரக்கண்ட போதிலும், 'இவைகளுக்கு உள்ள ஸம்பந்தம் காகதாளீயமே, ஒருவன் அப்பொழுதிருக்கும் நிலைக்கும் அவனுக்கு வரும் பலனுக்கும் காரண காரிய சம்பந்தம் இல்லவே இல்லை. நற்குணத்தின் பலன் வேறு, அவனுக்கு ஸுகதுக்கங்களை அப்பொழுது கொடுக்கும் காரணம் வேறு, இவைகள் அடுத்து வருவதால் காரிய காரண ஸம்பந்தம் கற்பிக்கலாகாது' என்று பகுத்தறிந்து ஸுகம் வருங்கால் மூழ்காமலும், துக்கம் வருங்கால் அழுந்தாமலும் எக்காலத்திலும் ஒரேமாதிரியாக ஸத்ப்ரவிருத்தியிலேயே நிலைபெற்றிருப்பர் பெரியோர். கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? ஸந்மார்க்கத்திலிருப்பதே மேன்மையாகிவிட அதனால் வேறு ஒருமேன்மையும் வேண்டுமா? என்று மனங்கலையாதிருப்பர் மஹான்கள். உலக ஸுகதுக்க விஷயமாக யாதொரு தீர்மானமும் செய்யாது அவைகளை காகதாளீயமாகக் கருதி உபேக்ஷையுடனிருப்பர் பெரியோர்.

(2) ஒரு காகம் பறந்துகொண்டே போயிற்றும், பனைமரத்திலிருந்து ஒரு பழம் விழுந்தது. தற்செயலாய் காக்கை பனைமரத்தின் கீழ் பறந்து வருவதும் பழம்மேல்விழுவதும் ஸரியாக விருக்க காக்கைமண்டை சிதறிஇறந்ததாம்.இதுபோலவே வேறொருகதையும் கூறுவதுண்டு. ஒருவழுக்கைத் தலை மொட்டை ஒருவன், வழி நடந்துபோகையில் நடுப்பகல் வேளையில் ஒரு மணற்காட்டின் வழியாகப் போகவேண்டியிருந்தது. வெயில் மண்டையைப் பிளக்க, மணல் காலில் கொளுத்த நிற்கத் தரியாது ஓடி, மத்தியிலிருந்த ஒரு பனை

## 'விவேக போதினி' அனுபந்தம்



நரம்புகளின் அமைப்பு



அங்கங்கள் அமைப்பு



எலும்புக்கூடு



மாத்தடியில் ஒதுங்கினன். பனைமாத்தில் என்ன நிழலிருக்கும்? ஆயினும் அது அவனுக்கு ஸ்வர்க்கம்போலத் தோன்ற இளைப்பாறத் தொடங்குகையில் பனைமாத்திலிருந்து ஒரு பெரும் பழம் விழுந்து அவன் மண்டை கீறி இறந்தான் என்ற ஒருகதை உண்டு. இவை காரிய காரண ஸம்பந்தமின்றித் திடீரென்று உண்டாகும் அனிஷ்டத்தைக் குறிக்கின்றன. இந்தப் பாகம் **அஜாக்ருபாணீய ந்யாயம்** என்ற 109-வது பக்கத்தில் 2-வது ந்யாயத்தில் விஸ்தரித்திருப்பதைக்காண்க.

(3) ஒரு காகம் பறந்து வந்து ஒருபனமாத்தடியில் உட்கார்ந்ததாம். உடனே ஒரு மாத்து பனம்பழம் கீழேவிழுந்துஉடைந்துபோக அதைக் காகம் வயிறுாத்தின்று பசிதீர்ந்து ஸுகம் அடைந்ததாம். இதனால் எதிர்பாராத நன்மை வருவது குறிக்கப்படும்.

காக்கைக்கும் பனம் பழத்திற்கும் எவ்வித மான ஸம்பந்தம் ஏற்படுத்திக் கூறியபோதிலும், எதிர் பாராத தற்செயலாக நடக்கும் விஷயங்களிலும், முன்ன நடந்த விஷயத்தோடு கார்யகாரண ஸம்பந்தமாகத்தோற்ற மாத்திரத்தில்பொருத்தக் கூடிய விஷயங்களிலும் இந்யாயம் உபயோகப்படும் என்பது விளங்கும். பரம்பொருளை உள்ளபடி உணர்ந்த ஞானிகள் உலகத்தில் நடப்பவைகள் **எல்லாம்** காகதாளீயமே என்று மதித்து,

> சென்றது கருதார், நாளைச்
> சேர்வது நினையார், கண்முன்
> நின்றது புசிப்பார், வெய்யில்
> நிலவாய்விண் விழுது வீழ்ந்தும்,
> பொன்றிய சவம்வாழ்ந் தாலும்,
> புதுமையா யொன்றும் பாரார்
> நன்றுதீ தென்னர் ஸாக்ஷி
> நடுவான ஜீவன் முக்தர்.

என்று கைவல்ய நவநீத வாக்கியப்படி தம் நிலையிற் பிரியாதிருப்பர். ஆதலால் இந்தக் காகதாளீய நியாயத்தை நன்குஆராய்ந்து ப்ரபஞ்ச விஷயங்களில் கூடியவரையில் பொருத்திப் பார்த்தால், அவ்வவைகளிலிருந்து நமக்கு ஏற்படக்கூடிய மனச்சஞ்சலம் நம்மைவிட்டு அகல, நமது மனம் நிலைபெற்றுக்கொண்டே வந்து முடிவில் முத்தி கைகூடும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

## நாம் வசிக்கும் அற்புத வீடு

## THE WONDERFUL HOUSE WE LIVE IN

**உ**லகத்தில் மனிதனால் கட்டப்பட்டுக் காணப்படும் மாடமாளிகை கூடகோபுரம் என்று சொல்லப்படும் கட்டடங்களின் விமரிசையைக் கவனித்துப் பார்க்குங்கால்,மனித சரீரக்கட்டட அமைப்பைவிட அத்யுன்னதமான கட்டட அமைப்பு உலகத்தில் காணக்கூடியதல்ல என்று தீர்மானிக்கலாம். கட்டடங்களில் அனுபவிக்கக் கூடிய சகல சுகத்துக்கும் ஆதார பூதமாகிய பலவகை சவுகரியங்கள் நம் தேகத்திலும் காணலாம். ஒரு மாளிகையின் சிறப்பு அதில் உடையவன் குடியிருந்தால் மாத்திரம் விளங்குமே ஒழிய, பாழாய்க் கிடத்திவிடின் எப்படி நிலைகுலைந்து அழிந்து விடுமோ அதுபோல மனித சரீரமும், உடையவனாகிய ஜீவன் இருக்குமட்டும் பார்த்து வியக்கக்கூடிய நிலைமையிலிருக்கும். ஜீவன் விலகுங்கால் நம் உடலும் அழியும் இயல்பை உடையது. இவ் அற்புத வீட்டின் விமரிசையைச் சற்று விசாரிப்போம். வீட்டிற்குத் தலைவாயில் இடைகழி முதலிய பிரிவுகள் இருப்பதுபோல, நம் தேகமும் தலை, கழுத்து, உடலாகிய முண்டம், கைகால் முதலிய அவயவங்களோடு பிரிந்து காணும். இக் கட்டடத்துக்குச் சுவர் தூண் உத்தரம் போன்று விளங்கும் எலும்புக்கூடும் உண்டு. தலையில் மூளையைக் காப்பாற்றும் கபாலம் என்ற எலும்புப் பெட்டியும் மூளையினின்று நீளும்பெருநரம்புக்கு, கேடு வாராமல் காப்பாற்றப்படும்பொருட்டு ஏற்பட்ட முதுகெலும்பின் மோதிரக் குழாயும் முக்கியமான பாகங்கள். கைகால்கள் நீட்ட மடக்க இலகுவாயும் பலமாயும்அமைக்கப்பட்ட எலும்புகளின் தொகுதியும் ஹிருதயம், சுவாஸப்பைகள் முதலிய பிராணாதாரமான அவயவங்களின் ரக்ஷணார்த்தமாக அமைந்திருக்கும் மார்க்கூடும் எலும்புகளின் சேர்க்கையாம். தேகத்தின் ஒரு பாகத்தை மற்றொரு பாகத்தோடு அசை

வுப் பொருத்தத்தோடு சேர்த்து அவ்வசைவுக்கே காரண பூதமாயுள்ள பேசிகள் (Muscles) எனப்படும் மாமிசங்கள் இணைக்க ஏற்ற சாதனங்களாகவும் எலும்புகள் இருக்கின்றன.

வீடு ஆகிய கட்டடம் முடியவேண்டுமானால் சுவர், தூண், உத்தரம் மாத்திரம் போதுமா? அச்சுவர், மண், சுண்ணாம்பு, கல் ஆகிய இவற்றால் அமையுமன்றோ! அவைபோன்ற பதார்த்தங்கள் நம் தேகத்தில் உள்ளனவோ என ஐயமுறலாம். தேகத்துள்காணப்படும் சதை,தோல்,நரம்பு இவைகளின் செதில்களாகிய கண் அறைகளையே கற்களாகப் பாவிக்கலாம். கண் அறைகளைக்கட்டி பேசிகளாகவோ, மற்ற அங்க அவயவங்களாகவோ செய்ய உபகாரமாயிருக்கும் நாற் செதில்களும் உண்டு. பின்கூறிய செதில்களையே, ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தும் மண்காரையாகப் பாவிக்கலாம்.

வீடு என்றால் உள், வெளி முதலிய இடங்களுக்கு வரப்போக வாயில்களும் ஜன்னல்களும் வேண்டுமல்லவோ? நம் தேகத்திலும் போக்குவரவுக்கேற்ற அவ்விதமான வாயில்களும் உண்டு. அவைகள்தாம் நவத்துவாரங்கள் என்று கூறும் வாயில்கள் ஆவன. வீடு என்றால் மேல்பூச்சு உட்பூச்சு இவைகள் இன்றிக் கட்டடம் முடிவுபெறாதன்றோ! நம் தேகமாகிய வீட்டிற்கும் வெளித்தோல், உள்தோல் அமைந்திருப்பதை ஊகிக்கலாம். வெளித்தோல் ஆகிய சர்மம் தேகத்தின் உள்ளிருக்கும் அங்க அவயங்களுக்கு அபாயம்வாராதபடிகவசம்போலிருந்து தற்காக்கும். உட்தோல் தேகத்திற்காணும் துவாரங்களில் ஆரம்பித்து உட்செல்லும் குழாய்களுக்கு உட்பூச்சு போல நின்று அதனுட் செல்லும்படியான வஸ்துக்களால் தேகத்துக்குக் கெடுதி வாராதபடி காத்து ரக்ஷிக்கும்.

நம் வீட்டில் (தேகம்) நடந்தேறிவரும் காரியங்கள் இன்னவையென்று சற்று விசாரிப்போம். உயிரோடிருக்கும் ஒருவனை ஒருநாள் கவனிக்கும் பக்ஷத்தில், அவனது தேகத்திற்கும் அவனைச் சுற்றிலுமிருக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் வியாபாரம் இன்னதென்று அறியலாம். சதா காற்றைச் சுவாசிக்கிறான், பிராணவாயுவின் விசேஷத்தால் ஏற்பட்ட சூடானது இவன் தேகத்தோடு சம்பந்தப்படும் காற்று உடை முதலிய எவ்வகைப் பொருளையும் சூடாக்கிக் கழிவதைக் காணலாம். இக்கழிவினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெலுத்தப் பசி தாகம் ஆகிய இரண்டினால் தூண்டப்பட்டு, ஆகாரம் உட்கொள்வதையும் காணலாம். சிறிது நேரத்துக்கு ஒருமுறை கழியும் மல ஜலத்தின் மூலமாகவும் தேகத்தில் எப்பொழுதும் உண்டாகும் வியர்வையின் மூலமாகவும் பல பதார்த்தங்கள் ஜலம் உப்பு வாயு இவை சம்பந்தப்பட்ட அநேக கழிவு பதார்த்தங்கள் தேகத்தைவிட்டு விலகுவதையும் பார்க்கலாம். பதார்த்தங்கள் போக்குவரவுக்குச் சாதனமாய் ஏற்படும் வீடாகிய தேகத்தை ஒரு பெரிய வியாபார சாலையாகவும் சொல்லலாம். தேகத்தின் இரத்தம் சுத்தமாகச் சுவாஸப்பையும், உட்செல்லும் ஆகாரம் ஜீரணிக்க இரைப்பையும், கழிவு பதார்த்தம் விலக மூத்திரக் காய்கள் குழாய்களும் மலப்பையும் நம் தேகத்தில் இருக்கின்றன.

வியாபாரசாலைக்குக் காரியஸ்தன் என்றும்,எஜமான் என்றும் உண்டல்லவோ? எஜமானன்தான் **மூளை**யாகும். சகல காரியத்தையும் விசாரித்து அறியவும் யோசித்துத் தீர்மானம் பண்ணிப் புலன்களுக்கு உத்தரவு பண்ணவும் இவ்வகைத்தான காரியங்கள் மூளையைச் சேர்ந்தது. சாதாரண காரியங்களை **இச்சை** (Will) யானது தடுக்கவோ, மாறுபாடுகள் செய்யவோ கூடும். ஆனால் உயிருக்கு இன்றியமையாது நடந்தேறி வரவேண்டிய ரத்த ஓட்டம், சுவாஸம், ஜீரணம், முதலிய காரியங்கள்,இச்சையால் நிறுத்தப்படக்கூடியவையல்ல. மூளையானது தந்தித் தபாலைப்போல ஒரு தலைமை ஆபீஸ் என்றே சொல்லலாம். அதற்கும், தேகத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றிற்கும் வெள் நரம்பினாலாகிய தந்திக் கம்பிகள்



சம்பந்தமாக நிற்கின்றன. வெளி விஷயம் மூளைக்குத் தெரிவிக்கவும் மூளையினுடைய இச்சையானது மற்ற அவயவங்களுக்குச் செல்லவும் சாதனமாகவுள்ளவை இவ்வெள் நரம்புகளே. மூளையாகிய எஜமானன் தேகத்தின் அவயவங்கள் உறுப்புகள், இவைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கவும், வேண்டாதவைகளை அவைகளினின்று நீக்கவும் இரத்த ஓட்டத்திற்கு ஆதாரமாகிய ஹிருதயம் என்னும் காரியஸ்தனை நியமித்திருக்கிறான். தன்னோடு சம்பந்தப்பட்டிருக்கும் அநேக குழாய்கள் வழியாக ஹிருதயமானது விரிந்து சுருங்கி இரத்தத்தைத் தேகத்தின் உறுப்புகளுக்குள் பாயும்படியாகச் செய்கிறது. சுவாஸப் பையினின்று வரும்பொழுது பிராணவாயுவைக் கிரஹித்துக்கொண்டும்,ஜீரணப்பை, குழாய் இவைகளின் வழியாகச் செல்லுங்கால், ஆகாரஸத்தையும், மற்றைய எல்லா இடங்களினின்றும் வேண்டாத பதார்த்தங்களாகிய கரியமிலவாயு, உப்பு நீர்ப்பதார்த்தம் இவைகளையும் சேகரித்துக்கொண்டு இரத்தமானது ஓடுகின்றது. வேண்டாத பதார்த்தங்கள் வேர்வை மூலமாகவும் வெளிமூச்சாகிய சுவாஸ ரூபமாகவும் மூத்திர ரூபமாகவும் விலகுகின்றன. ஜீவனுக்கு இன்றியமையாத வஸ்துக்களாகிய பிராணவாயுவும், ஆகார ரஸமும் உறுப்புகளுக்கு இரத்தத்தின் மூலமாகத்தான் கொடுக்கப்படுகின்றன.

தேகத்தின் மற்றைய அவயவங்களாகிய கை, கால், முதலியனவும் பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் மெய், கண், வாய், மூக்கு, செவி இவைகளை எஜமான் குற்றேவல் செய்யும் கையாட்களாகப் பாவிக்கலாம். இவைகளின் ஒத்தாசையால்தான் தேகத்திற்கு வேண்டிய காரியங்கள் குற்றம் குறைவின்றி நடந்தேறி வருகின்றன. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தாதிகளாலே, நம்மைச் சுற்றிலும் இருக்கும் பொருள்களின் சாதக பாதகங்களை அறிய இடமாயிருக்கிறது. நமது தேகத்திற் காணும் மற்றைய அற்புதங்கள் தேக உற்பத்தியிலும் வளர்ச்சியிலும், மக்கட்பேறிலும் காணலாம். ஸ்வயமாக வேலைசெய்து குறைவுகளை நிரப்பி அழிவு தேய்வுகளை ஈடுசெலுத்திக்கொண்டு நடந்தேறவல்ல ஒரு விசித்திர யந்திரமாக நம் தேகத்தைச் சொல்லலாம். ஆனால் இவ்யந்திர விமரிசை கேவல ஸ்வரூபமாகிய கருவினின்று ஜனித்து, வளர்ந்து மறுபடி நமது தேகமாகிய யந்திரத்தை உண்டுபண்ணவல்ல கரு உற்பத்திக்கு ஆதாரமாக உள்ள சுக்கில சுரோணிதத்தை உள்ளடக்கியே காணப்படும். ஆகையால் கருவின் விகாஸமே தேகமென்றும், தேகத்தின் குறுக்கமே கரு என்றும் சொல்லலாம்.

நம் தேகம் வியாபாரசாலை என்று முன்னமேயே சொன்னோம். வியாபார ஒழுக்கங்களை அனுசரித்தாலன்றோ வியாபாரம் நன்கு நடைபெறும். நமது தேகத்தில் நடக்கும் ஜீவிய தொழில்களும்,தேக அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகளைக் கவனித்து கால தேச வர்த்தமானங்களுக்கு இணங்க, நடைபெற வேண்டும். அவ் ஒழுங்குகள் யாவை யெனில் சுகாதார விதிகளேயாம்.

N. S. ஜம்புநாதய்யர், பீ. ஏ., எல். டி.

**சிறு விஷயத்திலும் உண்மையாயிருக்க வேண்டும்.**—இதுதான் நாம் எடுத்த ஜன்மம் சரியான ஜன்மம் என்பதைக் காட்டும் கண்ணாடி. இதற்கு விரோதமாய் குற்றமென்றறியாமலே சிறு பொய்களையும், மாமாலங்களையும், நாம் சிறுவயதிலேயே ஆரம்பித்து விடுவோமானால் வெகு சடுதியில் நாம் நமது பெயரை இழந்து எத்தொழிலில் நாம் புகுந்தபோதிலும் அத்தொழிலில் மேன்மையும் மரியாதையுமின்றி ஏங்கி நிற்போம். ஒரு சிறுமோசம் அல்லது ஒரு சிறுபொய் இதில் நாம் பழகிவிட்டால் அதில் நாம் அவ்வாறு நாளைக்கு நாள் பழகி வருவோமேயல்லாது அதை விட்டு விலக நமக்கு வழியே யில்லாமல் நமது வாழ்நாட்கள் முழுமையும் பொய்யன் என்ற பேர் படைத்தே கழித்துவருவோம். இப்பொய் நமது தேகத்தில் ஊறிவிடுகின்றபடியால் கண்ணிமைப்பதுபோல் இது நமக்குள் ஒரு குறையாய் அமைந்து நம்மைவிட்டுப் போகாமல் நமக்குள்ளேயே பரவிவிடுகின்றது. அவ்வாறழிந்தவர்களுக்கு நிஜமென்பதைச் சொல்லவே முடியாது. அது அவர்களுடைய அக்கால இயற்கைக்கு விரோதமாய் விடுகின்றது. நண்பர்களே! இது முக்கியமான விஷயமாகையால் நாம் சொல்லுவதை ஏதோ என்றெண்ணாமல் சிறுவயதிலேயே பொய்யையும் மாமாலத்தையும் தவிர்ப்போமேயானால் நமது ஜன்மம் கொடியதாய் முடியாது. ஆகையால் நாம் இதில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஒரு சிறு பொய்யை முதல் முதலில் சொல்லுவது வெகு எளிதாய்க் காணப்படலாம். அவ்வாறெண்ணி அத்தொழிலில் நாம் சிக்கிக்கொண்டால் மீண்டும் கரையேறுவதரிது. ஆகையால் அச்சிறு பொய்க்கு நாம் முதல் முதலில் இடங்கொடுக்கவே கூடாது. அவ்வாறு செய்தால் நாம் க்ஷேமமடைவோம்.

# உபநிஷத் ரத்தினமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 23. வாஸுதேவோபநிஷத் (56)

**ஏ**து எல்லாவற்றுள்ளும் பரவி, எல்லாவற்றிற்கும் ஆதாரமாகி, தனக்கு ஒரு ஆதாரவஸ்துவு மின்றி, நிலைத்திருக்கிறதோ அந்த வஸ்துவை நான் த்யானம் செய்கிறேன்.

பகவத் ஸ்வரூபமான **நாரதர்** ஸர்வேச்வரரான **வாஸுதேவரை**, அடுத்து, வணங்கி, 'ஓ பகவானே! எனக்கு **ஊர்த்வ புண்ட்ர** விதியைச் சொல்ல வேண்டும், அதற்கு வேண்டிய த்ரவ்யம், மந்த்ரம், ஸ்தானம், ஆகிய இவைகளையும் கருணை கூர்ந்து உபதேசிக்க வேண்டும்.' என்று கேட்டார்.

வாஸுதேவர் உபதேசிக்கிறார்:—

"விஷ்ணு சந்தனம் என்றொரு வஸ்து வுண்டு. அது வைகுண்ட ஸ்தானத்திலிருந்து உண்டாகியது. எனக்கு மிக ப்ரியமானது, ஆதலால் ஒவ்வொரு நாளும் என் அங்கத்தில் பூசப்பட்டுள்ளது. ப்ரஹ்மா முதலிய எனது பக்தர்களால் மிகுந்த ஆவலுடன் தரித்துக் கொள்ளப்பட்டது இது. கோபிகள் பண்ணுவதால் இதற்கு **கோபி சந்தனம்** என்ற பெயர் வந்தது. இது சக்ர தீர்த்தத்தின் நடுவிலிருந்து எடுக்கப் பட்டு சக்ரத்துடன் கூடிய மஞ்சள் வர்ணமான ஒரு வித வஸ்து, இது முக்திக்கு ஸாதனமானது.

"இந்தக் கோபி சந்தனத்தை நமஸ்கரித்து, அதை எடுத்து 'ஏ கோபி சந்தனமே, நீ பாபங்களைப் போக்கும் விஷ்ணுவின் சரீரத்திலிருந்து உண்டாகி இருக்கிறாய். உன்னை நமஸ்கரிக்கிறேன். தரித்துக்கொள்ளுவதால் என்னைக் கரையேற்று' என்று துதிக்க வேண்டும். **इमंमेगङ्गे** என்ற மந்திரத்தால் ஜலத்தை எடுத்து **विष्णोर्नुकं** என்று குழைக்க வேண்டும். **अतोदेवा, अवन्तुनः** என்ற மந்திரங்களால் விஷ்ணு காயத்ரீயினாலேயாவது அல்லது கேசவாதி 12 நாமங்களினாலேயாவது இதை இட்டுக் கொள்ளவேண்டும், ப்ரஹ்மசாரியாக விருந்தாலும், வானப்ரஸ்தனாக விருந்தாலும், நெற்றி, மார்பு, கழுத்து, தோள், இவைகளில் முன் சொன்னபடி இட்டுக்கொள்ளவேண்டும். கிருகஸ்தனோ 'சங்குசக்ர கதாதரா! துவாரகாவாஸீ! வாஸுதேவ! கோவிந்தா! புண்டரீகாக்ஷா! சரணமடையும் என்னைக் காத்தருளவேண்டும்,' என்று தியானித்து நெற்றி முதலான 12 இடங்களில் மத்தியவிரலால் முற்கூறியபடி இடவேண்டும். ப்ரஹ்மசாரியும் இவ் விரலையே உபயோகிக்கவேண்டும்.

"யதியோ பவித்ர விரலால் தலை நெற்றி மார்பு இவைகளில் ப்ரணவ மூலமாகவே இட்டுக்கொள்ள வேண்டும். அகார உகார மகார ஸ்வரூபமான ப்ரணவம் வைதிகமான மும்மூன்றான சேர்க்கைகளை அடக்கியுள்ளது. அவையாவன, மும்மூர்த்திகள், மூன்று வ்யாஹ்ருதிகள், மூன்று வேதங்கள், மூன்று அக்னிகள், மூன்று ஜ்யோதிஷ்மான்கள், மூன்று காலங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று ஆத்மாக்கள், மூன்று ஊர்த்வபுண்ட்ரங்கள் ஆகிய இவைகளே. இதுவே ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸத். இதுவே அநேக மாயிற்று. ஊர்த்வஸ்தானத்திற்கு இது கொண்டு போவதால் ப்ரணவ அதிகாரி இவ்வாறு இட்டுக்கொள்ள வேண்டும்.

பரமஹம்ஸன் நெற்றியில் மாத்ரம் ப்ரணவத்தினால் ஒரு ஊர்த்வபுண்ட்ரம் இட்டுக்கொள்ளவேண்டும். தத்வமாகிய தீவட்டிக்கு ப்ரகாசம்போன்ற தன் ஆத்மாவைப் பார்க்கும் யோகீ எனது ஸாயுஜ்யத்தை அடைகிறான்.

"மார்பிலுள்ள புண்ட்ர மத்தியிலாவது, ஹ்ருதய கமலமத்தியிலாவது, நுட்பமான அக்னி ஜ்வாலை ஊர்த்வமுகமாக இருக்கிறது. அது கார்மேகத்தின் இடையில் ஒளிரும் மின்னல் கொடிபோலத் தோன்றி மறைந்தும், நெல்நுனிபோல அதிநுட்பமாயும் உள்ளது. அங்கேதான் பரமாத்மா இருக்கிறார். இவ்வாறு உட்புண்டரீகத்திலிருப்பவரை ஹ்ருதய புண்டரீகத்தில் த்யானாப்யாஸம் செய்யவேண்டும். இம்மாதிரி பரம புருஷனான என்னைத் தன் ஹ்ருதய கமலத்தில் உள்ள பரமாத்மாவாக எவன் த்யானிக்கிறானோ அவனே முக்தன். ஸம்சயமில்லை.

"என்ரூபமே ஸூர்யனுள்ளிருக்கும், ஸ்வயம்ப்ரகாச ஸச்சிதானந்த அத்வய பரப்ரஹ்மரூபம். ஒரே விஷ்ணுவான நான் ஸ்தாவரஜங்கமங்கள் எல்லாவற்றினுள்ளும் எள்ளுள் எண்ணைபோலவும், கட்டையுள் நெருப்புப் போலவும், பாலுள் நெய்யைப்போலவும், ஆத்மாவாக விருக்கிறேன். ப்ரஹ்மரந்திரத்திலும், புருவமத்தியிலும், ஹ்ருதயத்திலும், கோபீசந்தனத்தைப்பூசி அங்கே சிதாத்ய ப்ரகாசமான என்னைத் தியானிப்பவன் பரம் பொருளை அடைவான். 'யதியினிடம், ஊர்த்வதாண்டவம், ஊர்த்வரேதஸ், ஊர்த்வபுண்டரம், ஊர்த்வயோகம் ஆகிய நான்கு ஊர்த்வங்களிருப்பதால் அவன் ஊர்த்வ பதவியை அடைகிறான்' என்ற இந்த நிச்சய ஞானம் என்னிடம் உள்ளபக்தியால் தானே ஸித்திக்கும்.

"கோபீசந்தனத்தை இட்டுக்கொள்ளுவதால், எப்பொழுதும் ஏகாக்ரமான பக்திநிலை வரும். வைதிகர்களான ப்ராஹ்மணர்கள் எல்லோரும் கோபீசந்தண ஜலத்தால் ஊர்த்வபுண்டரம் இட்டுக்கொள்ளவேண்டும் என்பது விதி. கோபீசந்தணம் அகப்படாவிடில், முமூக்ஷு அபரோக்ஷ ஆத்மாவை அடைவதற்காகத் துளஸி அடியிலுள்ள மண்ணை இட்டுக்கொள்ளலாம். அதிராத்ரம், அக்னிஹோத்ரம் இவைகளின் பஸ்மத்தை இதற்குப் பதிலாகப் பூசிக்கொள்ளலாம்.

"இதைப் படிப்பவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவன். பாபபுத்தியே உண்டாகாது. ஸகல தீர்த்த ஸ்நாநபலன், ஸகல யாகங்கள் செய்தபலன், எல்லாம் கிடைக்கும். தேவதைகளால் பூஜிக்கப்படுவான். நாராயண பக்தி உண்டாகிவிடும். அவன் நல்ல ஞானம் பெற்று, விஷ்ணு ஸாயுஜ்யம் அடைவன். மறுபடியும் திரும்புவதில்லை! மறுபடியும் திரும்புவதில்லை!!"

**இ**வ்வாறு பகவான் வாஸுதேவர் செய்த உபதேசத்தைப் படிப்பவன் ஸத்ரூபமாகவே யாகிவிடுவான். இது உபநிஷத்.

### 24. ஜாபால்யுபநிஷத் (104)

**இ**வ்வுபநிஷத்தால் அறியக்கூடியதும், பரவஸ்து ஸ்வரூபமாயும், பரமேச்வர வைபவத்தை உடைய ராமசந்திரர் என்னும் வஸ்துவை த்யானம் பண்ணுகிறேன். ஹரீ: ஓம். பகவத் ஸ்வரூபமான **ஜாபாலி** மஹரிஷியைப் **பைப்பிலாதி** என்பவர் அடுத்து 'ஓ பகவானே! எனக்குப் பரம ரஹஸ்ய தத்வத்தைக் கூற வேண்டும்.' என்று கேட்டார். மேலும் பைப்பிலாதி கூறுவார்.

**பைப்பிலாதி.**—பசு யார்? ஈசன் யார்? மோக்ஷோபாயம் எது?

**ஜாபாலி.**—நன்றாய்க் கேட்டாய். எனக்குத் தெரிந்தபடி எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன்.

**பை.**—நீர் எங்கிருந்து தெரிந்துகொண்டீர்?

**ஜா.**—ஸுப்ரஹ்மண்யரிடமிருந்து.

**பை.**—அவருக்கு குரு யார்?

**ஜா.**—ஈசன்.

**பை.**—அவர் யாரை அணுகிக் கேட்டார்?

**ஜா.**—அவர் தாமே உபாஸித்துத் தெரிந்து கொண்டார்.





**பை.**—கருணையுடன் எல்லாவற்றையும் எனக்கு உபதேசிக்க வேண்டும்.

**ஜா.**—பசுபதியே அஹங்காரத்துடன் கூடிய ஸம்ஸாரியான ஜீவனாகவும், பசுவாகவும் ஆகிறார். பஞ்ச கிருத்யத்தோடு உள்ள ஸர்வேசுவரனே பசுபதி.

**பை.**—பசுக்கள் யார்?

**ஜா.**—ஜீவர்கள் பசுக்கள். இவர்கள் பதி பசுபதி.

**பை.**—ஜீவர்கள் பசுக்களாவது எவ்வாறு? இவர்களுக்குப் பதி என்றால் என்ன?

**ஜா.**—புல்லைத்தின்று விவேகமற்றுப் பிறரால் உழவு முதலிய வேலைகளில் தூண்டப்பட்டு அநேக துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு, தன் யஜமானனுக்குக் கட்டுப்பட்டு நிற்பவைகளான பசுக்களைப்போல ஜீவர்களும் இருப்பதால் பசுக்கள் என்னப்பட்டார். ஸர்வஞ்ஞனான ஈசன் இவர்களுக்கு யஜமானன் போலிருப்பதால் பசுபதி யாகிறார்.

**பை.**—இந்த ஞானம் எவ்வாறு உண்டாகும்?

**ஜா.**—விபூதியை தரித்துக்கொள்வதினாலேயே.

**பை.**—அதைத் தரித்துக்கொள்ளும்விதம் எப்படி? எங்கெங்கே இட்டுக்கொள்ளவேண்டும்.

**ஜா.**—ஸத்யோஜாதாதியான ஐந்து ப்ரஹ்ம மந்திரங்களால் விபூதியை எடுத்து அபிமந்த்ரணம்செய்து ஜலத்தால் குழைத்து, தலை, நெற்றி, மார்பு, தோள், ஆகிய இவ்விடங்களில் மூன்று ரேகையாக இட்டுக்கொள்ள வேண்டும். இதுதான் வேதவாதிகளால் கூறப்படும் வைதிகமான **சாம்பவ விரதம்**. இதை ஸரிவர நடத்தும் முமுக்ஷு ஸம்ஸாரத்தை அடைவதேயில்லை. பிறகு ஸநத்குமாரர் ப்ரமாணம் கேட்கிறார். திரிபுண்டரத்தை மூன்று கோடாக நெற்றியிலும் புருவங்களிலும், கண்களிலும் மற்ற எங்குமே இட்டுக்கொள்ள வேண்டும்.

இவைகளுள் முதல்கோடு, கார்ஹபத்யம், அகாரம், ரஜஸ், பூலோகம் ஸ்வாத்மா, க்ரியாசக்தி, ருக்வேதம், ப்ராதஸ் ஸவனம் இவைகளை உணர்த்தும். இதற்குத் தேவதை ப்ரஹ்மா.

இரண்டாம் கோடு, தக்ஷிணாக்னி, உகாரம், ஸத்வ குணம், அந்தரிக்ஷம், அந்தர் ஆத்மா, இச்சா சக்தி, யஜுர்வேதம், மாத்யந்தின ஸவனம், இவைகளைக் குறிக்கும் தேவதை மஹாவிஷ்ணு.

மூன்றாம்கோடு, ஆஹவனீயம், மகாரம், தமோ குணம், தேவலோகம், பரமாத்மா, ஞானசக்தி, ஸாம வேதம், த்ருதீயஸவனம், இவைகளைக் காட்டும். தேவதை மஹாதேவர்.

இவ்வாறு இவைகளை உணர்ந்து நான்கு ஆச்ரமத்தோரும் விபூதியை அணிந்துகொண்டால் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள். எல்லாத் தேவதைகளையும் த்யானம் செய்தவர்களாவார்கள். தீர்த்த ஸ்நானம், மந்த்ர ஜபம், இவைகளின் பலன் வந்துவிடும். அவன் திரும்புவதே யில்லை! அவன் திரும்புவதே இல்லை!! இது உபநிஷத்.

# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULYSSES

(தொடர்ச்சி)

உடன் செல்ல ஒருவருந் துணியாமையால் உல்லாஸன் தனியே எய்யாத்தீவினுட் பிரவேசித்து ஸுரவியின் ரத்னமாளிகை வாயிலிற்போய் நின்றான். யடியிற் காலை யெடுத்து வைக்கப்போகையில், ஸௌமியன் என்னுந் தேவன் கையிற் பொற்றண்டேந்தி உல்லாஸனை நோக்கி, "உல்லாஸா, என்ன பெரும்பிழை செய்யத் துணிந்தாய்? இந்த வீடு, ஸுரவி என்னும் ஜாலவித்தைக்காரியினுடைய தென்றறியாயோ? உன்னுடைய தோழர்களையெல்லாம் பன்றிகளாக மாற்றியிருக்கிறாள். நீயும் அவ்வுருவத்தைப்பெற ஆசைப்படுகின்றாய்போலும்" என்று சொல்லித் தடுத்தும் உல்லாஸன் கேட்காமல் உட்புகப் பிரயத்தனஞ் செய்ததைக் கண்ட தேவன் உல்லாஸன் தோழரிடத்தில் வைத்த அன்பினால் தனக்கு வருந்தீங்கையும் லக்ஷியஞ் செய்தானில்லை யென்றறிந்து அவனிடத்தில் கிருபை கூர்ந்து "உன் பராக்கிரமத்தைத் தக்க இடத்தில் காட்டினாயில்லை. நீ போகின்ற இடத்திலுள்ளவள் மாயவித்தை கற்றவள். அவளுடைய வஞ்சனையினாலுனக்குச் கேடு வாராமலிருத்தற்கு நான் கொடுக்கும் இந்த மலரைக் கையில் வைத்துக்கொள். கொல்லைப் பச்சிலை மருந்திற்குதவாதென்றபடி, இந்தப் புஷ்பத்தினுடைய அருமை பெருமைகளை யறியாத அசடர்கள் இதைக் காலால் துவைத்து உதாஸீனஞ் செய்வார்கள். மாய மந்திரமெதையும் மாற்றவல்லது இந்த அரும்பூ. ஸுரவி, உன்னைப் பன்றியாக்க மாத்திரைக்கோலை யோங்கும்போது, உருவின கத்தியுடன் அவள்மேல் நீ பாய்தல் வேண்டும். இந்தப்பூ உன் கையிலிருப்பதால் அவள் மந்திரம் பலிக்காது. அவள் நடுக்கமுற்றிருக்குஞ் சமயத்தில் உன்னிடத்தில் ஜாலவித்தை செய்வதில்லையென்றும் உன் தோழர்களுடைய பழைய உருவத்தைத் தரல்வேண்டுமென்றும் அவளை அகோரப்பிரமாணஞ் செய்யச்சொல். அவளும் இணங்குவாள்; உனக்குந் தீங்கொன்றும் நேராது" என்று சொல்லி அந்தர்த்தானமானான்.

தேவனளித்த மாலிமலரைக் கைக்கொண்ட உல்லாஸன், ஸுரவியின் மாளிகைக் கதவை யிடித்தான். முன்போலவே, ஸுரவி நேரில் வந்து கதவைத் திறந்து உல்லாஸனை உள்ளே வரலாமென்றுபசரித்தாள். உயர்ந்த ஆஸனத்திலிருத்தி, அருமையான உண்டிகளையும் பானங்களையும் அவன் முன் வைத்த பிறகு அவனும் அவற்றைப் புசித்தான். ஸுரவி, தன் மாத்திரைக்கோலால் உல்லாஸனைத் தொட்டு, "வெளியிற்போ, பன்றி, உன் தோழர்களிருக்குங் கட்டுத்தறிக்கேகு" என்றனள். ஸௌமியன் என்னுந் தேவனளித்த மாற்றுமருந்தை ஸுரவியின் மாய மந்திரம் வெல்லவல்லதா? உருமாறாத உல்லாஸன் உருவின வாளோடு ஸுரவியின் உயிரை வாங்குபவன் போலக் கையை ஓங்க, ஸுரவி உல்லாஸன் ஸாமான்ய மனுஷன், என்றுணர்ந்து தலைகுனிந்து உல்லாஸனைத்தழுவி, "பிரபுவே, தாம் மனுஷரோ, தேவரோ அறியேன். நான் கொடுத்த மருந்தை யருந்தி விலங்குறாதவன் இதுகாறுமில்லை. உலகப் பிரஸித்தம் பெற்ற உல்லாஸனாய்த்தான் தாமிருத்தல் வேண்டும். தம்மிடத்திற் காதல்கொள்ளத் தான் கடவுள் எனக்கு ஆணையிட்டார் போலும். எவரையும் வணங்காத நான் உம்மைப் பணிகின்றேன். பணிகின்ற தேவியை மணம் புரிவீராக" என்று வருந்தினள்.

உல்லாஸன், "ஆ, ஸுரவி, என்னுடன் வந்தவர்களை விலங்குகளாக்கி என்னை மணம் புரிந்துகொள் என்று கேட்பதெப்படி? என்னையும் உன் வசப்படுத்திக்கொண்டு சிறிது காலத்தில் பன்றிகட்டுந் தறிக்கு என்னை உயர்த்துவதற்காகவோ? விவேகிகள் உன்னை விசுவஸிக்கும்படி நீ செய்யக் கூடியவற்றை யோசித்துப் பார்ப்போம்.—நீ அளிக்கும் அன்னபானாதிகள் விஷங்கலந்தவை. உன்னை மூடனும் நம்பமாட்டான். என் தோழர்களுக்கு நீ இழைத்த தீங்குகளை எனக்குச் செய்தலில்லையென்று அகோரப்பிரமாணம் முதலில் நீ செய்தல் வேண்டும். பிறகுதான் உன் வேண்டுகோளுக்குச் செவிகொடுத்தலாகும்" என்று வற்புறுத்திச் சொன்னான்.

ஸுரவி, உல்லாஸனுடைய பயங்கரமான சொற்களாலே, "அவனிடத்திற் கொண்ட பெருங்காதலினாலோ, மற்றொன்றும் பேசாதவளாய் உல்லாஸனுக்கு யாதொரு தீங்கையும் செய்தலில்லையென்று தேவர்மேலாணையிட்டுச் சொன்னாள். உல்லாஸனும் ஒருவாறு மனமுவந்தவனாய்க் காட்ட, ஸுரவி மனந் திடப்பட்டுத் தன்னிடத்தில் ஸமமான காதல்கொண்டவனென்றெண்ணமிட்டுத், தன்னூழியக்காரிகள் நால்வரை யழைத்து, விரிப்புகள் பரத்தவும், பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்த பாத்திரங்களைக் கொணர்ந்து உல்லாஸனுக்கு விருந்து செய்யவுங்கட்டளை யிட்டாள். நால்வரில் ஒருத்தி, பாதப்பிரக்ஷாளனத்திற்குத் தீர்த்தத்தைக் கொணர்ந்தாள்; இன்னொருத்தி உல்லாஸன்



மனக்கவலைகளைத் தீர்க்கவல்ல மதுக்களைப் பொற்பாத்திரங்களில் கொணர்ந்து எதிரில் வைத்தனள். நறுமணங்கமழும் தைலங்களினால் உல்லாஸனுக் கபிஷேகஞ் செய்வித்து, விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களினால் அவனை அலங்கரித்தார். உல்லாஸனை ஓரழகிய சிங்காதனத்திலிருத்தி, தேவாமிருதமொத்த உண்டிகளை அவன் முன்வைத்தனர். உல்லாஸன் உணவைக்கண்டு களித்தானில்லை. மறைந்த தன்றோழர்களை மறுபடியும் ஸ்வய ரூபத்தில் பார்த்தலே அவனுக்கு விருந்தாகத் தோற்றினமையால், வருந்தின மனத்தனாய் உண்டி யொன்றையும் தீண்டாமற் சும்மா விருந்தனன். காதலன் கருத்தைக் கடிதினிலுணர்ந்த ஸுரவி பன்றித்தறிசென்று உல்லாஸன் தோழர்களையுள்ளே யழைத்துவர, அப்பன்றிகளுறுமி மாளிகையை அலங்கோலப்படுத்தின. ஸுரவி ஓர் தைலத்தைப் பன்றிகளின் தலைகளிற்றடவ, உடனே பழைய மனுஷரூபம் வந்து, தலைவனாகிய உல்லாஸனை அறிந்து அவனைக்கட்டித் தழுவிக் களித்தனர். சிறிதுகாலம் வராகங்களாக விருந்ததை எண்ணி அவர்களுக்கு வெட்கமுமுண்டாயிற்று. அவர்கள் ஆனந்த பாஷ்பஞ் சொரிந்துகொண்டு நிற்றலைக்கண்ட மாயக்காரியான ஸுரவியின் மனமுஞ் சற்றுருகிற்று.

உல்லாஸனுக்கு ஸுரவி செய்த அபராதம் முழுமையும் நிவர்த்தியாதற்பொருட்டுக் கப்பலிலேயே தங்கியிருந்த அவனாட்களையுந் தருவித்துக் களிப்பித்தனன். உல்லாஸனைக் கண்ட சந்தோஷத்தினால், அவனாட்கள் பாடியாடினதைக் கண்ணுற்றவர் எய்யாத்தீவை அவர்கள் இதாகாவென்றே எண்ணினாரென்பர். யூரிலாகன் ஒருவன்மட்டும் அவ்வரண்மனைக்குட்செல்ல அஞ்சினவனாயிருந்தான்; தோழர்கள் மாயமாய்ப்போனதை யறிந்தவனாதலின் அவன்மட்டிற் றுணியவில்லை.

உல்லாஸனையும் அவனாட்களையும் ஸுரவி நோக்கி "நண்பர்காள், துக்கத்தையெல்லாந் துறந்துவிடுங்கள். முன்பட்ட துன்பங்கள் மறக்கற்பாலன" என்று உறுதி சொன்னாள். ஆயினும் அவர்கள் பரதேசிகளாய்த்தான் தம்மை எண்ணியிருந்தார்கள். கொஞ்சம் மனவெழுச்சியுண்டானகாலத்தில் தங்கள் அனாதரவான நிலைமையை நினைத்து அவர் மனமொடுங்கினார்கள். ஸுரவி அவர்களுக்கு இன்சொற் சொல்லியும் நவநவமான இன்பங்களைக் கற்பித்தும் மாயவித்தையால் சந்திரனை மண்டலத்தை விட்டுப் பெயர்த்துவரவும், மரங்களைக் கழைக்கூத்தாடவும் செய்தமையால் ஒருவருஷகாலம்சென்றதையு முணராமல் அவர்கள் எய்யாத் தீவிலிருந்தார்கள்.

ஸுரவி மயக்கத்திலகப்பட்டவனாய் ஒருவருஷம் கழித்த உல்லாஸனுக்கு ஒருநாள் தன் அருங்காதலி பனிலொபி, குமாரன் தலைமகன் இருவருடைய ஞாபகமுண்டாக மனக்கவலை மேலிட்டது. வழக்கத்தைவிட அதிகமாய் ஸுரவி ஸல்லாபஞ் செய்தபோது உல்லாஸன் இதாகாவுக்குச் செல்ல விருப்பமுடையவன்போலக் கோடி காண்பித்தான். ஸுரவி பதைபதைத்து, "தேவர்கள் உனக்கு இன்னுங் கஷ்டங்கள் நுகர்வதற்கு வைத்திருக்கையில், அவற்றினின்றும் உன்னைக் காக்க யான் வல்லேனில்லை. என்னைப்பிரிந்து நீ போகுமுன்னர் பிதிருலோகஞ் சென்று வருங்காலவுணர்ச்சியுள்ள திருசிரஸைக் கண்டு பேசி, உன் விஷயங்களைச் செவ்வையாயறிந்து பின்னர் இதாகாப் பிரயாணத்தைப்பற்றி எண்ணல் வேண்டும். திருசிரஸ் ஒருவன் மட்டில் நீ சுதேசஞ் சென்று மனைவி மக்களைப் பார்க்கும் பிராப்தி யுடையோனா இல்லையா என்பதைச் சொல்ல வல்லவன்," என்றாள். உல்லாஸன், "ஆ, ஸுரவி, பிதிருலோகத்திற்குச் செல்லுங் கப்பலுமுண்டோ, ஸாத்தியமாகத் தோற்றவில்லையே," என, ஸுரவி, "துணைவனொருவனையும் விரும்பாதே; கவலையின்றிக் கப்பலிலேறி உட்கார்; வாடைகாற்று யாதொரு விக்கினமின்றி உன்னைப் பிதிரு லோகத்திற் சேர்க்கும். கரையிலிறங்கினவுடன் ஒரு சிறு குழி வெட்டி அதிற் பாலையுந் தேனையும் மதுவையும் ஆட்டி ரத்தத்தையும் ஊற்றி உன் முகத்தை மறுபக்கத்தில் வைத்துக்கொண்டிரு. அப்பொழுது பிதிருலோக வாஸிகளெல்லாம், பால் முதலியவற்றைப் பருகக் கூடுவர்: திருசிரஸினிடத்திருந்து நடக்கப் போகிறவற்றைத் தெரிந்துகொள்ளு முன் ஒருவரும் நீ அளித்த பலியைத் தொடாமற் பார்த்துக்கொள்வாயாக' என்றாள்.

ஸுரவியின் வாக்கின்படி உல்லாஸன் கப்பலிலேறி வாடைக்காற்றி னுதவியால் பிதிருலோகஞ் சேர்ந்து, அங்கு ஒரு குழிவெட்டி பிதிருக்களுக்குப் பலியளித்தான். ஸூக்ஷ்மசரீரிகளானவர்கள் பலியையுண்ணக் கூடினார்கள். உல்லாஸன் மாதாவும் வந்தாள். திருசிரஸுக்கு முன் ஒருவரும் பலியைத் தொடலாகாதென்று ஸுரவி சொல்லியிருந்தமையால், உல்லாஸன் தன் தாயையும் பலியை யுண்ணாமற் றடுத்தான். திருசிரஸ் வந்தவுடன் பலியைப் புசித்து உல்லாஸனை நோக்கி, "உல்லாஸா, நீ அனுபவிக்கவேண்டிய கஷ்டங்கள் நிரம்பவுள. வருணபகவானுடைய புத்திரனாகிய பல

பீமன் கண்ணைப் பிடுங்கினதற்காக அவர் உன்னிடத்தில் மிகுந்த கோபங்கொண்டிருக்கின்றார். க்ஷேமமும் உனக்குண்டு. ஸூர்யபகவானுடைய ரிஷபங்களுக்குத் தீங்குசெய்யாமற் காத்தல் வேண்டும். அரசுரிமையிழந்து நீ பிக்ஷுகனாவாய். அதினின்றுந் தப்ப, உன் சத்ருக்கள் உன்னை உல்லாஸனென்று அறியாமலிருக்கையில் அவர்களை நீ கொலைசெய்தல் வேண்டும்," என்று சொல்லி மறைந்தான்.

உல்லாஸன் மாதா வந்து பலியை யுண்டு பரதேசம் போய் வெகுகாலம் திரும்பி வராமலிருந்த பிள்ளையைப் பற்றி மனம் வாடி உயிரைத் துறந்ததாகச் சொன்னாள். ஸூக்ஷ்ம சரீரத்தில் தன் அன்னையைக் கண்ட உல்லாஸன் மனம் நொந்தது. அவள் மறைந்தபின் த்ரோஜா யுத்தத்தில் உல்லாஸனோடு சேர்ந்து யுத்தம் செய்த போர்வீரர்கள் ஒவ்வொருவரும் வந்து பலபல விஷயங்களைப்பற்றி விசாரணைசெய்ய அவர்களுக்கெல்லாம் உல்லாஸன் தக்க விடைகள் பகர்ந்தான். பூமியில் ஜீவந்தர்களா யிருந்தகாலத்தில் கொடும் பாவங்களைச் செய்தவர்கள் மறுமையில் படுங்கஷ்டங்களை உல்லாஸன் கண்ணுற்றான். தண்டாளனென்றொருவன் தேவர்களுக்குச் செய்த விருந்தில் நரமாமிசத்தைக் கலந்தான். மறுமையில் அவன் கழுத்தளவு நீரில் நிறுத்தப்பட்டான். தாகமா யிருக்கையில் நீரைப் பருகத் தண்டாளன் போனவுடனே அது விலகிப்போகும். அவ்வாறே உணவுப்பொருள்களும் விலகிப்போயின. ஸதா காலமும் பசியினாலும் தாகத்தினாலும் வருந்திக் கைக்கெட்டினவை வாய்க்கெட்டாமல் தண்டாளன் தவித்துக் கொண்டிருந்ததை உல்லாஸன் பார்த்து மனம் வெதும்பினான். சிசிபன் என்றொருவன் ராஜரகஸ்யங்களை வெளியிட்டதற்காக மலைஉச்சியில் ஒரு கல்லை ஏற்றுவதும் இறக்குவதுமான கஷ்டத்தை யனுபவித்தான். பெண்பாலர்களைப்பற்றி அவதூறுபேசின தீத்தியன் என்னு மொருவன் மறுமையிற் பட்ட துன்பம் வாயினாற் சொல்ல வழங்காது. இரண்டு கழுகுகள் அவனுடலைக் குத்தித் தின்றுகொண்டே யிருந்தன. மாமிசமானவுடனே திரும்பவும் அதே உடலில் வேறுமாமிசம் உண்டாகிக் கழுகுகளுக்கு இரைதந்து வந்தது. இம்மையில் புண்ணியம் செய்தவர்கள் ஸுகமனுபவித்தலையும் பாவஞ்செய்தவர்கள் துன்பமுறுதலையும் பிரத்யக்ஷமாய் உல்லாஸன் பார்த்தானபின் அவன் கப்பல்தானே வடதிசை நோக்கிச் சென்று ஸுரவி வாஸஸ்தானமாகிய எய்யாத்தீவை யடைந்தது.

## மூன்றும் அத்தியாயம்

ஓயாத துன்ப முரைக்கவுடம்பெல்லாம்
வாயாகினும் போதமாட் டாதே.

**எ**ய்யாத் தீவுக்கு உல்லாஸன் திரும்பி வந்தவுடன் ஸுரவி மிகுந்த கோபத்துடன் அடியில் வருமாறு சொன்னாள்:—

"அடா, நிர்ப்பாக்யா, எல்லா மனிதருக்கும் ஒருமுறைதான் சாவுண்டு, நீ ஸ்தூல சரீரத்துடனிருக்கையிலேயே யமலோகம் போய் வந்து விட்டனை. ஸில்லா, கரிப்டிஸ், என்ற இரண்டு பூதங்களும் உன்னைத் தின்ன விருக்கின்றன. பாடிப் பலிகொள்ளும் ஸிரென்மார் உன்னைத் தமக்கிரையாக்கவெண்ணியிருக்கின்றார்கள். ஸிரென்மாரின் குரலைக் கேட்டவன் எவனும் வீடு வாசல் பெண்சாதி பிள்ளைகளிடத்திற் பிரியம் வைக்கான்; பெண்சாதி பிள்ளைகளும் அவனிடத்தில் அன்பு பாராட்டார்."

உல்லாஸன் "பிரியே, ஆபத்துக்களை மாத்திரஞ் சொன்னாய். ஸிரென்மாரிடத்தில் நானகப்படாமல் தப்பும் வழியை எனக்குச் சொல்வாயாக"என்று வினயத்துடன் கேட்க,

ஸுரவி மனமுவந்து "ஸிரென்மாரென்பவர் மூன்று சகோதரிகள். இறந்தோரெலும்புக் குவியல் மத்தியில் அம்மூவரும் உட்கார்ந்திருப்பவர். தமது ஸங்கீதத்தால் மனிதரைத் தம்மிடம் கவர்ந்து பின்னர் அவரைத் தின்று எலும்புகளைக் குவியல் குவியலாக வைத்திருப்பவர். தேனொழுகும் அவருடைய மதுர வாக்கைக் கேட்டு அவர் வலையிற் சிக்காமற் றப்பித்துக் கொள்ளுத லெவர்க்கு மரிதாம். அவரிருக்குமிடஞ் செல்லுங்கால் நீ உன்னாட்களின் காதுகளை மெழுகு வைத்தடைத்தல் வேண்டும்; அப்படிச் செய்தால் மாத்திரம் ஸிரென்மாருடைய கானம் காதிற்படாது. நீ அவ்வாறு உன் செவியை யடைத்தல் வேண்டாம். உன்னாட்களைக்கொண்டு உன்னைப் பாய்மரத்திலிறுக்கிக் கட்டுவித்துக்கொள். எந்தக் காரணம் பற்றியும் ஸிரென்மாரிருப்பிடந் தாண்டும் வரையில் உன்னை அவிழ்த்துவிடக் கூடாதென்று ஆஞ்ஞை செய். இதுதான் அக்கொடும்பாவிகளினின்று உய்யும் வகையாம்" என்றனள்.

ஸில்லா, கரிப்டிஸ், என்ற இரண்டு பூதங்களையும் பற்றி உல்லாஸன் கேட்டதற்கு ஸுரவி, "அப்பூதங்களிரண்டும் இரண்டு கற்பாறைகள். அவற்றினடுவேதான் உன் கப்பல் செல்லவேண்டும். மத்தியிலிருந்து மயிர்க்கிடை கப்பல் விலகிச் செல்லுமாயின் கப்பலும் அதிலுள்ளவரும் தக்ஷணமே நாசமாவார்கள். ஸில்லா என்னும் பூதம் சற்றுப் பெருத்த கற்பாறை. அதன் கீழ் ஒரு நீர்ச்சுழியுண்டு. அதிலமிழாத மரக்கலங்களில்லை யெனலாம். ஸில்லா பெருவயிறு படைத்தவள். ஒரு உச்வாஸத்தில் கடலிலுள்ள ஜந்துக்களையெல்லாம் எடுத்து விழுங்கும் பெரும் பசியுடையவள். கரிப்டிஸ் இளையளாயினும் பசியில் முதியள். ஸில்லா ஒரு மூச்சில் ஆறுமனிதர்களை மாத்திரம் விழுங்கும் வல்லமையுள்ளவள். கரிப்டிஸின் பசி என்றும் ஆறாததாம்" என்று விவரமாகச் சொன்னாள்.

"கரிப்டிஸினின்று தப்பி, ஸில்லாவை வாளினாற் கொன்றாலென்ன?" என்று உல்லாஸன் வினவ, ஸுரவி "நீ பேதை ஸில்லாவுக்கு மரணங்கிடையாது; வாளாலவளுக்குக் காயமும் வராது. உன் ஸாமர்த்தியம் அவளிடத்திற் பலிக்காது. வீண் வீறாப்புப் பேசி வாணாளை யிழக்காதே" என்று எச்சரித்தாள்.

உல்லாஸன் தன் ஆட்களுக்குச் சொல்ல வேண்டியவற்றைத் தெரிவித்தானபின் பிரயாணத்திற்கு ஆயத்தஞ்செய்தான். ஸுரவி தன்மந்திரவித்தையினால் கடலை அமைதிப் படுத்திப் பிரயாணத்துக்கு வேண்டிய பொருள்களைப் பூரணமாய்க் கொடுத்து உல்லாஸனை ஊர்க்கனுப்பினாள்.

(கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த புத்தியும் வெகுதூரம் வாராவன்றோ) இசைபாடிப் பலிகொள்ளும் ஸிரென்மாரிருப்பிடத் தருகில் உல்லாஸன் கப்பல் சென்றக்கால் அம்மாயக்காரிகள் உல்லாஸனைப் பலவாறு புகழ்ந்து தம்மிடம் வரும்படி வேண்டினார்கள். ஸுரவியின் கட்டளையை நினைந்து உல்லாஸன் அவர்களுக் கிரையாகாமற் றப்பிப் போனான். பாய்மரத்திற் கட்டுண்டிருந்த உல்லாஸன் கட்டையவிழ்த்துக்கொண்டு ஸிரென்மாரிடத்திற் செல்ல முயன்றபோது அவனாட்கள் அவனை இறுக்கிக் கட்டினமையால் ஒரு ஆபத்தினின்றுந் தப்பினான். பெண்ணுருவங்கொண்ட பிசாசுகளான ஸிரென்மாரின் மாயகீதத்தைச் செவியுற்ற எவர்தாம் அவர் வலையிற் சிக்கமாட்டார்? தைவவசத்தால் உல்லாஸனுயிர் பிழைத்தானெனல் வேண்டும்.

ஸில்லா, கரிப்டிஸ் என்னும் பூதங்களிருந்த இடத்திற் போகுங்கால் உல்லாஸன் ஸுரவி சொன்னதை உல்லங்கனஞ் செய்து ஸில்லாவை வாளால் வெட்ட முயன்றான். ஆட்களிலாறுபேர்களை ஸில்லா பிடித்து விழுங்கவே, உல்லாஸனுக்குப் புத்தி வந்தது. உயிர்த்துணைவராயிருந்த ஆறுபேர் ஸில்லாவுக் கிரையானதைப் பார்த்த உல்லாஸன் மனம் மிகவும் நொந்தது.

மேற்கூறிய இரண்டு பூதங்களினின்றுந் தப்பி வெளிவந்தபோது ஸூரியன் அஸ்தமித்து விட்டது. ஆகாயம் மேகங்களால் மறைக்கப்பட்டு நள்ளிரவாயிருந்தமையால் திக்குதிசை தெரியாமல் மாலுமி மயங்குங்காலத்தில் கன்னங்கரேலென்று தூரத்திற் பூமிபோல ஏதோ தோற்றிற்று. கப்பலை அந்தத் திக்கில் நடத்திக்கொண்டு மாலுமி போனான். அருகிற் சென்றவுடன் ஸூரிய விருஷபங்களிருந்த திரிநாகரம் என்னுந் தீவென்று உல்லாஸனறிந்து அங்கிறங்கினால் ஆபத்து வருமென்றஞ்சி வேறிடத்திற்குப் பிரயாணம் போதல் வேண்டுமென்று தன்னாட்களுக்குச் சொல்ல, அவர்கள், "தம்முடைய ஆணையை இதுகாறும் கடந்தோமில்லை; பகல் முழுதும் தண்டுவலித்துக் கைகள் ஒய்ந்து போயின; ஊக்கமுமிழந்தவரானோம். எந்த விபத்து வந்தாலும் வரட்டும்; இந்தத்தீவில் கொஞ்சம் இளைப்பாறிவிட்டுத்தான் புறப்படுவோம். தங்கள் சரீரம் இரும்பினாலமைக்கப்பட்டதோ? இளைப்பென்பதே தோன்றவில்லை. விழித்திருத்தலும் தூக்கமும் தங்களுடலுக்கு ஒன்றாய்த்தானிருக்கிறது. பசிதாகம் தங்களுக்கில்லை. நாங்கள் ஸாமான்ய மனிதர்கள். எங்களுக்கு உணவும் உறக்கமும் அவசியம். மேலும் இரவிலே கப்பலுக்கும் பிராணனுக்குஞ் சேதம் வரும்படியான காற்றுக்கள் ஜனிக்கும். இருண்ட இரவில் சௌகரியமான துறையில் உண்டுறங்கி யிருத்தல் வேண்டும். தோலோதோல் இந்தத் துறையை விட்டுப் போகமாட்டோம். விடிந்த பிறகு எங்களைக் கடலுக்குக் காவு கொடுப்பதில் ஆக்ஷேபமில்லை," என்று மன்றாடினார்கள். உல்லாஸனுக்கு இஷ்டமில்லாவிடினும் ஆட்களின் வேண்டுகோளுக்கிணங்கி நடக்க வேண்டியவனானான். துறையில் ஆட்களிறங்குவதற்கு முன் உல்லாஸன் அவர்களை நோக்கி "இருபது வருஷங்களாய் என் வாக்கை மீறி நடக்காதநீர் இன்று பிடிவாதஞ் செய்வதும் கேட்டுக்குக் குறியாயிருக்கிறதென்றெண்ணுகின்றேன். இந்தத்தீவில் ஸூர்யனுடைய விருஷபங்கள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஸுரவி நமக்குக் கொடுத்திருக்கிற ஆகாராதிகளையுண்டு நீர் திருப்தியடைய வேண்டுமேயன்றி மேற்கூறிய விருஷபங்களின் மாம்சத்தி லாசைவைத்து அந்தப் பிராணிகளுக்கு ஹிம்ஸை செய்வதில்லையென்று ஒவ்வொருவரும் பிரமாணஞ் செய்யவேண்

டும். அன்றேல், இத்துறையில் உங்களை இறங்க விடேன்," என்றான்.

ஆட்கள் ஒவ்வொருவரும் தலைவன் சொன்னவாறு பிரமாணஞ்செய்து துறையிலிறங்கிக் கப்பலிலுள்ள உணவுகளை உண்டு நித்திரை போனார்கள். பொழுது விடிந்த பிற்பாடும் உல்லாஸன் தன்னாட்கள் விருஷபங்களைத் தொடுத்தல் கூடாதென்று வற்புறுத்திச் சொன்னான். "ஸூர்யன் ஸர்வவியாபி; அவர்கண்ணிற்படாத இரகசியங்கிடையாது; உங்கள் மனத்திலுள்ள அந்தரங்கங்களையுமறிவார்; பாவத்தைச் செய்தால் அபராதஞ் செய்தவராவீர். பார்த்துப் பிழையுங்கள்" என்று இன்னுமோர் முறை ஆட்களுக்கு உல்லாஸன் ஹிதோபதேசஞ் செய்தான்.

திரிநாகரத்தீவில் உல்லாஸன் தன் ஆட்களோடு ஒரு மாதகாலந் தங்கியிருக்கும்படி நேரிட்டது. பிரதிகூலமான காற்று வீசினமையால் பிரயாணஞ்செய்தல் கூடவில்லை. ஸுரவி கொடுத்திருந்த ஆகாரங்களும் பானங்களும் செலவழிந்தன. பறவைகளையும் மீன்களையும் வலையிற் பிடித்து உல்லாஸனும் அவனாட்களும் பசியாறி வந்தார்கள். "மானங் குலங் கல்வி வன்மையறிவுடைமை தானம் தவமுயற்சி தாளாண்மை" என்னும் உத்தம குணங்கள் பசிவந்திடப் பறக்குமன்றோ? சரீரத்திற்கு ஹிதத்தைச் செய்கிற நித்திரை காலந்தப்பி வருமாயின் அதனாற் கேடுளது. தன்னாட்கள் பசியின் கொடுமையால் ஸூர்யனுக்கு ஏதாவது அபராதத்தைச் செய்து விடுவார்களென்று பயந்து உல்லாஸன் தூக்கத்தை விட்டிருந்தான். அப்படியிருந்தவனுக்கு ஒருநாள் நடுப்பகலில் மிகுந்த களைப்புண்டாகி மெய்ம்மறந்த தூக்கம்வந்தது. தலைவன் அயர்ந்து நித்திரை செய்வதையறிந்த உல்லாஸன் ஆட்கள் வாயு பகவானுடைய தோற்பையைத் திறந்து பார்த்துக் கேடிழைத்தாற்போலச் சதியோசனை செய்ய ஆரம்பித்தார்கள். வயது அனுபோகம் இரண்டிலு முதிர்ந்தவனான யூரிலாகன் என்பவன் சதியோசனைக் குட்பட்டதுதான் விசனிக்கத்தக்கது. யூரிலாகன் மற்றவரை நோக்கி, "நண்பர்காள், பிறந்தால் இறத்தலுண்டு. மிகவும் இழிவான மரணம் வயிற்றிற்குணவகப்படாமையா லுண்டாவது. பக்ஷி மத்ஸ்யாதிகள் இனி இந்தத் தீவிற் கிட்டமாட்டா. அனுகூலமான காற்றுவீசி நம்மூர் போய்ச் சேர்வோ மென்பதற்கிடமில்லை. இங்கிருந்து பட்டினியால் பிராணனை விடவேண்டியவரா யிருக்கின்றோம். மூடத்தனத்தினால் நம்முடைய வயிறுகாய்கின்றது. உல்லாஸன் இத்தீவிலுள்ள எருதுகள் ஸூர்யனுடைய சொத்தென்றும் அவற்றைத் தொட்டால் அபராதிக ளாவோமென்றும் பயமுறுத்துகின்றார். ஸாதாரண எருதுகளுக்கும் இங்குள்ளவற்றிற்கும் என்ன பேதம்? மேலும் ஸூர்யனுக்குப் பசிதாகங்க ளுண்டா? மூடர் பேச்சை நம்பி நாம் ஏமாறலாமா? கடவுளால் அபரிமிதமாய்க் கொடுக்கப்பெற்ற பொருள்களை நாமும் அனுபவித்து பிறர்க்கும் கொடுத்துக் களித்திருப்பதன்றோ விவேகிகள் காரியம்" என்று சொன்னான்.

"அதிர்ந் தடித்தவனுக்கு ஐயனாருமில்லை, பிடாரியுமில்லை.' யென்றபடி யூரிலாகன் வார்த்தைகளைக் கேட்ட உல்லாஸன் ஆட்கள் அத்தீவில் மேய்ந்துகொண்டிருந்த ஏழு எருதுகளைப் பிடித்துக் கொன்று சமைத்துத் தின்றார்கள். அவ்வாறு உண்ணத் தொடங்குமுன் ஸூர்யபகவானை நோக்கி, "கடவுளே, நாங்கள் செய்யும் அபராதத்தைப் பொறுத்தல்வேண்டும். எங்களூர் சென்ற பிறகு உமக்குக் கோவில் ஒன்று கட்டுவித்துப் பூசைகள்செய்கின்றோம்," என்று பிரார்த்தனை செய்தார்கள். பசுவைக்கொன்று செருப்புத் தானஞ் செய்கிறவர் கடவுளால் மன்னிக்கப்படுவார்களா? எருதினிறைச்சியை உல்லாஸனாட்கள் உண்டுகளிக்குங்கால் உல்லாஸன் மாம்ஸ வாஸனையறிந்து விழித்துக்கொண்டு, "பாவிகாள், என்ன காரியஞ் செய்தீர்? உங்களுக்கு இனி விமோசனமே கிடையாது. நீங்கள் கொன்ற மாடுகளின் தோல்கள் முக்காரம் போட்டு ஓடுகின்றன. இது பெரிய உற்பாதம்" என மயிர்க்கூச்செரியப் பேசினான்.

ஸூர்யன் தன் எருதுகள் கொல்லப்பட்டதைப் பார்த்து மனம் புழுங்கி, "தேவாதி தேவனே, ககன மார்க்கத்தில் நான் வலம் வரும்போதெல்லாம் கண் குளிரப் பார்த்த விருஷபங்களைக் கொன்று தின்ற கொடும்பாதகர்களைச் சிக்ஷை செய்வீராக" என்று வேண்டத் தேவாதி தேவனும் "அப்படியே ஆகுக" வென்று வாக்களித்தனர்.

எழெட்டுநாள் வரையில் மாட்டிறைச்சியைத் தின்று உடல் கொழுத்து உள்ளங் குளிர்ந்திருந்த உல்லாஸனாட்கள் காற்று இதாகாவை நோக்கி அடிப்பதைக் கண்டு யாத்திரை செய்ய ஆரம்பித்தார்கள். உல்லாஸனொருவன்மட்டில் பெருங்கேடு ஸம்பவிக்குமென்று நிச்சயமாயிருந்தான். சிறிது தூரஞ் சென்றபின் கடலில் பெரும்புயலடித்தது; கப்பற்கயிறுக ளறுந்தன; பாய் மரமொடிந்து விழுந்து மாலுமி தலையுடைந்து மாண்டான். மீகாமனில்லா மரக்கலம் திசைதப்பி இங்குமங்குமோட ஆரம்பித்தது. யூரிலாகன் இடி விழுந்திறந்தான்; மற்றவரும் ஒவ்வொருவராய்க் கடலில் வீழ்த்தப்பட்டார். கப்பல்பாறையில் தாக்கி ஆயிரஞ் சுக்காக உடைந்தது உயிர்பிழைத்துப் பலகை ஒன்றைத் தாங்கி அலைகளுடன் போராடினவன் உல்லாஸன் ஒருவனே. மெய்த்திருவந்துற்றாலும் வெந்துயர்வந்துற்றாலும் ஒத்திருக்குமுள்ளத்தனான உல்லாஸன் ஒன்பது நாள் அன்ன ஆகார மில்லாமல் அலைகடலாலலைக்கப்பட்டு நிர்வாணமாய் ஒஜிஜீயா என்னும் மனோரஞ்சனத் தீவில் வந்திறங்கினான்.



## தமிழ்ப்பரிபாலகர்

ரேவரண்டு ஜீ. யூ. போப்பையர்

**THE REV. G. U. POPE, M. A., D. D.**

பஞ்சரத்தினம்.

*அறுசீராசிரியம்.*

**சொ**ல்லதனுக் குறுதியெனச் சொற்றிடுவர்
நாலுடனே யிரண்டுங் கூட்டிப்
பல்லதனுக் குறுதியெனப் பகர்ந்திடுவ
ராலுடனே வேலுஞ் சேர்த்துச்
சொல்லதனுக் குறுதிவரிற் சுகமுண்டாம்
வாழ்வுண்டாந் தொலையுஞ் சன்மம்
கல்லதெனுங் காயமிதுந் தளர்ந்தழியுந்
தன்மையிதைக் கருதிப் பார்த்தே. (1)

**பா**ர்த்தாலும் பலதேயங் கிடைக்கரிய
பழந்தமிழ்நூ லிரண்டின் சாரஞ்
சீர்த்தாகப் பகுத்தறிந்து சேகரமாஞ்
சுவையெல்லாந் திரட்டிச் சேர்த்துப்
பேர்த்தாகும் பன்மொழியிற் பிரியமொடு
காணவைத்த பெரியோர் காண்மின்
பார்த்தாலுங் கேட்டாலும் பாவனமாம்
போப்பையர் பதவி நன்றே. (2)

**ந**ன்னூல்க ளைந்துதமி ழாயுமவர்க்
கிருகண்ணா நவிலும் பாங்கால்
நன்னூலென் றொருகண்ணு நாலுளுஞ்
செழித்திடவே நமக்கு மீந்தார்
பன்னூலுட் பரமமதாந் திருக்குறளாந்
திருந்ததனை னியாயந் தந்தார்
தொன்னூல்செய் வீரமுனி யிவரென்னச்
சொலலாகுஞ் சிறப்பு ளாரே. (3)

**ஆ**னதொரு வயதெல்லா மயராதே
தமிழ்க்குழைக்கு மனகர் காண்மின்
வினையெவர் தமிழ்நாட்டும் புறநாட்டு
மிவர்போல்வா ராரோ சொன்மின்
சோனைமழை பொழிபுதக மண்டலத்துஞ்
சோனாட்டும் பன்னாட் டங்கித்
தானமெனத் தமிழோங்க நூல்செய்த
வையரிவர் போப்பா ரோரே. (4)

**ஆ**னாலுந் தொண்டுகிழ மிவர்நாட்டந்
தமிழிடத்தே யமர நித்தந்
தேனாகுந் தமிழ்காக்குந் திறமரிதே
நாலடியின் னதிகங் கீர்த்தி
தானாகிப் பல்லாண்டுந் தனுகரணந்
திடங்கொண்டே தரையில் வாழக்
கோனாகும் பரம்பொருளு மருள்புரியக்
கோரியதா முதவி கொண்டே. (5)

### பாடினோன் பெயரு மூரும்

**கொ**ண்டலமர் மயிலைதனிற் சென், தோமாக்
கூறவருங் கல்விச் சாலைத்
தண்டமிழிற் றலைமைபெறும் பண்டிதனும்
வேங்கடங்கொள் ராம நாமன்
தொண்டமரு மறைக்குலத்தோன் சோனாடன்
திலையம்பூ ரதனில் வந்தோன்
விண்டதிது வுபகாரச் சீர்நினைந்தே
மேதினியோர்க் குரிமை வாக்கே.

### சீட்டுக்கவி.

**சீ**ர்கொண்ட தென்றமிழ்க் கவியினற் றீஞ்சுவை
தெளிவுறத் தேக்கு நிபுணன்
செப்பரிய குசைதுணியி னுட்பமதி திகழ்வுற்ற
திட்பமுறு புலமை வாய்ந்தோன்
கார்கொண்ட மயிலையுட் சென்தோ மெனுங்கலா
சாலையுட் கல்வி யாக்குங்
கலைவல்ல பச்சிங்க சரபவேங் கடராம
கவிராசனெழுது நிருபம்
நேர்கொண்ட ஆக்சுபோர்ட் டதனிடைப் பலியலாங்
கழகத்து நெடிய தமிழை
நித்தமுந் தமிழாங்கி லேயத்து ணேர்செயும்
தூயர்போப் பையர் காண்க
நார்கொண்ட சொல்லருமை நாலிரண் டோடுநன்
னூலொன்று மாக மூன்று
நன்கொடைக ளீந்தெமக் கறிவுநெறி நாடிடத்
தமிழ்பரவ வுதவு வாயே.

### வேறு

**மூ**ன்றுநா லாட்சியான் மூதறிவு முலகெலா
மோங்கு முண்மை
சான்றபே ருண்மையிது சாதிகுல
வாசார மேற்கி னாமோ
தோன்றுநாள் முதலாகு முலகறிவு
மோயவே தூய்மை சாரு
மூன்றுலோ கத்திடைப் போப்பையர்
கீர்த்தியு முடுகெல் மாண்பே.

**தி. வேங்கடராம ஐயங்கார்.**

## THE UNIVERSAL PRAYER
### ( By Alexander pope )
THE ENGLISH POET

Father of all ! in every age (1)
In every clime adored
By saint, by savage, and by sage
Jehovah, Jove or Lord.

Thou great First Cause, least understood (2)
Who all my sense confined
To know but this, that Thou art good
And that myself am blind.

What conscience dictates to be done, (3)
Or warns me not to do,
This, teach me more than hell to shun,
That, more than Heaven pursue.

What blessings Thy free bounty gives (4)
Let me not cast away ;
For God is paid, when man receives,
To enjoy is to obey.

If I am right, Thy strength impart (5)
Still in the right to stay
If I am wrong, Oh ! teach my heart,
To find that better way.

Save me alike from foolish pride (6)
Or impious discontent.
At aught Thy wisdom has deceived,
Or aught Thy goodness lent.

Teach me to feel another's woe ; (7)
To hide the fault I see ;
The mercy I to others show,
That mercy show to me.

Mean though I be, not wholly so ; (8)
Since quickened by Thy breath ;
O lead me wheree'er I go
Through this day's life or death.

This day be bread, and peace my lot : (9)
All else beneath the sun.
Thou know'st if best bestowed or not
And let Thy will be done.

## சமரஸத் தோத்திரம்

எந்தக் காலமும் எதுவ தேயமும்
சந்த மாதவர் கானவர் சான்றவர்
எந்தம் நாயக ! ஈச ! தே வே ! யெனச்
சிந்தை யேத்துபல் ஜீவரின் தந்தையே ! (1)

ஆதி காரண ! ஆய்தல் அரியவ !
ஓதென் னுாகமெல் லாமுற ஓர்வனேல்
கோதில் நல்லனீ கூறுநான் அந்தகன்
எதி யானறி யீதல தில்லையே. (2)

சாட்சி பூதமே சால விதிப்பன
மோட்ச நல்வழி யிற்செல முந்தவும்
ஆட்சி செய்யலா காதென நீக்கிய
காட்சி கொண்டியான் கும்பியிற் காப்பனே. (3)

மூட்டில் சீர்குண மூதறி வாசிகள்
தட்டி டாமலே தாங்கியான் போற்றுக
இட்ட நீயருள் இன்பதைத் துய்ப்பனேல்
சிட்ட நன்றியைச் செய்தவ னாவனே. (4)

நல்லொ ழுக்கினின் நல்வலி யீந்தியான்
ஒல்கா வண்ணமே ஓம்பிநீ காத்தருள்
பொல்லாச் செய்கையைப் போற்றிடின் என்மனம்
நல்ல தோர்நெறி நாட நவில்வையே. (5)

நற்கு ணத்தினீ நல்கி யருள்வன
ஒற்க மில்லறி வூனச்செ ருக்கொடு
நற்போ தத்தினீ நல்கவொ ழித்தவை
அற்ப மாய்க்குறை கூறியு மாள்வனே. (6)

மற்ற வர்துயர் ஓரவும் மன்னுயிர்
குற்ற மேபுறங் காக்கவுங் கூறுவாய்
பற்றி னல்பிறர் பாலருள் காட்டுவன்
அற்ற ஆரருள் காட்டிநீ ஆள்வையே. (7)

உன்னி உன்னுயிர் தந்தெனை ஊக்கினாய்
என்னி லெத்தனை ஈனம் இருப்பினும்
துன்னிச் சாரிடந் தோறுமே தூநெறி
என்னை யின்றிருப் பின்னிறப் பின்னருள். (8)

இன்றெ னக்குண வேயொழி வேயளி
என்றின் கீழுறும் எப்பொரு ளாயினும்
நன்று நல்கினை யோவிலை யோவறி
உன்றன் நன்மனக் கட்டளை உய்கவே. (9)

எஸ். சாமிநாதையர்.



# ராகங்களின் உற்பத்தி
## ORIGIN OF TUNES

ராகம் என்றால் பிரியம் என்று அருத்தம். ஸ்வரங்கள் அநேகமாதிரியாய்ச் சேர்ந்து சேர்ந்து தொகுக்கப்படுவதால் சுகத்தைத் தருகின்றன. அப்படிச் சுகந் தரும் ஸ்வரத் தொகுதிகளுக்கு ராகம் எனக் காரணப் பெயரிட்டிருக்கிறார்கள்.

இந்த ராகம் என்னும் விஷயம் கர்நாடக ஸங்கீதத்தினருக்கே உரியது. ராகவிஸ்தாரம் என்பது வேறுவிதமான ஸம்பிரதாயங்களில் கிடையாது. தேசிகம் அல்லது ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் ஸாஹித்தியங்களை மட்டும் பாடுவதுதான் வழக்கத்தில் உள்ளது. இப்போதிப்போதுதான் பெரிய கவாயிகள், ராகம் பாடும் ஸம்பிரதாயத்தை வித்தை இருக்கிறதென்பதற்கு அடையாளம் என்று எண்ணிப்பாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்களுக்கு இந்த ஸம்பிரதாயம் தெரியாத விஷயம் என்று மேலே சொல்லிவிட்டோம். ஆகவே, ராகம் என்பது என்ன? அது பாடவேண்டிய முறை என்ன? என்று அறியவேண்டுமானால் சர்நாடக வித்துவான்களைப் பாடச்செய்து கவனித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டியதாகிறது.

அது மாத்திரமல்ல. இந்த ராகம் என்னும் விஷயம் கர்நாடக சங்கீதம் எங்கே ஜாஸ்தியாய்க் கேட்டநுபவிக்க இடமுண்டோ, அவ்விடங்களில் தான் அதை நன்றாய் அறிந்துகொள்ள சந்தர்ப்பம் நேரிடும். அதாவது, காம்போதி என்னும் ராகத்தைப் பாடுவதற்கு ராஜமஹேந்திரபுரம் முதல் கன்னியாகுமரி வரையில் பாடகர்கள் உண்டென்றாலும், கர்நாடக சங்கீதத்துக்கு பிரதான ஸ்தானமான தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில் தான் அந்த ராகத்தின் வாஸ்தவமான ஸ்வரூபம் அறியப்பட இடமுண்டு. மொத்தமாய் ஸங்கீத விஷயங்களை நிஜமான நிலையில் பார்க்கவேண்டுமென்றால் தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில்தான் காணலாம்.

ராகம் பாடும் வழக்கம் பாடுவோரிடம் ஆதிகாலந்தொட்டு இருந்ததாகத் தெரியவில்லை. முதல் முதலில் ஏற்பட்டது கீதி என்று பெயர் வழங்கிய ஸாஹித்யங்களேதான். படித்த வித்வான்கள் ஈசுவரனை இந்தக் கீதிகளால் துதித்து வந்தார்கள். அதுமாத்திரமல்ல, படித்தவர்போலவே பாமரரும் சரி, பாலரும் சரி அவரவர் தம் வேலையைச் செய்யும்போது வேலைக்குத் தகுமான பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வேலைசெய்வது வழக்கத்திலிருந்தது. உதாரணமாக, அம்மானை ஆடும் குழந்தைகளும், கழற்சிக்காய் ஆடும் குழந்தைகளும் அந்தந்த வேலைக்குரிய அம்மானைக் கழற்சிக்காய்ப் பாட்டுக்களை ஏற்படுத்திவைத்திருந்தார்கள். அந்தப்பிரகாரமே கீழ்ச்சாதியார் முதல் மேல்ஜாதியார்வரையில் மேல்சொன்ன மாதிரி வேறுவேறு ஸாஹித்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஸங்கீதத்தை அநுபவித்து வந்தார்கள். இப்படிக் கொஞ்சகாலம் சென்றபின் புத்திநுட்பமாயிருந்த சிலர் அந்தந்த வேறு வேறான பாட்டுக்களை ஒருமிக்க முற்றிலும் கற்றுக்கொண்டார்கள். அன்றியும், அவைகளில் உள்ள ஒத்துமைகளையும் வித்தியாஸங்களையும் கண்டறிந்து, அந்தந்த ஊர்களிலிருந்து வந்தபாட்டுக்களுக்கு அந்தந்த ஊர்களின் பெயர்களை வைத்தார்கள். அப்பேர்க்கொத்த ராகங்களுக்கு ஸங்கீத சாஸ்திரத்தில் தேசாங்கராகங்கள் என்னும் பெயர் வழக்கத்திலிருக்கிறது. உதாரணமாக, குறிஞ்சி என்னும் ராகம் குறிஞ்சிநாட்டு ராகமாம். மாளவி என்னும் ராகம் மாளவதேசத்துப் பாட்டுக்களின் ராகமாம். மற்றும், கூர்ஜ்ஜரி, பங்காளா முதலிய ராகங்களின் பெயர்களிலிருந்தே அவை அவை எந்தெந்த ஊர்களில் பாடப்பட்டுள்ளன வென்று அறிந்துகொள்ளலாம்.

அது மாத்திரமல்ல. பாட்டுக்களின் அமைப்பைக் கவனிப்போமானால், சில தினுசுப்பாட்டுக்கள் சில நாடுகளிலே மட்டும் பாடப்படுகின்றன. தமிழ்தேசத்திலுள்ள நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, தேம்மாங்கு முதலிய ஸாஹித்தியங்கள் தெலுங்கு தேசத்தில்கூட கிடையாது. ஸீஸபத்தியம் என்னும் தெலுங்கு தேசத்திலுள்ள ஸாஹித்யம் வேறு எந்தப் பாஷையிலும் கிடையாது. அபங்கம் கேகாவளி முதலிய ஸாஹித்யம் தேசிய (மஹாராஷ்டிர) ஸாஹித்தியமாகும். இதை எல்லாம் கவனித்தால் ராகங்களுக்குப் பெயரிடும் காலத்தில் அந்தந்த ஊர்களின் பெயருக்கும் ராகங்களின் பெயருக்கும் சம்பந்தம் இருக்கவேண்டும் என்று நிதரிசனமாய்த் தெரிகிறது.

மேலும், சில ராகங்கள் குறிப்பிட்ட ஜாதியாரால் பாடப்பட்டு வந்தன வென்றும், அந்த ராகங்களுக்கு அந்த ஜாதியாரின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. எருகல காம்போதி என்னும் ராகம் எருகலவாடி என்று பெயருள்ள வடக்கே உள்ள ஒரு ஜாதியாருடைய ராகமாம். இம்மாதிரி ஜாதியின் பெயரை ராகத்துக்கு வைக்கக் காரணம் உண்டு. ஒட்டர் முதலிய சாதியார்களை எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம்? அவர்களுக்கு ஸ்திரமான

4

இடமில்லாததால் அவர் பாடும் பாட்டுக்கு அவர்கள் ஜாதியின் பெயர் இடப்பட்டிருக்கிறது.

இப்படி ஸாஹித்திய ரூபமாய் பாடுவதுமட்டும் வெகு நாளைக்கு வழக்கத்தில் வந்து கொண்டிருந்தது. பிறகு அநேக விதமான ஸாஹித்யங்களுக்கு ஆதாரமாகிய **ராகம்** என்பது பாடும் வழக்கத்தில் வந்தது. அதாவது ஒரேமாதிரியாயுள்ள பாட்டுக்களுக்கு ஆதாரமான கான ரூபத்தை **அகாரமாகவும்** சிலவேளைகளில் **தந்நகாரமாகவும்** பாடி அவைகளுக்கு ராகம் என்னும் பெயர் வைத்தார்கள்.

இந்த **ராகம்** என்பது என்னவென்று பார்ப்போம். இது கீதமும் அல்ல; கீர்த்தநமும் அல்ல. இது இன்னதுதான் என்று எழுதிக்காட்ட முடியாமலிருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்களாம்.

முதல் காரணம் என்னவென்றால், அது சப்தரூபமாய் இருப்பதால் அதை இன்னதுதான் என்று சுட்டிக் காட்ட முடியவில்லை.

இரண்டாவது காரணம் என்னவென்றால், ஒரு உபமானத்தை உபயோகித்துக் காட்டிவிடுவோம் என்றாலோ, வேறு எந்த ஸம்பிரதாயங்களிலும் இந்தமாதிரி விஷயம் இல்லாமலிருக்கிறது. பிராமணர்களுடைய வழக்கத்திலுள்ள ஆசமநம் என்னும் வழக்கத்தை வெள்ளைக்காரருக்குப் போதிப்பது எப்படிக் கொஞ்சம் முடியாத காரியமோ அதுபோலவே, ராகத்தை ஒப்பிட்டுக்காட்டிப் போதிப்போமென்றால் அது முடியாமலிருக்கிறது.

ஆனாலும் ஏதோ ஒருவிதமான உபமானத்தைச் சொல்லலாம். ஒரு விநாயகர் சதுர்த்தி உற்சவகாலத்தில் எல்லா ஜனங்களும் விநாயகர் பிம்பம் வேண்டுமென்று ஒரு குயவனைக் கேட்டால், அவன் தன் சிற்றறிவுக்கேற்றபடி (மண்ணைப் பக்குவப்படுத்தி வைத்துக் கொண்டு) வெறும் மண்ணாலோ, அல்லது குரு நாதப் பட்டையையும் உபயோகித்துக் கொண்டோ, தன்னச்சில் வைத்துப் பிம்பங்கள் தயார்செய்து கொடுக்கிறானல்லவா? அதே பிரகாரமாய், ராகம் என்கிற அச்சை உபயோகித்துக்கொண்டு தெலுங்குபாஷையில் ஸாஹித்தியம் செய்கிறவர் சிலர். தமிழ்ப்பாஷையில் ஸாஹித்தியம் செய்வார் சிலர். இப்படி அநேக விதமான ஸாஹித்தியம் செய்ய ஆதாரபூதமானது ராகம் என்று சொல்லுவோம். அது கீதமுமல்லாமல், வர்ணமுமல்லாமல் கீர்த்தநமுமல்லாமல், ஜாவளியுமல்லாமல், பதமுமல்லாமல் இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமானதாய் ஒருவித சத்தரூபமாயுள்ளதே.

இந்த **ராகம்** என்னும் விஷயம் ஒரு அநிர்வசநீயமான சத்தரூபம் என்று மேல்காட்டியிருக்கிறதல்லவா? அதை எவ்வாறு அறிந்து கொள்ளுகிறது? அதில் **ஸ்தூலஞாநம்** என்பது ஒருவகை ராகஞானம். விவாகஞானம் அல்லது ஸூக்ஷ்மஞானம் இன்னொருவகை ராகஞாநம். ஏற்கனவே சொல்லியபடி ராகம் ஸ்வரங்கள்வெவ்வேறு மாதிரியாகத் தொகுக்கப்பட்டு உண்டாகிறது என்று சொன்ன காரணத்தாலே **ஸ்வரஞாநம்** இல்லாதவர்க்குச் சரியான **ராகஞாநம்** வர இடமில்லை. ஸ என்னும் ஸ்வரமும் ரி என்னும் ஸ்வரமும் வெவ்வேறு என்று உணரக்கூடியவர்க்கே ராகஞாநம் உண்டு. மற்றவர்க்கு இல்லை. ஏனென்றால், **ஸ்வரம் வேறுபட்டால் ராகம் மாறிவிடும்.** இப்படிக்கு ஸ்வரம் மாறும் காலத்தில் ஸ்வரம் மாறிற்று என்னும் விஷயத்தை உணரக்கூடிய சக்தியோடு அமைந்த புலன்களில்லாதவர்க்கு இது அறியக்கூடிய விஷயம் அல்ல. **ராகம் பாடும்போது குற்றம் குறை சொல்வோர் இப்படிக் குண்டாகும் ஸ்வரக்குறைவைக் குறிப்பிட்டுக் காட்டும் சக்தியுள்ளவராயிருக்கவேண்டும்.** இவ்விதமான **ஸ்வரஞாநம் படைக்காதவர்** (ராகஞாநம் உள்ளவராக நினைத்துக்கொண்டு) **ராகத்துக்குக் குற்றம் குறை சொல்வது அதிகப் பிரஸங்கம்** என்பது என் அந்தரங்கமான அபிப்பிராயம்.

ஆனால் ஸங்கீதத்தை (மேல்குறித்தவாறு ஸ்வரஞாநம் சம்பாதித்துக் கொள்ளாமல்) ஜனங்கள் அநுபவித்துக்கொண்டு விவகரிக்கும் ஞாநத்தை நாம் ராகத்தின் **ஸ்தூலஞாநம்** என்று சொல்லவேண்டியது. சென்னையில் ஸங்கீத ஸபை என்று சொல்லுமிடத்தில் கூட்டம் கூட்டமாய்க் கேட்டாநந்திக்கும் சபையோர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது ஜனங்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாகும்.

மேலும், ராகம் என்னும் ஆதாரமான விஷயத்தை அறிய, முதல் முதல் ஸாஹித்தியங்களை அறிந்து கொள்ள வேண்டும். அந்த மார்க்கத்தாலே தான் நாம் ராகத்தைஅறியவேண்டும் என்பதற்குக் காரணம்என்னவென்றால் சாதாரணமாய், ராகம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவோர்கூட ஏதாவது ஒரு ஸாஹித்தியத்தை நினைவில் வைத்துக்கொண்டு அது எந்த ராகத்தில் பாடப்பட்டுள்ளதோ அதே மாதிரியாய்ப் பாடப்படுவதையெல்லாம் அந்த ராகம் என்று கண்டறிகிறது வழக்கத்தில் இருப்பதை யாவரும் பார்த்திருக்கிறோம்.

**பி. எஸ். சுந்தரப் ஐயர், பீ. ஏ., எல். டி.**



# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

## அத்தியாயம் 7

நியத்தாலும் பயத்தாலும், சாமியார் எவ்வளவோ சொல்லியும், அவன் வார்த்தைகளைக் கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் 'இவன் சொல்லுவது' நான் கேட்பதா?' என்ற ஒரே முரண்டாய் நமது பானுமதி முன்கூறிய அறையில் சாமியாருடன் தங்கித் துக்கொண்டிருந்தாள்.

இந்நிலைமையில் திடீரென்று ஓர் 'விஸில்' சத்தம் கேட்டது. சாமியார் 'ஐயையோ! போனேனே! போனேனே! என் பிழைப்பில் மண் போட்டுவிட்டானே! பாவிப்பயல் வலபத்திரன்! அந்தப் பயல் போகிற இடமெல்லாம் போராட்டமா? சனியன் வந்தால் போல—தெய்வமே என்று நான் அடைத்துக் கிடக்கும் இடத்தில் இடித்துப்புக இங்கேயும் வரவேணுமா—அவன் நாசமாய்ப்போக! எத்தனை குற்றம் தப்பித்துக்கொண்டு இப்பொழுது என் பிராணனையும் வதைக்க இங்கேயுமா வந்து சேரவேண்டும்' என்று கதறி, வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு 'அம்மணி!—உனக்குக் கோடிப் புண்யமுண்டு. உன் பெரியோருக்கெல்லாம் வந்தனம்—நீ நீ உள்ளே போ! அதோ எஜமானன் வந்துவிட்டார். இவ்வலங்கோலத்தையும்—நாமிருக்கும் நிலைமையையும் கண்டு விட்டாரோ—தீர்ந்தது—என்பாடு—அம்மணி! நீ!—"

**பானுமதி.**—வாயை மூடு! நீ, நான் என்று மரியாதைத் தாழ்வாய்ப் பேசாதே! போ! கதவைத் திற! உன் எஜமானன் உள்ளே பிரவேசிக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு, சாமியார் யாதொன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நிற்பதைக் கண்டு தானே சென்று, அவ்வறையின் வெளிக்கதவை மெதுவாய்த் திறந்து 'ப்ராணநாதா! என்று ஆவலுடன் அங்குத் தோன்றிய புருஷன் அண்டை விரைந்து சென்றாள். மஹாவீரன் ப்ரவேசமானான். "ப்பூ! மஹாவீரன் தானா!" என்று அலக்ஷியமாய் வெறுப்புடன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மஹாவீரனோ தனக்கு வந்த அடங்காக் கோபத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு 'அம்மணி! வந்தனம்!' என்று சொல்ல, அதைக் கொஞ்சமேனும் பாராட்டாது, பானுமதி அலக்ஷ்யம் செய்துவிட்டாள்.

அம்மணி! ஆமாம் நான் கேவலம் மஹாவீரன்தான். ஆயினும், சூரியன் வரவைத் தெரிவிக்கும் அருணனுங்கூட சில சமயங்களில் சந்தோஷத்தை விளைவிக்கவில்லையா?

'ஆஹா! என் ப்ராணநாதர் இன்று இரவு இங்கே வருகின்றாரா?' என்று ஆவலுடனும், ஆனால் கலக்கத்துடனும் வினவினாள்.

'மந்திரி எஜமான் வருகின்றாரா?' என்று சாமியாரும் வினவலானார்.

'ஆம் அம்மணி ஆமாம்.'

பானுமதி தன் குதூகலத்தை யடக்க முடியாதவளாய்ப் பரபரப்புடன் "ஜானகி! ஓடிவா! ஜானகி! என் ப்ரிய சகி! என் தோழீ!" என்று உரக்கக் கூப்பிட, **ஜானகி**யென்ற தோழியும் ப்ரத்யக்ஷமானாள்.

பானுமதியின் வதனமானது, கதிரவன்வரவை எதிர்பார்க்கும் செந்தாமரை போல் மலர்ந்தது. அவள் முகத்தில் இயற்கையாயுள்ள குதூகலமும், அழகிய செம்மேனியும் க்ஷணப்பொழுதில் விளங்கின. பரபரப்புடன், எதிரில் நிற்கும் புருஷர்களைக்கூடக் கவனியாமல், ஆவலுடன் "ஜானகி! என் ப்ராணநாதர் இன்னும் ஒரு ஜாமநேரத்துக்குள் இங்கே வரப்போகின்றாராம். சீக்கிரம், எனது அந்தப்புரஞ் சென்று, வாஸனைத் தைலங்கள்—அத்தர், பன்னீர், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் தயார் செய்து, எனது பெட்டியைத் திறந்து நகைகளெல்லாம் எடுத்துவை, என் பனாரிஸ் பட்டை எடு—சீக்கிரம்—என் ப்ராணநாதரைக் கண்டு—எத்தனை—நாளாயிற்று—சீக்கிரம்—ஜானகீ! சீக்கிரம்."

"அம்மணீ! இந்தக் கடிதத்தைத் தம்மிடம் கொடுக்கும்படி—நமது எஜமானர் ஆக்ஞாபித்தார்" என்று சொல்லி, பட்டுப்பையில் அடக்கம் செய்த ஓர் கடிதத்தை பானுமதியிடம் மஹாவீரன் கொடுக்க;

அதை யவள் ஆவலுடன் வாங்கி, உடைக்க முயன்றும், முடியாதவளாய், ஜானகி! ஓர் கத்திரி யெடுத்து வா! என்று ஆக்ஞாபிக்க, "அம்மணி! அடியேன் கத்தியால்—அதை உடைக்கலாமே" என்று சொல்லி மஹாவீரன் தன் கத்தியை மரியாதையாய் நீட்டினான்.

வேண்டாம், மஹாவீர! வேண்டாம். உன்கத்தியெல்லாம், மெய்க்காதல் முடிச்சைச் சிதைக்கவல்லதன்று!

'எத்தனையோ காதலைக் குலைத்திருக்கிறது இந்தக் கத்தி' யென்று சாமியார் மஹாவீரனைப் பார்த்து இரகஸ்யமாய் கண்களைச் சிமிட்டிக்கொண்டு சொன்னார்.

இதற்குள் ஜானகி கொண்டுவந்த கத்திரியால்,

லகோடாவை உடைத்து, பரபரப்புடன், கடிதத்தைப் பார்த்துவிட்டு ஆனந்த பரவசையாய், அப்பையிலுள்ள ஓர் முத்துமாலையை எடுத்து முத்தமிட்டுத் தன் கழுத்தி லணிந்துகொண்டு, மலர்ந்த முகத்துடன் 'ஜானகி! என் ப்ராணநாதருடைய அன்புக்கு அளவுண்டோ? இம்மாலையின் ஒவ்வொரு முத்தும், இம்மங்கம்மாள் ராஜ்யம்போல் ஒவ்வொரு ராஜ்யம் பெறும்போலக் காணப்படுகின்றதே. மேலும் இக்கடிதத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரமும் இதைப்போல் ஒவ்வொரு முத்து மாலை பெறும்போலிருக்கின்றன!" சொல்லி என்று ஆனந்தித்தாள்.

ஜானகி! உள்ளே போவோம் வா! மஹாவீர! உன்னிடம் நான் தயவாய் இருக்க வேண்டுமென்று என் ப்ராணநாதர் ஆக்ஞாபித் திருக்கின்றார். சாமியாரே! என் ப்ராணநாதருடைய அந்தஸ்துக்கும் பதவிக்கும் தக்கவாறு சரியானபடி எல்லாம் தயாராகட்டும். மஹாவீர! உன் ஞாபகம் எப்பொழுதும் நமக்கிருக்கும்! என்று சொல்லிவிட்டு ஜானகியுடன் அந்தப்புரம் சென்றாள்.

'ஏதப்பா! இதற்குள்ளேயே பவிஷுகொண்டாட ஆரம்பித்துவிட்டாளே பேஷ்! பேஷ்! ஒன்றும் குடியிருப்பில்லை. அவள் கோறுகிற பதவி இன்னும் நேர்ந்துவிட்டால்—உம்!—உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி தரையில் வந்துதானே முட்டையிட வேண்டும்.'

**சாமியார்.**— மஹாவீரரே! ஏதையா! இவளைக் கட்டிப்பிடிக்க நம்மால் முடியாது. என்னைக் கொஞ்சங்கூட மதிக்கமாட்டேன் என்கிறாள்.

**மஹாவீரன்**—அது உன் குற்றம்—முரட்டுத்தனம் தவிர வேறொன்றும் உனக்குத் தெரியாது.

பாட்டுக்கள்—வேடிக்கைகள்—தமாஷாக்கள்— இந்தப்படி வீட்டிலேயே அவள்மனது கவியும்படி செய்ய வேண்டும். அல்லது, பேய் இருக்கு, பிசாசிருக்கு என்று சொல்லி வெளியே வராமல் பயமுறுத்தி வைக்கவேண்டும்.—எல்லாம் உன் புத்திசாலித்தனத்திலிருக்கின்றது. சரி! அது கிடக்கட்டும்—இந்தத் தர்மராஜன் இங்கே எப்படி வந்தான்?

"தர்மராஜனா? இவனை நான் இதற்குமுன் கண்டதுமில்லை கேட்டதுமில்லையே!"

இவன்தானடா! பானுமதியின் அத்தைமகன். தாய் கிடையாது, தந்தை கிடையாது. இந்த லக்ஷணத்துக்குத் தான் பானுமதியைக் கொடுப்பதாய் அவள் பிதா தீர்மானித்திருந்தார். காமவெறிபிடித்த இந்தப் பையல் எங்கேயோ சுற்றிச் சுழற்றிக் கடைசியாய் இங்கேயே வந்து சேர்ந்துவிட்டான். நல்லவேளை—இவ்விஷயத்தில் நமது எஜமானர் சம்பந்தப்பட்டிருப்பது அவனுக்குத் தெரியாது. நான் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று நினைத்திருக்கிறான். அதுவும் நல்ல வேலை தான்!—சரி இந்தப்பயல் இங்கே எப்படி வந்தான்?

'அந்தப்பயல் வலபத்ரனோடு அல்லவா வந்துவிட்டான்.'

'இந்த வலபத்ரன் என்பவன் யார்.' அடே தடிப் பயலே, சூரிய சந்திரர்கள்கூட அறியாவண்ணம் பாதுகாக்கவேண்டிய இப்பரம ரகஸ்யத்தை, கண்ட சோம்பேறிப்பயல்களுக்கெல்லாம் இடங்கொடுத்து—"

**சாமியார்.**—ராஜஸேவை என்பது சரியாகத்தானிருக்கிறது! மஹாவீர! கத்தியில் திறமையும், கொஞ்சமேனும் பழிபாவத்துக் கஞ்சாதவனாகவும் பயல் ஒருவன் நம்முடைய வேலைக்கு வேண்டுமென்று, தாம் சொல்லவில்லையா?—நான் அந்த விஷயத்தில் எவ்வளவு ப்ரயாஸப்பட்டேன்—நல்ல வேளையாய் இந்தப் பயல் வந்து சேர்ந்தான்—தங்கள் இஷ்டப்படி—வேண்டிய துர்க்குணங்களெல்லாம் அமைந்தவன்.

**மஹாவீரன்.**—சரியான பயல்தான்—உனக்கும்அவனுக்கும் கொஞ்சம்தான் வித்தியாஸம்—உனக்குக் கடாமுழுண்டு—அவன் வெகுளிப்பயல்—சரி—இந்தப் பயலா, தர்மராஜனை அழைத்து வந்தவன்?

**சாமியார்.**—இந்தப் பகவத்கீதையாணை! அவன்கள் இரண்டு பேருமாகத்தான் வந்தான்கள்—தவிரவும்—வலபத்ரனோடு நான் தனித்துப் பேசிக்கொண்டிருக்கையில்—தர்மராஜன் நம்மகுட்டி—பானுமதி—மஹாவீரன் கோபாவேசத்துடன் 'அடே! அயோக்யத் தடியா! கெட்டது கார்யம்! இப்போ, சில நாட்களால் இந்தக் குட்டிக்குத் தன் தகப்பன் நினைவு வந்துவிட்டது போலிருக்கிறது. இந்தப் பயல், என்ன, அவளை மறுபடியும் ஏமாற்றி—'

**சாமியார்.**—அப்படி யாதொரு பயமுமில்லை. அவனைக் கண்டதும் பாம்பைக் கண்டதுபோலப் பயந்து கூக்குரலிட்டாள்.

**மஹாவீரன்.**—அப்போ சரி! உன் மகள் ஜானகி மூலமாய்—என்ன நடந்தது என்று விசாரிக்க முடியுமா?

**சாமியார்.**—மஹாவீர! நான் மனதாரச் சொல்லுகிறேன். நம்முடைய பழியும் பாவமும் நம்மோடே



போகட்டும், என் மகளும் நம் வழியில் தலையிட்டுக் கெட்டழிய நான் சம்மதியேன்.

**மஹாவீரன்.**—அடே மடையா? நான் என்ன சொல்லுகிறேன், உன்னைப்போல உன் மகளும் கெட்டுப்போக வேண்டுமென்றா? சும்மா என்ன நடந்தது தர்மராஜனுக்கும் பானுமதிக்கும் என்றுதானே?

**சாமியார்.**—நான் விசாரித்த மட்டில், ஏதோ பானுமதி தன் தகப்பனார் அசௌக்கியத்தைப்பற்றி அழுது கொண்டிருந்தாளாம்.

**மஹாவீரன்.**—"சரிதான்! அர்த்தமாச்சுது. இதெல்லாம் இந்தத் தர்மராஜன் செய்தவேலை சாமியாரே!—ஜாக்கிரதையாயிரு! மோப்பம் கண்ட நாய்போல மறுபடி திரும்பி வருவான். இந்தப் பயலைத் தொலைக்கும்வரை நமக்கு க்ஷேமம் கிடையாது. இன்றைக்கு அவன் கையினின்று தப்பிக்கப் பட்டபாடு தம்பிரான் புண்யமாய்ப் போயிற்று.—நல்லவேளை உன் பயல் வலபத்ரன் வந்து சேர்ந்தான்—"

**சாமியார்.**—அதெல்லாம் சரிதான்! இந்த அரண்மனையை என்பேருக்கே சாஸனம் செய்து கொடுப்பதாய் வாக்களித்தாயே—இப்போ உன் பேருக்கு இருக்கிறது. நாளை என்னை வெளியேற்ற வேண்டுமென்றாலும்—உன்னால் வெளியேற்ற முடியும்.

**மஹாவீரன்.**—அடே தடியா! எடுத்ததெல்லாம் சந்தேகமா? உன் பேரில்தான் செய்தாய்விட்டதே—மேலும் உன் மடம்—அழகு—நீ ஒரு சாமியார்!—இது ஒருமடம்!—உன்மடம் என்று சொல்லுகிறார்களோ—மஹாவீரனுடைய தென்கிறார்களோ?

**சாமியார்.**—அப்படியானால் அந்தச் சாஸனத்தை என் கையில் கொடுத்து விட்டால்—

**மஹாவீரன்.**—அடே மஹாமூடசிகாமணி! மறந்து போனேன். இன்னொரு தடவை வரும்பொழுது கொண்டுவந்து தொலைக்கின்றேன்—சாஸனத்தை—சாஸனம்—உன் தலையிலேகூட வைத்து எரிக்கப்போகிறார்கள்—!

**சாமியார்.**—எல்லோருடைய பாடும் இவ்வளவு தானே! பிறரைப்பற்றிப் பேசும்பொழுதல்லவா வேதாந்தம் வருகின்றது. தான்மாத்திரம் சாசுவத்தாய் கல்பகோடி காலம் இருப்பதாகவல்லவோ ஒவ்வொருவனும், பொய்யும், புனைசுருட்டும், பழியும், பாவமும் செய்து வருகிறான்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பீ.ஏ., பி.எல்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 5. துர்க்குணங்கள்—பொய்யுரைத்தல்

Bad qualities—Lying

**குறிப்பு**—ஸ்வரூபம் -அடங்கியுள்ள கெடுதிகள்—நீக்கும்விதம்—தர்மஸங்கட விஷயங்கள்—கதைகள்—முடிவு.

**உ**ள்ளதை மாற்றிக் கூறுவதும், உணராததைத் தெரிந்ததுபோலக் கூறுவதுமே பொய் என்று கூறப்படும். இவ்வாறு கூறுவதற்கு முயலும் சொற்களும் பொய்யே. இரண்டு அர்த்தம் படும்படியான சொற்களைச் சொல்லி கேட்பவர்களை ஒரு பொருள் கொண்டு போகும்படி செய்துவிடுவதும் பொய்யுரைத்தலே. ஆகவே குறி கூறுவது முழுப்பொய் என்பதற்கு ஸந்தேஹமில்லை. இம்மாதிரியே காயில் படாமலும் பழத்தில் படாமலும் சேற்றில் நட்ட கம்பம்போல பொருள் விளங்காமலிருக்கும்படி கோமுட்டி ஸாக்ஷியாகக் கூறும் சொற்கள் காட்டும் கை சைகள் எல்லாம் எதிராளியை மோசம்செய்ய வேண்டும் என்ற கருத்தால் உண்டாவதால் இவைகளைப் பொய் என்றே கூறவேண்டும். சொன்ன வாக்குத் தவறுவது, சொன்ன வாக்கை மறுப்பது ஆகிய நேர்மைக்கு மாறாக இருக்கும் நடவடிக்கைகளும் பொய்யே. ஆகவே பொய்யுரைத்தலுக்கு முக்யமாக இருக்கவேண்டியது தன்னயம் கருதும் மோசக்கருத்து. இம்மோசக்கருத்தால் உள்ளதை மறைப்பது, மாற்றிக் கூறுவது, அறியாததை அறிந்ததாகப் பெரிதாக்கிக் கூறுவது ஆகிய இவைகள்தான் பொய்யுரைத்தலின் லக்ஷணம்.

இம்மாதிரிப் பொய்யுரைத்தலில் அடங்கி உள்ள தீக்குணங்கள் எவை? ஊன்றி நோக்கின் மூன்று விதத் தீக்குணங்கள் இதனுள்ளிருக்கின்றன. அவையாவன, மடத்தனம், இழிவு, கொடுமை ஆகிய இவைகளே. எதைக்கருதி ஒருவன் பொய்சொல்ல எண்ணுகிறானோ அதற்கு மாறாகவே இது ஏற்படுவதால் இதை உணராதிருத்தல் மடத்தனமல்லவா? பலநாள் பொய்

யன் ஒருநாள் வெளிப்படுவான். இவ்வாருனதும் இவன் ஆட்டம் பலிக்காமல் போவதோடுங் கூட இவனை ஒருவரும் நம்பமாட்டார்கள். பொய்யனுக்கு மறதி கூடாது. ஆகவே எவ்வளவு ஜாக்ரதையாக விருந்தபோதிலும் குழப்பத்தில் பொய் வெளியாவதற்கு வேண்டிய முன்பின் முரணான விஷயங்கள் பொய்யால் ஏற்படாமல் போகாது. மேலும் ஒரு குற்றத்தை மறைக்கவே பொதுவாக பொய் எழுவது வழக்கம், ஆனல் பொய் கூறுவதே ஒரு குற்றமாக மாறி ஒரு குற்றம் நீக்க எண்ணிய தந்திரம் இரண்டு குற்றத்தைக் கொண்டு விடுகிறது. இவைகளை உணராம விருப்பதால் பொய்யர்கள் மடையர்களே. இனி உண்மை உள்ளபடி உரைப்பதற்கு வேண்டியதான மனோதிடக்குறைவே இதனல் ஏற்படும் இழிவுக்குக் காரணம். பொய்யர்களுக்கு இந்த இழிவால் வரவர பயங்குள்ளித்தனம் ஓங்கிக் கொண்டே வந்து அவர்கள் மறைந்துரையும்படி நேரிடும். வாக்கு நல்லதைக் கூறி மேன்மை உண்டாக்க ஏற்பட்ட இந்திரியம் இதைக்கெடுத்து அவநம்பிக்கை சண்டை சச்சரவு முதலிய குழப்பங்களை உண்டாக்க உபயோகப்படுத்துவது பெருங் கொடுமையல்லவா? அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அநேகர் சேர்ந்து வாழ்வது அஸாத்யமாகிவிடுவதால் பெருங்கேடு விளையாமற் போகுமா?

இவ்வாறு பொய் உரைப்பதில் இம்மூன்று தீக்குணங்களிருக்குமாயின் இதை நீக்குவது எவ்வாறு என்ற கேள்வி பிறக்கும். முற் கூறியபடி பொய்யுரைத்தலில் அடங்கியுள்ள தீக்குணங்களைப் பகுத்துணர்ந்து மனனம் செய்வதே இதைவிட்டு நீங்கும்படி நம்மைத் தூண்டும். இந்தப் பகுத்தறிவு மாத்திரம் போதாது. பொய் கூறும்படி நேரிடும் நிலைகளிலிருந்து நீங்க முயலவேண்டும் என்ற எண்ணத்தைத் தான் முற்கூறிய ஆராய்ச்சி கொடுக்கும். ஆகவே நீங்குவது எவ்வாறு என்ற சங்கை நீங்கியபாடில்லை. (1) அதிகப் பேச்சு அனாவசியப் பேச்சு ஆகிய இவைகளை நிறுத்தவேண்டும். இதுதான் முதல்படி. ஏதாவது ஒன்று நடந்துவிட்டால் அது ஒருவரிடம் ஒருவர் சொல்லப் பாவுவதைக் கவனித்தால் இதன்பொருள் விளங்கும். வரவர அந்த ஸங்கதிகளில் பொய் சேர்ந்து கொண்டே வரும். ஆதலால்தான் நடந்த விஷயம் மிக ஸாதாரணமாயினும் அதன் உண்மையை விசாரித்தறிதல் மிகக் கஷ்டமாகி விடுகிறது. ஆதலால் ஒன்றைப் பற்றிக் கூறவேண்டும் என்ற ஆவல் வந்தால், அது கூறவேண்டியது அவசியமா என்று நோக்கல்வேண்டும். அவசியமில்லாவிடில் வெளியில் மற்றவரோடு கூறி வீண்வார்த்தை யாடுவதைவிட கூருது நிறுத்துவதே நலம். கூறவேண்டியது அவசியமாகில் நடந்ததை நடந்தபடி சேர்மானம் சேர்க்காமல் கூறி நிறுத்தி விடவேண்டும். அதைப்பற்றிப் பின்னர் அதிகப் பேச்சுக்கு இடங்கொடுக்காமலிருக்கவேண்டும். மிதபாஷிதானமாக விருப்பதால் பொய்கலவாமல் பார்த்துக் கொள்வது எளிது. (2) இரண்டாவது படி அவசியம் மறைக்கவேண்டியவை அல்லது மாற்றிக் கூறவேண்டியவை ஆகிய இவை அதிகமாக உள்ள தொழில்களை விட்டு நம்மால் கூடியவரையில் ஒதுங்கவேண்டும். ஸமூகவாழ்க்கையில் சிற்சில விஷயங்களை மறைக்க விடங்கொடுத்து அவைகளை ரஹஸ்யங்கள் என்று பிறர் புகுந்து கலக்காது விட்டு விடுவர். அவைகளுக்கு மேல் அதிகமாக இம்மாதிரி விஷயங்களுள்ளவைகளிலிருந்து ஒதுங்கியே தீரவேண்டும். (3) அதிகமாக ரஹஸ்ய விஷயங்களை மறைத்து அடிக்கடிக் கூறும்படிப் பேச்சுகளை விடுபவர்கள் சேர்க்கையை ஒழிக்கவேண்டும். (4) பிறரிடம் இருந்து மறைத்தே தீரவேண்டியதாகிய கார்யங்களைச் செய்யவாவது, பேச்சுக்களைப் பேசவாவது கூடாது. இதுபற்றியே 'போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்' என்ற வாக்கியம் பிறந்தது. ஒருவனிடம் நேரிட நாம் கூறக் கூடாதவைகளை அவனுக்குப் பின்னர் பயனில்லாமலிருக்குங்கால் கூறக்கூடாது. இவ்வாறு செய்தால் அவன் முன்னிலையில் பொய்யுரைக்கும்படி நேரிடும். ஆதலால் சுருக்கிக் கூறுமிடத்து ஒருவன் தன் வ்யவஹாரத்தை ஒழுங்குபடுத்திக் குறைத்து முற்கூறிய வண்ணம் நடக்கக்கூடிய வழியில் கொண்டு வருவானாளுல் எளிதில் பொய்சொல்லாது நிலைக்கலாம் என்பதாயிற்று கண்டபடி வ்யவகாரத்தை வளர்த்தி விட்டால் பொய் சொல்லாமல் தீராது என்ற படுகுழியில் விழும்படி நேரிடும். பொய் சொல்ல அவகாசம் கொடுக்காது அதை நீக்கவேண்டுமே ஒழிய; பொய் சொல்லும் நிலைகளில் நின்று பொய் சொல்லாது முடியவில்லையே என்று துக்கப்படுவது பயனற்றது.

முன்னர் கூறியபடி எவ்வளவு ஜாக்ரதையாக நடந்து வந்தபோதிலும் மோசக்கருத்தில்லாது, பொய்யுரைக்கும்படியான தருணங்கள் வந்துவிடும். நம்மை ஒருவன் சாப்பிட அழைக்கிருன். நமக்குப் போக ப்ரியமில்லை. இதைச்சொன்னல் அவனுக்கு மனம் வருத்தம் வரும், இந்த ஸமயத்தில் 'எனக்கு உடம்பு சரியாக வில்லை, என்று கூறவேண்டிவரும். இது பொய்தான். ஒருவன் ஒருத்தி கற்பை யழிக்கப் பார்க்கிருன். அவள் பயந்தோடி நாம் இருந்த விடத்திற் கருகாமையில் ஒளித்துக்கொண்டாள். அத்துன்மார்க்கன் 'அவள் எங்கே போனள்' என்று நம்மை வந்து கேட்கிருன். நாம் 'எனக்குத் தெரியாது' என்று கூறிவிடவேண்டும். இதுவும் பொய்தான். 'ஆயிரம் பொய்யைக்கூறி கல்யாணம் பண்ணு' என்பது ஒரு பழமொழி. பெண்ணும் பிள்ளையும் எல்லா விதத்திலும் தகுந்தவர்களாக விருப்பார்கள். ஏதோ பணத் தகராரில் கெட்டுப்போவதாக விருக்கும். அப்பொழுது ஏதாவது பொய்யுரைத்து கல்யாணத்தைப் பண்ணி வைக்கும்படி வந்துவிடலாம். இவ்வாறு செய்துவைப்பின் தன்னயம் கருதி பொய் சொன்னல் அது பொய்யே. அவ்வாறில்லாது சொல்ல வேண்டிய பொய்யைப்பற்றித்தான் இங்கு ஆராய்வது. குழந்தைகள் கசப்பு மருந்தைக் குடிக்கா. இது சர்க்கரை என்று கூறி சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டிவரும். இதுவும் பொய்தான். இவைகளைக் கூறும்படி வந்தால் என்ன செய்வது? இவைகளுக்குத்தான் தர்மஸங்கடங்கள் என்று பெயர். பொய்யின் ஸ்வரூபத்தைப்பற்றிக் கூறுங்கால் தன்னய ஸம்பந்தமான மோசக்கருத்து முக்யம் என்று கூறப்பட்டுள்ளது. அதுமாத்ரம் இல்லாமலும், உண்மை உரைத்தால் பிறருக்குக் கேடு விளையுமே என்ற பரிதாபமும், பொய் உரைத்தால் ஒருவருக்குத் தர்மப்படிக் கேடில்லை என்று பகுத்தறிந்து கூறவேண்டிய பொய்யைக் கூறிவிடுவதே மெய்யுரைத்தல் என்பது பெரியோர் கொள்கை. இது பற்றியே திருவள்ளுவரும்:—

> பொய்ம்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்.

என்று கூறியிருக்கிருர். விசேஷமான நிலையில் ஆபத்தர்மமாகக் கூறியிருக்கும் இதை முன்பின் ஆராயாது கண்டபடி உபயோகப்படுத்தி வீண்பாபத்திற்கு இடனுகும். முன்கூறிய சமயங்களில் பொய்யுரைப்பது பொய்யே ஆதலால் அவ்வாருன நிலைகளையும் கூடியவரை நம்மை அணுகாது தடுக்கவே முயலவேண்டும். அப்படிச் செய்தும் தடுக்க முடியாமற் போனல் மனக் கூச்சத்துடன் பொய் உரைத்தே தீரவேண்டும்.

இவ்விஷயமான கதைகள் அநேகம் உள. புலி வருகின்றது என்று விளையாட்டாகப் பொய் உரைத்த பையன், புலிவந்த காலத்தில் பிறர் நம்பிக்கை இழந்ததால் உதவியின்றி மாண்டான். தர்மபுத்ரர் ஆராயாது பொய் உரைத்ததால் நரகம் பார்க்கும்படி நேர்ந்தது. ஸத்யவாதியான கௌசிக ப்ராஹ்மணன் திருடர் வருவதை அறிந்து ஊராரோடு ஓடி, பொய் சொல்லும்படி வரக்கூடிய நிலையை தடுத்துக்கொள்ளாததால், திருடர் கேட்டதற்கு ஊரார் ஒளிந்திருந்த விடத்தை உள்ளபடி கூறி மெய் உரைத்து பொய் உரைத்த நரக துக்கத்தை அடைந்தான். இம்மாதிரியே புராணங்களில் கதைகளுக்குக் குறைவில்லை.

இவைகளிலிருந்து பொதுவாகப் பொய் உரைக்கவே கூடாது. பொய்யுரைக்கும்படி வரும் தர்மஸங்கட நிலைகள் தடுத்தும் வந்து நேருமாயின் மிக வெறுப்புடனும், கூச்சத்துடனும் கூறவேண்டிய பொய் கூறலாம் என்பதும் விளங்கும்.



### போதக்குறிப்புக்கள்

1. ஸ்வரூபம்.
2. அடங்கியுள்ள கெடுதிகள்.
3. நீக்கும் விதம்.
4. தர்மஸங்கடம்.
5. கதைகள்.
6. முடிவு.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வ்யாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1. கோபம். | 6. பொருமை. |
| 2. கர்வம். | 7. பழித்தல். |
| 3. ஆசை. | 8. பிடிவாதம். |
| 4. ஆத்திரம். | 9. தன்னயம் கருதுவது. |
| 5. பழிவாங்குதல் | 10. புண்படுத்தல். |

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## Translation Models

**18. Relief of Delhi: The attack.**

"If there is a desperate deed to be done in India, John Nicholson is the man to do it," his superiors had always said. The desperate deed was at hand. The hour so anxiously looked for came at last. The assault was ordered. John Nicholson was to command the main storming column, his the post of honour and danger. On the morning of the 14th September, the columns, eager to begin, and flushed with the thought coming victory, streamed out in the grey dawn. They were to move in different directions according to plan, Nicholson himself leading the first column of attack. At first everything was successful. The breach was carried, and Nicholson with his column had forced his way over the ramparts into the city. The defence was vigorous, stronger than had been suspected. It was thought that after leading the attack, Nicholson would have fallen back, into the Commander's post to direct the movements of the storming party; but enthusiasm urged him on, and he was

ever to be found where the danger was thickest. The truth was that the share of the day's work assigned to Nicholson's column was more than it could perform; and he was not the man to leave a part of his duty unfulfilled.

### டில்லியை விடுவிக்குங்கால் தாக்கிய விதம்

'இந்தியாவில் துணிவான காரியம் ஒன்று செய்ய வேண்டுமாயின் ஜான் நிகொல்ஸனே தகுந்தவன்' என்று ஓயாது கூறி வந்தனர் அவன் மேலதிகாரிகள். துணிவான தொழிலும் அணுகிவிட்டது. மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்த காலமும் முடிவில் வந்து விட்டது. சண்டை தொடங்கும்படி உத்தரவும் பிறந்தது. புகுந்து கலக்கும் ஸேனாபாகத்திற்கு ஜான் நிகொல்ஸனே தலைமை பூண்டிருக்கும்படி நேரிட்டது. அவன் நிலை மிகுந்த அபாயமும் சிறப்பும் வாய்ந்திருந்தது. சண்டை தொடங்கப் பரபரப்பும், ஜயத்தைப் பற்றிய பூரிப்பும் நிறைந்து, ஸெப்டம்பர் மாதம் 14-ம் தேதி அதிகாலையில் செவ்வான ஒளியில் ஸேனைகள் மடைதிறந்து விட்டாற்போல, அணிஅணியாகக் கிளம்பி நடந்தன. முன் ஏற்பாட்டின்படி அவர்கள் வெவ்வேறு பக்கங்களில் போகவேண்டியிருந்தது. தாக்கும் பாகத்து முதல் அணியை நிக்கொல்ஸன் நடத்தி வந்தான். முதலில் எல்லாம் கைகூடியே வந்தன. ஏற்பட்டசிதைவுபிடிபட, நிகொல்ஸன் கோட்டைகொத்தளங்கள் மேலாக விலக்கிக்கொண்டு ஏறி டில்லிக்குள்புகுந்துவிட்டான். எதிரிகளால் ஏற்பட்ட தடை எதிர்பார்த்ததை விட மிகமும்மரமாக விருந்தது. இம்மாதிரி சண்டைதொடங்கிவிட்டு நிகொல்ஸன் பின்னடைந்து, தன் தலைமை நிலைக்கு வந்து தாக்கும் ஸேனைகளை நடத்துவான் என்று எல்லோரும் எண்ணி யிருந்தனர். ஆனால் யுத்தாவேசம் அவனை மேல் மேலும் தூண்டியது: அபாயம் அதிகமாக விருந்தவிடத்திலேயே அவன் காணப்பட்டான். உண்மையாக நோக்கில், நிகொல்ஸன் பாகத்திற்கு அன்று ஏற்பட்ட தொழில் அதனால் முடிப்பதற்கரிதானது, நிகொல்ஸனும், தன் தொழிலை முடியாது திரும்புபவனல்லன்' என்பதே இதற்குக் காரணம்.

### 19. Why is it colder on the mountian top?

You think perhaps, that as you are nearer to the Sun, you ought to get hotter. It is true that as we get nearer to the Sun, we must get hotter, unless something else is working the other way at the same time. But the highest mountain on the earth is not seven miles high, and as no one has even been to the top of it, and as seven miles is not much worth mentioning, seeing that the Sun is more than 90,000,000 miles away,—well, you cannot expect to gain much by climbing a mountain.

But you want to know why you get colder? It is because that the warmth we live by is mostly in the surface of the earth, though doubtless most of it has come from the sun in the first place and the air besides being necessary for us to breathe is also a great blanket to keep in this warmth. When we climb a mountain, we pass through the densest part of this blanket, away from the warm crust of the earth and so we get cold. It is just the same when men go up in balloons. We should be frozen to death in the night if it were not that earth is warm itself and that the blanket of air keeps the warmth in for us.

### மலை உச்சியில் குளிர்ந்திருப்பானேன்?

ஸூர்யனை அணுகிச் செல்லச் செல்ல வெப்பம் அதிகமாக உறைக்கும் என்று நீங்கள் ஒருவேளை எண்ணலாம். அதே வேளையில் வேறு முகாந்தரங்கள் எதிராகத் தொழிற்படாமலிருந்தால் இவ்வாறாகும் என்பது உண்மைதான். பூமியிலுள்ள மலைகளுள் மிக உயர்ந்தது ஏழு மைல்கூட இல்லை. இதன் உச்சியில் எவரும் போனதில்லை! ஸூர்யன் ஒன்பதுகோடி மைலை விட அதிக தூரத்திலிருக்கிறான்: இதன் ஸம்பந்தமாக இவ்வேழுமைல் எவ்வளவு? ஆதலால் மலையில் ஏறுவதால் வெப்பம் மிக அதிகப்பட்டுவிடாது.

குளிர் என் அதிகப்படுகின்றது என்றல்லவா உங்களுக்குத் தெரியவேண்டும். நமது வாழ்வுக்கு வேண்டிய தானவெப்பம், முதலில் ஸூர்யனிடமிருந்து வந்தது என்பதற்கு ஐயமில்லையாயினும், பூமியின் மேற்பரப்பிலேதான் அது தங்கியிருப்பது. நாம் மூச்சு விடுவதற்கு ஸாதாரண வாயு அவசியமாக விருப்பதோடுகூட, அந்த வெப்பத்தைச் சிதறிப்போகாது காக்கும் கம்பளி போலவும் இருக்கிறது. மலையில் ஏறும்போது பூமியின் வெப்பமான மேற்பரப்பை விட்டு கம்பளிக்கு நிகரான ஸாதாரணவாயுவின் அடர்ந்த பாகத்தின் வழியாக விலகிப் போய்விடுகிறோம். ஆதலால் நமக்குக் குளிருகிறது. ஆகாய விமானத்தில் ஏறிப் போகும்போதும் இம்மாதிரியேதான் இருக்கும். பூமி வெப்பமா யில்லாமலும், கம்பளிபோன்ற ஸாதாரண வாயு அவ்வெப்பத்தைச் சிதறாது நிறுத்தாமலும் இருந்து விட்டால் நாம் இரவில் விரைத்து இறக்க வேண்டியதுதான்.



## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 10

### அதிக அத்புதங்கள்

நாடாவெவ் வொன்றிலும் ஆம்நன்மை தீமையை
நாட்டல் செய்யார்
ஈடார்இந் நாளவர் மூடநம் பிக்கைக் கிடங்
கொடுக்கக்
கூடாதென் றுத்திகள் கூறிஓர் அற்புதங்
கூறியதம்
பாடாயின் யாவைக்கும் ஆளாவர் காலஸ்வ
பாவமிதே!

ஆகாயத்திலிருந்து திடீரென்று ஒரு சித்த புருஷர் குதித்து டிப்டி கலெக்டர் நாராயணய்யர் வீட்டில் தங்கி, அத்புத சித்து வித்தைகளைக்காட்டி விட்டு அங்கேயே திவான்பஹதூர் அதிதியாக விருக்கிறார் என்ற ஸமாசாரம் ஊரெங்கும் பரவியது. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் மிகுந்த ஆவலுடனிருந்த அநேகர் நாராயணய்யர் வீட்டுவாயிலில் வந்து கூடிவிட்டனர். எல்லோரும் சித்தர்கள் மஹாத்மாக்கள், யோகிகள், ரிஷிகள், இவர்களையும் இவர்கள் அத்புதச் செயல்களையும் பற்றியே வாயோயாது வசனிக்கத்தொடங்கிவிட்டனர். வீட்டிலோ ஒழுங்காக ஏற்படுத்தப்படாததற்செயலாகக்கூடிய ஸபை ஒன்றில் திவான் பஹதூர் தாமே அக்ராஸனம் வஹித்து எழுந்தருளி யிருந்தனர். இதில் 'சித்து வித்தைகள் செய்யக்கூடியவைகளா அல்லது அஸாத்யமானவைகளா' என்ற அரிய விஷயம் ஆராயப்பட்டு வந்தது. அநேகர் அநேக அப்பிராயங்களை அநேகவிதமாக அங்கு ஸமர்ப்பித்தனர். இவைகளின் சிறப்பை நோக்குங்கால் இவைகள் முழுவதையும் இங்கு எடுத்து வெளியிட இடம் போதாமலிருக்கிறதே என்ற துக்கம் என்னைப் பாதிக்கின்றது. இவைகளுள் மிக முக்கியமானது டிப்டி கலெக்டர் அவர்களது அபிப்ராயமே: அதை வாசிப்போர்கள் நன்மைக்காக இங்கு அவர் கூறியபடி எடுத்து வெளியிடுவோம். 'சித்து வித்தைகளை உள்ளபடி நோக்கில் அவைகள் அஸாத்யமே: ஆயினும் சிலர் அவைகளைச் செய்து விளையாடுகின்றனர் என்பது மறுக்கக்கூடாத விஷயம். ஆனால் நமது மாடியில் வஸிக்கும் மஹாத்மா விஷயத்தில் மாத்ரம், அவர் செய்தவைகளை நோக்கில் அவர் சித்தர் என்ற எண்ணம் பலமாக எனக்கு உண்டானபோதிலும் அவர் அத்தகையவரோ என்ற ஸந்தேஹம் என்னைப் பாதிக்காமல் போகவில்லை. ஆங்கல ஜாதியாரில் சிலர் சித்து வித்தைகள் செய்யக்கூடியவைகளே என்று அபிப்ராயப்படினும், மற்றவர் அஸாத்யம் என்றே கூறுகின்றனர். ராஜ்ய வருமான உத்யோகஸ்தராக வெகு திறமையுடனும் மேலதிகாரிகள் மதிக்கும்படியும் வேலை பார்த்து வந்த நாளில் நான் தாவாக்களில் செய்துள்ள தீர்மானத்தைப் போல 'இங்கும் உண்மை இவ்விரண்டு விரோத அபிப்ராயங்களுக்கு இடையில் தான் இருக்கவேண்டும்' என்பதே முடிவான தீர்மானம்' என்று இவ்வாறு விஸ்தாரமாக நுட்ப ஆராய்ச்சி செய்து பக்ஷபாதமில்லாது பல அபிப்ராயங்களின் ஸாராம்சங்களை நாராயணய்யர் வெளியிட்டார்.

இவ்வாறுசெய்ததும் எல்லோரும் தமது அத்புத உபந்யாஸத்தில் ஈடுபட்டுத் தம்மைக்கரகோஷம் முதலியவைகள் செய்து அனுமோதிப்பார்கள் என்ற எண்ணத்துடன் ஒரு தரம் எல்லாப் பக்கங்களைச்சுற்றி நோக்கினார். இவைகளை எல்லாம் கேட்ட ஜனங்களுக்கு இவர் கூறிய விஷயம் விளங்காவிடினும் இவர் நோக்கம் இன்னது என்று விளங்க 'உண்மை! உண்மை!! பலே! பேஷ்!! அதுதான்ஸரி!' என்று இவ்விதமாகக் கூறி அவர் விரும்பியதை அவருக்கு ஸமர்ப்பித்துவிட்டனர். விளங்காமையைக் குறித்த அவர்கள் ஒளியிழந்த முகாரவிந்தங்கள் அவர்கள் வாய்மொழி பொய் என்பதையும், அஸாத்யத்திற்கும் ஸாத்யத்திற்கும் இடையில் உள்ள நிலையின் ஸ்வரூபம் இன்னது என்று விளங்காது அவர்கள் தவிக்கின்றனர், என்பதையும் நன்கு வெளிப்படுத்தின. சித்துவித்தை அஸாத்யமாகவாவதிருக்க வேண்டும் அல்லது ஸாத்யமாகவாவது இருக்கவேண்டும். ஒரேகாலத்தில் இவ்விரண் விரோத அம்சங்கள் கலந்ததாக எவ்வாறிருக்கமுடியும்' என்று அவர்கள் ஸமயோசிதமறியாப் புத்திமாத்திரம்அவர்களைக் கலக்கியது.

ராஜ ஸேவக வ்ருத்தியில் தேராத ஒரு ஸதஸ்யன் எழுந்து இவ்வாறு அப்பொழுது கேட்டுவிட ஸதஸில் உள்ளோர் அநேகர் கோபித்த பம்பைப்போலச் சீறி, அவனை உட்கார்த்திவிட்டனர். இம்மாதிரி ஸதஸ்யர்கள் செய்ததால் ஒருவாறுமனம்தேறி அக்ராஸனாதிபதியவர்கள் 'எனக்கு என்ன அவ்வளவு தெரியாதென்றா எண்ணுகிறாய் அப்பா'? என்று மிகுந்த வெறுப்போடு கூறிவிட்டார். ஆயினும் விரோதாம்சமுடைய இருகுணங்கள் எவ்வாறு ஒரே விஷயத்தில் பொருந்தியிருக்கும் என்று அவர் மனம் அப்பொழுதும் குழம்பிக்கொண்டுதான் இருந்தது. அந்தத் தருணத்தில் அவர் அதிர்ஷ்டம் ஒரு பண்டிதர் அவரைக்காக்க வெளிவந்து விட்டார். 'இம்மாதிரியான விஷயம் நமது ச்ருதிகளிலும் காணப்படுகின்றது. ஒரு விஷயம் ஸாத்யமாயும் அஸாத்யமாயுமிருக்கலாம். அதற்கு அநிர்வசனீயம் என்றுபெயர்' என்று மிகுந்த அமைதியுடன் கூறிசிலச்ருதிவாக்யங்களை எடுத்துத் தொடுத்து விட்டார். இத்தேர்ந்த பண்டிதர் நோக்கம் யாது என்பது எனக்கு விளங்கவில்லை. 'ப்ரபஞ்சம் முழுவது இருந்தும் இல்லாததே. அதாவது இருப்பதுபோலத் தோற்றுவதே; அதுபோலச்சித்துவித்தைகளும் ஸாத்யமாயினும் அஸாத்யமே. அதாவது ஸாத்யமாகத்தோற்றுகின்றன அதாவது தந்த்ரமான மோசடி

கள், ப்ரமைகள்' என்பது அவர் அபிப்ராயமாயின் அது ஸரியானது என்று எமக்குத் தோற்றுகின்றது.

அவர் என்ன எண்ணி யிருந்தாரோ, திடீரென்று ஆராய்ச்சி தடைபட்டு நின்றுவிட்டது. இதை இவ்வாறு தடைபடுத்தியவன் அந்த நல்ல தருணத்தில் அங்கு நுழைந்த தபால்காரனே. இவன் புகுந்ததும் டிப்டி கலக்டெருக்கு பெரிய ஸலாம் செய்து ஒரு நீண்ட காகிதப் பையிலடைத்த கடிதத்தை அவரிடம் மஹா விநயத்துடன் ஸமர்ப்பித்தான். அதைத் திறந்து உள்ளே நோக்கியதும் தனக்கு வேலையில் ஒரு நிலை உயர்ந்திருக்கிறது என்று ஸங்கதி தெரிய வந்தது. உடனே அத்புதயோகி காலையில் கூறிய 'உனக்கு இன்று நன்மை உண்டாகும்' என்ற மொழி அவருக்கு ஞாபகம் வந்துவிட்டது. மிகுந்த ஸந்தோஷத்தோடு எழுந்து 'நான் கூறவில்லையா, சித்து வித்தைகள் ஸாத்யமானவை என்று? அவ்வாறேதான் உண்மையும் உள்ளது. காலையின் மஹான் ஸித்தபுருஷர் கூறியபடி திடீரென்று எனக்கு உத்யோகத்தில் ஒருபடி உயர்ந்திருக்கிறது. அவர் சக்தி அத்யத்புதம்' என்று ஆனந்தபரசவராகி உபந்யாஸித்தார். உடனே எல்லோரும் ஒரு தலையாக ஸித்தர் பெருமையைக் கொண்டாடத் தொடங்கி இப்பொழுது நடந்து அத்புதத்தைப்பற்றி சிறப்பித்துக் கூறலாயினர்.

சப்தம் செய்து மஹாத்மா நிஷ்டைக்குத் தடைசெய்யாது மெதுவாக மேலே சென்று யோகி வெளியே வந்துவிட்டாரா என்று பார்த்து வரும்படி இத்தருணத்தில் எல்லோரும் கூடி ஒருவனை அனுப்பினர். இவன் மேலே போனதும் யோகியின் பாம்பு அவர் இருந்த உள்ளைவிட்டு வெளியே ஊர்ந்து வரக்கண்டுவிட்டான். இவனுக்குப் பாம்பைக்கண்டால் அதிக பயம். நெஞ்சமாறு படபடவென்று அடிக்க ஓடோடியும் கீழே வந்து விழுந்து, தன் மூடத்தனத்தை வெளியிட வெட்கி, கேட்க ஆவலோடிருக்கும் ஜனங்களுக்கு ஒரு அத்புத கதையைக் கட்டிவிட்டான். 'எல்லோரும் கண்டுதிகைக்கும்படி ஸித்த புருஷர் அறை முழுவதும் ஒரு திவ்ய தேஜஸ் நிறைந்திருந்தது. நான் சாவித்தொளை வழியாக உள்ளே பார்த்துவிட்டேன். என்ன அத்புதம்! யோகியாரின் தேஹம் ஸுமார் மூன்றடி உயரத்தில் அந்தரமாக நின்றது. அவர் அங்கங்கள் எல்லாம் வேறுபட்டு, சுத்தப்படுத்த கழற்றி எரிந்திருக்கும் யந்த்ர பாகங்கள்போல் தலை ஒருபுறமும், கைகால்கள் வேறொரு புறமுமாகச் சிதறிக்கிடந்தன' என்று மிகுந்த படபடப்புடன் சொல்லி முடித்தான். எல்லோரும் ஆச்சர்ய பரவசராகி ஸ்தம்பித்து நின்றுவிட்டனர்.

அசைவற்று கொஞ்ச நாழிகை இவ்வாறு நின்றுகொண்டிருக்கையில் கணீர்! என்ற ஒருமணி ஓசை கேட்டது. அதுமாடியிலிருந்து வருவதாக உணர்ந்து எல்லோரும் அங்கே கூட்டமாகப் புகுந்து விட்டனர். யோகீச்வரர் உள் திறந்திருந்தது. அவர் எழுந்து நின்று பூஜை செய்யும் பொழுது இவ்வாறு மணி அடித்துக்கொண்டிருந்தார். அவர் பூஜை செய்து வந்த பொன்விக்ரஹம் ஸுமார் நாலடி உயரம் இருந்தது; அதற்கு வைரம் கெம்பு, பொன் முதலிய விலையுயர்ந்த வஸ்துக்களாகி ஆபரணங்களே நகசிகபரியந்தம் பார்ப்போர் கண்டு திகைக்கும்படி சொரிந்துவிட்டிருந்தது. அது அமைக்கப்பட்டிருந்து கோயில் புஷ்பத்தாலேயே அலங்கரிக்கப்பட்டு அனேக வர்ணதீபங்களால் சூழப்பட்டிருந்தது. பூஜாபாத்ரங்கள் எல்லாம் வெள்ளியாலேயே செய்யப்பட்டிருந்தன. பலவிதபுஷ்ப பலங்கள் வெள்ளிக்கூடையில் வாரி வைக்கப்பட்டிருந்தன. நாராயணய்யர் முதலியவர்கள் மேலே சென்றதும் இவைகளைக்கண்டு|ப்ரமை கொண்டவர் போலாயினர். இந்த மாயாயோகி எல்லோரையும் அழைத்துவரும்படி நாராயணய்யரை நோக்கி உத்தரவளிக்க அவர் கீழேசென்று எல்லோரையும் மேலே போகும்படி வருந்தி அழைத்தனர். மேலே விஸ்தாரமாக இருந்தபோதிலும் ஊரார் எல்லோரும் உள்ளே புகுந்து விட்டபடியால் எல்லோருக்கும் அப்பொழுது நிற்பதுகூடக் கொஞ்சகஷ்டமாகத்தானிருந்தது. யோகி அம்பிகைக்குத் தீபாராதனை நிவேதனம் முதலியவைகள் செய்து, ப்ரஸாதத்தைஎல்லோருக்கும் கொடுத்து விடும்படி உத்தரவளித்தார். உடனே அறைக்கதவு மூடப்பட கூட்டம் கலைந்துவிட்டது. அன்று நாராயணய்யர் கச்சேரிக்கு வரமுடியாது என்று தெரிவித்து மேலதிகாரிகளிடம் அனுமதி பெற்று வீட்டிலேயே தங்கிவிட்டார். அன்று யோகீச்வரருக்குப் பெரிய விருந்து செய்யப்பட்டது. மாலைப்பொழுதில் கழுத்தில் ஸர்ப்பம் ஊர்ந்து படமெடுத்து ஆட யோகீச்வரர் வாயில் திண்ணையில்வந்து உட்கார்ந்தார். உடனே மதுரை மஹாஜனங்கள் எல்லோரும் நாராயணய்யர் வீட்டு வாயிலில் வந்து கூடிவிட்டனர்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

நான் உமக்குத் தக்கவளல்ல! உம்முடைய உயர்விற்கும், பெருமைக்கு நிகருற்றவள் நான் அல்ல! ஹே நாதா! ஆகையாலே என்னை நீர் எளனம் செய்தீர்! கொடுஞ்சன்ம வாசனை அடைந்தும் உம்முடன் எளனத்திற்காவது ஆள் ஆகி விளங்கிய தென்பாக்கியம் அல்லவா? என் தலைவா! நான் கொடியளாகிலும், உமக்குகந்த கண்ணாட்டியாக விளங்கக் கூடியவளல்லளாயினும் உம்முடைய கிருபானோக்கத்திற்கு ஆளாகி நிற்கிறேன்! என்னைக் காக்கவேண்டும்! உம்முடைய காலில் வீழ்ந்து நமஸ்கரிக்கிறேன். அமலர் துணைகளில் வழியும் அன்பாகிய தேனையுண்டு எனக்கு அழியாதுமக்கு தொண்டு செய்யும் பாக்கியம் பெறச் செய்யும்."

என்று பிராட்டியார் தமது பூர்ணாபிப்பிராயத்தை வெளியிட்டு எம்பெருமானது காலில் வீழ்ந்து நமஸ்கரித்து, கைப்பொத்தி வாய்ப்பொத்தி ஓர் பக்கம் ஒதுங்கி நின்றாள். அப்பொழுது ஸ்ரீவாஸுதேவன், அவளை வாரி எடுத்து, அன்பென்னும் பாசத்தால் கட்டியணைந்து முத்தமிட்டு "அடீஇ! கற்புடையாய்! செல்வி! என் ஆசைக்கண்ணாட்டி! இத்தகைய மொழிகளை விரும்பியல்லவா உன்னை பரிகசித்தேன். நான் சொல்லியதையே நீ மீண்டுங்கூறினாய். நான் கூறியது உண்மையென்று ஸித்தாந்தப்படுத்தினாய். தன் அபிப்பிராயத்தை அறிந்து அவ்வாறு வெளியிடும் மனைவியைக்காட்டிலும் பாக்கியம் வேண்டுமோ? நன்னடத்தையுடையாய்! என்னிடம் கொண்ட உனது பக்திக்கு எதைத்தான் உனக்கு நான் தரலாகாது? உன்னுடைய விருப்பமென்ன? நீ எதைக்கேட்டாலும் கொடுக்க ஸித்தமா யிருக்கிறேன். அதை நீ என்றும் அடைவாய். குற்றமில்லா மணியே! நான் இன்றுதான் உனதிடம் பொதிந்து கிடந்த நாயகவாஞ்சையும் நாயக பக்தியும் உண்டேன். நான் கூறிய மொழிகள் வெருட்டியபோதிலும் என்பால் கொண்ட உன்னுடைய ஆசையும் அன்பும் சற்றும் சலியாது நின்றது. கிருஹஸுகத்திற்காகயார் ஒருவர் தவத்தினால் மோக்ஷப்பிரதனாகிய என்னை வழிபடுகிறார்களோ அவர்கள் என் மாயைக்காளாகிவிடுவர். பேறறிவுடையாய்! 'அற்றது பற்றெனில் உற்றது வீடு,' எனு மோக்ஷத்திற்கு மூலமாகிறஎன்னை, பவபந்தத்திற்குக் காரணனாகிய என்னை கேவலம் அல்பஸுகத்திற்காக ஈடுபடுபவர் அல்பஜீவராசிகளாய் உலகவாழ்க்கையில் உழலும் ஜன்மத்திற்கே ஆளாகத் தக்கவர். பத்தியிற் சிறந்தாய்! நீ காமமின்றி, இச்சையை ஒழித்து என்னிடம் ஈடுபட்டாய்; அவ்வாறு இருப்பது கெடுங்குணமே கோயில் கொண்டு விளங்கும் வஞ்சக ஜாலங்களிற் றேர்ந்த பாழ் எண்ணங்கொண்ட பெண்களால் செய்யக்கூடியதன்று. அவற்குத் தம்முயிர் தித்திப்பு; அதுவே இனிக்கும். தமது கணவரைத் தம் நயம் பொருட்டே பாராட்டுவர். அவர்கள் தம் வழிக்குடந்தையில்லாவிடில் தூறேற்றுவர். சிறப்புடையாய்! நீயோ நிஷ்காமமாக என்னை ஸேவித்தாய். பெருமித முடையாய்! உன்னைப்பெரும் பாக்கியம் என்னுடையதாய் இருந்தது. உன்னைப் போன்ற அன்பிற்கினிய பத்னியை இன்று உன்னிடந்தான் கண்டேன். அன்று அரச சபையிலிருந்த அரசர்களைக்கணிசியாது, என்னுடைய குணவிசேஷங்களைக் கேட்டு, என்னை முழுமனத்தோடு அடைய வேண்டும் என்ற ஆவலால் பிராஹ்மணனை என்னிடம் தூது ஏவினாய். உன்னுடன் பிறந்தான் உன் கலியாணக்காலத்து முகவிகாரமடைந்த காலத்தும், மற்றொரு ஸமயம் சூதாடுங்காலத்தில் உயிரொழிந்த காலத்தும், உன் மனோதைர்யத்திற்கெதிர் நிற்க முடியாமலடித்துவிட்டாய். மனத்திற்குள் பொங்கி பொங்கி புகைந்து துஃகாக்ராந்தையாய் என்னை அடைய தூது விட்டாய். யானின்றி உலகமில்லாதிருந்ததாக எண்ணி உனது உயிரையும் விடத் துணிந்தாய். உன்னுடைய செயலெல்லாம் எமக்கினிய. உன்னுடைய நடத்தைஉனக்கே உன்மனதுக்குள்ளே துஃகத்தை, எங்கு எம்மைப்பிரிக நேர்ந்திடுமோ என்று, ஒடுக்கி எம்முடை ஆலைமையை சொந்தமாக இருக்கட்டும்" என்று தன் கண்ணில் ஆநந்தபாஷ்பம்பொங்க புளகாங்கிதனாகி பதில்கூறினார்

**ஸ்ரீ சிருங்கேரி மட குருபீடம்.**—ஸித்தியடைந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளுக்குப் பதிலாக, ஸ்ரீ **சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளுக்கு** பட்டச்சூட்டு வைபவம் சிருங்கேரி மடத்தில், பல வித்வான்களின் இடையில், எல்லோரும் கொண்டாட, வெகு கோலாஹலமாய் நடந்தேறியது. பிரம்மசரியத்தைக் கைக்கொண்டு, பெங்களூரில் சம்ஸ்கிருத பாடசாலையில் சாஸ்திராப்பியாசம் செய்துவந்த 19 வயதுள்ள இந்த புதுக்குரு, ஒழுக்கம், சாந்தம், கல்வி முதலியவைகளில் சிறந்தவர் என்பதை ஜனங்கள் மனதில் பதியும்படி செய்துவிட்டார். காலஞ்சென்ற ஸ்வாமிகள் அவர்களின் மனோபீஷ்டப்படி **சந்திரசேகர பாரதீ** என்ற நாமத்துடன் புது ஸ்வாமிகள் விளங்கி வருகிறார்.

*
* *

**ஸ்ரீ மீனாக்ஷியம்மன் திருக்கல்யாணமும், அழகர் உத்ஸவமும்.**—இது வருஷந்தோறும் மதுரையில் சித்திரைமாதத்தில் நடந்துவரும் ஒரு திவ்ய உத்ஸவம். இதற்காகவென்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் பற்பல விடங்களிலிருந்தும் வருகிறார்கள். ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு திருக்கல்யாண மஹோத்ஸவம் முடிந்ததும், அழகர் மலையிலிருந்து, ஸ்ரீ **ஸௌந்தர ராஜப்பெருமாள்,** கள்ளவேஷத்துடன், சித்திரா பௌர்ணமியன்று மதுரை நோக்கி வருதல் மிகவும் நேத்திரானந்தத்தைக் கொடுக்கக்கூடியது. அழகர் கள்ள வேஷத்துடன் வரும் படமொன்று இந்த மாதப் பத்திரிகைக்கு அனுபந்தமாக அனுப்பி யிருக்கிறோம். இந்தத் திவ்ய உத்ஸவங்களைப்பற்றி மற்றோர் சஞ்சிகையில் தக்க ஆதாரங்களைக்கொண்டு விரிவாய் எழுதுவோம்.

*
* *

**அப்பாலோபந்தர் ஞாபகச்சின்ன கட்டிடம்.**—சக்கரவர்த்தி தம்பதிகளின் விஜய ஞாபகமாய் பம்பாய் அப்பாலோ பந்தரில், சலவைக் கற்களாலே ஓர் கட்டிடம் கட்ட எட்டு லக்ஷ ரூபாய் ஆகுமென்று மதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில், பம்பாய், இந்தியா கவர்ன்மெண்டார்கள் 5 லக்ஷம் ரூபாய் கொடுக்கிறார்கள். மீதி 3 லக்ஷம் ரூபாயும், பம்பாயில், பிரபல வர்த்தகரும், உதாரசிந்தையுமுள்ள ஸர் **ஜேகப் ஸாஸூன்** என்பவர் தான் ஒருவரே கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

*
* *

**பர்மா வியாபாரம்.**—சென்ற வருஷத்தில் பர்மாவிலிருந்து 3½ கோடி ரூபாய் சாதாரண மணியார்டர் மூலமாக வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

*
* *

**சென்னை ராஜதானி கல்வி இலாகா.**—சென்னை ராஜதானி கல்வி இலாக்காத் தலைவர் அனுப்பிய (1910-11) வருஷத்திய ரிப்போர்ட்டின் பேரில் சென்னைக் கவர்ன்மெண்டாரின் ரிமார்க்கு:—"ஆனரெபில் டாக்டர் போரன், ஆனரெபில் மிஸ்டர் ஸ்டோன், முதலிய வித்யா இலாகா ஆபீஸர்களின் வேலைத்திறமையைக் கண்டு கவர்ன்மெண்டார் களித்து, அவர்களுக்கு வந்தனமளித்திருக்கின்றனர். பிரதம படிப்பின் அபிவிருத்தியில் செய்திருக்கும் ஏற்பாடும், போதனா முறையில் காட்டிவரும் ஊக்கமும் மெச்சத் தக்கவை. ஆண்கள் பெண்கள் அடங்கலான உபாத்திமார்களின் போதனாமுறைப் பாடசாலைக்கும் பிரதம படிப்பு விஷயமாய் லோக்கல்போர்டாருக்கும் முனிசிபாலிடியாருக்கும் பண உதவிசெய்ய முன்னுக்கு வரவேண்டியது அவசியம்."

*
* *

**ஓர் எரிமலையின் ஆரவாரம்.**—பனமாவிலுள்ள கிரிக்குவி எரிமலை இப்போது எரியத்தொடங்கியதென்றும், அது கக்கிய நெருப்புச் சுவாலையால் ஆயிரக்கணக்கான ஜனங்களிறந்தன ரென்றும், கிராமங்கள் பல நாசமாயின வென்றும் மொபைலுக்குப் பழங் கொண்டு சென்ற ஒரு கப்பலால் தெரிகின்றன.

*
* *

**ஒரு ஜப்பான் டாக்டரின் அபிப்பிராயம்.**—மெலிந்து சுருங்கியிருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாக விருக்கின்றன என்றும், பூரித்திருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாக விருப்பதில்லை என்றும், பெண்களது உடம்பிலும் புருஷர்களது உடம்பில் கிருமிகள் மிகுதியாக விருக்கின்றன என்றும், குளிர்ந்த நீரில் ஸ்நானஞ் செய்தால் கிருமிகள் குறைந்துபோமென்றும் சாராயங் கலந்துள்ள குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்வது மிகவும் நலமாமென்றும் ஒரு ஜப்பான் டாக்டர் கூறுகின்றார்.

*
* *

**ஒரு நட்சத்திர விசேஷம்.**—இம்மாதம் 11-ந் தேதி இரவு 9-மணி சுமாருக்கு ஒரு நட்சத்திரம் அதிக காந்தியோடு அடி பெருத்தும் நுனி சிறுத்தும் நீலமேக வர்ணப்பிரகாசத்துடன் ஆகாயத்தினின்றும் விழுந்தது. அது கீழே விழுந்தபோது ஜோதியொன்று காணப்பட்டது. இதன் விசேஷ மின்னதென்று தெரியவில்லை.

*
* *

**ஒருயர்தரப் பதவி.**—வியவசாய விலாக்கா ரசாயினி மிஸ்டர் ஹாரிசன் என்பவர் இம்மாதம் 17-ந் தேதியிலிருந்து விடுமுறை வாங்கி யிருப்பதனால், அவர் வேலையை அவருடைய பிரதம அசிஸ்டெண்டாகவிருக்கும் மிஸ்டர் ராமசாமி சிவன் செய்யுமாறு கவர்ன்மெண்டார் உத்தரவளித்திருக்கின்றனர். இதுகாறும் இவ்வேலை ஹிந்துக்களுக்குக் கொடுத்ததேயில்லை. இந்த நியமனம் சிறப்புடையதேயாம்.

## புத்தக வரவு
## BOOKS RECEIVED

**கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து.**—ம-ா-ா-ஸ்ரீ, R. S. நாராயண ஸ்வாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அவர்கள் எழுதியது.—விலை அணா 10.

**பிரேமகாந்தன்.**—இது தாமரைப் பெண் என்னும் ஓர் பெண்பாலால் எழுதப்பெற்றது.—விலை அணா 12.

## ஸித்திபெற்ற ஸ்ரீசிருங்கேரி ஸ்வாமிகள்
## THE LATE SRINGERI SWAMIGAL

சீறும் பேய்மதச் செருக்கொழித் துணர்த்திட்டு
மீறு நாத்திக மித்தையொ ழித்தினித்
தூறு ஞானச் சுனையிடை யாழ்ந்துயர்ப்
பேற ளித்த பெருநிதி யார்யனே !

கூறு மாயைக் குலங்க ளறுந்திட
தேற ஞானமா வெட்டியிற் சேதித்து
நாறும் ப்ரம்ஹத்தின் நாற்றம் பொலிதர
வீறு சான்ற வியநிதி யார்யனே !

சாந்தந் தண்மை தயையுடன் ஆர்வமும்
காந்த மென்ன கவர்தரூஉம் பண்பின்வே
தாந்தத் துச்சி யினின்மொழித் தாவிநின்
றேந்த லின்னருள் பொழிநிதி யார்யனே !

மனவி சாலமும் மதத்து விசாலமும்
நினைவின் யாவர்க்கு நன்மைநெ றிபடூஉம்
கனவின் வாழ்க்கையைக் காற்றெறிந் திளமையே
முனிவழிக் கொண்ட முழுநிதி யார்யனே !

வாதர் தம்மையவ் வாதி வகைப்படித்
தோது வித்துய ருண்மையை யூட்டிப்புன்
கோது நீக்கி குணத்தை யளித்தருண்
வேத நாயக மெய்ந்நிதி யார்யனே !

ஆதி சங்கர வார்ய னவதரித்
தோது காலடி யூரிற்கோ யிற்கட்டி
போத கன்பெயர் பொற்பின் விளங்குற
நீதி செய்யுநன் னெறிநிதி யார்யனே !

வடமொ ழிக்கென மாண்பின் கலாசாலை
திடமு றச்செய்து செம்மையின் இந்தியர்
கடப டந்தனைக் கழித்துநன் வழிபெற
வடத ருக்குரு மாண்பரு ளார்யனே !

அன்பின் பிண்டமென் றுரும் பழிச்சிட
முன்பு செய்திடுமொய்வரக் குணத்தினன்
புன்பு லன்றனை போக்கி மனமொழித்
தின்பங் காண்டிடு இன்னரு ளார்யனே !

முத்தி பெற்றனன் முன்னில் மயங்கினன்
அத்வி தீயம தாகி விளங்கிமெய்ப்
பத்தும் போக்கி மெலிந்து பரனென்றி
நித்தியம் பெற்ற நின்மல வார்யனே !

நவாபி சென்ம நலத்தை யறுத்துப்பொன்
தவாபிறைச் சந்த்ர மௌளியின் சார்ந்தனன்
சிவாபி நவநர சிம்ஹ பாரதிப்பெயர்
தவாபி யுத்தனும் சங்கரா சார்யனே !

## H. E. LORD CARMICHAEL Ex. GOVERNOR OF MADRAS.

## சென்னை மாஜி கவர்னர் கனம் கார்மைகேல் ப்ரபு

கிங்குல் நைய கடிதினெதிற் வரூஉம்
மங்குல் சூரன்றன் மாண்பினி னலண்டவவ்
வங்கஞ் செல்லும் மகானவரென்றுமே
மங்க ளம்பெற வாழ்த்திதும் வையமே !

சொல்லும் பொருள் உதம தாழந் தொடர்ந்தெங்கும்
கல்லு மண்ணுங் கடந்தெரிந் தார்மணி
ஒல்லை யிற்கொளு முள்ளத்தின் வன்மையன்
எல்லை யிற்கரு ணை யெரி யின்பத்தான்.

எண்ணு மாந்தரி டைக்கொண்ட வெல்லையிற்
கண்ணு மெங்குங் கலந்துண்மை கண்டுப்பின்
நண்ணு நெஞ்சின் வழியி னடந்திடு
மண்ணை யாளு முறைமை வழிப்பட்டோன்.

நுண்ணுங் கருத்தெனக் கைக்கொண் டிவ்விந்தியர்
எண்ணு மெண்ண மியாவு வுணர்ந்திட
பண்ணை யாள்முதல் படித்தவ ரீறிவர்
நண்ணி ஞாயங்காண் நன்மை பயந்தவன்.

முன்ன ரிராமன் முதற்பெரு மேந்தலார்
சொன்ன முறைமையின் தூங்கவி ஞாயங்காண்
மன்ன வன்வழி மன்னு மகானிவன்
என்ன நன்மைதான் இன்பத்தி யற்றிடான் ?

ஞாய மென்னும் படைகொடு நாடிய
மாயந் தங்களை மாற்றி மனிதற்கென்
றூய சட்டம னுவள வும்படா
தூய நன்னெறி துடக்கியச் சீரினன்

திங்க ளைந்திங்கிருப்பினுஞ் சீரிய
பொங்கு மன்பென் புயற்பெய்தந் தாசையின்
சங்க மூதிட தண்ணளி யாட்டியிங்
கெங்கு மன்புப்பைங் கூழ்வளர்க் கேண்மையோன்

தீங்கு மாசை தண்ணிதி யாகிக்க
ளங்க மில்மதி யாமென லாலித்து
பொங்கு மன்பின ளக்கர் பூரித்திட
நங்கு கருணை யளிக்கு நயத்தினன்

கீழ்மை யறுத்துநற் கேண்மை யுயர்த்தியும்
ஆழ்ம னத்தைக்கொண் டன்பைப் பரப்பியும்
ஊழ்வலிக் குமுண்டோ விந்த உண்மையென்
றேழ்பெ ரும்புவி யெண்ண விளங்கியோன்

கார்மைக் கொண்டலென் அன்பினிற் காண்டிடும்
நீர்மை என்னு நெடுமருள் மின்னிட
சீர்மையி னுசைச் செழிமழைப் பெய்த ரூஉம்
கார்மை கேலென் கனத்தினன் காண்டியால்.

“ விவேக போதினி ” அநுபந்தம்



சேஷ சயனம்.



க்ஷீராப்தி நாதர்

# விவேக போதினி

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”—— திருவள்ளுவர்

தொகுதி IV } பரீதாபிஸூ சித்திரை : 1912-ஸூ மேமீ { பகுதி 11

## கீதா மஹான்கள்

## THE GREAT MEN OF THE GITA

### 9. ஆத்மஞானி (அத். 7. சுலோ. 16—19:3)

நான்கு வகையான நல்லோர்கள் என்னைப் பற்றுகின்றனர். அவர்கள், துக்கத்தில் மொத்துண்டவர்கள், உண்மையை உணர விரும்புபவர்கள், பொருள் விரும்புவோர், ஞானி, ஆகிய இவர்களே. இவர்களுள் ஒன்றிலேயே மாறுப் பற்றுடன் ஒருமைப்பட்டு நிற்கும் ஞானியே சிறந்தவன். ஞானிக்கு என்னிடத்திலும் எனக்கு ஞானியிடத்தில் மிகுந்த விருப்பம் உண்டு. எல்லோரும் பெருந்தன்மை உடையவர்களாயினும், மனம் நிலைபெற்று என்னையே பரமபதமாக அடையும் ஞானியே ஆத்மா என்று யான் மதிக்கிறேன். பல பிறவிகளின் முடிவில் ஞானி ‘எல்லாம் வாஸுதேவன்’ என்று அநுபவித்து என்னை அடைவான். இந்த மஹாத்மா கிடைப்பதரிது. ஆயிரம்பெயர்களுள் ஒருவன்தான் ஸித்தி பெற முயல்கின்றான். இம்மாதிரி முயன்றுஸித்தி பெற்றவர்கள் அநேகருள் ஒருவன்தான் என்னை உள்ளபடி உணர்வன்.

### 10. ப்ரமநிஷ்டன் (அத். 9. சுலோ. 13-15)

மஹான்கள் தெய்வ ஸம்பத்தாகிய ஸத்வ குணத்தைப் பின்பற்றி வேறொன்றிலும் மனம் செல்லாது என்னை அழிவில்லா ஆதிகாரணமாக உணர்ந்து வழிபடுகிறார்கள். என்னைப்பற்றியே இடைவிடாது பேசிக்கொண்டு, விடாமுயற்சி, திருடவிருதம், ஆகிய இவைகளுடன் என்னிடம் நிலைபெற்று என்னைப் பக்தியாக வணங்குகின்றனர். இவர்களுள் சிலர் என்னை ஞானமாகிய யக்ஞத்தால் வழிபட்டு, எங்கும் நோக்குபவனாகி, ஒன்றாயும் பலவாயும் நிற்பதாக மதித்து வணங்குகின்றனர்.

### 11. ஸத்குண ஸம்பூர்ணன்
### (அத் 13. சுலோ. 7—11. அத் 16: சுலோ. 1—3)

பணிவு, அடக்கம், குற்றமின்மை, பொறுமை, நேர்மை, ஸத்குருஸேவை, பரிசுத்தம், உறுதி, மனமடக்கல், விஷயப்பற்றின்மை, அகங்காரமின்மை, பிறப்பு இறப்பு மூப்பு பிணி துக்கம் இவைகளில் தோஷதிருஷ்டி, பற்றின்மை, ஈஷணத்ரயமின்மை(மண் பெண்பொன் ஆகிய இவைகளில் பற்றில்லாதிருத்தல்). விருப்பு வெறுப்பு உண்டாக்கக் கூடியவைகள் வந்த விடத்தும் ஒரே தன்மையுடனிருத்தல், என்னிடம் மாறா பக்தி, தனித்திருக்க விரும்புவது, பாமரர் சேர்க்கை விரும்பாமை, ஆத்மஞானத்தில் நிலைபெறுதல், உண்மை ஞானத்தின் முடிவை உணர்தல், நிர்பயம், மனத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைபெறுதல், கொடை, மனஅடக்கம், ஆராதித்தல், தன் வேதம் ஓதுதல், தவம், நேர்மை, அஹிம்ஸை, ஸத்யம், கோபம் அடக்குதல், துறவு, சாந்தம், புறஞ்சொல்லாமை, ஜீவ காருண்யம், பிறர்பொருள் விரும்பாமை, மனக்கனிவு, முன்வாராமை, சஞ்சலமின்மை, தேஜஸ், கோபமின்மை, மனோதைர்யம் பரிசுத்தம், வெறுப்பின்மை, கர்வமின்மை ஆகிய இவைகள் நிறைந்தவனே ஸத்குணபரிபூர்ணன்.

இப்படிஞேருவிதமாக மஹானை கீதையில் வர்ணித்திருக்கின்றன. அத்யாய முறைமைப்படி அவைகளைக்கூறப்புகுவோம். (1)ஸ்திதப்ரஞ்ஞன், (2) க்ருதக்ருத்யன், (3) ப்ருஹ்மஞானி, (4) ஸந்யாஸி, (5)ஸமதர்சி, (6) யோகி, (7) ஆத்மஞானி, (8) ப்ருஹ்மநிஷ்டன், (9) பவத்பக்தன், (10)ஸத்குண பூர்ணன் (11) திரிகுணாதீதன் ஆகிய ஸம் லக்ஷணங்கள் இவர்கள் முறையே 2, 3, 4, 5, 5, 6, 7, 9, 12, (13 : 16), 14 ஆகிய அத்யாயங்களில் அமைந்து கிடக்கின்றன. இவர்கள் ஸம்பந்தமான விஷயத்தைப் பின்னர் ஆராய்வோம்.

விவேக போதினி

தொ 4] பரிதாபி௵ சித்திரைமீ [பகுதி 11

# விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### 6. சேஷசயனம்

இந்த விக்ரஹம் ஒரு திவ்ய புருஷன் சங்கு சக்ர கதாபத்ம முதலிய திவ்ய ஆயுதங்களையும் ஆபரணங்களையும் அணிந்து ஐந்துதலைப் பாம்பின் தேஹத்தில் படுத்துக்கொண்டு ஒருவிதநித்திரையிலிருப்பதாகவும், பாம்பு படமெடுத்துக் கொடை பிடிப்பதாகவும், கால்மாட்டில் மஹாலக்ஷ்மி என்ற தனது அம்பிகை உட்கார்ந்திருப்பதாகவும் அமைந்துள்ளது. இது மஹா விஷ்ணுவின் விக்ரஹங்களுள் மிகச் சிறந்தது. இதில் ஸ்ருஷ்டி ரஹஸ்யங்களும் அதற்கு அப்பாற்பட்ட அரிய பெரிய விஷயங்களும் அடங்கியுள்ளன. இங்கு சயனித்திருக்கும் புருஷன் பரம்பொருளாகிய கடவுள். இவர் தூங்கும் தூக்கம் ஸாதாரணமாக நாம் தூங்கும் அக்ஞானத்தூக்கம் அல்ல. இது தோன்றவே இதற்கு **யோக நித்ரை** என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. இதை **அறிதுயில்** என்று தமிழில் கூறலாம். படுத்துவிட்டால் திக்கு திசை விவரம் பின்னர் ஒன்றும் இல்லாததால், இங்கு படுத்திருப்பது நகசிக பரியந்த எங்கும் பேதா பேதமின்றிப்பரம்பொருள் கலந்திருப்பதையும், உறங்குவது மேல் கீழ் பக்கங்கள் எல்லாம் நிறைந்து ஏக ரூபமாகப்பரம்பொருள் பூரணமாகவிருப்பதையும் உணர்த்தும்.

கணேசர் முதலிய விக்ரஹங்களது ஆயுதங்களுள் அடங்கியிருக்கும் உட்கருத்துப்போலவே இங்குள்ள ஆபரணம் முதலியவைகளுக்கும் உட்பொருள்கள் உண்டு. இவர் ஆபரணங்கள் யாவை? மாரில் **கௌஸ்துபமணி**, நெற்றியில் **ஸ்ரீவத்ஸம்** என்றமரு, **பாஞ்சஜன்யம்** என்ற சங்கு, **சாரங்கம்** என்ற வில், **ஸுதர்சனம்** என்ற சக்ரம், **வைஜயந்தி** என்ற கண்டமணி, **அச்யுதம்** என்ற கத்தி, **நந்தகம்** என்ற கதை ஆகிய இவைகளேய.

கௌஸ்துபமணி ப்ரபஞ்சத்துள் ஆடும் பரஞ்ஜியோதியாகிய அந்தராத்மாவையும், நெற்றியிலுள்ள ஸ்ரீவத்ஸம், ஸகலத்திற்கும் ஆதாரமாகிய **ப்ரதானம்** என்ற தத்வத்தையும், கதை என்பது, ஓயா சஞ்சலம் நிறைந்த உலக வாழ்வாம் பெரும்போரில்நம்மைத்தாக்கும் ஸுகதுக்க ரூபமான அம்புகளைத் தடுக்கும் புத்தியையும், சங்கம், ப்ரபஞ்சம் சப்தத்திலிருந்து வெளிப்பட்டது என்பதையும், வில் ப்ரபஞ்ச விஷயங்களை உணரும்இந்திரியாதிகளையும், சக்ரம் ஸதாஓயாது சலித்துக்கொண்டு தொன்றுதொட்டிருக்கும் மனத்தையும், முத்து கெம்பு, பச்சை, வயிரம், வயிடூர்யம் ஆகிய பஞ்சரத்னத்தாலாகிய வைஜயந்திமணி பாஞ்சபூதிகமான ப்ரபஞ்சத்தையும், உணர்த்தும். அறிவு தொழில் ஆகிய இவை இந்திரியங்களாகிய வில்லிலிருந்து வெளிப்படும் பாணங்கள். இம்மாதிரி கிளம்பி க்ஷணே க்ஷணே மாறிக்கொண்டிருக்கும் இவைகளை அரிந்து பறக்கடிக்கக்கூடிய கத்தி, அச்யுதம் என்பதே. ப்ரபஞ்ச வ்யாபாரத்தின் மூலமான மாயை பகவானிடமே அடங்கியுள்ளது. அவர்சங்கத்தால் தான் ஸ்ருஸ்டி கர்த்தா என்பதைக்குறிக்கிறார். இந்த ப்ரபஞ்சமாகி அசுவத்த விருக்ஷத்திற்கு, வேதங்களே இலைகள். இவைகள் இலைகளைப்போல நிழல் தருவதால் இவைகளுக்கு இப்பெயரிடப்பட்டன. புத்தியே பெருங்கிளைகள், அகங்காரம், பஞ்சபூதங்கள், இந்திரிய ஸ்தானங்கள் ஆகிய இவைகளே சிறுகிளைகள், இந்திரியங்கள் பொந்துகள், பாப புண்ணியங்கள் புஷ்பங்கள், ஸுகதுக்கங்களே பழங்கள். இதை நன்றாக வெட்டி எறிய சக்தியுடையது அச்யுத மென்ற கத்தி. இது அஞ்ஞானம் என்ற உரையால் மூடப்பட்டிருக்கிறது. ஆதலால் நாம்மரத்தைச் சுற்றிச்சுற்றி வருகிறோம். வில்லாகிய அகங்காரம் பாணங்களாகிய உலகவ்யாபாரம், அக்ஞானமாகிய கத்தியுறை இவைகளால் ப்ரபஞ்சம் தத்தளித்து வருவதெல்லாம் இக்கடவுள் லீலையே.

இக்கடவுள் கால்மாட்டில் உட்கார்ந்திருக்கும் **லக்ஷ்மி** உலக ஆடம்பர ஸுகநிலையம் ஆகிய கடவுளது விபூதி ஆதலால் இவளை ஸம்ஸார ஆடம்பரமென்றும், ஜகஜ்ஜாலவைபவம் என்றும் புராணங்கள்கூறுகின்றன. இவள் கடவுளின் கால் அதாவது ஏகதேசம் ஒதுங்கிய பாகத்தில் ஒட்டியிருப்பவள். இந்தபாதம் அவித்யாபதம் என்னப்



படும். இவளால்தான் மாயாமயஜகத் உண்டாகி நிலைபெற்றுத்தோற்றுவது.

இவ்வாறு எல்லாவற்றையும்அடக்கி உலகமாகிய லீலை ஸரிவர நடந்தேறி ஜீவராசிகள் உய்யும் வண்ணம் தூங்கும் பிரான் ஐந்துதலை நாகத்தின்மேல் அமர்ந்திருக்கிறார். பாம்பு விஷஜந்து. மிகக் கோபமுடையது, எல்லாத் தோற்றமும் ஒடுங்குங்கால் அவை தாமத குணத்தில் அடங்க அதுவே மேலிட்டிருக்கும். இதை அடங்கி தாமதகுணம் மேலிட்ட அசித்தை ஸர்ப்பம் உணர்த்துகிறது. இது பகவானுக்குக் கீழ்ப்படிந்து அடங்கிக்கிடக்கும், ஆதலால் அவர் படுக்கையாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பாம்பு அலையில்லாப் பாற்கடலில் அமைந்துள்ளது. பால் எவ்வாறு ப்ராணிகளை வளரச்செய்யும் திறனுடையதோ அதுபோல, மாயையாகிய லக்ஷ்மி, அசித்தாகியப்ருகிருதிஎன்றபாம்பு எல்லாம் பகவானுள் அடங்கியிருக்கும் நிலையே இந்தப் பாலாகிய கடல். இது அலையற்ற திரவமாகிய பாலாகவிருப்பது ஒருவித மாறுபாடின்றிச் சூன்யம்போலிருந்து மேல் ப்ரபஞ்ச ஒழுங்கிற்குக் காரணமாக விருப்பதை உணர்த்தும். ஆகவே சேதனம் அசேதனம் ஆகி நானாவாகக்காணப்படும் எல்லாம் ஒடுங்கி ஒவ்வொன்றும் பரம்பொருளாகிய கடவுளுக்கு ஒவ்வொரு ஸாதனமாக அவருள் அடங்கி நிற்கும் என்பது இதிலிருந்து வெளிவரும். ப்ரபஞ்சம் எல்லாம் பரம்பொருளிலிருந்து வெளியாகி அவரிடம் நிலைபெற்று முடிவில் அவரிடமே ஒடுங்கும் என்பதை இந்தச்சேஷசயனவிக்ரஹம் நன்கு உணர்த்தும். ஆதலால் 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று கூறியபடி இந்த அற்புத விக்ரஹத்தில் ப்ரபஞ்ச விஷயம், அதிலிருந்து ஜீவராசிகள் விடுபடுவதற்கு வேண்டிய ஸாதனங்கள், அப்பொழுது ப்ரபஞ்ச விஷயங்களைக் கருதவேண்டிய விதம் எல்லாவற்றையும் அடக்கியுள்ளார் நம்முன்னோர்.

இம்மாதிரியாகப் பரம்பொருள் நிலைக்கு ஈடுபட்டே புராணவிஷயங்களுடன் பொருத்தி சீர்காழி அருணாசலக் கவிராயர் ஸ்ரீரங்கம் சேஷசயனப் பெருமாளைத் துதித்திருக்கிறார்;—

**கீ-மோஹனராகம்-ஆதிதாளம்**

பல்லவி

ஏன்பள்ளி கொண்டீர் அய்யா
ஸ்ரீரங்கநாதரே நீர்
ஏன் பள்ளிகொண்டீர் அய்யா.

அநுபல்லவி

ஆம்பல் பூத்தசய பருவதமடுவிலே
அவதரித்து இரண்டாற்று நடுவிலே (ஏன்)

சரணங்கள்

கோசிகன் சொல் குறித்ததற்கோ
அரக்கி குலையில் அம்பு தெரித்ததற்கோ
ஈசன் வில்லை முறித்ததற்கோ
பரசுராமன் உரம்பரித்ததற்கோ
மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழி நடந்த இளைப்போ
தூசிலாத குகன் ஓடத்திலே கங்கைத்
துறைகடந்த இளைப்போ.
மீசரமாம் சித்ரகூட சிகரக்கல்
மிசைகடந்த இளைப்போ.
காசினிமேல் மாரீசன் ஓடிய
கதிதொடர்ந்த இளைப்போ—ஓடிக்
களைத்தோ தேவியைத் தேடி
இளைத்தோ மரங்கள் ஏழும்
தொளைத்தோ கடலைக்கட்டி
வளைத்தோ இலங்கை என்னும்
காவல்மா நகரை
இடித்த வருத்தமோ
ராவணாதிகளை
அடித்த வருத்தமோ (ஏன்பள்ளி)

மதுரையிலே வருங்களையோ முதலை
வாய்மகளைத் தரும் களையோ
எதிர் எருதைப் பொருகளையோ கன்றை
எடுத்தெறிந்த பெருங்களையோ
புதுவை ஆனமுலையுண்டு பேயின் உயிர்
போக்கி அலுத்தீரோ!
அதிர ஓடிவருங் குருவி வாயை யிரண்டாக்கி அலுத்தீரோ.
துதிசெய் காலினால் காளிங்கன் மணிமுடி
தாக்கி அலுத்தீரோ—மருதம்
சாய்த்தோ ஆடு மாடுகள்
மேய்த்தோ சகடுருளை
தேய்த்தோ கஞ்சன் உயிரை
மாய்த்தோ அர்ச்சுனனுக்காச்
சாரதி யாய்த்தேர்
விடுத்த வருத்தமோ
போரிலே சக்கரம்
எடுத்த வருத்தமோ. (ஏன் பள்ளி)

இனி சேஷசயன விக்கிரஹத்தின் ஞானபரமான உட்பொருளை எடுத்துரைக்கப்புகுவோம்.

சயனித்திருக்கும் புருஷன் அவன் ஆபரணங்கள் முதலியன பாதத்திலிருக்கும்லக்ஷ்மி ஆகியஇவைகள் எல்லாம், இப்பொருளுக்கும் பொருத்தமே. இவைகளால் ஆசார்யரூபமான அந்த விக்கிரஹம் தன்னிலே நன்கு முமுக்ஷுவுக்குணர்த்தி, பிரபஞ்சவிஷயங்கள் தனக்கு லீலாமாத்ரம், எல்லாம் அஹங்காரமாகிய அம்பைப் பொருத்து, சக்ரமாகிய ஓயாச் சலமுள்ள மனத்தால் வளருவது, இதுவும் இதன் காரியங்களும் புத்தி என்னும் கதை, அச்யுதம் என்னும் கத்தி ஆகிய இவைகளால் தடுக்கப்பட்டு அறக்களையப்பட்டால் தன் உண்மைநிலையாகிய பரமநிலையை அடையலாம். அப்பொழுது மாயை ஒதுங்கி விடுவாள்' என்று உபதேசிக்கிறது.

சேஷன், பாற்கடல் ஆகிய இவைகளில் தான் பெரிய மாறுபாடு ஞானபரமான உட்பொருளில் காணப்படுகிறது. இம்மாதிரி மாயை ஒதுங்கி சாந்தமாக நிற்கும் நிலை எங்கு ஏற்படும்? என்று சங்கிக்கும் முமுக்ஷுவுக்குத் தகுந்த விடை இவ்விரண்டும் நன்றாகக் கொடுக்கும்.

முதலில்பாற்கடலின் விஷயம்எடுத்துக்கொள்ளுவோம். இதன் உண்மைப்பொருள் பரம ஆசார்யனை அடுத்து அனுபவித்தறிந்தாலன்றி முற்றிலும் விளங்காது. ஆனால் பொத்தி வைக்கவேண்டும் என்ற ரஹஸ்யம் ஒன்றும் இல்லை. இவ்வாறு பொத்தி வைத்து ஒரு ஸங்கமும் மதவிஷயங்களில் ஏற்படுத்தலாகாது. ஆதலால் வாக்கிற்குளட்டியமட்டும் கூறிஇதன் விஷயத்தை ஒருவாறு அறிவிக்கப் புகுவோம். தியானம் செய்து வருங்கால் தேஹப்ரக்ஞை, மனப்ரக்ஞை, இதற்கப்பால் தோன்றும் சூன்யப்ரக்ஞை இவை எல்லாம் சுழன்ற விடத்திலேயே இப்பாற்கடல் நன்கு விளங்கும். இங்கு கூறப்பட்டுள்ள சூன்யப்ரக்ஞையைத் தாண்டுவது மிகக் கஷ்டம். இங்கு காத்துக்கிடந்து காலத்தை எதிர்பார்த்து இழும் நோக்காது பரபரப்புடன இருப்பதற்கு வேண்டிய தீரம், பொறுமை முதலியன மற்றைய எந்த விஷயத்திற்கு வேண்டியதில்லை. இவைகளுக்கே முமுக்ஷுத்வம் என்று பெயர். ஜகத் தோற்றமும் நீங்கி, இதை தாண்டினால் தான் பாற்கடல் அனுபவம் வெளிப்படும். சர்க்கரையின் தித்திப்பை எவ்வளவு வர்ணித்து போதிலும், அது இன்னபடி இருக்கும் என்று முற்றிலும் உணர்த்திவிட முடியுமா? தின்று பார்த்தாலன்றோ விளங்கும். இதுபோலப் பாற்கடல் அனுபவம் வருங்கால்தான் அதன் ஒப்புயர்வில்லாச் சிறப்பு நன்கு விளங்கும். அதை வேத வாக்கியங்களால் வர்ணிக்க புகுந்தால்:—

'இது இனிமையான சஞ்சலமற்ற அமிருதமயமான சாந்தம். இதில் வர்ணாச்ரம பேதம், வாழ்வு மரணம், பந்தமோக்ஷம், ரூபாரூபம். குணம்,குறி, நாமரூபம் முதலிய துவந்தவபேதங்களில்லை.இந்தத்தெய்வீகமாயும்பூர்ணமாயும்உள்ள சாந்தம், ஸாவதானமாக எங்கும் பாவி நின்றும், அக்ஞான நிறைந்தவர்களிடமிருந்து ஓடி ஒளித்துத் தேடித்திரியும்படி லீலை புரிகின்றது. இதுதான் தேஜஸ் மாறு அருள்முதலியவைகள் ரூபமானசாந்தம்; மனக்குரங்குக்கு அப்பாற்பட்ட ஒளிரும் துரியநிலை;எல்லாவற்றிலும் உயர்ந்தது; சேர்க்கை, பிரிவு, பற்று, போக்கு, வரவு, முதலியன அற்றது; நெருங்கியுமிருப்பது,மிக விலகியுமிருப்பது, மலைபோல அசைவற்றது, மழுங்காதது, பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டது; அனுபவனுப்திக்கும் அப்பாற்பட்டது; ஒன்று இரண்டு என்று வகுத்துக் கூற முடியாதது;குழறும் வாக்கு அலையும் மனம் ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்டது; இதுதான் பூர்ண நிரதிசய ஆனந்த ஸாகரம், இதைத்தான் பாற்கடல் என்று கூறவேண்டியது. கண்கொள்ளா காட்சியான இப்பாற்கடலைக் காண கடவுள் அருளும் குருக்ருபையும்தான் வேண்டும். இது பொய்வளரும் நெஞ்சினர் காணாத காட்சி; விஷய ஆவல், கொடுமை, பணத்தாசை, தன்னயம் கருதுவது ஆகிய இக்குணங்களுடையவரை விட்டு மிக விலகி நிற்பது, என்றுதான் கூறவேண்டும். இதைப்பற்றித் தான் ஒரு பெரியவர் 'இடித்துப் பார் கதவு திறக்கும், தேடிப்பார் உண்மை வெளியாகும்' என்று வற்புறுத்தியிருக்கிறார்.

இனி ஸர்ப்பரூபமான சேஷனைப்பற்றி விசாரிப்போம். 'காலைமுதல் மாலை வரையிலும் மாலை முதல் காலைவரையிலும் விடாது இப்பதினான்கு உலகம் பஞ்சபூதம் ஆகிய இவைகளை அடக்கி இவைகளோடு ப்ரகாசித்துக் கொண்டிருப்பதும், எல்லாம் மறையும்தூக்கத்திலும் தான்சேஷித்து நிற்பதுமாகிய ப்ரக்ஞையே நான், ஆத்மா என்னப்படுவது. இதுதான் சேஷன். இதன் உட்ப்ரகாசம் மஹா விஷ்ணு, இவர்தான் நாதன், பக்தி, ஸச்சிதானந்தம்,பலம்' இத்தகையசேஷனை பெரிய சர்ப்பமாக உருவகப்படுத்துவானேன் என்ற சங்கைபிறக்கும். பாம்புகளுள் நாகஸர்ப்பமே எல்லா



தேசங்களிலும் சிறந்தது என்று கொண்டாடப்படுகிறது.இதன் விரிந்த படம்,நுட்பமான ஸங்கீதத்தில் ஈடுபடும் திறன், இதன்தலையிலுள்ள நாகரத்னம்,பளப்புடன்கூடிய இதன் அழகியதேஹம், கண்ணாலேயே கேட்கும் திறன், தானாக ஒருவித கெடுதியும்செய்யாதிருத்தல் (வாழும் பாம்புகளைப் பார்க்க)மந்திரம் ஸத்யம் இவைகளுக்குக் கட்டுபடுவது, இது பழகியக்கால் கண்ணுக்கு மையிடுதல் முதலிய குணங்களை அடைவது, ஆகிய இவைகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து இதன் சிறப்பிற்குக் காரணமாக விருக்கலாம். பாம்பு ஆராதனமில்லா நாடு அதிகமில்லை. ஸிதியர் என்ற ஜாதியார்கள் இதைக் கடவுளாக மதித்து வந்தனர். கடவுள் ஆபரணம் படுக்கை யாகிய சிறந்த ஸ்தானங்கள் இதற்கு ஸனாதன தர்மத்தில் ஏறப்பட்டு உள்ளன. ஆகவே இங்கு இந்தப் பாம்பு எங்கும் நிறைந்துள்ள ப்ரக்ஞையைக் குறிக்கிறது. இது உள்வெளி மேல் கீழ் பக்கம் எங்கும் நிறைந்துள்ளது. செடிகொடிகளில் இது உறங்கும் நிலையிலும், ஜந்துக்களில் கனவு நிலையிலும், மானிடரில் இது விழிப்பு நிலையிலும் உள்ளது. இம்மாதிரி அநேக நிலையிலிருக்கும் ப்ரக்ஞையையே இச்சேஷ ரூபமாகக் காட்டப்பட் டிருக்கிறது. இதன் மண்டலம், பருமன் முதலியன ப்ரக்ஞையின் அகண்டத்வம், ஸர்வாந்தர்யாமித்வம், அழிவற்ற சிறப்பு ஆகிய இவைகளை உணர்த்தும். நாமரூபம் அதாவது தேசகால நிமித்தம் ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்ட ப்ரக்ஞையே இந்தக் சேஷன். சேஷன் என்ற பதத்திற்கு எல்லாம் போனபின்பும் மிகுந்திருப்பவன் என்று பொருள்.

ஆகவே இந்தச் சேஷசயன ரூபத்தால் ஞானியின் பாவத்தைச்சுருக்கிக்கூறுவோம்.'நாமரூபாதிகளுக்கு அப்பாற்பட்ட பரவெளியாகிய சாந்தநிலையில் ப்ரக்ஞாமாத்திரமாகச் சேஷித்துநின்று பாம்பொருளே ஆகியிருக்கும் விக்ரஹரூபமான ஆசார்யன் தம் நிலையை அடைய ஆவலுடன் பாடுபடும் சிஷ்யனுக்குத் தமது ஆபரண ஆயுதங்கள் மூலமாக அகங்காரத்தை மாயத்தால் எல்லாம் ஓய்ந்து தம் நிலைக்கு வந்து நிலைபெறலாம் என்பதைச் சுருக்கி உபதேசிக்கிறார்'என்று கொண்டு ஞானி ஆனந்த பரவசனாவான்.

இந்தச் சேஷசயன விக்ரஹத்திற்கு ஸ்ரீரங்கநாதர் என்ற ஒரு பெயர் உண்டு. இவர் கோயில் காவிரிகொள்ளிடம் ஆகிய இருநதிகளுக்கு இடையில் உள்ள ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ளது. இந்த அமைப்பு நம்முள் ஸங்கல்ப விகல்பமாகிட இரு ப்ரவாஹங்களுக்கு இடையில் அமைந்து உள்ளது பரமாத்மா என்பதை உணர்த்துகிறது.இந்த ரங்கநாதரை ஒரு பெரியவர் பின் வருமாறு துதித்து ஈடுபடுகிறார் என்பதாக ஒரு கதையில் வருகிறது. "ஓ பரம்பொருளே! நீர் அஞ்ஞானிகளுக்கு உறங்குபவராகவும், ஞானிகளுக்கும் பக்தர்களுக்கும் ஸதா விழித்துக்கொண்டிருப்பவராகவும் தென்படுகிறீர்! உம்முடைய மூச்சுக்காற்றால் வெகுதூரத்திலுள்ள நக்ஷத்ரரூபமான அண்டகோடிகளை அடக்கியாளுகிறீர்! உறக்கத்திலிருந்தும் ப்ரபஞ்சத்தை ஆளுகிறீர். மஹான்கள் பருகியும் திருப்தி பெறாப் பெருமை வாய்ந்த பாற்கடலே உமது இருப்பிடம்,நீரே என்னுள்ளிருக்கும் அந்தர்யாமி! நீரே என் ஆத்மா,' என்று கூறி அவர் கோயில் எதிரே நின்றபடியே அசையாதிருந்து ஒருகணத்தில்,கோபுரம்,க்ருஹ நக்ஷத்ரங்கள் ஆகிய இவர்களுக்கு அப்பாற்பட்டு எதிரேயுள்ள ரங்கநாதர் போல தாமும் பாற்கடலில், ஆதிசேஷன் மேல் அவருடன் சற்று உறங்கி, "நானே நீ, நீயே நான்' என்றுஅபேதமாகக் கூறும்படியான நிலையில் அமர்ந்திருந்தார்" இதுவே இந்த ஸ்ரீரங்கநாதரை அறிந்து அனுபவிக்கும் விதம்.

ரங்கநாதர் என்ற பதத்திற்கு நாடகவிடத்திற்கு அதிபதி என்பது பொருள். நடராஜர்என்பதற்கும் இதே பொருள். மேலும் ஞானபரமாக இவ்விரண்டு விக்ரஹங்களுக்கும் பொருள் ஒன்றேஎன்பது இதற்குள் விளங்கியிருக்கும். இதனாலே சைவ வைஷ்ணவ சண்டை வீண்வார்த்தைச் சண்டையே ஒழிய விஷயச்சண்டையில்லை, என்பது வெளிப்படை. மேலும் சண்டையிடுவது மிக பாபஹேது என்று சிவவாக்கியர் பின்வருமாறு வற்புறுத்திக்கூறுகிறார்.—

தில்லைநாயகன் அவன், திருவரங்கனுமவன்,
எல்லையான புவனமும் ஏகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே!

சைவ வைஷ்ணவ ஸமரஸ ஸம்பந்தமான விஷயங்களைப் பொதுவாகத் தகுதியான வேறிடத்தில் எடுத்து விஸ்தரிப்போம்.

## ஸ்ரீமத் ராமானுஜாசாரியர்
## LIFE OF SRI RAMANUJA

ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் சென்னப்பட்டணத்திற்குத் தென்மேற்கில் ஸுமார் 20 மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீ பெரம்பூதூர் என்ற ஊரில் சற்றேறக்குறைய 900 வருஷங்களுக்கு முன் அவதரித்தார். இவரை ஆதிசேஷனது அவதாரமென்று இவர் சரிதங்கள் கூறும். இவர் தாய் தந்தையர்கள் பெயர், முறையே அஸுரி கேசவ பட்டர் என்பவைகளே. அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மதாதிபதியாயிருந்த ஸ்ரீ ஆளவந்தார் என்பவருக்கு இவர் தாய் வழியில் நெருங்கின உறவு உடையவர். இவருக்குத் தம்பி முறைமையில் கோவிந்தப்பட்டர் என்றொருவர் இருந்தார். இவர்கள் இருவரும் காஞ்சிபுரம் சென்று யாதவப்ரகாசர் என்ற ஓர் அத்வைத ஆசாரியரிடம் கல்வி கற்றனர். ராமானுஜர் படித்து மேன்மேலும் விருத்தியடைந்து வரும் சிறப்பைக் கேள்வியுற்று கொள்பாட்டனாகிய ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீரங்கத்திலிருந்து நேரிட வந்து காஞ்சிபுரத்தில் தம்மைவெளிப்படுத்திக்கொள்ளாது ரஹஸ்யமாகவேயிருந்து ராமானுஜரது கல்வித் திறமையைக் கண்டு மகிழ்ந்து "இவரே நமக்குப்பின் மத அதிபதியா யிருக்கத் தகுந்தவர் என்று மதித்து, தாம் வந்தது ராமானுஜருக்குத் தெரிந்தால் எங்கே அவர் கல்விக்கு இடையூறு நேரிடுமோ என்று அஞ்சி வந்தபடியே ரஹஸ்யமாக ஸ்ரீரங்கம் போய்ச்சேர்ந்தார்.

இவ்வாறு கல்விகற்று வரும் நாளில் சிற்சில விடங்களில் யாதவப்ரகாசர் எடுத்துக் கூறிய பொருள்கள் இவர் மனத்திற்குப் பொருந்தாதவை எனத் தோன்ற அவைகளின் பொருளைத் தாமே எடுத்து விஸ்தரிக்க லாயினர் இவர் கூறியது அங்கிருந்த சிஷ்யர்களுக்குப் பொருத்தமாகப்பட குருவுக்கும் சிஷ்யனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மேலும் அங்கிருந்த அரசன் பெண்ணை ஓர் பேய் பிடித்து ஆட்ட அது யாதவ ப்ரகாசர் என்ன சொல்லியும் போகாது ராமானுஜரது உத்தரவின் பேரில் அப்பெண்ணை விட்டு ஓடிப்போய் விட்டது. இதனால் முன்னிருந்த மனஸ்தாபம் அதிகரிக்க இதன் பின்னர் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைச் சாக்கிட்டுக்கொண்டு ராமானுஜரை யாதவப்ரகாசர் தம் சிஷ்யக்கூட்டங்களிலிருந்து நீக்கிவிட்டார். இது போதாதென்று, சிஷ்யரைக் கொல்வதற்காகக் குரு ஓர் காசியாத்திரை யென்ற வியாஜத்தைக்கொண்டு ராமானுஜர், கோவிந்தபட்டர் முதலியோரையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார். கொஞ்சதூரம் போவதற்குள் தம்மைக் கொல்ல செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ராமானுஜருக்குத் தமது தம்பி மூலமாக வெளிவர நடு இரவில் ராமானுஜர் தப்பித்துக்கொண்டு விடியும் முன் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார்.

இங்கு வந்ததும் தாயாரின் வேண்டுகோளின்படி கிரஹஸ்தாசிரமத்தில் அமர்ந்து கஞ்சி வரதப்பருக்குத் தொண்டுகள் செய்து காலங்கழிக்கத் தொடங்கினார். இங்கு இப்படி யிருக்க ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் தமது காலம் சீக்கிரம் முடிந்துவிடும் என்று மதித்து தமது சிஷ்யர்களுள் பெரியவரான பெரிய நம்பி என்றவரைக் காஞ்சிபுரம் அனுப்பி எப்படியாவது ராமானுஜரை அழைத்துவரும்படி சொன்னார். இவர் திரும்பி வருவதற்குள் ஸ்ரீ ஆளவந்தார் பகவான் பாதாரவிந்தங்களில் சேர்ந்துவிட அவரது தேகத்துக்குச் செய்யவேண்டிய கடன்களை மற்றைய சிஷ்யர்கள் செய்யத் தொடங்கினர்.

இச்சமயத்தில் ராமானுஜர் வந்துசேர ஸ்ரீ ஆளவந்தாரிடம் இருந்த அன்பின் மிகுதியால் இவருக்கு மிகுந்த துக்கம் வர அவர் தேகம் முழுவதையும் மிகுந்த ஆவலுடன் உற்றுப்பார்த்தார். வலது கையில் மூன்று விரல்கள் மடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். அதன் காரணத்தை விசாரித்தகாலத்தில் ஆளவந்தாருக்கு மூன்று குறைகள் இருந்தனதென்றும் அவை (1) பிரஹ்மஸூத்ரத்திற்கு எளிய நடையில் ஓர் வியாக்யானம் செய்யவேண்டும். (2) பராசரர் என்ற பெயரைத் தகுந்தவருக்கு வைக்கவேண்டும். (3) திருவாய்மொழிக்கு எளிய நடையில் வியாக்யானம் செய்யவேண்டும் என்ற இவைகளே என்றும் தெரியவந்தது. இவைகளை நடத்திவிடுவதாக ராமானுஜர் வாக்களித்ததும், மடங்கிய விரல்கள் நிமிர்ந்தன. ஆளவந்தாரது ஈமக்கடன்கள் முடியும்வரை அங்கிருந்துமறுபடியும் அவர்காஞ்சிபுரம் திரும்பினர்.

இவ்வாறு தமது எண்ணம் முடிவு பெறுததால் இராமானுஜருக்கு இன்னது செய்வதென்று தோற்றுது அவர் மிகவும் குழப்பத்தையடைந்தார். அப்பொழுது அவருக்குப் பகவத் அனுக்ரஹத்தால் "பரம் பொருளே சிறந்தது. முடிவான நிலையில் பேதமற்றுப் போகாது, பக்தியே மோக்ஷஸாதனம், மோக்ஷம் பகவத் கிருபையால் வருவது, பெரிய நம்பியே சிறந்த ஆசார்யன்" என்ற விஷயங்கள் தெரியவந்தன. இவ்வாறானதும் இராமானுஜருக்கு ஸ்ரீரங்கம் சென்று எப்படியாவது பெரிய நம்பியிடம் உபதேசம் பெறவேண்டும் எனத் தோன்றிவிட்டது. உடனே இவர் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டார். இப்படியிருக்க ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீஆளவந்தார் ஸ்தானத்தில் ஒருவரும் இல்லாமல் போக அவருடைய பிரதம சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து பெரிய நம்பியை அழைத்து "எப்படியாவது காஞ்சிபுரம் சென்று, ராமானுஜரை அழைத்து வரவேண்டும்" என்று சொல்லி யனுப்பிவித்தார்கள். பெரிய நம்பி காஞ்சிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பது போல ஒருவரை யொருவர் மதுராந்தகம் ஏரிக்கரையில் உள்ள ஸ்ரீராமர் கோயிலில் சந்தித்தார்கள். ஒருவரை யொருவர் விசாரித்ததின் பேரில் ஒருவரை யொருவர் தேடிப்புறப்பட்டு வந்ததாகத் தெரியவந்தது. ராமானுஜரது வேண்டுகோளின்பேரில் பெரிய நம்பி அவருக்கு அங்கு ஓர்மரத்தடியில் உபதேசம் செய்து இருவரும் காஞ்சிபுரம் வந்து இருந்து தமது குடும்ப ஸகிதமாகக்கொஞ்சநாள் சேர்ந்து வஸித்தார்கள்.





ராமானுஜரது பெண்ஜாதி ஒருசிறந்த குணவதியாயில்லாததினால் அவருக்குச் சிற்சில சமயங்களில் மனஸ்தாபம் வரும்படி நடந்துகொண்டாள். இரண்டுமுறை அவர் மன்னித்தார். மூன்றும் முறை அவள் பெரியநம்பியின் பெண்சாதியுடன் சண்டையிட்டுக் குடும்பத்தோடுகூட அவரை சொல்லிக்கொள்ளாது ஸ்ரீரங்கம் போகும்படி செய்துவிட்டாள். இதைக்கேட்டதும் ராமானுஜர் மனம் மிகவருந்தியது. அந்தசமயத்தில் அவர் மாமனார் பெண்சாதியை ஊருக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டிக்கொள்ளத் தாமதியாது அவளை அனுப்பிவிட்டு உடனே ஸந்யாஸம் கொண்டனர்.

இந்த ஸங்கதி வெளியானதும் இவரிடம் அநேகம் சிஷ்யர்கள் வந்து கூடினர். ஆளவந்தார் சிஷ்யரும் அவர் பிள்ளையுமான ஆரியரை மற்றைய சிஷ்யர்கள் அனுப்புவித்து எப்படியாவது ராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்துவரும்படி ஏற்பாடு செய்தனர். இராமானுஜர் ஸ்ரீரங்கம் வந்ததும் தமக்கு ஏற்பட்ட ஸ்தானத்துக்கு ஏற்ப அதிகாரங்களை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று தோற்றியது. பெரிய நம்பியிடம் இவர் உபதேசம் பெற்றிருந்தும் இவர் வேறு குருக்களை நாடி மற்றைய சாஸ்திரவிஷயங்கள் அறிந்து கொள்ளும்படி நேரிட்டது. மந்திரார்த்தங்களைத் தெரிந்துகொள்ள இவர் வெகுநாள் திருக்கோட்டியூர் நம்பியிடம் நடந்து பார்த்தார். அவருக்குக் கருணை வாராதது கண்டு இனி போகவேண்டுவதில்லை என்று தீர்மானிக்குந் தருணத்தில் ஆளவந்தார் சிஷ்யர்களால் தூண்டப்பட்டு முடிவாகஒரு முறை போவதாகத் தீர்மானித்தார். இம்முறை குரு கருணை கூர்ந்து பகவத்கீதை சார சுலோகத்தை எடுத்துரைத்து வெகுவிஸ்தாரமாக உபதேசித்து அதை அதிகாரிகளல்லாதவர்களிடம் சொல்லிவிடக் கூடாதென்று நிபந்தனை செய்தார். மந்திரார்த்தத்தையும் அதன் மூலமாக மனிதன் எளிதில் சீர்திருந்தி மோக்ஷம் அடையும்வழியையும் உணர்ந்ததும், உலகில் வீணே வழிதப்பி மதிமயங்கும் ஜனங்களுக்கு இதை வெளியிட்டு அவர்களைச் சிறப்படையும்படி செய்யவேண்டும் என்ற அடங்கா ஆவல் ராமானுஜ

ருக்கு உண்டாகிவிட்டது. குருவாஞ்ஞை அந்த ஸமயத்தில் முற்றும் மறந்துபோய்விட கருணை மிகுதியால் ராமானுஜர் அருகேயிருந்த கோபுரத்தின் மீதேறிக்கொண்டு உச்சஸ்வரத்தில் ஜனங்களுக்குக் கீதார்த்தரஹஸ்யத்தை எடுத்து வெளியிட்டார். இதை அறிந்தகுரு இவரைஅழைத்து விசாரிக்க "நான் செய்தது அபவாதம்தான். தகுந்ததண்டனையைப் பெறத் தயாராய் இருக்கிறேன்" என, குரு "உனக்கு மீளா நரகம் இனி மேல்வரும், இங்கு ஒரு தண்டனையும் இல்லை" என ராமானுஜர் "ஜனங்கள் துக்கம் நீங்கி மோக்ஷம்பெறுவது நிச்சயமானால் அவ்வாறு செய்த எனக்கு நரகம் வந்தாலும் வரட்டும்" என்று மிகுந்த ஆறுமையுடன் சொன்னார். குரு சிஷ்யனது பெரிய கருணையைக் கண்டு மகிழ்ந்து அதையே ஓர் மதமாகக்கொண்டு ஸ்தாபிக்கலாமென்று அனுமதி கொடுத்தார்.

இந்த ஸமயத்தில் தமது ஸஹோதர முறையிலிருந்த கோவிந்தபட்டர் யாதவப்ரகாசரோடு காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்யுங்கால் கையில் ஓர் லிங்கம் ஒட்டிக்கொண்ட நிமித்தமாகச் சைவராகி காளஹஸ்திரியில் சிவபக்தராய் இருந்த விஷயம் இவருக்குத் தெரிய வந்தது. உடனே இவர் திருப்பதியில் இருந்த தமது மாமன் மூலமாகக் கோவிந்த பட்டரை வைஷ்ணவ மதத்திற்குத் திருப்பி எம்பார் என்ற பேர் கொடுத்துத் தமக்கு ஸஹாயமாக வைத்துக்கொண்டார். இதன் பின்னர் ஆளவந்தார் பிள்ளையிடம் இவர் திருவாய்மொழி கற்றுக்கொண்டார். இந்தக் காலத்தில் இராமானுஜரது நிலையைக்கண்டு சிலர் பொறாமை கொண்டு அவர் பிக்ஷைக்கு வருங்கால் அன்னத்தோடு விஷம் கலந்திட அவர் அதைத் தற்செயலாய் கண்டறிந்து அதனின்றும் தப்பித்துக்கொண்டார். அன்று முதல் இராமானுஜர் பிக்ஷைக்குப் போவது நின்றுவிட்டது. மடத்திலேயே அவர் சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் ராமானுஜர் யஜ்ஞமூர்த்தி என்ற ஓர் அத்வைத ஸன்யாஸியை வென்று பின்னர் தமது சிஷ்யனான கூரத்தாழ்வாரது ஸஹாயத்தால் பிரஹ்ம ஸூத்ரபாஷ்யம் செய்து அதைக் காஸ்மீர தேசத்து ஸரஸ்வதீ பீடத்தில் அரங்கேற்றினார். அவ்விடத்தில்தான் இவருக்கு ஓர் ஹயக்ரீவ விக்ரஹம் பரிசாக அளிக்கப்பட்டது. இவ்விடத்தில் தான் இவருக்குப் பாஷ்யகாரர் என்ற பெயரும் இவர் வியாக்யானத்துக்கு ஸ்ரீபாஷ்யம் என்ற பெயரும் கிடைத்தது. தெற்கே நோக்கிவருங்கால் திருப்பதிவந்து அங்கிருந்தகோவில், விஷ்ணு கோவில், ஸுப்ரமண்யர் கோவில் அல்ல என்று ஸ்தாபித்தார். ஸ்ரீரங்கம் வந்ததும் இவர் சிஷ்யர் கூரத்தாழ்வாருக்குப் பகவத் அனுக்ரஹத்தால் ஒரு பிள்ளை பிறக்க அதற்கு பராசரபட்டர் என்ற பெயரிட்டு அவர்மூலமாக ஸஹஸ்திரநாமத்துக்கு ஓர் வியாக்கியானம் உண்டாக்கினார். தம் கூடவேயிருந்த பிள்ளன் என்ற ஒருவரிடம் திருவாய்மொழி விஷயமாக விருந்த ஞானத்தின் நுட்பதைக்கண்டு அவர் மூலமாகத் திருவாய்மொழிக்கு ஓர் வியாக்கியானம் ஏற்படுத்தினார். இதனால் ஆளவந்தார் குறைகள் மூன்றும் தீர்ந்தன.

இப்படி யிருக்கையில் குலோத்துங்க சோழன் என்ற ராஜன் பரமசிவத்திற்குமேல் பரதெய்வமில்லை, என்ற கொள்கையைப் பரவச்செய்து அதற்கு இணங்காதவர்களையெல்லாம் கொடுமையாய்த் தண்டித்துவந்தான். எல்லோரும் இராமானுஜரை யழைத்து இதற்கு இணங்கும்படி செய்யவேண்டும் என்று வேண்ட அவர் சீக்கிரத்தில் வந்து சேரவேண்டும் என்னும் உத்தரவு பிறந்தது. ராமானுஜருக்கு ஏதாவது அபாயம் வருமென்று பயந்து அவர் சிஷ்யனான கூரத்தாழ்வாரும் வேறொருவரும் சோழராஜன் ஸபைக்குப் போக ஒப்புக்கொண்டு ராமானுஜரை கிரஹஸ்த வேஷம் பூண்டு தப்பி ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டனர். அவ்வாறே அவர் காவேரிக் கரையோரமாக மேற்கே சென்று சாளிக்கிராமம் என்ற ஊரில் தங்கினர். இங்கு இருக்குங்கால் இவர் நாமக்கட்டி ஆய்விட்டது. இன்னவிடத்தில் அது அகப்படும் என்று தெரியவில்லை. மிகுந்த துக்கத்துடன் ராமானுஜர் அங்கு உறங்குகையில் அருகாமையில் ஓர் பெரிய நாமக்கட்டியாலாகிய குன்று இருப்பதாக ஸ்வப்னம் கண்டார். அங்கு சென்று வெட்டிப்பார்க்க நாமக்கட்டி அகப்பட்டதோடுங் கூட உள்ளிருந்து ஓர் கோயிலும் வெளியாயது. அதற்குத் திருநாராயணபுரம் என்று பெயர் கொடுத்தார். அங்கு வஸிக்குங் காலத்தில் டெல்லி பாதுஷாவின் அரண்மனையில் ராம ப்ரியர் விக்ரஹம் இருப்பதாக ஸ்வப்னம் காண மிகுந்த கஷ்டத்தின் பேரில் வடக்கேசென்று அந்த விக்ரஹத்தைக் கொண்டுவந்து திருநாராயண புரத்தில்



பிரதிஷ்டை செய்தார். இதற்குள் வைஷ்ணவர்களைக் கஷ்டப்படுத்திய சோழ ராஜன் தமது சிஷ்யரான கூரத்தாழ்வார் கண்ணை அவர் கூறிய இடரான பதிலுக்காகக் குத்தி விட்டதாகக் கேள்வியுற்று ஓர் தூதனை அனுப்பி துக்கம் விசாரிக்கச் செய்தார். அவன் திரும்பி வருகையில் கொடிய சோழன் இறந்துபோன ஸமாசாரத்தையும் கொண்டுவந்தான். உடனே இராமானுஜர் அபாயம் நீங்கிவிட்டதென்று கண்டு ஸ்ரீரங்கம் திரும்பிவந்து அங்கு பன்னிரு ஆழ்வார்களது விக்கிரஹங்களையும் ஸ்தாபனஞ் செய்து அவைகளுக்குத் தகுந்த உத்ஸவங்கள் செய்யவும் ஏற்பாடு செய்தார். இதன் பின்னர் கோயில் தர்மகர்த்தனாயிருந்த ஸ்மார்த்தனாகிய அமுதன் என்பவனை வைஷ்ணவத்திற்குத் திருப்ப அவன் ராமானுஜ ஸ்தோத்ரமாக 108-பாடல்கள் பாடினான். அதையும் நாலாயிர பிரபந்தத்தோடு சேர்க்க அனுமதி பிறந்தது. இதன்பின்னர் ஆழ்வார் திருநகரி முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டுவருகையில் சிதம்பரத்திலிருந்த கோவிந்தராஜப்பெருமாள் விக்ரஹத்தைச் சைவர்கள் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டனர் என்று கேள்வியுற்று அவ்விக்ரஹத்தைத்தேடி எடுத்துத் திருப்பதிவந்து அங்கே மலையடிவாரத்தில் அதை ஸ்தாபித்து யாத்திரை செய்துகொண்டு ஸ்ரீரங்கம் வந்துசேர்ந்தார். தமக்கு முடிவுகாலம் வருவதை அறிந்து தமது சிஷ்யர்களுள் நால்வரிடம் தமது பாஷ்யம் முதலியவைகளையெல்லாம் ஒப்புவித்து, பிள்ளானிடம் மாத்திரம் நாலாயிரப் பிரபந்தத்தையும் ஒப்புவித்தார். இப்பிள்ளானே இவருக்குப்பின் இவர் ஸ்தானத்துக்கு வந்தான். இவர் பகவான் பாதாரவிந்தங்கள் சேருவதற்குமுன் இவரது விக்ரஹங்கள் மூன்று செய்யப்பட்டு இங்கும் ஸ்ரீபெரம்பூதூர், திருநாராயணபுரம் ஆகிய 3 இடங்களிலும் இவர் அனுமதியின் பேரில் ஸ்தாபிக்கப் பட்டன. இவ்வாறானதும் இவர் 120-ம் வயதில் ஸித்தி யடைந்தார்.



# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 14. கண்டொன்று சொல்லேல்

இதை இரண்டுவிதமாகப் பொருள்படுத்தலாம். (1) (ஒன்றை) கண்டு (வேறு) ஒன்றைச் சொல்லேல். அதாவது பார்த்தது ஒன்றாக விருக்க, அதை வேறொன்றாக மாற்றி ஸமயத்திற்கேற்றபடி தந்நயம் கருதிக் கூறாதே என்பது இதன் முழுப்பொருளாகும். ஒன்றை வேறொன்றாக கூறுவது பொய் உரைத்தல் என்பதாகும். ஆகவே பொய் சாக்ஷி முதலியன ஒரு நாளும் கூறாதே. என்றாயிற்று.

இதற்கும் எல்லை வாக்கியம் உண்டு. ஒன்றை மாற்றி நியாயஸ்தல விஷயத்தில் கூறக்கூடாதாயினும் நம்மை ஒருவரும் கேட்காதிருக்கும் பொழுதே நாமாகத் தெரிந்ததை வெளியிடவே கூடாது. மேலும் பிறரைக் கஷ்டப்படுத்தி வீண் வம்பு பேசி வீண்காலம் கழிக்கும் துன்மார்க்கர்கள் கேட்கும் காலத்து நமக்குத்தெரிந்த ஒருவன் ரஹஸ்யத்தை வெளியிடவே கூடாது. அவர்கள் நமக்குத் தெரிந்துவிட்டதாக ஒருவாறு ஊஹித்து வந்து நம்மைச் சொல்லிவிடும்படி கட்டாயப்படுத்தியபோதிலும் நமக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லியே அவர்களை நம்பும்படி செய்யவேண்டும்: முடியாவிடில் வேறு ஒன்றாக மாற்றியாவது கூறி அவர்களை ஒருவாறு திருப்தி செய்து விடவேண்டுமே ஒழிய உண்மையை ஒருகாலத்தும் வெளியிடலாகாது. ஆதலால் எந்த ஸமயத்தில் உண்மை கூறினால் ஸம்பந்தப்பட்டவர்களுக்குக் கஷ்டமும் பொது நன்மை இன்மையும், துர்ஜனங்கள் குதூஹலமும் ஏற்பட்டு விடுமே, எந்த ஸமயத்தில் மறைத்தாவது, மாற்றியாவது கூறினால் நமக்கு ஒருவித லாபமும் இன்றி முற்கூறிய கெடுதிகள் எல்லாம் இல்லாதிருக்குமோ அந்த ஸமயத்தில் 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்றாவது, அல்லது விஷயத்தை ஒருவாறு மாற்றியாவது கூறிவிடுவதால் இந்நீதி வாக்கியத்திற்கு விரோதமாக ஏற்படாது. இக்கருத்தை உள்ளடக்கியே திருவள்ளுவரும் :—

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

என்று கூறி யிருக்கிறார்.

'இக்கருத்தையே ஔவையாரும் 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்' என்று உலகநீதியில் கூறி இருக்கிறாள். அதாவது மனச்சாக்ஷிக்குப் பொய் என்று தெரிந்ததைக் கூருதே. பொய் என்பதற்கு நடந்ததை மறைத்தல் அல்லது மாற்றுதல் முக்கிய லக்ஷணமாயினும், தந்நயம் கருதல், பிறர்க்குக் கேடுவிளைத்தல், பொதுநன்மை ஏற்படாமை, துர்ஜனர் ஸந்தோஷம் ஆகிய இவைகளும் முக்கியமான பாகங்கள். இவைகளை எல்லாவற்றையும் சேர்த்து ஆலோசிக்குங்கால் பொய் என்று தோன்றுவதைக் கூறலாகாது என்று ஔவை உலகநீதியில் கூறினாள்.

நெஞ்சாரப் பொய் என்று தெரிந்தும் தம் நயம் கருதி கூடியவரையில் உண்மையின் உருவாகப் பொய்கூறிய தர்மபுத்திரர் பட்டபாடும், உண்மையையே உள்ளபடிக் கூறியும், உண்மையின் ஸ்வரூபம் அறியாது அநேகருக்குத் தீங்கு விளைத்ததால் கௌசிக ப்ராஹ்மணன் பட்டபாடும் இந்நீதி வாக்கியத்தின் ஸ்வரூபம், எல்லை முதலியவைகளை நன்கு காட்டும். (இவ்விரு கதைகளையும் ஆர்யமத உபாக்யானம், முதல்பாகம், 54-ம் கதையிலும் இரண்டாம்பாகம் மெய் அதர்மமானது என்ற கதையிலும் காண்க)

(2) (காணாது ஒன்று சொல்லி) கண்டு (வேறு) ஒன்றைச்சொல்லேல் என்பது இதன் இரண்டாம் பொருள். ஒருவனுக்கு எதிரில் அவனைப்பற்றி நாம் தைர்யமாகக் கூறக் கூடியவைகளையே அவனைக் காணாதவிடத்தும் கூறவேண்டும். என்பது இதனுள் அடங்கியிருக்கும் பொருள். இவ்வாறு செய்யாவிடில் நாம் கூறிய விஷயம் ஸம்பந்தப்பட்டவனுக்குத்தெரிந்துவிட,அவன் அதைப் பற்றி நம்மைக் கேட்பானாயின் நாம் பொய் சொல்லும்படியான நிலைக்கு வந்து விடுவோம். இம்மாதிரி கெட்ட நிலை வருமாதலின் இந்நீதி வாக்கியப்படியே நடக்க வேண்டும்.

எப்படிப்பட்டவனாயினும் அவன் முன்னிலையில் அவனைத் துதிக்க முடியும். ஆதலால் ஒருவனைக் காணாதபொழுது அவனைப்பற்றித் தயங்காது துதிக்கலாம். மேலும் எதிரில் துதித்தால் முகஸ்துதியாகி கேட்பவனுக்கு வீண் கர்வத்தையும், கூறுபவனுக்குக் 'காக்கை பிடிப்பது' என்று கூறப்படும் கெட்ட குணத்தையும் உண்டாக்கும். ஆகவே ஒருவனைத் துதிக்குங்கால் மறைவாகச் செய்வதே நலம். தூஷிப்பதைக் கூடியவரையில் எதிரிலேயே செய்து விடுவது உத்தமம். ஒருவன் போனபின்பு தூஷித்தால்,இல்லாதவனுக்கு அந்த வாக்யம் பயன்படாமல் போவதோடுங்கூட 'பார் என்னிடம் நேராக ஒரு வார்த்தை கூறித் திருத்தாது,பலர் அறியக் கூறி என்னைத் தூற்றுகிறானே' என்ற மனஸ்தாபமும், கூறுபவனுக்கு ஒருவித திடமின்மையும் பயங்குள்ளித்தனமும் உண்டாகிவிடும். ஆதலால் ஒருவனை எதிரில் குற்றங்கூறி மறைவில் துதிக்கலாம் என்றும், ஆனால் எதிரில் துதித்து விட்டு மறைவில் குற்றங்கூறலாகாது என்றும் தெரிய வந்தது.

இந்த ஆராய்ச்சியை ஒட்டிக் 'கண்டொன்று சொல்லேல்' என்ற நீதி வாக்கியத்திற்குப் பொருள்கூறப் புகின்; ஒருவனைக் காணுக்கால் இகழ்ந்து கண்டக்கால் புகழாதே என்பதாகிவிடும். மாறுபாடாகச் செய்வதனால் கேடொன்றுமில்லை என்ற பொருள் த்வனித்து நிற்கும். இதுபற்றியே ஔவையார்தாம் எழுதிய உலகநீதியில் 'போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்' என்று புத்திமதி கூறுகிறாள். உலகில் நடக்கும் பொய் புரட்டு சண்டை சச்சரவு எல்லாவற்றிற்கும் காரணம் போகவிட்டுப் புறஞ்சொல்லுதலே.

இந்த விஷயத்தில்.—

கள்ளற் குறைத்தான் கனசத்தியவிரதன்
உள்ளபடி வேதியர் சொல்லோர் வழியைத்—தெள்
[ளிமையோ
மாதனதா புன்னை வனவள்ளலே மேலெண்ணு
தேனினும் கண்டனசொல்லேல்.

என்பது ஆத்திசூடி வெண்பா. இந்தப் பாட்டில் இந்நீதி வாக்கியம் கண்ட ஒன்றை சொல்லேல் என்றுபொருள்படுத்தப்பட்டிருக்கிறது.இதற்குக் கௌசிக ப்ராஹ்மணன் கதை குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் விஸ்தாரத்தை மஹாபாரதம் கர்ண பர்வத்தில் காண்க.

## 15. ஙப்போல்வளை

ஙவைப்போல வணங்கி நில் என்பதுபொருள். இந்த எழுத்தே மிகவளைந்தும் உள்ளது. மெதுவான ஒலியையும் உடையது. இதுபோல வணக்கத்துடன் அதிர்ந்தசொல் இல்லாது ஸாவதானமாக நடக்கவேண்டும் என்பதாயிற்று. ஙகரத்திற்கு இதவுமன்றி வேறு ஒரு விசேஷமும் உண்டு. சொல் உண்டாவதற்கு ஙகரம் உபயோக



ஆனால் இது மொழிக்கு முதலிலிருந்து இம்மாதிரி உபயோகப்படுவதில்லை. மேலும் தன் இனமாகிய ஙா, ஙி,......ஙௌ முதலிய எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கும் காரணமாவதில்லை. ஆயினும் ஙகரத்தோடு ஸம்பந்தப்பட்டிருப்பதால்தான் இவைகளைத் தமிழ் நெடுங்கணக்கில் சேர்த்து உயிர்மெய் எழுத்து 216 என்று கூறப்படுகிறது. இதுபோல எந்த விஷயத்திலும் முன்னின்று கீர்த்தி விரும்பல் முதலியவைகளுக்கு ஆளாகி கார்யத்தைச் செய்யாது ஒதுங்கி வணங்கி நின்று கார்யத்தை முடித்து அதனால் தன் உறவினர்களுக்கு ஒரு மேன்மைக்குக்காரணமாகி இருக்கவேண்டும். இதுவே ஒருவனுக்கு முக்யமாக இருக்கவேண்டிய குணம்.

இம்மாதிரிவிவரித்ததில் இதற்கும் அக்கம்சுருக்கேல் என்பதற்கும் ஸம்பந்தம் ஏற்படுகிறது.ஙகரம்போல ஒவ்வொரு சிறந்தவனும் உறவினரைத் தழுவி நிற்றல் வேண்டும். இந்த விஷயத்தில்:—

தீதில் அரிஷ்டங்கள் செய்ய உணவைக்கொள்ள
மேதினியிற் றம்இனத்தை மேவுதலால்—நீதிநெறி
போற்றுபுகழ் புன்னைவன பூபாலா உற்றாரை
மாற்றிருமெய் ஙப்போல் வளை.

என்பது ஆத்திச்சூடி வெண்பா. இந்த விஷயத்தை தாயுமானவர் 'காகம் உறவு கலந்து உண்ணக் கண்டீர்' என்று ஒரு விஷயத்தில் உபமானம் கொடுக்கிறார். ஒரு வீட்டில் காக்கைக்குப் பிடிசோறிட்டால் காக்கை ஒன்று வரும்போது கா! கா!! கா!!! என்று கத்திக்கொண்டே வர இதைக்கேட்டு மற்றைய காக்கைகளும் கத்திக்கொண்டு இன்னும் மற்றைக்காகங்களுக்குத் தெரிவித்துக்கொண்டே வருகின்றன. இதனால் காகங்கள் உறவுகலந்து உண்ணுகின்றன. இதுபோல உறவினர்களை நாமும் தழுவி நிற்றல் வேண்டும் என்பதாயிற்று. இம்மாதிரி இனத்தோரைத் தழுவி சிறப்படைவதற்கு உதாரணம், அக்ஷயபாத்ர மூலமாகத் தர்மபுத்ரர் ப்ராஹ்மணர்களை வனவாஸ காலத்தில் போஷித்த வைபவமே.

இனி ஙப்போர்விளை என்ற பாடபேதம் உண்டு. இதற்குச் சண்டை யிடுவதில் ஙகரம் போல் நட என்று பொருள். இது முதலிலிருந்து மொழிக்குக் காரணமாகாமல் இடையிலிருந்தே அவ்வாறுதல் போல ஸேனாதிபதியாகி இருப்பவன் எப்பொழுதும் படைகளுக்கு இடையில் நின்று போர்புரிய வேண்டுமே ஒழிய யுத்த முனையில் நின்று சண்டையிடவே கூடாது என விரியும்.

இந்நீதி வாக்கியப்படி நடவாமல் எத்தனையோ பெரிய ஸேனாதிபதிகள் அபாயத்திற்கு ஆளாகி இறந்திருக்கின்றனர். உதாரணமாக ஹொரேஷியோ நெல்ஸன், ஜான் நிகேல்ஸன் என்பவர்களே. நெல்ஸன் அநேக விடங்களில் ஜெயம் பெற்று ப்ரஞ்சு ஜாதியாருக்கு விரோதமாக ட்ரபால்கர் விரிகுடாவில் நடந்த கப்பல் யுத்தத்தில் தனது உடைகள் பிருதுகளான ஆபரணங்கள் ஆகிய இவைகளைப் போட்டுக்கொண்டு முதலில் தன் கப்பலில் தம்மினத்தோர் எல்லோரும் பார்த்து தைர்யமடைய வந்து நின்றான். அவன் தோழர்கள் அவ்வாறு செய்தால் அபாயம் ஏற்படும் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். ஏதோ ஒருவித யுத்த ஆவேசம் கீர்த்தி விரும்பல் முதலிய வீண் குணத்திற்கு ஆளாகி நெல்ஸன் ஒதுங்காமல் பலர் காண நின்று விட்டான். சண்டை நடந்து வந்த முன்காலத்தில் எதிரிஸேனையில் சிலர் நெல்ஸனை உடை முதலியவற்றால் உணர்ந்து குறி வைத்து சுட்டு அவனைத் தள்ளிவிட்டனர். ஸேனாதிபதி இறந்தால் யுத்தம் நின்றுவிடும் என்பது அவர்கள் கருத்து. நெல்ஸனுக்கு மரணக்காயம்படவே அவன் தோழர்கள் உள்ளே அவனைத் தூக்கிச் சென்றனர். அவன் இறக்கும்முன் தன் இனத்தோர் சண்டையில் ஓங்கி வெற்றி பெற்றனர் என்று கேள்விப்பட்டு திருப்தி அடைந்தபோதிலும், தன் வீண் கர்வத்திற்காக உயிரை இழக்க வேண்டி வந்தது. இம்மாதிரியேதான் ஜான்நிக்கொல்ஸன் கதியும். 1857-ம் வருஷம் இந்தியாவில்

நடந்த ஸிபாய் கலகத்தில் டில்லி முற்றுகையைத் தீர்க்கப்போன ஸேனைக்கு அதிபதி ஜான் நிகொல்ஸன். உள்ளே புகுந்து கலக்கவேண்டிய ஸேனைகளுக்குத் தானே நடத்துவோனாகி எதிரி ஸேனையில் புகுந்தடித்து டில்லியுள் புகுந்தான். இதோடு விட்டு விட்டுப் பின்னடைந்து ஸேனைக்குப் பொதுத் தலைமைபூண்டு எல்லோரையும் நடத்துவன் என்று பலர் மதித்தனர். யுத்த ஆவேசத்தால் நிகொல்ஸன் மேன்மேலும் உள்ளே போய்விட முயன்றான். அப்பொழுது ஒரு சிபாய் இவனை நன்றாக நிதானித்துக் குறிபார்த்து சுட்டுத் தள்ளிவிட்டான். பின் நெல்ஸனைப்போல இவனும் தன் இனத்தார் ஜயத்தை கேட்டுத் தான் மாண்டான். நப்போர்விலை என்ற வாக்ய உண்மையைக் கருதாது ஒருவித ஆவேசத்திற்கு ஆளாகி அநியாயமாய் நல்ல ஸமயத்தில் பலர் வருந்தத் தமது உயிரை இழந்துவிடுவர் சிலர்.

## உடுப்பு

ஜனங்களுடைய மனதைச் சந்தோஷிப்பிக்க உடுப்பும் ஒரு முக்கியமான சாதனமாகையால், எப்பொழுதும் நாம் நமது உடுப்பு விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சிலர் ஒரு மனிதனுடை உடுப்பைக்கொண்டே அவன் இப்பேர்ப்பட்டவனென்று நிதானித்து விடுவார்கள். ஒருமனிதன் வெளியில் உடுப்புவிஷயங்களில் எவ்வளவுக்கெவ்வளவு டாம்பிகனாய் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அறிவின்மை அவனிடம் விளங்கும். ஆகையால், புத்திமான்கள் எல்லாரையும்விடப் புதியமாதிரியாய் ஒருநாளும் வேஷ்டி முதலானவைகளைக் கட்டிக்கொள்ளவே மாட்டார்கள். எப்பொழுதும் தங்கள் தேக சௌக்கியத்தின் பொருட்டே பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பார்கள். ஒருமனிதன் தானிருக்குமிடத்தில் நல்ல ஸ்திதியிலுள்ள புத்திமான்கள் எந்தமாதிரி உடுப்புகள் தரித்துக்கொள்வார்களோ அந்தமாதிரி தரித்துக்கொள்ளவேண்டும். அதிகமாய்ப் போட்டுக்கொண்டால் டம்பாசாரியாம்! அற்பமாய்ப் போட்டுக்கொண்டால் மரியாதை யற்றவனாகும்; அற்பமாய்ப் போட்டுக் கொள்வதைவிடச் சிறிது அழகான உடைகளைத் தரிப்பதே எப்பொழுதும் நலம்.

# பெற்றோர்களும் பிள்ளைகளும்

## PARENTS & THEIR CHILDREN

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"—திருக்குறள்.

நம் பழந்தமிழ்நாட்டில் குழவிகளின் அருமை பெருமைகளை முற்ற வுணர்ந்தார் மிகச் சிலரே யாவர். அவைகளைக் காணவும் களிக்கவும் தாம் பெற்ற விளையாட்டுக் கருவிகளாகக் கொள்வதன்றி, அவை யாவை, அவை யினி ஆகுமாறென்னை; அதற்கேற்ப அவைகளைப் பழக்குமாறென்னை யென ஊகித்தறிவாரல்லர். இன்று பெரியராயுள்ளார் நாளை இறந்தொழிய அன்று பெரியராய் நின்று நிலவுவார் இற்றைச் சிறியரே யன்றோ? அவர் நல்லாராக உலகு நன்மையும், தீயராக உலகு தீமையும் உறுதல் ஒரு தலையாம். ஆகவே, உலகில் தீமை கெடவும் நன்மை உயர்ந்தோங்கவும் விரும்புவார் தம்மில் தம் மக்கள் அறிவு முதிர்ந்து செவ்வழி நடப்பான் ஏற்ற நெறி கண்டொழுக வேண்டும்.

கிருஷிகனொருவன் தான் பண்ணும் பயிரில் பலன் பெரிதும் பெறவேண்டில், காலமறிந்து எருவிட்டு, நீர்பாய்ச்சி, களைகட்டு, மெய் வருத்தம் பாராது உழைத்து வருந்திப் பாடுபட வேண்டும். இவ்வாறே மக்கட் பயிரிடும் அன்னையுந் தந்தையும் தங்குழந்தைகளுக்கு ஏற்றன நாடி யுதவியும், ஏலாதன விலக்கியும் பரிந்து போற்றுதல் கடனாகும். 'முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்' இன்னும், பயிர் செய்யுங்கால் சிற்சில பலன்களுக்கு மழை யதிகம் வேண்டப்படும்; சிற்சில வெயிலும், சிற்சில பனியும் வேண்டி நிற்கும். இப்பேத வியல்புகளைச்செவ்விதின் நாடி அறிந்தோனே சிறந்த கிருஷிகனாவான். குழந்தைகளை வளர்ப்பாரும் தம்பாலுள்ள மக்களின் குணவியல்புகளை நன்கறிந்துணர்ந்து அதற்கேற்றபடி அவர்களோடு நடந்து கொள்ளவேண்டும். சில சிறுவர் இன்சொல்லால் ஆளப்படுவர்; சிலர் கடுஞ் சொல்லுக்கே அடங்குவார்; ஒரு சிலர் நயத்தாலும் பின்னஞ் சிலர் பயத்தாலுமே யாளப்படுவார். எவரெவர் எவ்வெப் பண்பினர் என்பதறிந்து அதற்கேற்ப நடந்து அவரை நல்



வழி யுறுத்தல் வேண்டும். சில சிறுவரைப் பெற்றோர்கள், துட்டரென்றும், தூர்த்தரென்றும், சொற்கேளாரென்றும்,கொண்டு அவரை நல்வழிப்படுத்தும் கருத்து முற்றும் ஒழித்து விடுகிறார்கள். அந்தோ! இப்பெற்றோர்களின் மதிபோன வழிதானென்னை! விலங்குகளுள் மிகக்கொடியவாகிய சிங்கமும், புலியும், நில்லென நிற்கவும் உட்காரென உட்காரவும், சொன்ன ஆணையின்படி நடக்குமாறு அடக்கியாளப் படுகின்றன; மலைகளையும் புரட்டி அப்பாலெறிய வல்ல காட்டாறுகளும் தாம் நினைத்தபடி ஓடி கடலில் தம் அரிய நீரை வீணாக்காதபடி தடுக்கப்பட்டு மனித சமுகத்திற்கு உதவுமாறு ஆளப்படுகின்றன. இவைகளிவ்வாறாக, ஒன்றுமறியாக் குழந்தைகள் எவ்வளவு மாத்திரம்! எத்துணை துட்டராயினுமென்! அன்பென்னும் மருந்தைத் தக்கவாறு பிரயோகிப்பில் அத்துடுக்குத்தனம் யாவும் இருந்தவிடமும் தெரியாது ஓடி யொளியாவோ? "அன்பின் வழியது உயிர் நிலை." அன்பிற்கு வயப்படாதது உலகில் யாவுமில்லையாம். அறிவற்ற கொடிய விலங்கினமும் அன்பிற்கு முற்றும் அடங்குவனவேயாம். அடிக்கடி தான் சொல்வழி மீறி நடப்பது கண்ட அன்னை "அடே! மூடா! நான் பன்முறையும் படித்துப் படித்துக் கூறுவது கவனியாது ஃ போனதே போக்கென்று நடக்கின்றாய்! என் கொடுந்தண்டனைக்கு ஆளாக்கிக் கொள்ளுவது அறிகிலைபோலும்!" எனக் கடிந்து கூறுவதாலும்,"எனதருமைக் கண்ணே! குழந்தாய்! நீ அவ்வாறு நடத்தல் நின் குணத்திற்குப் பொருந்தாதே. நீ சொல்வது கேளாயாக நின் அருமைத் தாய்க்கு மனம் எவ்வளவு நொந்தது! கண்ணே! வேண்டாம் அவ்வழி விலக்கி யொழி!" என அன்பு பெருக்கி அருமை மொழிகளால் கூறுவதற்கும் எத்துணை பேதம் பாருங்கள். இது குறித்தன்றோ "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாள்" என்றார் பெரியாரும்.

பின்னும், தட்டானொருவன் தன் எதிரிலுள்ள உலை முற்றும் குளிர்ந்து ஆறிப்போயிருப்பினும் அதிலுள்ள ஓர் சிறிய நெருப்புத் துணுக்கைக் கண்டு, அதன் சுற்றிலும் உமியுங் கரியும் மெல்லென அணைத்து ஊதி யூதி பொன்னும் வெள்ளியையும் உருக்கவல்லபெரு நெருப்பு உண்டாக்குகின்றான். இதுபோலவே பிள்ளைகளை வளர்க்கும் அருங்கடப்பாடு பூண்டார், அவர் எவ்வளவு துட்டராயினும் அவர்பால் சிறிதளவேனும் உள்ள நற்குணமொன்று நாடி யறிந்து அது உறனும் வலியும் கொண்டு வளரும் வண்ணம் ஏற்ற முறைகளை நாடி அவர் தீக்குணம் ஒழித்து அவரை நல்வழியில் கடை தேற்றுவார். ஆனால் நம்மிருவருட்சிலர்: 'போதனா முறைகள் குழந்தைப்பருவத்திற் கேற்றதன்று. அது அவர் குழறிப் பேசும் குதலைச் சொல்லும், கிண்கிணி யொலிக்கும் ஒண்தளர் நடையும் கண்டு மகிழ் சிறக்குங் காலமாகும். தந்தைக்குப் பயமும், தாய்க்கடக்கமும், பொய் போக்கலும், மெய்நாடுதலும், தெய்வம் பழிச்சலும், தீமை விலக்கலுமாய் அரும் பெரும் விதிகள் பிற்காலத்து தம் வயது வந்துழி கற்றறிவர்' என வாதாடுவர். இது எவ்வளவு பெரிய தப்பபிப்பிராயமென்பது அறிவாளிகள் பலர்க்கும் பிரசித்தம். குழந்தைகளின் மனதை(Photograph)புகைப்படம் எடுக்குங்கருவிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். அக்கருவி தனக்கு முன்பாக பொருள்கள் எந்தெந்த நிலையில் தோன்றுகின்றனவோ அவ்வவன் நிலையிலேயே அது படம் பிடித்து விடுகிறது. படம் எடுத்துக் கொள்ள வேண்டி தனக்கு எதிரே உள்ளவர் சரியானபடி இருக்கிறாரா, இல்லையா என்பதுபற்றி அதற்கு யாதும் அவசியமில்லை. ஆனால் அக்கருவியைக் கையாடுகிற சித்திரக்காரனே, முன்பு சென்று படம் எடுத்துக்கொள்ள வேண்டுபவரைத்தக்க ஆசனத்தின்மீது அவரைச் சிறக்க வமர்த்திப் பின் அக்கருவியைத் திறந்து முன்வைக்கவேண்டும். குழந்தைகளும் எதை எவ்வாறு கண்டு கேட்கின்றனவோ அதை அவ்வாறே தம்மிள மனத்தே சிலையிலெழுத்தென அமைத்துக் கொள்கின்றன. நன்மை இன்னதென்றும், தீமை யின்னதென்றும் அறியும் சக்தி அவர்களுக்கில்லையாம். இது குறித்தே கற்றோர்கள் தம் குழந்தைகள் முன்னிலையில், மனோ வாக்கு காயமாதிய திரிகரண சுத்தராய் ஒழுகவேண்டுமென்பது. அவர்கள் முன்னிலையில் பொய் பேசுதலாவது, கடுஞ்சொற் கூறலாவது, இடக்கற் சொற்கள் மலிய வாதாடுவதாவது அறிவீனமாம். இவ்வாறு கெட்ட விஷயங்களை எப்படி விலக்குகிறார்களோ அவ்வாறே நற்பழக்கங்களை அவர்களுக்கு இளமையிலேயே கற்பிக்க வேண்டும்.

பெற்றோர் போற்றலும், பெரியோர் ப்ழிச்சலும், தெய்வந் தொழலும், தீவினை யகற்றலும், மற்றும் இன்னோரன்ன அரிய பழக்கங்கள் சிறு வயதிலேயே உண்டாக்கப்பட வேண்டும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" நிற்குமாதலின் நற்பழக்கங்களை இளமையிலேயே கற்கவேண்டுவ தவசியமாயிற்று. குழந்தைகள் இவ்வாறு சிறந்த நெறிகளில் பழக்கப்படில் அவர்கள் அறிவு முதிர்ந்து ஒழுக்கமும் நடையுந் தழீஇ "இவன் தந்தை என்னோற்றான்கொல்" என உலகு வியந்து கொண்டாட பெருமைப் பாடுற்று உயர்தரப் பதவி யடைவாரென்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ ?

வே. இராதா கிருஷ்ணன்

---

**சரியாய் உச்சரித்தல்.**—அழகாய்ப் பேசுவதற்கு நாம் பாலியம்முதல் உரக்கப் படித்திருக்கவேண்டும். அன்றியும் நாள்தோறும் யாராவது ஒரு சிநேகிதரிடம் நாம் உரைக்கப்படித்து உச்சரிப்புப் பிழைகளைச் சீர்திருத்திக்கொண்டிருக்கவேண்டும். இப்படிச்செய்திராத பக்ஷத்தில் நாம் நல்லவிதமான உச்சரிப்பை அடைவது துர்லபம். நன்றாய் உச்சரிப்பறிந்த சிநேகிதம் கிடைக்காத பக்ஷத்தில் நமக்கே நாம் உரக்கப் படித்துக்கொள்ளலாம். வாய்க்குள்ளேயே முணுமுணுத்தல் ஒரு நாளும் கூடாது. அன்றியும் சமயத்திற்குத் தகுந்தபடி நமது உச்சரிப்பு மாறுபட வேண்டும். ஒரு சந்தோஷமான பட்டாபிஷேகம் முதலான இடங்களை வாசிக்கும் பொழுது அழுகிறதுபோலப் படிப்போமேயானால் நம்மை ஜனங்க்ள் மிகவும் அவமதிப்பார்கள். பேசும் மாதிரியிலும் உச்சரிப்பிலும் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சிலர் வாய்க்குள் முணுமுணுப்பார்கள்; சிலர் குதிரையோட்டமாய்ப் படிப்பார்கள்; சிலர் படிப்பது கேட்கவே கேட்காது ; சிலர் பாடிப்பாடிப் படிப்பார்கள்; இவைகளெல்லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்கள். ஆகையால் வெகு ஜாக்கிரதையாயிருந்து இவைகளொன்றும் நமக்குப் படியாதபடி பார்க்கவேண்டும். இவைகளிலெல்லாம் என்ன இருக்கிறதென்று சிலர் எண்ணுவார்கள். மகா வித்வான்களிடங்களிலும் ஒவ்வொரு சமயங்களில் இந்தத்துர்குணங்களிருக்கலாம் ; அவர்களுடன் அந்தத் துற்குணங்களில்லாத வித்துவான்களைச் சீர்தூக்கின் பின் சொல்லியவர்களே பெரியோர்களாவார்கள்.

## நியாயமாலா

## POPULAR MAXIMS EXPLAINED

### 36. काकदध्युपघातक न्यायः

కాకదధ్యుపఘాతక న్యాయః

காகதத்யுபகாதக ந்யாயம்

'காக்கை தயிரைக் குடித்து விடும்;குடிக்காமல் பார்த்துக்கொள்' என்று ஒருவன் கூறினால் இதில் தயிர் குடிபடாமலிருக்க வேண்டும் என்பது முக்யம் என்று தெளிவாகிறது. காக்கை என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. காக்கை என்ற பதத்திற்குக் காக்கையைப் போன்ற தயிர் குடிக்கக்கூடிய பூனை முதலிய ஜந்துக்கள் என்பது பொருளாகும். ஆகவே தயிர் குடிக்கக் கூடிய ஜந்துகளால் தயிர் நஷ்டமாகாது பார்த்துக்கொள் என்பது இதன் பொருள். ஒன்றைக் கூறி அதுபோன்ற மற்றவைகளையும் உபலக்ஷணமாகக் கிரஹிக்கும்படி குறிக்குமிடத்தில் இந்யாயம் உபயோகப்படும். திருடினவன் தண்டிக்கப்படுவான் என்றால் புருஷன் மாத்திரம் தண்டிக்கப்படுவான் என்பதாகாது. ஆணாகிலும் பெண்ணாகிலும் திருடிவிட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்பது தோன்ற இந்த வாக்யம் நிற்பதால் இது இந்யாயத்திற்கு உதாரணம். நன்னூல் பொதுவியலில் 358-ம் ஸூத்திரம் இந்யாயத்தின் உதாரணங்களை அடக்கியுள்ளது. 'ஒரு மொழி தன் இனங்கொளற்கு உரித்தே' என்பது இந்த ஸூத்ரம்.ஒரு சொல் மற்றைய தனது இனத்தைச்சேர்த்துப் பொருள்படத்தகுதியாகச் சிற்சிலவிடங்களில் அமைந்து கிடக்கலாம் என்பது இதன் பொருள்.

தாயுமானவர் 'எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்று நமது வாழ்க்கைத் தொழில்களை சுருக்கிக் கூறியிருக்கிறார். சாப்பிடுவதும் தூங்குவதும் தானா நமது வாழ்க்கைத்தொழில் ? இவை தவிர வேறொன்றும் இல்லையா? இவை ஒவ்வொரு நாளிலும் சிற்சில பாகங்களில் நடந்தேறிவிட மற்றைய பாகங்களில் என்ன நடக்கின்றன. மேலும் இவை இரண்டே நமது வாழ்க்கைத் தொழிலாக விருப்பின் உலகில் எல்லோரும் கஷ்டமே இன்றி ஸுகமாய் வாழலாமே! இப்பொழுதிருப்பதைவிட அநேக மடங்கு உண்பதும் உறங்குவதுமான ஜனங்களை ஸுகமாக வைத்துப் போஷிக்கத் தகுந்த ஆற்றலுடையது இவ்வுலகு. அப்படி இருக்க இங்கு அநேகர் வருந்துவானேன் ? மேலும் மூன்றுவித விசாரம் உறங்காக்கால் மனிதர்க்கு உள என்று பட்டினத்துப் பிள்ளை கூறுகிறார். பர்த்ருஹரி ஆயுர் வருஷ சதம் என்னும் ச்லோகத்தில் இவைகளை நன்றாக விஸ்தரித்துக் கூறுகிறார். ஆகவே உண்ணுவது உறங்குவது என்பவைகளை உள்ளபடிப் பொருள் கொள்ளாது உபலக்ஷண விஷயங்களைச் சேர்த்தே பொருள்படுத்தவேண்டும். உண்பது என்பது வாயால் ஏற்படும் அனுபவம். இது மற்றைய இந்திரிய அனுபவங்களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். உறங்குவது, என்பது தூங்குவதுபோல இந்திரிய வ்யாபாரம் ஓய்ந்திருப்பதான களைப்பு, உதாஸீனம் முதலிய நிலைகளை உணர்த்தும். ஆகவே தாயுமானவர் வாக்கியத்திற்கு இந்திரியங்கள் மூலமாக திருப்தி வரும்வரை வெளிச்சென்று விஷயங்களை அனுபவிப்பதும், திருப்தி வந்துவிட்டால் விஷயங்களில் வெறுப்புற்று இவை நீங்கி ஓய்ந்திருப்பதும் பின் மாறி மாறி இவ்வாறே செய்துகொண்டிருப்பதுமே இவ்வாழ்க்கைத் தொழிலென்று இந்த வாக்கியத்தை பொருள் படுத்தவேண்டும். யோசிக்காமலே விளங்கும் வெளிப்படைப் பொருளை ஒட்டி யோசிக்கும் வேளையில் என்ற பதத்தின் கௌரவம் தோன்ற இம்மாதிரி உபலக்ஷண விஷயமாகவே யோசிக்கையில் வெளியாகும் முற்கூறிய பொருள், இந்த வாக்கியம் இந்யாயத்திற்கு நல்ல திருஷ்டாந்தம் என்பதைக் காட்டும்.

### 37. काकदन्तगवेषण न्यायः

కాకదన్తగవేషణ న్యాయః

காகதந்தக வேஷண ந்யாயம்

காகத்திற்குப் பல்லில்லை. அப்படி இருக்க ஒருவன் எத்தனை பல் அதற்கு என்று விசாரிக்கப் புகுந்தால் என்ன பயன்.? இல்லாத வஸ்துவை உள்ளது போல எண்ணி விசாரிப்பது பயனற்றதாகவே முடியும். இந்த விஷயமாக ஒரு சுலோகமும் உண்டு. காக்கைக்கு எத்தனை பல், ஆட்டின் விரை எத்தனை பலம்,கம்பளத்தில் எத்தனைமயிர் என்று இவைபோன்றவைகளை ஆழ்ந்துவிசாரிப்பதால் என்ன பயன் ? என்பது அதன் பொருள். இதனால் இல்லாததை விசாரிப்பதும் உள்ளனவாயினும் நிஸ்ஸாரமாக உள்ளவைகளை விசாரிப்பதும் பயன்தாரா என்பது இதன் கருத்து. இந்த நியாயத்திற்கு லௌகிகப் பொருத்தம் ஒன்று உண்டு. ஒரு தொழில் அல்லது நிலையிலிருப்பவனுக்கு மற்ற விஷயங்களைப்பற்றி விசாரிப்பது அவசியமில்லை.இப்படி இருந்தும் தனக்கு ஸம்மந்தப்படாத விஷயங்களைப் பற்றிப் பேசி குற்றங் கூறுவது மிகக்கெட்டபழக்கம். இதுகாக்கைக்குப் பல் எத்தனை என்ற விசாரத்தையும் விடக் கேடுகெட்டது. இம்மாதிரி வரம்புகடந்து விசாரிப்பதால் தன்தொழில் ஊக்கம் கெட்டு அவன் தத்தளிக்க வேண்டிவரும்.

இதன் மதவிஷயப்பொருத்தமே மிக முக்கியமானது. பரம்பொருளிலிருந்து உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்ற விசாரம் இந்யாயத்திற்குத் தகுந்த உதாரணம். இது விஷயமாக மனதிற்கு ஒருவித சஞ்சலம் ஏற்பட்டு மேல் அபிவிருத்தியைத் தடுக்காமலிருக்க வேண்டுமே என்று நமது பெரியோர்கள் நமது தூக்கம் மரணம் முதலியவைகளைப் பின்பற்றி ஒருவாறு யுக்திக்குப் பொருந்தும்படியாகப் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி சொல்லி அதனால் பரம்பொருளில் ஒடுங்கி சாந்திபெறுவதே முக்யம் என்று வற்புறுத்துகின்றனர். இதுபற்றியே **கைவல்ய** நூலாசிரியரும்

கற்பனை வந்த வாறு காட்டினேம் காண்பவெல்லாம்
சொற்பனம் போல எண்ணித் துணிந்தவன் ஞானி
[யாவான்.

என்று கூறியிருக்கிறார். இப்படி இருக்க ஸ்ருஷ்டி விஷயத்தை ப்ரதானமாகக்கொண்டு 'அகண்ட பரி பூர்ணமான நிர்மலப்ருஹ்மத்திலிருந்து இந்த ஜகத் எப்படி வந்தது?' என்று சங்கித்துத் தட்டழிவதே அநேக அத்வைதிகள் நிலையாகிவிட்டது. ஸமாதானம் வாராமல்போனால் ப்ரஹ்மத்தில் வேறாக அடங்கியுள்ள ப்ரபஞ்ச ஜீவகாரணங்கள் இருத்தல்வேண்டும். ஆதலால் முக்தியில் பேதம் உண்டு' என்று கூறும் விசிஷ்டாத்வைத த்வைத நிலைக்குவரும்படி நேரிடும்.அத்வைதவாஸனை உடையோர் இம்மாதிரி சங்கித்து விசாரணை செய்வது காக்கைக்குப் பல்எத்தனை என்று சங்கிப்பதுபோலப் பயனற்றதே, என்றறிந்து ஸ்ருஷ்டி விஷயத்தை விட்டு லயவிஷயத்தைப்பற்றவேண்டும். இதுபற்றியே கைவல்ய நூலாசிரியரும்

ஞானங்காரணம் அறிபொருள் காரியம்
நாமரூபப் பேய்கள்
ஆனதெப்படி அழிந்ததெப்படி என
ஆய்குதல் பயனன்றே
மானமைந்தனே தீர்க்கஸ்வப்ன
ஜகம் வந்ததும் பாராமல்
போனதும் நினையாமல் உன்போதமாய்ப்
பூரணமா யிருப்பாயே.
அசத்தில் எம்மட்டுண் டம்மட்டும்
பராமுகமாகினாய் அம்மட்டும்
நிசத்தில் உள்விழிப்பார்வையா மிப்படி
நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தில் உன்மனம் நின்று சின்மாத்திர
வடிவாயிடில் மைந்தா
கசத்த தேஹத்திலிருக்கினும் ஆனந்தக்
கடல் வடிவாவாயே!

என்று எச்சரித்திருக்கிறார். இதை நம்பாதமற்றைய கொள்கைகளுடையவர்களுக்கும் பரம்பொருள் நிலையை நோக்கி ஜீவனும் ஜகத்தும் எம்மாத்திரம். பரம்பொருளைத் தியானித்து ‘நீயலாற் பிரிதுமற் றின்மை’யை உணர்ந்து ‘நான் தோன்றாது’ நிற்பதே முடிவான நிலையாகில் ஜகத்ஸருஷ்டியைப்பற்றி ஏன் கவனித்து அவைகள் மூலமாக ப்ரஹ்மத்தில் ஏகதேசத்தில் ப்ரபஞ்சஸ்ருஷ்டியாதி காரணத்தவமாகிய மதம்இருத்தல் வேண்டும் என்று ஸ்தாபிக்க முயலவேண்டும். இவர்கள் மதப்படி காக்கைக்குப் பல் எத்தனை என்பது போல இவ்விசாரம் பயனற்றது என்று கூற முடியாதாயினும், கம்பளத்திற்கு எத்தனை மயிர் (விசிஷ்டாத்வைதி) ஆட்டின் விரை எத்தனைபலம் (த்வைதி) என்பவைகள் போலப் பயனற்றதே. இம்மாதிரி திரிமதவாதிகளுக்கும் ப்ரபஞ்சஸ்ருஷ்டி விஷய விசாரம் பயனற்றது; இதனால் பேதம் கற்பித்து வாதாடுவது மோக்ஷஸாதனமாகாது என்பதை நன்கு உணர்ந்து பரம்பொருளில் மனம் செலவிட்டுப் பழகுவார்களாகில்வேதாந்த சித்தாந்தஸமரஸம்விளங்கிமனக் கனிவு உண்டாக மதத்வேஷம் இருந்தவிடம்தெரியாமல் பறந்தோடிப் போகும். ஆகவே வேதாந்த விசாரத்தில் ஸ்ருஷ்டியை பேதம்தர்க்காதிகள் தவிடுபட விசாரிப்பதே இந்யாயத்திற்கு மிகப் பொருத்தமான உதாரணம்.

## 38. काकमांस न्यायः

కాకమాంస న్యాయః

**காகமாம்ஸ ந்யாயம்**

காக்கையின் மாம்ஸமும் நாயின் எச்சிலும் மிக அற்பமானவைகளாயினும், இவைகள் அகப்படுவது அரிது. இவைபோல மிக அல்பமானவையாயினும் கிடைப்பதரிதாயிருக்கும் வஸ்துக்கள் விஷயத்தில் இந்யாயம் உபயோகப்படும். ஒருவன் 10 ரூபாய் காகிதத்தை எடுத்துக்கொண்டு டிராம் வண்டியில் வந்துஏறுகிறான் என்றும்அவனுக்கு அரையணாச்சீட்டுவாங்கி அருகாமையில் போகவேண்டியது என்றும் வைத்துக் கொள்ளுவோம். சீட்டுக் கொடுப்பவன் வந்ததும், 10 ரூபா காகிதத்தை நீட்ட சில்லரை இல்லை கீழே இறங்கு என்று அவன் கூறினால் இவன் கதி என்ன, பத்து ரூபாயிருந்தும் அல்பமாகிய அரை அணா இல்லாத ஏழைபோல் நடக்க வேண்டி வருகிறது. இந்நிலையில் அரையணா இவனுக்குக் காக்கை மாம்ஸம்போலாய் விட்டபடியால் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு அரையணாவுக்குத் திண்டாடும் இவன் கதி இந்யாயத்திற்கு உதாரணமாகும். ஆனைக்கும் அடி சருக்கும் என்றபடி பெரியோர்களும் கல்வியிற் சிறந்தவர்களும் சிற்சில ஸமயங்களில் ஸாதாரணமான ஸமயோசித புத்தியின்றித் தத்தளிக்கும்படியாகிவிடும். பீஷ்மர் மஹா தர்மாத்மாவாயினும் த்ரௌபதீ மான ஸம்ரக்ஷண அவசரத்தில் திரௌபதீ கேட்ட கேள்விக்குத் தகுந்தபடி பதில் கூறி துரியோதனாதியர் அநீதியைத் தடுக்காது கிடந்து குழம்பினார். பதினைந்தாம் நாள் யுத்தத்தில் துரோணர் விஷயமாகத் தருமபுத்ரர் மதிமயங்கிப் பொய் உரைக்க வில்லையா ? இவர்களுக்கும் இதுபோல் மற்றைய பெரியோர்களுக்கும் சிற்சில அவஸரங்களில் ஸாதாரண தர்மஞானம் கூட தோன்றாமல் போக அவர்கள் காகமாம்ஸ ந்யாயத்திற்கு உதாரணமாய் விடுகின்றனர்.



# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULYSSES

(தொடர்ச்சி)

### நான்காமத்யாயம்.

துன்பங் கெடுத்துச் சுகங்கொடுத்தா ளொன்றனக்கே
அன்பகத்தே வாழுஞ் சிற்றிடையா—ளின்புருவந்
தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றொளியா
ஞேங்கினே னுண்மை யுரை.

ஜன்ம பூமியாகிய இதாகாவைச் சேர இச்சித்து இரவு பகல் விடாமுயற்சி செய்த உல்லாஸன் தோழர்கள் இரக்கமற்ற கடலினலைகளுக்கிரையானபின அவன் ஒருவனே மிஞ்சினான். அவனுக்கிருந்த ஒரு கப்பலும் கடலிலமிழ்ந்து போயிற்று. ஆடையாபரணங்களை யிழந்து பிறந்த நிலைமையில் ஒஜிஜீயாஎன்ற மனோரஞ்சனத் தீவிற்கு உல்லாஸன்வந்து சேர்ந்தான். அத்தீவு கலிப்ஸோ என்னும் அப்ஸரஸியினுடையது. உல்லாஸனுக்கு நல்ல தசைவந்த தென்னலாம். அப்ஸரஸிகளால் அத்தீவில் அவன் ஆதரிக்கப்பட்டான். கலிப்ஸோ அப்ஸரஸிகளுக்கு அரசி. உல்லாஸனைக்கண்ணுற்பார்த்த தக்ஷணமே அவனிடத்தில் அவளுக்குக் காதல் பிறந்தது. அவள் வஸித்த ஸ்தானத்தின் அழகை என்னென்று சொல்வோம் ?

மாம டங்கலுங் கற்பக மனையெலாங் கனகம்
அரம டந்தையர் சிலதிய ரய்க்கியர்க் கமரர்
உரமடங் வந்திழைய ராயுழல் பவரொருவர்
தாமடங்கு வதன்றிது தவஞ்செய்த தவமால்.

பொன்னகர் மடந்தையர் விஞ்சையர்ப் பூவையர்
பன்னக வனிதைய ரியக்கர் பாவையர்
முன்னின பணிமுறை மாற முந்துவார்
மின்னின மிடைந்தென விசும்பின்மீச் செல்வார்.

நீல மேமுத னன்மணி நித்திலம்
மேல கீழபல் வேறொளி வீசலால்
பாலின் வேலை முதற்பல வேலையும்
கால்க லந்தன வோவெனக் காட்டுமோ.

சிற்றின்ப நுகர்ச்சியைக் கைக்கொண்டு காமுகனாய்த் திரிபவன் இல்வாழ்க்கைத்துணை நலத்தையறியான். புலன்கள் விரும்புமின்பம் பலவற்றையும் நினைத்தவுடன் செய்துவந்த கலிப்ஸோவினிடத்தில் உல்லாஸனுக்குப் பற்றுண்டாக வில்லை. ஸாரஸிபோலவே கலிப்ஸோவும் உல்லாஸனை மணந்து தன்னிடத்தே இருத்திவைக்க விரும்பினவள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்—

என்று நாயனார் கூறினதற்குச் சான்று உல்லாஸனே. தேவலோக ரம்பைகள் மத்தியி லிருக்கையிலும் உல்லாஸன் மனம் அருந்ததிபோன்ற தன் மனைக்கிழத்தி பனிலொபி யிடத்திலேயே சென்றது. கலிப்ஸோ உல்லாஸனுக்கு அமரத்வமும் தருவதற்கிருந்தனள். அவன் அதையும் பொருள் பண்ணவில்லை. சுத்தவீரர் சித்தம் உயிர்போமளவும் புகழை நாடி நிற்குமே யன்றிச் சிற்றின்பத்தில் பற்றாது. “வசையொழிய வாழ்வாரே வாழ்வர் இசையொழிய வாழ்வாரே வாழாதவர்” என்று பெரியோர் வாக்கு மிருப்பதால் உல்லாஸன் தான் அக்னிஸாக்ஷியாய் மணம் புரிந்த மனையாளை மறவாமல் ஸதா காலமும் நினைந்து துக்காக்கிராந்தனா யிருந்தான்.

இத்தருணத்தில் உல்லாஸன் குலதெய்வமாகிய மினெர்வா, வழிபடுவோ னிடத்தில் தயைகூர்ந்து தேவாதி தேவனிடத்தில் முறை கூற, அத்தேவனும் தூதனொருவனைக் கலிப்ஸோவினிடத்திலனுப்பி உல்லாஸனுக்கு யாத்திரைக்கு வேண்டிய கருவிகளை யமைத்து விடைதரல் வேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். கடவுளின் கருத்தை யறிந்த கலிப்ஸோ தேவதூதனிடத்தில் “உங்களுலகத்துள்ள தேவரை யானறிவேன்: அவராசைக் களவில்லை: தேவகன்னிகையான யான் ஒரு நரனிடத்திற் காதல் கொண்டது தேவருக்குப் பொறாமை யுண்டாக்கினது போலும். தேவர் நரப்பெண்களை மணம் புரிந்தின்புற்றிருக்க வில்லையா? என் காதலைக் கண்டு பொறாமைப்படும் நீவிர் எப்பாடுபடுவீரோ ?” என்று வெறுத்துச் சொன்னாள்.

தூதன் தேவலோகம் போனபின் கலிப்ஸோ உல்லாஸனிடஞ்சென்று,“அதிர்ஷ்டஹீனா, ஸர்வவல்லமையுள்ள நமது கடவுள் உன்னை இதாகாவுக்குப் பிரயாணப்படுத்தி யனுப்பக்கட்டளையனுப்பினார். அவர் சர்வஞ்ஞர். அவர் வாக்கின்படி நடக்கக் கடமைப்பட்டவளா யிருக்கின்றேன். உன்னிடத்தில் அளவிலாத அன்பை வைத்தேனென்பது உன் மனத்திற்கே நன்றாய்த்தெரியும். நீ இன்னும் அநுபவிக்க வேண்டியதா யிருக்கிற கஷ்டங்களின் ஸங்கியை அறியாய். அறிந்தால் நசிக்கும் பிராணியான பனிலொபியிடத்திலளவிலாக் காதல்கொண்டு அமரத்வத்தையும்

வேண்டா மென்றிருக்க மாட்டாய். இது புல்லறிவாள ரியற்கையாம்" என்றாள்.

உல்லாசன் "தேவமணியே, என்னொரு விண்ணப்பத்திற்குச் செவி கொடுத்தல் வேண்டும். நான் மரிக்கு மியல்புடைய நரன்: என்னைப் போன்ற அநத்தியத் தன்மை யேற்ற பெண்ணிடத்தில் பற்று வைத்தேன். வனப்பிலும்,வன்மையிலும், அறிவிலும் அவள் உனக்கீடல்ல. கர்ப்பிலா மூர்க்கர் மூர்க்கரை முகப்பரன்றோ? என்னார்க்குப் போதலைத்தடுக்கக்கடவுள் உளமகிழ்வராயின், அவர் செய்யுமிடையூற்றினுக்கு மஞ்சேன். துன்ப மனுபவித்து மனத்திட்பம் எனக்குண்டா யிருக்கின்றது. போர்க்களத்திலும் அலைகல்விலும் நான் பட்டபாடுகள் அளவிறந்தன," என்றான்.

கலிப்ஸோவும் மனமுவந்து விடை கொடுக்க, அவள் ஊழியக்காரிகள் மரங்களை வெட்டிச் சேர்த்தார்கள். உல்லாசன் தன் கையினாலேயே மரக்கலமொன்று அமைத்தான். அதற்குப் பாய்களும் உணவுப்பொருள்களும் நிரம்பச் சேகரித்துப் பிரயாணத்துக்கு உல்லாஸன் ஆயத்தமானான். கலிப்ஸோவும் அவள் சேடிமாகர்ளும் கடற்கரையில் வந்து உல்லாஸனுக்குப் பலவகை உபசாரங்கள் சொல்லி ஊர்க்கனுப்பினார்கள்.

## ஐந்தாமத்யாயம்

*ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு முன்னடிமை*
*பாழிற் றிரிவதென்ன பாவம் பராபரமே.*

கலிப்ஸோவின் உதவியாலும் தன் கைத்திறத்தாலும் செய்யப்பட்ட கப்பலில் உல்லாஸனேறிக்கொண்டு தனியே யாத்திரை செய்யத் தொடங்கினான். நகமுஞ் சதையும் போன்ற தோழர்களெல்லாரும் கடலுக் கிரையாகித் தானொருவனே மாலுமியாகவும் யாத்திரை செய்பவனாகவும் ஊழ்வினை செய்ததை நினைத்து உல்லாஸன் மிகுந்த விசனமடைந்தான். "உலையா முயற்சி களைகணாவூழின் வலிசிந்தும் வன்மையும்" ஒருவற் குண்டாகுமன்றோ? உல்லாஸன் அச்சத்தை மறந்து கலிப்ஸோ அளித்த பரிசுகளைக் கப்பலிலேற்றிக் கடலில் செல்லுங்கால் வருண பகவானும் ஸமயம் பார்த்திருந்தான். தன் குமாரன் பலபீமன் கண்ணைப் பிடுங்கிக் கபடத்தால் வென்ற உல்லாஸனைக் கடலிலமிழ்த்திக் கொலை செய்ய உத்தேசித்துப் பிரமாதமான சண்டமாருதம் ஒன்றைக் கிளப்பினான். உல்லாஸனும் அவன் சப்பலும் பட்ட பாட்டை எழுத முடியாது. சூறைக்காற்று வீசிக் கப்பலைக் கவிழ்க்க, உல்லாஸன் அலைவாயிலகப்பட்டு அலைக்கப்பட்டான். வருணன் திரவமற்ற இருதயமுடையவனாயினும் லக்ஷதி என்று ஒரு தேவதை உல்லாஸன் படும்பாட்டைக் கண்டு மனமுருகி அவனிடஞ் சென்று "வீரனே வருணன் படுத்துகின்ற பாட்டினால் நீ மனஞ்சோர்ந்திலை. உன்னைப் போன்றவருக்கே உதவிபுரிதல் தர்மமாகும். நீ உன்னுடைகளை யுரிந்து நான் கொடுக்கும் அரைஞாணைப் பூண்டுகொள். அது உன்னை நீரிலமிழாமற் காக்கும். நீந்திக் கரை சேர்ந்தவுடன் கடலி லெறிந்துவிடு" என்று சொல்லி அரைஞாண் ஒன்றைக் கொடுத்தாள். அந்த அரைஞாணைப் பூண்டதுமுதல் உல்லாஸன் கடலில்அமிழாமல் தூரத்திற் றோன்றிய கரையை நோக்கி நீந்திச்சென்றான். இரண்டு பாறையின் நடுவேபோய் ஒன்றினுச்சியைக் கையாற் பிடித்து மேலே ஏற யத்தனிக்கும்போது ஒரு பெரிய அலை அவனைத் தாக்கி நடுக்கடலி லிழுத்துக் கொண்டு போயிற்று. உள்ளங்கையும் விரல்களும் காயப்பட்டு இரத்தம் வெள்ளமாய் ஓடிவந்தது. லக்ஷதிகொடுத்த அரைஞாணின் பலத்தினால் பின்னு மொருமுறை நீந்திக் கரைசேரப் பார்க்கையில் அங்கு ஒரு நதி ஸங்கமமாகும் இடம் உல்லாஸன் கண்ணிற்பட்டது. நதிகள் இயற்கையாகவே லோகோபகாரிகள். வருணன் கொடுமைதாளாமல் நதியைத் தஞ்சமாயடையக் கருதி உல்லாஸன் ஸங்கம ஸ்தலத்திற்குப் போனவுடன், அந்த நதி மனமிரங்கித் தன்வேகத்தைத் தணித்து அவன் எதிர்த்து நீந்திக் கரைசேரும்படி உதவி செய்தது. கரை சேர்ந்தவுடன் லக்ஷதி என்னுந் தேவதை சொன்ன வார்த்தைகளை நினைத்து அரைஞாணை அவிழ்த்துக் கடலிலெறிந்து தேவதைக்கும் நதிக்கும் நமஸ்கரித்துத் தியானஞ் செய்துகொண்டு கொஞ்ச நேரம் உல்லாஸன் நின்றான். உடையிழந்து, உயிர் வெறுத்து, உடல் நொந்து தான் பிறந்த பிறவியையும், அடைந்த நிலைமையையும் உல்லாஸன் நினைத்து மிகுந்த துயருற்றான். நதி சங்கமத்தை நாடிச் செல்லும்படி புத்தி கொடுத்தது மினெர்வா என்னும் உல்லாஸன் குல தெய்வம். அந்தத் தெய்வபலத்தாலேதான் பற்பல இடையூறுகளினின்றுந் தப்பலானான்.



திகம்பரனாய் நதிக்கரையில் நிற்கையில் அங்கேயே படுத்துறங்கவா, அருகிலுள்ள நாட்டிற்குள் சென்று அங்கு களைப்பாறவா, என்று இரண்டுயோசனைகள் தோன்றிச் சற்றுமதிமயங்கி நின்றான். நீரிற் கிடந்து குளிரால் விரைத்த உடம்பை நீர்க்கரையிலேயே படுக்கவிட்டால் விரைப்பு அதிகரிக்கும். காட்டிற்குட் சென்று படுக்கலா மென்றாலோ மிருகங்களால் உயிர்ச்சேதம் வரலாம். உல்லாஸன் மனம் இவ்வாறு சற்று ஊசலாடிக் கொண்டிருந்தது. நிர்வாணமாய்க் கடற்கரையிற் படுத்துறங்குவதினும் ஒருவர் கண்ணிலும் படாது காட்டிற்குட் செல்லுதல் நலமெனத் தோன்றிற்று. அக்காடு மரம்அடர்ந்ததாயிருந்தமையால் பகலவன் கிரணமும் மழையின் துளியும் சரீரத்திற்படமாட்டா. உல்லாஸன் காட்டில் நுழைந்து சருகுகளைப் பரத்திக்கொண்டும் சருகுகளையே மேல் போட்டுக்கொண்டும் நித்திரைபோனான். விலையிலா மாணிக்கம் குப்பையிற் கிடந்தது.

## ஆறுமத்தியாயம்

*குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்*
*நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.*

உல்லாஸனுக்கு மினெர்வா குலதெய்வமென்று முன்னரே சொன்னோம். அந்தத் தேவி தன் சரணமடைந்தவரைக் காத்தலில் தலைமை பெற்றவள். பெருந்துயரங்களிலும் அடியானாகிய உல்லாஸனுக்கு ஊக்கங் குறையாது உதவி புரிந்தவள். அவனிறங்கிய நாட்டிற்கு பேஷியா என்று பெயர். அதையாண்ட அரசனுக்கு அலஸீனனென்று நாமம். அவனுக்கு அனேக ஆண்மக்களும் நஸிகா என்னும் அருமைப் பெண்ணொருத்தியும் உண்டு. நஸிகாவினால் உல்லாஸனுடைய அருமை பெருமைகள் அரசனுக்கு வெளியாக இச்சித்து மினெர்வா செய்த அற்புதங்களை இங்கெடுத் துரைப்பாம். பக்தர்களுக்கு வழிபடுந் தெய்வம் செய்ய இயலாததுமுண்டோ?

ஹம்ஸதூளியாலமைத்த படுக்கையிலுறங்கிச் சுகமனுபவித்த உல்லாஸன் காட்டிலுள்ள சருகுகளாலான படுக்கை யொன்றை யமைத்து அச்சருகுகளாலேயே போர்க்கப்பட்டிருந்தான். நஸிகாவும் உல்லாஸனும் ஒருவரை யொருவர் பார்த்து நேரிற் பேசும்படி செய்யக் கருதின மினெர்வா இரவில் நஸிகாவின் சொற்பனத்தில் அவள் தோழியின் உருவமெடுத்துக்கொண்டு "நஸிகா, என்ன தூக்கந் தூங்குகின்றாய். உன் கலியாணம் இன்னுங் கொஞ்ச நாள்தானே இருக்கிறது. உன் ஆடை ஆபரணங்களை யெல்லாம் ஒழுங்குபண்ண வேண்டாமோ? அவை கண்ணுக்கினியனவா யிருந்தாலல்லவோ மணமகனுக்குஉன்னிடத்தில் காதல் மிகும். உன்னுடைய தோழிகளுக்கும் நல்ல ஆபரணங்களை அளித்தல் வேண்டும். படுக்கையை விட்டெழு. உன் ஆடைகளைத் தோய்த்துச் சுத்தஞ் செய்து உலர்த்திக் கொணர வேண்டிய இடம் பட்டினத்திற்கு வெளிப்புறத்தில் வெகு தூரத்திலிருக்கின்றது. ராஜ குமாரியான நீ அவ்வளவு தூரம் நடந்து வருவது யோக்கியமன்று. உன் பிதாவைக் குதிரை வண்டி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கச் சொல். உன்ஆடைகளின் மூட்டை பெரிதாயிருக்கின்றமையால் தலையில் தூக்கிப்போவது முடியாது" என்றனள்.

மங்கலமான கனவு கண்ட நஸிகா படுக்கையை விட்டெழுந்து மனக்களிப்புடன் தன் மாதாவைக் கண்டு தரிசித்துப் பிதாவைப் பார்க்கப் போனாள். அதிகாலையில் அவள் பிதா ராஜகாரியமாய் ஆலோசனை சபைக்குப் போக விருந்தவரை நஸிகா வணங்கி,

"பிதாவே, பட்டினத்துக்கு வெளிப்புறத்திலுள்ள துறைகளில் ஆடைகளைச் சுத்தஞ்செய்துவர எண்ணி யிருக்கின்றேன். மனமுவந்து எனக்கு ஒரு குதிரைவண்டி தரல் வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

"குழந்தாய்,எந்தஆடைகளைப்பற்றிச்சொல்லுகின்றாய்?" என்று அரசன் வினவ, நஸிகா,

"என்னுடையவும் என் சகோதரருடையவுமான ஆடைகளைத்தான்சொல்லுகின்றேன்.அவை பெட்டியில் வெகு காலமாக வைக்கப்பட்டு அழுக்கடைந்திருக்கின்றன. என் சகோதரர் ஐவரில் இருவருக்கு விவாகமாய்விட்டது; மற்றை மூவரும்இனி மணம்புரியவேண்டியவராயிருத்தலால், அவர்களாடை சுத்தமாயிருத்த லவசியமன்றோ? ஆடை ஒருவனை அழகு படுத்துவது. உடன் பிறந்தாளாகிய என்னிலும் வேறு யார் ஸகோதரர் காரியங்களில் கவலை வைக்கலாகும்? தாங்கள் ஆலோசனை ஸபைக்குப் போகுங்கால் அழுக்காடை தரிக்கலாகுமோ?" என்று பதில் சொன்னாள்.

அலஸீனன் தன் மகளுடைய உட்கருத்தை யறியாதவனன்று. மடந்தைப் பருவமடைந்திருந்த தன் மகள் மணத்தை நினைந்து சொன்னாளென்றுணர்ந்து அவளிடத்திலுள்ள அச்சம் நாணம் முதலிய நற்குணங்களைக் கண்டு மகிழ்ந்து குதிரைவண்டி ஒன்று கொணரும்படி கட்டளை யிட்டான். அவள் மாதாவும் சந்தனாதி முதலான உயர்ந்த தைல வகைகளை மகளிடத்திற் கொடுத்து அவளும் அவள் தோழி மாரும் நீராடி வருவதற்கு உடன்பட்டாள். நஸீகாவும் அவள் சேடிமாரும் ஆடைகளை எடுத்து வண்டியிலேறிக்கொண்டு ஊருக்கு வெளிப்புறத்திலுள்ள துறையில் ஜலக்ரீடை செய்யப் போனார்கள்.

சிறுமியர் கூட்டம் குறித்த இடத்திற் சென்று ஆடைகளைப் பல நீர்களில் தோய்த்து உலர வைத்துப் பந்தாடினபோது ராஜகுமாரி வீசின பந்து மற்றவரினும் தூரப் பிரதேசத்தில் விழுந்ததைக் கண்டு தோழி மாரெல்லாரும் உரத்த சத்தஞ் செய்தார். இவரிறங்கி யிருந்த துறைக் கருகாமையி லிருந்த காட்டிற்றான் உல்லாசன் படுத்துறங்கினான். பெண்களின் கூக்குரலைக் கேட்டுத் திடீரென்று அவன் துயில் நீங்கி மரங்களிலுள்ள இலைகளை ஆடையாகப் போர்த்துக் கொண்டு மறைவிடம் விட்டு வெளியில் வந்தான்.

பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து இலையாலுடுத்து மலைபோல நிற்கும் புருஷனைக் கண்டவுடன் தோழிகளனைவரும் வெருண்டோட, மினெர்வா தேவியினுடைய பிரஸாதத்தால் நஸீகா ஒருத்தி மாத்திரம் தனித்து நின்று உல்லாஸனுடன் பேசும்படியான மனத்திட்ட முடையளானாள்.

உல்லாஸன் "கேட்டார்ப் பிணிக்குந் தகைய வாய்க்கேளாரும் வேட்ப" மொழியுஞ் சொல்லன். ஸ்திரீயின் முன்பாக வஸ்திரமின்றிப் போதல் பிழையானதால் தூர நின்றபடியே உல்லாஸன் நஸீகாவை நோக்கி, "எதிரில் நிற்கிறது மானுடப்பெண்ணோ, தேவகன்னிகையோ அறிகிலேன். தேவப்பெண்ணாயின் பிருஹஸ்பதிபுத்திரியாகிய டயானாவாய்த் தானிருத்தல்வேண்டும். வேறு எவர்க்கும் இந்த வனப்பும், உயரமும், முகமும், சாயலுங் கிடையாது" என்று புகழ்ந்து பேசினான்.

நஸீகா தான் மானுடப் பெண்ணென்றும் தேவ கன்னிகை யன்றென்றும் மறுமொழி பகர, உல்லாஸன் கொஞ்சந் தைரியங்கொண்டு, "மானுடப் பெண்ணாயின் உன்னைப் பெற்றவரும் உடன் பிறந்தாரும் என்ன தவஞ் செய்தவர்களோ. தவத்தினாலல்லாமல் உன்னைப்போன்ற உத்தம லக்ஷணங்கள் பொருந்திய பெண் உண்டாதலில்லை. உன்னை மணக்க விருப்பவன் எல்லாரினும் பாக்கியசாலியா யிருத்தல் வேண்டும். நான் சுற்றிப்பார்த்த அனேக தேசங்களில் உன் ரூப லாவண்யங்களை யொத்த புருஷனைக் கண்டிலேன். உன்னைப் பார்த்தவுடன் என்மனத்தில் ஒரு அச்சம் பிறந்து உன் பாதத்தில் விழுந்து நமஸ்கரிப்பதைத், தடைசெய்கின்றது. ஜிதேந்திரியங்களுடைய மனமும் உன்னாற் கவரப்படும். ஜன்மப் பிரகிருதியாய்க் கஷ்டத்தையே அனுபவித்து என் மனம் ஒருவாறு கட்டப்பட்டிருக்கின்றது. இருபது நாள் கடலிலலைக்கப்பட்டு உங்கள் துறையில் நேற்று மாலையில் இறங்கினேன். இந்தவிடம் நிர்மானுஷமென்றிருந்தேன். வஸ்திரமொன்றளித்து ஊருக்குப் போகும் வழியையுங் காட்டுவாயாயின் கடவுள் அரும் பேறுகளை யுனக்களிப்பார்," என்று கூறினான்.

வெளிப்பார்வைக்குக் காட்டு மிருகாண்டி போலத் தோற்றின உல்லாஸனுடைய மதுர வாக்கைச் செவிகொடுத்துக் கேட்டானந்தித்த நஸீகா, "அய்யா, உம்மைச் சோம்பேறி யென்று எவருஞ் சொல்லத் துணியார். விவேகமும் விடாமுயற்சியு மொருவனுக்குப் பாக்கியத்தைத் தாலென்பதில்லை. தேவாதிதேவன் கருணைபெற்றவர் மட்டில் ஸ[illegible]கானுபவிகளாகின்றார்கள். நீர் அனுபவிக்குங் கஷ்டமும் அவரால் வந்ததே. எங்கள் நாட்டில் வந்தமையால் ஆடை முதலானவை எவை வேண்டினும் உமக்குக் கொடுத்தல் எங்கள் கடமை. இந்த நாட்டிற்குப் பேஷியா என்று பெயர். என் பிதா அலஸீனன் இந்நாட்டிற் கதிபதி," என்றாள்.

ஓடிப்போ யொளித்திருந்த சேடிமாரை அருகிலழைத்து நஸீகா, "என் முன்னிருப்பவர் பேயுமல்ல, பிசாசுமல்ல; அவர் புருஷ சிரேஷ்டர். அவர் பொறுமையும் பெருமையும் வியக்கத்தக்கனவாம். அவர் ஸ்நானஞ் செய்வதற்குத் தீர்த்தத்தையும் உடுக்க ஆடையையும் தயார் செய்யக்கடவீர்" என்று சொல்லத் தோழிமாரும் அவ்வாறே செய்தனர்.



மாசுபடிந்த உடலைக் கழுவித் தேசளிக்கும் ஆடையணிந்து உல்லாஸன் நிற்கும்போது, மன்மதன் தானுருமாறி வந்தானோ என்று அங்கிருந்தவர் எண்ணலானார். நஸீகாவும் உல்லாஸனைப் போலழகமைந்த புருஷன் தன்னைமணம் புரிதல் வேண்டுமென்று எண்ணங் கொண்டனள்.

நஸீகாவின் தோழிமார் உலர்த்தி யிருந்த வஸ்திரங்களை யெல்லாம் சேர்த்து மூட்டையாகக் கட்டி வண்டியிலேற்ற, நஸீகாவும் அவர்களும் அதன்மேலேறிச் சவாரி போனார்கள். புறப்படுமுன் நஸீகா உல்லாஸனுக்கு வண்டியின் பின்னரே கால் நடையாய் வரலாமென்று சொல்லி யிருந்தனள். வண்டியில்தன் பக்கத்திலேயே உல்லாஸனை வைத்தழைத்துப் போதவில் விருப்பமுடையவளாயினும் உலகம் வித்தியாசமாய் நினைக்கு மென்றஞ்சி வண்டியின் பின் வரும்படி அவனுக்குச் சொன்னாள். சிறு பெண்ணாயினும் யுக்தாயுக்தந் தெரிந்து நஸீகா நடப்பவள்.

உல்லாஸன் பட்டினத்திற்குட் போய், அங்குள்ள மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், வியாபாரச் சாலைகளையும் மற்றுமுள்ள துறைகளையும் பார்த்தான்.*

வரப்பறு மணியும் பொன்னு
மாரமுங் கவரி வாலும்
சுரத்திடை யகிலு மஞ்ஞைத்
தோகையுந் தும்பிக் கொம்பும்
குரப்பணை நிரப்பு மன்னர்
குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன
வாவணம் பலவுங் கண்டான்.

நஸீகா முன்னதாகவே அரண்மனைக்குட் சென்று உல்லாஸன் வரவைத் தெரிவித்திருந்தமையால் அவன் ராஜஸந்நிதானத்திற் சென்று "மஹாராஜனே, கடலில் என் மரக்கலமுடைந்து போனமையால் நீந்தி உமது துறையில் நேற்று மாலை வந்தேன். இன்று காலையில் தமது புத்திரியாகிய தேவியின் தரிசனத்தாலும் தயையாலும் துன்பத்தினின்று விடுபட்டவனா யுமது ஸந்நிதானத்திற்கு வரலானேன். எனக்கு ஒரு கப்பலும் அதற்கு வேண்டிய ஆட்களுந் தந்து என்னூர்க்கனுப்பப் பிரார்த்திக்கின்றேன்" என்றான்.

அரசன் சபையிலுள்ளாரை நோக்கி, "நம்முன் வந்திருப்பவன் யாரென்று அறிகிலோமாயினும், "தேஹி" என்று கேட்டவனுக்கு "நாஸ்தி" என்று சொல்லுதலாகாது. நமது நாட்டில் இவன் உள்ள வரையில் தக்கபடி ஆதித்தியஞ் செய்து ஊர்க்குப் போகுங்கால் கப்பல் ஏற்பாடு செய்தனுப்புதல் தகுதி. உங்களபிப்பிராயமென்ன?" என்று வினவ, அமைச்சரும் அவ்வாறே செய்தலாகுமென்றார்.

அலஸீனன் ஆக்ஞையால் உல்லாஸனுக்குத் தக்க ஆஸனம், அன்னபானாதிகள் அளிக்கப்பட, உல்லாஸன் திருப்தியாய் உண்டு மனங்களித்திருந்தான். தன் உண்மையான நிலைமையை உல்லாஸன் பேஷியா நாட்டாருக்குச் சொல்லவில்லை. அலஸீனன் உல்லாஸனுக்குத் தக்க படுக்கை அமைக்கவென்று கட்டளையிட, உல்லாஸனும் அன்று பஞ்சணைமீது படுத்து உறங்கப் பார்த்தான். முன்னாள் சருகுபடுக்கையில் எப்படி சுகமான நித்திரை வந்ததோ அவ்வாறு பஞ்சணையில் இல்லை. இதுவும் ஒரு புதுமை. இராப்பொழு திவ்வாறு செல்ல,

தகையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயலுழந்து தளரு மெல்லை
சிதையுமனத் திடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி யெனுங்கடவு ளுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான்.

# கடற்கரை ஓர் கனு

## ON THE BEACH : A REVERIE.

இவ்வாறு துக்கமோர் பக்கந்துளைத்திட, சுகமோர்பக்கம் சுரந்திட நீலக்கடலை நோக்கிக் கொண்டே சென்றேன். யமுனு நதிக்கரையில் கண்ணன் செய்த திருவிளையாடல்கள் என் கண் முன்னே நின்றன. திடீரென்று அடிவானத்திலிருந்து ஓர் பெருஞ் ஜோதி கிளம்பியது. அதன் நடுவில் உருக்கிய தங்கம் போலும் மேனியுடன் பகவான் என் கண்ணன் காளிங்கன் மீதேறி ஆனந்த நர்த்தனஞ் செய்வதைக் கண்டேன். கண்டவுடன் என் துக்கமெலாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது. என் கண்ணே கண்மணியே மணியினொளியே கற்கண்டே கனிரசமே ஆராவமுதே ஆருயிரே என்கண்ணு வென்று மெய்மறந்தது. ஆனந்தபரவச மானேன்.

"ஊரிலேன் காணி யில்லை உறவுமற் றொருவ ரில்லை
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர் களைக ணம்மா வரங்கமா நகருளானே.
பத்திமுத லாய வற்றில் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காசம்போல்
முத்திதரு நகரேழின் முக்கியமாய் கச்சிதனில்
அத்திகிரி யருளாளர்க் கடைக்கலநான் புகுந்தேனே

என்று பெரியோர் உடலுருகி உள்ளங் கரைந்து சொல்லாய்ப் பெருகி உரைத்ததுபோல் யானும் நின்னையே சரணம் புகுந்தேன். ஆநிரை மேய்த்து ஆயரை மயக்கி வேய்ங் குழல் கொண்டு சராசரத்தை உருக்கிடச் செய்யும் மதன மோஹன சுந்தர மாமாயா கள்வ, ஜாரசோர சிகாமணி, வேதத்துக்கு மறிய பரம்பொருளே நீ ஆயர்க் கெளியனுன செளலப்யம் எவ்வகையோ என்று அழுதேன். தொழுதேன். பாடியாடினேன். உடலுருகி உளமுருகி நைந்துவாடி அழுதேன். தொழுதேன் என்ற பெரியோர் பேச்சை நான் பேசுவது கள்ளப்பேச்சு என்று நீ அறிந்ததுதானே. உலகத்தவரைப் போல் விஷயாதிகளை அனுபவித்துத் திருப்தி அடைந்து சுகித்திருக்கவெண்ணிய என்னை நண்பனுகவும் குருவாகவும் வந்து தடுத்து நானெவ்வளவு சொல்லியுங் கேளாமல் என் மனதைக் கொள்ளைகொண்டு நின் வசமாக்கிட அதனுல் உன்னைக் கண்டு களித்திட அவா மேலிட்டு உன்னை நாட நீ என்னைக் காலாலுதைத்துத் துவைத்துமிதித்து கனமத்தில் போட்டுவாட்டுகிருய். சுகமாயிருந்த என் மனதைக் கலக்கிட அதனுல் நான் வெந்து பரிதவிப்பதைப் பார்த்துப் புன்சிரிப்புகொண்டு கூத்தாடுங் கள்வ, மையல் செய்து மனங்கவரும் மாமாயா நினது திவ்ய தேஜோமயானந்த வுருவங்கண்டதுபோல வென் மனம் நின்னையே நாடுகிறது. என்னை வாவா வென்று கூவி யழைத்து ஆசைகாட்டி மோசஞ் செய்யுங் கள்வ, நீதானே கருணையங்கடல்? உலகைப்படைத் துயிரை வதைப்பதும் ஓர் விளையாட்டோ? நினைவிட்டு எந்த நாள் பிரிந்தனே ஐயோ அதுமுதல் மாறிமாறிப் பிறந்து சன்மத்தால் மொத்துண்டு ஐவர் வலையில் சிக்கி மயங்கி அலைந்து தடுமாறி அழுதழுது என் மனமும் புண்ணுயிற்று. நீயும் பிறந்து பிறந்து அவஸ்தைப்பட்டது போதும். என் ஆருயிரே, ஆராவமுதே, இனியான் உன் பிரிவை யாற்றேன். நின்னருளாலன்றி என்மருள் ஒருநாளும் தீராது. மண்ணுண்ட மாமாயா என்னையுமுண்டு நீ பூர்ணமாவாய்!" என்று இவ்வாறு நான் கற்றதை யெல்லாம் கிளிப்பிள்ளைபோலக் கூறினேன்.

மாயன் மறைந்திடுவனே யென்று அலைகளுக் கப்பால் கடலில் விளையாடும் அந்தத் தேஜோமயானந்த ரூபத்தையே கண்கொட்டாது பார்த்தேன். அவன் செய்யும் ஆனந்த நர்த்தனத்தைக் கண்டு நானும் காளிங்கன்பேரில் நர்த்தனம் செய்தேன். விஷங் கக்கும் ஐந்துதலை நாகத்தின் மீதேறி அவன் குதித்தாட விஷயங்களின் சென்னிமிசை காலை வைத்து நானுங்குதித்தாடினேன். பார்க்குமிட மெங்குங் காளிங்கன் மீதேறி நர்த்தனஞ் செய்யுங் கண்ணனுகவேயிருந்தது. அடிக்கும் அலையிலும், வீசுங்காற்றிலும், அலையும் இலையிலும், ஜ்வலிக்கும் சூரியனிலும், ஓடும் மேகத்திலும், பிள்ளைகள் விளையாட்டிலும், எங்கும் கண்ணன் ஆனந்தக் கூத்தாடினுன். அவனன்றி ஓர் அணுவு மசையவில்லை! தில்லையிலானந்தத் தாண்டவமாடுகிருனென்றும், பிருந்தாவனத்தில் ஓர் காலத்தில் மோகன வடிவங்கொண்டு யாவர் மனதையும் கொள்ளை கொண்டு கூத்தாடினுய் என்பதும் பொய். இப்போதும் எப்போதும் எல்லாவிடத்தும், பிரமா முதல் பிபீலிகா பர்யந்தம் யாவர் மனதிலும் நின்று நடனஞ்செய்யும் என் கண்ணு ஒன்றும் நீயல்லை, உன்னையன்றி வேறொன்றுமில்லை என்று கொண்டாடி உள்ளம் பூரித்தேன். முன்னிருந்த விசனமெல்லாம் மாயமாய் மறைந்தது. உலகம் துக்கமென்று நினைப்பதுவுந் துக்கமாயிருந்தது. 'நான் கொடியன், வல்வினையேன்' என்று அலற்றிட நாவெழவில்லை. புகழ்ந்து போற்றிடவும் மனமெழவில்லை. காணுமிடமெங்கும் கண்ணன் கூத்தாடி ஆனந்தமாரி சொரிய எனக்கெங்குமிடமில்லாமல் அச்சுகவாரியில் மூழ்கிக்கிடந்தேன். உலகைமறந்து என்னையுமறந்து பேச்சற்று செயலற்று அவன் மோகத்திலும் ஆனந்தத்திலும் ஈடுபட்டேன்.



கொஞ்ச தூரத்தில் கடற்கரை யருகாமையில் ஓர் மலை தோன்றியது. அப்போது சூரியன் அஸ்தமனமாகிற சமயம். குதூகலத்துடன் விரைவாய் அம்மலையை நோக்கிச் சென்றேன். மலையடிவாரத்தில் சென்று பாறைகளின் மீதேறி கன்றுபோல் குதித்தோடி அப்புறஞ்சென்றேன். அச்சமயத்தில் நான் கண்ட காக்ஷியை என்னென்று சொல்வேன்! பால்போலும் நிறமுடைய நதியொன்று அகன்று ஆழ்ந்து பரந்து, பாலாறு பாற்கடலில் கலப்பதுபோல் கடலில் கலந்து ஐக்யமாயிற்று. இப்படி ஒரே பால் வெள்ளமாய்ப் பிரகாசமாய் அகன்று அன்பாருய் கடலில் பிறந்து கடலில் கலக்கும் நதியானது அனுதியாய்ப்பிறந்து பிறந்து மேன்மேலும் கர்ம வெள்ளம் பெருக நிலைதடுமாறி குதித்தோடி வீழ்ந்து புரண்டு இளைத்து நைந்து உருகி அகண்ட பரிபூரண சச்சிதானந்தமான சுகவாரிதியை அருட்கடலைக் கண்டுக் குதூகலித்து உள்ளம்பூரித்து அன்பாய்ப் பெருகி ஓடி கலந்து ஐக்யமாம் முக்தர் மனம்போல விளங்கியது. சூர்யபகவான் ராஜ்யபாரந் தீர்ந்ததனுல் வெப்பமெலாந் தணிந்து இளவரசாம் சந்திரனுக்கு முடிசூட்டி விரைவாகக் காடுசென்று காடாயந் தரித்து செவ்வானமெனுங் கொடிநாட்டி முகத்தில் தேஜஸ் பளபளவென மின்ன, மேற்குத்திக்கில் ஆற்றுக் கருகாமையில் ஓர் மலையின் அப்புறத்தில் யோகஞ் செய்யச் சென்றுர். கீழ்த்திசையை நோக்கினேன். ஆ ஆ என்ன ஆனந்தம்! அகண்டமாய் வெறுவெளியாய்ப் பேரொளியாய் நின்மலமாய் நிராமயமாய் நிஷ்களங்கமாய் சின்மயமாய் சிதாகாசமாய் ஏகமாய் பூரணமாய் மோனமாய் ஆனந்தப் பெருக்காய்க் கிடக்கும் பாற்கடலைக் கண்டேன். அதில் கலந்து ஐக்யமாம் ஆனந்தப் பேருரைக் கண்டேன். கண்டு களித்தேன், ஆனந்தாகார மடைந்தேன்.

இப்படிப் பரவசமாயிருக்குமளவில் பாற்கடலினின்றும், அமிருத கலசம்போல் சந்திரனுதயமானுன். அகண்ட சிதாகாசத்தில் ஞானேதயமாவது போல் பூரணசந்த்ரனுதயமாய் உலகெங்கும் ஒளிமாரி பெய்து அமுதஸ்நானஞ் செய்வித்தான். அப்பிரபையின் மத்தியில் மதன மோஹன கிருஷ்ணன் ஆனந்த நடனமாடினுன். உருக்கிய தங்கம் போலும் மேனியுடைய கடல் தன் நாதனைக் கண்டு உடல் பூரித்து உள்ளம் பொங்கி புளகாங்கித மடைந்தது. அலைகள் ஓமோம் எனும் பிரம கீதையைப் பாடின. விண்ணவர், காணுதற்கரிய இத்திருவிழாவைக் கண்டு ஆகாயமெங்கும் முத்துப் பந்தலிட்டு மோனக் களிப்படைந்தனர். மண்ணவரும் இவ்வானந்தாமிருதத்தை யுண்டு ஆடிப்பாடி உள்ளங் குளிர்ந்தனர். விண்ணவர் நடத்தும் இத்திவ்ய சந்திரபிரபை உத்ஸவத்தை நான் கண்குளிரக் கண்டேன். உடல் பூரித்தேன். அள்ளிப் புசித்தேன். துள்ளிப்பாடினேன். வாரி அணைத்தேன். சொல்லற்று நினைப்பற்றுச் சும்மாவிருந்தேன்.

இவ்வண்ணம் புலன் வழியாயோடி உள்ளத்தில் சுகவெள்ளம் பாய்ந்து நிறைந்தும் என் அவா அடங்கவேயில்லை. உள்ளத்தில் சுரந்து பெருகி தேகேந்திரியாதிகளால் வழிந்தோடும் ஆனந்தப் பேருரைப் பெருங்கடலை ஆராவமுதை, வெளியே நாடி வீண்காலங் கழித்தேனே யென்று வருந்தி பெருமூச்செறிந்தேன். கற்கண்டே கனியே கனிரஸமே தேனே அமுதமே என்றும் ஒளியே வெளியே ஜோதியே கடலே மதியே என்றும் வாக்கு மனதுக் கெட்டாத அதீதப்பொருளை எளிய வைவையென்றுக் கடலையிரைத்திடப் புகுந்தது போல, வாயால் புகழ்ந்து இந்திரியங்களால் அனுபவித்து அகந்தை யடைந்தேனே. புறச்சுகத்தை நாடி அகச்சுகமென மனமகிழ்ந்தேன். செயற்கையால் வரும் ஆனந்தத்தை இயற்கையென்று மோசம்போனேன். விஷயச்சங்கத்தால் பிறக்கும் இன்பங்கள் அவ்விஷயம் நீங்கியவுடன் தாமும் நீங்காவோ. உண்மையாய் பரம்பொருளைத் தரிசித்தவன் போல மோனக்கடலில் மூழ்கினேன். ஆனந்த பரவசமடைந்தேன் என்று அகந்தைகொண்டு ஐயோ என்ன பெரிய பேச்சு பேசினேன் என என்னை இகழ்ந்துக் கொண்டே நிச்சலமாய் நிச்-

சப்தமாய் அங்கு கிடந்த விசாலமான பாறையின் மீதேறி யோக ஆஸனமிட்டு உட்கார்ந்தேன். கண்மூடி கண் வழிநாடி புருவ மத்தியுள் நின்று அப்பாலுஞ் சென்று நெற்றிக்கண்ணைத் திறந்து பிரமாந்தரதந்த்தில் வீற்றிருக்கும் பரஞ்சோதியைத் தட்டி எழுப்பித் தரிசிக்க முயன்றேன். பாற்கடலில் பள்ளிக்கொண்டத் திருவரங்கனை என் மனக்கடலில் காண நான் அவா கொண்டேன். மதி மண்டலத்தி னிடையே காளிங்கன் மீதேறிக் கூத்தாடுங் கண்ணா என்சிதாகாசத்தில் கூத்தாடி என்னைக்,களிக்கச் செய்திடாயோ. நினைப்பு மறப்பெனு மலையடிக்க, காமாதிகளாம் சுராமீன்களோடி இரைதேடியலைய, எல்லையற்றக் கன்மவாஸனைகள் நிறைந்து ஆழ்ந்து அகன்ற என் மனக்கடலில், ஐந்து தலை நாகமெனும் ஐம்புலன்கள் விஷயமாக விஷத்தைக்கக்க அதனால் மயக்கமடைந்து என்மனம் கருத்துவாட என்னனம்பே நின்கருணையாம் பாதத்தை என் சென்னிமிசை வைத்து புலநாகத்தைப் பிடித்து மிதித்துத் துவைத்து கோடிசூரியப்பிரகாசமாய் காளிங்கன் மீது ஆநந்தக் கூத்தாடும் மோகன மாயா, கள்வ மனதைக் கலக்கிக் கலக்க முண்டாகச் செய்வதே உன் வேலையோ மண்ணை விழுங்கின பெருவாயா என்னையும் விழுங்கி நிறைந்திடாயோவென்றுப் பெருமூச்சுவிட்டுப் பரிதவித்தேன். அவன் உருவை நாடினேன். குணங்களை நினைத்தேன். சச்சிதானந்த ஸ்வரூபத்தைத் தியானித்தேன். உலகை மறந்து என்னையுமறந்துஎன்னுருயிரின்குணத்திலும் ஸ்வரூபத்திலும் அருளிலும் ஈடுபட்டேன்.

இருள் மூடி மருள்மயமா யிருந்தவென் மனதிலப்போது திடீரென்று மதியொளிபோலும் ஓர் பேரொளி பிறந்து எங்கும் நிறைந்து வியாபித்தது. அவ்வொளி மாரியில் ஸ்நாநஞ்செய்து உள்ளங் குளிர்ந்தேன். இது கண்ணொளியோ சித்தொளியோ வென்று வியப்படைந்து சந்தேகமுற்று இருள் நிறைந்த வோர் குகையில்சென்று உட்கார்ந்து கண்மூடி மறுபடியும் அருளொளிவரவை அவாவுடன் எதிர் பார்த்திருந்தேன். முன் கண்ட மதியினொளிமீளவுந்தோன்றி எங்கும் பரந்தது. புறவொளி கண்ணொளியாய், கண்ணொளி மனவொளியாய், மனவொளி சிதாகாசமாய்ச் சூழ்ந்து அகன்று எங்கும் பிரகாசமாய் அகண்டமாய் ஏகமாய் சிதாதித்தனாய் சுயஞ்சோதியாய் துரிய வெளியாய் அமுதவெள்ளமாய் ஆனந்தப் பெருக்காய் ஞாலமெலாமுண்டு எங்குந்தானாய்

சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்து முடிவில்பெரும் பாழே
சூழ்ந்ததனிற் பெரியபர நன்மலர்ச்சோ தியோயோ
சூழ்ந்ததனிற் பெரியசுடர் ஞானவின்பமேயோ
சூழ்ந்ததனிற் பெரிய வென்னவாவறச்சூழ்ந்தாயே

என்றபடி அகண்ட சச்சிதானந்தத்தில், லிங்கத்திலிருந்து வெளித்தோன்றிய அகண்ட ஜோதியைப்போல், அனலுண்ட இருப்புண்டைபோலும் என் மனமொளிக்கடலாய் விளங்கியது. சூரியனைக்கண்ட பனிமலைகள் உருகிக் கரைந்து கடலில் கலந்து கடலாவதுபோல் தேகேந்திரியங்கள் வாக்கு மனமெல்லாம் நாமரூபமிழந்து தாழும் பாழான பெருவெளியில் சிதாகாசத்தில் கரைந்து மறந்தன. இது கனவோ நனவோவென்று அதிசயமடைய, இப்பெருவெளியினின்றும் அப்பிராகிருத தேஜோமயானந்த திவ்ய மங்கள மோஹன விக்ரகமாய் வேய்ங்குழல் கொண்ட வேணுகோபாலன் தோன்றி புன்னகையாம் ஜீவாமிருதம் பொழிந்து களித்து ஆடினான். மண்ணீரனல் நிலம் அண்டபகிரண்டம் பிரம்மாதி தேவர் அசுரர் முனிவர் ரிஷிகள் முதலிய சராசரம்யாவும்அவ்வேணுகானத்தைக் கேட்டு உடலுருகி உயிர் கரைந்து அருள்பாதத்தைநாடி தம்மை மறந்து, மனமோஹனானந்த வடிவில், தேனுண்ட வண்டுபோல் ஈடுபட்டு லயித்துப் பரவசமாய்க் கிடந்தன. ஏராமாவென ராமனாய் சிவமே என சிவமாய் நடராஜனாய் தக்ஷிணாமூர்த்தியாய் நினைத்த வடிவமெலாந் தானாய் ஒரே ஜோதியாய்ப் பிரகாசிக்கும் ஆருயிரைக்கண்டு,என் மனதில் எல்லையிலின்பம் சுரந்து ஆறாய் பெருகி ஓடிற்று. இப்படி உருவமாயும் ஒளிவாயும் மாறி மாறி காக்ஷிகொடுத்து என்னை ஆட்கொண்ட பேருளாளனை நினைந்து நினைந்துப் புகழ்ந்து போற்றினேன். சாந்தானந்தத்தில் மூழ்கினேன். நினைத்தலுந் துக்கமென்று நினைப்பற்று மோனமாய் நின்றேன். கருவிகரணங்களோய்ந்து மனஞ்செயலற்று மோன வெளியானேன்.

இப்படி வெகு நேரம் கண்மூடி உலகமற்று நானிறந்து யாவுந்தானாய் நின்ற பரஞ்சோதியை நிர்வாஸனா மௌன வானந்தத்தை அனுபவித்து வெய்யலிலிட்ட விளக்குபோல் அதில் ஐக்யமானேன். எவ்வளவு நேரமிம்மாதிரி யிருந்தேனோ எனக்குத் தெரியாது. கடைசியில் கண்விழித்துப் பார்க்கும்போது எங்கும் முன்போல ஒரே வெளியாய்ப் பரவெளியா யிருந்தது. ஆனாலிப்



போது அது ஜடவொளியாய் மழுங்கி யிருந்தது. கண்ணுக்குப் பார்ப்பதே துக்கமாய் உள் நோக்கி செயலற்று நின்றது. சிதாகாசத்தில் சென்றிறந்த என் உயிர் இப்போது தேஹத்தில் இறங்கி நிறைவதாய் நான் நினைத்தேன்.

புறவொளிபோல இம்மன வொளியும் ஜடமோ அல்லது சாஸ்திர வாஸனைகொண்டு மனங்கற்பித்த கனவோவென்று அதிருப்தி அடைந்து மீளவும் அப்பிரகாச வெள்ளத்தில் மூழ்கிப் பார்த்தேன். ஒரு வேளை இது, திரிபுரந்தானடி சோசத்திரையை நீக்கிட அங்கே ஒரேபிரகாசமாய் விளங்கும் ஆன்ம ஜோதியோ அல்லது ஆன்மாவையும் ஜடமாக்கி அதை விளக்கும் ஸ்வப்பிரகாசமான பாற்கடல் பரஞ்சோதியோ வென்று ஐயமுற்று மனங்கலங்கினேன். ஜீவவொளி இவ்வளவு அகண்டமாய் காணுமோ;பரவொளியாயின் அதிருப்தியும் சங்கையு முண்டாமோ வென்று என்மனம் சலித்து அலைந்தது. ஆத்மா நிலையற்று பரதவித்தது. விவகார துக்கம் மனோதுக்கமாய், மனோதுக்கம் இப்போது ஆன்மதுக்கமாய் வரவர துக்கம் மேலிட்டுப் பெருகுகிறதேயொழிய கொஞ்சமேனும் தாபந் தணியவில்லையே. தாகம் நீங்கவில்லையே என்ன செய்வேன்! குருவாக வந்து என்னை இப்போது கைகொடுத்துக் காப்பாற்றினாலல்லது என் சஞ்சல மொருநாளுந் தீராதென்று மறுபடியும் பெருமூச்சு விட்டுத் துயரமடைந்தேன்.

அச்சமயத்தில் உயிரைக் கரைக்கும் வேதகானம் எங்கிருந்தோ என் காதில் வீழ்ந்தது. அமுதினுமினிய குரலுடன் என்னை யாரோ அழைத்ததாக எனக்குத் தோன்றியது. மனந்திடுக்கிட்டது. தேகம் மயிர்கூச்செறிந்தது. என்னை யாளவந்த என்நாதனோ வென்று அக்குரல் வந்த திக்கை உற்று நோக்கினேன். அப்போது சுமார் 9 மணி இருக்கலாம். நிலாவெளிச்சத்தில் கல் முள் செடி ஒன்றுங் கவனியாமல் அம்மலையில் ஏறிக் குதித்துத்தாவி ஓடி அச்சப்தம் வரும் வழியே சென்றேன். தூரத்தில் திவ்ய காந்தி வீசும் மகாபுருஷர் ஒருவர் என் கண்முன்னே என்னை அழைப்பதாகத் தோன்றியது. அதனால் மனங்களித்து மனோ வேகமாய் அவரிட மோடினேன். அவருமோடினார். கிட்ட வரவர மறைந்து தூரத்தில் தோன்றி, இம்மாதிரி நானோட அவரோட வெகுநேரம் அம்மலைக்காட்டில் ஓடி அலைந்து சோர்ந்து அயர்ந்திட்டேன்.



# நாகாநந்தம்

## NAGANANDA : A CLASSICAL DRAMA

அங்கம்—3. களம்—2.

அதே இடம்—ஓர் தாமல மரசாலை

(நாயகன் தனது நேசனுடனும், நாயகி தனது தோழியுடனும் வரல்)

**விதூஷகன்.**—இங்கு இதோ! இதுதான் தாமலமரசாலை. அம்மணீ! இந்தச் சரத்கால ஸூரியனது தாபத்தால் தங்கள் முகம் வாட்டமடைந்திருக்கிறது. இந்தப் பளிங்கு மேடைமேல் சற்று உட்காரும்.

**நாயகன்.**—அன்பா! நீ சொல்லியது ஏ தவமே!

மன்னுங் காமர் விளங்குறுஉ மாமுகம்
கன்ன சோபை கலக்கிவெண் மதிெ
தன்னும் பகற்கண் தொடர்தரூஉ மஂ
பொன்னும் வெள்கப்புகழ்ச்செறீஇக்க

(மலையவதியின் கையைப் பிடித்துக்ெ ப்ரியே! நாமிங்கு உட்காரலாம்.

(யாவரும் உட்காருதல்)

**நாயகன்.**—(நாயகியின் முகத்தை நிமிர் பார்த்துக்கொண்டு)

உய்யா னம்வர மனமுற்ற வெம்மால்,
மெய்துயர் வாட மெல்லியல் நின்றனை
வாவென் றழைத்து வீணே வருத்தினம்!—
புரூர மென்னு புரையின் வல்லியும்
பொரூமிதழ்ப் பவழப் பொன்னார் தளிர்களு, மதான்று
விரிவரி செங்கண் மலர்கள் பூத்தும்
வாயெனு மோடைவாய் வளர்கட் சுரந்தும்
ஓயா முத்தம் உணர்ச்சியி னெரித்துங்
கருங்கொண் டலெனும் கவர்மயிர்த் தவழ்ந்தும்
இளம்பிறை நெற்றியி னினிமைநிலா வீச
விளங்குறூஉ நின்முகம் விழைவுறூஉம் விஞ்சையர்
தவழ்குறூஉந் தண்ணிய தருவின மன்றே!

**தோழி.**—(புன்சிரிப்புடன், விதூஷகனை நோக்கி) நாயகி எவ்வாறு வர்ணிக்கப்பட்டாள் கேட்டியோ?

**விதூஷகன்.**—சாதுரிகே! இப்போது கர்வம் வேண்டாம்! நம்ம நடுவில்கூட ஒருவன் வர்ணிக்கப்படக்கூடியவன் ஒருவனிருக்கிறான். ஆனால் ஒருவரும் அவனை, பொறாமையினால், வர்ணிக்கிறதில்லை.

**தோழி.**—(சிரித்துக்கொண்டு) நான் உன்னை வர்ணிக்கிறேன்.

**விதூஷகன்.**—(குதூஹலத்துடன்) ஹா! ஆர்யே! எனக்கு இப்பொழுதுதான் உயிர்வந்தது! ஸரி, பெருமாட்டி நீங்கள் அப்படியே செய்யுங்கள். இந்த மனுஷன் இனிமேல் 'நீ இந்த மாதிரி இருக்காய், அந்தமாதிரி இருக்காய், நீ கருகுரங்கு போலிருக்கிறாய்' இந்தமாதிரி சொல்லாமலிருக்கும்படியாக செய்யுங்கோள்.

**தோழி.**—நீங்கோ கலியாணத்லே கண்விழிச்சிக்கிட்டு இருந்து அப்பொறம் கண்ணே மூடிக்கிட்டு தூங்கிட்டீரே, அப்போதிக்கி நன்னா இருந்தீங்கோ. அதே மாதிரிக்கி நீங்கோ இப்பொதிக்கிருங்கோ. நான் ஒங்களே வர்ணிக்கிறேன்.

ப்பு விதூஷகன்.—(அவ்வாறே செய்கிறான்)

மீன்கம

மவாஸஜீ.—(தனக்குள்) அவன் கண்ணைமூடிக் மனக்கடவிச்சே இந்த தாமல எளையைப் பிளிஞ்சு கள் விஷயாகத்தெ கருக்கச் செய்ரேன். (எழுந்து மடைந்து லயைப் பிழிகிறாள்)

நின்கருணாயகனும் நாயகியும் விதூஷகனைப் வைத்து பார்க்கிறார்கள்)

துமைவந்தன்.—நேசா! நீ அதிருஷ்டசாலி! நாங் மீது ங்கு வீணை இருக்க நீவர்ணிக்கப்படுகிறாய்.

மனவ

உன் தோழி.—(விதூஷகன் முகத்தைத் தாமலச் என் றால் கறுக்கச் செய்கிறாள்).

பொாயகி.—(நாயகனைப் பார்த்து சிரிக்கிறாள்)

ஏ நாயகன்.—(நாயகி முகத்தை நோக்கி)

கண்ணி னினிமைகொள் காதலி நின்முக
நண்ணும் பவளத்தை நாணபடுத் தாரிதழ்
வண்ண தளிர்க்கிடை மலர்தறூஉ மார்நகை
எண்ணக் காய்ப்பல னென்கண்ண தென்னே!

**விதூஷகன்.**—அடி தாசீ! என்னடீ செய்தாய்?

**தோழி.**—இப்போத்தான் நீங்கோ வர்ணிக்கப்பட்டீர்.

**விதூஷகன்.**—(முகத்தைத் துடைத்து, கையைப்பார்த்து, கோபத்துடன் தடியை யோங்கி) அடிக்கீழ்க்குலப் பட்டிமுண்டை! ஆனால் இது ராஜக்குஹம்! உன்னை யான் என்ன செய்யலாமடீ! (திரும்பிப் பார்த்து) இங்குப் பார்!

உங்களிருவர் முன்பும் இந்த வெட்கங்கெட்ட நாரி என்னை இப்படி உருவு கெடுத்தாள்! நான் ஏன் இங்கு இருக்கவேண்டும்? நான் வேறு எங்காவது போகிறேன். (போகிறான்)

**தோழி.**—நிஸ்சயமா நல்ல அத்ரேயன் என்னால் கோபமடைந் திருக்கான், நான் போய் அவனை ஸமாதான படுத்தரேன் (போக விரும்புகிறாள்.)

**நாயகி.**—அடீ சாதுரிகே! என்னடீ அது? என்னைத் தனியாகவிட்டு நீ போக விரும்புகிறாய்?

**தோழி.**—(நாயகனை நோக்கி, சிரிப்புடன்) நீங்களிப்படிக்கே நெடுநேரம் இருக்க! (போகிறாள்).

**நாயகன்.**—(நாயகி முகத்தைப் பார்த்து)

எயிற்றுக் கேசர வின்னிதழ்ப் பவளத்தின்
பயிற்றும் வெய்யலின் பங்கயங் காட்டிடு
மயிற்றுணைப்படு சாயனின் வண்டினன்
குயிற்றுந் தேன்கொளக் கண்டிலைக் கொம்பனாய்!

**நாயகி.**—(சிரித்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்)

**நாயகன்.**—(மறுபடியும் அவ்வாறே கூறுகிறான்)

(நேபத்தியத்திலிருந்து தாதி ஓடிவரல்)

**தோழி.**—(பரபரப்புடன் வந்து) ராஜ குமாரனைப் பார்க்க வேலையுடன் தலைவன் மித்ராவஸு வருகிறார்.

**நாயகன்.**—ப்ரியே! நீ வீடுபோ. நான் மித்ராவஸுவைக் கண்டுவிட்டு சீக்கிரம் வருகிறேன்.

(நாயகி தோழியுடன் போதல்)

(மித்ராவஸு வரல்)

**மித்ராவஸு.**—(தனக்குள்)

பகைவனைக் கொல்லாது பாவியேன் நாணிலாது
வகையிலா வுரையால் ஜீமூத வாஹன!
உனது நாடு ஒன்னலார்
தனதெனக் கொண்டனரென் றுரைத்தலுந் தகுமே!

**நாயகன்.**—(மித்ராவஸுவை நோக்கி) மித்ராவஸு இங்கு உட்காரும்.

**மித்ராவஸு.**—(உட்காருகிறான்)

**நாயகன்.**—(ஆலோசித்து) மித்ராவஸு! உன்னைப் பார்த்தால் அலண்டிருப்பதாகப் படுகிறதே.

**மித்ராவஸு.**—அந்தப் பாவி மாதங்கன் விஷயமாய் என்ன குழப்பமிருக்கு மென்று?

**நாயகன்.**—மாதங்கன் என்ன செய்தான்?

**மித்ராவஸு.**—தன்னழிவை முன்னிட்டு உனது நாட்டைக் கைப்பற்றியிருக்கிறான்.

**நாயகன்.**—(கிளர்ச்சியுடன்—தனக்குள்) இது வாஸ்தவமாக இருக்குமோ?



**மித்ராவஸு.**—அரசு அவனுடைய அழிவிற்கு உத்தர வளிக்கக் காத்திருக்கிறேன்.

ஆணையைத் தருமின் ஆலஸ்ய மின்றி
வீணிற் காலம் போக்காது மிகைப்படூஉம்
படர்களைக் கூஉய் பாரியச் சிலீமுகப்
படைகளை நாணிற் படுத்தித் தொனித்து
வகைவகை வளரூஉம் வரூதினி யதனை
கூழை தூசி கோழையில் மனத்தரால்
மாரதர் பட்ட மாறு விஞ்சையர்
மாரதக் கூட்டம் மண்ணைக் கிளப்பித்
தூசியில் ஸூர்யன் கிரணந் தொலைத்து
காற்பட நடக்கும் மாற்பெரு மலையெரித்து
குரகதப் படையின் குரத்தா னிடித்து
மரகத மலையும் பதுமரா கம்பட
விரகிற் சென்று விரிகண் தீக்கொட்டி
வாய்ப்பற் கடித்து மயிர்க்கூச் சிட்டு
இதழ்த்துடிப் பெய்த இதயங் கிளர்ச்சித்து
மதம்பொழி யானையின் எதிர்த்தரை மோதி
வேரறச் செய்து வீறியங் காட்டி
ஸாமந் தருங்கண் டடங்கி தமநிலைப்
பட்ட வராகி பார்த்திவ! நின்பால்
இட்டங் கொண்டிட இயற்றுது—மதான்றி
படைப்பெருஞ் சேனை வேண்டுமென்? பண்பினேன்
ஒருவனே னென்கைத் தருவாள் வீசி
கையொடு கைவாங்கி கவர்த்திடுந் திரமையின்
கோபந்தீட்டுவேகங் குடைந்து, மலைபடூஉம்
தறுகண் சீயம் புழைக்கைத் தந்தியை
மருப்பு முருப்பு மயங்க புடைத்தாங்கு
மாதங் கன்றனை மாய்ப்பதும் காண்குவை
பாவி யவன்றலை பற்பொடிப் படவே!

**நாயகன்.**—(செவியை மூடிக்கொண்டு தனக்குள் அந்தோ! என்ன கொடூரமாகக் கூறுகிறான்! இப்படித்தானிருக்கட்டுமே!

(வெளிப்படையாக) மித்ராவஸு! இது என்ன உனக்கு வரவா செலவா? உன்னைப்போன்ற வீரனுக்கு இதைக் காட்டிலும் செய்யமுடியும்.

கேளா வொருவர்க்கு மெய்யுங் கிளரன்பின்
மீளா வளிக்குமார் மொம்படனேன்—வாளா
புனற்சிந்து பாய்நாட்டிற் காகப் பொரும்புன்
புனற்சிந்து பாய்ப்படைப் போழ்ந்து?

மேலும் தரும மற்றதைத் தவிர்த்து வேறெதையும் எனக்குப் பகையென எண்ணுவதில்லை. உன்னால் எனக்கேதேனும் செய்ய முடியுமானால், அந்தப் பேராசைப்பேயா லாடுமவனிடம் அநுதாபங்கொள்வீராக!

**மித்ராவஸு.**—(வெறுப்புடன் சிரித்து) இவ்வளவு தயாள மூர்த்தியான் எங்களுடைய கருணாநிதியிடம் அநுதாபங் கொள்ளாதெப்படி இருக்க முடியும்!

**நாயகன்.**—(தனக்குள்) இப்பொழுது கிளம்பிய கோபத்தால் அவன் மனம் மூடப்பட்டிருக்கிறது. அதை வேறு வழியில் பாயச் செய்வது கஷ்டம். ஆனாலும் இப்படிச்செய்வோம். (வெளிப்படையாக) மித்ராவஸு! எழுந்திரு; நாம் உள்ளே போகலாம். அங்கு போய் எல்லாம் தெரிவிக்கிறேன். இப்பொழுது அந்திவேளையாயிற்று. அதோ பார்!

காமர் வண்டர்தாம் மயங்கி கங்குல்வாய்
தாமரையிற் பட்ட பந்தந் தவிர்க்கவும்
மாந்தர் விருப்பின் வகைபட வென்றே
ஞால முழுதும் சாலொளி வீசியும்
ஸித்தர் யாவரும் பத்தியின் தழீஇ
வாய்த்தரூஉ மிசையின் வாழ்த்த
மலைபால் வீழ்தரூஉம்
கலையோன் றன்னைக் காணுதி யைய!
அலைந்தலைந் தென்றும் அன்பே யுருவாய்
பிறர்நல மதற்கே ஆறுது சுழன்று
உழைத்திடு சூரனைப் பழிச்சுதி
அவனே புகழ்க்குறூஉஞ் சிவத்தின னன்றே!

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

களம்—4. அங்கம்—க

மலயமலைச்சாரல்—கௌரியாலயம்

(ஒரு ஜதை சிகப்பு வஸ்திரத்துடன் பராபத்யன் ஒரு ப்ரதிஹாரனோடு வரல்.)

**பராபத்யன்.**—

அந்தப்புரத்து நடப்ப தனைத்தும்
சிந்தையிற் தெளிந்து, முந்திய வயதால்
இடற வளைந்த இவ்வுடற் றன்னை
தடங்கழி தன்னால் தடுமாற்றந் தாக்கி
ஊரிடை நடக்கும் உருதொழி லறிந்துப்
பாரிடை ஞாயம் பயக்க
கோல்கொடு கீழ்மைக் கொன்று தூய்மை
ஞாலமடைதர நலந்தனை வழிவழி
மநுநெறி செய்யு மன்னவ னென்னை
யானு மீண்டும் அமைந்துள னன்றே!

**ப்ரதிஹாரன்.**—ஐயா! வஸுபத்ரரே! நீர் எங்கு போகிறீர்?

**பராபத்யன்.**—அரசிளங்குமாரன் மித்ராவஸுவின் தாயாகிய மஹாகனம் பொருந்திய மஹாராணி அவர்களால் "பராபத்யா! நீ பத்துதினம் சிகப்பு வஸ்திரம் மலயவதிக்கும் என் மருமகனுக்கும் எடுத்துப் போகவேண்டும்" என்று

ஆணை இடப்பட்டிருக்கிறேன். அரசி மலையவதி இப்பொழுது அவரது மாமனார் வீட்டிலிருக்கின்றனள். ஆனால் இளவரசுவுடன் ஜீமூதவாஹனர் கடற்கரை காண இன்று போனதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் நான் அரசியிடம் செல்வதா, அரசகுமாரனிடம் செல்வதா என்று மயங்குகிறேன்.

**சேவகன்.**—ஐயா! தாங்கள் அரசியிடம் போவதே தகும். இதற்குள் இராஜகுமாரன் வீடுவந்தும் இருக்கவும் கூடும்.

**பரிபத்யன்.**—நீ சொல்லியது ஸரிதான். ஸுநந்தா நீ எங்கு போகிறாய் ?

**சேவகன்.**—'வரும் தீபாவளியில் நமது மலையவதிக்கும் மருமகனுக்கும் ஸமயத்திற்குகந்த வரிசை செய்யவேண்டியதைக் குறித்து செய்ய வேண்டியதைப் பார்த்துக்கொள்ள வர மித்ராவஸுவிடம் சொல், என்று மஹா கனம் பொருந்திய அரசன் விச்வாவஸுவால் ஏவப்பட்டிருக்கிறேன். ஆகையால் நீ அரசியிடம்போ. நான் இளவரசு மித்ராவஸுவிடம் போவேன் (இருவரும் போதல்)

களம்—2. மலையமலைச் சாரல்—கடற்கரையோரம் ஓர் வனம்.

(ஜீமூதவாஹனன், மித்ராவஸுவுடன் வரல்)

**நாயகன்.**—புல்வளர் இடமது படுக்கை யாகும்வெண்
கல்க ளிவையெலாம் களங்கமில் தவிசாம்
கொடிபடர் மாமீது குடியிருப் பாகுமால்,
கடிதுவீ ழருவி குடிக்குநீர் தரும்வேர்
படுங்கிழங் கிவைதாம் பகருண வாகுமென்
னடையயில் பிணையதே நண்பனாகு மதான்றி
விரும்பிய பொருளை விரும்புமுன் னளிக்கும்
அருநிலை வாய்ந்த அடவியி தெனினு
குறையு முண்டு குறிப்பல்
அறைந்திடி லொன்றே.—
வேண்டா தளிக்கும் மேன்மையி னீண்டு
சாயா நன்மை தண்மையி னியற்ற
வாயாக் காலத்த வாளா
காலங் கழிப்பது கடனு மாமே!

**மித்ராவஸு.**—(மேல்நோக்கி) அரசே! சீக்ரம்! சீக்ரம்! அலை உள்பாயும் ஸமயங் கிட்டிவிட்டது!

**நாயகன்.**—(கேட்டு) நீ கூறியது நன்று!

காதை யொடுக்கிடுங் காரிடி யென்ன
ஓதை செய்தலைத் துறுகன நடுங்க
ஒன்றின்மே லொன்றாய் உராய்திடித் தெதிர்த்து
கன்றிடு நீர்யானை கலக்கிடு மார்ப்பின்
துன்றிபடர்ந் தலற்றும் தொடரலை இறைப்ப
மலைபடூஉம் முழையெலாம் மயங்கி நடுங்கி
எதிரொலி எறீஇ ஈரொலி குலாஅய
மலைதரும் பொன்னை மாட்சியி னடைதரச்
சங்கொடு சிப்பியும் தண்கடல் பொருளையும்
எங்கு மிரைத்து எழீஇ
நங்கெதிர்க் கொள்ள நாடிய தென்னே ?

**மித்ராவஸு.**—அது இங்கும் வந்துவிட்டது! அதோ பார்!

மதநல் யானை மிதமிலா துண்ட
இலவங்கங் கக்கி கலங்கிக் கெழிமணஞ்
சூழுமீ னுண்டுரு வாய்மணங் கொழித்
தருஅமீ தலைத்தாழ்ந்திடைப் படுத்த
கடல்படு மணியின் படரொளி வீசி
காற்படு சிலம்பின் கலீரென வார்த்தவ்
அலையின் தவழ்ந்து நடையுறாஉந்
காட்சியைக் காணிய காவலர் ஏறே!

வா! நாம் போவோம். சிறு குன்றின் வழியாய்ச் சென்று கடல் அலைபடரும் இடம் விட்டகல்வோம். (யாவரும் போதல்)

அங்கம்—4 களம்—2.

மலையின் உச்சியிடம்

(ஜீமூதவாஹனனும் மித்ராவஸுவும் வரல்)

**நாயகன்.**—(அரங்கை நோக்கி) மித்ராவஸு! இதோ பார்!

காண்டியிம் மலையக் கார்வரைத் தானும்
மூண்ட வெண்கனங் கவிந்து மூடிய
பனிக்குவ டனைய தனிமை கொண்டதே!

**மித்ராவஸு.**—அரசிளங்குமர! இவை இந்த மலையமலையின் கற்பாறைகளன்று; ஸர்ப்பக்கூட்டங்களின் எலும்பின் குவையல்களே இவை.

**நாயகன்.**—(வ்யசனத்தும்) ஹா! கஷ்டம்! இந்த நாகங்கள் எவ்வாறு இப்படி ஒரே ஸமயத்தில் நாசமடைந்தன ?

**மித்ராவஸு.**—ராஜகுமார! இவை ஒரே ஸமயத்தில் சாவடையவில்லை. இதன் காரணம் இன்னதென்று கேள். தனது சிறகால் சமுத்ர சலத்தையெல்லா மிறைத்து, பாதாளஞ்சென்று கருடன், இதற்குமுன் நாள்தோறும், இந்நாகங்களைக் கொத்தியும் குத்தியும் தன் வயிறார உண்பது வழக்கமா.—

**நாயகன்.**—(கஷ்டத்துடன்) என்ன அந்தோ! என்ன கொடுமையவன் செய்தான் ?—அதன்பின் ?



**மித்ராவஸு.**—யிருந்தது. நாக வம்சம் நாசமடைந்துவிடும் என்று பயந்து ஸர்ப்பராஜன், வாஸுகி, கருடனை வேண்டிக்கொண்டான்.

**நாயகன்.**—(ஆத்திரத்துடன்) "என்னை முன் உண்டுவிடும்" என்று அவனை வேண்டினான் ?

**மித்ராவஸு.**—இல்லை ; இல்லை.

**நாயகன்.**—பின் என்ன ?

**மித்ராவஸு.**—இதுவே அவன் வேண்டுகோள்.—

பறவை மன்ன! பண்பார் கருட!
உறுமுன்னு விடுக்கனல் கருவழிந் தனராம்
கருவிழி மகளார் கணக்கிலை ; உன்னை
துருத்திக் கழிக்கா வரியினங் காண்டிடில்
உயிர்த்துறந் திடுமால் ; பயிலுமெம் ஸந்ததி
யின்றிமாய்ந் திடுங்காண். நன்றிலை யுனக்கும்.
உன்னெண முற்று முலைந்திடு மதனாலிவ்
வலைவழி வழியே அன்றன் றுனக்கு
தலைமணிக் கொண்ட சர்ப்பத் தொன்றை
உறுபலி யாக்குவேம் உகந்திடும்
உன்மன வழியின் தன்மையின் முறையே!

**நாயகன்.**—அந்தோ! ஸர்ப்பராஜன் இப்படியா காப்பாற்றுகிறான் ? என்ன ? பாபம்.

இருபது நூற்று நாக்களி னிடையே
ஒருநா விலையா லுரகப் பகையோன்
உறும்பகை தன்னை யறச்செயக் 'கொள்ளுதி
யிவ்வுடற் கொழுத்தனை கவ்வியங் நாகர்தம்
பகையை யகற்றுதி பண்பினேன் தனையுண்'டென்
றுரைபகர்ந் தினிய கருணைப் பொழிந்த
இன்ப நிலைஇய அன்பின் திறத்தே.

அதன்பின் என்ன ?

**மித்ராவஸு.**—பக்ஷி ராஜனால் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாளிற் கொன்றென் றிணங்கி யவ்வாறென
காள சர்ப்பங்கள் கருடன் கையிற்பட்டு
வானொ ளிக்குமிவ் வென்பின்வெண் மாக்குவை
மீளில் வெண்குவட் டிற்கின மீன்றதே!

**நாயகன்.**—(ப்ரமையுடன்)

மடமை யீதந்தோ! தெளியா மனத்தோடு
படுமுட லிதற்காய் பாழுமிவ் வுடற்காய்
கொடுமை வாழுமிவ் குடிவீ டிதற்காய்
அநீதி செய்வது மாந்தர்க் கமைந்ததே!
அந்தோ என்கதி நாகர் அடைந்ததே?

(தனக்குள்)

என்னுயிர் அளித்தோர் பன்னகந் தனையேனும்
காத்தலாகுமென்? காத்தலு மாமே!
(ஓர் ஊழியன் வரல்)

**ஊழியன்.**—மலையின் உச்சியை அடைந்தேன்; மித்ராவஸுவைக் காணவேண்டும். (முன்வந்து) மருமகன் அருகு நிற்கின்றனர்—(அருகுவந்து, வணங்கி) அரசிளங்குமாரகாள்! உமக்கென்றும் ஜெயமுண்டாகுக!

**மித்ராவஸு.**—ஸுநந்தா! எதன் பொருட்டிங்கு வந்தாய் ?

**ஊழியன்.**—(காதில் என்னமோ மெதுவாய்க் கூறுகிறான்)

**மித்ராவஸு.**—ராஜகுமார! தந்தை என்னைக் கூப்பிடுகிறார்.

**நாயகன்.**—போம்.

**மித்ராவஸு.**—தாங்களுமிங்கு, ஆபத்திற்கே இடமான இந்த இடத்தில், நெடுநேர மிருக்கலாகாது. (ஊழியனுடன் போதல்)

**நாயகன்.**—நான் இந்த உச்சி தலத்தை விட்டிறங்கி கடற்கரை செல்வேன்—(போதல்)

அங்கம்—3

மலையமலைச் சாரல்—கடற்கரை

(ஜீமூதவாஹனன் வியசனத்துடன் வரல்)

**நேபத்தியல்.**—அந்தோ! என் அருமைக் குழந்தாய்! சங்கசூடா! இன்றைக்கு, நீ கொல்லப்படு நேரத்தில் நான் எப்படியடா உன்னைப் பார்ப்பேன் ?

**நாயகன்.**—என்ன ? ஓர் ஸ்திரீயின் அழுகைக் குரல் போலிருக்கிறது! நான் சென்று அவள் யாரென்றும் என்ன துன்பமடைந்தாளென்றும் அறிவேன். (முன்வரல்)

(சங்கசூடன், தனது வயது முதிர்ந்த தாயுடனும், ஒரு வேலைக்காரன் ஒரு சதை துணியுடனும் வரல்)

**கிழவி.**—அய்யோ! என் அருமைக் குழந்தாய்! நீ கொலை யுண்ணுங்காலத்து நான் எவ்வாறடா பார்க்க முடியும் ? (அவன் முகத்தைத் தடவி) எனது ஹிருதயமும், இப்பாதாளலோகமும் இம்முகச்சந்திரன் ஒழிந்ததும் இருண்டுவிடுமேடா!

**சங்கசூடன்.**—அம்மா! தாங்கள் இவ்வாறு துன்பமிகுதியால் என்னை ஏன்தொந்தரை செய்கிறீர்கள் ?

**கிழவி.**—(நெடுகப்பார்த்து, தன் மகனது உடம்பைத் தடவி கொடுத்து) அடே என் செல்லமே!

ஸூர்யனுடைய கிரணத்தைக் காணாத இந்த மெல்லிய சரீரத்தை அந்தக் கருணையற்றகருடன் எவ்வாறடா உண்ணும்? (அவனைக் கட்டிக்கொண் டழுகிறாள்)

**சங்கசூடன்.**—அம்மா! தாங்கள் அதிகமாகத் துக்கப்படாதியும். யமன் அன்று பிறந்த குழந்தையையும் கொள்கிறான்...................... ஆகையால் துக்கத்திற்கென்ன காரணமிருக்கின்றன. (விடுவித்துக் கொண்டுபோக முயல்கிறான்)

**கிழவி.**—உன் முகத்தைச் சற்று பார்க்கும் வரை இங்கு நிற்பாய்.

**வேலைக்காரன்.**— (வெறுப்பொடு) அரச! சங்கசூட! வாரும். உளறுமிந்த தாயுடன் உமக்கென்ன வேலை? அவளுடைய மகன்மேலாசை அரச ஆணையை அறிய முடியவில்லை.

**சங்கசூடன்.**—இதோ வந்து கொண்டிருக்கிறேன்.

**வேலைக்காரன்.**—(தனக்குள்) கொலைப்பாறை வரை இவனை அழைத்து வந்து விட்டேன். பலிக்குறி யாகிய இவ்விரண்டு சிகப்பு வஸ்திரங்களையு மிவனிடங் கொடுப்பேன். அவனுக்கப்பாறையுங் காட்டுவேன்.

**நாயகன்.**—(நோக்கி) இவள்தான் அவள்! இவளுடைய அழுகைதான் அது. (சங்கசூடனைப் பார்த்து) இவன் அவள் மகன்; அவனுக்காகத்தான் அழுகிறாள். (சுற்றுமுற்றும் பார்த்து) அவளுடைய கஷ்டத்தின் மூலமென்னவென்று விளங்கவில்லை; என்னவாய் இருக்கலாம்? நான் கிட்டப் போய் கேட்கலாமா? அல்லது—ஏன்? அவர் கூறுவது வெளிப்படையாகத்தான் இருக்கிறது. அவர் பேசுவதிலிருந்தே நான் அறியலாம். இந்த மரத்தின் மறைவிலிருந்து கேட்பேன். (அவ்வாறே செய்கிறான்.)

**வேலைக்காரன்.**—(கண்ணீர்விட்டு கைக்கட்டிக் கொண்டு) அரச சங்கசூட! இதை, இந்தக் கொடு நெஞ்சன், அரசன் ஆணையினால் கூறுகிறான்.

**ஸங்கசூடன்.**—நண்ப! கூறுவாய்.

**வேலைக்காரன்.**—மஹிமை தங்கிய வாஸுகி மஹாராஜன், ஸர்ப்பலோகத்தரசன், உனக்கிவ்வாறு ஆணையிடுகிறார்:—

**சங்கசூடன்.**—(பக்தியுடன் தலைமேல் கை குவித்து) ராஜாதி ராஜன் எனக்கென்ன ஆணையிட்டனர்?

**வேலைக்காரன்.**—இந்தச் சிவப்பு வஸ்திரங்களின் சதையை அணிந்துகொண்டிந்தக் கொலைப் பாறைமீது ஏறு; கருடன் அதனால் உன்னைக் கண்டுணர்ந்து தன் உணவாய்க் கொள்ளும் பொருட்டு.

**நாயகன்.**—அந்தோ! இப்பொழும் மனிதன் வாஸுகியால் கருடனுக்குப் பலியாக இடப்பட்டிருக்கிறான்.

**வேலைக்காரன்.**—சங்கசூட! இதைக் கைக் கொள்ளும் (வஸ்திரங்களை அவனிடம் கொடுக்கிறான்)

**சங்கசூடன்.**—(ஆத்ரத்துடன்) கொண்டுவா! அரசன் ஆணையைத் தலைமேற் கொண்டுளேன்.

**கிழவி.**—(தன் மகன் கழுத்தில் வஸ்திரமிருப்பதைப் பார்த்து, வயிற்றிலடித்துக்கொண்டு) ஆ! என் குழந்தாய்! ஐயோ இடி வந்துவிழுந்தாற்போலாயிற்றே! நான் என்னடா செய்வேன்? (மூர்ச்சையாய் விழுகிறாள்)

**வேலைக்காரன்.**—கருடன் வரும் சமயமாயிற்று. நான் போகிறேன். (போகிறான்)

**சங்கசூடன்.**—தைரியத்தை விடவேண்டாம். அம்மா! தைரியத்தை விடாதேயும்.

**கிழவி.**—(மூர்ச்சை தெளிந்து கண்ணீர்ப் பெருகவிட்டு)

ஆ என் குழந்தாய்! என் மகனே! என் புண்ணியப்பலனே! என் விருப்பத்தின் மூலமே! குணக்கடலே! குலமென்னுங் கடலில் தோன்றிய அன்பு என்னும் ஒளியே! உவாமதிபோல் கலைநிறைந்த உன்முகத்தை இனி எங்கடா காண்பேன்? (கட்டிக்கொண்டழுகிறாள்)

**நாயகன்.**—அக்கருடனுடைய கொடுமை! என்ன கொடுமை!

“ தாயிடை நிற்குமித் தளிரன குழந்தையை
வாயிடைக் கொண்டு கருணை வாய்க்காது
தின்று மென்றிடு கன்றிய மனத்தப்
பறவைத் தலையின் பருமூக் கன்றி



நிறைபடு மனமும் நெடுங்கல் லன்றே.
மனங்கலங் தலைந்து நினைவினை யொழித்து
கண்ணீர் பெய்து கண்ணுர நோக்கி
அழுது அழுது அரற்றி ஆவென் றலண்டென்
குழந்தையைக் காக்குமோர் குணக் குன்றொன்
[றிலையோ”

வென்பது மென்னே யநீதி யீதே.

**சங்கசூடன்.**—(துன்ப மிகுதியான தாயின் இதயம் வெடித்து விடும் என்று பயந்து, அவளை நோக்கி)

ஹா! அம்மணீ!

கருணைவா ரிதியா யிரக்கங்கொள் காவலின்
கேட்டோர்க் கீயும்கெழுமனங் கொண்டோர்
நாட்டிலிங் கிலையால்! நாட்டிலிங் கிலையால்!
மனமது வாடிய மாந்தர்தம் கவலையை
தனிமையிற் கேட்டு தணிப்பவ ரிலையால்!
தமதுடற் பாசம் தனைநாச மாக்கி
உறுபிணிப் பட்ட வறியரைக் காண்டதும்
தம்முயிற் கொடுத்தும் காத்திடும்
பிறர்க்குதவி செய்யும் பெற்றியோ ரிலையால்!
உன்முறை கேட்க வுற்றவ ரிலையால்!

(தாயின் கண்ணீரைத் துடைத்து)

அம்மணீ! அழுவதில் என்ன பிரயோஜனம்! பயப்படாதே! தைரியத்தை விடாதே!

**கிழவி.**—(கண்ணீர் விட்டு) என்னப்பனே! நான் எப்படியடா தைரியமடைவேன்? என் ஒரே மகன் என்று ஏன் வாஸுகி இரக்கங்கொள்ளக்கூடாது? உன்னை யேன் மன்னித்திருக்கக்கூடாது? ஐயையோ தெய்வமே! பாழும் காலனே! உலகமுழுதும் சுகமாயிருக்க உனக்கேன் என் மகன்மேல் மாத்திரம் ஞாபகம் மறக்கவில்லை! கொடியவனே! துரத்ரஷ்டையான எனக்கு என்ன செய்து விட்டாயடா! எனக்குக் கஷ்டம் வந்துவிட்டதடா?

**நாயகன்.**—(இரக்கத்துடன்)

உற்றோர் உறவோர் உயர்த்தலை அவனால்
சற்றுங்கவனியாது தனித்திடப்படுஉமில்
பாவித்தன்னை பார்த்தும் கனிந்தியான்
காத்திடே னாகில் காணுமிவ்வுடலை
கொண்டென் பயனை கண்டதாகுமே!

**சங்கசூடன்.**— அம்மணீ! தைர்யப்படுத்திக் கொள்!

**கிழவி.**—ஆ! என்மகனே! உன்னை எல்லாரும் கைவிட்டு விட்டார்கள். அரசன் வாஸுகியாலும் கைவிடப்பட்டாய்! இனி நீ வந்து ஸுகமடையும்படி யார் உன்னைக் காப்பாற்றுவார்கள்?

**நாயகன்.**—(உடனே ஓடிவந்து) இதோ நான் செய்கிறேன்.

**கிழவி.**—(தனது வஸ்திரத்தால் மகனை மூடி, நாயகனிடம் வந்து)

விந்தையின் செல்வமே! என்னை யுண்பாய்! உனக் குணவாகும்படியாக ஸர்ப்ப ராஜனால் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

**நாயகன்.**—(கண்ணீர் சிந்த)

மகன்பொருட் டென்னே அகமகிழ் ஆசையே
மகன்பாற் கொண்ட மால்பெரு மாசையின்
தனதுயி ரளிக்கவும் தான்மனங் கொண்டு
வினதை காதலியென்றென விரும்பி யோடிவந்து
நடக்குமிவ் வயோதிக நங்கையின் துயரினை
கண்டக் கொடிய கன்னெஞ் சுரத்தானும்
கொண்டிடு மிரக்கமென் கொளாமையு மாமே?

**சங்கசூடன்.**—அம்மணீ! நீர் போம்! உன்பயத்தை எல்லாம் ஒழி. இவர் ஸர்ப்பர்தம் பகைவரல்ல.

காணுதி யிவற்கும் கருடர்க்கு முள்ள
மாண்பெரும் பேதம்; நீண்மூக்கு குருதியில்
அலைந்துயர் நாகரின் மூளையில் அருந்தி
செவ்வரி யடைந்தவ் வெவ்விய வுருவின்
இவ்வுயர் மகானை ஈடிட லாமே!
நன்மைவேர் வீழ்த்து நயத்தின் வழிபடா
கருணை நிறைந்து கருங்கொண் டலென
இரக்கம் பொழியு மின்பவுரு வன்றே?

**கிழவி.**—என் மகனே! உனது வருங் கேடை நினைந்து நினைந்து எங்கு பார்த்தாலும் கருடமயமாகவே தோன்றுகிறது.

**நாயகன்.**—பயப்பட வேண்டாம் அம்மணீ! யான் ஓர் வித்யாதரன்! உன் மகனைக் காக்கும் பொருட்டே வந்திருக்கிறேன். ஆகையால் நீ பயப்படவேண்டாம்.

**கிழவி.**—(ஸந்தோஷத்துடன்) மகனே! மற்றும் ஒருமுறை அப்படியே அவ்வார்த்தைகளைச் சொல்வாய்.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## வியாஸ விதானம்
## Essay writing
### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
### REFLECTIVE ESSAYS
### 6. லௌகீக குணங்கள்—மிதச்செலவு
Worldly qualities—Thrift

**குறிப்பு.**—ஸ்வரூபம்—காரணம்—எல்லை—கிடைக்கும்விதம்—காரியங்கள்—ஸஹாயங்கள்—உபமானுதிகள்—முடிவு.

மிதச்செலவு என்பது வரவுக்கு அதிகப்படாது பணத்தைச் செலவழிப்பது என்று பொருள்படும். நியாய வழிகளில் முயன்று ஒருவன் அடையும் பணத்தை தகுந்த வழியில் உபயோகப்படுத்தி மனம் தேறி இருப்பதற்கு இந்தக் குணம் அதிக அவசியம். ஒருவனுக்குக் கிடைக்கும் வரும்படியை இவ்வாறு பிரித்து உபயோகப்படுத்தவேண்டும் என்று 'வருவாயுட் கால் வழங்கி' என்று தொடங்கும் பாட்டு நன்கு விளக்கும்.

ஆதலால் ஒருவன் செலவு கூடியவரையில் வரும்படியில் பாதிக்குமேல் போகாமலிருப்பது அவசியம் என்பதாகிறது. பணத்தைச் செலவிடுவதுபோலக் காலத்தையும் உலக விஷயங்களில் மிதமாகச் செலவிடுதலே மிதச்செலவு என்னலாம். பணத்தை மிதமாகச் செலவழித்து மிகுந்ததை ஆபத்துக்காலம் தர்மவிஷயம் ஆகிய இவைகளில் செலவழிக்கவைத்திருப்பதுபோல காலத்தையும் அவசிய உலக விஷயங்களில் சிறுபான்மை செலவிட்டுப் பெரும்பாலும் ஆத்ம விஷயம் மோக்ஷ விஷயத்திலே செலவிடுவதே இம்மிதச் செலவின் ஸ்வரூபம்.

'இந்த மிதச்செலவு ஏன் இருக்கவேண்டும்?' என்ற கேள்விகள் பிறக்கும். உலக விஷயங்களுக்குப் பணம் அவசியம் வேண்டியதாக விருப்பதோடுகூட அதுவே ஸகல கலகங்களுக்கும் காரணம். இதன் மூலமாகக் கொலைகள்கூட விழவிடமுண்டு. இதுபற்றியேதான் இதைப் பட்டினத்தடிகள் 'ஆள் கொல்லி' என்ற பெயரிட்டு அழைத்திருக்கிறார். மேலும் பணம் குறைந்து பிழைக்க விதியற்றுப் போகுங்காலத்தில் எல்லாவிதக் கொடிய செய்கைகளையும், கெட்ட செயல்களையும் செய்யும் குணம் ஒருவனுக்கு வந்துவிடும். ஆதலால் நியாயப்படி ஸம்பாதித்த பணத்தை மிதமாகச் செலவிட்டு முற்கூறிய கொடுங்குணங்கள் வரவொட்டாது தடுப்பதற்குப் பணம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். மிதச் செலவு ஏற்பட்டால் அதற்கு ஏற்றபடி விஷயானுபவ ஆசை முதலியவைகளை ஒடுக்கிப் பழக வேண்டியது அவசியமாகிவிடும். ஆதலால் இந்திரிய நிரோதம் தானே வந்துவிடும். நம்மால் கூடியவரையில் தர்மம் முதலியவைகளை மனக்குழப்பமின்றிச்செய்யலாம். கூடியவரை பிறர் நற்குணத்தை எதிர்பார்த்து அதற்குப்பந்தப்பட்டு நடக்காமலிருக்கலாம். ஆதலால் மிதச்செலவால் நேர்மை, அடக்க ஒடுக்கம், நிர்பயம், முதலிய நற்குணங்கள் தாமே வந்துசேரும். மனஸ்தாபமில்லாத வாழ்வு ஏற்பட இடமுண்டு. காலத்தை மிதமாகச் செலவிடுவதால் எல்லாவித நற்குணங்களும் வந்து அடையும் என்று கூறவும் வேண்டுமா ?

மிதச்செலவுக்கும் ஒருவித எல்லையுண்டு. இந்த எல்லை கடந்துவிட்டால் இது லோபமாகிவிடும். மிதச்செலவு என்பது சிற்சில ஸமயங்களில் வரும்படிக்கு மேற்பட்டுப் போய்விடலாம். இப்படிப் போகுங்கால் முற்கூறிய மிதச்செலவின் ஸ்வரூபப்படி வரும்படியில் பாதி செலவிட்டு விட்டு மேல் செலவழிக்காது விட்டுவிட்டால் மிதச்செலவு செய்ததினால் ஏற்படக்கூடிய ஆத்மகுணங்கள் உண்டாகா, லோபம் பணத்தாசை முதலிய துர்க்குணங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டேவரும். ஆகவே நியாயமான அதிகச்செலவு வருங்கால் நன்றாகப் பகுத்தறிந்து மிதச்செலவின் ஸ்வரூபப்படியாவது அல்லது அதை மீறியாவது நடக்கவேண்டும். பகுத்தறியும்விதம் யாது என்ற கேள்விபிறக்கும். அதிகச் செலவு செய்யும்படி நேருங்கால் தனக்கு ஸுகம், அதிக கீர்த்தி முதலியவைகள் ஏற்படாததாயும், தன் உறவினர், தனக்கு எட்டும் பொது ஜனங்கள் ஆகிய இவர்கள் ஜீவனம், தர்மம் முதலியவைகளுடன் ஸம்மந்தப்பட்டதாயும், தன் வரும்படிக்குள்பட்டதாயும் உள்ள அதிகச் செலவை தயங்காது ஒவ்வொருவனும் செய்தே தீரவேண்டும். இது அவன் கடமைகளில் ஒன்று. இம்மாதிரி தகுந்த ஸமயங்களில் இவ்வாறு செய்யாது பின்னடைபவன் லோபி. தன்னயம் கருதி அதிகச் செலவு செய்யவேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வரும். அவ்வாறே பெரும்பாலாரும் செய்யலாம். ஆனால் இவ்வாறு செய்யாதிருக்க முயலவேண்டும். இவ்வாறு மனம் போனபடி செய்பவனுக்கு டம்பம் என்ற துர்க்குணம் வந்து சேரும். ஆதலால் தகுந்த ஸமயங்களில் சாஸ்திரப்படியுள்ள மிதச்செலவிற்கு மீறியும் வரும்படிக்கு மீறுமலும் அதிகச் செலவு செய்தே தீரவேண்டும். இக்காலத்தவர் போல் 'நம்மைச் சேர்ந்தவர் எப்படிப் போனாலும் போகட்டும், நாம் பணம் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்' என்று சேர்த்து, முடிவில் 'பொது நன்மைக்கு' என்று விட்டுப்போவது லோபம் டம்பம் முதலிய துர்க்குண மாறுபாடே ஒழிய வேறொன்று மல்ல. காலத்தை மிதமாகச் செலவிடும் விஷயம் நேரிட மனஸம்பந்தமாகி, மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை நோக்கமாக உடையதாகையால் இது ஸம்பந்தப்பட்டவரையில் ஒருவித எல்லையும் இல்லை. இந்த விஷயத்தில் எவ்வளவு மிதமாகச் செலவிட்டாலும் அதிகம் என்று வரையறுத்து எல்லை கூற முடியாது. எப்பொழுதும் பரம்பொருளுடன் ஸம்பந்தப்பட்டே இருக்க வேண்டியது இதன் முடிவாதலால், இந்த மிதச்செலவு எல்லையற்றது.

மிதமாகச் செலவிடும் பழக்கம் வருவதெப்படி என்ற விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். இந்தக் குணத்தால் ஏற்படும் நற்குணங்களான நேர்மை, மிதவிஷயானுபவம் முதலியவைகளில் மனப்பூர்வமாகப் பழகி வரவேண்டும். இதனால் மிதச்செலவு செய்யும் குணம் உண்டாகி இது முற்கூறிய நற்குணங்களைத் திடப்படுத்தி அவைகளை ஆத்ம குணங்களாக்கும். ஆதலால் முக்கியமாக ஒருவனுக்குத் தேவையான வஸ்துக்கள் குறைந்துகொண்டே வரவேண்டும். இது குறைந்தால்தான் மிதச்செலவில் பழகமுடியும்.

'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந் தெண்ணுவன.'

என்றாள் ஔவை. எண்பது கோடி நினைந்து எண்ணுவனவற்றைக் குறைத்து, உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் அளவு வரையில் கொண்டுவந்து விட முயலவேண்டும். இதுபற்றியே தாயுமானவரும்:—

"எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர
உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும்
ஆதலால் உள்ளதே போதும்"

என்று கூறியிருக்கிறார். இதன்படி நமக்கு தேவையான வஸ்துக்களைக் குறைத்து, வருவதைக்கொண்டு திருப்தியடையும் மனோ நிலையில் பழகிவர முயன்றால் மிதச்செலவு முதலியன உண்டாகிவிடும். பணவிஷயமிதச்செலவால் உலக விவஹாரங்கள் குறைந்துகொண்டுவர கால மிதச் செலவு தானே உண்டாகிவிடும். மிகுதியாக விருக்கும் காலத்தை ஒரு விஷயத்திலும் செலவிடாது சும்மாவிருக்க முடியாதாதலால் அதற்குத் தகுந்த ஆத்மவிஷயச் செலவு ஏற்பட்டு நம்மை ஸந்மார்க்கத்தில் நடக்கும்படி செய்யும்.

முற்கூறியபடி மிதச்செலவு செய்து மிகுந்த பணத்தை முற்காலம் போலப் புதைத்து வைக்காமல் சேர்த்துவைக்கத் தகுந்தவிடங்கள் இக்காலத்து நாகரீகத்துக்கு ஏற்ப அநேகம் ஏற்பட்டிருக்கின்றன. தபால்சாலை ஸம்பந்தமாயும், தனியாயும் எத்தனை மிகுந்த பணம் சேர்க்கும் கடைகள் உள! அவைகளில்பணத்தைக்கொடுத்து வைத்தால் தகுந்த வட்டியுடன் சேர்ந்து இது பெருகிக்கொண்டே வரும். அவஸர ஸமயங்களில் மிதச்செலவை மீற வேண்டுங்காலத்தில் இவைகளில் சில பாகங்களை வாங்கிச் செலவிட வேண்டிய ஏற்பாடுசெய்துள்ளது. இதில் அதிகப் பணம் சேர்ந்துவிட்டால் கைத்தொழில் ஸங்கங்கள், பொதுநன்மை ஸங்கங்கள், நிலம் முதலியவைகளில் இவைகளைப்போட்டு விருத்தி செய்யவிடம் இக்காலத்தில் ஏராளமாக உண்டு. சேர்த்து வைத்த பணம் அபாயமின்றி இருந்து பெருக வேண்டியதற்கு அவசியமான பணம் மாற்றச் சீட்டுகளும் இருக்கின்றன. ஆதலால் இக்காலத்தில் மிகுந்த பணத்தைச் சேர்த்து அதிகக் கவலையின்றி ஓய்ந்திருக்க இடமுண்டு.

ஜீவராசிகளில் எல்லாம் இந்த மிதச் செலவு மிகுந்தவற்றைச் சேர்த்துவைத்தல் ஆகிய இவைகளில் இயற்கை யறிவாலேயே முயலுகின்றன. வேனிற்காலத்தில் தான்யங்களை ஏராளமாகச் சேர்த்து மழைகாலத்தில் எறும்புகள் ஸுகமாய் வாழுகின்றன. இதுபோலவே தேனீக்களும் வஸந்த காலத்தில் பூக்களிலிருந்து தேனைக் கூட்டி அடைகளில் சேர்த்து இலை உதிர் காலத்தில் கவலையற்றிருக்கின்றன. எறும்பும் தேனீயும் மனிதர்களுக்கு மிதச்செலவு, மிகுந்ததை சேர்த்துவைத்தல் ஆகிய இக்குணங்களைப் புகட்டியிருக்கின்றன. இதுபோலவே ஜீவராசிகள் எல்லாம் இவ்வாறிருக்கப் பகுத்தறிவுடைய நாம் பண விஷயத்திலும் காலவிஷயத்திலும் இவ்வாறிருந்தால், கொடிதாகிய கிழவயதில் கவலையற்று ஆனந்தமாக விருக்கலாம்.

இம்மாதிரியே விவரிக்கக் கூடிய வியாஸ விஷயங்கள்

1. தேஹசுத்தம்.
2. ஒழுங்கு
3. வேலைசெய்தல்
4. தேஹப்பயிற்சி
5. கற்பித்தல்
6. கடன்படல்
7. திருடுதல்
8. சேம்பல்
9. முன்னுக்கு வருதல்
10. பேராசை.

போதக்குறிப்பு

1. ஸ்வரூபம்
2. காரணம்
3. எல்லை
4. கிடைக்கும்விதம், காரியங்கள்
5. ஸஹாயங்கள்
6. உபமானுதிகள், கதைகள் முடிவு.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models

### 20. Knowledge and Feeling.

There are two important faculties in man namely the heart and the intellect. Each of these must be developed, but not the one at the expense of the other. They are placed together that each may help and guide the other, like a pair of horses drawing a carriage. The business of the heart is to feel, and to love; but it often makes mistakes; then reason comes to its help and corrects it. For example the old man in his death bed weeps for the children born and yet unborn he is leaving behind; but reason tells him, that he is trusting to broken reeds, that children, friends relatives wealth, and lands follow him not beyond his grave, that he has to make, his journey all alone. It is the business of reason to discriminate, to argue and to judge; and left to itself it also makes mistakes, which the heart corrects, "Stay, says an alchemist to his weeping wife in a novel, "stay, I have decomposed tears, they contain a little phosphate of time, some chloride of soda, some mucus, and some water." To him weeping meant only that much. Here the heart says, "Learned idiot ! look behind, it is the heart that weeps." Thus the heart and the head correct and develop each other and produce a perfect man, who is a beautiful combination of the head and the heart.

அறிவும் உருக்கமும்.

மனிதனிடம் இரண்டு சக்திகள் இருக்கின்றன: அவையாவன மனமும் புத்தியுமே. ஒவ்வொன்றையும் செழிக்கச்செய்ய வேண்டுமேயல்லது, ஒன்றைவிட்டு மற்றொன்றை அதிகமாக விருத்தி செய்யக்கூடாது. ஒரே வண்டியை இழுக்கும் இரட்டைக் குதிரைகளைப்போலவொன்று மற்றொன்றுக்கு உதவிபுரிந்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்றே, இவை இரண்டையும் ஒன்று சேர்த்து வைத்திருக்கிறது. உருகுவதும், அன்பு பாராட்டுவதுமே மனத்தின் தொழில்கள். ஆனால் இது அடிக்கடித் தவறும். அப்பொழுது புத்தி இதற்கு உதவியாக வந்து இதைத் திருத்தும். உதாரணமாக ஒரு கிழவன் இறக்கும் தருணத்தில் தான் விட்டுப் போகும் சிறு குழந்தைகள், இனிப் பிறக்கும் குழந்தைகள் ஆகிய இவைகளை எண்ணித் துக்கிப்பது வழக்கம். அப்பொழுது அவன் புத்தி 'ஒடிந்த நாணல்களைப்பற்றிக் கரையேற எண்ணுகிறாயே! குழந்தைகள், நேசர்கள் உறவினர்கள், பணம், நிலம் ஆகிய இவைகள் எல்லாம் ஸ்மசானம் தாண்டி வருமா ? நீ தனித்துத்தான் போக வேண்டும்' என்று கூறும். புத்தியின் தொழில் பகுத்தறிவது, தர்க்கம் செய்வது, தீர்மானிப்பது ஆகிய இவைகளே. இது தனித்து நிற்குங்கால் இதுவும் தவறி விடும். இதை மனம் திருத்தும். ஒரு கற்பனைக் கதையில் ஒரு ரஸவாதி கண்ணுங் கண்ணீருமாக விருந்த தன் மனைவியை நோக்கி, 'இரு! நிறுத்து! நான் கண்ணீரைப் பிரித்தறிந்துவிட்டேன். அதனுள் எலும்புச் சாம்பல், உப்பு, சளி, கொஞ்சம் தண்ணீர் ஆகிய இவைகள்தான் உள்ளன.' என்றான். இவனுக்கு அழுகை என்றால் இம்மாதிரியான ஒரு திரவத்தை உண்டாக்குவது என்றுதான்தோற்றியது. இங்குமனம் புகுந்து, 'கற்றறிமூடா! உற்றுப்பார்! மனமல்லவோ கரைகின்றது' என்றுகூறித் திருத்தும். இவ்வாறு ஒருவனிடமிருக்கும் மனமும் புத்தியும் ஒன்றை ஒன்று திருத்தி விருத்தியாகி இரண்டும் வெகு அழகாகச் சேர்ந்து அமைந்துள்ள வனுகிய தேர்ந்த மனிதனை உண்டாக்கும்.

### 21. What changes the way of the wind?

Like almost every thing else, the air is always moving, more or less, and the changes in the direction of its movements are due to many different things. There is, for instance, the movement of the earth on itself, and also its changing position in regard to the sun, as it goes round the sun. These movements mean that different parts of the earth are exposed to the sun at different times; and that means, of course, that different parts of the air are exposed to the sun at different times. When the sun shines on the air, it makes it warm, and warm air is lighter than cold air, and will rise while cold air will flow in to take its place. But there is a great deal more in it than this. Besides the fact that the surface of the earth is not smooth, but has mountains and hills that turn the wind as the earth turns and tracts of water which cool the air as it passes over them, there are all sorts of electrical changes always going on in the air, and these possibly affect its weight—perhaps even the proportion of the various gases in it—even as much as the heat of the sun affects it. You can scarcely ask more difficult questions than these about wind, rain and whether.

காற்றின் போக்கை மாற்றுவது யாது ?

மற்றைய வஸ்துக்களைப்போல வாயுவும் ஓயாது சற்றேறக்குறைய அசைந்துகொண்டே இருக்கிறது. இந்த அசைவுகளின் போக்கு மாறுவது பல விஷயங்களைப் பொருத்தது. உதாரணமாக, பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வது, ஸூர்யனைச் சுற்றிப்போகுங்கால் அது விஷயமாக உண்டாகும் இடம் மாற்றம் ஆகிய இவைகளை எடுத்துக்கொள்ளலாம். இந்த மாற்றங்களால் வெவ்வேறு காலங்களில் பூமியின் வெவ்வேறு பாகங்கள் ஸூர்யனுக்கு எதிரே வருகின்றன; அதாவது ஸூர்யனுக்கு எதிரே ஸாதாரண வாயுவின் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு காலங்களில் வருகின்றன என்பதாகிறது. ஸாதாரண வாயுவில் வெயில் காயும்பொழுது அது சூடாகின்றது, சூடான வாயு குளிர்ந்த வாயுவைவிட இலேசாதலால் மேலே கிளம்ப, குளிர்ந்த வாயு அது இருந்த இடத்தை நிரப்ப ஓடிவரும். இந்தக் கேள்வியின் விடையில் இதைவிட ஏராளமான விஷயங்கள் அடங்கியுள்ளன. மட்டமாக இல்லாது மலைகளையும் குன்றுகளையும் உடைய பூமியின் மேற்பரப்பு அது சுற்றுங்கால், வாயுவின் போக்கை மாற்றுகின்றது; இங்குள்ள நீர் நிலைகள் மேலே ஓடும் காற்றைக் குளிரவைத்து அவைகளின் போக்கை மாற்றுகின்றன; இவைகளோடும்கூட வாயுவில் பலவிதமான மின்சார மாறுபாடுகள் ஓயாது நடைபெறுகின்றன. ஆதலால் இவைகளும், ஸூர்ய உஷ்ணத்தைப்போல ஸாதாரண வாயுவின் நிறையையாவது, அதனுள் அடங்கியிருக்கும் வாயுக்களின் அளவையாவது பாதிக்கலாம். காற்று மழை வாயுவின் நிலை இவைகளைப்பற்றி இதைவிடக் கடினமான கேள்விகள் கேட்கவே முடியாது.



## சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

அத்யாயம் 1.

சாஸ்திரியும் அவர் பெண்ணும்

பாரார் பொதுநார் தம்மினும் ஆயிரம் பங்கதிகம்
கூறார் மதிமுனி; அன்னுனின் ஆயிரம்கூறு, தன்கோன்
பேரார் புவியி லுறத்தொண்டு செய்பவள்; பேசவளின்
ஓரா யிரமடங் காம்கோற்குப் பின்னும்செய் உத்தமியே

மதுரையில் இவ்வாறு அத்புத விஷயங்கள் நடந்தேறி வருகையில் திண்டுக்கல்லில் முற்றிலும் மாறுபாடான வேறு விஷயம் நடைபெற்றது. வாஸுதேவ சாஸ்திரி தம்மாலியன்றமட்டும் லக்ஷ்மியைத் தேற்றி வந்தார். ஒரு நாள் லக்ஷ்மி தகப்பனாரை நோக்கி, 'ஏன் என்னைத் தற்கொலை செய்துகொள்ளலாகாது' என்று தடுக்கிறாய் ? இந்த அலங்கோல வாழ்வை என்னால் பொறுக்க முடியவில்லையே ! சிறு வயது முதல் நீர் கற்பித்த ஞானமெல்லாம் எனக்கு இப்பொழுது பயன்படாமலிருக்கிறதே ! என்ன எண்ணியும் என் மனம் அமைதி அடையவில்லையே ! நீங்கள் தேற்றும்பொழுது தேறி இருக்கிறேன் ; உடனே கரையை உடைத்துக்கொண்டு புரண்டு வெள்ளம்போலத் துக்கம் முன்னினும் அதிகம் வந்து விடுகிறதே !" என்று பரிதவித்தாள்.

சாஸ்திரி.—(அன்புடன் அவளை நோக்கி) குழந்தாய்! தேறி இரு ; அவஸரப்பட்டு படபடப்புடன் துக்கத்தில் மூழ்கிவிடாதே !

லக்ஷ்மி.—கணவனிறந்த பின் உயிர் வாழ மனமில்லாது அவர் தேஹம் எரிந்து சாம்பலான சிதையில் விழுந்தோ வேறு எவ்வழியிலோ உயிர் விட்ட உத்தமிகள் எல்லாம், அப்பா! தீர்கள் அல்லவா ! 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' என்று நீரே எனக்குப் படித்துக்கூறி யிருக்கிறீர் அல்லவா ? நானும் அவ்வாறே மதிக்கவில்லையா. என் அருமையான நடுநாயகம் போன்ற தவித்துக் கொண்டிருந்தனன் ........' என்று கூறி முடிக்கும் முன் கண்ணீர் ஆறுகப் பெருகிவிட்டது. தேஹம் முழுவதும் ஆழ்ந்த துக்கத்தால் துடித்தது. கண்ணீர் அருவியாகப் பாய்ந்தோடியது. அவள் தகப்பனார் அவளைக் குனிந்து மிகுந்த அன்புடன் நோக்கித் தம் அங்கவஸ்திரத்தால் அவள் கண்ணீரைத் துடைத்து கனிந்த மொழிகளால் அவளைத் தேற்றினார்.

**லக்ஷ்மி.**— அப்பா! நான் மஹாபாபி! மஹாபாபி !! என் சிறுபிராயம் முதல் எனக்கு எடுத்துக்காட்டிய ஸாவித்திரி, ஸீதை முதலிய உத்தமிகளைப்போல நானும் நடந்து கொள்ளவில்லை. அவ்வாறு செய்திருந்தால் எனக்கு இக்கதி வருமா? யமன் கையில் அகப்பட்ட பிராணன் தப்பாது என்றாலும், அவன் கையிலிருந்து கூடத் தன் கணவனை மீட்கவில்லை ஸாவித்ரீ! நான் பாபி என்பதற்கு என்ன தடை?'

**சாஸ்திரி.**—என் கண்மணீ! நீ வாழ்க்கைப்பட்டு ஸுகித்த காலத்தில் உன் நடத்தையை நான் ஆய்ந்து ஓய்ந்து பார்த்துவிட்டேன். உன் குணாதிசயத்தை வெளியிட புராணம் ஒன்று ஏற்படாவிடினும், கணவனைப் பேணுவதில் நீ ஸாவித்ரியைக்கூட மிஞ்சிவிட்டாய். உன்னிடமிருந்து அநேக அரிய விஷயங்களை நன்கு உணர்ந்ததாக அவனே என்னிடம் கூறி, உன் வழிபாடு இவ்வாறு உங்களிருவரையும் மேன்மைப்படுத்தியது என்று எடுத்து விஸ்தரித்திருக்கிறான். குழந்தாய்! நீ அஞ்சாதே! இதுவரையில் ஒப்புயர்வற்ற யக்ஞம் ஒன்று செய்து முடித்துவிட்டாய்; இப்பொழுது நீ தொடங்கியிருக்கும் யக்ஞமோ மிகக் கடினமும் ஆதலால் மிகச் சிறந்ததுமாயுள்ளது. உன் மனம் தர்மத்தையே பற்றி நிற்கிறது. எல்லா விஷயங்களையும் தர்மப்படி நடத்துவதென்றால் உனக்கு ஒருவித உத்ஸாகம் கிளம்பும். நீ குழந்தையாகவிருக்கும்பொழுதே நான் இதைக் கண்டுவிட்டேன். உன் பெருமை வெளிவாராவிடினும் நீ ஒரு உத்தமியாவாய்.

**லக்ஷ்மி.**—அப்பா! அப்பா!! என்ன கூறிவிட்டாய்! மஹா பாபியான என்னை இவ்வளவு சிறப்பித்துக் கூறிவிட்டாயே! தர்மாத்மாவா நான்? அப்படியாயின் பரமாத்மா என்னை இவ்வாறு வருத்துவாரா?

**சாஸ்திரி.**—துக்கத்தில் அழுந்தாதே! என் கண்ணே! துக்கித்துப் பயன் என்ன? முன்செய்த பாபத்திற்கு இப்பொழுது வருந்துகிறோம் என்பது உண்மையே. ஆயினும் கர்மத்திற்குத் தகுந்தபலன் கொடுத்து நம்மை கஷ்டப்படுத்தும் பொழுதும் நம்மிடம் அவருக்குக் கருணையில்லாமல் போகவில்லை. நமது தண்டனைகள் எல்லாம் உற்று நோக்கில் அனுக்ரஹங்களாகவே முடியும். இந்தத் துக்கத்தை ஈசுவரன் மேல் பாரத்தைப் போட்டுச் சாந்தமாக ஸஹிப்பாயாகில் உன் நடத்தைக்கு நிகர் திரிலோகங்களிலும் இல்லை என்றே கூறலாம்.

**லக்ஷ்மி.**—கஷ்டம்! அப்பா! மிகக்கஷ்டம். நான் எவ்வாறு இத் துக்கத்தைத் தாங்குவது? ஒரு க்ஷணம்கூடப் பொறுக்க முடியவில்லையே!

**சாஸ்திரி.**—உனக்குப்பொறுக்கும்சக்திஉண்டு! நீ என்ன ஸாமான்யப் பெண்ணா? உனக்கு சக்தி இருக்கிறது!! குழந்தை முதல் பெருமையே. நீ விரும்பிப் பயின்றது. கண்ணே! எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறதே, நீ ஐந்து வயதில் செய்து வந்தது. உன் தோழிகளை அழைத்து உன்னை கோபம் மூட்டச் சொல்லிவிட்டு என்ன செய்தும் கோபம் கொள்வதில்லை என்று விரதம் பூண்டு நீ அநேகம் தரம் ஸாதித்திருக்கிறாயே. அவர்கள் உன்னை எவ்வளவோ வருத்துவார்கள், தொந்திரவு செய்வார்கள், நீ சாந்தமாக இருப்பாயே. சாந்தமாக ஸஹிப்பதே உனது முக்கிய ஸத்குணம். அதனால்தான் உன்னிடம் எனக்கு அதிக ப்ரீதி. கொஞ்ச நாழிகையில் நான் ஊருக்குப் போய்விடுவேன். ஆயினும் சீக்கிரம் திரும்பி வருகிறேன்.

**லக்ஷ்மி.**—நாலைந்துநாளைக்குமேல்அங்கேதங்கிவிடாதே, அப்பா! அதிகமாய்ப் போனால் ஒரு வாரத்திற்கு மேல் போகவேண்டாம். உன் ஸந்நிதான விசேஷம் இப்பொழுது பூர்ணமாக எனக்கு விளங்கிவிட்டது. உன்னையன்றி எனக்குத் துணை வேறார். சீக்கிரம் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிடு.

**சாஸ்திரி.**—என் அருமைப்பெண்ணே! ஒன்றுக்கும் நீ அஞ்சாதே. சீக்கிரம் வந்து விடுகிறேன். பரம்பொருள் எங்கு இருக்கிறது, உன்னை அவர் ஓயாது கவனித்துக் கொண்டிருக்கிறார். இது தான் என் புத்திமதி, மறவாதே. உன்னாலானவரையில் பொறுத்துப்பார். முடியாவிடில் இந்த உண்மையையாவது மறவாதே. மானிடர்களை விட ஆயிர மடங்கு அதிகம் ஒரு ருஷி, ருஷியை விட ஆயிரமடங்கு அதிகம் கணவனுடன் வாழுங்கால் அவனையே கடவுளாகக் கருதி யிருப்பவள், இத்தகைய பெண்மணியைவிட ஆயிரமடங்கு அதிகம் கணவனிறந்த பின்னும் அவனையே கடவுளாகக் கருதி வழிபடுபவள். இதை உன் மனத்தில் நன்றாகப் பதித்துக்கொள்.

சாஸ்திரி இவ்வாறு கூறி வாய் மூடும் முன் உள்ளே புகுந்து விட்டாள் அன்னம்மாள். கருடன் பாம்பின்மேல் பாய்ந்து பிடிப்பதுபோலத்தன் பெண்மேல் பாய்ந்து கையில் தூக்கி, மார்போடு அணைத்துக்கொண்டு பெருங் கூச்ச விட்டு பிலாக்கணம் பாடி அழத் தொடங்கிவிட்டாள். இவ்வாறு கொஞ்ச நாழிகை செய்துவிட்டு அவளைக் கீழே விட்டு அவள் முன்னரே வயிற்றெரிச்சல் தீரமாரடித்துக்கொண்டு விழுந்தாள்.



**அன்னம்மாள்.**—(எழுந்து) நாங்க ஊருக்குப் போரோம். துக்கம் பொருக்க முடியாட்ட கேணத்திலே போய்விழு. இப்படிஒன்னை அலங்கோலமா என் வயிறு எறிய பாப்பதைவிட நீ எரிஞ்சு சாம்பலாய் விட்டாலே மேல்.

என்று இவ்வாறு கூறிவிட்டு மூட்டை எடுத்துக்கொண்டு ரயிலுக்குப் புறப்படும்படி கணவனுக்குக் கட்டளையிட்டாள்.

**சாஸ்திரி.**—மூட்டையை எடுத்துக்கொண்டு, லக்ஷ்மியை நோக்கி, 'நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்,' என்று எச்சரிக்கை செய்தார். பின்னர் இருவரும் புறப்பட்டு ஸரியான காலத்தில் ரயலடிக்கு வந்துவிட்டனர்: இரண்டொரு மணி நேரத்திற்குள் மதுரை போய்ச் சேர்ந்தனர்.

### இதோபதேசம்

மறந்தொழி மண்மிசை மன்னாய் பிறவி
இறந்தொழி காலத்து மீசனை யுள்கும்
பறங்கல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே.

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசா லுரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வானெறி நாடுமி னீரே.

ஒன்றே குலமு மொருவனே தேவனு
நன்றே நினைமி னமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கும யாக்கையைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றன்னைக் கூறிநின் றுய்மினே.

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன வருள்பெற லாமே.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

வஸந்த காலம். உலகமெங்கும் மலர்மழை பெய்து தேன் பொழிக்கும் காலம். மனதை வைசித்ரிகத்தில் பாய்த்து, தான் ஸுகமடையும் காலம். எங்கும் பல வர்ணங்கள் பொருந்தி, வர்ணத்தில் மயங்கி, செழுமையில் இனிமை விளங்கி, இனிய கொடிகள் தளிர்த்து, பூக்கள் கொத்து கொத்துகளாகப் படர்ந்து மானுஷஹ்ருதயத்தில் தன் சோபையையூட்டி, அவனைத் தன்பால் இழுக்கச் செய்யுங் காலம். தேன்கூட்டங்கள் மலர்களில் உண்டு ஸுகித்து, கள்குடியர் போல நடித்துத் தமது நாதத்தில் குயிலின் பஞ்சம ஸ்வரமயங்கி இளம் பண்ணில் மிக்க இனிமை மயங்கச் செய்யும் காலம். அக்காலமே எவற்றிற்கு மூலாதாரமாகிய ஆனந்தத்திற் கிடந்தந்து மனதினது அகந்தை தன்னைக் கண்டு நாணச் செய்யும் செருக்கு வாய்ந்திருந்தது. அதுவே தன் இனிய தன்மையாலும்இனிய சேர்க்கையாலும், யாவர்க்கும் ஸுகத்தை யுண்டாக்கக்கூடியதாக விளங்கியது. அதுவே சாமிகளுக்குத் தம்கருத்திற்கிசைய சந்திரோபாலம் மனத்திற்பட்டு இனிய சந்திரனையும் வெறுக்கச் செய்யக்கூடியது. அதுவே ஞானத்திலுழைத்தவர்களை மோனத்தில் செய்வதும். அக்காலமே யாவர்க்கும் இன்பத்தை யுண்டாக்கக்கூடியது. எவரும் தமது இதேகருத்தை யெல்லாமடையச் செய்யக்கூடியது. யாவரும் தாமடைய விரும்புவதை விரும்பி அடைய முயற்சியடைவது மப்பொழுதே என்பதை சொல்லவும் வேண்டுமோ?

எம்பெருமான் ஸ்ரீவாஸுதேவன், ஸ்ரீகோபியர்களிடம் கூடி விளையாடும் கண்ணன், தனது பலதேவியரிடத்தும், தனித்தனி அவர் விருப்பத்திற்கிணங்கி இல்லறஞ் செய்து வந்துக் கொண்டிருந்தனன். வஸந்த காலத்தில் நிழலில் ஓர் வீட்டில் தனது பத்னியும் தாம்பூலங்கொண்டு விளங்கினன். மற்றோரிடத்துத்தனது மைத்துனனிடம் தனது பத்னியின் சில விஷயங்களை உபந்யஸித்துக் கொண்டிருந்தனன். வேறோரிடத்து, தனது குழந்தையின் மழலைச் சொற்

களைக் கேட்டுச் சொல்லாலாகிய தேனைத் தனது காதிற் குணவாக்கினன். ஓரிடம் தனது பத்னியின் மொழிகளைத் தடுத்து ஏளனம் செய்து கொண்டிருந்தனன். தனது புத்திரனுடைய ஆண்டுநிமித்தம் ஹோமாதிகள் மற்றோரிடத்துச் செய்தனன் ஓர் மனையில் அந்தப்புரத்துள்மனைவியிடம் இன்ப மொழியிலாழ்ந்து விளங்கினன். இவ்வகை பலவிதமாக, எம்பெருமான் கண்ணன் ஒருவன், ஒவ்வொரு தேவி ஒவ்வொருவருக்கும் தனிக் கண்ணனாக விளங்கி, அவர் கருத்துக்கிணங்க இல்லற வொழுங்கிற்கும் பொருந்த தனது தெய்விகத்தன்மையைக்காட்டிக்கொண்டு விளங்கினன். எங்கு நிறைந்து எண்ணுவார் எண்ணிய விதத்தை நோக்கிய ஸ்ரீ நாரதமுனிவன் பரந்தாமனது ஸர்வ வியாபகத்வத்தைக் கண்டு வியந்து பிரமையில் விளங்கி வந்தனன்.

இதைக்கண்ட அம்முனிவன் ஒவ்வோர் அகமாகச் சென்று சென்றுயோக க்ஷேமங்களை விசாரித்து ஸத்யபாமையின் அந்தப்புரம்அடைந்து மேல் வருமாறு கூறினார்:—

"நல்ல வம்சத்தில் தோன்றிய பாமா! ஸத்தியபாமை! உனது குணமும், பெருமையும், சீருமடைந்து விளங்குகின்றாய். உன்பாக்கியமே பாக்கியம். யாவர் வீட்டிலும் இருக்கும் கண்ணன் உன்னிடம் தனியாகத்தான் விளங்குகின்றனன் உன்னிடம் கொண்ட மோஹம் எம்பெருமானுக்கு ஒருவிடத்திலுமுண்டாகவில்லை. உனது அழகுங் குணமேஅவரை உன்னிடம் மயங்கச்செய்தது அதுஉண்மை. உன்விரிந்து நீண்டக் கண்களிலிருந்துசெல்லுமம்புகள் அவனை யுன்பால் அடங்கச் செய்து விட்டனவென்பதற்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை.உன்னுடைய அழகும் அதற்குதவியாயது ; உன்மொழிகளும் அதற்குடந்தையாய் விளங்கியது. உனக்கு ஸமானமினி எங்கு இருக்க முடியும்? கண்ணனை உனது சொத்தாகஅடைந்த உன்னால் என்னதான் செய்யமுடியாது? உன்னால் செய்ய முடியாத காரியங்களிருக்கவும் முடியுமோ? நமக்கு உன்னால் எதுதான் அடைய முடியாது? உன்னிடம் பெறுதபொருள் வேறு யாரிடம் என்னால் பெறமுடியும்? ஹே! பாமா! உன் பெருமையே பெருமை. உன் பெருமிதமே பெருமிதம். எது இருப்பினும் நாரதன் ஒருவன் இருக்கிறான் என்று மாத்திரம் தங்களுக்கு ஞாபகமிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உமக்கு எம்போன்றவர்களைப்பற்றி கவனம்வேண்டியதில்லை ; ஆனாலும் என்னைப்பற்றி ஞாபகம் உமக்கிருக்காமல் போகாது. தமது பெருமை எங்கும் பிரஸித்தம் அல்லவா? அதைச் சொல்லவும் வேண்டுமா?"

"தாங்கள் அவ்வாறு கூறுதல் நியாயமோ? உமக்கேதேனும் யான் ஒன்றேனும் தடுத்ததுண்டா? தாங்களிவ்வாறு சொல்வதும் தகுமோ?"

"அவ்வாறு யான் கூறவில்லை. தங்கள் பெருமையில் எனது சிறுமை மறைந்துவிடு மல்லவா? அதற்கே கூறினேன். ஆனாலும் தாங்கள் எதையும் கொடுக்கக் கூடியவரென்று அறியாதா உம்மிடம் நான் இப்பொழுது வந்தேன்? ஆனாலும் தங்களை யான் எண்ணியவாறு கேட்பது தகுதியன்று. உம்மைக் கேட்பது தகுதிக்கூட வில்லை. கேட்டால் உமது பெருமை குன்றிவிடும். உமது ஈகை குணமும் கெட்டுவிடக் கூடியதாகும். அதுவும் தவறு. உங்களால் நான் பெறுவிடில் யாரிடம் பெறுவேன்? ஆனாலும் பெறக்கூடிய தாகுமோ? ஸந்தேஹம் தான்"

"ஒன்றும் ஸந்தேஹம் கிடையாது. தாங்கள் தேஹி என்று கேட்டால் மாட்டேன் என்று மறுப்பது முண்டோ. அதிதியாகிய தாங்கள் கேட்டபோது இல்லை என்று சொல்வேனா?"

"எனக்கு ஸரியாகப் படவில்லை. நான் கேட்பதைத் தாங்கள் கொடுப்பீர்களென்று தோன்றவேவில்லை."

"அது வீண் மொழி. நீங்கள் எது கேட்பினும் கொடுக்கப் பந்தப்பட்டிருக்கிறேன். அதற்கொன்றும் ஸந்தேஹம் அணுவளவும் வேண்டாம். உமக்கென்ன வேண்டும் சொல்லும்."

"ஆனாலும் ஸந்தேஹம்தான். எது தாங்கள் கொடுப்பீரென்று எனக்குத் தோன்றவில்லை. நீர் கொடுக்கவே மாட்டீர்கள். அது நிச்சயமாக நான் சொல்லக்கூடியது."

"என்ன நாரதா! நீ அவ்வாறு சொல்கிறாய். கேட்டார்க்கு இல்லையென்று சொல்லியதாகக் கேட்டதுண்டோ என் கிருஷ்ணனைக் கேட்டால் கூடக் கொடுக்கநான் ஸித்தமா யிருக்கிறேன். வார்த்தையை வளர்க்காது கேளும் சீக்கிரம்!

"சீக்கிரமாச்சு; எல்லாமாச்சு! நீங்கள் எதைக் கேட்டாலும் கொடுக்க ஸித்தம் என்பதாக வாக்களித்தால் நான் பின் சொல்லுகிறேன். உம்மிடம் இப்பவும் நம்பிக்கையில்லை."

"நான்தான் முன்னமே கூறினேனே. என் கிருஷ்ணனைக் கேட்டால்கூட கொடுக்க ஸித்தமாயிருக்கிறேன் என்றேனே. உன் காதில் விழவில்லையா!

"ஆனால் தாங்கள் நிச்சயமாகக் கொடுக்கப் போகிறீர்களா? இப்பொழுதும் எனக்கு நம்பிக்கையில்லை."

"என்ன உளறுகிறாய். கேளும்: நான் கொடுக்கமாட்டேன் என்றால் பின்சொல்லேன்—"

"நிச்சயந்தான்"

"நிச்சயமாகத்தான்"

"ஆனால் நீர் கொடுக்கிறேன் என்று எள்ளும் நீருமாகத்தத்தம் செய்துகொடும்."

ஸத்யபாமை தனது பாங்கியைக் கூவி எள்ளும் நீரும் கொண்டுவரச்செய்து நாரதரிடம் அவர் எது கேட்டாலும் கொடுப்பதாகத்தத்தம் செய்து கொடுத்தாள். பின் நாரதர் கேட்டனர்.

"முன் சொன்னாயே அந்தக் கிருஷ்ணனைத்தான் எனக்குக் கொடும். வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை. நீ எல்லாம் கொடுக்கக்கூடிய பாக்கியசாலி!"

"இவ்வளவுதானே. இதோ! இக்கண்ணனை உமக்குதத்தம் செய்தேன்" என்று மந்திர பூர்வகமாக எம்பெருமான் வாஸுதேவனை எள்ளும் நீரும் விட்டு நாரதரிடம் ஒப்புவித்தனள்.

நிற்க. வேதங்களுள்ளும் கட்டுப்படாத பெரியோன், பரந்தாமன், அந்த மந்திரத்திற்குள் கட்டுப்பட்டவனாய் நாரதரிடம் சேர, அங்கங்குத் தனியாக விளங்கிய கண்ணனைக் காணாத ஸ்ரீ வாஸுதேவனது மனைவிகள் துக்கத்திற்குட்பட்டவர்களாய், நடந்ததை அறிந்து ஸத்தியபாமையின் வீடை அடைந்து ஸத்தியபாமையை நோக்கி பின்வருமாறுகேட்கலாயினர்:—

"அடீஇ ஸத்யபாமை! என்னடீஇ செய்துவிட்டாய்? கண்ணனை நீஎப்படியடிநாரதனுக்குத் தத்தம் செய்தாய்? உன் சொந்த சொத்தா அவர்? எங்களுக்கெல்லாம் அவர்க்கும் உனக்கும் இருக்கும் அந்த உறவு கிடையாதோ? எங்களைக் கேட்காமல் நீ எவ்வாறடீ இவ்வாறு செய்தாய்? அடி படுபாவி! எங்களை எல்லாம் கெடுத்துவிட்டாயேடீ! அடி துஷ்டை! உன்னால் நாங்கள் எல்லாம் எம்பெருமானைத் துறக்கலாகுமோ? நீ இப்பொழுது அக்கண்ணனை மீட்டி எம்மிடம் ஒப்பிவிக்காவிடில் உன்னைச் சும்மாவிடோம்? என்ன செய்கிறோம் பார். அழகு மினிக்கி! யாரிடம் உன் நடத்தை செல்லும். இனிப் பொறுக்கோம். ஜாக்கிரதை! உடனே எந்த உபாயத்தைக்கொண்டேனும் எமது கண்ணனை எம்மிடம் ஒப்புவிப்பாயாக. இல்லாவிடில் உன் அகந்தை எல்லாம் ஒழிக்கச் செய்வோம். நீலி! பலகாலும் எங்களுக்கு முள்ளாய் எதிர்வந்து நிற்கிறாய். உன் கொடுமை அழகியது! வெகு நேர்மை! பலபேர்கள் உன் ஒருவள் நிமித்தம் கஷ்டப்படவேண்டும்? பாவி என்ன காரியம் செய்துவிட்டாய்."

"இது ஏது கிணறு வெட்ட பூதங்கிளம்பி விட்டாற்போல இருக்கிறது. நான் என் கண்ணனை அவரை விரும்பிய நாரதனுக்குக் கொடுத்தால் உமக்கென்ன கடுப்பு. நான் உங்களுக்கு என்ன செய்தேன்? என்னை ஏன் நீங்கள் அநியாயமாக இவ்வாறு கூறுகிறீர்கள். இது நன்றாகவே இல்லை."

"சீ! மாயக்கள்ளி! உன் பேச்சுக்கடையைக் கட்டு. கிருஷ்ண பகவான் உனது சொந்தப் பொருளோ. உனது பெட்டியில் அடக்கஞ்செய்து வைத்திருக்கும் நகைகளில் ஒன்றோ? ஊரிலிருக்கும் குளம்போல் யாவர்க்கும் பொதுவாயிருக்கும் மாயனை நீ எவ்வாறடீஇ நாரதனுக்களித்தனை? அவர் விரும்பினார்; நீ கொடுத்துவிட்டாய். வெகு நன்று! அவரை நீ விரும்பவில்லை. ஏன் விரும்புவாய்? உன் கொழுப்பு; நீ என்ன செய்வாய்? போதும் உன் வார்த்தை. கண்ணனை முதலில் எங்களிடம் ஒப்புவித்துவிட்டு மறுவேலையைப் பார்—"

என்று இவ்வாறு இவர்கள் கூவின மொழிகள், முன் யோசியாது தான் செய்தது பிசகு என்று அறிந்த ஸத்யபாமை தன்னை நொந்தாளாயினும் பின்வருமாறு கூறினாள்:—

"ஏன் வீணில் வாயில் வந்தவாறு சொல்கிறீர்கள். எனக்கென்ன புத்தியில்லை என்று எண்ணினீர்களா? கண்ணனை நாரதனுக்களித்தவாறு உங்களுக்களிக்கமாட்டேனா? இது ஒரு பிரயாசை என்றுஎண்ணிஎன்னைவைகிறீர்கள். வெகு நன்று, போதும். கண்ணன் வேண்டுமென்றால் கண்ணன் வேண்டுமென்றுகேட்கிறதுதானே. வீணில் வேறு பெரும் விசேஷங்கள் ஏன் சொல்ல வேண்டியது."

பின் நாரதரை நோக்கி கூறுகிறாள்:—

"நாரதரே! நான் இவர்களுடைய ஸ்வபாவம் தெரியாமல் செய்து விட்டேன். தாங்கள் தயவு செய்து கண்ணனை இவர்களிடம் ஒப்புவித்துவிடும்."

"நன்றாயிருக்கிறது! தத்தம் செய்த பொருளைக் கேட்பதும் பொருந்துமா?"

"அவர்க்குபதிலாக நீர் என்ன கேட்ட போதிலும் கொடுக்கிறேன். இந்தக் கொடியவர்களிடமிருந்து காப்பாற்றும். தயவு செய்யும்."

"பதிலா! உன்னிடம் என்ன இருக்கிறது.—அவ்வெம்பெருமானிற்கு ஸமானமான இடையுள்ள பொற்குவியலைக் கொடுத்தால் அது போதும். அதற்குமேல் வேண்டாம்."

"அவ்வளவுதானே!"

"அவ்வளவுதான்.—அதுபோதும்"

உடனே ஸத்யபாமை தனது தோழிகளைக் கூவி ஓர் திராசு கொண்டுவரச் செய்து அதில் ஓர் தட்டில் கண்ணனை உட்கார்த்தினள். மற்றோர் தட்டில் தன்னிடமிருந்த பொக்கிஷப் பொருள் முற்றும் வைத்தாள். கண்ணனிருந்த தட்டு சிறிதும் அசையவில்லை. தன்னிடமிருந்த தங்கக் குவியல் முழுதும் வைத்தாள்; அப்பொழுதும் அசையவில்லை. பின் தனது அணி முதல்யாவையும் வைத்தாள்; அப்பொழுதும் அசையாமலே இருந்தது. முகம் வாடி, வெயர்வை சிந்த, ஒன்றும் தோன்றாது வெருண்டு அலண்ட கண்களையுடைய, ஸத்யபாமையைப் பார்த்து நாரதர் கூறுகின்றனர்:—

"இவ்வளவுதானா? இன்னம் இருக்கும் எடுத்துவா. பரிகாஸம் செய்யாதே. உடனே கொண்டுவா. என்னைப் பார்த்துக்கொண்டு இவர்கள் ஏன் நிற்கவேண்டும். போய்கொண்டுவா?"

"இன்னம் என்ன இருக்கிறது கொண்டுவா. என்னிடம் வேறு ஒன்றுங் கிடையாது. தயவு செய்து என்னைக் காப்பாற்றும். உமது காலில் விழுகிறேன். இவர்களிடமிருந்து காப்பாற்றுமே.'

"நான் எப்படிக் காப்பாற்றுவேன். கண்ணனுடைய கனம் உனக்குத் தெரியாததா? நீ அவரை என்றும் அறிந்தே இருந்தாயே? அவரை மதிக்க முடியாதா போயிற்று.—ஸரி அம்மணீ! ருக்மணீ! நீ யல்லவோ பெரியவள். உனக்கில்லாத புத்தி யாருக்குண்டு? நீயே யல்லவா எம்பெருமானது ஹிருத்புண்டரீகத்தில் வாழ்வது. இந்தக் கண்ணனை மீட்டி உன் சகக்களித்திராங்கான இவர்களது தாபத்தைப் போக்காயா? நீ செய்யாவிடில் இவர்களுக்கு வேறு யார்கதி. உலகமாதா அல்லவா நீ? தாயில்லாவிட்டால்குழந்தை வாழுமோ? தயவுசெய்து இவர்களைக் காப்பாற்றி இந்த ஸங்கடத்திற்குடந்தையாக இருந்த என்னையும் காப்பாற்றும்."

இவ்வாறு நாரதன் ருக்மணியை நோக்கிக் கூறியதும், அனைவரும் அப்பிராட்டியாரை நாவார துதித்துக் கெஞ்சினர். பெருமாட்டியும் ஸத்யபாமையைத் திராசிலிருந்த நகைகளை எல்லாம் எடுக்கச் செய்துவிட்டு தான் ஒரு துளசி தளத்தை எடுத்து,

"எம்பெருமானது பெருமைக்கு ஸமானமானதும், தரித்தவர்க்கு எம்பெருமானது ஸந்நிவேசத்தை யுண்டாக்கக்கூடியதும், எம்பெருமான் தனது எனக் கொண்டாடி அணிவதும் இத்துளசிதளமே. வனமாலையைச்சாற்றும் அன்பர்க்குத் திருமாலை யுறவாக்குவது நிச்சியம். பைந்துளபத்தில் கசியும் தேனில் ஈடுபடும் ஈக்களும் எம்பெருமானது பதத்துணையாகிய பத்மங்களை அடைவது உண்மை. இவை எல்லாம் உலகில் யாவரும் ஒப்புவதன்றிப் பெரியோனும் ஒப்பும்படிக்கு நான், எளியவள், கேவலம் ஓர் அற்பப்பெண், அவர்க்குத்தக்க பெருமித மில்லாதவள், அத்தகைய யானும் என் உள்ளன்போடு இடும் இத்துளஸி தளம் இருதட்டுகளையும் ஸமஞ்செய்யுமாக. அதுவும் எம்பெருமானே, என்பால் காதலித்து செய்யும்."

என்று கூறி தட்டில் இட்டதும் இருதட்டும் ஸமநிலை யடைந்தது. கஷ்டமடைந்த ஸ்திரீகளின் மனநிலைமையும் ஒருநிலை யடைந்தது. பின் யாவரும் பிராட்டியாரைத் துதித்தனர். நாரதரும்,

"அம்மணீ சரணம். யான் தங்களிக்கிட்ட பிரயாஸைப் பொறுக்க வேண்டும். இச்செயல் உமது மெய்யன்பை வெளியிட்டதாயினும் யான் சொல்லத்தகுந்தவனல்ல. அருள் நிலைத்த உமது கண்ணோட்டத்திற்கு யான் இலக்காக இருக்க எனக்கு ஆசீர்வாதம் செய்யும் யான் உமது பெயரன். உமக்கு நமஸ்கரிக்கிறேன். தாங்கள் ஜகன்மாதா, மோன முதல்வி. உம்மைச்சரண மடைந்தேன். உமது பக்தியின்விருத்திபோல் எனக்கும் எம்பெருமான்பால் அன்பும், ஆதரவும், பக்தியும் விருத்தி பெற ஆசி செய்யும். இதோ நமஸ்கரிக்கிறேன்."

பிராட்டியாரும் ஆசி கூற யாவரும் அவரவரிருப்பிடம் சென்றார். கண்ணன் எம்பெருமாட்டியின் மனக்குகையுள் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.



161440

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

### காலஞ்சென்ற மிஸ்டர் W. T. ஸ்டெட்.

டிடானிக் என்னும் புகைக்கப்பல் உடைந்த பேராபத்தில் உலகப்பிரசித்தி யடைந்த மிஸ்டர் W. T. ஸ்டெட் அகாலமரணம் அடைந்தார் என்பதைத் தெரிய நாம் மிக்க விசனிக்கிறோம். இவர் நம் காலத்தில் முதன்மையானவர்கள் என்று சொல்லப்படுபவரில் ஒருவர். இவர் மிகுந்த மேம்பாடுடையவர். இவர் அநேக விதங்களில் தன் பெருமையை ஸ்தாபித்து, நாம் எல்லோரும் அவரை பத்திரிகாசிரியர்களின் தலைவன் என்று எண்ணும்படி கீர்த்தி வாய்ந்தவர். இவரது சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்வோம். இவர் 1849-ம்வரு ஜூலை 5-ந்தேதி இங்கிலாந்தில் "நார்த்தம்பர்லாண்ட்" (Northumberland) என்னும் மாகாணத்தில் "எம்பில்டன்" Embleton) என்னும் இடத்தில் பிறந்தவர். இவர் பாதிரி ரெவரெண்ட் மிஸ்டர் W. ஸ்டெட் குமாரராதலால், அதற்கேற்ப சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்த காலத்திலேயே மதவிஷயத்தில் பயிற்சியடைந்து



சென்ற ஏப்ரல்மு 15உ 2674 ஜனங்களுடன் முழ்கின "டியானிக்" கப்பல் 1½ கோடி பவுன் விலையுள்ளது.



காலஞ்சென்ற உ வில்லியம் டி. ஸ்டெட் ரிவியு ஆப் ரிவியூஸ் பத்திராதிபர்.

வந்தார் இவர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆதலால் 14-ம் வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி "நியூகாஸில்" (New Castle) என்ற விடத்துள்ள ஒரு வியாபாரசாலையில் வெகு சாதாரண வேலையிலமர்ந்தார். ஆனால் அவர் ஜநோபகாரமான காரியங்களிலேயே மிக்க ஆசையுள்ளவராயிருந்தார் அங்ஙனமே அவர் "நார்த்தன் எகோ" (Northern Echo) என்னும் பத்திரிகைக்கு தவாறாது எழுதி வந்தார் கடைசியாக அப்பத்திரிகைக்குத் தனது 23-ம் வயதில் பத்திரிகாசிரியமானார். இதுகாலம் தொடங்கி மரணபரியந் தம்உலகவிர்த்தியைக் கருதியே ஓய்வில்லாது பாடுபட்டு வந்தார்.

மிஸ்டர் ஸ்டெட்டின் நடத்தையையும் சாமர்த்தியத்தையும் நோக்குங்கால் அவர் எக்காலத்திலும் எல்லோராலும் மதிகப்படக் கூடியவர் என்பதிற் ஐயமேயில்லை. என்றாலும் அவரது பெருமை முக்கியமாகப் பத்திரிகாசிரியராகவே மிக நன்கு விளங்கும். அவர் சென்ற நாற்பது வருஷங்களாக ஓய்வில்லாது, பிறர் தன்னைப் பற்றி மேன்மைப்படுத்தியோ அல்லது தாழ்மைப்படுத்தியோ பேசுவது ஒன்றையும் கவனியாது எவ்விதத் துன்பம் வந்த காலத்திலும் மனஞ் சலியாது உழைத்து வந்தார். மிஸ்டர் ஸ்டெட் பத்திரிகை எழுதுவதில் புது மாதிரியைக் கண்டுபிடித்தவர் என்று பெருமைபொருந்திய மாத்தியூ ஆர்னால்ட் (Matthew Arnold) என்பவர் சொல்வதுண்டு. பத்திரிகைகளால் முக்கியமாகப் பலன் அடையவேண்டியவர்கள் சாதாரண ஜனங்களே. மிஸ்டர் ஸ்டெட் இவ்விஷயத்தில் பூராவாய் வெற்றி அடைந்தார். இவரது பத்திரிகைகளால் சாதாரண ஜனங்கள் ஒருபொது அபிப்பிராயத்தை எவ்விஷயத்திலும் கொடுக்கக்கூடிய நிலையையும், தங்களது புத்தியையும் செயலையும் சன்மார்க்கங்களில் செலுத்

தும் வல்லமையையும் அடைந்தார்கள்.

மிஸ்டர் ஸ்டெட்டைப்பற்றி அநேகர் பெருமையாகப் பேசி யிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்களில் சிலராவன:—இங்கிலாந்து தேசத்து முதன் மந்திரியாய் இருந்து காலஞ்சென்ற மிஸ்டர் கிளாட்ஸ்டன் (Mr. Gladstone), சிறிதுகாலத்திற்கு முன் நம் இந்தியாவிற்கு மந்திரி ஸ்தானத்தை வகித்து வந்து வந்தவரும் (Secretary of State), தற்காலம் லார்ட் சபையில் மெம்பருமான (House of Lords), லார்ட் மார்லி (Lord Morley.)

1880-ம் வருஷம் செப்டம்பர்மீ த்தில் மிஸ்டர் ஜான் மார்லி நடத்தி வந்த பால்மால் கெஜட்டிற்கு (Pall Mall Gazette) உதவிப் பத்திரிகாசிரியராய்ச் சேர்ந்து பின் 1883-ம் வருஷம் முதல் 1889-ம் வருஷம் வரை மேற்படி பத்திரிகைக்குப் பிரதமப் பத்திரிகாசிரியரானார். இதற்குப் பின்தான் மிஸ்டர் ஸ்டெட் பெருமை வாய்ந்த "ரிவியூ ஆப் ரிவியூஸ்" (Review of Reviews) என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார்.

இவர் நம் இந்தியாவின்பேரில் மிக ஆசையுள்ளவர். இந்தியாவிற்கு இவர் 2 வருஷங்களுக்கு முன்னமே காங்கிரஸ் மகாசபையைக் குறித்து வந்து இருப்பார். ஆனால் தடுக்கமுடியாத அசந்தர்ப்பத்தால் அவர் வர முடியவில்லை. கடைசியாக இந்தியாவின் கரையைக் காணுமலே அவர் இறக்கவேண்டி வந்தது. ஆனால் அவர் இந்தியா பாராவிட்டாலும் இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதி ஏற்படும் எல்லாவித ஏற்பாடுகளிலும் வெகு சிரத்தைக் காட்டி வந்தார். இந்தியாவின் தற்கால நிலையின் உண்மையை அறிந்து அவர் இந்தியா சட்டச்சபைகளில் அவசியமான சீர்திருத்தங்களை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்று எழுதினார். அவர் காங்கிரஸ் சபையைப்பற்றி ஆதரவாகப் பேசுவோரில் ஒருவர்.

இவர் கடைசி காலத்தில் "இறந்தவர்களுடன் பேசுதல்" என்றகொள்கையில் நம்பிக்கை வைத்து 1909-ம் வருஷத்து பட்ஜட் விஷயமாக மிஸ்டர் கிளாட்ஸ்டன் (Mr. Gladstone) உடன் பேசினதாக சொல்லப்படுகிறதுண்டு.

மிஸ்டர் ஸ்டெட் மிகவும் நல்லவர். உலக நன்மைக்காகவே பாடுபட்டவர். மிக்க தேசாபிமானி. எப்பொழுதும் ஓயாது உழைத்து வந்தவர். இப்பொழுது நாம் அவரது அகாலமரணத்திற்காகத் துக்கப்படுவதோடு நில்லாது அவரது ஞாபகம் என்றும் நிலைத்திருக்கும்படி நாம் அவரது நற்குணங்களை கைக்கொண்டு பரோபகாரத்திலேயே உழைப்போமாக.

*
* *

**பூமியின் கீழே வீடுகள்.**—ஆப்பிரிக்காவில் கீப்ஸ் நகரம் முதல் ட்யூனிஸ் நகரம் வரையில் உள்ள தேசத்தில் மட்மடான் என்கிற ஜாதியார் 3000 ஜனங்களுண்டு அந்தப் பிரதேசம் கல்பூமியானதினால் பூமிக்குள்ளேயே குகையைப்போல் வீடுகள் தோண்டிக்கொண்டு வசிப்பார்கள். சிலர் மாடிகள் கூட அமைத்துக் கொள்வார்கள்.

**பர்மாவிலிருந்து லண்டனுக்கு அனுப்பப்படும் பணத்தொகை.**—பர்மா அச்சிறைக்கணக்குத் திட்டத்தின்படி 1912, 13-ம் வருஷத்தில் லண்டன் கஜானுவுக்கு அனுப்பப்படவேண்டிய மொத்தத்தொகை 15,500,000 பவுன் நாளது எப்பிரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து 6-ந்தேதிக்குள்ளாக ஆலோசனை சபையாரின் பில்லுகளின்படி அனுப்பப்பட்ட பவுன் 67 74, 185. பாக்கி 15,094,723 பவுனையும் 1913-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள்ளாக அனுப்பப்படும்.

**ஒரு வெள்ளிச் சுரங்கம்.**—மலையாளத்திலிருக்கும் பொன்னானி தாலூக்காவில் ஒரு வண்ணான் கிணறு தோண்டிக்கொண்டிருக்கும்போது வெள்ளி கலந்த களிமண்ணிருந்ததாம். அக்களிமண்ணின் மாதிரி கொஞ்சம் டிப்டி கலெக்டருக்கும், சென்னை மியூசியத்திற்கும் பரீட்சார்த்தமாக அனுப்பப்பட்டிருக்கின்றது.

**வாழைச் சாராயம்.**—வாழையிலிருந்து சாராய மெடுக்குமுறை பிரான்சு தேசத்துள்ள செய்கனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வாழைச்சாறன்ற, வாழைப்பழத்திலிருந்தெடுக்கம் ஈஸ்டு என்னு மொரு பதார்த்தத்தைப் போட்டுக் காய்ச்சினால் அதிலிருந்து சாராயம் உண்டாகின்றதாம். இந்தியாவில் வாழையாயிருப்பதால், வாழைச்சாராய மெடுக்குந்தொழில் மிகுதி இங்குக் கைப்பற்றப்படும்.

**சிருங்கேரி மடத்தைப்பற்றிய விஷயங்கள்.**—இப்போது விதேக முத்தியடைந்த சிருங்கேரி மடத்து ஆசாரிய சுவாமிகளின் ஞாபகார்த்தமாக அவரைச் சமாதி செய்தவிடத்தில் 50000 ரூபாய் செலவு செய்து கோயிலொன்று கட்ட அங்குள்ளாருத்தேசித்திருக்கின்றார்கள். அதற்காக இப்போது பலர் பொருளுதவி செய்து வருகின்றனர். ஷை மடத்தில் இப்போது ஆசாரிய சுவாமியாக நியமிக்கப்பட்டிருக்கின்றவர்க்குச் சந்திரசேகர பாரதி சுவாமிகளென்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறாக இவர்க்கிட வேண்டுமென்பது இதற்கு முன்னிருந்த சுவாமிகளது அபிப்பிராயமாம்.

## புத்தக வரவு
## BOOKS RECEIVED

**ஞானகாந்தி.**—ம-ா-ா-ஸ்ரீ செங்கை இராஜூசெட்டியார் எம். பி. பி. ஐ. அவர்கள்எழுதியது. விலை அணா 12.

**வேலையின் கூலி** அல்லது **கள்வா கவர்ந்த கலியாணப்பெண்.**—ம-ா-ா-ஸ்ரீ M.S. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் எழுதியது. விலை அணா—6.

**ஜனகா மோஹன சாதுரியம்** அல்லது **எலிபிடிக்கும் பொறி** ம-ா-ா-ஸ்ரீ S. G. இராமாஞ்சலு நாயுடு அவர்கள் எழுதியது. விலை அணா 5.

**சுகுமார திலகம்** அல்லது **கற்பு லக்ஷணம்.**—ஷையார் எழுதியது. விலை அணா 2.

**நாகரீக பாரிஜாதம்** அல்லது **பெண்மக்கள் துயரம்.**—ஷையாரால் எழுதியது. விலை அணா 4.

**மாங்கல்யப் பிச்சை** அல்லது **கற்புக்கரசி.**—ம-ா-ா-ஸ்ரீ ஏகாம்பர முதலியார் அவர்கள் எழுதியது. விலை அணா 12.

[Supplement to the "Viveka Bodhini."



கிருஷ்ணனும் கோபிகளும்



வெண்ணெய்த்தாழிகிருஷ்ணன்



காளிங்க மர்த்தனம்

விவேக போதினி அநுபந்தம்

# விவேக போதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } பரீதாபிஷு வைகாசி : 1912-ஷு ஜூன்மீ { பகுதி 12

## கீதா மஹான் ஜீவன்முக்தன்

### THE GREAT MAN OF THE GITA

கீதா சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள மஹான்களின் வர்ணனைகளை எடுத்துக் கூறியாகிவிட்டது. இவைகளை வாசிப்போர்களுக்கு முக்கியமாக ஒரு விஷயம் உடனே விளங்கும். அதாவது எல்லா வர்ணனைகளிலும் பொதுவான பாகங்கள் மிக உள என்பதே. அவைகளை ஒருவாறு சுருக்கிக் கூறினுல், துவந்த்வங்களில் ஒரே மாதிரி யிருத்தல், ஸமதிருஷ்டி, தன்னுள்ளும் எங்கும் மாருப்பொருள் ஒன்று உண்டு என்ற உணர்ச்சி அநுபவம், ஸகல ஸத்குணங்கள் ஆகிய இவைகளாகும். இவைகளில் எல்லாம் முக்கியமான பாகம், மாருப்பொருள் உணர்ச்சியே. இதனுல்தான் மற்றைய குணங்கள் எல்லாம் உண்டாகி நிலைப்பது. முன்கூறிய பதினெரு மஹான்களிடத்தும், 'நாம் தேஹாதி மாறும் விஷயங்களல்ல: இவைகளுள்ளே எல்லாம் ஆடும் பரஞ்ஜோதியே' என்று உள்ள இடைவிடா அறிவே இங்கு கூறப்பட்டுள்ள நற்குணங்களுக்கெல்லாம் ஆதாரம். இந்த திடப்ரக்ஞை ஒன்றில்லாவிடில் இந்த மஹான்கள் எல்லோரும் அப்யாஸிகளாகிவிடுவர். ஆதலால் பதினெரு மஹான்களைக் கீதையில் வர்ணித்திருந்தபோதிலும், இந்தப் பொதுலக்ஷணத்தால் மஹான் ஒருவனே அவனை அப்யாஸிகள் நன்மைக்காகப் பதினெரு விதமாக வர்ணித்திருக்கின்றது என்பது வெளியாகும். இவர்களது நிலை என்னமோ ஒன்று தான்: அதைப் பலவிதமாகக் கருணையால் பகவான் அநேகவிதமாக எடுத்துப் பாராட்டி வெளியிடுகிறுர் என்பதைக் கூறவும் வேண்டுமா?

பதினெரு விதமாகவர்ணிக்க இடம் தரும்நிலை யாது? இம்மஹான்களின் பொதுப்பெயர் என்ன? என்ற சங்கை பிறக்கும். இம்மஹான்களுக்கு எல்லாம் 'மாறுதலடையும் எல்லாம் நானல்ல, மாருப்பொருள் நான்' என்ற திடப்ரக்ஞை வந்திருக்கிறது. மாருப்பொருள் இன்னது என்று இப்பொழுது நம்மால் உணரப்படாவிடினும், மாறும்பொருள்கள் யாவை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். வெளிப்ரபஞ்சம் முழுவதும், எண்ணங்களாலாகிய உட்ப்ரபஞ்சம் முழுவதும் மாறுபாடுடையவை. இவைகளுக்கு ஏற்ப இவைகளைவிட சற்று உயர்ந்ததாகக் காணப்படும் கர்த்தா, போக்தா என்று தோற்றும் ஒருவஸ்துவும் மாறுபடும் குணமுள்ளதே. இவ்வஸ்துவுக்கு ஜீவன் என்று பெயர். இவைகளுள் உள்ளும் வெளியுமாகிய ப்ரபஞ்சங்கள் நானல்ல என்று தள்ளிவிடுவது எளிது. கர்த்தா போக்தாவாகிய ஜீவன் நானல்ல என்று தள்ளுவது மிகக்கடினம். இது அநேக ஜன்ம புண்ய பரிபாகம், திடமான அப்யாஸம் இவைகளால் ஏற்படவேண்டியது. மஹான்கள் விஷயத்தில் இந்த நிலையும் கைகூடியிருக்கும். ஆகவே இந்த மஹான்களுக்கு எல்லாம் 'ஜீவன் நான்'என்ற பாவம் நீங்கியிருக்கும். நமது விஷயத்திற்கு 'எது நான்' என்றபாவம் அவர்களிடம் நிறைந்திருக்கும் என்பதை விசாரிக்கவேண்டியதில்லை. இவர்கள் ஜீவபாவம் நீங்கி எல்லோரும் நிற்பதால் இவர்களுக்கு ஜீவன்முக்தர்கள் என்ற பொதுப்பெயர் பொருந்தும் இவர்கள் நிலைக்கு ஜீவன்முக்தியென்று பெயர். இந்த ஜீவன்முக்தி நிலைஉபநிஷத்துக்களில் நேரிட வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இதை எல்லோரும் எளிதில் உணர்ந்து அடையமுயலும்பொருட்டு பகவான்கீதையில் பதினெரு விதமாக வர்ணித்து பகவான் வெளிப்படுத்தியிருக்கிறுர். ஜீவன் முக்தர்கள் லக்ஷணத்தைப் பின்னர் எடுத்துக்கூறுவோம்.

விவேக போதினி

தொ 4] பரிதாபி௵ வைகாசிமீ [பகுதி 12

## விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### 7. பாலகிருஷ்ணன்

இந்த விக்ரஹம் சிறு குழந்தை உருவாகவிருக்கும். அநேக அவஸரங்களில் இந்த விக்ரஹம் ஆராதிக்கப்பட்டு வருகிறது. இவைகளில் முக்கியமானது வெண்ணெய்க் குடத்தோடு கூடிய தவிழும் கிருஷ்ணன், பாம்பின்மேல் ஆடும் தாண்டவ கிருஷ்ணன், கோபிகைகள் மனதைக் கவரும் வேணுகோபால கிருஷ்ணன் ஆகிய இவைகளே மிக முக்கியமானவை. கிருஷ்ண விக்ரஹமே அத்யத்புத லீலைகளை நமது மனதிற்குக் கொண்டுவந்து நம்மை மேன்மைப்படுத்துகிறது. கிருஷ்ணன் இவ்வாறு பரம்பொருளை உணர்த்தி வேதரஹஸ்யத்தை தமது லீலைகளால் வெளியிடுகிறாரென்பதை அடுத்த பாகத்தில் நன்கு வெளியிடுவோம். இங்கு அவர் பால்ய லீலையையும், அவைகளின் உட்கருத்தையும் ஒருவாறு எடுத்து விவரிப்போம்.

கிருஷ்ணன் பால்ய லீலைகளை உற்றுநோக்கில் மூன்று விதமாகக் காணப்படும். அவையாவன. சோரத்வம் (திருடுதல்) உபகாரத்வம் (பிறர் நன்மைக்குத் தொழிற்படல்) ஜாரத்வம் (திருப்திப் படுத்தல்) ஆகிய இவைகளே. இவைகளுக்கு முறையே வெண்ணெய் திருடுவது அஸுரர்கள் முதலிய கொடியவர்களை அடக்குதல், வேணுகானத்தால் கோபிகளை இழுத்து திருப்திப் படுத்துதல் ஆகிய இவைகளே உதாரணங்கள். இவைகளைத் தனிமையாக எடுத்து இவைகளின் உட்கருத்தை ஆராய்வோம்.

முதலில் சோரலீலைகளை எடுத்துக் கொள்ளுவோம். கிருஷ்ணன் எதைத் திருடுகிறார்? தயிர் பால் முதலியவைகளைத் திருடிக் குடித்து வந்தபோதிலும் வெண்ணையையே இவர் முக்கியமாகத் திருடுவது. ஆதலால் தவிழ்ந்த கிருஷ்ணன் திருக்கோலத்தில் பகவான் கையில் வெண்ணெய்த் தாழியையும் வெண்ணை உருண்டையும் கொடுக்கப்பட்டிருக்கும். ஆகவே அவருக்கு அதிப்ரீதியான வெண்ணெய் யாது என்ற கேள்வி பிறக்கும். இதைப் பின்வரும் பாட்டினால் கைவல்ய நூலாசிரியர் நன்கு விளக்குகிறார்.

படர்ந்தவே தாந்த மென்னும்
பாற்கடல் மொண்டு, முன்னூற்
குடங்களில் நிறைத்து வைத்தார்
குரவர்கள். எல்லாம் காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தேன் இந்தக்
கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விஷய மண்தின்
றலைவரோ பசியி லாரே.

‘ப்ரஹ்மமென்னும் காமதேனுவில் சுரந்த சுருதிகள் என்னும் பாலை, விசாரம் என்னும் அக்னியால் பூர்வபக்ஷம் என்னும் நீர் சுண்ட, ஸித்தாந்தம் என்னும் மதுரம் மிகக் காய்ச்சி, விருத்தி ஞானம் என்னும் புரை குத்தி, உபதேசம் என்னும் மத்திட்டு, அனுபவ ஆராய்ச்சி என்னும் கடைதலைச்செய்து, அதில் எழாநின்ற கைவல்யம் என்னும் வெண்ணெயை அனுபவித்தவர்கள் நித்ய திருப்தியாகிய பசியிலாத்தன்மை அடைந்து, விஷயானந்தமாகிய மண்ணைத் தின்னார்கள்’ என்று இப்பாட்டிற்குத் தாத்பரியம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஆந்நிலையைப் பெற்றால் மேல் அசை கிளம்புவதில்லை அந்தக் கைவல்ய நிலையேவெண்ணெய் என்றாச்சுது. இதுஎப்பொழுதும் மாறாதிருந்தபோதிலும் கிருஷ்ணன் இதைத் திருடிவிடுகிறார். இதுபற்றியே பரம்பொருளை வேதம் தஸ்கராணாம்பதி (திருடர்பெருமான்) என்று கூறுகிறது. இப்பெயரின் ரகஸ்யத்தையே உணர்த்த கிருஷ்ணன் சோரலீலைகள் ஏற்பட்டன. இவர் யாரிடத்திலிருந்து இதைத் திருடுகிறார்: தேஹமே நான் என்று மயங்கி இந்நிலையைக் கவனியாதவர்களிடமிருந்து இதைத் திருடி விடுகிறார். ஆனால் தேஹம் நான் என்பது எப்படியாகும் என்றுசங்கிக்கும் அறிவினர்களுக்கு அவர்கள் புத்திரூபமாகவிருந்து இந்தகைவல்ய வெண்ணையைப் புகட்டுகிறார். இதைத்தான் கிருஷ்ண கதையில் பகவான் திருடிய வெண்ணையை குரங்குகள்வாயுள் திணிக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. குரங்கு ஸ்வபாவமாக சஞ்சலமுடைய ஜந்து: அதாவது தேஹம் நானல்ல ஆனால் நான் இன்னது என்று தெரியவில்லையே என்ற சஞ்சலமுடைய மனத்தைக் குறிக்கிறது. ஆகவே அப்யாஸத்தின்மேல் ஏற்படுவதாயும் பரம்பொருள் நேரான ரூபமாயும் உள்ள ஞானரூபமான புத்தி, தேஹாதி ப்ரபஞ்சத்தில் அபிமானமுடையவரிடமிருந்து பரமநிலையான மோக்ஷத்தை மறைத்து, இவைகளில் நான் என்ற புத்தி நீங்கப்பெற்று மேல்வழி இன்னதென்றறியாது தத்தளிக்கும் பக்குவிகளுக்கு அந்நிலையை நினைப்பூட்டும் என்பதைத் குழந்தையான பகவான் தமது சோரலீலைகளால் விளக்குகிறார்.



இனிபரோபகார லீலைகளை எடுத்துக்கொள்ளுவோம். இவைகளில் தம்மைச் சேர்ந்தவர்களுக்குவரும் ஆபத்துக்களைப்பகவான்விளையாட்டுப்போல நீக்குகிறார். அதாவது பரம்பொருள் தன்னை நாடுபவர்கள் சித்தசஞ்சலம், அதனால் விளையக்கூடிய துக்கம் முதலியவைகளை நீக்கி அவர்களுக்குச் சித்த ஸமாதானம் உண்டாகும்படி செய்யும் என்பதை உணர்த்தும். ராக்ஷஸாதிகள் பொதுவாக மனத்தின் அசுத்த வாஸனைகளை உணர்த்துகின்றனர் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. இம்மாதிரியான லீலைகளுள் காளிங்க நர்த்தன லீலையே சிறந்த உட்கருத்துகள் அடங்கியுள்ளது. எங்கும் பரவியதுபோல மானிடருள்ளும் இருக்கும் பரமாத்மா இவ்வாறு லோகானுபவாதிகளில் மனிதனுக்கு ஜீவபாவம் நீங்குங்கால் வெளிப்பட்டு துக்க நிவர்த்திக்கும் ஆனந்த ப்ராப்திக்கும் இடனாகிறது என்பதை இந்த லீலை நன்றாக உணர்த்தும். ஐந்து தலைநாகமாகிய காளிங்கன், ஞானேந்திரியம் ஐந்தையும் உணர்த்துகிறான். யமுனை ப்ரபஞ்சத்தையும், அதிலுள்ள காளிந்திமடு விஷயத்தையும் உணர்த்தும். காளிங்கன் மடுவிலிருந்து எங்கும் விஷஜ்வாலையாகவிருக்கும்படி செய்து, சிரஸில்சிறந்த மாணிக்கத்துடன் இருக்கிறான். அதாவது மனிதன் ஐந்து இந்திரிய வழிப்பட்டு விஷயத்தை அனுபவித்து வாவா விஷயவெறுப்பை விருத்தி செய்துவருகிறான். இந்தஸமயத்தில் பால கிருஷ்ணன் இந்த மடுவில்விழுந்து நீந்திப் பின்னர் பாம்பால் கட்டுண்டுபின்னர் அதன்பேரில் ஏறிநர்த்தனம்செய்கிறார். முற்கூறிய பக்குவமடைந்தவன் உள்ளிருக்கும் பரம்பொருள் உலகில் ஸம்பந்தப்பட்டு விளையாடி விஷயங்களில் கட்டுப்பட்டு முடிவில் விஷயவெறுப்பை ஸஹாயமாகக்கொண்டு இந்திரியங்களை அடக்கி உள்ளபடி விளங்கும் இந்த லீலையில் பகவான் ஒருகாலால் பாம்பின் மேல் மிதித்து ஒருகாலை உயரத்தூக்கி நர்த்தனம் செய்வது, ஆனந்த நடேசர் உட்கருத்தை முற்றிலும் அடக்கியுள்ளது. இதன் முடிவில் பகவான், காளிங்கனை விஷம் கக்கும்படி, அடித்து அவன் மாணிக்கத்தைப் பிடுங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார். அதாவது முடிவில் வைராக்யம் திடப்பட்டு இந்திரியங்களுக்கு, வெளியேறி விஷயானுபவம்செய்யும் ஆற்றல் அடியோடே போய்விடும். மேலான நிலை பின்னர் வரும் என்று கூறவும் வேண்டுமா? இந்த லீலை ஸம்பந்தமாகப் பெரியோர்கள் ஒரு உபதேசமொழி ஒன்று கூறுவது வழக்கம். ‘விஷம் கொடியதல்ல : அதை விஷம் என்று கூறவே கூடாது. விஷயமே விஷம், ஸம்ஸாரம் அந்த விஷய விருக்ஷம். விஷம் சாப்பிடுவோர் தேஹத்தைப்போக்கி ஒரு ஜன்மத்தை வீணாக்குவர். விஷயமோ அவ்வாறின்றி மனதால் ஸ்மரித்து அழுந்துபவர்களது அனேக ஜன்மங்களை வீணாக்கிவிடும். விஷயானுபவ அசையை வேராறுப்பதே உலகவாழ்க்கையின் பலனாகும். இதை அடையாது இருப்பவர் வாழ்நாள் வீணாளே’ இந்த ரஹஸ்யத்தை பகவான் பரோபகார லீலைகள் நன்கு உணர்த்தி ஜன்மத்தை ஸபலமாக்கிக்கொள்ள நம்மை நன்றாகத் தூண்டும்.

இனி பகவானது ஜாரலீலைகளை எடுத்துக் கொள்ளுவோம். இவைகளைத்தான் கிருஷ்ண லீலைகளுக்குள் பரம ரஹஸ்யங்கள் அடங்கியவைகள் என நமது பெரியோர் கொண்டாடுகின்றனர். இவர்கள் உள்நோக்கம் அறியாத கிருஷ்ணபக்தர்கள் இந்த லீலைகளை வெளிப்படையாகக் கொண்டு மயங்கி வாயால்கூற இயலாததும் வேதவிரோதமுமான கொடிய பாபச்செயல்களைத் தயங்காது ‘பக்தி செய்கிறோம் பஜனை செய்கிறோம்’ என்று வீண்பெருமை பேசுகின்றனர். இந்த நாடகங்களைக் கண்டு நம்முள் லீலாரஹஸ்ய முணராத சில அறிவுடையோர்கள் யுக்திக்குபொருத்தமாகவே கிருஷ்ணலீலைகள் இத்தகைய அடாத காரியங்களுக்கு இடங்கொடுக்குமா என்று சங்கித்து கிருஷ்ண ஆராதனம் மனிதர்களை மஹா பாபிகளாக்கிவிடும் என்று அபிப்பிராயப்படுகின்றனர் தன் மதமே உண்மை, உலகில் வேறு உண்மை மதங்களே இல்லை, தன் மதாசாரியனே மஹான், வேறு மஹான்கள் உலகில் இல்லை என்று மூட

பக்தி, மதாவேசம், மதத்வேஷம் முதலிய கொடுங்குணம் வாய்ந்த வெளி நாட்டோர் பிதற்றுவதற்கு கேட்கவேண்டுமா! அவர்களுக்கு நமது மதவிஷயமான அக்ஞானம் அதிகமாகவாக மததூஷணம் அதிக கொடுமையாகக் கிளம்பி வரும். இதனால் தெய்வமிகழ்ந்து கொடிய பாபத்திற்கும் அநேக கொடிய செயல்களுக்கும் அவர்கள் ஆளாகின்றனர். பாலகோபாலனாகிய பகவானே இவர்களைச் சீர்திருத்த வேண்டுமே ஒழிய எவராலும் இவர்கள் த்வேஷாந்தகாரத்தை நீக்க முடியாது. வெளியோர் பிதற்றல்களுள் பாலகிருஷ்ண விஷயமானதே பெறும் பிதற்றலாக விருக்கின்றது. ஆதலால் இந்த ஜார லீலைகள் விஷயத்தை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

இந்த ஜாரம் அல்லது திருப்திப்படுத்தும் லீலைகளில் யார் ஸம்மந்தப்பட்டவர்கள்?பகவான் ஒருபுறம், கோபஸ்திரீகள் மறுபுறம். இந்த லீலைகளில் பகவான் திருப்திப்படுத்தும் விதம் எவ்வாறு ? கோபஸ்திரீகளுக்குச் சாந்தம் வரும்படி நடந்துகொள்ளுகிறார். தனக்கு அவ்வாறு நடப்பதால் ஸுகமும் ஏதாவது எற்படவேண்டும் என்ற எண்ணமே இல்லாதவர். ஆதலால் உண்டாகும் சாந்தத்திற்கு ஏதாவது கெடுதல் வரக்கூடியதான நிலை வந்தவுடன் நிஷ்கண்டகமாக கோபஸ்திரீகளை வருத்துகிறார். பகவான் பிருந்தாவனம் விட்டு மதுரை சென்றதும் கோபஸ்திரீகள் பட்ட பாடு சொல்லிமுடியாது. அதை நீக்க பகவான் உத்தவருக்குச் சொல்லியனுப்பிய உபதேசம் பகவான் நிலையை நன்கு உணர்த்தும். ‘நான் எங்கும் பரவியுள்ள வஸ்து, எனக்கு உங்களைவிட்டுப் பிரிவு என்பதே கிடையாது. எப்பொழுதும் உங்களுடன் சேர்ந்தே யிருக்கிறேன். இப்பொழுது ஏற்பட்டுள்ள பிரிவு உங்கள் பக்தியை அதிகப்படுத்தி உங்களுக்குச் சாந்தியை உண்டாக்கும்,’ என்பதே பகவான் உபதேசம், இதைக் கேட்டதும் கோபிகள் தேறி சாந்தி பெற்றனராம். ஆகவே கிருஷ்ணன் கேவலம் காமியான புருஷனல்லன். இது தோன்றவே அவரை இக்காலத்தில் குழந்தையாக வைத்திருக்கிறது. கோபிகைகள் அன்பு, முதலில் காமம்போல இருந்தபோதிலும் வரவர பக்தியாக மாறி சாந்தி ப்ரதமான முமுக்ஷுத்வமாகி விடுகின்றது, என்று தெரியவரும்.

கோபி என்ற பதத்தின் பொருளே மிகச்சிறந்தது. ‘ஸர்வ உபநிஷத்துகளும் கோக்கள்; கோபாலநந்தனரே பால்காரர். பார்த்தன் கன்று: மஹான்களே பால்குடிப்பவர்கள். கீதாமிருதமே மஹத்தான பால்’ என்று பகவத்கீதை விஷயமான ஒரு சுலோகம் உண்டு. இதிலிருந்து உபநிஷத்துக்கள் கோக்கள் என்பதாயிற்று. இவைகள் பாலைக்கறந்து அனுபவிக்கும் கோபிகள் மஹான்கள் என்பதாயிற்று.அதாவது உபநிஷத்துக்கள் என்ற பசுக்களைப் பரிபாலனம் செய்து, வரும் ஞானமிருதமாகிய பாலைப் பருகுபவர்கள் மஹான்களாகியகோபிகள். இதற்கேற்பவே ராமாயணம் உத்தரகாண்டத்தில் ராவணன் திக்விஜயத்தில் ச்வேதத்வீபம் என்ற விடத்தில் எல்லோரும் ஹரிபக்தர்களாகிய ஸ்திரீகள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் ராமாவதாரத்தில் பக்தியில் ஈடுபட்டுஸஹிக்க முடியாத ரிஷிச்ரேஷ்டர்களே கிருஷ்ணாவதாரத்தில் கோபிகளாகி விட்டனர். என்ற கதைகூட உண்டு. ஆனால் பரமபக்தர்களான மஹான்களை பெண்களாகவும் பகவானைப் புருஷனாகவும் கூறுவானேன் என்ற சங்கை உண்டாகலாம். ஜீவபாவம் முற்றிலும் நீங்கி ஜீவன்முக்தியாகிய பரம அத்வைத நிலை கைகூடும்வரையில் மஹான்கள் பகவத் அதீனமாக விருப்பார்கள். ஸ்திரீகள் அபலைகளாகி எப்பொழுதும் புருஷர்களிடமே பராதீனர்களாக விருப்பதால் மஹான்களை ஸ்திரீகளாகவும்,பரம்பொருளைப் பரம புருஷனாகவும் கூறியிருக்கிறது. இதுவுமல்லாமல் எல்லா ஸ்திரீபுருஷ ஸம்பந்தத்தையும்விட நாயகிநாயக ஸம்பந்தமே மிகச் சிறந்தது .இதில் நாயகி முற்றிலும் நாயகனையே ஆதாரமாக உடையவள். அவனன்றி அவளுக்கு வேறு ஒரு கதியும் இல்லை. இந்த ஸம்பந்தம் திடப்படசிற்றின்ப வாஞ்சையால் ஏற்படும் காதல் பந்தமும் உண்டு. இவ்விரண்டு விஷயங்களால் இந்த ஸம்பந்தத்திற்கும் இதனால் ஏற்படும் இன்பத்திற்கும் முறையே பக்தர்களுக்கும் பகவானுக்கும் உள்ள நெருங்கிய ஸம்பந்தத்திற்கும் இதனால் அவர்களுக்கு ஏற்படும் பேரின்பத்திற்கும் மிகுந்த பொருத்தம் உண்டு. ஆனால் பகவான் நிலைக்கும் நாயகன் நிலைக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. இதை நன்கு விளக்கத்தான் பரமபுருஷனைக் காதலின் குழப்பமறியாத குழந்தையாய் காட்டியிருக்கிறது. நாயகனோ நாயகிபோல காதல் நோயால் வருந்தி காதலி சேர்க்கையில் சிற்றின்ப



வெள்ளத்தில் மூழ்கிவிடுவான். பகவான் அப்படியல்ல. பரமபக்தர்களுக்குத் தமது சேர்க்கையால் பேரின்பம் கொடுத்து அவர்களுக்கு கர்வம் முதலிய தோஷங்கள் ஏற்பட்டால் தாம் நீக்கி அவர்களுக்கு விரஹதாபத்தைத் தயங்காது உண்டாக்குவர். நித்யதிருப்தராதலால் இந்த விஷயத்தை அவர் ஒரு லீலையாக மதிப்பாரே ஒழிய பெரியவிஷயமாகக் கொள்ளார்.

இவ்வாறு மஹான்களை வெறும் நாயகிகளாகக் காட்டினால் போதாது; அவர்களுக்குப்பகவானிடமிருக்கும் போராவலாகிய முமுக்ஷுத்வம் இவ்வளவு தீவிரமுடையது என்பதைக் காட்டவேண்டும் என்று அவர்களைச் சோரநாயகனிடம் போகும் கோபிகளாக நமது பெரியோர் காட்டியிருக்கின்றனர். தன் நாயகனைவிட சோரநாயகனிடம் கெட்ட ஸ்திரீகளுக்கு உண்டாகும் காதல் குலஸ்திரீகளுக்குத் தன் கொழுனனிடம் ஏற்படும் மெய்க்காதலைவிட மிக தீவ்ரமாக விருக்கும். இதை அதிகமாக விஸ்தரிக்க வேண்டியது அனாவசியம்.. இதற்கேற்பவே ஸமாதியிலிருந்து வெளிப்படும் மஹானது மனோநிலை வ்யவஹாரமத்தியில்இவ்வாறிருக்கும் என்பதை கைவல்ய நூலாசிரியர் சோரநாயகி திருஷ்டாந்தத்தால் பின் வருமாறு விளக்குகிறார்:—

விவஹார வேளைஎல்லாம் ஸமாதி என்றால் விகற்பமன்
மனமலைந்து விடாதோ? விட்டால் [ரோ
அவதான நழுவுமன்றோ, வென்றாயாகில் அதன்
திட்டாந்தங்கேள் ஆசை கொண்டு,
நவமாகப் பரபுருஷன் தன்னைக்கூடி நயந்துஸுக
மனுபவித்த நாரி நெஞ்சம்
தவமான மனைத்தொழில்கள் செய்யும்போதும் தழுவி
அனுபவித்தஸுகந் தனைவிடாதே.

ஆகவே உத்தம நாயகிக்கு பரமபுருஷனிடம் ஏற்படும் காதலே மஹான்களது பரமபகவத் பக்தி நிலையை நன்கு உணர்த்தும். பகவானது ஜாரலீலை ஜீவன்முக்திக்கு முந்தின நிலையிலுள்ள மஹான்கள் மனோநிலையை நன்கு உணர்த்தும். ஆதலால்தான் ஜாரலீலைகளைத் திருப்திலீலைகள் என்றோம். ஆகவே பகவத் பக்தர்கள் பகவானால் ஸுகிக்கும் சோர நாயகிகள். இவர்கள் ஸுகம் பொய்வளரும் நெஞ்சினர்கள் உணராது ரஹஸ்யமாகவருவது என்பதாயிற்று. இதன் சிறப்புத் தோன்றவேதான் ஸ்ரீமத் பாகவதத்தில் பகவானைக் குழந்தையாகவும், கோபிகைகளை வீட்டைவிட்டு வெளியேறும் சோர நாயகிகளாகவும், குறிப்பித்து அவர்களைத் திருப்திபண்ணியவிதத்தில் பகவான் நிலையைக் காட்டி இதனால் அவர்களுக்கு ஒருவித ஜாதி அனாசாரம்கூறி, ஏற்படவில்லை என்று கூறி பின்னர் உத்தவர் பகவத் பக்திக்குப் பிரிவே ஸாதகம் என்றுகூறிய உபதேசத்தால் இவர்களுக்குச் சாந்தி பிறந்தது என்று விவரிக்கப் பட்டிருக்கிறது.

இம்மாதிரியான ஜாரசோர சிகாமணியான பாலகிருஷ்ணனை விரும்பாதவர் நம் பாதகண்டத்தில் யாராவது உண்டோ? எல்லோரும் இவர் பால்ய லீலைகளில் ஈடுபட்டபோதிலும், ஸரியான வழியில் ஈடுபடாததால் ராதா கல்யாண முதலிய அலங்கோல கோலாஹலங்களைச் செய்து அதோகதியை அடைகின்றனர் ஒருதிறத்தார். ஈடுபடாத சிலர் மூடத்தனத்தால் குற்றங்கூறி வீண்பாபத்திற்கு ஆளாகின்றனர். இந்நிலை வரலாகாது என்றுதான் சிஷ்டரான க்ருஹஸ்தர்களே பாகவதத்தில் கிருஷ்ண கதையைப் படிக்க அதிகாரிகள் என்று பெரியோர் கூறுவர். அதிகாரிகளில்லாதவர்கள் வலியப்படித்து குற்றங்கூறுவது ஸூர்யனைப் பார்த்து நாய் குலைப்பது போலாகும். கிருஷ்ணாஹஸ்யம் உணராதவர்கள் அதை உணரும்வரையில் தமது அவஸர தீர்மானங்களை அடக்கி வைத்து, அமைதியுட

ணிருப்பார்களாகில் அவர்களுக்கும் மற்றெல்லோருக்கும் ஸுகமுண்டாகும். இவைகளில் ஈடுபட்டு பக்தி செய்பவர்களும் மிகுந்த ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். முற்கூறிய லீலைகளில் பகவான் விகாரமற்றிருந்தார். அவைகளைப்போல வீண்நாடகமாடும் பக்தாக்ரகண்யாள் அவ்வாறிருக்கமுடியுமா ? ஒருநாளும் முடியாது. ஆதலால் பாலகிருஷ்ண ஸம்பந்தமாக ஏற்பட்டிருக்கும்பஜனைக்கூட்டம் என்று பெரும்பெயர் கொண்டிருக்கும் கூத்தாடி நாடகமாடும் கூட்டத்தில் பாலகிருஷ்ணனிடத்தும் அவர் லீலைகளிடத்தும் உண்மை உணர்ந்து ஈடுபடுவர்கள் சேரவே கூடாது. கிருஷ்ணன் பால்ய லீலைகளில் ஸ்திரீ ஸம்பந்தமான சிற்றின்ப விஷயங்கள் மூலமாகப் பேரின்பத்தின் விஷயங்களை நிரூபித்திருப்பதால், சிற்றின்பவிஷய ஸம்பந்தம் ஒழித்துப் பேரின்பச்சிறப்பை நன்றாக மனதில் வாங்கிக் கொண்டு தனித்திருந்து கிருஷ்ண லீலைகளில் ஈடுபட்டுப் பரவசமாகியேதான் பாலகிருஷ்ண ஆராதனைத்யானாதிகள் செய்து பழகவேண்டும். இவ்வாறுசெய்து ஈடுபட்டு கிருஷ்ண கர்ணாமிருதம் பாடிய லீலாசுகர், ஸந்த்யாவந்தனாதி ஸத்கர்மங்களும் நழுவி நிற்கும்படியான பரம முக்தி நிலையை அடைந்திருக்கிறார். இவ்வாறின்றி உலக விஷயங்களோடு ஸம்பந்தப்படுத்தி ஆண் பெண் என்ற பேதமின்றிகூட்டங்கூடி பஜனை கூத்தடித்தால் அதோகதிதான் வரும். கரி நறுக்கி நல்ல உண்டிக்கு உபயோகப்படுத்த வேண்டிய அரிவாள் மணையை எடுத்து கழுத்தை அறுத்துக் கொண்டவனுக்கு நிகராவர் இக்கூட்டத்தார். இந்த எச்சரிக்கைக்குட்பட்டு செய்யப்படும் பாலகிருஷ்ணாராதனம் மிகச்சிறந்ததே.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 16 சனிநீராடு

**ச**னிக்கின்ற அதாவது தானே உண்டாகி வருகின்ற நீரில் ஸ்நானம் செய் என்பது இதன் பொருள். ஸ்நானத்திற்கு மிகத் தகுந்ததாயும் தேஹத்திற்கு நல்ல வலிவு கொடுக்கத் தகுந்ததாயும் உள்ளது தானே உற்பவித்து வரும் நீர். பாத்திரத்தில் எடுத்துவைத்து மேலே விட்டுக்கொண்டு ஸ்நானம்செய்வது அவ்வளவு சிறந்ததல்ல என்பதாயிற்று. ஆகவே தண்ணீரை மேலே விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்வதைவிட அதனுள் அமிழ்ந்து ஸ்நானம் செய்வது மிக ஆரோக்கியமானவழியாதலால் இவ்வாறு கூறியதாகும். ஆனால் இத்தகைய தண்ணீர் கிடைக்காதவிடத்து தொட்டிகளில் தண்ணீர் நிறைத்து சிலர் அமிழ்ந்து முழுகுவது வழக்கமாகி விட்டது. இக்காலங்களில், இவ்வாறு செய்வது சனி நீரில் முழுகும் பலனைக் கொடுக்கமாட்டாது என்பது இந்த நீரின் விஷயத்தை நன்கு ஆராய்ந்தால் வெளியாகும்.

சனிநீர் இரண்டு விதம்: ஓடும் நீர் விழும் நீர் ஆகிய இவைகளே. தண்ணீர் புடைபெயர்வதால் சுற்றியுள்ள சாதாரண வாயுவில் கலந்து உள்ளிருக்கும் அழுக்கு நீங்கி சுத்தமாகும். ஆகவே இத்தகைய நீரில் முழுகி ஸ்நானம் செய்தபோதிலும் அதனால் ஏற்படும் அழுக்கு எளிதில் தண்ணீர் ஓட்டத்தால் நீங்கும். ஸ்நானம்செய்யும் அழுக்கைத்தவிர மற்றையவிதமாக ஆபாஸங்கள் தண்ணீரில் செய்யலாகாது என்பதே சாஸ்திர விதி. இதுபற்றி நதிகளைத் தேவதைகளாக உருவகப்படுத்தி, அவைகளை அசுத்தப்படுத்துவது மஹாபாபம் என்று நமது சாஸ்திரங்கள் கூறும். ஆதலால் ஆற்றில் இறங்குபவர் ஒவ்வொருவரிடத்தும் பாத்திரமொன்று இருத்தல் வேண்டும் என்றும் வாய்கொப்புளித்தல் மலம் கழுவல் முதலியவைகளைக் கரையில் தனிமையாக செய்யவேண்டுமேயல்லாது தண்ணீரிலேயே செய்யக்கூடாது என்பது தீர்த்தயாத்திரைவிதி. இவைகளின்படி நடந்து ஸ்நானம் செய்தால் ஓடும் தண்ணீருக்கு ஏற்படும் அசுத்தம் அதன் ஓட்டத்தால் நீங்கிவிடப் பலர் ஸுகமாகஸ்நானம்செய்ய இடமுண்டாகும். நீர்வீழ்ச்சி



யில் வாயுக்கலப்பு புடைபெயர்ச்சி முதலியவைகள் வெகு வேகமாய் நடப்பதால் ஒருதரம் விழுவதால் தண்ணீர் வெகு சுத்தியாகிவிடும். ஆதலால் அருவிகளில் ஸ்நானம் செய்வது மிகச் சிறந்தது. மேலும் 'தண்ணீர் நில நலத்தால்' என்று ஔவையாரே நல்வழியில் கூறியுள்ளாள். அதாவது பூஸாரங்களால் தண்ணீருக்குப்புதிய குணங்கள்ஏற்படும் என்பதாகிறது. மலையிலிருந்து உற்பவித்து ஓடிவரும் நீர் எத்தனையோ ஓஷதிகள் நிறைந்த வனங்கள்வழியாகவும், விசேஷ தாதுக்கள் நிறைந்த பூமி வழியாகவும் வருவதால், அதனுள் நல்ல வஸ்துக்கள் கரைந்திருந்தால் ஸுகத்தையும், கெட்ட வஸ்துக்கள் நிறைந்திருந்தால் தேஹ உபாதியையும் உண்டாக்கும் குணம் ஏற்படும். சிற்சிலவிடங்களில் நீர் ஓட்டத்தால் தண்ணீரின் துர்க்குணங்கள் மாறிவிடலாம். கூழாங்கற்கள் முதலிய சுத்த வஸ்துக்கள் மேலாக ஓடிவருங்கால் தண்ணீர் தெளிந்து பரிசுத்தமாகிவிடும். ஆகவே பூஸாராதிகள் ஸரியாகவிருக்கும் வழியாக ஓடிவரும்நீரில் ஸ்நாநம்செய்யவேண்டும் என்றே இந்நீதி வாக்கியத்திற்குப் பொருள் கூற வேண்டும். இதுபற்றியே பெரியோர்களும் 'கான் யாற்றடைகரை ஊரினிது' என்று கூறியுள்ளார். இவைகளால் தொட்டிநீரில் மூழ்கி ஸ்நாநம் செய்வதைவிடமேலே எடுத்துவிட்டுக்கொண்டு வெளியே நின்று ஸ்நானம் செய்வது மேல் என்பதும் வெளியாகும். சனிநீரில் ஸ்நானம் செய்யக் கிடையாவிடில் முற்கூறியபடி செய்யவேண்டும். இதுபற்றியே ஆற்றுநீர் ஸ்நானம் அனுஷ்டானாதிகளுக்கு முக்கியமான பூர்வாங்கமாக வைத்துள்ளது.

இனி சனி நீராடு என்பதற்குச் சனிக்கிழமை எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய் என்று ஒரு பொருளும் உண்டு. புருஷர்களுக்கு எண்ணெய் தேய்த்துமுழுகுவதற்குச் சனியும் புதனுமேசிறந்தநாள்களாக மதிக்கப்பட்டுவந்துவிட்டது இந்தப் பொருளிலேயேதான் ஆத்திசூடி வெண்பா அமைக்கப்பெற்று மற்றய நாள்களில் எண்ணெய் தேய்த்துக்கொள்வது சிறந்ததல்ல என்பதை தோஷா ரோபண மூலமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

ஞயிறுயிர்க்கீறு. திங்கள் நம்பருள் செய்கிலர், செவ்
வாய்பிணி, துக்கம் குருநாள், வாழ்வுபோன—தாய்வெ
போடிதெல்லாம் புன்னைவன பூபாலா மிக்கபுத [ள்ளி
னேடுசனி நீராடு.

என்பதுதான் இவ்விஷயத்திற்கு ஆத்திசூடி வெண்பா.

### 17. நயம்படவுரை

**ந**யம் அதாவது இன்பம் உண்டாகும்படிக் கூறு என்பது இதன் பொருள். மேல்பட்டவர்களிடத்தில், அவர்கள் நிலை அவர்களால் ஏற்படக்கூடியநன்மை, இவைகளைக் கருதி இன்பம்பிறக்கும்படிப் பேசுவது எல்லோருக்கும் இயற்கை. அதுபோலவேதான் ஸமானமானவர்களிடத்தும். ஆனால் தன்னைவிடத் தாழ்ந்தவர் ஸம்பந்தப்பட்டு இந்தக் குணம் இருப்பது அரிது. இவ்விடத்தும் இருத்தல்வேண்டும் என்பதே இந்நீதி வாக்கியத்தின் நோக்கம். இக்கருத்தையே ஔவையார் 'கீழோராயினும் தாழவுரை' என்று கூறி வெளியிட்டிருக்கிறாள். மேலும் இன்னொரு விதமாகவும் இதன் பொருளை ஆராய்ச்சி செய்யலாம். பலர்கூடி ஸம்பாஷிக்கும் காலத்தாவது அல்லது நம்மோடு ஒத்தகையவர் வந்து பேசுங் காலத்திலாவது அவர்கள் அபிப்பிராயம் நமக்கு இசைந்ததாக இல்லாவிடில் அதை வெட்டெனக் கூறி அவர்களைப் புண்படுத்தாது நயமாக நமது அபிப்பிராய பேதத்தைக் காட்டிவிடவேண்டும் என்பதும் இதனுள் அடங்கியிருக்கிறது. உலகம் லபவிதம், அதில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று முக்கியமெனத் தோற்றலாம். அபிப்பிராய பேதம் எப்பொழுதுமே இருக்கும். ஆதலால் அபிப்பிராயத்தை ஒளித்து உள்ளே ஒருவிதமிருந்து வெளியே ஒருமாதிரி பேசுபவர்களுக்கு இணங்கிப் பேசிவிடவேண்டும் என்பதல்ல, இதன் கருத்து. நமது அபிப்பிராய பேதத்தை வெளியிடுங்காலும் புண்படுத்தாது தெரிவித்துவிட வேண்டும்,மேல் அதிகப்ரஸங்கம்செய்து எதிராளிகளை வீண் மனஸ்தாபத்திற்கு ஆளாக்கவே கூடாது. நமக்கு இஷ்டமில்லா விஷயங்களை உலகைவிட்டு ஒழிக்க முயலுவது அழகல்ல, என்று ஒதுங்கிவிடுவதே நயம்பட வுரைத்தலின் காரியம்.

முற்கூறியபடி இல்லாது எடுப்பார் கைப்பிள்ளைபோலப் பேசுபவர்கள் நோக்கத்திற்கு இணங்கி அவர்களைத் திருப்தி செய்யப் பேசிவிட்டால் தர்மஸங்கடத்தில் வந்து மாட்டிக்கொள்ளும்படி யாகும். பேசுபவர்கள் நாமும் அவர்கள் பக்கம்தான் என்று மதித்து மேல் காரியங்களுக்கு நம்மைச் சேர்த்துக்கொண்டு தொடங்கி

விடுவார்கள். அப்பொழுது அவர்கள் இழுக்கும் வழி எல்லாம் நாம் பொகவேண்டி வரும். நமது நோக்கங்களைக் கைவிட்டு அதோகதி யடைய வேண்டி வரும். அவ்வாறின்றி நடுவில் பின்னடைந்து நமது அபிப்பிராயத்தை வெளியிட்டால் பாசாங்குக்காரன் நேர்மையற்றவன் என்ற வீண் அபவாதத்திற்கு ஆளாகவேண்டிவரும். ஆதலால் இந்நீதி வாக்கியத்தை உள்ளபடி உணர்ந்து பின் பற்றுவிடில் தர்மஸங்கடங்கள் உண்டாகும். ஆகவேயிந்த வாக்கியத்திற்கு இங்குக்குறித்த எல்லைபடி பொருள் கூறுமிடத்து நாம் வெளியிடவேண்டியது கேட்போருக்கு ப்ரியமாயினும் அப்ரியமாயினும் பிறர் கூறுவதை ஏற்று ஆராய்ந்து பார்த்து படபடப்பும் வீண்பேச்சுக்களுமின்றி அவற்றை தெரிவித்து விட வேண்டும். மனஸ்தாபத்திற்குக் காரணமாகும் சொற்களை வெளிவிடலாகாது' என்று விரியும். எப்படிப்பட்ட கொடியவர்களையும் இம்மாதிரியான நடத்தை பணியும்படி செய்துவிடும்.

ஞயம்பட உரைத்தால் கொடிய குற்றம் செய்தபோதிலும் அதனால் ஏற்படக்கூடிய தண்டனையை வெகுவாகக் குறைத்துவிடும் என்பது, தசரதர் சப்தவேதி எய்துகொன்றருஷி பிள்ளையை அவன் தாய் தகப்பனிடம் கொண்டுபோய் நயந்து கூறியதால் அவர்கள் சாப வலிவு குறைந்த கதை வெளியாக்கும். இதனாலே கொடிய விரோதிகள் மனமும் கனியும் என்பது நிராயுத பாணியாகத் தம்முன் நின்ற ராவணனுக்குக் கூறிய நயவாக்குகள் தற்காலத்திற்காவது அவன் கொடிய மனதைமாற்றி ஸீதையைத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டு விடலாம் என்று தயங்கச் செய்தது. இவ்வாறு செய்யாததால் ராவணன் அனரண்யர் சாபத்திற்காளானதும், துர்யோதனன் மைத்ரேயர் சாபத்திற்கு ஆளானதும் நன்கு விளக்கும்.. ஆதலால் இந்நீதி வாக்கியப்படி நாம் நடக்க முயலவேண்டியதவசியம் (இக்கதைகளின் விஸ்தாரத்தை ஆர்யமத உபாக்யானம் முதல்பாகம் முறையே 27, 28, 52-6 கதைகளில் காண்க).

இவ்விஷயமான ஆத்திச்சூடி வெண்பா.

தொட்டித்தோ னன்றி செய்த தூயோ னிருவருக்கும்
பட்டணத்துப் பிள்ளை பகர்ந்ததுபார்—மட்டலவும்
தென்பாகை புன்னைவன தீரனே யாரிடித்தும்
அன்பாய் ஞயம்பட வுரை.

---

# மறவர் நாடு

## THE LAND OF THE MARAVARS.

(தொடர்ச்சி)

முற்காலத்தில் மறவர் நாடு என்பது தற்காலத்திலுள்ள இராமநாதபுரம் ஜமீந்தாரி சிவகங்கை ஜமீந்தாரி புதுக்கோட்டை இராஜ்யம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சில பாகம் ஆகிய இவைகள் சேர்ந்த முழுப்பாகமா யிருந்தது இம்மாதிரி ஒருமிப்பாயிருந்த மறவர் நாடு எவ்வாறு எக்காலத்தில் சின்னபின்னமாய்ப் போய்விட்டது என்பதைப்பற்றி சற்று ஆலோசிப்போம். இவ்வாறு பிரிவாவதற்கு முன்பு இந்நாடு இருந்த ஸ்திதியைப்பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இராமநாதபுர நாடு ஆதிகாலமுதல் நிலைத்திருக்கின்றது. என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இராமசந்த்ரர் இலங்கைக்குப்போய் இராவணனை வதைசெய்தது முதல் உண்டான நாடு இம்மறவர் நாடு என்பது அனேக ஸ்தல புராணங்களாலும் தர்மாவனக் கிராமங்களுக்கு ஏற்பட்ட செப்புப் பட்டயங்களாலும் தெரிய வருகிறது. ஆகவே இராமநாதபுர நாடு அல்லது மறவர் நாடு தற்காலத்தில் ஏற்பட்டதல்ல. இந்நாட்டிலுள்ள முக்கியமான கோயில்களுக்கேற்பட்ட ஸ்தல புராணங்களைச் சற்று பரிசோதனை செய்வோம்.

**இராமேசுவரம்.**—இப்பெயர் எது காரணம் பற்றி ஏற்பட்டது என்பதைப் பார்த்தால் ஸ்ரீராமசந்திரர் ஈசுவரனைப் பூஜித்த இடம் என்று தெரிய வருகிறது. இராமர் இராவணனை வதை செய்துவிட்டு திரும்பி வந்தகாலத்தில் அனேக இராக்ஷஸர்களை வதை செய்த பாபம் தனக்கு ஏற்பட்ட காரணம்பற்றி தனுஷ்கோடி என்ற சமுத்திரபாகத்தில் ஸ்நானஞ் செய்து பாபத்தையொழித்து பிறகு ஈசுவரனை பூஜை செய்வதற்காகத் தன் பிராட்டியான ஸீதையை ஒரு லிங்கம் தயார்பண்ணச் சொல்லிவிட்டு பிறகு அந்த லிங்கத்தைப் பூசை செய்தார் என்ற கொள்கையின்பேரில் இராமலிங்க க்ஷேத்திரம் என்று ஏற்பட்டது. இராமர் இச்சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்து தன் பாபத்தையொழித்த காரணம்பற்றி மானிடர்களாகிய நமக்குப் பாபத்தைத் தொலைக்க வேண்டுமானால் இராமேசுவரம் போய் தனுஷ்கோடியில் ஸ்நானம் பண்ணவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இது நிற்க அவ்விடத்திலுள்ள கோயிலின் கட்டடத்தைப் பரிசோதித்தால் திராவிடர்கள் நாகரீகம் உன்னத ஸ்திதியிலிருந்த காலத்தில் அமைக்கப்பட்டதாக காண்கிறது. ஆங்கிலேய பிரபு பெர்க்கூஸன் (Ferguson) என்றவர் இக்கோயிலைப் பரிசோதித்த பிறகு இம்மாதிரிப் பிரமாண்டமான கட்டடம் இப்புவியில் காணப்படவில்லையே யென்று ஆச்சரியப்பட்டுக் கூறியிருக்கின்றார்.



**திருப்புல்லாணி.**—இந்த ஸ்தலம் இராமநாதபுரத்திலிருந்து 7 மயிலுக்கப்பால் சமுத்திரப் பக்கத்திலுளது. இந்த இடத்திற்குத் தர்பசயனம் என்று கூறுவதுமுண்டு. இந்த இடத்தில் தான் இராமர் தர்பப்புல்லில் சயனித்துக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைக்குப் போவதற்கு வருண பகவானைப் பிரார்த்தித்ததாகக் கூறுகிறார்கள். ஸ்தல புராணத்தைப் பார்த்தால் ஏதோ புல்லையென்ற மகாரிஷி இருந்தாரென்றும் அவர் மகாதபஸு செய்தாரென்றும் மகாவிஷ்ணு இவர் தபஸினால் திருப்தி யடைந்து தாமரை புஷ்பத்தின்மேல் ஆதிஜெகந்நாதர் பத்மாஸனியோடு இம்முனீசுவரர்க்குத் தரிசனங் கொடுத்தாரென்றும் கூறுகின்றது. ஆகவே இந்த இடத்திற்குத் திருப்புல்லாணி என்று பெயர் வந்தது. திரு-அழகிய, புல்லை-புல்லை மாமுனி, ஆணிசேது அல்லது வழி.

**திரு உத்தரகோசமங்கை.**—இக்கோயிலில் அநேக சிலாசாஸனங்களுள. இவைகள் ஆதிகாலத்திலேற்பட்டவை என்பதற்கு ஆக்ஷேபனையில்லை. ஸ்தல புராணஞ் சொல்வதாவது: பரமேசுவரன் பார்வதிக்கு ஏதோ ஒருமந்திரம் கற்பித்துபிறகு அவளைக் கேட்டதில் அவள் மறந்த காரணம்பற்றி அவர் அவளை பொகலூர் கிராமத்தில் பிராமண குலத்தில் ஜனிப்பாயென்று சபித்து விட்டார். இவளைக் கலியாணம் புரிந்து அதே மந்திரத்தையுபதேசிப்பதற்காக இவரும் இப்புவியில் பிராமணனாக ஜனித்தார். பிறகு அவளைக்கலியாணஞ் செய்து இந்த இடத்திற்கு வந்து மந்திரத்தை இவளுக்கு உபதேசித்த காரணம்பற்றி திரு உத்தரகோசமங்கை யென்று அழைக்கப்படுகிறது. திரு-அழகிய, உத்தரம்-மறுமொழி, கோச-வேதம் மங்கை-ஸ்திரி.

**திருச்சுளி.**—இதன் சரித்திரம் மிகவும் பழமைப்பட்டது. நமக்கு ஏற்பட்ட நான்கு யுகங்களிலும் இந்தஸ்தலம் பேர்பெற்றது. முதல் யுகமாகிய கிருதாயுக காலத்தில் ஈசுவரன் தமது தேவியுடன் பிரளய ருத்ரர் மாணிக்கமாலையென்ற திருநாமங்களுடன் இவ்விடத்தில் அவதரித்தாரென்றும் காசி பார்க்கவர் ஆகிய இவ்விரண்டு மகாரிஷிகளும் இவ்விடத்தில் தபஸு செய்து வந்தாரென்றும் ஸ்தல புராணங் கூறுகின்றது. இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்தில் இவர்கள் பூமிநாதர் முக்தமாலை யென்ற திருநாமங்களோடு அவதரித்து பாரத்வாஜர் பராசர் ஆகிய மகாரிஷிகளுக்குத் தரிசனங்கொடுத்து முக்தியையுங் கொடுத்தாரென்று கூறுகின்றது. மூன்றாவது யுகமாகிய துவாபர யுகத்தில் இவர்கள் கலியாண சுந்தரர் சுவர்ணமாலை யென்ற திருநாமங்களோடு அவதரித்து கௌசிகர் தேசர் என்ற மகா ரிஷிகளுக்குத் தரிசனங்கொடுத்து முக்தியைத் தந்தாரென்று கூறுகின்றது. தற்காலமாகிய கலியுகத்தில் ஸ்ரீதனநாதர் அல்லது திருமேனி நாதர் ஸகாய திருமேனி அல்லது துணைமாலை யம்மன் என்ற திருநாமங்களுடன் அவதரித்து கௌதமர் நந்திகாசரர் என்ற மகா ரிஷிகளுக்கு அவர்கள் இவ்விடத்தில் தபஸு செய்த காலத்தில் அவர்களுக்குத் தரிசனந் தந்ததாகவும் கூறுகின்றது. துவாபர யுகாந்த காலத்தில் பட்டணம் வெள்ளத்தில் முழுகிவிடுமென்ற பயம் இவ்விடத்து அரசனுக்கு அதிகரிக்க இவர் ஈசுவரனைப் பிரார்த்தித்ததாகக் கூறுகின்றது. உடன் ஈசுவரன் கையில்சூலத்தோடு அவதரித்து பூமியை யடித்ததின் காரணமாகச் சமுத்திரம் விலகிப்போய் பட்டணத்தை யழிக்காத காரணம் பற்றி திருச்சூலம் அல்லது திருச்சுளி என்று கூறப்படுகிறது.

**பலவுநத்தம்.**— ஆதி காலத்தில் சேர சோழ பாண்டிய இந்நாடுகளுக்குள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் இருந்ததாகத் தெரிய வருகிறது. அக்காலத்தில் பாண்டிய ராஜா சிவனைப் பிரார்த்தித்தார். உடன் ஈசுவரன் லிங்கரூபமாக அவதரித்தார். உடன் இராஜன் லிங்கத்திற்குக் கோயிலைக் கட்டி லிங்கத்தின் தலையில் பசுவின் பாலை அபிஷேகஞ் செய்தாரென்று இந்த ஸ்தல புராணம் கூறுகின்றது.

**பெருங்கரணை.**—இக்கிராமத்திலுள்ள செப்புப் பட்டயத்தைப் பரிசோதித்தால் இவ்விடத்திலுள்ள பிராமணர்களுக்குக் கலியுகமாரம்

பிப்பதற்கு முன்பாகவே நிலங்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டது என்று தெரியவருகிறது.

ஆகவே மேற்கூறியவைகளை நன்றாய் கவனிப்போமானால் இவ்விந்தியாவில் மிகவும் புராதனமான நாடு நாகரீகமுள்ள நாடு அல்லது செழித்தநாடு மறவர் நாட்டைத் தவிரவேறில்லையென்று வற்புறுத்திக் கூறலாம். இந்நாட்டிலுள்ள கோவிற் புராணங்களால் முச்சுகுண்ட சக்ரவர்த்தி அயோத்தியை சக்ரவர்த்தி இராமர் ஆகிய இவர்கள் காலத்தில் ஏற்பட்ட கோயில்களாகப் புலப்படுகிறது. செப்புப்பட்டயங்களால் பிராமணர்களுக்கு அனேக ராஜாக்களால் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்படுகிறது. திருச்சுளிப் புராணத்தில் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்த காலத்தில் இந்த இடத்திற்கு வந்து ஈசுவரனைத் தரிசனம் பண்ணினதாகத் தெரிய வருகிறது. ஆகவே இவ்விந்தியாவிற்குப் பரதகண்டமென்ற பெயருண்டானது முதல் இராமனாதபுர நாடும் இருந்ததாகக் காண்கலாம். இனி இதன் சரித்திரத்தைப் பற்றி வரையப் புகுவோம்.

ஆதியில் இராமனாதபுரம் பாண்டிய அரசர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தது என்று தெரிய வருகிறது. ஏனெனில் பாண்டிய அரசர்களில் கீர்த்தி பெற்றவராகிய வரகுணபாண்டியர் இராஜசிங்காமங்களம் என்ற ஊரிலுள்ள கோயிலைக் கட்டி முடித்ததாகச் சிலாசாஸனம் கூறுகின்றது. ஆகவே இந்தநாடுகொஞ்ச காலம் சுதந்தர நாடாகியும் சிலகாலம் பாண்டிய அரசர்களுக்குக் கீழ்ப்பட்டதாகவும் உணரவேண்டும். ஆனால்நம் தேசத்திலுள்ள பெருங்குறைவுகளிலொன்றாகிய தேச சரித்திரமில்லாமை இம்மாதிரி ஆராய்ந்து இத்தகைய நாடுகளின் பூர்வ சரித்திரத்தைக் கண்டுபிடித்து படிப்பதற்கு ஓர் இடையூறாயிருக்கின்றது. இக்குறைவைநீக்கும்பொருட்டுத்தான்மாட்சிமை பொருந்திய நம் துரைத்தனத்தார் ஆர்கியாலஜி என்ற டிபார்ட்டுமென்டை ஏற்படுத்தி அனேகவித்வான்களைநியமித்து நம்தேசபூர்வசரித்திரம் நன்றாய் இந்தியர்களுக்குப் புலப்படுமாறு வேண்டிய உதவிபுரிந்து வருவதற்கு நம்மவர்கள் என்றும் விசுவாஸமாயிருக்கக் கடமைப்பட்டவராகின்றார்கள். இத்தகைய உபகாரங்களில் சிலவற்றைவைத்துக்கொண்டுஇம்மறவர் நாட்டுச்சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்போம். இச்சரித்திரத்திற்கு ஆதாரமாயுள்ளவைகளில் சிலவற்றை இங்குஎடுத்துக் கூறுவாம். நெல்ஸன் என்ற மகாப்பிரபு எழுதியிருக்கும் மதுரைஜில்லா மானியூல், வில்ஸன் என்ற மகான் வரைந்துள்ள பாண்டிய மண்டலம். இராஜாக்கள் சூவல்(Sewell) என்ற பிரபு எழுதியுள்ள தென்னிந்தியா இராஜ வம்சங்கள்கனம்பொருந்திய பொன்னுசாமித் தேவர்நெல்ஸன் பிரபுவுக்குத் தயார்பண்ணிக்கொடுத்த மெமராண்டமும் இன்னும் வேறு சில ஸ்தல புராணங்களும் ஆகிய இவைகளே. இப்படியிருக்க இந்நாடு உண்டானது முதல் சரித்திர முண்டோவென்று ஆராய்ந்தால் 1607-ம் வருஷத்திற்கு முன்பு தொடர்ச்சியாக இந்நாட்டு சரித்திரம் காணப்படவில்லை. ஆனால் இந்த தேதிக்குப் பிறகு ஒழுங்காக சரித்திரமிருக்கிறது.

இந்நாட்டுக்கு அதிபதி எப்பொழுதும் சேதுபதி என்று அழைக்கப்படுகிறார். இதற்குக் காரணம் இராமர் லங்கைக்குத் தாண்டிப்போன வழியை இவர்பாதுகாப்பதால் சேதுபதியென்று ஏற்பட்டது போலும். இராமருக்கு இவர்கள் உபகாரம் பண்ணினதால் இவர்களுக்கு மறவர் என்றும் அவர்கள் அதிபதிக்கு சமுத்திரத்தைக் கார்க்குந் தொழிலைக் கொடுத்ததற்காகச் சேதுபதியென்றும் ஸ்ரீராமசந்திரர் ஏற்படுத்திய மாதிரி புலப்படுகிறது.இந்த விஷயத்தைச் சரித்திர வழியில் பரீக்ஷித்தால் வடஇந்தியாவிலுள்ள ஆரியர்கள் தக்ஷிண இந்தியாவிற்கு வந்து திராவிடர்கள் ஸகாயத்தால் இலங்கை தீவை ஜயித்து இம்மறவர் ராஜ்யத்தையும் நிலைநிறுத்தின மாதிரிக் காண்கிறது.எக்கால முதல் இந்த நாடு ஏற்பட்டு வருகிறது என்பது யாருக்குந் தெரிந்ததாகக் காணவில்லை.ஆனால் இது எல்லாருக்குந் தெரிந்த விஷயம்.அதாவது இராமர் மதுரை மாநகருக்கு வந்து சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைக்குச் சென்றதுமுதல் இந்நாடு உண்டாயிருக்கக்கூடும் என்று சொல்லலாம்.மதுரைஸ்தல புராணத்தைப் பார்த்தால் கிறிஸ்து பிறப்பதற்குமுன் ஐந்தாவது நூற்றாண்டில் இராமர் மதுரை ஆலாஸ்ய க்ஷேத்திரத்திற்குவந்திருந்துபிறகு லங்கைக்குப் போனதாகப் பார்க்கிறோம்.எப்படிப்பார்த்தபோதிலும் இந்நாடு கிறிஸ்து பிறப்பதற்கு முன் இருந்தது என்பதற்கு ஆக்ஷேபனை யில்லை. மேலும் இவர்கள் பிரபலமாயிருந்தார்கள் என்றும் அறியலாம். நம் சென்னை துரைத்தனத்தார் 1871 ஷு ஜூன்மீ 17உயில் எழுதிய நிரூபமே சாட்சியமாயிருக்கிறது. "தென் இந்தியாவில் பூர்வீகத்தில் கீர்த்தி பெற்ற ஜாதியார் மறவர். இம்மறவர்களுக்கு அதிபதியாயுள்ளவர் இராமனாதபுரம் ஜமீந்தாராகிய சேதுபதி ராஜா. பாண்டிய அரசர்களுக்குக் கப்பம் கட்டிவந்தவர். பிறகு பாண்டிய ராஜ்யம் நிலைகுலைந்த பிறகு சேதுபதியார் உன்னத ஸ்திதிக்கு வந்தார்கள்.தென் இந்தியாவிலுள்ள நாடுகளை யெல்லாம் தங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்கள். அதன் பிறகு லங்கையையும் ஜெயித்தார்கள்.காலஞ்சென்ற மகாப்பிரபுவாகிய உரோமஷ் சந்த்ரதத்தர் தான்வரைந்துள்ள அனேக புத்தகங்களிலொன்றாகிய பூர்வ இந்தியா என்னும் புத்தகத்தில் சுமார் கிறிஸ்துவுக்குமுன் 88-வது ஆண்டில் திராவிடர்கள் இலங்கையை ஜயித்ததாகச் சொல்லியிருக்கிறார். இத்திராவிடர்கள் இந்த மறவர்களாய்த்தான் ஊகிக்கவேண்டும். ஆனால் இவர்களை பாண்டி நாட்டுஜனங்களாயுமிருக்கலாம் என்றும்சொல்லலாம். ஆனால்லங்கையைக் கவர்ந்த திராவிடர்கள் தற்காலம் திருநெல்வேலி ஜில்லா அம்பா சமுத்திர தாலூகாவிலுள்ள மறவர் நிறைந்த கிராமமாகிய வீரவநல்லூராகிய நல்லூரில் இராஜ்யபரிபாலனம் பண்ணி வந்ததாகக் கூறுகிறது. இந்த சேதுபதி இராஜாக்கள் நல்லூரில் இருந்ததாகப் புலப்படுகிறது. ஆகவே தென் இந்தியாவில் பிரபலமாயிருந்தவர்களும் லங்கைத்தீவை கைக்கொண்டவர்களும் இந்த சேதுபதி மறவர்கள் தவிர வேறில்லை. அத்தகைய கீர்த்திபெற்ற சேதுபதியார் மதுரை ராஜ்யம் நாயக் வம்சத்தில் போனபிறகு க்ஷீண ஸ்திதியடைந்து இருந்த இடம் தெரியாமல் கொஞ்சகாலத்திற்கு மறைந்து விட்டார்கள். பிறகு 1607ம் ஷு முதல் இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் பூர்வீக ஸ்திதிக்கு வராவிட்டாலும் கொஞ்சம் பிரபலமானார்கள். இனி நம்மாலியன்றமட்டும் இந்தசேதுபதி இராஜாக்களை யெடுத்துக் கொண்டுஒவ்வொருவர் செய்தவிஷயத்தைப்பற்றி கவனிப்போம். இவர்கள் வம்சாவளி மிகவும் உபயோகமானது. முதல் முதலாய் ஏற்பட்டவர் ரகுநாதசேதுபதி. இவரைப்பற்றி வரைவோம்.

(இன்னும் வரும்.)

வி. ஜி. சுப்பய்யாஅய்யர், பி ஏ., எல். டி.

---



# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### काकाक्षि गोलकन्यायः

### కాకాక్షిగోళకన్యాయః

### காகாக்ஷி கோளகந்யாயம்.

காகத்திற்குக் கண்கள் இரண்டிருந்த போதிலும், இரண்டிலும் ஆடும் கருவிழி ஒன்றே என்பது புராணங்கள் துணிபு. இதனால்தான் காகம் ஒருவஸ்துவைப் பார்க்கும்பொழுது ஒருபுறம் சாய்ந்தே நோக்கும். கைக்களவன் பாவை ஒருபுற மிருந்து மறு புறமும், மறித்து எதிராகவும் ஓடுவதுபோல ஒரே கருமணிதான் காக்கைக் கண்கள் இரண்டிற்கும் ஓடுவது. ராமாயணம் ஸுந்தரகாண்டத்தில் காகாஸுர விருத்தாந்தத்தில் 'ஜயந்தன் என்ற காக்கையின் ஒரு கருவிழியை அது செய்த அபராதத்திற்காகத் தமது ப்ரஹ்மாஸ்திரத்திற்கு ராமர் இரையாக்கி விட்டார்: அதுமுதல் காகங்களுக்கு ஒருகருவிழி இல்லாமல் போய்விட்டது' என்று கூறப்பட்டிருக்கிறது. பல விஷயத்தில் ஒன்றே உபயோகப் படுமிடங்களில் இந்யாயம் உபயோகப்படும். வேதாந்த சாஸ்திரத்தில் விவர்த்த வாதம் என்று ஒன்று உண்டு. கயிறு பாம்பாக மாறி காணப்படுவதே அதற்குத் திருஷ்டாந்தம். இங்கு கயிறு பாம்பாக ஆகிவிடவில்லை. ஆயினும் பாம்புத் தோற்றம் உண்டாகிறது. இதுபோல உண்மையில் ப்ரஹ்மம் ஒன்றே ஆயினும் அதில் கயிற்றரவுபோல மருளால் ப்ரபஞ்ச வைசித்ரியத் தோற்றம் உண்டாகிறது. உண்மையில் இல்லாது உள்ளது போலத் தோற்றுவதற்கு மாயை என்றுபெயர்.இந்த மாயாவாதம் காகாக்ஷிகோளக ந்யாயம்போலப் பரம்பொருள் மாறுதிருப்பதற்கும் விசித்திரமாகத்தோற்றங்கள் உண்டாவதற்கும் தகுந்த முகாந்திரம் கற்பிக்கிறது. இதுபோலவே நீராவி, மின்சார சக்தி முதலியவைகள் பல வேலைகளுக்குக் காரணமாகவும் ஸஹாயமாகவுமிருந்து இந்யாயத்திற்கு உதாரணமாகின்றது.

### कारणगुण प्रक्रमन्यायः

### కారణగుణప్రక్రమన్యాయః

### காரணகுண ப்ரக்ரம ந்யாயம்.

சில சில காரியங்களில் காரணத்தின் குண வேறுபாடுகள் நன்றாகக் காணப்படும். சக்தி தத்வ

மாறுபாட்டால் ஏற்படும் மாறுதல்கள் விஷயத்தில்இந்யாயம் பெரும்பாலும் உதாஹரித்துக் காணப்படும். வஸ்து தத்வ மாறுபாடுகளில் சிலவற்றிலும் இந்த ஸம்பந்தம் காணப்படும். தண்ணீரில் கரைக்கப்படும் வஸ்துக்களுக்குத் தகுந்த குணம் தண்ணீரில் காணப்படும். உப்பிட்டால் தண்ணீர் கரிக்கும், சர்க்கரையிட்டால் தித்திக்கும். இம்மாதிரியே வஸ்துக்கள் வர்ணங்களும் காணப்படும். 'அவரைபோட்டால் துவரை முளைக்குமா?' என்ற பழமொழி இந்யாயத்தின் கருத்தை அடக்கியுள்ளது. பசுமாடு அதன் பாலில் தின்னும் ஆகாரத்தின் குணங்கள் காணப்படும்.அமேத்தியம் தின்னும் பசுவின்பால்நாறும். சிசுவை உடையதாய் அபத்தியமாக விருந்தால் பாலின் வழியாகச் சிசுவுக்குக் கெடுதிகள் வருவதுண்டு.தாய் தகப்பனுடைய நற்குண தீக்குணங்கள் சிற்சில ஸமயங்களில் குழந்தைகளிடம் காணப்படும். சில கர்ம வியாதிகளும்,அகார்யத்தினால் உண்டாகும் வியாதிகளும், தாய் தகப்பனார்களிடமிருந்து குழந்தைகளுக்கு வந்து அவர்களை வருத்தும். இது பற்றியே மஹா ரோகமுடையோர் விவாஹ யோக்கியர்கள் அல்லர் என்று சாஸ்திரங்கள் கூறும். இவைகள் எல்லாம் இந்யாயத்திற்குத் தகுந்த உதாரணங்கள். விவர்த்தவாத விஷயம் மாத்திரம் இதற்கு விரோதம். இதில் காரண ஞானமே விளங்காது காரிய ஞான மாத்திரமாகவே இருக்கும். இது ப்ராந்திரூபமாதலால் காரியத்தால் காரணம் முற்றிலும் மறைக்கப்படுகிறது.

## कारयितृकर्तृत्वन्यायः

కారయితృకర్తృత్వన్యాయః

## காரயிது கர்த்ருத்வ ந்யாயம்

ஸாதாரணமாக இலக்கணத்தில் இரண்டுவித கர்த்தாக்கள் அல்லது வினை முதல்கள் உண்டு என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு முறையே இயற்றும்கர்த்தா,ஏவும் கர்த்தா என்றுபெயர். தச்சன் கோயிலைக் கட்டினான் என்னும் வாக்கியத்தில் தச்சன்கர்த்தா: இது இயற்றுதற் கர்த்தா தச்சனே நேராக வேலை செய்து கோயிலைக் கட்டுகிறான் என்பதால் விளங்கும். ஆனால் அரசன் கோயிலைக்கட்டினான் என்னுமிடத்து அரசன் கோயிலைக் கட்டாது தச்சன் முதலியோரை ஏவி கோயிலைக் கட்டுவிப்பான். ஆதலால் இங்கு இலக்கணப்படி அரசன் என்றபெயர். கட்டினான் என்று வினைக்குக் கர்த்தாவாயினும், கட்டும் தொழிலை செய்பவன் அரசன் அன்று கட்டும் தொழிலுக்கு ஏவல் மாத்திரத்தில் அரசன் கர்த்தா ஆதலால் அரசன் ஏவுதல் கர்த்தா. இம்மாதிரி ஏவுதற்கர்த்தா விஷயமாக உள்ளது இந்த ந்யாயம். ஒரு தொழிலுக்கு ஒருவன் நேரிடக் கர்த்தாவாகாவிடினும் அவன் ஏவுதலாம் நடக்கும் தொழில் அவன் மேலேற்றிக் கூறப்படும் விஷயத்தை குறிப்பது இந்யாயம். இம்மாதிரியே இக்காலத்திய ஸமூகக் காரியங்கள் மேல் பார்வை விஷயங்கள் இவைகளில் எல்லாம் உத்தரவளிப்பவன் ஒருவன் தொழிலைச்செய்யும் வேலையாள் வேறொருவன் முடிவில் வரும் கீர்த்தி அபகீர்த்தி ஏவும் கர்த்தாவினுடையது. ஆகவே இக்காலத்திய ஸமூகத்தொழில்கள்,மேல்பார்வை விஷயங்கள், ஸமூக ராஜாங்க முறைமைகள் எல்லாவற்றிலும் ஏவுதற் கர்த்தாவே முக்கியம் அவன் தவறில் எல்லாம் தவறும். அவன் ஒழுங்காக விருப்பின் எல்லாம் ஸரியாகவே இருக்கும். இது போலவே தான் சண்டை விஷயத்தில் ஸேனாதிபதியும், கப்பலில் கப்பல் தலைவனும். கர்மானுஸாரம் 'ஒவ்வொருவனையும் ஒருவாறு தூண்டி ப்ராரப்தபலனை அநுபவிக்கச்செய்யும் ஈசனும். நேரிட கர்த்தாவாக வில்லாது ஏவுதல் அல்லது ஸந்நிதான மாத்திரத்தில் தொழிற்படக் காரணமாக விருக்கும் வஸ்துக்கள் விஷயங்களில் எல்லாம் இந்யாயம் உபயோகப்படும்.

## कार्यकारणसंप्रत्ययन्यायः

కార్యకారణసంప్రత్యయన్యాయః

## கார்யேகாரண ஸம்ப்ரத்யந்யாயம்.

காரியத்தைக்கண்டு காரணம் வெளிப்படையாக வில்லாத விடங்களில் காரணத்தைப்பற்றி ஊஹிக்க முடியும். இந்த ஸம்மந்தப்பட்டது இந்யாயம். காற்று என்ற வஸ்துவை நேரிடக் காணாவிடினும், மரக்கிளைகளை அசைப்பது மரங்களை முறிப்பது ஆகிய இவ்விஷயங்களிலிருந்து அதன் இருப்பு ஸ்வரூபம் முதலியவைகளை உணருகிறோம். இம்மாதிரியே ஒரு நிர்மானுஷ்யமான தீவில் ஒரு பெரிய மாளிகை தென்பட்டால் அதைகட்டியிருப்பவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்று ஊஹித்து அவன் புத்தி சாதுர்யங்களைக் கட்டிட வேலைப்பாட்டிலிருந்து



அளவிடுகிறோம். இதுபோல ஸகல விசித்திரங்களோடு பகவான் 'என் லீலாவிபூதிக்கு முடிவேயில்லை' என்று கூறியபடி பரந்து பலவகைப் பட்டிருக்கும் ப்ரபஞ்சம் நமக்குத் தெரிகிறது. இதனால் இதைப் படைத்தவன் பெருமை, அவன் அனந்த கல்யாண குணங்கள் (ஸர்வ வ்யாப்தம், சக்தி, ஸர்வக்ஞத்வம் முதலியன) இவைகளை ஒருவாறு மனம் எட்டும் வரையில் உணர்ந்து ஆச்சார்ய பரவசராகிறோம். இதனால் ஈச்வரன் ஒருவன் உண்டு அவன் சிறப்பு எண்ணுதற்கரிது என்ற நம்பிக்கை உண்டாகிறது இது தான் இந்யாயத்தின் மதவிஷயப் பொருள். இக்காலத்திலுள்ள ப்ரகிருதி சாஸ்திரங்கள் எல்லாம் இந்யாய உண்மையைக் கடைப்பிடித்துத்தான் விருத்தி யடைந்திருக்கின்றன. ஸர்வாகர்ஷணசக்தி, ஒளியின் ஸ்வரூபம், வஸ்து தத்வ ரஹஸ்யம், மின்சார சக்திதத்வம், முதலிய அரிய ப்ரகிருதி தத்வ உண்மைகள் எல்லாம் காரியத்திலிருந்து காரணத்தின் ஸ்வரூபநிர்ணய ந்யாயப்படித்தான் ஊஹிக்கப்பட்டன. வைத்தியன் வியாதி உணருவது வைத்திய சாஸ்திரரஹஸ்யங்கள் எல்லாம் இந்யாயத்தையே ஆதாரமாக உடையது. ஆகவே சிற்றறிவைஉடைய நாம் எந்த விஷயத்தின் ரஹஸ்யத்தை உணர வேண்டுமாயினும் நேரிட உணரமுடியாது. ஒரு காரியத்திற்குத் தகுந்த காரணமிருத்தல் வேண்டும் என்ற இந்யாய மூலமாகத்தான் உணர வேண்டும். இது புத்திக்கு இருக்கும் உபாதி, கட்டு அதாவது பந்தம். புத்தி மூலமாக விசாரித்து நிர்ணயம் செய்யும் விஷயங்கள் எல்லாம் இந்த ந்யாயத்தால் கட்டுப்பட்டே இருக்கும். புத்தியுள்ளவன் எவனும் இதை ஸந்தேஹிக்க முடியாது.

## कुशकाशावलंबनन्यायः

కుశకాశావలంబనన్యాయః

## குசகாசாவலம்பன ந்யாயம்

ஆற்று வெள்ளத்தில் இசைவு கேடாய் அகப்பட்டு ஆற்றோடு போகும் ஒருவன் கரையிலுள்ள ஆணிவேர் பெருஞ்செடிகள் முதலியவைகளைப் பிடிக்காது ஒரு சிறு நாணலைக்கூட வெகு பலமாகப் பிடிப்பான். அதனால் அவனுக்கு ஒருவித பிரயோசனம் ஒன்றுமில்லாது நாணலும் அவனோடு வந்துவிடும். ஆயினும் ஒன்றும் அகப்படாததால் குழப்பத்திற்காளாகித் தத்தளித்து விவேகமின்றி பயனற்றதைப் பெரிதாக எண்ணிப்பிடிப்பான்.ஆகவேகுழப்பத்தால் புத்தி மயங்கி பயனற்றதைக் கைக்கொள்ளுங்கால் இந்யாயம் உபயோகப்படும். ஒருவன் வாதம்செய்து கொண்டு வரும்பொழுது பிரபல யுக்திகளைவிட்டு தோல்வி வரும் என்று பயந்து துர்பல யுக்திகளை எடுத்து பேசுவது இதற்கு உதாரணம். வாதத்தில் ஒருவழியும் இல்லாவிடில் கோபிப்பது இதற்கு உதாரணம். ஒருவன் கோபத்தைக்கைக்கொண்டுவிட்டால் அவன் தண்ணீரில் முழுகுபவன் புல்லைப் பிடிப்பதுபோன்ற கதிக்கு வந்துவிட்டான் என்பதாம். வீம்பான பந்தயங்களும் ஆவேசச் செயல்களும் ஒருவாதத்தில் ஸம்பந்தப்பட்டவைகள் நம்பிக்கை உறுதியைக் காட்டுமே ஒழிய தகுந்த முகாந்திரங்களாகா இவைகள் எல்லாம் வாதவிஷயத்தில் துர்பல விஷயங்களே. இவைகளை எல்லாம் கடைப்பிடிக்கும் வாதிகள் இந்யாயத்திற்கு உதாரணங்களாவர்.

## कूपखानकन्यायः

కూపఖానకన్యాయః

## கூபகானக ந்யாயம்

ஒருவன் கிணறு வெட்டும்பொழுது தேஹத்தில் அதிலுள்ள சேறு முதலியன பட்டு அசுத்தம் உண்டாகும், ஆயினும் கிணறு வெட்டி முடிந்ததும் அதிலுள்ள நீரே இந்த சேறு முதலியவைகளைக் கழுவ உபயோகப்பட்டு அவனைப் பரிசுத்தப்படுத்தும். எந்த விஷயம் தொடக்கத்தில் கஷ்டம் முதலியவைகளைக் கொடுத்து முடிவில் அக்கஷ்டங்களை முற்றிலும் நீக்கி ஸுகம் கொடுக்கும் தன்மை உடையதோ அது வெல்லாம் இந்யாயத்திற்குத் தகுந்த உதாரணங்கள்

ஆதலால் கல்வி தர்மமார்க்க விஷயங்கள் எல்லாம் தொடங்குங்கால் துன்பமாய் பின்னர் அதை நீக்கும் இன்பமாகப்பரிணமிப்பதால் இங்கு உதாரணங்களாகும். வேதாந்த விஷயத்தில் இந்யாயத்திற்குச் சிறந்த பொருத்தம் உண்டு. விக்ரஹாராதனம் ஸாதாரண ஜனங்களுக்கே என்று வாசாஞானி மதிக்கினும், அது வேதாந்தப் பழக்கத்திற்கு அதிக அவசியம். அகண்ட ப்ரஹ்மத்திற்கு ஒருவித வரையறைவு இந்த ஆராதனம் ஏற்படுத்தியபோதிலும், இதிலிருந்து ஏற்படும் ஏகாக்ரம், ஸகுணம் விண்டு நிர்குணமாதல் என்னும் நிலைகள் வஸ்துதந்திரமாக நமதுமுயற்சியில்லாமலே இந்தக் குறைவைமுடிவில்தீர்த்துவிடும். இதுபோலவே அகண்ட காஸானுபவமாகியத் வேதாந்த பரமநிலை ஸித்திக்கும்வரையில் ...தற்காகப் பாடுபடும் வைதீக மார்க்கங்கள் எல்லாம், இந்யாயத்திற்கு உதாரணம். தோன்றும் விஷய விசித்திரங்கள் விடுபடச்செய்யும்முயற்சிகள் எல்லாம் மாயைமித்தையாயினும் அவைகளில் வைதிக தர்மமார்க்கங்கள் முதலில்,மனச் சஞ்சலத்தை அதிகப்படுத்தும், அதர்ம மார்க்கத்தை முன்பு கெடுத்தும் பின்னர் ஏற்படும் அகண்ட அனுபவத்தில் தாமே 'சவம் சுடும் தடிபோல்' போகும். ஆதலால் இந்தவிஷயம் இந்யாய ரஹஸ்யத்தை நன்கு விளக்கும்.

## நமது சந்தா நேயர்களுக்கு

*சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத் தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக்கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.*

மானேஜர்

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 25. ராமரஹஸ்யோபநிஷத் (54)

கைவல்யஸ்ரீ ஸ்வரூபமாய் பிரகாசிப்பதாயும், அழிவற்ற தேஜோரூபமாயும் ஸமானமற்றதாயும் இருக்கிற ஸ்ரீராமபதத்தை ஆச்சயிக்கிறேன்.

ஸநகாதி யோகிகள், மஹரிஷிகள், ப்ரஹ்லாதாதி விஷ்ணுபக்தர்கள், எல்லோரும் ஹனுமாரை அடுத்து, "ஹேவாயுபுத்ரா! 18 புராணங்களிலும் ஸ்மிருதிகளிலும், வேதங்களிலும், சாஸ்திரங்களிலும், அத்யாத்ம வித்தைகளிலும், எல்லா வித்யா தானங்களிலும், எல்லா தேவதைகளிலும், பரவியுள்ள தத்வம் எது?' என்று கேட்டார்கள். அதற்கு ஹனுமார், 'பெரியோர்களே! ஸம்ஸார பந்தத்தை நீக்கும்படியான என் சொல்லைக் கேளுங்கள். இவைகள் எல்லாவற்றுள்ளும் இருப்பது ராமன் என்ற சிறந்த தத்வமே. அவரே தாரகப்ரஹ்மம், பரப்ரஹ்மம், மேலான தபஸ்,' என்று மறுமொழி கூறினார். அப்பொழுது அவர்கள், 'ராமன் அங்கங்களை எங்களுக்கு எடுத்து விளக்கவேண்டும்' என்றனர். 'தேவதா ஸம்பந்தமுள்ள ஸீதாலக்ஷ்மண பரதசத்ருக்ன, விபீஷண, ஸுக்ரீவ, அங்கத, ஜாம்பவந்த, பிரணவம் ஆகிய இவையெல்லாம்ராமன் அங்கங்கள். இவைகளுடன் ஸம்பந்தப்படாவிடில்ராமன் விக்னகாரணமாவார்' என்று ஹனுமார் கூற; ஸநகாதிகள், 'க்ருஹஸ்தனுக்கு எவ்வாறு ப்ரணவத்தில் அதிகாரம் ஏற்படும்? என்று கேட்டனர். அதற்கு ஹனுமார், சொல்லுகிறார்: எனக்குப் பின்வருமாறு ஸ்ரீராமரே உபதேசம் செய்திருக்கிறார். 'ஷடாக்ஷரத்தில் அதிகாரமுள்ளவர்களுக்கு ப்ரணவாதிகாரமும் உண்டு. மற்றவர்களுக்கில்லை. கேவலம் அ, உ, ம் அர்த்த மாத்ரைகளுடன் உள்ளப்ரணவத்தை ஊஹித்து ராம மந்திரத்தை ஜபிப்பவனுக்கு நான் சுபகாரனாகிறேன். ப்ரணவத்தின் ரிஷி சந்தஸ் தேவதை, வர்ணஸ்தானம்,



ஸ்வரவேதாக்னி குணம், இவைகளை நாடோறும் உச்சரித்து, ப்ரணவ மந்திரத்தைக் காட்டிலும் ராமமந்திரத்தை இருமடங்கு ஜபம் செய்பவன் ராமனேயாவான். இதனால்தான் ப்ரணவம் ராம மந்திரத்திற்கு அங்கமாகக் கூறப்பட்டது மேலும் விபீஷணருக்கும் ஸ்ரீராமருக்கும் இவ் விஷயத்தில் ஒரு சம்பாஷணை நடந்திருக்கிறது. ராவண ஸம்ஹாரமான பின்பு ஸ்ரீராமன் ஸுகமாக ஸிம்மாஸனத்திலிருக்கும்பொழுது விபீஷணர் அவரை நோக்கி 'ஹே ராம ப்ரபோ! உமது அங்கங்களெல்லாம் ஸ்வல்பம் என்றீரே, அது எப்படி?' என, ஸ்ரீராமர் 'எந்தக் கொடிய பாபம் செய்தவனாயினும்,என்நாமங்களை 96 கோடி தரம் ஜபித்து விட்டானேயானல் அவைகள் எல்லாம் பறந்தோடிப்போக அவன் புனிதனாவான். அவன் ஸச்சிதானந்தமாகி விடுவன் என்று மறுமொழி சொன்னார். 'இவ்வாறு செய்ய திறனற்றவன் என்ன செய்யவேண்டும்?' என்று மேலும் கேட்ட விபீஷணனை நோக்கி, 'இவ்வாறு செய்ய சக்தியற்றவன், எனது உபநிஷத்,கீதை, ஸஹஸ்ர நாமம், விச்வரூபம்,அஷ்டோத்தரசதம், ராமசதம், நாரதஸ்தவ ராஜம், ஹனுமார் செய்த மந்திர ராஜம், ஸீதா ஸ்தவம், ராமாஷ்டாக்ஷரீ முதலியவைகளால் என்னை நித்யம் வழிபடவேண்டும். இதனால் முற்கூறியவன் கதியே இவனுக்கும் வரும், என்று பதில் உரைத்தார்," என்று இவ்வாறு ஹனுமார் ஸனகாதிகளுக்குச் சொல்லி முடித்தார்.

இதற்குமேல் ஸநகாதிகள் தாரகப்ரஹ்மமான ராமசந்திரரது மந்திர கிரமத்தைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள். உடனே ராமமந்திர பேதங்கள்,ரிஷிகள், சந்தஸ் தேவதை, தியானச்லோகம், ஸாதகன் நியமங்கள், ஜபங்கள், ஹோம, தர்ப்பண, ப்ராஹ்மண போஜன, ஆராதனாதிகள், இம்மந்திர பூஜாபீடமாகிய யந்த்ர பேதங்கள், இவைகளை ஆராதிக்கும் விதிகள், முதலியவைகளை இரண்டு, மூன்று, நான்கு அத்யாயங்கள் ரூபமாக ஹனுமார் உபதேசிக்கிறார்.

இதன் பின்னர் ராமமந்திரார்த்தம் கூறப்படுகிறது. 'எல்லா மந்திரங்களிலும் ஷடாக்ஷர மந்திரமே மந்திரராஜன் எனப்படும். இது அநேக பேதமுள்ளது. இதன் மஹிமையை சிவனே ...ரிவார் நாராயண அஷ்டாக்ஷரத்திலும், சிவ ...ந்சாக்ஷரத்திலும், அர்த்த நிலையான இரண்டு ஜீ

எழுத்துகள் சேர்ந்து ராம என்றாகிறது. இதற்கு ரமிக்குமிடம் என்று பொருள் கூறுவர் யோகிகள். ர என்பதற்கு அக்னி என்ற பொருளாதலால், பிரகாசம் என்று பொருள் தந்து ஸச்சிதானந்தமாகிய பரமாத்மாஎன்ற பொருளைக் கொடுக்கும். உயிர் எழுத்து பிராணனையும், மாயையையும், மெய் எழுத்து நிஷ்கள ப்ரஹ்மத்தையும் குறிக்க, உயிரும் மெய்யும் சேருவது தேகத்தோடுப்ராணன் சேருவதாகும். ஆகாசம் என்றர்த்தமுள்ளர் ஓடு ர் ஆ சேர்ந்து ரா என்றுவதன் குறிப்பும் இதுவே. ம என்பதற்கு மங்களம் என்று பொருள் அதாவது மாயையாகும். ம என்பது ஆத்மபீஜமாதலால் மாயாஸஹிதமான ப்ரஹ்மம் என்பதாகும். ரா என்ற பிந்து சிவன் ஸூர்யன் சந்திரன் ஆகிய இவர் ரூபமான புருஷனைக் குறிக்கும். இதில் ஜ்யோதிசிகை ரூபமான ம என்ற நாதம் ப்ருகிருதி. இவ்விரண்டும ப்ரஹ்மத்தையும் மாயையையும் உணர்த்தும். ஸூர்ய சந்த்ர ரூபமான பிந்து நாதமாகி ரா ம என்பவைகள் சேர்ந்து ராமபீஜ மந்திரமாகும். இதன் ஸ்வரூபம் அக்னி, ஸோமரூபம்: சிறிய ஆலம் விதையுள் பெரிய ஆலமரம் அடங்கிக் கிடப்பது போல, ராமபீஜத்துள் ஸ்தாவர ஜங்கம ரூபமான இந்த ஜகத் அடக்கம். ராமபீஜத்தில் இரண்டுவித அர்த்தமும் அடங்கியிருக்கிறது. மாயையிலிருந்து விடுபட்ட பீஜம் பரப்ரஹ்மம். மகாரம் முக்தியைக் கொடுக்கக் கூடியது,லக்ஷ்மி ரூபமாக விருப்பதால் ராமன் போகமோக்ஷங்களையும் கொடுப்பர் என்பதாகிறது.

'முதலிலுள்ள ரா என்பது தத் பதத்தின் பொருளுள்ளது. ம என்பது த்வம் பதத்தின் பொருளுள்ளது. இவை இரண்டின் சேர்க்கையே அஸி பதப்பொருளாகும்,' என்று தத்வஞானிகள் மதிக்கின்றனர். மேலும் நம: த்வம்பதம் என்றும், ராம என்பது தத்பதம் என்றும், நான்காம் வேற்றுமையாகிய ய என்பது அஸிபதம் என்றும் மதிக்கப்பட்டு ராமாயநம: என்ற மந்திரம் உண்டாகின்றது. தத்வமஸியாதி வாக்யம் முக்தியைத் தரக்கூடிய தென்றும், இம்மந்திரங்கள் போக மோக்ஷம் இரண்டையும் தரவல்லவைகள் என்றும் இருப்பதால், இவைகள் முன்னதை விட உலகத்தவர்களுக்கு மிக ஸஹாயமானவை. இந்த மந்திரங்களில் எல்லோருக்கும் அதிகாரம் உண்டு. இது ஓங்காரரூபமாயிருப்பதால்

யதிகள் அவசியம் த்யானம் செய்பவேண்டும். இவ்வாறு ராம மந்திரத்தை உணருபவன் ஜீவன் முக்தனுவான், எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டுப் புனிதனுவான். 'ஸதா நான் ராமனே' என்று எவர்கள் உள்ளபடி அனுபவித்து வெளியிடுகிறார்களோ அவர்கள் ஸம்ஸாரபந்தம் நீங்கியவர்களே. அவர்கள் ராயனேயாகிவிடுவர்.

## 26. ராமதாபினி உபநிஷத் (55)

### (1) முன்பாகம்

இவ்வுபநிஷத் அர்த்தமாயும், பக்தர்கள் த்யானம் செய்யத் தகுந்த சரீரமுடையவராயும், விதேஹமுக்திக்கு நிலயமாயும் உள்ள ஸ்ரீராமனே எனக்குக் கதி.

சின்மயமான மஹாவிஷ்ணு தசரதருக்குப் பிள்ளையாகப் பிறந்த உடன் ரகுகுலம் ப்ரகாசமுள்ளதாயிற்று. அவரும் ப்ரகாசித்தார். ஆதலால் அவருக்கு ராமர் என்ற பெயர் வந்தது. ராக்ஷஸர்கள் தமது கர்வத்தால் இவர் மூலமாக இறந்ததாலும், இவர் அழகுள்ளவராதலாலும், ராஹு சந்திரனைப் பிடிப்பதுபோல மனிதரூபமான இவர் ராக்ஷஸர்களை ஒளியிழந்து வருந்தும்படிசெய்ததாலும், அரசர்களுக்குத்தம் நடத்தையால் தர்மமார்க்கத்தையும்,பெயரினால் ஞானமார்கத்தையும் தன் த்யானத்தால் வைராக்யத்தையும்,தன் பூஜையால் ஐச்வர்யத்தையும், கொடுப்பதாலும் இவருக்கு இப்பெயர் வந்தது. இவர் பெயருக்குத் தத்வார்த்தம் ஒன்று உண்டு. நித்யானந்தம், சிதாத்மா, அனந்தம் ஆகிய இந்த ஸ்வரூபமாக விருக்கும் இவரிடத்தில் யோகிகள் ரமிப்பதால் (ஆனந்த பரவசராவதால்) இவருக்கு ராம என்ற பெயர் வந்தது. இவரே பரப்ரஹ்மம் என்று அவர்கள் மதிக்கின்றனர். சின்மயம், அத்வயம், நிஷ்களம், அசரீரி ஆகிய ப்ரஹ்மம், இந்த நிலையிலிருப்பதாயினும், உபாஸிப்பவர்களுக்காக, ரூபம் அடையும். ரூபமுள்ள தேவதைகளுக்கு ஆண் பெண், அங்கங்கள், அஸ்திரங்கள், இவைகளை ஏற்படுத்துவதும், அநேகம் கைகள், அவற்றிற்கு ஏற்ற ஆயுதங்கள், வர்ணம், வாஹனம், சக்தி, ஸேனை, முதலிய அநேக கற்பனைகள் செய்வதும் வழக்கம். இது மந்திர விசேஷங்களே. இவைகளை ஜபிக்க வேண்டும் ; இல்லாவிடில் தேவதாப்ரஸாதம் வருவதில்லை. க்ரியா, கர்ம, இஜ்ய, கர்த்தா இவைகளின் பொருளை மந்திரம், விளக்கும். மனனம் செய்பவனை இவைகள் காப்பதால் இவைகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இதற்கு யந்திரம் ஏற்படுத்துவதே இதற்குச் சரீரம். இது இல்லாமல் பூஜை செய்தால் பலன் வருவதில்லை.

ஸ்வர்க்கலோகம், பூலோகம், ஜ்யோதி ஜீவன் ஆகிய இவைகளாகத் தன் ஆத்மாவே விளங்குகிறது. அது சித் சக்தியோடு கூடி முக்குணங்களைச் சேர்ந்து ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணமாகிறது. ஆலம் விதையில் பெரிய மரம் அடங்கிக் கிடப்பது போல ராம பீஜத்தில் ப்ரபஞ்சம் எல்லாம் அடங்கிக் கிடக்கும்.

(1) ர என்பதிலேயே மும்மூர்த்திகளும் முச்சக்திகளும் அடங்கியுள்ளன.

(2) ஸீதா ராமர்கள் ப்ரஹ்ம மயமாகவே பூஜிக்கத் தகுந்தவர்கள். இவர்களிடமே 14 உலகங்களும் தோன்றி நிலைபெற்று,ஒடுங்குகின்றன. ப்ரஹ்மம் மாயையால் இவ்வாறு ஆயிற்று. எல்லாவற்றிற்கும் ப்ராணன்போன்ற இவர்களுக்கு நமஸ்காரம்.

(3) நமஃ என்பது ஜீவாகாசம், அத்மா ராமன் என்ற பெயரால் குறிக்கப்படும். நான்காம் வேற்றுமை உருபான ய என்பது மாயை. இவை இரண்டின் சேர்க்கைதான் ராமாயநமஃ என்ற மந்திரத்தின் பொருள். இது எல்லோருக்கும் பயன் தருவது. ஒருவன் பெயரைச் சொல்லி அழைக்குங்கால் அவனே எதிர்வந்து நிற்கும்படி அப்பெயர் செய்வதுபோல இப்பீஜயந்திரம் ஸாதுவுக்குப் பலனைக் கொண்டுவந்துவிடும். அனந்த ரூபமான ராமன் தேஜஸில் அக்கினிக்கு ஸமானம். நிலவால் சந்திரன் விளங்குவதுபோல ஸீதையால் விளங்குகிறார். ராமன் ப்ரகிருதியாய், ச்யாமளராய், பீதாம்பரம் ஜடை தரித்தவராய், இருகை குண்டலங்கள், ரத்னமாலை முதலியவைகள் உடையவராய், தீரராய், வில்லணிந்தவராய், பிரஸந்நமுகத்தோடு ஜயசீலராய், அஷ்டலக்ஷ்மியால் விளங்குபவராய், பரமேச்வரியாகிய ஜகத்காரணையான ப்ருகிருதியை மடியில் உடையவராய்,ஸவர்ணம் போன்ற காந்தியுடையவராய், கௌஸல்யா புத்ரராய், லக்ஷ்மணர் முதலிய தம்பிகளோடு ப்ரகாசிக்கிறார். இதுதான் மூன்றும் கோணம்.

ம்,



இவ்விதம் திரிகோண ரூபமந்திரமாகிய பகவானைத் தேவர்கள்தமக்கு ராக்ஷஸர்களால் ஏற்படக்கூடிய இடையூறுகளை நிவர்த்திக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு ஸுகமாக விருந்தனர். இதன் பின்னர் இங்கு ராமாயணக்கதைச் சுருக்கம் காணப்படுகிறது.

ராமாயண கதா நாயகராகிய ஸ்ரீராமன் வலது புஜத்தில் ஞானமுத்திரையையும், இடதுபுறம் தேஜோமயமானமுத்திரையையும் கொண்டு உண்மையை விளக்கும் சின்மயராயும், பரமேச்வரராயும், இருக்கிறார். வலது இடது புறங்களில் பரத சத்ருக்னரும், எதிரில் சிஷ்யரான ஹனுமாரும் ஆகிய திரிகோண மத்தியஸ்தராயுள்ள ராமமண்டலத்தை எழுதி பக்தியுடன் பூஜித்து, தியானம் பண்ணுகிற ஒவ்வொருவனும் எல்லாவற்றையும் பெற்று முடிவில் பரமபதத்தையும் பெறுவன்.

### பின்பாதி

முதலில் ஜாபாலி உபநிஷத்தில் உள்ளது போல அவிமுக்த ஆசிரய விஷயம் இங்கு கூறப்படுகிறது.

பாரத்வாஜர்.—தாரகமென்பது என்ன ? எது தாரணம் பண்ணிவைக்கும்?

யாக்ஞவல்க்யர். ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஸ்ரீராம நாமமே தாரகம். அ முதல் அக்ஷரம், உ இரண்டாவது, ம் மூன்றுவது,அர்த்தமாத்திரை நான்காம் அக்ஷரம், பிந்து, 5-வது, நாதம் ஆறுவது. இதுவே தாரக ப்ரஹ்மம், இதுதான் உபாஸ்யம், இது கர்ப்பம் பிறப்பு, ஜரை, மரணம், ஸம்ஸாரம் ஆகிய மஹா பாதகத்திலிருந்து தாரணம் செய்து வைப்பதால் ஷடாக்ஷர தாரகமென்னப்படும். இதை ஸதா அத்யயனம் செய்பவன் பாபங்கள் நீங்கி, ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான். லக்ஷ்மணர் அகார ஸம்பந்தம் உடையவர் ; விச்வபாவனர் ; சத்ருக்னர் உகார ஸம்பந்தர்,தைஜசர் பரதர், மகார ஸம்பந்தர்., ப்ராக்ஞர் ப்ரஹ்மானந்த ஸ்வரூபரான ராமர் அர்த்தமாத்திராஸ்வரூபர், ஸ்ரீராம ஸாந்நித்யவசத்தால் ஜகத்திற்கு ஆதாரமான எல்லா ஜீவராசிகளது ஸ்ருஷ்டியாதிகளுக்குக் காரணமான மூலப்ரிகிருதியே ஸீதை. எல்லாம் ஓங்காரம்தான். திரிகாலதீதமானது எதுவோ அதெல்லாம் இதுவே, இதுதான் ப்ரஹ்மம்.

இந்த ஆத்மா நான்கு பாதங்களையுடையது (1) ஜாக்ரத்ஸ்தானம், வெளிப்ரக்ஞன், 7 அங்கம் 19 முகங்களை உடைய ஸ்தூலபுக்கான வைச்வானரன். (2) ஸ்வப்ந ஸ்தானம், அந்தஃப்ரக்ஞன், முன்போன்ற பாகங்களுடைய ப்ரவிவிக்த புக்கானதைஜஸன். (3) ஸுஷுப்தி ஸ்தானம் (கனவில்லாத் தூக்கம்) ப்ரஞ்ஞானகனன், ஆனந்தமயன், சேதோமயன் ஆகிய ப்ராஞ்ஞன், (4) இவன் ஸர்வேச்வரன், அந்தர்யாமி, ஸர்வஞ்ஞன், ஆதிகாரணன், ஸ்ருஷ்டியாதி கர்த்தா, உள்வெளி இரண்டு ஆகிய இவ்வித ப்ரக்ஞைகளுக்கு அப்பாற்பட்டவன், அதிர்ச்யன், வியவஹாரமற்றவன், எல்லா விஷயங்களுக்கும் அப்பாற்பட்டவன், ஒன்று என்பதை ஸாரமாக உடையதாயும், சாந்தமாயும், அத்வைத சிவமாயும் உள்ளவன், ஆகிய இந்தப்பதார்த்தமே நான்காம் பாதம்.

இம்மாதிரியான ப்ரஹ்மமே ராமசந்திரன் ; ஏகாக்ரப்படுத்திக்கொண்டு மனதால் ரமிப்பவர்களே முக்தர்களான மஹா யோகிகள். மேல் போகும் விஷயம் ஜாபால உபநிஷத்தில் உள்ள வாராணஸி விஷயம் போலவே இருக்கிறது. இதனால் ராமநாம விசேஷத்தை உணரலாம். காசீ க்ஷேத்ரத்தில் பரமசிவன் ராமமந்திரத்தை ஒழுங்காக உபாஸித்து ப்ரத்யக்ஷமான ராமரிடம் காசியில் மரிப்பவர்கள் முக்தி அடையக் கடவது என்ற வரத்தைப் பெற்றார். மேலும் ராமர் 'அவிமுக்த க்ஷேத்திரத்தில் விக்கிரஹங்கள் எங்கும் நானும் இருந்துகொண்டு எல்லோருக்கும் முக்தி கொடுப்பேன். யாரிடத்திலிருந்தாவது (பிரம்மா சிவன்) என் ஷடாக்ஷரியைப் பெற்று ஜபிப்பவர்களும், இறக்குங்கால் என் மந்திரத்தைக் கேட்பவர்களும் முக்திபெறுவர் என்றார்.

பாரத்வாஜர்.—ராமர் பிரியமடைந்து தமது ஸத்ரூபத்தைக் காட்டும் மந்திரங்கள் எவை ?

யாக்ஞவல்க்யர்:—பிரம்மா ஒருக்கால் ஸ்ரீராமரைத் துதித்தார். ராமர், விச்வரூபர், பூர்ணஞானந்த ஸ்வரூபர், பரப்ரஹ்மம், அத்வைத பரமானந்தர், அகண்டாகார ஆத்மா, ப்ரஹ்மானந்தமான அமிர்தம்,தாரகப்ரஹ்மம், திரிமூர்த்தி ஸ்வரூபர், ஸாங்கவேதங்கள், இதிஹாஸ புராணங்கள், அந்தர் ஆத்மா, தேவாஸுர மனுஷ்யர்கள், தச அவதாரங்கள், எல்லா வஸ்துக்களாயும் இருப்பவர்,ஸர்வதேவாத்மகர்,ஓங்காரம்,பரமபுருஷர், ஆகிய இவ்வாறுயிருப்பவர். இவ்வாறு

ராமனை தியானம் பண்ணினால் ப்ரஹ்மக்ஞானம் பெற்று மோக்ஷமடையலாம்.

**பரத்வாஜர்**.— ராமமந்திர ராஜன் என்பது என்ன ?

**யாக்ஞவல்கயர்**,— **ப்ரணவமே** ராமமந்திரத்தின் ஆதி. இது ஸ்வப்ரகாசம், பரம்ஜ்யோதி, ஸ்வானுபவ ஏகசின்மயம். அடுத்தபாகம் **ராமாய** என்பது.இது அகண்ட ஏகரஸம்,தாரகப்ரஹ்மம், ஸத்யானந்த சிதாத்மகம். பின்னர் **நம:** என்பது வரும். இது பூர்ணானந்தகாமானது. இந்த **ஓம் ராமாயநம:** என்னும் ஷடாக்ஷரத்தை தியானிப்பவர்கள், எல்லாப் பாவங்களிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் விடுபவர். ஸகல காரியங்களும் மோக்ஷங்களும் கைகூடும். இது எல்லாமந்திரத்திலும் சிறந்ததாதலால் இதற்கு மந்திரராஜன் என்று பெயர்.

## 27. மைத்ரேயோபநிஷத் (29)

**ப்ருஹத்ரதன்**.—என்னும் ஒரு அரசன் உலகச்சிறப்புகள் எல்லாம் நிலையற்றவை என்று உணர்ந்து வைராக்கியத்தை உள்ளபடி அடைந்து தனது ராஜ்யத்தை மூத்த பிள்ளையிடம் ஒப்புவித்து வனம் சென்று ஸௌர்யோபாஸனை மூலமாகக் கடும் தவம் செய்து வந்தார். வெகு நாள் கழிந்ததும் **சாக்யாயந்யர்** என்று ப்ரஹவித்து அவரை அணுகி எழுப்பி 'வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்' என்று கூறினார்.'ஸத்தான ப்ரஹ்மத்தைஎனக்குக் கூறும்' என்றான் அரசன். இதைக்கூறுவது அஸாத்யமானது: வேறு எதையாவதுகேள்' என்றார் மஹான். அதற்கு அரசன் 'ப்ரபஞ்சத்தில் ப்ரஹ்மா முதல் சிறு புல் பூண்டு வரையில் எல்லாம் நிலையில்லாமல் ஓயாது மாறிக்கொண்டே இருக்கின்றன. எனக்கு நிலையில்லா வஸ்துவைப்பற்றிய ஞானம் இன்னும் உண்டாகவில்லை.இதைத் தவிர மற்றவைகளை விரும்பினால் இந்த மாறுதல்களுக்கு உட்பட்டு ஓயாது தத்தளிக்கவேண்டியதுதான். எனக்கு நீர்தான் கதி. பெரும் குற்றங்களுடைய இந்தத் தேஹத்தில் எனக்குப் பற்றே இல்லை. ஆதலால் **ஆ**த்மா யார் என்பதைக்கூறவேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

சாக்யாயந்யர் பின்வருமாறு உபதேசித்தார். 'விஷயங்கள் பெருங்கேடு விளைவிக்கும், ஆனால் சிறந்தவைபோலத் தோற்றும். இவைகளில் மூழ்குபவனுக்குப் பரமபத நினைப்பே இராது. தவத்தினால் முறையே ஸத்வகுணம், மனச்சுத்தம், ஆத்ம ஞானம், நிவிருத்தி முதலியவைகள் தாமே உண்டாகும். விறகில்லா நெருப்பு அடங்கிவிடுவதுபோல மனம் அடங்கிவிடும். அடங்கி ஸத்யத்தில் நிலைபெற்ற மனதையும், விஷயஸம்பந்தமில்லா இந்திரியங்களையும் உடையவனுக்கு உண்டாகும் ஸுகதுக்காதிகள் பொய்யே. சஞ்சலசித்தமே ஸம்ஸாரம். அதைச் சுத்தப்படுத்தவேண்டும். மனத்தின் உருவமே மனிதர் உருவமும். சித்தம் தெளிந்தால் துவந்துவங்களிலிருந்து விடுதலை ஏற்படும். தனக்குள்ளேயே நிலைத்துஅழிவற்ற ஸுகம் அநுபவிக்கும்படியாகும். விஷயங்களில் சித்தம் ஊன்றிப் பதிவதுபோல ப்ரஹ்மத்தில் பதிந்துவிட்டால் இந்நிலை கைகூடிவிடும். ஸர்வஸாக்ஷி, அதிப்ரியன்,மனவாக்கெட்டாதவன், ஆதியந்தமற்றவன், ஸத்தாமாத்திர சித்ரூபன், துவந்தவாதீதன், மாறுப்பெருந்தன்மை உடையவன், ஸர்வவியாபி, உபாதியற்றவன்,மோக்ஷஸ்வரூபன், பரமஞானம் ஆகிய இந்த லக்ஷணங்கள் அமைந்த ஹ்ருதய கமலத்தில் தியானம் செய்யவேண்டும்.நித்யசுத்த புத்த முக்தரூபன், ஸத்யன், ஸூக்ஷ்மன், ஆனந்தஸாகரன், ப்ரத்யகாத்மாவைவிட உயர்ந்தவன் ஆகிய லக்ஷணங்களை உடைய இப்பரமாத்மாவே நான்; ஸந்தேகிக்க வேண்டியதில்லை. என் நிஜானந்தத்தைப்பற்றி,ஆசாபிசாசைத்துரத்தி,ஜகத்தை ஜாலமாகப் பார்த்து,ஒருபற்றுமின்றி இருக்கும், எனக்குப்பந்தமேது? இத்தகைய எனக்கு வர்ணாசிரம தர்மம் ஏது ? ஆதலால் ஸர்வஸங்க பரித்யாகம் செய்து பரம ஸுகத்தில் நிலைபெற வேண்டும் என்று சாக்யாயந்யர் கூறிமுடித்தார்.

மைத்ரேயர் கைலாசம்சென்று பகவானை நோக்கி, 'பரமதத்வ ரஹஸ்யம் யாது?' என்று கேட்டார். அதற்கு மஹாதேவர் கூறுகிறார். 'தேகமே தேவாலயம், அதிலிருக்கும் ஜீவனே சிவன்.அக்ஞான நிர்மால்யத்தை நீக்கி, 'அவனே நான்' என்ற பாவனை பூஜையைச் செய்யவெண்டும். அபேதப்பாவனையே ஞானம். ஐம்பொறியடக்கலே சுத்தி. மனம் விஷய ஸம்பந்தம் நீங்கி நிற்பதுதான் தியானம். மனதைச்சுத்தப்படுத்துவதே ஸ்நாநம். பிரஹ்மாமிருதமே பானம். தேகதாரணத்திற்கு பிக்ஷை வாங்கவேண்டும். தனிமையாக அபேதமுயற்சியில் நிலைக்க வேண்டும். இப்படிச் செய்யும் புத்திமான் முக்தியேபெறுவான்.

'தேஹத்தில் அநேகவித அசுத்தங்கள், விஷ



யானுபவக்கருவிகள், மேலனுபவம் கைகூடவொட்டாகுணங்கள் அமைந்து கிடப்பதால் அதைத் தொட்டால் (அது நான் என்றெண்ணினால்)ஸ்நாநம். (அதன் ஸம்பந்தத்தை நீக்கி தனித்து நிற்பதை) விதிக்கப் பட்டிருக்கிறது. 'நான் எனது' என்ற பாவங்களே மலமூத்ரங்கள்.ஞான வைராக்கியமாகிய மண் ஜலங்களினாலே வாஸனாத்ரயங் (தேகலோகசாஸ்திர வாஸனை) களைக் கழுவி விடுவதுதான் உண்மையான செளசம்.

அத்வைத பாவனைதான் பிக்ஷை உண்ணுவது. துவைத பாவனையோ உண்ணத்தக்கதல்ல. இது தான்ஸந்யாஸிக்குச் சாஸ்திரப்படியும்குருஉபதேசப்படியும் ஏற்பட்டுள்ளபிக்ஷை.சிறையிலிருந்து விடுபடும் திருடன் ஓடுவதுபோல தன்னவைகளை விட்டு புத்திமானான ஸந்யாஸி ஒதுங்கவேண்டும். அகங்காரம் என்ற பிள்ளை,பணம் என்ற ஸஹோதரன், மோஹம் என்ற வீடு,ஆசை என்ற மனைவி இவைகளை விட்டுவிட்டால் முக்தியே கைகூடிவிடும். இப்படி இருப்பவனுக்கு 'மோஹமாகிய, தாய் இறந்தாள், ஞானம் என்ற பிள்ளை பிறந்துவிட்டான். இவ்விருவகைத் தீட்டில் ஸந்தியாவந்தனம் எப்படி நடத்துவது? மேலும், என் ஹ்ருதயாகாசத்தில் சிதாதித்யன் விடாது விளங்குகிறான். அவனுக்கு உதயாஸ்தமன மில்லை. எப்படிச் சந்தியாவந்தனம் செய்வது?' என்றுஇம் மாதிரியான குதூஹல வெண்ணங்கள் ஊறிக்கொண்டே இருக்கும். குருவால் ஒன்றான முடிவு என்று எது நிச்சயிக்கப்பட்டுள்ளதோ அதுதான் ஏகாந்தம். தனிமையை ஏகாந்தமெனல் இங்கு பொருந்தாது. ஸம்சயம் உள்ளவர்களுக்குக் கதியில்லை. நம்பிக்கை அவசியம். கர்மத்தியாகம் பிரேஷ உச்சாரணம்(ஸந்யாஸ மந்திரம் சொல்லுதல்)ஆகியஇவைகளால் ஸந்யாஸம் ஸித்திக்காது. ஜீவபரச்சேர்க்கையால்தான் இது ஏற்படும். எவ்வளவு சிறந்தவிஷயஸுகமாயினும் அதனிடம் வாந்திசெய்த அன்னத்தினிடத்து உண்டாகும் வெறுப்பைப்போன்ற வைராக்கியம் உள்ளவனே ஸந்யாஸாதிகாரி. உடனே இவன் ஸந்யாஸி யாகிவிடலாம். மற்றவர்கள் ஸந்யாஸம் நரக வாயிலே ஒழிய வேறல்ல. ஆத்ம சிந்தை உத்தமம் ; சாஸ்திர சிந்தை மத்யமம் : மந்திர சிந்தை அதமம் : தீர்த்த யாத்திராதி கர்மங்களிடம் உள்ள சிந்தை அதமாதமம் (ஸந்யாஸிக்கு.) தண்ணீருள் ப்ரதிபிம்பித்திருக்கும் மரங்களில் உள்ள பழத்தைப்பறிக்க முயன்று ஒருவித திருப்தி யடைவதுபோலப் பலர் பிரஹ்ம விஷயமாக வீண்பேச்சுபேசி ஒருவித திருப்திபெறுவர். அத்வைதபாவனை என்ற பிக்ஷை,சிரத்தை என்ற பெண்சாதி, ஞானம் என்ற பிள்ளை இவைகளைக் கைவிடா யதி முக்தி பெறுவன். ஞானத்தில் பெரியவனே எல்லோருக்கும் பெரியவனாவான். வித்வான்கள் என் மாயையினால் மயக்கப்பட்டு, வயிற்றுப் பாட்டிற்காகக் காக்கைபோல ஞானம் கத்திக்கொண்டு அலைவார்கள். முமுக்ஷுவுக்கு விக்ரஹாராதனம் அனவசியம்.காம்யமாக முடிந்துவிடலாம். ஆதலால் யதி முற்கூறிய 'அவனே நான்' என்ற அர்ச்சனையையே உள்ளபடி செய்ய வேண்டும். இதனால் ஸமுத்திரத்துள்ளிருக்கும் குடவிஷயத்தில் உள்ளும் வெளியும் பூர்ணமாக இருப்பதுபோலவும், ஆகாயத்திலுள்ள குடவிஷயத்தில் உள்ளும் வெளியும் சூந்யமாயிருப்பது போலவும் உள்ள பரமநிலை கைகூடும். அறிபொருளும்,அறிபடுபொருளும்ஆகிவிடாதே. எல்லாத் தோற்றத்தையும் நீக்கியவிடத்தில் மிகுந்து நிற்பதாயும், ஸங்கல்பம் ஓய்ந்ததாயும், திருபுடி முற்றிலும் நீங்கியதாயும் தூக்கம் விழிப்பு அற்றதாயும், கல்லைப்போல மாறாததாயும் உள்ள நிலையே மேலான ஸ்வரூபம்' என்று பரமசிவன் இவ்வாறு கூறி, 'எல்லாம் நான் என்னைவிட அந்யம் வேறில்லை' என்ற அனுபவம் மனதில் தோன்றும். அநேக விதங்களை வாக்ய ரூபமாக விஸ்தரித் துரைத்து இந்த உபதேசத்தை முடிக்கிறார்.

# உல்லாஸன் சரித்திரம்
## ADVENTURES OF ULYSSES
### ஏழாமத்யாயம்.
(தொடர்ச்சி)

*குற்றமிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்*
*சுற்றமாச் சுற்றுமுலகு.*

மறுநாளுதயமான வுடனே அலஸீனன் தன்னகர்க்கு வந்திருக்கும் தேவன்போன்ற உத்தம புருஷனை யுபசரிப்பதற்கு ஊரிலுள்ளா ரெல்லாரும் ஒருங்குகூடி அரண்மனைக்கு வரல்வேண்டுமென்று முரசறைவித்தான்.

அரசனுணையின்படி பிரஜைகளெல்லாம் வந்து கூடினுர்கள். எல்லாருக்கும் ஸம்பிரமமான விருந்தளிக்கப்பெற்றது. உல்லாஸன் அரசன் அரசி இருவருமுட்கார்ந்திருந்த விடத்திற்குச் சமீபத்திலே ஆஸனம்பெற்றிருந்தான். சாப்பாடு முடிந்தவுடன் ஸங்கீதம் பாட அரண்மனைப் பாடகனை தாமோதகன் தருவிக்கப்பட்டனன். தாமோதகன் கண் குருடாயினும், பாட்டில் தேர்ந்தவன். விருந்தாடிக்கு மனுேற்சாகம் பிறப்பிக்கும் பாட்டுகளைப் பாடும்படி அரசன் உத்தரவு செய்ய, தாமோதகன் துரோஜாநகர யுத்தத்தில் உல்லாசனுக்கும் இதர யுத்த வீரர்களுக்கும் நடந்த வாக்குவாதத்தைப் பற்றிய கீர்த்தனைகளைப் பாடினுன். விருந்தாடியாய் வந்திருப்பவனே உல்லாஸன் என்பதை அவர்களொருவருமறியார்.

தன் வீரச்செயல்களின் பெருமையையே தாமோதகன் பாடினதைக் கேட்ட உல்லாஸனுக்குத் தான் செய்த சண்டை முற்றிலும் ஞாபகத்தில் வந்து தன்னை யறியாமல் அவன் கண்களினின்று நீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. நெஞ்சுலர்ந்து போனமையால் உல்லாஸன் பானம் வேண்ட, ஊழியக்காரர்கள் பலவித மதுக்களை அவனுக்குக்கொடுத்தார்கள். அவற்றைப் பருகினதால் கிலேசம் சிறிது நீங்கிற்று. இன்னுெரு முறைபாடின பாட்டும் உல்லாஸனுடைய அற்புதமான யுத்தங்களைப் பற்றினவையால், இம்முறை உல்லாஸன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். பாட்டைக் கேட்டவுடன் உடனிருந்து யுத்தஞ்செய்து படாத பாடுபட்டுக் கடலுக்கிரையாய்ப் போனவரை உல்லாஸன் நினைந்தழுதான். தாமோதகன் கீதத்தினுல் உல்லாஸன் மனம் நொந்ததென்றறிந்த அலஸீனன் பாட்டை நிறுத்த உத்திரவுசெய்தான்.

பாடல் நின்றவுடன் ஆடலாரம்பித்தது. அதன்பின் வித்தையாடிகள் தத்தம் ஸாமர்த்தியத்தைக் கண்டோர் மனங்களிக்குமாறு காட்டினுர்கள். உல்லாஸன் தன் கைத்திறத்தைப் பல வேடிக்கைகளால் வெளிப்படுத்த ஸபையோரெல்லோரும் அவனைத் தேவனே என்று நினைத்து வியந்து புகழ்ந்தார்கள். பலநாள் இவ்வாறு ஆடல்பாடல் நடந்தேறி வருகையில் தாமோதகன் ஒருநாள் உல்லாஸன் சத்துருக்களை யுத்த களத்தில் வாளால் வெட்டித் துணித்த விதத்தைப்பாடினுன். அதைச் செய்புற்ற உல்லாஸன் முன்னிலுமதிகமாக அழவே அரசன் பாட்டை நிறுத்தும்படி கட்டளையிட்டான். ஸபையோரெல்லாரும் உல்லாஸன் மேலேயே கண்ணுயிருந்ததால் அவர்களுக்கு ஒன்றையு மொளித்தல் தருமமல்ல வென்றெண்ணி உல்லாஸன் அடியில் வருமாறு கூறலானுன்:—

ஸபையோர்களே, தாமும் தமதரசனும், அவரும் புதல்வியும் எனக்குச் செய்திருக்கிற வுபசாரங்களை நினைக்குமளவில், தங்களுக்கு என் வாஸ்தவ சமாசாரங்களைச் சொல்லாம லொளித்தல் பெரும்பாவமாகும். பாட்டுகளில் எந்த உல்லாஸன் பெருமைகளைக் கேட்டுத்தாங்கள் ஆனந்த மடைந்தீர்களோ அந்த உல்லாஸனே நான். தேவாபராதத்தால் இடுக்கண்பட்டு ஊர் போய்ச்சேராமல் கஷ்டப்பட்டு இங்கு வந்தேன். தங்கள் நாட்டார் மாலுமித் தொழிலிற்றேர்ந்து பலவிடங்களுக்கு வாணிகஞ் செய்யப்போகின்றவரானமையால், எனக்கு ஒருமரக்கலம் செய்வித்து என்னை இதாகாவில் சேர்க்க வேணுமென்று விண்ணப்பஞ் செய்கின்றேன். அருள்புரிவீராக.”

உல்லாஸனைப்பற்றிச் சொல்லியவை கட்டுக்கதைகள் என்றும் கவிகளின் கற்பனையென்றும் அதுவரையில் எண்ணியிருந்த அலஸீனன் முதலானோர் கதாநாயகனுக உல்லாஸனை நேரிற்கண்டபோது முகமலர்ச்சி கொண்டு முன்னினும் நூறுமடங்கு அவனுக்குபசாரஞ் செய்ய ஆரம்பித்தனர். அலஸீனன், உல்லாஸனை நோக்கி, “தாம் எங்கள் நாட்டிற்கு வந்திருத்தல் எங்கள் தவப்பேறு. தமது சித்தப்படி எல்லாவற்றையுஞ் செய்வோம். எங்கள் மரக்கலங்கள் பாறைகளுக்கஞ்சாமல் பக்ஷிகள் போல ஜலத்திற் பறந்துபோகுந் திறனுடையது. இஷ்டமானுல் நாளையே தாம் புறப்படலாம்: தாமுள்ளவரையில் திருவிழாக் கொண்டாடுவோம், “என்றுன்.



தன்னுலுதவி பெற்ற மஹாபுருஷன் உல்லாஸன் என்றறிந்த நஸீகாவும் பற்பலவுபசார மொழிகளை யவனுக்குச் சொல்ல, உல்லாஸன் மனமுவந்து தன் முழு சரித்திரத்தையும் ஆதியோடந்தமாய் ஸபையோருக் கொப்புவித்துத் திருப்தி செய்தான்.

நஸீகா தனக்குப் புரிந்த வுதவியினுல் கிருதக்ஞதை பூரணமாயிருந்த உல்லாஸன் அவளைப் பார்த்து “பெண்கள் மணியே, உன்னுல் நான் உயிர் பெற்றவன். என்குலதெய்வமே உன் மூலமாய் எனக்கு உதவிபுரியவந்த தென்னலாம். தேவர் பிரான் உனக்கு மனதிற் கிசைந்த கணவனை அளித்து உன்வயிற்றிற் பிறக்கும் புத்திரர்கள் பூபதிகளாக வென்று அனுக்கிரஹிப்பாராகவென்றுன்.

’மறுநாட்காலையில் அலஸீனன் மாலுமிகளைக் கொண்டு யாத்திராயோக்கியமான மரக்கலம் ஒன்றைக்குறிப்பித்து அனேக பரிசுகளை அதிலேற்றி உல்லாஸனுக்கு விடை கொடுக்க, அவனுங் கப்பலிலேறி ஜன்ம பூமி ஸமீபித்திருப்பதை நினைந்து மனவெழுச்சி யுடனிருந்தான். கப்பலோ, உத்தம வீரனுகிய உல்லாஸன் தன்மேலேறி யிருக்கின்றுனென்னும் ஆனந்த மேலிட்டுக் குதித்துக் குதித்துக்கொண்டு அலைகளைத் தாண்டிச் சென்றது. ஸதாகாலமும் மனக்கிலேசமும் சத்துருக்களோடு யுத்தமுமாயிருந்த உல்லாஸன் அன்றைக்கு எல்லாக்கவலைகளையுங்கடந்தவனுய்க் கண்களை மூடி ஆனந்தமான தூக்கம் தூங்கினுன். உடம்பு சற்றும் அசையாமல் நித்திரை போனமையால் உல்லாஸனுக்குப் பிராணனிருக்கிறதோ இல்லையோ எனச் சந்தேகமுஞ் சிலருக்குண்டாயிற்று.

ஆழ்ந்த நித்திரையிலிருந்த உல்லாஸனை மாலுமிகள் எழுப்பாமலே, இதாகா துறையில் கப்பல் வந்தவுடன், அவனை கப்பலினின்று மிறக்கித் துறையிலிருந்த குகையில் அவனைத் திரும்பவும் படுக்கவைத்து அலஸீனனளித்த பரிசுகளையெல்லாம் அவன் பக்கத்தில் குவித்துத்தம்மூர்க்குப் பிரயாணமானுர்கள். வழியில், அந்தோ, அந்தக் கப்பலோட்டிகளுக்கும் கப்பலுக்கும் ஸம்பவித்ததைச் சொல்ல நாஎழவில்லை. வருணன் எவனைக்கொன்று கோபந் தணிய எண்ணியிருந்தானே, அவனைக் கப்பலோட்டிகள் தமது ஸாமர்த்தியத்தினுல் உயிர்ச்சேதமில்லாமல் சுதேசத்திற் சேர்ப்பித்த பாவத்திற்குத் தண்டனையாக அவ்வாட்களையும் கப்பலையும் கல்லாகச் சபித்தனன். வருணன் கோபத்திற்கு அவை இன்னும் சாக்ஷியாக இருக்கின்றனவாம் பேஷியாதேசத்தவர் அன்றுமுதல் அன்னியரைத் தமது கப்பலிலேற்றி யாத்திரை செய்வதை நிறுத்திவிட்டனராம்.

உல்லாஸன் இதாகா கரையிற்சேர்ந்து சிறிது பொழுதானபின் விழித்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கையில் முன்பின்னறியாத நாட்டிற்கு வந்திருப்பவனுக எண்ணி மனங்கலங்கி பேஷியா மாலுமிகள் செய்த வஞ்சனை யென்று நிருணயித்துக் கடவுளை நோக்கித் தன் குறைபாடுகளை முறையிட்டுக்கொண் டிருக்கையில் பக்கத்தில் அலஸீனன்கொடுத்த பரிசுக் குவியல்க ளிருப்பதைக் கண்ணுற்று மாலுமிகள் பொன்னை யபகரிக்க எண்ணினவர்களல்ல வென்று உறுதிப்பட்டமையால் ஒருவழியுந் தோன்றுதவனுய்த் திகைத்தான். தாயை யறியாத பிள்ளையும் பிள்ளையைத் தெரிந்துகொள்ளாத தாயு முலகிலுண்டோ? தான்வந்திறங்கியிருந்த நாடு இதாகாவென்பதை உல்லாஸன் தெரிந்தானில்லை. உல்லாஸன் புத்திக்குக் கலக்கமுண்டாக்கினது மினெர்வாயென்னுந் தேவதைதானென்றுஞ் சொல்லலாம். வெகுகாலந்தேடின பொருள்கிடைத்ததனு லுண்டாகும் ஆனந்தம் உல்லாஸனுக்கு அதிகமாய்த் தோற்றுவதற்குஅந்தத்தேவி சற்று மனக்கலக்கத்தைத் தந்தனளோ?

கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டவர்கள் போல் உல்லாஸன் மனக்கலக்க முற்றிருக்குங்கால் பட்டாடையுடுத்த பாலிய இடையன் ஒருவன் அவனெதிர்ப்பட்டான். இருவரும் பரஸ்பர உபசாரமொழிகள் கூறினபின், உல்லாஸன் சிறுவனை நோக்கி “நான் இருக்கும் பூமி ஒருகண்டத்தின் பாகமோ, தீவோ? இவ்வூர்க்குப் பெயரென்ன?” என்று வினவ, இடையன் உல்லாஸனுடைய தெரியாமையைக்கண்டுஆச்சரியப்பட்டு, “இந்தவூரின் பெயர் உலகப்பிரஸித்தமாயிற்றே; இதை நீர் அறியாமலிருப்பது ஓர் புதுமை. மலைப்பாறைகள் அடர்ந்த பூமியாயிருப்பினும் உணவுப்பொருள் ஸம்பிரமமாக இங்கு விளைகின்றது. குறை ஒன்றுமில்லை. ஆறுகளும் ஊற்றுகளும் இங்கு மிகுதியாகவுண்டு. இவ்வூருக்கு இதாகா என்று பெயர்,” என்றுன்.

உல்லாஸனுக்கு இதாகா என்னும் நாமம்

செவியிற் பட்டவுடனே உண்டான ஸந்தோஷத்திற்கு அளவில்லை. ஆயினும் தன்னுள்ளத்திலுதித்திருந்த ஆனந்தத்தைப் புறம்பே காட்டாமல் இடைப்பிள்ளை யிடத்தில் "நான் அயலூரான்; கிரீடாவிலிருந்து பேஷியர் நாட்டுக் கப்பலில் இங்குவந்தேன்; கடும்புயலி லகப்பட்டு உயிர் பிழைத்தவன்" என்று பொய்யாகச் சொல்ல, இடைப்பிள்ளை உல்லாஸனோடு வெகுகாலம் பழகினவன்போல அபிநயித்து "நீ செய்வது கள்ளனைக்குள்ளன் ஏமாற்றினது போலிருக்கிறது. ஆபத்து ஒன்றுஞ் சம்பவிக்கமுடியாத இடத்திலும் நீ கபடமாய் நடப்பது எதற்கோ? ஜன்ம பூமியிற் காலடி ஒன்று வைத்தவுடனே பொய்யைத் தான் சொல்லுகிறதென்று உனக்குப் பிரதிக்கினையா? உன்னை யறியோமென் றெண்ணுகிறாய் போலும்," என்று வெருட்டிப் பேசினான்.

இது [illegible] நிமிராமற் பேசின உல்லாஸன் தலை நிமிர்ந்து இடைப்பிள்ளை நின்ற இடத்தைப் பார்க்குங் கால் இடைப்பிள்ளை ஒருவனுமங்கில்லை. அவனிருந்த ஸ்தானத்தில் ஸர்வாபரண பூஷிதையாய் ஒரு பெண் நின்றாள். அந்த க்ஷணமே உல்லாஸன் அப்பெண்ணைத் தன் குலதேவதையாகிய மினெர்வா வென்றறிந்து உடம்பு மயிர்க் கூச்செறிந்து நாதழுதழைத்துமனந் தடுமாறி நின்றான். துரோஜாநகரயுத்தத்தில் தனக்குத் துணையாயிருந்து சென்ற சண்டைகளிலெல்லாம் ஜயத்தைக் கொடுத்து ரக்ஷித்த உலகமாதாவானமினெர்வா தனக்கு மறுபடியும் பிரஸன்னமானதால் மனம் பூரித்து,

வளம்பெறு ஞானவாரி வாய்மடுத்து
 மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் துரும்பொத் தாவியோடாக்கை
 யானந்தமாகவே யவந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர்காணுக்
 காக்ஷியே சாக்ஷியே யறிஞர்
உளம்பெறுந் துணையே பொதுவினினடிக்கு
 முண்மையே யுள்ளவா றிதுவே.
உள்ளமே நீங்காவென்னை வாவா வென்
 றலப்பிலாவானந்தமான
வெள்ளமே பொழியுங்கருணைமான் முகிலே
 வெப்பிலாத்தண்ணருள் விளக்கே
கள்ளமே தாக்குந்து வெளிப்பரப்பே
 கருவெனக்கிடந்த பாழ்மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
 பாலிப்பதன்ன ருட்பரமே.
பரம்பரமாகிப் பக்குவம் பழுத்த
 பழவடியார்க்கருள் பழுத்துச்
சுரந்தினி திரங்குந் தானகற்பகமே
 சோதியே தொண்டனேனின்னை
யிரந்து நெஞ்சுடைந்து கண்டுயில் பெறும
 லிருந்தது மென்கணிலிருட்டைக்
கரந்து நின்கண்ணூற்றுயில் பெறல் வேண்டிக்
 கருதினேன் கருத்திது தானே.
 என்செயலின்றியாவுநின்செயலென்
 றென்னுவேனெவ்வொருகாலம்,
 புன்செயன் மாயை மயக்கினென் செயலாப்
 பொருந்துவேன ஃதொருகாலம்,
 பின்செயல்யாது நினைவின்றிக்கிடப்பேன்
 பித்தனேனன்னிலை பெறநின்
 றன்செயலாக முடித்திடல்வேண்டும்
 சச்சிதானந்தசற்குருவே,

என இவ்வாறு பல்முறை மினெர்வாவை வழுத்தி அத்தேவதையை நமஸ்கரித்துத் தன் அபராதங்களை யெல்லாம் க்ஷமிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

ஊனக்கண்மறைந்து ஞானக்கண் தேவி அருளாற்கிடைத்தவுடன், தான் நின்ற நிலம் இதாகா வென்றும் அங்குள்ள மலைகளும் நதிகளும் தான் முன்னறிந்தவை யென்றும் ஐயமறவிளங்க, உல்லாஸன் ஆனந்தத்தோடு பூமாதேவியை நமஸ்கரித்துக்கலி தீர்ந்தான்.

கே. வெங்கிட்டராமய்யர், பி. ஏ.

**அனுபோகத்தால் சொல்லும் புத்திமதி.**—நம்முடைய தேசத்து வியாபாரிகளுக்கு வியாபார விஷயமாய் எவ்வளவு சொன்னாலும் அடியில்கண்ட விஷயங்கள் தேவைதான்.

1. எவனுக்கானாலும் நீ கடன் கொடுக்கவேண்டியிருந்து அவன் எப்பொழுது வேணுமானாலும் மென்னியைப் பிடிக்கும்படியான ஸ்திதியில் நீ இருந்தால் உடனே நீ தகுந்தஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

2. உன் சிநேகிதனோடு ஏதாவது வியாபாரம்வைத்துக்கொள்ளும் பட்சத்தில் பிறத்தியானிடம் வியாபாரம் செய்தால் எப்படி தஸ்தாவேஜு ஏற்படுத்திக்கொள்வாயோ அப்படியே, தஸ்தாவேஜு ஏற்படுத்திக்கொள். வியாபாரத்தில் தாக்ஷண்யப்பட்டால் தனம் நாசமாகும்.

3. உன்கடை சிறியதாயிருந்து ராஜபாட்டையில் இல்லாமல் பக்கத்து சந்துக்களிலிருந்தால் நீ விற்கும் தின்பண்டம்கொஞ்சம் திறமாயிருந்து வந்தவர்களுக்கு கொஞ்சம் நன்றாய் எடுத்துக்கொடுத்தால் எல்லாரும் தேடி வருவார்கள்.

4. நீ என்ன மரியாதையாயிருந்தும் உன் வியாபாரத்தை பெருக்கப் படுத்தியும் பக்கத்துக் கடைகளில் வாங்கும் வாடிக்கைக்காரர்கள் உன் கடைக்கு வாராதபக்ஷத்தில் பக்கத்துக்கடையில் வாங்குகிறார்களே வாங்குகிறார்களே என்று சொல்லி துக்கிப்பதில் பிரயோஜனமில்லை.



கனம் திவான்பஹதூர், ரகுநாத ராயரவர்கள் ஸி எஸ். ஐ.



## கனம் திவான்பஹதூர் ரகுநாதராயர் அவர்கள் ஸி. எஸ். ஐ.

## DEWAN BAHADUR R. RAGUNATHA ROW C. S. I. (A LIFE SKETCH)

*கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாற்*
*றென்னாற்றுங் கொல்லோ வுலகு"*

என்பது வள்ளுவர் வாக்கு. உலகில் பிறந்தார் எல்லோரும் தாம்செய்யவேண்டிய கடமைகள் பல உண்டு. அவைகள் பலவகைத்து. தமது ஜனங்களின் மனத்தை விசாரித்தல், உலக ஸுகத்தின் விடுத்திக்குழைத்தல், யாவரையும் உயர்ந்த முயற்சித்தல், தீமையை வெருட்டி நன்மைவேர்விழ இடம்தரல், இது முதலாகிய செயல் உலகில் பிறந்து அறிவொடு விளங்கும் ஒவ்வொருவருடைய கடமைகளாகும். இக்கடமை சட்டங்களிலாகிய செயல்களிலொன்றன்று. ஆயினும் தெய்விகச் சட்டத்தில் பதிந்து யாவர் மனத்தினும் விளங்கி, அவரது உண்மையுணர்வை வளர்ச்சியடையச் செய்து, பொது நன்மைக்குழைக்கும்படித் தூண்டும் குணம் வாய்ந்தது அது எல்லோரிடத்தும் சைதன்யமாக விளங்குவது. அவ்வாறு குணவிசேஷங்களின் அளவிற்கமைந்து நிற்கும். கடமையென்னுந் தருமத்தை ஐயமற உணர்ந்து ஒழுங்கோடு விளங்கினவர் சிலரே. ஏனையோர் அதன் வழிகொளாது வீணே காலங்கழித்துள்ளார்கள். அது அவரது அபக்வ ஞானத்தைக் காட்டும். கடமையென்னும் நிலையை நன்குணர்ந்து, ஆவி, யுடல்பொருள் முழுதும் அதற்கேயளித்து உழைத்து வந்த கனம் ஸ்ரீ திவான்பஹதூர் ரகுநாதராயர் அவர்கள் ஸி. எஸ். ஐ. தேஹவியோகமானது இந்நாட்டை இருளில் ஆழ்த்தியது. அவரது வாழ்க்கையின் [illegible] வருஷங்களும் பொது நன்மைக்கே அர்ப்பிக்கப்பட்டது. எவர் வீட்டிலும் தென்னிந்தியப்பெரிய கிழவன் என்னும் ஆசைப்பெயருடன் விளங்கி வந்தனர். இவரது வாழ்க்கை முழுவதும் முயற்சியின்றி சோம்பலோடு காலங் கழித்தநாள் ஒன்றுங்கிடையாது.

இவர் 1831௵த்தில் பெருமைதங்கிய மஹா[illegible]யே அளித்துவந்த பெரியவம்சத்தில் தோன்றினர். அவ்வம்சம் மஹாராட்டிரத் தலைவன், சிவாஜியின் உடன்பிறந்தான் தஞ்சாவூர் வந்ததும் பூனாவிலிருந்து இங்கு குடியேறியது. இவர் தேசஸ்த பிராஹ்மணர். இவர் தந்தை திருவாங்கூர் திவானாகவிருந்து பின் மைசூரின் ரெவின்யூ கமிஷனராக இருந்தனர். இவர் சிற்றப்பனும் திருவாங்கூரில் திவானாக இருந்தனர். பெயர்பெற்ற திவான் மாதவராவ் அவர்களும் இவருடைய முதல்தலை முறைபங்காளி. இத்தகைய நற்குலத்தினுதித்து முதலில் பெங்களூரில் படிப்டையடைந்து பின் "ஐஸ்கூல்" என்று விளங்கிய சென்னை இராஜாங்க கலாசாலையில் படித்தனர். இவர் உடன்படித்தவர்கள் எல்லோரும் பெரும்பதவியடைந்தனர். படிப்பு முடிந்ததும் தனது நிலங்களை பாதுகாக்க முழுமனத்துடன் வந்து சொத்துகளின்மேல் கண்ணுங் கருத்துமாயிருந்தார். இது இவர்க்கு சில விஷயங்களில் அநுபவம் பெறச் செய்தது.

பின் இவர் தஞ்சையில், 1856௵ ப்ளீடர் டிப்ளமாபெற்றதும், கலெக்டராபீசில் 'டிரான்ஸ்லேடர்' வேலையில் அமர்ந்து படிப்படியாய் டெப்டீ கலெக்டர் பதவியை அடைந்தார். இவருடைய திறமையைக்கண்ட அப்பொழுதிய கவர்னர் டிரவெலியன் துரை யவர்கள் மிக மகிழ்ந்து இவர் மூலமாக தென்னிந்தியா ரெயில்வேக்காக நிலம் வாங்கிக் கொடுக்கும்படி ஏற்படுத்தி மிக சந்தோஷம் அடைந்தார். இவருடைய பக்ஷபாதமின்மையும் அறிவும் ஒழுக்கமும் இதற்குள் எங்கும் பரவியது. அப்பொழுது தான் இவர் மஹாராஜ ஹோல்காரின் இந்தோர் நாட்டுதிவானாக ஏற்படுத்தப்பட்டது. அவருடைய திட அபிப்பிராயமும், வாய்மையும் அவரை அவ்வேலையில் நெடுநாள் இருக்கச்செய்யவில்லை. பின் மற்றும் சென்னை ராஜாங்கவேலைக்கு மீண்டு 1888௵ "பின்சின்" பெற்றார். இதன்பின் இவர் வாழ்க்கைமுழுதும், இந்தியாவின் பொருட்டே செலவிடப்பட்டது.

இவருடைய பெருமையைக்கண்டு ராஜாங்கத்தார் 1877-ம் ௵ இவருக்கு ராவ்பஹதூர் என்னும் பட்டமும், 1909௵ இந்திய தாரகாநேசன் (ஸி. எஸ். ஐ.) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது. மார்லி துரையவர்களின் ப்ரேரேபணைப்படிக்கு முதல்கூடிய சட்டநிர்வாக ஸபையின் அங்கத்தினராக ஏற்படுத்தப்பெற்றனர். அந்த சபையில் வயது முதிர்ந்திருப்பின் தனது ஊக்கம் குன்றாது தனது அநுபவத்தின் சக்திவிசேஷத்தால் பல சிறந்த கேள்விகள்கேட்டு ராஜாங்கத்தை சீர்திருத்த முயன்றனர். இவர் கூறிய மொழிகளுக்குத் தனியாக கௌரவதை ராஜாங்கத்தாரால் கொடுக்கப்பட்டு வந்ததும்

சட்டசபையின் சென்ற மீட்டிங்கில் கனம் அட்கின்ஸன் துரையவர்கள் ராயரவர்களின் பெருமையைக்கூறி அவரது மொழிக்கென்றும் சிறந்த கௌரவதை கொடுக்கப்பட்டுவந்ததென்று கூற கனம் சிவஸ்வாமி அய்யர் அவர்கள் அதன் பெருமையை விரித்து கூறினர்.

இவர் ஒருவரே உபகாரச் சம்பளம் (Pension) பெற்று, ஸுகமாக நாற்காலியில் படுத்துறங்காமல், ஊர்வேலையின்வாயில் தானே பட்டு தினந்தவறாது தேசநிலையை உணர்ந்து, பத்ரிகைகளுக்கு நாள்தோறும் கடித மூலமாக தனது அபிப்பிராயங்களை வெளியிட்டு தள்ளாவயதிலும் பொது ஜனங்களுக்குழைக்கவேண்டு மென்னுங் கடமையை மேல்கொண்டு வாழ்ந்து வந்தவர். இதுமாத்திரமன்றி வைதிக விஷயங்களில் மிக உழைத்தவர். ஆசார சீர்திருத்தங்கள் பலவேண்டும் என்றும் தைர்யமாகக் கூறியவர். ஆனால் அது தேசாசார வழியிலே ஆகவேண்டும் என்னும் பிடிமானங்கொண்டு விளங்கினவர். தெய்வ பக்தியில் சிறந்தவர். இவர் இராஜாங்கதந்திர விஷயங்களில் நேரில் தானாகவே நுழையா விடினும் தஞ்சாவூர் ஜில்லாக்கூட்டத்தை இவர்தான் முதலில் உண்டாக்கியவர். மயிலாப்பூர் ரானேடே புஸ்தகசாலைக்கு தனது நிலத்தைக் கொடையாக அளித்தனர். 1908-ம் ௵ இவரது 78-வது வருஷ வைபவம் கொண்டாடியகாலத்து தனது புஸ்தக பண்டாரத்தை முழுதும் ஜனங்களுக்கு நன்கொடையாக அளித்து, அதற்கு நிலைத்திருக்கும் இடத்தையும் தந்து, அப்புஸ்தகாலயத்தின் நிர்வாஹத்திற்காக 10000 ரூபாய்களும் தனித்தளித்தனர். இக்காலத்துதான் ஜனங்கள் பெரிய கிழவன்" என்னும் ஆசைப்பட்டம் அவர்க்கிட்டதாகும். நந்தன் சரித்திரத்தில் வந்த பெரிய கிழவன் பெருமையின் வழியே கொண்டாற்போல நமது பெரிய கிழவனும் நன்மைக்கே உழைத்து வந்தார். அவருக்கு ஜனங்களிட்டபட்டம் சிறிதும் தகாததாகாது.

இவர் வைதிகர்களது சாஸ்திரப் பயிற்சியையும் யளித்து தனது வியாக்யானங்களை வெளிப்படுத்த ஆரம்பித்தது அவர்க்கே ஆச்சரியமாகும். ஆயினும் மத விஷயங்களில் அவர் கொண்ட சில அபிப்பிராயங்கள் சிறிது தவறாயிருப்பினும் பிறரது மாயாவலைக்குள் சிக்கி அவர் சொல்வதே நியாயமென்றும் அவரே தெய்வமென்றும் அவர் ஒருநாளும் விளங்கவில்லை. இதற்கு அவரது மாறாத மன ஸாக்ஷியே காரணம். பிறரது துன்பத்தை யொழிக்கவேண்டுமென்பதே கவலை. தவறி விட்டவர்களை நல் வழியில் கொண்டுவரவேண்டும் என்பதே அவர் அபீஷ்டம். தேர்ந்த உணர்ச்சியின் அநுபவத்தால் ஜனங்களுக்கினியவை செய்யக்கூடிய வல்லமையுடன் அவர் நன்மைக்கே உழைத்தவர். கிருஷிகர்களது மேம்பாட்டிற்காக மன்றாடினவர். சாகுபடியின் உயர்விற்கு உத்ஸாகத்துடன் நாள் தவறாது எழுதினவர். ராயல் கமிஷன் கூட்டத்தார் முன் மிகுவிசித்திரமாக தனது அபிப்பிராயத்தை வெளியிட அக்கூட்டமிவரது அபிப்ராயமே சிறந்ததென எடுத்துக்கொள்ளச் செய்து உழவின் உயர்வை விருத்தி செய்யும்படித் தீர்மானங்கள் செய்ய இடந்தந்தனர்.

இவ்வாறு என்றும் ஜனங்கள் ஸுகத்தையே நாடி 82-வயதுவரையும் உழைத்து, அவ்வுழைப்பினிடையில் காலபலத்தின் மஹிமையால் மோக்ஷ நகரமடைய நேர்ந்திடினும் அவரது செய்கைகள் எல்லோருடையக் கண்கள் முன் நின்று நாட்டியஞ்செய்து அவரது நடையை ஒற்று ஒழுகமனமூட்டி, எங்கும் ஜனங்களின் நலத்திற்கே உழைக்க சக்தியூட்டுமென்பதிற் ஐயமில்லை. அவர் நீங்கியது துயரமே. ஆறாத துக்கம் தான். "அருகுசாயை போல்வாழும்" ராயர் தேஹவியோகமானதைப்பற்றி "மருகி சோக மூள்வதில்" பயன் என்ன? வீணே மெலிந்து துக்கமடைவதில் பிரயோஜனம் என்ன? அவரது உரவினர் துக்கமும், அவர் அன்பினருற்ற துக்கமும் அநுதாபத்திற் கிடந்தரினும், அவர்கள் பால் அநுதாபத்தை விளக்குவதற்கு ராயர் அவர்களது நடையைப் பின்பற்றவே பெரும் வழியல்லவா? மதியூகத்தாலும், வல்லமையாலும், முயற்சியாலும் தனக்கிணையல்லாது வாழ்ந்த பெரியோன் விதியின் வழிக்குடன்பட்டதும், பென்ஷன் பெற்று விளங்குமநேகர் 'செல்வக்கள்ளாட்டயர்ந்து, வீணே காலங்கடத்தாது தம்முள் கொஞ்சம் சோம்பிரின்மையை ஆவேசித்து ஜனங்களின் நன்மைக்காகவும், ராஜாங்கத்தின் பெருமைக்காகவும் விளங்கி தம்முயற்சியில் இம்மியும் இலாது தாமதம் முதலிய குணங்களை கருவறுத்து விளங்குவதைக் காட்டிலும் பெரிய ஞாபகச்சின்னம்வேறுராயர் அவர்களுக்கு வேண்டுமா? ஏனையோர்க்கும் அதுவே பொருந்தும்.

அநுபவத்தின் வழியால் அனைத்தையும் தன்



வழிக்கொண்டுதேசத்திற்கும், ராஜாங்கத்திற்கும், ஜனங்களிற்கும் தன்னிடம் ஒரே விதமாக அன்புண்டாகுமாறு நடந்த ராயர் அவர்களின் மரிப்பால் இனி இந்திய ஸமூஹத்தில் சீக்கிரத்தில் மறைக்கமுடையா இடைவெளி யுண்டானதைப் பற்றி யாவருமறிந்திருப்பார். அதை விரித்து நாம் கூறுவது மிகையாகும். போன உயிர் ஸுகமாக நல்லோன் அபிநிவேசத்தால் உண்டாகிய பெருமையோடும், ஜனங்களின் ஆசீர்வசனங்களோடும் ஸுகமாக ஸுகமடைய வேண்டும் என்பதே எல்லாருடைய அபீஷ்டமும். ஓம் சாந்தி சாந்தி: சாந்தி :

---

**கலப்படஞ் செய்யப்பட்ட பால்.**—லாபத்தை உத்தேசித்து உணவுப்பொருள்களைக் கலப்படஞ் செய்வது மிகவும் ஸாதாரணமாக விருக்கிறது. பப்ளிக் அனலிஸ்ட் அதாவது பரிசோதகர்களிடத்தில் வரும் கலப்படஞ் செய்யப்பட்ட உணவு பதார்த்தங்களில் முக்கியமானது பால், வியாபாரிகளும், விற்பவர்களும் பாலைக் கலப்படஞ்செய்ய பின்வரும் முறைகளில் எதாவது ஒன்றை அனுஷ்டிக்கிறார்கள்.

1 பாலில் ஜலத்தைச் சேர்த்தல் இது மிகவும் ஸாதாரணம். அனேகமாய் கறக்கும் ஸமயத்தில் ஸமீபத்திலிருந்து வாங்கினாலொழிய நல்ல பால் கிடைப்பது அரிது.

2 பாலிலிருந்து எட்டை எடுத்துவிடல். பாலைக் காயவைத்து மேலாக நிற்கும் ஆடையை யெடுத்துவிட்டு நல்ல பாலென்று சிலர் விற்கிறார்கள். யந்திரத்தால் பாலிலுள்ள எல்லாக் கொழுப்பையும் எடுத்துவிட்டு எடெடுத்த பாலை நல்லபாலென்று வேறு சிலர் விற்கிறார்கள். மற்றும் சிலர் எடெடுத்த பாலை நல்ல பாலுடன் கலக்கிறார்கள். பாலிலிருந்து எட்டை யெடுத்துவிட்டு ஜலத்தையும் சேர்க்கிறதுண்டு.

3. பால் ரொம்ப நாளைக்கிருக்கும்படி போரிக்ஆஸிட் அல்லது வெண்காரத்தைச் சேர்த்தல். சிலர் "பார்மலின்" என்ற கெடுதலான சரக்கைச் சேர்ப்பதுமுண்டு.

4. பால் வாங்குபவர்களை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் பார்வைக்குத் தடிப்பும் நல்ல நிறமும் கொடுக்கக்கூடியதுமான பதார்த்தங்களைச் சேர்த்தல்.

சில பசுக்கள், பாலில் எவ்வளவு கொழுப்பு, சர்க்கரை, ஜலம் முதலியவை யிருக்கவேண்மோ, அவ்வளவு அளவுள்ள பாலைக் கொடுக்கிறதில்லை. இதற்குக் கீாரணம் ஸொந்தக்காரர்கள் அவைகளுக்கு ஸரிவர தீனிபோடாமலிருப்பதாலும், அவைகளை ஸரிவர வனிக்காம விருப்பதாலுந்தான். இதனால் பாலில் கொழுப்பு குறைவாகவாவது அல்லது தண்ணீர் அதிகமாகவாவது இருக்கிறது.

# நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

**நாயகன்.**—அதைத் திரும்பத்திரும்பச் சொல்வதில் என்ன பிரயோஜனம்? அதை நான் நடத்தையாலே விளக்குகிறேன்.

**கிழவி.**—(தலைமேல் கைகுவித்து) மகனே! நீ நெடுநாள் வாழ்க! [யென்

**நாயகன்.**—இரையென் றுணர்த்து மிருவுடை நம்மை
கைக்கொடு மம்ம! கருடர்க் குணவாவன்
நும்மகன் றனது சும்மைதீர் பொருட்டே!

**கிழவி.**—(காதை பொத்திக்கொண்டு)கொடுமை யொழிக்கப்படட்டும்! மகனே' சங்கசூடன்போல் நீயும் எனக்கோர் மகன்தான்! நீ சங்கசூடனிலும் சிறந்தவனே;—உற்றார் உறவு யாவராலும் துறக்கப்பட்ட என்மகனைக் காக்க உன் உடலையே அளிக்க விரும்புகிறாய் அதனால்.

**சங்கசூடன்.**—(துன்பத்துடன்)
அகோ! யிம் மகானவர் மனிதர் யாரினும்
புகாமனம் கொண்ட புண்ணியன் கண்டாய்!
கோசிக னென்னுந் தேசிகன் அவன்றான்
பாசியூன் தின்றதும் பறையன் போலன்றும்,
கோதமனன்று குறையில் நடி கங்கனென்
ஈகை யாளனை மாபகை வீழ்த்தியதும், அதனால்
கருடன்றானும் அருடனைத் துறந்து [தாம்
நித்தமோர் நாகம் கைத்துண்ப துண்பதுவும், இவர்
தம்முடற் பாசத் தம்ம ரேறை
துன்பாற் றியாங்கன்றி துணையென வந்து
அன்பெனும் பாச வன்மையின் பெருக்கால்
தன்னுயி ரதனை மன்னு தரும்பெறு
என்னுயிர்க் காக்கக் கொடுத்திடு மென்னே!

(நாயகனை நோக்கி)
பெருமையிற் பெரியோய்! கேளா துன்னுயிர்
ஒருமையேன் பொருட்டாய் ஒரு ஞாயமின்றி
இரக்கப் பெருக்கில் ஈந்திட நினைத்தனை,
நன்றே! ஆயினு முன்றன் எண்ண
மகற்றுதி யீண்டு மாலோ யுணர்க!
தகவி லெனைப்போல் தன்மைய ரநேகர்
புகைகொள் மனத்தினோர் பூதலத் தநேகர்
பிறந்துளார் தாமும் மிறத்தலு ஞாயமே—அதான்று
பிறர்தமக்குயிரும் பெற்றியினீயும்
அறந்தரு வுருவா மன்பினு ளர்தாம்
ஆயிரத் தொருவரி லடைவது மரிதே—அதனால்
பாயிரு ளகற்றும் பனிமதி யாமென
நோயிரு ளகற்றி நுகர்தருங் கருணை
காய்கதிர் பரப்புங் காவல வகற்றுதி
தாய்மனங் கொண்ட துணிவஃதை யொல்லென.

**நாயகன்.**—(சங்கசூடனது கையைப் பிடித்துக் கொண்டு) அரச சங்கசூட!

நன்றன் றனக்கு நாடென் வழியில்
இடருண் டாக்குதலேண்கொள் என்மனத்தே
கொண்ட விருப்பத்தை கண்டிட வலைந்து
அமய மமைந்து மதைவிட லாமோ?
தமதெணந் தன்னைத் தடுத்திடும், தடுத்தென்
நன்றி செயக்கொண்ட நன்னெறி யோங்கிட
கொலைக்குறி யாய கலைகளைத் தருவையே!
**சங்கசூடன்.—**
ஆர்வலிச் சிறந்தோய்! அபாயக் கடங்கா
சீசகங் கொண்டு செறுதன் படைகுறூஉ
மாரிய வாளா நெஞ்சகம் நைவிரென்?
சங்க வெண்மையின் சங்க பாலர்தம்
செங்குலப் பெயர்ப்பட செய்குமென்? செய்தச்
சங்கசூடன்றன் தங்குலங் கறைபடச்
செய்வனோ? செய்கலன். செய்தர நன்மை
செய்வையேல் செய்குதி தொல்கிழத் தாயிவளை
ஓயாக் கவலையின் உறுபிணிப் பாற்பட்டு
மாயா வகையின் மகிழ்வடையுமாறே!
**நாயகன்.**—என்ன வேண்டியதென்? என்வழிக்காண் [டிலை?
நண்ணி யுன்னிடத் தேலத் துளதன்றே.
**சங்கசூடன்.**—அது யாது?
**நாயகன்.**—உன்னுயிர் மாளின் தன்னுயிர்மாய்த்தும்
உன்னுயிர்வாழ்ந்திடில்தன்னுயிர்வாழ்ந்திடும் அவளை
உயிரோடு வாழ உன்னுவை யேலென
துயிர்கொடு காத்திடு முபாயம்இதுவே—அதனால்
கொலைக்குறித் தன்னைக் கொடுத்திடும்,
கலைத்தனைப் பூண்டக் கற்பாதை ஏறுவன்
நீயுமிவ் விடம்விட்டு தாயுடன் செல்குக,
கொலைக்கள மருகு நிலத்திடில் மடைமை
குணத்தான் பயங்கொடு மயங்கிக் கொடிய
பிணைப்பெருந் துன்பத்து படினும் படலாகும்
பறவைக்கோமான் பாழ்ங்கூர் அலகான்
நெறிகொண் டிற்ற வுயிர்த்தசை நிறைந்து
யாணர்க் குருதி ஆறது சிந்தி
காற்றிற் பாந்திட கங்கமு காகமும்
மாற்றலின் றிரிந்து கொக்கரித் தார்த்து
கூட்டங் கூடி வானிற் கவிந்து
விகங்கக் குடையென் றியாவரும் விளம்ப
ககன வீதியின் வருஉம் புதுவனன் கவர்ந்து,
புன்னீர் ஓடையின் மன்கொழு கெழுமி
புலான்மணங் காய்ந்து பொய்நரி திரடாம்
குருதியின் அளைந்து கூஉய்ந் திடைவாய்
மருவிய கொள்ளி யவிர்ந்திடப் பருகி
கொடுமையின் ஓடி கனன்றெழுந் தார்த்து
கழுகான் கிழிகூறற் கலந்து கழுதையார்
கடித்திடு மாங்காய் படுமென் புதரையின்
கொடும்புள் சிறகரை விருத்திட குணன்றன்
ஆரொளி படாஅது ஆரிருள் படர்தரூஉம்
கொலைக்கள மீதைக் காண்டனை நண்ப!
**சங்கசூடன்.**—யாண்டதைக் காண திருத்தலாகுமா?

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
### REFLECTIVE ESSAYS

### 7. தத்கால விஷயங்கள்: போட்டி.
### Modern Subjects.—Competition.

*குறிப்பு:—ஸ்வரூபம்—உதாரணங்கள் - எல்லை-உபயோகங்கள் கெடுதிகள்—முடிவு: தற்கால நிலைமை.*

ஒரே விஷயத்தை அநேகர் செய்யப்புகுமிடத்தில் செய்யும்வகை அடையும் பயன் இவைகளில் ஒருவரை ஒருவர் மிஞ்சிவிட வேண்டும் என்று உண்டாகும் மனக்கிளர்ச்சிக்குப் போட்டி என்று பெயர். ஒரே வகுப்பில் படிக்கும் பிள்ளைகள் பாடம்படித்து பரீக்ஷையில் அதிக சிறப்புப் பெறவேண்டும், முதன்மையாக விருக்கவேண்டும் என்று எண்ணுவது போட்டியேயாம். தொழிலாளிகள் இருவர் தாம் செய்யும் வஸ்துக்களை விலைப்படுத்தி சிறந்த லாபம் அடையவேண்டும் என்று முயலுவதும் இதுவே. அநேகர் சேர்ந்து ஒரே வேலையில் முயன்றால்தான் அந்த வேலை ஸம்பந்தமாக போட்டி என்ற மனோநிலை ஏற்படும். ஒரு தொழிலில் ஒருவன் தனிமையாக விருப்பானாகில் இந்த மனோநிலை உண்டாவதற்கு இடமே இல்லை. இந்நிலை உண்டாகாவிடில் தொழில்செய்பவனுக்கு அதை நன்றாக முடிப்பதற்கு வேண்டிய உத்ஸாஹமில்லாமல் போக ஒருவாறு வேலை விஷயத்தில் சோம்பேரியாகி விடுவான்.

இந்தப்போட்டிக்கு எல்லையுண்டு. அதுதாண்டிவிட்டால் இது கொடிய குணமாகிவிடும். போட்டிபோட்டு ஒருவரை ஒருவர் விடாமுயற்சியால் மிஞ்ச எண்ணும் வரையில் இது நல்லதே. அவ்வாறின்றி அதர்ம மார்க்கங்களில் தொழிற்பட்டு ஒருவனை மிஞ்ச மற்றவன் முயன்றால் இது வீண் மனச்சஞ்சலம் கொடிய ஆபத்து முதலியவைகளுக்குக் காரணமாகிய பொறாமையாகிவிடும். படிப்பு விஷயத்தில் நோக்கில்போட்டிபோடுபவரில் ஒருவன் தன் சிறப்பை வெளிப்படுத்தாது மற்றவன் துர்குணங்கள் முதலியவைகளை வெளிப்படுத்தி அவதூறு பேசி உபாத்



யாயர்களுக்கு அவனிடம் வெறுப்புவரும்படியும், முகஸ்துதியால் தன்னிடம் ஒரு விருப்பு வரும்படியும் செய்து, பரீக்ஷை வினாக்களை ரஹஸ்யமாய் உணர முயற்சிப்பது, மற்றவனை அடித்து பரீக்ஷைக்கு வரவொட்டாது செய்வது அல்லது அவன்மேல் அடாப் பழி சுமத்துவது, இவ்வாறு பல விதங்களால் அவனை தன்னை மிஞ்சவொட்டாது அடிப்பதுஆகிய இவைகள் எல்லாம் போட்டி,பொறாமை யாகுங்கால்ஏற்படும்விபரீதங்கள். இதில் இவ்வாறு செய்பவன் தனது சிறப்பை நியாயவழியில் காட்டி மற்றவனை மிஞ்சவில்லை. அநியாய வழியில் மற்றவன் தன்னை மிஞ்சாது தடுத்துவிடுகிறான். ஆகவே இதைப் போட்டி என்றே கூற இடமில்லை. ஆயினும் போட்டிபோடுபவர்கள் சற்று அஜாக்கிரதையாக விருந்தால் இந்தக் கொடிய நிலைக்காளாவாதலால் இதை எல்லை மீறிய போட்டி என்று காட்டப்பட்டிருக்கிறது. இது போலவேதான் வியாபாரத்திலும் ஒருவன் தன் சரக்குச் சிறப்பால் மற்றொருவனை மிஞ்சாது, வீண்பொய் விளம்பரம், பிறன் சரக்கை இகழ்ந்து பேசுதல் இவைகளால் தன் சரக்கை செலவிடுதல் மிதமீறிய போட்டியேயாகும்; இதனால் இரண்டுதிறத்தாருக்கும் மனஸ்தாபம் உண்டாகி சண்டை சச்சரவுகள் நேரும்.

இனிப் போட்டியிலிருந்து வரக்கூடிய நன்மைகளைப்பற்றி ஆராய்வோம். முன்னரே ஒரே வேலையில் முனையும் பலருக்கு வேலையைத் தம்மால் இயன்றமட்டும் உண்மையாக முழுதும் பாடுபட்டு நன்கு முடிக்கவேண்டும் என்று பெரு உத்ஸாஹத்தை உண்டாக்கும் என்று கூறிப் போட்டியால் ஏற்படக்கூடிய சிறப்பை ஒருவாறு குறிப்பித்தோம். வஸ்துக்கள் உண்டாக்கி வியாபாரம் செய்யும் விஷயங்களில் இந்தப்போட்டியால் மிகுந்த நன்மை உண்டு. சிலர் நாற்காலி வியாபாரம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ஒருவரை ஒருவர் மிஞ்சிவிட வேண்டும் என்று நேர்மையாசப் பாடுபட்டால் விதம் விதமான நாற்காலிகள் உண்டாக்கும்படி நேரும். இந்தப் போட்டியால் ஜனங்களுக்கு மிகுந்த உபயோகமான சிறந்த நாற்காலிகள் ஸரஸமான விலைக்குக்கிடைக்கும். நாற்காலி செய்வதில் மிகுந்த தேர்ச்சி ஸாவதானமாக உண்டாகிவிடும். ஸகல ஸாதகங்களும் கொடுக்கவல்ல நாற்காலிகள் ஏற்பட்டுவிடும். இதுபோல எல்லாக் கைத்தொழில்களிலும் வஸ்துக்கள் மிக சிறப்புள்ளவைகளாக ஏற்படும். அதாவது கைத்தொழில் இந்தப் போட்டியால் மிகுந்த தேர்ச்சியடையும். வியாபாரம் ஓங்கும். இதுவன்றி ஒருவனே ஒருதொழிலைச் செய்வதென்று இருந்துவிட்டால், அத்தொழில் தேர்ச்சி அடைந்து ஓங்க அவன் தன் இறுமாப்பால் இடங்கொடான். ப்ரகிருதி தத்வசாஸ்திரிகளுக்கிடையில் இப்போட்டி இருந்து தொழிற்பட்டதால்தான் இக்காலத்தில் யந்திரவிசேஷங்கள், சீர்திருத்தங்கள், ஸாதகங்கள், புதியவிஷயங்கள் கண்டுபிடித்தல் முதலியன ஏற்பட்டு மனிதனுக்கு ப்ரகிருதியை அடக்கியாளும் தன்மை ஏற்பட்டிருக்கின்றது.

இனி இப்போட்டியினால் ஏற்படக்கூடிய கெடுதிகளை எடுத்துப் பார்ப்போம். போட்டியின் எல்லையைப்பற்றி கூறினவிடத்தே பள்ளிப் பிள்ளைகளுக்கிடையில் போட்டி இவ்வாறு பொறாமையாக மாறி கொடுந்தொழிலுக்கும் அநீதிகளுக்கும் காரணமாகும் என்பதை விளக்கியாகி விட்டது. வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இவ்வாறு ஆகிவிடும் என்பதை இங்கு எடுத்துக்காட்டுவோம். இருவர் போட்டிமேல் பால் வியாபாரம் செய்யத்தொடங்கினால் முதலில் தம் சரக்கில் நம்பிக்கைவரவும் பிறர் மற்றவர்களைத் தள்ளித் தமதை வாங்கவும் முதலில்நல்ல பாலாகக்கொடுப்பார்கள். பின்னர் வர வர அதிகத்தண்ணீர் சேர்த்து நல்லபால் என்று கொடுக்கத்தொடங்கி விடுவார்கள். இம்மாதிரியே போட்டியில் வியாபாரம் செய்யப்படும் நெய்யில் அநேகக்கலப்பு இருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விஷயந்தான். ஆகவே போட்டியதிகமாக ஆதியில் குறைந்த விலைக்கு நல்ல வஸ்துக்கள் கிடைத்தபோதிலும் என்றும் இவ்வாறிருக்கு ? வியாபாரிக்கு எத்தனைநாள்தான் நல்லவ தக்களை மிகக்குறைந்த விலைக்கு விற்றுவா டியும்? வரவர அவன் பார்வைக்குப் பகட்டாயும், உண்மையில் உபயோகமற்றதாயும் உள்ளவஸ்துக்களைக் கொடுத்து வருவான். ஆகவே மிதமிஞ்சிய போட்டியால் கெட்ட பதார்த்தங்கள் அதிகமாகி ஜனங்களுக்கு நாளடைவில் கெடுதி, சஞ்சலம் முதலிய கஷ்டங்களை உண்டாக்கும்.

'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்ற பழமொழி இந்தப் போட்டியின்

விஷயத்தில் மிகப் பொருந்தும். ஒரு எல்லைக்கு உட்பட்டு நிற்கும் போட்டியால், தேர்ச்சி, உத்ஸாஹம், பொது ஜன நன்மை முதலியவைகள் ஏற்பட, அதுவே அளவிற்கு மிஞ்சிவிட்டால் பெருங்கேடு விளைப்பதாகின்றது. பள்ளிக்கூடம் படிப்பு முதலிய விஷயங்களில் இது அதிகக்கேடு விளைவிக்கும் அளவை அடைவதில்லை. வியாபாரத்தில்தான் இது தற்காலத்தில் ஏராளமாக அளவிற்கு மிஞ்சி ஏற்பட்டுவிட்டது. இக்காலத்திய வியாபாரத்தில் அளவிற்கு மிஞ்சிய போட்டியே அதிகம். இதனால் வரக்கூடிய கேடுகளைத் தடுக்க நாடாள்வோர் எவ்வளவோ பாடுபட்டு சட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். என்ன செய்தென்ன? வியாபார சிறப்பு, இந்திரிய ஸுகம், வரம்புகிடந்த போட்டி ஆகிய இவைகளே நோக்கமாகி, ஆஸ்திக்கியம், பக்தி, நேர்மை, முதலிய ஆத்ம குணங்கள் இருந்த விடந்தெரியாமல் பறந்தோடிப்போன இக்காலத்தில் வெறும் ராஜ சட்டங்கள் மனிதர்களைப் புனிதர்களாக்குமா? பின்னர் கூறிய நற்குணங்களிருந்தால் இக்காலத்தில் தரிக்கவே முடியாது என்று கூறி முற்கூறியவைகளை வாழ்க்கை நோக்கமாகக் கொண்டு பின்னதை நன்கு மதிப்பவர்களை ஒரு துரும்பாகக் கூட மதியாத இக்காலத்தில் சித்த ஸமாதானத்தாலும் தர்மத்தாலும் ஏற்படக்கூடிய ஸுகம் எப்படிவரும்? இவ்வாறு பெரும் போட்டிபோட்டு மனச்சஞ்சலப்பட்டு வாழ்க்கை பெரும்பாரமாகிவிட இக்காலத்தவர் முடிவில் தற்கொலை புரிந்துகொண்டு இறக்கும்படி வரும்போல்தான் இருக்கிறது. இத்தகையான முடிவான நிலைக்கு வந்துமாண்ட பெரியோர் இக்காலத்தில் அநேகராகிவிட்டனர். காலகதிக்குத் தகுந்தபடி, நம் நாட்டவர்கள் திருந்தவேண்டுமாயினும் இவ்வரம்பு கடந்த போட்டிக்கு இடங்கொடாது நமது சாஸ்திர ஒழுங்கிற்கு போட்டியை உட்படும்படி செய்து செழிக்க முயலவேண்டும்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. பள்ளிக்கூட விளையாட்டுக்கள்
2. யாத்திரையும் மனோ நிலையும்
3. யந்திரங்களும் மனோநிலையும்
4. வரி வாங்குதல்
5. சரித்திரங்களின் உபயோகம்
6. புத்தகங்கள்
7. அச்சும் மனோநிலையும்
8. பெரியோர் சரிதையின் உபயோகம்
9. அநுஷ்டானத்தின் சிறப்பு
10. ஜாதியார்கள் ஓங்குவதும் இறங்குவதும்

### போதக்குறிப்புக்கள் :

1. ஸ்வரூபம் : உதாரணங்கள்
2. எல்லை
3. உபயோகம்
4. கெடுதல்
5. முடிவு : தற்கால நிலை.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models

**Colour of the moon in an eclipse** :—If the Earth were simply a solid globe, then no light whatever could penetrate into the Earth's shadow, and the Moon in a total eclipse would always be quite invisible. The Earth is, however, as we know, surrounded by a vast atmosphere, and this has the effect of bending the rays which strike obliquely upon it and making some of them enter into the dark part of the shadow, which is accordingly not absolutely dark. In their passage through the atmosphere these rays become tinged to some extent with a reddish colour, and the effect is that the Moon in a total eclipse is not wholly lost to sight, but can generally be seen shining with a dull copper coloured light.

### க்ருஹணகாலத்தில் சந்திரன் வர்ணத்தின் விஷயம்

பூமிகெட்டியான கோளமாத்திரமாக இருந்துவிட்டால், அதன் நிழலுள் கொஞ்ச வெளிச்சமேனும் ஊடுருவிச் செல்லாது: சந்திரனும் முழு க்ருஹணத்திலெல்லாம் முற்றிலும் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்துவிடும். பூமியே பாந்த வாயுமண்டலத்தால் சூழப்பட்டுள்ளது என்பது நமக்குத் தெரிந்த விஷயம். சாய்வாய் இதன் மேல் வந்து தாக்கும் ஒளிபாகங்களை வளைத்து பூமி நிழலின் இருண்ட பாகத்துள் செலுத்தும் சக்தி இந்த வாயுமண்டலத்திற்கு உண்டு. ஆதலால் நிழலின் இருண்டபாகம் முற்றிலும் இருண்டதாகவில்லை. வாயுமண்டலத்துள் ஊடுருவிச் செல்லுங்கால் இந்த ஒளிபாகங்கள் ஒருவிதமாக மட்டச்சிவப்பு வர்ணம் பெறுகின்றன.



இதனால் முழு க்ரஹணத்தில் சந்திரன் முற்றிலும் மறைந்துவிடாது மங்கித்தாம்பிர வர்ணத்துடன் ப்ரகாசிப்பதை நாம் காணலாம்.

**A Great Superstition** :—It is a superstition to suppose that superstitions are confined only to un-educated people. These, however, do not seem peculiar to age or sex. The educated have their own superstition, which by the very fact of their being more suffle than those of ordinary men, are more dangerous and injurious to progress. To fear a certain evil because one's left eye throbs or expect guests in the house because the crow caws in the courtyard, or the fire hissee in the oven, is no doubt superstitious, for obviously the optic nerve, the crow and the kitchen fire have no right to be ranked as prophets. But it is none the less superstitious to think that the study of Vedanta would rob man of everything natural and interesting by making him a living corpse absolutely dead to the world ; this is the superstition of the cultured man.

### ஒருபெரிய மூடநம்பிக்கை

கல்லாதாற்கு மாத்திரமே மூடநம்பிக்கைகள் உள்ளது என்று கருதுவதே ஒரு மூடநம்பிக்கையாகும். இவைகள் வயது, பால் இவைகளுக்கே சிறப்பாய் உள்ளவைகளாகக் காணப்படவில்லை. தமக்கு ஏற்ற மூடநம்பிக்கைகள் கற்றோரிடத்தும் காணப்படுகின்றன. இவைகள் அதிஸூக்ஷ்மமாக விருப்பதால் இவைகள் அபாயகரமாயும் மேல் அபிவிருத்திக்கு முற்றிலும் விரோதமாயும் இருக்கின்றன. இடது கண் துடிப்பதால் கேடுவருமென்று அஞ்சுவதும், முற்றத்தில் காக்கை கத்துவதாலும், அடுப்பது சீறுவதாலும், விருந்தினர்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதும் மூடநம்பிக்கைகள் என்பதில் ஐயமே இல்லை. கண்நரம்பு, காக்கை, அடுப்பு நெருப்பு இவைகளை குறி கூறுவனவாக மதிக்கத்தகுந்த முகாந்திரங்கள் இல்லை என்பதே இவ்வாறு கருதுவதற்குத் தகுந்த காரணம். ஆனால் வேதாந்தம் படிப்பது மனிதனிடம் இயற்கையாகவும், இனிமையாகவும் உள்ள மனோநிலைகளைக் கொள்ளைகொண்டு அவனை நெட்டுயிர் போடுற்ற பிணமாக்கி உலக ப்ரக்ஞையே இல்லாமல் அடித்துவிடும் என்று கருதுவது. முற்கூறியவைகளை விடக் குறைந்த மூடநம்பிக்கை இல்லை. இது தான் கற்றுத் தேர்ந்த கனவான்கள் மூடநம்பிக்கை.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDRENS' PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

*சத்தியின் வலியான் சூழ்ந்து தரணியை வஞ்சித் தின்ப*
*நித்திய மடைந்து மாய தெறியுநீஇ விடயா னந்த*
*மித்தையி னுழலுஞ் சித்தர் வீழ்வழி ஜாலர் மற்றச்*
*சித்திகள் மயக்க தன்றி தேர்ந்தவீ டளித்த துண்டோ?*

### அத்யாயம் 12.

### அத்புதம் ஆபத்தானது.

வாஸுதேவ சாஸ்திரியும் அன்னம்மாளும் திண்டுக்கல்லிலிருந்து திரும்பிவிட்டார்கள் என்று கேள்விப்பட்டு ஸீதாலக்ஷ்மியும், ருக்மணியும் அவர் மாப்பிள்ளையின் அகால மரணத்தைப் பற்றி துக்கம் விசாரிக்க வந்து விட்டார்கள். இவர்களைக் கண்டதும் அன்னம்மாள் வேதாந்த கண்டன ப்ரஸங்கம் தொடங்கிவிட்டாள். வேதாந்தத்தால்தான் தனக்கு இப்போபத்து வந்தது என்பது அவள் துணிபு. இம்மாதிரி பீடிகை போட்டுக்கொண்டு கடலோசை போன்ற பேரிரைச்சலுடன் கதறி அழத் தொடங்கிவிட்டாள். வெகுதூரத்திலிருந்தவர்கள்கூட இப்பேரிரைச்சலைக்கேட்டு பயந்துவிட்டனர். இந்த ஸமயத்தில் கோயில்யானைகூட வெருண்டு நோக்கியதாம், ஆனால் இதுண்மைதான் என்று என்னால் உறுதியாகக்கூறமுடியாது. இதுஉண்மையோ இல்லையோ, ப்ரபஞ்ச காரணமாகிய மாயை பெண்ணுதலால் தன் இனத்தாருக்குப் பலவிதகுரல் விசேஷங்களை அளித்திருக்கிறுள் ஆயினும், அவர்கள் எல்லோரும் கண்டு வியக்கும்படியாக விருந்தது அன்று அன்னம்மாள் காட்டிய வாய் வரிசைகள்.

இவள் உண்டாக்கிய பேரருவி முழக்கம் அமர்ந்ததும்ஸீதாலக்ஷ்மியும் அவள் பெண்ணும் வாஸுதேவசாஸ்திரியிடம் துக்கம்விசாரிக்க வந்துசேர்ந்தார்கள். இதுகாறும் அவர் அன்னம்மாளையே கண்கொட்டாது பார்த்தவண்ணமாகவே இருந்தார். இதுவரை இம்மாதிரிய நாடகம் கண்டிராததனால் அவருக்குக்கூட அன்று நடந்த தடபடல் அத்யாச்சர்யத்தைவிளைத்தது. உடனே ஸீதாலக்ஷ்மியை நோக்கி, “என் நாயகி ஓர் அவதாரம் என்பதற்கு என்ன ஸந்தேகம். ‘எங்கெங்கு எங்கெந்தச்சக்தி அதிகமாக விசேஷித்துக்காணப்படுகிறதோ அங்கெல்லாம் நானிருக்கிறேன் என்று

மதி' என்ற கிருஷ்ண பரமாத்மா கூறவில்லையா" என்று வியந்து கூறினார்.

வழக்கப்படி துக்கம் விசாரித்து முடிந்ததும், கிருஷ்ணன் மரணகதையைவிஸ்தாரமாகக் கூறி, பின்னர் தம் பெண் மனோநிலையை வெளிப்படுத்தி முடிவில், 'உலகத்தில் நடப்பவைகள் எல்லாம் முடிவில் நமது நன்மைக்காகவே நடந்தேறுகின்றன. இந்த ஆபத்து லக்ஷ்மிக்கு இப்பொழுது வந்திருப்பதை நோக்கினால் இது அவள் அபிவிருத்திக்கு அவசியமாகவே இருத்தல் வேண்டும். இம்மாதிரி சோதனைகளில் பட்டுத் தேறித்தான் நமக்குப் பூர்ணத்வம் ஸித்திக்கவேண்டும். இந்த சோதனை ஒருவேளை லக்ஷ்மிக்குக் கடவுளை அணுக ஸஹாயம் செய்யலாம். நமக்கு என்ன தெரியும். உலக விஷயங்கள் என்ன ஒழுங்கில் நடைபெறுகின்றனவோ அதன் ஒழுங்கு அவருக்கே தெரியும்.' என்று கூறி பூர்ணம் செய்தார். உடனே ருக்மணி ஸித்த புருஷர் விஷயமான ப்ரஸ்தாபத்தை எடுத்துக் கூறி அவர் செய்துள்ள அத்புதங்களை வர்ணித்துவிட்டு, 'இப்பொழுது வந்திருக்கிறவர் உண்மையான ஸித்தரா என்ன? உமக்கு என்ன அபிப்ராயம்' என்று கேட்டு முடித்தாள். வாஸுதேவ சாஸ்திரி கொஞ்ச நாழிகை யோசித்துவிட்டு 'எல்லாம் இன்னும் இரண்டொரு நாளில் தெரியும், இடையில் உன் கணவனை எவ்வழிகளிலும் திருப்தி செய், இரவு பத்து மணிக்கு மேல் அவனை விட்டுப் பிரியாதே! எப்பொழுதும் அவனருகேயே இரு' என்று எச்சரிக்கை செய்தார்.

'ஏன் இப்படிக் கூறுகிறீர்' என்று கேட்க வாயெடுத்தாள் ஸீதாலக்ஷ்மி. அப்பொழுது 'வாஸு! வாஸு!!' என்று கூப்பிட்டுக் கொண்டு மிகுந்த அவஸரத்துடன் வீட்டுள் புகுந்து விட்டார் திவான் பஹதூர் நாராயணய்யர் அவர்கள். இவர் வந்ததும் மரியாதைக்காக எல்லோரும் எழுந்துவிட்டனர். தன் பெண்சாதியையும் பெண்ணையும் கண்டு 'நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்! வேதாந்தம் பேசுகிறீர்களோ? வாஸுதேவா! எவ்வளவு பெரிய ஸித்த புருஷர்!! அவர் நமது வீட்டுக்கு வரத்தக்க பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர் ஸந்நிதான விசேஷத்தால் நமது வீடு எவ்வளவு சிறப்புற்று விளங்குகிறது. அஷ்ட லக்ஷ்மிகளும் ஆனந்தத் தாண்டவமாடுகின்றார்கள். மறந்துவிட்டேனே! பாவம் உன் மாப்பிள்ளை போய் விட்டாற்போலிருக்கிறது! நிரம்ப நல்லவன். என் வீட்டிற்கு வந்து மஹாத்மாவை தரிசியேன். வா போவோம் நல்ல காலம்தான், நீ வந்து விட்டாயே. நேற்றே போகவேண்டுமென்றுஸித்தர் கூறினார். ஒருவாரம் அல்லது பத்துநாள் இங்கே தங்கியிருக்க வேண்டும் என்று நான் வேண்ட அவர் இணங்கிவிட்டார். உனக்கு ஏற்கனவே வேதாந்த விஷயம் கொஞ்சம் தெரியுமாதலால் அவரிடமிருந்து நீ ஏராளமாகக் கற்றுக்கொள்ளலாம். போகலாம் வா' என்று கூறி கையை பிடித்து இழுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார். வாஸுதேவ சாஸ்திரிக்குப் போகமனமேயில்லை. நாராயண அய்யர் இவர் மறுமொழியைக் கேட்காது இழுத்துப் போனதால் திரும்பமாட்டாது போகத் தலைப்பட்டார்.

இங்கு இப்படிஇருக்க நாராயணஅய்யர் வீட்டு ஸங்கதியை விஸ்தரிக்கப் புகுவோம். ஸித்தரைக் கண்டதும் குருவாக மதித்துவிட்ட ஸ்ரீநிவாஸன் அவரைத் தனிமையாகக் கண்டு கலந்து பேச ஸமயம் பார்த்துக்கொண்டு ஆவலுடனிருந்தான். ஒரு சித்து விளையாட்டு முடிந்ததும் அவரே இவனைக் கூப்பிட்டார். இது கடவுள் கிருபை என்று மதித்து ஆனந்த பரவசனாய் ஸ்ரீனிவாஸன் உள்ளே புகுந்தான். அறையில் வெள்ளிப்பாத்திரங்களாவது தங்கவிக்கிரஹங்களாவது காணப்படவில்லை. யோகி ஒருநாற்காலியில் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீனிவாஸன் உள்ளே புகுந்ததும் மும்முறை அடிபணிந்து, அவரை நோக்கிக் கண்ணும் கண்ணீருமாக, 'ஓ ப்ரபோ! தங்களைத் தனிமையாகக்காண இதுவரையில் வேளையை எதிர்பார்த்திருந்தேன். உங்கள் யோகஸித்தியால் இதற்குள் என் உள்ளத்தில் ஊறும் எண்ணங்கள் எல்லாம் தாங்கள் உணர்ந்திருக்கலாம். குருமூர்த்தீ! ஸம்ஸார தாபத்திலிருந்து என்னை விடுவித்து; உண்மை அறிவைப் புகட்டிவிடும். எனக்கு வேறொரு விருப்பமும் இல்லை, நாதா! ஸித்திகள் கூடஎன்மனதைக் கவரவில்லை' என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

**யோகி.**—வயதிற் சிறியவனாயினும் ஆத்மஞானம் பெற எவ்வளவு தகுந்தவனாக விருக்கிறாய்! அதனால்தான், குழந்தாய்! நானே வலிய



உன்னை அழைத்தேன். என் கைபட்ட மாத்திரத்திலேயே அநேகர் ஸித்தியையும் முத்தியையும் அடைந்து சிறப்புற்றிருக்கின்றனர் உனக்கு ஞானம்தவிர வேறொன்றும் வேண்டாமா? உறுதியாகச் சொல்வாயா?

**ஸ்ரீனிவாஸன்.**—அப்படியே சொல்வேன், எனக்கு வேறொன்றும் வேண்டாம். எனக்கு எதிலும் விருப்பம் இல்லை.

**யோகி.**—என் சிஷ்யனாகத் துணிந்து விட்டாயா? தாய் தகப்பன் பெண்சாதி, உறவினர் எல்லோரையும் நீத்து என்னைச் சரணம் புகுவாயா? இவைகள் எல்லாம் மரணத்திலிருந்து உன்னை தப்பிவிக்கா, நீ இறந்தபின் உன் கூடவும் வரமாட்டா. ஆனால் நான் உபதேசிக்கும் பரமஞானமோ உன்னை அழிவற்றவனாக்கிவிடும்.

**ஸ்ரீநிவாஸன்.**—குருமூர்த்தீ! ஸத்தியம்! ஸத்தியம்! நீர் எங்கு வரச்சொன்னாலும் வரத்தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். மலை, வனம் வனாந்தரங்கள், திரைகடல் ஆகிய இவைகளைக் கடந்து செல்லவேண்டுமாகிலும் நான் தயார்.

**யோகி.**—நன்றாயிருக்கிறது. அதுதான் அதிகாரியிடத்திலிருக்கவேண்டும்.

இந்த ஸம்பாஷணை முடிந்ததும், தாமே ஆசார்யத்வம் வஹித்த குருவும், இனி சிஷ்யனாகும் அதிகாரியும் அறையைவிட்டு வெளியே வந்தார்கள். ராமர் இருக்கும் இடம் அயோத்யை என்பதுபோல, அரை நொடியில் ஸித்தர்முன் பெருங்கூட்டம் கூடிவிட்டது. இப்பொழுது முள்ளவைகளைவிட மிக அத்புதமான ஒரு ஸித்தி வெளிப்பட்டது.

அத்புத யோகி திடீரென்று ஸ்ரீநிவாஸனை அழைத்து எல்லோர் முன்னிலையிலும் அவன் நெற்றியில் விபூதி இட்டு அவன் வாயில் கொஞ்சம் விபூதியைப் போட்டார். என்ன ஆச்சர்யம். ஸ்ரீநிவாஸன் உச்சஸ்வரத்தில் கதறத்தொடங்கிவிட்டான். 'நானே அகண்ட ஸச்சிதானந்தம். ஆனந்த ஸாகரம். நானே எங்கும் நிறைகின்ற பொருள், பரஞ்ஜ்யோதிஸ், ஈச்வரன், பிரஹ்மா, விஷ்ணு, பரப்ரஹ்மம் என்று கூச்சலிட்டு ஆனந்தக் கூத்தாடி குலுங்க நகைக்கத் தொடங்கிவிட்டான். சுமார் கால்மணி இந்த ஆவேசச் சிரிப்பு ஓயாததால் எல்லோருக்கும் ஆச்சர்யம் ஒரு பக்கமும், இவன் விலாப்புறம் வெடித்துப்போய்விடுமோ என்ற பயம் ஒரு பக்கமும் பாதித்தது. இது அதிக நாழிகை நடந்திருக்கும், ஆனால் யோகியார் கருணைகூர்ந்து அவன் தோளை மெதுவாகத் தொட்டு தடவிக்கொடுத்து பரப்ரஹ்ம நிலையிலிருந்து பாமரன் நிலைக்கு அவனை இறக்கிவிட்டார். ஸ்ரீநிவாஸனுக்கு தேஹப்ரக்ஞை வந்ததும் குருமஹாராஜாவை மனம்போன போக்கே துதிக்கத் தொடங்கிவிட்டான். குரு ஸ்தோத்ர சுலோகங்கள் எல்லாம் மடைதிறந்து விட்டாற்போல வெளிவரத் தொடங்கிவிட்டன. ஸித்தர் இந்த ஸ்தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்ததோடுகூட, இவனை வசப்படுத்திவிட்டதையும்,சுற்றுமுள்ளவர்மனதில் ஒருவித பயத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கியதையும் எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டார். ஆனந்த பரவசராகி ஸித்தர் 'ஏ பாமரமூடங்களா! ஸித்தர்கள் சக்தி என்னவென்று தெரிந்ததா?' என்று வாய்விட்டும் புலம்பிவிட்டார். உடனே எல்லோரும் 'ஓ ஸித்தபுருஷா! ஸ்வாமி ஆகாயத்தில் பறந்து செல்லவும் வாயுசக்ஷணம் செய்து வாடாது வாழவும் திறமைவாய்ந்த உமக்கு எதுதான் அஸாத்தியம்?' என்று துதித்தனர். இதைக்கேட்டதும் நாற்புறமும் திரும்பி நோக்கி, எல்லோர் கூறியதையும் அநுமோதித்துப் புன்னகை செய்தார் ஸித்தர்.

இந்தத் தருணத்தில் வாஸுதேவ சாஸ்திரியை இழுத்துக் கொண்டு நாராயணய்யர் அங்கு வந்துவிட்டார். உயிர்தண்டனை நீக்கும் சக்தியை உடைய ராஜாதி ராஜன் முன்னர், மரண தண்டனைக்கு உள்ளானவன் ஒருவன் அடிபணிவதுபோல ஸித்தரைக்கண்டதும் நாராயணய்யர் நெற்றி நிலம் தோயப்பணிந்து எழுந்தார். இவ்வளவுசெய்தும் யோகி இதைக்கவனிக்கவில்லை. வாஸுதேவ சாஸ்திரியைக் கண்டதும் திடுக்கிட்டு ஒளியிழந்த முகத்துடன் மெய்ம்மறந்து இருந்தபடியால் யோகீச்வரருக்கு திவான் பஹதூர் செய்த வந்தனைவழிபாட்டைக் கவனிக்க முடியவில்லை. தன்ஞாபகம் திரும்பிவர ஸுமார் இரண்டொரு நிமிஷங்களாயின. தன் ரஹஸ்யத்தை இவ்வாறுஅறியாதுவெளியிட்டதை எண்ணித் துக்கித்தார் யோகீச்வரர். ஆதலால் இவர் தம்தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு சோர்ந்திருந்தார். நாராயணய்யரை தலை எடுத்து நோக்கிப் பேசக்கூட அவருக்கு நா எழவில்லை. திடீரென்று ஏற்பட்ட இந்த மாறுபாட்டை எல்லோ

ரும் கண்டுவிட்டனர். நாராயணய்யரும்கண்டுவிட்டார். இந்த அத்புத யோகிக்கும் வேதாந்தியான வாஸுதேவ சாஸ்திரிக்கும்உள்ள ஸம்பந்தத்தை பற்றிஎல்லோரும் மனம்போனபோக்கே அபிப்பிராயப்படத் தொடங்கிவிட்டனர். நாராயணய்யருக்கு விஷயம் விளங்கவில்லை. அதை ஆராய்வதற்குவேண்டியபொறுமையும் அவருக்கு இல்லாததால் 'சாஸ்திரியை உமக்குத்தெரியுமா."? என்று திடீரென்று யோகியை நோக்கிக் கேட்டுவிட்டார். பதறிவிட்டார் யோகி! விஷயங்கள் நெருங்கிவிட்டதும் அவர் மனம் குழம்பியது. ஆம்! இல்லை! அவ்வளவு நன்றாகத் தெரியாது. இவரை எங்கேயோ பார்த்திருக்கிறதாகத் தோற்றுகிறது. என் பூர்வாச்ரமத்தில் ஒரு அருமைத் தோழனாகவிருக்கலாம்' என்று உளரிக்கொட்டி பாமரன் போலத் தத்தளித்தார் ஸித்தர். இதை மறைக்க பாம்போடு விளையாடத் தொடங்கிவிட்டார். பாம்பைக் குத்திக் கோபமூட்டி சீறச்செய்து கண்டோர் நடுங்கும்படி அதன் வாயுள் கையை இட்டு வேடிக்கை செய்தார். இதனால் வாஸுதேவ சாஸ்திரியை எல்லோரும் கவனிக்காது ஸித்தரிடம் திரும்பிவிட இதுதான் தருணம் என்று அவர் அவர்கள் மனதைக் கவரத்தொடங்கிவிட்டார். 'இந்தப் பாம்பு ஸாமான்யப் பாம்பல்ல. இது ஒரு ரிஷி: என்னைத் தூஷித்ததால் நான் பாம்பாகும்படிசபித்துவிட்டேன். இதற்குப் பேசும் திறனில்லாவிடினும் ஸம்ஸ்கிருதம் பேசினால் இதற்குத் தெரியும். பாருங்கள்.' என்று கூறி, பாம்பை நோக்கி ஸம்ஸ்கிருதத்தில் 'தோளில் ஏறு' என அது அவ்வாறே செய்தது. 'கீழே இறங்கு' என அது இறங்கிற்று. 'கடி' என்றார். கடித்தது. ஸித்தருக்கு யாதொரு கெடுதியும் வாராததால் விஷம் அவருக்கு ஏறாது என்றே எல்லோரும் மதித்தனர். 'ஒதுங்கிப் போய் விளையாடு,' என்றார் யோகி. உடனே கீழே இறங்கி படமெடுத்து ஆடத்தொடங்கிவிட்டது பாம்பு. இம்மாதிரி விசித்ரவித்தைகளால் இழந்த சீரையும் சிறப்பையும் அடைந்து தம் ஸித்த நிலையை நிலைநிறுத்திக்கொண்டார்.

இதற்குள் இரவில் அதிக நாழிகை யாகிவிட்டது. ஸித்த புருஷர் எல்லோரையும் நோக்கி "நீங்கள் வீட்டிற்குப் போய் நாளை வாருங்கள்" என்று கூறி எல்லோர் வழிபாடுகளையும் பெற்று ஆசீர்வதித்து தமது அறையுள் புகுந்து விட்டார். வாஸுதேவ சாஸ்திரி நாராயணய்யரிடம் மாத்திரம் சொல்லிக் கொண்டு திடீரென்று மறைந்துவிட்டார். எல்லோரும்போய்விட நாராயணய்யரும் தமது படுக்கை அறை சென்றனர். ஸ்ரீநிவாஸன் மாத்திரம் தனித்து விட்டான். அவன் காத்திருப்பதைக் கண்ட ஸித்தர், அவனை அழைத்து 'சீக்கிரம் ஆகட்டும். ஆயினும் அவஸரப்பட்டு விடாதே! ஓடிவிடு. ஆயினும் சொக்கியே இரு! முற்றும் துறந்து என்னைப் பற்றுக என்று உபதேசித்தார். இதன் பொருள் விளங்காது ஸ்ரீநிவாஸன் விழித்துக்கொண்டு குருவைக் கேட்டுத் தெளிய வாய் எடுக்குமுன் ஸித்தர் கதவைச் சாத்திவிட்டார்.

காலை மூன்று மணி ஸுமார் இருக்கும். தம் வீட்டில் கொள்ளை போவதுபோல ஒரு துர்ஸ்வப்னம் கண்டு கலங்கினார் நாராயணய்யர். உடனே அலறிக்கொண்டு எழுந்தார். அவர் மனம் ஸமாதானப் படவில்லை. எல்லாம் ஸரியாகவிருக்கிறதா என்று பார்த்துவிட்டு வந்தால் நலம் என்று தோற்றியது. கீழே பணப்பெட்டி ஸரியாக விருக்கிறதா என்று முதலில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி கீழே இறங்கிப் பார்ப்பாரோ! என்ன ஆச்சர்யம்!! அறைக்கதவு திறந்து கிடந்தது. பணப்பெட்டி இருந்த விடத்தை நோக்கி ஓடிப் பார்த்தார். அதைக்காணோம். உடனே ஸித்தர் அறையிவிருக்கிறாரா பார்ப்போம் என்று ஏதோ ஒரு எண்ணம் அவருக்கு உண்டாக, போய் நோக்கினார். அங்கு ஒருவரையும் காணோம்!!!

(தொடரும்)

சீதோஷ்ணந் தெரிவிக்குங் கருவி.—ஜுரமடிப்பவர்களைப் பரிசோதிக்கும்போது ஆங்கில வைத்தியர்கள் உபயோகப்படுத்துங் கருவியை நேயர்கள் பார்த்திருக்கலாம். உலகத்திலெல்லாம் பெரிய கருவியொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அது 20 அடி உயரமும் 100 அடி தூரத்திலுமிருந்து பார்த்தால் தெளிவாய்த் தெரியக்கூடிய பெரிய எழுத்துக்களையுடையதாயிருக்கிறது. இக்கருவி குளிர்ச்சியை 35 டிகிரி வரையிலும் உஷ்ணத்தை 15 டிகிரி வரையிலுங் காட்டுமாம்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

அறியாமை யோடிளமை கூடுவதா மாங்கே
செறியப் படுவதாஞ் செல்வஞ்—சிறிய
பிறைபெற்ற வாணுதலாய் தானேயா டும்பேய்
பறைபெற்றா லாடாதோ பாய்ந்து?

பழமொழி.

சூன்யமாதம். மார்கழிமாதத்து நாள்தோறும் காலை உஷா நேரத்திற்குள் யாவரும் எழுந்து ஸ்நானஞ்செய்து ஹரி நாமசப்தம் காற்றெங்கு மயங்கி யாவர்க்கு ஆனந்தமூட்டுங் காலம். பனி மூடி ஸூர்யனை அறிய வொண்ணாது மறைத்து, ஊன்றிப் பார்ப்பவர்களுக்குத் தன்னுருவின் பிம்பத்தை ஒருவாறுகாட்டி, தன்னைக்காண யாவரும் ஆவல் கொள்ளும்படி மறைந்து, மறைந்து, மேக கூட்டங்களின் இடை இடை தனது முகத்தைச் சிறிது காட்டி, மறைத்து மறைத்து, உச்சவேளையில் சிறிதே தன் ஸ்வயரூப தர்சனங்கொடுத்து விட்டதும், மேகக்கூட்டங்களின் மேல் பறந்து ஓடி நீலமலைகளைப்பதுமராகம் படச்செய்து, கருங்கொண்டல்களையும் தனது தர்சன விசேஷத்தால் மனம் வெள்கி செவக்க அடித்ததும் தன் சிரமம் ஒழித்து நீரில் மூழ்கி அப்பாற்சென்று எம்பெருமானைக் காணச் செல்பவன்போல ஸூர்யன் தோன்றி மழுங்குங் காலம். மனங்குலைந்து, குளிர் மிகுதியால் தம் எண்ணங் குலைந்து, உடலும் நடுங்க, ஒழியாது பெய்யும் மழையின் திரளால் வெருண்டு, நெருப்பருகு குளிர்காய்ந்து, வேறு கவலையின்றித் தமக்கு நிகர் இல்லையென்று ஜனஸமூஹங்கள் வாழும் ஸமயம். வானம் வெடித்து வந்த செம்மணி யென்ன இருள் கிழித்து, மேகத்தைக் கீறி, வெளி தோன்றினும், தன் ஒளி மயங்கி வாழ்ந்து, ஸூரியனது சோபையகன்றதும், தனது தப்பை யுணர்ந்தவன் முகம் ரக்தம் வீசுவதுபோல் வானம் சிவந்து, பின் தன் மனம் சாந்தி யடைந்து விளங்குவதுபோல் சற்று கடந்ததும் நிர்மலமாகி, மனத்துள் தோன்றி யோடும் பாவங்கள்போலப் பளபளத்துப் பல சிறு மேகங்களோடி மறைந்து, உள்ளூறி வெளியிடும் பூர்வாபிப்பிராயம்போல் பலநக்ஷத்திரங்கள் தோன்றினும் மழுங்கிய மனவமைப்பால் மறைவதுபோல் கருமேகங்களால் ஒளி சிதைந்து, தன்னபிப்பிராயத்தை வெளியிடுவதும் முடியாதாகி விளங்குவதுபோல் தோன்றிய மதியும் விளப்பமின்றி வாழுங்காலமது. அந்தகாரமே குடிகொள்ள அந்தகாரணங்கொண்ட காலம். மனத்திற் பயத்தை யூட்டி பகவன் நாமத்தைக் கூட்டுங்காலமதுதான். தமது கஷ்டமொழிந்து ஸுகம் பெற எம்பெருமானது நாமத்தை உச்சம்பெற ஒலித்து அலறி மெய்ம்மறந்து உலக சுகத்தை விருத்திசெய்யச் செய்யுங் காலம்.

இத்தகைய காலத்தில் ஸ்ரீநாரதமுனிவன் "நாராயணா வென்னா நாவென்ன நாவே" என்று பாடிக்கொண்டு தனது தம்புருவின் இசையொடு தன்னிசை மயங்க, எம்பெருமானது மனமும் மயங்கி அவர்பால் அன்புகொள்ளும் ஸாமமென்னும் வைதிக கானஞ்செய்துக்கொண்டு அவ்வானந்த நகரமாகிய துவாரகாபுரத்தில் பதசாரியாய் பஜனை செய்துகொண்டிருந்தனர். மேன்மாடியில் உலாவி உண்மைப் பொருளின் ஸ்வபாவத்தை நோக்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீ பரந்தாமன் வாஸுதேவன் தடதடவென்று வெளிவந்து அப்பெரியோனது பாதத்தில் பணிந்து அவரைத் தமது வீட்டிற்குள் அழைத்து செய்யவேண்டியவெல்லாம் செய்து க்ஷேம விசாரஞ் செய்தனர். முனிவனை நோக்கிக் கூறுகின்றனர்:

"பிராஹ்மண சிரேஷ்ட! தாங்கள் ஸுகமோ? உலக விசேஷம் யாதேனும் தெரியுமோ? தங்களுக்குத் தெரியாததொன்று மில்லையல்லவா?"

"எல்லாம் க்ஷேமமே. உலகமுழுதும் ஸுகந்தான். நான் தேவலோகஞ் சென்றிருந்த காலத்து இந்திரலோகத்தில் தாங்கள் வைகுண்டம் வந்து சேர கொஞ்சம் நாள்கள்தான் உள்ளனவென்றார். ஆகையால் தங்களை இவ்வுருவொடு மங்கள வுருவில் பார்க்க ஆவல்கொண்டு இங்கு வந்தேன். வரும் வழியில் இமயமலைச்சாரலில் தவத்தில் ஆழ்ந்து விளங்கிய அப்பெரியோன் ராமராமவென்று ஜபிக்கும் ஒலி காற்றில் மயங்கி அம்மலைச் சாரல் முழுதும் காற்றில் கலந்து, அது அடிக்கும் பொழுதெல்லாம் ராமராமவென்றே கோஷிக்கின்றது. அந்த சப்தத்திற்கிணை எனது

தம்புருவில் விளங்கும் ஒலியும் இணையாகாது வாஸ்தவம். என் தம்புருவின் சுருதிக்கிணையில்லையென்றிருந்த கர்வமெல்லாம் அன்றந்த நாளில் பூத்துப்போய்விட்டது. இப்பொழுது அந்த தம்புரு இருப்பானானால் தனது வீணையுமதற்கிணை ஆகாதென்றே சொல்வான். கர்வம் கொஞ்சமேனுமில்லை. எல்லாமப்பொழுதே போய் விட்டது."

"ஆனால் அதுபோகட்டும்; நான் இங்கு இருக்க வேண்டிய நாளோ சில. ஆயினும் பலபேர்களின் செருக்கை அழிக்கவேண்டும் என்னும் எண்ணமாத்திரம் என் மனத்தில் குடிகொண்டிருக்கிறது. நீயும் நல்ல ஸமயத்தில் தான் வந்திருக்கிறாய். அந்த கருடன் என்னை வெகு அலக்ஷியமாக எண்ணிக்கொண்டிருந்தாலும் தனக்கு நிகரில்லையென்றே இருக்கிறான். அப்பாமை தன்னிலும் ஸௌந்தரியொருவளில்லையென்றே இருக்கிறாள். இவர்கள் மாத்திரமன்றி என் தமையன் ராமனும் தமக்கு ஸமானமான பலமுடையவனில்லையென்றே இருக்கிறான். ஆகையால் இவர்கள் தமது உண்மை நிலையை அறியப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறேன். இதை நீதான் முடிக்கவேண்டும்."

"அடியேன், தங்கள் ஊழியன் — அடிமை. ஆனாலும் என்னால் செய்யக்கூடிய திதுவென்று தோன்றவில்லை."

"ஒன்றுமில்லை. நீயதை வெகு சுலபமாகச் செய்யலாம்."

"அது எப்படியாகும்?"

"நான் அந்த அனுமானுக்குக் கிருஷ்ண ஜன்மத்தில் நான்கு புஜங்களுடன் ஸ்ரீராம உருவம் காட்டுவதாக வாக்கு அளித்திருக்கிறேன். அவ்வனுமானை என்னைத் தேடி இங்கு வரும்படிச் செய்வாய். பின் யான் எல்லாம் செய்துகொள்வேன்."

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**சென்னை புதிய அட்வோகேட் ஜெனரல்.**—இப்போது சென்னையில், ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயருக்குப் பின், அட்வோகேட்டாக வேலைபார்த்து வரும் மிஸ்டர் நேபியருக்குப் பதிலாக மிஸ்டர் F. H. M. கார்பெட் என்ற பாரிஸ்டரை நமது அரசர் நியமித்திருப்பதாய்ச் சமாசாரம் எட்டுகிறது.

*
* *

**ஆனரபில் மிஸ்டர் மானவேதன் ராஜா:**—சென்னைச் சட்ட சபையில் திவான் பகதூர் R. ரகுநாத ராவின் மரணத்தால் காலியான ஸ்தானத்துக்கு மிஸ்டர் K. C. மானவேதன் ராஜாவைக் கவர்ன்மெண்டார் நியமித்திருப்பதாக அறிந்து சந்தோஷப்படுகிறோம்.

*
* *

**தேள் விஷந்தீர்க்கு மருந்து.**—தேள் கொட்டியவுடன் கொட்டிய விடத்தில் சிறிது புளியையும் அதேயளவு சுண்ணாம்பையுங் கலந்து வெண்ணெய்போலாக்கித் தடவினால், விஷம் 5-நிமிஷத்திற்குள் இறங்கி விடுமாம்.

*
* *

**ஜப்பானில்** இப்போதுள்ள ஜனங்களின் தொகை 5-கோடியாம். அங்கு பயிரிடும் நிலங்களின் தொகை 12,700,000 ஏக்ராவாம்.

*
* *

**பாங்காங்கில் ஒரு விநோதமான மரம்.**—அதனுடைய அடிப்பாகம் 20 அடி உயரமாம்; அதிலிருக்கும் 20-40 இலைகள் 30 அடி நீளமும், ஓரடி அகலமுமுடையனவாம். இவ்விலைகளின் காம்பைக் குத்தினால் அதிலிருந்து ஊற்றுப்போல் குளிர்ச்சியும் மதுரமுமான ஜலம் பெருகுகின்றதாம். இம்மரம் பிரயாணிகட்கு மிகவும் உபயோகமுடையதாம்.

*
* *

**120-வயதிருந்த நவ கிஷோர் தத்.**—டாக்கா ஹெரால்ட் பத்திரிகை இந்த மாதம் 15-ந்தேதி டாக்காவிலிறந்த பாபு நவகிஷோர் தத் (Babu Nava Kishore Dutt) 120 வயது இருந்தாரென்றுசொல்லுகிறது. அவருடைய மனைவிக்கு இப்போது 93-வயதாகிறதென்றும் சொல்லுகிறது. பாபு நவகிஷோர் தத் இறந்துபோவதற்கு முன்னே சில மாதங்கள் வரையில் பிரதி தினமும் வெளியே சென்று உலாத்திவிட்டு வருவதுண்டென்றும், அவருக்கு இறந்துபோகிறவரையில் ஒரு பல்கூட விழுந்ததில்லையென்றும் அதே பத்திரிகை சொல்லுகிறது.



**மேமியோவில் பலத்த பூகம்பம்:**—பர்மா நாட்டைச் சேர்ந்த மேமியோவில் (Maymyo) பலத்த பூகம்பம் ஒன்று நேர, ஜனங்களின் குடியிருப்பு வீடுகளெல்லாம் கலகலத்துச் சேதமாய்ப் போய்விட, ஜனங்கள் கூடாரங்களில் வசித்து வருகிறார்கள்.

*
* *

**கடலின் ஆழம்.**—டிடானிக் கப்பல் மூழ்கியவிடத்தில் கடலின் ஆழம் இரண்டு மைலாம். அட்லாண்டிக் கடலில் ஐந்து மைலாழமும், பசிபிக் மகா சமுத்திரத்தில் ஆறு மைல் ஆழமும் சிலவிடங்களிலிருக்கின்றனவாம். இவ்வாறாய் ஆழமுள்ள விடங்களெல்லாம் பூமியின் அருகேயே யிருக்கின்றனவாம்.

* *
*

**பெருங்காற்றால் ஒரு பால மிடிந்துபோயிற்று.**—பாம்பன் மண்டபமென்னுமிடங்களில் பெருங்காற்றடித்தது. அதனால் 30,000 ரூபாய் செலவழித்துக் கட்டிய பாலத்தி னொருபகுதி சேதமாய்ப் போயிற்று.

*
* *

**லண்டனிலிருந்து இந்தியாவுக்கு புதிய சமீபமார்க்கம்.**—லண்டனிலிருந்து ஸ்பெயின், மொராக்கோ சாட் (Tchad) ஏரி வழியாக இந்து மகாசமுத்திரம் வந்து சேரலாம். லண்டனிலிருந்து ஐந்துநாள் பிரயாணப்பட்டால் இந்து மகாசமுத்திரத்திற்கு வந்துவிடலாம் என்று மேதாவிகள் ஆலோசனை செய்து பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். இதுவரையிலும் இன்னும் சூயஸ் ஜலசந்தி மார்க்கமாக இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் புதுவழி ஏற்பட்டு விட்டால் அதிக லாபம் உண்டு.

*
* *

**ஸ்ரீ இராமமூர்த்தி.**—இங்கிலாந்து பிரான்சு முதலிய தேசங்களுக்குச் சென்று அரிய செயல்களைச் செய்து பெரும் பராக்கிரமசாலியெனப் பேர்படைத்திருக்கும் ஸ்ரீஇராமமூர்த்தியவர்கள் திருவனந்தபுரத்துக்குச் சென்று திருவாங்கூர் மகாராஜா முன்னிலையில் தமது பராக்கிரமத்தைக் காட்டினர். ஆறாயிரம் இராத்தல் நிறையுள்ள ஓர் கருங்கல்லை அவரது நெஞ்சிலும் முதுகிலும் வைத்தபோது அதைத் தாங்கிக்கொண்டார். ஓர் பெரிய இருப்புச்சங்கிலியைக் கொடுத்தபோது அதைலகுவில் முறித்தனர். நிறையப்பாரமேற்றிய இருவண்டிகளை அவர்மேற் செல்லவிட்டபோது அவற்றையும் தாங்கினர். அன்றியும் ஓர்பெரிய யானையையும் தன் நெஞ்சில் தாங்கிநின்றனராம். இதையெல்லாம் கண்ட மகாராஜா அவர்கள் மிகவும் சந்தோஷமுற்று 500 ரூபா பெறுமதியுள்ள ஓர்பொன்னாலாய வீரகங்கணத்தை யவர்க்குபகரித்ததுமல்லாமல் 5000 ரூபாயையும் ஓர் யானையையும் இரு புலிக்குட்டிகளையும் வெகுமதியாகக் கொடுத்தனராம்.

# புஸ்தக விமர்சனம்

## REVIEWS OF BOOKS

**"மாங்கல்ய பிச்சை"** அல்லது 'கற்புக்கரசி' என்னும் நவீனம் ஒன்று நாம் கிடைக்கப்பெற்றோம். அது கொடியன் கைப்பட நேர்ந்த கற்புக்கரசி தன்னுடைய அதிருஷ்டவசத்தால் கொடுங்கோல் செலுத்தி காமத்தாழ்ந்து விளங்கிய நாட்டுத் தலைவனது நடத்தை. அவனது மேல் அதிகாரியும் உறவினரும் ஆகிய அரசி, மகாராஜி மங்கம்மாளிடம், தெரியச் செய்து, கீழ்வழிக்கொண்ட கொடியனைக் கீழ்ப்படுத்தி, தான் பிரியநேர்ந்த கணவனை மற்றும் மீண்ட காதை கூறப்பட்டுள்ளது. இது இரங்கோன் "ஸௌதேச பரிபாலினி" பத்திராதிபர் புரசை ஏகாம்பர முதலியாரால் எழுதப்பட்டது. முற்றும் சிறந்த நடையுடையதன்றாயினும் தளர்ந்த நடை கொண்டதன்று. மற்றொரு விஷயம் யாதெனில் இதை ஆக்கினோர் தனதுகற்பனையை எங்கு ஜனங்கள்காண விரும்புவரோ அவ்விடத்து ஏதேனும் சாக்குப் போக்கு கூறி நிறுத்தி விடுகின்றனர். அத்தகைய நிறுத்தல் வேண்டியதைக் கொடாத கொள்கையைக்காட்டும் இனி எழுதும் புத்தகங்களில் முதலியார் அவர்கள் தனது கற்பனையை நன்றாக விசாலித்தெழுதி யாவர்க்கும் ஆனந்த மூட்டுவரென நம்புகிறோம்.

**வேலையின் கூலி அல்லது கள்வர் கவர்ந்தமாயம்.**—திருச்சி தென்னூரிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ M. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் இதன் ஆசிரியர். இது ஓர் துப்பறியும் நவீனமாகும். இக்காலத்தில் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள்சக[illegible]மாய் தென்னிந்தியாவில் இல்லை என்றே சொல்ல வேண்டும். வேலையின் கூலி என்னும் நவீனம் படிப்பதற்கு ரம்மியமாக விருப்பதோடு கதை யெழுதப்பட்ட நடை அழகாயும் எளிதில் அறியக்கூடியதாயும் இருக்கிறது. இதன் விலை அணா 6.

**பிரிடிஷ்ஆட்சியால்இந்தியா அடைந்திருக்கும் நன்மைகள்.**—இது சேங்காலிபுரம் ம-ா-ா-ஸ்ரீ எஸ். பஞ்சாப கேசய்யர் அவர்கள் இயற்றியது. சிறிதாகவும், ஒழுங்காகவும் எழுதப்பெற்றிருக்கிறது. ஜனங்களிற்குராஜாங்கத்தினால் கிடைத்த நன்மைகள் தெரியவேண்டுமென்று விலையின்றி விநியோகிக்கின்றனர். இது சிலாகிக்கத் தக்கதே. வேண்டியவர்கள் 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் நூலாசிரியர் புஸ்தகத்தை அனுப்புகின்றனர்.

161440

*Specially adapted for Elementary, Training & High Schools*

# LESSONS from GEOLOGY

(IN TAMIL)

BY MR. M. R. SUBRAHMANYAM, B. A.

## பூதத்வ போதினி

நாமிருக்கும் பூமியின் தத்துவங்களை அறியாதிருப்பது பெரும் பேதமையே யன்றோ ? பூமியின் தத்துவங்களைச் சரியாக அறியவேண்டுமாயின் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு 30 படங்களால் நன்றாக விளக்கப்பட்டிருக்கும் **பூதத்வ போதினி** என்னும் நூலினை வாங்கி வாசித்தறியவும். இதில் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகம் எலிமெண்டரி ஸ்கூல் மாணுக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது

**விலை அணு 8.**

This treats of rocks and minerals: their action and uses: Contains more than 30 fine illustrations, specially prepared for the book : most of the examples and illustrations given in the book are Indian.

**Beautifully bound in full Calico : As. 8**

இதைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

**H. Narayana Rao, Esq., M. A., F. G. S., Lecturer on Geology, Presidency College, Madras,** writes :—This little book (Lessons in Geology by Mr. M. R. Subrahmanyam B. A.) is an introduction to Geology in Tamil. By referring to Indian Examples, the author has attempted to familiarize the reader with the various Geological phenomena without going too much into the details of the subject which would materially be repulsive to an ordinary reader, the author has given a general outline of the subject *in an easy and popular style.* The concluding chapter deals with the mode of occurrence in India of the most important minerals, coal, gold and diamond. *I have no doubt that the book will supply a real want and I hope it will be largely used in Secondary Schools and especially by teachers.*

**The "Madras Mail."**—The General Supplies Co., Mylapore, Madras has published a little primer in Tamil embodying easy lessons in Geology by Mr. M. R. Subramaniam, B. A. It is intended to serve as an introduction to the study of this important science for the benefit of Tamil Readers. The illustrative examples are mostly of their country and the specimens referred to are such as must be familiar to readers selected as they are from their surroundings. The book is priced at **As. 8** *and is well adapted for introduction into Elementary Schools.*

* * *

**T. V. Sivakumara Sastry, Esq., B.A., L.T., Lecturer, Teachers' College, Saidapet.**—* * * One of the most commendable features of the book is the *absence of all difficult technical terms. The style is simple and easy.* The book is sure to become highly popular.

* * *

**The "Hindu."**—This little book on Geology in Tamil by Mr. M. R. Subrahmanyam, B. A. is an introduction to the important science of Geology, the knowledge of which has been long neglected in our country. The author has placed before us the important geological phenomena *in a simple and popular style* avoiding the use of all difficult technical terms. We are glad to note that English words are not introduced into the body of the book but a glossary of the important Tamil terms used in the book with the translation of those into English has been added at the end of the book. In the course of the lessons the author has described several simple experiments to illustrate the phenomena so that even young pupils may easily understand the facts. The book contains more than 30 fine illustrations. We are sure the pupils of the Elementary and the Secondary Schools and specially the teachers of the Elementary and the Training Schools will be highly benefitted by this book. We wish the author all success in his attempt. The book has been published by the General Supplies Co., Mylapore, and it has been neatly bound in full calico and is priced low, *viz*, As. 8 a copy.

*Address* :—**THE GENERAL SUPPLIES Co., Mylapore, Madras, S.**